श्री नीलकण्ठदीक्षित विरचित

# ॥ शिवलीलार्णवः ॥

ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் இயற்றிய

# ஶிவலீலார்ணவம்

மூலமும் உரையும்



8

222

CENTRE FOR SHAIVA STUD
Puducherry

श्री नीलकण्ठदीक्षित विरचित

# ॥ शिवलीलार्णवः ॥

ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் இயற்றிய

# ஶிவலீலார்ணவம்

## மூலமும் உரையும்

மூல ஸ்லோகங்கள் ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும்
ப்ரதி ஸ்லோகம் உரை தமிழில்

உரை
ஸாகேத வாசி - **ஸ்வாமிநாத ஆத்ரேயர்**

உதவி
**ஜகதீசன் - அனந்தராமன்**

பிழை திருத்தம்
ஸ்ரீ கணேச பாகவதர்,மெலட்டூர் - T.R.சுப்பிரமணியன்

வெளியிடுவோர்
**ஸ்ரீ மஹாபெரியவாள் டிரஸ்ட்**
பெங்களூர் - 560 054
இவர்களுடன் இணைந்து

எல்லோரையும் நல்லோராக்கும்...
SRI RAMA NAMA BANK CHARITABLE TRUST
RAMA MANTHIRAM:
No.2/3, Vinayagam Street, West Mambalam,
Chennai-600033. Ph:044-24893736 / 9445693295.
ramamanthiram@gmail.com | namalayam.org

Annadhana Samajam
அன்னதான ஸமாஜம்
அத்தியாவசியமான அன்ன சேவை

RAMA NAMA BANK
ராம நாம வங்கி
அடிப்படையான நாம சேவை

Bhagavan Nama Publications
பகவன் நாம பளிகேஷன்ஸ்
ஆச்சரியமான க்ரந்த ரக்ஷண சேவை

இறை நாம இயக்கம் A DIVINE NAME MISSION
சுதந்திரமாக நாம பணியாற்றும் நாம அடிமைகள்

CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

தலைப்பு : ஶிவலீலார்ணவம் மூலமும் உரையும்
பக்கங்கள் : 600 பக்கம்
அளவு : 24cm x 18 cm
பதிப்பு : 2024
விலை : ₹ 800

## ப்ரஹ்மஸ்ரீ S.V.ஸ்வாமிநாத ஆத்ரேயர்

ப்ரஹ்மஸ்ரீ ஆத்ரேயர் ஸம்ஸ்க்ருதம் தமிழ் மற்றும் ஹிந்தி மொழிகளில் சிறந்த அறிஞராகத் திகழ்ந்தார். அவர் 19.11.1919 கார்த்திகை ஸதயம் அன்று சிமிழி ப்ரஹ்மஸ்ரீ வேங்கடராம ஸாஸ்த்ரிகள் - ஸ்ரீமதி V.சங்கரி தம்பதியினருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார்.

அவர் 'மணிக்கொடி' கால எழுத்தாளர்களில் ஒருவராக மிளிர்ந்தார். அவரது 'மாணிக்கவீணை' என்ற சிறுகதைத் தொகுப்பு அவரது எழுத்துநடையின் அழகுக்குக் கட்டியம் கூறும்.

### நூல்கள்

ஆத்ரேயர் அவர்கள் சிறந்த ராமபக்தர். தியாகராஜ அனுபவங்கள், ஸ்ரீதர ஐயாவாளின் நாம அனுபவங்கள், நாம ஸாம்ராஜ்யம், பக்த ஸாம்ராஜ்யம், ராமநாமம்,ராமமாதுரீ, அனுமன் நாற்பது, ராம நாம அஷ்டோத்திரம், ஸமர்த்த ராமதாஸர் சரித்ரம், ஜய ஜய ஹநுமான் முதலியவை அவருடைய மிகச்சிறந்த படைப்புகள்.

### தியாகராஜ அனுபவங்கள்

ப்ரஹ்மஸ்ரீ ஆத்ரேயர் ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகளின் நேரடி ஸிஷ்யர்களின் ஸிஷ்யர்களான உமையாள்புரம் ஸ்ரீ ஸ்வாமிநாத பாகவதரிடமும் எம்பார் ஸ்ரீ ஸ்ரீரங்காசாரிடமும் த்யாகராஜ கீர்த்தனங்கள் உருவான வரலாற்றைத் தெரிந்து கொண்டு 12 கீர்தனங்களின் பின்னணியை தனது தியாகராஜ அனுபவங்கள் என்ற நூலில் வழங்கியுள்ளார்.

### தத்வவிவேசனி

கீதாப்ரஸ் நிறுவனம் தங்கள் நிறுவனர் ஸ்ரீ ஜயதயால் கோயந்தகா அவர்கள் பகவத்கீதைக்கு எழுதிய ஹிந்தி மொழிபெயர்ப்பான 'தத்வவிவேசநீ' என்ற நூலை ஸ்ரீ ஆத்ரேயரை கொண்டு தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளது.

### துளஸீராமாயணம்

ப்ரஹ்மஸ்ரீ ஆத்ரேயர் கோஸ்வாமி துளஸீதாஸர் இயற்றிய 'ராமசரிதமாநஸம்' என்னும் நூலையும் தமிழாக்கம் செய்து அந்நூலை சென்னை பகவந்நாமா பப்ளிகேஷன்ஸ் வெளியிட்டுள்ளது.

அந்நூலின் முன்னுரையில் அவர் எழுதியுள்ள சில வரிகள் கீழே தரப்பட்டுள்ளது.

(பல ஆண்டுகளாக மேலெழுந்த வாரியாக எழுதிய மொழிபெயர்ப்பு போதாது என்றும் மானசத்தின் ஒவ்வொரு அட்சரமும் அமோகமானது.

அத்தனைக்கும் பொருள் எழுத வேண்டும் என்றும் எண்ணினேன்.

மறுபடியும் எழுத வேண்டுமே என்று ஒரு மலைப்பாக இருந்தது; மறுபடியும் பல தடவை துளசி ராமாயணம் படித்து ஒருவாறு மனதில் துளசிதாசரின் மனப்போக்கு புரிந்தது.

மறுபடியும் எழுத ஆரம்பித்து ஆறு ஆண்டுகளில் எழுதி முடித்தேன்.

இரண்டு பெரிய புத்தக பிரசுராலயத்தில் அனுப்பிய பொழுது 'வியாபார ரீதியாக இந்த முயற்சி வெற்றி பெறாது' என்று என் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள மறுத்தனர்.

1996 ஆண்டு ஜனவரியில் ஒரே ஒரு பிரதியாவது தயாரிக்க முயன்றேன்.

அந்தப் பிரதி 1966 ஆம் ஆண்டு கோவிந்தபுரத்தில் பௌர்ணமி அன்று ஸ்ரீ பகவான் நாம போதேந்திர குருநாதாள் ஆராதனையில் அண்ணா அவர்களின் திருகரங்களால் அனுக்ரஹிக்கப்பட்டது.

'மேலே இதை எப்படி பிரசுரிப்பது எனக்கு அதற்கு வசதி இல்லை' . என்றதற்கு 'நீ கவலைப்படாதே இதை வெளி கோணர்வது எனது பொறுப்பு' என்றார் அண்ணா.

3 .10 .96 அன்று என்னை அழைத்த அண்ணா அவர்கள் 'போதேந்திர குருநாதர்கள் - துளசி ராமாயணத்தை பிரகாசப்படுத்த வழிகாட்டி விட்டார்கள். உனக்கு தெரியுமே! இங்கு அதிஷ்டானத்தில் பல கைங்கரியங்களைச் செய்துகொண்டு ராம நாம பிரச்சாரம் செய்து வருகிறாரே ஸ்ரீ ஏகாம்பரம்; அவர் இதை பிரசுரிப்பதாக ஏற்றுக் கொண்டு விட்டார்' என்று அவரை எதிரே வைத்துக்கொண்டு என்னிடம் கூறினார்கள். அப்போது என் உள்ளம் எப்படி துடித்திருக்கும் என்பதை வாசகர்களே ஊகித்துக் கொள்ளலாம்' .

## தஞ்சாவூர் ஸரஸ்வதீ மஹால் வெளியீடுகள்

*மேலும் ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரின் 'சிவலீலார்ணவம்' மற்றும் ஸ்ரீ ராமபத்ர தீக்ஷிதரின் 'ராமபத்ரஸாஹஸ்ரமஞ்சரீ' ஆகிய நூல்களும் ஆத்ரேயரால் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன. ஒரு ஆராய்ச்சியாளராக ப்ரஹ்மஸ்ரீ ஆத்ரேயர் சிவரஹஸ்யம்,இரு பகுதிகள் அஸ்வஸாஸ்த்ரம் தமிழ் மற்றும் ஆங்கில மொழி*

*பெயர்ப்புடன் ஸ்ரீ வேங்கடேஸவிலாஸ சம்பு ஆகிய நூல்களை பரிசோதித்து தஞ்சாவூர் ஸரஸ்வதீ மஹால் நூலகத்தின் மூலமாக வெளியிட்டுள்ளார்.*

## ராமமாதுரீ

*ஆத்ரேயர் தனது ராமானுபவங்களை 100 ஸ்லோகங்கள் வாயிலாக 'ராமமாதுரீ' என்ற நூலில் வழங்கியிருக்கிறார்.*

இந்நூலில் எப்படிப்பட்டவரையும் எந்த நிலையிலும் ராம நாமம் காப்பாற்றும் என்பதை அகலிகை விஷயமாக கூறும் 29வது ஸ்லோக வியாக்யானத்தில் ஸ்ரீபோதேந்திராளின் நாம சித்தாந்த விஷயமாக ஸ்ரீ மஹா பெரியவா குறிப்பிட்ட சம்பவத்தை ரசமாக விவரித்துள்ளார்.

## மேலும் சில நூல்கள்

*மேலும்அந்தர்யாம்யநுஸந்தாநம்' மற்றும் 'க்ருஷ்ணராமலீலா' ஆகிய நூல்கள் அவருடைய பக்தியின் மேன்மையை வெளிப்படுத்துகின்றன.*

## ராமாஷ்டபதி

திருவிசலூர் ஸ்ரீதர ஐயாவாளின் சமகாலத்தவரான ஸ்ரீ ராமகவி என்பவரின் ராமாஷ்டபதிகளை மூலபாட பரிஸோதனை செய்து தமிழிலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து வெளியிட்டார் ஆத்ரேயர்.

காஞ்சீ காமகோடி பீட ஆசார்யர்களின் பல க்ஷேத்ர யாத்திரைகளை 'காஞ்சீ காமகோடி பீட யஸோலஹரீ' எனும் நூலில் ஸம்ஸ்க்ருத ஸ்லோகங்களாக விவரித்துள்ளார் ஆத்ரேயர்.

காஞ்சீ காமகோடி பீட ஆஸ்தான வித்வானாக விளங்கிய ஆத்ரேயரின் பணிகளை அங்கீகரித்து பூஜ்யஸ்ரீ ஆசார்யாள் அவருக்கு 'ஆஸுகவி திலக' என்று விருது வழங்கினார்.

தன்னை ஸ்ரீக்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் ஸங்கத்தில் இணைத்துக் கொண்ட ஆத்ரேயருடைய பக்தி இலக்கியத் தொண்டைப் பாராட்டி ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அவருக்கு 'த்யாகராஜசரணரேணு' மற்றும் 'ஸாஹித்ய விஷாரத' எனும் பட்டங்களை வழங்கி கௌரவித்தார்.

அண்ணா கோவிந்தபுரத்தில் ஒரு வருடம் ப்ரஸ்தானத்ரய பாஷ்யம் சொன்னபொழுது சுவாமிநாத ஆத்ரேயர் ஆங்கேயே தங்கி ஸாக்ஷியாக இருந்து ச்ரவணம் செய்தார்.

அது பற்றி ஸ்ரீஅண்ணா தன் பாகவத தர்மம் சஞ்சிகையில் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்

பகவத் குணத்தைச் சொல்லிக்கொண்டே இருந்த ஸ்ரீ அண்ணா இப்போதெல்லாம் வேதாந்தத்தைச் சொல்லி ஞானமார்க்கத்தை காட்டுவது பக்திக்குப் பிறகு ஞானமே மோக்ஷஸாதனம் என்று காட்டுவதாகிறது; என்று நினைத்து ச்ரவணம் செய்தார் .

### பகவன் நாம பப்ளிகேஷன்ஸ்

நாம சாம்ராஜ்யம் , ராம நாமம் , ராம நாம அஷ்டோத்திரம் ஆகிய நூல்கள் பகவன் நாம பப்ளிகேஷன்ஸ் நடத்திவரும் ராம நாம வங்கியின் நாம பிரசாரத்திற்காகவே பிரத்யேகமாக எழுதியவை.

குறிப்பாக ஆயிரம் கோடி நாமத்துடன் தமிழ்நாட்டை ராம நாம வங்கி வலம் வந்த போது ஆத்ரேயரின் சகோதரர் ஸ்ரீ சந்தான ராமன் ஏற்பாடு செய்து கொடுத்த தஞ்சாவூர் காமகோடி கல்யாண மண்டபத்தில் முகாமிட்டிருந்த போது ஆத்ரேயரால் எழுதி சமர்ப்பணம் செய்யப்பட்டது .

அமைதியாகத் தஞ்சாவூரிலேயே தனித்துத் தவ வாழ்க்கை வாழ்ந்து வந்த இவர் வாய் திறந்தால் சொல்வதெல்லாம் ராமநாமம்தான்.

பரம ராமபக்தராக ஆன்மீக இலக்கிய உலகில் ஒப்பற்ற நூல்களைப் படைத்த ப்ரஹ்மஸ்ரீ ஸ்வாமிநாத ஆத்ரேயர் 19.12.2013 அன்று தனது 94வது வயதில் இறைவனுடைய திருவடிகளை அடைந்தார்.

**பகவன் நாம பப்ளிகேஷன்ஸ்**

# சிவலீலார்ணவம்

## மூலமும் உரையும்

### முன்னுரை

எந்நாட்டவனுக்கும் இறைவனான பார்வதீ ஸமேத பரமேச்வரன் அவதறித்த தென்னாட்டு மஹருஷிகள், பக்தர்கள், நாயன்மார்களின் பக்திக்கு வசப்பட்டு மீனாக்ஷீ ஸுந்தரேச்வரரை, கவி வணங்குகிறார். கோபியர்களின் உள்ளங்களைக் கடைந்துத் திரட்டி ப்ரேமை எனும் வெண்ணையை கைக்கொண்டு மதுரா ப்ருந்தாவனத்தில் லீலை புரிந்தான் கண்ணன். மதுரா ப்ருந்தாவனம் கண்ணனுடைய லீலாஸ்தலமாயிற்று. அதுபோல தென்னாடுடைய ஸுந்தரேச்வரர் பக்தருக்கு அருள்பொழிந்து மதுரையை தனது லீலாஸ்தலமாக்கிக் கொண்டு ஆட்சிபுரிகின்றார்; ஸுந்தரேச்வரரின் லீலாஸ்தலம் பாண்டிய நாட்டு மதுரை.

பகவானின் பெருமை அளவற்றது. ஆனால் அவன் எல்லாம் அறிந்தவன், எல்லாம் வல்லவன், எங்கும் நிறைந்தவன் என்று மூன்று அடைமொழிகளுக்குள்ளே அவன் பெருமையை அளந்து விடுகிறோம். பகவானுடைய சரிதமோ பலவிதமானது. பல தர்ம நுணுக்கங்களை எடுத்துக்காட்டுவது அவற்றை படிக்கும் பொழுது ஒருவித அச்சமும் பணிவும் உள்ளத்தில் பரவுகின்றன. ஆனால் பகவானுடைய லீலைகள் நினைக்க நினைக்க இனிப்பவை. சுவைத்து சுவைத்து ரஸிக்கவேண்டியவை உள்ளங்களில் நிலைபெறுபவை. இன்றும் கண்ணனுடைய பால லீலைகளைக் கேட்டு மகிழாதவர்கள் யாரும் இருக்க முடியாது. அறியாப்பருவத்தில் நினைத்துக்கூட பார்க்கமுடியாத அற்புத லீலைகளை நிகழ்த்தி இருக்கிறான் கண்ணன். ஆனால் சிவனுடைய லீலைகள் ஞானபூமியினுடைய லீலைகள். மேலெழுந்த வாரியாகக் கவனிக்கும்பொழுது அவை வேடிக்கையாக இருக்கும். சற்று ஆழ்ந்து சிந்தித்தால் அற்புதமான கருத்து விசேஷங்கள் வெளிப்படும். அத்தகைய சிவலீலைகளை, உள்ளத்தில் கடலாகப் பெருகியவற்றைக் காவியமாகத் தருகிறார் நீலகண்ட தீக்ஷிதர். **தமிழில் உள்ள பரஞ்ஜோதி முனிவரின் திருவிளையாடல் புராணம் என்ற நூலே தீக்ஷிதரின் காவியத்திற்கு ஆதாரமாகிறது.** ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதருக்கு ஒரு தனிப்பெருமையும் உண்டு. அவர் வக்ரோக்தியில் மிகத்திறமை பெற்றவர். வக்ரோக்தி என்றால் சொல்லவேண்டியதை நேரடியாகச் சொல்லாமல், வக்ரமாக, நையாண்டியாக, கிறுக்குத்தனமாகச் சொல்வது. அதைப் படித்தால் ரஸிகர்கள் உவகை அடைவார்கள். காவியரஸத்தில் இது ஒரு வினோதத்தை அளிக்கின்றது.

ஸ்ரீகாஞ்சீ மஹா ஸ்வாமிகள் சுமார், முப்பது ஆண்டுகளுக்கு முன்னால், கர்னாடகாவும் மஹாராஷ்ட்ராவும் கூடுகின்ற எல்லைப்பகுதியில், க்ருஷ்ணா நதீ தீரத்தில் உகார் என்ற கிராமத்தில் முகாம் இருந்தார்கள்.அங்கே ஒரு சன்யாசி ஆச்ரமத்தில் இருந்தார். அந்த ஆச்ரமத்தில் மஹாஸ்வாமிகளும் தங்கி இருந்தார்கள். அவர்களை தரிசிப்பதற்காக இந்த உரையாசிரியர் அங்கே சென்றார். குருநாதர், வந்தனம் செய்துவிட்டு எழுந்த இவனைக் கேட்டார். ' இந்த மூலை முடுக்கில் உட்கார்ந்திருக்கின்றவரைத் தேடிக்கொண்டு வந்தாயா? வேறு வேலையாக வந்த நீ, தரிசனம் செய்து விட்டுப் போகலாம் என்று இறங்கினாயா ?

இவனுக்கு கண்களில் நீர் கசிந்தது. தழுதழுத்தக் குரலில் சொன்னான். என்னை க்ஷமிக்க வேண்டும். தரிசனம் செய்து இரண்டு மூன்று வருஷங்கள் ஆகிவிட்டன. இனி தாமதிக்கக்கூடாது. எப்படியாவது திவ்ய சரணங்களை வந்தனம் செய்ய வேண்டும் என்று ஏதோ ஒன்று இவனை உந்தியது. உடனே கிளம்பி வந்து விட்டான்.

நீ அடுத்த பஸ்ஸில் போகணுமில்லையா ?

பெரியவா கிருபை இருந்தால் ஐந்தாறு நாட்களாவது பெரியவாளை வந்தனம் செய்துகொண்டிருக்கலாம் என்று நினைத்தேன்.

அப்போது 'உகார்' ஸ்வாமிகளும் அங்கே வந்தார். பெரியவாள் இவனைச் சுற்றிக் காட்டி 'இவன் வெகுநாட்களாக மடத்தில் கைங்கர்யம் செய்து கொண்டிருந்தான். நான் எட்டி வந்து விட்டதால் இரண்டு மூன்று வருஷங்களாக அதற்கு விக்னம் வந்து விட்டது. எனக்கு வர வர கண் பார்வை மங்கிவிட்டது. 'லென்ஸ்' வைத்துக் கொண்டு ஏதாவது க்ரந்தம் படிக்கிறேன். நேத்திக்கு ஒரு பண்டிதர் வந்தார். வெகுநாட்களுக்குமுன் அவரிடம், ஸ்ரீநீலகண்ட தீக்ஷிதரின் சிவலீலார்ணவம் இருந்தால் கொண்டுவா, என்று சொல்லி இருந்தேன். அவர் எங்கெல்லாமோ தேடி கண்டுபிடித்து கொண்டு வந்து கொடுத்தார். சின்ன அக்ஷரங்களாக இருந்தது. முன்பு, இவனைத்தான் பல க்ரந்தங்களைப் படிக்கச்சொல்லிக் கேட்பேன் இவனுக்கு வ்யுத்பத்தி வரம் இருந்ததால், க்ரந்தங்களை சரியாக பதம் பிரித்துப் படிப்பான். அவன் இங்கு வந்திருக்கிறான். எல்லாம் தேவியின் செயல். புராணங்களில் க்ருஷ்ணரைப் பற்றியோ, ராமரைப் பற்றியோ ரஸமான காவ்யங்கள் இருக்கின்றன. பரமேச்வரனைப் பற்றி பல புராணங்களில் அவருடைய பெருமைகள் விஸ்தாரமாகச் சொல்லி இருக்கு. ஆனால் பரமேச்வரனைப் பற்றி அப்படி ஒரு காவ்யம், காவ்யரஸத்தோடு வரவில்லையே என்ற ஆதங்கம் உண்டு. ஆனால் பல வருஷங்களுக்கு முன் நீலகண்ட தீக்ஷிதரின் **சிவலீலார்ணவம்** எனக்குக் கிடைத்தது. அதைப் படித்து சந்தோஷப்பட்டேன். பிறகு மடத்தின் பொறுப்புகளை அடுத்த ஆசாரியரிடம் ஒப்புவித்து விட்டேன். இப்பொழுது நிறைய அவகாசம். இவனும் வந்திருக்கிறான். படிக்கச் சொல்லலாமென்று தோன்றுகிறது என்று சொல்விட்டு, இவனைப்பார்த்து, ' அதோ அந்த அறையில் சிக்குப் பலகையில் சிவலீலார்ணவம் இருக்கிறது. அந்த சிக்குப்பலகையோடு எடுத்துண்டு வா' உட்கார்ந்து படி' என்றார்கள். இவன் இரண்டு பெரியவர்களையும் வந்தனம் செய்து விட்டு படிக்க ஆரம்பித்தான். ச்லோகத்தைப் படித்ததும் அவர்கள் சொன்னார்கள் உனக்குத்தான் ஸங்கீத ஞானம் உண்டே. ராகம் போட்டு வாசி' என்றார்கள்.

இவன் பைரவியில் பூதம் ஸ்வத என்று வாசிக்க ஆரம்பித்தான். ஒவ்வொரு ச்லோகம் முடிந்ததும், நாலைந்து நொடிகள் மௌனமாக இருந்து விட்டுப் படித்தான். மஹாஸ்வாமிகள் குந்திக்கொண்டு உட்கார்ந்து, தண்டத்தைக் கையில் பிடித்துக் கொண்டு, கண்களை மூடிக்கொண்டும் கேட்பார்கள். இவன் படித்துக் கொண்டே போனான். சில ச்லோகங்களைப் படித்து நிறுத்தியதும், இந்த ச்லோகத்தை மறுபடியும் படி' என்பார்கள். கவனமாகக் கேட்டு விட்டு, மீண்டும் படி என்பார்கள். இவன் தன்னுடைய நோட்டுப் புத்தகத்தில் அந்த ச்லோகத்தின் நம்பரைக் குறித்துக்கொள்வான். இவ்வாறு ஆறுநாட்கள், காலையில் இரண்டு மணி நேரம், மாலை மூணுமணி நேரம் பாராயணம் நடக்கும். தர்சனத்திதிற்கு வந்தவர்களை பெரியவர்களின் சீடர்கள் எட்டி உட்கார்த்தி விடுவார்கள். இவ்வாறு பாராயணம் நடந்து ஏழாம் நாள் காலை ஒரு மணி நேரம் பாராயணத்துடன் சிவலீலார்ணவம் முடிவடைந்தது. அதைப் பற்றி நினைத்து நினைத்து இவன் சந்தோஷப்படுவான்.

அதற்குப் பிறகு, முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு., தற்போது, ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு, இவன் கோவிந்தபுரத்தில் அமைதியாக போதேந்திரஸரஸ்வதீ ஸ்வாமிகளின் அதிஷ்டானத்தைப் பிரதக்ஷிணம் செய்து கொண்டு வசித்து வந்தான். அப்போது ஒரு நாள், காஞ்சி மஹாஸ்வாமிகளுக்கு முன்பு கைங்கர்யம் செய்து வந்த நான்கு ஐந்து பேர்கள், இவனுக்கு பரிசயமானவர்கள் வந்தார்கள். சிறிது நேரம் பழைய கதைகளைப் பேசிவிட்டு

சொன்னார்கள். மஹா ஸ்வாமிகளின் சில விருப்பங்களைத் தாங்கள் நிறைவேற்ற வேண்டும். நாங்கள் 'மஹாஸ்வாமிகள் ட்ரஸ்ட்' என்ற பெயரில் அவரது விருப்பங்களை நிறைவேற்றி வருகின்றோம். அவர்களுடைய கடைசீ காலத்தில் 'ப்ராசீனமான சில ஸ்தோத்திர க்ரந்தங்களை, சுமார் 100 வருஷங்களுக்கு முன்னால், சிலர் அச்சிட்டு வெளியிட்டார்கள். அவை இப்போது கிடைக்க வில்லை. அவற்றை மறுபதிப்பு செய்துவழங்க வேண்டும் ' என்றார்கள். அதில் இரண்டு நூல்கள் பதிப்பிக்க முடியாமல் தங்கி விட்டன. அவற்றில் ஒன்று 'ஸமர்த்த ராமதாஸரின் சரிதம்' மற்றொன்று நீலகண்ட தீக்ஷிதரின் சிவலீலார்ணவம் அவற்றைப் பதிப்பிற்கு தயாரிக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள். அப்போது தங்கள் நினைவு வந்தது. ஸ்ரீ ரா. கணபதி ஸமர்த்த ராமதஸர் சரித்திரத்தை ஸ்வாமினாத ஆத்ரேயரிடம் கொடுங்கள் என்றார்கள். அப்போது எங்களில் ஒருவருக்கு நினைவு வந்தது. தாங்கள் 'உகாரில்' மஹாஸ்வாமியின் முன் பாராயணம் செய்தது. ஆகவே தாங்கள் இந்த இரண்டு கார்யங்களையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்பதற்கு வந்திருக்கிறோம்' என்றார்கள்.

மஹாஸ்வாமிகளின் ஸங்கல்பமென்ற வார்த்தை இவனுடைய மனதில் பதிந்தது. ஸமர்த்த ராமதஸரின் சரித்திரத்தை எழுதினான். அதற்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. அவர்கள் மறுபடியும் நினைவூட்டினார்கள். இவன் சிவலீலார்ணவத்தைப் படித்தான். பல இடங்களில் இவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. அதை வைத்து விட்டு 'ஜய ஜய ஹனுமான்', 'ராமபத்ர ஸாஹஸ்ர மஞ்சரீ' போன்ற நூல்களை எழுதினான். அவற்றைப் பதிப்பித்தார்கள். மறுபடியும் 'சிவலீலார்ணவம் என்ன ஆயிற்று' என்று விரட்டினார்கள். அதற்குள் இவனுக்கு கண் பார்வை முக்கால்வாசி மங்கி விட்டது. என்ன செய்வது என்று திகைத்துக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் மதுரையிருந்து மதுரை காலேஜில் ஸமஸ்கிருத ப்ரபஸாராக இருந்து ஓய்வு பெற்ற Dr. S.ஜகதீசன் (உமையாள்புரம்), இவனைப் பார்க்க வந்திருந்தார். இவனுக்கு அவர் வெகு நாளய நண்பர். அவரிடம் இவனுடைய திகைப்பைச் சொன்னார். அவருக்கு பரமஸந்தோஷம். ஏன் திகைக்கிறீர்கள்? 'நீங்கள் எழுதுங்கள் உங்களுக்கு என்ன உதவி வேண்டுமனாலும் செய்கிறேன்' என்றார். நீலகண்ட தீக்ஷதரின் க்ரந்தங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து, நூல் எழுதி, டாக்டர் பட்டம் பெற்றவர். எனக்கோ முக்கால் கண் தெரியவில்லை. நல்ல சூரிய வெளிச்சத்தில் லென்ஸ் வைத்து எழுத வேண்டியிருந்தது. நான் எழுதியதை நானே படிக்க முடியாது. எப்படி ஐயா இது நடக்கும்?என்று கேட்டேன். அவர் சொன்னார்- நீங்கள் எப்படியாவது எழுதுங்கள். அதை நான் சரி செய்து கொள்கிறேன். நான் எழுதி முடிக்க 11 மாதங்கள் ஆயின. அவர் Type Set பண்ணி மூன்று மூன்று ஸர்கங்களாகக் கொடுப்பார். அப்படி Type Set செய்து பண்ணினதை என்னால் லென்ஸ் கொண்டு படிக்க முடிந்தது. அதில் பல திருத்தங்கள் செய்ய வேண்டி இருந்தன. அவர் மறுபடியும் Type Set பண்ணுவார். ஆங்கிலத்தில் ஒவ்வொரு ச்லோகத்திற்கும் பொழிப்புரை எழுதி ஸெட் பண்ணுவார். 20 ஸர்கங்கள் தயாராக 20 மாதங்கள் ஆயின. அப்போது இவனுக்கு ஒரு விபத்து வந்தது. ஆப்ரேஷன் நடந்தது. அதிருந்து மீண்டு வர ஒருமாதம் ஆயிற்று. 21, 22 ஸர்கங்களின் Type Set செய்த பேப்பர்கள் காத்திருந்தன. ஆஸ்பத்திரியிருந்து வந்து பார்த்தான். என்ன செய்வது? பகவானைப் பிரார்த்தித்தான். இவனைப் பார்க்க ஒரு ஓய்வு பெற்ற பள்ளிக்கூட ஆசிரியை வந்திருந்தாள். அவளுக்கு நல்ல சமஸ்கிருத ஞானமும், இசையில் ஈடுபாடும், பண்டைய இலக்கியங்களில் பரிசயமும் இருந்தது. அவள் பெயர் லதா. அவளிடம் இவன் தன் பரிதாபநிலையைப் புலம்பினான். அவள் சொன்னாள்; 'கவலையே படாதீர்கள். நான் இருக்கிறேன். இந்த ப்ரூப் களைப் படிக்கிறேன். திருத்தம்

இருந்தால் சொல்லுங்கள் எழுதி விடுகிறேன்’ என்றாள். பகவானை பாவனையாக நமஸ்கரித்தான். 21, 22 ஸர்கங்களில் மணிவாசகர் சரித்திரமும் மற்ற சிவலீலைகளும் வருகின்றன. அங்கு தீக்ஷிதரின் கவிதா விலாஸம் உச்ச நிலையை அடைந்து விட்டது. யாருக்கும் எட்டாத கற்பனைகள் பல விரிந்தன. ஆகவே ‘ப்ரூபி’-ல் ஒரு வரி கூட சரி இல்லாமல் போய்விட்டது. ஆகவே சுமார் 200 ச்லோகங்களுக்கு புதிதாக உரை எழுத வேண்டி வந்தது. லதா 21,22 ஸர்கங்களின் ஒவ்வொரு ஸ்லோகத்தையும் படிப்பாள். ஒரு அக்ஷரமும் புரியாது. காஞ்சீ மஹா ஸ்வாமிகளை இவன் நினைப்பான். ச்லோகத்தை இரண்டு மூன்று தடவை படிக்கும்போது அர்த்தம் ஸ்புரிக்கும், அப்பொழுது உரையைச் சொல்லுவான் இவன். அவள் எழுதுவாள். இவ்வாறு இந்த 200 ச்லோகங்களுக்கும் 7 நாட்கள் 30 மணி நேரங்கள் ஆயின. காஞ்சி மஹா ஸ்வாமிகளின் கிருபையின்றி இந்தக் காரியம் நிறைவேறி இருக்காது. ஜகதீசனிடம் 2வது, 3-வது ‘ப்ரூப்’ எல்லாம் நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்றுவிட்டு விட்டான். நல்ல வேளையாக தீக்ஷிதரின் சலோகங்களில் முன் பயிற்சி இருந்ததால் இந்தக் காரியம் ஒருவாறு நிறைவேறியது. சமஸ்கிருத வித்வன்கன் பேரறிவுக்கு உரைகல்லாக அமைந்துள்ளது இந்த நூல்.

ஜய ஜய சங்கர, ஹர ஹர சங்கர

தஞ்சாவூர் ஸ்வமிநாத ஆத்ரேய

## குறிப்பு:

தீக்ஷிதரின் காவ்யத்தில் முதல் ஸர்கத்தில் துஷ்கவிகளை சாடு சாடு என்று சாடுகிறார். முந்தய கவிகள் துஷ்கவிகளை கண்டித்திருந்தாலும், இந்த அளவு வன்மையைக் காட்ட வில்லை. தீக்ஷிதர் ஏன் இப்படி எழுதினார் என்பதற்கு ஒரு பின்னணி உண்டு. 16,17 நூற்றாண்டுகளில் பண்டிதர்கள், அந்தக் காலத்து சிற்றரசர்கள், பாளையக்காளர்கள், ஜமீன்தார்கள் இவர்களை அண்டியே பிழைத்தார்கள். ஏதாவது நூல் எழுதி அவைகளை அரங்கேற்றி சபையினரின் பாராட்டுப்பெற்று, சன்மானம் பெறுவார்கள். இதிலே பல தில்லு முல்லுகள் நடக்கும். சாற்றுக் கவிகள், வசைபாட்டுக்கவிகள் என்றெல்லாம் கிளம்பும். சிலேடை, யமகம், ஓரெழுத்து, ஓரெழுத்து மட்டுமே, எங்குமே வராத செய்யுள்கள், இப்படி எல்லாம் சவால் நூலகள் கிளம்பும்.

இது சமஸ்கிருதத்தில் மட்டும் அல்ல, தமிழிலும் உண்டு. அன்றைய அண்டைய அரசர்களின் சிபாரிசுகளுடன் வந்து அந்தக் காவியம் சன்மானம் பெறும். காவியத்தைப் படித்துப்பார்த்தால், கவிதா நயமோ, பொருட்செறிவோ ஒன்றுமே இருக்காது.

நீலகண்ட தீக்ஷிதர் திருமலைநாயகனின் ஆஸ்தானப் புலவன் என்று, இந்த மாதிரி கவி அரங்குகளுக்கு தலைமை தாங்க நேரும். கவிகள் தன்னைச் சார்ந்த சிலரை அழைத்துக் கொண்டு வந்து சபையில் தன் காவ்யத்தை அரங்கேற்றுவார்கள். அந்தக்கூப்பட்டாளம், ‘ஆஹா ! ஊஹூ ! பேஷ், பேஷ், அடேயப்பா இதல்லவா காவ்யம் என்றெல்லாம் கூச்சலிடுவார்கள். தீக்ஷிதர், அரசவையின் கௌரவத்தைக் காப்பதற்காக, மௌனமாகக் கேட்டுக் கொண்டிருப்பார், காவ்யம் படைத்த பண்டிதர் தனது காவ்யத்துடன், பிரபுக்களின் சிபாரிசுகளையும் வைத்துவிட்டு காத்திருப்பார்கள். தீக்ஷிதர் அரசாங்க அதிகாரிகளைக் கலந்து கொண்டு சன்மானம் வழங்குவார். அடுத்தவனும் இதைப்போலவே பெருமை பெறுவான். மனசாட்சிக்கோ, பேரறிவுக்கோ கொஞ்சங்கூட ஸம்பந்தமில்லாத ஒரு கடமையை ஆற்றிவிட்டு வந்து. மனம் குமுறினார். முதல் ஸர்கத்தில் துஷ்ட்ட கவிதைகள் நிந்தைக்கு இதுதான் காரணம்.

## நீலகண்ட தீக்ஷிதர் - வாழ்க்கை வரலாறு

தென் இந்தியாவில், முக்கியமாக தமிழ் நாட்டில், சமஸ்கிருத இலக்கியங்களின் வளர்ச்சிக்கு பொற்காலமாக இருந்தகாலம் 16,17,18-வது நூற்றாண்டுகள் ஆகும். இக்காலத்தில் பிரசித்தி வாய்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட அந்தண குலத்தைச்சார்ந்த சமஸ்கிருத விற்பன்னர்கள். ஆயிரக்கணக்கான தங்களுடைய சமஸ்கிருத நூல்களின் மூலம், சமஸ்கிருத வளர்ச்சிக்கு ஊன்றுகோலாகத் திகழ்ந்தனர். அச்சமயம் தமிழ்நாட்டில் வேலூர், தஞ்சை, திருச்சி, மதுரை முதலிய நகரங்களை தலைநகராகக்கொண்டு ஆட்சி புரிந்த விஜயநகர நாயகமன்னர்கள், 18-வது நூற்றாண்டில் தஞ்சையை ஆண்ட மராத்திய மன்னர்கள் அனைவரும், சமஸ்கிருத மொழியில் சிறந்த புலமை பெற்றதோடு அல்லாமல், பல சமஸ்கிருத அறிஞர்களையும், கவிகளையும் சிறப்பாகப் போற்றி, சிறந்த பட்டங்களையும் வழங்கி, தங்களுடைய அவைகளில் எல்லோராலும் போற்றத்தக்க பதவிகளைத் தந்து, சிறப்பாக கௌரவித்தனர். விஜயநகர மன்னர் ஸ்ரீ கிருஷ்ணதேவராயரால் 'வக்ஷஸ்தல ஆசாரியார்' என்று கௌரவிக்கப்பட்ட ஸ்ரீ ஆசார்ய தீக்ஷிதர், ''ரத்னகேடம் ''என்று பட்டம் அளித்து கௌரவிக்கப்பட்ட ரத்னகேட ஸ்ரீனிவாஸ தீக்ஷிதர், சின்னபொம்ம நாயகரால் கனகாபிஷேகம் செய்து கௌரவிக்கப்பட்ட ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர், மந்திரி பதவி கொடுத்து கௌரவிக்கப்பட்ட ஸ்ரீகோவிந்த தீக்ஷிதர், ஸ்ரீநீலகண்ட தீக்ஷிதர் போன்ற மஹாவித்வான்கள் வாழ்ந்து வந்த காலம் அது. இவ்வித்வான்கள் தங்களைப் போற்றிய மன்னர்களின் அவையில் அவைப்புலவர்களாக இருந்து கொண்டு, தங்களுடைய காவ்யங்களிலும், மற்ற நூல்களிலும் அம்மன்னர்களின் பெருமைகளைக்கூறி தங்களுடைய நன்றியை தெரிவித்து வந்துள்ளனர். ஆஸ்தான வித்வான்களாக மட்டும் இல்லாமல் சிறந்த ஆலோசகர்களாகவும் இருந்து கொண்டு. மன்னர்களுக்கும் அவர்களுடைய ஆட்சிக்கும் பெருமை தேடி வந்தனர். இவர்களில் மிகப்பிரஸித்தி பெற்ற ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதரின் ஸகோதரரின் பேரனும், மதுரையை ஆண்ட திருமலை நாயகரின் அவையை அலங்கரித்தவருமான ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரும் ஒருவராவர்.

தென் ஆற்காடு மாவட்டத்தை சேர்ந்த அடையப்பலம் என்ற கிராமத்தில் பிறந்து, தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் மிகச்சிறந்த வித்வான்களிடம் கல்வி பயின்று, மதுரையை ஆண்ட திருமலைநாயக மன்னரின் அவையில் சிலகாலம் பணிபுரிந்துவிட்டு, பிறகு ஓய்வு பெற்று, தன் கடைசிகாலங்களில் திருநெல்வேலி மாவட்டத்தில் தாமரபரணி ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள பாலாமடை என்ற சிறு கிராமத்தில் இருந்து கொண்டு, அங்கேயே துறவு பூண்டு நிர்யாணம் அடைந்தமையினால், இவ்வைந்து மாவட்டங்களும் ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரை தன்மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லிக் கொள்வதில் பெருமிதம் கொள்கின்றன.

17வது நூற்றாண்டில் தோன்றிய ஸ்ரீஅப்பய்ய தீக்ஷிதரின் இளைய ஸகோதரர் ஸ்ரீ ஆசார்ய தீக்ஷிதரின் குமாரர் நாராயணாத்வரிக்கும். பூமிதேவி அம்மையாருக்கும் பிறந்த இரண்டாவது குமாரர் நீலகண்ட தீக்ஷிதர். இவருடன் பிறந்த ஸகோதரர்கள் நால்வர். ஆச்சான் தீக்ஷிதர் மூத்தவர், சின்ன அப்பய்யர் என்று பொதுவாக அழைக்கப்படும் அப்பய்ய தீக்ஷிதர், அதிராத்ரயஜ்வன், சந்த்ரகலாவதம்ஸர் என்பவர்கள் நீலகண்ட தீக்ஷிதரின் இளைய ஸகோதரர்கள். தன் குடும்பத்தில் தொன்று தொட்டு அனைவருமே சிவபக்தர்கள். கவிகள், வித்வான்கள் என்று தீக்ஷிதரே குறிப்பிடுகின்றார்.

'கர்பதாஸா: மஹேசஸ்ய கவயஸ்ச விபஸ்சித:'

அனைவரும் புலமை வாய்ந்தவர்கள் என்பதை மற்றொரு இடத்தில் சமத்காரமாக 'சாரதா அவேதன கிங்கரீ (வாக்தேவியாகிய ஸரஸ்வதி கூலியில்லா வேலைக்காரியாக இருந்தாள்') என்று குறிப்பிடுகிறார்.

சிறு வயதிலேயே தந்தையையும், பாட்டனாரையும் இழந்த காரணத்தினால்,பெரிய பாட்டானார் அப்பய்ய தீக்ஷிதர் அவர்களின் பராமரிப்பில் வளர்ந்து, அவரிடமே ஆரம்பக்கல்வி பயின்றார். இயற்கையிலே காணப்பட்ட நீலகண்டதீக்ஷிதரின் மேதாவிலாஸத்தைக்கண்டு வியந்து மிகவும் ப்ரேமையுடன் அவரை வளர்த்து வந்தார். அப்பய்ய தீக்ஷிதர் தன்னுடைய 72-வது வயதில் நிர்யாணம் அடையும்பொழுது இளைய ஸகோதரனின் பேரனாகிய நீலகண்ட தீக்ஷிதரை தன் அருகில் கூப்பிட்டு ஸ்ரீதேவீமாஹாத்மியம், காளிதாஸரின் ரகுவம்சம் ஆகிய இரண்டு புத்தகங்களைக் கொடுத்துவிட்டு, பரிபூர்ண ஆசிகளை வழங்கி, பிற்காலத்தில் பாண்டியமன்னரின் அவையை அலங்கரித்து மிகவும் சிறப்பாக விளங்குவாய் என்று ஆசீர்வதித்தார்.

பெரிய பாட்டனார் அப்பய்ய தீக்ஷிதர் நிர்யாணம் அடையும்பொழுது நீலகண்ட தீக்ஷிதருக்கு வயது 12. அப்பய்ய தீக்ஷதரின் நிர்யாணத்திற்குப் பிறகு நீலகண்ட தீக்ஷிதர், அவ்வமயம் தஞ்சையை ஆண்ட அச்சுதநாயகரின் ப்ரதான மந்திரி கோவிந்த தீக்ஷிதரின் குமாரர் வேங்கடமகியிடம், சிலகாலம் சாஸ்திர பாடங்களை நன்கு பயின்றார். பிறகு திருச்சியில் வாழ்ந்து வந்த கீர்வாணேந்த்ர ஸரஸ்வதீ என்ற ப்ரஸித்தி பெற்ற தந்த்ர சாஸ்திர விற்பன்னரிடன் தந்த்ரசாஸ்திரங்களை பயின்றார். பிறகு மதுரையம்பதியை அடைந்தார். தீக்ஷிதர் மதுரை மாநகருக்கு வரும்பொழுது அவருக்கு வயது இருபதிலிருந்து இருபத்தைந்து இருக்கும் என்று ஊகிக்கப்படுகின்றது. அங்கு மீனாக்ஷியின் ஸன்னதியில் பலகாலம் தேவீபாகவத உபன்யாஸம் செய்து கொண்டிருக்கையில். அவ்வமயம் மதுரையை ஆண்டுவந்த மன்னன் திருமலை நாயகர் தீக்ஷதரின் உபன்யாஸத்தைக் கேட்டு. மனம் கவர்ந்தவனாய் காக: என்ற பெயர் காக்கைக்கு எவ்வாறு வந்தது என்று வினவ, தீக்ஷிதரும் இராமயணத்தில் ஆரண்ய காண்டத்தில் இந்திரனின் மகன் ஜயந்தன் காகவடிவத்தில் ஸீதையை துன்புறுத்தியதையும், இராமன் அக்காகத்தை தண்டித்து பிறகு மன்னிப்புக் கேட்டதினால் விடிவித்தவுடன் அவர்களை வணங்கி விட்டு மகிழ்ச்சியுடன் காக: (கா-எவள்? - சீதையைக் காட்டிலும் பொறுமையுள்ளவர் இவ்வுலகில் யார்? க:- எவன்?- இராமரைக் காட்டிலும் தஞ்சம் அளிப்பதில் சிறந்தவர் இவ்வுலகில் யார்?) காக: (எவள்?, எவன்?) என்று கூவிக்கொண்டு பறந்து சென்றதாம். ஆகவே காக: என்ற பெயர் அதற்கு நிலைத்துவிட்டது என்று அனைவராலும் போற்றத்தக்க மிகச்சிறந்த விளக்கத்தைக் கூறியவுடன் அரசன் வியந்து, பணிவுடன் அவரை தன் அவையின் ஆஸ்தான வித்வானாகவும், ஆலோசகராகவும் நியமித்தான் என்று கூறப்படுகின்றது. தனக்கு கொடுக்கப்பட்ட பணிகளை பொறுப்புடன் செய்துகொண்டு பல வருஷங்கள் அரசனுடைய அவையை அலங்கரித்துவந்தார். மீனாக்ஷி அம்மன் கோவின் திருப்பணிகள் இவர் மேற்பார்வையில் விஸ்தாரமகச் செய்யப்பட்டது. முக்கியதேவதா ப்ரதிஷ்டை, கோவில் பூஜா விதிகள், உத்ஸவங்கள் போன்றவைகளை ஸ்தலபுராணங்கள். ஆகமசாஸ்த்ரம், ஹாலாஸ்ய மஹாத்மியம் இவைகளில் கூறியதுபோல் நடப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். மீனாக்ஷி அம்மன் கோயின் கிழக்கு ஸன்னிதியில் காணப்படுகின்ற பிரஸித்திபெற்ற புதுமண்டபம் இவருடைய காலத்தில், இவருடைய மேற்பார்வையில் கட்டப்பட்டது.

வயது ஆக ஆக தீக்ஷிதருக்கு அரச ஸபையில் ஸேவை செய்வதில் அலுப்புத்தட்ட ஆரம்பித்தது. தன்னுடைய சாஸ்த்ர பரிசயங்களினாலும், பண்பினாலும் ஆன்மீக வாழ்க்கையிலே மனநாட்டமிருந்த பொழுதிலும் சந்தர்ப விசேஷத்தினால் அவருடைய வாழ்க்கை வேறு பாதையில் சென்றது. அரச அவையில் பணியாற்றிய காலங்களிலும் அவருடைய உள்ளம் பெரும்பாலும் தர்மமான கொள்கையிலும் ஆன்மீகத்திலும்தான் ஈடுபட்டிருந்தது. தன்னுடைய லௌகிக வாழ்க்கையில் மகத்தான வெற்றியைக் கண்டாலும்,

அவருடைய கவிதா உள்ளம் நிம்மதி அடையாமல் இருந்தது. மிகுந்த பிரயாசைப்பட்டு தாம் பெற்ற சாஸ்த்ர ஞானத்தை தவறான வழியில் பிரயோஜனப்படுத்தி விட்டோமோ என்ற வருத்தம் அங்கங்கே அவருடைய ச்லோகங்களில் த்வநிக்கின்றது. தன்னுடைய சாந்திவிலாஸம் என்ற சிறுகாப்பியத்தில் பின்வருமாறு புலம்புகின்றார்: ''சிறுவயதிலிருந்து ஆசார்யனுக்குப் பணிவிடை செய்து எல்லைமீறிய ஆசையுடன், வேதாந்த சாஸ்திரங்களின் மூலம் ஏற்பட்ட ஞானம், முடிவில் இரவுதோறும் தூக்கம் வரும் பொருட்டுக் கதைகளைக் கேட்கும் அரசர்களின் பொழுது போக்கிற்கு உபாயமாகவல்லவா முடிந்தது!'' என்று இப்படிப்பட்ட உணர்ச்சி ஏற்பட்டவுடன் அரசனிடம் பணி செய்வது முடியாததாயிற்று. அரச அவையிருந்து ஓய்வு பெற்று, திருநெல்வேலி நகரத்திற்கு அருகாமையிலுள்ளதும், தாமிரபரணி ஆற்றின் வடகரையில் அமைந்துள்ளதுமான பாலாமடை எனும் சிறு கிராமத்தில் தன்னுடைய கடைசி காலத்தை சாந்தியுடன் கழித்து, முடிவில் ஸன்யாஸ ஆச்ரமத்தை மேற்கொண்டு அங்கேயே ஸித்தியும் அடைந்தார். கிராமத்தில் விளங்குகின்ற சிவன் கோயில் பிரகாரத்திலுள்ள இவருடைய ஸமாதியின்மேல் ஒரு சிறுகோயில் அமைக்கப் பெற்று அங்கு ஸ்ரீ விசவநாதர் விசாலாக்ஷி விக்ரஹங்கள் ப்ரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. நீலகண்டசமுத்திரம் என்றும் அழைக்கப்படும் இப்பாலாமடை கிராமத்தின் அக்ரஹாரத்தில் இவருடைய வம்சத்தவர்களே வசிக்கின்றனர். தீக்ஷிதரின் ப்ரஹ்ம லயமான தினம் ஸரியாகத் தெரியாமல் இருப்பினும், ஜகத்குரு ஸ்ரீ ச்ருங்ககிரி மஹா ஸ்ன்னிதானம் அக்கிராமத்திற்கு வருகை தந்த தினத்தையே, ஸ்ரீ மஹாஸன்னிதானம் அவர்களின் ஆக்ஞானுஸாரம், தீக்ஷிதரின் ப்ரஹ்மலயமான தினமாக எடுத்துக் கொள்ளப்பட்டு, ப்ரதிவருஷம் மார்கழி மாதம் சுக்லபக்ஷ அஷ்டமி தினத்தன்று இவருடைய ஆராதனை வைபவம் ஸாமவேத பாரயணங்களுடன் கொண்டாடப்பட்டு வருகின்றது.

தீக்ஷிதர் தன் வாழ்நாள் முழுவதையும் தமிழ்நாட்டிலேயே கழித்தார். தன் வாழ்நாளுக்குள் காசிக்குச் சென்று கங்காஸ்நானமும், ஸ்ரீ விசவநாதர் விசாலாக்ஷியையும் தரிசனம் செய்ய வேண்டும் என்று பிரயாசைப்பட்டார். ஆனால் முடியவில்லை. கலியின் கொடுமைக்கு வசப்பட்ட இவ்வுலக வாழ்க்கையை வெல்லுவதற்கு இரு உபாயங்கள் இருக்கின்றன. நளனுடைய கதையை ச்ரவணம் செய்வது ஒன்று, மற்றொன்று புனிதமான காசியை அடைவது என்று தன்னுடைய நளசரித நாடகத்தில் தீக்ஷிதர் குறிப்பிடுகிறார். 'காசி செல்லமுடியாத காரணத்தினால் காசியையும், புனிதமான கங்கையையும் ஸ்மரணம் செய்வதற்காக ' கங்காவதரணம்' என்ற மஹாகாவ்யத்தையும், நளனை நினைவுபடுத்திக் கொள்வதற்காக 'நளசரிதம்' என்ற நாடகத்தையும் எழுதியுள்ளார். தன் மனைவி குழந்தைகளைப்பற்றி அவர் தான் எழுதிய நூல்களில் ஒன்றிலும் குறிப்பிடவில்லை. தன்னுடைய பெரிய பாட்டனார் அப்பய்ய தீக்ஷிதர், தந்தை நாராயணாத்வரி, தாய் பூமிதேவி, மற்றும் ஸகோதரர்கள் இவர்களை மட்டுமே தன்னுடைய கங்காவதரணம் என்கிற காவ்யத்தின் ஆரம்பத்தில் குறிப்பிடுகின்றார். தான் எழுதிய அனைத்து நூல்களின் கடைசியில் (Colophon) தன் பெரிய பாட்டனார் அப்பய்ய தீக்ஷிதரின் பெயரையும் தன் பெற்றோரகளின் பெயரையும் தவறாமல் குறிப்பிடுகின்றார்.

## நீலகண்டதீக்ஷிதர் எழுதிய நூல்கள்:

தன் பெரிய பாட்டனார் அப்பய்ய தீக்ஷிதரைப் போன்று ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர் என்று போற்றப்படும் தீக்ஷிதர் மொத்தம் 18 சம்ஸ்க்ருத நூல்களை எழுதியுள்ளார் சிவலீலார்ணவம், கங்காவதரணம், முகுந்தவிலாஸம் என்ற மூன்றும் இவர் எழுதிய மஹாகாவ்யங்கள். மதுரையில் சிவபெருமான் நிகழ்த்திய 64 திருவிளையாடல்களை, ஹாலாஸ்ய மாஹாத்ம்யத்தை ஆதாரமாகக்கொண்டு 22 ஸர்கங்களில் தன்னுடைய சிவலீலார்ணவத்தில் விவரிக்கின்றார். தனக்கு கங்கைக்குப் போக முடியவில்லை யே என்ற ஆதங்கத்தினால் அதை ஸ்மரணம் செய்யலாமே என்ற எண்ணத்துடன் எட்டு ஸர்கங்களில் எழுதப்பட்ட மஹாகாவ்யம் கங்காவதரணம். ஸ்ரீ கிருஷ்ணரின் பாலலீலைகளை வருணிக்கும் இவருடைய மூன்றாவது மஹாகாவ்யம் முகுந்தவிலாஸ காவ்யம் மூன்று ஸர்கங்களுடன் முற்றுப் பெராமல் உள்ளது. 'பக்தி சிறு காவ்யங்கள் ' (Devotional Lyrics) என்ற தலைப்பில் ஆனந்த ஸாகரஸ்தவம், சிவோத்கர்ஷ மஞ்சரி, சண்டி ரஹஸ்யம், ரகுவீரஸ்தவம், குருராஜஸ்தவம் ஆகிய ஐந்து நூல்களும் முறையே மதுரை மீனாக்ஷி, சிவபெருமான், பார்வதிதேவி, ராமர், கீர்வாணேந்திரர் என்ற பெயருடைய தன் ஆசிரியர், இவர்களைப் போற்றி ஸ்தோத்திரவடிவத்தில் எழுதப் பட்டவை. மக்களுக்கு அறிவுறுத்தும் ( Didactic Lyrics) சிறு காவ்யங்களின் வரிசையில் எழுதப்பட்ட சிறு காவ்யங்கள் - கலிவிடம்பனம், ஸபாரஞ்ஜன சதகம், வைராக்யசதகம், சாந்திவிலாஸம் அன்யாபதேசசதகம் ஆகிய ஐந்து. கலிகாலத்தின் போக்கை கலிவிடம்பனத்தில் 100 செய்யுள்களில் ஹாஸ்யரஸம் ததும்பக் கூறுகிறார். புரோஹிதர், மந்திரவாதி, வைத்யர், ஜ்யோதிடர், குடித்தனக்காரர், போலி ஸன்யாஸி போன்றவர்கள் எவ்வாறு வாழ்க்கையை நடத்துகிறார்கள் என்பதை நையாண்டி செய்கிறார். கற்றோர்களின் அவையில் நடந்து கொள்ள வேண்டிய பண்புகளைப் பற்றியும், அவர்களை மகிழவைப்பதற்காகவும் ஹாஸ்ய ரஸத்துடன் எழுதப்பட்டது ஸபாரஞ்ஜன சதகம் கல்வியின் உயர்வு. கவியின் சக்தி, விதியின் விளையாட்டு. பொறுமையின் பெருமை. தர்மத்தின் மேன்மை, பொருளின் அவசியம், இல்வாழ்க்கையின் இன்பம் -இவைகள் அனைத்தையும் நுட்பமாயும் எழிலுடனும் வருணிக்கின்றார். சாந்திவிலாஸம் என்னும் சிறுகாப்பியத்தில் தம் வாழ்க்கை அனுபவத்தை முழுவதும் பரிசீலனை செய்து உலகவாழ்க்கையில் எவ்வளவு வெற்றி கண்டாலும் மன நிம்மதி இல்லாமல் சாந்தியை நாடிச்செல்லும் ஜீவனின் நிலையைக் கூறுகின்றார். உலக வாழ்க்கையில் வைராக்யத்தின் பங்கு, வைராக்யத்தின் லக்ஷணம், அதன் உயர்வு, அதை அடையும் விதம் இவைகளைத் தன்னுடைய வைராக்ய சதகத்தில் விளக்குகிறார் தன்னுடைய அன்யாபதேச சதகத்தில், புத்திமதிகள், நன்மைகள், தீமைகள் போன்றவைகளை மறைமுகமாக அன்யோக்தி (Allegory) என்று அழைக்கப்படும் உருவகக் கதையின் மூலம் கூறுகின்றார். அன்யோக்தி என்றால் உருவகப்படுத்தி மறை முகமாக வருணிப்பது. நீலகண்ட தீக்ஷிதரின் மிகச்சிறந்த நூல்களில் ஒன்று அவருடைய நீலகண்டவிஜயசம்பூ. உரைநடை செய்யுள் இரண்டும் கலந்துள்ள காவ்யத்திற்கு சம்பூ காவ்யம் என்று பெயர். தீக்ஷிதர் இக்காவ்யத்தை கி.பி. 1637-ல் எழுதி முடித்ததாகக் கூறுகிறார். கதையின் விஷயம் எல்லோரும் நன்கு அறிந்த புராணக்கதை. அமிருதத்தை அடைவதற்காக தேவர்களும் அஸுரர்களும் சேர்ந்து பாற்கடலை கடையும் பொழுது அதிருந்த தோன்றிய ஹாலாஹல விஷத்தை சிவபெருமான் தேவர்களையும் உலகத்தையும் காப்பாற்றுவதற்காக, பருகிய கதைதான் அது. அருமையான வர்ணனைகள், உயர்ந்த காவ்ய ரஸங்கள். மிக உயர்வான சம்பாஷணைகள் இவைகளை புனைந்து அதிருசியான காவ்யாம்ருதத்தை நமக்கு அளிக்கின்றார்

கலியின் கொடுமையை வெல்லுவதற்கு நளனுடைய கதையை கேட்பதும் காசி சென்று கங்கையில் ஸ்நாநம் செய்வதும்தான் சிறந்த இரு உபாயங்கள் என்று தீக்ஷிதர் கூறியுள்ளார் என்று முன்பே பார்த்தோம். காசிக்கு செல்லமுடியாதகாரணத்தினால் கங்கயை ஸ்மரணம் செய்வதின் பொருட்டு கங்காவதரணம் என்ற காவ்யத்தை எழுதினார். அதே போல் நளனை ஸ்மரிப்பதற்காக நளசரித நாடகத்தை எழுதி இருக்கலாம் என்று தெரிகிறது. மஹாபாரதத்தில் வனபருவத்தில் காணப்படும் நளோபக்யானத்தை ஆதாரமாக்ககொண்டு கவி நயத்துடன் எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. இந்நாடாகம் முற்றுப் பெறாமல் உள்ளது. ஆறாவது அங்கத்தின் பாதியில் நாடகம் நின்று விடுகிறது.

நீலகண்ட தீக்ஷிதரின் மஹாபாஷ்யப்ரதீபப்ரகாச அல்லது கையடவ்யாக்யானம் என்பது ஒரு இலக்கண நூலாகும். மஹாமுனிவர், பாணிணி எழுதிய சமஸ்கிருத இலக்கண பதஞ்ஜலி ஸூத்திரங்களுக்கு மிக ப்ரஸித்திபெற்ற பாஷ்யத்தை எழுதினார். அம்மஹாபாஷ்யத்திற்கு எழுதப்பட்டுள்ள பல வ்யாக்யானங்களில் கையடர் என்பவரால் எழுதப்பட்ட ப்ரதீப என்ற வ்யாக்யானத்திற்கு நீலகண்டதீஷிதர் எழுதிய உரை கையடவ்யாக்யானம். இந்நூலும் முழுமையாகக் கிடைக்கவில்லை சுவடி வடிவத்திலேயே உள்ளது.

தீக்ஷிதரின் குரு கீர்வாணேந்திரர். இவரைப் புகழ்ந்து குருதத்வமகா என்ற சிறு காவ்யத்தை எழுதினார் என்று கூறினோம். கீர்வாணேந்திரர் ப்ரஸித்திபெற்ற ப்ரபஞ்சஸாரம் என்ற தந்த்ரசாஸ்திர நூலை எழுதினார். அதை ஆதாரமாகக்கொண்டு ஸௌபாக்ய சந்த்ராதபம் என்ற நூலை எழுதி தந்திரசாஸ்திரத்திலும் தன் புலமையை வெளிப்படுத்தியுள்ளார். இந்த நூலும் முழுமையாகக் கிடைக்கவில்லை. அச்சுப்பதிக்காமல் கையெழுத்து வடிவத்திலேயே உள்ளது.

சிவதத்வரஹஸ்யம் என்ற பெயரில் சிவபெருமானின் நூற்றி எட்டு (அஷ்டோத்திரம்) நாமாக்களுக்கு சாஸ்திரங்களை மேற்கோள் காட்டி சிறந்த வ்யாக்யானம் ஒன்றையும் தீக்ஷிதர் எழுதியுள்ளார்.

# நீலகண்டதிக்ஷிதர் காலத்தில் இருந்த பிரசித்திபெற்ற சில சமஸ்கிரத வித்வான்கள்

17வது நூற்றாண்டில் மதுரையை ஆண்ட திருமலைநாயக்க மன்னரின் அரச அவையை அலங்கரித்த நீலகண்டதீக்ஷதரின் காலத்தில் போற்றத்தக்க பல சமஸ்கிருத வித்வான்கள் இருந்தனர். அவர்கள் அனைவருமே நீலகண்ட தீக்ஷிதரின் சிறப்பை பற்றி வெகுவாக, தங்களுடைய நூல்களில் புகழ்ந்து கூறியுள்ளார்கள். அவர்களுள் முக்கியமான சில கவிஞர்களும் அவர்கள் எழுதிய நூல்களும் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

**1 சொக்கநாத மகின்** - கௌசிக கோத்ரத்தில் தோன்றிய, நராயணதீக்ஷிதரின் புதல்வரும். ரத்னகேட ஸ்ரீனிவாஸ தீக்ஷிதரின் குலத்தில் தோன்றிய ராமபத்ர மகியின் மாமனாரும் ஆவார். நீலகண்ட தீக்ஷிதரிடம் வ்யாகரணம் பயின்று, வ்யாகரண சாஸ்திரத்தில் புலமை பெற்ற இவர். பாஷ்ய ரத்னாவளீ, சப்தகௌஸ்துபம், தாதுரூபாவளீ என்ற சமஸ்கிருத இலக்கண சம்பந்தமான மூன்று நூல்களை எழுதியுள்ளார். தனது பாஷ்ய ரத்னாவளியில் நீலகண்ட தீக்ஷிதரை வெகுவாகப் போற்றியுள்ளார்.

**2. வேங்கடேசர்** இவர் ஒரு சிறந்த வைஷ்ணவர். யமகார்ணவம் என்கிற தன்னுடைய நூலில் தன்னைப்பற்றியும், தன் குலத்தைப்பற்றியும் கூறியுள்ளார். ராமசந்திரகாவ்யம் என்கிற தன்னுடைய மற்றொறு க்ரந்தத்தில் இராமாயண கதையை விவரித்துள்ளார். இக்காவ்யத்தை கலிவருஷம் 4736-ல் (1635 A.D.) எழுதியதாகக் குறிப்பிட்டுள்ளார். இவர் எழுதிய இரண்டு நூல்களுக்கும் இவரே வ்யாக்யானமும் எழுதியுள்ளார்.

**3. அதிராத்ரயஜ்வன்.**- இவர் நீலகண்ட திக்ஷிதரின் இளைய ஸகோதரர். இவருடைய பெரிய பாட்டானாரான அப்பய்ய தீக்ஷிதர் எழுதிய சித்ரமீமாம்ஸா எனற அலங்காரசாஸ்திர நூலுக்கு வடநாட்டுக் கவிஞரான ஜகன்னாத பண்டிதர் சித்ர மீமாம்ஸா கண்டனம் என்ற ஒரு மறுப்பு நூல் எழுதியுள்ளார். அதிராத்ரயஜ்வன் அந்த மறுப்பிற்கு சித்ரமீமாம்ஸாதோஷதிக்காரம் என்ற மறுப்பு நூலை எழுதி, தன்பெரியபாட்டனாரின் கொள்கைகளை ஸ்தாபித்துள்ளார். காளிதாஸன் தன்னுடைய ரகுவம்ச காவ்யத்தின் 16 வது ஸர்கத்தில் வருணித்துள்ள குசன், குமுத்வதீ விவாஹத்தை, குசகுமுத்வதீயம் எனகிற தலைப்பில் நாடகவடிவத்தில் வருணித்துள்ளார். ப்ரதிரகுவம்சம், த்ருபுர விஜய சம்பூ என்ற மேலும் இரண்டு நூல்களை எழுதியுள்ளார்.

**4. சின்ன அப்பய்யர்**- நீலகண்ட தீக்ஷிதர் காலத்தில் மூன்று அப்பய்ய தீக்ஷிதர்கள் இருந்தார்கள். நூற்றுக்கு மேற்பட்ட நூலகளை எழுதியவரும் வேலூரை ஆண்ட சின்ன பொம்ம நாயகரினால் கனகாபிஷேகம் செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டவரும், நீலகண்ட தீக்ஷிதரின் பெரிய பாட்டனாரும், குருவும் ஆன கூடஸ்தர் முதல் அப்பய்ய தீக்ஷிதர்... இவருடைய இளய ஸகோதரரின் இரண்டாவது புதல்வர் நீலகண்ட தீக்ஷிதரின் சிறிய தகப்பனார் இரண்டாவது அப்பய்ய தீக்ஷிதர். நீலகண்ட தீக்ஷிதரின் நான்காவது புதல்வர் மூன்றாவது அப்பய்ய தீக்ஷிதர் என்றும், சின்ன அப்பய்ய தீக்ஷிதர், என்றும் அழைக்கப் படுகிறார்.சொக்கனாத மன்னரின் மந்திரிகளில் ஒருவரான சின்ன பொம்மன் என்பவரால் போற்றப்பட்ட சின்ன அப்பய்யர், பூர்வ மீமாம்ஸா சாஸ்திரத்தில் வல்லுனர். இவர் துருஹசிக்ஷா, விதிரஹஸ்யம், தந்திர ஸித்தாந்ததீபிகா, அதிதேச லக்ஷணபுனர்விசாரணம் என்ற பூர்வமீமம்ஸா ஸம்பந்தமன நூல்களும், ப்ராகிருதமணிதீபிகா, பிரஸித்த சப்தஸம்ஸ்கரம் ஆகிய இலக்கண ஸம்ப்ந்தமான நூல்களையும், வஸுமதிசித்ரஸேனீயம் என்கிற ஒரு சிறு நாடக காவ்யத்தையும் எழுதியுள்ளார்.

**5. யஞநாராயண தீக்ஷிதர்:** -பிரஸித்தி பெற்ற தஞ்சையை ஆண்ட நாயக மன்னர்களுக்கு பிரதான மந்திரியாக பணியாற்றிய கோவிந்த தீக்ஷிதரின் முதல் புதல்வர். ரகுநாத நாயகரின் அரசவையில் சிலகாலம் பணிபுரிந்தவரும் சிறந்த வடமொழி வித்பன்னருமான யஞநாராயண தீக்ஷிதர் மூன்று க்ரந்தங்களை எழுதியுள்ளார். தன்னை கௌரவித்த ரகுநாத நாயகமன்னரின் சரித்திரத்தை, ஸாஹித்யரத்னாகரம் என்கிற சரித்திர மஹாகாவ்யத்தில் காவ்யரஸம் ததும்ப எழுதியுள்ளார். இவருடைய ரகுநாத விலாஸம் என்கிற சமஸ்கிரத நாடகமும் ரகுநாதநாயக் மன்னரின் சரித்திரத்தையே விவரிக்கின்றது. வித்யானாதர் எழுதிய ப்ரதாபருத்ரீயத்தைப் போன்று, ரகுநாத நாயக் மன்னரையே தலைவனாக வைத்து, அலங்கார ரத்னாகரம் என்கிற அலங்கார சாஸ்திரநூலும் எழுதியுள்ளார்.

**6 வேங்கடேச்வர மகி** - இவர் கோவிந்த தீக்ஷிதரின் இரண்டாவது புதல்வரும் நீலகண்ட தீக்ஷிதருக்கும், ராஜசூடாமணி தீக்ஷிதருக்கும் குரு ஆவார். இவர் மீமாம்ஸா சாஸ்திரத்திலும், கர்னாடக ஸங்கீத சாஸ்திரத்திலும் சிறந்த புலமை பெற்றவர். நீலகண்ட தீக்ஷிதர் தன்னுடைய க்ரந்தங்களில் இவரை தன்னுடைய ஆசிரியர் என்று குறுப்பிட்டு தன் வணக்கத்தைத் தெரிவித்துள்ளார். வார்திகாபரணம், கர்மாந்தவார்திகம், ஸுல்பமீமாம்ஸா என்ற மூன்று மீமாம்ஸா ஸம்பந்தமான க்ரந்தங்களையும், கர்னாடக ஸங்கீத சாஸ்திரத்திற்கே ப்ரதான நூலன சதுர்தண்டிபிரகாசிகா என்ற நூலையும் எழுதியுள்ளார்.

**7 ராஜசூடாமணி தீக்ஷிதர்** - ரத்னகேட ஸ்ரீநிவாஸ தீக்ஷிதரின் புதல்வரும், தஞ்சையை ஆண்ட ரகுநாத நாயக மன்னரின் அவைப் புலவரும் ஆவார். இவர் ருக்மிணீ கல்யாணம். ஆனந்த ராகவம் என்ற இரண்டு நாடக காவ்யங்களையும், யுத்தகாண்ட சம்பூ என்ற சம்பூ க்ரந்தத்தையும் எழுதியுள்ளார். 10-11 வது நூற்றாண்டில் தாரா நாட்டை ஆண்ட சிறந்த கல்விமானான போஜராஜன் எழுதிய முற்றுப்பெறாத சம்பூராமாயணத்தின் யுத்தகாண்டத்தை இவர்தான் தன்னுடைய யுத்தகாண்ட சம்பூவின் மூலம் எழுதி முடித்தார் என்று கூறுவார்கள். இவர் தன்னுடைய தந்திரசிகாமணி என்ற மீமாம்ஸா க்ரந்ததை, நீலகண்ட தீக்ஷிதர் தன்னுடைய நீலகண்ட சம்பூ க்ரந்தத்தை எழுதி முடித்த அதே வருஷத்தில் ( 1637 A.D. ) எழுதி முடித்தார்.

**8 சக்ரகவி**- நீலகண்டதீக்ஷிதரின் காலத்தில் வாழ்ந்த சக்ரகவி நீலகண்டரின் பரம ரஸிகர். தீக்ஷிதரையும் அவருடைய க்ரந்தங்களை பற்றியும் தன்னுடைய நூல்களில் போற்றியுள்ளார். ருக்மிணி, ஜானகி, கௌரி, த்ரௌபதி இவர்களின் விவாஹத்தைத் தனித்தனியாக காவ்யமக எழுதியுள்ளார். இவருடைய ஜானகிபரிணயம், இராமாயண பாலகாண்டத்தை மட்டும் வருணிக்கிறது. இவர் எழுதிய சித்ர ரத்னாகரம் கேள்வி பதில் முறையில் எழுதப் பட்டுள்ளது.

**9 ராமபத்ர தீக்ஷிதர்** - தஞ்சையை ஆண்ட ஸஹாஜி மன்னரின் அவையில் ஆஸ்தான வித்வானாக இருந்தார். சொக்கனாத மகியிடமும், நீலகண்ட தீக்ஷிதரிடமும் சாஸ்திர பாடங்களை கற்றவர். சொக்கனாத மகியின் மாப்பிள்ளையும் ஆவார். ஜானகீ பரிணயம், பதஞ்சலி சரித்திரம். ச்ருங்கார திலகம் பாணம் என்ற காவ்யங்களையும், உணாதிமணிதீபிகா, சாப்தபோத நிர்ணயம், பரிபாஷாவ்ருத்தி வ்யாக்யா என்ற இலக்கண ஸம்பந்தமான நூல்களையும், ஷட்தர்சினீ ஸித்தாந்தம் என்ற வேதாந்த க்ரந்தத்தையும் எழுதியுள்ளார். நீலகண்ட தீக்ஷிதரின் தூண்டுதலின்பேரில் ராமபாணஸ்தவம் என்ற ஸ்தோத்திர க்ரந்தத்தையும் எழுதியதாகக் குறிப்பிட்டுள்ளார். தன்னுடைய ச்ருங்கார திலக பாணத்தில் நீலகண்ட தீக்ஷிதரைப் பற்றி வெகுவாகப் போற்றியுள்ளார்.

**10 கீர்வாணேந்திர தீக்ஷிதர்**- இவர் நீலகண்ட தீக்ஷிதரின் மூன்றவது குமாரர்.ச்ருங்கார சேகரபாணம், அன்யாபதேச சதகம் என்கிற நூல்களை எழுதியுள்ளார்.

# நீலகண்ட தீக்ஷிதரின் காலம்

மஹாகவி காளிதாஸனின் காலம் இன்றுவரை எப்படி ஸரியாக நிர்ணயம் செய்யப்படாமல் இருக்கிறதோ, அதேபோல் அப்பய்ய தீக்ஷிதர், நீலகண்ட தீக்ஷிதர் இவர்களின் காலங்களை நிர்ணயிப்பதில் ஆராய்ச்சியாளர்களிடையே வேறுபாடான கருத்துக்கள் நிலவுகின்றன. ஒரு வித்தியாசம். காளிதஸன் எந்த நூற்றாண்டில் வசித்தான் என்பதில் மாறுபட்டக்கருத்துக்கள். ஆனால் அப்பய்ய தீக்ஷிதர், நீலகண்ட தீக்ஷிதர் இவர்கள் எந்த நூற்றாண்டில் வாழ்ந்தார்கள் (16/17 வது) என்பது தீர்மனமாகக் கூறப்பட்டாலும், எந்த வருஷம் முதல் எந்த வருஷம் வரை வாழ்ந்தார்கள் என்று ஆதார பூர்வமாகவும், தெளிவாகவும் கூற முடியவில்லை. நீலகண்ட தீக்ஷிதர் தன்னுடைய நூல்களில், தன் குடும்பம், ஸமகாலத்தவர்கள் முன்னோர்கள் இவர்களைப் பற்றிக்கூறி இருந்தாலும். காலத்தைப்பற்றித் தெளிவாக குறிப்பிடவில்லை. அவருடைய காலத்தை சரியாக ஊஹித்துச் சொல்வதற்கு ஆதாரபூர்வமாக கிடைக்கும் காரணங்கள் மூன்று.

1. அப்பய்ய தீக்ஷிதர் தனது 72 வது வயதில் சிதம்பர க்ஷேத்திரத்தில் சிவபெருமனிடத்தில் லயம் அடைந்போது நீலகண்ட தீக்ஷிதரின் வயது 12.
2. நீலகண்ட தீக்ஷிதர் தன்னுடைய நீலகண்ட விஜய சம்பூ என்ற நூலை கி.பி. 1637-ல் எழுதி முடித்ததாகக் கூறுகிறார்.
3. மதுரையில் திருமலைநாயக்க மன்னரின் அவையில் ஆலோசகராகவும் ஆஸ்தான வித்வனாகவும் இருந்தார் என்று சரித்திர வாயிலாகத் தெரிகிறது. திருமலை நாயக மன்னன் மதுரையை கி.பி. 1623 முதல் கி.பி. 1659 வரை ஆண்டான்.

மேற்கூறிய மூன்றைத் தவிர ஆதார பூர்வமான காரணங்கள் சரித்திரங்களிளோ, ஸமகாலத்துக்கவிகளின் நூல்களிலோ, அவருடைய நூல்களிலோ, கல்வெட்டுகளிலோ, நேராகவோ, மறைமுகமாகவோ நமக்குக் கிடைக்கவில்லை. நீலகண்ட தீக்ஷிதரின் பெரிய பாட்டானாராகிய அப்பய்ய தீக்ஷிதர் சிவலயம் அடையும்போது நீலகண்ட தீக்ஷிதரின் வயது 12 என்று குறிப்பிடுவதை அனைவரும் ஏற்றுக்கொள்வதால், அப்பய்ய தீக்ஷிதரின் காலம் நிர்ணயிக்கப்பட்டால், நீலகண்ட தீக்ஷிதரின் பிறந்த வருஷம் மட்டும் கூறமுடியும். துரதிருஷ்டவசமாக அப்பய்ய தீக்ஷிதரின் காலத்தை நிர்ணயிப்பதில் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. அப்பய்ய தீக்ஷிதருக்கு மூன்று காலங்கள் சொல்லப்படுகின்றன. அவை-

1. கி.பி. 1550 முதல் கி.பி. 1622 வரை
2. கி.பி. 1558 முதல் கி.பி. 1630 வரை
3. கி.பி. 1520 முதல் கி.பி 1592 வரை

அப்பய்ய தீக்ஷிதர் வம்சத்தில் தோன்றிய சிவனந்த யோகீந்திரர் என்பவர் தன்னுடைய ‘அப்பய்ய தீக்ஷிதர் வம்சாவளி என்ற நூல். சென்னை அடையார் நூல் நிலையத்தில் உள்ள சுவடிகளின் உதவியைக் கொண்டு ’ நஷ்ட ஜாதகம்’ ஒன்று கணித்து அதன் மூலம் அப்பய்ய தீக்ஷிதரின் காலத்தை கி.பி. 1550 முதல் கி.பி. 1622 என்று நிர்ணயித்துள்ளார்..

பேராசிரியர் P.P.S. சாஸ்திரி என்ற அறிஞர் அதே நூல் நிலையத்தில் உள்ள வேறு சில ஓலைச்சுவடிகளின் உதவியுடன் அப்பய்ய தீக்ஷிரின் காலம் கி.பி. 1558 முதல் கி.பி. 1630 என்று கூறுகின்றார்.

அப்பய்ய தீக்ஷிதர் வம்சத்தைச்சேர்ந்த Y. மஹாலிங்க சாஸ்திரிகள், தென் ஆற்காடு ஜில்லா, அடையப்பலம் கிராமத்தில் உள்ள காலகண்டேச்வரர் சிவாலயத்தில் உள்ள கல்வெட்டையும், மற்றும் சில சரித்திரச் செய்திகளையும் ஆதாரமாகக்கொண்டு, அப்பய்ய தீக்ஷிதரரின் காலம் கி.பி. 1520 முதல் கி.பி.1592 என்று தன்னுடைய ஆராய்ச்சியில் நிருபணம் செய்துள்ளார்.

மூன்று அறிஞர்களும் அப்பய்ய தீக்ஷிதர் 72 வயது வரை 16/ 17 வது நூற்றாண்டில் வாழ்ந்தார் என்பதை ஏற்றுக் கொள்கின்றனர். இவர்களின் கூற்றின் படி. நீலகண்ட தீக்ஷிதரின் பிறந்த வருடம் முறையே கி.பி.1610, கி.பி. 1618, கி.பி.1580 ஆக இருக்கவேண்டும். நீலகண்ட தீக்ஷிதர் எவ்வளவு காலம் வாழ்ந்தார் என்று இன்று வரை ஆதரபூர்வமாக ஒருவராலும் நிர்ணயிக்க முடியவில்லை. அவர்களுடைய நூலகளிருந்து கிடைக்கும் சில செய்திகள் மூலம் அவர்கள் அப்பய்ய தீக்ஷிதரைக் காட்டிலும் பல வருஷங்கள் அதிகமாகவே வாழ்ந்திருந்து, தன்னுடைய கடைசி காலத்தை, திருநெல்வேலி ஜில்லா, தாமிரபரணி ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள பாலாமடை என்ற குக்குட த்வனி இல்லாத கிராமத்தில் கழித்தார் என்றும், அங்கேயே ஸன்யாஸ ஆச்ரமம் மேற்கொண்டு ப்ரஹ்மலயம் அடைந்தார் என்றும் தெரிகிறது. அவருடைய ப்ருந்தாவனம் பாலாமடை கிரமத்தில் உள்ள சிவாலயத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

சுமார் 50 வருடங்களாக நீலகண்ட தீக்ஷிதரின் வம்சபரம்பரையில் வந்தவர்கள், பாலாமடை கிரமத்தில் நீலகண்ட தீக்ஷிதரின் ஆராதனை வைபவத்தை (நீலகண்ட தீக்ஷிதர் ப்ரஹ்மலயமான) தினத்தை, பிரதி வருஷம். மார்கழி மாதம் சுக்ல அஷ்டமி தினத்தில் ஸாமவேத பாரயணத்துடன் விமரிசையாக நடத்தி வருகின்றனர். ச்ருங்ககிரி ஜகத்குரு ஸ்ரீமஹா ஸன்னிதானம் அவர்கள் மார்கழி மாத சுக்ல அஷ்டமி தினத்தன்று அக்கிராமத்திற்கு விஜயம் செய்ததால், ஸ்ரீ மஹாஸன்னிதானம் அவர்களின் ஆக்ஞானுஸாரம் அத்தினத்தையே நீலகண்ட தீக்ஷிதரின் ப்ரஹ்மலயமான தினமாகக்கொண்டு, பிரதி வருஷம் ஆராதனை வைபவத்தை விமரிசையாக நடத்தி வருகிறார்கள். நாடி ஜோஸ்யத்தின் மூலமும் அத் தினம் ஸரியாக உள்ளது என்று கூறுகிறார்கள். அதேபோல், சில வருஷங்களாக வைகாசி மாதம் அனுஷ நக்ஷத்திரத்தில் நீலகண்ட தீக்ஷிதரின் ஜயந்தி உத்ஸவத்தையும் நடத்தி வருகிறார்கள். அப்பய்ய தீக்ஷிதரின் நஷ்ட ஜாதகத்தின் மூலம், நீலகண்ட தீக்ஷிதரின் ஜயந்தி தினம் கணக்கிடப் பட்டுள்ளது என்று கூறுகிறார்கள். இதே போல அப்பய்ய தீக்ஷிதரின் வம்சபரம்பரையில் வந்த பெரியோர்கள், நஷ்ட ஜாதகத்தின் உதவியைக்கொண்டு, புரட்டாசி மாதம் கிருஷ்ண பக்ஷப் பிரதமை தினத்தை அப்பய்ய தீக்ஷிதரின் ஜயந்தி தினமாக எடுத்துக் கொண்டு, சில வருஷங்களாக அப்பய்ய தீக்ஷிதரின் ஜயந்தி உத்ஸவத்தை அடயப்பல கிராமத்தில் நடத்தி வருகிறார்கள்.



## A brief account of Sivaleernava

Sivalilarnava ia one of the great Mahakavyas in Sanskrit literature which expounds the sixty four divine sports of Lord Siva who incarnated Himself as Sundara Pandya, the marvellous king of the Pandya Dynasty at Madurai. Nilakantha Diksita wrote this Maha kavya in 22 cantos, in a simple and majestic style depicting the Prasada Guna, described by the Sanskrit rhetoricians, after taking the source from the Halasya Mahatmya, described in the 45th chapter of Skandha Purana.

There are two works in Tamil litrature based on Halasya Mahatmya which depict the sixty four divine sports of Lord Siva - Halasyanata. One work by name Tiruvilayadal Purana is written by saint Paranjoti during sixteeth century and another one bearing the same name, is written by one Puliyur Nambi during the close of Chola period. Of the two, Paranjoti 's work is more popular. Nilakantha Diksita, would have been influnced, to a certain extent, by Paranjoti's Tiruvilayadal Purana also.

The lilas of the Lord have been described in detail in all the above mentioned three works. Nilakantha Diksita, without deviating from the original source, has described all the sixty four divine sports briefly and crisply. His power of conciseness could be noticed clearly in Sivalilarnava. Having taken twelve and a half cantos to describe the first five lilas, the poet narrates the remaining 59 lilas just in next nine and a half cantos. In the last canto he refers to all the sixty four lilas of the Lord in the form of a praise. The whole of the first canto is a general literary criticism and has nothing to do with the lilas in particular. Here Nilakantha Diksita, speaks in detail, the nature of good and bad poets and also the good literary works. In the beginning he praises the qualities of good poets and later, he comes down heavily upon the bad poets.

The second canto which serves as an introduction to the main theme, describes the Pandya kingdom followed by a brief description of the river Tamraparani and Kadamba vana where Lord Sundaresvara Himself manifested in the form of Sundaranatha Linga being worshipped by men, divine and semidivine beings.

The third canto narrates the first lila of Lord Siva in which Indra worships the Lord Sundaresvara at Kadamba vana, in order to get relieved from the Brahmahathi sin caused by killing the de- mon Vritra. Indra kills the demon when the later is in deep meditation. On being chased by this sin due to this treachery Indra hides himself inside the fibre of a lotus stalk. In the absence of Indra, Nahusha, a mortal king, becomes the king of heaven. Sage Agastya, unable to bear his horrible reign, cursed him to become a serpant. Brhaspati, the preceptor of the gods, finds out the place where Indra is hiding and advisies him to worship Siva, for the complete relief from the sin. Accordingly, Indra starts a pilgrimage to all Siva shrines and finally comes to Nipa vana. (Kadamba vana). There he, very much attracted by the Siva Linga, remains there itself worshipping the Lord for a long time. The divine architect constructs seperate shrines for the Lord and the Goddess at his instruction.. The beautiful Linga is named as Sundaranatha and the Goddess as Minalochani. A golden lotus pond is created to get flowers for the daily worhip of the Lord. Indra on being relieved of his sin, through the grace of Lord Sundaresvara, returns to his abode. (i)

The fourth canto describes the second and the third lilas viz. Iravata's redemption from the curse of Durvasa and the construction of the holy city Madurai by king Kulasekhara Pandya. Sage Durvasa presents a lotus, the prasada of Mahesvara, to Indra, when he is riding on his elephant Iravata. Indra throws it casually over the head of the elephant. The elephant, in turn, hurls it on the ground and crushes it by its foot. The enraged sage curses Indra that his head would be blown to pieces by the Pandya king and the divine elephant to become an ordinary wild one. Indra begs the sage for pardon and the sage modifies the curse by saying that Indra's crown would face the said fate and the elephant would regain its status, after 100 years, by worshipping the Lord Sundaresvara at Kadamba vana. Accordingly, the elephant, comes to the earth and after wandering in several forests for a long time, reaches Kadamba vana. worships the Lord and gets back its divine status. (ii)

A merchant by name, Dhananjaya, who happened to stay near Kadamba vana, once on a fullmoon night, unexpectedly witnesses Indra and other gods, descending on the earth and performing Abhiseka and other Aradanas to Sundaranatha Linga. The merchant, astonished by this sight, reports the matter to king Kulasekhara, the then ruler of the Pandya kingdom. That night the Lord also ordains the king, in his dream, to construct a temple town in the Kadabavana region. Considering himself very much fortunate, the king, with the help of the heavenly architect construets a new city. He also construts a beautiful temple for the Lord in the centre of the city. As Indra sprinkled the holy city with the nectarlike celestial water for three days, a heavenly voice proclaims the name of the city as **'Madura'** (iii)

The fifth canto deals with the birth of Malayadhvaja Pandya, the son of Kulasekhara, his marriage with Kanchanamala, the princess of Kanchi, his coronation, his lawful administration and his performance of Aswamedha and Putrakamesti sacrifices for the long awaited progeny at the advice of sage Agastya. The sage also predicts that Goddess Parvathi Herself will be incarnated as their daughter.

The sixth canto begins with the preparations for the sacrifices. It is followed by a vivid description of different seasons and a scholarly discussion among the sages assembled there for the sacrifices. At first the Asvamedha sacrifice is performed by Agastya, Asvalayana, Jaimini and Vasistha as officiating priests. Later the Putra kameshti sacrifice is performed by Sage Agastya for the sake of the king's progeny. At the end of the sacrifice, to the amazement of all, a beautiful female child sprang out from the blazing sacred fire. The royal couple receives the child with great delight but becomes worried on seeing the abnormal third breast of the girl. A heavenly voice consoles them saying that the third breast will disappear when she meets her suitable bridegroom. It also requsts the king to name the girl as Tatathaka. (iv)

The first portion of the seventh canto is devoted to a description of the childhood and early education of Tatathaka. When she attaines her youthhood, Malayadhvaja remembering the message of the Lord, performs the coronation of Tatathaka and makes her as successor to the Pandya throne. The king dies before he could finalise her marriage. A lawful and flawless administration of Tatathaka follows. The canto ends with a beautiful description of the autumn season encouraging Tatathaka to go for a Digvijaya.

Cantos eight and nine are fully devoted to describe Tatathaka's victorious conquest of different directions. Tatathaka, with the blessings of sage Agastya and the mother Kanchana mala proceeds to conquer the various kings of different directions on an auspicious day. Many kings, on the way, submit to her their offerings of tributes. Canto eight ends with her reaching the holy river Kaveri and her sacred bath along with the accompanying army.

The ninth canto narrates her continuous victorious march, and her arrival at the bank of river Ganga near Himalayas. She remains there for along time observing the beauty of the waves of the Ganges, falling from the mountain. After her holy bath, ascending on the snow clad mountain, she passes through the ancient mountains like Hemakuta, Nila, Hiranmaya, Sveta and others. Later she reaches the Northern Kuru country near the northern ocean. Then after offering her salutation to Lord Hayagriva in the Bhadrasva teritory, proceeds further to north, and reaches the river Jambu.

*கொள்வதற்கு தர்க்க சாஸ்திரம்தான் முக்கியம். எந்த வஸ்துவையும் இதுவா அதுவா என்று ஆராய்வது தர்க்க சாஸ்திரம்தான். ஆகவே தர்கசாஸ்திரத்தைக் கொண்டாடலாமே! வேதம் இவற்றையெல்லாம் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை ஒரு சொல் படித்தால் ரஸமாக இருக்க வேண்டுமே. ரஸமாக இருப்பது காவியம்தான். காவியம் இயற்றுபவன்தான் கவி. அவனைத்தான் போற்றவேண்டும் அத்தகைய கவிகளுக்கெல்லாம் தலைவன் மஹாகணபதிதான் என்று வேதம் முதன் முதல் ''கணாநாம் த்வா கணபதிம் ஹவாமஹே கவிம் கவீனாம்'' என்றுதானே ஆரம்பிக்கிறது. பல இடங்களில் கவியைப் போற்றி இருக்கிறது. ஆகவே இலக்கியங்களிலே மிகச் சிறந்து, உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பது கவிதைதான் என்பது நம்முடைய அபிப்ராயம்.*

*17 கேட்க கேட்க இனிமையானது ஸங்கீதம்தான்! அதைக் கொண்டாடக்கூடாதா? என்று கேட்கலாம். ஸங்கீதம் இனிமையானதுதான். இது எது வரை? காதில் இனிமையாக வீழ்கிற வரை. அத்தோடு சரி. ஆற்று மணல் மழை பெய்தால் அந்த இடத்திலேயே உறைந்துவிடும். அப்பால் பரவாது. அதுபோலத்தான் ஸங்கீதம் காதோடு சரி. கவிகளின் சிறந்த ச்லோகங்களோ அமுதம் போல விறு விறு என்றும் கம கம என்றும் மனதில் பாய்ந்து இதயத்தை மகிழ்விக்கின்றதே, அது தான் பாராட்டத்தக்கது.*

*18 ஆனால் சில காவியங்களைப் படித்தால் அவற்றிடையே அகராதியிலுள்ள அத்தனை பதங்களையும் தேடிப்பிடித்து அந்தக் கவி குவித்திருப்பார். பல சொற்கள் பழக்கத்தில் இல்லாதவை. சொல்லவேண்டிய விஷயத்தை பலருக்கும் பழக்கப்பட்ட சொற்களால் சொன்னால், உடனே ரஸிப்பார்கள். கவி கஷ்டப்பட்டு கண்டுபிடித்த பாண்டித்யம் அவரிடம் ஸமாதி அடைந்து விடும். இப்படி பலகோடி கவிகள் மூலையில் ஒதுக்கப்பட்டுவிட்டார்கள்.*

*19 கவிகளின் போக்கே அலாதி. ஒரு விஷயத்தை அனைவரும் கவனிக்கும்படி சொல்ல வேண்டுமேயானால், அந்த வாக்கியம் அழகாக,*

கர்ணம் கதம் ஶுஷ்யதி கர்ண ஏவ ஸங்கீதகம் ஸைகதவாரிரீத்யா ।
ஆநந்தயத்யந்தரநுப்ரவிஶ்ய ஸூக்தி: கவேரேவ ஸுதாஸகந்தா ॥ 17
பஶ்யேயமேகஸ்ய கவே: க்ருதிம் சேத் ஸாரஸ்வதம் கோஶமவைமி ரிக்தம் ।
அந்த: ப்ரதிஶ்யாயம் அவேக்ஷிதஶ்சேத் கோணே ப்ரவிஷ்டா கவிகோடிரேஷா ॥ 18
வக்ரோக்தயோ யத்ர விபூஷணாநி வாக்யார்த்த போத: பரமப்ரகர்ஷ: ।
அர்த்தேஷு போத்யேஷ்வபிதைவ தோஷ: ஸா காசிதந்யா ஸரணி: கவீநாம் ॥ 19
ஸதர்த்தமாத்ரக்ரஹணாத் ப்ரதீதா ஸர்வஜ்ஞதா ஸாபி ஶஶாங்கமௌலே: ।
ப்ராப்தா விகாஸம் ப்ரதிபா கவீநாம் வ்யாப்நோதி யத்வேத்தி ந தச்சிவோऽபி ॥ 20
உல்லங்கய தந்த்ராந்தரஸம்ப்ரதாயான் உத்ப்ரேக்ஷமாணா ஜகதந்யதந்யத் ।
கஸ்மாத் பிபீம: கவயோ பவாம: காவ்யஜ்ஞதண்டாத் பிபிமஸ்து காமம் ॥ 21

---

அர்த்தம் தெளிவாக இருந்தாலே போதும். அதையே நையாண்டியாகவோ. வேடிக்கையாகவோ சொன்னால், கவனிப்பதோடு ரஸிக்கவும் செய்வார்கள். அதோ பசுமாடு நிற்கிறது என்று நேரடியாகச் சொன்னால், அதை யாரும் கவனிக்க மாட்டார்கள். நேரடியாகச் சொன்னதுதான் தவறு. 'அதோ காமதேனு நிற்கிறது' என்று சொன்னால் உடனே கேட்பவரின் கவனம் திரும்பும். அதுதான் கவியின் சமத்காரம். அது அவனுக்கு கைவந்த கலை,

20 உள்ளதை உள்ளபடி சொல்வது வெறும் அறிவு. அப்படி எல்லாவற்றையும் பரமேச்வரன்கூட அறிந்திருக்கலாம். அவர் ஸர்வஞன். எல்லாமறிந்தவர்தான். ஆனால் அது கவியின் கற்பனைத் திறத்தாலே விரிவையும் புதுமையையும் அடைகின்றது. ஆற்றின் கரையில் அமர்ந்து தண்ணீர் ப்ரவாஹத்தைப் பார்க்கிறோம். அங்கே ஒரு கவி அமர்ந்திருக்கிறார். ஆஹா என்ன அழகு என்று ஆச்சரியப்படுகிறார். என்ன அழகைக் கரையிலிருந்து கண்டுவிட்டீர்?

'எவ்வளவு தெளிவாக, நிர்மலமாக அடியில் உள்ள மணல் தெரிகிறபடியால் அழகாக இருக்கிறது' என்கிறார் கவி.

'ஜலம் தெளிவாக இருந்தால் அது ஒரு அழகா?' என்று கேட்கிறோம்.

'அழகுதான் நல்ல மனிதரின் மனது போல பளிச்சென்று விளங்குகிறதே' என்கிறான் கவி. நாமும் ரஸிக்கிறோம். ''ரமணீயம் ப்ரஸன்னாம்பூஸன் மனுஷ்ய மனோ யதா'' என்கிறார் வால்மீகி. இதுதான் கவிதா விலாஸம். இதைச் சிவன்கூட அறியமாட்டார்.

21 மற்ற சாஸ்திரங்களெல்லாம் வேதவாக்கியங்களை, உபநிஷத் கருத்துக்களை பலவாறு சிந்தித்து இப்படித்தான் இந்த வாக்கியத்திற்குப் பொருள் என்று முடிவுகட்டுகின்றன. ஆனால் கவி இருக்கிறானே! அவன் உலகமே தனி. தான்தோன்றித்தனமாக எதை வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் சொல்லுவான். நாங்கள் கவிகள். யாரிடமும் பயப்படமாட்டோம். ஆனால், காவிய மர்மம் தெரிந்தவர்களின் வாதத்திற்கு மட்டும் அஞ்சுகிறோம்.

तन्त्रान्तरेषु प्रतिपाद्यमानास्ते ते ते पदार्थाः ननु ते त एव ।
निर्वेदभीशोकजुगुप्सितान्यपि आयान्ति साहित्यपथे रसत्वम् ॥ २२

अर्थावबोधेऽपि समे रसज्ञः अन्विष्यते सत्कविसूक्तिरेव ।
अपत्यलाभेऽपि समे विदग्धा रूपोत्तरामेव हि रोचयन्ते ॥ २३

न्यामोहयन्ती विविधैर्वचोभिर्व्यावर्तयन्त्यन्यकलासु दृष्टिम् ।
कालं महान्तं क्षणवन्नयन्ती कान्तेव दक्षा कविता धिनोति ॥ २४

चिन्तासु संसर्गविशेषलाभे संदर्भणे चाथ पदैः पदानाम् ।
पुनर्विमर्शे च भवन्कवीनाम् आनन्दभूमा वचसामसीमा ॥ २५

अनायतप्राणमसंयताक्षम् अब्रह्मचर्यानशनादिखेदम् ।
चित्तं महेशे निभृतं निधातुं सिद्धः कवीनां कवितैव योगः ॥ २६

तिर्यङ्मनुष्यव्यतिरेकहेतुर्देव्या गिरामेव कटाक्षपातः ।
प्रज्ञाविशेषास्तु परे जनानां प्रायो दिशन्ति श्वसृगालसाम्यम् ॥ २७

22 மற்ற சாஸ்திரங்களில் ஒரு வஸ்துவின் தன்மை இத்தகையது என்று ஆராய்ந்து ஆணித்தரமாக நிர்ணயித்திருப்பார்கள். அந்த ரீதியில் எல்லா வஸ்துக்களையும் பார்த்தால், எல்லாவற்றிலும் நமக்கு வைராக்யம், பயம், சோகம், அருவருப்புத்தான் தெரியும். ஸாஹித்ய ராஜ பாட்டையில் புகுந்தவர்களுக்கு அவை அப்படிப்பட்டவை அல்ல. மனைவி சமைத்த காரம் இனிக்கும். பாட்டி வைத்த பாயஸமும் புளிக்கும்.

23 எல்லா ச்லோகங்களிலும் ஏதாவது கருத்து வெளிப்படத்தான் செய்யும். ஆனாலும் ரஸிகன் தேர்ந்து எடுப்பது கருத்துக் கவிதைகளைத்தான். எந்தப் பெண்ணை மணந்து கொண்டாலும் புத்ரபாக்யம் உண்டு. ஆனால் நாம் அழகுள்ளவளைத்தானே தேடுகிறோம்.

24 ஒரு நல்ல காவியம் அகப்பட்டுவிட்டால், அதன் வலையில் ரஸிக உள்ளம் சிக்கிவிட்டால். மற்ற கலைகளில் நாட்டமே செல்லாது. கலாவிலாஸமும், புத்திசாலித்தனமும், ரஸிக உள்ளமும் படைத்த ஒரு அன்பு மனைவி வெகு நேரம் கணவனைக் கட்டிப்போட்டு வைத்துவிடுவாள். மற்ற ஈடுபாடுகளை மறக்கச்செய்து விடுவாள். வெரும் ஆசைநாயகி சற்று நேரத்தில் வந்தவனை திருப்திபண்ணி விடுவாள். நல்ல காவ்யத்தில் நேரம் போனதே தெரியாமல் லயித்துப் போனவன் வரட்டுச் செய்தியை கணத்தில் படித்து தூக்கி எரிந்துவிடுவான்.

25 சிறந்த கவிஞன் ஓர் அத்புதத்தை நினைத்து நினைத்து உருவத் தோற்றமளிப்பான். அதன் தொடர்புடைய மற்றொரு ஸ்வாரஸ்யம் மனதில் தோன்றும் பொழுது, அவற்றை கவிதையில் தொடுக்க முனைகிறான்.

தந்த்ராந்தரேஷு ப்ரதிபாத்யமாநாஸ்தே தே பதார்த்தா: நநு தே த ஏவ ।
நிர்பேதபீபோகஜுகுப்ஸிதானி அப்யாயாந்தி ஸாஹித்யபதே ரஸத்வம் ॥ 22

அர்தாவபோதேऽபி ஸமே ரஸஜ்ஞை: அந்விஷ்யதே ஸத்கவிஸூக்திரேவ ।
அபத்யலாபேऽபி ஸமே விதக்தா ரூபோத்தராமேவ ஹி ரோசயந்தே ॥ 23

வ்யாமோஹயந்தீ விவிதைர்வசோபிர்வ்யாவர்தயந்த்யந்யகலாஸு த்ருஷ்டிம் ।
காலம் மஹாந்தம் க்ஷணவந்நயந்தீ காந்தேவ தக்ஷா கவிதா திநோதி ॥ 24

சிந்தாஸு ஸம்ஸர்கவிஶேஷலாபே ஸந்தர்பணே சாத பதை: பதாநாம் ।
அர்த்தாவபோதே ச பவன் கவீநாம் ஆநந்தபூமா வசஸாம் அஸீமா ॥ 25

அநாயதப்ராணம் அஸம்யதாக்ஷம் அப்ரஹ்மசர்யான் அஶநாதிகேதம் ।
சித்தம் மஹேஶே நிப்ருதம் நிதாதும் ஸித்த: கவீநாம் கவிதைவ யோக: ॥ 26

திர்யங்மநுஷ்யவ்யதிரேகஹேதுர் தேவ்யா கிராமேவ கடாக்ஷபாத: ।
ப்ரஜ்ஞாவிஶேஷாஸ்து பரே ஜநாநாம் ப்ராயோ திஶந்தி ஶ்வஶ்ருகாலஸாம்யம் ॥ 27

மாலையைத் தொடுக்க மலர்களைத் தேடி எடுப்பது போல, மனதில் குவிகின்ற சொற்களை வரிசைப்படுத்துகிறான். மாற்றித் தொடுக்கிறான். இவை எல்லாவற்றிலும் அவன் பெறுகின்ற ஆனந்தம் சொற்களுக்கு எட்டாதது.

26 பரமேச்வரனிடம் சித்தம் நிலைத்து நிற்க வேண்டுமானால் ஒரே வழி யோகாப்யாஸம்தான். மூச்சைக் கட்டுப்படுத்தி, ப்ராணயாமம் செய்தல்தான். வாயைக் கட்டி வயிற்றைக் கூட கட்டவேண்டும். புலன்களை அடக்கி ப்ரஹ்மசர்யம் அனுஷ்டிக்க வேண்டும். இது மிகவும் வருத்திக்கொள்ள வேண்டிய க்ரியை என்றெல்லாம் சொல்லுவார்கள். ஆனால் மனிதன் உள்ளத்தில் கவிதை தோன்றிவிட்டால், அந்த பாக்யம் செய்திருந்தால், அதன் வழியே மஹேசனை மனதில் அசையாமல் நிறுத்த முடியும். மூச்சை அடக்க வேண்டாம். வாயைக் கட்ட வேண்டாம். புலன்களை அடக்க வேண்டாம். அதற்காக எந்த முயற்சியும் கவி மேற்கொள்ள மாட்டான். கவிதை தோன்றி விட்டால் அதன் ஆவேசத்திலே மூச்சு நின்று விடும். வாய் அடங்கி விடும். புலன்களெல்லாம் மஹேசனிடம் ஒருமுகப்பட்டுவிடும். இதுதான் கவிதா யோகத்தின் தனிப்பெருமை

27 இரண்டு கால் நிமிர்ந்து செல்லும், இரண்டு கால் பிராணி மனிதனுக்கும், நான்கு கால்களில் குனிந்து படுத்து நடக்கின்ற விலங்கிற்குமிடையே ஒரு வித்யாஸம்தான். மனிதனுக்குத்தான் கவிதாதேவியின் கடாக்ஷம் பெறுகிற வாய்ப்பு உண்டு. நாய்க்கும் நரிக்கும் கூட புத்தியின் கூர்மையால் சிந்திக்கும் சக்தி, வஞ்சனை கபடம் எல்லாம் உண்டு. இது மனிதனிடமும் இருப்பதால் பெருமை இல்லை. அவர்கள் நாய் நரிக்கு ஒப்பானவர்கள்தான்.

न कालभेदाद्र सवर्णभेदो न जामिता वा न ऋजीषभावः ।
सारस्वतं नाम फलं तदेतत्सदैकरूपं कृतिनो लभन्ते ॥ २८

बाल्यं विदुः प्राकृतभाषितानि श्रुतिस्मृतीर्वृद्धदशां वदन्ति ।
साहित्यमेकं तु गिरां सवित्र्यास्तारुण्यमुद्गाढम् उशन्त्यभिज्ञाः ॥ २९

क्वार्थाः क्व शब्दाःक्व रसाः क्व भावाः क्व व्यङ्ग्यभेदाः क्व च वाक्यरीतिः ।
कियत्सु दृष्टिः कविना न देया किमस्ति राज्ञामियतीह चिन्ता ॥ ३०

आवर्णशक्तिग्रहमापवर्गं दुःखैकरूपा विरचय्य विद्याः ।
विश्रान्तिहेतोः कवितां जनानां वेधाः सदानन्दम्यीं किमाधात् ॥ ३१

---

28 சில ரூபங்களுக்கு, சில வஸ்துக்களுக்கு காலம் மாறும்பொழுது தன்மை மாறுவதுண்டு. இளமையில் எல்லாம் பிடிக்கும், ஜரிக்கும். முதுமையில் பிடிக்காது. உடம்பிற்கு ஒத்து வராது. கச்சையாகி, காயாகி வாழை பச்சையாக இருக்கும். பழமானால் குழைவாக மஞ்சளாக இருக்கும். மிருகம் ஒரு நேரம் ஓய்ந்து கிடக்கும், ஒரு நேரம் துள்ளி குதிக்கும். ஸரஸ்வதிதேவியின் க்ருபையினால் ஏற்பட்ட வாக்விலாஸம் இருக்கிறதே, அது காலத்தால் மாறுபடாது. வயதாக ஆக மேலும் ருசியாக ரஸமாக இருக்கும், ஓய்வு கிடையாது. நினைத்த நேரத்தில் குபீரென்று கிளம்பும். அந்த நிகரற்ற உற்சாகம், தேய்மானமில்லாத ரஸத்தைப் பெறுவதற்கு கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

29 வாக்கின் வளர்ச்சிக்கு இளமை, முதுமை, யௌவனம் எல்லாம் உண்டு. சின்ன குழந்தையின் பேச்சு மழலை, அந்த நேரத்தில் அதை ரஸிக்கலாம். வேதங்கள், ஸ்மிருதிகள் இவை, முதிர்ந்த, பழுத்த ஞானத்தின் வாக்கு, ஸாஹித்யம் (காவியம்), அதற்கு இளமை,முதுமை கிடையாது. நித்ய யௌவன வடிவம், திருஞானஸம்பந்தர், காளிதாஸன் இவர்களின் காவியங்கள் யௌவன வடிவம். அப்பய்யதீக்ஷிதர் பாணர் முதயவர்களின் வாக்கு முதுமைப் பருவம். யௌவனமிடுக்கும் ரஸமும் உள்ளவை.

30 எத்தனை கற்பனைகள்? அவை இந்த ஸந்தர்ப்பத்திற்கு பொருந்துமா? பொருத்தமான கருத்திற்கு,பொருத்தமான,இனிமையான, ஸ்வாரஸ்யமான சொல் எங்கே? சொல் இனிமையாக இருக்கலாம். ஆனால் அது இந்த ஸந்தர்ப்பத்தில் ரஸத்தை உணர்த்துமா? பெண் என்ற சொல்லிற்கு ஆயிரம் ஸமஸ்கிருத சொற்கள். அபலா, வனிதா, லலிதா, ஸ்ரீ, யுவதி, பாலா, பாமினி, வாமா இவை ஒவ்வொன்றும் தனித்தனி பொருட்செரிவு உள்ளவை. இவற்றில் எந்த சொல் எந்த இடத்திற்குப் பொருந்தும்? அந்த ஒரு சொல், சொல்லவந்த கருத்தின் ரஸம் சொட்ட வேண்டாமா? அந்த கருத்தின் சுவை என்ன? வீரமா, ச்ருங்காரமா, ஹாஸ்யமா? சொல்ல வேண்டிய கருத்து அப்பட்டமாக இல்லாமல் த்வனி உள்ளதாக அமையவேண்டுமே. பின் வாக்கிய அமைப்பில்

**ந காலபேதாத்ர ஸவர்ணபேதோ ந ஜாமிதா வா ந ருஜீஷபாவ: ।**
**ஸாரஸ்வதம் நாம பலம் ததேதத் ஸதைகரூபம் க்ருதிநோ லபந்தே ।। 28**
**பால்யம் விது: ப்ராக்ருதபாஷிதாநி ஶ்ருதிஸ்ம்ருதீர் வ்ருத்ததஶாம் வதந்தி ।**
**ஸாஹித்யமேகம் து கிராம் ஸவித்ர்யாஸ்தாருண்யம் உத்தாகாடம் உஶந்த்யபிஜ்ஞா:।। 29**
**க்வார்த்தா: க்வ ஶப்தா: க்வ ரஸா: க்வ பாவா: க்வ வ்யங்கயபேதா: க்வ ச வாக்யரீதி:।**
**கியத்ஸூத்ருஷ்டி: கவிநா ந தேயா கிமஸ்தி ராஜ்ஞாமியதீஹ சிந்தா ।। 30**
**ஆவர்ணஶக்திக்ரஹம் ஆபவர்கம் து:கைகரூபா விரசய்ய வித்யா: ।**
**விஶ்ராந்திஹேதோ: கவிதாம் ஜநாநாம் வேதா: ஸதாநந்தமயீம் கிமாதாத் ।। 31**

எளிமையும், காம்பீர்யமும் ஒருங்கே துவங்க வேண்டுமே. இன்னும் எத்தனையோ விஷயங்கள் கவிதை இயற்றுபவன் கவனிக்கவேண்டியுள்ளது. இத்தனைக் கவலை ஒரு ஸாம்ராஜ்யத்தை ஆளுகின்ற சக்கிரவர்த்திக்கு உண்டா?

ஹனுமான் ஸீதா தேவியைத் தேடிச் சென்று கண்டுபிடித்து விட்டான். அவள் இருக்கிற சோக நிலை அவன் உள்ளத்தை உருக்குகிறது. ''ஆஹா! எப்படி இருக்க வேண்டியவள் எப்படி இருக்கிறாள்''. அந்த ஹனுமான் மூலம் வால்மீகி பகவானின் வாக்கு எப்படி இருக்கிறது பாருங்கள். ''ஸீதா தேவி எப்படி இருக்கிறாள்? அதைச் சொல்லி விட வேண்டும். அந்த அசோக மரத்திற்கப்பால் ஒரு செயற்கை தாமரை ஓடை. அதில் விடியற்காலையில் தாமரைகள் அதிகமாக மலருகின்றன. அவற்றையும் பார்க்கிறான் கவி. தேவியையும் பார்க்கிறான். இந்த தாமரைமலர்களைப்போல பூத்துக் குலுங்க வேண்டியவள் வாடிக் கிடக்கிறாளே! அடுத்த கணம் கரையிலிருந்த சேற்றில் புரண்ட தவளை ஒன்று தாமரை மீது தத்தியது. அந்தச் சேறு தாமரை இதழ்களில் படிகிறது, தாமரையின் நிலையும், ஸீதையின் நிலையும் ஒன்றாகி விட்டது. அந்தோ! பரிதாபம். அந்தப்பெண்மணி வாடி இந்தச் சேறு படாத தாமரைப்போல் விளங்கவும் செய்கிறாள், மங்கியும் தோற்றமளிக்கிறாள்.

ம்ருணாளி பங்க்திக்தேவ விபாதி ந விபாதி ச. இதைத் திருப்பித் திருப்பிப் படிக்கிறோம். ஐயோ பாவம் இவளுக்கு இந்த கதியா? எப்படி இருக்கவேண்டிய ஸீதை இந்த நிலைக்கு ஆளாகிவிட்டாளே. நம்முடைய இந்த மனக் குமுறல், இந்த ச்லோகத்தைப் படிக்கப் படிக்க மேலும் வளர்கிறது. வால்மீகியின் உள்ளத்திலே எழுகிற குமுறல் இந்த பகுதியிலே வெளிப்படுகிறது. இப்படி ஒரு கவிதை பிறக்க அத்தனை குமுறல் தேவையாக இருந்தது.

31 வித்யைதான் என்பது சாதாரண விஷயமா? எழுத்துக்களைக் கற்றுக் கொள்வது முதல், சொற்கள், வாக்கியம் இவைகள் அனைத்தையும் உள்ளத்தில் ஏற்றி, மறக்காமல் காப்பாற்றி, சரியான நேரத்தில் அவை நினைவுக்கு வருவது என்பதெல்லாம் சாதாரண விஷயமா? பிறகு அறிய

सिद्धं पदं सिद्धतरस्तदर्थः साध्या पदानां परमानुपूर्वी ।
तन्मात्रसारे कवितापदेऽस्मिन् कियद्विधात्रा कृतमुच्चनीचम् ॥ ३२

तान्येव शास्त्राणि त एव शब्दास्त एव चार्था गुरुवस्त एव ।
इयान्विशेषः कवितापथेऽस्मिन् देव्या गिरां दृक्परिवर्तभेदः ॥ ३३

पदानि भव्यान्यपि काव्यरीतिमस्थानदत्तानि न शोभयन्ते ।
नासाग्रलग्नेन भवेन्मुखश्रीस्ताटङ्कबिम्बेन कथं तरुण्याः ॥ ३४

---

வேண்டிய விஷயங்கள் எத்தனை எத்தனை? ஆனந்தம் என்றால் என்ன என்று தெரிந்துகொள்ள வேண்டுமே! ஒருவன் ஒவ்வொன்றையும் கற்றுத் தேடி, பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமா? பாவம் இவன் இத்தனையும் கற்றுக் கொள்ள இவ்வளவு கஷ்டப்பட்டுவிட்டானே என்று மனம் இரங்கி, ப்ரஹ்மதேவன் அவனுடைய மனதில் இறுக்கம் நீக்கி, உல்லாஸப்படுத்துவதற்காக கவிதை என்கிற ஆனந்த நந்தவனத்தைப் படைத்து அளிக்கின்றானோ!

32 ஒரு மேதாவி கேட்டான்-'என்ன ஐயா! கவிதை கவிதை என்று மாய்ந்து போகிறீரே. அது என்ன பெரிய விஷயமா? சொல் இருக்கிறது. அது தயாராக இருக்கிறது. அதைப் புதிதாகப் படைக்கவேண்டாம். அதன் பொருளும் திட்டவட்டமாக இன்னதுதான் என்று தெளிவாகத் தெரிந்திருக்கிறது. அந்தந்த இடத்திற்குத் தகுந்தாற்போல அந்த சொற்களை சேர்க்கவேண்டியதுதானே'

ஸித்தர் பாடல் ஒன்று. எழுத்தறிவில்லாத நாட்டுப் புறத்தான் வாயில் அன்றாடம் புழங்குகின்ற வார்த்தைகள்

''நந்தவனத்தில் ஓராண்டி, அவன்
நாலாறு மாதமாய் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒரு தோண்டி
அதைக் கூத்தாடி கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி''.

பாடலில் உள்ள நையாண்டி நன்றாக புரிகிறது நாட்டுப்புறத்தானுக்கு. அட பாவிப்பயலே! பத்துமாதம் அலையாக அலைந்து குயவனிடமிருந்து கொண்டுவந்த தோண்டியை ஏண்டா கூத்தாடி போட்டுடைத்தாய்? என்று அங்கலாய்க்கிறார். அறிவாளி என்று நினைத்துக் கொண்டிருக்கிற அஹங்காரியைப் பார்த்து சிரிக்கிறார் ஸித்தர். 'ஏனடா ஊத்தக்குழியில் பத்துமாதம் கிடந்து வருந்திய மானிடப் பிறவியை ஆத்மஞானம் பெறாமல் தான்தோன்றித்தனமாக வாழ்ந்து, வாழ்க்கையை வீணடிக்கிறாய்' என்று கடிந்து பரிதாபப்படுகிறார். இந்த உட்கருத்தே பாட்டின் ஜீவன். மற்றொரு பாடல்

''பாட்டி பாட்டி, பதக்கரிசி தீட்டி,

**ஸித்தம் பதம் ஸித்ததரஸ்ததர்த்த:ஸாத்யா பதாநாம் பரமாநுபூர்வீ ।**
**தந்மாத்ரஸாரே கவிதாபதேऽஸ்மின் கியத்விதாத்ரா க்ருதமுச்சநீசம் ॥ 32**
**தாந்யேவ ஶாஸ்த்ராணி த ஏவ ஶப்தாஸ்த ஏவ சார்த்தா குரவஸ்த ஏவ ।**
**இயான் விஶேஷ: கவிதாபதேऽஸ்மின் தேவ்யா கிராம் த்ருக்பரிவர்த்தபேத: ॥ 33**
**பதாநி பவ்யாந்யபி காவ்யரீதிமஸ்தாநதத்தாநி ந ஶோபயந்தே ।**
**நாஸாக்ரலக்நேந பவந்முகஶ்ரீஸ்தாடங்கபிம்பேந கதம் தருண்யா: ॥ 34**

---

கோணக்காலை நீட்டி,
தட்டுத்தடுமாறி
குட்டையிலே விழுந்துட்டியே ''

எதுகை மோனை எல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது கேட்டவுடன் சிரித்து விடுகிறோம். அத்தோடு சரி உள்ளே ஒன்றும் இல்லையே. அந்த ஸித்தரையும் இந்த கவியையும் ப்ரஹ்மதேவன்தான் படைத்தான் . அந்தோ! எத்தனை ஏற்றத் தாழ்வு ?

33 ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அதே சாஸ்திரங்கள். அதே பாஷ்யங்கள். அதே வசனம், அதே பூர்வபக்ஷம், அதே ஸித்தாந்தம். அப்படியே அக்ஷரம் மாறாமல் சொல்லுகின்ற ஆசாரியார்கள், அதே வாக்கியார்த்தம், அதே ஸம்பாவனை.

அதோ மற்றொரு சொல். புத்தம் புதிய கவிதா மார்கம். வாக்தேவீ அவர்களுக்கு அந்த வழியில் கடாக்ஷித்து விட்டாள். நமக்கு இந்த வழியில் கண்ணைத் திறந்து விட்டாள். ஒரு கவி கூறினார். அதோ பாரும். உங்கள் உபநிஷத்தின் ஸாரமான ப்ரஹ்மம் உரலில் கட்டுண்டு இங்கேயல்லவா இருக்கின்றேன் என்று உங்களைப் பார்த்து சிரிக்கின்றது!! ''உபநிஷதர்த்தம் உலூகலே நிபத்தம்''

அந்தச் சிரிப்பில் கவி பரமாத்மாவயே தரிசனம் செய்துவைத்துவிடுகிறார். சொல்லிப் பாருங்கள். ''உபநிஷதர்த்தம் உலூகலே நிபத்தம்'' உண்மையா இல்லையா...

34. சொற்களிலே குறை ஒன்றும் இல்லை. சொற்கள் எல்லாம் மங்களமானவைதான். அவற்றை சரியான இடத்தில் பிரிக்கவில்லையே. தகாத இடத்தில் வைத்தால் அவை அழகு பெறுவதில்லை என்பது மட்டும் இல்லை, கவிதைக்கும் அழகு ஊட்டுவதில்லை. பெண் அழகானவள்... நல்ல யௌவனமுடையவள்தான். அவளுடைய மூக்கு அழகாக இருக்கிறது. அது முன்னே தெரிகிறது. காதுகள் பக்கத்தில் மறைந்து இருக்கின்றன. வைரத்தோட்டை முன்னே உள்ள மூக்கில் போடலாமா? அதனால் முகத்தின் அழகு சிறக்குமா? அது அது இருக்கின்ற இடத்திலே இருந்தால்தானே அழகு ?

साहित्यविद्यां पदमेकमेव सर्वानवद्यामपि हन्ति दुःस्थम् ।
दन्तावलिं मौक्तिकदामरम्यां दंष्ट्रेव वक्त्राद्बहिर उल्लसन्ती ॥ ३५

अन्योन्य संसर्गविशेषरम्यापि अलंकृतिः प्रत्युत शोचनीया ।
निर्व्यङ्ग्यसारे कविसूक्तिबन्धे निष्क्रान्तजीवे वपुषीव दत्ता ॥ ३६

विद्वत्प्रियं व्यङ्ग्यपथं व्यतीत्य शब्दार्थचित्रेषु कलेर्विलासात् ।
प्राप्तोऽनुरागो निगमानुपेक्ष्य भाषाप्रबन्धेष्विव पामराणाम् ॥ ३७

---

ராமனுக்கு பட்டாபிஷேகம் என்ற நல்ல செய்தியைக் கொண்டுவந்த மந்தரையை கைகேயி பாராட்டுகிறாள். அவள் தன்னுடைய கூனல் முதுகுடன் கைகேயி பரப்பிக் கொண்டு நிற்பதைப் பார்த்து கைகேயிக்கு சிரிப்புத்தான் வந்தது. அடியே மந்தரை! நீ எப்படி இருக்கிறாய் தெரியுமா? ''ராஜஹம்ஸமிவ ராஜஸே'' ராஜஹம்ஸம்போல இருக்கிறாய். என்கிறாள். இந்த நையாண்டியில் ராஜஹம்ஸி என்ற சொல் ironical ஆக, எதிர் மறையாக, எவ்வளவு அழகாகப் பொருந்துகிறது. வால்மீகி பகவான் வேறு எந்த இடத்திலும் இந்த அருமையான **சொல்லை உபயோகப்படுத்தவில்லை. நையாண்டியில் அகப்பட்டதால்** இந்தச் சொல்லுக்கு பொருள் செரிவு அதிகமாகிவிட்டதைப் பார்க்கிறோம்.

35. அழகான கவிதையை, அது சிறிது கூட குற்றமற்று இருந்தாலும் கூட, தவறான ஒரு சொல் கெடுத்துவிடும். பல்வரிசை அழகாக இருக்கிறது. நல்முத்துமலையைப் போல் ரமியமாக உள்ளது. இருக்கட்டும். அந்த பல்வரிசையில் ஒரு தித்திப்பல் வெளியே நீட்டிக் கொண்டிருந்தால் நன்றாக இருக்குமா?

36. ஒரு ச்லோகத்தில் பொருள் அலங்காரம் பொருத்தமாக அமைந்திருக்கலாம். மறைக்க மறைக்கத்தான் பெண்ணின் மார்பகத்தின் அழகு அதிகமாகும் அதை மறைக்காமல் அதற்கு ஒரு ஆபரணம் சூட்டினால் அது அழகாக இருக்குமா? அவலமாக இருக்குமே. அது போல கவிதை, ஆழ்ந்த உட்பொருளில்லாதது, அலங்காரத்தினால் சோபிக்காது. உயிர் பிரிந்த சவத்திற்கு எத்தனை ஆபரணங்கள் சூட்டி என்ன பயன்?

37. இப்படியெல்லாம் தீக்ஷிதர் அங்கலாய்ப்பதற்கு ஒரு சூழ்நிலை உருவாகியிருக்க வேண்டுமே அது என்ன? பரம்பரை சிவபக்த வம்சத்தில் பிறந்த தீக்ஷிதருக்கு, சிவபக்தி ரத்தத்தில் ஊறியது. அவருடைய சிவோத்கர்ஷ மஞ்சரீ, அவருடைய த்ருடமான சிவபக்தியை வெளிப்படுத்தும். அவர் மதுரை வந்து திருமலைநாயகனின் ஆஸ்தான வித்வத் ஸபையின் தலைவரான பிறகு மதுரையில் பல சிவநேசச் செல்வர்களின் அறிமுகம் கிடைத்தது. அவர்களில் பலர் தமிழ்ப்புலவர்கள் அவர்களுடன் அமர்ந்து மாணிக்கவாசகரின் திருவாசகத்தையும், பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடல் புராணத்தையும்

ஸாஹித்யவித்யாம் பதமேகமேவ ஸர்வாநவத்யாமபி ஹந்தி துஸ்ஸதம் ।
தந்தாவலிம் மௌக்திகதாமரம்யாம் தம்ஷ்ட்ரேவ வக்ராத் பஹிருல்லஸந்தீ ॥ 35

அந்யோந்யஸம்ஸர்கவிஶேஷரம்யாபி அலங்க்ருதி: ப்ரத்யுத ஶோசநீயா ।
நிர்வ்யங்க்யஸாரே கவிஸூக்திபந்தே நிஷ்க்ராந்தஜீவே வபுஷீவ தத்தா ॥ 36

வித்வத்ப்ரியம் வ்யங்க்யபதம் வ்யதீத்ய ஶப்தார்த்தசித்ரேஷு கலேர்விலாஸாத் ।
ப்ராப்தோऽநுராகோ நிகமாநுபேக்ஷ்ய பாஷாப்ரபந்தேஷ்விவ பாமராணாம் ॥ 37

அனுபவித்தார். அவருடைய நித்ய சிவபூஜையில் திருவாசகம் இடம்பெறாத நாளே கிடையாது. முக்கியமாக அவருடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்ட பாடல் ஒன்று உண்டு.

''பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து நீ
பாவியேனிடைய ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உவப்பிலா ஆனந்தமயத்தேனினைச் சொரிந்து
புரம் புரம் திரிந்த செல்வமே சிவபெருமானே''

என்ற பாடல், சிவபெருமான் தன்னை ஆட்கொண்ட விதமும், மாணிக்கவாசகரை ஆட்கொண்ட விதமும் ஒன்றே என்று பெருமிதம் கொண்டவர்.

ஆகவே அரசனின் வித்வத்ஸபையில் தமிழ் புலவர்களுக்கு சமமான அந்தஸ்த்தை அளித்து பெருமைப்படுத்தினார்.ஆனாலும், சபையில் தகுதிமிக்கவர்தான் இடம்பெற்றார் என்று சொல்ல முடியாது. அரசாங்கத்து ப்ரபுக்களை அண்டி, அவர்களைப் பல ச்லோகங்களினால் புகழ்ந்து, அந்த சிபாரிசினால் சபையில் இடம் பெற்றவர் பலர். தனது அலங்கார ஆர்பாட்டத்தினாலும், ஆடம்பர பாவனைகளாலும், சபையில் இடம் பெற்றுவிட்டார்கள். ஏதாவது கவிதை வேண்டுமே. கவித்திறனோ, ஞானப்பரிபக்குவமோ இல்லாமல் ஆடம்பரமான சொற்களைச் சேர்த்துக் கவிதை என்று படிப்பார்கள். பிரபுக்களைச் சார்ந்தவர்கள். ஆதலால் அவர்களுடைய வாய்வீச்சை உதாஸீனம் செய்யமுடியாது, முகம் சுளிக்கவும் முடியாது.

தீக்ஷிதர் அந்தச் சபையில் தலைமை தாங்குகிறார். பக்கத்தில் அவருடைய சீடர் திருவிசலூர் ராமபத்ர தீக்ஷிதர் இருக்கிறார். ஆடம்பரக் கவிகளின் ஆர்பாட்டம் தாங்கமுடியாமல் தீக்ஷிதர் ராமபத்ரரிடம் மனம் புழுங்கிப் பேசுகிறார். ராமபத்ரரே! பார்த்தீரா கொடுமையை இவன் தமிழ் புலவனாம். அண்மையிலுள்ள ராமநாதபுர ஸமஸ்தான அதிபரின் ஆஸ்தான வித்வானாம். அவரை புகழ்ந்து பாடி குறவஞ்சி எழுதி இருக்கிறானாம். பச்சை ச்ருங்காரத்தை இங்கிதமில்லாமல் ஆபாஸமாகப் பாடி, காமலீலையை வர்ணிக்கிறான். ஆழ்ந்த உபபொருள் இல்லாத, அப்பட்டாமான சொல்லடுக்கு. வரிக்கு வரி எதுகை, மோனை, பக்கத்தில் உட்கார்ந்து, ஆஹா! ஊஹூ என்று பாராட்டுவதற்கு ஒரு

कृते युगे व्यञ्जनयावतीर्णं त्रेतायुगे सैव गुणीबभूव ।
आसीत्तृतीये तु युगेऽर्थचित्रं युगे तुरीये यमकप्रपञ्चः ॥ ३८

दिष्ट्याधिरूढाः कविताधिराज्यं धीरा रमन्ते न हि शब्दचित्रे ।
स्वर्गेऽपि गत्वाप्सरसां निवासे काणैव किं कापि गवेषणीया ॥ ३९

मत्वा पदग्रन्थनमेव काव्यं मन्दाः स्वयं तावति चेष्टमानाः ।
मज्जन्ति बाला इव पाणिपादप्रस्पन्दमात्रं प्लवनं विदन्तः ॥ ४०

कालाद्बहोः कान्यपि दुष्पदानि लब्धानि मन्दः परितो विकीर्य ।
छिद्राणि लोष्टैरथ पांसुभिश्च संपूरयन्विस्मयते विलज्जः ॥ ४१

अद्यैकमेकं कुधियःपरेद्युरन्येद्युरेकं च पदं निबध्य ।
शक्तं क्वचित्पर्युषितं क्वचिच्च कोष्णं क्वचिच्चारचयन्ति पद्यम् ॥ ४२

आपूर्य वक्त्रं लशुनैर्विधाता किं निम्बसारैः कुधियामसिञ्चत् ।
न चेत्कथं वाचि ततः क्षरन्त्यां स पूतिगन्धः स च तिक्तभावः ॥ ४३

---

கூட்டம். இலக்கிய கவிதைகளின் கட்டுப்பாடுகளை சந்த அமைப்புகள் சிதைந்து கிடக்கிற இவற்றைக் கேட்க வேண்டியிருக்கிறது. இதெல்லாம் என்ன என்று கேட்டால் தமிழில் மரபுக் கவிதைகள், பல பிறிவுகளாக வந்திருக்கிறது. அவற்றிலே ஒன்று இது என்கிறார்கள். புலவர்கள் பலர் எழுதி புகழ் பெற்றிருக்கிறார்கள். எனக்கென்ன வருத்தம் என்றால் தெய்வத்தமிழை, காவியங்களை, ஆழ்ந்த புலமையை, எல்லாம் ஒதுக்கிவிட்டு இப்படிப்பட்ட பாடல்களைக் கேட்க வேண்டியுள்ளதே என்று நொந்துக் கொள்கிறேன்.

38 ஒவ்வொரு விஷயத்திலும் மிகச்சிறந்த காலம், நடுத்தரமான காலம், தாழ்ந்துபோன காலம் என்று வரிசைப்படுத்துவதுண்டு. சிறந்த காலத்தை கிருதயுகம் என்றும், சற்றுத் தரம் குறைந்த காலத்தை த்ரேதாயுகம் என்றும், முழுவதும் வக்ரமடையாத காலத்தை த்வாபரயுகம் என்றும், தாழ்ந்துபோன நிலையை கலியுகம் என்றும் சொல்வார்கள். அதேபோல் கவிதா யுகங்களை வரிசைப்படுத்திக் காண்பிக்கின்றார். ஆழ்ந்த உட்கருத்துடைய த்வனிகள் நிறைந்த காலத்தை க்ருதயுகம் என்றும், அலங்கார அலைகள் நிறைந்த காலத்தை த்ரேதாயுகம் என்றும், பொருளற்ற அடுக்குச்சொற்கள் உள்ள காலத்தை த்வாபரயுகம் என்றும். வந்த சொற்களே வேறு யமகமாக வரும் காலத்தை கலிகாலம் என்று சொல்லுவார்கள்.

39 பகவானுடைய கிருபையால் கவிதா ஸாம்ராஜ்யத்தை எட்டிவிட்டவர்கள், சப்தாடம்பரத்தில் இறங்க மாட்டார்கள். அழகான அப்ஸரஸ்சுகள் நிறைந்த ஸ்வர்கத்திற்குச் சென்றும் கூட, யாராவது உடல் ஊனமுற்றவர்களை தேடுவார்களா?

க்ருதே யுகே வ்யஞ்ஜநயாவதீர்ணம் த்ரேதாயுகே ஸைவ குணீபபூவ ।
ஆஸீத் த்ருதீயே து யுகேऽர்த் தசித்ரம் யுகே துரீயே யமகப்ரபஞ்ச: ।। 38
திஷ்ட்யாதிரூடா: கவிதாதிராஜ்யம் தீரா ரமந்தே ந ஹி ஶப்தசித்ரே ।
ஸ்வர்கேऽபி கத்வாப்ஸரஸாம் நிவாஸே காணைவ கிம் காபி கவேஷணீயா ।। 39
மத்வா பதக்ரந்தநமேவ காவ்யம் மந்தா: ஸ்வயம் தாவதி சேஷ்டமாநா: ।
மஜ்ஜந்தி பாலா இவ பாணிபாதப்ரஸ்பந்தமாத்ரம் ப்லவநம் விதந்த: ।। 40
காலாத்பஹோ: காந்யபி துஷ்பதாநி லப்தாநி மந்த: பரிதோ விகீர்ய ।
சித்ராணி லோஷ்டைரத பாம்ஸுபிஶ்ச ஸம்பூரயன் விஸ்மயதே விலஜ்ஜ: ।। 41
அத்யைகமேகம் குதிய: பரேத்யு:அந்யேத்யுரேகம் ச பதம் நிபத்ய ।
ஶக்தம் க்வசித் பர்யுஷிதம் க்வசிச்ச கோஷ்ணம் க்வசிச்சாரசயந்தி பத்யம் ।। 42
ஆபூர்ய வக்த்ரம் லஶூநைர்விதாதா கிம் நிம்பஸாரை: குதியாமஸிஞ்சத் ।
ந சேத் கதம் வாசி தத: க்ஷரந்த்யாம் ஸ பூதிகந்த: ஸ ச திக்தபாவ: ।। 43

40 பதங்களின் கோவைதான் கவிதை என்று எண்ணிக்கொண்டு, பாக்கியக் குறைவினால், சிலர் சொல் அடுக்குகளில் புகுந்து விடுகிறார்கள். நீந்தி விளையாட நீரில் இறங்கினவர்கள் சிறுவர்களைப்போல, முழங்கால் ஆழமுள்ள குட்டைகளில் இறங்கி கைகால்களை தண்ணீரில் உதைத்துக் கொள்வார்களா?

41 ச்லோகங்கள் எழுதப் போகின்றேன் என்று வெகு நாட்களாக முனைந்து, தவறான சில சொற்களை சேர்த்து வைத்துக்கொண்டு, புரட்டி புரட்டிப் போட்டு, ஒத்து வராமல்,எப்படியோ சுதாரித்து, நடுவில் விட்டுப் போன இடை வெளிகளில், சாது, கில, கலு போன்ற அர்த்தம் பொருந்தாத சொற்களை நிரப்பி, வீட்டு இடுக்குகளில் உள்ள துவாரங்களில் சிறு கற்களையும் மண்ணையும் வைத்து நிரப்புவது போல, நானும் ச்லோகங்கள் எழுதி விட்டேன் என்கிறார்கள். சொல்லு பார்க்கலாம், என்றால் அஸ்மாகூநாம் தார்கிகேஷாம் அர்தர்யேவ ந சப்தரி - (ச வை து ஹி, ச வை து ஹி) நான்கே நாட்களில் முழுதும் எழுதிவிட்டேன் என்று வெட்கமில்லாமல் கூறுகிறார்கள்.

42 இன்று ஒரு பதம், நாளை ஒரு பதம், மறுநாள் ஒரு பதம் என்று அங்குமிங்குமாக ஸம்பந்தம் இல்லாமல், ஒருபுறம் காய்ந்துபோனது, மறுபுறம் ஊசிப்போனது மற்றொருபுறம் ஒரு ப்ரம்மசாரி சமைப்பதுபோல், அரைவேக்காட்டுடன் மந்தமானவர்கள் கவிதை புனைகிறார்கள்.

43 வாய்நிறைய உள்ளிப்பூண்டை அடைத்து, ப்ரஹ்மதேவன் வேப்பம் சாற்றை கெடுமதிகளுக்குப் புகட்டி விட்டாரோ! இல்லையேல் அந்த பாடல்களில் இத்தனைக்கசப்பும், துர்நாற்றமும் ஏறியிருக்காது.

लभेय निन्दामपि सत्कवीनां सव्यङ्ग्य सौरभ्यः रसैर्वचोभिः ।
न तु प्रशंसामपि दुष्कवीनां दुर्गन्धिभिर्वीतरसैरमीभिः ॥ ४४

विवक्षितार्थप्रतिपादकं ये विन्यासभेदं न विदुः पदानाम् ।
दुःखावहोऽर्थः स्फुरितोऽपि तेषां दौर्भाग्यभाजामिव पुत्रलाभः ॥ ४५

दुर्मेधसः शुष्कतरां कठोरां दुर्गन्धसान्द्रां गिरमुद्गिरन्तः ।
कालं चिरं हन्त कथं व्यथन्ते श्रोतुर्दशातः स कियत्तमोऽशः ॥ ४६

शृण्वन्तु ते दुष्कवितां परेषां श्रोत्रेषु तप्तं जतु यैर्निषिक्तम् ।
शब्दार्थयोर्दुष्कविवक्त्रभाजोः किं दुष्कृतं स्यादवधारयन्तु ॥ ४७

श्राम्यन्ति यावत्कवयः परेऽपि श्राम्यन्ति तावच्च ततोऽधिकं च ।
गर्भोद्भवादिः प्रसवावसानः क्लेशो हि दुष्पुत्रसुवां च तुल्यः ॥ ४८

---

44 ராமபத்ர தீக்ஷிதர் சொன்னார் ‘அதோ பாருங்கள், உங்களை ஒரு கவி புகழ்ந்து பாடுகிறான்.’ தீக்ஷிதர் சொன்னார்-‘ஐயா! அவர் என்னை புகழவேண்டாம். இகழட்டும். அந்த இகழ்ச்சி மதுரமான கவிதையாக இருந்தால், அதை காத்து பொக்கிஷமாக வைத்துக் கொள்வேன். ஆனால் புகழ்கிறேன் என்று ஏதாவது தத்துபித்தென்று துற்நாற்றமெடுத்த, கச்சிப்போன சொற்களால் பிதற்றினால் நான் அதைப் பொறுக்க மாட்டேன்’. ஸ்ரீதர ஐயாவாள் காலத்தில் கங்காதர வாஜபேயீ என்ற, புகழ்பெற்ற வாஜபேய யாகம் செய்த ஒரு தீக்ஷிதர் இருந்தார். அதே காலத்தில் திருவிசலூரில் கவிராக்ஷஸர் என்று புகழ் பெற்ற முத்துராம கவி என்பவரும் வாழ்ந்து வந்தார் கங்காதரருக்கு ஊரில் ஒரு அவப்பெயர் உண்டு. ரஹஸ்யமாகக் கள் குடிப்பாராம். கவி ராக்ஷஸர் கங்காதரரைப் புகழ்ந்து ஒரு ச்லோகம் எழுதினார்..

**கங்காபாயீ ஜஹ்நு: ஸாகரபாயி து கும்பஸம்ஜாத:।**
**கங்கா ஸாகர பாயீ கங்காதர வாஜபே யாஜீ ।।**

ஜன்ஹு மஹருஷி கங்கையை மட்டும்தான் குடித்தார். அகஸ்த்யரோ கடலையே குடித்தார். அவர்களை மிஞ்ஜினார் நம்முடைய கங்காதரவாஜபேயீ. அவர் கங்காஸாகரம் இரண்டையும் சேர்த்துக் குடிக்கிறாரே! (கங்காஸாகரம் என்ற பதச்சேர்க்கைக்கு கள் என்று பொருள்). இது கங்காதரர் காதில் விழுந்தது. அவர் கவிராக்ஷஸரைத் தேடிக் கொண்டு திருவிசலூர் வந்தார். ஊர் கூடிவிட்டது. கவிராக்ஷஸரைக் கண்டுபிடித்தார்.-- ‘ஓய்! ஒரு மஹத்தான காவியத்தை ஒரு ச்லோகத்தில் எழுதிவிட்டீர் அய்யா? இந்தாரும் இந்த ரத்னமாலை’ என்று கவியின் கழுத்தில் சூட்டினார்.

லபேய நிந்தாமபி ஸத்கவீநாம் ஸவ்யங்க்ய ஸௌரப்யரஸைர்வசோபி: ।
ந து ப்ரஶம்ஸாமபி **துஷ்கவீநாம் துர்கந்திபிர்வீதரஸைரமீபி:** ।। 44
விவக்ஷிதார்த்தப்ரதிபாதகம் யே விந்யாஸபேதம் ந விது: பதாநாம் ।
**து:**காவஹோऽர்த் த:ஸ்புரிதோऽபி தேஷாம் **தௌர்பாக்யபாஜாமிவ** புத்ரலாப: ।। 45
**துர்மேதஸ:** ஶுனஷ்கதராம் கடோராம் **துர்கந்தஸாந்த்ராம் கிரமுத்கிரந்த:** ।
காலம் சிரம் ஹந்த கதம் வ்யதந்தே ஶ்ரோதுர்தஶாத: ஸ கியத்தமோऽம்ஶ: ।। 46
ஶ்ருண்வந்து தே **துஷ்கவிதாம்** பரேஷாம் ஶ்ரோத்ரேஷு தப்தம் ஜது யைர்நிஷிக்தம் ।
ஶப்**தார்த்த**யோர் **துஷ்கவிவக்த்ரபாஜோ:** கிம் **துஷ்க்ருதம்** ஸ்யாத் அவ**தா**ரயந்து ।। 47
ஶ்ராம்யந்தி யாவத் கவய: பரேऽபி ஶ்ராம்யந்தி தாவச்ச ததோऽ**தி**கம் ச ।
**கர்மோத்பவாதி:** ப்ரஸவாவஸாந: க்லேஶோ ஹி **துஷ்புத்ர**ஸூவாம் ச துல்ய: ।। 48

---

*45* ஒருவனுக்கு நல்ல கருத்து தோன்றுகிறது ஆனால், அதை சொல்வதற்கு தகுந்த சொல் கிடைக்காமல் ஏதோ ஒரு சொல் கூறி சமாளிக்கிறானே; அவனைப் பார்த்தால் பரிதாபம் ஏற்படுகிறது. ஒருவேளைச் சோற்றுக்கே திண்டாடுகிறவனுக்கு, பிள்ளை பிறந்த செய்தியைப்போல இருக்கிறது. சொல்லத் தெரியாதவனுக்கு கருத்து வந்து என்ன பயன்?

*46* ராமபத்ரரே! இதோ பாரும் இவனை! படித்தது ஒன்றும் நினைவு இல்லாமல், பெரிய ஆசிரியர்கள் பெரிய நூல்கள் பெயரைச் சொல்லி, பொருத்தமில்லாமல், சொல்வதெல்லாம் அபத்தமாக இருக்கிறது. எப்படி விஷயங்களைச் சொல்கிறான்.? உங்களுக்கு புரிந்ததா? புரியாமல் இருந்தால் தவறில்லை. பெரிய விஷயம் உங்கள் காதில் விழுந்திராது என்று வேறு கூறுகிறான். நம்முடைய பொழுதை வீணாக்குகிறானே. இவன் பேச்சைக் கேட்கவேண்டிய விதி இன்னும் எவ்வளவு காலமோ தெரியவில்லையே.

*47* இத்தகைய தவறுகள் நிறைந்த கவிதையைக் கேட்பவர்கள் கேட்கட்டும். கேட்க சகிக்காவிட்டால் அரக்கைக் காய்ச்சி காதில் ஊற்றிக்கொண்டு கேட்கட்டும். நல்ல சொற்களும், அவற்றின் அருமையான கருத்துக்களும் என்ன பாவம் செய்தனவோ?அவனுடைய வாயில் புகுந்தனவே! அதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

*48* காவியம் எழுத துஷ்டகவிகள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்களோ, அத்தனை கஷ்டங்களை மற்ற கவிகளும், சில ஸமயம் அதைக்காட்டிலும் அதிகமாகவும், அனுபவிக்கிறார்கள். கருத்தரித்தமுதல் பிரஸவ காலம் வரை எல்லா தாயார்களுக்கும் சிரமம் ஒன்று தான். ஆனால் அது அசட்டுப் பிள்ளையாகப் பிறந்து விட்டால் சிரமம் அவர்களுக்கு மட்டுமா? உலகத்திற்கும் அல்லவா?

दाक्षिण्यहानिर्जगतां विधातुर्देव्या गिरां दुर्मरणस्य योगः ।
पापं  जनस्येति च सवमेतत् समाहृतं दुष्कवितानिदानम् ॥ ४९
आब्रह्मघातात् अघशोधनानि स्मरन्ति ये ते परमर्षयोऽपि ।
यावत्तदात्मान्वयिताधियैव न सस्मरुर्दुष्कवितासु शुद्धिम् ॥ ५०
स्वोक्तिं मुषित्वा पुरतः पठन्तं स्वस्यैव  पश्यन्कविसाहसाङ्कम् ।
प्राज्ञो जनः किं प्रतिपद्यतां तमाहन्तु वा स्वोदरमाहतां वा ॥ ५१
निन्दन्तु वाचं मधुरां कवीनां नन्दन्तु च स्वां गिरमेव मूर्खाः ।
नाद्यां स्वरीत्या रसयन्तु जातु नान्त्यां पठन्तु स्वपतोऽपि पार्श्वे ॥ ५२
हिंसा पशूनां क्रतुमध्यलग्ना स्वर्गे यथास्तेऽक्षयदुःखहेतुः ।
किंचिच्छुभं पातकमध्यलग्नं तथा मुदे स्यादपि दुष्कवीनाम् ॥ ५३
प्राचेतसव्यासमुखाः कवीन्द्राः प्राज्ञोपि किं दुष्कविभिर्विरक्ताः ।
काव्यानि कर्तुं शतशः क्षमास्ते कथं न चेदासत काकवन्ध्याः ॥ ५४
स्थूलाभिरभ्युल्लिखितानि धीभिः स्थूलानि मन्ये कुकवेर्वचांसि ।
कथं न चेत्कर्णपुटं प्रवेष्टुमेतानि यत्नादपि नोत्सहन्ते ॥ ५५

---

49 கவி சிந்திக்கிறார். ஏன் இப்படி கெட்ட கவிதைகள் பிறக்கவேண்டும்? அவருக்கு நன்றாகப் புரிகிறது ப்ரஹ்மதேவனுக்கு ரஸிகர்களை துன்புறுத்த வேண்டாமே என்று தோன்றக்கூடாதா! இப்படியெல்லாம் தாக்ஷிண்யப்பட்டால் அவருடைய படைப்புத் தொழில் சரிவராது, தலைவிதிப்படி துஷ்டகவியை படைத்துத்தான் ஆகவேண்டும். 2 வாக்தேவிக்கே போதாத காலம். அவள் கெட்ட கவியின் வாக்கில் நுழைய வேண்டியுள்ளது.. 3 ஜனங்களுக்கு ஒரு ப்ரபுவினுடைய காசுக்கு ஆசைப்பட்டு, புகழத்தகாதவர்களை புகழ்வது போன்ற பாவங்கள். துஷ்டகவிகள் பிறப்பதற்கு இப்படியெல்லாம் காரணம் சொல்லமுடியும்.

50 பெரிய மஹருஷிகள் எல்லோரும் ப்ரஹ்மஹத்தி தவிர மற்ற பாபங்களுக்கெல்லாம் ப்ராயஸ்சித்தம் செய்து கொண்டால் நிவிருத்தி உண்டு என்று கூறுகிறார்கள். ஆனால் துஷ்டகவிகளால் படுகின்ற துன்பம் எப்பொழுது தீறும் என்று கேட்டால், அவர்கள் உயிரோடு இருக்கும் வரை தீராது என்கிறார்கள்.

51 தன் எதிரிலேயே உட்கார்ந்து, தான் எழுதிய ச்லோகத்தையே ஒருவன்,அவன் எழுதியதாகச் சொல்லிக் கொண்டு ஸபையில் படிக்கிறான். அவன் அந்த கவிதையின் ஸ்வாரஸ்யத்தை எடுத்துக் கூறுகிறான்.உண்மை தெரிந்தவன் இது இவர் எழுதியது அல்லவா? உன்னுடையதென்கிறாயே! இது என்ன ஸாஹஸம் என்று நினைக்கிறான். உண்மையான கவியே

**தாக்ஷிண்யஹாநிர் ஜகதாம் விதாதுர் தைவ்யா கிராம் துர்மரணஸ்ய யோக: ।**
**பாபம் ஜநாத்யேதி ச ஸர்வமேதத் ஸமாஹ்ருதம் துஷ்கவிதாநிதாநம் ॥ 49**

**ஆப்ரஹ்மகாதாத் அகஶோதநாநி ஸ்மரந்தி யே தே பரமர்ஷயோऽபி ।**
**யாவத்ததாத்மாந்வயிதாதியைவ ந ஸஸ்மருர்துஷ்கவிதாஸு ஶுத்திம் ॥ 50**

**ஸ்வோக்திம் உஷித்வா புரத: படந்தம் ஸ்வஸ்யைவ பஶ்யன் கவிஸாஹஸாங்கம் ।**
**ப்ராஜ்ஞோ ஜந: கிம் ப்ரதிபத்யதாம் தமாஹந்து வா ஸ்வோதரமாஹதாம் வா ॥ 51**

**நிந்தந்து வாசம் மதுராம் கவீநாம் நந்தந்து ச ஸ்வாம் கிரமேவ மூர்கா: ।**
**நாத்யாம் ஸ்வரீத்யா ரஸயந்து ஜாது நாந்த்யாம் படந்து ஸ்வரதோऽபி பார்ஶ்வே ॥ 52**

**ஹிம்ஸா பஶூநாம் க்ரதுமத்யலக்நா ஸ்வர்கே யதாஸ்தே க்ஷயது:கஹேது: ।**
**கிஞ்சிச்சுபம் பாதகமத்யலக்நம் ததா முதே ஸ்யாதபி துஷ்கவீநாம் ॥ 53**

**ப்ராசேதஸவ்யாஸமுகா: கவீந்த்ரா: ப்ராஞ்சோऽபி கிம் துஷ்கவிபிர்விரக்தா: ।**
**காவ்யாநி கர்த்தும் ஶதஶ: க்ஷமாஸ்தே கதம் ந சேதாஸத காகவந்த்யா: ॥ 54**

**ஸ்தூலாபிரப்யுல்லிகிதாநி தீபி: ஸ்தூலாநி மந்யே குகவேர்வசாம்ஸி ।**
**கதம் ந சேத் கர்ணபுடம் ப்ரவேஷ்டும் ஏதாநி யத்நாதபி நோத்ஸஹந்தே ॥ 55**

---

மௌனமாக இருக்கும்பொழுது நமக்கேன் வம்பு என்று வாயை மூடிக் கொள்கிறான். சபை போலிஆசாமியைக் கொண்டாடுகிறது. இந்த நிலையில் உண்மைக் கவி அவனை தடி கொண்டு அடிக்கலாமா? அவன் தக்க பலம் உள்ளவனாயிற்றே! அல்லது தன் வயிற்றிலேயே அடித்துக்கொள்ளலாமா?

52 சிலர், பிறரின் இனிய காவியத்தில் ஏதாவது குறை சொல்லிக்கொண்டே இருப்பார்கள் சிலர் தான் எழுதியதையே படித்து, தானே 'ஸபாஷ் போட்டுக்கொள்வார்கள். இவர்கள் முந்தியவர்களை ஒரு நாளும் ரஸிக்கப்போவதில்லை. பிந்தயதை தூங்கிக்கொண்டிருப்பவர் பக்கத்தில் கூட படிக்கவேண்டாம். உலகம் பிழைக்கட்டுமே!

53 யாகத்தினிடையே செய்யப்படுகின்ற பசு ஹிம்ஸை, ஒரு ஸாதுவின் மனதை ஸ்வர்கத்திற்குப் போனாலும் கூட, துயரப்படுத்திக் கொண்டே தான் இருக்கும். அது தீரவே தீராது. துஷ்டகவிகள், அவர்கள் அறியாமலேயே ஏதாவது ஒரு மங்கள வார்த்தை சேர்த்திருந்தாலும் கூட ''அப்பாடா, ஒரு நல்ல வார்த்தை சொல்லிவிட்டான்'' என்று ஸந்தோஷப்படலாம்.

54 வால்மீகி, வ்யாஸர் போன்ற மஹான்கள் தெய்வானுக்ரஹம் பெற்று தமது நூல்களை எழுதினார்கள். ஆனால் அவர்கள்கூட துஷ்டகவிதைகளில் இறங்கவில்லை. அவர்களும் நம்மைப்போல் தன்னிச்சையாக காவியங்கள் பல எழுதி முடித்திருக்கலாம். அவர்கள் ஒரு ப்ரஸவத்தோடு நின்றுவிட்டார்களே!

55 இந்த முரட்டுக் கவிகளுக்கு உலக்கைப்போல பருத்த புத்தி. அதை வைத்துக்கொண்டு மொத்தையாகத்தான் அவர்கள் எழுதுவார்கள். அவர்

वाचं हतो यद्यपि ते तथापि न मूकता दुष्कवितैव दोषः ।
आद्या यदेकस्य विषादहेतुः प्राणोपरोधाय परा बहूनाम् ॥ ५६

वाचं विपञ्चीमिव वादयन्ति कर्णामृतेन ध्वनिना कवीन्द्राः ।
मूर्खाः स्वमेधामुसलप्रहारैर्विनाशयन्त्येव विचेष्टमानाः ॥ ५७

शक्यं सुखं ग्रन्थयितुं प्रबन्धाञ्शक्यस्तु न श्रोतृजनानुरोधः ।
श्रान्ते सति क्वापि कवौ यदेष सर्वस्वनाशादिव खेदमेति ॥ ५८

अचुम्बितोल्लेखपथप्रवृत्तानसंप्रदायेन कवीन्क्षिपन्ति ।
पथा प्रवृत्तान्प्रहतेन मूर्खाः पश्यन्त्यवज्ञामुकुलीकृताक्षाः ॥ ५९

रसं रसज्ञाः कलयन्ति वाचि परे पदार्थानपरे पदानि ।
वस्त्रं कुविन्दा वणिजो विभूषां रूपं युवानश्च यथा युवत्याम् ॥ ६०

पाठप्रकारैः पदयोजनाभिस्तात्पर्यदुर्निश्चयतश्च मन्दैः ।
आयास्यमानां गिरमात्मनो ये कर्णे न कुर्वन्ति त एव धन्याः ॥ ६१

एको हि दोषः परकीयतैव पद्येषु सर्वेष्वपि दुर्जनानाम् ।
तस्मिन्पुरस्थेऽपि कियद्यतन्ते वृथैव ते दोषगवेषणाय ॥ ६२

---

போன்ற உலகை மதியாளர்களுக்கு அவை பிடிக்கலாம். அவை நம்முடைய நுண்ணிய காதுகளில் எத்தனை முண்டினாலும் நுழைவதில்லை.

56 முரட்டுக்கவி, முரட்டுக்கவிதை இரண்டுமே அவர்களுடைய (வால்மீகி, வ்யாஸர் போன்ற மஹான்களுடைய) வாக்கை வசப்படுத்தமுடியாமல் செய்துவிட்டது என்று வாக்தேவியே சொல்கிறாளே!ஊமைத்தன்மை, கெட்ட கவிதை இரண்டுமே வாக்கைக் கெடுக்கின்றன. ஊமைத் தனம் குற்றமல்ல. கெட்ட கவிதை படுகுற்றம். ஊமைத்தனம் அவனை மட்டும் பாதிக்கிறது. கெட்ட கவிதை பலர் பிராணங்களை வாங்குகிறது.

57 சிலர் தமது வாக்கை வீணையைப்போல இனிமையாக்கி இழைக்கிறார்கள் அத்தகைய கவி அரசர்கள் காதுகளிலே அமுதத்தையே பொழிய வைக்கிறார்கள். இந்த துஷ்டக் கவிகளோ தமது உலக்கை மதியின் அடியால் அல்லவா தாக்குகிறார்கள்.

58 உட்கார்ந்து சுகமாக ஒரு நூலை ஒருவன் எழுதிவிடலாம். அது கேட்பவனின் காதிற்கு ஸுகமாக அமைய வேண்டுமே. நல்ல கவி ஒருவன் அப்பாடா என்று எழுதி முடித்து அயர்ந்து உட்காரும் பொழுது, இவன் வருகிறான் ஐயா. அவனைப் பார்த்து எல்லாமே அழிந்து விட்டது போல் துன்பமடைகிறான்.

59 இதுவரை யாரும் முனையாத புதிய வழியில் ஒரு கவி, கவிதை எழுத ஆரம்பித்தால், உடனே ஒருவன் இது ஸம்ப்ரதாய விரோதமானது என்று அந்த

**வாசம் ஹதோ யத்யபி தே ததாபி ந மூகதா துஷ்கவிதைவ தோஷ: ।
ஆத்யா யதேகஸ்ய விவாதஹேது: ப்ராணோபரோதாய பரா பஹூநாம் ।। 56
வாசம் விபஞ்சீமிவ வாதயந்தி கர்ணாம்ருதேந த்வநிநா கவீந்த்ரா: ।
மூர்கா: ஸ்வமேதாமுஸலப்ரஹாரைர் விநாஶயந்த்யேவ விசேஷ்டமாநா:।। 57
ஶக்யம் ஸூகம் க்ரந்தயிதும் ப்ரவந்தான் ஶக்யஸ்து ந ஶ்ரோத்ருஜநாநுரோத: ।
ஶ்ராந்தே ஸதி க்வாபி கவௌ யதேஷ ஸர்வஸ்வநாஶாதிவ கேதமேதி ।। 58
அசும்பிதோல்லேகபதப்ரவ்ருத்தான் அஸம்ப்ரதாயேந கவீன் க்ஷிபதி ।
பதா ப்ரவ்ருத்தான் ப்ரஹதேந மூர்கா: பஶ்யந்த்யவஜ்ஞாமுகுளீக்ருதாக்ஷா: ।।59
ரஸம் ரஸஞா: கலயந்தி வாசி பரே பதார்த்தாநபரே பதாநி ।
வஸ்த்ரம் குவிந்தா வணிஜோ விபூஷாம் ரூபம் யுவாநஶ்ச யதா யுவத்யாம்।।60
பாடப்ரகாரை: பதயோஜநாபிஸ்தாத்பர்யதுர்நிஶ்சயதஶ்ச மந்தை: ।
ஆயாஸ்யமாநாம் கிரமாத்மநோ யே கர்ணே ந குர்வந்தி த ஏவ தந்யா: ।। 61
ஏகோ ஹி தோஷ: பரகீயதைவ பத்யேஷு ஸர்வேஷ்வபி துர்ஜநாநாம் ।
தஸ்மின் புரஸ்தேऽபி கியத்யதந்தே வ்ருதைவ தே தோஷகவேஷணாய ।। 62**

---

கவியை ஒதுக்குவான். ஸம்ப்ரதாய முறையே எழுதுவோம் என ஆரம்பித்தால், இவர்கள் கண்களை மூடிக்கொண்டு இதை எல்லாம் சொல்லியாயிற்றே என்பார்கள் மூர்க்கர்கள். என்ன தான் செய்வது?

60 ரஸிகர்கள் என்றால் த்வனியை அறிந்தவர்கள். வாக்கில் ரஸம் உள்ளதா என்று கவனிப்பவர்கள். மற்றும் சிலர் அர்த்தம் தெளிவாக இருக்கிறதா என்று கவனிப்பார்கள். இன்னும் சிலர் சொல்லழகு இருக்கிறதா என்று கவனிப்பாரிகள். நெசவாளி வழியில் போகிற பெண்ணின் வஸ்திரத்தின் தன்மையை ஆராய்வான், வியாபாரி அவளுடைய ஆபரணங்களை கணிப்பான், வாலிபர்கள் அவளுடைய அழகை ரஸிப்பார்கள்.

61 ஒரு கவி (தெரியாத்தனமாக) தான் எழுதிய கவிதையை பிறர் படிக்கக் கேட்கிறான்.ஒருவன் சுக்கு- மிளகு-திப்பிலியை, சுக்குமி ளகுதி-ப்பிலி என்று பதம் பிரித்துப் படிப்பது போல, தவறாக பதம் பிரித்துப் படிக்கிறான். மற்றொருவன் பதங்களின் சேர்க்கையை முன்னும் பின்னும் சேர்த்துப் படிக்கிறான். மற்றொருவன் படிக்கும் பொழுது, குரல் வித்தியாஸத்தினால், தவறான கருத்துத் தோன்றும்படி படிக்கிறான். எழுதியவன் கொடுமை தாங்காமல் காதை பொத்திக்கொள்கிறான்.

62 கெடுமதியுள்ளவர்களிடம் ஒரு நல்ல கவிதை அகப்பட்டு விட்டால், அதை எழுதினவனும் முன்னிலையில் இருந்து விட்டால், விமரிசகனுடைய பார்வையில்,பிறர் எழுதியது என்ற ஒரே குற்றத்தைக் கொண்டு, என்ன குறை சொல்லலாம் என்பதையே தேடுவார்கள்.

आनन्दथुर्ब्रह्मविदां यदेकस्ते व्यङ्ग्यलाभेषु शतं कवीनाम् ।
एते सहस्रं पुनरर्बुदं वा परोक्तिदोषस्फुरणे खलानाम् ॥ ६३

प्राचीनपद्यभ्रमतः प्रवृत्ताः स्तोतुं खलाः प्रेक्ष्य कविं पुरस्तात् ।
येनान्यथाकर्तुमिदं यतन्ते क्लेशेन तेषां हि स एव दण्डः ॥ ६४

दोषः क्वचित्कश्चिदिति प्रतीतः प्राचामलंकारविदां प्रवादः ।
सर्वप्रबन्धानुगतस्तु मन्ये कर्तुः कवेर्जीवनमेव दोषः ॥ ६५

मुधैव वाक्येषु पदेष्वधीतं मुधैव दीर्घं कवितापथेऽपि ।
आवश्यकं यत्किल पामराणाम् आवर्जनं तन्न किमप्यधीतम् ॥ ६६

निसर्गतो निर्गुणमुक्तिगुम्फं समर्थयन्ते सगुणं बलाद्ये ।
ते कञ्चुलीसंनहनोन्नतेन लम्बस्तनेनापि मुदं लभन्ते ॥ ६७

पाण्डित्यलोभो यदि पामराणां कामं विहिंसन्तु कलास्त्रिषष्टिम्
कस्तेऽपराधः कविते गृहीतः किमस्ति ते किंचन पूर्ववैरम् ॥ ६८

वाचं कवीनामुपलालयन् यां भुङ्क्ते रसज्ञो युवतिं युवेव ।
तामेव भुङ्क्ते ननु तार्किकोऽपि प्राणान्हरन्भूत इव प्रविष्टः ॥ ६९

---

63 ப்ரஹ்மஞானிகளுக்கு ஒரு ஆனந்தம் உண்டு. ரஸிகன் ஒருவன் காவியத்தின் உட்பொருளின ரஸத்தை அனுபவித்தவுடன் அது போன்று நூறு மடங்கு ஆனந்தம் பெறுகிறான். ஆனால் துஷ்டர்கள், அந்த நல்ல காவியத்தில் ஒரே ஒரு குறையைக் கண்டுப்பிடித்து ஆயிரம் அல்லது லக்ஷம் மடங்கு ஆனந்தம் அடைவார்கள்.

64 ஒரு துஷ்டர் கையில் ஒரு நல்ல காவியம் கிடைத்தது. அதைப் படிக்க ஆரம்பித்தார். ரஸமாக இருந்தது. 'வால்மீகி வாக்குபோல இனிக்கிறது' என்று வியந்தார். அதை எழுதியவர் முன்னே வந்து நான் எழுதியது என்றார். அவ்வளவுதான் ''அதானே பார்த்தேன். என்னடா இது இவ்வளவு மோசமாக இருக்கிறதே'' என்று ஆரம்பிப்பார். அதற்காக குற்றம் குறை தேடுகிறார்களே; கஷ்டப்படுகிறார்களே, அதுவே அவர்களுக்கு தண்டனை.

65 அலங்கார சாஸ்திரம் கற்பித்தவர்கள், பெரும்போக்காக கவனிக்கவேண்டாததை ஒரு தோஷமாக எடுத்துச் சொல்வதை, இவர்கள் பிடித்துக்கொண்டார்கள். இவை அநேகமாக எல்லா நூல்களிலும் இருக்கலாம். ரஸிகர்கள் அதை ஒதுக்கி விடுவார்கள். துஷ்டர்கள் கூட அது இறந்தவர்களுடையதாக இருந்தால் விட்டு விடுவார்கள். ஆனால், அதை எழுதியவர்கள் உயிரோடு இருந்தால் ஒருகாலும் விடமாட்டார்கள். நல்ல காவியங்களை எழுதியவர்கள் உயிரோடு இருப்பதுதான் தவறு.

ஆநந்ததுர்ப்ரஹ்மவிதாம் யதேகஸ்தே வ்யங்க்யலாபேஷு ஶதம் கவீநாம் ।
ஏதே ஸஹஸ்ரம் புநரர்புதம் வா பரோக்திதோஷஸ்புரணே கலாநாம் ॥ 63

ப்ராசீநபத்யப்ரமத: ப்ரவ்ருத்தா: ஸ்தோதும் கலா: ப்ரேக்ஷ்ய கவிம் புரஸ்தாத் ।
யேநாந்யதாகர்த்துமிதம் கதந்தே க்லேஶேந தேஷாம் ஹி ஸ ஏவ தண்ட:॥ 64

தோஷ: க்வசித் கஶ்சிதிதி ப்ரதீத: ப்ராசாமலங்காரவிதாம் ப்ரவாத: ।
ஸர்வப்ரபந்தாநுகதஸ்து மந்யே கர்து: கவேர்ஜீவநமேவ தோஷ: ॥ 65

முதைவ வாக்யேஷு பதேஷ்வதீதம் முதைவ தீர்கம் கவிதாபதேऽபி ।
ஆவஶ்யகம் யத்கில பாமராணாம் ஆவர்ஜநம் தந்ந கிமப்யதீதம் ॥ 66

நிஸர்கதோ நிர்குணமுக்திகும்பம் ஸமர்த்தயந்தே ஸகுணம் பலாத்யே ।
தே கஞ்சுளீஸந்நஹநோந்நதேந லம்பஸ்தநேநாபி முதம் லபந்தே ॥ 67

பாண்டித்யலோபோ யதி பாமராணாம் காமம் விஹிம்ஸந்து கலாஸ்த்ரிஷஷ்டிம் ।
கஸ்ரதேऽபராத: கவிதே க்ருஹீத: கிமஸ்தி தே கிஞ்சந பூர்வவைரம் ॥ 68

வாசம் கவீநாமுபலாளயன் யாம் புங்க்தே ரஸஜ்ஞோ யுவதிம் யுவேவ ।
தாமேவ புங்க்தே நநு தார்கிகோऽபி ப்ராணான் ஹரன் பூத இவ ப்ரவிஷ்ட: ॥ 69

66 காவியம் எழுதுபவன் உயர்ந்த நல்லெண்ணங்கள் உடையவனாக, மக்களுக்கு நல்லெண்ணத்தை வளர்ப்பவனாக இருக்கவேண்டும். அதை விட்டு விட்டு திண்ணைப் பேச்சாளர்கள் ரஸிப்பதற்காக ஏதாவது எழுதுகிறவன், காவியம் எழுதுவதும் வீண், பதங்களைச் சேர்ப்பதும் வீண், நீளமாக காவியம் எழுதுவதும் வீண். அவர்கள் மஹாஜனங்களுக்கு என்ன நற்பண்பை எடுத்துச் சொல்லவேண்டுமோ அதை கற்கவில்லை.

67 ஒரு பெரிய மனிதன் எழுதிவிட்டான். அவனை அண்டிப் பிழைப்பவர்கள் கட்சி, அவனை கட்டிக் கொண்டு, குணமுமில்லாத காவியத்தை கூச்சல் போட்டுப் பாராட்டுகிறார்களே, இவர்கள் யார் தெரியுமா? தொங்கும் ஸ்தனமுடையவள் வரிந்து கச்சுக்கட்டிக்கொண்டுவந்து மினுக்குபவளை ரஸிப்பவர்கள்.

68 பெரிய பண்டிதனாகிவிட வேண்டும், பெரிய கலைஞனாகிவிட வேண்டும் என்று ஒன்றுமறியாமல், ஒன்றும் கற்காமல் அலைபவர்கள், மற்ற அறுபத்து மூன்று கலைகளில் நுழைந்து முயற்சி செய்யட்டும். அது பாக்கியம். கவிதா தேவி ! அறுபத்து நான்காவது நற்கலையே! நீ அவர்களுக்கு என்ன தவறு செய்தாய்? உன்னிடம் அவர்களுக்கு முன் பகை ஏதாவது உண்டா? ஏன் உன்னை பலாத்காரம் செய்கிறார்கள்?.

69 கவிகளின் உன்னத படைப்பான காவியத்தை, அழகான ஒரு யுவதியை ஒரு யுவன் கொஞ்சி குலாவி ரஸிப்பது போல், ஒரு ரஸிகன் ரஸிக்கிறான். அதே யுவதி தார்கிகன் கையில் அகப்பட்டுக்கொண்டு விட்டால், அவளுடைய

अर्थेष्वलंकारविदः प्रमाणं शब्देषु नः शब्दविदो मुनीन्द्राः ।
के तान्त्रिकाणां कवयो भवन्ति के वा कवीनामपि तान्त्रिकाः स्युः ॥ ७०

घट्टोपविष्टानिव वाग्भिरर्थैः काव्यागमज्ञान् उपसान्त्वयामः ।
आप्लुत्य भल्लूकवदापतन्तः कथं नु जय्या इह गौतमीयाः ॥ ७१

अप्यन्तिकस्थैरविभावनीयः सूक्ष्मः प्रकृत्या मृदुसूक्तिजन्मा ।
कुतर्कविद्याव्यसनोपजातैः कोलाहलैर्न ध्वनिरेष वेद्यः ॥ ७२

गुणान्न गृह्णन्तु खलास्ततः किं गृह्णन्तु दोषानपि वा ततः किम् ।
अपि व्यतिस्तामुभयं ततः किं गुणोऽपि दोषो यदि दुःसहं तत् ॥ ७३

क्व ब्रह्मलोकः क्व गिरां सवित्री क्व भूमिभागाः क्व वयं वराकाः ।
दिष्ट्योपलब्धामापि देवतां तां विक्रीणते वृत्तिकृते विमूढाः ॥ ७४

दुष्पण्डिताराधनदुःखशीलात् कष्टादमुष्मात्कविताधिकारात् ।
वरं जगत्यामिह मूकभावः वरं च तिर्यक्तृणगुल्मभावः ॥ ७५

---

அழகை குலைத்து, அடித்து, புரட்டி விடுவான். அதில் அவனுக்கு ஆனந்தம். பிசாசு போல புகுந்து அவளை ஆட்டி வைப்பான்.

70 ஒரு காவியம் நல்லபடியாக அமைந்திருக்கிறதா என்று ஆராயும்பொழுது, அதன் பொருளில் அலங்காரங்கள் மிளிர்ந்தால் ஆலங்காரிகர்கள் பாராட்டுவார்கள். சொற்கள் தவறில்லாமல் வந்திருக்கின்றனவா என்று பதஞ்சலி போன்ற முனிவர்கள் சான்று கூறுவார்கள். மந்திரசாஸ்திர க்ரந்தங்களைப் படித்து தேர்ச்சி பெற்றவர்களை தாந்த்ரிகர்கள் என்று கூறுவர். மந்திரங்களில் உள்ள ஒவ்வோரு எழுத்திற்கும் அதனுடைய உச்சரிப்புக்குமே முக்கியத்வம் கொடுத்து, அவைகளின் பொருளுக்கோ கவிநயத்திற்கோ முக்கியத்வம் கொடுக்காதவர்கள், அப்படிப்பட்ட தாந்த்ரிகர்களுக்கு கவிகள் ஒரு பொருட்டே இல்லை. கவிகளுக்கும் தாந்த்ரிகர்களுடன் பேச்சே இல்லையே!

71 ஸாஹித்ய சாஸ்திரங்கள், காவியத்தில் இப்படி அலங்காரம் இருக்கவேண்டும். இப்படி ரீதி இருக்கவேண்டும் என்று சட்டம் சொல்கிறார்கள். பேசுபவர்களோ, இதோ பாருமய்யா இன்ன அலங்காரம், இன்ன ரீதி. இன்ன சய்யா-எல்லாம் இலக்கணப்படி அமைந்திருக்கின்றன என்று எடுத்துக்காட்டி அவர்களை ஸமாளித்துவிடலாம். இந்த தர்க்க சாஸ்திரக்காரர்கள் இருக்கிறார்களே கரடிகளைப் போல் பாய்ந்து வருவார்கள். எங்கே ஹேது? எங்கே பக்ஷம்? எதை ஐயா நீங்கள் நிருபிக்கப் போகிறீர்கள்? என்று விழுந்து பிடுங்குவார்களே இவர்களை எப்படி வெற்றி கொள்ள முடியும்?

**அர்த்தேஷ்வலங்காரவித: ப்ரமாணம் ஶப்தேஷு ந: ஶப்தவிதோ முநீந்த்ரா: ।**
**கே தாந்த்ரிகாணாம் கவயோ பவந்தி கே வா கவீநாமபி தாந்த்ரிகா: ஸ்யு: ॥ 70**

**கட்டோபவிஷ்டாநிவ வாக்பிரர்த்தை:காவ்யாகமஞான் உபஸாந்த்வயாம: ।**
**ஆப்லுத்ய பல்லூகவதாபதந்த: கதம் நு ஜய்யா இஹ கௌதமீயா: ॥ 71**

**அப்யந்திகஸ்தை: அவிபாவநீய: ஸௌக்ஷ்ம: ப்ரக்ருத்யா ம்ருதுஸௌக்திஜந்மா ।**
**குதர்க்கவித்யாவ்யவநோபஜாதை: கோலாஹலைர் ந த்வநிரேஷ வேத்ய: ॥ 72**

**குணான் ந க்ருஹ்ணந்து கலாஸ்தத: கிம் க்ருஹ்ணந்து தோஷாநபி வா தத: கிம் ।**
**அபி வ்யதித்தாமுபயம் தத: கிம் குணோऽபி தோஷோ யதி துஸ்ஸஹம் தத் ॥ 73**

**க்வ ப்ரஹ்மலோக: க்வ கிராம் ஸவித்ரீ க்வ பூமிபாகா: க்வ வயம் வராகா: ।**
**திஷ்ட்யோபலப்தாமபி தேவதாம் தாம் விக்ரீணதே வ்ருத்திக்ருதே விமூடா: ॥ 74**

**துஷ்பண்டிதாராதநது:கஶீலாத் கஷ்டாதமுஷ்மாத் கவிதாதிகாராத் ।**
**வரம் ஜகத்யாமிஹ மூகபாவோ வரம் ச திர்யக்த்ருணகுல்மபாவ: ॥ 75**

---

*72 கௌஸல்யா மாதா ராமனுக்கு ஏற்பட்ட வனவாஸ துக்கத்தை நினைத்துப் புலம்புகிறாள் ''புத்ரோ தஶரதாத் ஜாத: கதமுஞ்சேன வர்தயேத்?'' தசரத சக்கிரவர்திக்குப் பிள்ளையாகப் பிறந்து, வனம் சென்று எப்படி வாழ்வான்? ராமனுக்கா இந்த கதி என்று ஸாதாரண வழிப்போக்கர் கூட உணர்ந்து கண்ணீர் விடுவார். குதர்கம் பேசுபவன் சொல்வான். காட்டிலே மனிதர்கள் இருப்பார்களே அவர்கள் உஞ்சவிருத்தி கஞ்சி போடமாட்டார்களா? இதற்கு என்ன கவலை? எதற்கு கௌஸல்யை அழுகிறாள்? இவர்களிடம் த்வனி, ரஸம் என்று சொல்லி என்ன பயன்.*

*73 துஷ்டர்கள் காவியத்தின் இனிமையை உணராமல் போகட்டும். அதனால் என்ன? குற்றங்களை எடுத்துக் காட்டட்டும் அதனால் என்ன? ஒருவன் குணம் தோஷம் இரண்டையும் எடுத்துக் காட்டட்டும். அது கூட பரவாயில்லை. ஆனால் அதில் உள்ள ரஸத்வனி கசக்கிறது என்கிறார்களே அதைப் பொறுத்துக் கொள்ள முடியாது.*

*74 நல்ல காவியம் என்பது ப்ரஹ்மலோகம்போல் எட்டாத உயரத்தில் உள்ளது. வாக்தேவியும் எளிதில் கிட்டாதவள். நாம் இருப்பதோ வரண்ட பூமி. இதில் வாழ்பவனோ அற்பன். அவனுக்கு தேவி ஸங்கல்பித்தால் மட்டுமே நல்ல கவிதை தேவதைபோல தர்சனம் அளிக்கிறாள். அந்த பாக்கியம் பெற்றவன், அதை அரைக்காசுக்கு விற்க நேருகிறதே! என்ன பரிதாபம்!*

*75 அரசாங்கத்திலே அளவற்ற ஆதரவு பெற்ற ஒரு கொடும்பாவி பண்டிதனிடம் கைகட்டி நிற்க வேண்டிய ஒரு வருந்தத்தக்க நிலைமை ஒரு கவிஞனுக்கு வருவதைக் காட்டிலும், அவன் ஊமையாக இருப்பதே மிகவும் நல்லது. அதைவிட நல்லது நாலுகால் பிராணியாகப் பிறந்து புல்வெளியில் மேய்வது.*

प्रायो जडा मत्सरिणश्च लोका दोषोत्तरं मृग्यगुणं वचो नः ।
गुणैकलुब्धोऽपि जनः क्वचित्स्यात् इत्याशयैवायमियान्प्रयासः ॥ ७६

वेदाहमेतं पुरुषं महान्तं इत्यामनन्तो निगमाः सगर्वम् ।
श्वानः कृता येन स एव देवो वर्ण्यः कथं वाङ्मनसातिवर्ती ॥ ७७

शब्देषु चार्थेषु परं यतिष्ये तथा यथा मां गुरवो विनिन्युः ।
चमत्कतिं तत्र कथं निधास्ये न मत्कृतिर्यत्क्रमते तदंशे ॥ ७८

क्वाहं क्व काव्यं कविराजसाध्यं क्वाहं क्व शम्भुर्निगमैरगम्यः ।
निःशङ्कमेवंविदपि प्रवर्ते निर्लज्जते देवि तव प्रसादात् ॥ ७९

दत्ते त्वया वाङ्मयरत्नकोशे विक्रीय भुक्तं किल भुक्तमेव ।
शिष्टं त्वदङ्घ्रयोः पुनरर्पयेयं दयस्व मीनाक्षि पुरैव मह्यम् ॥ ८०

शब्दा यद्वदनं प्राप्य मृदुतामाशासतेऽन्यादृशीम्
अर्था यद्धिषणाप्रवाहपतनात् इच्छन्ति जिज्ञास्यताम् ।
यत्कीर्तिस्पृहया शिवोऽपि निगमान्ग्रश्नाति सर्गादिषु
प्राचस्तान् कवितापितामहपदारूढान् कवीन् प्रस्तुमः ॥ ८२

### इति प्रथमः सर्गः

---

76 உலகிலோ பெரும்பாலும், மக்கள் கவிநயம் தெரியாத மூடர்களாகவும், பொறாமை கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள். நம்முடைய நூல்களிலோ, பேச்சிலோ, பிழைகள் அதிகமாகவும், ஏதோ ஒரு மூலையில் நல்ல கருத்துடையதாகவும் இருக்கிறது. எங்கேயாவது நல்ல கருத்தை காணமாட்டோமா என்றெல்லாம் நினைத்துத்தான் இந்த முயற்சியில் நாம் ஈடுபடுகிறோம்.

77 எந்த வேதங்கள் மஹாபுருஷனாகிய தேவனை, 'நான் அறிவேன்' என்று கர்வத்துடன் கூறுகின்றனவோ, அந்த வேதங்களை நாய்களாக்கி தன்னோடு இழுத்து வருகிறார். அதே வேதங்களை விட்டுத் தன்னை தேடவும் வைத்துவிட்டார். அப்படிப்பட்ட தேவனை, வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாதவரை, எப்படி வர்ணிப்பது.

78 என்னுடைய குருநாதர்கள் எப்படி எனக்குக் கற்றுக் கொடுத்தார்களோ, அந்த முறையில் சொற்களையும், அவற்றுக்குப் பொருத்தமான பொருளையும் நான் சேர்க்கமுடியும். அதிலே ஒரு அழகு,சமத்காரம், ஸ்வாரஸ்யம் இவற்றை எப்படி நுழைப்பது? அது கவிதா தேவியின் கிருபையால் தானே வரும்?

ப்ராயோ ஜடா மத்ஸரிணஶ்ச லோகா **தோ**ஷோத்தரம் ம்ருக்யகுணம் வசோ ந: ।
குணைகலுப்**தோ**ऽபி ஜந: க்வசித்ஸ்யாத் இத்யாஶயைவாயமியான் ப்ரயாஸ: ।। 76

''வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம்'' இத்யாமநந்தோ நிகமா: ஸகர்வம் ।
ஶ்வாந: க்ருதா யேந ஸ ஏவ **தே**வோ வர்ண்ய: கதம் வாங்மநஸாதிவர்த்தீ ।। 77

ஶப்**தே**ஷு சார்த்**தே**ஷு பரம் யதிஷ்யே ததா ததா மாம் குரவோ விநிந்யு: ।
சமத்க்ருதிம் தத்ர கதம் நிதாஸ்யே ந மத்க்ருதிர்யத் க்ரமதே ததம்ஶே ।। 78

க்வாஹம் க்வ காவ்யம் கவிராஜஸாத்யம் க்வாஹம் க்வ ஶம்புர்நிகமைரகம்ய: ।
நிஶ்ஶங்கமேவம்விதபி ப்ரவர்த்தே நிர்லஜ்ஜதே **தே**வி தவ ப்ரஸாதாத் ।। 79

தத்தே த்வயா வாங்மயரத்நகோஶே விக்ரீய புக்தம் கில புக்தமேவ ।
ஶிஷ்டம் த்வதங்க்ர்யோ: புநரர்பயேயம் தயஸ்வ மீநாக்ஷி ! புரைவ மஹ்யம் ।। 80

ஶப்தா யத்வதநம் ப்ரபத்ய ம்ருதுதாமாஶாஸதேऽந்யாத்ருஶீம்
அர்த்தா யத்திஷணாப்ரவாஹபதநாதிச்சந்தி ஜிஞாஸ்யதாம் ।
யத்கீர்த்திஸ்ப்ருஹயா ஶிவோऽபி நிகமான் க்ரந்தாதி ஸர்காதிஷு
ப்ராசஸ்தான் கவிதாபிதாமஹ பதாரூடான் கவீன் ப்ரஸ்தும: ।। 81

இதி மஹாகவிஸ்ரீநீலகண்டதீக்ஷிதப்ரணீதே ஶிவலீலார்ணவே ப்ரதம: ஸர்க: ।

---

79 நான் எங்கே? கவிச்சக்கிரவர்த்திகளுக்கே உரியதான கவிதை எங்கே? வேதங்களுக்கே அகப்படாத பரமேச்வரன் சம்பு எங்கே? நன்றாகத் தெரிகிறது என் தகுதியற்ற நிலை. ஆனாலும் தேவி உன்னுடைய கிருபையினால் வெட்கத்தை விட்டு இந்த முயற்சியில் இறங்குகின்றேன்.

80 அம்மா! மீனாக்ஷி! நீ பரமகிருபையினால், வாக்கு என்ற ரத்தினங்கள் நிறைந்த பொக்கிஷத்தை அளித்தாய். அதை வீணுக்கு விலை பேசி விற்று சாப்பிட்டு விட்டேன். போனது போனது தான். மிஞ்சிய வாக் ரத்தினங்களை அலங்காரமாக அர்ப்பணம் செய்கிறேன். முன்பு போல் தயை புரிய வேண்டும்.

81 என்னுடைய பாட்டனார் **அப்பய்ய தீக்ஷிதர்**, குலத்றகே முன்னோர் என்பதினால் மட்டுமில்லாமல், என்னுடைய கவிதைகளுக்கும் பாட்டானார். பன்னிரண்டு வயதில் எனக்கு ரகுவம்சத்தை அளித்து ஆசீர்வதித்த அந்த மஹான் என் கவிதையின் பிதாமஹர். மிகவும் ஆழ்ந்த கருத்துக்களைச் சுமக்கின்ற சொற்கள் அவர்களுடைய திருவாயிலிருந்து மலரும்போது தனிப்பட்ட மென்மையை அடைகின்றன. அவர்களுடைய நிகரற்ற மதிவிலாஸத்தினால் அந்த அர்த்தவிசேஷங்களைப் பற்றி அறியும் பொருட்டு ஆர்வத்தைத் தூண்டுகின்றன. பின் வரும் ஸர்கங்களில் பரமேச்வரன் கூட என் பாட்டனாரின் புகழை எட்டிவிடுவானென்று வேதமஹிமையுள்ள சொற்கள் காவியத்தில் ஏறியிருக்கின்றன. அவைகளை நினைவு கூறுவோம்.

**முதல் ஸர்கம் முடிவடைந்தது**

## द्वितीयः सर्गः

अस्ति क्षितेराभरणायमानः पारेसमुद्रं स हि पाण्ड्यदेशः ।
आशामगस्त्याध्युषितां गतोऽपि सर्वोत्तरो यो जगति प्रतीतः ॥ १
आस्थाय वैराग्यमनुत्तमं यः त्रैलोक्यलक्ष्मीं न तृणाय मेने ।
यदाधिपत्यस्पृहया स एव देवः दधे सुन्दरपाण्ड्यरूपम् ॥ २
सुदुष्करं यत्प्रतिसर्गमेव पश्यन्मुनिः प्राग्विरराम सर्गात् ।
न शुष्कया सान्त्वगिरा सुराणां किं गाधिसूनोरपि शान्तिरस्ति ॥ ३
मन्दानिलोऽसौ मलयानिलोऽसौ गन्धानिलोऽसाविति यं युवानः ।
संभावयन्ते चलितैः शिरोभिः कोऽपि यत्कोणभवः समीरः ॥ ४
आकारिता यत्र मखेषु विप्रैः आलोकयन्तो विबुधाः समृद्धिम् ।
युष्मान्यजामो वयमर्पयध्वे युष्मत्पदं चेदिति सान्त्वयन्ते ॥ ५
तपोवनेऽन्यत्र तपश्चरन्तो दिवं भजन्ते यदि युक्तमेतत् ।
ततोऽधिके यत्र तपस्यतां हि तत्रैव युक्तः सुचिरं निवासः ॥ ६
मृत्पिण्डरूपो जनको यदीयः पितामहो यस्य कुलाल एव ।
स कुम्भजन्माजनि सूत्रकारः कोणे वसत्क्वापि चिरं यदीये ॥ ७

---

## இரண்டாவது ஸர்கம்

82பூமிதேவிக்கே நெற்றித்திலகம்போல ஆபரணமாக கடல் வரை விரிந்து விளங்குகிறது பாண்டிய நாடு, அகத்தியர் தேர்ந்தெடுத்து வாழ்ந்தது தென்திசையில்தான் ஆயினும் எல்லா நகரங்களைக் காட்டிலும் உயர்ந்தது. (உத்தர என்பது வட.திசையை மட்டும் அல்லாமல், உயர்ந்தது என்பதையும் கூறும்) அப்படி உலகில் புகழ் பெற்றதாக இருக்கிறது. 1

83 பரமேச்வரன் உலகில் சிறிது கூட பற்றில்லாதவர். மூவுலக ஆட்சியையும் புல்லாகக்கூட மதியாமல் உதரியவர்தான். ஆனால் பாண்டிய நாட்டை ஆளவேண்டும் என்கிற விருப்பத்தினால் ஸுந்தரபாண்டியன் என்று வடிவம் எடுத்தாரே! 2

84 ப்ரஹ்ம ஸ்ருஷ்டிக்கு எதிராக புது உலகைப் படைப்பேன் என்று முனைந்தார் விச்வாமித்திரர். எல்லாவற்றையும் படைத்து விடலாம். ஆனால் பாண்டிய நாட்டை அதன் பெருமையுடன் படைக்க முடியாதுபோல இருக்கிறதே என்று கண்டு கொண்டு,எதிர் படைப்பை கைவிட்டாரே தவிர, தேவர்களின் பிரார்த்தனையைக் கேட்டு அவர் சமாதானம் அடைந்து விடுவாரா என்ன? 3

## அத த்விதீய: ஸர்க: ।

அஸ்தி க்ஷிதேராபரணாயமாந: பாரேஸமுத்ரம் ஸ ஹி பாண்ட்யதேஶ: ।
ஆஶாம் அகஸ்த்யாத்யுஷிதாம் கதோऽபி ஸர்வோத்தரோ யோ ஜகதி ப்ரதீத: ॥ 1

ஆஸ்தாய வைராக்யமநுத்தமம் யஸ்த்ரைலோக்யலக்ஷ்மீம் ந த்ருணாய மேநே ।
யதாதிபத்யஸ்ப்ருஹயா ஸ ஏவ தேவோ ததே ஸுந்தரபாண்ட்யரூபம் ॥ 2

ஸுதுஷ்கரம் யத்ப்ரதிஸர்கமேவ பஶ்யன் முநி: ப்ராக் விரராம ஸர்காத் ।
ந ஶுஷ்கயா ஸாந்த்வகிரா ஸுராணாம் கிம் காதிஸூநோரபி ஶாந்திரஸ்தி ॥3

மந்தாநிலோऽஸௌ மலயாநிலோऽஸௌ கந்தாநிலோऽஸௌ இதியம் யுவாந: ।
ஸம்பாவயந்தே சலிதை: ஶிரோபி: ஸ கோऽபி யத்கோணபவ: ஸமீர: ॥ 4

ஆகாரிதா யத்ர மகேஷு விப்ரை: ஆலோகயந்தோ விபுதா: ஸம்ருத்திம் ।
யுஷ்மான் யஜாமோ வயமர்பயத்வே யுஷ்மத்பதம் சேதிதி ஸாந்த்வயந்தே ॥ 5

தபோவநேऽந்யத்ர தபஶ்சரந்தோ திவம் பஜந்தே யதி யுக்தமேதத் ।
ததோऽதிகே யத்ர தபஸ்யதாம் ஹி தத்ரைவ யுக்த: ஸுசிரம் நிவாஸ: ॥ 6

ம்ருத்பிண்டரூபோ ஜநகோ யதீய: பிதாமஹோ யஸ்ய குலால ஏவ ।
ஸ கும்பஜந்மாஜநி ஸூத்ரகார: கோணே வஸன் க்வாபி சிரம் யதீயே ॥ 7

---

85 ஆஹா! என்ன மெல்லிய காற்று! மலய மலையில் உண்டானதல்லவா? சந்தனமரங்கள் நிறைந்ததல்லவா? என்ன நறுமணம் என்று தலையை ஆட்டி ஆட்டி கொண்டாடுகிறார்களே வாலிபர்கள்? அந்தக் காற்று எங்கிருந்து வீசுகிறது? அது பாண்டிய நாட்டின் மூலையிலிருந்தல்லவா!! 4

86 யாகத்தில் ஹவிர்பாகம் கொடுப்பதற்காக தேவர்களை அழைத்தார்கள் யாகதீக்ஷிதர்கள். தேவர்கள் அவர்களுடைய செழுமையையும் செல்வாக்கையும் பார்த்தார்கள். அவர்கள் கூறுகிறார்கள் 'அஹோ தீக்ஷித மஹா பாக்யசாலிகளே, உங்களுக்கு தேவர்களாகிய நாங்கள் யாகம் செய்கிறோம். உங்கள் ஸ்தானங்களை எங்களுக்கு விட்டுக் கொடுங்களேன்' என்று பேரம் பேசுகிறார்கள். 5

87 வேறு எங்கேயாவது தவம் செய்கிறவர்கள் வேண்டுமென்றால் ஸ்வர்கத்திற்கு போகட்டும். ஸ்வர்கத்தைக் காட்டிலும் அதிக ஸுகம் அளிக்கின்ற பாண்டிய தேசத்தில் தவம் செய்பவர்கள் அங்கேயே வெகு நாட்கள் வாழ்வதுதான் தவத்தின் பயனாகும். 6

88 பாண்டிய நாட்டின் மண்ணின் பெருமையை என்னென்பது? பாண்டிய நாட்டு மண்ணைப் பிசைந்து படைத்த குலத்தில் பிறந்தவர்தான் அகத்தியர். அந்த குடத்தைப் படைத்த சாதாரண குயவன் அகத்தியருக்குப் பாட்டனார். அந்த அகத்தியர் அங்கேயே ஒரு மூலையில் உட்கார்ந்து (தமிழிற்கு) சூத்திரங்கள் (தொல்காப்பியம்) எழுதிவிட்டார். வேறென்ன சொல்ல? 7

सौभाग्यलक्ष्मीं नवचन्दनानां मन्दानिलानामपि मौक्तिकानाम् ।
अयातयामाभिनिर्विशन्ति प्रायेण कौमारहरा यदीयाः ॥ ८

यत्रोभयानुच्चतरान् रसालान् आलक्ष्य विन्ध्यस्मयभङ्गदक्षान् ।
तपस्यति न्यस्तभरः सुखेन तेष्वेव मैत्रावरुणिर्महर्षिः ॥ ९

उपत्यकामण्डलनिर्विशेषे देशे हि यस्मिन्मलयाचलस्य
उदेति मन्दं व्यजनानिलोऽपि चमत्कृतश्चन्दनसौरभेण ॥ १०

पदे पदे चन्दनकाननस्थैः फणाधरैर्यत्र निपीयमानः ।
जातः प्रभूतोऽपि बहिः प्रसर्पन् मन्दः किलैवं मलयानिलोऽभूत् ॥ ११

मन्दानिलं मन्मथमूलकन्दं यत्रोपयोक्तुं मुनयस्त्रसन्तः ।
वैयाघ्रचर्मव्यजनोपजातैः वातैर्व्रतं केचन वर्तयन्ते ॥ १२

अयत्नलभ्यं रथमद्भुतानि शरासकाण्डानि शरानसङ्ख्यान् ।
यत्रैव पश्यञ्जगदेकवीरः स्थिरं मनोजः शिबिरं चकार ॥ १३

ताम्रातरङ्गानिलताडितासु माकन्दवाटीषु मनोजवीरे ।
यत्रावतीर्णे महता बलेन तद्बाहुगुप्तास्तरुणा रमन्ते ॥ १४

वर्षोपला यत्र हि मौक्तिकानि काष्ठानि गन्धद्रुमकाण्डखण्डाः ।
कस्तेन विस्पर्धितमुत्सहेत देशः शिलाकण्टकपूरितोऽन्यः ॥ १५

---

*89 பாண்டிய நாட்டுப் பெண்மணிகள், ஆண்களின் மிடுக்கைக் களவாடுகின்ற, பழையதல்லாத அன்றன்று புதிதான சந்தன விழுதுகளையும், அன்றன்று சிப்பிலியிருந்துவெளிவந்த முத்துக்களையும், மெல்லிய பூங்காற்றையும் விடாது அனுபவிக்கிறார்கள். 8*

*90 வடக்கே விந்தியமலைக்கப்பால் இரண்டு வகையான மா மரங்கள். அவற்றின் இனிமையைத் தோற்கடிக்கின்ற மாம்பழங்கள் பாண்டிய தேசத்தில் உண்டு. மைத்ராவருணியான அகத்தியர் தன் பொறுப்புகளை இறக்கிவிட்டு, ஸௌக்யமாக விந்திய மலையின் செருக்கை அடக்கி பாண்டிய நாட்டில் தவம் செய்து வருகிறார். 9*

*91 மலையமலையின் தாழ்வாரம் போன்ற நாடு பாண்டிய நாடு. அங்கு சாதாரண பனஓலையை விசிறிக் கொண்டாலும் சந்தன வாஸனை வீசும்.10*

*92 பாண்டிய நாட்டில் ஆங்காங்கே நெருக்கமாகச் சந்தனமரக்காடுகள். அவற்றிருந்து பெரும் காற்று வீசுவதுண்டு. ஆனால் அங்குள்ள புற்றுகளில் வாழ்கின்ற மஹா நாகங்கள் பெரும் காற்றைக் குடித்து விடுகின்றன. அதனால் நாட்டிற்கு வரும் காற்று மெல்லியதாக இருக்கிறது. 11*

ஸௌபாக்யலக்ஷ்மீம் நவசந்தநாநாம் மந்தாநிலாநாமபி மௌக்திகாநாம் ।
அயாதயாமாம் அபிநிர்விஶந்தி ப்ராயேக கௌமாரஹரா யதீயா: ॥ 8
யத்ரோபயாநுச்சதரான் ரஸாலாநாலக்ஷ்ய விந்த்யஸ்மயபங்கதக்ஷான் ।
தபஸ்யதி ந்யஸ்தபர: ஸுகேந தேஷ்வேவ மைத்ராவருணிர்மஹர்ஷி: ॥ 9
உபத்யகாமண்டலநிர்விஶேஷே தேஶே ஹி யஸ்மின் மலயாசலஸ்ய ।
உதேதி மந்தம் வ்யஜநாநிலோऽபி சமத்க்ருதஶ்சந்தநஸௌரபேண ॥ 10
பதேபதே சந்தநகாநநஸ்தை: பணாதரைர்யத்ர நிபீயமாந: ।
ஜாத: ப்ரபூதோऽபி பஹி: ப்ரஸர்பன் மந்த: கிலைவம் மலயாநிலோऽபூத் ॥ 11
மந்தாநிலம் மந்மதமூலகந்தம் யத்ரோபயோக்தும் முநயஸ்த்ரஸந்த: ।
வையாக்ரசர்மவ்யஜநோபஜாதைர் வாதைர்வ்ரதம் கேசந வர்தயந்தே ॥ 12
அயத்நலப்யம் ரதமத்புதாநி ஶராஸகாண்டாநி ஶராநஸங்க்யான் ।
யத்ரைவ பஶ்யஞ்ஜகதேகவீர: ஸ்திரம் மநோஜ: ஶிபிரம் சகார ॥ 13
தாம்ராதரங்காநிலதாடிதாஸு மாகந்தவாடீஷு மநோஜவீரே ।
யத்ராவதீர்ணே மஹதா பலேந தத்பாஹுகுப்தாஸ்தருணா ரமந்தே ॥ 14
வர்ஷோபலா யத்ர ஹி மௌக்திகாநி காஷ்டாநி கந்தத்ருமகாண்டகண்டா: ।
கஸ்தேந விஸ்பர்திதும் உத்ஸஹேத தேஶ: ஶிலாகண்டகபூரிதோऽந்ய: ॥ 15

---

*93 அங்கு தவம் செய்கின்ற முனிவர்களின் மூக்கை இந்த சந்தனக் காற்று துளைக்கின்றது. மன்மத வேகத்தைக் கிளப்பிவிடுமோ என்ற பயத்தினால் சிலர் புலித்தோல் விசிறியை உபயோகித்து அந்தக் காற்றை விலக்கி, தங்கள் ப்ரஹ்மசர்யத்தைக் காப்பாற்றிக் கொள்கிறார்கள். 12*

*94மன்மதனுக்கு ரதம் இனிய காற்று. அது எளிதாக இங்கே கிடைக்கிறது. வில்லுக்கு வேண்டிய கரும்புகளும் இங்கே விளைகின்றன. மலரம்புகளும் ஸரளமாகக் கிடைக்கின்றன. ஆகவே உலகமனைத்தையும் வெற்றிகொள்கிற மன்மதன் பாண்டிய நாட்டிலேயே தங்கிவிட்டான். 13*

*95 தாமிரபரணி நதியின் குளிர்ந்த அலைக்காற்று வீசுகிற மாஞ்சோலைகளில் மன்மதன் தன் படையுடன் முகாமிட்டு விட்டான் என்ற தைரியத்தில் இளைஞர்கள் இங்கே கொம்மாளம் போடுகின்றார்கள். 14*

*96 பாண்டிய நாட்டில் ஆலங்கட்டி மழை பெய்தால். அத்தனை சொட்டுக்களும் முத்துக்கள். அவசரமாக அடுப்பு எரிப்பதற்கு விறகு தேட வேண்டாம். ஒரு சந்தனமரக்கிளையை ஒடித்தால் விறகு இப்படிப்பட்ட பாண்டிய நாட்டோடு வேறெந்த நாடுதான் செழிப்பில் போட்டி போட முடியும்?முள்ளும் கல்லும் நிறைந்தவை தானே அவை. 15*

स्वर्गं नवं स्रष्टुमना मुनिः प्राक्ससर्ज यत्संमुखदेश एव ।
तन्मारुतस्पन्दनमात्रतोऽपि स्वर्भोगभाग्यं सुलभं विजानन् ॥ १६

अन्या विशन्त्यः सरितः समुद्रं आपूरयन्ते जलजन्तुभिः स्वैः ।
रत्नापगा यत्र तु संपतन्ती रत्नाकरत्वं रमणस्य दत्ते ॥ १७

यत्सङ्गमादेव भवन्ति मुक्ताः सा जाह्नवी सर्वजनीनमेतत्
ततो विदुः दक्षिणजाह्नवीति तादृग्विधां यत्र हि ताम्रपर्णीम् ॥ १८

दत्ते सुतां स्वामिव यां समस्तैः अलंकृतां रत्नगणैरगस्त्यः ।
सरस्वते गोत्रमहत्तराय यतो गृहीता हरिणापि वेदाः ॥ १९

अभ्यापतन्तीमनुवासरं यां अगस्त्यगोत्रप्रभवेति सिन्धुः ।
विकीर्य पुष्पैरिव मौक्तिकौघैः प्रत्युद्व्रजन्प्रापयते किमन्तः ॥ २०

स्रातोमुखैरम्बुनिधिं प्रविष्टं स्वभावतः स्वादु यदीयमम्भः ।
निर्मथ्य लब्धं त्रिदशैः कदाचित् आस्वाद्यतेऽद्यापि सुधा सुधेति ॥ २१

क्षारोदकास्वादभवं विपाकं अपाकरिष्यन्निव कुभजन्मा ।
जहाति शैलं मलयं न जातु पातुं प्रकृत्या मधुरं यदम्भः ॥ २२

97 முன்பு விச்வாமித்திரமுனிவர் புதிய ஸ்வர்கத்தைப் படைக்கலாமென்று ஆரம்பித்து, அதை பாண்டிய நாட்டின் முன்னிலையிலே படைத்தார். ஏன் தெரியுமா? அவருக்குத் தெரியும். அந்த ஸ்வர்கத்தின் மீது பாண்டிய நாட்டு மலைய மாருதம் வீசினால் அதற்கு ஸ்வர்கத்தின் பெருமை வந்துவிடும் என்று. 16

98 மற்ற நதிகள் கடலில் கலக்கும்பொழுது, தம்மிடமுள்ள மீன் ஆமை முதலியவற்றைக் கடலில் கொண்டுசேர்க்கின்றன. தாமிரபரணி ரத்தினங்களை உற்பத்தி செய்கின்ற நதி, கடல் கலக்கும் பொழுது தன் கணவனான கடலுக்கு ரத்நாகரம் என்ற புகழைச் சேர்த்துவிட்டது. 17

99 காசியில், கங்கை வாரணா நதியிருந்து அஸி நதிவரை தெற்கு முகமாக ஓடுகிறது. அதனால் தக்ஷிணவாஹிநீ கங்கா என்று புகழ். அதில் ஸ்நாநம் செய்பவர்கள் முக்தர்கள் ஆகிறார்கள். தாமிரபரணி நதியும் தக்ஷிணவாஹனீ, அதில் முத்துக்கள் உண்டாகின்றன என்ற புகழ் முன்பே உண்டு. இங்கு கவி ''யத் ஸங்கமாதேவ பவந்தி முக்தா:'' என்ற வாக்கியத்தைச் சிலேடையில் அமைத்துள்ளார். முக்தா: என்பதற்கு மோக்ஷம் அடைந்தவர்கள் என்றும், முத்துக்கள் என்றும் இரு பொருள்கள். கங்கையில் மூழ்கியவர்களுக்கு மோக்ஷம். தாமிரபரணியில் மூழ்கியவர்களுக்கு முத்துக்கள். ஆகவே தாமிரபரணி தக்ஷிண கங்கை என்னும் புகழைப் பெற்றாள். 18

100 தாமிரபரணி என்ற நதியை தன் பெண்ணாக பாவித்து, காப்பாற்றி, அகத்தியர் அவளை ஸகல ரத்தினங்களாலும் அலங்கரித்து, கோத்திரத்தில்

ஸ்வர்கம் நவம் ஸ்ரஷ்டுமநா முநி: ப்ராக் ஸஸர்ஜ யத்ஸம்முகதேஶ ஏவ ।
தந்மாருதஸ்பந்தநமாத்ரதோऽபி ஸ்வர்போகபாக்யம் ஸுலபம் விஜாநன் ॥ 16

அந்யா விஶந்த்ய: ஸரித: ஸமுத்ரம் ஆபூரயந்தே ஜலஜந்துபி: ஸ்வை: ।
ரத்நாபகா யத்ர து ஸம்பதந்தீ ரத்நாகரத்வம் ரமணஸ்ய தத்தே ॥ 17

யத்ஸங்கமாதேவ பவந்தி முக்தா: ஸா ஜாஹ்நவீ ஸர்வஜநீநமேதத் ।
ததோ விதுர்தக்ஷிணஜாஹ்நவீதி தாத்ருக்விதாம் யத்ர ஹி தாம்ரபர்ணீம் ॥ 18

தத்தே ஸுதாம் ஸ்வாமிவ யாம் ஸமஸ்தைரலங்க்ருதாம் ரத்நகணை: அகஸ்த்ய: ।
ஸரஸ்வதே கோத்ரைமஹத்தராய யதோ க்ருஹீதா ஹரிணாபி வேதா:॥ 19

அப்யாபதந்தீம் அநுவாஸரம் யாம் அகஸ்த்யகோத்ரப்ரபவேதி ஸிந்து: ।
விகீர்ய புஷ்பைரிவ மௌக்திகௌகை: ப்ரத்யுத்வ்ரஜன் ப்ராபயதே கிமந்த: ॥ 20

ஸ்ரோதோமுகை: அம்புநிதிம் ப்ரவிஷ்டம் ஸ்வபாவத: ஸ்வாது யதீயமம்ப: ।
நிர்மத்ய லப்தம் த்ரிதஶை: கதாசித் ஆஸ்வாத்யதேऽத்யாபி ஸுதா ஸுதேதி ॥ 21

க்ஷாரோதகாஸ்வாதபவம் விபாகம் அபாகரிஷ்யந்நிவ கும்பஜந்மா ।
ஜஹாதி ஶைலம் மலயம் ந ஜாது பாதும் ப்ரக்ருத்யா மதுரம் யதம்ப: ॥ 22

---

உயர்ந்தவனுக்கு கொடுத்தது உசிதம்தான்.நதிகளைக் கொள்பவன் ஸரஸ்வான்-கடல் எப்படி கோத்ரமஹத்தரன்? ஸாரஸ்வதன் என்றால் ஸகல வித்யைகளையும் கற்றவன். அதனால் பரம்பரை மதிப்புப் பெற்றவன். ''ஸரஸ்வானிவ ஸரஸ்வான்'' கடல் கோத்ரமஹத்தரன். இசுஷ்வாகு வம்சத்து ஸகரனுடைய புத்ரர்களால் வெட்டப்பட்டதால் கடலுக்கு ஸாகரம் என்றும் பெயர். ஸாகரத்தின் ஆழத்திருந்து வேதங்களைத் தானே மத்ஸ்யாவதாரம் எடுத்து வெளிக் கொண்டுவந்தார் ஹரி. 19

101 தாமிரபரணி அகஸ்த்ய கோத்திரத்தில் பிறவி எடுத்த சிறப்புடையவள் அல்லவா? அவள் தினந்தோரும் கணவனை நோக்கி ஓடிவருகிறாள். அவளைத் தமது அலைகளில் நல்முத்துக்களைக் கலந்து, அலைகளை வாரி இறைத்து, கணவனாகிய கடல் வரவேற்கிறான். தன்னிடத்தில் அமர்த்திக் கொள்கிறான். 20

102 தாமிரபரணி தன்னுடைய அமுத நீர்ப் பெருக்கை, இயற்கையிலேயே இனியதை கடலில் கொண்டு சேர்க்கிறாள். அதைத்தான் தேவர்கள் மிகவும் பாடுபட்டுக் கடைந்து எடுத்து அமுதம், அமுதம் என்று, இன்றும் நாக்கு ருசிக்கப் பருகுகிறார்கள். 21

103 தவறுதலாக அகத்தியர் ஒரு தடவை கடல் நீரை ஆசமனீயம் செய்து விட்டார். அதனுடைய உவர்ப்பு நாக்கை விட்டு நீங்கவில்லை. அதனால் அவர் தாமிரபரணியின் மதுரமான நீரை அருந்தி, உவர்ப்பை நீக்கிக் கொள்வதற்காக, தாம்ரபரணியின் உற்பத்தி ஸ்தானமாகிய மலயமலையைவிட்டு அகலுவதே இல்லை. 22

यां सर्वरत्नैकखनिं विहाय गङ्गामधात्केन गुणेन शंभुः ।
का प्रीतिरर्के सति कैतकेऽपि न हीश्वराः पर्यनुयोज्यशीलाः ॥ २३

वैडूर्यनीलोत्पलमौक्तिकानि यदादिमध्यान्तसमुद्भवानि ।
सा ताम्रपर्णी सरिदेव यत्र साधारणी काचन सारणीव ॥ २४

तस्मिन्विशाले तरुणेन्दु मौलेः आवासभूतं पदद्भुतानाम् ।
वनं जगत्पावनमस्ति किंचिन्नीपद्रुमाणां निकषा वृषाद्रिम् ॥ २५

अज्ञाततिग्मांशुकरावमर्शा छाया यदीया तमसां विहन्त्री ।
वातेरितं पुष्परजो यदीयं निःशेषमुन्माष्टि रजः प्रजानाम् ॥ २६

अन्तर्निलीनैर्भ्रमरैः प्रसूनैःआभाति यत्बद्धरजोभिरीषत् ।
सत्त्वेन निर्जित्य रजस्तमश्च संमूर्छितेनेव समन्ततोऽपि ॥ २७

यत्राभिषिञ्चन्ति मधु क्षरन्तो वृक्षा भुवं मूर्तिमिवाष्टमूर्तेः ।
झंकुर्वते कर्णरसायनानि सामानि गायन्त इव द्विरेफाः ॥ २८

104 இப்படி எல்லாம் தாமிரபரணியை வர்ணித்துக் கொண்டே போவதைக் கேட்ட ஒரு பெரியவர், தீக்ஷிதரை இடைமறுத்துக் கேட்டார்,

''ஏனய்யா, தாமிரபரணியை ஓஹோ என்று புகழ்கிறீர்? எல்லா ரத்தினங்களும் அதில்தான் சுரங்கத்தில் உள்ளன என்கிறீர் அத்தகைய பெருமை அதற்கு இருந்தால், அதை விட்டு விட்டு ஏனய்யா கங்கையை, என்ன பெருமை கண்டு, சிவபெருமான் ஓயாமல் தாங்குகிறார்?''

தீக்ஷிதர் சொன்னார் 'கேட்டீரே ஒரு நல்ல கேள்வி, இப்படி வாரும். உமக்கு பதில் சொல்கிறேன். நீர் என்ன சொல்கிறீர்? கங்கையில் ஏதோ பெருமை உள்ளது. அந்தக் காரணத்தினால்தான் அதை தாங்குகிறார். அவர் அதை தலையில் தாங்கவேண்டும் என்றால் ஏதாவது பெருமை இருக்க வேண்டும் என்று நினைக்கிறீரே. அதுதான் தவறு. நறுமணம் மிகுந்த தாழம்பூ கம் என்று மணக்கும் பொழுது, அதை விட்டு விட்டு, எருக்கம் பூவில் என்ன மணம் கண்டு,அதை தலையில் தரிக்கிறார்? சொல்லுமே! 'அது வந்து வந்து' என்று குழம்புகிறார் பெரியவர்.

தீக்ஷிதர் சொன்னார்-' அவர் பரமேச்வரனய்யா! ஏதாவது தோன்றியதைச் செய்வார். அதற்கு காரண காரியம் கற்பிக்கக்கூடாது. அவர் ஏன் இப்படி இருக்கிறார் என்று கேட்கவும் கூடாது. சென்று வாரும்' என்று பெரியவரை அனுப்பினார். 23

105தாமிரபரணிநதியின் உற்பத்தி இடத்தில் வைடூர்யமும், நடுப் பகுதியில் நீல ரத்தினக் கற்களும், கடலுடன் ஸங்கமமாகும் பகுதியில் முத்துக்களும்

யாம் ஸர்வரத்நைககநிம் விஹாய கங்காமதாத் கேந குணேந ஶம்பு: ।
கா ப்ரீதிரர்க்கே ஸதி கைதகேऽபி ந ஹீஶ்வரா: பர்யநுயோஜ்யஶீலா: ॥ 23

வைடூர்யநீலோத்பலமௌக்திகாநி யதாதிமத்யாந்தஸமுத்பவாநி ।
ஸா தாம்ரபர்ணீ ஸரிதேவ யத்ர ஸாதாரணீ காசந ஸாரணீவ ॥ 24

தஸ்மின் விஶாலே தருணேந்துமௌலே: ஆவாஸபூதம் பதமத்புதாநாம் ।
வநம் ஜகத்பாவநமஸ்தி கிஞ்சிந்நீபத்ருமாணாம் நிகஷா வ்ருஷாத்ரிம் ॥ 25

அஜ்ஞாததிக்மாம்ஶுகராவமர்ஶா சாயா யதீயா தமஸாம் விஹந்த்ரீ ।
வாதேரிதம் புஷ்பரஜோ யதீயம் நிஶ்ஶேஷமுந்மார்ஷ்டி ரஜ: ப்ரஜாநாம் ॥ 26

அந்தர்நிலீநப்ரமரை: ப்ரஸூநை: ஆபாதி யத்பத்தரஜோபிரீஷத் ।
ஸத்வேந நிர்ஜித்ய ரஜாஸ்தமஶ்ச ஸம்மூர்ச்சிதேநேவ ஸமந்ததோऽபி ॥ 27

யத்ராபிஷிஞ்சாந்தி மது க்ஷரந்தோ வ்ருக்ஷா புவம் மூர்த்திமிவாஷ்டமூர்த்தே: ।
ஜங்குர்வதே கர்ணரஸாயநாநி ஸாமாநி காயந்த இவ த்விரேபா: ॥ 28

---

*உண்டாகின்றன. அப்படிப்பட்ட தாமிரபரணி ஸாதாரண ஒரு சிறிய நதியாகவே சொல்லப்படுகிறது என்றால் பாண்டிய நாட்டின் பெருமை எவ்வளவு? 24*

*106அந்த பாண்டிய நாட்டில் எருது மலைக்கருகே, நீப மரங்களுக்கிடையே, அற்புதங்களுக்கெல்லாம் அற்புதமான விசாலமான வனம் உண்டு. அது இருப்பதால்தான் பூமியே பாவனமாகிறது. அதுதான் சந்திரனை சிரஸில் தரித்த பரமேச்வரரின் உல்லாஸ ஸ்தானமாக உள்ளது. 25*

*107 அந்த வனத்தில் வெயில் தெரியாது. நிழல்தான் ஆனால் இருட்டு அண்டாது. மகரந்தத் தூள்களைத் தாங்கி வரும் இனிய காற்று, மக்களின் மீது புழுதியை விலக்கி நறுமணத்தைப் பரப்புகிறது. காற்றின் குணம் புழுதியை வாரி இறைப்பதுதானே என்றால், அப்படி அல்ல. மக்களின் ரஜோ குணத்தை- வழி தவறி நடக்கும் போக்கை- வெளியேற்றுகிறது. 26*

*108காற்று வீசி உடலில் பதிந்த மகரந்த தூசிகளுடனும், மதுவுண்டு உள்ளே மயங்கி இருக்கின்ற வண்டுகளுடன் கூடிய மலர்கள் நிறைந்த அந்த வனம், ரஜோகுணமும் தமோகுணமும் நீக்கப்பட்டு, நாற்புறமும் ஸத்துவகுணமே நிரம்பியுள்ளதுபோல் காட்சி அளிக்கின்றது. 27*

*109 மரங்களெல்லாம் பரமேச்வரனின் எட்டு உருவங்களில் ஒன்றான பூமியை, தமது மலர்களில் உள்ள தேனால் அபிஷேகம் செய்கின்றன. அந்த அபிஷேகத்திற்கு மலர்களில் உள்ள வண்டுகள் தங்களுடைய ரீங்காரத்தினால் ஸாமகானம் செய்வதுபோல் காணப்படுகின்றன போலும்! 28*

*110 அந்த வனத்தில் முனிவர்களே மரங்களாக முனைத்து தவம் செய்கின்றார்கள். அம்மரங்களின் அப்பழுக்கற்ற பிறைச்சந்திரன்போன்ற*

वक्राणि यस्मिन्मुनिपादपानां आभान्ति पुष्पाण्यतिनिर्मलानि।
समाहृता मुक्तिजुषां प्रदातुं शशाङ्कखण्डा इव शंकरेण ॥ २९

संपूर्यमाणात्प्रतिपौर्णमासं शाखाग्रसंघट्ट नतोऽवधूतात्।
मृगांकबिम्बात् गलिता इवोर्व्याम् मृगाः शतं यत्र परिभ्रमन्ति ॥ ३०

प्रत्यर्थिनो यत्र महेश्वरस्य तत्तत्क्षणोदन्तविचारणाय।
चारा नियुक्ता इव मन्मथेन चरन्ति भृङ्गाः सममन्यपुष्टैः ॥ ३१

प्रागम्बया प्रमथाधिपेनापूयध्यासिते यत्र कदम्बमूले।
माकन्दजम्बूवटपादपानां मन्दाक्षमन्दानि कुलान्यभूवन् ॥ ३२

शाखासु शाखासु फलानि यत्र भातीव नाना परमार्थतस्तु।
सर्वागमानां फलमेकमेव संदृश्यते यत्र कदम्बमूले ॥ ३३

तृणीकृते यत्र वसद्भिरार्यैः चराचरेऽस्मिन्पशवश्चरन्ति।
वैकुण्ठवासोऽपि तृणीकृतस्तैः न चेत्कुतोऽसौ हरिणादृतः स्यात् ॥ ३४

पुष्पाय वृक्षाग्रपदाधिरूढान् पुत्रान्मुनीनामुपलालयन्तः।
व्याजेन देवास्तपसोऽभिसंधिं पृच्छन्ति नित्यं परिशङ्कमानाः ॥ ३५

---

மலர்கள் (பலாசமரப் பூக்கள்), பரமேச்வரன் அவர்களுக்கு முக்தி அளித்து, அவர்களைத் தாமாகவே ஆக்கிக் கொள்வதின் அடையாளமாக, அவர்கள் தலையில் சந்திரகலைகளை அணிவிக்கின்றன போலும்! 29

111 ஒவ்வொரு பூர்ணிமை இரவிலும், சந்திரன் ஸஞ்சாரம் செய்கின்ற வானவீதியளவு உயர்ந்திருக்கின்ற பாண்டிய நாட்டு மரங்களில் உராய்ந்து சந்திர கிரணங்கள் ஒட்டிக் கொள்கின்றன. சந்திரனில் ஒரு மான் இருக்கிறதாம். அதனால்தான் அவனுக்கு ம்ருகாங்கன் என்ற பெயர். அந்த மான்களின் பிரதி பிம்பங்களே அங்கே பூமியில் மான்களாக ஸஞ்சரிக்கின்றனவோ! 30

112 அந்த வனத்தில் வண்டுகளும் குயில்களும் அதிகமாக ஸஞ்சரிக்கின்றன, அவை யார் தெரியுமா? சங்கரனை ஜயித்துவிட வேண்டுமென்று கிளம்பியிருக்கிறானே மன்மதன். அவனுடைய உளவாளிகள். சிவன் ஒவ்வொரு கணமும் என்ன செய்கிறார் எப்போது அயரப்போகிறார் என்பதை உளவு பார்க்கிறார்கள். 31

113 மற்ற மரங்கள் முளைப்பதற்கு முன்பே உண்டான கதம்பமரத்தடியில், முதல் தேவியும், அதற்குப்பிறகு ப்ரமதகணங்களுடன் பரமேச்வரனும் அமர்ந்துவிட்டபடியால், பின் உண்டான மா, நாவல், ஆலம் முதலிய மரங்கள் எளிதாக வளர்ந்து விட்டாலும், கொஞ்சம் வெட்கத்துடன் நிமிர்ந்திருந்தன. 32

வக்ராணி யஸ்மிந் முநிபாதபாநாம் ஆபாதி புஷ்பாண்யதிநிர்மலாநி ।
ஸமாஹ்ருதா முக்திஜுஷாம் ப்ரதாதும் ஶஶாங்ககண்டா இவ ஶங்கரேண ॥ 29

ஸம்பூர்யமாணாத் ப்ரதிபௌர்ணமாஸம் ஶாகாக்ரஸங்கட்டநதோऽவதூதாத் ।
ம்ருகாங்கபிம்பாத் கலிதா இவோர்ஷ்யாம் ம்ருகா: ஶதம் யத்ர பரிப்ரமந்தி ॥ 30

ப்ரத்யர்திநோ யத்ர மஹேஶ்வரஸ்ய தத்தத்க்ஷணோதந்தவிசாரணாய ।
சாரா நியுக்தா இவ மந்மதேந சரந்தி ப்ருங்கா: ஸமமந்யபுஷ்டை: ॥ 31

ப்ராகம்பயா ப்ரமதாதிபேநாப்யத்யாஸிதே யத்ர கதம்பமூலே ।
மாகந்தஜம்பூவடபாதபாநாம் மந்தாக்ஷமந்தாநி குலாந்யபூவன் ॥ 32

ஶாகாஸு ஶாகாஸு பலாநி யத்ர பாந்தீவ நாநா பரமார்த்ததஸ்து ।
ஸர்வாகமாநாம் பலம்மேகமேவ ஸந்த்ருஶ்யதே யத்ர கதம்பமூலே ॥ 33

த்ருணீக்ருதே யத்ர வஸத்பிரார்யைஶ்சராசரேऽஸ்மின் பஶவஶ்சரந்தி ।
வைகுண்டவாஸோऽபி த்ருணீக்ருதஸ்தை: ந சேத் குதோऽஸௌ ஹரிணாத்ருத:ஸ்யாத் ॥ 34

புஷ்பாய வ்ருக்ஷாக்ரபதாவிரூடான் புத்ரான் முநீநாமுபலாலயந்த: ।
வ்யாஜேந தேவாஸ்தபஸோऽபிஸந்திம் ப்ருச்சந்தி நித்யம் பரிஶங்கமாநா: ॥ 35

---

114 வேதங்களில் பல சாகைகளில் (பிரிவுகளில்) தத்துவங்கள் வெவ்வேறுபோல நிரூபிக்கப்பட்டாலும், முடிவு ஒன்றுதான். பரப்ரஹ்மம் ஒன்றுதான். எப்படி ஸத்தியமோ, அதுபோல, அந்த கதம்பமரத்தின் கிளைகள் பலவற்றிலும் பழங்கள் தொங்கினாலும், உண்மையில் அவற்றின் ரஸம், ருசி ஒன்றுதான். அந்தப்பழம்தான் கதம்ப மரத்தின் அடியில் அமர்ந்துள்ள சிவபெருமான். 33

115 தீக்ஷிதர் இந்த ச்லோகத்தில் சொற்சிலம்பம் விளையாடுகிறார். அந்த கதம்ப வனத்தில் வசிப்பவர்கள் மஹான்கள், ஸுவர்லோகம், மனுஷ்யலோகம், ப்ரஹ்மலோகம் ஆகியவை உள்ள சராசரத்தை புல்லாக மதிக்கிறார்கள். அவர்களுக்கு வைகுண்டம்கூட புல்தரை. அதனால்தான் அது ஹரிணாத்ருதமாக இருக்கிறது. ஹரிணாத்ருதம் மான்கள் விரும்பி மேயுமிடம். ஹரிணா: ஆத்ருதம் -ஹரி-விஷ்ணு விரும்பி வசிக்கும் இடம் வைகுண்டம். 34

116 கதம்பவனத்தில் மரங்கள் வளர்ந்து ஸ்வர்கத்தை எட்டிவிட்டன. பூக்களைப் பறிப்பதற்காக முனிகுமாரர்கள் அந்த மரங்களின் உச்சிக் கிளைகளில் ஏறி விடுகிறார்கள். ஸ்வர்க வீதியில் போய்க்கொண்டிருந்த தேவர்களுக்கு அச்சம் நம்மோடு ரமிக்கின்ற அப்ஸரஸர்களுக்காக தவத்தின் மூலம் போட்டி போடுகிறாகளோ என்று கருதி, அவர்களை அணுகிக் கொஞ்சுவது போல் 'எதற்காக தவம் செய்கிறார்கள்' என்று கேட்டார்கள். 35

रोमाञ्चसान्द्रा इव कुड्मलौघैः उदश्रुपूर्णा इव शीथुवृष्ट्या ।
भस्मानुलिप्ता इव पुष्पधूल्या दृष्टवा मुनीन्यत्र भवन्ति नीपाः ॥ ३६
यस्मिन्महेशानकराश्रयेण केनापि कुल्येन कृतावलम्बाः ।
मृगा निरातङ्कलवाश्चारन्ति मृगादनैः प्रत्युत सेव्यमानाः ॥ ३७
व्याहन्यमाना मृगयासु यस्मिन् व्याघ्राः शिवत्वं प्रतिपद्य सद्यः ।
अस्मत्कुलीनोऽसि महानसीति हन्तॄन् किरातानुपसान्त्वयन्ते ॥ ३८
दृष्टेष्विवानुश्रविकेषु यस्मिन् धीरा वितृष्णा इति नाद्भुताय ।
स्वर्गाधिके धामनि संवसन्तः स्वर्ग्याणि कर्माणि किमाद्रियेरन् ॥ ३९
पाणौ मृगं पार्श्वतले किरातीं पर्यङ्कबन्धे च गजं महान्तम् ।
संमानयन्नेव चरत्यरण्ये पंचाननः कोऽप्यधुनापि यस्मिन् ॥ ४०
यद्वादशैकान्तविभावनीयं त्रयन्तदृश्यं कथमस्तु तन्नः ।
इत्यध्यवस्यैव तदावसन्ति ब्रह्मर्षयः पाशुपताः महान्तः ॥ ४१
वल्लयो यदीयाः कठवल्लिकाद्याः शाखाश्च माध्यन्दिनकाण्वमुखव्याः ।
सर्वागमस्तोममयस्य तस्य शक्नोति को वर्णयितुं प्रभावम् ॥ ४२

---

117 அங்குள்ள நீப மரங்கள்கூட தவம் செய்கின்றனபோலும்! தமது பூக்கவிருக்கும் மொட்டுக்களால் தாம் மெய்சிலிர்பதாகவும், சொட்டுகின்ற பனித்திவிலைகளால் ஆனந்தக் கண்ணீர் விடுவதாகவும், பூக்களின் மகரந்தப்பொடிகள் இலைகளின் மீது விழுவதினால், விபூதி பூசினாற் போலவும் தோன்றின. 36

118 மஹேசனுடைய கையில் ஒரு மான் விளையாடுகிறது. 'நம்மடவனை மஹேசன் கையில் ஏந்தி விட்டார்' என்று மான்கள் பயமின்றி சஞ்சரிப்பதைப் பார்த்து, மானை அடித்துத் தின்கிற சிங்கங்கள்கூட அங்கு மான்களை ஸேவிக்கின்றன. மான்கள் பயமின்றி குதூகலமாக விளையாடுகின்றன.37

119 கதம்ப வனத்தில் வேட்டையாடுகின்ற வேடர்களால் அடிபட்ட புலிகள் இறந்து, சிவஸ்வரூபத்தை அடைந்து விட்டன. புலி சிவனாகி நிற்பதைப் பார்த்து நடுங்குகின்றார்கள் வேடர்கள். அவர்களைப் பார்த்து அந்த சிவன்கள் -'நம் வேடுவ குலத்தைச் சேர்ந்தவர்கள் நீங்கள்' என்று அழைத்து உபசாரம் செய்கிறார்கள். 38

120 கதம்பவனத்தில் சஞ்சரிக்கின்ற மனிதர்கள் மகிழ்ச்சியுடனும், நிம்மதியுடனும் வாழ்ந்தார்கள் என்பது ஒன்றும் அதிசயமல்ல. ஆச்சரியப்படவேண்டியதும் அல்ல. ஸ்வர்கலோகத்தில் கிடைக்கக்கூடிய ஸுகபோகங்கள் எல்லாம் கதம்பவனத்தில் விரிந்து கிடந்தன ஸ்வர்கத்தைக்

ரோமாஞ்சஸாந்த்ரா இப குட்மலௌகை: உதஶ்ருபூர்ணா இவ ஶீதுவ்ருஷ்ட்யா ।
பஸ்மானுலிப்தா இவ புஷ்பதூல்யா த்ருஷ்ட்வா முநீன் யத்ர பவந்தி நீபா: ॥36

யஸ்மின் மஹேஶாநகராஶ்ரயேண கேநாபி குல்யேந க்ருதாவலம்பா: ।
ம்ருகா நிராதங்கலவாஶ்சரந்தி ம்ருகாதநை: ப்ரத்யுத ஸேவ்யமாநா: ॥ 37

வ்யாஹந்யமாநா ம்ருகயாஸு யஸ்மின் வ்யாக்ரா: ஶிவத்வம் ப்ரதிபத்ய ஸத்ய: ।
அஸ்மத்குலீநோऽஸி மஹாநஸீதி ஹந்த்ரூந்கிராதானுபஸாந்த்வயந்தே ॥ 38

த்ருஷ்டேஷு இவானுஶ்ரவிகேஷு யஸ்மிந் தீரா வித்ருஷ்ணா இதி நாத்புதாய ।
ஸ்வர்காதிகே தாமநி ஸம்வஸந்த: ஸ்வர்க்யாணி கர்மாணி கிமாத்ரியேரந் ॥ 39

பாணௌ ம்ருகம் பார்ஶ்வதலே கிராதீம் பர்யங்கபந்தே ச கஜம் மஹாந்தம் ।
ஸம்மாநயந்நேவ சரத்யரண்யே பஞ்சாநந: கோऽப்யதுநாபி யா மந் ॥ 40

யத் த்வாதஶாந்தைகவிபாவநீயம் த்ரய்யந்தத்ருஶ்யம் கதமஸ்து தந்ந: ।
இத்யத்யவஸ்யைவ ததாவஸந்தி ப்ரமர்ஷய: பாஶுபதா மஹாந்த: ॥ 41

வல்ல்யோ யதீயா: கடவல்லிகாத்யா: ஶாகாஶ்ச மாத்யந்திநகாண்வமுக்யா: ।
ஸர்வாகமஸ்தோமமயஸ்ய தஸ்ய ஶக்நோதி கோ வர்ணயிதும் ப்ரபாவம் ॥42

---

காட்டிலும் அதிக சுகமளிக்கின்ற இடத்தில் வசிக்கின்ற மக்கள், ஸ்வர்கத்தை அடையவேண்டி யாகம் முதலியவற்றைச் செய்வார்களா? 39

121 கதம்பவனத்தில் ஒரு வித்யாசமான சிங்கம் நடமாடுகின்றது. (பஞ்சானன: என்றால் அகன்ற முகத்தோடு கூடியது - சிங்கம், பஞ்சானன: என்றால் ஐந்து முகங்கள்,ஸத்யோஜாதாதி ஐந்து முகங்களோடு கூடியவர் சிவபெருமான்). அந்த சிங்கத்தின் கையில் மான் ஒன்று பயமின்றி விளையாடுகிறது. பக்கத்தில் ஒரு வேடுவச்சி (அம்பாள்) ஒய்யாரமாக அண்ணாந்து நிற்கிறாள். படுக்கை உருவிலே ஒரு யானை (வினாயகர்) படுத்திருக்கிறது. இவர்களை எல்லாம் கொஞ்சிக் கொண்டல்லவா அந்த சிங்கம் நடைபோடுகின்றது. 40

122 பன்னிரண்டாவதின் முடிவில் எந்த ப்ரஹ்மஸ்வரூபம், அறியப்பட முடியுமோ அது மூன்றின் முடிவில் அறிவிற்கு எட்டும் என்று, பாசுபத மதத்தைச் சேர்ந்த பெரிய ப்ருரஹ்மருஷிகள் அதை அறிய முயல்கிறார்கள். மூன்று வேதங்களின் கடைசி பகுதியான உபனிஷதங்களில் அந்த ப்ரஹ்மஸ்வருபம் விவரிக்கப்படுகின்றது. ஆகவே இங்கு ஏதோ விஷயம் இருக்கிறது என்று உணர்ந்து மஹான்கள் இங்கு வாழ்ந்தனர். 41

123 மூன்று வேதங்களில் இருப்பதுபோல கதம்ப ஆரண்யத்திலும்கூட வல்லிகளும் (கொடிகளும்) சாகைகளும், (பிறிவு, மரக்கிளைகள்) உள்ளன. கடவல்லி என்றும், மாத்யந்தின, காண்வசாகை என்றும் அவற்றிற்குப் பெயர் உண்டு. அகில வேதங்களே அவற்றின் வடிவமாகும்போது அதை யார்தான் வர்ணிக்க முடியும்.? 42

तस्मिन्कदम्बद्रुममूलसीम्नि तपःपरीपाककफलं जनानाम् ।
आस्ते जगन्मङ्गलमङ्गजारेः लिङ्गं दयाविग्रहवत्त्वलिङ्गम् ॥ ४३

यद्बृहितं वाग्भिरकृत्रिमाभिः यद्दृष्टुकामो मुनयो यतन्ते ।
नाम्ना रूपेण च सुन्दरं तत् प्रत्यक्षमास्ते प्रियकस्य मूले ॥ ४४

पाण्ड्यार्पिता भात्यधुनापि यस्मिन् ऋज्वायता वेत्रनिपातरेखा ।
नानारहस्यागमबाधनीयां नादात्मतामस्य विवृण्वतीव ॥ ५५

समस्तादिव्यागमसंप्रतीते तारात्मके तत्र महेशलिङ्गे ।
अर्धेन्दुरर्धेन्दुतयैव दृष्टो बिन्दुस्तु सिन्धु स्तिमिता जटाग्रे ॥ ४६

मूलं च मौलिं च विवेक्तुकामौ यस्याक्रमेतां विधिरच्युतश्च ।
तन्मूलमेतत्तरुमूलगम्यं तन्मौलिरेतत्तरुमौलिवेद्यः ॥ ४७

छन्नं प्रसूनैः स्नापितं मरन्दैः अलंकृतं भोगिभिरापतद्भिः ।
इत्थं स्वयं पूजितमस्ति नित्यं स्वायंभुवं सुन्दरनाथलिङ्गम् ॥ ४८

एकं किल ब्रह्म यदद्वितीयं वक्तुं चतस्रः श्रुतयोऽपि नालम् ।
तादृग्विधान्येव भजन्ति तस्य ब्रह्माणि पञ्चावयवत्वमुद्राम् ॥ ४९

---

124 அந்த கதம்ப மரத்தின் வேர் முடிவில் ஒரு லிங்கம் உள்ளது. மக்களின் தவங்களுக்கெல்லாம் பயனான தயை என்ற தத்துவத்தின் அடையாளமாக உருவெடுத்து வந்தது போன்றது. மன்மதனை முறியடித்த பரம மங்கள ஸ்வரூபமான லிங்கம். 43

125 செயற்கையல்லாததாக தானாகவே உதித்த வாக்குகளால் (வேதங்களினால்) குறிப்பிடப்படுவது எது என்பதைக் கண்டுவிட வேண்டுமென்று முனிவர்கள் முனைந்திருக்கிறார்களோ, அது ஸுந்தரம்,அழகான அது கதம்ப மரத்தடியில் ப்ரத்யக்ஷமாகியிருக்கிறது. அதற்குப் பெயரும் ஸுந்தரம். 44

126 அந்த லிங்கத்தில் இன்றும் பாண்டியனின் நீண்ட நேரான பிரம்பின் அடித்தழும்பு காணப்படுகின்றது. அதன் ரஹஸ்யம் என்னவென்று பல ஆகமங்கள் ஆராய்கின்றன. அந்த பிரம்படி எழுப்பிய ஓம் என்ற நாதம் இன்றும் காதில் விழுவதால் அந்தலிங்கம் ப்ரணவஸ்வரூபமே என்று விளங்குகிறது போலும்! 45

127 தெய்வாகமங்கள் அனைத்தும் ப்ரணவத்தின் (ஓம்) பிலவடிவத்தை இப்படி விளக்குகின்றன. (நாதவடிவத்தின் விளக்கமல்ல இது) இந்த அக்ஷரஸ்வரூபம் மஹேசனுடையது பிறைச்சந்திரன் தலை மேல் வளைவு.

தஸ்மிந் கதம்பத்ருமமூலஸீம்நி தப:பரீபாகபலம் ஜநாநாம் ।
ஆஸ்தே ஜகந்மங்களமங்கஜாரேர் லிங்கம் தயாவிக்ரஹவத்வலிங்கம் ॥ 43
யத்கூஹிதம் வாக்பிரக்ருத்ரிமாபிர் யத்த்ரஷ்டுகாமா முநயோ யதந்தே ।
நாம்நா ச ரூபேண ச ஸுந்தரம் தத் ப்ரத்யக்ஷமாஸ்தே ப்ரியகஸ்ய மூலே ॥ 44
பாண்ட்யார்பிதா பாத்யதுநாபி யஸ்மிந் ருஜ்வாயதா வேத்ரநிபாதரேகா ।
நாநாரஹஸ்யாகமபோதநீயாம் நாதாத்மதாமஸ்ய விவ்ருண்வதீவ ॥ 45
ஸமஸ்ததிவ்யாகமஸம்ப்ரதீதே தாராத்மகே தத்ர மஹேஶலிங்கே ।
அர்தேந்துரர்தேந்துதயைவ த்ருஷ்டோ பிந்துஸ்து ஸிந்து: ஸ்திமிதா ஜடாக்ரே॥ 46
மூலம்ச மௌலிம்ச விவேத்துகாமௌ யஸ்யாக்ரமேதாம் விதிரச்யுதஶ்ச ।
தந்மூலமேதத்தருமூலகம்யம் தந்மௌலிரேதத்தருமௌலிவேத்ய: ॥ 47
சந்நம் ப்ரஸூநை: ஸ்நபிதம் மரந்தைரலங்க்ருதம் போகிபிராபதத்பி: ।
இத்தம் ஸ்வயம் பூஜிதமஸ்தி நித்யம் ஸ்வாயம்புவ ஸுந்தரநாதலிங்கம் ॥ 48
ஏகம் கில ப்ரஹ்ம யதத்விதீயம் வக்தும் சதஸ்ர: ஶ்ருதயோऽபி நாலம் ।
தாத்ருக்விதாந்யேவ பஜந்தி தஸ்ய ப்ரஹ்மாணி பஞ்சாவயவத்வமுத்ராம் ॥ 49

---

*அதன் நடுவில் உள்ள பிந்துதான் சடைமுடியில் உள்ள கங்கையின் திவிலைச் சொட்டு வடிவம். அது கொட்டாமல் அசையாமல் உள்ளது.* 46

*128 அவருடைய வேர் அடியையும் முடியையும் கண்டுபிடிப்பதற்காக புறப்பட்ட விஷ்ணுவும் ப்ரஹ்மதேவனும் கண்டுபிடிக்க முடியாமல் திரும்பினார்கள். ஐயோ பாவம் இந்த கதம்பமரத்தின் அடிதான் அவருடைய திருவடி என்றும் மரத்தின் உச்சியே அவருடைய முடியென்றும் அவர்கள் அறியாமல் போனார்களே!* 47

*129 அந்த லிங்கத்தின்மேல் மலர்கள் மகரந்தப் பொடிகளைத் தூவின. நாகங்கள் அதை சூழ்ந்து அலங்கரித்தன. இப்படி பல காலம், தானே தோன்றிய அந்த ஸுந்தரநாத லிங்கத்திற்கு தானாகவே பூஜைகள் தினமும் நடைபெற்று வந்தன. ஸ்வாயம்புவம் என்ற சொல் ப்ரபஞ்ச ஸ்ருஷ்டியின் ஆரம்பத்தையும் குறிக்கிறது.* 48

*130 பரப்ரஹ்மம் ஒன்றுதான், அதைப்போல வேறொன்று, இரண்டாவது கிடையாது என்று நான்கு வேதங்களும் சொல்லிமாளவில்லை. லிங்க ஸ்வரூபமான ப்ருதிவீலிங்கம், அப்புலிங்கம், அக்னிலிங்கம், வாயுலிங்கம், ஆகாசலிங்கம் என்ற ஐந்து அவயவ ஸ்வரூபங்களும் முழுமையான பரப்ரஹ்மமே அது ஒன்றுதான்.* 49

*131 அஹங்காரம் முதலிய பந்தங்கள் அகன்று விடுதலை பெற்ற ஜீவன்கள், நான் முந்தி நான் முந்தி என்று போட்டி போட்டுக் கொண்டு லிங்கத்தில்*

तस्मिन्नहंपूर्विकया विशद्भिः अपास्तबन्धैरधुनापि जीवैः ।
संबाधदुःस्थैरजनिष्ट लिङ्गे सार्वत्रिकी दन्तुरतेति शङ्के ॥ ५०

चिद्रूपमानन्दमयं च वेदाः शैवं वपुः शाश्वतमामनन्ति ।
दयामयं तेऽपि विदुर्न जातु दृष्टं तदत्रेव कदम्बमूले ॥ ५१

गूढं भवामीत्यभिमानमात्रं गूढं परं ज्योतिरिदं कथं स्यात् ।
यन्मूर्धनि प्रत्युत चन्द्ररेखा तेनैव तत्प्रैक्षि कदम्बमूले ॥ ५२

ख्याताः कला यद्यपि तत्र लिङ्गे पञ्चैव सिद्धाः शिवशासनेषु ।
तथापि तेनाध्युषिते तु देशे कलाश्चतुःषष्टिरपि स्फुरन्ति ॥ ५३

कृष्णार्जुनाभ्यां परिपूज्य लिङ्गं आसादिताः सिद्धय इत्यवेत्य ।
कस्तूरिकाभिर्घनसारकैश्च लिम्पन्ति लोकाः खलु लिङ्गमेतत् ॥ ५४

यत्पीठिकाधस्पदमात्रलग्ना वाणी बहिर्न क्रमते कथंचित् ।
तत्कारणेशत्रितयातिवर्ति लिङ्गं कया वर्णयितव्यमुक्त्या ॥ ५५

सदाभिषिक्तं विबुधस्रवन्त्या सदा समभ्यर्चितमिन्दुना च ।
लिङ्गं तदैशं विजने वनेऽपि लोकत्रयक्षेमकरं बभूव ॥ ५६

कूजत्सु वन्येषु विहङ्गमेषु गायत्सु चाखण्डलगायनेषु ।
प्रीतिं दधे तुल्यवदेव देवः कस्तद्दृशा तेषु भवेद्विशेषः ॥ ५७

---

பிரவேசிக்கும் போது, அந்த லிங்கத்தில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அவைதான் லிங்கத்தின் மீது காணப்படும் மேடு பள்ளங்கள். இந்த இரண்டு ச்லோகங்களில் குறிப்பிடப்படும் விஷயங்கள் சைவ ஸித்தாந்தமான பாசுபதமதத்தின் கோட்பாடுகளைக் குறிப்பிடுகின்றன. 50

132 சிவனுடைய சித்ஸ்வரூபத்தை விளக்குகின்ற உபநிஷதங்கள், ஞானமே அதன் ஸ்வரூபம். ஆனந்தமே அதனுடைய அனுபவம். அது ஸத்தியமானது, நித்தியமானது என்று விளக்குகின்றன. அப்பாடா! இருந்துவிட்டுப் போகட்டும் இல்லை என்று சொல்லவில்லை. அது தயாஸ்வரூபமாகவும் கதம்பவனத்தில் உள்ளது என்று வேதங்கள் அறிந்து கொள்ளவில்லை. அது ஸகல ஜீவராசிகளுக்கும் அனுபவஸித்தமானது கதம்ப மரத்தடியிலே. 51

133 "நான் மறைந்து இருக்கிறேன்" என்று சொல்லிக் கொள்கிறது. ஜ்யோதி ஸ்வரூபமான வஸ்து மறைந்து இருக்க முடியுமா? அந்த லிங்கத்தின் தலையில் சந்திரக்கலை உள்ளதே. அதுவே அதைக் காட்டிக் கொடுத்து விட்டதே. 52

134 சைவ சாஸ்திரப்படி, பிரஸித்தமாக ஐந்து கலைகள்தான் ஆனால், அந்த லிங்கம் விளங்குகின்ற தேசத்தில் அறுபத்து நான்கு கலைகள் வ்யக்தமாகத் தெரிகின்றனவே! 53

தஸ்மிந்நஹம்பூர்விகயா விஶத்பி: அபாஸ்தைபந்தரதுநாபி ஜீவை: ।
ஸம்பாததுஸ்தைரஜநிஷ்ட லிங்கே ஸார்வத்ரிகீ தந்துரதேதி ஶங்கே ॥ 50

சித்ரூபமாநந்தமயம் ச வேதா: ஶைவம் வபு: ஶாஶ்வதம் ஆமநந்தி ।
தயாமயம் தேऽபி விதுர் ந ஜாது த்ருஷ்டம் ததத்ரைவ கதம்பமூலே ॥ 51

கூடம் பவாமீத்யபிமாநமாத்ரம் கூடம் பரம் ஜ்யோதிரிதம் கதம் ஸ்யாத் ।
யந்மூர்தநி ப்ரத்யுத சந்த்ரரேகா தேநைவ தத் ப்ரைக்ஷி கதம்பமூலே ॥ 52

க்யாதா: கலா யத்யபி தத்ர லிங்கே பஞ்சைவ ஸித்தா: ஶிவஶாஸநேஷு ।
ததாபி தேநாத்யுஷிதே து தேஶே கலாஶ்சது:ஷஷ்டிரபி ஸ்புரந்தி ॥ 53

க்ருஷ்ணார்ஜுநாப்யாம் பரிபூஜ்ய லிங்கம் ஆஸாதிதா: ஸித்தய இத்யவேத்ய ।
கஸ்தூரிகாபிர் கநஸாரகைஶ்ச லிம்பந்தி லோகா: கலு லிங்கமேதத் ॥ 54

யத்பீடிகாதஸ்பதமாத்ரலக்நா வாணீ பஹிர் ந க்ரமதே கதஞ்சித் ।
தத் காரணேஶத்ரிதயாதிவர்தி லிங்கம் கயா வர்ணயிதவ்யம் உக்த்யா ॥ 55

ஸதாபிஷிக்தம் விபுதஸ்ரவந்த்யா ஸதா ஸமப்யர்சிதமிந்துநா ச ।
லிங்கம் ததைஶம் விஜநே வநேऽபி லோகத்ரயக்ஷேமகரம் பபூவ ॥ 56

கூஜத்ஸு வந்யேஷு விஹங்கமேஷு காயத்ஸு சாகண்டலகாயநேஷு ।
ப்ரீதிம் ததௌ துல்யவதேவ தேவ: கஸ்தத்ருஶா தேஷு பவேத் விஶேஷ: ॥ 57

---

135 கிருஷ்ணனும் அர்ஜுனனும் இந்த லிங்கத்தை பூஜித்து பல ஸித்திகள் பெற்றிருக்கிறார்கள் என்று அறிந்து, பெரியோர்கள்,இந்த லிங்கத்தை கண்ணன் நிறமான கஸ்தூரி, அர்ஜுனன் நிறமான பச்சைக்கற்பூரம் இவைகளைப் பூசி ஆராதிக்கின்றார்கள். 54

136 அந்த லிங்கத்தின் அடித்தளமாக உறைந்த வாக்தேவி, வெளியே தலையை நீட்டுவதே இல்லை. இந்த லிங்கமே தமக்குக் காரணம் என்று ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் மூவரும் உணர்ந்துள்ளனர். இவ்வாறு வாக்குக்கு அப்பாற்பட்டதான இந்த லிங்கத்தை யாரால் வர்ணிக்கமுடியும். 55

137 வெகுகாலம் கங்கை அதற்கு அபிஷேகம் செய்திருக்கின்றாள். சந்திரன் ஸதா பூஜித்திருக்கிறான். ஜன நடமாட்டமே அற்ற அந்த வனத்தில், எவர்கள் கண்களிலும்படாமல், மூவுலகத்திற்கும் க்ஷேமத்தையும். அமைதியையும் அளித்துக் கொண்டிருந்தது அந்த லிங்கம். 56

138 காட்டிலுள்ள குயில்களும், கிளிகளும் பாடுகின்றன. மாதர்கள் வந்து கானம் செய்கின்றார்கள். அந்த கதம்பவன மூர்த்தி அவற்றை ஒரே விதமாக ச்லாகித்து வந்தார். அவருடைய பார்வையில் இவை எல்லாம் ஒன்றுதானே! ஒன்று மேலானது என்பது எது? 57

विनोध्यते यः किल यागिबृन्दैः विद्याधरैरप्सरसां गणैश्च ।
व्याधैर्मृगैः पक्षिभिरप्यरंस्त स देवदेवश्चिरमत्र लिङ्गे ॥ ५८

अन्तर्हितावस्थितमत्र लिङ्गे तमारराधुस्तरवः प्रसूनैः ।
शृङ्गाग्रकण्डूयनतः कुरङ्गाः निर्मोकपट्टार्पणतो भुजङ्गाः ॥ ५९

संध्यासु संध्यासु गणैरदृश्यैः आरात्रिकं साधितमस्फुटं यत् ।
चक्रे जरज्जम्बुकवक्त्रलग्नैः ज्वलद्भिरेतज्ज्वलनैः प्रकाशम् ॥ ६०

वन्यद्विपेष्वन्यतमो गणेशो व्याधार्भकेष्वेकतमः कुमारः ।
साप्यादिशक्तिः शबरीषु   कापि भूत्वा विजह्रुः सविधे पुरारे ॥ ६१

इत्थं परिभ्राम्यति कालचक्रे प्रणश्यति प्रोद्यति च प्रपञ्चे ।
देवेषु योगिष्वपि केऽपि केऽपि शनैरबुध्यन्त रहस्यमेतत् ॥ ६२

प्रत्यग्दृशा प्राक्तनपुण्ययोगात् आप्तोपदेशैरनुमानतश्च ।
क्रमाद्द्युलोके बहलीबभूव कदम्बकान्तारकथाप्रसङ्गः ॥ ६३

दूरात्प्रणमुः कतिचिद्वनं तत् आरात्परे नीपतरूनपश्यन् ।
विचिक्युरेके तदनुप्रविश्य धन्याः परे तद्ददृशुश्चा लिङ्गम् ॥ ६४

---

*139 சாதாரண மனித வர்கத்தின் கண்களில்படாமல் அந்த லிங்கத்திலே விளங்குகின்ற தேவதோத்தமனான சிவபெருமான், யோகிகளின் யோக சக்திகளை வேடிக்கை பார்க்கிறான். அவருக்கு எதுதான் ஆச்சரியம்? எதுதான் அதிசயம்? அப்ஸரஸர்கள், வித்யாதரர்கள், லகுவாக இனிமையாக இசை வழங்குகிறார்கள். வேடர்களும் தம்பட்டம், தாரை ஊதி கொம்மாளம் போடுகிறார்கள். சிங்கங்கள் கர்ஜிக்கின்றன. புலிகள் உறுமுகின்றன. கிளிகள் கொஞ்சுகின்றன. குயில்கள் கூவுகின்றன. எல்லாவற்றையும் ஒரேவிதமாக ரஸித்து வந்தார் கதம்பவனேசர். வேடர்கள் மனிதப்பிறவிகள்தான் ஆனாலும், அறிவீனர்களாக பசுபட்சிகளைப்போல வாழ்ந்தனர். 58*

*140 பிரபஞ்சத்தினரிடமிருந்து மறைந்திருந்த அந்த லிங்கத்தை மரங்கள் புஷ்பங்களை உதிர்த்து ஆராதித்தன. மான்கள் லிங்கத்தின் மீது கொம்புகளைத் தேய்த்துத் தடவிக் கொடுத்தன. பாம்புகள் பகவான் மீது தமது சட்டைகளை உரித்து அணிவித்தன. 59*

*141 காலைச் சந்திகளிலும், மாலைச் சந்திகளிலும், எப்போதுமே மறைந்திருக்கின்ற சிவகணங்கள்,தங்களது முறைப்படி ஆராதனை செய்கிறார்கள்.அவர்களுக்கு வாத்தியமாக நரிகள் ஊளையிடுகின்றன. அவற்றின் வாயிருந்து கொழுந்து விட்டுக் கிளம்புகின்ற தீப்பிழம்பு, தீப ஹாரத்தி ஆகிறது. 60*

**விநோத்யதே ய: கில யோகிவ்ருந்தை: வித்யாதரைரப்ஸரஸாம் கணைஶ்ச ।**
**வ்யாதைர்ம்ருகை: பக்ஷிபிரப்யரம்ஸ்த ஸ தேவதேவாஶ்சிரமத்ர லிங்கே ॥ 58**

**அந்தர்ஹிதாவஸ்திதமத்ர லிங்கே தமாரராதுஸ்தரவ: ப்ரஸூநை: ।**
**ஶ்ருங்காரகண்டூயநத: குரங்கா நிர்மோகபட்டார்பணதோ புஜங்கா: ॥ 59**

**ஸந்த்யாஸு ஸந்த்யாஸு கணைரத்ருஶ்யை: ஆராத்ரிகம் ஸாதிதமஸ்புடம் யத் ।**
**சக்ரே ஜரஜ்ஜம்புகவக்த்ரலக்நைர் வலாத்பரேதஜ்ஜ்வலநை: ப்ரகாஶம் ॥ 60**

**வந்யத்விபேஷ்வந்யதமோ கணேஶோ வ்யாதார்பகேஷ்வேகதம: குமார: ।**
**ஸாऽப்யாதிஶக்தி: ஶபரீஷு காபி பூத்வா விஜஹ்ரு: ஸவிதே புராரே: ॥ 61**

**இத்தம் பரிப்ராம்யதி காலசக்ரே ப்ரணஶ்யதி ப்ரோத்யதி ச ப்ரபஞ்சே ।**
**தேவேஷு யோகிஷ்வபி கேऽபி கேऽபி ஶநைரபுத்யந்த ரஹஸ்யமேதத் ॥ 62**

**ப்ரத்யக்த்ருஶா ப்ராக்தநபுண்யயோகாத் ஆப்தோபதேஶைரநுமாநதஶ்ச ।**
**க்ரமாத்த்யுலோகே பஹுலீபபூவ கதம்பகாந்தாரகதாப்ரஸங்க: ॥ 63**

**தூராத் ப்ரணேமு: கதிசித் வநம் தத் ஆராத்பரே நீபதரூநபஶ்யன் ।**
**விசிக்யுரேகே ததநுப்ரவிஶ்ய தந்யா: பரே தத்தத்ருஶுஶ்சா லிங்கம் ॥ 64**

142 காட்டு யானைகளிடையே கணபதியும், வேடர்களிடையே குமரனும், வேடுவச்சிகளில் ஒருத்தியான ஆதிபராசக்தியும், அந்த பரமனிடம் குலவுகிறார்கள் 61

143 இவ்வாறு பல ஆண்டுகள் காலச்சக்கிரம் உருண்டு கொண்டிருக்கும்போது,ப்ரபஞ்சம் அழிகிறது. மறுபடியும் உண்டாகிறது. பல கற்பகாலங்கள் ஓடிவிட்டன. எப்போதோ, முந்தைய கல்பங்கள் ஒன்றில் வாழ்ந்த ஓர் யோகி,இந்த கல்பத்தில் இந்த லிங்க பகவானை அடையாளம் கண்டுகொள்கிறார். அவர்களில் சிலர் கதம்பவன ரகஸ்யத்தையும் கண்டு கொள்கிறார்கள். 62

144 யாரோ ஒரு புண்ணிய புருஷனுடைய ப்ரத்யக்ஷ தரிசனத்தினாலும், பெரியோர்களின் உத்தேசத்தினாலும். இதுவாகத்தான் இருக்கவேண்டும் என்கிற காரண காரிய அனுமானத்தினாலும், மெதுவாக தேவலோகத்தில், பச பசவென்று பேச்சு எழுந்தது. கதம்பவனத்தின் தெய்வீகக் கதை பிரபலமாயிற்று. 63

145வனத்தின் எல்லையிருந்தே எட்டி நின்றபடியே, சிலர் அந்த வனத்தையே வணங்கினார்கள். கண்களில் அந்த கதம்பமரம் பட்டால், சிலர் கன்னத்தில் போட்டுக் கொள்வார்கள். சிலர் காட்டிற்குள் புகுந்து தேடுவார்கள். பாக்கியம் செய்தவர்கள் சிலருக்கே அந்த லிங்க தரிசனம் கிடைக்கும். 64

आनन्दजैरश्रुभिरभ्याषिञ्चन् आनर्चुरप्यक्षिभिरेव फुल्लैः ।
न्यवेदयन्तापि नितान्तधोतं आत्मानम् आनन्दसुधाप्लुतं ते ॥ ६५

गूहत्सु युष्मास्वपि गूढमेतत् रहस्यमद्राक्ष्म वयं किलेति ।
अनुश्रवान्केचिदुपालभन्त केचिद्विधिं केऽपि शिलादसूनुम् ॥ ६६

वागीश्वरा वाग्भिरपूजयन्त ध्यानाध्वनीना ह्यदि दध्युरेनम् ।
बाह्यार्चनामात्रपरायणास्तु सामग्र्यलाभात् अलभन्त खेदम् ॥ ६७

अभ्रापगावारिभिरभ्यषिञ्चन् सुधान्धसः सुन्दरनाथलिङ्गम् ।
तत्रासमर्था मुनयो महीस्थाः तस्तम्भिरे केवलमश्रुपूर्णाः ॥ ६८

आलक्ष्य पूजाव्यवसायमेषां अपामभावात्परमं च खेदम् ।
दीनानुकम्पानिधिरिन्दुमौलिः दिव्यं सरस्तत्र विधातुमैच्छत् ॥ ६९

स दक्षिणस्यां दिशि बाणपाते सरो विधास्यन्नमृतांशुमौलिः ।
सकृद्विलासादिव निर्बिभेद तीक्ष्णेन भूमिं त्रिशिखाञ्चलेन ॥ ७०

आविध्य शूलं भुवि सद्य एव पादाङ्गदं पश्यति सुन्दरेशे ।
भक्तस्य ते न क्षतिरस्ति जातु शेषः सुखीत्याह सुता हिमाद्रेः ॥ ७१

---

*146* அப்படி தரிசனம் கிடைத்த பாக்கியவான்கள், ஆனந்தக் கண்ணீரினால் அபிஷேகம் செய்வார்கள். கண்களையே மலராக்கிக் கொண்டு (கண்களை மூடி மூடி திறப்பதுபோல்) சிலர் அர்ச்சனை புரிவார்கள். முற்றிலும் தூய்மையாகிவிட்ட தமது ஆத்மாவையே ஆனந்தாமிருதமாக நிவேதனம் செய்வார்கள். அவர்களே எதிர்பார்த்து வராததால்,கையில் ஒன்றும் கொண்டு வரவில்லை. அதுவே பாக்கியம். அவர்கள் ஆத்மார்பணம் செய்ய முடிந்ததே! *65*

*147* அங்கே முன்னரே சிலர், பக்தி மிகுதியினால் தரிசனம் பெற்றவர்கள். மௌனமாக த்யானத்தில் இருந்தவர்கள். வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. அவர்களைப் பார்த்து ''எங்களுக்குச் சொல்லக்கூடாதா? இத்தனை பெரிய க்ஷேத்திரத்தை ஒரு இடுக்கில் மறைத்து வைத்திருக்கிறீர்களே'' என்று சிலர் ப்ருஹ்மதேவனையும், சிலர் வேதங்களையும் குறை கூறினார்கள். சிலர் அங்கு படுத்திருந்த நந்திகேச்வரரைப் பார்த்து 'நீர் அமுக்கமாகப் படுத்திருந்தால் எங்களுக்கு தெரியாமல் போய்விடுமோ?' என்று ஏசினார்கள். *66*

*148* நல்ல வாக்சக்தி படைத்தவர்கள் ஸ்தோத்திரம் செய்தார்கள், த்யானம் கைகூடியவர்கள் மௌனமாக த்யானத்தில் அமர்ந்தனர். வெளிப்படையாக பூஜை செய்தே பழக்கமுள்ளவர்கள், பூஜைக்கான திரவியம் கொண்டு வராததினால் திகைத்து வருந்தினார்கள். *67*

ஆநந்தஜைரஶ்ருபிரப்யாஷிஞ்சன் ஆநர்சுரப்யக்ஷிபிரேவ புல்லை: ।
ந்யவேதயந்தாபி நிதாந்த தௌதம் ஆத்மாநம் ஆநந்தஸுதாப்லுதம் தே ॥ 65
க்ருஹத்ஸு யுப்மாஸ்வபி கூடமேதத்ரஹஸ்யமத்ராக்ஷம வயம் கிலேதி ।
அநுஶ்ரவான் கேசிதுபாலபந்த கேசித்விதிம் கேऽபி ஶிலாதஸூநும் ॥ 66
வாகீஶ்வரா வாக்பிரபூஜயந்த த்யாநாத்வநீநா ஹ்ருதி தத்யுரேநம் ।
பாஹ்யார்சநாமாத்ரபராயணாஸ்து ஸாமக்ர்யலாபாதலபந்த கேதம் ॥ 67
அப்ராபகாவாரிபிரப்யஷிஞ்சன் ஸுதாந்தஸ: ஸுந்தரநாதலிங்கம் ।
தத்ராஸமர்த்தா முநயோ மஹீஸ்தா: தஸ்தம்பிரே கேவலமஶ்ருபூர்ணா: ॥ 68
ஆலக்ஷ்ய பூஜாவ்யவஸாயமேஷாம் அபாமபாவாத் பரமம் ச கேதம் ।
தீநாநுகம்பாநிதிரிந்துமௌலிர்திவ்யம் ஸரஸ்தத்ர விதாதுமைச்சத் ॥ 69
ஸ தக்ஷிணத்யாம் திஶி பாணபாதே ஸரோ விதாத்யந்நம்ருதாம்ஶுமௌலி: ।
ஸக்ருத்விலாஸாதிவ நிர்பிபேத தீக்ஷ்ணேந பூமி த்ரிஶிகாஞ்சலேந ॥ 70
ஆவித்ய ஶூலம் புவி ஸத்ய ஏவ பாதாங்கதம் பஶ்யதி ஸுந்தரேஶே ।
பக்தஸ்ய தே ந க்ஷதிரஸ்தி ஜாது ஶேஷ: ஸுகோத்யாஹ ஸுதா ஹிமாத்ரே: ॥ 71

---

*149 ஸுந்தரநாத லிங்கம் இப்படி வெளிப்படையாக தரிசனமளித்தவுடன், அமுதமுண்ட தேவர்கள் ஆகாச கங்கை நீரினால் அபிஷேகம் செய்தார்கள். அப்படி அபிஷேகம் செய்ய கொடுத்து வைக்காத பூமியில் தவம் செய்கின்ற முனிவர்கள்,கண்களிலேயே நீரைப் பெருக்கி ஸ்தம்பித்து நின்றனர்.* 68

*150 பகவானுக்கு பூஜை செய்யவேண்டும் என்கிற அவர்களுடைய ஆர்வத்தையும், தண்ணீர் கிடைக்கவில்லையே என்ற ஏக்கத்தையும் கண்டு. எளியவர்களுக்கு பரிவு காட்டுகின்ற பிரபு சந்திர மௌளீச்வரர், அங்கு ஒரு திவ்யமான தடாகத்தை நிறுவவிரும்பினார்.* 69

*151 தென்புறத்தில், ஒரு அம்பு வீச்சு தூரத்தில், ஒரு ஸரஸை தோற்றுவிக்கலாம் என்று நினைத்து, அமுதக்கலை நிறைந்த் சந்திரனை தலையில் சூடிய பகவான்,லீலையாகவே தமது த்ரிசூலத்தின் கூரான நுனியினால், ஒரே ஒரு தடவை, பூமியைக் குத்தினார்.* 70

*152அந்த குத்து பாதாளலோகத்தின் முன் வீழ்ந்தது. ஈசனின் கால்வளையமாக சுற்றிக் கொண்டிருந்த சேஷ நாகனைப் பார்த்தார் சிவபெருமான். ஹிமவானின் புதல்வியான தேவி, அதைப் பார்த்து ‘‘கவலைப்பட வேண்டாம். தங்கள் பக்தனுக்குக் காயம்படவில்லை. சேஷன் ஸௌக்யமாகவே இருக்கிறான்’’ என்று பகவானுக்கு அமைதி அளித்தாள்.* 71

आविध्यमानास्त्रिशिखाभिघातैः अधःकपालाज्जगदण्डभित्तेः ।
अम्भो यदण्डावरणायितं तत् उद्बुद्बुदं तत्क्षणमुद्बभूव ॥ ७२
त्रैविक्रमे कर्मणि शार्ङ्गिणापि प्रवर्तितं यत्किल पूर्वमम्भः ।
अधोगतिं प्राप तदेव लेभे शिवास्त्रयोगाद्गतिमित्थमूर्ध्वाम् ॥ ७३
दिदृक्षमाणेन महाद्भुतं तच्छिवेन यावन्नमितो न मौलिः ।
तावत्सरस्तत्कृतमुत्तरङ्गं ततः स्रवन्त्या विबुधस्रवन्त्या ॥ ७४
सरात्रिशूलप्रभवं पुरारेस्तथात्यगाधं तदभूत्क्षणेन ।
यथात्र देवोऽवतरन्प्लवेत त्रिविक्रमः क्रान्तजगत्त्रयोऽपि ॥ ७५
नौर्वान्न रामान्न च कुम्भयोनेः यस्यास्ति भीतिस्तदवेक्ष्य तीर्थम् ।
आश्वासमाजग्मतुरर्णवस्थौ शश्वत्तनौ तावपि कूर्ममीनौ ॥ ७६
आविर्भवन्तीः सलिले समन्तात् अम्भोजिनीरुत्पलिनीश्च तस्मिन् ।
दृशौ पिबन्त्यौ परमस्य धाम्नः प्रीतिं परां प्रापतुरर्कचन्द्रौ ॥ ७७
त्रैगुण्यरूपं त्रिशिखं हि शंभोः धीराः जगत्कारणमामनन्ति ।
तत्संप्रसूतेऽपि सरस्यमुष्मिन्का हेतुचिन्ता कमलोत्पलानाम् ॥ ७८
शैवालनीलं बहिरम्बुजाभमन्तर्घटैरुद्ध्रियमाणमच्छम् ।
त्रैगुण्यरूपं त्रिशिखोद्भवं तदम्भोनिजान्हेतुगुणान्व्यनक्ति ॥ ७९

---

*153* சூலத்தின் முனை ப்ரஹ்மாண்டத்தின் அடித்தளக் கபாலத்தைத் தகர்த்தது. அண்டகோசத்தின் அடிக்கூட்டுச் சுவற்றிருந்து தண்ணீர் கொப்புளங்களுடன் குபீரென்று பீறிட்டது. 72

*154* முன்பு, நாராயணன், த்ரிவிக்ரம அவதாரம் எடுத்த போது அவருடைய திருவடி ப்ரம்மாண்டத்தின் மேல் ஓட்டை உடைத்தது. அங்கே பெருகிய நீர் கீழே பாய்ந்தது (அதோகதி ஆயிற்று) ஆனால் சிவனுடைய ஆயுதம் கீழ் ஓட்டை உடைத்ததும் தண்ணீர் மேலே உயர்ந்தது.! (ஊர்த்வகதி ஆயிற்று). இங்கே அதோகதி, ஊர்த்வகதி என்பது சப்த சமத்காரமே தவிர இகழ்ச்சி அல்ல. 73

*155* இந்த அத்புதக் காட்சியைப் பார்ப்பதற்காக சிவபெருமான் தலைகுனிவதற்கு முன்பே, கீழிருந்து பீய்ச்சிக் கொண்டு கிளம்பிய நீர் பெருக்கு, சிவன் தலையில் உள்ள ஆகாசகங்கையுடன் மோதிவிட்டது. 74

*156* த்ரிசூலத்திருந்து கிளம்பிய நீர்ப் பெருகி, நிரம்பிய ஓடையின் ஆழம் எவ்வளவு தெரியுமா? மூவுலகத்தை அளந்த த்ரிவிக்ரமப் பெருமானின் கால் கீழே படாமல் நீந்த வேண்டி இருந்தது. அந்த பாதத்தின் கீழேயும் ஆழமாக நீர் பரவியது. 75

ஆவித்யமாநாத் த்ரிஶிகாபிகாதை: அத:கபாலாஜ்ஜகதண்டபித்தே: ।
அம்போ யதண்டாவரணாயிதம் தத் உத்ருத்ருதம் தத்க்ஷணமுத்பபூவ ॥ 72
த்ரைவிக்ரமே கர்மணி ஶார்ங்கிணாபி ப்ரவர்திதம் யத் கில பூர்வமம்ப: ।
அதோகதிம் ப்ராப ததேவ லேபே ஶிவாஸ்த்ரயோகாத் கதிமித்தமூர்த்வாம் ॥ 73
தித்ருக்ஷமாணேந மஹாத்புதம் தச்சிவேந யாவந்நமிதோ ந மௌலி: ।
தாவத் ஸரஸ்தக்ருதமுத்தரங்கம் தத: ஸ்ரவந்த்யா விபுதஸ்ரவத்யா ॥ 74
ஸரஸ்த்ரிஶூலப்ரபவம் புராரேஸ்ததாத்யகாதம் ததபூத் க்ஷணேந ।
யதாத்ர தேவோऽவதரன் ப்லவேத த்ரிவிக்ரம: க்ராந்தஜகத்ரயோऽபி ॥ 75
நௌர்வாந்ந ராமாந்ந ச கும்பயோனேர் யஸ்யாஸ்தி பீதிஸ்ததவேக்ஷ்ய தீர்த்தம் ।
ஆஶ்வாஸமாஜக்மதுரர்ணவஸ்தௌ ஶஶ்வத்தநௌ தாவபி கூர்மமீநௌ ॥ 76
ஆவிர்பவந்தீ: ஸலிலே ஸமந்தாத் அம்போஜிநீருத்பலிநீஶ்ச தஸ்மின் ।
த்ருஶௌ பிபந்த்யௌ பரமஸ்ய தாம்ந: ப்ரீதிம் பராம் ப்ராபதுரர்கசந்த்ரௌ ॥ 77
த்ரைகுண்யரூபம் த்ரிஶிகம் ஹி ஶம்போர்தீரா ஜகத்காரணம் ஆமநந்தி ।
தத்ஸம்ப்ரஸூதேऽபி ஸரஸ்யமுஷ்மின் கா ஹேதுசிந்தா கமலோத்பலாநாம் ॥ 78
ஶைவாலநீலம் பஹிரம்புஜாபம் அந்தர்கடைருத்த்ரியமாணமச்சம் ।
த்ரைகுண்யரூபம் த்ரிஶிகோத்பவம் தத் அம்போநிஜான் ஹேதுகுணான் வ்யநக்தி ॥ 79

---

157 அப்படி பெருகிவருகிற நீரைப் பார்த்த கடல், கடல் நடுவில் உள்ள 'பாடவ' நெருப்பிற்கோ,கடலை வற்ற வைத்த ராமருக்கோ, கடலை ஆசமனீயம் செய்த அகத்தியருக்கோ பயப்படவில்லை. ஸ்ரீ நாராயணன் அவதாரம் செய்த மீனும், ஆமையும் கூட, கடல் வற்றி விடுமோ என்ற பயந்திருந்து நிம்மதியாக இருந்தன. 76

158 அந்த நீர்பரப்பிருந்து உண்டான தாமரை நாயகிகளும், நீலோத்பல நாயகிகளும் பகவானுடைய கண்களாகிய சூரியனையும் சந்திரனையும் பார்த்து பரமப்ரீதியை அடைந்தன. சூரிய சந்திரர்கள் மறையாததால் மலர்கள் இதழ்களை மூடிக்கொள்ளவில்லை. 77

159 ஸத்துவ, ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களின் வடிவமே த்ரிசூலம். அவையே உலகத்திற்கு காரணம் என்று பெரியோர்கள் கூறுகிறார்கள். அதிலிருந்து பிறந்ததால், இந்த ஸரஸ் விஷயத்தில், கமலங்களும், உத்பலங்களும் எங்கிருந்து உண்டாயின என்ற கேள்வி ஏது? பொதுவாக தாமரைக் குளத்தில் அல்லிமலர் பூக்காது. அல்லிக்குளத்தில் தாமரை பூக்காது. ஆனால் இரு மலர்களுமே இக்குளத்தில் பூத்தன. 78

160 அந்த ஸரஸிருந்து ஒரு குடத்தில் நீர் எடுத்தால், தண்ணீர் மொள்ளும் போது மேலே பாசி நீல நிறமாகவும், உள்ளே தாமரைச் சிவப்பாகவும்,

प्राचीनमब्जं परिहृत्य सद्यो जग्राह भानुर्जलजं तदीयम् ।
अत्रैव लक्ष्मीः स्थितिमाबबन्ध चतुर्मुखोऽतश्चकमे प्रसूतिम् ॥ ८०

आचामत स्नात सरस्यमुष्मिन् अस्याम्भसा मामभिषिञ्चतेति ।
देवान्महर्षीनपि चान्वगृह्णाद्वाचा भगिन्या विभुरागमानाम् ॥ ७१

खातं शूलशिखाञ्चलेन सालिलैः पूतं जटातीर्थजैः
प्रत्यक्षेण च शांभवेन विधिना प्राप्तं परां ग्राह्यताम् ।
तीर्थं तत्प्रतिपद्य तापसगणाः भागीरथीं तत्यजुः
मन्दं चादरमादधुः सुरगणाः मन्दाकिनीस्रोतसि ॥ ८२

इति द्वितीयः सर्गः

---

*தண்ணீரை ஊற்றும்போது, நிறமற்றதாகவும் (வெண்மையாகவும்) தெரிகிறது. திரிசூலத்திருந்து பிறந்த தீர்த்தம் ஸத்துவ ரஜ தமோ குணங்களுடையது என்பதை வெளிக்காட்டுகிறது.* 79

*161 சூரியபகவானிடத்தில், ஜகத் ஸ்ருஷ்டி காலத்தில், கையில் ஸத்துவகுணம் நிறைந்த தாமரை இருந்தது. அதை விட்டு விட்டு, இந்த ஸரஸில் உள்ள தாமரையை கையில் எடுத்துக் கொண்டார். அந்த ஸத்துவகுணத் தாமரையை லக்ஷ்மீ தேவி ஆஸனமாகக் கொண்டாள். ப்ரஹ்ம தேவனும் இத்தாமரையிலேயே தன் பிறப்பை விரும்பினார்.* 80

ப்ராசீநமப்ஜம் பரிஹ்ருத்ய ஸத்யோ ஜக்ராஹ பாநுர்ஜலஜம் ததீயம் ।
அத்ரைவ லக்ஷ்மீ: ஸ்திதிமாபபந்த சதுர்முகோऽதஶ்சகமே ப்ரஸூதிம் ।। 80

ஆசாமத ஸ்நாத ஸரஸ்யமுஷ்மின் அத்யாம்பஸா மாமபிஷிஞ்சதேதி ।
தேவான் மஹர்ஷீநபி சாந்வக்ருஹ்ணாத் வாசா பகிந்யா விபுராகமாநாம் ।। 81

காதம் ஶூலஶிகாஞ்சலேந ஸலிலை: பூதம் ஜடாதீர்த்தஜை:
ப்ரத்யக்ஷேண ச ஶாம்பவேந விதிநா ப்ராப்தம் பராம் க்ராஹ்யதாம் ।
தீர்த்தம் தத் ப்ரதிபத்ய தாபஸகணா பாகீரதீ தத்யஜு:
மந்தம் சாதரமாதது: ஸூரகணா மந்தாகிநீஸ்ரோதஸி ।। 82

இதி மஹாகவிஶ்ரீநீலகண்டதீக்ஷிதப்ரணீதே ஶிவலீலார்ணவே த்விதீய: ஸர்க: ।

---

*162 தேவர்களே! இந்த நீரை ஆசமனம் செய்யுங்கள். முனிவர்களே இதில் ஸ்நானம் செய்யுங்கள், எனக்கு அபிஷேகம் செய்யுங்கள் என்று பகவான் வேதங்களின் சகோதரியான வாக்தேவியின் மூலம் தேவர்களையும், ருஷிகளையும் அனுக்ரஹித்தார்* *81*

*163 இந்தப் பொய்கையின் நீர் சிவபெருமானின் சூலத்திருந்து பெருகியது. கங்கை அவருடைய சடையிருந்து பெருகியது. எது தேவலை என்று ஆலோசித்து, இதுவே சிறந்தது என்று அக்குளத்தின் தீர்த்தத்தினால் மகிழ்ச்சியுற்ற ருஷிகள் பாகீரதியை மறந்தனர், தேவர்களும் மந்தாகினியினிடத்தில் தங்களுடைய ஆதரவைக் குறைத்துக் கொண்டனர்.82*

**இரண்டாவது ஸர்கம் முடிவடைந்தது**



## तृतीयः सर्गः

अथ जातु पुरंदरः सुधर्मां अधितिष्ठन्सह सप्तभिर्दिगीशैः ॥
अविजेयमनुक्षणोपचित्या विमतं वृत्रममन्त्रयद्विजेतुम् ॥ १
चतुरङ्गमिदं महद्बलं नः चतुरं गन्तुमहो न यत्समीपम् ।
न बलं भुजयोः क्रमेत तस्मिन्नवशात् अञ्जलिबन्धशिक्षितौ यो ॥ २
अमृताशनजातिमात्रजेतर्यलमस्त्राणि न तत्र देवतानि ।
परिवृतत्य पतेयुरासुराणि प्रबलं यूथपतिं तमेत्य सद्यः ॥ ३
निकृतिं शरणं वृणीमहे चेत् नियमात् आपदियं क्षमा तरीतुम् ।
निऋतिं परिपृच्छताममु मर्थं स हि नः पुण्यजनेषु संप्रतीतः ॥ ४
असुरा हि भवेम युध्यमानाः कपटेनेति यदि स्थितं मतं वः ।
असुरत्वमपेक्षितं चिरान्नः सुरभावात् अतिगर्हितादमुष्मात् ॥ ५
स हि संप्रति सागरान्तरीपे क्वचिदालम्ब्य निराश्रयं समाधिम् ।
अविशंकितमास्थितस्तपस्यां सुखजय्यो यदि रोचते भवद्भ्यः ॥ ६
इति वादिनि वल्लभे सुराणाम् अनुजज्ञुर्हरिदीश्वराः सहर्षम् ।
प्रकृतिर्ह्यपथे रुचिः प्रजानां किमुत स्वामिनि तादृशेऽपि लब्धे ॥ ७

---

## மூன்றாவது ஸர்கம்

## திருவிளையாடல்-1

## இந்திரன் பழிதீர்த்த படலம்

*164 ஒரு ஸமயம் புரந்தரன், ஸுதர்மா எனப்படும் தன்னுடைய ஆஸ்தானத்தில் அமர்ந்து, ஏழுதிசை அதிபர்களுடன் கூடி ஆலோசித்தான். ''ஒவ்வொரு கணமும் வலிமை மிகுந்து வருகிறான் இந்த விருத்திரன் என்ற அஸுரன், நம்முடைய சத்ரு வெற்றி கொள்ள முடியாதவன். இவனை வெற்றி கொண்டே ஆகவேண்டும். என்ன செய்யலாம்?'' 1*

*165 நம்முடைய சதுரங்கப் படை அதிக பலமுள்ளதுதான். ஆனாலும் அவனை அணுக முடியவில்லையே! நம்முடைய புஜவலிமையோ, நம்மை அறியாமலேயே கைகூப்பும் பழக்கத்தில் உள்ளதே தவிர, எதிர்க்கத் துணியவில்லையே! 2*

*166 அமுதம் குடித்துவிட்டு ஒருவரையொருவர் தேவர்கள் வெற்றி கொள்வார்களே? நமது அஸ்திரங்கள் தெய்விகமானவை வாயுவின் அஸ்திரம் அக்னியின் அஸ்திரத்தில் மோதினால் அது அவிந்துவிடும். வருணாஸ்திரம் அக்னியின் அஸ்திரத்தை அவித்துவிடும். அவை விருத்திரன், தனது*

## அத த்ருதீய: ஸர்க: ।

அத ஜாது புரந்தர: ஸுதர்மாம் அதிதிஷ்டன் ஸஹ ஸப்தபிர்திகீஶை: ।
அவிஜேயம் அநுக்ஷணோபசித்யா விமதம் வ்ருத்ரம் அந்த்ரயத்விஜேதும் ॥ 1

சதுரங்கமிதம் மஹத்பலம் நஶ்சதுரம் கந்துமஹோ ந யத்ஸமீபம் ।
ந பல புஜயோ: க்ரமேத தஸ்மின் அவஶாத் அஞ்ஜலிபந்தஶிக்ஷிதௌ யௌ ॥ 2

அம்ருதாஶநஜாதிமாத்ரஜேதர்யலம் அஸ்த்ராணி ந தத்ர தைவதாநி ।
பரிவ்ருத்ய பதேயுராஸுராணி ப்ரபலம் யூதபதிம் தமேத்ய ஸத்ய: ॥ 3

நிக்ருதிம் ஶரணம் வ்ருணீமஹே சேந்நியமாத் ஆபதியம் க்ஷமா தரீதும் ।
நிர்ருதிம் பரிப்ருச்சதாமுமர்த்தம் ஸ ஹி ந: புண்யஜநேஷு ஸம்ப்ரதீத: ॥ 4

அஸுரா ஹி பவேம யுத்யமாநா: கபடேநேதி யதி ஸ்திதம் மதம் வ: ।
அஸுரத்வமபேக்ஷிதம் சிராந்ந: ஸுரபாவாத் அதிகார்ஹிதாத் அமுஷ்மாத் ॥ 5

ஸ ஹி ஸம்ப்ரதி ஸாகராந்தரீபே க்வசிதாலம்ப்ய நிராஶ்ரயம் ஸமாதிம் ।
அவிஶங்கிதம் ஆஸ்திதஸ்தபஸ்யாம் ஸுகஜய்யோ யதி ரோசதே பவத்ப்ய: ॥ 6

இதி வாதிநி வல்லபே ஸுராணாம் அநுஜஜ்ஞுர்ஹரிதீஶ்வரா: ஸஹர்ஷம் ।
ப்ரக்ருதிர்ஹ்யபயே ருசி: ப்ரஜாநாம் கிமுத ஸ்வாமிநி தாத்ருஶேபி லப்தே ॥ 7

---

*அஸுரப்படை சூழ்ந்து நிற்கும்போது அனுகினால்,அவற்றை வலம் சுற்றிவிட்டு கீழேவிழுந்துவிடும். அவ்வளவுதான்.* 3

*167 நேர்மையை விட்டு விட்டு ஏதாவது சூழ்ச்சி செய்தால்தான் இந்த ஆபத்தை தவிர்க்க முடியும். நமக்குள் நிர்ருதி என்ற தென்மேற்கு திசை அதிபன் யக்ஷர்களுடன் தொடர்புடையவன். அவனை கலந்து ஆலோசிப்போமே!* 4

*168 அஸுரர்களிடம், அவர்களைப் போலவே கபடப் போர் புரிவோம் என்று நாம் முடிவு செய்தால்,நாம் அஸுரர்கள் ஆகிவிடுவோமே! என்று கலங்க வேண்டாம். தேவர்களாக இருந்து அவமானப்படுவதைத் தவிர வேறு என்ன சாதித்தோம். அஸுரனாகித்தான் பார்ப்போமே!* 5

*169 அவன் தற்போது கடல் மத்தியில் உள்ள தீவில் அமர்ந்து, ஒரு துணையும் இல்லாமல், நாம் ஏதாவது செய்வோமோ என்று கவலைப்படாமல், ஸமாதியில் ஆழ்ந்திருக்கிறான். உங்களுக்கு சரி என்று தோன்றினால், இப்போதே எளிதாக அவனை ஜயித்துவிடலாம்.* 6

*170 இவ்வாறு தேவராஜன் கூறினான் அதை உற்சாகத்தோடு ஏற்றுக்கொண்டார்கள் திசாதிபர்கள். மக்களுக்கு எப்பொழுதுமே குறுக்கு வழியில் செல்வதற்கு ருசி உண்டு. தலைவனும் அந்த வழியில் துணிந்து விட்டால் கேட்பானேன்!* 7

स हि यत्र तपश्चकार वृत्रः तदनुप्राप्य तपोवनं महेन्द्रः ।
परमेण समाधिणोपविष्टं पविना तं विनिपातयां बभूव ॥ ८

कृतकृत्यममुं निवर्तमानं कियत् अप्यप्रतिसंदधानमेनः ।
विकृता वपुषा विकीर्णकेशी सममेवानुससार वृत्रहत्या ॥ ९

पुनरेत्य यथापुरं सुधर्मां पुरुहूतः स्तुवतो विसृज्य देवान् ।
अवरोधमभीप्सुरालुलोके विशतीं स्वेन सहैव वृत्रहत्याम् ॥ १०

अवकीर्य पविं विकीर्य केशानसमालोच्य च कृत्यमाप्तवर्गैः ।
स तयानुगतः पलायत द्राक् समरेष्वप्रतिमल्लसाहसोऽपि ॥ ११

अपथं तदभीक्ष्णमादृतं यैः अपि साक्षात् उपदिष्टमादितश्च ।
जहसुः प्रथमं त एव शक्रं प्रकृतीनां प्रभवत्स्वयं स्वभावः ॥ १२

विपिनाद्विपिनं गिरीन् गिरिभ्यो जलराशेर्जलराशिमन्ततश्च ।
जगतो जगदप्ययं प्रधावन् मुमुचे नैव तया धियेव जीवः ॥ १३

निपुणं स पुरंदरो विलिल्ये सरासि क्वापि सरोजनालतन्तौ ।
शतशः समुपात्तसप्ततन्तोः अवलम्बाय बभूव कोऽपि तन्तुः ॥ १४

अवलोक्य तदन्तरं चिकीर्षन्नहुषो नाम नृपोऽधिकारमैन्द्रम् ।
अनियन्तृकताविषादमग्नैः अनुमेने कथमप्यमर्त्यलोकैः ॥ १५

---

*171 அவன் எங்கே தவம் செய்து கொண்டிருந்தானோ, அந்த தபோவனத்தை நெருங்கினான் மஹேந்திரன். ஆழ்ந்த ஸமாதியில் அமர்ந்திருந்த அந்த விருத்ரனை தன் வஜ்ராயுதத்தினால் ஒரே அடியில் வீழ்த்திவிட்டான்.* 8

*172 நினைத்த காரியத்தை நினைத்தபடி செய்து முடித்துவிட்டு திரும்புகிறான் மஹேந்திரன். அவனை அந்த மஹாபாபம் தொடர்ந்தது. அதற்குப் பரிஹாரமே கிடையாது. தலைவிரிகோலமாக விகாரமான தோற்றத்துடன் அது தொடர்ந்தது.* 9

*173 முன்போல, நேரே ஸுதர்மா என்ற ஆஸ்தானத்திற்கு வந்தான் இந்திரன். தேவர்கள் துதித்தனர். மனதில் அமைதி இல்லாமல் அந்தப்புரம் வந்தான். பெரிய நிலைக் கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டான். அவனை விருத்ரஹத்யா என்ற மஹாபாபம் தொடர்வதைக் கண்டான்.* 10

*174 வஜ்ராயுதத்தைக் கழற்றிப் போட்டான். தலை முடி அவிழ்ந்து விரிந்தது. தனக்கு வேண்டியவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைக் கவனிக்கவில்லை. அந்த ஹத்யா பிசாசு பின் தொடர ஓடினானய்யா, போர்முனையில் தன்னை யாரும் எதிர்க்கமுடியாது என்ற வீர்யமுடையவன் இந்த கதிக்கு ஆளானான்.* 11

ஸ ஹி யத்ர தபஶ்சகார வ்ருத்ரஸ்ததநுப்ராப்ய தபோவநம் மஹேந்த்ர: ।
பரமேண ஸமாவிநோபவிஷ்டம் பவிநா தம் விநிபாதயாம்பபூவ ॥ 8

க்ருதக்ருத்யமமும் நிவர்த்தமாநம் கியதப்யப்ரதிஸந்ததாநமேந: ।
விக்ருதா வபுஷா விகீர்ணகேஶீ ஸமமேவாநுஸஸார வ்ருத்ரஹத்யா ॥ 9

புநரேத்ய யதாபுரம் ஸுதர்மாம் புருஹூத: ஸ்துவதோ விஸ்ருஜ்ய தேவான் ।
அவரோதம் அபீப்ஸுராலுலோகே விஶதீம் ஸ்பேந ஸஹைவ வ்ருத்ரஹத்யாம் ॥ 10

அவகீர்ய பவிம் விகீர்ய கேஶான் அஸமாலோச்ய ச க்ருத்யமாப்தவர்கை: ।
ஸ தயாநுகத: பலாயத த்ராக் ஸமரேஷ்வப்ரதிமல்லஸாஹஸோऽபி ॥ 11

அபதம் ததபீக்ஷணம் ஆத்ருதம் யைரபி ஸாக்ஷாத் உபதிஷ்டமாதிதஶ்ச ।
ஜஹஸு: ப்ரதமம் த ஏவ ஶக்ரம் ப்ரக்ருதீநாம் ப்ரபவத்ஸ்வயம் ஸ்வபாவ: ॥ 12

விபிநாத்விபிநம் கிரிம் கிரிப்யோ ஜலராஶேர்ஜலராஶிமந்ததஶ்ச ।
ஜகதோ ஜகதப்யயம் ப்ரதாவந்முமுசே நைவ தயா தியேவ ஜீவ: ॥ 13

நிபுணம் ஸ புரந்தரோ விலில்யே ஸரஸி க்வாபி ஸரோஜநாளதந்தௌ ।
ஶதஶ: ஸமுபாத்தஸப்ததந்தோ: அவலம்பாய பபூவ கோऽபி தந்து: ॥ 14

அவலோக்ய ததந்தரம் சிகீர்ஷன் நஹுஷோ நாம ந்ருபோऽதிகாரமைந்த்ரம் ।
அநியந்த்ருகதாவிஷாதமக்நை: அநுமேநே கதமபி அமர்த்யலோகை: ॥ 15

---

*175* எந்த குறுக்கு வழியை முதல் ஆதரித்தார்களோ, அதற்கு வழியும் சொல்லிக் கொடுத்தார்களோ அவர்களே இப்போது இந்திரன் கதியைக் கண்டு கைகொட்டிச் சிரித்தார்கள் சாமான்ய மக்கள் ஸ்வபாவமே இதுதான். *12*

*176* ஒரு காட்டிலிருந்து மற்றொரு காட்டில் புகுந்தான். ஒரு மலையில் ஏறி இறங்கி, மறு மலையில் ஏறினான். ஒரு ஏரியில் மூழ்கி வெளிவந்து மற்றொரு ஏரியில் மூழ்கினான். பூலோகத்தில் ஜீவனுடைய புண்ய பாப வாஸனை பல பிறவிகளில் தொடர்வதுபோல தொடர்ந்தது விருத்திரஹத்தி. *13*

*177* கெட்டிக்காரத்தனமாக இந்திரன், ஒரு தாமரைப் பொய்கையில் தலைதூக்கிய தாமரையின் அடித்தண்டில் உள்ள நூல் இழையில் மறைந்து கொண்டான். நூற்றுக்கணக்கான ஏழு இழைகளைக் கொண்ட (ஸப்ததந்து) யாகத்தை செய்த அவனுக்கு, தாமரையின் ஒரு இழைதான் (தந்து) புகல் தந்தது. *14*

*178* இந்திரபதவி காலியாக இருப்பதை அறிந்த நஹுஷன் என்ற மஹாராஜன், அக்னியில் ஹோமங்களினால் கட்டுக்கடங்காமல் எழுந்த ஜ்வாலை ஸ்வர்கத்தை எட்டியபோது, அதன் வழியாக ஸ்வர்கத்திற்குச் சென்று. காலியாக இருக்கிற இந்திர பதவியில் அமர்ந்தான். வேறு வழியின்றி தேவர்கள் அனுமதித்தார்கள். *15*

अयथावत् अनुष्ठिताश्वमेधः कियता चैष दिवं गतः शुभेन ।
प्रभुतामपि वर्तयन्सुराणां प्रकृतिं स्वां न जहौ तमः प्रधानाम् ॥ १६

पृथिवीमनुशासतः पुरा ये रिपवस्तस्य महीभुजो बभूबुः ।
अधुना विषयेष्वसावमीषाम् अशिषद्वारिमुचो न वर्षतेति ॥ १७

अहमस्म्यभिवर्षुकः प्रजानां यजनीयश्च ततोऽहमेव तासाम् ।
क इमे हविषो मखे नराणामिति सर्वानयमाक्षिपत्सुधाशान् ॥ १८

सवनोपनतं हविः समस्तं मयि संवेदय मद्गृहीतशेषम् ।
प्रतिपाद्य तस्य तस्य पश्चादिति मूढः प्रशशास हव्यवाहम् ॥ १९

उदधेः सुरसिन्धुतोयपूर्णात् उदपद्यन्त यदद्भुताः पदार्थाः ।
तदियं निपुणं विशोधनीयेत्यखिलं गाङ्गमवाकिरत्स तोयम् ॥ २०

अवनेर्दिवमागतान्स्वयूथ्यान् असकृत्तेषु च शीलितस्वभावान् ।
स हि मूलनलं समग्रहीत्स्वं न विशश्वास निसर्गदैवतानि ॥ २१

बहुभिसतुरगैर्गजैश्च भाव्यं द्युतरून्याचत यद्यमी न दद्युः ।
विनिपातयतेति वीतशङ्कं वनपालान् प्रशशास वैधवेयः ॥ २२

अवितीर्णफला उपासिता अप्यवनिस्थेन पुरात्मना सुरा ये ।
द्विगुणं त्रिगुणं च निर्दयैस्तान्दनुजैरेव स दण्डयाम्बभूव ॥ २३

---

*179 அவன் ஸங்கல்பித்துக்கொண்ட அச்வமேத யாகத்தை விதிப்படி இன்னும் பூர்த்தி செய்யவில்லை. ஆனாலும் அவனுடைய முன் புண்ணியம் தேவலோகத்தை மட்டும் அல்ல,அதன் தலைமை பதவியையே அளித்து விட்டது. ஆனாலும் அவனுடைய தமோகுண ஸ்வபாவம் அங்கேபோயும் அவனை விடவில்லை.* 16

*180 அவன் முன்பு பூமியில் அரசனாக இருந்தபொழுது சில அரசர்கள் அவனுக்கு எதிரிகளாக ஆனார்கள். இந்திரனாக தற்போது ஆளுகின்ற நஹுஷன், மேகங்கள் அந்தச் சத்ருக்களின் நாட்டில் மழை பெய்யாதவாறு தடுத்து விட்டான்.* 17

*181 நானல்லவா மழை பொழிய வைக்கிறேன். மனிதர்கள் எனக்குத்தானே யாகம் செய்ய வேண்டும். இந்த தேவர்களுக்கு எதற்கு ஹவிஸில் பங்கு என்று ஆக்ஷேபித்தான்.* 18

*182 அக்னிதேவனை அழைத்து இவ்வாறு ஆணையிட்டான். ''யாகத்தில் தேவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற ஹவிஸை எல்லாம் என் முன்னே கொண்டு வை. நான் உண்டது போக மிச்சம் மீதியை அவர்களுக்கு பங்கு பிரிப்பாயாக!''* 19

**அயதாவத் அநுஷ்டிதாஶ்வமேத: கியதா சைஷ திவம் கத: ஶுபேந ।**
**ப்ரபுதாமபி வர்தயன் ஸுராணாம் ப்ரக்ருதிம் ஸ்வாம் ந ஜஹௌ தம:ப்ரதாநாம் ॥ 16**

**ப்ருதிவீமநுஶாஸத: புரா யே ரிபவஸ்தஸ்ய மஹீபுஜோ பபூவு: ।**
**அதுநா விஷயேஷ்வஸாவமீஷாம் அஶிஷத் வாரிமுசோ ந வர்ஷதேதி ॥ 17**

**அஹமஸ்ம்யபிவர்ஷுக: ப்ரஜாநாம் யஜநீயஶ்ச ததோऽஹமேவ தாஸாம் ।**
**க இமே ஹவிஷோ மகே நராணாமிதி ஸர்வாநயம் ஆக்ஷிபத் ஸுதாஶான் ॥ 18**

**ஸவநோபநதம் ஹவி: ஸமஸ்தம் மயி ஸம்வேதய மத்க்ருஹீதஶேஷம் ।**
**ப்ரதிபாதய தஸ்ய தஸ்ய பஶ்சாதிதி மூட: ப்ரஶஶாஸ ஹவ்யவாஹம் ॥ 19**

**உததே: ஸுரஸிந்துதோயபூர்ணாத் உதபத்யந்த யதத்புதா: பதார்தா: ।**
**ததியம் நிபுணம் விஶாதநீயேத்யகிலம் காங்கமவாகிரத் ஸ தோயம் ॥ 20**

**அவநேர்திவமாகதான் ஸ்வயூத்யான் அஸக்ருத் தேஷு ச ஶீலிதஸ்வபாவான் ।**
**ஸ ஹி மூலபலம் ஸமக்ரஹீத் ஸ்வம் ந விஶஶ்வாஸ நிஸர்கதைவதாநி ॥ 21**

**பஹுபிஸதுரகைர்கஜைஶ்ச பாவ்யம் த்யுதரூன் யாசத யத்யமீ ந தத்யு: ।**
**விநிபாதயதேதி வீதஶங்கம் வநபாலான் ப்ரஶஶாஸ வைதவேய: ॥ 22**

**அவிதீர்ணபலா உபாஸிதா அப்யவநிஸ்தேந புராத்மநா ஸுரா யே ।**
**த்விகுணம் த்ரிகுணம் ச நிர்தயைஸ்தான் தநுஜைரேவ ஸ தண்டயாம்பபூவ ॥23**

183 ‘‘கடல், தேவகங்கை (மந்தாகினி) சேருவதால் குவிகின்றன விலை மதிப்பற்ற ரத்தினங்கள், அதையெல்லாம் சோதித்துப் பார்க்கவேண்டும்.’’ என்று கங்கை நீரையெல்லாம் வாரி இரைத்தான். 20

184 பூமியிருந்து தன்னைச்சார்ந்த வீரர்கள் ஸ்வர்கம் வரும்பொழுது, அவர்களின் திறமையை முன்பே பரிசீலித்துவிட்டபடியால், அவர்களை தன்னுடைய மூலபலமாக ஆக்கிக் கொண்டான். வெகு நாட்களாக பதவியிலிருந்த தேவர்களிடம் அவனுக்கு நம்பிக்கை இல்லை. 21

185 தீக்ஷிதர் தமிழ்நாட்டு வசை மொழியொன்றை லகுவாக நஹுஷனுக்கு விதிக்கிறார். அந்த விதவை மகனிடம் அவருக்கு அவ்வளவு கோபம். அவனுடைய அடாவடித்தனத்தில் அவ்வளவு வெறுப்பு. நஹுஷன் வனபாலர்களுக்கு கட்டளை இடுகின்றான். ‘‘படர்களே! நீங்கள் போய் நந்தனவனத்திலுள்ள கற்பக தருக்களுக்கு எண்ணற்ற குதிரைகளையும், யானைகளையும் படையுங்கள் என்று ஆணையிடுங்கள். உடனே படைக்காவிட்டால் அவற்றை வெட்டித் தள்ளுங்கள். யோஜனை செய்ய வேண்டாம்.’’ 22

186 தான் மனிதலோகத்தில் இருந்தபோது, தன்னால் உபாஸித்தும், எந்த எந்த தெய்வங்களின் மூலம் வேண்டிய பயனைப்பெறவில்லையோ,

अमरैः प्रतिमासमद्यमानं कुलकूठस्थमवेक्ष्य खेदितोऽसौ ।
अवनाय समादिदेश भृत्यान्सितपक्षात्यय एव शीतभानोः ॥ २४
स स मित्रमभूदमुष्य यं यं पुरुहूतो विरुरोध दानवेषु ।
कथयन्ति कथाममुष्य ये ये कुपितोऽयं ज्वलति स्म तेषु तेषु ॥ २५
शयितुं परिवर्तितुं च बिभ्यन् नयनैर्निर्निमिषैः स सर्वगात्रे ।
नयनानि विभज्य निर्जरा मे प्रतिगृह्णन्त्विति संदिदेश मूर्खः ॥ २६
मृगपक्षिसरीसृपा मनुष्याः पशवो ये निहतास्त्वयाऽश्वमेधे ।
त इमे विचरन्ति हन्तुकामा इति तं शश्वत् अभीषयन्त देवाः ॥ २७
इयमेव शचीति दर्शयन्तो गणिकां कामपि निर्जराः सुराणाम् ।
अतिसंदधिरे सुखेन मूढं प्रभुता का प्रकृतेरसंमतस्य ॥ २८
शिबिकामधिरुह्य जातु गच्छन् स महर्षीन्विनियुज्य तत्र धुर्यान् ।
असकृन्निजगाद सर्प सर्पेत्यपि तं कुम्भभवस्तथा भवेति ॥ २९
अशनिर्ह्य समाप्त एव भोगे पतितो मूर्धनि तस्य शापरूपः ।
अत एव पतन्नपि क्षमायां नहुषो न त्यजति स्म भोगिभावम् ॥ ३०

அவர்களுக்கு, அஸுரர்களைக் கொண்டே, இரண்டு பங்கு மூன்று பங்கு அதிகமான தண்டனைகளை வழங்கச் செய்தான். 23

187 அமாவாஸ்யைதோறும் பித்ரு தர்ப்பணம் செய்கிறார்களே. அவர்களுடைய முன்னோர்கள், மூன்று தலைமுறைக்கு முற்பட்ட குலகூடஸ்தர்களை, தர்பணஜலம் குடிக்கவிடாமல் தேவர்கள் தடுக்கிறார்களாம். அப்படி அவனுடைய குலகூடஸ்தர் திண்டாடினர். அவரைக் காப்பாற்றுமாறு தேவர்களுக்குக் கட்டளையிட்டான் நஹுஷன். எப்பொழுது தெரியுமா? சுக்லபக்ஷமுடிவில், பௌர்ணமியன்று. 24

188 இவனுக்கு முன் பதவியிழந்த புருஹூதன் என்ற இந்திரனுக்கு, அந்த நாட்களில் அஸுரர்களில் எவர் எவர் பகைவரோ, அவர்களை தன் நண்பராக்கிக் கொண்டான். அந்த புருஹூத இந்திரனைப் புகழ்ந்தவர்களை நெருப்பாகச் சுட்டான். 25

189 நஹுஷன் இந்திரனாகிவிட்டதினால் அவனுடைய இந்திரியங்களும் கூடின. உடலெங்கும் புண்கள் போல கண்கள் தோன்றிவிட்டன. அவற்றிற்கு இமைகள் கிடையாது விழித்தபடிதான் இருக்கும். படுத்துக் கொண்டாலோ, புரண்டாலோ ஒரே வேதனை. தேவர்களை அழைத்தான்- ''தேவர்களே! நீங்கள் ஒவ்வொருவரும் என் கண்களை பங்குபோட்டு எடுத்துக் கொள்ளுங்கள்.'' என்றான். 26

அமரை: ப்ரதிமாஸமத்யமாநம் குலகூடஸ்தமவேக்ஷ்ய கேதிதோऽஸௌ ।
அவநாய ஸமாதிதேஶ ப்ருத்யான் ஸிதபக்ஷாத்யய ஏவ ஶீதபாநோ: ॥ 24

ஸ ஸ மித்ரமபூதமுஷ்ய யம் யம் புருஹூதோ விருரோத தாநவேஷு ।
கதயந்தி கதாமமுஷ்ய யே யே குபிதோऽயம் ஜ்வலதி ஸ்ம தேஷு தேஷு ॥ 25

ஶயிதும் பரிவர்திதும் ச பிப்யந்நயநைர்நிர்நிமிஷை: ஸ ஸர்வகாத்ரே ।
நயநாநி விபஜ்ய நிர்ஜரா மே ப்ரதிக்ருஹ்ணாந்த்விதி ஸந்திதேஶ மூர்க்க: ॥ 26

ம்ருகபக்ஷிஸரீஸ்ருபா மநுஷ்யா: பஶவோ யே நிஹதாஸ்த்வயாஶ்வமேதே ।
த இமே விசரந்தி ஹந்துகாமா இதி தம் ஶஶ்வதபீஷயந்த தேவா: ॥ 27

இயமேவ ஶசீதி தர்ஶயந்தோ கணிகாம் காமபி நிர்ஜரா: ஸுராணாம் ।
அதிஸந்ததிரே ஸுகேந மூடம் ப்ரபுதா கா ப்ரக்ருதேரஸம்மதஸ்ய ॥ 28

ஶிபிகாமதிருஹ்ய ஜாது கச்சன் ஸ மஹர்ஷீன் விநியுஜ்ய தத்ர துர்யான் ।
அஸக்ருந்நிஜகாத ஸர்ப ஸர்பேத்யபி தம் கும்பபவந்ததா பவேதி ॥ 29

அஶநிர்ஹ்ய ஸமாப்த ஏவ போகே பதிதோ மூர்தநி தஸ்ய ஶாபரூப: ।
அத ஏவ பதந்நபி க்ஷமாயாம் நஹுஷோ ந த்யஜதி ஸ்ம போகிபாவம் ॥ 30

---

*190 தேவர்கள் இந்திரனை (நஹுஷன்) அணுகி-'' நீ எந்தப் பசுவை யாகத்தில் பலி கொடுத்தாயோ, அதுவும் உன்னுடன் ஸ்வர்கம் வந்து, உன்னை முட்ட வருகிறது. நீ யாகத்தில் பறவைகளை பலி கொடுத்தாயா, அது உன்னைக் கொத்த வருகிறது. நீ நாக பலி கொடுத்தயா, அதோ கருநாகம் உன்னிடம் சீறீக்கொண்டு வருகிறது'' என்று அடிக்கடி பயமுறுத்தினர். 27*

*191 'இவள்தான் சசி தேவி' என்று ஒரு அப்ஸரஸை, அவன்முன் நிறுத்தினான் ஒரு தேவன். அவளிடம் பல்லை இளித்தான் நஹுஷன். தேவர்கள் கைகொட்டிச் சிரித்தார்கள். மக்களால் ஏற்கப்படாத தலைவர்கள் கேலிக்குள்ளாவார்கள். கதியற்றவனுக்கு அதிகாரமளித்தால் அவன் அர்தராத்திரியில் குடைபிடிப்பான் என்கிற வசனமுண்டு. அதைத்தான் தீக்ஷிதர் தன்னுடைய ஹாஸ்யத்திற்கு உபயோகித்துக் கொண்டார். 28*

*192 ஒரு நாள் அவன் பல்லக்கில் ஏறி அமர்ந்து கொண்டு, மஹரிஷிகளை அழைத்து ''பல்லக்கைத் தூக்குங்கள்'' என்றான். அடிக்கடி 'செல்லுங்கள், செல்லுங்கள்' என்று 'ஸர்ப' என்ற சொல்லினால் கூறி அதட்டினான். அவனை அகஸ்திய முனிவர் 'ஸர்பமாவாய்' என்று சாபமிட்டார். 29*

*193 ஸ்வர்கபோகம் முடியுமுன்பே அவன் தலையில் இடி விழுந்தது. அவன் பல்லாக்கிலிருந்து விழுந்தான். ஸர்ப்பமாகவே (நாகமாகவே) விழுந்தான். அவன் போகியாகி விழுந்தான் என்கிறார் கவி. போகி என்ற சொல்லை ஸுகதுக்கபோகி என்றும், பாம்புசரீரம் என்றும் இரு பொருள்களில் குறிப்பிடுகின்றார். 30*

चिरलुप्तकथे मघोनि तस्मिन्नपि तस्य प्रतिरूपके प्रणष्टे ।
अधिगन्तुमनाः प्रवृत्तिमैन्द्रीं युयुजे योगदृशा गुरुः सुराणाम् ॥ ३१

सरसीरुहनाळतन्तुलीनं सरसि कापि समेत्य योगगूढः ।
प्रतिबोधयति स्म देशिकः तं करणीयं करुणाप्लुतैर्वचोभिः ॥ ३२

चकितः समयं कियन्तमस्मिन् सरासि स्थास्यसि खेदयन्नमर्त्यान् ।
न हि संयगनिष्कृतं तदेनः प्रळये प्राकृतिकेऽपि मुञ्चति त्वाम् ॥ ३३

सकलाघनिबर्हणे च समाधौ वसतस्तस्य वधे तु कः समाधिः ।
चरणं परिहृत्य चन्द्रमौलेः कः संसरतां यदाविरिञ्चात् ॥ ३४

चर पाशुपतव्रतं चरन् सवनावायतनानि शांभवानि ।
अनुयास्यति केवलं न तु त्वामधिकुर्वीत शिवाज्ञया तदेनः ॥ ३५

विशतस्तव यत्र संप्रसीदत्यमृतेनेव विशोधितोऽन्तरात्मा ।
करुणावरुणालयो महेशः कलुषं तत्र निवारयिष्यतीति ॥ ३६

स तथेत्यभिनन्द्य शासनं तत्कलितस्वस्त्ययनश्च देशिकेन ।
अधिरुह्य सुरद्विपं प्रतस्थे विविधान्यायतनानि विश्वमूर्तेः ॥ ३७

स गिरीन् हिमशैलमन्दरादीन्सरितो जह्नुसुताकलिन्दजाद्याः ।
विपिनानि च नैमिशादिमानि व्यचरत्पाशुपतव्रती महेन्द्रः ॥ ३८

194 புரந்தரன் என்ற இந்திரனின் கதை உலகில் மறந்து வெகுநாட்களாயின. அவனுக்கு பிரதிநிதியாக வந்தவன் கதையும் தலைகீழாகிவிட்டது. தேவகுருவான ப்ருஹஸ்பதி இந்திரப்பட்டத்தை பற்றி சிந்திக்கலானார். யோக திருஷ்டியினால் என்னதான் இந்திரனுக்கு ஆயிற்று என்று கண்டுபிடித்தார். 31

195 மஹேந்திரன் அந்தக்குளத்தில் தாமரைத் தண்டின் இழையில் மறைந்திருக்கிறான் என்று யோக திருஷ்டியினால் கண்டுபிடித்து, அவனை சந்தித்து, கருணைமிக்க பல குளிர்ந்த வசனங்களினால், குருநாதர் அவனுக்கு இனிச்செய்ய வேண்டியதைக் கூறினார். 32

196பயந்து கொண்டே எத்தனை காலம், தேவர்களை வருத்தத்தில் ஆழ்த்தி, இந்தக் குட்டையில் ஒளிந்திருக்கப் போகிறாய்? அந்த பாபத்தைத் துலைக்க தக்க வழியில் ப்ராயஸ்சித்தம் செய்து கொள்ளாவிட்டால், மஹாபிரளயகாலத்திலும் கூட இந்த பாபம் உன்னை விடாதே. 33

197 ஸகலவிதமான பாபங்களையும் அழித்து விடக்கூடிய ஞானஸமாதியில் அமர்ந்திருந்த விருத்திரனை வதைத்த பழி எப்படித் தீரும்? எப்படி விடுதலை? பரமேச்வரனின் சரணத்தைத் தவிர்த்துவிட்டால், ப்ரஹ்ம தேவன்

**சிரலுப்தகதே மகோநி தஸ்மிந்நபி தஸ்ய ப்ரதிரூபகே ப்ரநஷ்டே ।**
**அதிகந்துமநா: ப்ரவ்ருத்திமைந்த்ரீம் யுயுஜே யோகத்ருஶா குரு: ஸுராணாம் ।। 31**
**ஸரஸீருஹநாளதந்துலீநம் ஸரஸி க்வாபி ஸமேத்ய யோககூட: ।**
**ப்ரதிபோதயதி ஸ்ம தேஶிகஸ்தம் கரணீயம் கருணாப்லுதைர்வசோபி: ।। 32**
**சகித: ஸமயம் கியந்தமஸ்மின் ஸரஸி ஸ்தாஸ்யஸி கேதயந்நமர்த்த்யான் ।**
**ந ஹி ஸம்யகநிஷ்க்ருதம் ததேந: ப்ரளயே ப்ராக்ருதிகேऽபி முஞ்சதி த்வாம் ।। 33**
**ஸகலாகநிபர்ஹணே ஸமாதௌ வஸதஸ்தஸ்ய வதே து க: ஸமாதி: ।**
**சரணம் பரிஹ்ருத்ய சந்த்ரமௌலே: ஶரணம் ஸம்ஸரதாம் யதாவிரிஞ்சாத் ।। 34**
**சர பாஶுபதவ்ரதம் சரன் ஸந்நவநாவாயதநாநி ஶாம்பவாநி ।**
**அநுயாஸ்யதி கேவலம் ந து த்வாமதிகுர்வீத ஶிவாஜ்ஞயா ததேந: ।। 35**
**விஶதஸ்தவ யத்ர ஸம்ப்ரஸீதத்யம்ருதேநேவ விஶோதிதோऽந்தராத்மா ।**
**கருணாவருணாலயோ மஹேஶ: கலுஷம் தத்ர நிவாரயிஷ்யதீதி ।। 36**
**ஸ ததேத்யபிநந்த்ய ஶாஸநம் தத் கலிதஸ்வஸ்த்யயநஶ்ச தேஶிகேந ।**
**அதிருஹ்ய ஸுரத்விபம் ப்ரதஸ்தே விவிதாந்யாயதநாநி விஶ்வமூர்த்தே: ।। 37**
**ஸ கிரீன் ஹிமஶைலகந்தராதீன் ஸரிதோ ஜநுஸுதாகலிந்தஜாத்யா: ।**
**விபிநாநி ச நைமிஶாதிமாநி வ்யசரத் பாஶுபதவ்ரதீ மஹேந்த்ர: ।। 38**

---

*முதல் எந்த தெய்வமும் உனக்கு அடைக்கலம் அளிக்காதே. உலகியல் அகப்பட்டவனுக்கு அவர்தான் கதி.* *34*

*198 பசுபதி உபாஸனை என்ற விரதத்தை மேற்கொள்ள வேண்டும். அதாவது பரமேச்வரனுக்கு பூமியில் எந்த எந்த இடங்களில் ஆலயங்கள் உள்ளனவோ அங்கேயெல்லாம்போய் தரிசனம் செய்யவேண்டும். அந்த விருத்திரஹத்யா மஹாபாபம் அங்கெல்லாம் உன்னை தொடர்ந்து வருமே தவிற உன்மீது அதிகாரம் செலுத்தாது, அப்படி சிவனாரின் ஆணை.* *35*

*199 எந்த ஆலயத்தில் நீ நுழைந்ததும் உன் அந்தராத்மா தெளிவு அடையுமோ அங்கே கருணைக் கடலான மஹேசன் உனக்கு அருள் பாப்பார். அந்த பாபத்தை உன்னிடமிருந்து அப்பொழுதே விலக்கிவிடுவார்.* *36*

*200 'அவ்விதமே செய்வேன்' என்று தலைவணங்கி குருதேவனின் ஆணையை ஏற்றான் இந்திரன். குருதேவர் அவனுக்கு மங்களாசாஸனம் செய்தார். ஐராவதம் என்கிற தேவயானையின் மீது அமர்ந்து, உலகமெங்கும் அமைந்துள்ள சிவாலயங்களைத் தேடிக் கிளம்பினான்.* *37*

*201 அவன் ஹிமாலயம், மந்தரம் முதலிய திவ்ய க்ஷேத்திரங்களையும், கங்கை, யமுனை முதலிய புண்ணிய திவ்ய நதிகளையும், நைமிசம் முதலிய தெய்வீக வனங்களையும், பசுபதி யாத்திரை என்ற மஹாவிரதத்தை ஏற்றுக் கொண்டு யாத்திரை செய்தான்.* *38*

स तपोवनदर्शमध्युवास प्रयतः सत्रिममज्ज तीर्थदर्शम् ।
द्विजवेदमतर्पयद्धनौघै र्व्रतवेदं नियतः समाचचार ॥ ३९

त्रिविधान्यपि शांभवानि लिङ्गानि अयजद्वस्तुभिरान्तरैश्च बाह्यैः ।
लभते स्म न शान्तिमात्मनोऽयं क्वचिदप्येषु कुतो हि पातकस्य ॥ ४०

स तपांसि बहूनि तप्यमानः कलुषेणानुयतानुतप्यमानः ।
भवबन्धनिराकरिष्णुशाखांपवनं नीपवनं समाससाद ॥ ४१

उपहारमनुत्तमं पुरारेः अवतंसात्पलसौरभं हरन्तः ।
अभिजग्मुरिवानिलास्तदीया अतिथिं स्वामिनमागतं चिराय ॥ ४२

स कदम्बवनीपरागलेशैः शिवगङ्गोदकशीकरानुविद्धैः ।
पवनोपहृतैः पतिः सुराणां परमां कामपि निर्वृतिं जगाहे ॥ ४३

प्रससाद मनः प्रसेदुरक्षीण्युपजज्ञे बलमुद्बभूव शौर्यम् ।
स हि संनिचकर्ष यावदित्थं कलुषं विप्रचकर्ष तावदस्य ॥ ४४

अतिहृष्टमनाः स तैर्निमित्तैः अनुसंधाय गिरं पुरोधसस्ताम् ।
परिनिश्चिनुते स्म तत्त्रिलोक्यां परमं धाम हरिः परस्य धाम्नः ॥ ४५

सकलाद्भुतधाम्नि सीम्नि तस्यां सहसैवायमवाप्लुतो गजेन्द्रात् ।
प्रयतः प्रविवेश काननं तत् सह सर्वैश्च विना तदेकमेनः ॥ ४६

---

*202 ஒவ்வொறு க்ஷேத்திரத்தை தரிசனம் செய்தவுடன், அதற்குறிய நியமங்களை அனுஷ்டித்தான். தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தான் பிராஹ்மணன் என்று தெரிந்தால் வாரி வழங்கினான். வ்ரதம் என்று ஒன்றை அறிந்தால் அதை அனுஷ்டித்தான் த்விஜே விதிதே, வ்ரதே விதிதே இதி ஸமாஸ:* 39

*203 க்ஷேத்திரங்களில் மூர்த்தி, யந்த்ரம், லிங்கம் என்ற மூன்று மூர்த்திகளை, அந்தரங்க பக்தியோடும், உயர்ந்த திரவ்யங்களாலும், விசேஷமான வழிபாடுகளையும் செய்தான். எங்கும் அவனுக்கு மன அமைதி கிட்டவில்லை. பாப நிவிருத்தியும் ஆகவில்லை.* 40

*204 ஆங்காங்கு பலவிதமான தவங்களை மேற்கொண்டான். பின்தொடர்ந்து கொண்டு வருகின்ற பாவம் அவனை குடைந்து கொண்டே இருந்தது. கடைசியாக ஸம்ஸார பந்தத்தை நீக்கக்கூடிய நீபவனத்திற்கு வந்து சேர்ந்தான். 41*

*205 பரமேச்வரனுக்கு உத்பலமலரை தலையில் சூட்டிக் கொள்வதில் அபார பிரியம் உண்டு. அதைக் காட்டிலும் உயர்ந்த காணிக்கை வேறொன்றும் இருக்கமுடியாது. வாயுதேவனின் கிங்கரர்களான காற்றுகள் வெகு*

CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

ஸ தபோவநதர்ஶமத்யுவாஸ ப்ரயத: ஸந்நிமமஜ்ஜ தீர்ததர்ஶம் ।
த்விஜவேதமதர்பயத் தநௌகைர் வ்ரதவேதம் நியத: ஸமாசசார ॥ 39
த்ரிவிதாந்யபி ஶாம்பவாநி லிங்காந்யயஜத்வஸ்துபிராந்தரைஶ்ச பாஹ்யை: ।
லபதே ஸ்ம ந ஶாந்திமாத்மநோऽயம் க்வசிதப்யேஷு குதோ ஹி பாதகஸ்ய ॥ 40
ஸ தபாம்ஸி பஹூநி தப்யமாந: கலுஷேணாநுயதாநுதப்யமாந: ।
பவபந்தநிராகாரிஷ்ணுஶாகா பவநம் நீபவநம் ஸமாஸஸாத ॥ 41
உபஹாரமநுத்தமம் புராரே: அவதம்ஸோத்பலஸௌரபம் ஹரந்த: ।
அபிஜக்முரிவாநிலாஸ்ததீயா அதிதிம் ஸ்வாமிநம் ஆகதம் சிராய ॥ 42
ஸ கதம்பவநீபராகலேஶை: ஶிவகங்கோதகஶீகராநுவித்தை: ।
பவநோபஹ்ருதே: பதி: ஸுராணாம் பரமாம் காமபி நிர்வ்ருதிம் ஜகாஹே ॥ 43
ப்ரஸஸாத மந: ப்ரஸேது: அக்ஷீண்யுபஜஜ்ஞே பலமுத்பபூவ ஶௌர்யம் ।
ஸ ஹி ஸந்நிசகர்ஷ யாவதித்தம் கலுஷம் விப்ரசகர்ஷ தாவதஸ்ய ॥ 44
அதிஹ்ருஷ்டமநா: ஸ தைர்நிமித்தை: அநுஸந்தாய கிரம் புரோதஸஸ்தாம் ।
பரிநிஶ்சிநுதே ஸ்ம தத் த்ரிலோக்யாம் பரமம் தாம ஹரி: பரஸ்ய தாம்ந: ॥ 45
ஸகலாத்புததாம்நி ஸீம்நி தஸ்யாம் ஸஹஸைவாயம் அவாப்லுதோ கஜேந்த்ராத் ।
ப்ரயத: ப்ரவிவேஶ காநநம் தத் ஸஹ ஸர்வைஶ்ச விநா ததேகமேந: ॥ 46

---

*நாட்களுக்குப் பிறகு தமது பிரபுவான இந்திரனுக்கு, பரமேச்வரனின் தலையில் சூடிய உத்பலமலரின் மணத்தை காணிக்கையாக அளித்து மகிழ்ந்தன.* 42

*206 நறுமணமுள்ள கதம்பவனத்தின் மலர் மகரந்தங்கள் கலந்த சிவகங்காதீர்த்தத் துளிகள் மேலே படும்பொழுதே, தேவேந்திரன் இதற்கு முன் இல்லாத உயர்ந்த மன நிம்மதியை அடைந்தான்.* 43

*207 மனது தெளிவுற்றது. கண்கள் மலர்ந்தன. உடம்பில் தெம்பு கூடியது. சூரத்தனம் மிகுந்தது. இவ்வாறு அவன் முன்னேறிக் கொண்டே வரும் பொழுது, மனக் கலக்கம் தானகவே விலகியது. பாபங்களும் நீங்கின* 44

*208 இவ்விதமான நல்ல நிமித்தங்களால் மிகவும் மகிழ்ந்த இந்திரன் குருநாதரின் உபதேசங்களை நினைத்துக் கொண்டான். மூவுலகிலும் இந்த இடமே பரமேச்வரனுக்கு உகந்த, மிகவும் சிறந்ததான ஸ்தானம் என்று எண்ணினான் (ஹரி: இந்த்ர:)* 45

*209 ஸகல அத்புதங்களுக்கும் எல்லைபோல் விளங்கும் அந்த பிரதேசத்தில் இந்திரன் ஐராவதத்திருந்து இறங்கினான். பணிவுடன் அந்த கானகத்தில் மற்ற எல்லோருடனும் பிரவேசித்தான். (அந்த விருத்ரஹத்யா பாபம் ஒன்றைத் தவிர.)* 46

स दद‍र्श फणातपत्रगुप्तान्नकुलानातपतापितान् अहीनाम् ।
अपि दृप्तचरत्तरक्षुदंष्ट्रामुखकण्डूयितलोचनां कुरङ्गीम् ॥ ४७

स लतां कमपि द्रुमं प्रपन्नां सविधस्थान्यतरूपगूहभीत्या ।
प्रतिसंहृतपल्लवां अपश्यत्परिकृष्टामपि कौतुकात्किरातैः ॥ ४८

उपहृत्य चलद्द्रुमप्रवालान् कदलीरिक्षुलता मृणालिनीश्च ।
नमतः शतशः हरेः समक्षं न विषेहे वनकुञ्जरान्सुरेभः ॥ ४९

पथि वीक्षितवद्भिः आदरेण प्रमथैः पाशुपतैर्महर्षिभिश्च ।
सविधं तपसाऽतिनिर्मलोऽयं समुपानीयत सुन्दरेश्वरस्य ॥ ५०

अविचिन्त्यम् अदृष्टम् अश्रुतं च त्रिषु लोकेष्वपि दिव्यलिङ्गमेतत् ।
विकचैर्नयनोत्पलैर्बिडौजा विचकार प्रथमोपहारहेतोः ॥ ५१

प्रमदाश्रुपरिप्लुतैस्तदानीं नयनैराचरणाग्रमाललाटम् ।
द्रवतां प्रतिपद्य भक्तियोगात् ददृशे वारिमयीव तस्य मूर्तिः ॥ ५२

अथ दण्डवदानतस्य शंभौ ददृशे दृष्टिमयी तनुर्मघोनः ।
उपहारकृते पुरो विकीर्णा विकचेन्दीवरमालिकेव दिव्या ॥ ५३

सगणं सवृषं सनन्दिकेशं ससुतं साम्बमपि प्रभुं तमाद्यम् ।
परिपूजयितुं चकाङ्क्ष शक्रो महतामेव मनोरथोऽपि तावान् ॥ ५४

---

210 அங்கு அவன் சில ஆச்சரியமான காட்சிகளைக் கண்டான். விஷவேகம் நீங்காமல் சீறுகின்ற சில பெரிய நாகங்கள் படம் விரிக்க, அவற்றின் நிழல்களில் படுத்திருக்கும் கீரி, சிறுத்தை, புலி தன்னுடைய கோரை பற்களால் ஒரு பெண்மானின் முகத்தை மிருதுவாக சொரிந்து கொண்டிருந்தது. 47

211 கொடியொன்று ஒரு மரத்தைச் சுற்றிக் கொண்டிருந்தது. அம்மரத்தின் அருகிலுள்ள மற்றொரு மரம் தன்னுடைய நீண்ட கிளையினால் அதை இழுக்க முனைந்தது. அதற்கு பயந்து முன் மரம் தன்னுடைய நுனிக்காம்பால் அந்தக்கொடியை இழுத்துக்கொண்டது. வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த வேடர்கள் கூட அந்தக்கொடியை இழுத்தனர். ஆனால் அந்த மரம் விட்டுக் கொடுக்கவில்லை. 48

212 அசைகின்ற மரங்களில் தொங்குகின்ற பவளக்கொடிகளையும்,வாழைக் குலைகளையும், கரும்புக் கொழுந்துகளையும், குளங்களிருந்து தாமரைக் கொடிகளையும் இந்திரன் ஐராவதத்திற்கு ஸமர்ப்பித்தான். ஐராவதம் அங்கு ஸஞ்சரிக்கின்ற காட்டுயானைகளை அலட்சியம் செய்துகொண்டு சென்றது. இந்திரன் அதை ரஸித்துக் கொண்டே இருந்தான். 49

ஸ ததர்ஶ பணாதபத்ரகுப்தான் அகுலாநாதபதாபிதான் அஹீநாம் ।
அபி த்ருப்தசரத்தரக்ஷுதம்ஷ்ட்ராமுககண்டூயிதலோசநாம் குரங்கீம் ।। 47
ஸ லதாம் கமபி த்ருமம் ப்ரபந்நாம் ஸவிதஸ்தாந்யதரூபகூஹபீத்யா ।
ப்ரதிஸம்ஹ்ருதபல்லவாமபஶ்யத் பரிக்ருஷ்டாமபி கௌதுகாத் கிராதை: ।। 48
உபஹ்ருத்ய சலத்ருமப்ரவாலான் கதலீரிக்ஷுலதா ம்ருணாலிநீஶ்ச ।
நமத: ஶதஶோ ஹரே: ஸமக்ஷம் ந விஷேஹே வநகுஞ்ஜரான் ஸுரேப: ।।49
பதி வீக்ஷிதவத்பி: ஆதரேண ப்ரமதை:பாஶுபதைர்மஹர்ஷிபிஶ்ச ।
ஸவிதம் தபஸாऽதிநிர்மலோऽயம் ஸமுபாநீயத ஸுந்தரேஶ்வரஸ்ய ।। 50
அவிசிந்த்யம் அத்ருஷ்டம் அஶ்ருதம் ச த்ரிஷு லோகேஷ்வபி திவ்யலிங்கமேதத் ।
விகசைர்நயநோத்பலைர்பிடௌஜா விசகார ப்ரதமோபஹாரஹேதோ: ।। 51
ப்ரமதாஶ்ருபரிப்லுதைஸ்ததாநீம் நயநைராசரணாக்ரம் ஆலலாடம் ।
த்ரவதாம் ப்ரதிபத்ய பக்தியோகாத் தத்ருஶே வாரிமயீவ தஸ்ய மூர்த்தி: ।। 52
அத தண்டவதாநதஸ்ய ஶம்பௌ தத்ருஶே த்ருஷ்டிமயீ தநுர்மகோந: ।
உபஹாரக்ருதே புரோ விகீர்ணா விகசேந்தீவரமாலிகேவ திவ்யா ।। 53
ஸகணம் ஸவ்ருஷம் ஸநந்திகேஶம் ஸஸுதம் ஸாம்பமபி ப்ரபும் தமாத்யம் ।
பரிபூஜயிதும் சகாங்க்ஷ ஶக்ரோ மஹதாமேவ மநோரதோऽபி தாவான் ।। 54

---

*213 இந்திரன் வழியோடு போய்க்கொண்டிருந்தான். தவத்தினால் பரிசுத்தனாகி விளங்குவதைப் பார்த்த சிவனுடைய ப்ரமதகணங்களும், மஹரிஷிகளும் வழியில் அவனைப் பார்த்து, ஆதரவுடன் ஸுந்தரேசனுடைய முன்னிலைக்கு அழைத்து வந்தனர். 50*

*214 இதுவரை இந்திரன் நினைத்துக்கூட பார்த்ததில்லை. மூவுலகங்களிலும் எங்கும் பார்த்ததில்லை. கேள்விப்பட்டதும் இல்லை. திகைப்போடு தன்னுடைய விரிந்த கண்களினால் உத்பல மாலையாகவே முதன் முதல் அந்த திவ்ய லிங்கத்தை பூஜித்தான். 51*

*215 அவனுடைய திருவடிமுதல் நெற்றி வரை உடல் முழுவதும் உள்ள கண்களிருந்து ஆனந்தக்கண்ணீர் பெருகியது. பக்தி மேலிட உருக்கம் அதிகமாகி, தீர்த்தமே இந்திரவடிவம் ஆகிவிட்டான் போலும்! 52*

*216 தண்டம் போல் வீழ்ந்து வணங்கினான். உடல் முழுவதும் மலர்ந்த கண்களுடன் சிவபெருமானை நெருங்கிய பொழுது. இந்தீவரமலர் மாலையே சிவபெருமானுக்கு ஸமர்பிக்கப்பட்டதுபோல் இருந்தது. 53*

*217லிங்கவடிவில் இருக்கும் திவ்ய மங்கள மூர்த்தியைச்சுற்றி இந்திரன்,பகவானுடைய பரிவாரங்களான வாஹனம் விருஷபம். அதிகாரநந்தி, வினாயகர், முருகன், இவர்களுடன் சேர்த்து வைத்து பூஜிக்க*

स्मृतसन्निहितोऽथ विश्वकर्मा सह दिव्येन पुरोधसा तदानीम्।
शिरसा प्रतिगृह्य भर्तुराज्ञामयतिष्टायतनाय चन्द्रमौलेः ॥ ५५

विधृतं करिभिर्विमानरूपं विपुलं प्राक्प्रतिहारमेकभूमम्।
शिखरोल्लिखिताम्बरं च स शिल्पी विदधे गर्भगृहं शुभे विलग्ने ॥ ५६

अतिसुन्दरमर्धमण्डपं च प्रतिहारत्रयभावितान्तरेण।
महता मणिमण्डपेन सक्तं विदधे विश्वशुभाय विश्वकर्मा ॥ ५७

प्रतिमाः परिवारदेवतानां विविधान्यायतनानि तत्र तासाम्।
परितः परितोऽपि पञ्च सालान् अकरोदुन्नतगोपुर उपगूढान् ॥ ५८

शुभवास्तुनि शूलपुष्करिण्या रुचिरे रोधासि पश्चिमे स शिल्पी।
भवनं मणिचित्रितं भवान्या गणनाथस्य च कल्पयांबभूव ॥ ५९

अपराणपि मण्डपप्रभेदानभितश्चोत्सववीथिका विशालाः।
असृजत्स मरुत्वतोऽनुरूपान् प्रभुताभक्तिविवेकपाटवानाम्॥ ६०

प्रहसद्वदनं प्रसन्ननेत्रं द्विभुजं दक्षिणतो धृतोत्पलं च।
करकोपलवर्षनीभवन्त्या दययेवाकृत विग्रहं स देव्याः ॥ ६१

अधिकानि ममेत्यहर्निशं यैः मघवा शोचति लोचनैः समन्तात्।
अवलोक्य स विश्वकर्मकर्माणि अलमेतानि किमित्यशोचदेभिः ॥ ६२

வேண்டும் என்று நினைத்தான். மஹான்களுக்குத்தான் இப்படியெல்லாம் ஸங்கல்பங்கள் ஏற்படும். 54

218 நினைத்தவுடன் எதிரே நின்றான் தேவலோக சிற்பி விசுவகர்மா. தேவ புரோகிதர் பிருஹஸ்பதியும் வந்து சேர்ந்தார். எஜமானனின் ஆணையைத் தலைமேல் ஏற்று சந்திரமௌளீச்வரருக்கு மஹாலயம் கட்ட முனைந்தான். 55

219 அந்த சிற்பி ஒரு மங்கள வேளையில் கர்பகிருஹத்தை நிர்மாணித்தான். அதன்மேல் விமானத்தை நான்கு யானை பிம்பங்கள் நான்கு மூலைகளில் தாங்கி நின்றன. எதிரே விஸ்தாரமான மண்டபங்கள். உத்ஸவ மண்டபங்கள் விஸ்தாரமான இடத்தில் பொருத்தமாக அமைந்தன. ஆகாச விளிம்பை தொட்டன கோபுரங்கள். 56

220 பிறகு விச்வகர்மா அழகான அந்த மண்டபத்தையும், ஒன்றைச்சுற்றி மற்றொன்றாக மூன்று பிராகாரங்களையும் படைத்தான். பூமண்டலத்திற்கே மங்கள ஓங்கார ஓசை தருகின்றபடி நடுவில் ஒரு கண்டா மணி மண்டபத்தையும் நிர்மாணித்தான். 57

ஸ்ம்ருதஸந்நிஹிதோऽத விஶ்வகர்மா ஸஹ திவ்யேந புரோதஸா ததாநீம் ।
ஶிரஸா ப்ரதிக்ருஹ்ய பர்துராஜ்ஞாமயதிஷ்டாயதநாய சந்த்ரமௌலே: ॥ 55

வித்ருதம் கரிபிர்விமாநரூபம் விபுலம் ப்ராக்ப்ரதிஹாரமேகபூமம் ।
ஶிகரோல்லிகிதாம்பரம் ஸ ஶில்பீ விததே கர்பக்ருஹம் ஶுபே விலக்நே ॥ 56

அதிஸுந்தரம் அர்தமண்டபம் ச ப்ரதிஹாரத்ரய பாவிதாந்தரேண ।
மஹதா மணிமண்டபேந ஸக்தம் விததே விஶ்வஶுபாய விஶ்வகர்மா ॥ 57

ப்ரதிமா: பரிவாரதேவதாநாம் விவிதாந்யாயதநாநி தத்ர தாஸாம் ।
பரித: பரிதோऽபி பஞ்ச ஸாலான் அகரோத் உந்நதகோபுர உபகூடான் ॥ 58

ஶுபவாஸ்துநி ஶைலபுஷ்கரிண்யா ருசிரே ரோதஸி பஶ்சிமே ஸ ஶில்பீ ।
பவநம் மணிசித்ரிதம் பவாந்யா கணநாதஸ்ய ச கல்பயாம்பபூவ ॥ 59

அபராநபி மண்டபப்ரபேதான் அபிதஶ்சோத்ஸவவீதிகா விஶாலா: ।
அஸ்ருஜத் ஸ மருத்வதோऽநுரூபான் ப்ரபுதாபக்திவிவேகபாடவாநாம் ॥ 60

ப்ரஹஸத்வதநம் ப்ரஸந்நநேத்ரம் த்விபுஜம் தக்ஷிணதோ த்ருதோத்பலம் ச ।
கரகோபலவர்ஷநீபவந்த்யா தயயேவாக்ருத விக்ரஹம் ஸ தேவ்யா: ॥ 61

அதிகாநி மமேத்யஹர்நிஶம் யைர் மகவா ஶோசதி லோசநை: ஸமந்தாத் ।
அவலோக்ய ஸ விஶ்வகர்மகர்மாணி அலமேதாநி கிமித்யஶோசதேபி: ॥ 62

---

221 பரிவார தேவதைகளுக்கெல்லாம் பிம்பங்கள். அவைகளுக்கேற்றார்போல் தனிஆலயங்கள், நான்கு பக்கங்களிலும் வீதிகளுக்கிடையே கோட்டைச் சுவர்கள். அவற்றின் வாசல் நடுவே ராஜகோபுரங்கள் நிர்மாணமாயின. 58

222 பொற்றாமரைக் குளத்தைச் சுற்றி வாஸ்து தெய்வங்களுக்கு இடம் வகுத்தான். குளத்திற்கு மேற்கே தேவிக்கு ரத்தினம் இழைத்த பெரிய ஆலயமும், மஹாகணபதிக்கு தனிக்கோயிலும் எடுத்தான். 59

223 இதைத் தவிர சில அழகான தனி மண்டபங்களையும், அந்த அந்த உத்ஸவங்களுக்கு தனித்தனியாக கோவிலைச் சுற்றி ஒன்றன்பின் ஒன்றாக, இந்திரனுடைய அந்தஸ்து, பக்தி விதரணை இவற்றிற்கு ஏற்றவாறு, வீதிகள் அமைத்தான். 60

224 தேவிக்கு ஒரு அத்புதமான விக்ரஹம் தயாரானது. முகத்தில் விரிந்த புன்னகை, மலர்ந்த கண்களில் கவரும் கிருபை இரண்டு கைகளிலே ஒன்றில் உத்பலமலர், மற்றொன்றில் கிளி. தேவியின் உள்ளத்தில் உருகுகின்ற கிருபை குளிர்ந்து பனிக்கட்டியாகி பெண் உருவம் எடுத்ததோ! 61

225 இந்திரனுக்கு ஆயிரம் கண்கள். நாற்புறமும் பார்க்கின்றன. தேவியோ ஒருதிசையில் தான் தரிசனம் அளிக்கின்றாள். அந்தப் பக்கத்திலுள்ள கண்கள் எங்களுக்குத்தான் அதிருஷ்டம் அதிகம் என்று குதித்தன. மற்றக் கண்கள்

दयितस्य दिदृक्षतेऽपसव्यं वपुरेषा किल वामभागगेति।
कृतमिङ्गितवेदिना मघोना पदमस्याः किं दक्षिणेन शंभुम् ॥ ६३

अतिचारुमशेषलक्षणाढ्यं ललितं बिम्बमिमं स्वतो विवक्षुम्।
हरिरर्थयते स्म शक्तिमाद्यां गुरुरावाहयत् अन्वमंस्त शंभुः ॥ ६४

अखिलं जगदातमसंप्रसूतं परिपुष्णाति दृगेव यत्किलास्याः।
अभिधामपि मीनलोचनेति व्यदधादिन्द्रपुरोहितस्ततोऽस्याः ॥ ६५

नियतां कनकारविन्दपूजां दिविजैः कर्तुमना हरिः सरोजैः।
पवनं प्रजिघाय देवदूतं स्वयमस्नात् अथ शूलपुष्करिण्याम् ॥ ६६

कृतनित्यविधौ विलम्बमाने शिवमभ्यर्चयितुं क्षणं सुरेशे।
कमलैरुदभावि जातरूपैः कमलिन्यां अति सौरभैरमुष्याम्॥ ६७

स्वयमाहरत् अर्चनाय शंभोः सुरभीण्यम्बुरुहाणि काञ्चनानि।
कनकाम्बुजिनीति नाम तस्याः कलयन्विस्मित एष सस्मितश्च ॥ ६८

क्व नु काञ्चनता क्व सौरभं दिवि संकल्पभवेषु पंकजेषु।
प्रभवत्यखिलं हि निर्जराणां ध्रुवमाध्यासिकतत् अदर्थवन्नः ॥ ६९

---

இந்திரனிடம் புகார் செய்தன. இந்திரன் சமாதானப்படுத்தினான். விச்வகர்மாதான் நாற்புறமும் கண்கொள்ளாக் காட்சிகளை அமைத்திருக்கிறான். உங்களுக்குக்கிடைப்பது அவர்களுக்குக் கிடையாதே. ஸந்தோஷப்படுங்கள். உங்களுக்கு இந்தக் கண்கள் போதுமா? இந்திரனே இப்படித்தான் மகிழ்ந்தான். 62

226 பகவானுடைய ஸ்வரூபத்தில் இடப்பக்கத்திலே தேவி இருக்கிறாளே. கணவனுடைய வலப்புறத்திலே இருந்தால் தேவலையே என்று இந்திரன் நினைத்தான். அவன் இங்கிதம் அறிந்தவன். தேவியின் விருப்பம் பகவானின் வலப்புறம்தான் இருக்க வேண்டும் என்று அதையறிந்து தேவிக்கு வலது புறத்தில் ஆலயம் எழுப்பினான். 63

227 இந்திரன் தேவியிடம் - 'அம்மா! தங்கள் பிம்பம் தங்களைப் போலவே அழகாகவும், ஸகல லக்ஷணங்களும் பொருந்தியதாகவும், மிகவும் உல்லாஸமாகவும் அமைய வேண்டுமே. தாங்களே சொல்லுங்களேன்', - என்று பிரார்த்தித்தான். தேவி குருவை (அகஸ்தியரை / பிருஹஸ்பதியை) கடாக்ஷித்தாள். அவருடைய த்யானத்தில் தேவி தோன்றினாள். அதை அப்படியே ருஷி வர்ணித்தார். பரமேச்வரன் அதை ஆமோதித்தார். 64

228 தான் படைத்த அகில உலக ஜீவன்களையும் கண்களாலேயே தேவி பரிபாலிக்கின்றாள். மீன் இப்படித்தான் தன் குஞ்சுகளை பரிபாலிக்கின்றது.

தயிதஸ்ய தித்ருக்ஷதேऽபஸவ்யம் வபுரேஷா கில வாமபாககேதி ।
க்ருதமிங்கிதவேதிநா மகோநா பதமஸ்யா: கிமு தக்ஷிணேந ஶம்பும் ।। 63

அதிசாரும் அஶேஷலக்ஷணாட்யம் லலிதம் பிம்பமிமம் ஸ்வதோ விவிக்ஷும் ।
ஹரிரர்த்தயதே ஸ்ம ஶக்திமாத்யாம் குருராவாஹயத் அந்வமம்ஸ்த ஶம்பு: ।। 64

அகிலம் ஜகதாத்மஸம்ப்ரஸூதம் பரிபுஷ்ணாதி த்ருகேவ யத் கிலாஸ்யா: ।
அபிதாமபி மீநலோசநேதி வ்யததாத் இந்த்ரபுரோஹிதஸ்ததோऽஸ்யா: ।। 65

நியதாம் கநகாரவிந்தபூஜாம் திவிஜை: கர்துமநா ஹரி: ஸரோஜை: ।
பவநம் ப்ரஜிகாய தேவதூதம் ஸ்வயமஸ்நாதத ஶூலபுஷ்கரிண்யாம் ।। 66

க்ருதநித்யவிதௌ விலம்பமாநே ஶிவமப்யர்சயிதும் க்ஷணம் ஸுரேஶே ।
கமலைருதபாவி ஜாதரூபை: கமலிந்யாமதிஸௌரபைரமுஷ்யாம் ।। 67

ஸ்வயமாஹரத் அர்சநாய ஶம்போ: ஸுரபீண்யம்புருஹாணி காஞ்சநாநி ।
கநகாம்புஜிநீதி நாம தஸ்யா: கலயன் விஸ்மித ஏஷ ஸஸ்மிதஶ்ச ।। 68

க்வ நு காஞ்சநதா க்வ ஸௌரபம் தத்திவி ஸங்கல்பபவேஷு பங்கஜேஷு ।
ப்ரபவத்யகிலம் ஹி நிர்ஜராணாம் த்ருவமாத்யாஸிகதத்ததர்தவந்ந: ।। 69

---

ஆகவே தேவிக்குப் பொருத்தமான மீனலோசனா --மீனா என்ற பெயரை இந்திரனுடைய புரோஹிதரான பிருஹஸ்பதி வைத்தார். 65

229 தினம் தோறும் ஒரு பொற்றாமரையினாலே பூஜை நடைபெற வேண்டுமென்றும், அது ஸ்வர்கத்திலிருந்து வரவேண்டுமென்றும், இந்திரன், வாயு பகவானை தூது அனுப்பினான். அவன் சூலபுஷ்கரணியில் ஸ்நானம் செய்தான். 66

230 இந்திரன் தன்னுடைய நித்ய கர்மாக்களைச் செய்துமுடித்துவிட்டு சிவ பூஜைக்காக ஒரு கணம் தாமதித்தான். அதற்குள் புஷ்கரணியில் தங்கத் தாமரைகள் 'கம்' என்று திவிய மணத்தைப் பரப்பிக்கொண்டு தோன்றின. 67

231 பரமேச்வரனை பூஜிப்பதற்காக இந்திரன் தானே அந்த பொற்றாமரைகளைப் பறித்தான். அதன் மணம் எங்கும் பரவியது. அந்த தடாகத்திற்கு கனகாம்புஜினீ- பொற்றாமரைக்குளம்- என்ற பெயரை வைத்தான். அவற்றைப் பார்த்து வியப்புடன் புன்னகை புரிந்தான். 68

232 'பொன்மலர் நாற்றமுடைத்து' என்றும் அப்படியொன்றும் கிடையாது என்று தெரிந்து கொண்டே புகழ்வார்கள். பொற்றாமரையாவது! மணமுள்ளதாவது! தேவேந்திரனுடைய ஸங்கல்பத்தினால் அல்லவோ அப்படி ஏற்பட்டது! நாம் கிளிஞ்சலை வெள்ளி என்று சொன்னால் அது வெள்ளியாகாது. ஆனால், தேவர்கள் சாதாரணத் தாமரையை தங்கத்தாமரை என்று சொன்னால் அது தங்கத்தாமரையாகிவிடும். 69

सलिलैः अतिपावनैस्तदीयैः कमलेरप्यतिसौरभैर्महेन्द्रः ।
परिपूज्य शिवौ गुरूक्तरीत्या प्रणिपातैः परितोषयांबभूव ॥ ७०

अपि गद्गदया प्रमोदबाष्पैरपि सारोज्झितय अतिसंभ्रमेण ।
पितरौ प्रियकप्रियौ सुरेशः स गिरानर्च वचःपथव्यतीतौ ॥ ७१

भुवि सुन्दरमास्पदं तवैतच्छिवलिङ्गं तु ततोऽपि सुन्दरं ते ।
अपि सुन्दरमेव सुन्दराणामभिधानं वचनामृतं त्वदीयम् ॥ ७२

समसेविषि मन्दरे हिमाद्रौ कलधौताचलकन्दरेऽपि च त्वाम् ।
विदितं तु परं न विश्वपारं किमु तत्रैवमसीति कापि शङ्का ॥ ७३

न मखैर्न जपैर्न होमदानैः न तपोभिर्विविधेश्च लभ्यते यत् ।
तदिदं तव संनिधानभाग्यं तरुभिः कैरपि भुज्यते निरीहैः ॥ ७४

निहता दनुजा जिता त्रिलोकी त्रिदिवे चाधिकृतं ततः किमासीत् ।
इह ये मृगपक्षिणो न हीमानपि नीराज्य विमोक्मर्हता मे ॥ ७५

अपवृज्य किमीश साधयेयं भवदानन्दम् अवाप्नुयां तदाहम् ।
किमितोऽप्यधिकः स यो ममासावुचितः स्वाम्युपलम्भजः प्रमोदः ॥ ७६

जडमेव जगत्तव स्वमासीदजडाः केचन मादृशोऽपि जीवाः ।
अतिवाङ्मनसं भवन्तमेव प्रतिपन्नास्तु वयं प्रशासितारम् ॥ ७७

---

233 அந்த பொற்றாமரைக் குளத்தின் மிகத் தூய்மையான நீரினால் அபிஷேகம் செய்து அதில் தோன்றிய மணம் மிகுந்த தாமரைகளால் அர்ச்சித்தான் மஹேந்திரன், ஆசாரியன் காட்டிய வழியில், இரு தெய்வங்களையும் பக்தியுடன் பூஜித்து விழுந்து விழுந்து வணங்கி ஸந்தோஷப்படுத்தினான். மீனாக்ஷியும் ஸுந்தரேச்வரரும் மகிழ்ந்தனர் 70

234 தேவேந்த்ரன், நெகிழ்ந்த கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருக, தழுதழுத்த குரலில், சொற்களுக்கு அப்பாற்பட்டவர்கள் ஆயினும், பெற்றோர்கள் என்ற உறவுடன் அன்புடன் ஆராதித்தான். 71

235 புவியில் உனது இந்த ஆலயம் அழகானது, அழகனே! உனக்கு வடிவமாக அமைந்துள்ள இந்த சிவலிங்கம் மிகவும் அழகானது. அழகுக்கெல்லாம்அழகு தருகின்ற தங்களுக்கு ஸுந்தரேசன் என்ற பெயரும் அழகாக அமைந்துவிட்டது. 72

236 மந்தரமலையும் ஹிமயமலையும், வெள்ளை வெளேரென்று பிரகாசிக்கின்ற பனிலிங்கமாக உள்ள அமர்நாத் குகையிலும் தரிசித்திருக்கிறேன். அங்கெல்லாம் ப்ரஹ்மாண்டத்திற்கே அப்பாற்பட்ட பரம்பொருள் நீ என்று ஏனோ உணர்வு வரவில்லை. ஆனாலும் அங்கெல்லாமும் இப்படித்தான் விளங்குகிறாய் என்பதில் ஐயமுண்டா? 73

**ஸலிலைரதிபாவனைஸ்ததீயை: கமலைரப்யதிஸௌரபைர்மஹேந்த்ர: ।**
**பரிபூஜ்ய ஶிவௌ குரூக்தரீத்யா ப்ரணிபாதை: பரிதோஷயாம்பபூவ ॥** 70

**அபி கத்கதயா ப்ரமோதபாஷ்பைரபி ஸாரோஜ்ஜிதயா அதிஸம்ப்ரமேண ।**
**பிதரௌ ப்ரியகப்ரியௌ ஸுரேஶ: ஸ கிராநர்ச வச:பதவ்யதீதௌ ॥** 71

**புவி ஸுந்தரமாஸ்பதம் தவைதச்சிவலிங்கம் து ததோऽபி ஸுந்தரம் தே ।**
**அபி ஸுந்தரமேவ ஸுந்தராணாம் அபிதாநம் வசநாம்ருதம் த்வதீயம் ॥** 72

**ஸமஸேவிஷி மந்தரே ஹிமாத்ரௌ கலதௌதாசலகந்தரேऽபி ச த்வாம் ।**
**விதிதந்து பரம் ந விஶ்வபாரம் கிமு தத்ரைவமஸீதி காபி ஶங்கா ॥** 73

**ந மகைர் ந ஜபைர் ந ஹோமதாநை: ந தபோபிர் விவிதைஶ்ச லப்யதே யத் ।**
**தகிதம் தவ ஸந்நிதாநபாக்யம் தருபி: கைரபி புஜ்யதே நிரீஹை: ॥** 74

**நிஹதா தநுஜா ஜிதா த்ரிலோகீ த்ரிதிவே சாதிக்ருதம் தத: கிமாஸீத் ।**
**இஹ யே ம்ருகபக்ஷிணோ ந ஹீமாநபி நீராஜ்ய விமோக்துமர்ஹதா மே ॥** 75

**அபவ்ருஜ்ய கிமீஶ! ஸாதயேயம் பவதாநந்தம் அவாப்நுயாம் ததாஹம் ।**
**கிமிதோऽப்யதிக: ஸ யோ மமாஸாவுசித: ஸ்வாம்யுபலம்பஜ: ப்ரமோத: ॥** 76

**ஜடமேவ ஜகத் தவ ஸ்வமாஸீதஜடா: கேசந மாத்ருஶோऽபி ஜீவா: ।**
**அதிவாங்மநஸம் பவந்தமேவ ப்ரதிபந்நாஸ்து வயம் ப்ரஶாஸிதாரம் ॥** 77

---

237 யாகங்களினாலோ, மந்திரஜபங்களினாலோ, ஹோமங்களினாலோ, தானங்களினாலோ அல்லது பலவிதமான தவங்களினாலோ உன்னை எட்ட முடியாது. அதுவும் உண்மை. இந்த மரங்கள் உன்னை 'குளு குளு' என்று சௌக்கியமாக வைத்துக் கொண்டிருக்கின்றனவே. அந்த ஸன்னிதான பாக்யம் அவற்றிற்குத்தானே இவ்வளவு நாட்களாக கிடைத்துள்ளது. காரணம், அவைகளுக்கு வேண்டுதல் ஒன்றுமில்லை. 74

238 பிரபோ! அரக்கர்களை வதைத்தேன். மூவுலகையும் வென்றேன். ஸ்வர்கத்தில் அதிகாரம் செலுத்தினேன். என்ன ஆயிற்று? இங்கு வாழ்கின்ற மிருகங்களையும் பறவைகளையும் பூஜித்தால் கூட விடுதலை அடையலாமே! நான் அதற்கு தகுதியுள்ளவனா? 75

239 உலகியலை ஒதுக்கிவிட்டு, நான் எதைத்தான் ஸாதிக்கப் போகிறேன். தங்களுடைய தரிசனப் பேரானந்தத்தை அடைய, தங்களை இங்கே கண்டு கொண்டேனே. வேறு யாருக்கு இது கிடைத்தது? இந்த பரமானந்தத்தைவிட வேறென்ன பெருநிலை அடைந்து விடப் போகிறன். 76

240 முன்பு உனக்கு இந்த ஜடமான காடு தான் சொத்து மற்றும் என்னைப்போல சில அப்பாவி ஜீவன்களுக்கும் உண்டு. வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாத பரம்பொருளான தங்களையே தற்போது எங்களுடைய ஆண்டவனாக பெற்றுவிட்டோமே! 77

वचनावसरो न लभ्यते नः त्वयि मीनाक्षि ! शिवाविनाकृतायाम्।
इति देवि पृथक्कृतासि किंचित् तमिमं मा कुरु मानसेऽपराधम्॥ ७८

गिरिराजकुमारिकामपि स्वं विपिनेष्वद्रिषु चानुवर्तमानाम्।
भवतीं प्रियकप्रियेऽनुरोद्धुं स्वयमध्यास्त शिवः कदम्बमूलम् ॥ ७९

जगतो जगदीश्वरस्य च श्रीर्भवती यद्यपि सर्वतोऽस्ति पूर्णा।
करुणामयमुत्सहे न हातुं तव मीनाक्षि तथापि रूपमेतत् ॥ ८०

हरयस्त इमे महावनेऽस्मिन् अयमिन्द्रद्रुर सावपीन्द्रवल्ली
मम नामजुषः स्थिता यदेते मम सेवेयमिति प्रतीच्छ मातः ॥ ८१

कति सन्तु न वेधसः कतीन्द्राः तव मीनाक्षि तरङ्गितैरपाङ्गैः।
किमधश्च्यवते मया विना द्यौः कृपणं मां घटयस्व किङ्करेषु ॥ ८२

व्यगलद्दनुजेषु मत्सरो मे विरराम त्रिदिवोपभोगरागः।
स्थगिता बहिरेव वृत्रहत्या भवतोरद्य मयि प्रसादलेशात् ॥ ८३

इति तं प्रणिपत्य संस्तुवन्तं प्रथमं भक्तिमतां पतिं सुराणाम्।
अनुगृह्य दयोर्मिलैरपाङ्गैः अगदिष्टामिदमादिमौ युवानौ ॥ ८४

आद्यस्त्वमेषामसि पार्षदानां कुमारयोश्चास्यनयोस्तृतीयः।
जानीवहे ते परमां च भक्तिं विद्राविता सा तव वृत्रहत्या ॥ ८५

---

241 தாயே மீனாக்ஷி! நீ அர்தநாரீசுவரரின் பகுதியாகவே இருப்பதால் உன்னைத் தனியாக துதிக்க ஸந்தர்பம் கிடைப்பதில்லை. உன்னை அவரிடமிருந்து சற்று பிரித்து ஆலயம் எழுப்ப உள்ளேன். அதை தயவு செய்து அபசாரமாக நினைக்கக்கூடாது. 78

242 ப்ரியக மலரின் ப்ரியமுள்ள தாயே! நீ பர்வத ராஜகுமாரி. உனக்கு மலைகளும், காடுகளும் பிடித்தமானவை. ருசியுள்ள உன்னை அனுஸரிப்பதற்காகவே பரமேசுவரன் உன்னைத் தொடர்ந்து வருகிறார். அதனால்தான் கதம்பவன மரத்தடிக்கு வந்துவிட்டார். 79

243 அம்மா உலகத்திற்கும், உலக மக்களுக்கும் நீதான் செல்வம். எங்கும் அப்படி நிறைந்திருக்கிறாய். ஆனால் கருணையே வடிவான உன்னை விட்டு பிரிய மனமில்லையே. 80

244 பச்சைப் பசேல் என்றுள்ள இந்த வனத்தில், இதோ இந்திர மரம். அதோ இந்திரக் கொடி என்று என் பெயரைத் தாங்கியுள்ளன. இவர்களுடைய ஸேவையை என்னுடைய ஸேவையாக எடுத்துக்கொள் தாயே! 81

**வசநாவஸரோ ந லப்யதே நஸ்த்வயி மீநாக்ஷி ! ஶிவாவிநாக்ருதாயாம் ।**
**இதி தேவி ! ப்ருதக் க்ருதாஸி கிஞ்சித் தமிமம் மா குரு மாநஸேऽபராதம் ॥ 78**

**கிரிராஜகுமாரிகாமபி ஸ்வம் விபிநேஷ்வத்ரிஷு சாநுவர்தமாநாம் ।**
**பவதீம் ப்ரியகப்ரியேऽநுரோத்தும் ஸ்வயமத்யாஸ்த ஶிவ: கதம்பமூலம் ॥ 79**

**ஜகதோ ஜகதீஶ்வரஸ்ய ச ஶ்ரீர்பவதீ யத்யபி ஸர்வதோऽஸ்தி பூர்ணா ।**
**கருணாமயமுத்ஸஹே ந ஹாதும் தவ மீநாக்ஷி ! ததாபி ரூபமேதத் ॥ 80**

**ஹரயஸ்த இமே மஹாவநேऽஸ்மின் அயாமிந்த்ரத்ருர ஸாவபீந்த்ரவல்லீ ।**
**மம நாமஜுஷ: ஸ்திதா யதேதே மம ஸேவேயமிதி ப்ரதீச்ச மாத:! ॥ 81**

**கதி ஸந்து ந வேதஸ: கதீந்த்ராஸ்தவ மீநாக்ஷி ! தரங்கிதைரபாங்கை: ।**
**கிமதஶ்ச்யவதே மயா விநா த்யௌ: க்ருபணம் மாம் கடயஸ்வ கிங்கரேஷு ॥ 82**

**வ்யகலத்தநுஜேஷு மத்ஸரோ மே விரராம த்ரிதிவோபபோகராக: ।**
**ஸ்தகிதா பஹிரேவ வ்ருத்ரஹத்யா பவதோரத்ய மயி ப்ரஸாதலேஶாத் ॥ 83**

**இதி தம் ப்ரணிபத்ய ஸம்ஸ்துவந்தம் ப்ரதமம் பக்திமதாம் பதிம் ஸுராணாம் ।**
**அநுக்ருஹ்ய தயோர்மிலைரபாங்கை: அகதிஷ்டாமிதமாதிமௌ யுவாநௌ ॥ 84**

**ஆத்யஸ்த்வமேஷாமஸி பார்ஷதாநாம் குமாரயோஶ்சாஸ்யநயோஸ்த்ருதீய: ।**
**ஜாநீவஹே தே பரமாம் ச பக்திம் வித்ராவிதா ஸா தவ வ்ருத்ரஹத்யா ॥ 85**

*245 எத்தனை பேர் ப்ரஹ்மபட்டம் பெற்றவர்கள்? எத்தனை பேர் இந்திரப் பட்டம் வேண்டி உன் கருணைக்குக் காத்திருக்கிறார்கள்? நான் ஒருவன் இல்லாததால் தேவலோகம் குறைந்துவிடாது, கீழே விழுந்துவிடாது என்னையும் உன் திருவடிச் சேவகர்களில் ஒருவன் ஆக்கிவிடு. 82*

*246 எனக்கு அரக்கர்களிடமிருந்த பகையும் பொறாமையும் போய்விட்டன. மூவுலகையும் ஆளவேண்டுமென்ற ஆசையும் நீங்கிவிட்டது உங்களுடைய அருளினால் விருத்ரஹத்யா பாவமும் நீங்கிவிட்டது. 83*

*247 ‘இவ்வாறு தம்மை வணங்கி துதிக்கிறான். சிறந்த பக்தனாகிவிட்டான்’ என நினைத்து உலகிற்கே முதன் முதலான ஆதி தம்பதிகளான மீனாக்ஷி ஸுந்தரேசுவரர்கள், தங்களுடைய கருணைமிகுந்த கடைக் கண்களினால் அனுக்ரஹித்து பின்வருமாறு கூறினார்கள். 84*

*248 விருத்ரஹத்யா பாவம் ஓடிவிட்டது. உனது ஆழ்ந்த பக்தியை உணர்கிறோம். இனி எங்களுடைய தொண்டர்களுள் நீதான் முதல்வன். இரண்டுபேருக்கு அடுத்தபடியாக எங்களுடைய மூன்றாவது குமாரனும் ஆகிறாய். 85*

वासन्तिकप्रथमपर्वसु वासव ! त्वं इत्थं समेत्य सकलैरनुयायिवर्गैः ।
आविश्वपारनगराभिमुखात्प्रयाणात् अभ्यर्च नौ कनकवारिरुहैरमीभिः ॥ ८६ ॥

इत्युक्ते सति जगदादिदंपतिभ्यामि् अन्द्रस्तद्गुरुरितरेऽनुयाायिनश्च ।
प्रस्थानप्रणतिपरम्पराभिरेतावन्योन्याभ्यधिकदयामयौ वितेनुः ॥ ८७ ॥

आमन्त्रय द्विरदेन्द्रवक्त्रमसकृत्संप्रार्थ्य नन्दीश्वरं
संमान्य प्रमथान्निवेद्य सकलं चण्डेश्वरं शांभवम् ।
आशीर्भिः प्रतिनन्दितो मुनिगणैराप्रच्छ्य वाचस्पत्तिं
दिव्येन द्विरदेन निर्मलतरो देवः प्रतस्थे पुरीम् ॥ ८८ ॥

इति तृतोयः सर्गः

---

249இந்திரா! ஒவ்வொரு வருடமும், வஸந்தகாலம் முதல் பௌர்ணமியில், உன்னைச் சார்ந்தவர்களுடன் ஒன்று சேர்ந்து பொற்றாமரைக்குளத்தில் மலர்கின்ற தாமரை மலர்களால் எங்களை பூஜிப்பாயாக. 86

250 இவ்வாறு ஆதி தம்பதிகள் கூறியவுடன், இந்திரன் அவனுடைய குரு மற்றும் அவனுடைய சுற்றத்தார்கள் அனைவரும் தங்களுடைய இருப்பிடத்திற்கு போகும் முன் செய்த வணக்கங்களினால், அவர்களை

வாஸந்திகப்ரதமபர்வஸு வாஸவ! த்வமித்தம் ஸமேத்ய ஸகலைரநுயாயிவர்கை: ।
ஆவிஶ்வபாரநகராபிமுகாத் ப்ரயாணாத் அப்யர்ச நௌ கநகவாரிருஹைரமீபி: ॥ 86

இத்யுக்தே ஸதி ஜகதாதிதம்பதிப்யாம் இந்த்ரஸ்தத்குருரிதரேऽநுயாயிநஶ்ச ।
ப்ரஸ்தாநப்ரணதிபரம்பராபிரேதௌ அந்யோந்யாப்யதிகதயாமயௌ விதேநு: ॥ 87

ஆமந்த்ர்ய த்விரதேந்த்ரவக்ரமஸக்ருத் ஸம்ப்ரார்த்ய நந்தீஶ்வரம்
ஸம்மாந்ய ப்ரமதான் நிவேத்ய ஸகலம் சண்டேஶ்வரம் ஶாம்பவம் ।
ஆஶீர்பி: ப்ரதிநந்திதோ முநிகணைராப்ரச்ய வாசஸ்பதிம்
திவ்யேந த்விரதேந நிர்மலதரோ தேவ: ப்ரதஸ்தே புரீம் ॥ 88

இதி மஹாகவிஶ்ரீநீலகண்டதீக்ஷிதப்ரணீதே ஶிவலீலார்ணவே த்ருதீய: ஸர்க: ।

---

மேலும் கருணை உள்ளவர்களாகச் செய்தார்கள். 'உன்னைக் காட்டிலும் என்னிடம்தான் அதிகம் கருணை காட்டினார் பகவான்' என்று ஒருவருக் கொருவர் மெச்சிக் கொண்டர்கள். 87

251 வினாயகரிடம் விடைபெற்றுக் கொண்டான், நந்திகேசுவரரை வணங்கினான். சிவகணங்களை கௌரவித்தான். சிவ பக்தரான சண்டிகேசுவரரிடம் விடைபெற்றான், முனிவர்களின் ஆசி பெற்றான், பிருஹஸ்பதியிடமும் விடைபெற்றுக் கொண்டு, நிர்மலமான மனதுடன் இந்திரன் ஐராவதத்தில் ஏறி தன் உலகத்திற்குப் புறப்பட்டான். 88

மூன்றாவது ஸர்கம் முடிவடைந்தது

## चतुर्थः सर्गः

निवृत्ते वासवे तस्मिन्निवृत्ते चान्तरे मनोः।
इन्द्रांचकार कोऽप्यन्यो बृन्दारकनिकेतने ॥ १

अभ्रमातङ्गमारुह्य विभ्रमादत् अमरेश्वरः।
संवृतः सकलैर्देवैर्निर्जगाम पुराद्बहिः ॥ २

सर्वासामपि सिद्धीनां दुर्वासा निधिरद्भुतः।
समगच्छत तेनाभ्रे स हि गच्छन्यदृच्छया ॥ ३

परिपालयितुं रौद्रीं प्रतिसर्गाधिकारिताम्॥
तस्य न ज्वलति क्रोधो यस्यैका जगदाहुतिः ॥ ४

अग्नयगारगते तस्मिन् अनाहूतागताः स्वयम्।
संदर्शयन्ति स्वात्मानं देवा आवाहनक्षणे ॥ ५

नानुगच्छति तस्याग्निर्न विष्यन्दयते हविः।
नापक्षयति सन्त्रस्तो न निर्मन्थे विलम्बते ॥ ६

अतपत्तपनाकारम् अज्वलज्ज्वलनोपमम्।
दृष्ट्वैव तं मुनिं देवास्तत्रसुस्तत्र सुस्थिताः॥ ७

पाणिभ्याम् अप्रमत्तोऽसौ प्रसादं पद्ममैश्वरम्।
गजस्कन्धगतायापि ददौ राजेति वज्रिणे ॥ ८

---

### நான்காவது ஸர்கம்

### திருவிளையாடல் - 2

### வெள்ளையானை சாபம் தீர்த்த படலம்

252 அந்த இந்திரனுடைய காலம் முடிந்து, அந்த மன்வந்தரமும் முடிந்தது. அடுத்த மன்வந்தரத்தில் மற்றொருவன் இந்திரனாகப் பதவி ஏற்றான்.

253 தேவேந்திரன் ஐராவதத்தின் மீது ஏறி, தேவர்கள் சூழ, விமரிசையாக நகரத்திலிருந்து ஊர்வலமாக வெளியே வந்தான். 1

254 தலங்களின் ஸர்வஸித்திகளும் ஒருங்கே உரிமையாகிவிட்ட துர்வாஸ முனிவர், ஆகாசவீதியில், எதேச்சையாக அமரேந்திரன் முன் வந்து சேர்ந்தார். 2

255 ருத்திரனுக்குப் போட்டியாக அதே செயல் திறன் பெற்றவர் என்ற ரீதியில், அதைச் செலுத்துகின்ற தோரணையில், அவருடைய கோபம் கொழுந்துவிட்டு எரியவில்லை அப்படி எரிந்தால் அகில உலகமும் ஒரே ஆஹுதியாகிவிடுமே! 3

## அத சதுர்த:ஸர்க: ।

நிவ்ருத்தே வாஸவே தஸ்மின் நிவ்ருத்தே சாந்தரே மநோ: ।
இந்த்ராஞ்சகார கோऽப்யந்யோ வ்ருந்தாரகநிகேதநே ॥ 1

அப்ரமாதங்கமாருஹ்ய விப்ரமாத் அமரேஶ்வர: ।
ஸம்வ்ருத: ஸகலைர்தேவைர்நிர்ஜகாம புராத்ர்பஹி: ॥ 2

ஸர்வாஸாமபி ஸித்தீநாம் துர்வாஸா நிதிரத்புத: ।
ஸமகச்சத தேநாப்ரே ஸ ஹி கச்சன் யத்ருச்சயா ॥ 3

பரிபாலயிதும் ரௌத்ரீம் ப்ரதிஸர்காதிகாரிதாம் ।
தஸ்ய ந ஜ்வலதி க்ரோதோ யஸ்யைகா ஜகதாஹுதி: ॥ 4

அக்ந்யகாரகதே தஸ்மிந் அநாஹூதாகதா: ஸ்வயம் ।
ஸந்தர்ஶயந்தி ஸ்வாத்மாநம் தேவா ஆவாஹநக்ஷணே ॥ 5

நாநுகச்சதி தஸ்யாக்நிர் ந விஷ்யந்தயதே ஹவி: ।
நாபக்ஷயதி ஸந்த்ரஸ்தோ ந நிர்மந்தே விளம்பதே ॥ 6

அதபத்தபநாகாரம் அஜ்வலஜ்ஜ்வலநோபமம் ।
த்ருஷ்ட்வைவ தம் முநிம் தேவாஸ்தத்ரஸூஸ்தத்ர ஸூஸ்திதா: ॥ 7

பாணிப்யாம் அப்ரமத்தோऽஸௌ ப்ரஸாதம் பத்மமைஶ்வரம் ।
கஜஸ்கந்தகதாயாபி ததௌ ராஜேதி வஜ்ரிணே ॥ 8

---

256 அவர் அக்னிஹோத்ர சாலைக்கு வந்துவிட்டால், தேவர்கள் அனைவரும் அழைப்பதற்கு முன்பே அங்கே தோன்றுவர். தேவர்கள் ஆவாஹனத்திற்காக காத்திருப்பார்கள். 4

257 அரணியில் கடைய ஆரம்பித்தால், அக்னி உடன் பற்றிக்கொள்வான் தாமதிப்பதில்லை, பின் தொடர்வது இல்லை, ஹவிஸை வழியவிடுவதில்லை, அவிந்து போவதுமில்லை 5

258 அவர் சூரியனைப்போல் வெயில் வெப்பம் அளித்தார். தீயென கொழுந்து விட்டெரிந்தார். அவரைப் பார்த்த உடனேயே உல்லாஸமாக இருந்த தேவர்கள் கைகட்டி நடுங்கினார்கள். 6

259 அவரைக் கண்டவுடன்,இந்திரன் மரியாதை நிமித்தம் யானையை விட்டு இறங்கி இருக்க வேண்டும். ஆனால் அவன் யானை மீது அமர்ந்தே இருந்தான். துர்வாச முனிவர் பரமேச்வரனின் பிரஸாதமான ஒரு தாமரையை, இரு கைகளினாலும், பதட்டம் இல்லாமல், யானை மீது அமர்ந்தே நீட்டிய இந்திரனுடைய வலது கையில் வைத்தார். பதவியில் உள்ளவர்கள் இப்படித்தான் என்று பரிவு காட்டி கொடுத்தார். 7

अनादृत्य स तं मोहात् निदधे मूर्ध्नि दन्तिनः ।
शुण्डया सोऽप्युपादाय निष्पिपेष निसर्गतः ॥ ९
आभुज्य स भ्रुवौ किंचित् आवर्य कपिले दृशौ ।
प्रजज्वालेव कोपेन मुनिः प्रस्फुरिताधरः ॥ १०
पस्पन्दे न सहस्रांशुस्तस्तम्भे मारुतस्तदा ।
चकम्पे सार्णवा पृथ्वी विव्यथे केवलं नभः ॥ ११
स हस्तिहस्तिपकयोः शापं घोरमवासृजत् ।
वज्रं वज्रिणि दुर्वारमंकुशं च निरङ्कुशे ॥ १२
मौलिं भेत्स्यति पाण्ड्योऽस्य मदान्धस्य दिवस्पतेः ।
संचरत्ववनावेष कुञ्जरः क्षुद्रदन्तिवत् ॥ १३
दत्तशापतया किंचित् दग्धेन्धनामिवानलम् ।
प्रशाम्यन्तममुं देवाः प्रणिपातेरसान्त्वयन् ॥ १४
संभ्रमोद्वेगकार्पण्यस्तम्भप्रणतिसान्त्वनैः ।
प्रसादाभिमुखस्तेषां प्राह माहेश्वरो मुनिः ॥ १५
पाण्ड्याः भिनत्तु तर्ह्यस्य मौलिं मकुटलक्षणम् ।
सुन्दरेशार्चनान्तश्च शापः स्वर्दन्तिनोऽस्त्विति ॥ १६

---

*260 இந்திரன் மதியிழந்து, அலட்சியமாக அதை வாங்கி யானையின் மஸ்தகத்தின் மீது வைத்தான். யானை அதை துதிக்கையால் எடுத்து தன் இயல்பின் படி கசக்கியது.* *8*

*261 அவருடைய புருவங்கள் நெரிந்தன, சாம்பல் நிறக்கண்களைத் திருப்பினார். உதடு துடித்தது. கோபம் கொழுந்துவிட்டு எரிந்தது.* *9*

*262 சூரியன் அசையவில்லை, காற்று வீசவில்லை, கடலோடு சேர்ந்து பூமியும் நடுங்கியது. வெறும் ஆகாயம் வெப்பத்தினால் பதைத்தது.* *10*

*263 முனிவர் அந்த யானைக்கும். யானைப் பாகனுக்கும் கொடுமையான சாபத்தைக் கொடுத்தார். வஜ்ராயுதம் தரித்தவன் மீது வஜ்ராயுதம் போலும், யானைக்கு (ஐராவதத்திற்கு) அங்குசமாகவும் அந்த சாபம் அமைந்தது. அடக்கமுடியாத அந்த யானையை, துரத்தி அடக்குவது போல. அந்த சாபம் அடக்கியது.* *11*

*264 பாண்டியன் இவனுடைய மகுடத்தை உடைக்கப் போகிறான். அவனுக்கு இதுதான் கதி. பட்டிக்காடு யானையைப்போல ஐராவதமும் பூமியில் அலையட்டும்.* *12*

அநாத்ருத்ய ஸ தம் மோஹாந்நிததே மூர்த்நி தந்திந: ।
ஶுண்டயா ஸோऽப்யுபாதாய நிஷ்பிபேஷ நிஸர்கத: ।। 9

ஆபுஜ்ய ஸ ப்ருவௌ கிஞ்சித் ஆவர்த்ய கபிலே த்ருஶௌ ।
ப்ரஜஜ்வாலேவ கோபேந முநி: ப்ரஸ்புரிதாதர: ।। 10

பஸ்பந்தே ந ஸஹஸ்ராம்ஶுஸ்தஸ்தம்பே மாருதஸ்ததா ।
சகம்பே ஸார்ணவா ப்ருத்வீ வித்யதே கேவலம் நப: ।। 11

ஸ ஹஸ்திஹஸ்திபகயோ: ஶாபம் கோரம் அவாஸ்ருஜத் ।
வஜ்ரம் வஜ்ரிணி துர்வாரம் அங்குஶம் ச நிரங்குஶே ।। 12

மௌலிம் பேத்ஸ்யதி பாண்ட்யோऽஸ்ய மதாந்தஸ்ய திவஸ்பதே: ।
ஸஞ்சரத்வவநாவேஷ குஞ்சர: க்ஷுத்ரதந்திவத் ।। 13

தத்தஶாபதயா கிஞ்சித் தக்தேந்தநமிவாநலம் ।
ப்ரஶாம்யந்தம் அமும் தேவா: ப்ரணிபாதை: அஸாந்த்வயன் ।। 14

ஸம்ப்ரமோத்வேககார்பண்யஸ்தம்பப்ரணதிஸாந்த்வநை: ।
ப்ரஸாதாபிமுகஸ்தேஷாம் ப்ராஹ மாஹேஶ்வரோ முநி: ।। 15

பாண்ட்யோ பிநத்து தர்ஹ்யஸ்ய மௌலிம் மகுட்லக்ஷணம் ।
ஸுந்தரேஶார்சநாந்தஶ்ச ஶாப: ஸ்வர்தந்திநோऽஸ்த்விதி ।। 16

---

265 சாபம் கொடுத்தவுடன், விறகு எரிந்து போனதால் அவியும் நெருப்பு போன்று தணிந்த துர்வாஸ முனிவரை தேவர்கள் சாந்தப்படுத்தினார்கள். 13

266 நமக்கு சாபமா என்ற படபடப்பு, ருஷியிடம் கொதிப்பு, ஆனால் ஒன்றும் செய்ய இயலாமை. ஒன்றும் செய்யமுடியவில்லையே என்ற திகைப்பு இவை இந்திரனை ஆட்கொண்டன. வேறு வழியில்லாமல் வணங்கினான் ''தவறிழைத்துவிட்டேன் மன்னிக்க வேண்டும்'' என்று குழைந்தான், முனிவருக்கு எவ்வளவு வேகமாக முன் கோபம் வந்ததோ அதற்கு அதிவேகமாக மனம் இளகியது. மஹேசுவர பக்தரான முனிவர் கூறினார். 14

267 பாண்டியன் இந்திரனின் மண்டையை உடைக்க வேண்டாம். மகுடத்தை உடைக்கட்டும். ஸ்வர்கத்து யானைக்கு ஸுந்தரேசுவரருக்கு பணியும்வரை அதன் சாபம் தொடரட்டும். 15

268 ஸ்வர்கத்து யானை மஹேந்திரனின் அருகிலேயே வெகுகாலம் இருந்த பழக்கத்தினால், பூமியை அடைந்து, மஹேந்திர பருவதத்திற்கு அருகிலேயே மறுபிறவி எடுத்தது. 16

महेन्द्रसविधावासवासनारसिकश्चिरात् ।
महेन्द्र एव शैलेन्द्रे जन्म लेभे सुरद्विपः ॥ १७

आमूलमग्नदन्तः स खेलासु बिभिदे भुवम् ।
धर्तुकाम इव स्कन्धे तामेवोद्धृत्य सार्णवाम् ॥ १८

मदगन्धेन धावन्ति येषामन्ये मतङ्गजाः ।
कर्णानिलेन ते तस्य कलभस्यापि दुद्रुवुः ॥ १९

स सिंहान् शुण्डयादाय चिक्षेप तृणपूलवत् ।
पादैरेव महाग्राहान् भेकमर्दं ममर्द च ॥ २०

ग्राहा ग्रसन्ते हर्यक्षा घ्नन्ति गृह्णन्ति मानवाः ।
इत्युच्यमानं कलभैराश्चर्यमिव सोऽशृणोत् ॥ २१

सरित्सरांसि पीतानि सकृदाकृष्य शुण्डया ।
मदधारापदेशेन मन्ये तस्य प्रसुस्रुवुः ॥ २२

स मत्तः संचरन् पृथ्वीं चरणैरपचस्करे ।
लघूकरिष्यन्निव तां दिग्गजानुजिघृक्षया ॥ २३

अजानिवगजानन्यान् आदायादाय चिक्षिपे ।
स एव पुंगजस्तत्र वशास्तस्याभवन्परे ॥ २४

स खेलन्सागरस्याम्भः क्षिपन्मन्दागिनीं प्रति ।
दयया चिरविश्लिष्टौ दंपती तावयोजयत् ॥ २५

---

269 கடலுடன் கூடிய பூமியை தன் தோளில் தூக்கி வைத்துக் கொள்வது போல,பூமியில் தன்னுடைய தந்தங்களை வேர் வரை நுழைத்து அந்த யானைக்குட்டி விளையாடும் பொழுது பூமியைப் பிளந்தது. 17

270பொதுவாக யானைகள் ஒரு யானையினுடைய மதநீர் பெருக்கினால்தான் ஓடும். ஆனால் இந்த யானைக் குட்டியின் காது வீசுகின்ற காற்றினாலேயே ஓடின. 18

271 அந்த குட்டியானை சிங்கங்களை, புல்லுக்கட்டைப்போல் தூக்கி எறிந்தது. பெரிய முதலைகளை தவளைகளை நசுக்குவதுபோல் காலால் நசுக்கியது. 19

272 'மற்ற யானைக் குட்டிகளெல்லாம் முதலைகள் முழுங்கிவிடும். சிங்கங்கள் கொன்று விடும். மனிதர்கள் பிடித்துவிடுவார்கள்' என்று சொல்வதை ஆச்சரியத்துடன் இந்த குட்டி யானை கேட்கும். 20

மஹேந்த்ரஸவிதாவாஸ வாஸநாரஸிகஶ்சிராத் ।
மஹேந்த்ர ஏவ ஶைலேந்த்ரே ஜந்ம லேபே முராத்விப: ॥ 17

ஆமூலமக்நதந்த: ஸ கேலாஸு பிபிதே புவம் ।
தர்துகாம இவ ஸ்கந்தே தாமேவோத்த்ருத்ய ஸார்ணவாம் ॥ 18

மதகந்தேந தாவந்தி யேஷாமந்யே மதங்கஜா: ।
கர்ணாநிலேந தே தஸ்ய கலபஸ்யாபி துத்ருவு: ॥ 19

ஸ ஸிம்ஹான் ஶுண்டயாதாய சிக்ஷேப த்ருணபூலவத் ।
பாதைரேவ மஹாக்ராஹான் பேகமர்தம் மமர்த ச ॥ 20

க்ராஹா க்ரஸந்தே ஹர்யக்ஷா க்நந்தி க்ருஹ்ணந்தி மாநவா: ।
இத்யுச்யமாநம் களபை: ஆஶ்சர்யமிவ ஸோऽஶ்ருணோத் ॥ 21

ஸரித்ஸராம்ஸி பீதாநி ஸக்ருதாக்ருஷ்ய ஶுண்டயா ।
மததாராபதேஶேந மந்யே தஸ்ய ப்ரஸுஸ்ருவு:॥ 22

ஸ மத்த: ஸஞ்சரன் ப்ருத்வீம் சரணைரபசஸ்கரே ।
லகூகரிஷ்யந்நிவ தாம் திக்கஜாநுஜிக்ருக்ஷயா ॥ 23

அஜாநிவ கஜான் அன்யான் ஆதாயாதாய சிக்ஷிபே ।
ஸ ஏவ புங்கஜஸ்தத்ர வஶாஸ்தஸ்யாபவன் பரே ॥ 24

ஸ கேலன் ஸாகரஸ்யாம்ப: க்ஷிபன் மந்தாகிநீம் ப்ரதி ।
தயயா சிரவிஶ்லிஷ்டௌ தம்பதீ தாவயோஜயத் ॥ 25

---

*273 அந்த யானை ஓடைகளிலும், குட்டைகளிலும் உள்ள நீரை தன் துதிக்கையினால் ஒரே உறிஞ்சில் உறிஞ்சிவிடும். அந்த நீர் தான் அதனுடைய மதநீராக வெளிப்படுகிறது போலும்!* 21

*274 மதம் பிடித்த அந்த குட்டி யானை பூமியிருந்து மண்ணை, பூமியைத் தாங்குகின்ற எட்டு திசை யானைகளின் பளுவை குறைப்பது போல் வாரி இறைத்தது.* 22

*275 மற்ற யானைகளை ஆட்டுக் குட்டிகளைப் போலத் தூக்கி எறிந்தது. அங்கே அது ஒன்றுதான் ஆண் யானை, மற்றவைகளெல்லாம் பெண் யானைகளோ!* 23

*276 அது விளையாட்டாக தென்கடல் நீரை வாரி ஹிமாலயத்திலுள்ள மந்தாகினி நதி மீது இறைத்தது. மந்தாகினியும் தென் ஸமுத்திரமும் தம்பதிகள். வெகுநாட்களாக பிரிந்திருக்கின்றனவே,அவற்றை சேர்த்து வைப்போம் என்ற எண்ணம் கொண்டதுபோலும்.* 24

*277 பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம் என்ற மூன்றில் நடுவில் உள்ளது புவர் என்ற ஆகாய லோகம். அதன் அழகைக் கண்டு வியந்த குட்டி*

पश्यन्मध्यमलोकस्य रामणीयकम् अद्भुतम् ।
पांसुभिः स करोद्धूतैश्चकारेव दिवं भुवम् ॥ २६

विद्रवद्भिर्वने तस्मिन् व्याधव्याघ्रमृगाधिपैः ।
मृगाणां रक्षणात् आसीन्मृगेन्द्रः सोऽद्भुतः क्षितौ ॥ २७

महेन्द्रादेव मलयं मलयादपि दर्दरम् ।
संचरञ्जातुचित्प्राप कुञ्जरो नीपकाननम् ॥ २८

मदगन्धाशया प्राप्तैर्मधुपैर्विपिनात्ततः ।
संप्रदर्शितवर्त्मैव स ययौ हेमपद्मिनीम् ॥ २९

गणेशमदनिष्यन्दगन्धसर्वस्ववेदिनः ।
उपेक्षां भ्रमराश्चक्रुः उन्मदास्तन्मदाम्भसि ॥ ३०

स पतन्नेव सरसि क्षीरोद इव मन्दरः ।
कल्लोलैः प्लावयामास कदम्बविपिनान्तरम् ॥ ३१

मलिनो निर्ममज्जास्मिन् उन्ममज्जाथ निर्मलः ।
प्रागभूत्केवलो भौमः सार्वभौमोऽथ दन्तिनाम् ॥ ३२

उत्तीर्य बहिरन्तश्च नीरजा नीरजाकरात् ।
अतीयाय स तं शापमधीयाय मुनेर्गिरः ॥ ३३

யானை அந்த த்ரிலோகத்தை பூலோகமாக்கி விடுவதற்காக புழுதியை வாரி இறைத்தது. 25

278 அந்த வனத்திருந்து வேடர்களையும், புலிகளையும் சிங்கங்களையும் விரட்டி அடித்தது. மிருகங்களுக்கு மென்மையான மான்களுக்கு பாதுகாப்பு அளித்தமையால், அது பூமியில் அத்புதமான மிருகேந்திரன். மிருகங்களின் (மான்களின்) அரசனாயிற்று. மிருகேந்திரன் என்று சிங்கத்திற்க்குத்தான் பட்டப்பெயர். அதை இந்த குட்டி யானை பெற்றது. 26

279 அது மஹேந்திர மலையிலிருந்து மலய மலைக்கும்,மலைய மலையிலிருந்து தர்தர மலைக்கும் சென்று கடைசியாக இந்த தீபவனத்தை அடைந்தது. 27

280 அதனுடைய மதநீரின் மணம் வண்டுகளை ஈர்த்தது. அவை பறந்து வந்து வழிகாட்ட, அந்த யானைக்குட்டி பொற்றாமரைக் குளத்திற்கு வந்து சேர்ந்தது. 28

281 மஹாகணேசனுடைய மதநீர் பெருக்கின் ரஸமறிந்த மதங்கொண்ட வண்டுகள், யானைக்குட்டியின் மதநீரை அலக்ஷியம் செய்தன. 29

பஶ்யன் மத்யமலோகஸ்ய ராமணீயகம் அத்புதம் ।
பாம்ஸுபி: ஸ கரோத்தூதைஶ்சகாரேவ திவம் புவம் ॥ 26
வித்ரவத்பிர்வநே தஸ்மின் வ்யாதவ்யாக்ரம்ருகாதிபை: ।
ம்ருகாணாம் ரக்ஷணாத் ஆஸீத்ம்ருகேந்த்ர: ஸோऽத்புத: க்ஷிதௌ ॥ 27
மஹேந்த்ராதேவ மலயம் மலயாதபி தர்தரம் ।
ஸஞ்சரன் ஜாதுசித் ப்ராப குஞ்ஜரோ நீபகாநநம் ॥ 28
மதகந்தாஶயா ப்ராப்தைர் மதுபைர்விபிநாத் தத: ।
ஸம்ப்ரதர்ஶிதவர்த்மேவ ஸ யயௌ ஹேமபத்மிநீம் ॥ 29
கணேஶமதநிஷ்யந்த கந்தஸர்வஸ்வவேதிந: ।
உபேக்ஷாம் ப்ரமராஶ்சக்ரு: உந்மதாஸ்தந்மதாம்பஸி ॥ 30
ஸ பதந்நேவ ஸரஸி க்ஷீரோத இவ மந்தர: ।
கல்லோலை: ப்லாவயாமாஸ கதம்பவிபிநாந்தரம் ॥ 31
மலிநோ நிர்மமஜ்ஜாஸ்மின் உந்மமஜ்ஜாத நிர்மல: ।
ப்ராகபூத் கேவலோ பௌம: ஸார்வபௌமோऽத தந்திநாம் ॥ 32
உத்தீர்ய பஹிரந்தஶ்ச நீரஜா நீரஜாகராத் ।
அதீயாய ஸ தம் ஶாபம் அதீயாய முநேர்கிர: ॥ 33

---

282 பாற்கடலில் மந்திரமலை வீழ்ந்தாற்போல் அந்த யானை ஸரஸில் வீழ்ந்தது. அது விழுந்த வேகத்தில் அலைகள் எழும்பி கதம்பவனம் முழுவதும் நீராட்டி விட்டது. 30

283 அழுக்குடன் குளத்தில் மூழ்கிய அந்த யானை,சாபத் தூய்மைபெற்று தண்ணீரிலிருந்து எழுந்தது. முன்னால் வெறும் பூமி யானையாக இருந்த அது, இப்பொழுது அகில உலகிலும் சிறந்த யானை அரசனாகி (ஸார்வபௌமன்) ஆகிவிட்டது 31

284 ச்லோகத்தில் சொல்லழகு முன்னே நிற்கிறது. நீரஜ: என்றால் ரஜோகுணமாகாதவனாக (அழுக்காகாதவனாக, உள்ளும் புறமும் தூய்மை பெற்றவனாக என்றெல்லாம் பொருள், நீரஜாகராத் என்றால் தாமரைப் பொய்கையிருந்து என்று பொருள்) அந்த யானை குளத்திருந்து எழுந்ததும் சாபம் நீங்கப்பெற்றது. முனிவரின் வார்த்தைகளை நினைத்துக் கொண்டது. 32

285 இங்கும் அடுத்த ச்லோகத்திலும் கவியின் சொல்லழகு கவனிக்கத்தக்கது. சிவகங்கையான பொற்றாமரைக் குளத்தில் மலர்ந்த தங்கத் தாமரைகளால், நான்கு தந்தமுடைய தேவயானை, ஒரு தந்தமுடையவனை, கணபதியைப் பூஜித்தது. வினாயகருக்கு ஸிந்தூரர் என்று பெயர். யானையை குறிக்கும் சொற்களில் ஒன்று ஸிந்தூரம். ஸிந்தூரம் ஸிந்தூரனை பூஜித்தது என்று

गाङ्गेयैः शैवगाङ्गेयैः कमलैः कमलास्पदैः ।
एकदन्तं चतुर्दन्तः सिन्धुरं सिन्धुरोऽर्चयत् ॥ ३४

पुष्कैरभिषिच्येशौ पुष्करोपहृतैरयम् ।
पुष्कैरैरेव चानर्च पुष्करं गाहितुं पुनः ॥ ३५

सितं हि काञ्चनं पुष्पं शिवस्यैवाभवन्मुदे ।
पिशङ्गं तु तदानीतं प्रीतये शिवयोरभूत् ॥ ३६

मक्तशापो गजः पृथ्वीं मुदा यदपचस्करे ।
गजतीर्थमितिख्यातं तद्बभूव महत्सरः ॥ ३७

ऐरावतेश्वरं लिङ्गमेरावतविनायकम् ।
स तीरे सरसस्तस्य स्थापयित्वाभ्यपूजयत् ॥ ३८

पुरंदरेश्वरं नाम पूर्वतः सुन्दरेशितुः ।
स्वमिनामाङ्कितं लिङ्गं स्थापयामासचापरम् ॥ ३९

प्रहितः सुन्दरेशेन स हि तत्र चिरं वसन् ।
पुनर्जगाम स्वं धाम पुरुहूतेन चाद्दतः ॥ ४०

---

சொற்களைப் பின்னுகிறார் கவி. அதே போல், காங்கேயம் என்ற சொல்லிற்கு பொன்னால் ஆனது, கங்கையினுடையது என்று இரு பொருள். அதையும் அழகாக ஜோடித்திருக்கிறார். 33 & 34

286 இந்த ச்லோகத்தில் புஷ்கர பதத்தை வைத்து விளையாடுகிறார். புஷ்கரம் என்றால் தூய நீர், யானைதுதிக்கை, தாமரை, ஸ்வர்கம் என்றெல்லாம் பொருள். எல்லா பொருளிலும் புஷ்கர பதத்தை தீக்ஷிதர் இங்கு தொகுத்திருக்கிறார். புஷ்கரத்திருந்து (தாமரைக் குளத்திருந்து) கொண்டுவந்த புஷ்கரத்தினால் (தூய தண்ணீரினால்) அபிஷேகம் செய்து, புஷ்கரம் (துதிக்கை) கொண்டு· புஷ்கரங்களினால் (தாமரைகளினால்), மறுபடியும் புஷ்கரம் (புண்ணிய லோகம்) செல்வதற்காக, மீனாக்ஷி ஸுந்தரேச்வரர்களை அர்ச்சனை செய்தது. 35

287ஊமத்தை புஷ்பம் (ஸிதம் காஞ்சனம்) சிவனுக்கு மட்டும் பிரியமானது· அந்த யானை கொண்டு வந்த பழுப்பு நிறமுள்ள தாமரைகள் (தங்க தாமரைகள்) இருவருக்கும் பிரியமுள்ளதாக ஆயிற்று, காஞ்சனம் என்றால் தங்கம் என்றும் பொருள் 36

**காங்கேயை: ஶைவகாங்கேயை: கமலை: கமலாஸ்பதை: ।**
**ஏகதந்தம் சதுர்தந்த: ஸிந்துரம் ஸிந்துரோऽர்சயத் ।। 34**
**புஷ்கரை: அபிஷிச்யேஶௌ புஷ்கரோபஹ்ருதைரயம் ।**
**புஷ்கரைரேவ சாநர்ச புஷ்கரம் காஹிதும் புந: ।। 35**
**ஸிதம் ஹி காஞ்சநம் புஷ்பம் ஶிவஸ்யைவாபவந்முதே ।**
**பிஶங்கம் து ததாநீதம் ப்ரீதயே ஶிவயோரபூத் ।। 36**
**முக்தஶாபோ கஜ: ப்ருத்வீம் முதா யதபசங்கரே ।**
**கஜதீர்த்தமிதி க்யாதம் தத் பபூவ மஹத் ஸர: ।। 37**
**ஐராவதேஶ்வரம் லிங்கம் ஐராவதவிநாயகம் ।**
**ஸ தீரே ஸரஸஸ்தஸ்ய ஸ்தாபயித்வாப்யபூஜயத் ।। 38**
**புரந்தரேஶ்வரம் நாம பூர்வத: ஸுந்தரேஶிது: ।**
**ஸ்வாமிநாமாங்கிதம் லிங்கம் ஸ்தாபயாமாஸ சாபரம் ।। 39**
**ப்ரஹித: ஸுந்தரேஶேந ஸ ஹி தத்ர சிரம் வஸன் ।**
**புநர்ஜகாம ஸ்வம் தாம புருஹூதேந சாத்ருத: ।। 40**

---

*288 சாபம் நீங்கி அந்த யானை மகிழ்ச்சியில் என்ன செய்கிறோம் என்று சிந்திக்காமலேயே தன்னுடைய தந்தத்தினால் பூமியில் குழி பறித்தது. அது 'கஜ ஸரஸ்' 'யானை ஏரி' என்ற புகழை அடைந்தது.* 37

*289 அக்குளக்கரையில் அந்த யானை, ஐராவதேச்வரர் என்ற சிவலிங்கத்தையும், ஐராவதவினாயகர் என்ற வினாயகரையும் பிரதிஷ்டை செய்து பூஜித்தது.* 38

*290 & 291 அது மட்டுமல்லாமல், அந்த யானை தன் எஜமானன் பெயரால் புரந்தரேச்வரன் என்று மற்றொருலிங்கத்தை ஸுந்தரேச்வரருக்கு கிழக்கே பிரதிஷ்டை செய்தது. அங்கே வெகுநாட்கள் ஆராதனை செய்து வந்த ஐராவதத்தை, 'நீ உன் இடத்திற்கு சென்று வா' என்று ஸுந்தரேசனார் அனுப்பினார். இந்திரன் அதை வரவேற்றான்.* 39 & 40

## कुलशेखरेण रजधानी निर्माणम्

कदम्बविपिनात्प्राचि कल्याणनगरे ततः।
कालेन महता जज्ञे कश्चिद्वैश्यो धनंजयः ॥ ४१

अस्त्राय गत्वा देवेन कृतयुद्धं गतस्पृहः।
कौरव्यमत्यशेतायमूरव्यस्तु धनंजयः॥ ४२

तस्य भूमिस्पृशो भक्तिं तरुणेन्दुशिखामणौ।
भक्तिरागन्तुकान्येषां कथं वानुकरिष्यति ॥ ४३

दशैकादशिकाः प्रायो वणिजश्चातुरा अपि।
एकं दत्वेह सोऽमुत्र तत्सहस्रमुपार्जयत् ॥ ४४

परक्षेत्रपरामर्शपरिशङ्की धनंजयः।
नोत्ससर्ज बहिर्जातु स गोषङ्गवम् आत्मनः॥ ४५

वृत्तिः सा हि विशां यत्तु भुवमुल्लिख्य जीवनम्।
स तु तत्कर्म तत्याज दिवमुल्लिख्य केवलम् ॥ ४६

अक्रीणीतैव पुण्यानि व्यक्रीणीत न जात्वपि।
समयेषूपयोगाय संगृह्यैव जुगोप सः ॥ ४७

---

### திருவிளையாடல் - 3

### திருநகரம் கண்ட படலம்

292 கதம்பவனத்திற்கு சற்று கிழக்கே கல்யாண நகரம் என்ற நகரில், வெகுநாட்களுக்குப் பிறகு தனஞ்சயன் என்ற ஒரு வைச்யன் பிறந்தான். 41

293 பாசுபதாஸ்த்ரம் பெறுவதற்காக பகவானோடு போர்புரிந்தானே தனஞ்சயன் அர்ஜுனன் அவனை வைச்ய ஜாதியான இவன் வீரத்தில் மிஞ்சியவன். ஆனால் பற்றற்றவன். அந்த தனஞ்சயன், அர்ஜுனன் கௌரவ்யன் -குருவம்சத்தைச் சேர்ந்தவன். இந்த தனஞ்சயன் ஊரவ்யன்-வைச்யகுலத்தில் பிறந்தவன் கௌரவ்ய, ஊரவ்ய என்ற சொற்சித்திரம் கவனிக்கத்தக்கது 42

294 அவன் பிறந்த கணம் முதல் சந்திரசேகரனான பரமேசுவரனிடத்தில் வேறு பற்றற்று பக்தி பூண்டான். மற்றவர்களிடம் கற்றுத்தேர்ந்த பக்தி இருக்கலாம். அவனுடைய பக்தியை மற்றவருடைய பக்தி அனுஸரிக்கமுடியுமா? 43

295 வைச்யர்கள் வியாபாரிகள்தான். வியாபாரத்தில் திறன் மிக்கவர்கள்தான். அவர்களில் சிலர் பத்து அல்லது பதினோரு மடங்கு லாபமும் ஈட்டுகிறார்கள்.

## திருநகரம் கண்ட படலம்

**கதம்பவிபிநாத் ப்ராசி கல்யாணநகரே தத: ।**
**காலேந மஹதா ஜஜ்ஞே கஶ்சித்வைஶ்யோ தநஞ்ஜய: ।।** 41
**அஸ்த்ராய கத்வா தேவேந க்ருதயுத்தம் கதஸ்ப்ருஹ: ।**
**கௌரவ்யமத்யஶேதாயமூரவ்யஸ்து தநஞ்ஜய: ।।** 42
**தஸ்ய பூமிஸ்ப்ருஶோ பக்திம் தருணேந்துஶிகாமணௌ ।**
**பக்திராகந்துகாந்யேஷாம் கதம் வாநுகரிஷ்யதி ।।** 43
**தஶேகாதஶிகா:! ப்ராயோ வணிஜஶ்சாதுரா அபி ।**
**ஏகம் தத்வேஹ ஸோऽமுத்ர தத்ஸஹஸ்ரம் உபார்ஜயத் ।।** 44
**பரக்ஷேத்ரபராமர்ஶபரிஶங்கீ தநஞ்ஜய: ।**
**நோத்ஸஸர்ஜ பஹிர்ஜாது ஸ கோஷங்கவம் ஆத்மந: ।।** 45
**வ்ருத்தி: ஸா ஹி விஶாம் யத்து புவமுல்லிக்ய ஜீவநம் ।**
**ஸ து தத் கர்ம தத்யாஜ திவமுல்லிக்ய கேவலம் ।।** 46
**அக்ரீணீதைவ புண்யாநி வ்யக்ரீணீத ந ஜாத்வபி ।**
**ஸமயேஷூபயோகாய ஸர்வமேவ ஜுகோப ஸ: ।।** 47

---

ஆனால் தனஞ்சயனோ (பக்தி என்ற) ஒன்றை இங்கே கொடுத்துவிட்டு பரலோகத்தில் பல்லாயிரம் மடங்கு சேர்த்துள்ளான். 44

296 தனஞ்ஜயன் தனது புலன்களை பிறர் மனைவியர்களிடம் மேயாதவாறு அடக்கி வைத்துக் கொள்வான் என்பது மட்டும் அல்ல, தன்னுடைய பசுமந்தையை பிறர் நிலங்களில் மேயாதவாறு, வெளியே மேயவிடுவதில்லை. 45

297 நிலத்தை உழுது பயிர்செய்வதல்லவா வைச்யர்களின் பிழைப்பு. ஆனால் இந்த தனஞ்சயன் அதை விட்டு விட்டு. புண்யகர்மாக்கள் செய்து ஸ்வர்கத்ததில் வசிப்பதிலேயே குறியாக இருந்தான். 46

410 குருதேவர் தனக்கு உபதேசித்த ஒவ்வாரு அக்ஷரத்தையும் நினைவில் வைத்துக்கொண்டான். தந்தையின் கடைசி அறிவுரையும் நினைவுக்குக் கொண்டுவந்தான். அதன்படி மீனாக்ஷி மணாளனின் திருவடியை -அனைத்து தெய்வஸ்வரூபங்களும் அதில் அடங்கியதல்லவா?-கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். 50

411 அரசன் மலையத்வஜன் தவங்கள் செய்தான். யோகத்தில் ஈடுபட்டான். தானங்கள் வழங்கினான். வேள்விகளைச் செய்தான். சாஸ்திரங்களைப் படித்துத் தேர்ந்தான். அதுமட்டும் அல்ல. கண்களைமூடி த்யானம் செய்வதும் எல்லாம் சிவபெருமானுக்கே என்று உகந்தான். 51

412 தேவி மீனாக்ஷி இந்த பிரபஞ்சத்தை படைத்து காத்து தன்னுள் அடக்கிக் கொள்வதற்கெல்லாம் காரணமானாலும் இந்திரன், நாராயணன், பரமேசுவரன், ப்ரஹ்மதேவன் என்ற தத்துவங்களுக்கெல்லாம் தாயாராகின்றாள். அந்த தேவியை சரணமடைகின்றேன் என்ற பாவனையில் ஸதா ஈடுபட்டான். 52

तपांसि तेपे युयुजे मनो दृढं ददावियाजाधिजगे जुहाव च ।
नृपो निशश्वास मिमेष चान्ततः शिवं यजामीति धियैव नान्यथा ॥ ५२
प्रपञ्चसर्गस्थितिभङ्गहेतुतापरम्पराविश्रमभूमिमादिमाम् ।
हरीन्द्रवेधोहरमातरं शिवां विशिष्य वव्रे शरणं जनेश्वरः ॥ ५३
मृगाङ्कचूडामणिमीनलोचनं दयामयं दर्शितसुन्दरस्मितम् ।
उदारभूषाशतमुत्पलाङ्कितं वपुस्तदेवास्य मनस्यवर्तत ॥ ५४
जगत्समस्तं स जडाजडात्मकं ददर्श देवो निमिषन्मिषन्नपि ।
उपात्तनीलोत्पलमुन्नतस्तनं हसन्मुखं हारकिरीटभूषितम् ॥ ५५
निमेषनिश्वासवदप्रयत्नतः स राज्यतन्त्रं सकलं च वर्तयन् ।
बभूव वाचा मनसापि कर्मणा शिवैकसंस्थो मलयध्वजो नृपः ॥ ५६
अदृश्यमश्राव्यमचिन्त्यमद्भुतं निरञ्जनं नित्यमनुश्रवाश्रवम् ।
अहंग्रहेणान्तरचिन्तयन्नृपः पराकृतद्वैतकथं परं महः ॥ ५७
परस्परेणानुपमर्दितं भजन् त्रिवर्गमित्थं समयं विभज्य सः ।
कदाचिदन्तःपुरमास्थितो नृपः प्रचक्रमे काञ्चनमालया कथाम् ॥ ५८
कुलं किलैतद्विपुलं सुधानिधेः प्रसक्तविच्छेदमिवान्तरा मया ।
अतः कथं स्याच्छिवदास सन्ततेरभङ्ग इत्यस्ति सचिन्तता ममा ॥ ५९

413 அவனுடைய உள் மனதில் ஒன்றுதான் நிலைத்து நின்றது. அது சந்திரகலையை தலையில் சூடாமணியாக சூட்டிக்கொண்டிருந்தது. அதனுடைய மீன் போன்ற கண்களில் தயையே மிளிர்ந்தது. அந்த மூலப்பொருள் அழகான புன்னகை விலைமதிப்பற்ற ஆபரணங்கள் இவைகளுடன் கையில் நீலோத்பலமலரை வைத்திருந்தது. 53

414 அரசன் தேவியின் அடுத்த தரிசனத்தையும் உள்ளத்தில் கண்டு களித்தான். அசைவன, அசையாதன ஆகிய ஸகலபிரபஞ்சமே, தேவி ஸ்வரூபமாக கையில் நீல உத்பலமலரேந்தி, நிமிர்ந்த முலைத்தடம், ஜொலிக்கின்ற ஹாரகிரீடங்கள், சிரித்த முகம் இவைகளுடன் கண்களை மூடினாலும் திறந்தாலும் காட்சி அளித்தது. 54

415 அரசன் தன்னை மறந்து தரிசிக்கின்ற ஸ்வரூபமாகவே ஆகிவிட்டான். நாம் ஒவ்வொரு கணமும் மூச்சு விடுகிறோம். அப்படி ஒவ்வொரு கணமும் நினைவுள்ளதா? இல்லையே. அதுபோல அரசன் அரசை ஆண்டான். ஆனாலும் அந்த ப்ரஜ்ஞையே இல்லை. சொல், மனது, செயல் எல்லாம் சிவமயம். 55

416 பரம ஜீவன் முக்தன் - தேஹத்தில் இருந்து கொண்டே, ஸதாசிவப்ரஹ்மம் போல ப்ரஹ்மமயமாகிவிட்ட நிலையை தீக்ஷிதர் சொற்களில் வடிக்கிறார். அந்த தேகத்தில் கண்கள் உள்ளன ஆனால்

**தபாம்ஸி தேபே யுயுஜே மநோ த்ருடம் ததாவியாஜாதிஜகே ஜுஹாவ ச ।**
**ந்ருபோ நிஶஶ்வாஸ மிமேஷ சாந்தத: ஶிவம் யஜாமீதி தியைவ நாந்யதா ॥ 52**

**ப்ரபஞ்சஸர்கஸ்திதிபங்கஹேதுதாபரம்பராவிஶ்ரமபூமிமாதிமாம் ।**
**ஹரீந்த்ரவேதோஹரமாதரம் ஶிவாம் விஶிஷ்ய வவ்ரே ஶரணம் ஜநேஶ்வர: ॥ 53**

**ம்ருகாங்கசூடாமணிமீநலோசநம் தயாமயம் தர்ஶிதமுந்தரஸ்மிதம் ।**
**உதாரபூஷாஶதமுத்பலாங்கிதம் வபுஸ்ததேவாஸ்ய மநஸ்யவர்த்தத ॥ 54**

**ஜகத் ஸமஸ்தம் ஸ ஜடாஜடாத்மகம் ததர்ஶ தேவோ நிமிஷந்மிஷந்நபி ।**
**உபாத்தநீலோத்பலமுந்நதஸ்தநம் ஹஸந்முகம் ஹாரகிரீடபூஷிதம் ॥ 55**

**நிமேஷநிஶ்வாஸவதப்ரயத்நத: ஸ ராஜ்யதந்த்ரம் ஸகலம் ச வர்தயன் ।**
**பபூவ வாசா மநஸாபி கர்மணா ஶிவைகஸம்ஸ்தோ மலயத்வஜோ ந்ருப: ॥ 56**

**அத்ருஶ்யம் அஶ்ராவ்யம் அசிந்த்யமத்புதம் நிரஞ்ஜநம் நித்யம் அநுஶ்ரவாஶ்ரவம் ।**
**அஹங்க்ரஹேணாந்தரசிந்தயந்ந்ருப: பராக்ருதத்வைதகதம் பரம் மஹ: ॥ 57**

**பரஸ்பரேணாநுபமர்திதம் பஜன் த்ரிவர்கமித்தம் ஸமயம் விபஜ்ய ஸ: ।**
**கதாசிதந்த:புரமாஸ்திதோ ந்ருப: ப்ரசக்ரமே காஞ்சநமாலயா கதாம் ॥ 58**

**குலம் கிலைதத்விபுலம் ஸுதாநிதே: ப்ரஸக்தவிச்சேதமிவாந்தரா மயா ।**
**அத: கதம் ஸ்யாச்சிவதாஸஸந்ததேரபங்க இத்யந்தி ஸசிந்ததா மம ॥ 59**

---

பார்க்கவில்லை; காதுகள் உள்ளன ஆனால் கேட்கவில்லை. மனது உள்ளது ஆனால் நினைக்கவில்லை. ஒட்டாமல் தொட்டுக் கொண்டிருக்கிறது. என்றும் எங்கும் உள்ளது. வேதம் கூறுவதற்கு பொருள் ஆகிறது. அத்தகைய ஜீவன் முக்த தசையில் அரசன் தான் வேறு என்ற உணர்வே இல்லாமல் பரம்பொருளாக விளங்கினான். 56

417 இவ்வாறு சிவ சிந்தனை, தர்ம சிந்தனை, ராஜ்ய சிந்தனை இவைகள் அனைத்தும் ஒன்றுக்கொன்று இடையூறு ஆகாமல் உரிய காலத்தை ஒதுக்கி ஈடுபட்டான். ஒரு ஸமயம் அந்தப்புரத்தில் அரசன் காஞ்சனமாலையுடன் பேச ஆரம்பித்தான். 57

418 சந்திர வம்சம் எங்கும் பரந்து தழைத்து ஓங்கியுள்ளது. அதில் ஒன்று நமது குலம். அந்தோ என்னோடு ஸந்ததி இல்லாமையால் முடியுமே. சிவதாஸர்களின் குலத்திற்கு இந்த கதியா? என்று வருந்துகிறேன். 58

419 நம்முடைய குலத்தில் முன்னோர்கள் அனைவரும் சிவதீக்ஷைப்பெற்று சிவ ஸாயுஜ்யமடைந்தவர்கள். புத்திரர்கள் எள்ளும் தண்ணீரும் இறைப்பார்கள் என்று எதிர்ப்பார்க்கவில்லை. ஆனால் நம் குலத்தினர் சிவபூஜைபாக்கியம் தடைபடக் கூடாதே! என் செய்வேன்? இதுதான் கவலை. 59

420 ஸ்வாயம்புவ மனுவில் ஆரம்பித்த மனித வர்கம், தாய்வழிபிறவிகளாகத் தொடர்ந்து, மர்த்யாம்ருதம்-மனிதன் சாகாமல் வாழ்கிறான் - என்று ஊர்ஜிதப்படுத்துகிறது..ஸந்ததி பிறந்தால் மர்த்யாம்ருதத்தை வளர்த்த புண்யம். அதனால் நித்யமான அம்ருதநிலை கிடைக்குமென வேதம் கூறுகிறது. இந்த

न नः कुलेऽस्मिञ्शिवदीक्षयामले सुतान्निवापः पितृभिर्जिघृक्षितः ।
महन्महेशानुचरार्पणव्रतं तथापि मा लोपि मयेति चिन्त्यते ॥ ६०

इदं हि मर्त्यामृतमित्युदीरितं प्रजायते यन्मनुजः प्रजामनु ।
अतः प्रसाध्यैव किलापरामृतं परामृतायोपनमेदिति श्रुतिः ॥ ६१

शिवार्पिताशेषभरा निराशिषः शिवार्चनामात्रपदाधिकारिणः ।
कथं नु याचेमहि लोकमातरं कथं न याचेमहि वा कुलक्षये ॥ ६२

इति स्वतोऽनध्यवसाय मुद्रितं पतिं विषीदन्तमियं पतिव्रता ।
जगाद वाक्यैर्हृदयानुरञ्जिभिर्जगत्तपस्यापरिपाकजन्मभिः ॥ ६३

भवान्प्रमाणं विशये विपश्चितां भवन्तमस्मिन्ननुशास्तु कोऽपरः ।
विवेक्तुमत्रार्हति मीनलोचना तथाविधः कोऽप्यथवा तदाश्रितः ॥ ६४

अनावृतज्योतिषि तेजसां निधौ अनागतातीतभवद्विवेचिनि ।
तदत्र तिष्ठेमहि कुम्भसंभवे स खल्विहामुत्र च नः प्रशासिता ॥ ६५

इति प्रियाया हृदयंगमं वचो निपीय देवो निभृतेन चेतसा ।
जगाम सद्यः चरणं पुरोधसं स च स्मृतः संन्निदधे तपोधनः ॥ ६६

तमर्घ्यपाद्यादिकया सपर्यया सभाजयन्तौ प्रणिपत्य तावुभौ ।
निवेश्य पीठे नवरत्ननिर्मिते निषेदतुस्तत्सविधे तदाज्ञया ॥ ६७

कृताञ्जलिं पार्थिवमग्रतः स्थितं तथाविधां काञ्चनमालिकामपि ।
दृशानुगृह्णन्करुणार्द्रया मुनिः गिरं प्रभावानुगुणामुदाहरत् ॥ ६८

மர்த்யாம்ருதத்தை நானும் ஸாதிக்கவேண்டும். அதனால் தானே பராம்ருதநிலை - மோக்ஷம்- கிடைக்கும். 60

421 நாமோ நம்முடைய பொறுப்புகளை எல்லாம் சிவனிடம் ஒப்படைத்து விட்டோம். நமக்கென்று ஒரு செயலும் இல்லை. சிவபூஜை செய்வது ஒன்றினாலேயே நமது கடமைகள் தீர்ந்து விடுகிறதா? ஜகன்மாதாவிடம் இதை எப்படி வேண்டுவது? குலம் அற்றுப் போகும் நிலையில் எப்படி கேட்காமல் இருப்பது? 61

422 இவ்வாறு தானே ஒரு முடிவுக்கும் வரமுடியாத நிலையில் மிகவும் வருத்தப்படுகின்ற கணவரைப் பார்த்து, பதிவ்ரதை காஞ்சனமாலை கூறினாள். உலகமே பாண்டிய வம்சம் தழைக்க வேண்டுமே என்று தவம் செய்தது. அது பழுக்கும் வகையில் தேவியின் பேச்சு அரசனுடைய உள்ளத்தைக்குளிர வைத்தது. 62

423 '' மஹாபண்டிதர்களுக்கு ஏற்படும் ஐயங்களை நீங்கள் தீர்த்து வைப்பீர்கள். என்னை கேட்கிறீர்களே! தங்களுக்கு மீனாக்ஷியைத் தவிர வேறு யார்தான் உரிய யோஜனை சொல்லமுடியும்? அல்லது அவளுடைய அருள் பெற்றவர்கள் சொல்லலாம். 63

ந ந: குலேऽஸ்மின் ஶிவதீக்ஷயாமலே ஸுதாந்நிவாப: பித்ருபிர்ஜித்ருக்ஷித: ।
மஹந்மஹேஶாநுசரார்பணவ்ரதம் ததாபி மாலோபி மயேதி சிந்த்யதே ॥ 60

இதம் ஹி மர்த்யாம்ருதமித்யுதீரிதம் ப்ரஜாயதே யந்மநுஜ: ப்ரஜாமநு ।
அத: ப்ரஸாத்யைவ கிலாபராம்ருதம் பராம்ருதாயோபநமேதிதி ஶ்ருதி: ॥ 61

ஶிவார்பிதாஶேஷபரா நிராஶிஷ: ஶிவார்சநாமாத்ரபராதிகாரிண: ।
கதம் நு யாசேமஹி லோகமாதரம் கதம் ந யாசேமஹி வா குலக்ஷயே ॥ 62

இதி ஸ்வதோऽநத்யவஸாயமுத்ரிதம் பதிம் விஷீதந்தமியம் பதிவ்ரதா ।
ஜகாத வாக்யைர்ஹ்ருதயாநுரஞ்ஜிபிர் ஜகத்தபஸ்யாபரிபாகஜந்மபி: ॥ 63

பவான் ப்ரமாணம் விஶயே விபஶ்சிதாம் பவந்தமஸ்மிந்நநுஶாஸ்து கோऽபர: ।
விவேக்துமத்ரார்ஹதி மீநலோசநா ததாவித: கோऽப்யத வா ததாஶ்ரித: ॥ 64

அநாவ்ருதஜ்யோதிஷி தேஜஸாம் நிதாவநாகதாதீதபவத்விவேசிநி ।
ததத்ர திஷ்டேமஹி கும்பஸம்பவே ஸ கல்விஹாமுத்ர ச ந: ப்ரஶாஸிதா ॥ 65

இதி ப்ரியாயா ஹ்ருதயங்கமம் வசோ நிபீய தேவோ நிப்ருதேந சேதஸா ।
ஜகாம ஸத்ய: ஶரணம் புரோதஸம் ஸ ச ஸ்ம்ருத: ஸந்நிததே தபோதந: ॥ 66

தமர்க்யபாத்யாதிகயா ஸபர்யயா ஸபாஜயந்தௌ ப்ரணிபத்ய தாவுபௌ ।
நிவேஶ்ய பீடே நவரத்நநிர்மிதே நிஷேததுஸ்தத்ஸவிதே ததாஜ்ஞயா ॥ 67

க்ருதாஞ்ஜலிம் பார்திவமக்ரதஸ்திதம் ததாவிதாம் காஞ்சநமாலிகாமபி ।
த்ருஶாநுக்ருஹ்ணன் கருணார்த்ரயா முநிர்கிரம் ப்ரபாவாநுகுணாம் உதாஹரத் ॥ 68

---

424 நமது ஆசாரியர் அகஸ்தியர், அவருடைய ஞானஒளியை வெறும் திரை போட்டு மறைக்க முடியாது. வந்தது வராதது, இன்று நடப்பது எல்லாமே அவரது விரல் நுனியில். இம்மையிலும் மறுமையிலும் அவர்தான் வழிகாட்டி அவரை அணுகுவோம்.'' 64

425 இனியவள் சொல் கேட்டு மகிழ்ந்து, திடமான மனதுடன் அரசன் அப்பொழுதே குருவை சரணமடைந்தான். அந்த தவச்செல்வரும் நினைத்தவுடன் தரிசனமளித்தார். 65

426 குருதேவனுடைய திருவடிகளை முறைப்படி கழுவினர். அவருடைய கைகளிளே அர்க்யம் என்கிற மந்திர நீரை வார்த்து வணங்கினார்கள் ராஜதம்பதிகள். நவரத்தினம் இழைத்த தங்க ஆஸனத்தில் அமர்த்தினார்கள். குருவின் அனுமதியுடன் அவருடைய அருகிலேயே அமர்ந்தனர். 66

427 கைகூப்பி எதிரே வணக்கத்துடன் அமர்ந்துள்ள அரசனையும், காஞ்சனமாலையையும், முனிவர் கருணையுடன் அருள்பார்த்து விட்டு பெரும்தன்மையுடன் பேச ஆரம்பித்தார். 67

428 மஹராஜ்! உங்கள் முன்னோர்கள் எல்லோரும் சிவயோகிகள். உங்கள் முன்னோர்களால் வளர்க்கப்பட்ட அந்தக் குலத்தில் ஒரு பாமரப் பிறவியா தோன்றும்?

महत्किलेदं शिवयोगिनां कुलं न यत्र शक्यं जनितुं पृथग्जनैः ।
तदत्र मीमांसितुमद्भुतं त्वया श्रुतस्य शीलस्य कुलस्य चोचितम् ॥ ६९
प्रवृत्तिधर्मं कतिचित्क्वचिद्विदुर्निवृत्तिधर्मः सुतरामगोचरः ।
अमुं किलार्थं विमृशन्त आसते महर्षयो बह्मसदस्यहर्निशम् ॥ ७०
न नित्यनैमित्तिककर्मशीलतां कदापि नैष्कर्म्यविरोधमर्हति ।
पतेदिमां प्रत्युत संत्यजन्निति स्मरन्ति शिष्टाः स्वयमाचरन्ति च ॥ ७१
ऋणार्थवादैरधिगत्य नित्यतां अपत्यवेदाध्ययनाग्निकर्मसु ।
समं प्रवृत्ता गृहिणस्तपोधनाः निवृत्तिनिष्ठाः अपि गौतमादयः ॥ ७२
रहस्यमप्यत्र चिराय गोपितं तवोपदेश्यं हृदि तात वर्तते ।
समाधिनिर्धूतमलेन चेतसा गृहाण कालाऽयमुपस्थितः शुभः ॥ ७३
इयं हि पत्नी भवतः पुरा चिरादुपास्त देवीमिह मीनलोचनाम् ।
जगज्जनन्या जननी भवेयमित्यपि प्रपेदे वरमन्यदुर्लभम् ॥ ७४

நீங்கள் ஒரு குறிக்கோளுடன் வந்திருக்கிறீர்கள் என்றால், அது எதிர்பாராத அற்புதமாக குலத்திற்கும், படிப்புக்கும், இயல்பிற்கும் ஏற்றத்தக்கதாகவே இருக்கும். 68

429 சிலருக்குத்தான் உலகியல் மேன்மைக்குறிய தர்மம் நன்றாகத் தெரியும். அவர்களுக்குக்கூட மோக்ஷமார்கம் தெரியாது. அந்த மோக்ஷமார்கத்தை மஹருஷிகள் எல்லோரும் ப்ரஹ்ம ஞானிகளிடம் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். 69

430 மனிதனாகப் பிறந்தவனுக்கு கடமைகள் இரண்டு உண்டு என்று வேதங்களில் சொல்லப்படுகிறது. ஒன்று நித்யகர்மா, மற்றொன்று காம்யகர்மா. ஒரு பயனைக் கருதி இந்த கர்மாவை செய் என்று சொல்லியிருந்தால், அதை சொல்லவேண்டிய அவசியமில்லை. பிராமணன் உலகத்தினருடைய க்ஷேமத்திற்காக சில கர்மாக்களை செய்தே ஆகவேண்டும் என்று வேதங்கள் விதித்துள்ளன, அவற்றை தவிர்க்கவே கூடாது. தவிர்த்தால் மற்ற எந்த புண்ணியமும் பலிக்காது என்பது, நன்னடத்தையில் நம்பிக்கையுள்ளவர்களின் நம்பிக்கை. அதில் உறுதியோடு நித்திய கர்மாக்களை அனுஷ்டிக்கிறார்கள். 70

431 மனிதப்பிறவி எடுத்தவனுக்கு ஐந்து கடமைகள், கடன் போல .செய்து தீர்த்தே ஆகவேண்டும் என்று வேதங்களில் விதிக்கப்பட்டிருக்கின்றன. அவை:

1. தெய்வங்களுக்கு கடன்பட்டிருகிறோம். அவர்கள்தான் காலத்தில் மழை பொழிந்து உலகியல் வாழ்க்கைக்கு அனுகூலமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு அன்றாடம் பூஜை வழிபாடு செய்யவேண்டிய கடன்.

2. வேதங்களை தங்களுடைய தபோவலிமையினால் கண்டெடுத்து, அழியாமல் காப்பாற்றி கொடுத்திருக்கிறார்கள் ருஷிகள். வேதங்களை நாம் அத்யயனம் செய்து, ஸந்ததிகளுக்கு கற்றுக்கொடுத்து, அவை அழியாமல் காப்பாற்ற வேண்டும். இதுதான் ப்ரஹ்மயக்ஞம் என்கிற கடன்.

மஹத் கிலேதம் ஶிவயோகிநாம் குலம் ந யத்ர ஶக்யம் ஜநிதும் ப்ருதக்ஜநை: ।
ததத்ர மீமாம்ஸிதமத்புதம் த்வயா ஶ்ருதஸ்ய ஶீலஸ்ய குலஸ்ய சோசிதம் ॥69
ப்ரவ்ருத்திதர்மம் கதிசித் க்வசித்விதுர்நிவ்ருத்திதர்ம: ஸுதராமகோசர:
அமும் கிலார்த்தம் விம்ருஶந்த ஆஸதே மஹர்ஷயோ ப்ரஹ்மஸதஸ்யஹர்நிஶம் ॥
ந நித்யநைமித்திககர்மஶீலதாம் கதாபி நைஷ்கர்ம்யவிரோதமர்ஹதி ।
பதேதிமாம் ப்ரத்யுத ஸந்த்யஜந்நிதி ஸ்மரந்தி ஶிஷ்டா: ஸ்வயமாசரந்தி ச ॥ 7
ருணார்த்தவாதைரதிகத்ய நித்யதாம் அபத்யவேதாத்யநாக்நிகர்மஸு ।
ஸமம் ப்ரவ்ருத்தா க்ருஹிணந்தபோதநா நிவ்ருத்திநிஷ்டா அபி கௌதமாதய: ॥72
ரஹஸ்யமப்யத்ர சிராய கோபிதம் தவோபதேஶ்யம் ஹ்ருதி தாத ! வர்ததே ।
ஸமாதிநிர்தூதமலேந சேதஸா க்ருஹாண காலோऽயமுபஸ்தித: ஶுப: ॥ 73
இயம் ஹி பத்நீ பவத: புரா சிராத் உபாஸ்த தேவீமிஹ மீநலோசநாம் ।
ஜகஜ்ஜநந்யா ஜநநீ பவேயமித்யபி ப்ரபேதே வரமந்யதுர்லபம் ॥ 74

---

3. நம்முடைய குல முன்னோர்களுக்கு தர்ப்பணம். ச்ராத்தம் செய்யவேண்டும். இதுதான் பித்ரு கடன்

4. நம்முடன் வாழ்ந்து வருகின்ற மனித சமுதாயத்திற்கு நாம் செய்யவேண்டிய கடமைகள் மனுஷ்ய கடன். மனிதரல்லாத பிராணிகளைப் பேணிக் காக்க வேண்டும். இது பூதருணம்.

மனிதப்பிறவி எடுத்தவன் உயிருள்ளவரை இந்த கடன்களை ஆற்றித் தீர்க்கவேண்டும். மரணம் வரை அது தீராது. அதற்காகத்தான் நாம் ஸந்ததியைப் பெற்றுக் கொள்கிறோம். இந்த வழியை அனுஸரித்து தர்மங்களை அனுஷ்டிப்பவர்கள், க்ருஹஸ்தர்கள் மட்டும் அல்ல, தவ சிரேஷ்டர்களும் கூட. கௌதமர் முதலிய குறிப்பிட்ட ஞானிகள்கூட கர்மாவை விடாமல் கடமையாக செய்கிறார்கள். 71

432 ஒரு ரஹசியத்தை நான் வெகுநாட்களாகவே உனக்குக் கூறாமல் காப்பாற்றி வருகிறேன். அதை சொல்ல வேண்டிய தருணம் இப்பொழுது வந்துவிட்டது. ஆனால் அதை இப்பொழுதுள்ள மனநிலையில் உன்னால் ஏற்க இயலாது. ஞானம் பக்குவம் பெற்று ஸமாதி நிலை அடைந்தால் உனக்கு அது நன்கு விளங்கும். 72

433 இதோ உன் அருகில் பணிவே வடிவமாகி உள்ள உன் மனைவி, முன்பே மீனாக்ஷி தேவியை உபாஸனை செய்து, ''நான் உனக்கு தாயாராக வரவேண்டும்'' என்ற ஒரு வரத்தைப் பெற்றிருக்கிறாள். வேறு எவரும் நினைத்துக் கூட பார்க்கமுடியாத வரம் இது. 73

434 அந்த மீனாக்ஷி தேவியே உன்னை இவளுக்கு கணவனாக ஸங்கல்பித்து விட்டாள். இவளுடைய பிறப்பு தீர்மானிப்பதற்கு முன்பே இந்த ஸங்கல்பம்

पतिस्त्वमस्यै शिवयेव कल्पितः समुल्लिखन्त्यावतरं निजं क्षितौ ।
इदं तु चिन्त्यं निपुणं कथं पुनः परात्परं वस्तु तदाऽविरस्तिवति ॥ ७५
क्रियावतामग्निमुपाश्रिता सती ददाति या नैकविधान्मनोरथान् ।
अतोऽद्य वैतानिकहव्यवाहनात् उदेत् उसेति प्रतिभाति भूयसा ॥ ७६
इतीरिते तेन विनेदुरुच्चकैः अनाहता दुन्दुभयो दिवौकसाम् ।
नृपस्य देव्या अपि दक्षिणेतरे विलोचने प्रास्पुरतां च तत्क्षणम् ॥ ७७
प्रदक्षिणीकृत्य स विन्ध्यमर्दनं पतिः क्षितेः काञ्चनमालया समम् ।
प्रणम्य रोमाञ्चिताविग्रहोऽबदत् प्रमोदबाष्पस्थगिताभिरुक्तिभिः ॥ ७८
क्व सा चिदानन्दमयी जगत्प्रसूः क्व किंपचानौ भगवन्निमौ जनौ ।
अहो भवत्पादरजः प्रमार्जन प्रभावसंपत्परिपाक ईदृशः ॥ ७९
तवास्मि सूनुस्तव तात ! किंकरः तव स्वभूतोऽस्मि सहानुबन्धिभिः ।
यथानुगृह्णासि तथानुचरेयमित्यसावियानेव मनोरथो मम ॥ ८०
इति प्रपन्नं मलयध्वजं नृपं शताश्वमेधावभृथाप्लुतं मुनिः ।
स भाविकर्मण्यधिकारसिद्धये शशास भूयो हयमेधकर्मणि ॥ ८१
इत्थं प्रसादविहिताशिषि कुम्भयोनौ याते तपोवनपदं पुनरेतुकामे ।
आराधयत्क्षितिपतिः शिवमश्वमेध संभारसंभरणसंभ्रमतोऽपि तावत् ॥ ८२

इति पञ्चमः सर्गः

---

ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது நீ பராத்பரம், பரத்திற்கு மேலான வஸ்து எப்படி நமக்குப் பிறக்கும் என்பதை சிந்திக்க வேண்டும். 74

435 கர்மானுஷ்டானங்களில் முனைந்தவர்களுக்கு, அவர்கள் செய்கின்ற யாகாக்னியாகவே தேவி கடாக்ஷித்து ஸகல மனோரதங்களையும் பூர்த்தி செய்கிறாள். ஆகவே விதிப்படி ஹோமம் செய்யப்பட்ட அக்னியிலிருந்து தேவி அனேகமாக உதிக்கலாம் என்று எனக்குத் தெரிகிறது. 75

436 இவ்வாறு குருதேவர் கூறியதை ஆமோதிப்பது போல் ஆகாசத்தில் தேவர்களுடைய துந்துபி முழக்கம் ஏற்பட்டது. அரசனுடைய இடது கண்ணும் துடித்தது. தேவியினுடைய இடது கண்ணும் துடித்தது. 76

437 விந்தியமலையை தலைகுனியவைத்த அகத்திய மகருஷியை அரசன் காஞ்சனமாலையுடன் வலம் வந்து வணங்கிவிட்டு புளகாங்கிதமடைந்த உடலுடன், ஆனந்தக் கண்ணீர் விட்டு, தழுதழுத்த குரலில் பேசினான். 77

. 438 குருநாத! என்ன சொல்வேன்! சிதானந்த வடிவத்தில் இருக்கும் அந்த ஜகன்மாதா எங்கே? ஒன்றுமே அறியாத இந்த மிகச்சாதாரணமான தம்பதிகள்

பதிஸ்த்வமஸ்யை ஶிவயைவ கல்பித: ஸமுல்லிகந்த்யாவதரம் நிஜம் க்ஷிதௌ ।
இதம் து சிந்த்யம் நிபுணம் கதம் புந: பராத்பரம் வஸ்து ததாऽவிரஸ்த்விதி ॥ 75

க்ரியாவதாமக்நிம் உபாஶ்ரிதா ஸதீ ததாதி யா நைகவிதான் மநோரதான் ।
அதோऽத்ய வைதாநிகஹவ்யவாஹநாத் உதேத் உஸேதி ப்ரதிபாதி பூயஸா ॥ 76

இதீரிதே தேந விநேதுருச்சகை: அநாஹதா துந்துபயோ திவௌகஸாம் ।
ந்ருபஸ்ய தேவ்யா அபி தக்ஷிணேதரே விலோசநே ப்ராஸ்புரதாம் ச தத்க்ஷணம் ॥ 77

ப்ரதக்ஷிணீக்ருத்ய ஸ விந்த்யமர்தநம் பதி: க்ஷிதே: காஞ்சநமாலயா ஸமம் ।
ப்ரணம்ய ரோமாஞ்சிதவிக்ரஹோऽபவத் ப்ரமோதபாஷ்பஸ்தகிதாபிருக்திபி: ॥ 78

க்வ ஸா சிதாநந்தமயீ ஜகத்ப்ரஸூ: க்வ கிம்பசாநௌ பகவந்நிமௌ ஜநௌ ।
அஹோ பவத்பாதரஜ:ப்ரமார்ஜந ப்ரபாவஸம்பத்பரிபாக ஈத்ருஶ: ॥ 79

தவாஸ்மி ஸூநுஸ்தவ தாத ! கிங்கரஸ்தவ ஸ்வபூதோऽஸ்மி ஸஹாநுபந்திபி: ।
யதாநுக்ருஹ்ணாஸி ததாசரேயம் இத்யஸாவியாநேவ மநோரதோ மம ॥ 80

இதி ப்ரபந்நம் மலயத்வஜம் ந்ருபம் ஶதாஶ்வமேதாவப்ருதாப்லுதம் முநி: ।
ஸ பாவிகர்மண்யதிகாரஸித்தயே ஶஶாஸ பூயோ ஹயமேதகர்மணி ॥ 81

இத்தம் ப்ரஸாதவிஹிதாஶிஷி கும்பயோநௌ யாதே தபோவநபதம் புநரேதுகாமே ।
ஆராதயத் க்ஷிதிபதி: ஶிவமஶ்வமேத ஸம்பார ஸம்பரண ஸம்ப்ரமதோऽபி தாவத் ॥ 82

இதி ஶ்ரீமஹாகவிநீலகண்டதீக்ஷிதப்ரணீதே ஶிவலீலார்ணவே பஞ்சம: ஸர்க: ।

*எங்கே? தங்களுடைய திருவடிதூசிகளை பூசிக் கொண்டதினால் உதித்த பயனல்லவா இது!!* 78

*439 நான் தங்களுடைய பிள்ளை. தங்களுடைய சேவகன். தங்களுடைய அடிமை. நான் மட்டும் அல்ல. என்னைச் சார்ந்த பெருமைக்குறிய அனைவருமே. எவ்விதம் நடக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களோ அப்படியே செயல்படுவோம். இதுவே என்னுடைய மனோரதம்* 79

*440 இவ்வாறு மலையத்வஜபாண்டிய மஹாராஜன் பணிந்தான். இதற்குமுன் நூறு அஸ்வமேத யாகங்களை செய்து அவப்ருத ஸ்னானத்தினால் தூய்மை பெற்றவனை. வரப்போகின்ற பெருமைக்கு தகுதி பெறுவதற்காக மறுபடியும் அஸ்வமேத யாகம் செய்யலாம் என்று அருளினார்.* 80

*441 அகத்திய முனிவர் அரச தம்பதிகளுக்கு ஆசி வழங்கிவிட்டு, வருகிறேன் என்று சொல்லிக் கொண்டு தபோவனத்திற்கு கிளம்பினார். அஸ்வமேதயாகம் செய்ய பொருள்களை சேகரிக்கின்ற அரசன் அந்த ஸந்தர்பத்திலும் சிவபூஜையை குறைபடாமல் ஆற்றினான். 82*

**ஐந்தாவது ஸர்கம் முடிவடைந்தது**

## षष्ठः सर्गः

आहर्तुं ययुमभितो ययुर्नियक्ताः मर्त्या ये किल मलयध्वजेन राज्ञा।
लब्ध्वा ते क्वचिदथ सोमपात्मजं द्राक् आजह्रुः स्वयमपि सोमपं तुरंगम्॥ १
विस्तीर्णामथ तपनीयपङ्कजिन्या व्यातेनुस्तटभुवि तस्य यज्ञशालाम्।
आरादप्यवनिभुजां महोपकार्या निःसंख्यानुटजगणांश्च तापसानाम्॥ २
आनीते तुरगवरे समाहृतायां सामग्र्याम् अतिथिसभाजनोचितायाम्।
आगच्छत् सह मुनिभिः परावरज्ञैः ब्रह्मर्षिश्चुलिकितसागरः सशिष्यः॥ ३
आराध्य प्रमथपतिं महोपहारैर्मीनाक्षीमपि मलयध्वजः सदारः।
आरेभे सवनमनुज्ञया मुनीनाम् आगस्त्यं चरणयुगं प्रणम्य सद्यः॥ ४
स्वायत्तामपि दुरतिक्रमात्प्रतापात् सगृह्णन्भुवि जनतां स साङ्ग्रहण्या।
मुक्ताश्वो धृतनियमः पदेऽस्य होमं कुर्वाणः समवसदग्न्यगार एव॥ ५
स्वच्छन्दं हयमभितोऽपि संचरन्तं संगुप्तं नृपपुरुषैः शतैश्चतुर्भिः।
रोद्धुं यद्यपि न शशाक राजलोकः शक्तोऽभूत् पुनरखिलोऽनुरोद्धुमेनम्॥ ६
कीर्त्याविष्कृतसरणिं प्रतापगुप्तं पश्यन्तस्तुरगमितस्ततश्चरन्तम्।
तद्धव्यग्रहणरसार्द्ररतालुमूला वर्षान्तं विबुधगणाः प्रतीक्ष्य तस्थुः॥ ७

---

## ஆறாவது ஸர்கம்

*442 அசுவமேதயாகப் பசுவாகக்கூடிய குதிரையைத் தேடிக் கொண்டுவர அரசன் மலயத்வஜன் ஆட்களை அனுப்பினான். வனத்தில், ஓரிடத்தில் ஸோமக்கொடி வளர்த்திருந்தது. ஒரு குதிரை அதைத் தின்று கொண்டிருந்தது. கூடவே அதன் குட்டியும் ஸோமக்கொடியை தின்றுகொண்டிருந்தது. இது தான் அசுவமேதயாகத்திற்கு தகுதியுள்ளது என்று அந்த வளர்ந்த குட்டியைக் கொண்டுவந்தார்கள்.* 1

*443 பொற்றாமரை தடாகத்தின் கரையில் விஸ்தாரமான யாகசாலை நிர்மாணம் செய்தார்கள். அதற்கு விஜயம் செய்யும் அரசர்களுக்கு மாளிகைகளும்,அப்பால் முனிவர்களுக்கு பர்ணசாலைகளும் தயாராயின.* 2

*444 அசுவமேத குதிரை திக்விஜயம் செய்வதற்காக வந்து சேர்ந்தது. அதிதிகளுக்குத் தேவையான ஸகல பொருட்களும் வந்து குவிந்தன. கடலை உள்ளங்கை நீராக்கிப் பருகிய அகத்திய முனிவர் வந்து சேர்ந்தார். அவருடன் தத்துவங்களை அடி முதல் நுனி வரை அறிந்த ப்ரஹ்மருஷிகளும் வந்து சேர்ந்தனர்.* 3

*445 அரசன் மலயத்வஜன், மனைவியுடன், அகத்தியருடைய திருவடிகளை வணங்கினான். பிறகு சுந்தரேசுவரரையும், மீனாக்ஷி தேவியையும் சிறப்பான*

## அத ஷஷ்ட: ஸர்க: ।

ஆஹர்தும் யயுமபிதோ யயுர்நியுக்தா: மர்த்யா யே கில மலயத்வஜேந ராஜ்ஞா ।
லப்த்வா தே க்வசிதத ஸோமபாத்மஜம் த்ராக் ஆஜஹ்ரு: ஸ்வயமபி ஸோமபம் துரங்கம் ।। 1
விஸ்தீர்ணாமத தபநீயபங்கஜிந்யா வ்யாதேநுஸ்தடபுவி தஸ்ய யஜ்ஞஶாலாம் ।
ஆராத் அப்யவநிபுஜாம் மஹோபகார்யா நிஸங்க்யாநுடஜகணாம்ஶ்ச தாபஸாநாம் ।। 2
ஆநீதே துரகவரே ஸமாஹ்ருதாயாம் ஸாமக்ர்யாமதிதிஸபாஜநோசிதாயாம் ।
ஆகச்சத் ஸஹ முநிபி: பராவரஜ்ஞைர் ப்ரஹ்மர்ஷிஶ்சுலுகிதஸாகர: ஸஶிஷ்யை: ।। 3
ஆராத்ய ப்ரமதபதிம் மஹோபஹாரைர் மீநாக்ஷீமபி மலயத்வஜ: ஸதார: ।
ஆரேபே ஸவநமநுஜ்ஞயா முநீநாமாகஸ்த்யம் சரணயுகம் ப்ரணம்ய ஸத்ய: ।। 4
ஸ்வாயத்தாமபி துரதிக்ரமாத் ப்ரதாபாத் ஸங்க்ருஹ்ணந் புவி ஜநதாம் ஸ ஸாங்க்ரஹண்யா ।
முக்தாஶ்வோ த்ருதநியம: பதேऽஸ்ய ஹோமம் குர்வாண: ஸமவஸதக்ந்யகார ஏவ ।। 5
ஸ்வச்சந்தம் ஹயமபிதோऽபி ஸஞ்சரந்தம் ஸங்குப்தம் ந்ருபபுருஷை:ஶதைஶ்சதுர்பி: ।
ரோத்தும் யத்யபி ந ஶஶாக ராஜலோக: ஶக்தோऽபூத் புநரகிலோऽநுரோத்துமேநம் ।। 6
கீர்த்யாவிஷ்க்ருதஸரணிம் ப்ரதாபகுப்தம் பஶ்யந்தஸ்துரகமிதஸ்ததஶ்சரந்தம் ।
தத்தவ்யக்ரஹணரஸார்த்ரதாலுமூலா வர்ஷாந்தம் விபுதகணா: ப்ரதீக்ஷ்ய தஸ்து: ।। 7

---

உபசாரங்களுடன் பூஜித்தான். உடன் முனிவர்களின் அனுமதியுடன் யாகம் செய்ய ஆரம்பித்தான். 4

446 அரசனுடைய பராக்ரமத்தை ஏற்கனவே மஹாஜனங்கள் நன்கு உணர்ந்திருந்தாரகள். வந்திருந்த அரசர்கள் அனைவரும், இயல்பாகவே, அரசன் மலயத்வஜனுக்குக் கட்டுப்பட்டவர்கள்தான். ஆயினும், 'ஸாங்கிரஹரணி' என்ற யாகத்தை முதல் செய்து முடிந்தவுடன், யாகக் குதிரையைக் கட்டிப் போடாமல், யதேச்சையாக ஸஞ்சரிக்கவிட்டு, அது கால் அடி வைக்கும் இடமெல்லாம் ஹோமம் நடத்தினான். யாகசாலையைவிட்டு அகலாமல் அங்கேயே தங்கி இருந்தான். ஸாங்க்ரஹண்யேஷ்டயா யனுதே! இமாம் ஜனதாம் ஸம்க்ருஷ்ணானீதி! என்று வேத வாக்யம். 5

447 நானூறு அரசவீரர்கள் குதிரையை தொடர்ந்து பாதுகாத்தார்கள். குதிரை தன் இஷ்டப்படி எல்லா இடங்களிலும் ஸஞ்சரித்தது. மலயத்வஜ அரசனின் யாகக்குதிரையை மற்ற அரசர்கள் தடுக்கத் துணியவில்லை. அனைவரும் அதைப்பின் தொடர முனைந்தார்கள். இங்கே, ரோத்தும், அனுரோததும் என்ற சப்தங்களின் பின்னல் ரஸிக்கத்தக்கது. 6

448 மலயத்வஜனுடைய அச்வமேதக் குதிரை வருகிறதாமே என்று ஜனங்களிடையே புகழ் பரவிவிட்டது. வழியெல்லாம் அதே பேச்சு. அரசனுடைய கீர்த்தி ப்ரதாபமே யாரையும் நெருங்கவிடவில்லை. ஜனங்கள் அதைப்பார்த்து கும்பிடுகிறார்கள். தேவர்கள் யாகத்தில் தமக்குக்

स्वैरप्यधिगतवाजिमेधकाण्डैः संपूर्णे किल विषयेऽस्य वाजिरक्षाः ।
वृत्त्यर्थं क्वचन किमप्यनाददानाः स्वैः स्वैः स्वैः कथमपि वर्तयांबभूवुः ॥ ८

अश्वत्थे क्षणमवबध्य तं तुरंगं संपूर्णे शशिनि समेत्य तिष्ययोगम् ।
आवृत्तं नगरमभि प्रचोदयन्तो निन्युस्तं नृपपुरुषा हिमावसाने ॥ ९

आयाता धरणिभुजो यदासमन्तात् आयाताः सकलकलाविदश्च लोकाः ।
आयास्यन्त्यमरगणाश्च हव्यहेतोः तेनायात्स्वयमपि कौतुकी वसन्तः ॥ १०

निःशेषोपरतरसालपल्लवाशानिर्विण्णैर्वनभुवि कोकिलैस्तदानीम् ।
आसेदे शिशिरदिनान्तसुप्तबुद्धैःआकाशाच्च्युत इव पञ्चमो निनादः ॥ ११

प्रम्लानाः धरणिरुहः स्वतः प्रसेदुर्निष्क्रान्तो मलयगिरेर्बहिः समीरः ।
वीरश्रीविषमशरस्य बाहुकाण्डे विश्रान्तिं स्वयमभिरोचयांबभूव ॥ १२

मालिन्यं दधति मषीविलेपनेन प्रावण्यं युवतिषु घोषयन्ति यूनाम् ।
झंकुर्वद्भ्रमरनिभेन मीनकेतोः संचेरुर्बहिरिव शासनाक्षराणि ॥ १३

कूजन्तो मदनपुरोहिताः द्विरेफाः पुष्पाणि ध्रुवमभिमन्त्रयांबभूवुः ।
स्वस्थानस्थितिम् अपरित्यजन्त एते विध्येयुः किमितरथा शराः शरव्यम् ॥ १४

आनङ्गं निगमम् अजस्रमुद्गिरन्तो भैक्षेण प्रतितरुवीथि वर्तयन्तः ।
निर्निद्रास्त्वहनि निरन्तरं द्विरेफा आचार्ये वटव इवावसन्वसन्ते ॥ १५

---

கிடைக்கப்போகின்ற ஹவிர்பாகத்தை சுவைக்கலாம் என்று தாடைவரை வாயில் சப்புக் கொட்டிக் கொண்டிருந்தார்கள். ப்ராஹ்மணர்களும் குதிரையைப் பார்க்கிறார்கள். 'இதன் வபையை அல்லவா நாம் பிரஸாதமாகச் சாப்பிடப்போகிறோம்' என்று அவர்களின் நாக்கில் ஜலம் ஊருகிறது. 7

449 தீக்ஷிதர் அல்லவா கவி. யாகம் பற்றிய ஹாஸ்யம் கூறுகிறார். குதிரை எங்கு சென்றாலும், அங்கெல்லாம் அசுவமேதகாண்டம் அத்யயனம் செய்த வேதவித்பன்னர்கள் கூடிவிடுகிறார்கள். குதிரைக் களைப்படைந்தால், அதற்கு விதவிதமான உபசாரங்களும் ஆகாரங்களும் கிடைத்தன. ஆனால். ஐயோ பாவம்! குதிரை காப்பாளர்களுக்கு ஒன்றுமே கிடைக்கவில்லை. அவர்கள் தாங்கள் கொண்டு வந்திருந்த வரட்டு அவலும், ஓடைத் தண்ணீருமே உண்டு பொழுது போக்கினார்கள். 8

450 குதிரையுடன் சென்ற அரசு வீரர்கள், பனிக்காலம் முடிந்து தைபூச நக்ஷத்திரத்தன்று சிறிது நேரம் குதிரையை அரசமரத்தடியில் தங்க விட்டு, நகர்வலம் வந்தார்கள். 9

451 யாகம் ஆரம்பமாகப் போகிறது. நாற்புறமிருந்து அரசர்கள் வந்துவிட்டனர். எல்லா கலைகளிலும் தேர்ச்சி பெற்ற கலைஞர்கள்

ஸர்வைரப்யதிகதவாஜிமேதகாண்டை: ஸம்பூர்ணே கில விஷயேऽஸ்ய வாஜிரக்ஷா:।
வ்ருத்த்யர்த்தம் க்வசந கிமப்யநாததாநா: ஸ்வை: ஸ்வை: ஸ்வை: கதமபிவர்தயாம்பபூவு:॥ 8
அஶ்வத்தே க்ஷணமவபத்த்ய தம் துரங்கம் ஸம்பூர்ணே ஶஶிநி ஸமேத்ய திஷ்யயோகம் ।
ஆவ்ருத்தம் நகரமபி ப்ரசோதயந்தோ நிந்யுஸ்தம் ந்ருபபுருஷா ஹிமாவஸாநே ॥ 9
ஆயாதா தரணிபுஜோ யதாஸமந்தாதாயாதா: ஸகலகலாவிதஶ்ச லோகா: ।
ஆயாஸ்யந்த்யமரகணாஶ்ச ஹவ்யஹேதோஸ்தேநாயான் ஸ்வயமபி கௌதுகீ வஸந்த:॥ 10
நிஶ்ஶேஷோபரதரஸாலபல்லவாஶாநிர்விண்ணைர் வநபுவி கோகிலைஸ்ததாநீம் ।
ஆஸேதே ஶிஶிரதிநாந்தஸுப்தபுத்தராகாஶாச்ச்யுத இவ பஞ்சமோ நிநாத: ॥ 11
ப்ரமாநா தரணிருஹ: ஸ்வத: ப்ரஸேதுர்நிஷ்க்ராந்தோ மலயகிரேபஹி: ஸமீர: ।
வீரஸ்ரீர்விஷமஶரஸ்ய பாஹுகாண்டே விஶ்ராந்திம் ஸ்வயமபிரோசயாம்பபூவ ॥ 12
மாலிந்யம் தததி மஷீவிலேபநேந ப்ராவண்யம் யுவதிஷு கோஷயந்தி யூநாம் ।
ஜங்குர்வத்ப்ரமரநிபேந மீநகேதோ: ஸஞ்சேருர்பஹிரிவ ஶாஸநாக்ஷராணி ॥ 13
கூஜந்தோ மதநபுரோஹிதா த்விரேபா: புஷ்பாணி த்ருவமபிமந்த்ரயாம்பபூவு: ।
ஸ்வஸ்தாநஸ்திதிம் அபரித்யஜந்த ஏதே வித்யேயு: கிமிதரதா ஶரா: ஶரவ்யம் ॥ 14

---

கூடிவிட்டனர். ஹவிர்பாகங்கள் சீக்கிரமே கிடைக்கப் போகிறது என்று தேவர்கள் காத்துக் கொண்டிருக்கின்றனர். வஸந்த ருதுவும் தலை காட்டியது.10

452 பனிக்காலத்தில் பெரிய பெரிய மாமரங்களிருந்து இளந்தளிர்கள் எல்லாம் ஒன்றுகூட மீதம் இல்லாமல் விழுந்துவிட்டன என்று வெறுத்து, வேதனையுடன் இருந்த குயில்கள், பனிக்காலம் முடியட்டும் என்று தூங்கிவிட்டு எழுந்தன. பனிக்காலம் முடிந்து விட்டது என்று கூறுவதுபோல் பஞ்சமஸ்வர ஓசை குயில்களிடமிருந்து எழுந்தது ''பிக: கூஜதி பஞ்சமம்''.11

453 வாடியிருந்த மரங்கள் செடிகள் எல்லாம் நிமிர ஆரம்பித்தன. மலயமலையில் பனிமூட்டத்திருந்த காற்று வெளிக்கிளம்பியது. மன்மதன் சோர்ந்திருந்த தோள்களை சோம்பல் முறித்து உதரிக்கொண்டான். வீரலக்ஷ்மி அவனுடைய தோள்களில் விச்ராந்தியை விரும்பினாள். 12

454 வஸந்தகாலத்தில், இளம் பெண்களின் கண்களில் மை கலைந்திருந்ததது. அது வாலிபர்கள் தருணிகளை வென்று ஆண்டுவிட்டார்கள் என்பதைக் குறித்தது. அதனைக் கரும்வண்டுகள் முனகுவதுபோல ரீங்காரம் செய்தன. 13

455 வண்டுகள் மன்மதனின் புரோகிதர்கள். மரங்களின் பூக்களில் அமர்ந்து கொண்டு மன்மத மந்திரம் ஓதி மலர்களுக்குக் கவர்ச்சியை அருள்கின்றன. பாணம் எய்பவர்கள் நிற்குமிடத்திலிருந்து நகராமல் தானே அம்புகளை ஏவுகிறார்கள். 14

अध्वर्युं मलयसमीरमन्यपुष्टं होतारं वनभुवि सामगं द्विरेफम् ।
ब्रह्माणं मधुमपि सादरं वृणाना आजह्रुर्मदनमहाध्वरं युवानः ॥ १६

मोहान्धे जगति विपश्चितो यतः के अप्यग्नीनादधुरयजन्त चास्तशङ्काः ।
तन्मूलं ध्रुवमयशो दिशो दशापि प्रावारीदसमशरस्य भृङ्गदम्भात् ॥ १७

आमूलात् अविरलमाचिते प्रवालैश्चूतेऽपि प्रययुरतोषमन्यपुष्टाः ।
सर्वाणि ग्रसितुमिमानि यन्न शेकुः स्थातुं वा यदपि न शाखिकामपश्यन् ॥ १८

के भृङ्गाः क इव पिकाः समीरणः कः कश्चन्द्रः क इव मधुर्मनोभवः कः ।
दौर्भाग्याद्विरहिजनस्य दुर्विभेदं हन्तासीत्कथमिदमैकमत्यमेषाम् ॥ १९

आचूडं कुसुममया मधोः प्रसादात् वासन्तीबिचकिलचूतचम्पकाद्याः ।
धुस्तूरेष्वपि च निरीक्ष्य तां समृद्धिं मन्दाक्षादिव नतमौलयो बभूवुः ॥ २०

उन्मीलन्मधुमदतुन्दिला द्विरेफाः उद्दामस्तबकपरिष्कृता लताश्च ।
अन्योन्यं यदिह कथंचिदभ्यजानन् सा संपत् सुरभिकटाक्षवीक्षणानाम् ॥ २१

आक्रम्य क्षितितलमावृतं तुषारैः तद्वार्तामपि न मधुर्यदा विषेहे ।
शीतांशौ हिमवति च द्वयोस्तदानीं लब्धं तेरभयमितो हतावशिष्टैः ॥ २२

---

456 வண்டுகள் மன்மதனிடமிருந்து காமவேதத்தை அத்யயனம் செய்கின்றன அதை ஓதிக்கொண்டே நடுப்பகல், மரங்கள்தோறும் சென்று பிக்ஷை எடுக்கின்றன. பகல் தூக்கத்தையும் இழந்து விடுகின்றன. இப்படித்தானே வேதம் ஓதுகின்ற சீடர்கள் ஆசாரியருக்கு ஸேவை செய்கிறார்கள். 15

457 வாலிபர்கள் மன்மத மஹாயாகத்தை அனுஷ்டிக்கிறார்கள். அவர்களுக்கு அத்வர்யு மலயமலைக் காற்று, குயில்களின் ஹோதா. வண்டுகள், ஸாமகானம் செய்யும் உத்கதா வஸந்தன் ப்ரஹ்மா. 16

458 இந்த மன்மதயாகத்தில் மோகித்து ஞானிகள்கூட கொஞ்சம்கூட ஸங்கோசமில்லாமல், காமாக்னி ஹோத்ரம் செய்தார்கள் என்று பத்து திசைகளிலும் இந்த அபகீர்த்தியை வண்டுகளின் ரீங்காரம் பரப்பியது! 17

459 வஸந்தகாலத்தில் மாமரங்களில் செக்கச்செவேலென்று. வேரிருந்து மரம் முழுவதும் தளிர்கள் காணப்பட்டன.. அவை அனைத்தையுமே சாப்பிட வேண்டும் என்கிற அவாவில், குயில்கள் இங்கும் அங்கும் அலைந்தன. அமர்ந்து கொள்வதற்கு கிளைகளில் இடமில்லாமலும்,. அவைகளை சாப்பிடமுடியாமலும் திண்டாடின. (ப்ரவாள சப்தம் நிறத்தைக் குறிக்கிறது)18

460 வண்டுகளாவது, குயில்களாவது. குளிர்காற்றாவது, சந்திரனாவது. வஸந்தமாவது மன்மதனாவது, இவர்களிடத்தில் விரகத்தினால் தவிக்கும் துர்பாக்கியர்களுக்கு துன்பத்தை விளைவிப்பதின் பொருட்டு ஒற்றுமை எப்படி ஏற்பட்டது? 19

ஆநங்கம் நிகமம் அஜஸ்ரமுத்கிரந்தோ பைக்ஷேண ப்ரதிதருவீதி வர்தயந்த ।
நிர்நித்ராஸ்த்வஹநி நிரந்தரம் த்விரேபா ஆசார்யே வடவ இவாவஸன் வஸந்தே ॥ 15

அத்வர்யும் மலயஸமீரம் அந்யபுஷ்டம் ஹோதாரம் வநபுவி ஸாமகம் த்விரேபம் ।
ப்ரஹ்மாணம் மதுமபி ஸாதரம் வ்ருணாநா ஆஜஹ்ருர்மதநமஹாத்வரம் யுவாந: ॥ 16

மோஹாந்தே ஜகதி விபஶ்சிதோ யத: கேऽப்யக்நீநாதது: அயஜந்த சாஸ்தஶங்கா: ।
தந்மூலம் த்ருவமயஶோ திஶா தஶாபி ப்ராவாரீதஸமஶரஸ்ய ப்ருங்கதம்பாத் ॥ 17

ஆமூலாத் அவிரளமாசிதே ப்ரவாளேஶ்ரூதேऽபி ப்ரயயுரதோஷம் அந்யபுஷ்டா: ।
ஸர்வாணி க்ரஸிதுமிமாநி யந்ந ஶேகு: ஸ்தாதும் வா யதபி ந ஶாகிகாம் அபஶ்யன் ॥ 18

கே ப்ருங்கா: க இவ பிகா: ஸமீரண: கஶ்சந்த்ர: க இவ மதுர்மநோபவ: க: ।
தௌர்பாக்யாத்விரஹிஜநஸ்ய துர்விபேதம் ஹந்தாஸீத் கதமிதமைகமத்யமேஷாம்॥ 19

ஆகூடம் குஸுமமயா மதோ: ப்ரஸாதாத் வாஸந்தீவிசகிலகூதசம்பகாத்யா: ।
துஸ்தூரேஷ்வபி ச நிரீக்ஷ்ய தாம் ஸம்ருத்திம் மந்தாக்ஷாதிவ நதமௌலயோ பபூவு: ॥ 20

உந்மீலந்மதுமததுந்திலா த்விரேபா உத்தாமஸ்தபகபரிஷ்க்ருதா லதாஶ்ச ।
அந்யோந்யம் யதிஹ ந கிஞ்சிதப்யஜாநன் ஸா ஸம்பத்ஸுரபிகடாக்ஷவீக்ஷணாநாம்॥ 21

ஆக்ரம்ய க்ஷிதிதலம் ஆவ்ருதம் துஷாரைஸ்தத்வார்த்தாமபி ந மதுர்யதா விஷேஹே ।
ஶீதாம்ஶௌ ஹிமவதி ச த்வயோஸ்ததாநீம் லப்தம் தைரபயமிதோ ஹதாவஶிஷ்டை: ॥ 22

---

*461 வஸந்த ருதுவின் லீலையினால் உச்சிக்கிளை வரை மா, சம்பக போன்ற மரங்கள் பூத்துக் குலுங்கின. இந்தச் செழுமையில் ஊமத்தம் செடியும் சேர்ந்துகொண்டு விட்டதே என்று அவை கூச்சம் அடைந்தன. தலை குனிந்தன. இதுதான் பெரியதனத்தின் ராங்கி.* 20

*462வண்டுகள் தேனை வயிறாரக்குடித்து பருத்து அலைகின்றன. மெல்லிய கொடிகள் பருத்த மலர் கொத்துகளுடன் தலை ஆட்டுகின்றன. இவை ஒன்றை ஒன்று பார்த்துக்கொள்கின்றன என்றால் அது மணம் மிகுந்த வஸந்தலக்ஷ்மியின் கடாக்ஷத்தினால்தான்.* 21

*463 வஸந்தம் வந்துவிட்டால் கூட, சில இடங்களில் பூமியில் படர்ந்துள்ள பச்சை தளிர்களின் மீது குளிர்கால பனித்துளிகள் ஊசலாடின. இந்தச் செய்தியை காதுகளினால் கூட கேட்க விரும்பவில்லை வஸந்தம், ஆனால் ஹிமயமலையும் சந்திரனும் மீதமிருந்த பனித்துளிகளுக்கு ஆறுதல் அளித்தன!* 22

*464 உச்சியில் ஈச்வரன் மாயை என்ற இரட்டை, ஆண் பெண் என்று தேஹபேதமில்லாத நிலையிருந்து, தாழ்ந்த நிலையில் புழு, பூச்சி, எறும்பு ஈரான ஆண் பெண் இரட்டை வரை, மன்மத சேஷ்ட்டை தடைபட்டது என்ற செய்தியே காதில் விழவில்லை.* 23

आ द्वन्द्वात् अपरिगृहीतदेहभेदादा कीटभ्रमरपिपीलिकोद्भिजेभ्यः ।
न क्वापि प्रतिहितिरैक्षि शुश्रुवे वा तत्कालं कुसुमशरासशासनस्य ॥ २३

आस्तां तद्रतिपरिणेतुराधिपत्यं मन्देऽस्मिन्नपि खलु मारुते प्रवृत्ते ।
कत्यन्वक्कति पुरतश्चा संप्रचेलुः माद्यन्तः शुकापिकशारिकाद्विरफाः ॥ २४

आरामे किसलयमक्ष्णि शीथुरागः कान्तानां कमलवनेषु केसराणि ।
इत्येभिः प्रकटितविश्वरूप एव प्रायेण व्यजयत मान्मथः प्रतापः ॥ २५

संगोप्य भ्रमरशशाङ्ककोकिलेभ्यः संप्राप्ते तमसि महत्यधिज्यधन्वा ।
एकाकी रतिपतिरित्वरीरनैषीत् संकेतं भुवनभयंकरे निशीथे ॥ २६

कान्तानां नखनिखनैर्दृढोपगूहान् सीत्कारान्दशनपदैश्च साधयन्तः ।
प्रेयांसः पुनरुभयानिमान् अतीतान् अस्मार्षुर्हिमसमयेष्वयत्नलभ्यान् ॥ २७

दुर्दान्तं मदनमवेक्ष्य निर्ममे किं वर्मैकं युवसु वधूमयं विधाता ।
यद्योगे मदनशराः प्रसूनमात्रं तत्त्यागे कुलिशदशाममी बहन्ति ॥ २८

संपश्यन्गिरिशतपोविलोपकोपव्यापन्नं सुहृदमनन्यजं वसन्तः ।
शुश्रूषामकृत शिवार्चने मुनीनां प्रत्यग्रैर्दलकुसुमैर्वनद्रुमाणाम् ॥ २९

आशीताचलम् अभिगम्य संनिवृत्ते धन्येऽस्मिन्धरणिभुजस्तुरंगवर्ये ।
उत्कण्ठाभरभरिता इवोत्तराशामासेदुः स्वयमहिमत्विषस्तुरंगाः ॥ ३०

---

465 ரதிபதியான மன்மதனுடைய ஆர்ப்பாட்டம் ஒருபுறம் இருக்கட்டும். இப்பொழுதுதான் மந்தமாருதம், இனிய பூங்காற்று வீச ஆரம்பித்துள்ளது. அதற்குள் எத்தனை கிளிகள், குயில்கள், மற்றும் அதற்கே இனிய குரலுடன் கூடிய வண்டுகள், நம் முன்னே கொம்மாளம் போடுகின்றன. 24

466 தோட்டங்களிலுள்ள செடிகொடிகளில் இளம் துளிர், மனைவியின் (காதலியின்) கண்களில் மோகலாகிரி ஏற்றி சிவப்பு நிறம், கமலப் பொய்கைகளில் மகரந்தங்கள். இவை விசுவரூபம் எடுத்து மன்மத ப்ரதாபத்திற்கு வளம் ஊட்டியது. 25

467 காமுகிகள், (அபிஸாரிகைகள் ), மிகுந்த ஆவலுடன் தன் நாயகனைத் தேடிப்போகிறார்கள்.. நல்ல கும்மிருட்டு. புதர்களின் வழியே வண்டுகள். நிலவு ஒளி, குயில்கள் இவைகளிடமிருந்து தன்னை பாதுகாத்துக் கொண்டு, யாராவது கண்டு பிடித்துவிடுவார்களோ என்று பயந்து கொண்டே செல்கிறார்கள். அவர்களை மன்மதன் தனி ஒருவனாக தன்னுடைய நாணேற்றிய வில்லுடன் வழிகாட்டிக்கொண்டு ஸங்கேத இடத்திற்கு அழைத்துச் செல்கிறான். 26

ஆ த்வந்த்வாத் அபரிக்ருஹீததேஹபேதாதா கீடப்ரமரபிபீலிகோத்பிஜேப்ய: ।
ந க்வாபி ப்ரதிஹதிரைக்ஷி ஶுஶ்ருவே வா தத்காலம் குஶுமஶராஸஶாஸநஸ்ய ।। 23

ஆஸ்தாம் தத்ரதிபரிணேதுராதிபத்யம் மந்தேऽஸ்மிந்நபி கலு மாருதே ப்ரவ்ருத்தே।
கத்யந்வக்கதி புரதஶ்சா ஸம்ப்ரசேலுர்மாத்யந்த: ஶுகபிகஶாரிகாத்விரேபா: ।। 24

ஆராமே கிஸலயமக்ஷ்ணி ஶீதுராக: காந்தாநாம் கமலவநேஷு கேஸராணி ।
இத்யேபி: ப்ரகடிதவிஶ்வரூப ஏவ ப்ராயேண வ்யஜயத மாந்மத:ப்ரதாப: ।। 25

ஸங்கோப்ய ப்ரமரஶஶாங்ககோகிலேப்ய: ஸம்ப்ராப்தே தமஸி மஹத்யதிஜ்யதந்வா।
ஏகாகீ ரதிபதிரித்வரீரநைஷீத் ஸங்கேதம் புவநபயங்கரே நிஶீதே ।। 26

காந்தாநாம் நகலிகநைர்த்ருடோபகூஹான் ஸீத்காரான் தஶநபதைஶ்ச ஸாதயந்த: ।
ப்ரேயாம்ஸ: புநருபயாநிமான் அதீதாநஸ்மார்ஷுர் ஹிமஸமயேஷ்வயத்நலப்யான் ।। 27

துர்தாந்தம் மதநமவேக்ஷ்ய நிர்மமே கிம் வர்மைகம் யுவஸு வதூமயம் விதாதா ।
யத்யோகே மதநஶரா: ப்ரஸூநமாத்ரம் தத்த்யாகே குலிஶதஶாமமீ வஹந்தி ।। 28

ஸம்பஶ்யன் கிரிஶதபோவிலோபகோபவ்யாபந்நம் ஸுஹ்ருதமநந்யஜம் வஸந்த: ।
ஶுஶ்ரூஷாமக்ருத ஶிவார்சநே முநீநாம் ப்ரத்யக்ரைர்தளகுஸுமைர்வநத்ருமாணாம்।। 29

ஆஶீதாசலம் அபிகம்ய ஸந்நிவ்ருத்தே தந்யேऽஸ்மின் தரணிபுஜஸ்துரங்கவர்யே ।
உத்கண்டாபரபரிதா இவோத்தராஶாமாஸேது: ஸ்வயமஹிமத்விஷஸ்துரங்கா: ।। 30

---

468 பனி நாட்களில் காதலர்கள் காதலிகளை அணைத்து நகத்தினால் கிள்ளுவார்கள். இறுக்க அணைத்துக் கொள்வார்கள். பற்களினால் முலைகளைக் கவ்வி 'ஸீத்' என்று உறிஞ்சுவார்கள் ஒரு விதமான தூண்டு கோலும் இல்லாமல் இவை குளிர்காலத்தில்! இவை இப்பொழுது கிடைக்காத பொழுது நினைவில் நினைத்துச் சப்புக்கொட்டினார்கள். 27

469 இயற்கை எப்படி இருந்தால் என்ன? காம வேட்கை எப்பொழுதும் வருமே! காதலர்களுக்கு கவசமாகப் பெண்களைப் படைத்துவிட்டான் ப்ரஹ்மதேவன். அந்த கவசம் அணிந்துகொண்டு விட்டால், மன்மத அம்புகள் மலர்கள் ஆகி விடுகின்றன. கவசம் அணியாவிட்டால் மலர்கள் அம்புகளாகித் தாக்குகின்றன. 28

470 பரமேச்வரனுடைய தவத்தைக் கலைக்க முயன்றதினால் கோபம் கொண்டு நண்பன் மன்மதனை சாம்பலாக்கிவிட்டதை நினைவு படுத்திக்கொண்டு வஸந்தன், தனக்கு ஆபத்து வருமோ என பயந்து பணிவுடன் முனிவர்களின் சிவபூஜை காலத்தில் மரியாதையாக அவர்களுக்குத் தேவையான மலர்களை உதிர்த்து உபகாரம் செய்கிறான். 29

471 அரசன் மலயத்வஜனுடைய புனிதமான அசுவமேதக் குதிரை ஹிமாலயம் வரை விஜய யாத்திரை செய்து திரும்பி வந்தது. பல நாட்களாகவே அத்தகைய குதிரை எப்போது வருமோ என்று வடதிசை ஏங்கியிருந்தது. சூரியனுடைய குதிரைகள் வடதிசையை அடைந்தன, உத்தராயணம் வந்துவிட்டது. 30

संपूर्णे नियमभरेण वत्सरेऽस्मिन् संप्राप्ते सति सह वाजिना वसन्ते ।
आदिष्टः स मुनिभिरश्वमेधकर्मण्याराद्धुं गिरिशमदीक्षत क्षितीशः ॥ ३१

अध्वर्युः समजनि तत्र कुम्भजन्मा होतृत्वं प्रतिगतमाश्वलायनेन ।
औद्गगानात्रं समधृत जैमिनिर्मुनीन्द्रो ब्रह्मासीद्ब्रह्मविद रुन्धतीसहायः ॥ ३२

प्रागन्तःकरणममुष्य केवलं ये प्राजानन्भुवि नवनीतनिर्मितं ते ।
अभ्यक्तं नवनवनीतचार्चिकाभिस्तं विज्ञा बहिरपि तन्मयं विजज्ञुः ॥ ३३

आबाल्याददतिथिषु मुक्तहस्त एषः क्षमापालः किल मलयध्वजः प्रकृत्या ।
तज्जानन्नपि निखिलं निबद्धय मुष्टिं दीक्षासु क्षणमापि नासितुं शशाक ॥ ३४

अध्वर्यौ भगवति तत्र कुम्भजन्मनि आयज्ञं धरणिपतित्वमश्नुवाने ।
दुर्भिक्षं शिथिलमजायत द्विजानाम् आषाढाजिनतृणमुष्टिविष्टरेषु ॥ ३५

नीवारान्वपत कुशान्प्रवर्धयध्वं सिञ्चध्वं खादिरपलाशबिल्वपोतान् ।
सद्यः संचिनुत मृदूनि वल्कलानीत्यादिक्षन्नृपपुरुषानगस्त्यशिष्याः ॥ ३६

तस्मिन्नप्यददति पार्थिवे निषेधात् यद्धुक्तं वसितमुपार्जितं च विप्रैः ।
दातारः स्म इति कृताग्रहाः समस्ताः शक्ताः किं शततममंशमंत्र दातुम् ॥ ३७

भुञ्जानानपरिमितान्बहून्पदार्थान् भूदेवानधिसवनं निरीक्ष्य देवाः ।
भागं नः क्रतुषु विधाय विप्रलेभे पापीयान्विधिरिति मन्त्रयांबभूवुः ॥ ३८

---

472 முறைப்படி ஒரு வருஷம் ஆகிவிட்டது. வஸந்தருது வந்தது. குதிரையும் திரும்பிவிட்டது. முனிவர்கள் அரசனிடம் யாகம் ஆரம்பிக்கலாம் என்று அருள் பாத்தார்கள். அரசன் அந்த புண்ணிய யாகம் செய்து பரமேசுவரனை ஆராதிப்பதற்காகக் கிளம்பினான் 31

473 அசுவமேத யாகத்திற்கு, அரசனின் பிரதான ருத்விக்காக அகத்தியர் அத்வர்யுவாக அமர்ந்தார். ஆச்வலாயணமஹருஷி ஹோதாவாகவும், ஜைமினி மஹருஷி உத்காதாவாகவும் அமர்ந்தனர். பலவற்றையும் கற்றறிந்த, அருந்ததியின் கணவரான வஸிஷ்டர் ப்ரஹ்மாவாக அமைந்தார். 32

474 முன்பு மக்கள் அரசனுக்கு உள்ளம் வெண்ணையைப் போல மென்மையுடையது என்று மகிழ்ந்தார்கள். யாகதீக்ஷையின் பொருட்டு உடல் முழுவதும் வெண்ணையை பூசிக்கொண்டுள்ள அரசனைப் பார்த்து அரசனுடைய முழு மேனியும் வெண்ணை என்று உணர்ந்தனர். 33

475 எப்பொழுதுமே அரசனுடைய கைகள் விரிந்தே இருக்கும். யாக தீக்ஷயின் பொழுது ஸங்கல்பத்திற்காக மூடிக்கொள்ள வேண்டும் என்று அறிந்தும்கூட கைகள் மூட இசையவில்லை. 34

ஸம்பூர்ணே நியமபரேண வத்ஸரேऽஸ்மின் ஸம்ப்ராப்தே ஸ ஹி ஸஹ வாஜிநா வஸந்தே।
ஆதிஷ்ட: ஸ முநிபிரஶ்வமேதகர்மண்யாராத்தும் கிரிஶமதீக்ஷித க்ஷிதீஶ: ॥ 31

அத்வர்யு: ஸமஜநி தத்ர கும்பஜந்மா ஹோத்ருத்வம் ப்ரதிகதமாஶ்வலாயநேந ।
ஔத்காத்ரம் ஸமத்ருத ஜைமிநிர்முநீந்த்ரோ ப்ரஹ்மாஸீத் பஹுவிதருந்ததீஸஹாய:॥ 32

ப்ராகந்த:கரணமமுஷ்ய கேவலம் யே ப்ராஜாநன் புவி நவநீதநிர்மிதம் தே ।
அப்யக்தம் நவநவநீதசர்சிகாபிஸ்தம் விஜ்ஞா பஹிரபி தந்மயம் விஜஜ்ஞு: ॥ 33

ஆபால்யாத் ஆதீதிஷு முக்தஹஸ்த ஏஷ: க்ஷமாபால: கில மலயத்வஜ: ப்ரக்ருத்யா।
தஜ்ஜாநந்நபி நிகிலம் நிபத்த்ய முஷ்டிம் தீக்ஷாஸு க்ஷணமபி நாஸிதும் ஶஶாக ॥ 34

அத்வர்யௌ பகவதி தத்ர கும்பஜந்மனி ஆயஜ்ஞும் தரணிபதித்வமஶ்நுவாநே ।
துர்பிக்ஷம் ஶிதிலமஜாயத த்விஜாநாம் ஆஷாடாஜிநத்ருணமுஷ்டிவிஷ்டரேஷு ॥ 35

நீவாரான் வபத குஶான் ப்ரவர்தயத்வம் ஸிஞ்சத்வ காதிரபலாஶபில்வபோதான் ।
ஸத்ய: ஸஞ்சிநுத ம்ருதூநி வல்கலாநீத்யாதிக்ஷன் ந்ருபபுருஷாநகஸ்த்யஶிஷ்யா:॥ 36

தஸ்மிந்நப்யதததி பார்திவே நிஷேதாத் யத் புக்தம் வஸிதமுபார்ஜிதம் ச விப்ரை:।
தாதார: ஸ்ம இதி க்ருதாக்ரஹா: ஸமஸ்தா: ஶக்தா: கிம் ஶததமமம்ஶமத்ர தாதும்॥ 37

புஞ்ஜாநான் அபரிமிதான் பஹூன் பதார்த்தான் பூதேவாநதிஸவநம் நிரீக்ஷ்ய தேவா: ।
பாகம் ந: க்ரதுஷுவிதாய விப்ரலேபே பாபீயான் விதிரிதி மந்த்ரயாம்பபூவு: ॥ 38

---

476 அசுவமேதயாகத்தில் அகஸ்த்ய முனிவர் அத்வர்யுவாக
இருப்பதோடுகூட யாகம் முடியும் வரை அரசுபதவியை ஏற்கவேண்டி வந்தது.
அகத்தியர் அரசுபதவியை ஏற்றுக் கொண்டவுடன் ப்ராஹ்மணர்களுக்கு,
ஆஷாட தண்டம், மான்தோல், தர்பமுஷ்டி, ஆஸனம் இவற்றிற்கு பஞ்சமே
35
இல்லை.

477 ''நீவார தானியங்களை விதையுங்கள், தர்பைப் புல்லை வளருங்கள்.
கதிரம், புரசம், பில்வமரக்கன்றுகளுக்கு தண்ணீர் பாய்ச்சுங்கள். மஹருஷிகளுக்குக்
கொடுப்பதற்காக மிருதுவான மரவுரிகளை சேகரியுங்கள்.'- என்று அகத்திய
சிஷ்யர்கள் அதிகாரமாக அரசாங்க சிப்பந்திகளுக்கு ஆணையிட்டனர். 36

478 யாகதீக்ஷையின்பொழுது சில செயல்கள் தடை செய்யப்பட்டுள்ளதால்,
அரசன் ப்ராஹ்மணர்களின் தேவைகளை வழங்குவதற்கு முடியவில்லை,
அவைகள் எல்லாவற்றையும் நாங்கள் வழங்குகிறோம் என்று சிலர்
கிளம்பினார்கள். ஆனால் அரசன் அந்தணர்களுக்கு வழங்குவதில் நூற்றில்
37
ஒருபங்காவது அவர்களால் கொடுக்கமுடியுமா?

479 யாகத்தில் ஹவிர்பாகம் பெற்ற தேவர்கள் திரும்பிப் பார்த்தார்கள்.
அங்கே ப்ராஹ்மணர்கள் பலவிதமான போஜ்யபதார்த்தங்களை உண்பதைக்
கண்டார்கள். யாகத்தில் ஒரு சிறு பாகத்தை வழங்கி நம்மை ஏமாற்றிவிட்டது
38
யாக விதிமுறை என்று தங்களுக்குள் பேசிக்கொண்டனர்.

तस्याग्रे धरणिभुजः क्रियान्तरालेषु आतेनुः स्वयमृषय बहून्विवादान् ।
न्यायानुश्रवपदसांख्ययोगतन्त्रप्रस्थानप्रवचनदेशिका महान्तः ॥ ३९
यद्यात्यन्तिकसुखदुः खहानिरूपं केवल्यं कथमशपद्भवानहल्याम् ।
ताद्दक्षावामुपलदशां श्रयेति कोपात् इत्यूचुः कातिचन गौतमं मुनीन्द्राः ॥ ४०
कं दोषं कथयत संप्रसक्तदुःखव्यावृत्तिं फलमुपगच्छतां पुरो नः ।
अज्ञानक्षातिरुपले तवापि किं नेत्याचख्युः प्रतिपदमक्षपादशिष्याः ॥ ४१
अज्ञानाद्यदि परिकल्पितं जगत्स्यात् अज्ञानां प्रथमगणेय ईश्वरः स्यात् ।
निःसीमा तव हि मतेऽस्य मूढतेति व्यासं प्रत्यकृषत केऽपि पूर्वपक्षम् ॥ ४२
अज्ञानं प्रकृतिमपेक्ष्य विश्वमेतत् सर्वज्ञे सृजति भवेऽपि यत्त्वयोक्तम् ।
अज्ञानं तदिदमनङ्कुशं तवैवेत्याचख्युः सदासि तु बादरायणीयाः ॥ ४३
जातिश्चेद्भवति पदेषु साधुभावो भाषायां श्रुतिषु च स द्विधा कथं स्यात् ।
गेहे गौर्वनभुवि गर्दभः किमु स्यात् इतिरुच्चैरपजहसुः परे पदज्ञान् ॥ ४४

---

*480 அன்றாட யாகமுறைகள் நடந்துமுடிந்த பிறகு இடைவேளையில் மஹருஷிகள் மற்றும் பெரியோர்கள் எல்லோரும், அரசன் முன்னிலையில் ந்யாய, மீமாம்ஸா, வ்யாகரண, ஸாங்க்ய யோக, வேதாந்த சாஸ்திரங்களிலும், மூன்று ப்ரஸ்தானங்களிலும், சாஸ்திர விஷயங்களைப் பற்றி சர்ச்சை செய்தனர் 39*

*481 அங்கு வீற்றிருந்த நியாயஸூத்திரங்களை எழுதிய கௌதமரைப் பார்த்து சில முனிவர்கள் கேட்டார்கள், எப்பொழுது ஸுகதுக்கங்கள் அறவே ஒழிகின்றனவோ, அதுதான் கைவல்யம் - மோக்ஷம் - என்று சொன்னீர்கள் அல்லவா? உங்களை நாங்கள் கேட்கிறோம். உமது ஸித்தாந்தம் ஸத்யமானால் ஏனய்யா உமது மனைவியை 'கல்லாகக் கிட' என்று கோபம் கொண்டு சபித்தீர்கள்? அதனால் அவளுக்கு அடியோடு ஸுக துக்கங்கள் அழிந்து விட்டனவே? அது சாபமா? அருளா? கல்லாகக் கிடக்கும் நிலை என்றால் ஸுக துக்கம் அற்ற நிலை அல்லவா? அதுவா நீங்கள் சொல்கின்ற மோக்ஷம்!40*

*482 அதற்கு அக்ஷபாதர் என்று அழைக்கப்படும் கௌதமருடைய சீடர்கள் பதில் கூறினார்கள்-''எங்கள் குருநாதன் ஸித்தாந்தத்தில் என்ன தவறு கண்டீர்கள்? துக்கம் வந்து விட்டது. அது போக வேண்டும். அது ஞானத்தினால் போனால் என்ன. அஞ்ஞானத்தினால் போனால் என்ன? கல்லாகிவிட்டதால் துக்கம் போய்விட்டது என்பதை நீங்களும் ஏற்றுக்கொள்ளத்தானே வேண்டும். ஆனால் கல்லாகிவிட்ட எங்கள் குருபத்னிக்கு துன்ப உணர்வு இருந்ததே! அதை அவள் உணரவில்லை என்கிறோம்.*
*41*

தஸ்யாக்ரே தரணிபுஜ: க்ரியாந்தராளேஷ்வாதேநு: ஸ்வயம்ருஷயோ பஹூன் விவாதான் ।
ந்யாயாநுஶ்ரவபதஸாங்க்யயோகதந்த்ரப்ரஸ்தாந ப்ரவசநதேஶிகா மஹாந்த: ॥ 39
யத்யாத்யந்திகஸுகது:கஹாநிரூபம் கைவல்யம் கதமஶபத் பவாநஹல்யாம் ।
தாத்ருக்ஷாமுபலதஶாம் ஶ்ரயேதி கோபாதித்யூசு: கதிசந கௌதமம் முநீந்த்ரா: ॥ 40
கம் தோஷம் கதயத ஸம்ப்ரஸக்தது:கவ்யாவ்ருத்திம் பலமுபகச்சதாம் புரோ ந:।
அஜ்ஞாநக்ஷாதிருபலே தவாபி கிம் நேத்யாசக்யு: ப்ரதிபதமக்ஷபாதாஶிஷ்யா: ॥ 41
அஜ்ஞாநாத்யதி பரிகல்பிதம் ஜகத் ஸ்யாத் அஜ்ஞாநாம் ப்ரதமகணேய ஈஶ்வர: ஸ்யாத்।
நிஸ்ஸீமா தவ ஹி மதே஽ஸ்ய மூடதேதி வ்யாஸம் ப்ரத்யக்ருஷத கே஽பி பூர்வபக்ஷம்॥ 42
அஜ்ஞாநம் ப்ரக்ருதிமபேக்ஷ்ய விஶ்வமேதத் ஸர்வஜ்ஞே ஸ்ருஜதி பவே஽பி யத் த்வயோக்தம் ।
அஜ்ஞாநம் ததிதமநங்குஶம் தவைவேத்யாசக்யு: ஸதாஸி து பாதராயணீயா: ॥43
ஜாதிஶ்சேத் பவதி பதேஷு ஸாதுபாவோ பாஷாயாம் ஶ்ருதிஷு ச ஸ த்விதாகதம் ஸ்யாத் ।
கேஹே கௌர்வநபுவி கர்தப: கிமு ஸ்யாதித்யுச்சை: அபஜஹஸு: பரே பதஜ்ஞான்॥ 44

483 'ப்ரஞானமே ப்ரஹ்மம்'. ப்ரபஞ்சமெல்லாம் அஞ்ஞானத்தினால் இருப்பதுபோல் தோற்றமளிக்கின்றது என்று ப்ரஹ்மஸூத்திரத்தில் கூறுகின்றீரே! அப்படியானால் ஈச்வரன் இல்லாததைக் கல்பிக்கின்றாரே? அவர்களை முழு மூடர்கள் என்றுதானே சொல்ல முடியும். உங்கள் மதத்தின் முட்டாள் தனம் எல்லையற்றதா? என்று வ்யாஸரை கேலிபண்ணினர். 42

484 இதற்கு வ்யாஸரைச் சார்ந்தவர்கள் பதிலுறைத்தார்கள் - அஞ்ஞானம் ப்ரபஞ்சத்தைப் படைத்தது என்று நாங்கள் கூறவில்லை. மாயை ப்ரக்ருதி, பிரபஞ்சத்தை இருப்பதுபோல தோற்றுவிக்கிறது என்று கூறுகிறோம். அதே ப்ரகிருதி ப்ரபஞ்சத்தைப் படைக்கின்றது என்று நீங்கள் சொல்லுகிறீர்கள்.. ஞானமில்லாத குயவனின் தண்டம் குடத்தைப் படைக்குமா? வாய்கூசாமல் இப்படி உங்களுடைய அஞ்ஞானத்தை நீங்களே வெளிப்படுத்தி விட்டீர்களே! 43

485 (''கொள'') என்ற சொல் பசுஜாதியை குறிக்கின்றது. 'கொள' என்ற சொல்லால் ஒருவன் பசுமாட்டை அறிந்து கொண்டுவிட்டால், அதே மாதிரி மற்றொரு பசு மாட்டைப் பார்க்கும் போது, 'இது என்ன?' என்று கேட்கமாட்டான். அது பசு ஜாதியைச் சேர்ந்தது என்பது அவனுக்கு இயல்பாகவே தெரிந்துவிடும். ஆகவே சொற்களுக்கு பொருளாக இந்த இனமே தெரிகிறதே தவிர, அதன் வடிவத்தைக் குறிப்பிடவில்லை என்று வ்யாகரணத்தில் ஒரு கட்சி கூறுகின்றது. உலக வழக்கில் இப்படி என்று சொல்லிவிட்டால், வேதத்தில் அப்படிக் கொள்ள முடியாது. ''பசூனா யஜதே'' என்றால், ஒரு பசுவை வைத்து யாகம் செய் என்ற பொருளே தவிர, பசு ஜாதியனைத்தையும் வைத்து யாகம் செய் என்று சொல்வதில் அர்த்தம் இல்லையே! வேதத்தில் சொல்லுக்கு பொருள் ஒரு தனி வடிவம், உலக

अन्येऽन्ये श्रुतिषु जगत्सु चापि शब्दाः तद्भेदं निपुणम् अजानतां कृते वः।
अस्माभिः स्फुटमनुशिष्टम् आत्तमौनाः वर्तध्वं पदपदवी दवीयसी वः ॥ ४५

अस्मव्द्याकरणगृहीतशक्तियोगान् अस्मासु प्रथममिमान्प्रयुज्य शब्दान्।
युक्तादीयत गुरुदक्षिणा किलेति प्रत्यूचुः प्रथमविपश्चितो विपक्षान् ॥ ४६

हिंसातो यदि दुरित क्रतुष्वपि स्यात् पुण्यं किं न भवति पारदारिकाणाम्।
उत्सन्नं किल कुलमुद्धरन्त्यमीति व्याजह्नुः कपिलमते कलङ्कमेके ॥ ४७

शास्त्रं चेत्किमपि तथास्ति साधयामो दुष्कृत्यैरपि सुकृतानि कात्र भीतिः।
यूयं देवरवरणे यथा गृणीथेत्याहुः स्म प्रतिवचनानि तत्त्वनिष्ठाः ॥ ४८

योगाख्यं वदसि यमङ्गिनं समाधिं तं ब्रूषे ननु कथमङ्गमष्टमं च।
अङ्गाङ्गिव्यतिकरदुःस्थितं मतं ते को गृह्णात्विति जगदुः परे फणीन्द्रम् ॥ ४९

---

வழக்கில் சொல்லுக்குப் பொருள் வேறு என்றால், நாட்டில் பசுவாக இருப்பது காட்டில் கழுதையாகி விடுமோ? என்று வ்யாகரண சாஸ்திரக்காரர்களைக் கூச்சல் போட்டுச் சிலர் பரிஹஸித்தனர். 44

486 வையாகரணர்கள் பதில் கூறினார்கள்- ஆமாம் ஐயா! வேதங்களில் ஒரு சொல்லுக்கு ஒரு அர்த்தம், உலக வழக்கில் அதே சொல்லுக்கு வேறு அர்த்தம் என்று பல சுருதிகள் உள்ளன. அதை எல்லாம் சாஸ்திரம் எடுத்துக் காட்டுகிறது. உங்களுக்கும் வ்யாகரணசாஸ்திரங்களுக்கும் வெகுதூரம். உங்களுக்கு பதில் சொல்லவேண்டியத் தேவையில்லை மௌனமாக இருங்கள். 45

487 'எங்களது வ்யாகரண சாஸ்திரம் சொல்லிக்கொடுத்த சொற்களை வைத்துக்கொண்டு, அவற்றால் எங்களையே சாடுகிறீர்களே! உங்களுடைய குருதக்ஷிணை இதுதானே' என்று சாஸ்திர முதல்வர்கள் பதில் கூறினார்கள். பதவாக்யப்ரமாண என்ற சாஸ்திர வரிசையில், முதலாவதாக வ்யாகரண சாஸ்திரம்-பத சாஸ்திரம்- சொற்களை வகுத்துக்கொடுப்பது, மீமாம்ஸா சாஸ்திரம்-வாக்கிய சாஸ்திரம் - சொற்கள் வாக்கியங்களில் அமைந்து என்ன பொருளைக் கொடுக்கின்றன என்று கூறுகிறது. மூன்றாவது நியாய சாஸ்திரம் - ப்ரமாண சாஸ்திரம்--சான்றுகளை எடுத்துக்காட்டி சொற்களின் பொருளை நிர்ணயிப்பது. கவி இங்கே வ்யாகரண சாஸ்திரக்காரர்களை ப்ரதம ஷிபிவிஷ்ட்டாத் என்கிறார். 46

488 ''யாகங்களில் விதிக்கப்படும் பசுவதை ஹிம்ஸை இல்லை என்று வேதங்கள் கூறுகின்றன. வேதத்தை நம்ப மாட்டேன், ஆகவே யாகத்தில் பசுவதையும் ஹிம்ஸையே என்று சொல்லுகிறீர்களே, உலகியல் பிறர் மனைவியைத் தீண்டுபவனுக்கு புண்ணியம் உண்டு என்று ஆகிவிடும். அழிகின்ற குலத்தை முன்னேற்றுகிறார்கள் அல்லவா? தவறுக்கு சாஸ்திரச் சப்பைக்கட்டு இப்படித்தான் இருக்கும்'' என்று கபிலருடைய ஸாங்க்ய மதத்தை

அந்யேऽந்யே ஶ்ருதிஷு ஜகத்ஸு சாபி ஶப்தாஸ்தத்பேதம் நிபுணமஜாநதாம் க்ருதே வ: ।
அஸ்மாபி: ஸ்புடமநுஶிஷ்டம் ஆத்தமௌநா வர்தத்வம் பதபதவீ தவீயஸீ வ: ॥ 45

அஸ்மத்வ்யாகரணக்ருஹீதஶக்தியோகாத் அஸ்மாஸு ப்ரதமமிமான் ப்ரயுஜ்ய ஶப்தான் ।
யுக்தாதீயத குருதக்ஷிணா கிலேதி ப்ரத்யூசு: ப்ரதமவிபஶ்சிதோ விபக்ஷான் ॥ 46

ஹிம்ஸாதோ யதி துரிதம் ருதுஷ்வபி ஸ்யாத் புண்யம் கிம் ந பவதி பாரதாரிகாணாம்।
உத்ஸந்நம் கில குலமுத்தரந்த்யமீதி வ்யாஜஹ்ரு: கபிலமதே களங்கமேகே ॥ 47

ஶாஸ்த்ரம் சேத் கிமபி ததாஸ்தி ஸாதயாமோ துஷ்க்ருத்யைரபி ஸுக்ருதாநி காऽத்ரபீதி: ।
யூயம் தேவரவரணே யதா க்ருணீதேத்யாஹு: ஸ்ம ப்ரதிவசநாநி தத்வநிஷ்டா: ॥ 48

யோகாக்யம் வதஸி யமங்கிநம் ஸமாதிம் தம் ப்ரூஷே நநு கதமங்கமஷ்டமம் ச।
அங்காங்கிவ்யதிகரதுஸ்ஸ்திதம் மதம் தே கோ க்ருஹ்ணாத்விதி ஜகது: பரே பணீந்த்ரம் ॥ 49

---

சிலர் தூஷித்தார்கள். ஒரு பிராணியை வதைத்தால் அது ஹிம்ஸை தான். நல்ல காரணத்திற்காக செய்கின்ற தவறான செயல் புண்ணியமாகாது. ஸந்ததியில்லாமல் ஒரு புருஷன் இறந்துவிட்டால் அவன் குலம் அழிந்துவிடுமே என்று கருணையுடன் அந்த விதவைக்கு ஒருவன் கர்பத்தை உண்டாக்கினால் அது புண்ணிய கர்மாதான். யாகத்தில் வதம் செய்யப்படுகின்ற பிராணிக்கு உத்தமகதி உண்டு என்பதற்கு பிரமாணம் இருப்பதால் அது வதையே அல்ல என்ற மீமாம்ஸா சாஸ்திரத்தின் எதிர்வாதம் இதற்குப் பொருந்தாது. 47

489 அப்படி ஒரு சாஸ்திரம் இருந்தால் அதை ஏற்றுக்கொள்வோம். கெட்ட காரியங்களினால்கூட புண்ணியம் ஸம்பாதிக்கலாமே! இப்படி ஒரு சாஸ்திரம் இருந்தால் பயம் எதற்கு? எது நற்செயல், எது கெட்ட செயல் என்பதை நிர்ணயிப்பது வேதம். வேதத்தில் கூறியதை செயல்முறைப்படுத்துவது கெட்ட செயல் அல்ல. உங்கள் சாஸ்திரத்தில் 'பதியை இழந்தவள் மைத்துனன் மூலம், ஸந்ததியை உண்டு பண்ணிக்கொள்ளலாம் என்று இருக்குமானால் அதன்படி நடந்து கொள்ளுங்கள்' என்று தத்துவமறிந்தவர்கள் பதில் கூறினார்கள். 48

490 யோகமார்க ப்ரவர்த்தகரான பதஞ்ஜலிமுனிவரிடம் கேட்டனர். 'ஐயா! யோகஸாதனைகளில் எட்டு படிகள் கூறுகின்றீர்கள். அதில் எட்டாவது படி ஸமாதி என்கிறீர்கள். அப்படியானால் ஸமாதியும் ஸாதனைதானா? அதனை ஸாதிப்பது என்ன என்று கேட்டால், அதுவே ஸமாதியே ஸாத்ய நிலை என்கிறீர்கள். யோகஸாதனங்களால் ஏற்படும் பலனும் ஸமாதி நிலை. அந்த ஸாதனையில் எட்டாவதும் ஸமாதி என்கிறீர்கள். படி எப்படி பீடமாகும். படி எது, உச்சநிலை எது என்பதிலேயே குழப்பம். இதை யார் ஏற்பார்கள்?'49

491 பதஞ்ஜலி முனிவரைச் சார்ந்தவர்கள் பதில் கூறினார்கள். 'எட்டாவது படியான ஸமாதி என்றால் என்ன? யோகஸித்தி ஸமாதி நிலை என்ன? இவற்றில் பொதுவான விஷயம் என்ன? தனிப்பட்ட விசேஷம் என்ன? என்று

सामान्यं किमिह क इष्यते विशेषः को योगः क इव समाधिरित्यबुद्ध्वा ।
अर्वाचां व्यवहरतामयं प्रलापः साधीयानिति जहसुः पतञ्जलीयाः ॥ ५०

आयास्यन्त्यनुपदमत्र हव्यहेतोर्नन्वस्मिन् महित मखे सुराः समस्ताः ।
तान् सर्वान् अपलपितास्यहो कथं वेत्याचख्युः कातिचन जैमिनिं मुनीन्द्राः ॥ ५१

ये ह्युच्चावचमवजानते प्रपञ्चं मिथ्येति त्रिभुवनदेशिका महान्तः ।
तच्छिष्या वयमपि शक्तितो वदामेत्याहुस्तान्प्रति चतुरास्तु पूर्वतन्त्रे ॥ ५२

तत्रेत्थं द्विजसदसि प्रवृत्तजल्पे स्थेयत्वं स्वयमवलम्ब्यः भाषमाणः ।
दीक्षाहानुपसदहानपि व्यतीतः सौत्येऽहन्यवतरति स्म पार्थिवेन्द्रः ॥ ५३

ये षट् त्रिः खदिरपलाशबिल्वरूपाः यौ चोदुम्बरतरुजौ सराज्जुदालौ ।
ते यूपा अवतरतां दिवः सुराणां निश्रेण्यो भुवि निहिता इव ब्यराजन् ॥ ५४

अग्निष्ठे समुपनिबद्ध्य राज्जुदाले संनद्धं कुशरशनागुणेन गाढम् ।
संप्रौक्षन्हयमभितो महत्विजस्तं सिद्धार्थैरपि विधिगौरवेण मन्त्रैः ॥ ५५

आलब्धे शमितृभिराश्वमेधिकेऽश्वे चन्द्राख्यं कलशभवः प्रगृह्य मेदः ।
शाखायां क्षणमुपसाद्य वेतसस्य स्त्रौवाग्रात् अखिलमवद्यति स्म होतुम् ॥ ५६

---

தெரிந்து கொள்ளாமல் புஸ்தகத்தின் அட்டை வரை படித்துவிட்டு வ்யவகாரம் பண்ண வந்து விட்டீரே' என்று பரிஹஸித்தார்கள். 50

492 ஜைமினி முனிவரை சிலர் கேட்டார்கள் ''பெரியவரே! இந்த மஹா யஞ்ஞத்தில் ஹவிர்பாகம் பெறுவதற்காக ஸகல தேவதைகளும் தமது ஸ்வரூபத்துடன் வரப்போகிறார்கள். தேவர்களுக்கு மந்திர ஸ்வரூபம் தவிர வேறு உருவம் கிடையாது என்று எப்படிச் சொல்வீர்கள்?'' 51

493 பூர்வமீமாம்ஸையில் நிபுணர்களான சில மஹான்கள் பதில் கூறினார்கள். ''பிரபஞ்சத்தில் மிக உயர்ந்த தெய்வங்களும் உள்ளனர். அவர்களுக்கும் மந்திரஸ்வரூபத்தைத்தவிர வேறு உருவம் இல்லை. பலவிதமான வேறுபாடுகளுடன் கூடிய இந்த பிரபஞ்சம் மித்யை- உண்மை அல்ல'' என்று மூவுலகத்திலும் பிரஸித்தர்களான வியாஸர் போன்ற மஹான்கள் கூறியுள்ளார்கள். நாங்களும் வியாஸரிடம் படித்திருக்கிறோம். வேதாந்திகள் எந்த நிலையில் தெய்வங்களை மித்யை என்று கூறுகிறார்கள் என்பதறியாமல் எங்களிடம் வாதுக்கு வருகிறீர்களா? நாங்களும் எங்கள் தகுதிக்கேற்ப பதில் கூறுகிறோம் என்றனர்.

ச்லோகம் 480 முதல் இதுவரை சில சாஸ்திர சர்சைகளை காவிய ரீதியில் எடுத்துக் காட்டினார் கவி. கேள்வியும் பதிலும் மேலெழுந்தவாரியாகச் சொன்னதே தவிர சாஸ்திர ஸித்தாந்தங்கள் அல்ல. 52

ஸாமாந்யம் கிமிஹ க இஷ்யதே விஶேஷ: கோ யோக: க இவ ஸமாதிரித்யபுத்த்வா।
அர்வாசாம் வ்யவஹரதாமயம் ப்ரலாப: ஸாதீயாநிதி ஜஹஸு: பதஞ்ஜலீயா: ॥ 50

ஆயாஸ்யந்த்யநுபதமத்ர ஹவ்யஹேதோர் நந்வஸ்மின் மஹதி மகே ஸுரா: ஸமந்தா: ।
தான் ஸர்வாநபலபிதாஸ்யஹோ கதம் வேத்யாசக்யு: கதிசந ஜைமிநிம் முநீந்த்ரா: ॥ 51

யே ஹ்யுச்சாவசமவஜாநதே ப்ரபஞ்சம் மித்யேதி த்ரிபுவநதேஶிகா மஹாந்த: ।
தச்சிஷ்யா வயமபி ஶக்திதோ வதாமேத்யாஹுஸ்தான் ப்ரதி சதுராஸ்து பூர்வதந்த்ரே॥ 52

தத்ரேத்தம் த்விஜஸதஸி ப்ரவ்ருத்தஜல்பே ஸ்தேயத்வம் ஸ்வயமவலம்ப்ய: பாஷமாண: ।
தீக்ஷாஹாநுபஸதஹாநபி வ்யதீத: ஸௌத்யேऽஹந்யவதரதி ஸ்ம பார்திவேந்த்ர: ॥ 53

யே ஷட் த்ரி: கதிரபலாஶபில்வரூபா யௌ சோதும்பரதருஜௌ ஸராஜ்ஜுதாலௌ।
தே யூபா அவதரதா திவ: ஸுராணாம் நிஶ்ரேண்யோ புவி நிஹிதா இவ வ்யராஜந் ॥ 54

அக்நிஷ்டே ஸமுபநிபத்த்ய ராஜ்ஜுதாலே ஸந்நத்தம் குஶரஶநாகுணேந காடம் ।
ஸம்ப்ரோக்ஷன் ஹயமபிதோ மஹர்த்த்விஜஸ்தம் ஸித்தார்தைரபி விதிகௌரவேண மந்த்ரை: ॥ 55

ஆலப்தே ஶமித்ருபிராஶ்வமேதிகேऽஶ்வே சந்த்ராக்யம் கலஶபவ: ப்ரக்ருஹ்ய மேத: ।
ஶாகாயாம் க்ஷணமுபஸாத்ய வேதஸஸ்ய ஸ்த்ரௌவாக்ராதகிலமவத்யதி ஸ்ம ஹோதும் ॥56

---

494 இவ்வாறு பண்டிதர்களுக்கிடையே சாஸ்திர விசாரம் நடந்து கொண்டிருந்தது. யாக தீக்ஷை எடுத்துக்கொண்டு, யாகத்தின் முதற்பகுதியில் தொடங்கவேண்டிய கர்மாக்கள் முடிந்து, ப்ரதான யாகம் - ஸௌத்யம்-என்ற தினத்தில் அரசன் யாகசாலையில் ப்ரவேசித்தான் 53

495 கதிரமரம், பலாசமரம், பில்வமரம் இவைகள் ஒவ்வொன்றிலும் ஆறு ஆக பதினெட்டு. இரண்டு உதும்பர மரத்தில், இரண்டு ராஜ்ஜுதால மரத்தில், ஆக இருபத்திரண்டு யூப ஸ்தம்பங்கள் (யாகத்தில் நடப்படுகின்ற மரத்தூண்கள்) இவைகள் அனைத்தும், தேவலோகத்திலிருந்து தேவர்கள் இறங்குவதற்காக கட்டப்பட்ட படிக்கட்டுகள்போல் விளங்கின. 54

496 அக்னி சாலையில் இருந்த ராஜ்ஜுதாலமரத்தின் தூணில் கட்டப்பட்ட தர்பச்சரடுகள் குதிரையின் வயிற்றைச்சுற்றி இருந்தன. அந்தக் குதிரையை, மந்திரங்கள் ஓதி, யாகவிதி முறைப்படி நான்கு முக்கிய ருத்விக்கள் ப்ரோக்ஷித்து,யாக விதிமுறைகளை கௌரவித்தார்கள். 55

497 யாகக் குதிரையை கசாப்பு வல்லுனர்கள் நாஸூக்காகக் கிழித்து,அங்கங்களிருந்து தேவையானவற்றை எடுத்தார்கள். அகத்திய முனிவர் சந்திரம் என்ற கொழுப்பை எடுத்து, வேதஸ மரத்தின் கிளையில் சிறிது நேரம் வைத்து விட்டு, ஸ்ருவ என்னும் யாகக் கரண்டியினால் ஹோமம் செய்வதற்காக வபை அனைத்தையும் சேகரித்தார். 56

आश्राव्य स्वयमृषिराश्वलायिनीये याज्यान्ते हविरजुहोत्स्त्रुचो मुखेन।
यज्ञेशे भगवति भावनाप्रकर्षात् भूपालो जगदजुहोत्स तन्मुखेन॥ ५७

अप्यन्तस्तिामिरहरं शरीरभाजामप्राप्यं जनुषि पुरातपोविहीनैः।
सौरभ्यं हविषि हुते समुज्जिहानं व्याजिघ्रन्सदसि विपश्चितो महान्तः ॥ ५८

बिभ्यत्सु श्रुतिमतिलङ्घय संप्रदातुं इव्यं तत्तदभिमतं द्विजर्षभेषु।
पोरोडाशिकचरुपाशुकादिभागान् स्वीचक्रुः स्वयमपामित्य देववर्गाः॥ ५९

चन्द्रे तु ज्वलनहुते हयस्य तस्मिन्नासन्ये सलिलमुचस्तदीयधूमात्।
वर्षन्ति स्वयमधुनापि मौक्तिकानां व्याजात्ते तमिव कणीकृतं वमन्तः॥ ६०

आगाता किल यजमानकामनानाम् उद्गीथावयवसमष्ट्युपासनुज्ञः।
उद्गानं व्यतनुत जैमिनिस्तदानीम् आकाङ्क्षन्नवतरणं जगज्जनन्याः॥ ६१

प्रत्यक्षं विबुधगणेष्वदत्सु हव्यं साकूतस्मितमवलोकितः सदस्यैः।
599 மழைக்காலத்தில் கரைபுரண்டு வெள்ளமெடுத்த நதிகள் வடிந்து விட்டன. மேகங்கள் சிறிதளவு தண்ணீருடன் காணப்படுகின்றன சில சமயங்களில்தான் மின்னல் மின்னுகிறது இடிமுழக்கங்கள் முற்றிலும் நின்று விட்டன. அடர்ந்த கருமேகங்களே இப்படி ஆகிவிட்டன. உலகில் எதைத்தான் நிலையானது என்று நம்புவோம். 72

600 ஜலம் வற்றிப்போய், ஜனங்கள் தண்ணீருக்குத் தவித்தபொழுது, மழைக்காலத்தில் இடி இடித்தால் ஆஹா! மழை வரப்போகிறது, மின்னல் அடித்தால் மழை பொழிந்திடும். மேகம் பொழிகிறது, ஈரக்காற்று வீசுகிறது- இவை எல்லாமே அவ்வமயம் ஹிதமானதாகவும் வரவேற்கத்தக்கதாகவும் இருந்தன. ஆனால் சரத்கலத்தில், மக்கள் அதைக் கடிந்து, ஏசுகிறார்கள். மக்களுக்கு இப்படித்தான் அவ்வப்பொழுது குணம் மாறும். 73

601 பூமி குளிர்ந்துவிட்டது. விளைச்சல் நன்றாக இருக்கிறது. காடுகளில் இலைகளும் புதுக் கொடிகளும் மண்டிவிட்டன, நீர் நிலைகள் நிரம்பிவிட்டன. மழை நின்று விட்டது. அப்பாடா ஒழிந்தது தொல்லை.

தருகிரிமருஸாகராவிஶேஷம் ஜகதகிலம் ஜலரூபதாம் நயந்த: ।
ஸமுபசிதயஶோபரா இவாஸன் ஸலிலமுசோ விமலா: ஸமந்ததோऽபி ॥71

பரிமிதபயஸ: ப்ரஶாந்தகோஷா: பரிகணநீயதடிந்நதடவிலாஸா: ।
யதி ஸலிலமுசோऽபி தே பபூவு: கிமிவ ஹி விஶ்வஸிம: ஸ்திரம் ஜகத்யாம் ॥ 72

அஜநிஷத ஹி யேऽபிநந்தநீயா: ஸ்தநிததடிஜ்ஜலமேகமாருதாத்யா: ।
ஶரதி தநுமதாம் த ஏவ நிந்த்யா நநு ஸமயாநுகுணா குணா: ப்ரஜாநாம் ॥ 73

ஶிஶிரிதமவநீதலம் ஸம்ருத்தம் விபிநம் அபூரிஷதாஶயா ஜலாநாம் ।
விரமதி ஜலதேऽபி கஸ்ய ஹாநி: பரமிஹ கேசந சாதகா: ப்ரநஷ்டா: ॥ 74

க்ஷிதிதலமபிபூர்ய வாரிபூரை: கிஸலயிதா விரசய்ய வ்ருக்ஷஜாதீ: ।
கிமபி பலமநாப்ய நஷ்டமப்ரை: பலபுகயம் புநராவிராஸ கால: ॥ 75

கநதிமிரமுகாத் அநேந முக்தௌ அவதரதைவ யதர்க்கஶீதபாநூ ।
தத இவ ஶரகோரகாபதேஶாத் திஶி திஶி கீர்த்திரநேஹஸோ ஜஜ்ரும்பே ॥ 76

கதமபி பரிபூய மேகபந்தம் கியதிவ கந்தலிதே ஸுதாமயூகே ।
அலிகலபமுகேந ஹர்ஷவார்த்தா வ்யசலதிவோத்பலிநீகுமுத்வதீநாம் ॥ 77

---

மழை நிற்கட்டுமே.! என்ன நஷ்டம்? ஆனால் மழைநீரினால் உயிர் வாழும் சாதகப்பறவைகள் சோர்ந்துவிட்டன. 74

602 பூமி தண்ணீரினால் நிரம்பி விட்டது. மரங்கள் புதுத்துளிர் முளைத்து பூக்கின்றன. மழையைக் கொட்டியதால் மேகங்களுக்கு என்ன பயன்? பாவம்! பயனை அனுபவிக்க சரத்காலம் வந்துவிட்டது. 75

603 அடர்ந்த மழை. இருட்டின் வாயிலில் இருந்து வெளிப்பட்டன, ஸூரியனும் சந்திரனும், அதனால் கோரைகளும் மற்ற கொடிகளும் வளர்ந்து உயர்ந்தன. சரத்காலத்தின் கீர்த்தி எங்கும் பரவியது. 76

604 எப்படியோ மேகச்சூழலிலிருந்து சரச்சந்திரன் விடுபட்டாயிற்று. மேகமூட்டம் அகன்று பளீர் என்று பிரகாசிக்கின்றது. தடாகங்களில் உத்பல மலர்களுக்கும், குமுத மலர்களுக்கும், இந்த மகிழ்ச்சியான செய்தியை வண்டுகள் முழங்கின.(இந்த மலர்கள் சரத்கலத்தில்தான் பூக்கும்.) 77

605 பல இடங்களில் தண்ணீர்தேக்கம், எங்கும் ஈரம். சரத்காலம், கொஞ்சம் கொஞ்சமாகத் தண்ணீரை வற்ற வைத்தது. அதுவே சரத்காலத்திற்கு புகழைத்தந்தது. மேலும் காய்ந்திருந்தால் எல்லோரும் நிந்திப்பார்கள். அப்படி அதிகபிரஸங்கித்தனம் காட்டாமல் சரத்காலம் தன் புகழைக் காப்பாற்றிக் கொண்டது. 77

606 சூரிய சந்திரன் தெரியாமல் ஒரு நாள் முழுவதும் மழை பெய்தால் அதை துர்தினம் என்பார்கள். இப்படி துர்தினங்கள் அகன்று சூரிய சந்திரர்கள்

अतिवितितम् अवर्तताम्बुसत्रं सलिलमुचां शरदाः निवारितं तत् ।
उदभवदियमेव कीर्तिरस्याः किमिब यशोऽन्यदतिप्रसङ्गभङ्गात् ॥ ७८

विरमति सति दुर्दिनेऽर्कचन्द्रौ अनुभवताम् अभवन्मुदस्तदास्ताम् ।
गगनमपि निरीक्ष्य निष्कलङ्कं कियदिव हन्त शरीरिणोऽभ्यनन्दन् ॥ ७९

मधुरविमलवारि मत्तभृङ्गं परिणतशालि परास्तपङ्कलेशम् ।
किसलयितवनं समोष्णशीतं क्षितितलमेव दिवोऽपि भोग्यमासीत् ॥ ८०

कणिशकबलनोपजातगर्वाः कलनिनदोपहृतामृताः शुकौघाः ।
समजनिषत संघशश्चरन्तो मदनविसारितवागुरा इवाभ्रे ॥ ८१

प्रभवति नलिनी प्रसेदुरापो विमलतरा विललास चन्द्रिकेति ।
जहृषुरतितरां जना यदेषा विरहिजनस्य विपत्परम्परासीत् ॥ ८२

सविधगतपचेलिमेक्षुपर्व प्रसृमरमोक्तिकपातकान्दिदर्शाकाः ।
दिशि दिशि शुकशारिका अधावन्परि परिशालियवप्रियङ्गुदेशान् ॥ ८३

कमलवनमुपाश्रिता जरन्तः करिकटभित्तिम् उपस्थिता युवानः ।
इति मधुपगणा द्विधा विभिन्ना अपि खलु कर्मकराः समं स्मरस्य ॥ ८४

---

*பிரகாசித்தார்கள். அவர்களை பாராட்டுவது இருக்கட்டும், ஆகாசம் நிர்மலமாகி பளீரென்று விளங்கியதே இதை யாராவது கவனித்தார்களா? பாராட்டினார்களா?* 78

607 ஸ்வர்கம் என்ன ஐயா வேண்டிக் கிடக்கின்றது? சரத்காலத்தில் இந்த பூமியே ஸுகமாக இருக்கிறதே! ஓடைகளில் தண்ணீர் கலங்கல் இல்லாமல் தெளிவாக இருக்கிறது. வண்டுகள் மதத்துடன் மதுரமாக ரீங்காரம் செய்கின்றன. புல் பூண்டு முதல் எல்லாவற்றிலும் வளர்ச்சி. சேறோ அசுத்தமோ இல்லாத சாலை நடக்க ஹிதமாக உள்ளது. எங்கும் புதுத்துளிர் உண்டாகி கம கமக்கின்றன. வெப்பமும் இல்லை குளிரும் இல்லை எல்லாவிதத்திலும் ஹிதமாக இருக்கிறதே. இந்த பூமியே தேவலை. 79

608 கிளிகளெல்லாம் மூக்குக்கு பதமான பழங்களையும் ( காய்ந்ததாக இருந்தால் கிளி கொத்தாது) இனிமையான பூங்கதிர்களையும் அசைத்து மென்று விட்டு நம்மை விட இனிமையாக பாடமுடியுமா என்ற கர்வத்துடன், ஒன்றுக்கொன்று சுருதி சேர்த்துக்கொண்டு அழகான நாதத்தை இசைக்கின்றன. ஆகாசத்தில் கூட்டமாகப் பறக்கின்றன. மன்மதன் ஆகாசத்தில் தன் வலையை வீசி இருக்கின்றானோ என்று தோன்றியது. 80

609 தாமரை பூத்து நிமிர்ந்து நின்றது. தடாகத்தில் தெளிவான நீர். சந்திரிகா மூட்டமற்று பளீரென்று விளங்கியது. ஜனங்களுக்கெல்லாம் மிக்க

அதிவிததம் அவர்ததாம்பஸத்ரம் ஸலிலமுசாம் ஶரதா நிவாரிதம் தத் ।
உதபவதியமேவ கீர்த்திரஸ்யா: கிமிவ யஶோऽந்யததிப்ரஸங்கபங்காத் ॥ 78

விரமதி ஸதி துர்திநேऽர்க்கசந்த்ரௌ அநுபவதாம் அபவந்முதஸ்ததாஸ்தாம் ।
ககநமபி நிரீக்ஷ்ய நிஷ்கலங்கம் கியதிவ ஹந்த ஶரீரிணோऽப்யநந்தன் ॥ 79

மதுரவிமலவாரி மத்தப்ருங்கம் பரிணதஶாலி பராஸ்தபங்கலேஶம் ।
கிஸலயிதவநம் ஸமோஷ்ணஶீதம் க்ஷிதிதலமேவ திவோऽபி போக்யமாஸீத் ॥ 80

கணிஶகபலநோபஜாதகர்வா: கலநிநதோபஹ்ருதாம்ருதா: ஶுகௌகா: ।
ஸமஜநிபத ஸங்கதஶ்சரந்தோ மதநவிஸாரிதவாகுரா இவாப்ரே ॥ 81

ப்ரபவதி நலிநீ ப்ரஸேதுராபோ விமலதரா விலலாஸ சந்த்ரிகேதி ।
ஜஹ்ருஷுரதிதராம் ஜநா யதேஷா விரஹிஜநஸ்ய விபத்பரம்பராஸீத் ॥ 82

ஸவிதகதபசேளிமேக்ஷுபர்வ ப்ரஸ்ருமரமௌக்திகபாதகாந்திஶார்கா: ।
திஶி திஶி ஶுகஶாரிகா அதாவன் பரி பரிஶாலியவாப்ரியங்குதேஶான் ॥ 83

கமலவநமுபாஶ்ரிதா ஜரந்த: கரிகடபித்திம் உபஸ்திதா யுவாந: ।
இதி மதுபகணா த்விதா விபிந்நா அபி கலு கர்மகரா: ஸமம் ஸ்மரஸ்ய ॥ 84

---

*மகிழ்ச்சிதான். ஆனால் பிரிந்திருக்கும் கணவன் மனைவிமார்கள் இதை அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லையே என்று தவித்தார்கள்! 81*

*610 பக்கத்தில் கரும்புப்பயிர் முற்றி வெடித்து முத்துக்கள் பூமியில் சிதறுவதைப் பார்த்து, எங்கே செல்வது என்று அறியாமல், கிளிகள், சாரிகா என்ற குருவிகள், நெல், யவ, கம்பு தானியங்கள் வளர்ந்துள்ள எல்லா வயல் வெளிகளையும் நோக்கிப் பறந்தன. 82*

*611 சில வயதான வண்டுகள் தாமரை மலர்களில் அமர்ந்தன, வாபி வண்டுகள் சுவர் போன்ற மதஜலம் ஒழுகுகின்ற யானைகளின் கன்னப் பிரதேசங்களைச் சுற்றி சுற்றி வருகின்றன. இவ்வாறு தேன்குடிக்கும் வண்டுகள் இரண்டாகப் பிரிந்தன. இப்படி அவர்களுக்கிடையே கருத்து வேற்றுமை இருந்தாலும், மன்மதனுடைய காரியத்தில் ஒற்றுமையாகச் செயல்படுகின்றன. 83*

*612 அங்கு முன்பு வாழ்ந்து கொண்டிருந்த அன்னப்பறவைகள், மழைகாலத்தில், எது நிலம், எது நீர் என்று அடையாளமே தெரியாமல் போய்விட்டதால், எங்கேயோ சென்றுவிட்டன. மறுபடியும் சரத்காலத்தில், முன் இருந்த தடாகத்திற்கே வந்து விட்டன. மிகவும் சிரமப்பட்டு வஸ்துக்களின் ரஸம், நிறம், மணம். இவைகளை நுகர்ந்து, இது தாமரை, இது பாசி, இது தாமரையின் அடி பாகம் என்று தம்முடையவற்றை அடையாளம் கண்டு கொண்டன. 84*

चिरपरिमुषितप्रदेशचिह्नाः समुपगताः सरमीः पुनश्च हंसाः ।
कथमपि रसवर्णगन्धभेदैर्निजनिजमम्बुजकोशमभ्यजानन् ॥ ८५

अतिविमलम् अयत्नशीतमम्भः सफुरदरविन्दसुगन्धयः समीराः ।
निरुपधिकरुणामयी च राज्ञी त्यजनि जनेषु परम्परा शुभानाम् ॥८६

तत्तन्नृपालपरिपालनसंप्रसूतमालिन्यमार्जनसमुज्ज्वलितां धरित्रीम् ।
भूयः स्वयं विमलयन्समयः प्रसादं मन्ये चकाङ्क्ष मलयध्वजकन्यकायाः ॥८७

## इति सप्तमः सर्गः

*613* தண்ணீர் தெளிந்து,தாமரை தடாகத்தின் இயல்பான குளிர்ச்சியுடன் இருந்தது. காற்று தாமரைகளின் நறுமணத்துடன் வீசுகின்றது. ஒன்றையும் எதிர்பார்க்காமல் அரசி மக்களிடம் கருணை காட்டுகின்றாள். இவ்வாறு மக்களுக்கு மேலும் மேலும் சுபங்கள் கூடின. 85

சிரபரிமுஷிதப்ரதேஶசிஹ்நா: ஸமுபகதா: ஸரஸீ: புநஶ்ச ஹம்ஸா: ।
கதமபி ரஸவர்ணகந்தபேதைர்நிர் ஜநிஜமம்புஜகோஶம் அப்யஜாநன் ॥ 85
அதிவிமலம் அயத்நஶீதமம்ப: ஸ்புரதரவிந்தஸுகந்தய: ஸமீரா: ।
நிருபதிகருணாமயீ ச ராஜ்ஞீ த்யஜநி ஜநேஷு பரம்பரா ஶுபாநாம் ॥ 86
தத்தந்ந்ருபாலபரிபாலந ஸம்ப்ரஸூத மாலிந்யமார்ஜந ஸமுஜ்ஜ்வலிதாம் தரித்ரீம் ।
பூய: ஸ்வயம் விமலயன் ஸமய: ப்ரஸாதம் மந்யே சகாங்க்ஷ மலயத்வஜகந்யகாயா: ॥ 87

இதி மஹாகவிஸ்ரீநீலகண்டதீக்ஷிதப்ரணீதே ஶிவலீலார்ணவே ஸப்தம: ஸர்க: ।

---

*614* முன் ஆண்ட அந்த அந்த அரசர்களின் ஆட்சியில் இருந்த அழுக்காறுகளைத் துடைத்து புத்துயிர் தந்து நாட்டை மீண்டும் சரத்காலம் புது மலர்ச்சி உண்டாக்கி மலயத்வஜபாண்டியன் குமாரிக்கு அருள் சேர்க்க விரும்புகிறது என்று எண்ணுகிறேன். 87

**ஏழாவது ஸர்கம் முடிவடைந்தது**



## अष्टमः सर्गः

जातुचित्तदनु पाण्ड्यकुमारी चित्रिते सदसि रत्नगणेन ।
दर्शनैरपि च षड्भिरलभ्यं दर्शनं निजमदात्प्रकृतींनाम् ॥ १

तापसा द्विजवरा धरणीशा बन्धवः परिजना भटमुख्याः ।
पौरजानपदवन्दिगणाश्च प्राविशन् सदसि तत्र विचित्रे ॥ २

तान्यथायथमथोपचरन्ती सा प्रणामवचनस्मितदृग्भिः ।
अक्षमामजनयात्रिदशानां मानवेषु मघवत्प्रभतींनाम् ॥ ३

वीज्यमानमभितो युवतिभ्यां चामरद्वयमदृश्यत तस्याः ।
यत्परत्वमथ यत्सुलभत्वं तद्यशोयुगमिवातिविशुद्धम् ॥ ४

छत्रमे कतरमुच्छ्रितमस्या मूर्ध्नि तेन शिशिरं जगदासीत् ।
एतदत्र हि निदर्शनमेषा यत्प्रपञ्चवपुषा परिणेमे ॥ ५

अस्तुवन्क्वन वन्दिगणास्तामस्तुवन्नपरतः श्रुतिसंघाः ।
आद्यमत्र जगृहुर्गुणवत्त्वात् सर्व एव न परं तदभावात् ॥ ६

सा विसृज्य सकलानपि लोकान् आनिनाय परमाप्तसखीभिः ।
मातरं रहसि काञ्चनमालां मन्त्रणाय सुमतिं सचिवं च ॥ ७

---

### எட்டாவது ஸர்கம்.

615 ஒரு சமயம் பாண்டியராஜகுமாரி ரத்தினங்கள் இழைக்கப்பட்ட அழகான மஹாமண்டபத்தில் உள்ள ஸிம்ஹாஸனத்தில் அமர்ந்து கொண்டு மக்களுக்கு தரிசனம் அளித்தாள். வேதங்களை ப்ரமாணமாக வைத்து தத்துவங்களை எடுத்துக்காட்டுகின்ற நூல்களுக்கு 'தரிசனம்' என்று பெயர்-தர்ஸயதீதி தர்சனம் அவற்றினால் கூட தெளிவாகக் காட்ட முடியாத தன் ஸ்வரூபதரிசனத்தை பாமரர்களும், தங்களுடைய ஊனக்கண்களினால், கண்டு மகிழும்படி தரிசனம் (காட்சி) கொடுத்தாள். 1

616 தேவி கொலு வீற்றிருக்கும் மஹா மண்டபத்தில் வரிசையாக தவம் செய்கின்ற முனிவர்கள் அந்தணர்கள் அண்டைநாட்டு அரசர்கள் பந்துக்கள் உதவியாளர்கள் சேனைவீரர்கள் நகரத்துமக்கள் கிராமத்துமக்கள் துதிபாடகர்கள் முதலானோர் பிரவேசித்தார்கள். 2

617 தபஸ்விகளையும் அந்தணர்களையும் வணங்கினாள். அரசர்களுக்கு உரிய மரியாதைகளை வழங்கினாள். பந்துக்களையும் பணியாட்களையும் குசலம் விசாரித்தாள் படைவீரர்களைப் பாராட்டினாள். நாட்டு மக்களை நலம் விசாரித்தாள். இந்திரன் முதலான தேவர்கள் மனிதவர்கத்தைப் பார்த்து பொறாமைப் பட்டனர். 3

## அதாஷ்டம: ஸர்க: ।

ஜாதுசித்ததநு பாண்ட்யகுமாரீ சித்ரிதே ஸதஸி ரத்நகணேந ।
தர்ஶநைரபி ச ஷட்பிரலப்யம் தர்ஶநம் நிஜமதாத் ப்ரக்ருதீநாம் ।। 1

தாபஸா த்விஜவரா தரணீஶா பந்தவ: பரிஜநா படமுக்யா: ।
பௌரஜாநபத வந்திகணாஶ்ச ப்ராவிஶன் ஸதஸி தத்ர விசித்ரே ।। 2

தாந் யதாயதமதோபசரந்தீ ஸா ப்ரணாமவசநஸ்மிதத்ருக்பி: ।
அக்ஷமாமஜநயத் த்ரிதஶாநாம் மாநவேஷு மகவத்ப்ரப்ருதீநாம் ।। 3

வீஜ்யமாநம் அபிதோ யுவதிப்யாம் சாமரத்வயம் அத்ருஶ்யத தஸ்யா: ।
யத்பரத்வமத யத்ஸுலபத்வம் தத்யஶோயுகமிவாதிவிஶுத்தம் ।। 4

சத்ரமேகதரமுச்ரிதமஸ்யா மூர்த்நி தேந ஶிஶிரம் ஜகதாஸீத் ।
ஏதத்த்ர ஹி நிதர்ஶநமேஷா யத் ப்ரபஞ்சவபுஷா பரிணேமே ।। 5

அஸ்துவந் க்வசந வந்திகணாஸ்தாம் அஸ்துவந்நபரத: ஶ்ருதிஸங்கா: ।
ஆத்யமத்ர ஜக்ருஹுர்குணவத்வாத் ஸர்வ ஏவ ந பரம் ததபாவாத் ।। 6

ஸா விஸ்ருஜ்ய ஸகலாநபி லோகான் ஆநிநாய பரமாப்தஸகீபி: ।
மாதரம் ரஹஸி காஞ்சநமாலாம் மந்த்ரணாய ஸுமதிம் ஸசிவம் ச ।। 7

---

618 மஹா மஹிமை அனைத்தும் பெற்ற மஹாராணிக்கு இரண்டு யுவதிகள், இருபுறத்திலும் நின்று சாமரம் வீசினார்கள். ஸ்ரீமாதா ஸ்ரீமஹாராஜ்ஞீ ஸ்ரீமத் ஸிம்ஹாஸனேச்வரீ. இவ்வளவுதான் உபசாரம். தேவியின் கருணையே கருணை. நம்மிடம் இவ்வளவு எளிதாகிவிட்டாளே பரமேசுவரீ என்ற புகழும், மிகவும் எளியவள் என்ற இரு புகழ்களும் பொருத்தமாக அமைந்ததோ! 4

619 அவளுடைய சிரஸிக்குமேலே ஒரே ஒரு குடை மிகச்சாதாரணமானதுதான். ஆனால் உலகம் முழுவதும் அந்தக்குடையினால் குளிர்ந்துவிட்டது, எப்படி? அந்தக்குடை பிரபஞ்சமாதாவுக்கல்லவா நிழல் அளிக்கிறது. 5

620 ஒரு பக்கத்தில் வந்திகள் என்கிற துதிபாடகர்கள் கட்டியம் கூறினார்கள். மறுபுறம் வேதங்கள் துதித்தன. முன்னாட்களில் தேவியின் கல்யாண குணங்களைப் பாடி பாராட்டுப் பெற்றனர். வேதங்கள் தேவி நிர்குணம், நிராகாரம் என்று ஓதின. 6

621 அவள் மக்களுக்கு விடைகொடுத்தனுப்பிவிட்டு, தன் அந்தரங்கத் தோழிகளுடன், தாய் காஞ்சனமாலையையும், மந்திரி ஸுமதியையும், ரஹஸ்ய மந்திராலோசனைக்காக வரவழைத்தாள். 7

622 தன்னுடைய ஸிம்ஹாஸனத்தில் தன் தாயை அமர்த்தினாள். தான், அவளுடைய சரணபீடத்தில் அமர்ந்துகொண்டு ஸகலலோகத்தையும் வெற்றி

संनिवेश्य जननीं निजपीठे सा च तञ्चरणपीठनिषण्णा ।
मन्त्रिणा सुमतिना जयहेतोर्मन्त्रमित्थमममन्त्रत बाला ॥ ८
यः किलानुशरदं विजयार्थी पार्थिवं त्वरयसे गमनाय ।
स प्रवर्तयसि मां न कथं त्वं बालिकेयमिति किं विशयानः ॥ ९
इति बालिकास्म्यनवगाढरणास्मि प्रत्युतोपनिहि तास्म्यवरोधे ।
आशिषा तदपि तावदमुष्यास्त्वद्धिया च विजयाय यतिष्ये ॥ १०
मेवमालप कदाचन वत्से मन्त्रिणा सुमतिना विजयो नः ।
स त्ववैति समयोचितमर्थं सर्वमित्यभिदधे जननी ताम् ॥ ११
स स्म तां सुमतिराह कुमारीं सस्मितां मृदुतया जनयित्र्याः ।
सस्मरन् गुरुमतीतममुष्या बाष्पगद्गदपदं विनयेन ॥ १२
देवि मे निगदतः श्रृणु वत्से यत्त्वमात्थ मयि सानुजिघृक्षा ।
तत्तथैव परथा न कथंचिद्वेदवादसुहृदो हि गिरस्ते ॥ १३
सत्यमेव विजये यतितव्यं साधनं प्रथममत्र विपक्षः ।
मार्गयेऽहमपि नोपलभे तं न व्यजिज्ञपमतस्त्वयि किंचित् ॥ १४
इत्थमुक्तवति मन्त्रिवरेऽस्मिन् कुम्भभूः स्वयमुपेत्य महर्षिः ।
आशिषो बहुविधा विरचय्य व्याजहार मलयध्वजकन्याम् ॥ १५

---

கொள்வதற்கு சரியான ஆலோசனை வழங்கும்படி ஸுமதியிடம் அச்சிறுமி கூறினாள். 8

623 மந்திரியாரே! ஒவ்வொரு ஆண்டும் சரத்கால ஆரம்பத்தில் அரசனை (என் தந்தையை) விஜய யாத்திரைக்காக புறப்படும்படி தூண்டுவீர்கள். என்னை ஏன் அவ்வாறு தூண்டவில்லை? நான் சிறுமி தானே என்ற ஸந்தேகத்தினாலா?

624 நான் சிறுமிதான். போரைப்பற்றி நன்கு அறியாதவள்தான். அந்தப்புறதிற்குள்ளே சுற்றி வருபவள்தான். ஆனாலும் என் தாயின் ஆசீர்வாதத்தினாலும், உங்களுடைய புத்தி பலத்தினாலும், வெற்றி பெறுவதற்கு முயல்வேன். 9

625 காஞ்சனமாலை அவளிடம் கூறினாள்- 'குழந்தாய்! ஒரு நாளும் இப்படியெல்லாம் பேசாதே. ஸுமதி மந்திரி இருக்கும்பொழுது நமக்கு வெற்றி நிச்சயம். எதை எப்படி, எப்பொழுது செய்யவேண்டும் என்று அவருக்கு நன்கு தெரியும்', என்றாள். 10

626 மந்திரி ஒரு கணம் அவளுடைய தந்தையை நினைத்தான். இத்தகைய முக்கியமான ஒரு திட்டத்தை குருதேவருடன் கலந்து ஆலோசனை

ஸந்நிவேஶ்ய ஜநநீம் நிஜபீடே ஸா ச தச்சரணபீடநிஷண்ணா ।
மந்த்ரிணா ஸுமதிநா ஜயஹேதோர்மந்த்ரமித்தம் அமமந்த்ரத பாலா ॥ 8
ய: கிலாநுஶரதம் விஜயார்த்தீ பார்திவம் த்வரயஸே கமநாய ।
ஸ ப்ரவர்தயஸி மாம் ந கதம் த்வம் பாலிகேயமிதி கிம் விஶயாந: ॥ 9
இதி பாலிகாஸ்ம்யநவகாடரணாஸ்மி ப்ரத்யுதோபநிஹிதாஸ்மி அவரோதே ।
ஆஶிஷா ததபி தாவதமுஷ்யாஸ் த்வத்தியா ச விஜயாய யதிஷ்யே ॥ 10
மைவமாலப கதாசந வத்ஸே ! மந்த்ரிணா ஸுமதிநா விஜயோ ந: ।
ஸ த்வவைதி ஸமயோசிதமர்த்தம் ஸர்வமித்யபிததே ஜநநீ தாம் ॥ 11
ஸ ஸ்ம தாம் ஸுமதிராஹ குமாரீம் ஸஸ்மிதாம் ம்ருதுதயா ஜநயித்ர்யா: ।
ஸம்ஸ்மரன் குருமதீதம் அமுஷ்யா பாஷ்பகத்கதபதம் விநயேந ॥ 12
தேவி ! மே நிகதத: ஶ்ருணு வத்ஸே! யத் த்வமாத்த மயி ஸாநுஜிக்ருக்ஷா ।
தத் ததைவ பரதா ந கதஞ்சித் வேதவாதமுஹ்ருதோ ஹி கிரஸ்தே ॥ 13
ஸத்யமேவ விஜயே யதிதவ்யம் ஸாதநம் ப்ரதமமத்ர விபக்ஷ: ।
மார்கயேऽஹமபி நோபலபே தம் ந வ்யஜிஜ்ஞபமதந்த்வயி கிஞ்சித் ॥ 14
இத்தமுக்தவதி மந்த்ரிவரேऽஸ்மின் கும்பபூ: ஸ்வயமுபேத்ய மஹர்ஷி: ।
ஆஶிஷோ பஹுவிதா விரசய்ய வ்யாஜஹார மலயத்வஜகந்யாம் ॥ 15

---

*செய்யவில்லையே என்று கலங்கினான், தேவி மந்திரியின் ராஜவிஸ்வாஸத்தை நினைத்து புன்னகை புரிந்தாள், தாயாரும் அதையே நினைத்து மெதுவாக புன்னகை புரிந்தாள். மந்திரி தழுதழுத்த குரல் பணிவுடன் கூறினான்.* 11

*627 'ராணியாரே! நான் ஒன்று சொல்வேன் கேட்க வேண்டும். என் விஷயத்தில் நீங்கள் பேசினீர்களே. அது என்னைப் பெருமைபடுத்த வேண்டும் என்ற எண்ணத்தினால்தான்; அது அப்படியே நடக்கும். மாறாக நடக்காது. வேதவசனம் அல்லவா உங்கள் திருவாக்கு',* 12

*628 தேவி நீங்கள் கேட்டீர்களே, சிறு பெண்தானே, இவளை போருக்கு அழைக்கலாமா? என்று. நான் நினைத்தது அப்படியல்ல. விஜய யாத்திரை செய்யத்தான் வேண்டும் என்கிற யோஜனை எனக்குமே உண்டு. ஆனால் எதிரிகள் இருந்தால் அல்லவா அவர்களை வெற்றி கொள்ளலாம். அப்படி ஒருவரையும் காணோமே. தேடிப்பார்த்து விட்டேனே. அதனால்தான் விஜய யாத்திரையைப் பற்றி உங்களிடம் விண்ணப்பிக்கவில்லை.* 13

*629 இவ்வாறு மந்திரி சொல்லிக்கொண்டிருக்கும்போதே. தானாகவே அகத்திய முனிவர் அங்கு வந்து சேர்ந்தார். மலயத்வஜ குமாரிக்கு பலவிதமான ஆசிகளை வழங்கிவிட்டுக் கூறினார்.* 14

साधयिष्यसि करग्रहणं त्वं सर्वथा जयतु ते जययात्रा ।
भूरियं भवतु पुण्यतमा ते पावनीभिरभितो भ्रमणीभिः ॥ १६

इत्युदीर्य जयनाम्नि मुहूर्ते तां प्रवेश्य सबलामुपशल्यम् ।
तत्करग्रहमहोत्सववीक्षाकौतुकी स मलयं विजगाहे ॥ १७

सज्जितेव पृतना सकलेयं किं त्विमां निशमिह व्यतिलङ्घ्य ।
श्वः प्रयाहि विनिवर्त्य निवर्त्यान् इत्युवाच सुमतिर्जननीं ताम् ॥ १८

पार्श्वमुत्तरमपि त्रिदशाद्रेः सा प्रयास्यति यतो विजयाय ।
तां निरीक्षितुमिव प्रथमं तं प्रस्थितो दिनकरश्चरमाद्रौ ॥ १९

निष्पतन्नपि रवीश्चरमाद्राबुद्दधार किरणाननुयातान् ।
ईदृशं व्यसनमस्पृशतः किं लोकबन्धुरिति जीर्यति शब्दः ॥ २०

निर्ममज्ज न जले कति वारानुन्ममज्ज न पुनः कति वारान् ।
अद्य भास्वति मिमङ्क्षति विप्रैरर्पिता बत जलाञ्जलयोऽपि ॥ २१

नाधुनापि कथमस्तमुपैतीत्यार्द्ररकोपपरिपाटलकोणैः ।
वीक्षितो नु नयनैस्तरुणीनाम् अंशुमानरुणिमानमयासीत् ॥ २२

---

630 தேவி! விஜய யாத்திரை என்றால் சத்ருக்களை ஜயிப்பது மட்டுமல்ல. நீ (கரக்ரஹணம்) அரசர்களிடமிருந்து கப்பங்களை வசூலிக்க வேண்டும். அந்த லக்ஷ்யத்தை நீ ஸாதிக்கத்தான் போகிறாய். அதுமட்டுமல்ல. உன் திருவடிகள் படுவதின் மூலம், இப்பாரத புண்யபூமி மேலும் புனிதமாகட்டும். ஆகவே, தவறாமல் உனது விஜய யாத்திரை தொடங்கட்டும். அர்த்தபுஷ்டியுடன் கரக்ரஹணம் என்ற சொல் இங்கு உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. கரக்ரஹணம்-கப்பம் ஏற்பது, கை பிடிப்பது (திருமணம்) என்று இரு பொருள். 15

631 இவ்வாறு கூறிவிட்டு ஜயம் என்ற நல்ல முஹூர்த்தத்தில் படைபரிவாரங்களுடன் தேவியை புறப்படும்படி செய்தார். முன்பு பரமேசுவரன் பார்வதி விவாஹத்தின் பொழுது அகத்திய முனிவரை தென் திசைக்கு அனுப்பிவிட்டு, 'நீ காண மற்றொரு விவாஹம் உன் நாட்டில் செய்து கொள்வேன்' என்று தனக்கு அருள் புரிந்ததை நினைவு படுத்திக்கொண்டு, தேவியின் கரக்ரஹ மஹோத்ஸவத்தைக் காண குதூகலத்துடன் அகத்தியர் மலயபர்வதம் சென்றார். 16

632 'படைகளெல்லாம் தயாராக உள்ளன. இன்று இரவு இங்கு தங்கிவிட்டு நாளை கிளம்பலாம். உபசாரத்திற்காக நம்மை தொடர்ந்து வழி அனுப்புவதற்காக வந்தவர்களை திருப்பி அனுப்பிவிடலாம்' என்று ஸுமதி ராணி மாதாவிடம் கூறினாள். 17

ஸாதயிஷ்யஸி கரக்ரஹணம் த்வம் ஸர்வதா சலது தே ஜயயாத்ரா ।
பூரியம் பவது புண்யதமா தே பாவநீபி: அபிதோ ப்ரமணீபி: ॥
இத்யுதீர்ய ஜயநாம்நி முஹூர்த்தே தாம் ப்ரவேஶ்ய ஸபலாம் உபஶல்யம்
தத்கரக்ரஹமஹோத்ஸவவீக்ஷாகௌதுகீ ஸ மலயம் விஜகாஹே ॥ 17
ஸஜ்ஜிதைவ ப்ருதநா ஸகலேயம் கிம்த்விமாம் நிஶமிஹ வ்யதிலங்கய ।
ஶ்வ: ப்ரயாஹி விநிவர்ய நிவர்த்யாநித்யுவாச ஸுமதிர்ஜநநீம் தாம் ॥ 18
பார்ஶ்வமுத்தரமபி த்ரிதஶாத்ரே: ஸா ப்ரயாஸ்யதி யதோ விஜயாய ।
தந்நிரீக்ஷிதுமிவ ப்ரதமம் தம் ப்ரஸ்திதோ திநகரஶ்சரமாத்ரௌ ॥ 19
நிஷ்பதந்நபி ரவீஶ்வசரமார்த்ராபுத்ததார கிரணாநநுயாதான் ।
ஈத்ருஶம் வ்யஸநம் அஸ்ப்ருஶத: கிம் லோகபந்துரிதி ஜீர்யதி ஶப்த: ॥ 20
நிர்மமஜ்ஜ ந ஜலே கதி வாரான் உந்மமஜ்ஜ ந புந: கதி வாரான் ।
அத்ய பாஸ்வதி மிமங்க்ஷதி விப்ரை: அர்பிதா பத ஜலாஞ்ஜலயோऽபி ॥ 21
நாதுநாபி கதமஸ்தமுபைதீத்யார்த்ரகோபபரிபாடலகோணை: ।
வீக்ஷிதோ நு நயநஸ்தருணீநாம் அம்ஶுமாநருணிமாநமயாஸீத் ॥ 22

---

633 மாஸ ஸூர்யன் மேற்கு திசையில் இறங்கினான். விடியற்காலையில் இந்தப் பக்கமாக வடக்கே சென்று விஜய யாத்திரையை தேவி தொடர்வாளே! அந்த விமரிசையைக் காண்போம் என்று மேற்கு மலையை நோக்கி நகர்ந்தான். 18

634 சூரியன் மேற்கு மலையில் சாய்ந்து விட்டான். பின்தொடர்ந்து வந்த கிரணங்களைத் சுருக்கிக் கொண்டான். மறையும் சூரியனின் எதிர் பிரகாசம் தெரிகிறது. தினம் தோறும் ஏற்படும் நிகழ்ச்சியை லட்சியம் செய்யாமல் 19
உலகபந்துவாகவே இருக்கிறான் என்ற புகழ் மறையவில்லையே!

635 சூரியன் எத்தனை தடவை மூழ்கவில்லை? எவ்வளவு தடவை எழவில்லை? ஆனால் இன்றும் பிராமணர்கள் விழும் சூரியனுக்கு இரு கைகளினாலும் நீர் ஏந்தி வாரி இறைக்கவில்லை? (நாளை எழப் போகிறானே 20
என்று தெரிந்தும் கூட).

636 மாலை மூன்றாம் ஜாமத்திலேயே தங்களை அலங்கரித்துக்கொண்டு காதலனுக்காக காத்திருக்கின்ற யுவதிகளுடைய கண்கள் சூரியன் இன்னும் அஸ்தமிக்கவில்லையே என்ற கோபத்தினால் சிவப்பாகிவிட்டன. அந்தச் 21
சிவப்பு மாலைக் கிரணங்களைச் சிவப்பாக்கிவிட்டன போலும்!

637 சூரியகிரணங்களில் சில பாறைகளிலும், முட்களிலும் சிதறி ஒடிந்து விடுகின்றன. ஆகவே அவைகள் பின்தங்கி விட்டன. அதனால்தான் ஸந்தியா 22
காலம் வர தாமதித்தது போலும்!

कर्षणादुपलकण्टकदुर्गेष्वन्तरा शिथिलितास्त्रुटिताश्च ।
अंशवः कतिचिदंशुमतः किं सान्ध्यरागम् अपदिश्य निषेदुः ॥ २३

पश्चिमाचलगुहासु निलीनैः प्रार्थिता नु तिमिरैर्बलवद्भिः ।
स्त्रान्ध्यरागनिभतो दिनभर्तुर्भानवः कतिपये पाथि लग्नाः ॥ २४

अध्वखेदशिथिला जरठा ये भानवो दिनमणेः पथि लग्नाः ।
दीपिकाहुतभुजा मनुसायं तेऽभवन्नतिथयो भवनेषु ॥ २५

ये सहैव पतिताः पतताब्धौ ये च दूरतरमेव निवृत्ताः ।
ते द्वयेऽपि सदृशा दिनबन्धोरीदृशः प्रभवतामविवेकः ॥ २६

संकुचन् नवदलान्तरमूलस्थानदत्तमधुपोपलखण्डाम् ।
अम्बुजोदरकुटीमपिधाय श्रीरपि स्वयमितो निरयासीत् ॥ २७

आप्रभातमपि नर्तितुकामा व्योमरङ्गभवनेऽवतरन्ती ।
किं निशैव विचकार समन्तातदञ्जलीन् उडुनिभात्कुसुमानाम् ॥ २८

मज्जतीव न ममज्जो दिनेशो नांशवोऽस्य निखिलाश्चाः निवृत्ताः ।
क्व स्थितानि मिलितानि कुतो वा तावदेव तिमिराण्यभिवव्रुः ॥ २९

आकलय्य धनुराकलितज्यं तस्थुषः सवयसो मदनस्य ।
अञ्चले निशितमादिममस्त्रं चन्द्रमा मुकुलनेन चकार ॥ ३०

---

638 மேற்கு மலைத்தொடர்களின் குகைகளில் பரவியுள்ள இருள்களின் வேண்டுகோளுக்கினங்க சூரியனுடைய மாலைச் சிவப்புக் கிரணங்கள் சில ஸந்தியாகாலமாக பின்தங்கிவிட்டனவோ! 23

639 சில கிழடுகளான கிரணங்கள் மலை ஏறின. களைப்பினால் குகைவாசலில் தாமதித்தன. குகைகளில் வசிப்பவர்கள் வாசலில் விளக்கேற்றி வைத்திருந்தனர். அந்த ஒளியுடன் இவைகளும் அதிதிகளாக உறவாடின. 24

640 சூரியனோடு கூடவே சில கிரணங்கள் விழவேண்டி கடலில் விழுந்துவிட்டன. சில கிரணங்கள் வெகுதூரத்திற்கு முன்பாகவே பெரிய மலைகளில் முடங்கிவிட்டன. தன்னோடு கடலில் விழுந்த கிரணங்களிடம் அனுதாபமோ பின் தங்கிய கிரணங்களிடம் அலட்சியமோ கிடையாது. பிரபுக்கள் இப்படித்தான் இருப்பார்கள். 25

641 மாலை நேரத்தில் தாமரைப் பொய்கையில் இதழ்கள் குவிய ஆரம்பித்தன. தேனீக்கள், குடித்த தேனை சிந்திக்கொண்டு வெளிவர முயற்சித்தன. லக்ஷ்மீ தேவியும் (அழகு தேவதையும்) தன் தாமரைக் குடிலை மூடாமல் வெளியேறினாள். குவிந்த தாமரைகளில் சில இதழ்கள் குவிந்திருந்தன. சில பிரிந்து கிடந்தன. 26

கர்ஷணாதுபலகண்டகதுர்கேஷு அந்தரா ஶிதிலிதாஸ்த்ருடிதாஶ்ச ।
அம்ஶவ: கதிசிதம்ஶனமத: கிம் ஸாந்த்யராகமபதிஶ்ய நிஷேது: ।। 23
பஶ்சிமாசலகுஹாஸு நிலீநை: ப்ரார்திதா நு திமிரைர்பலவத்பி:
ஸாந்த்யராகநிபதோ திநபர்த்துர்பாநவ: கதிபயே பதி லக்நா: ।।
அத்வகேதஶிதிலா ஜரடா யே பாநவோ திநமணே: பதி லக்நா: ।
தீபிகாஹுதபுஜாம் அநுஸாயம் தேऽபவந்நதிதயோ பவநேஷு ।।
யே ஸஹைவ பதிதா: பததாப்தோ யே ச தூரதரமேவ நிவ்ருத்தா: ।
தே த்வயேऽபி ஸத்ருஶா திநபந்தோரீத்ருஶ: ப்ரபவதாம் அவிவேக: ।। 26
ஸங்குசன் அவதலாந்தரமூலஸ்தாநதத்தமதுபோபலகண்டாம் ।
அம்புஜோதரகுடீமபிதாய ஶ்ரீரபி ஸ்வயமிதோ நிரயாஸீத் ।। 25
ஆப்ரபாதமபி நர்திதுகாமா வ்யோமரங்கபவநேऽவதரந்தீ ।
கிம் நிஶைவ விசகார ஸமந்தாத் அஞ்ஜலீநுடுநிபாத் குஸுமாநாம் ।। 28
மஜ்ஜதீவ ந மமஜ்ஜ திநேஶோ நாம்ஶவோऽஸ்ய நிகிலாஶ்ச நிவ்ருத்தா: ।
க்வ ஸ்திதாநி மிலிதாநி குதோ வா தாவதேவ திமிராண்யபிவவ்ரு: ।। 29
ஆகலய்ய தநுராகலிதஜ்யம் தஸ்துஷ: ஸவயஸோ மதநஸ்ய ।
அஞ்சலே நிஶிதமாதிமம் அஸ்த்ரம் சந்த்ரமா முகுலநேந சகார ।। 30

642 ராத்ரிதேவி விடியும் வரை நர்தனமாடுகின்ற உற்சாகத்தில் ஆகாச ரங்கத்தில் வந்து இறங்கினாள். ஆரம்பத்தில் புஷ்பாஞ்சலி செய்து சுற்றிலும் விழுந்த புஷ்பங்கள்தான் நக்ஷத்திரங்களாக மின்னுகின்றனவோ! 27

643 சூரியன் இன்னும் முழுமையாக மறையவும் இல்லை. மறையாமலும் இல்லை. அவனுடைய எல்லா கிரணங்களும் இன்னும் ஒடுங்கவில்லை. எங்கே சென்றன எங்கே ஒன்று சேர்ந்தன என்று கேட்பதற்கு முன்பாகவே இருட்டு எங்கும் வ்யாபித்துக்கொண்டு விட்டது. 28

644 மன்மதன் நாணேற்றிய வில்லுடனும் ஸமவயதுடையவர்களுடனும் தயாராக நின்று கொண்டிருக்கிறான். தன்னுடைய முதல் பாணமாகிய தாமரை மலரை எடுத்து தன் வில்லில் தொடுப்பதற்கு முன்பாக சந்திரன் தோன்றி அதைக் குவியவைத்து கூர்மையாகச் செய்துவிட்டான். 29

645 இரவு முழுவதும் மீனாக்ஷி, தாயுடன் பேசிக்கொண்டிருந்தாள். ஓயாமல் பேசினாள். திடீரென்று ஆண்கோழி கூவுவதைக் கேட்டு, இரவு விடிவதற்கு ஐந்தாறு நிமிடங்கள்தான் இருக்கும் என்று கணக்கிட்டாள். 30

646 சுமதி விஜய யாத்திரை கிளம்பலாம் என்று ஆணையிட்டாள். உடனே அதற்குறிய பேரிகை முழக்கம் ஏற்பட்டது. இந்த ஓசை ஆகாசம் பூமி எங்கும் அலை கடலோசையெனப் பரவியது. 31

सर्वरात्रमपि सा जनयित्र्या संल्लपन्त्यविरलं शफराक्षी ।
पञ्चषक्षणमितामिव मेने ताम्रचूडनिनदेन तमिस्राम् ॥ ३१

आज्ञया स सुमतेरधिसैन्यं ताडितो विजयदुन्दुभिरस्याः ।
आरवैर्जलदनादगभीरैः आवृणोदिव दिवं च भुवं च ॥ ३२

निर्जराः किमपि पाणिविहारैः पन्नगास्तु पुनरक्षिनिकोचैः ।
तैर्द्वयैरपि नरा ब्यवजह्रुस्तद्रवैर्मुखरिते जगदण्डे ॥ ३३

उच्छ्रितध्वजमुपस्थितयोधं सज्जवारणतुरंगशताङ्गम् ।
संननाह सकलं बलमस्यास्तूर्यघोषमुखरं निमिषेण ॥ ३४

दिग्जयाय कृतमङ्गळरक्षा सा त्रिलोकजननी जनयित्र्या ।
निर्जगाम शिबिकामधिरूढा संप्रचाल्य सकलं बलमग्रे ॥ ३५

अग्रतो भटगणैरथ वाहैः कुञ्जरैरथ रथैरथ भृत्यैः ।
सौविदल्लनिकरैरथ तस्या दूरतः प्रचलितं शिबिकाग्रे ॥ ३६

राजचिह्ननिवहैर्मणिवेत्रैर्वल्लकीडमरुवेणुमृदङ्गैः ।
गद्यपद्यपठनैरपि सेवां सुभ्रुवो विदधिरे धुरि तस्याः ॥ ३७

अग्रतश्चलदसंख्यतुरंगोद्धूतभूतलरजःस्थगितार्के ।
दिक्तटेऽपि बुबुधे सराणिः स्वा तश्चलेन पवनैरनुकूलैः ॥ ३८

सैन्धवैर्धुरि समुद्गमिता ये पांसवो दश दिशः परिवव्रुः ।
तानशीशमदिह द्विरदानां दानशीकरकिरः श्रुतिवातः ॥ ३९

---

647 ப்ரஹ்மாண்டம் எங்கும் அந்த பேரொலி பரவியதால், வாய்ப்பேச்சு மட்டும் காதில் விழவில்லை. தேவர்கள் தங்கள் கருத்தை கைகளை அசைத்து தெரிவித்தார்கள். பாதாளவாஸிகளான நாகர்கள் தங்களுடைய கண்களை மூடித்திறப்பதின் மூலமாகவும், மனிதர்கள் மேற்கூறிய இரண்டுவிதமான சம்ஞைகளாலும் பரஸ்பரம் பேசிக் கொண்டார்கள். 32

648துந்துபியின் ஓசை கேட்ட மாத்திரத்திலேயே, தேவியின் யானை, குதிரை, ரதப்படைகள் எல்லாம் ஏற்றப்பட்ட கொடிகளுடனும் போர் ஆரவாரத்துடனும் விஜயயாத்திரைக்காக தயாராக அணிவகுத்து நின்றன. 33

649 திக்விஜயத்திற்காக தாயின் கையினால் மங்களாக்ஷதை கங்கணம் கட்டிக் கொண்டாள். மூவுலகத்திற்கும் தாயான தேவி, படைகள் முன்னே செல்ல தான் பல்லக்கில் ஏறிக்கொண்டு புறப்பட்டாள். 34

650 முதல் காலாட்படைகள், அடுத்து குதிரைப்படை, அதன் பின் யானைப்படை, பிறகு தேர்படை அணிவகுத்தன. அதற்குப் பின்னால்

ஸர்வராத்ரமபி ஸா ஜநயித்ர்யா ஸல்லபந்த்யவிரலம் ஶபராக்ஷீ ।
பஞ்சஷக்ஷணமிதாமிவ மேநே தாம்ரசூடநிநதேந தமிஸ்ராம் ।।

ஆஜ்ஞயா ஸ ஸுமதேரதிஸைந்யம் தாடிதோ விஜயதுந்துபிரஸ்யா: ।
ஆரவைர்ஜலதநாதகபீரை: ஆவ்ருணோதிவ திவஞ்ச புவஞ்ச ।।

நிர்ஜரா: கிமபி பாணிவிஹாரை: பந்நகாஸ்து புநரக்ஷிநிகோசை: ।
தைர்த்வயைரபி நரா வ்யவஜஹுஸ்தத்ரவைர்முகரிதே ஜகதண்டே ।। 33

உச்ச்ரிதத்வஜம் உபஸ்திதயோதம் ஸஜ்ஜவாரணதுரங்கஶதாங்கம் ।
ஸந்நநாஹ ஸகலம் பலமஸ்யாஸ்தூர்யகோஷமுகரம் நிமிஷேண ।। 34

திக்ஜயாய க்ருதமங்களரக்ஷா ஸா த்ரிலோகஜநநீ ஜநயித்ர்யா ।
நிர்ஜகாம ஶிபிகாமதிரூடா ஸம்ப்ரசால்ய ஸகலம் பலமக்ரே ।। 35

அக்ரதோ படகணைரத வாஹை: குஞ்ஜரைரத ரதைரத ப்ருத்யை: ।
ஸௌவிதல்லநிகரைரத தஸ்யா தூரத: ப்ரசலிதம் ஶிபிகாக்ரே ।। 36

ராஜசிஹ்நநிவஹைர்மணிவேத்ரைர்வல்லகீடமருவேணும்ருதங்கை: ।
கத்யபத்யபடநைரபி ஸேவாம் ஸுப்ருவோ விததிரே துரி தஸ்யா: ।। 37

அக்ரதஶ்சலதஸங்க்யதுரங்கோத்தூதபூதலரஜ:ஸ்தகிதார்க்கே ।
திக்தடேऽபி புபுதே ஸரணி: ஸ்வா தத்பலேந பவநைரநுகூலை: ।। 38

ஸைந்தவைர்துரி ஸமுத்கமிதா யே பாம்ஸவோ தஶ திஶ: பரிவவ்ரு: ।
தாநஶீஶமதிஹ த்விரதாநாம் தாநஶீகரகிர: ஶ்ருதிவாத: ।। 39

*அவளுடைய சேடிகள் சென்றார்கள் பிறகு சற்றுத் தொலைவில் தன்னுடைய*
*மெய்காப்பாளர்கள் சூழ பல்லக்கில் தேவி சென்றாள். 35*

*651 தேவியின் பல்லக்கிற்கு முன் அரசாங்கக் காவலர்கள் சுற்றி நிற்க நடுவில் இனிய*
*இசை விருந்து நடைபெற்றது. பெண்கள் வீணை, வேணு,மிருதங்க*
*பக்கவாத்தியங்களுடன், வசன நடை, செய்யுள் நடை இலக்கியங்களைப் பாடினார்கள். 36*

*652 முன்னே செல்கின்ற குதிரைகளின் குளம்புகளினால் எழுப்பப்பட்ட*
*புழுதி, வானம் முழுவதும் பரவி இருள் சூழ்ந்தது, பாதை தெரியவில்லை.*
*எந்த திசையில் போகிறோம் என்ற ஒரு குறிப்பை புழுதிகளை அகற்றி,*
*அனுகூலமாக வீசுகின்ற காற்றின் மூலம் அறிந்துகொண்டு சென்றது. 37*

*653 குதிரைகளின் குளம்புப் புழுதி திசை எங்கும் பரவியது. நல்ல*
*வேளையாக யானைகள் மதநீர் பெருக்கின. அது காற்றில் கலந்து புழுதியை*
*அமிழ்த்தின. அத்துடன் யானைகளின் வீசுகின்ற காதுகளின் மூலம் எழும்பும்*
*காற்றினாலும் புழுதி அடங்கியது. 38*

*654 சரத்காலத்தில் மேகங்கள் கலைந்து விட்டன. மேகங்கள் எட்டி எட்டி*
*தென்பட்டன. அந்த நேரம் இந்திரனுடைய வில் ஆகாசத்தில் தோன்றியது.*
*அதை யானைப்பாகர்கள் தங்கள் கைகளினால் பிடிக்க விழைந்தார்கள். 39*

विश्लथेषु शरदागमयोगात् द्विष्वगैक्ष्यत पयोदकुलेषु ।
शातमन्यवशरासनखण्डं हस्तलभ्यमिव हस्तिपकानाम् ॥ ४०

दंशितस्तुरगबद्धनिषङ्गो बाणपाणिरधिरोपितचापः ।
आप्रसैन्यसहितः सुमतिस्ताम् अन्वयाच्चरमतः शरपाते ॥ ४१

उद्गृहीतविहितैरुपहारैर्वेत्रपातचकिताः कृतसंघाः ।
आकुमारम् अवलोकायितुं तां प्रस्थितां प्रकृतयः परिवव्रुः ॥ ४२

मुग्धसल्लपनकौतुकभूम्ना मन्दचालितमणीशिबिका सा ।
संप्रवादम् अश्रुणोदिति तासां ग्राम्यभावपिशुनं विहसन्ती ॥ ४३

पश्य! कालि! मलयध्वजकन्यां कुब्जिके जनकवन्मुखमस्याः ।
ज्यायसी हि दुहितुः मम मासैः पञ्चषैरियमहो शिशुरेब ॥ ४४

चण्डवातविगमादनु जाता नन्वियं तुरगकर्मणि राज्ञः ।
कीदृशी चतुरता पुनरस्याः कीदृशस्तु भविता गृहमेधी ॥ ४५

सन्ति नः शतमजा दश गावः पञ्चषाश्च महिषा दयया ते ।
गव्यमेतदुपयुङ्क्ष्व कदुष्णं दूरमम्बुतृषितासि पथि त्वम् ॥ ४६

अस्ति पर्युषितमस्ति यवागूः सन्ति वंशशकलाद्युपदंशाः ।
शीतमुष्णमपि वा पिब कामं गच्छ पुत्रि न पुनः क्षुधिता त्वम् ॥ ४७

655 மஹாமந்திரி ஸுமதி, போருக்கேற்ற உடையுடனும், குதிரையின் ஜேணத்தில் அம்பராதூளியைக்கோத்து, வில்லில் நாணேற்றிக் கொண்டு,வலது கையில் ஓர் அம்புடன்,நம்பிக்கைக்குரிய படைசூழ தேவியாரின் பின்னால் அம்பு விழும் தூரத்தில் சென்றாள். 40

656 வழியில் நாட்டு மக்கள் அன்பளிப்புப் பொருள்களை எடுத்துக்கொண்டு கூட்டம் கூட்டமாகத் தேவியைப் பின்தொடர்ந்தார்கள். அரசபடர்கள் பிரம்பினால் அடித்து துரத்துவார்களோ என்று பயம். ஆனாலும், அவளைப் பார்க்கவேண்டும் என்ற ஆசையினால் கைக்குழந்தைகளுடன் சென்று மஹாராணியைச் சூழ்ந்து கொண்டனர். 41

657 வழியில் நின்றுகொண்டிருந்த ஜனங்கள் எல்லாம்-- 'மஹாராணியம்மா போருக்குப் போராங்களாமே! ஐயோ பாவம்!' என்று அங்கலாய்த்துக் கொண்டிருப்பவர்களைப் பார்த்து சிரித்தாள். அதற்காக. பல்லக்கை மெதுவாக செல்ல ஆணையிட்டாள், கபடமற்ற அவர்களுடைய பேச்சுக்களைக் கேட்டுக் கொண்டு தேவீ உத்ஸாஹத்துடன் சென்றாள். 42

658 'ஏ காளி!' என்று ஒரு கிராமத்துப் பெண் ஒருத்தி கூப்பிட்டாள். 'என்னடி' என்றாள் காளி.அடியே கூனி!. பார்தாயா ராணியின் முகத்தை அப்படியே அப்பனுடய

விஶ்லதேஷு ஶரதாகமயோகாத் விஷ்வகைக்ஷத பயோதகுலேஷு ।
ஶாதமந்யவஶராஸநகண்டம் ஹஸ்தலப்யமிவ ஹஸ்திபகாநாம் ॥ 40

தம்ஶிதஸ்துரகபத்தநிஷங்கோ பாணபாணிரதிரோபிதசாப: ।
ஆப்தஸைந்யஸஹித: ஸுமதிஸ்தாம் அந்வயாச்சரமத: ஶரபாதே ॥ 41

உத்க்ருஹீதவிஹிதைருபஹாரைர் வேத்ரபாதசகிதா: க்ருதஸங்கா: ।
ஆகுமாரம் அவலோகயிதும் தாம் ப்ரஸ்திதாம் ப்ரக்ருதய: பரிவவ்ரு: ॥ 42

முக்தஸல்லபநகௌதுகபூம்நா மந்தசாலிதமணீஶிபிகா ஸா ।
ஸம்ப்ரவாதமஶ்ருணோதிதி தாஸாம் க்ராம்யபாவபிஶுநம் விஹஸந்தீ ॥ 43

பஶ்ய ! காலி ! மலயத்வஜகந்யாம் குஞ்ஜிகே ! ஜநகவந்முகமஸ்யா: ।
ஜ்யாயஸீ ஹி துஹிதுர்மம மாஸை: பஞ்சஷைரியமஹோ ஶிஶுரேவ ॥ 44

சண்டவாதவிகமாதநு ஜாதா நந்வியம் துரககர்மணி ராஜ்ஞ: ।
கீத்ருஶீசதுரதா புநரஸ்யா: கீத்ருஶஸ்து பவிதா க்ருஹமேதீ ॥ 45

ஸந்தி ந: ஶதமஜா தஶ காவ: பஞ்சஷாஶ்ச மஹிஷா தயயா தே ।
கவ்யமேதபதுபயுங்க்ஷ்வ கதுஷ்ணம் தூரமம்புத்ருஷிதாஸி பதி த்வம் ॥ 46

அஸ்தி பர்யுஷிதமஸ்தி யவாகூ: ஸந்தி வம்ஶஶகலாத்யுபதம்ஶா: ।
ஶீதமுஷ்ணமபி வா பிப காமம் கச்ச புத்ரி ந புநஸ்த்ருஷிதா த்வம் ॥ 47

---

முகத்தைக் கொண்டு இருக்கிறாள்; 'என் மகள் பிறப்பதற்கு நான்கைந்து மாதங்களுக்கு முன் பிறந்த இவள் இன்னும் சின்னப் பெண் தான்' 43

659 மற்றொரு ஆச்சி கூறினாள் -'பெரிய புயல் அடித்ததே,நினைவுக்கு இருக்கா? அப்புறம் மவராசா குதிரையை வெச்சு என்னென்னமோ பண்ணினாறு, அப்புறம் பொறந்த இவள் எத்தனை சமத்து. இவளுக்கு எப்படித்தான் புருசன் வாய்க்கப் போறானோ!' 44

660 ஒரு கிழவி மஹராணியை அணுகினாள் 'உன் புண்ணியத்தில எங்கிட்ட நூறு ஆடு, பத்து மாடு, ஐந்தாறு எருமை இருக்கு. இதல்லாம் உனக்குத்தான், அடி ஆத்தே பாலைக் காச்சித்தான் கொண்டாந்தேன். ஆறிப்போச்சு. இதைக்குடிச்சுக்கோ. இம்மா நேரம் நாக்கு ஒட்டிப்போயிருக்குமே! சாப்பிடு அம்மா' என்று உபசரித்தாள். 45

661 மற்றொருத்தி கூறினாள்- 'இத பார்! இந்த சட்டியிலே பழய சோறு இருக்கு. இந்த சட்டியிலே கஞ்சி இருக்கு. ஊறுகாயும் இருக்கு. சூடா வேணுமானாலும் குடி, ஆறினது வேணுமனாலும் குடி, உனக்கு வேண்டியதை குடி. வழியிலே பசியோடு மட்டும் போகாதே' என்று உபசரித்தாள். 46

662 'உன்னை உன் அம்மா கிழவி தன்னம்தனியாக எப்படி அனுப்பினாளோ? பாவம்! நீ கவலைப்படாதே. நாங்கள் காளிதேவிக்கு ஆடு,

प्रार्थयेमहि वयं भवदर्थे कुक्कुटैश्च पशुभिः सह देवीम् ।
गच्छ पुत्रि सुखिनी पुनरेहि त्वां कथं नु मुमुचे जरती सा ॥ ४८

किं त्वमेव मलयध्वजकन्येत्यालपन्त्यभिमृशन्ति कराग्रैः ।
आशिषश्च ददते शतशो यास्ता यथायथमुपाचरदेषा ॥ ४९

यत्र यत्र परिपश्यति बाला पादपान्क्षितिभृतः सरितो वा ।
तत्र तत्र निभृतार्पितदृष्टिः कौतुकेन पथि सा चिरमासीत् ॥ ५०

तावती किल चमूरपि तस्याः संकुले पथि शनैः प्रचलन्ती ।
पार्श्वतो न विदधे पदमात्रं पात्रमध्यपतिता तटिनीव ॥ ५१

नाददे पथि फलानि नचेक्षून्का कथावतरणे कलमेषु ।
पुष्पगन्धमपि मारुतनीतं जिघ्रति स्म पृतना चकितास्याः ॥ ५२

किं धमेम जलधीन्मुखवातैः किं क्षिपेम नखरैर्गिरिकूटान् ।
इत्यखण्डितचलद्रणकण्डूदुर्मदैरगणि तत्र चमूपैः ॥ ५३

यावदम्बरमणिर्दिनमध्यं नाधिरोहति सुदुर्विषहोष्मा ।
तावदेव सुमतिर्हृदयज्ञो विश्रमाय बलमादिशदस्याः ॥ ५४

नालिकेरपनसक्रमुकाम्रस्पर्धमानकदलीक्षुवणायाम् ।
तीरसीमनि कबेरसुतायाद्धतद्बभूव शिबिरं शफराक्ष्याः ॥ ५५

---

கோழி எல்லாம் பலிகொடுப்போம். நீ நல்லா இருக்கோணம்னு வேண்டிப்போம். நோய் நொடியில்லாம திரும்பிடு அம்மா.' 47

663 ஒருத்தி பல்லக்கை நெருங்கினாள். 'அடி! நீ தான் மலயத்வஜன் மகளா? ஜோரா இருக்கயே!'என்று கூறிக்கொண்டு அவள் கை கால்களைத் தொட்டாள். 'மஹாராணி நல்ல இருக்கணும். ஆமா நான் சொல்பிட்டேன்' இவ்வாறு நூற்றுக்கணக்கான ஆசிகளை கிழவிகள் வழங்கினர். தேவி அவர்களுக்கு மடி நிறைய வெகுமதிகளை வழங்கினாள். 48

664 பல்லக்கில் அமர்ந்தபடியே ராணி ஆங்காங்கே பாதையின் இருபுறமும் உள்ள மரங்களையும்,சிறு குன்றுகளையும். ஓடைகளையும் வியப்புடன் பார்த்து மகிழ்ந்தாள். தேவி பாதையைவிட்டு அகலவே இல்லை. மிகவும் குதூகலம் அடைந்தாள்.நேரம் போவது தெரியாமல் ஆங்காங்கே நின்றாள். 49

665 அவ்வளவு பெரியபடை பாதையிலுள்ள மேடு பள்ளங்களினால் சற்றுத் தடுமாறினாலும், மெல்ல மெல்ல முன்னேறிக் கொண்டே பாதையைவிட்டு விலகாமல், திடமான நீர்தேக்கத்தின் நடுவில் விழும் நதியின் தண்ணீரைப் போலச் சென்றது. 50

ப்ரார்த்தயேமஹி வயம் பவதர்த்தே குக்குரைஶ்ச பஶுபிஸ்ஸஹ **தேவீம்** ।
கச்ச புத்ரி ! ஶுகிநீ புநரேஹி த்வாம் கதம் நு முமுசே ஜரதீ ஸா ॥ 48
கிம் த்வமேவ மலயத்வஜகந்யேத்யாலபந்த்யபிம்ருஶந்தி கராக்ரை: ।
ஆஶிஷஶ்ச ததே ஶதஶோ யாஸ்தா யதாயதம் உபாசரதேஷா ॥ 49
யத்ர யத்ர பரிபஶ்யதி பாலா பாதபான் க்ஷிதிப்ருத: ஸரிதோ வா ।
தத்ர தத்ர நிப்ருதார்பிதத்ருஷ்டி: கௌதுகேந பதி ஸா சிரமாஸீத் ॥ 50
தாவதீ கில சமூரபி தஸ்யா: பாம்ஸுலே பதி ஶநை: ப்ரசலந்தீ ।
பார்ஶ்வதோ ந நிததே பதமாத்ரம் பாத்ரமத்யபதிதா தடிநீவ ॥ 51
நாததே பதி பலாநி ந சே க்ஷூந் கா கதாவதரணே கலமேஷு ।
புஷ்பகந்தமபி மாருதநீதம் ஜிக்ரதி ஸ்ம ப்ருதநா சகிதாஸ்யா: ॥ 52
கிம் தமேம ஜலதீன் முகவாதை: கிம் க்ஷிபேம நகரைர்கிரிகூடான் ।
இத்யகண்டிதசலத்ரணகண்டூ துர்மதைரகணி தத்ர சமூபை: ॥ 53
யாவதம்பரமணிர்திநமத்யம் நாதிரோஹதி ஸுதுர்விஷஹோஷ்மா ।
தாவதேவ ஸுமதிர்ஹ்ருதயஜ்ஞோ விஶ்ரமாய பலமாதிஶதஸ்யா: ॥ 54
நாளிகேரபநஸக்ரமுகாம்ரஸ்பர்தமாநகதளீக்ஷுவணாயாம் ।
தீரஸீமநி கவேரஸுதாயாஸ்தத்பபூவ ஶிபிரம் ஶபராக்ஷ்யா: ॥ 55

---

666 படை வீரர்களின் ஒழுங்கு முறை ஆச்சரியமாக இருந்தது. போகும் வழியில் மரங்களிருந்து விழுந்த பழங்களையோ கரும்புகளையோ தொடவே இல்லை. பயிர் நிலங்களில் கால் வைக்கவில்லை என்று சொல்லவும் வேண்டுமோ? மரங்களில் வாசனை மலர்கள் பூத்துக் குலுங்கின. அவற்றின் நறுமணத்தை காற்று அவர்களின் மூக்கில் ஏறின அதைக்கூட முகரவில்லை. அத்தனைக் கட்டுப்பாடு. 51

667 எங்கு போனாலும் எதிர்ப்பே இல்லை. எல்லா நாட்டு அரசர்களும் வரவேற்று உபசரித்தனர். படை வீரர்களுக்கு போர் புரிய வாய்ப்பே இல்லை. கட்டுப்பாட்டுக்கு அடங்கி நடந்து கொண்டார்களே தவிர வெளிப்படையாக அவர்களுடைய உற்சாகமோ எல்லையற்றது. 'போர் திணவு கண்டுவிட்டது. கடல் நீரை வாயினால் ஊதி வீசுவோமா? நகங்களினால் மலைச்சிகரங்களைக் கிள்ளி எறிவோமா?' என்று துடித்துக் கொண்டிருந்தார்கள். 52

668 சூரியன் நடுப்பகலை எட்டிவிட்டான். மந்தமான வெயில் பொறுக்கமுடியாத அளவிற்கு வெப்பமேரிவிட்டது. அதற்குள் ராணியின் உள்ளமறிந்தே மஹாமந்திரி சுமதி படைகளுக்கு 'ஓய்வெடுக்கலாம்' என்று ஆணையிட்டார். 53

669 தேங்காய், பலா, மா, வாழை, கரும்புகள் போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்துள்ள காவேரிக்கரையின் ஒரு சோலையில் மீனாக்ஷியின் கூடாரம் அமைக்கப்பட்டது. 54

प्राग्गतैरधिगतैः प्रविभज्य स्थापितेषु पटवेशमसु तस्मिन्।
स्वं स्वमेत्य विजयध्वजचिह्नं निर्विदमविशन्बलमुख्याः ॥ ५६

विस्तृताभिरभितो विपणीभिर्वेश्मभिश्च विपुलैः सकलानाम्।
अन्वयादिव पुरी मधुरेव स्वामिनीं पटनिकेतमयी ताम्॥ ५७

स्वेदरज्यदलिकान्तनिमज्जद्धूसरालकतयाधिकदृश्यम्।
आननं विकसितेक्षणमस्या ध्यानमङ्गलम् अभूत् भुवनानाम्॥ ५८

सावतीर्य शिबिरप्रतिहारे सैनिकान् समनुगृह्य कटाक्षैः।
कल्पितं सुमतिना बहुकक्ष्यं पाण्डरं पटगृहं प्रविवेश ॥ ५९

आवृतं बहुभिरावरणैस्तद्दीर्धिकोपवनशोभितमन्तः।
सा मणीकलशसंभृतमुच्चै दर्शितं सुमतिना विलुलोके ॥ ६०

अत्युदारमवबद्धवितानं क्लुप्तमञ्चमुपबर्हविशोभि।
धूपितं कुसुमदामसुगन्धि प्राविशच्छयनमन्दिरमम्बा ॥ ६१

यत्सहस्रदलमागमगम्यं पङ्कजं विमलचिन्मयमस्ति।
न्यञ्चितं तदिव कौतुकहेतोः पाण्डरं पटगृहं शुशुभेऽस्याः ॥ ६२

सा निविश्य मृदुले शयनीये संविसृज्य सुमतिं शुभयोक्त्या।
अध्वखेदमवरोपितभूषा सँल्लपन्त्यपजहार सखीनाम् ॥ ६३

670 ஸேனா நாயகர்கள் முன்னே சென்று அங்கிருந்த கூடாரங்களை அந்த அந்த அதிகாரிகளுக்கு ஒதுக்கிவைத்து விட்டார்கள். படைத் தலைவர்களினால் அவரவர்கள், தங்களுக்கு பிரித்துக் கொடுக்கப்பட்ட இடங்களில், வாக்குவாதமில்லாமல், வெற்றிக்கொடிகளை ஏற்றிக் கொண்டு நுழைந்தார்கள். 55

671 அந்த அந்த நாட்டு வீரர்களின் படை முகாமிற்கருகில் அந்த அந்த நாட்டுக் கலைப் பொருள்களும், உணவு வகைகளும் பரப்பி வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்தால், மதுரை நகரமே கூடார வரிசை வடிவத்தில், ராணியைவிட்டு பிரியமனமில்லாமல் பின் தொடர்ந்து வந்துவிட்டதுபோல் தோன்றியது. 56

672 முன் நெற்றியில் படர்ந்துள்ள புழுதியுடன் கூடிய தலைமுடி, ஆங்காங்கே வியர்வைத்துளி, மலர்ந்த கண்களுடன் கூடிய அந்த அழகான முகம், நாட்டு ஜனங்களின் உள்ளங்களில் ஆழப்பதிந்து, வெகு நாட்கள் அதையே நினைத்து நினைத்து மகிழ்ந்தார்கள். 57

673 தேவி பல்லாக்கிலிருந்து இறங்கினாள். எதிரே அவளுக்காக மந்திரி சுமதி பல அறைகள் நிறைந்த கூடாரம். அமைத்திருந்தாள். தேவி வாயிலில் நின்று கொண்டு படைவீரர்களை தன் பார்வையினால் உற்சாகப்படுத்திவிட்டு, அந்த வெள்ளைக் கூடாரத்தில் பிரவேசித்தாள். 58

**ப்ராக்கதைரதிகதை: ப்ரவிபஜ்ய ஸ்தாபிதேஷு படவேஶ்மஸு தஸ்மின் ।**
**ஸ்வம் ஸ்வமேத்ய விஜயத்வஜாசிஹ்நம் நிர்விவாதமவிஶன் பலமுக்யா: ।। 56**
**விஸ்த்ருதாபிரபிதோ விபணீபிர்வேஶ்மபிஶ்ச விபுலை: ஸகலாநாம் ।**
**அந்வயாதிவ புரீ மதுரேவ ஸ்வாமிநீம் படநிகேதமயீ தாம் ।। 57**
**ஸ்வேதரஜ்யதலிகாந்தநிமஜ்ஜத்தூஸராளகதயாதிகத்ருஶ்யம் ।**
**ஆநநம் விகஸிதேக்ஷணமஸ்யா த்யாநமங்களமபூத் அபுவநாநாம் ।। 58**
**ஸாவதீர்ய ஶிபிரப்ரதிஹாரே ஸைநிகான் ஸமநுக்ருஹ்ய கடாக்ஷை: ।**
**கல்பிதம் ஸுமதிநா பஹுகக்ஷ்யம் பாண்டரம் படக்ருஹம் ப்ரவிவேஶ ।। 59**
**ஆவ்ருதம் பஹுபிராவரணைஸ்தத்தீர்கிகோபவநஶோபிதமந்த: ।**
**ஸா மணீகலஶஸம்ப்ருதமுச்சைர் தர்ஶிதம் ஸுமதிநா விலுலோகே ।। 60**
**அத்யுதாரமவபத்தவிதாநம் க்ல்ருப்தமஞ்சம் உபபர்ஹவிஶோபி ।**
**தூபிதம் குஸுமதாமஸுகந்தி ப்ராவிஶச்சயநமந்திரமம்பா ।। 61**
**யத் ஸஹஸ்ரதலம் ஆகமகம்யம் பங்கஜம் விமலசிந்மயமஸ்தி ।**
**ந்யாஞ்சிதம் ததிவ கௌதுகஹேதோ: பாண்டரம் படக்ருஹம் ஶுஶுபேऽஸ்யா: ।। 62**
**ஸா நிவிஶ்ய ம்ருதுலே ஶயநீயே ஸம்விஸ்ருஜ்ய ஸுமதிம் ஶுபயோக்த்யா ।**
**அத்வகேதமவரோபிதபூஷா ஸல்லபந்த்யபஜஹார ஸகீநாம் ।। 63**

---

*674 மஹாமந்திரி சுமதி, தேவிக்கு அந்தக் கூடாரத்தைச் சுற்றிக் காட்டினாள். விஸ்தாரமான கூடாரம். அதைச் சுற்றி குளுமையான செடிகொடிகள். தண்ணீர் சல சலவென்று ஓடுகின்ற ஓடைகள், அவற்றைச் சுற்றி பெரிய படுதாக்கள் மறைத்திருந்தன. ஆங்காங்கே மங்கள ரத்தின கலசங்கள், நன்கு அலங்கரிக்கப்பட்ட தனித்தனி அறைகள், பார்ப்பதற்கு ஒரு ராஜபவனம் போல் காட்சி அளித்தது. 59*

*675 கூடாரத்தின் உள்ளே தேவியின் சயன கிருஹம். மேல் மட்டத்தில் அலங்கார அஸ்மானகிரி. நடுவில் ஒரு மஞ்சம், பட்டுவிரிப்புகளுடன் கூடிய அதில் திண்டுகள். சுற்றியும் அகர்பத்தி மற்றும் மலர்களின் மெல்லியதான நறுமணம். அந்த சயன கிருஹத்தில் தேவி பிரவேசித்தாள். 60*

*676 வேதாகமங்களிருந்து மட்டுமே, அறிந்து கொள்ளமுடியும் என்ற ஏக்கம் உள்ளோருக்கும் புரிந்து கொள்ளும்படி மேல் வெள்ளை விதானத்தில் சித்திரம் அமைந்திருந்தது. 61*

*677 அந்த திவ்யமான மஞ்சத்தைத் தொட்டுத் தொட்டு ரஸித்து, தேவி அதில் அமர்ந்தாள். சுமதிக்கு நல்வார்த்தை கூறி ஸுமுகமாக அனுமதி அளித்தாள். ஆபரணங்களை கழற்றி வைத்தாள்.ஸகிகள் கூடிவிட்டனர். அவர்களுடன் கலகலப்பாகப் பேசி பயணக்களைப்பைத் தீர்த்துக் கொண்டாள். 62*

*678 காப்புக்காக தன்னுடன் வந்த படையையும், பின் தொடர்ந்து வந்த படையையும் ஓய்வெடுக்க அனுமதித்தாள். மந்திரி சுமதி- 'இன்றும் நாளையும் இங்கு தங்கி. நாளை மறுநாள் புறப்படுவோம்' என்றான். 63*

विश्रमय्य बलमेतदुपेतं संनिपात्य च चमूमनुयान्तीम्।
श्वो निषद्य सुखमत्र परश्वो याम इत्यभिदधे सचिवेन ॥ ६४

संवृते पयसि सह्यसुताया भित्तिभिर्नवदुकूलमयीभिः।
क्लृप्तमज्जनविधिः सवयोभिः सोपसज्य विजहार कुमारी ॥ ६५

मुक्तपल्ययनविश्रमिताश्वं स्रस्तबन्धसुखितद्विपसङ्घम्।
स्नातपीतसुखसुप्तभटं तच्छासनेन सुमतेर्बलमासीत् ॥ ६६

सापरेद्युरंधिरुह्य तुरंगं संच रन्त्यवनिपालकुमारी।
तृप्तिमाप न कवेरसुतायाः कामनीयकमवेक्षमवक्षम् ॥ ६७

तत्प्रतीरभुवि केरतरूणां हस्तलभ्यमुपयुज्य फलाम्भः।
निर्जरा विधुकलामृतभागान् आपिबन्ति सकृदौषधरीत्या ॥ ६८

तज्जलं निपतितं क्वचिदन्तः स्तब्धमास्त किल यत्र पयोधेः।
तत्प्रदेशविषयस्तनुभाजाम् इक्षुसारजलधिव्यवहारः ॥ ६९

सा वहेत यदि सर्वपथीना किं न सा त्रिपथगार्धममुष्याः।
अर्थमेनमवबुद्य जनास्ताम् अर्धजह्नुतनयेति गृणन्ति ॥ ७०

तामगस्त्यगृहिणीं परिणम्रां तत्र सिन्धुवपुषा गृणती सा।
नन्वियं भवति नो गुरुपत्नीत्यादरं दृढमधत्त सखीनाम् ॥ ७१

---

679 தேவி காவேரி நதியை அடைந்தாள். 'ஸகிகள் தமது பட்டுச் சேலைகளை திரை போல் தொங்கவிட்டு, சுற்றி நின்றார்கள். தேவி குதூகலத்துடன் இறங்கினாள். மறைவுக்குள்ளே நீந்தி விளையாடினாள். தோழிகளும் சேர்ந்து கொண்டார்கள். அலுக்கவே இல்லை.' 64

680'ஜேணங்களைக் கழற்றிவிட்டு குதிரைகளை காவிரி ஆற்று மணலில் இஷ்டப்படி புரண்டு கொள்ள விடலாம். அம்பாரிகளை கழற்றிவிட்டு யானைகளை இஷ்டப்படி தண்ணீரில் குளிக்க விடலாம். வீரர்களும் தங்கள் ஆசை தீர காவிரியில் நீந்தி, நீராடி தங்கள் உடம்பிற்கு முறுக்கேற்றிக் கொள்ளலாம்' இவ்வாறு மந்திரி படைகளுக்கு ஆணையிட்டார். 65

681 மறு நாள் தேவி ஒரு குதிரையில் ஏறி அமர்ந்தாள். காவேரியின் படுகைகளிலும் சோலைகளிலும் தேவி சுற்றினாள். காவேரியின் அருகிலுள்ள வனப்பான தோப்புகளில் இயற்கை அழகையும் சுற்றிச்சுற்றிப் பார்த்து மகிழ்ந்தாள் அலுக்கவே இல்லை. 66

682 காவேரியின் எதிர்கரையில் தென்னைமரங்கள் வளர்ந்து ஸ்வர்கத்தைத் தொட்டன. கைகளினால் இளநீர்களை பிடுங்கி தேவர்கள் அன்றாடம் இளநீர் பருகினர். சந்திரகிரணம் தோய்ந்த அமுதத்தை ஒரு தடவை மட்டும் மருந்து என்று சிறிதளவு பருகினர். 67

விஶ்ரமய்ய பலமேததுபேதம் ஸந்நிபாத்ய ச சமூமநுயாந்தீம் ।
ஶ்வோ நிஷத்ய ஸுகமத்ர பரஶ்வோ யாம இத்யபிததே ஸசிவேந ।। 64

ஸம்வ்ருதே பயஸி ஸஹ்யஸுதாயா பித்திபிர்நவதுகூலமயீபி: ।
க்ல்ருப்தமஜ்ஜநவிதி: ஸவயோபி: ஸோபஸஜ்ய விஜஹார குமாரீ ।। 65

முக்தபல்யயநவிஶ்ரமிதாஶ்வம் ஸ்ரஸ்தபந்தஸுகிதத்விபஸங்கம் ।
ஸ்நாதபீதஸுகஸுப்தபடம் தச்சாஸநேந முமதேர்பலமாஸீத் ।। 66

ஸாபரேதுரதிருஹ்ய துரங்கம் ஸஞ்சரந்த்யவநிபாலகுமாரீ ।
த்ருப்திமாப ந கவேரஸுதாயா: காமநீயகமவேக்ஷமவேக்ஷம் ।। 67

தத்ப்ரதீரபுவி கேரதரூணாம் ஹஸ்தலப்யம் உபயுஜ்ய பலாம்ப: ।
நிர்ஜரா விதுகலாம்ருதபாகாநாபிபந்தி ஸக்ருதௌஷதரீத்யா ।। 68

தஜ்ஜலம் நிபதிதம் கசிதந்த: ஸ்தப்தமாஸ்த கில யத்ர பயோதே: ।
தத்ப்ரதேஶவிஷயஸ்தநுபாஜாம் இக்ஷுஸாரஜலாதிவ்யவஹார: ।। 69

ஸா வஹேத யதி ஸர்வபதீநா கிம் ந ஸா த்ரிபதகார்தமமுஷ்யா: ।
அர்த்தமேநமவபுத்த்ய ஜநாஸ்தாம் அர்தஜஹ்நுதநயேதி க்ருணந்தி ।। 70

தாமகஸ்த்யக்ருஹிணீம் பரிணம்ராம் தத்ர ஸிந்துவபுஷா க்ருணதீ ஸா ।
நந்வியம் பவதி நோ குருபத்நீத்யாதரம் த்ருடமதத்த ஸகீநாம் ।। 71

---

683 புராணங்களில் கருப்பஞ்சாற்றுக் கடல் பற்றி வர்ணனை உள்ளது. அதற்குக் காரணம் இதுதானோ என்னவோ! இங்கு உயரமாக வளர்ந்திருக்கும் தென்னை மரங்களிலிருந்து இளநீர் வெடித்துக் கடலில் பாய்ந்தது. கடலின் அந்தப்பகுதியில் தண்ணீர் அசைவற்று இருந்தது. அங்கு வீழ்ந்த இளநீர்தான் கருப்பஞ்சாறுபோல் இனித்தது. உடனே கரையில் வசிக்கும் மக்கள்அதைக் கருப்பஞ்சாறுக் கடல் என்று அழைக்க ஆரம்பித்தார்கள். 68

684 காவிரி நதி பலகிளைகளாகப் பிரிந்து சோழநாடெங்கும் ஓடுகிறது. 'காவிரி பாதி கங்கை' என்ற பழமொழியும் உண்டு. கங்கை வட நாட்டில் பரந்து விரிந்து ஓடுவதைப்போல, காவிரி தென்நாட்டில் பரந்து விரிந்து ஓடுகிறாள். அதனால்தான் ஜஹ்னு மஹருஷியின் ஒரு காதிலிருந்து கங்கையும், மற்றொரு காதிலிருந்து காவிரியும் வந்தாள் என்று புராண வரலாறு. ஆகவே காவிரி 'அர்த ஜாஹ்னவி' அல்லது பாதி கங்கை ஆகிறாள். 69

685 கடலுருவத்தில் வந்த காவிரியை, அகத்தியரின் பத்னியாகவே மதித்து, 'அவள் தேவியின் குரு பத்னி, அதனால் மரியாதைக்குரியவள், பூஜிக்கத்தகுந்தவள் காவேரி' என்று தன் ஸகிகளிடம் கூறினாள். 70

686 தேவி திவ்ய நதியாகிய கங்கையைக் காட்டிலும், காவிரி நதியிடம் அதிக அன்பு காட்டினாள். கங்கைக்கு மற்ற நதிகளைப்போல காவிரியும் சக்களத்தி, கடலரசனின் மனைவி என்பதனால் அல்ல: காவிரி நதி குருபத்னீ என்பதனால். 71

सा तु दिव्यसरितोऽपि विशिष्टां प्रीतिमातनुत सह्यसुतायाम्।
सा ह्यसाविव यतो न सपत्नी तेन तन्न तु गुरोर्गृहिणीति ॥ ७२

स्वर्गमाहुरवगाहफलं यं सोऽपवर्ग इति मे मतिरस्याम्।
स्वर्गताऽपि मधुरं भजतां तां स्वर्ग इत्यभिमतं किमिवान्यत् ॥ ७३

सा इयेन विशदेन चरन्ती संपरीत्य सकलं कटकं तत्।
आसदत्पटकुटीमनु सायं सैनिकैः परिमितैरनुयाता ॥ ७४

प्रस्थितां परिचरन्पथि देवीं सेवया विविधया सुमतिस्ताम्।
एक एव बहुधा परिणेमे यामिकश्च सचिवश्च भटश्च ॥ ७५

दिग्जयाय चालितामथ देवीं तां निशम्य शतशो धरणीशाः।
संप्रगृह्य विविधानुपहारानाययुः शरणमर्थयमानाः ॥ ७६

सूक्तिभिः सुमतिसंक्रमिताभिः स्वां चिरात्प्रवणतां भगवत्याम्।
ते निवेद्य दययानुगृहीताः संनिधिं समुपजग्मुरमुष्याः ॥ ७७

ये कीर्णरत्नकुसुमाञ्जलयस्ते वाहनानि च धनान्युपहृत्य।
सूचिताः सुमतिना स्वयमम्याः पादपीठनिकटे प्रणिपेतुः ॥ ७८

मा बिभीत सुखिनः प्रतियातेत्याकलय्य मृदुलां गिरमस्याः।
उत्थिता गिरमवादिषुरित्थं ते निरीक्षितपरस्परवक्त्राः ॥ ७९

मादृशेषु मलयध्वजदेवो यामधत्त करुणां करुणाब्धिः।
सा त्वया शतगुणा निहितैवं किं तु किंचिदिदमस्ति निवेद्यम् ॥ ८०

---

687 காவிரியில் நீராடினால் ஸ்வர்கம் கிடைக்கும் என்று சொல்லுகிறார்கள். அந்த ஸ்வர்கம் தான் மோக்ஷம் என்பது என் கருத்து. ஸ்வர்கத்தைக் காட்டிலும் காவிரி இனிதானது என்று நினைப்பவர்களுக்கு ஸ்வர்கத்தில் அபிமானம் ஏற்படுமா? 72

688 தேவி வெள்ளைக் குதிரையில் சவாரி செய்து கொண்டு குறிப்பிட்ட சில வீரர்களுடன் மட்டுமே அந்த முகாம் முற்றிலும் சுற்றிவிட்டு, மாலையில் தன் கூடாரத்திற்கு வந்து சேர்ந்தாள். 73

689 தேவிக்குத் தனித் துணையாக வந்த மந்திரி சுமதி, பலவிதங்களில் தேவிக்கு,அந்த அந்த பணிக்கேற்றபடி ஸேவை செய்தார். இரவில் அவளுக்கு மெய்க்காவலனாக இருந்தார். மந்திரியாகவும் இருந்தார். 74

690 திக்விஜயத்திற்காக தேவி புறப்பட்டு இருக்கிறாள் என்றறிந்த நூற்றுக்கணக்கான அரசர்கள், பலவிதமான காணிக்கைப் பொருள்களை எடுத்துக்கொண்டு அடைக்கலம் அளிக்கவேண்டும் என்கிற பிரார்த்தனையுடன் தேவியைப் பார்க்க வந்தார்கள். 75

ஸா து திவ்யஸரிதோऽபி விஶிஷ்டாம் ப்ரீதிமாதநுத ஸஹ்யஸுதாயாம் ।
ஸா ஹ்யஸாவிவ யதோ ந ஸபத்நீ தேந தந்ந து குரோர்க்ருஹிணீதி ॥ 72
ஸ்வர்கமாஹுரவகாஹ்ய பலம் யம் ஸோऽபவர்க இதி மே மதிரஸ்யாம் ।
ஸ்வர்கதோऽபி மதுராம் பஜதாம் தாம் ஸ்வர்க இத்யபிமதம் கிமிவாந்யத் ॥ 73
ஸா ஹயேந விஶதேந சரந்தீ ஸம்பரீத்ய ஸகலம் கடகம் தத் ।
ஆஸதத் படகுடீமநு ஸாயம் ஸைநிகை: பரிமிதைரநுயாதா ॥ 74
ப்ரஸ்திதாம் பரிசரன் பதி தேவீம் ஸேவயா விவிதயா ஸுமதிஸ்தாம் ।
ஏக ஏவ பஹுதா பரிணேமே யாமிகஶ்ச ஸசிவஶ்ச படஶ்ச ॥ 75
திக்ஜயாய சலிதாமத தேவீம் தாம் நிஶம்ய ஶதஶோ தரணீஶா: ।
ஸம்ப்ரக்ருஹ்ய விவிதாநுபஹாராந் ஆயயு: ஶரணமர்தயமாநா: ॥ 76
ஸூக்திபி: ஸுமதிஸங்க்ரமிதாபி: ஸ்வாம் சிராத் ப்ரவணதாம் பகவத்யாம் ।
தே நிவேத்ய தயயாநுக்ருஹீதா: ஸந்நிதிம் ஸமுபஜக்மு: அமுஷ்யா: ॥ 77
கீர்ணரத்நகுஸுமாஞ்ஜலயஸ்தே வாஹநாநி ச தநாந்யுபஹ்ருத்ய ।
ஸூசிதாஸ்ஸுமதிநா ஸ்வயமஸ்யா: பாதபீடநிகடே ப்ரணிபேது: ॥ 78
மா பிபீத ஸுகிந: ப்ரதியாதேத்யாகலய்ய ம்ருதுளாம் கிரமஸ்யா: ।
உத்திதா க்ரமவாதிஷுரித்தம் தே நிரீக்ஷிதபரஸ்பரவக்த்ரா: ॥ 79
மாத்ருஶேஷு மலயத்வஜதேவோ யாமதத்த கருணாம் கருணாப்தி: ।
ஸா த்வயா ஶதகுணா நிஹிதைவம் கிந்து கிஞ்சிதிதமஸ்தி நிவேத்யம் ॥ 80

---

691 அரசர்கள் மஹாமந்திரி சுமதியின் மூலம் தாங்கள் வெகுநாட்களகவே
தேவியிடம் பக்தியுடனும், மரியாதையுடனும் இருக்கிறோம் என்ற
செய்தியைத் தெரிவித்தார்கள். தேவி கிருபை கூர்ந்து அவர்களை வரவேற்றாள்; 76
அவர்களும் அவள் அருகில் வந்தார்கள்.

692 ஸுமதி ஸமிஜ்ஞை காட்டினார். அவர்கள் கைநிறைய ரத்தினங்களை
அர்ப்பணம் செய்தார்கள். மேலும் வாஹனங்கள்,செல்வங்களென வரிசையாக 77
தேவியின் பாதபீடத்தில் ஸமர்ப்பித்து வணங்கினார்கள்.

693 தேவி அவர்களிடம் - 'அபயம் அளித்தோம். நிம்மதியாகப்
போய்வாருங்கள்' என்று கூறி கை அசைத்தாள். அதைக்கேட்டு அவர்கள் எழுந்து
ஒருவருக்கொருவர் முகத்தைப் பார்த்துக்கொண்டு விண்ணப்பித்தார்கள், 78
694 கருணைக்கடலான பிரபு மலயத்வஜ மஹாராஜன்அரசன் எவ்விதம்
எங்களிடம் கருணைக்காட்டினாரோ, அதற்கு நூறு மடங்கு அதிகமாகவே கருணை
காட்டி விட்டீர்கள் ஆயினும் தெரிவிக்க வேண்டியது ஒன்றுண்டு. 79
695 தேவி! தலைமுறை தலைமுறையாக எங்கள் ஆத்மாவையே தங்கள்
ஆட்சிக்கு அர்ப்பணித்து விட்டோம். படைவீரர்களுடன் யஜமானியான

अर्पितात्मसु सदा कुलदासेष्वस्मदादिषु च सत्सु भटेषु ।
स्वामिनी यदि विधित्सति यात्रां का यशःक्षतिरितोऽपि कुले नः ॥ ८१

तत्प्रयातु भवती पुनरम्बाम् अस्तु चैष सुमतिः स्थपतिर्नः ।
त्वत्प्रसादकणिकामवलम्ब्य द्योचरानपि समानमयामः ॥ ८२

ईदृशा भवथ यूयमिमं क्ष्मां द्रष्टुमेव तु वयं चलिताः स्मः ।
कौतुकं तु यदि वः सह यातेत्यन्वशात्सदसि सा नरपालान् ॥ ८३

भषणैः सुमतिहस्तवितीर्णैः वाहनैर्बहुविधैश्च नृपालान् ।
सा यथाक्रममिमान् बहुमत्य व्यादिदेश कटकावतराय ॥ ८४

तां वाक्येषु गभीरतामथ च तां कालोचितार्थज्ञतां ।
तां नम्रेषु कृपालुतामपि च तां कीर्तौ परं लुब्धताम् ।
संपश्यन् प्रमदाद्भुतव्यतिकर स्तब्धस्त्वमात्योऽसकृत् ।
पादेऽस्याः प्रणनाम वत्सलतया प्रायुङ्क्त चाप्याशिषः ॥ ८५

त्वत्साचिव्यबलानतान् क्षितिभुजस्त्वच्छिक्षितैरक्षरैः
त्वत्सांनिध्यबलात्किलेदमवदं किंचिद्यथोपस्थितम् ।
कर्तव्यं यदितोऽपि तत्र सुमते कामं प्रमाणं भवान्
इत्युक्त्येयम् अपाचकार निखिलं सेवाश्रमं मन्त्रिणः ॥ ८६

इति अष्टमः सर्गः

தாங்கள் விஜய யாத்திரை வேறு செய்யவேண்டுமோ? தங்களுடைய குலதாஸர்களாகிய எங்களுக்கு இழுக்கல்லவா? எங்களுக்கு இதுவும் வேண்டுமா? 80

696 ஆகவே தாங்கள் தலைநகரம் திரும்பிவிடலாம். தங்கள் மந்திரி சுமதி எங்களுக்கெல்லாம் தலைமை ஏற்று முன்னே செல்லட்டும். பூமி என்ன? தேவர்களையே உங்கள் திருவடியில் கொண்டு சேர்கிறோம். 81

697 ‘‘அரசர்களே! நீங்கள் இவ்வாறே வருங்காலத்திலும் இருக்கலாம். கவலை வேண்டாம். இந்த புண்ணிய பூமியை சுற்றி வரலாமே என்று நமக்கு ஒரு ஆசை. அதற்காகத்தான் கிளம்பினோம். உங்களுக்கு ஆவல் இருப்பின் நீங்களும் யாத்திரையில் எங்களுடன் சேர்ந்து கொள்ளலாம்.’’ என்று தேவி அவர்களிடம் கூறினாள். 82

698 சுமதியின் கையினால் அவர்களுக்கெல்லாம் ஆபரணங்களையும், வாஹனங்களையும், தகுதிக்குத் தகுந்தபடி வழங்கிவிட்டு, தேவி அவர்களையும் முகாமில் சேர்ந்து கொள்ள அனுமதித்தாள். 83

அர்பிதாத்மஸு ஸதா குலதாஸேஷ்வஸ்மதாதிஷு ச ஸத்ஸு படேஷு ।
ஸ்வாமிநீ யதி விதித்ஸதி யாத்ராம் கா யஶ:க்ஷதிரிதோऽபி குலே ந: ।। 81

தத் ப்ரயாது பவதீ புநரம்பாம் அஸ்து சைஷ ஸுமதி: ஸ்தபதிர்ந: ।
த்வத்ப்ரஸாதகணிகாம் அவலம்ப்ய த்யோசராநபி ஸமாநமயாம: ।। 82

ஈத்ருஶா பவத யூயமிமாம் மாம் த்ரஷ்டுமேவ து வயம் சலிதா: ஸ்ம: ।
கௌதுகம் து யதி வ: ஸஹ யாதேத்யந்வஶாத் ஸதஸி ஸா நரபாலான் ।। 83

பூஷணை: ஸுமதிஹஸ்தவிதீர்ணைர்வாஹநைர்பஹுவிதைஶ்ச ந்ருபாலான் ।
ஸா யதாக்ரமமிமான் பஹுமத்ய வ்யாதிதேஶ கடகாவதராய ।। 84

தாம் வாக்யேஷு கபீரதாமத ச தாம் காலோசிதார்த்தஜ்ஞதாம்
தாம் நம்ரேஷு க்ருபாலுதாமபி ச தாம் கீர்த்தௌ பரம் லுப்ததாம் ।
ஸம்பஶ்யன் ப்ரமதாத்புதவ்யதிகர ஸ்தப்தஸ்த்வமாத்யோऽஸக்ருத்
பாதேऽஸ்யா: ப்ரணநாம வத்ஸலதயா ப்ராயுங்க்த சாப்யாஶிஷ: ।। 85

த்வத்ஸாசிவ்யபலாநதான் க்ஷிதிபுஜஸ்த்வச்சிக்ஷிதைரக்ஷரை:
த்வத்ஸாந்நித்யபலாத் கிலேதமவதம் கிஞ்சித்யதோபஸ்திதம் ।
கர்த்தவ்யம் யதிதோऽபி தத்ர ஸுமதே! காமம் ப்ரமாணம் பவான்
இத்யுக்த்யேயம் அபாசகார நிகிலம் ஸேவாஶ்ரமம் மந்த்ரிண: ।। 86

இதி மஹாகவிஶ்ரீநீலகண்டதீக்ஷிதப்ரணீதே ஶிவலீலார்ணவே அஷ்டம: ஸர்க: ।

---

699 தேவியின் பேச்சிலுள்ள கம்பீரத்தையும், ஸமயோசிதபுத்தியையும்,
தன்னை வணங்குபவர்களிடத்தில் அவள் காட்டும் கருணையையும், புகழ்
சேர்ப்பதில் அவளுடைய பேரார்வத்தையும் பார்த்த மந்திரி சுமதி மகிழ்ச்சியும்
வியப்பும் அடைந்தார். தேவியின் கால்களில் அடிக்கடி விழுந்தார் அன்பினால்
84
ஆசிமொழிகளையும் வழங்கினார்.

700 'மந்திரியாரே! நீங்கள் மந்திரியாக இருந்து ஆலோசனை கூறி அரசர்களை
என் முன் பணியவைத்தீர்கள். நீங்கள் சொல்லிக் கொடுத்த சொற்களை அப்படியே
ஒப்புவித்து சபையில் பாராட்டுக்களைப் பெற்றோம். நீங்கள் உடன் இருக்கும்
தைரியத்தினால் நினைவுக்கு வந்ததைப் பேசுகிறோம். மேலும்
நடக்கவேண்டியவைகளுக்கு நீங்கள்தான் வழிகாட்டி' என்று கூறினாள். அதைக்
கேட்டு மந்திரிக்கு ஸேவையினால் ஏற்பட்ட களைப்பும், சிரமமும் தீர்ந்தது. 85

**எட்டாவது ஸர்கம் முடிவடைந்தது**

## नवमः सर्गः

तां गीतसंवलितमर्दलवेणुवीणानादामृताधिगमितस्वपनां सखीभिः ।
वेतालिका इव सुशिक्षिततारवाचः प्राबोधयन् मृगदृशः कतिचित्प्रभाते ॥ १

अम्ब! त्वदभ्युदयतो निहतं पुरैव हन्तुं तमः पुनरसावरुणः समुद्यन्
सुप्रातमावहति देवि रथाङ्गनाम्नां साजात्यरक्तचरणायुधबोधितानाम् ॥ २

आयास्यतो दिनमणेरभिकस्य वार्तां प्राभातिकानिलमुखात् अवधारयन्ती ।
उद्दण्डपङ्कजतया किल पद्मिनीयम् उद्ग्रीविकां वहति वासकसज्जिकेव ॥ ३

पत्युस्त्विषां प्रथमनिर्गलितैर्मयूखैर्ध्वान्तेर्ष्यया मलिनदर्शमनुद्रवद्भिः ।
उच्चाटिता मधुकृतोऽपि किमुत्पलेभ्यः पर्याकुलास्तत इतोऽपि परिभ्रमन्ति ॥ ४

हंसेषु कञ्चुकिषु षड्चरणेषु कुब्जेषु आदेशहारिषु मरुत्सु च संगतेषु ।
उद्घाटयन्त्यधिकृता इव शार्ङ्गपाणेः अन्तःपुरं घटितमंशुमतो मयूखाः ॥ ५

उन्मुद्रिते सति मनागरविन्दकोशे भृङ्गैरहंप्रथमिकाकलितप्रवेशैः ।
आस्कन्द्यमानमपि सौरभमेकतस्तत् आदाय यान्त्यपरतो मरुतो यथेच्छम् ॥ ६

---

## ஒன்பதாவது ஸர்கம்

701 தேவி வெகுநேரம் சயனகிருஹத்தில் ஸகிகளுடன் பேசிக்கொண்டிருந்தாள். பிறகு ஸகிகள் குழல், வீணை, மிருதங்கம் முதலிய பக்கவாத்தியங்களுடன், இனிய நாதாமிருதமாக தேவிக்கு சயன டோலோத்ஸவம் பாடினார்கள். தேவியும் தூங்கினாள். விடியற்காலையில், அரண்மனை ஸ்துதிபாடகர்கள் போல, நாரிமணிகளே உச்சஸ்த்தாயியிலும் கூட இனிமையாக ஸுப்ரபாதம் பாடி எழுப்பினார்கள். 1

702 அம்மா! நீங்கள் எழுந்திருந்தவுடனேயே இருள் ஓடிவிட்டது. அதை மேலும் விரட்டுவதற்காக தங்கள் முன் அருணன் உதித்தான் அவன் சேவல்களின் கூவதல்களுடன் சக்ரவாக பறவைகளுக்கும் நல்ல பொழுது விடிந்ததை உணர்த்துகிறான்.

சக்ரவாகப் பறவைகளுக்கும் சேவல்களுக்கும் பாதங்கள் சிவப்பாக இருக்கும். ஆகவே, அவை இரண்டும் ஒரு இனம். சேவல்கள் அருணனுடன் சேர்ந்து நல்ல பகல் பொழுதை உணர்த்துவதின் மூலம், தன் இனத்தைச்சேர்ந்த சக்ரவாக பறவைகளுக்கு மகிழ்ச்சியை உண்டுபண்ணுகிறது. 2

703 ஸமஸ்கிருத இலக்கியங்களில் ச்ருங்கார நாயகிகளை பல விதமாகக் கூறுகிறார்கள். அவர்களுள் வாஸகஸஜ்ஜிகா என்பவள் காதலன் வருகிறான் என்று தெரிந்து கொண்டு, தன்னை அலங்கரித்துக் கொண்டு, காதலன் வருவதை தான் இருக்கும் இடத்திலிருந்தே தலையை நீட்டிப் பார்க்கிறாள்

## அத நவம: ஸர்க: ।

தாம் கீதஸம்வலிதமர்தலவேணுவீணாநாதாம்ருதாதிகமிதஸ்வபநாம் ஸகீபி: ।
வைதாலிகா இவ ஸுஶிக்ஷிததாரவாச: ப்ராபோதயன் ம்ருகத்ருஶ: கதிசித் ப்ரபாதே।। 1

அம்ப! த்வதப்யுதயதோ நிஹதம் புரைவ ஹந்தும் தம: புநரஸாவருண: ஸமுத்யன் ।
ஸுப்ராதமாவஹதி தேவி! ரதாங்கநாம்நாம் ஸாஜாத்யரக்தசரணாயுதபோதிதாநாம்।। 2

ஆயாஸ்யதோ திநமணேரபிகஸ்ய வார்த்தாம் ப்ராபாதிகாநிலமுகாத் அவதாரயந்தீ ।
உத்தண்டபங்கஜதயா கில பத்மிநீயம் உத்க்ரீவிகாம் வஹதி வாஸகஸஜ்ஜிகேவ ।। 3

பத்யுஸ்த்விஷாம் ப்ரதமநிர்கலிதைர்மயூகைர் த்வாந்தேர்ஷ்யயா மலிநதர்ஶமநுத்ரவத்பி:।
உச்சாடிதா மதுக்ருதோऽபி கிமுத்பலேப்ய: பர்யாகுலாஸ்தத இதோऽபி பரிப்ரமந்தி।।4

ஹம்ஸேஷு கஞ்சுகிஷு ஷட்சரணேஷு குப்ஜேஷு ஆதேஶஹாரிபு மருத்ஸு ச ஸங்கதேஷு।
உத்காடயந்த்யதிக்ருதா இவ ஶார்ங்கபாணேரந்த:புரம் கடிதமம்ஶுமதோ மயூகா:।। 5

உந்முத்ரிதே ஸதி மநாக் அரவிந்தகோஶே ப்ருங்கைரஹம்ப்ரதமிகாகலிதப்ரவேஶை:।
ஆஸ்கந்தமாநமபி ஸௌரபமேகதஸ்தத் ஆதாய யாந்த்யபரதோ மருதோ யதேச்சம்।।6

---

அவளைப் போன்று தாமரைத் தடாகம் என்ற நாயகி தன் காதலன் சூரியன் வருகிறான் என்பதை காலை இளங்காற்றின் மூலம் தெரிந்து கொண்டு தனதுள்ளே முளைத்த தாமரைத் தண்டை நீர்மட்டத்திற்குமேல் நீட்டி,அதன் முனையில் உள்ள தாமரைமலரால் தலையால் எட்டிப்பார்க்கிறாள் போலும், தாமரைத் தடாகம் என்கிற வாஸகஸஜ்ஜிகை!. 3

704 சூரியனுடைய முதல் கிரணங்கள் இதோ வரப்போகின்றன. இருட்டு மறையத்தான் போகிறது என்று தெரிந்தும்கூட தேனீக்கள், கண்களுக்குப் புலப்படாத நிலையில் இதழ்களை மூடிக்கொள்ளப் போகின்ற ஆம்பல் மலர்களிருந்து வெளிவர முடியாமல் மலர்களுக்குள்ளேயே இங்கும் அங்கும் அலைகின்றன. 4

705 சாரங்கபாணியான நாராயணனின் அந்தப்புரம் தாமரை மலர், அங்குதானே லக்ஷ்மி வீற்றிருக்கிறாள். நாராயணன் அந்தப்புரம் வருகிறான். அந்தப்புர அந்தரங்க பணிப்பெண்களான ஹம்ஸங்களாகிய கஞ்சுகிகளும், வண்டுகளான குப்ஜர்களும், இளம் காலை காற்றாகிய செய்தி சேகரிப்பவனும் (ஆதேசஹரி) மலருக்கு வெளியே ஒன்று சேர்ந்தவுடன் சூரியகிரணங்கள் தாமரை மலர்களை, (சார்ங்க பாணியின் அந்தப்புரத்தை அதிகாரிகள் திறப்பது போல)மலரச்செய்கின்றன. 5

706 தாமரைக்குளத்தில் தாமரைமலர்கள் மெதுவாக மூடியிருந்த இதழ்களைப் பிரிக்கின்றன. அதற்குள் வண்டுகள் நான் முந்தி நீ முந்தி என்று இதழ்களை இடித்துக் கொண்டும், போட்டி போட்டுக் கொண்டும், ஒன்றை ஒன்று இடித்துக் கொண்டும், விரியாத மொக்குகளில் தாமரையின் மலர்களில் புகுகின்றன. ஒரு புறம்

भूदेवमन्त्रितविमुक्तजलाञ्जलिभ्यो निर्गत्य दैत्यहननाय समन्ततोऽपि ।
आसीदतामिव रविं महसा पवीनां पौरन्दरी हरिदियं परिपिञ्जरासीत् ॥ ७
अम्भोनिधेस्तपनवाजिभिरुज्जिहानैः आधूतकन्धरसटैरसकृद्विकीर्णा ।
सामुद्रविद्रुमलताशकलावलीयं प्राचीमुखे विजयते न तु सान्ध्यरागः ॥ ८
निर्जित्य विश्वमखिलं मकरध्वजेन निर्गच्छता शिबिरसीमनि दीपितस्य ।
मन्यामहे हुतभुजः प्रथमप्रकाशो मारुत्वते जयति संप्रति दिग्विभागे ॥ ९
जैत्रप्रयाणसमयं त्वयि वक्तुकामः प्रायः प्रबोधसमयं प्रतिपाल्य भानुः ।
उन्मज्ज्य सागरजलात् उदयाद्रिशृङ्गे लीनः कच्चिन्न किल दर्शयतेऽधुनापि ॥ १०
आमोदते बत कियत् कमलाकरोऽयमस्मिन्नपि प्रविकसत्यरविन्दकोशे ।
उन्मुद्रय त्वमधुना नयनारतरिन्दम् आमोदताम् अखिलमम्ब जगत्त्वयेदम् ॥ ११
सुप्रातमस्तु मलयध्वजकन्यकायाः सुप्रातमस्तु मधुरापुरवल्लभायाः ।
सुप्रातमस्तु विधुवंशपताकिकायाः सुप्रातमस्तु हरितां जगतां त्रयाणाम् ॥ १२
इत्युक्तिभिर्मृगदृशां प्रतिबोधिता सा निर्वर्त्य नैत्यिकविधिं नृपतेः कुमारी ।
सज्जीकृतं सुमतिना सकलं बलं तत् प्रस्थाप्य पार्थिवकुलानुगता प्रतस्थे ॥ १३

---

நறுமணம் அடங்கிக் கிடந்தாலும் மறுபுறம் நறுமணத்தை எப்படியோ அபஹரித்துக் கொண்டு காற்றுகள் இஷ்டப்படி வீசின. 6

707 காவேரி நதியில் ஸ்நானம் செய்துவிட்டு, பிராமணர்கள் சூரியோதயத்தை எதிர்பார்த்து, அஞ்ஜீ நிறைய (இரு கைநிறைய) ஜலத்தை எடுத்துக் கொண்டு காயத்ரியை ஜபித்து, சூரியனை நோக்கி வாரி இறைக்கும் ஜலம் இந்திரனுடைய வஜ்ராயுதமாக மாரி,சூரியோதயத்தை தடுக்கும் மந்தேஹாருணர்கள் என்ற அஸுரர்களை விரட்டுவதனால்தான் கிழக்கு திசை பழுப்பு மஞ்சள் நிறமாக காணப்படுகிறதோ!. 7

708சூரியோதயத்தில் சிவப்பு நிறம் (காலை அந்திப்பொழுது) கீழ்திசையில் வெளிப்படுகிறது. கீழ்கடலிலிருந்து சூரியன் ஏழு குதிரைகள் பூட்டிய ரதத்திலேறி வானத்தில் கிளம்புகிறான். கடலிலிருந்து மேல் கிளம்பிய குதிரைகளின் தலை நெற்றி பிடரி மயிர்களில் சிக்கியுள்ள கடலின் வளர்கின்ற பவழக்கொடிகளின் பவழங்கள், குதிரைகள் அடிக்கடி தங்கள் பிடரி மயிர்களை உதறும் பொழுது ஆகாசத்தில் உதிர்ந்ததினால் கீழ்திசை சிவப்பாகக் காணப்படுகிறதே தவிர காலை ஸந்தியா சிவப்பு அல்ல. 8

709 இரவு முழுவதும் மன்மதனுடைய லீலைகள் நிகழ்ந்தன. எங்கும் அவனுக்கு வெற்றிதான்! உலகம் முழுவதும் ஜயித்துவிட்டு மன்மதன் (கிழக்கு திசையில் உள்ள) தன் கூடாரம் திரும்புகிறான். அங்கே இருந்த விளக்கின்

**பூதேவமந்த்ரிதவிமுக்தஜலாஞ்ஜலிப்யோ நிர்கத்ய தைத்யஹநநாய ஸமந்ததோऽபி।**
**ஆஸீததாமிவ ரவிம் மஹஸா பவீநாம் பௌரந்தரீ ஹரிதியம் பரிபிஞ்ஜராஸீத் ।। 7**

**அம்போநிதேஸ்தபநவாஜிபிருஜ்ஜிஹாநை: ஆதூதகந்தரஸடைரஸக்ருத்விகீர்ணா ।**
**ஸாமுத்ரவித்ருமலதாஶகலாவலீயம் ப்ராசீமுகே விஜயதே நது ஸாந்த்யராக: ।। 8**

**நிர்ஜித்ய விஶ்வமகிலம் மகரத்வஜேந நிர்கச்சதா ஶிபிரஸீமநி தீபிதஸ்ய ।**
**மந்யாமஹே ஹுதபுஜ: ப்ரதமப்ரகாஶோ மாருத்வதே ஜயதி ஸம்ப்ரதி திக்விபாகே।।9**

**ஜைத்ரப்ரயாணஸமயம் த்வயி வக்துகாம: ப்ராய: ப்ரபோதஸமயம் ப்ரதிபால்ய பாநு:।**
**உந்மஜ்ஜ்ய ஸாகரஜலாத் உதயாத்ரிஶ்ருங்கே லீந: க்வசிந்ந கில தர்ஶயதேऽதுநாபி।। 10**

**ஆமோததே பத கியத் கமலாகரோऽயமஸ்மின்னபி ப்ரவிகஸத்யரவிந்தகோஶே ।**
**உந்முத்ரய த்வமதுநா நயநாரதவிந்தம் ஆமோததாம் அகிவிலமம்ப! ஜகத் த்வயேதம் ।। 11**

**ஸுப்ராதமஸ்து மலயத்வஜகந்யகாயா: ஸுப்ராதமஸ்து மதுராபுரவல்லபாயா: ।**
**ஸுப்ராதமஸ்து விதுவம்ஶபதாகிகாயா: ஸுப்ராதமஸ்து ஹரிதாம் ஜகதாம் த்ரயாணாம் ।। 12**

**இத்யுக்திபிர்முகத்ருஶாம் ப்ரதிபோதிதா ஸா நிர்வர்த்ய நைத்யிகவிதிம் ந்ருபதே: குமாரீ ।**
**ஸஜ்ஜீக்ருதம் ஸுமதிநா ஸகலம் பலம் தத் ப்ரஸ்தாப்ய பார்த்திவகுலாநுகதா ப்ரதஸ்தே ।13**

---

ஒளி மங்கிக்கொண்டிருந்தது. அதுதான் இந்திரனுடைய திசையில் காலை ஸந்தியாவாக காட்சி அளிக்கின்றது என்று நினைக்கின்றோம். 9

710 தேவி விஜய யாத்திரை கிளம்பவேண்டிய நேரம் வந்துவிட்டது என்று சொல்ல விரும்பிகின்றான் சூரியன்.பள்ளி எழுச்சி பாடவேண்டிய தருணம் வரட்டுமென்று காத்திருக்கிறான். உதயகிரி சிகரத்திலிருந்து தலை நீட்டுகிறான். ‘தேவி இன்னும் தூங்குகின்றாளோ, எழுப்பக்கூடாதோ’ என்று பயந்து தூக்கிய தலையை மலைசிகரத்தில் மறைக்கின்றான். 10

711 இந்த தாமரைப்பொய்கையில் தாமரைகள் நிறைந்திருக்கின்றன. அத்துனையும் மலர்ந்து நறுமணத்தை வெளியிடுகின்றது! அதுபோல அம்மா! உன்னுடைய கண்களாகிய தாமரைகளை விரியுங்கள் அதன் மூலம் உலகம் முழுவதும் மணக்கட்டுமே! 11

712 மலயத்வஜன் அருமை புதல்விக்கு நல்விடிவு கூறுவோம். மதுரை ராஜ்யத்தின் அரசிக்கு நல்விடிவு கூறுவோம். சந்திரவம்சத்து வெற்றிக்கொடிக்கு நல்விடிவு கூறுவோம். மூன்று உலகத்து பெண் சிங்கத்திற்கு நல்விடிவு கூறுவோம். ( ஹரிதா பெண் சிங்கம் ) 12

713 இவ்வாறு அழகிய பெண்கள் இனிய பாடல்களைப் பாட விழித்து எழுந்த அரசகுமாரி தினக்கடன்களை விரைவில் முடித்துக் கொண்டாள். அதற்குள் மந்திரி சுமதி படைகளை யாத்திரைக்குத் தயார் செய்து விட்டாள். படைகள் அனைத்தும் முன்னே கிளப்பிவிட்டு அரசர்கள் புடைசூழ தேவியும் புறப்பட்டாள். 13

अत्यद्भुतो विजयदुन्दुभिनादमन्त्रस्तस्या नृपालकुलकर्णपथावतीर्णः ।
अस्तम्भयद्व्यधमदाचकृषे जघान निन्ये वशं व्यघटयच्च यथायथं तान् ॥ १४

भेरीरवश्चलति योजनमेव यावत्तावत्ततो दशगुणं चलितः प्रतापः ।
कीर्तिस्ततो दशगुणं व्यचलत्ततोऽपि चेलुस्ततो दशगुणं विमता विदूरे ॥ १५

वार्ताहरा दिशि दिशि प्रहिता हि यावत् आगत्य मन्त्रिणि न तं तमुदन्तमाहुः ।
तावत्त एव धरणीपतयः सदाराः सोपायनाः शरणमीयुरिमां सबालाः ॥ १६

आगच्छतां प्रणमतां वदतां प्रियोक्तीः अग्रे निधाय विविधानुपहारभेदान् ।
राज्ञामनुग्रहकृते सुमहान्विलमबो मार्गेऽभवत्प्रतिपदं मधुरेश्वरायाः ॥ १७

राज्यं प्रशासति पुरा मलयध्वजे ये भूमीभुजः कतिपयेऽपरराधुरज्ञाः ।
तानप्यनन्यशरणान् ससुतान् सदारान् सा चक्षुषानुजगृहे शरणं प्रपन्नान् ॥ १८

सा तत्र तत्र शरणागतराजलोकविश्राणितानि मणिहेमविभूषणानि ।
मातुः समक्षमखिलानि उपहारयन्ती कीर्तिं परां वितरति स्म दिशां मुखेषु ॥ १९

दुर्गाटवीनगरराष्ट्रपदानि तैस्तैः त्यक्तानि युद्धनिहतैश्च पलायितैश्च ।
भृत्येषु सा कुलपरम्परयाऽऽगतेषु न्यासीचकार सचिवानुमतेषु राज्ञी ॥ २०

---

714 விஜய துந்துபியின் முழக்கம் எதிரி அரசர்களை ஸ்தம்பிக்கவைத்தது. அவர்கள் காதுகளில் அம்முழக்கம் விழுந்ததும் அவர்கள் கதிகலங்கினார்கள். அந்த ஒலி எதிரி அரசர்களைக் குலைத்து ஒன்று சேரவிடாமல் அடக்கியது. தன்வசம் கட்டுப்பட வைத்தது. 14

715 அந்த பேரிகையின் ஓசை ஒரு யோஜனை தூரம் பரவுவதற்குள், தேவியின் ப்ரதாபம் அதைக்காட்டிலும் பத்து மடங்கு பரவியது. அவளுடைய கீர்த்தியோ அவள் ப்ரதாபத்தைக் காட்டிலும் பத்து மடங்கு பரவியது, அதைக்காட்டிலும் பத்து மடங்கு தூரம் எதிரிகள் ஓடிவிட்டனர். 15

716 தேவியின் விஜய யாத்திரை ஸம்பந்தமான செய்தி எல்லா திசையிலுள்ள அரசர்களுக்கும் அனுப்பப்பட்டது. செய்தியாளர்கள் அந்த அந்த நாட்டு அரசர்களைப் பற்றிய செய்திகளை சேகரித்து மந்திரி சுமதியிடம் கூறுவதற்கு முன்பே அந்த அந்த அரசர்கள்,அபரிமிதமான காணிக்கைகளை எடுத்துக்கொண்டு, மனைவி குழந்தைகளுடன் வந்து தேவியை சரணம் அடைந்தனர். 16

717 வழிமுழுவதும் அரசர்கள் வருகிறார்கள் வணங்குகிறார்கள். வாழ்த்துரை வழங்குகிறார்கள். அரசிக்கு முன்னே விதவிதமான வெகுமதிப்பொருள்களை சமர்ப்பிக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் நல்வாழ்த்துக்கள் கூறி அவர்களை திரும்ப அனுப்புவதில் தாமதம் ஆகிக்கொண்டே இருந்தது. (இங்கு

அத்யத்புதோ விஜயதுந்துபிநாதமந்த்ரஸ்தஸ்யா ந்ருபாலகுலகர்ணபதாவதீர் ।
அஸ்தம்பயத்வ்யதமதாசக்ருஷே ஜகாந நிந்யே வஶம் வ்யகடயச்ச யதாயதம் தா
பேரீரவஶ்சலதி யோஜநமேவ யாவத் தாவத் ததோ தஶகுணம் சலித: ப்ரதாப:
கீர்த்திஸ்ததோ தஶகுணம் வ்யசலத் ததோऽபி சேலுஸ்ததோ தஶகுணம் விமதா விதூரே ॥
வார்த்தாஹரா திஶி திஶி ப்ரஹிதா ஹி யாவதாகத்ய மந்த்ரிணி ந தம் தமுதந்தமாஹு: ।
தாவத் த ஏவ தரணீபதய: ஸதாரா: ஸோபாயநா: ஶரணமீயுரிமாம் ஸபாலா: ॥ 16
ஆகச்சதாம் ப்ரணமதாம் வததாம் ப்ரியோக்தீரக்ரே நிதாய விவிதாநுபஹாரபேதான்।
ராஜ்ஞாமநுக்ரஹக்ருதே ஸுமஹான் விலம்போ மாऽபவத்ப்ரதிபதம் மதுரேஶ்வராயா: ॥ 17
ராஜ்யம் ப்ரஶாஸதி புரா மலயத்வஜே யே பூமீபுஜ: கதிபயேऽபராதுரஜ்ஞா:
தாநப்யநந்யஶரணான் ஸமுதான் ஸதாரான் ஸா சக்ஷுஷாநுஜக்ருஹே ஶரணம் ப்ரபந்நான் ॥ 18
ஸா தத்ர தத்ர ஶரணாகதராஜலோகவிஶ்ராணிதாநி மணிஹேமவிபூஷணாநி ।
மாது: ஸமக்ஷமகிலாந்யுபஹாரயந்தீ கீர்த்திம் பராம் விதரதி ஸ்ம திஶாம் முகேஷு ॥ 19
துர்காடவீநகரராஷ்ட்ரபதாநி தைஸ்தைஸ்த்யக்தாநி யுத்தநிஹதைஶ்ச பலாயிதைஶ்ச ।
ப்ருத்யேஷு ஸா குலபரம்பரயாகதேஷு ந்யாஸீசகார ஸசிவாநுமதேஷு ராஜ்ஞீ ॥ 20

---

மதுரேஸ்வர்யா: - மதுரை அரசியினுடைய, என்பதற்கு பதிலாக மதுரே
ஸ்வராயா: என்ற ப்ரயோகம் விருத்தத்தை அனுசரித்து செய்யப்பட்டுள்ளது.
17

718 மலயத்வஜ அரசன் அரசாட்சியின் பொழுது சில அரசர்கள் அறியாமல்
முரண்பிடித்து கட்டுக்கடங்காமல் தவறுகளை செய்துகொண்டே இருந்தனர்.
அவர்கள் தேவியின் விஜய யாத்திரையின் பொழுது, புகலிடம் வேறு
இல்லாமல், மனைவி குழந்தைகளுடன் வந்து தேவியை சரணமடைந்தனர்.
அவர்களையும் தேவி தன்னுடைய கருணைததும்பும் கடாக்ஷங்களினால் 18
ஏற்றுக்கொண்டாள்.

719 ஆங்காங்கே சரணமடைந்த அரசர்கள், ரத்தினம் இழைத்த தங்க
ஆபரணங்களைக் காணிக்கையாக மைர்ப்பித்தார்கள். அவை அனைத்தையும்,
ஒவ்வொரு திசையிருந்து வந்து தன்னை சரணம் அடைந்தவர்களுக்கு, தன்
தாயின் முன்னிலையில் பரிசாக அளித்து தன் புகழை எல்லா திசைகளிலும் 19
பரவும் படி செய்தாள்.

720 சில அரசர்கள் அரசியுடன் போர்புரிய வந்தார்கள். அவர்களில் சிலர்
போரில் மாண்டனர். சிலர் பயந்து ஓடிவிட்டனர். அவர்களுடைய
கோட்டைகள், காடுகள், நகரங்கள், அரண்மனைகள்
முதலியவற்றையெல்லாம், நம்பிக்கைக்குரிய அந்தந்த குலபரம்பரையில் வந்த 20
ஊழியர்கள் என்று மந்திரியின் கணிப்பை ஏற்று ஒப்படைத்தாள்.

नासीरसीमपरिवर्तिभिरेव योधैर्विद्रावितान् विनिहतानपि वा गृहीतान् ।
सा शृण्वती नरपतीनपि नात्यहृश्यत् संग्रामदर्शनकुतूहलिनी कुमारी ॥ २१
त्यक्तान्भयात्प्रचलितैः पितृभिः स्वभेरीभाङ्कारनिर्लुठितगर्भपरिच्युतांश्च ।
सा दर्शितान् पथि शनैरवलोकयन्ती स्वे स्वे पदे नृपशिशून् पुनरभ्यषिञ्चत् ॥ २२
राज्यश्रियं प्रणिपतत्सु नरेश्वरेषु रत्नानि हेमनिवहानापि भूसुरेषु ।
कीर्तिं प्रतापमपपि सा हरितां मुखेषु राजाधिराजतनया विकिरन्त्ययासीत् ॥ २३
संभ्रान्तनिष्पतिततत्तदरातिराजशुद्धान्तचौबतजनैः पतिपुत्रभिक्षाम् ।
सा भिक्षितानुजंगृहे करुणातरङ्गसंपातशीतलसमुल्लसितैरपाङ्गैः ॥ २४
पाषण्डसागरनिमज्ज्दनादिसूक्ति निस्तारणाय धृतमानुषविग्रहायाः ।
मीनो महान्विरुरुचे विजयध्वजेऽस्या नासीरसीमनि नरेन्द्रकुमारिकायाः ॥ २५
बाहुप्रतापविजिताभिररातिराजराज्येन्दिराभिरिव राजसुता सखीभिः ।
पर्यावृता पितृपितामहपालितोर्वी सीमापरिष्करणमाप तुषारशैलम् ॥ २६

721 மஹாராணி போரை குதூகலத்துடன் வரவேற்பவள்தான். ஆனாலும், தன்னை எதிர்த்து கலகம் புரிந்த அரசர்களின் படைவீரர்கள், போர்முனையில் தன் படைவீரர்களால் விரட்டப்பட்டதையும், சிலர் வதைக்கப்பட்டதையும். மேலும் சில வீரர்கள் சிறைபிடிக்கப்பட்டதையும் கேட்ட ராணி, ஸந்தோஷமடையாமல் அவர்களிடம் அனுதாபத்துடன் இருந்தாள். 21

722 ராணியின் பேரிகையின் முழக்கத்தைக் கேட்டு பயந்து சில அரசர்கள் பிழைத்தால் போதும் என்று தந்தை, குழந்தைகளை விட்டுவிட்டு ஓடினார்கள். பயந்த சில தாய்மார்களின் கர்பத்திலிருந்து குழந்தைகள் கீழே விழுந்தன. இந்த காட்சிகளை வழியில் கண்டு தேவி மனம் உருகிவிட்டாள். அந்த அந்த குழந்தைகளை, அந்த அந்த நாட்டிற்கு அரசர்களாக்கி பாதுகாப்பு அளித்தாள். 22

723 ராணியுடன் போரிடாமல் தங்களுடைய ராஜ்யத்தை ஒப்படைத்த அரசர்களுக்கு அவரவர்களுடைய ராஜ்யத்தை திரும்ப அளித்தாள். ப்ராஹ்மணர்களுக்கு ரத்தினங்களையும் தங்க நாணயங்களையும் வாரி வழங்கினாள். தன் ப்ரபாவத்தையும். புகழையும் எல்லா திசைகளிலும் பரவும்படி செய்தாள். இவ்வாறு செய்து கொண்டே ராஜாதிராஜன் மலயத்வஜனுடைய மகள் தடாதகை, தன் வெற்றி யாத்திரையைத் தொடர்ந்தாள். 23

724 தோல்வியைக் கண்ட விரோதி அரசர்கள் என்ன செய்வது என்று அறியாமல் ஒளிந்து கொண்டனர். அவர்களுடைய அந்தப்புர ராணிகள்,

நாஸீரஸீமபரிவர்திபிரேவ யோதைர்வித்ராவிதான் விநிஹதாநபி வா க்ருஹீதான் ।
ஸா ஶ்ருண்வதீ நரபதீநபி நாத்யஹ்ருஶ்யத் ஸங்க்ராமதர்ஶநகுதூஹலிநீ குமாரீ ॥ 21
த்யக்தான் பயாத் ப்ரசலிதை: பித்ருபி: ஸ்வபேரீபாங்காரநிர்லுடிதகர்பபரிச்யுதாம்ஶ்ச।
ஸா தர்ஶிதான் பதி ஶநைரவலோகயந்தீ ஸ்வே ஸ்வே பதே ந்ருபஶிஶூன் புநரப்யஷிஞ்சத் ॥ 22
ராஜ்யஶ்ரியம் ப்ரணிபதத்ஸு நரேஶ்வரேஷு ரத்நாநி ஹேமநிவஹாநபி பூஸுரேஷு ।
கீர்த்திம் ப்ரதாபமபி ஸா ஹரிதாம் முகேஷு ராஜாதிராஜதநயா விகிரந்த்யயாஸீத் ॥ 23
ஸம்ப்ராந்தநிஷ்பதிததத்ததராதிராஜஶுத்தாந்தயௌவதஜநை: பதிபுத்ரபிக்ஷாம் ।
ஸா பிக்ஷிதாநுஜக்ருஹே கருணாதரங்க ஸம்பாதஶீதலஸமுல்லஸிதைரபாங்கை: ॥ 24
பாஷண்டஸாகரநிமஜ்ஜதநாதிஸூக்திநிஸ்தாரணாய த்ருதமாநுஷவிக்ரஹாயா: ।
மீநோ மஹான் விருருசே விஜயத்வஜேऽஸ்யா நாஸீரஸீமநி நரேந்த்ரகுமாரிகாயா: ॥ 25
பாஹுப்ரதாபவிஜிதாபிரராதிராஜராஜ்யேந்திராபிரிவ ராஜஸுதா ஸகீபி: ।
பர்யாவ்ருதா பித்ருபிதாமஹபாலிதோர்வீஸீமாபரிஷ்கரணமாப துஷாரஶைலம் ॥ 26

---

தேவியிடம் சரணம் அடைந்து ‘எங்களுக்கு பதி பிக்ஷை போடுங்கள். புத்திர பிக்ஷை போடுங்கள்’ என்று கதறுவதைக் கேட்டு, கருணைக்கடலாகிய தேவி, தன் குளிர்ந்த கடைக்கண் பார்வையினால் அவர்களுக்கு ஆறுதல் கூறி அவர்கள் விரும்பியபடி அருள்பாலித்தாள். 24

725 மலயத்வஜ ராஜகுமாரியின் வெற்றி யாத்திரையில், படைகளுக்கு முன்பு காணப்பட்ட அரசாங்கக் கொடியில் மிகப்பெரிய மீன் இலச்சினை பிரகாசமாகத் தெரிந்தது. அந்த மீன் இலச்சினைக்கு ஒரு தனிப்பட்ட காரணமும் உண்டு. பகவான் நாராயணன் மீன் அவதாரம் எடுத்து, வேதங்களைச் சுருட்டிக்கொண்டு கடல் ஒளிந்து கொண்ட அரக்கர்களை வதைத்து, வேதங்களை மீட்டார். தற்காலத்தில் பாஷண்டர்கள் (வேத விரோதிகள்) கடல் போல பெருகி விட்டனர். அவர்கள் கையில் அகப்பட்டுக்கொண்டு பழம்பெரும் நூல்கள் சின்னாபின்னமாவதைத் தடுத்து அவற்றை மீட்க தேவி அவதாரம் செய்திருக்கிறாள் என்பதை உணர்த்தவே தேவியின் படைகளுக்கு முன்பு அரசாங்கக் கொடியில் அந்த பெரிய மீன் இலச்சினை உயர்த்திக் காட்டப்பட்டது போல் விளங்கியது! 25

726 தேவிக்கு அந்த அந்த நாடுகளில் விஜயம் செய்த பொழுது பல தோழிகள் சேர்ந்தார்கள். தேவியின் புஜபராக்ரமத்தினால் ஜயிக்கப்பட்ட நாடுகளின் ராஜ்யலக்ஷ்மியாகவே அவர்களை தேவி கருதினாள். அத்தோழிகளுடன் தேவி, தன்னுடைய தந்தை மற்றும் மூதாதையர்கள் பரிபாலனம் செய்த ராஜ்யத்தின் எல்லையில் ஆபரணமாக விளங்கும் ஹிமயமலையை அடைந்தாள். 26

प्रालेयशैलशिखरादवनौ निपत्य भागीरथीं कनखलं परितो वहन्तीम् ।
दृष्ट्वैव सा स्वयमभूज्जननान्तरीयसोदर्यताप्रणयाविद्रवदन्तरङ्गा ॥ २७

स्रोतांसि तानि कबलीकृतदिङ्मुखानि यादांसि तत्र च महान्ति समुल्लसन्ति ।
अप्रेक्षितश्रुत चराण्यवितर्कितानि चित्रार्पितेव चिरमैक्षत पाण्ड्यकन्या ॥ २८

प्रागेव पाण्ड्यतनयाचरणारविन्द सेवानुभावचिरनिर्हृतकलमषासु ।
सेनासु तत्र जलमात्र कृतोपयोगा ह्रीणेव सा सरिदवापदवाङ्मुखत्वम् ॥ २९

आलक्ष्य ताम् अमरसिन्धुम् अपारपूरां स्रोतोदशां स्वयमपि प्रतिपद्य सद्यः ।
अम्भोनिधिर्न्यविशतेव तटे तदीये सेनानिभेन मलयध्वजकन्यकायाः ॥ ३०

सेनां पृथक् पृथगिमां विरलं निवेश्य मायापुरीपरिसरे सुमतिः समस्ताम् ।
आसाद्य पाण्ड्यतनयामिदम् आबभाषे गङ्गातरङ्गलतिकाहृतहृक्तरङ्गाम् ॥ ३१

पश्याम्ब ! कीर्तिमिव ते भुवनं पुनानामेनां दयामिव तवास्खलितप्रवाहाम् ।
सूक्तिं तवेव च सुधामधुरां गभीरां भागीरथीं भवजटापटलात् प्रवृत्ताम् ॥ ३२

निश्रेणिकेयम् अपवर्गपदाधिरोहे नौकेयमम्ब दुरितार्णवसंप्रतारे ।
एषा सुधा भवविषज्वलनाभिषङ्गे ज्योत्स्नेयमान्तरतमोभिभवे जनानाम् ॥ ३३

---

727 ஹிமவத்பர்வதசிகரத்திலிருந்து பூமியில் இறங்கிய கங்கை நதி, கனகல் என்ற பிரதேசத்தைச் சுற்றி ஓடுகிறது. அந்த இடம்தான் தேவியின் முன் பிறவியில் தந்தையாக இருந்த தக்ஷப்ரஜாபதி வேள்வி செய்த இடம். அங்கு அவன் செய்த வேள்வியில் தான், சிவாபராதத்தினால், சிவனுடைய பத்னியும், தக்ஷனுடைய மகளுமாகிய தாக்ஷாயணி, அக்னி ப்ரவேசம் செய்து, ஸதீ ஆனாள். அந்த இடத்தை தன்னுடைய விஜய யாத்திரையின் பொழுது அடைந்ததும், தேவிக்கு முன் பிறவி நினைவுக்கு வந்து விட்டது. அப்பொழுது முன் பிறவியில் கங்கையுடன் தனக்கு இருந்த சகோதரிபாசத்தை நினைத்து தேவி மனமுருகினாள். 27

728 கங்கை நதி தன்னுடைய ப்ராவாஹத்தின் ஓசையினால் திசைகளை கபளீகரம் செய்து கொண்டும், இதற்குமுன் பார்க்காததும், கேள்விப்படாததும். மனதினால் கூட நினைத்துப் பார்க்கமுடியாததுமான மிகப் பெரிய, பலவிதமான ஜல ஜந்துக்களுடன் இருப்பதைப் பார்த்துக்கொண்டு, தேவி ஆச்சரியத்தினால், சித்திரத்தில் வரையப்பட்டவள் போல் வெகு நேரம் ஆடாமல் அசங்காமல் இருந்தாள். 28

729 தேவியின் படைவீரர்கள் அனைவரும் பாண்டிய குமாரியாகிய தேவிக்கு பணி செய்கின்றதின் மூலம் உடலிலும், உள்ளத்திலும் அப்பழுக்கற்றவர்களாக இருந்தார்கள். அவர்களுக்கு புனிதமான கங்கை நீரினால் ஒருவித

ப்ராலேயஶைலஶிகராதவநௌ நிபத்ய பாகீரதீம் கநகலம் பரிதோ வஹந்தீம் ।
த்ருஷ்டைவ ஸா ஸ்வயமபூஜ்ஜநநாந்தரீயஸோதர்யதாப்ரணயவித்ரவதந்த
ஸ்ரோதாம்ஸி தாநி கபலீக்ருததிங்முகாநி யாதாம்ஸி தத்ர ச மஹாந்தி ஸமுல்ல
அப்ரேக்ஷிதஶ்ருதசராண்யவிதர்கிதாநி சித்ராம்பிதேவ சிரமைக்ஷத பாண்ட்யகந்யா
ப்ராகேவ பாண்ட்யதநயாசரணாரவிந்த ஸேவாநுபாவசிரநிர்ஹ்ருதகல்மஷாஸ
ஸேநாஸு தத்ர ஜலமாத்ரக்ருதோபயோகா ஹ்ரீணேவ ஸா ஸரிதவாபதவாங்முகத்வம்॥ 29
ஆலக்ஷ்ய தாமமரஸிந்தும் அபாரபூராம் ஸ்ரோதோதஶாம் ஸ்வயமபி ப்ரதிபத்ய ஸத்ய:।
அம்போநிதிர்ந்யவிஶதேவ தடே ததீயே ஸேநாநிபேந மலயத்வஜகந்யகாயா: ॥ 30
ஸேநாம் ப்ருதக் ப்ருதகிமாம் விரலம் நிவேஶ்ய மாயாபுரீபரிஸரே ஸுமதி: ஸமஸ்தாம் ।
ஆஸாத்ய பாண்ட்யதநயாம் இதமாபபாஷே கங்காதரங்கலதிகாஹ்ருதத்ருக்தரங்காம்॥ 31
பஶ்யாம்ப ! கீர்த்திமிவ தே புவநம் புநாநாமேநாம் தயாமிவ தவாஸ்கலிதப்ரவாஹாம்।
ஸூக்திம் தவேவ ச ஸுதாமதுராம் கபீராம் பாகீரதீம் பவஜடாபடலாத் ப்ரவ்ருத்தாம் ॥32
நிஶ்ரேணிகேயம் அபவர்கபதாதிரோஹே நௌகேயமம்ப துரிதார்ணவஸம்ப்ரதாரே ।
ஏஷா ஸுதா பவாவிஷஜ்வலநாபிஷங்கே ஜ்யோத்ஸ்நேயம் ஆந்தரதமோபிபவே ஜநாநாம் ॥ 33

---

பயனுமில்லை. அதனுடைய புண்ய ஜலத்தை தண்ணீராகமட்டும் உபயோகித்தார்கள். தங்களை பரிசுத்தமாக செய்யும் புனித தீர்த்தமாகவோ அல்லது புண்ணியத்தை ஸம்பாதிப்பதற்காகவோ தன் ஜலம் உபயோகப் படுத்தப்படவில்லையே என்கிற வெட்கத்தினால் கீழ்நோக்கி தலைகுனிந்து சரிந்தாளோ! 29

730 ஆகாசகங்கை கரை காணாத வெள்ளத்துடன், பேரருவிகளுடன் புரண்டு வீழ்ந்தன. அதைக்கண்டு, கடலும் கூட தேவியின் படைபெருக்கு என்கிற உருவத்தில் கங்கைக் கரையில் இறங்கினாள் போலும்! 30

731 கனகலத்திலிருந்து, ராணியின் முகாம் மாயாபுரி என்ற ஹரித்வாருக்குச் சென்றது. மலைப்பகுதியில் படைகளை குவிக்கமுடியாமல், சிறிது சிறிதாக ஆங்காங்கே முகாம்களை அமைத்துக் கொடுத்துவிட்டு சுமதி, கங்கைக்கரையின் பிரவாஹத்தின் வேகத்தையும், அலைகளின் மோதலையும் அலுக்காத தன் கண் அலைகளால் பார்த்து ரஸித்துக்கொண்டிருந்த தேவியிடம் பின்வருமாறு கூறினாள். 31

732 அம்மா பாருங்கள்! இந்த கங்கா ப்ரவாஹம் உங்களுடைய மங்களமான கீர்த்தியைப் போல உலகைப் பரிசுத்தமாக்குகிறது. உங்களுடைய அளவற்ற கிருபை போல தடையற்றுப் பெருகுகிறது. தங்களுடைய திருமொழிப் போல ஆழமாகவும், அமுதம் போல் இனிப்பதாகவும், பரமேச்வரனின் சடையிருந்து பீறிட்டு வருகிறது. 32

ब्रह्मर्षिशापनिहतान् भसितावशेषान् एषा दिवं सगरराजसुताननैषीत् ।
एषा च कर्मधरणीघटनानपेक्षा स्रोतस्त्रयेण भुवनत्रितयं पुनीते ॥ ३४

कर्माणि पश्यत हरेरिति घोषयन्ति यत्सेतुबन्धनमुखानि गिरः पुराण्यः ।
सोऽप्यर्णवो ननु रसातलमाविशन्त्याः पार्श्वाम्बुलेशपरिवर्तनपूरितोऽस्याः ॥ ३५

नीहारभूधरशिलावलयाभिघातनिर्गच्छदच्छजलशीकरनिर्विशेषैः ।
अम्बावधेहि कनकध्वजमात्रलक्ष्यैरेतां वृतां दिविषदामभितो विमानैः ॥ ३६

आस्ताम दृष्टमदसीयमिहानुभाव्यं दृष्टं च किं क्वचन दृष्टमथ श्रतं वा ।
या यादृशीयमथ यासि च यादृशी त्वं ते द्वे युवां परामिह व्यातिसंविदाथे ॥ ३५

एतावती जननि भारतवर्षभूमिरेषैव ते कुलपरम्परयागता भूः ।
स्नानेन पावनजलामपि पावयित्वा भूयोऽप्यमूं प्रतिनिवर्तितुमौचिती वः ॥ ३८

इत्यालपन्तमियमाह तमेवमेतन्मन्दाकिनीं प्रति यथात्थ महामते त्वम् ।
लब्धस्थिरीकरणमात्रभवं न यशस्तु संचित्यमानमयशःपरिहार एव ॥ ३९

एनां विगाह्य तदशेषतमोपहन्त्रीम् एतद्बलेन सुरसिद्धनिषेवितानि ।
वर्षाणि तावदितराण्यपि साधयेयं सेनामिहैव विनिवेश्य भवत्सहाया ॥ ४०

---

733 இந்த கங்கை மோக்ஷம் என்கிற பரமபதத்திற்கு ஏறிச் செல்ல படிக்கட்டு, பாபம் என்கிற கடலை கடப்பதற்கு படகு. உலகவாழ்க்கை என்கிற விஷஜ்வாலையை அவிக்கும் அமுதம். மக்களின் உள்ளத்திலுள்ள இருட்டை போக்கும் நிலவு. 33

734 கபிலர் என்ற ப்ரஹ்மருஷியின் சாபத்தினால் பஸ்மமாகிவிட்ட ஸகரபுத்திரர்களை இவள் ஸ்வர்கத்திற்கு அனுப்பினாள். மூன்று கிளைகளாகப் பிரிந்து மூன்று உலகத்தையும் பாவனமாக்குகிறாள். ஒரு கிளை மந்தாகினி என்ற பெயரில் ஸ்வர்கத்தில் ஆகாச கங்கையாகவும், இரண்டாவது பூமியில் ஜாஹ்னவி என்ற பெயரில் பூலோகத்திலும், மூன்றாவது கிளை போகவதி என்ற பெயரில் பாதாள கங்கையாக யமதர்மராஜன் பட்டணத்திற்கு போகாமல் தடுப்பது. இவ்வாறு மூவுலகையும் தூயதாக்குகின்றாள். 34

735 புராணங்கள் எல்லாம் ராமன் கடலில் பாலம் கட்டினான் முதலியவைகளை எடுத்துக் காட்டி ஹரியின் பெருமைகளைக் கூறுகின்றன. அதே கடல் கங்கை பாதாள உலகத்திற்கு போகும் பொழுது அதன் நீரின் வடிகாலால் நிரம்பியது அல்லவா? 35

736 பனிமலையின் சிகரங்களிருந்து.பனிப் பாறைகளில் மோதிக்கொண்டு வெளிவரும் தெளிவான பளிங்குபோல் உள்ள நீரோட்டத்தில் தங்கள் ரதத்தின் தங்கக்கொடிகள் பிரதிபிம்பமாகின்றன. அவற்றைச் சுற்றி வருகின்ற தேவர்களின் விமானங்களைப் பாருங்கள். 36

ப்ரஹ்மர்ஷிஶாபநிஹதான் பஸிதாவஶேஷான் ஏஷா திவம் ஸகரராஜஸுதாநநைஷீத்।
ஏஷா ச கர்மதரணீகடநான் அபேக்ஷா ஸ்ரோதஸ்த்ரயேண புவநத்ரிதயம் புநீதே ॥ 34

கர்மாணி பஶ்யத ஹரேரிதி கோஷயந்தி யத் ஸேதுபந்தநமுகாநி கிர: புராண்ய: ।
ஸோऽப்யர்ணவோ நநு ரஸாதலமாவிஶந்த்யா: பாஶ்வாம்புலேஶபரிவர்த்தநபூரிதோऽஸ்யா:॥ 35

நீஹாரபூதஶராஶிலாவலயாபிகாதநிர்கச்சதச்சஜலஶீகரநிர்விஶேஷை: ।
அம்பாவதேஹி கநகத்வஜமாத்ரலக்ஷ்யை: ஏதாம் வ்ருதாம் திவிஷதாமபிதோ விமானை:॥ 36

ஆஸ்தாம் அத்ருஷ்டமதஸீயமிஹாநுபாவ்யம் த்ருஷ்டம் ச கிம் க்வசநத்ருஷ்டமத ஶ்ருதம் வா ।
யா யாத்ருஶீயமத யாஸி ச யாத்ருஶீ த்வம் தே த்வே யுவாம் பராமிஹ வ்யதிஸம்விதாதே ॥ 37

ஏதாவதீ ஜநநி ! பாரதவர்ஷபூமிரேஷைவ தே குலபரம்பரயாகதா பூ: ।
ஸ்நாநேந பாவநஜலாமபி பாவாயத்வா பூயோऽப்யமூம் ப்ரதிநிவர்திதுமௌசிதீ வ: ॥ 38

இத்யாலபந்தமியமாஹ தமேவமேதத்மந்தாகிநீம் ப்ரதி யதாத்த மஹாமதே ! த்வம் ।
லப்தஸ்திரீகரணமாத்ரபவம் யஶஸ்து ஸஞ்சிந்த்யமாநமயஶ:பரிஹார ஏவ ॥ 39

ஏநாம் விகாஹ்ய ததஶேஷதமோபஹந்த்ரீம் ஏதத்பலேந ஸுரஸித்தநிஷேவிதாநி ।
வர்ஷாணி தாவதிதராண்யபி ஸாதயேயம் ஸேநாம் இஹைவ விநிவேஶ்ய பவத்ஸஹாயா॥ 40

---

737 அம்மா! இந்த கங்கையின் பெருமை சில இடங்களில் அனுபவத்திற்கு எட்டுகிறது. மற்ற இடங்களில் காணவும் கிடைக்கவில்லை. கேள்விப்பட்டதும் இல்லை. இது ஒரு புறம் இருக்கட்டும் நீ யார்? எத்தகையவள்? இவ்வாறு யாத்திரை செய்கிறாய் என்பன ஒருவராவது அனுபவத்தில் கண்டிருக்கிறார்களா? ஆகவே, உன்னை இந்த பாகீரதீ ஒருகால் அறியலாம் அல்லது நீ இந்த பாகீரதியை அறியலாம். அவ்வளவுதான்: 37

738 அம்மா! இதுவே பாரத புண்ணிய பூமியின் எல்லை. இதுவே உன் குல முன்னோர்கள் ஆண்டுவந்த பூ ப்ரதேசம். இங்கு நீங்கள் நீராடி தூய்மை பெறப்போகிறீர்கள் என்பதல்ல. இந்தத்தீர்த்தத்தை தாங்கள் நீராடுவதின் மூலம் தூய்மைப்படுத்திவிட்டு இங்கிருந்து நாம் திரும்புவது நல்லது. 38

739 இவ்வாறு மந்திரி கூறி முடித்தவுடன்,தேவி சொன்னாள். மந்தாகினி நதியைப்பற்றி தாங்கள் கூறியது உண்மைதான். எது வரை முன்னோர்களின் ஆட்சி இருந்ததோ அதை திடப்படுத்திக் கொண்டோம் என்பது புகழ் அல்ல, அபகீர்த்தியை தடுப்பதுதான் உண்மையான புகழ். 39

740 எனக்கு என்ன தோன்றுகிறதென்றால் 'இந்த புண்யநதியில் நீராடி, நமது உள்ளத்து அழுக்குகள் அனைத்தையும் போக்கிக்கொள்வோம். இந்த பலத்தையும் உங்களுடைய ஸஹாயத்தையுமே வைத்துக் கொண்டு, இந்த ஜம்பூத்தீவில் உள்ள மற்ற வர்ஷங்களையும் தரிசிப்போமே! அங்கெல்லாம் தேவர்களும் சித்தர்களும் இருப்பார்களே அவர்களையும் தரிசிப்போமே. ராஜ படைகள் தங்கள் கவனத்தில் இங்கேயே இருக்கட்டுமே'. 40

त्वत्पादसेवनकृतां त्रिदिवे करस्थे का नाम भूमिवलयाक्रमणेऽपि शङ्का।
साह्याय किं तव चमूरनुयायिनीयं त्याज्या तु नेति समयोचितमाह सेनाम्॥ ४१

अम्बा तथेति गिरमभ्युपगम्य तस्य सन्नह्यतामिति च सा पृतनां नियुज्य।
सस्नौ भवाङ्गपरिरम्भकृतार्थमम्भस्त्रैस्रोतसं किल पुनश्च कृतार्थयन्ती ॥ ४२

यद्ब्रह्मणोऽभिभवनं सललिलात्मनां प्राग्यश्चाथ शन्तनुभुवां सलिलापवेधः।
अंहो निरन्वयममृज्यत तत्समस्तं तस्यास्त्रिलोकजननीचरणार्पणेन॥ ४३

सा संवृता नृपसुता परितः सखीभिः स्नानाय गाङ्गसलिले कलितावतारा।
स्नान्तीभिरत्र सुरपन्नगकन्यकाभिः संयुज्य मज्जनकुतूहलिनी विजह्रे॥ ४४

सख्यो नृपालदुहितुर्विंहृतिच्छलेन नेत्रे पिधाय बधिराः फणिराजकन्याः।
स्मेराननासु परितः सुरसुन्दरीषु स्वैरं किलापजहसुः श्रवणव्यपायात्॥ ४५

संसारसिन्धुतरणिस्तरणिं विनैव सा दूरमप्लवत तत्र समं सखीभिः।
प्रागार्जितं वितरणित्वकृतं यशो यत् तेनाधुनाद्विगुणितं तदभूदमुष्याः॥ ४६

उद्दामनिश्वसितसौरभसारलोभात् उन्मज्जनावसरमेव चिरं प्रतीक्ष्य।
देशमप्रजहती भ्रमरावलीव स्नान्त्या बहिर्विरुरुचे कबरी श्लथास्याः॥ ४७

---

741 'தேவி! தங்கள் திருவடிகளைப் பணிந்தவர்களுக்கு மூவுலகங்களும் 'மோக்ஷம்' கைமேல் கிடைக்கும் என்று இருக்கும்பொழுது, தங்களுடைய விஜய யாத்திரையில், பூமியிலுள்ள மற்ற வருஷங்களையும் நமது அரசில் சேர்த்துக் கொள்வோம் என்பதில் என்ன சந்தேகம்? இந்த விஜய யாத்திரையில் தங்களுக்கு துணையாக வருகிற படையை விட்டுவிட்டுப் போவது உசிதமில்லை' என்று இங்கிதமாக உரைத்தார் மந்திரி ஸுமதி. 41

742 தேவி மந்திரியின் ஆலோசனையை ஏற்றாள். சேனை புறப்படலாம் என்று ஆணையிட்டாள். பரமேச்வரனுடைய அங்கங்கள் அனைத்தையும் தழுவியதால், பவித்ரமான மூன்று ப்ரவாஹங்களுடைய கங்கையில் ஸ்நானம் செய்தாள். அதனால்தான், பூமிக்கு வந்தது ஸபலமானது என்று கங்கை கருதினாள். 42

743 கங்கா ஒரு சமயம் ப்ரஹ்மதேவனை அவமதிக்கவேண்டிய நிர்பந்தத்திற்கு உட்பட்டாள். சந்தனுவுக்கு ஏழு பிள்ளைகளை பெற்றுக் கொடுத்து, அவற்றை இழந்தது மட்டும் அல்லாமல் அடுத்த பிள்ளை பீஷ்மர் ப்ரஹ்மசாரியானதால், அந்த தலைமுறை மேலும் ஸந்ததி இல்லாமல் போயிற்று. கங்கையின் இந்த பாபங்களெல்லாம் மூவுலகத்திற்கும் தாயாகிய தடாதகையின் பாத ஸ்பரிசத்தினால் கழிந்தன. 43

744 ராஜகுமாரி தன் தோழிகளுடன் கங்கையில் ஸ்நானம் செய்ய இறங்கினாள். அங்கு முன்பே தேவகன்னிகைகளும் நாக கன்னிகைகளும்

த்வத்பாதஸேவநக்ருதாம் த்ரிதிவே கரஸ்தே கா நாம பூமிவலயாக்ரமணேऽபி ஶங்கா ।
ஸாஹ்யாய கிம் தவ சமூரநுயாயிநீயம் த்யாஜ்யா து நேதி ஸமயோசிதமாஹ ஸேநாம்॥ 41
அம்பா ததேதி க்ரமப்யுபகம்யம் அதஸ்ய ஸந்நஹ்யதாமிதி ச ஸா ப்ருதநாம் நியுஜ்ய।
ஸஸ்நௌ பவாங்கபரிரம்பக்ருதார்த்தமம்பஸ் த்ரைஸ்ரோதஸம் கில புநஶ்ச க்ருதார்த்தயந்தீ ॥42
யத் ப்ரஹ்மணோऽபிபவநம் ஸலிலாத்மநா ப்ராக்யஶ்சாத ஶந்தநுபுவாம் ஸலிலாபவேத: ।
அம்ஹோ நிரந்வயமம்ருஜ்யத தத் ஸமஸ்தம் தஸ்யாஸ்த்ரிலோகஜநநீசரணார்பணேந॥ 43
ஸா ஸம்வ்ருதா ந்ருபஸுதா பரித: ஸகீபி: ஸ்நாநாய காங்கஸலிலே கலிதாவதாரா।
ஸ்நாந்தீபிரத்ர ஸுரபந்நககந்யகாபி: ஸம்யுஜ்ய மஜ்ஜநகுதூஹலிநீ விஜஹ்ரே ॥ 44
ஸக்யோ ந்ருபாலதுஹிதுர்விஹ்ருதிச்சலேந நேத்ரே பிதாய பதிரா: பணிராஜகந்யா:।
ஸ்மேராநநாஸு பரித: ஸுரஸுந்தரீஷு ஸ்வைரம் கிலாபஜஹஸு: ஶ்ரவணவ்யபாயாத்॥45
ஸம்ஸாராஸிந்துதரணிஸ்தரணிம் விநைவ ஸா தூரமப்லவத தத்ர ஸமம் ஸகீபி: ।
ப்ராகர்ஜிதம் விதரணித்வக்ருதம் யஶோ யத் தேநாதுநா த்விகுணிதம் ததபூத் அமுஷ்யா:॥4
உத்தாமநிஶ்வஸிதஸௌரபஸாரலோபாத் ஊந்மஜ்ஜநாவஸரமேவ சிரம் ப்ரதீக்ஷ்ய ।
தம் தேஶமப்ரஜஹதீ ப்ரமராவலீவ ஸ்நாந்த்யா பஹிர்விருருசே கபரீ ஶ்லதாஸ்யா:॥ 47

---

நீராடிக்கொண்டிருந்தனர். தேவியும் அவர்களுடன் சேர்ந்துகொண்டு நீரில் துளைந்து குதூகலத்துடன் விளையாடினாள். 44

745 அரசகுமாரியுடன் தோழிகள் தண்ணீரில் விளையாடும்பொழுது, தண்ணீரை வாரி இறைத்தார்கள். அதைத் தடுக்க நாக கன்னிகைகள் கைகளால் கண்களை மூடிக்கொண்டார்கள். நாக கன்னிகைகளுக்கு கண்ணும் காதும் ஒன்றே. ஆகவே அவர்கள் 'வாடி போடி' என்று அழைத்தது தெரியாமல் இதைப் பார்த்து தேவகன்னிகைகள் புன்முறுவல் பூத்தனர். 'நாக கன்னிகைகளுக்கு காது கேட்கவில்லை பார்!' என்று பரிஹாஸம் செய்தார்கள். 45

746 தேவி உலகியல் கடலையே கடக்க வைக்கின்ற தோணி. அவள் ஸகிகளோடு தோணியின் உதவியின்றியே எதிர்நீச்சல் போட்டுக் கொண்டு கங்கையைக் கடந்தாள். விதரண என்ற சொல்லுக்கு படகில்லாமல் நீரைக் கடப்பது வழங்குவது என்று இரு பொருள்கள் உண்டு. முன்பு தேவி வாரி வழங்கியே ஒரு புகழ் பெற்றாளே, அதை படகில்லாமலேயே கங்கையைக் கடந்தாள் என்ற புகழ் மிஞ்சி விட்டது. 46

747 நீராடிக்கொண்டிருக்கும் தேவியின் நீண்ட கூந்தல் முடிகள் நீர்மட்டத்திற்கு மேல் காணப்பட்டன. நீரில் மூழ்கிவிட்டு பெருமூச்சுடன், தேவி தண்ணீரிலிருந்து தலையை நீர்மட்டத்திற்கு மேல் நீட்டினாள். இது எவ்வாறு இருந்தது? தேவியின் மூச்சுக்காற்றின் நறுமணத்தை ருசிபார்த்த கருவண்டுகள் அந்த இடத்தை விட்டு சற்றும் அகலாமல், அவளுடைய மூச்சுக்காற்றை! எதிர்பார்த்துக் கொண்டு,அவள் தண்ணீரில் மூழ்கி இருக்கும்

सा नन्दनोपवनचन्दनमङ्गरागम् आलिम्पती समुपदर्शितम् अप्सरोभिः ।
सस्नौ यदा सुरसरित्सलिले तदैव चक्रे सुरद्रुमसमाहरणावसायम् ॥ ४८
इत्थं विहृत्य सलिले सुचिरं सखीभिः उन्मज्ज्य नैत्यिकविधेरनु पाण्डयकन्या ।
तां सेतुना प्रथमतः सरितं ततार नौकासहस्रनिबिडाकलितेन राज्ञी ॥ ४९
अस्नादपात् अपि चमूरधिगङ्गमस्या मेने कमप्यतिशयं न तु तावता सा ।
राजीवबान्धवरथे वसतो जनस्य को नाम दीपसमवायकृतः प्रकाशः ॥ ५०
आदाय पुष्करमुखैरभितो विकीर्य यावत्किल व्ययितमम्बु सुरस्रवन्त्याः ।
तावत्ततो द्विगुणमप्यभिवर्षीति स्म दानोदकैर्द्विपगणः परितः स्नुतैस्ताम् ॥ ५१
मातङ्गपुङ्गवतुरंगशताङ्ग्योधपाणिन्धमे धरणिसेतुपथे चरन्ती ।
नक्तंदिवैलस्त्रिभिरशिश्रयदभ्रसिन्धोः पारं परं निरवशेषमनीकिनी सा ॥ ५२
सा संन्निपात्य सकलामपि वाहिनीं तामाज्ञां वितीर्य च गिरेरधिरोहणाय ।
आलीजनाकलितसारथिकर्मसुस्थं कर्णीरथं कमपि तु स्वयमारुरोह ॥ ५३
तां वाहिनीं सुमहतीम् अपदिश्य तस्या गङ्गैव तं गिरिवरं पुनरारुरोह ।
प्रस्थानसंभ्रमवशात् अनिवेदितं प्राग्वक्तव्यशेषमिव किंचन वक्तुमीशे ॥ ५४

*போது தண்ணீரின் மேல் பரவியுள்ள தேவியினுடைய கூந்தல் வடிவத்தில் காத்திருந்தனவாம்!* 47

748 தேவி கங்கையில் எதிர்நீச்சல் போட்டுக் கொண்டு ஸ்வர்கத்திற்கே போய்விட்டாள். அங்கு அப்ஸரஸப் பெண்களால் உபசரிக்கப்பட்டு தேவலோகத்து நந்தனவன சந்தனத்தையும், செம்பஞ்சுக்குழம்பையும் பூசிக்கொண்டாள். அதனால், தேவி கங்கையில் ஸ்நானம் செய்தபொழுதே தேவலோகத்து கற்பகதருக்களை பூமிக்கு கொண்டு வரவேண்டும் என்று மனதில் தீர்மானித்தாள்.. 48

749 இவ்வாறு தேவி. வெகுநேரம் கங்காபிரவாஹத்தில் விளையாடிவிட்டு, எழுந்து, ஜபம், அலங்காரம் முதலிய நித்ய கர்மாக்கள் யாவும் முடிந்தவுடன், ஆயிரக்கணக்கான ஓடங்களை இணைத்துத் தயாரிக்கப்பட்ட ஒரு தற்கால பாலத்தில் ஏறி கங்கையை நடந்து கடந்தாள். 49

750 ஸேனையும் கங்கையில் நீராடியது. கங்கை நீரை அருந்தியது, அந்தப் பாலத்தில் ஏறி கங்கையைக் கடந்தது. இதில் அதிசயம் ஒன்றுமே இல்லை. தாமரை மணாளனான சூரியனுடைய ரதத்தில் ஏறிச் செல்பவர்களுக்கு, விளக்குகள் ஏற்றித்தான் வெளிச்சம் காட்ட வேண்டுமா? 50

ஸா நந்தநோபவநசந்தநமங்கராகம் ஆலிம்பதீ ஸமுபதர்ஶிதம் அப்ஸராபி: ।
ஸஸ்நௌ யதா ஸுரஸரித்ஸலிலே ததைவ சக்ரே ஸுரத்ருமஸமாஹரணாவஸாயம்॥ 48
இத்தம் விஹ்ருத்ய ஸலிலே ஸுசிரம் ஸகீபி: உந்மஜ்ஜ்ய நைத்யிகவிதேரநு பாண்ட்யகந்யா ।
தாம் ஸேதுநா ப்ரதமத: ஸரிதம் ததார நௌகாஸஹஸ்ரநிபிடாகலிதேந ராஜ்ஞீ ॥ 49
அஸ்நாதபாதபி சமூரதிகங்கமஸ்யா மேநே கமப்யதிஶயம் ந து தாவதா ஸா ।
ராஜீவபாந்தவரதே வஸதோ ஜநஸ்ய கோ நாம தீபஸமவாயக்ருத: ப்ரகாஶ: ॥ 50
ஆதாய புஷ்கரமுகைரபிதோ விகீர்ய யாவத் கில வ்யயிதமம்பு ஸுரஸ்ரவந்த்யா: ।
தாவத் ததோ த்விகுணமப்யபிவர்ஷதி ஸ்ம தாநோதகைர்த்விபிகணா: பரித: ஸ்ருதைஸ்தாம் ॥ 51
மாதங்கபுங்கவதுரங்கஶதாங்கயோதபாணிந்தமே தரணிஸேதுபதே சரந்தீ ।
நக்தந்திவைஸ்த்ரிபிரஶிஶ்ரயதப்ரஸிந்தோ: பாரம் பரம் நிரவஶேஷமநீகிநீ ஸா ॥ 52
ஸா ஸந்நிபாத்ய ஸகலாமபி வாஹிநீம் தாம் ஆஜ்ஞாம் விதீர்ய ச கிரேரதிரோஹணாய।
ஆலீஜநாகலிதஸாரதிகர்மஸூஸ்தம் கர்ணீரதம் கமபி து ஸ்வயமாருரோஹ ॥ 53
தாம் வாஹிநீம் ஸுமஹதீம் அபதிஶ்ய தஸ்யா கங்கைவ தம் கிரிவரம் புநராருரோஹ।
ப்ரஸ்தாநஸம்ப்ரமவஶாத் அநிவேதிதம் ப்ராக்வக்தவ்யஶேஷமிவ கிஞ்சந வக்துமாஶே॥ 54

---

751 தேவியின் யானைப்படைகளில் உள்ள யானைகள், துதிக்கைகளின் மூலம் உறிஞ்சி, வாரி இறைத்த கங்கை நீர் எவ்வளவோ, அதற்கு இருமடங்கு தங்களுடைய மத நீர் பெருக்கை, கங்கைக் கரையை சுற்றி வாரியிரைத்தன. 51

752 மஹாதேவியினுடைய யானைகள், குதிரைகள், ரதங்கள், காலாட்படைகள் தேவநதியின் அந்த பூமிபாலத்தை கடந்துபோக இரவு பகல் மூன்று நாட்கள் ஆயின. அக்கரையை அடைந்ததும், படைகள் அனைத்தும் அங்கேயே முகாமிட்டன. 52

753 படைகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து கொண்டபிறகு மலையில் ஏறலாம் என்று கட்டளையிட்டுவிட்டு. தோழிகள் மலை ஏறும் பாதையில் இருபுறம் வரிசையாக இருந்துகொண்டு, ஒருவர் கைமாறி மற்றொருவர் கைக்கொடுத்து தூக்கப்படும் ஒரு விதமான கர்ணீரதத்தில் ஏறிக்கொண்டாள். பெண்களால் தூக்கிச்செல்லப்படும் மூடப்பட்ட ஒருவிதமான சாய்மானப் பல்லக்கு கர்ணீ ரதம் என்று சொல்லப்படுகிறது. 53

754 தேவியின் சேனை மலையில் ஏறும் பொழுது திருப்பங்களில் திரும்பி விரைவாகச் சென்று கொண்டிருந்தது. மிகப் பெரிய (தண்ணீர் ப்ரவாஹம் போல் உள்ள) அந்த சைன்யத்தைப் பார்த்து வழிப்போக்கர்கள் சிலர் கூறினர். 'முன்பு மலையிருந்து கீழே இறங்கும் பொழுது கங்கா தேவி அவசரமாகக் கிளம்பியதனால் பரமேச்வரனிடம் சொல்ல மறந்துவிட்டதைச் சொல்லுவதற்காக கங்காதேவியே தேவியின் மஹாசேனையின் உருவத்தில் மலை ஏறுகிறாள் போலும்!' என்று. 54

नीहारशैलशिखरेषु समत्पतन्तो निम्नोन्नतानि कियदप्यविचारयन्तः।
जग्मुः शताङ्गयुगसंयमितासुतुङ्गा देव्याः सुखं नयनरश्मिभिरुद्गृहीताः॥ ५५

प्रस्निग्धकाशकुशकाननमेदुराणि भागीरथीसलिलपातपवित्रितानि।
स्थानानि संयमवतामतिसुन्दराणि सव्यानि सा विदधती शनकैरयासीत्॥ ५६

रत्नानि तत्र वणिजो भिषजोऽग्रहीषुर्दिव्यौषधीर्गजवरानापि राजकीयाः।
अस्मादृशाः क्षितिसुराः पुनराहरन्त भागीरथीतटारुहाणि कुशाङ्कुराणि॥ ५७

आमुक्तकञ्चुकमधिज्यशरासकाण्डम् उन्नद्धकुन्तलनियन्त्रितवन्यपुष्पम्।
सेनारजोम सृणितालकसुन्दरं तत्तत्त्वं परं वनचरैरपि तत्र दृष्टम्॥ ५८

दुर्लङ्घतत्पथविलङ्घनकौतुकिन्याः कोलाहलेन महता परितो ध्वजिन्याः।
यद्यद्विभिद्य पतितं शिखरं हिमाद्रेस्तत्तन्नवेन यशसा समपूरि तस्याः॥ ५९

नासीरसंगतभटोद्भटसिंहनाद विद्रावितान् गिरिगुहाशयितान् मृगेन्द्रान्।
वन्यद्विपाः समभिदुद्रुवुरात्मवैरनिर्यातनावसरलाभनितान्तहृष्टाः॥ ६०

---

755 பனிமலைச் சிகரங்களில், மேடுபள்ளங்களில் ஏறி இறங்கினாலும் ரதத்தில் பூட்டப்பட்ட குதிரைகள் சளைக்கவில்லை. தேவியின் கடாக்ஷஒளியினால் வழிகாட்டப்பட்டவைகளாக ஒன்றையும் பொருட்படுத்தாமல், முன்னே சென்றன. 55

756 வழியெல்லாம் காச புஷ்பங்களும், தர்பைபுற்களும் கங்கையின் தண்ணீரை உறிஞ்சி புஷ்டியாக வளர்ந்திருந்தன. அவற்றை எல்லாம் இடப்புறமாக ஒதுக்கியும், ஸத்கர்மாக்களுக்காக உபயோகப்படுத்தப்படுகின்ற புற்களை ப்ரதக்ஷிணம் செய்து கொண்டும், தேவியின் பவனி சென்றது. ஆங்காங்கே தபஸ்விகளின் குடிசைகள், குளிருக்கு அடக்கமாகவும், வெய்யிலுக்கு உகாததாகவும், அழகாகவும் அமைந்திருந்தன. அவைகளையும் பிரதக்ஷிணமாகச் சுற்றிக் கொண்டு தேவியின் விஜய யாத்திரை மலைமேல் ஏறியது. 56

757 பெரும்பாலும் ஜனநடமாற்றமற்ற பிரதேசம் மலைச்சரிவுகளில், பாறைகள் உடைந்து சிதறிக் கிடந்தன. அங்கே சிதறிக்கிடந்த மாணிக்கம் முதலிய ரத்தினங்களை யாத்திரையில் வந்த வியாபாரிகள் வாரி கட்டிக்கொண்டனர். ஒரு புறம் ஸம்ஜீவினீ போன்ற ஔஷதிக்கொடிகள் மிதிபட்டுக் கிடந்தன. அவைகளை பக்குவப்படுத்தி வேர்கள். கொடிகள், இலைகள் மற்றும் இதர மூலிகைகள் எல்லாவற்றையும் மருத்துவர்கள் மூட்டைக்கட்டிக் கொண்டனர். ஒருபுறம் சிறந்த காட்டு யானைகள் சஞ்சரித்தன. அவைகளை யானைப்படைக்காக அரசர்கள் திரட்டிச் சென்றனர். என்னைப் போன்ற வைதீகர்கள். (என்று தீக்ஷிதர் தன்னைக் குறிப்பிடுகின்றார்-)

**நீஹாரஶைலஶிகரேஷு ஸமுத்பதந்தோ நிம்நோந்நதாநி கியதப்யவிசாரயந்த: ।**
**ஜக்மு: ஶதாங்கயுகஸம்யமிதாஸுதுங்கா தேவ்யா: ஸுகம் நயநரஶ்மிபி: உத்க்ருஹீதா:॥ 55**

**ப்ரஸ்நிக்தகாஶகுஶகாநநமேதுராணி பாகீரதீஸலிலபாதபவித்ரிதாநி ।**
**ஸ்தாநாநி ஸம்யமவதாம் அதிஸுந்தராணி ஸவ்யாநி ஸா விதததீ ஶநகைரயாஸீத் ॥ 56**

**ரத்நாநி தத்ர வணிஜோ பிஷஜோऽக்ரஹீஷுர்திவ்யௌஷதீர்கஜவராநபி ராஜகீயா: ।**
**அஸ்மாத்ருஶோ: க்ஷிதிஸுரா: புநராஹரந்த பாகீரதீதடருஹாணி குஶாங்குராணி ॥ 57**

**ஆமுக்தகஞ்சுகமதிஜ்யஶராஸகாண்டம் உந்நத்தகுந்தளநியந்த்ரிதவந்யபுஷ்பம் ।**
**ஸேநாரஜோமஸ்ருணிதாளகஸுந்தரம் தத் தத்வம் பரம் வநசரைரபி தத்ர த்ருஷ்டம் ॥58**

**துர்லங்கதத்பதவிலங்கநகௌதுகிந்யா: கோலாஹலேந மஹதா பரிதோ த்வஜிந்யா:।**
**யத்யத்விபித்ய பதிதம் ஶிகரம் ஹிமாத்ரேஸ்தத்தந்நவேந யஶஸா ஸமபூரி தஸ்யா:॥ 59**

**நாஸீரஸங்கதபடோத்படஸிம்ஹநாதவித்ராவிதான் கிரிகுஹாஶயிதான் ம்ருகேந்த்ரான் ।**
**வந்யத்விபா: ஸமபிதுத்ருவு: ஆத்மவைரநிர்யாதநாவஸரலாபநிதாந்தஹ்ருஷ்டா: ॥ 60**

---

அங்கு அடர்த்தியாக வளர்ந்திருக்கும் தர்பை புற்களைப் பார்த்து 'அடடா! பாகீரதீ தீர்த்தத்தினால் வளர்ந்த தர்பங்கள் அல்லவா? பரம பவித்ரமானவைகள்' என்று கூறி அவைகளை அறுத்து, அறுத்து, தர்பக்கயிற்றினாலேயே தலையில் தூக்கக்கூடிய அளவுக்கு கட்டாகக் கட்டிக் கொண்டு சந்தோஷமாக பேசிக்கொண்டார்கள்- 'இனி மூன்று வருஷங்களுக்கு கவலை இல்லை' என்றார் ஒருவர். இவைகளை வைத்துக்கொண்டு ஐந்து வருடங்கள் தள்ளி விடுவேன்' என்றார் மற்றொருவர். எல்லோருமே தர்பங்கள் கிடைத்ததில் மகிழ்ச்சியுடன் காணப்பட்டனர். 57

758 வேறு எங்கும் யாருக்கும் காணக்கிடைக்காத தேவியின் தரிசனம், காடு வாழ் மக்களுக்குக் கிடைத்தது. தேவி போர் உடை பூண்டிருக்கிறார். அவளுடைய மார்பகக் கச்சு சற்றே தளர்த்தப்பட்டு இருக்கிறது. கையிலே நாணேற்றிய வில். மேலே தூக்கி இறுக்கிப் பின்னிய கூந்தல், சொருகிய காட்டு மல்லிகை மலர்கள், முன்னே செல்கின்ற படையின் புழுதி முகமெங்கும் படிந்துள்ளது. இதுவே அழகாக இருக்கிறது. அந்தப் பரம் பொருள் இவ்வாறு கிராமீய கோலத்தில் எளிமையாகக் காட்சி அளிப்பது வேறு யாருக்காவது கிடைக்குமா? 58

759 வலிமை மிகுந்த தேவியின் படைகள் பனிமலையில் சஞ்சரிக்கும் பொழுது, சிறு சிறு குன்றுகளை சுற்றி (கடந்து) வருவதற்கு பதிலாக அவைகளை உடைத்தெறிந்து அதன் மேல் சென்றன. குன்றுகள் உடைக்கப்பட்டு சிதறிக்கிடக்கும் இடங்களில் தேவியின் புகழ் பரவி புண்ய ஸ்தலங்கள் ஆயின. 59

माध्वीकमिश्रनववैणवसक्तुभक्तैः कस्तूरिकाहरिणमांसकृतोपदंशैः ।
आतिथ्यम् आपुरुचितं शबरालयेषु सेनाभटाश्वमरवालधिवीज्यमानाः ॥ ६१

पारीन्द्रनिर्दलितकुञ्जरकुम्भमुक्त मुक्ताफलग्रथितहारकृतोपहाराः ।
स्थानानि तत्र विविधानि उपदर्शयन्तो देवीमसेविषत हैमवताः किराताः ॥ ६२

अत्रैव नः कुलपतिं धनुषा जघान मर्त्यः स कश्चिदिति वृद्धजना वदन्ति ।
दूरे सुवर्णकदलीवनमेतदम्ब जीर्णः कपिर्वसति यत्र चिराय कोऽपि ॥ ६३

नाचक्षते न निमिषन्ति न निश्वसन्ति वल्मीकतः प्रसृमरा वपुषा तु मर्त्याः ।
सन्ति द्रुमा इह शतं दलपुष्पहीनाछित्वा नयाम यदि देवि दिदृक्षसे तान् ॥ ६४

अस्त्यम्बिकेति ननु गोत्रपितामही नः कोदण्डदण्डकुशला गतभाव्यभिज्ञा ।
कान्त्या गिरा करुणया च भुजोष्मणा च दृग्भ्यां शपेमहि महेश्वरि सैव नस्त्वम् ॥ ६५

बाहुस्त्वयावममृशे प्रथमं पुरो नस्तद्बाहुसारविजितो भविता पतिस्ते ।
सत्यानि विद्धि शबरीजनभाषितानि जात्वम्ब चिन्तय न जानपदानिवास्मान् ॥ ६६

760 விஜய யாத்திரையில் சென்று கொண்டிருக்கும் படைவீரர்கள், முன்புறத்தில், ஒருவருக்கொருவர் மோதிக்கொண்டபோது ஏற்பட்ட ஸிம்ஹநாத கர்ஜனையைக் கேட்டு,குகைகளில் தூங்கிக் கொண்டிருந்த சிங்கங்கள் பயந்து ஓடியதைப் பார்த்து,அங்கு சஞ்சரித்துக் கொண்டிருந்த காட்டுயானைகள், 'இதுதான் அவைகளை ஒடுக்குவதற்கு தக்க தருணம்' என்று மகிழ்ச்சியுடன் அவைகளைத் துரத்திக் கொண்டு ஓடின. 60

761 ஹிமயமலையில் வசிக்கும் வேடுவர்கள், தேவியின் படையினருக்கு தாங்கள் இருக்கும் இடங்களில் அழைத்து விருந்தளித்தனர். புதிதாக வெட்டிய மூங்கில்களிலிருந்து எடுக்கப்பட்ட ருசியுள்ள அரிசியை தேனில் கலந்து அகன்ற தேக்கு இலைகளில் பரிமாறினார்கள். பக்குவப்படுத்தப்பட்ட கஸ்தூரி மான்களின் மாமிசத்தை துணை உணவாகப் படைத்தனர். தங்களுடைய இருக்கைகளில் அமர வைத்து, கவரிமான்களின் வால்களினால் சாமரம் போட்டு உபசரித்தனர். 61

762 சிங்கங்கள் பாய்ந்து யானைகளின் மஸ்தகங்களை உடைத்தன. அவற்றிருந்து முத்துக்கள் சிதறி விழுந்தன. அந்த முத்துக்களை மாலையாகத் தொடுத்து ஹிமயமலைவாசி வேடர்கள்,படை வீரர்களுக்கு வழங்கினார்கள். மேலும் மலைப் பகுதியிலுள்ள விசேஷமான இடங்களுக்கு தேவியை அழைத்துச் சென்று காண்பித்து உபசரித்தார்கள். 62

763 'இங்குதான் எங்கள் குலபதியான பரமேச்வரனை தன் வில்லினால் மண்டையில் அடித்தான்' என்று இந்த ஊர் கிழவர்கள் கூறுகிறார்கள். அவன்

மாத்வீகமிஶ்ரநவவைணவஸக்துபக்தை: கஸ்தூரிகாஹரிணமாம்ஸக்ருதோபதம்ஶை:।
ஆதித்யம் ஆபுருசிதம் ஶபராலயேஷு ஸேநாபடாஶ்சமரவாலாதிவீஜ்யமாநா: ॥ 61

பாரீந்த்ரநிர்தலிதகுஞ்ஜரகும்பமுக்த முக்தாபலக்ரதிதஹாரக்ருதோபஹாரா: ।
ஸ்தாநாநி தத்ர விவிதானி உபதர்ஶயந்தோ தேவீமஸேவிஷத ஹைமவதா: கிராதா: ॥ 62

அத்ரைவ ந: குலபதிம் தநுஷா ஜகாந மர்த்ய: ஸ கஶ்சிதிதி வ்ருத்தஜநா வதந்தி।
தூரே ஸுவர்ணகதலீவநமேததம்ப ! ஜீர்ண: கபிர்வஸதி யத்ர சிராய கோऽபி ॥ 63

நாசக்ஷதே ந நிமிஷந்தி ந நிஶ்வஸந்தி வல்மீகத: ப்ரஸ்ருமரா வபுஷா து மர்த்யா: ।
ஸந்தி த்ருமா இஹ ஶதம் தலபுஷ்பஹீநாஶ்சித்வா நயாம யதி தேவி!தித்ருக்ஷஸே தான் ॥ 64

அஸ்த்யம்பிகேதி நநு கோத்ரபிதாமஹீ ந: கோதண்டதண்டகுஶலா கதபாவ்யபிஜ்ஞா।
காந்த்யா கிரா கருணயா ச புஜோஷ்மணா ச த்ருக்ப்யாம் ஶபேமஹி மஹேஶ்வரி ஸைவ நஸ்த்வம் ॥ 65

பாஹுஸ்த்வயாவமம்ருஶே ப்ரதமம் புரோ நஸ்தத்பாஹுஸாரவிஜிதோ பவிதா பதிஸ்தே ।
ஸத்யாநி வித்தி ஶபரீஜநபாஷிதாநி ஜாத்வம்ப! சிந்தய ந ஜாநபதாநிவாஸ்மான்॥ 66

---

ஒரு மானுடன்தானாம். அர்ஜுனன் பாசுபதாஸ்திரம் அடைந்த வரலாற்றைக் குறிப்பிடுகிறார் கவி) அதோ தெரிகிறது பாருங்கள். அங்கேதான் தங்க கதலீவனங்கள் உள்ளன. அங்கே வெகுநாட்களாக ஒரு வானரம் வாழ்ந்து கொண்டுவருகிறது (ஹனுமான்). 63

764 அதோ புற்றுகள் தெரிகின்றதே. அதிலிருந்து எப்பொழுதாவது சில மனிதர்கள் வருவார்கள். அவர்கள் பேசமாட்டார்கள். கண்மூடமாட்டார்கள். மூச்சு விடமாட்டார்கள். மனித உடல் தான். ஆனால் என்ன வடிவமோ! இங்கே உள்ள மரங்கள் எல்லாம் சுமார் நூறு இருக்கும். மலர்கள் எல்லாம் உதிர்ந்து மொட்டையாக நிற்கின்றன. வரீங்களா! கொண்டு போய் காட்டுகின்றோம் அல்லது, தேவி விரும்பினால், வெட்டிக் கொண்டுவந்து காட்டுகிறோம். 64

765 'அங்கே, 'அம்பிகா' என்று எங்களுக்கெல்லாம் ஒரு 'ஆத்தா' இருக்கிறா. எங்களுடைய தலைமுறைகளுக்கே 'பெரியாத்தா'. அவகிட்ட ஒரு வில் இருக்கு. அம்பு விட்டால் காத தூரம் பாயும். நடந்தது, நடக்கப்போவதைப் பற்றி எல்லாம் குறி சொல்லுவா. அவளுடைய பலம்,பேச்சு, கருணை எல்லாமே பாத்தா, நாங்க ஆணையிட்டு சத்தியமா சொல்றோம். அவளப் போலவே இருக்கே நீ. எங்களுக்கு, எங்களுடைய சொத்து, சுகம் எல்லமே அவதான்'. 65

766 அதோ, அந்த பெரியாத்தாவே கால்களில் சலங்கை குலுங்க வந்துட்டா. வேடுவப் பெண்கள் வழி விட, நேரே தேவியிடம் வந்து சம்மணம் போட்டு அமர்ந்தாள். 'எங்க. உன் கையை நீட்டு' என்றாள், தேவி நீட்டினாள். பெரியாத்தா நன்றாகப் படித்துக் கொண்டாள். அவளுக்கு ஆவேசமே வந்து விட்டது. அவள் சொன்னாள். - ஸத்தியம் சொல்றேன்-விட்டேன்-நிஜமா

इत्थं सदारशबरोक्तिकृतस्मितासु राज्ञी संखीषु कृतनर्मवचोविलासा ।
मा जातु खण्डयत मानुषपादपानित्याज्ञाप्य तानतियौ शनकैर्हिमाद्रिम् ॥ ६७

शार्दूलसिंहशरभद्विरदाच्छभल्लवाहद्विषद्वकवराहपराहतेषु ।
शङ्गेषु मार्गरहितेष्वपि सा हिमाद्रेः सेना जगाम सुरसिन्धुम् अनुद्रवन्ती ॥ ६८

इत्थं हिमाद्रिशिखरात् अवतीर्य मन्दं वर्षेऽथ किंपुरुषनामनि सा विशन्ती ।
नोदन्ययोपससृजे न बुभक्षया वा नाध्वश्रमेण पृतना न च धर्मतोयैः ॥ ६९

अज्ञातमेघजलमश्रुतसस्यभेदमर्थोपसंग्रहणदान कथानभिज्ञम् ।
देशं समीक्ष्य सुमतिर्धृतविस्मयोऽपि कामं बभूव स करग्रहणे निराशः ॥ ७०

स्वच्छानि भौमसलिलानि सुधाधिकानि सौरभ्यवन्ति च फलानि महीरुहाणाम् ।
दृष्ठवै तृप्तिभरितेषु चमूचरेषु कौतूहलेन जगृहुः कतिचित्तु तानि ॥ ७१

सन्त्यद्भुता द्रुमलता मृगपक्षिभेदाः सन्ति स्त्रियोऽपि सुरयौवतनिर्विशेषाः ।
किं तु क्षितिं विमलसत्त्वमयीं गतास्तां न क्वापि लोभमलभन्त चमूचरास्ते ॥ ७२

धन्याङ्घटापटलनीडसुखप्रसुप्त नानाविहङ्गकुलनाद विनीतखेदान् ।
अध्यात्मयोगनिरतान् अनुगृह्णती सा मन्दं जगाम जननी जगतां त्रयाणाम् ॥ ७३

---

சொல்றேன். அடி ஆத்தே! அந்த ஆளு கையிலே மாட்டி கிட்டாளே! அவனில்ல உன்னை கட்டிக்கப்போறான்.(அவன் என்று அவள் குறிப்பிட்டது பரமேச்வரனை) ஆமாம். சொல்லிவிட்டேன்! பட்டணத்துக்காரி மாதிரி எங்களை நினைக்காதே. வேடுவச்சிங்க சொன்னா அது மெய்யாலும் ஸத்தியம்தான். 66

767 வேடுவச்சி சொன்னதைக் கேட்டு தேவி புன்னகை புரிந்தாள். தோழிகள் தமக்குள் 'நம்ம ஸ்வாமி தான் தேவியின் கையைப்பிடிக்கப் போகிறார்' என்று பேசிக் கொண்டதையும் கேட்டு தனக்குள் நகைத்துக்கொண்டாள். வேடுவர்களைப்பார்த்து 'நீங்கள் மானிடர்களைக் கொல்லக்கூடாது. மரங்களையும் வெட்டக்கூடாது' என்று ஆணையிட்டு விட்டு ஹிமாலயத்திற்கு அப்பால் தன் யாத்திரையைத் தொடர்ந்தாள். 67

768 ஹிமயமலையின் சிகரங்களின் வழியே செல்லும்போது வழியில் புலிகள், சிங்கங்கள், சர்பங்கள், காட்டுயானைகள், கரடிகள், சென்னாய்கள், சிறுத்தைகள், காட்டுப்பன்றிகள் போன்ற கொடிய மிருகங்கள் சஞ்சரித்துக் கொண்டிருந்தபோதிலும், அந்த ஸேனை கவலைப்படாமல், தைரியமாக, கங்கை இறங்குகின்ற பாதை வழியாகச்சென்று கொண்டிருந்தது. 68

769 இவ்வாறு, அந்த ஸேனை, ஹிமயமலையின் மறுபுறத்தில் இறங்கி, மெதுவாக கிம்புருஷம் என்ற தேசத்தை அடைந்தது. இந்த நீண்ட பயங்கரமான யாத்திரையினால் படைவீரர்களோ, பரிவாரங்களோ, தேவியும் கூட பசி,

**இத்தம் ஸதாரஶபரோக்திக்ருதஸ்மிதாஸு ராஜ்ஞீ ஸகீஷு க்ருதநர்மவசோவிலாஸா।**
மா ஜாது கண்டயத மாநுஷபாதபான் இத்யாஜ்ஞாப்ய தாநதி யயௌ ஶநகைர்ஹிமாத்ரிம்।। 67
**ஶார்தூலஸிம்ஹஶரபத்விரதாச்சபல்லவாஹத்விஷத்வ்ரு'கவராஹபராஹதேஷு।**
ஶ்ருங்கேஷு மார்கரஹிதேஷ்வபி ஸா ஹிமாத்ரே: ஸேநா ஜகாம ஸுரஸிந்தும் அநுத்ரவந்தீ।। 68
இத்தம் ஹிமாத்ரிஶிகராத் அவதீர்ய மந்தம் வர்ஷேऽத கிம்புருஷநாமநி ஸா விஶந்தீ।
நோதந்யயோபஸஸ்ருஜே ந புபுக்ஷயா வா நாத்வஶ்ரமேண ப்ருதநா ந ச தர்மதோயை: ।। 69
**அஜ்ஞாதமேகஜலமஶ்ருதஸஸ்யபேதமர்த்தோபஸங்க்ரஹணதாநகதாநபிஜ்ஞம்।**
**தேஶம் ஸமீக்ஷ்ய ஸுமதிர்த்ருதவிஸ்மயோऽபி காமம் பபூவ ஸ கரக்ரஹணேநிராஶ: ।। 70**
ஸ்வச்சாநி **பௌமஸலிலாநி** ஸுதாதிகாநி ஸௌரப்யவந்தி ச பலாநி மஹீருஹாணாம் ।
த்ருஷ்ட்வைவ த்ருப்திபரிதேஷு சமூசரேஷு கௌதூஹலேந ஜக்ருஹு: கதிசித்து தாநி ।। 71
ஸந்த்யத்புதா த்ருமலதா ம்ருகபக்ஷிபேதா: ஸந்தி ஸ்த்ரியோऽபி ஸுரயௌவதநிர்விஶேஷா:।
கிந்து க்ஷிதிம் விமலஸத்வமயீம் கதாஸ்தாம் ந க்வாபி லோபம் அலபந்த சமூசராஸ்தே।। 72
**தந்யான் ஜடாபடலநீடஸுகப்ரஸுப்த நாநாவிஹங்ககுலநாத விநீதகேதான் ।**
அத்யாத்மயோகநிரதாத் அநுக்ருஹ்ணதீ ஸா மந்தம் ஜகாம ஜநநீ ஜகதாம் த்ரயாணாம் ।। 73

---

பட்டினி, சாப்பாடு, தாகம், தண்ணீர், களைப்பு, மயக்கம், வியர்வை போன்ற ஒன்றையும் கருதவில்லை. 69

770 பொட்டக்காடு. மேகம் என்றால் என்ன என்று கேட்பார்கள். பயிர் பச்சை என்ற பேச்சே கிடையாது. காசு பணம் ஸம்பாதிப்பது, செலவழிப்பது என்ற கதையே கிடையாது. இப்படி ஒரு நாடா? என்று சுமதி முதல் ஆச்சரியப்பட்டார். 'யார் இங்கே கப்பம் கட்டப் போகிறார்கள்?' என்று நிராசையுடன் இருந்தார். 70

771 சற்று தூரம் சென்றபிறகு அங்கே சுத்தமான கிணற்றுத் தண்ணீர், அமுதத்தைக் காட்டிலும் இனிப்பானதாகக் கிடைத்தது. மரங்களிருந்து கிடைக்கும் கனிகளோ நறுமணத்துடன் தித்திப்பானவைகளாக இருந்தன. சிலர் படையினர் அவைகளைப் பார்த்த உடனேயே திருப்தி அடைந்தனர். ஆவலுடன் அவைகனை சாப்பிட்டனர். 71

772 அங்கே மிக அத்புதமான செடி கொடி மரங்களும், அபூர்வமான மிருகங்களும் பறவைகளும் இருந்தன. பெண்களே தேவகன்னிகைகளைப் போல் விளங்கினார்கள். பூமியும் பயிர் பச்சைகளுடன் செழிப்பாக இருந்தது. அது ஸத்வகுணமே நிறைந்த பூமி அதனால் படைவீரர்கள் எதற்கும் நப்பாசைப்படவில்லை. கண்யமாகவே நடந்து கொண்டனர் 72

773 ஆத்மானுபவத்திலேயே நீண்டநாட்கள் யோகத்தில் அமர்ந்த யோகீச்வரர்களின் நீண்டு படர்ந்த சடைமுடிகளில், பறவைகள் கூடுகள் கட்டிக்கொண்டு கவலையின்றி ஸுமுகமாக களைப்பு நீங்கி

कालाद्बहोर्मुनिकुलेन कथंचिदन्तर्नीवारशूकवदलक्ष्यत केवलं यत् ।
तद्दृश्यते स्म तरुणारुणकोटिदीप्तं कान्तामयं कलितकार्मुकम् आत्मतत्त्वम् ॥ ७४

उच्चावचैः शमधनाः पृतनाचराणां कोलाहलैः श्रुतिगणैरिव बोध्यमानाः ।
कन्दं फलं सलिलम् अप्युपजह्रिरे यत्तत् संप्रगृह्य बुभुजे स्वयमम्बिका सा ॥ ७५

सा तद्व्यतीत्य समुपेत्य च हेमकूटं तेनाध्वना च हरिवर्षम् अनुप्रपन्ना ।
तस्योत्तरं निषधभूधरम् आरुरोह प्राक्पश्चिमार्णवतरङ्गकृताभिषेकम् ॥ ७६

तस्मिन् गिरौ प्रचलिता पथि पश्चिमे सा मेरुं प्रदक्षिणतया परिवेष्टयन्ती ।
वासं किटेः ऋतुमयस्य हि केतुमालं वर्षं निनाय बलमुच्छ्रितकेतुमालम् ॥ ७७

भक्त्या प्रणम्य भगवन्तम् अभिष्टुता सा विज्ञेन तेन वसुधाभरणश्रमाणाम् ।
तद्दर्शितेन च पथा समवाप नीलं शैलं निजेन यशसा विशदं समन्तात् ॥ ७८

सा रम्यकं समतिलङ्घ्य हिरण्मयं च श्वेतं च शृङ्गिणमतीत्य महीधरौ द्वौ ।
प्राप्तोत्तरान् अथ कुरून् प्रयता ववन्दे पाण्ड्यात्मजा भगवतः प्रथमावतारम् ॥ ७९

यो नोदहारिषत वन्दिगणाः स्वकीया जैत्रध्वजो जयति यश्च निजे शताङ्गे ।
तेनादृता तदुपदर्शितमालुलोके सा तत्र वारिनिधिम् उत्तरम् उत्तरङ्गम् ॥ ८०

---

தூங்கிக்கொண்டிருந்தன. அப்படிப்பட்ட முனிவர்களுக்கு அருள்பாத்துக் கொண்டு, மூவுலகத்திற்கும் தாயாகிய தேவி மெதுவாகச் சென்றாள். 73

774 முனிவர்கள் வெகுகாலம் தவம் செய்து மிகவும் கஷ்டப்பட்டு உள்ளே மஞ்சளும் பசுமையும் கலந்த பயிர் கதிரைப் போன்று பரதத்வத்தைக் கண்டு பிடித்தார்கள். வேதங்களில் கூறுகின்ற அதே ஆத்ம தத்துவம்தான் முற்றிலும் சிவந்த நிறத்தில் வில் ஏந்திய கையுடன், கண்முன்னே காட்சி தந்தது,
நீவாரஸூக வர்தன்வி பீதாபாஸ்வத்ய நூபமா
தஸ்யா சிகாய மத்யே பரமாத்மா வ்யவஸ்தித: என்கிறது வேதம். 74

775 பவனி வரும் படைவீரர்கள் தங்கள் நடை களைப்பு தீர்ப்பதற்காக உரக்க கோலாஹலத்துடன் மதுரை மீனாக்ஷீ, காஞ்சி காமாக்ஷி, காசி விசாலாக்ஷீ என்று முறை வைத்து பாடிக்கொண்டே செல்கிறார்கள். இவர்களுடைய கோலாஹல சப்தங்கள் அங்கு தவம் செய்யும் முனிவர்களின் காதுகளில் வேதகோஷம்போல் ஒலித்தது. மெய்யடக்கத்தையே செல்வமாகக் கொண்ட அந்த முனிவர்கள் கண்திறந்து படைவீரர்களின் பவனியையும், அதன் முன் தேவியையும் தரிசித்தனர். தங்களிடம் இருந்த கிழங்குகளையும், பழங்களையும், குடுவையில் இருந்த தண்ணீரையும் தேவிக்கு ஸமர்ப்பணம் செய்தனர். தேவி அதை பரிவோடு அருந்தினாள்! 75

காலாத்வஹோர்முநிகுலேந கதஞ்சிதந்தர் நீவாரஶூகவத் அலக்ஷ்யத கேவலம் யத் ।
தத் த்ருஶ்யதே ஸ்ம தருணாருணகோடிதீப்தம் காந்தாமயம் கலிதகார்முகம் ஆத்மதத்வம்।।74
உச்சாவசை: ஶமதநா: ப்ருதநாசராணாம் கோலாஹலை: ஶ்ருதிகணைரிவ போத்யமாநா:।
கந்தம் பலம் ஸலிலமப்யுபஜஹ்ரிரே யத் தத் ஸம்ப்ரக்ருஹ்ய புபுஜே ஸ்வயமம்பிகா ஸா ।। 75
ஸா தத்வ்யதீத்ய ஸமுபத்ய ச ஹேமகூடம் தேநாத்வநா ச ஹரிவர்ஷம் அநுப்ரபந்நா ।
தஸ்யோத்தரம் நிஷதபூதரம் ஆருரோஹ ப்ராக்பஶ்சிமார்ணவதரங்கக்ருதாபிஷேகம்।। 76
தஸ்மின் கிரௌ ப்ரசலிதா பதி பஶ்சிமே ஸா மேரும் ப்ரதக்ஷிணதயா பரிவேஷ்டயந்தீ।
வாஸம் கிடே: க்ரதுமயஸ்ய ஹி கேதுமாலம் வர்ஷம் நிநாய பலமுச்ச்ரிதகேதுமாலம்।। 77
பக்த்யா ப்ரணம்ய பகவந்தம் அபிஷ்டுதா ஸா விஜ்ஞேந தேந வஸுதாபரணப்ரமாணாம்।
தத்தர்ஶிதேந ச பதா ஸமவாப நீலம் ஶைலம் நிஜேந யஶஸா விஶதம் ஸமந்தாத்।। 78
ஸா ரம்யகம் ஸமதிலங்க்ய ஹிரண்மயம் ச ஶ்வேதம் ச ஶ்ருங்கிணம் அதீத்ய மஹீதரௌ த்வௌ ।
ப்ராப்தோத்தராநத குரூந் ப்ரயதா வவந்தே பாண்ட்யாத்மஜா பகவத:ப்ரதமாவதாரம் ।। 79
யே நோதஹாரிஷத வந்திகணா: ஸ்வகீயா ஜைத்ரத்வஜோ ஜயதி யஶ்ச நிஜே ஶதாங்கே ।
தேநாத்ருதா ததுபதர்ஶிதமாலுலோகே ஸா தத்ர வாரிநிதிம் உத்தரமுத்தரங்கம் ।। 80

776 தேவி அந்த வர்ஷத்தைக் கடந்து, ஹேமகூடம் சென்றாள். பிறகு ஹரிவர்ஷத்தைக் கடந்து நிஷதமலைமீது ஏறினாள். நிஷதமலை இருபுறமும் கீழ் மேல் கடல்கள் அலைகளினால் அபிஷேகம் செய்தன. 76

777 அந்த மலையைக் கடந்து தொடர்ந்து யாத்திரை செய்தபோது, வழியில் மேரு மலை எதிர்ப்பட்டது. அதன்மேல் ஏறாமல் அதை வலம் வந்து கேதுமாலம் என்ற பிரதேசத்தை தேவி அடைந்தாள். அங்குதான் வராஹாவதாரம் செய்த யஜ்ஞவராஹ பெருமான் நித்யவாஸம் செய்கிறார். தேவி வரப்போகின்றாள் என்பதை அறிந்து வீதிகளெங்கும் வெற்றிக் கொடிகள் மாலையாக விரிந்து பறந்தன. 77

778 ஆதிவராஹ மூர்த்தி அல்லவா! மிகப்பெரிய பெருமாள் ஆயிற்றே! தேவி அவரை வணங்கினாள். தேவியின் உலகயாத்திரையின் தத்துவத்தை அறிந்த பெருமான் அவளை முந்திக்கொண்டு வணங்கி ஸ்தோத்திரம் செய்தார். 'பூமிக்கே அலங்காரமாக விளங்கப் போகிறாய்' என்றெல்லாம் புகழ்ந்தார். வராஹப்பெருமான் காட்டிய வழியில், அடுத்து நீல மலையை அடைந்தாள். தேவியின் புகழ் மலைமீது வியாபித்து அது வெள்ளை வெளேர் என்று இருந்தது. 78

779 ரம்யக பர்வதத்தையும் ஹிரண்மய பர்வதத்தையும் தாண்டி, பிறகு ச்வேதபர்வதம் மற்றும் இரு பர்வதங்களைக் கடந்து, வடக்கே உத்தரகுரு ப்ரதேசத்தை அடைந்து பாண்டியகுமாரி அங்கு வாஸம் செய்யும் பகவானுடைய முதல் அவதாரமான மத்ஸ்ய மூர்த்தியை வணங்கினாள். 79

प्रागेव ये कृतपदा यशसां प्रपञ्चाः स्वोपार्जिताः पितृपितामहसंभृताश्च ।
स्वं द्रष्टुमप्युपगतानिव तानशेषान् सा तत्र तत्र समवैक्षत फेनकूटान् ॥ ८१

पश्चात्समुद्यति रवौ कुरुषूत्तरेषु प्रागेव दक्षिणमिमं विदती पयोधिम् ।
उन्मज्जतात्र तिमिना नलसेतुनेव निःसंशयं व्यवजहार वरूथिनी सा ॥ ८२

अभ्युद्यतैस्त्रिभुवनाक्रमणेच्छयेव प्राप्तैः प्रतीरमपि वारिनिधेस्तरङ्गैः ।
लिल्ये समुल्लसस्दसंख्यतुरंगमस्या वीक्ष्य ह्रियेव विपुलं बलमन्तिकस्थम् ॥ ८३

अम्भोधरेषु सलिलग्रहणावतीर्णेष्वारात्प्रतिद्विपरुषा चलितात्रिहन्तुम् ।
आधोरणा जगृहुरङ्कुशसंप्रहारैः सेनागजान्धुरि नरेन्द्रकुमारिकायाः ॥ ८४

तस्मिन्दिशां विजयकर्मणि धाविता ये चाहवेष्वभिमुखं निहताः स्वयोधैः ।
तानर्णवे च तटसीम्नि च तत्र राज्ञो लब्धास्पदान्युगपदैक्षत पाण्ड्यकन्या ॥ ८५

पर्णाशनैः शमधनैः पनसाम्रजम्बूप्लक्षाशनैरपि जानपदैवृतेषु ।
वर्षेषु तेष्वनधिगत्य करं चरन्ती देवी चकाङ्क्ष जलधेरुपदां ग्रहीतम् ॥ ८६

यावत्परामृशति सा न करेण मौर्वीं यावद्दधाति च निषङ्गमुखे न दृष्टिम् ।
तावत्प्रगृह्य विविधानुपहारभेदां तामर्णवः शरणमेत्य वचो बभाषे ॥ ८७

780 மத்ஸ்யமூர்த்தி தனியாக இருந்தார். அவர் தேவிக்கு ஆதரவாகிவிட்டு, உபசாரங்கள் செய்து மேலே செல்ல வழிகாட்டினார். அதன் வழியே சென்று உயரமான அலைகளுடன் மோதுகின்ற வடகடலை தரிசித்தாள். தனக்கு துதிபாடகர்களை அவர் வைத்துக் கொள்ளவில்லை. அவர் தான் தேவியின் தேர் கொடியிலேயே இருக்கிறாரே. 80

781 தேவியின் புகழ்ச்செய்திகள் அவளுடைய முன்னோர்களின் புகழுடன் சேர்ந்து கொண்டு வெள்ளை வெளேரென்று நுரை மலைகளாக உயர்ந்து விட்டன. தேவியின் வரவை எதிர்நோக்கி அவை முன்னரே காத்திருக்கின்றன போலும்! 81

782 தேவி உத்திரகுசத்தினரின் நாட்டில் யாத்திரை செய்கிறாள். அந்த நாடு மேருமலையின் வடகடலை சுற்றி வந்து மேருவின் தென்புறம் இருக்கிறது. அங்கு மேருமலையின் பிரகாசத்தால் வெளிச்சம் தெரிகிறது, இன்னும் சூர்யோதயம் ஆகவில்லை. அதற்கு முன் கீழ்கடல், தேவியின் பரிவாரங்கள் ஸ்நானம் செய்து எழுந்துவிட்டது. நளன் கட்டிய ராமஸேதுவில் சூரியோதயத்திற்கு முன்பே பெரிய மீன்கள் துள்ளி துள்ளி ஆகாசத்தில் பாய்ந்து வீழ்ந்தன. அவற்றுடன் போட்டி போட்டுக் கொண்டு படைவீரர்கள் கடல்மூழ்கி மேலே கிளம்பினார்கள். 82

783 அங்கு கடல்அலைகள் மூவுலகத்தையும் ஆக்ரமிப்பதுபோல் கரைகளில் எழுந்தன. தேவியின் குதிரைகள் தைரியமாக அதில் நுழைந்தன. அவைகளின்

ப்ராகேவ யே க்ருதபதா யஶஸாம் ப்ரபஞ்சா: ஸ்வோபார்ஜிதா: பித்ருபிதாமஹஸம்ப்ருதாஶ்ச ।
ஸ்வம் த்ரஷ்டுமப்யுபகதாநிவ தாநஶேஷான் ஸா தத்ர தத்ர ஸமவைக்ஷத பேநகூடாந் ॥ 81
பஶ்சாத் ஸமுத்யதி ரவௌ குருஷூத்தரேஷு ப்ராகேவ தக்ஷிணமிமம் விததீ பயோதிம் ।
உந்மஜ்ஜதாத்ர திமிநா நலஸேதுநேவ நிஸ்ஸம்ஶயம் வ்யவஜஹார வரூதிநீ ஸா ॥ 82
அப்யுத்யதைஸ்த்ரிபுவநாக்ரமணேச்சயேவ ப்ராப்தை: ப்ரதீரமபி வாரிநிதேஸ்தரங்கை:।
லில்யே ஸமுல்லஸதஸங்க்யதுரங்கமஸ்யா வீக்ஷ்ய ஹ்ரியேவ விபுலம் பலமந்திகஸ்தம் ॥ 83
அம்போதரேஷு ஸலிலக்ரஹணாவதீர்ணேஷு ஆராத் ப்ரதித்விபருஷா சலிதான் நிஹந்தும் ।
ஆதோரணா ஜக்ருஹுரங்குஶஸம்ப்ரஹாரை: ஸேநாகஜான் துரி நரேந்த்ரகுமாரிகாயா:॥ 84
தஸ்மிந் திஶாம் விஜயகர்மணி தாவிதா யே சாஹவேஷ்வபிமுகம் நிஹதா: ஸ்வயோதை: ।
தாநர்ணவே ச தடஸீம்நி ச தத்ர ராஜ்ஞோ லப்தாஸ்பதான்யுகபதக்ஷத பாண்ட்யகந்யா ॥ 85
பர்ணாஶநை: ஶமதநை: பநஸாம்ரஜம்பூப்லக்ஷாஶநைரபி ச ஜாநபதைர்வ்ருதேஷு ।
வர்ஷேஷு தேஷு அநதிகத்ய கரம் சரந்தீ தேவீ சகாங்க்ஷ ஜலதேருபதாம் க்ரஹீதும் ॥ 86
யாவத் பராம்ருஶதி ஸா ந கரேண மௌர்வீம் யாவத் ததாதி ச நிஷங்கமுகே ந த்ருஷ்டிம் ।
தாவத் ப்ரக்ருஹ்ய விவிதாநுபஹாரபேதாம்ஸ்தாமர்ணவ: ஶரணமேத்ய வசோ பபாஷே ॥ 87

---

*தைரியத்தையும் துணிச்சலையும் பார்த்து வெட்கம் அடைந்த மற்ற படைகளும் துணிவுடன் இறங்கின. 83*

784 அங்கே தண்ணீர் உறிஞ்சுவதற்காக மேகங்கள் கீழே இறங்கிய பொழுது தேவியின் படையானைகள் தங்களுடைய எதிரியானைகள் என்று எண்ணி கோபத்துடன் அவைகளை ஆக்ரமிப்பதற்காக பாய்ந்த போது, யானைப்பாகர்கள் தங்களுடைய அங்குசத்தினால் அடக்கினார்கள். 84

785 அங்கு விஜய யாத்திரை செய்து கொண்டிருக்கும் போது, எதிர்க்கும் அரசர்களின் படைகள் தனக்கு எதிரிலேயே தன்னுடைய படையினரால் கொல்லப்பட்டு கீழே விழுவதையும், அப்படி வீழ்ந்தவர்கள் கடலில் மிதப்பதையும், மற்றும் பலர் பூமியில் சிதறிக்கிடப்பதையும் தேவி கண்டாள். 85

786 போகும் இடங்களில் தேவி, தபஸ்விகள் காய்ந்த இலைச்சரகுகளை உண்பதையும், சிலர் வழியில் கிடைக்கின்ற பலா, மா, நாவல், அத்திப்பழங்களை சாப்பிடுவதையும் பார்க்கிறாள். சில நகரங்களிலும், ஜம்பூப்லக்ஷம் போன்ற பிரதேசங்களிலும் உள்ள மனிதர்கள் கப்பம் கட்டாவிட்டாலும் அதற்காக கவலை கொள்ளாமல் கடல் அரசனிடமிருந்து மட்டும் கப்பம் வசூலிப்பதில் குறியாக இருந்தாள். 86

787 கடல் அரசனை ஒரு கை பார்த்து விடவேண்டும் என்று நினைத்து தேவி தன்னுடைய வில்லில் நாண் ஏற்றி அம்பரா தூளியிலிருந்து அம்பை எடுப்பதற்கு முன்பாகவே, கடல் அரசன் பலவிதமான வெகுமதிப்

मुक्तापगा विशति दक्षिणमम्बुराशिं जम्बूनदी विशति पूर्वमहं तु रिक्तः ।
वेदान्विचेतुम् उपशोधितगर्भसारः साक्ष्यत्र मे स भगवान्ननु मत्स्यराजः ॥ ८८

त्वद्बाहुसारविजितैर्जठरं गतैर्मे भूपालकैरवगता ह्यसि भूयसा त्वम् ।
सत्यप्रियासि शरणागतस्वत्सलासीति आनीतमेतदियमम्ब ! चिराभिगुप्तम् ॥ ८९

मैनाकभूधरचरास्त इमे गजेन्द्रा द्वीपे गभस्तिमति रत्नगणोऽयमासीत्
शङ्खा इमे जननि पश्चिमसिन्धुनीता येषां प्रकाममवमः स हि पाञ्चजन्यः ॥ ९०

इक्षूदधेरुपहृताः कमठाश्च मत्स्याः पक्वा इमे गुडरसाः परिशोषिता वा ।
हैयङ्गवीनमकरा इति संप्रतीता एते पुनर्जननि याचितका घृताब्धेः ॥ ९१

एषा जरापलितरोगविषादहन्त्री दिव्या सुरोदधिहृता मदिरा सुगन्धिः ।
दध्यर्णवादुपहृतं नवनीतमेतन्नाद्यापि वेद तदिदं नवनीतचोरः ॥ ९२

क्षीराब्धिनोपददिरे तुरगा गजाश्च क्षीराशिनः सुविमलानवधारयेमान् ।
एकं तु तच्छकलमैन्दवमास्त दत्तं प्रागेव तद्भगवते प्रमथाधिपाय ॥ ९३

सन्ति स्त्रियः कतिचिदत्र सखीरिमास्ते संपश्यता न तु मया समुपाहृतास्ताः ।
त्वं कामधेनुरसि कल्पलतासि च त्वं नाहारि तदिद्वतयमम्ब ! विडम्बनेति ॥ ९४

---

பொருள்களையும், விலையுயர்ந்த ரத்தினங்களையும் எடுத்துக்கொண்டு தேவியை சரணம் அடைந்து பின் வருமாறு பேசினான். 87

788 தேவி! முத்து நதி (தாமிரபரணி) தென் கடல் புகுகிறாள். ஜம்பூ நதியோ கீழ் கடல் ப்ரவேசிக்கின்றாள். என்னிடம் ஒன்றுமே இல்லை. வேதங்களைத் தேடுவதற்காக வந்தாரே மத்ஸ்யாவதாரம் செய்த பெருமான். அவர் வயிற்றைக் கலக்கி உள் இருந்த ரத்தினங்களை வாரி இறைத்து விட்டார். என்னிடம் ஒன்றுமே இல்லை என்பதற்கு அவர் தான் ஸாக்ஷி. 88

789 'அம்மா! உன் புஜவலிமையினால் அடிபட்டு எனக்குள்ளே கிடக்கின்றார்களே சில அரசர்கள், அவர்கள் உன்னை நன்கு அறிந்துள்ளார்கள்.' நீ உண்மையை மதிப்பவள், சரணம் அடைந்தவர்களை காப்பாற்றுபவள் என்று கூறினார்கள். எனக்குக் கிடைத்ததை வெகு நாட்களாகக் காப்பாற்றி வைத்திருந்ததை இப்பொழுது உனக்கு காணிக்கையாகக் கொண்டு வந்துள்ளேன்.' 89

790 என்னுள் கிடக்கின்ற மைனாக மலையில் சஞ்சரிக்கின்ற யானைகள் இவைகள். பாதாள லோகத்தில் உள்ள கபஸ்திமதி தீவில் கிடைக்கின்ற ரத்தினக்குவியல்கள் இவை. இந்த சங்குகள் மேற்க்குக்கடலிலிருந்து கொண்டு வந்தவை. இவைகள் மிகமிகச் சிறந்தவை. அவைகளில் கடைசீ ரகத்தைச் சேர்ந்ததுதான் விஷ்ணு பகவான் கையில் வைத்திருக்கும் பாஞ்சஜன்யம் என்கிற சங்கு ப்ரகாமம் அவம: என்கிறார் தீக்ஷிதர். 90

முக்தாபகா விஶதி தக்ஷிணமம்புராஶிம் ஜம்பூநதீ விஶதி பூர்வமஹம் து ரிக்த: ।
வேதான் விசேதுமுபஶோதிதகர்பஸார: ஸாக்ஷ்யத்ர மே ஸ பகவான் நநு மத்ஸ்யராஜ: ॥ 88

த்வபாஹுஸாரவிஜிதைர்ஜடரம் கதைர்மே பூபாலகைரவகதா ஹ்யஸி பூயஸா த்வம் ।
ஸத்யப்ரியாஸி ஶரணாகதவத்ஸலாஸீதி ஆநீதமேததியமம்ப! சிராபிகுப்தம் ॥ 89

மைநாகபூதரசராஸ்த இமே கஜேந்த்ரா த்வீபே கபஸ்திமதி ரத்நகணோऽயமாஸீத்।
ஶங்கா இமே ஜநநி ! பஶ்சிமஸிந்துநீதா யேஷாம் ப்ரகாமம் அவம: ஸ ஹி பாஞ்சஜந்ய: ॥ 90

இக்ஷூததேருபஹ்ருதா: கமடாஶ்ச மத்ஸ்யா: பக்வா இமே குடரஸா: பரிஶோஷிதா வா ।
ஹையங்கவீநமகரா இதி ஸம்ப்ரதீதா ஏதே புநர்ஜநநி! யாசிதகா க்ருதாப்தே: ॥ 91

ஏஷா ஜராபலிதரோகவிஷாதஹந்த்ரீ திவ்யா ஸுரோததிஹ்ருதா மதிராஸுகந்தி: ।
தத்யர்ணவாதுபஹ்ருதம் நவநீதமேதந்நாத்யாபி வேத ததிதம் நவநீதசோர: ॥ 92

க்ஷீராப்திநோபததிரே துரகா கஜாஶ்ச க்ஷீராஶிந: ஸுவிமலாநவதாரயேமான் ।
ஏகம் து தச்சகலமைந்தவமாஸ்த தத்தம் ப்ராகேவ தத் பகவதே ப்ரமதாதிபாய॥ 93

ஸந்தி ஸ்த்ரிய: கதிசித் அத்ர ஸகீரிமாஸ்தே ஸம்பஶ்யதா ந து மயா ஸமுபாஹ்ருதாஸ்தா:।
த்வம் காமதேநுரஸி கல்பலதாஸி ச த்வம் நாஹாரி தத்த்விதயமம்ப! விடம்பநேதி॥ 94

---

791 கரும்புக் கடலிலிருந்து வந்திருக்கின்றன இந்த உயர் ரக ஆமைகளும், மீன்களும். வெய்யில் இவைகளைப் பக்குவப்படித்தி சாப்பிட்டால் வெல்லம் போல் தித்திக்கும். உலர்த்தி காயவைத்து பிறகு சாப்பிட்டாலும், ருசியாக இருக்கும். இந்த வெண்ணிற மீன்களை புதுவெண்ணை காய்ச்சிய நெய்யில் வறுத்து சாப்பிட்டால் மிகமிக இனிக்கும். இவை நெய்கடலிலிருந்து யாசித்துப் பெற்றவை. 91

792 அம்மா! இதோ பார்த்தீர்களா. இதுதான் ஸுரக் கடலிலிருந்து (கள்ளுக்கடலிலிருந்து கொண்டு வரப்பட்ட தைவீக சக்தி வாய்ந்த நறு மணமுள்ள கள். மூப்பு, நரை, வயதான காலத்தில் ஏற்படும் ரோகங்களைப் போக்க வல்லது. இதோ! இது தயிர் கடலிலிருந்து கொண்டு வரப்பட்ட வெண்ணை. இதனுடைய சுவை இன்றும் வெண்ணை திருடும் கண்ணனுக்குத் தெரியாது. 92

793 பளிச்சென்று நிர்மலமாக காணப்படுகின்ற இந்த குதிரைகளும், யானைகளும் பாற்கடலிலிருந்து வந்தவை. இவைகளுக்கு பால் மட்டும் தான் உணவு. இந்த பாற்கடலிலிருந்து தோன்றிய சந்திரனுடைய ஒரு சிறு துண்டு (கலை) தான் முன்பே ப்ரமதகணங்களின் அதிபனாகிய சிவபெருமானுக்கு வழங்கப்பட்டது. 93

794 இங்கே சில பெண்கள் இருக்கிறார்கள். அவர்களை நான் உங்களுடைய தோழிகளாகவே பார்க்கிறேன். அவர்களை இங்கு அழைத்து வரவில்லை. இங்கே காமதேனு, கற்பகக்கொடி இரண்டும் உள்ளது. நீயே

ताम्रापगासलिलपानसुनिर्वृतानां किं कार्यमस्ति सुधया मधुरोदतो वा ।
मातस्तथाप्युपहृता मणिराशयोऽमी त्वच्छासनश्रमविनोदपदे नतेन ॥ ९५

सामुद्रदिव्यमणिजातिषु कौस्तुभश्च चिन्तामणिश्च भुवने विदिते मणी द्वे ।
अन्यादृशी जननि हारलतेयमेनां वैवाहिकोत्सवविधौ वह मद्विभूत्यै ॥ ९६

इत्थं निवेद्य निहितानुपहारभेदान् हारं वितार्य च करे विनतं पुरस्तात् ।
उत्थाप्य सा सुमतिना पतिमापगानाम् अम्बा जगाद वचनैरमृतावसिक्तैः ॥ ९७

सख्याः श्रियो मम यतो जनकोऽसि तावत्तद्धर्मतोऽसि जनको मम च त्वमेव ।
दत्त त्वयाभरणमेतदिति ब्रुवाणा सा तं पुपोष नयनाञ्चलचन्द्रिकाभिः ॥ ९८

सा तं विसृज्य समुपेत्य च पूर्ववर्षं भद्राश्वमत्र च नदीमतिलङ्घ्य सीताम् ।
तत्तीरसीमनि तपो विपुलं चरन्तम् अश्वाननं पुरुषमाद्यमसौ ववन्दे ॥ ९९

सा च स्वदर्शनकृतार्थतपःप्रबन्धादश्वाननाद्भगवतो वरमातिथेयात् ।
आसेदुषी विजयमप्रतिघातमग्रे जम्बूनदीप्रभवमापादिलावृतस्थम् ॥ १००

यान्युत्तरेषु कुरुषु प्रभवन्ति यानि जम्बूनदीपयसि यानि सुमेरुमूले ।
स्वर्णानि तानि सुमतिः पृथगानिनाय वर्णोत्तराण्यननुभूततया न लोभात् ॥ १०१

---

காமதேனுவாகவும், கற்பகக்கொடியாகவும் இருப்பதினால் அவை இரண்டையும் நான் கொண்டுவரவில்லை. 94

795 தாமிரபரணிநதியின் நீரைப்பருகி திருப்தி அடைந்தவர்களுக்கு பாற்கடலின் அமுதமோ, தேன் போன்று இனிக்கும் தண்ணீரோ எதற்கு? இருந்தும் அவைகளையும் ரத்தினக்குவியல்களையும், நீங்கள் ஆட்சிபுரியும் போது ஏற்படும் சிரமத்திற்கு மாற்றாக வினோதப்பொருள்களாக ஆகும் என்று கொண்டு வந்துள்ளேன். அவைகளையும் அர்ப்பணிக்கின்றேன். 95

796 கடலில் உண்டான ரத்தினங்களில் மிகவும் சிறந்தவை என கௌஸ்துப மணி, சிந்தாமணி ரத்தினம் ஆகிய இரண்டையும் கூறுவார்கள். இந்த முத்துமாலை தனிப்பட்ட மேன்மை உடையது. இதை நீங்கள் தங்களுடைய திருமண மங்களத்தின் போது அணிந்து கொள்ள வேண்டும். அதனால் எனக்கு மேன்மை கிடைக்கும். 96

797 இவ்வாறு விண்ணப்பித்துவிட்டு கடல் அரசன் வெகுமதிப் பொருள்களை முன்னே வைத்துவிட்டு, மணிஹாரத்தை கையில் கொடுத்துவிட்டு வணங்கினான். சுமதி நதிகளின் கணவனாகிய கடல் அரசனை எழுப்பினான். தேவி அமிருதம் தோய்ந்த வார்த்தைகளைக் கூறினாள். 97

தாம்ராபகாஸலிலபாநஸுநிர்வ்ருதாநாம் கிம் கார்யமஸ்தி ஸுதயா மதுரோததோவா ।
மாதஸ்ததாப்யுபஹ்ருதா மணிராஶயோऽமீ த்வச்சாஸநஶ்ரமவிநோதபதே நதேந ॥ 95
ஸாமுத்ரதிவ்யமணிஜாதிஷு கௌஸ்துபஶ்ச சிந்தாமணிஶ்ச புவநே விதிதே மணீ த்வே ।
அந்யாத்ருஶீ ஜநநி! ஹாரலதேயமேநாம் வைவாஹிகோத்ஸவவிதௌ வஹ மத்விபூத்யை ॥ 96
இத்தம் நிவேத்ய நிஹிதாநுபஹாரபேதான் ஹாரம் விதீர்ய ச கரே விநதம் புரஸ்தாத்।
உத்தாப்ய ஸா ஸுமதிநா பதிமாபகாநாம் அம்பா ஜகாத வசஸைரம்ருதாவஸிக்தை:॥ 97
ஸக்யா: ஶ்ரியோ மம யதோ ஜநகோऽஸி தாவத் தத்தர்மதோऽஸி ஜநகோ மம ச த்வமேவ ।
தத்தம் த்வயா ஹரணமேததிதி ப்ருவாணா ஸா தம் புபோஷ நயநாஞ்சலசந்த்ரிகாபி:॥ 98
ஸா தம் விஸ்ருஜ்ய ஸமுபேத்ய ச பூர்வவர்ஷம் பத்ராஶ்வமத்ர ச நதீமதிலங்கயஸீதாம் ।
தத்தீரஸீமநி தபோ விபுலம் சரந்தமஶ்வாநநம் புருஷமாத்யமஸௌ வவந்தே ॥ 99
ஸா ச ஸ்வதர்ஶநக்ருதார்ததப:ப்ரபந்தாத் அஶ்வாநநாத் பகவதோ வரமாதிதேயாத்।
ஆஸேதுஷீ விஜயமப்ரதிகாதமக்ரே ஜம்பூநதீப்ரபவமாபத் இலாவ்ருதஸ்தம் ॥ 100
யாந்யுத்தரேஷு குருஷு ப்ரபவந்தி யாநி ஜம்பூநதீபயஸி யாநி ஸுமேருமூலே ।
ஸ்வர்ணாணி தாநி ஸுமதி: ப்ருதகாநிநாய வர்ணோத்தராணி அநநுபூததயா ந லோபாத்॥ 101

798 'தாங்கள் என்னுடைய ஆருயிர் தோழி லக்ஷ்மியின் தந்தை அல்லவா? அந்த நியாயத்தின்படி எனக்கும் நீங்கள் தந்தை ஆவீர்! இந்த ஆபரணமாலை தாங்கள் அளித்ததல்லவா?' என்று சொல்லி ஆபரணத்தை மார்பில் அணிந்து கொண்டு மகிழ்ந்தாள், நிலவு போல் குளிர்ச்சியுள்ள தன் கடாக்ஷங்களினால் கடல் அரசனையும் மகிழ்வித்தாள். 98

799 இவ்வாறு தேவி அரசனுக்கு விடை கொடுத்தனுப்பிவிட்டு, மேலும் கீழே இறங்கி பத்ராச்வ வர்ஷத்தில் ஸீதா நதியைக் கடந்து அந்தநதியின் கரை எல்லையில் தவம் செய்துகொண்டிருக்கும் குதிரை முகம் கொண்ட ஆதி ஹயக்ரீவப் பெருமானை வணங்கினாள். 99

800 ஹயக்ரீவப்பெருமான் தான் தேவியை தரிசித்ததன் மூலம் தான் தவப் பயன் அடைந்ததாக மகிழ்ந்தார். தேவிக்கு அதிதி ஸத்காரம் விருந்தளித்தார். தன்னுடைய யாத்திரை தடையில்லாமல் இருக்கும் என்ற வரத்தை ஹயக்ரீவ பகவானிடமிருந்து பெற்றுக்கொண்டு, யாத்திரையைத் தொடர்ந்து ஜம்பூநதியின் உற்பத்தி இடமாகிய இளாவ்ருத வருஷத்தை அடைந்தாள். 100

801 மந்திரி சுமதி யாத்திரையின் பொழுது உத்தரகுரு க்ஷேத்திரத்திலும், ஜம்பூநதி தீரத்திலும், மேரு பர்வதத்தின் அடிவாரத்திலும் கிடைத்த தங்கக் கட்டிகளை தனித்தனியாக அவைகளின் ஒளி வர்ணம் இவைகளை இதுவரை பார்த்ததில்லை என்பதினால், அவைகளைக் காட்சி சாலையில் வைப்பதற்காக சேகரித்துக் கொண்டு வந்தான். பேராசையினால் அல்ல. 101

जम्बूनदीपयसि सर्वसुवर्णभूते सेनाभटा अनवधारितवर्णभेदाः
शैवालफेनकमलोत्पलशङ्खभृङ्गहम्सान्प्रथग्जगृहुराकृतिमात्रभेदात् ॥ १०२

पङ्कानि केचिदपरे सिकताः परे तु पद्मोत्पलानि कतिचिद्भ्रमरीमरालान्
मण्डूककूर्ममकरानितरे तु तत्र इमाशया जगृहिरपृतनासु योधाः ॥ १०३

प्रतिकरिपरिशङ्कितद्वाहिनीगन्धदन्तावलप्रतिहतिशिथिलक्षरज्जम्बुसंभूतभूरिद्रवा ।
सरिदियमभितोऽपि संप्लावयन्ती वनं तीरयोरकृत कृतनिवेशमस्मिन्बलं हैममेवाखिलम् ॥१०४

इति नवमः सर्गः

---

*802 ஜம்பூநதியின் தண்ணீரில் எல்லாம் தங்கமயமாக ஒரே வர்ணத்தில் காணப்பட்டன. எல்லாம் தங்கவர்ணமாகி விட்டதினால் அடையாளம் கொள்ளமுடியவில்லை. ஜம்பூ நதியின் பாசி, நிறை தாமரை, ஆம்பல், சங்கு, வண்டு, அன்னப்பறவைகள் எல்லாவற்றையும் தங்கமானவை என்று புரிந்து கொள்ளாமல், தங்கமே என்று தனித்தனியாக மூட்டைக் கட்டிக் கொண்டார்கள். 102*

*803 படைவீரர்களுக்கு. எல்லாம் தங்கமயமாக இருந்ததால் எல்லாவற்றையும் அப்படியே அள்ளிவிடலாம் போல இருந்தது. சிலர் சேற்றை, சிலர் மணலை, சிலர் தாமரை மலர்களை, சிலர் ஆம்பல் மலர்களை, சிலர் அன்னப்பறவைகளையும், சிலர் தவளை ஆமை, மீன்களையும் தங்கம் என்கிற ஆசையினால் அள்ளிக் கொண்டனர். 103*

ஜம்பூநதீபயஸி ஸர்வஸுவர்ணபூதே ஸேநாபடா அநவதாரிதவர்ணபேதா: ।
ஶைவாலபேநகமலோத்பலஶங்கப்ருங்க ஹம்ஸான் ப்ருதக் ஜக்ருஹுராக்ருதிமாத்ரபேதா॥ 102

பங்காநி கேசிதபரே ஸிகதா: பரே து பத்மோத்பலாநி கதிசித் ப்ரமரீமராலான் ।
மண்டூககூர்மமகராநிதரே து தத்ர ஹேமாஶயா ஜக்ருஹிரே ப்ருதநாஸு யோதா: ॥ 103

ப்ரதிகரிபரிஶங்கிதத்வாஹிநீகந்ததந்தாவல -
ப்ரதிஹதிஶிதிலக்ஷரஜ்ஜம்புஸம்பூதபூரித்ரவா ।
ஸரிதியமபிதோऽபி ஸம்ப்லாவயந்தீ வநம் தீரயோ:
அக்ருத க்ருதநிவேஶமஸ்மின் பலம் ஹைமமேவாகிலம் ॥ 104

இதி மஹாகவிநீலகண்டதீக்ஷிதப்ரணீதே ஶிவலீலார்ணவே நவம: ஸர்க: ।

---

804 எங்கும் தங்கமே காட்சி அளித்த அந்த ஜம்பூ நதிக்கரையில், படையானைகள் ஒவ்வொன்றும் தங்கமயமாகி விட்டதால், ஒன்றையொன்று அடையாளம் காணமுடியாமல் திகைத்தன. எங்கும் சற்றுத் தோண்டினாலும் தங்கமே திரவமாகப் பீரிட்டு அடித்தன. நதிக்கரை எங்கும் தங்க நீர் பிரவாஹம் செடி கொடிகளில் பாய்ந்தது. படைகளிலெல்லாம் தங்கத்தண்ணீர் பீய்ச்சி அடித்தது. எல்லாம் தங்கமயமாகி விட்டன. 104

**ஒன்பதாவது ஸர்கம் முடிவடைந்தது**

]

## दशमः सर्गः

दिक्पतीनथ विजेतुमुत्सुका देवशैलशिखराग्रवर्तिनः ।
उत्पपात सह सैनिकैर्दिवं स्यन्दनेन महता तटातका ॥ १

सज्जसिन्धुरतरङ्गसंकुला सा दिवि प्रचलिता पताकिनी ।
आवचार सहसामरावतीमप्रतर्कितनिरोधविह्वलाम् ॥ २

सत्पथोत्पतनजातकौतुकस्तब्धमुक्ततुरगा शनैः शनैः ।
यावदाप न दिवं तटातका तावदत्र ववृत महान्रणः ॥ ३

तद्भटाश्चिरनिरुद्धदोर्मदाः संप्रहारविमुखेषु राजसु ।
तं महाहवमुपस्थितं सुरै र्भागधेयफलमित्यमंसत ॥ ४

नित्यमुन्मुखचरान्सुरद्विपान् सायकैरिव निपात्य शायितान् ।
कीटपेषमपिषन्ससादिनः पद्भिरेव करिणो मदोद्धताः ॥ ५

यत्तदाहवभुवि प्रवर्तितं लोहितं निपतितं क्षमातले ।
अग्रतः सुरगिरेरिलावृते लोहितोदमिति तच्छ्रुतं सरः ॥ ६

दिग्जये भुवि हता रणेषु ये द्योचराः समभवन्विरोधिनः ।
ते निपेतुरुपजातमन्यवस्तेजसीव शलभाश्वमूमुखे ॥ ७

---

## பத்தாவது ஸர்கம்

805 தடாதகா தேவி பூமண்டலத்தை ஜயித்து விட்டாள். அடுத்து பூமண்டலத்தின் காவலர்களான திசை அதிபர்களையும் ஜயிக்க விரும்பினாள், படைகளோடு மேருமலையின் உச்சியிலிருந்தே ரதத்தில் ஏறிக்கொண்டு கிளம்பினாள். 1

806 தடாதகாவின் யானைப்படைகள் கொடிகளைத் தாங்கிக் கொண்டு முன்னே செல்ல, கடல் அலைகளைப் போல் கிடுகிடுக்கும்படி தேவியின் படைகள் திடீரென்று அமராவதி நகரத்தை வளைத்துக்கொண்டது. நினைத்தேபாராத இந்த முற்றுகையைக் கண்டு தேவர்கள் திக்குமுக்காடினார்கள். 2

807 ஆகாச வீதியில் தரை இல்லை. மேடு பள்ளங்களானவை. அவற்றில் தாவி ஏறிய குதிரைகள் கால் வைக்க இடமில்லாமல் சற்றுத் திகைத்தன. இங்கு வீதி இப்படித்தான் என்று கண்டு கொண்டு, மெதுவாக ஸ்வர்கத்தை எட்டிப் பிடித்தன. தேவி வந்து விட்டாள். அதற்குள் போர் மூண்டது. 3

808 பூலோக அரசர்கள் அனைவரும் போரிடத்தயங்கியதால், தேவியின் படைவீரர்களுக்கு இதுவரை தோள் வலிமையைக் காட்ட வாய்ப்பே

## அத தஶம: ஸர்க: ।

திக்பதீநத விஜேதும் உத்ஸுகா தேவஶைலஶிகராக்ரவர்திந: ।
உத்பபாத ஸஹ ஸைநிகைர்திவம் ஸ்யந்தநேந மஹதா தடாதகா ॥ 1

ஸஜ்ஜஸிந்துரதரங்கஸங்குலா ஸா திவி ப்ரசலிதா பதாகிநீ ।
ஆவசார ஸஹஸாமராவதீம் அப்ரதர்கிதநிரோதவிஹ்வலாம் ॥ 2

ஸத்பதோத்பதநஜாதகௌதுகஸ்தப்தமுக்ததுரகா ஶனை: ஶனை: ।
யாவதாப ந திவம் தடாதகா தாவதத்ர வவ்ருதே மஹான் ரண: ॥ 3

தத்படாஶ்சிரநிருத்ததோர்மதா: ஸம்ப்ரஹாரவிமுகேஷு ராஜஸு ।
தம் மஹாஹவம் உபஸ்திதம் ஸுரைர்பாகதேயபலமித்யமம்ஸத ॥ 4

நித்யமுந்முகசரான் ஸுரத்விபாந் ஸாயகைரிவ நிபாத்ய ஶாயிதான் ।
கீடபேஷமபிஷன் ஸஸாதிந: பத்பிரேவ கரிணோ மதோத்ததா: ॥ 5

யத்ததாஹவபுவி ப்ரவர்திதம் லோஹிதம் நிபதிதம் க்ஷமாதலே ।
அக்ரத: ஸுரகிரேரிலாவ்ருதே லோஹிதோதமிதி தச்ச்ருதம் ஸர: ॥ 6

திக்ஜயே புவி ஹதா ரணேஷு யே த்யோசரா: ஸமபவந்நிரோதிந: ।
தே நிபேதுருபஜாதமந்யவஸ்தேஜஸீவ ஶலபாஶ்சமூமுகே ॥ 7

---

இல்லாமல் போய்விட்டது. இப்பொழுது தான் நல்ல தருணம். தேவர்களுடன் போர். இதை பாக்கியமாகவே கருதினார்கள். 4

809 எப்பொழுதும் போருக்கு முதல் நிற்பது யானைப்படை தான். தேவியின் படையானைகள், தேவர்களின் யானைகளின் மீது அம்பு பாய்வதுபோல பாய்ந்து, புழுக்களைப்போல மிதித்து, நகக்கி யானைப் பாகர்களையும் தள்ளி. மிதித்து புரட்டி விட்டன. 5

810 ஸ்வர்கலோகத்தின் முனையில் இளாவிருத வர்ஷம் உள்ளது. அதைச் சுற்றியுள்ள கடல் நீர் ரத்தம் போல் சிவந்து காணப்படுகிறது. ஏன் தெரியுமா? தேவியின் படையுடன் மோதிய தேவர்களின் படைகள் அடிபட்டு வீழ்ந்தபோது பெருகின ரத்தம் பாய்ந்து, அது தண்ணீருடன் கலந்து ரத்தக்கடல் ஆகிவிட்டது! 6

811 இதற்குமுன் தேவி பூமியில் திக்விஜயம் செய்தபோது அடிபட்ட வீரர்களுக்கு, ஸ்வர்கத்திற்கு வந்தும் கூட மதம் தீரவில்லை. ஸ்வர்கத்திலும் தேவியுடன் போரிட்டார்கள். அவர்கள் அனைவரும் நெருப்பில் வீழ்ந்த விட்டில் பூச்சிகளைப்போல் அழிந்தனர். வீண் வம்பினால் தேவலோக சுகத்தையும் இழந்தனர். 7

812 முதல் நாள் போரில் அடிபட்டு வீழ்ந்த தேவப்படைவீரர்கள்,ஸ்வர்கம் வந்து அமுதம் உண்டு புத்துணர்ச்சி பெற்று மறுநாள் போர்புரிய வந்தார்கள்.

अभ्युपेयुरुपरेद्युरेव याऽन्संप्रसाद्य बहुधा जयाय ये।
संप्रजह्रुरपरेद्युराहवे सैनिकाः सुमनसस्त एव तान्॥ ८
भर्त्सिता दिविचराश्चमू चरैस्त्वंकृतेन युधि हुंकृतेन च।
देवमानवदशाविपर्ययं वीक्ष्य वीक्ष्य वितथं निशश्वसुः॥ ९
स्वे बले परबले च ये हतास्तान्द्वयानपि समेत्य देवताम्।
तत्क्षणात् पुनरुपस्थितान्रणे वीक्ष्य विस्मयमवाप सा चमूः॥ १०
तान्निरीक्ष्य समशीर्षिकान्रणे सैनिकेषु कतिचिन्महारथाः।
संप्रबोध्य मलयध्वजात्मजां सन्निपेतुरनपेक्षितासवः॥ ११
भूसुरस्वमुपभुज्य केवलं ते हि पुष्टवपुषो दिवौकसः।
तन्मुखे शिथिलतां जगाहिरे सेतवः पयसि सैकता इव॥ १२
यावदस्त्रमभिमन्त्रितं सुरैः संनिकर्षति न तान्महारथान्।
तावदेव सह तैः पलायितैस्तत्तदस्त्रमपि धावितं पुरः॥ १३
हन्यमानम् अमृतान्धसां बलं वीक्ष्य केऽपि युधि मानवामराः।
पूर्वबान्धवदशोपदर्शिनस्तेषु सान्त्ववचनानि चक्रिरे ॥ १४

---

*அவர்கள் முதல் நாள் கெஞ்சிக்கூத்தாடி உயிர் பிழைத்தவர்கள். மறுநாளும் தேவியின் அதே போர் வீரர்களுடன் மோதினார்கள். மறுநாளும் செம்மையாக அடிபட்டனர்.* *8*

*813 தேவியின் படைவீரர்கள் தேவர்களையும் அவர்களுடைய வீரர்களையும் பெயர் குறிப்பிட்டு சவால் விட்டார்கள் (''என்னடா வாயு! போருக்கா வந்தாய்?'' போன்று பேசினார்கள்). ''தேவர்கள் மானிடர்கள் பரஸ்பரமதிப்பு தலைகீழாகிவிட்டதே'' என்று தேவர்கள் பெருமூச்சுவிட்டார்கள்.* *9*

*இங்கு 'நீலகண்டவிஜய சம்பூ' கிரந்தத்தில், தேவாஸுர யுத்தத்தை வருணிக்கும் பொழுது தீக்ஷிதரின் ஒரு ச்லோகம் நினைவுபடுத்தப்படுகிறது. அஸுரர்கள், மஹாபலியின் தலைமையில் ஸ்வர்கத்தை முற்றுகையிட்டார்கள். கடுமையான போரில் எட்டு திக்பாலர்களும் இந்திரனுக்கு உதவியாக வந்தார்கள். அப்பொழுது திசை அதிபதியான வாயு தேவனைப் பார்த்து ஒரு அஸுரவீரன் எளக்காரமாகப் பேசுகிறான். 'பாருடா! வாயு போருக்கு வருகிறான். கிழவி கையில் ஒரு பிய்ந்த முறத்தை வைத்துக் கொண்டு விசிறிக் கொள்வாள். அதிலிருந்தது இது, அது' (அந்தக் காற்று) போருக்கு வந்துவிட்டது.* *10*

யோ ஜாயதே சிதிலஸூர்ப பரி ப்ர மரைப்யோ
ஜாயதே கதமஸாவபி கந்தவாஹ:

**அப்யுபேயுரதரேத்யுரேவ யான் ஸம்ப்ரஸாத்ய பஹுதா ஜயாய யே ।**
**ஸம்ப்ரஜஹ்ருரபரேத்யுராஹவே ஸைநிகா: ஸுமநஸஸ்த ஏவ தான் ॥** 8

**பர்த்ஸிதா திவிசராஸ்சமூசரைஸ்த்வங்க்ருதேந யுதி ஹுங்க்ருதேந ச ।**
**தேவமாநவதஶாவிபர்யயம் வீக்ஷ்ய வீக்ஷ்ய விததம் நிஶஸ்வஸு: ॥** 9

**ஸ்வே பலே பரபலே ச யே ஹதாஸ்தான் த்வயாநபி ஸமேத்ய தேவதாம் ।**
**தத்க்ஷணாத் புநருபஸ்திதான் ரணே வீக்ஷ்ய விஸ்மயமவாப ஸா சமூ: ॥** 10

**தான் நிரீக்ஷ்ய ஸமஶீர்ஷிகான் ரணே ஸைநிகேஷு கதிசிந்மஹாரதா: ।**
**ஸம்ப்ரபோத்ய மலயத்வஜாத்மஜாம் ஸந்நிபேது: அநபேக்ஷிதாஸவ: ॥** 11

**பூஸுரஸ்வமுபபுஜ்ய கேவலம் தே ஹி புஷ்டவபுஷோ திவௌகஸ: ।**
**தந்முகே ஶிதிலதாம் ஜகாஹிரே ஸேதவ: பயஸி ஸைகதா இவ ॥** 12

**யாவதஸ்த்ரமபிமந்த்ரிதம் ஸுரை: ஸந்நிகர்ஷதி ந தான் மஹாரதான் ।**
**தாவதேவ ஸஹ தை: பலாயிதைஸ்தத்ததஸ்த்ரமபி தாவிதம் புர: ॥** 13

**ஹந்யமாநமம்ருதாந்தஸாம் பலம் வீக்ஷ்ய கேऽபி யுதி மாநவாமரா: ।**
**பூர்வபாந்தவதஶோபதர்ஶிநஸ்தேஷு ஸாந்த்வவசநாநி சக்ரிரே ॥** 14

---

*814 மிகவும் விசித்திரமான போராக இருந்தது. தேவியின் படையிலும் சரி. தேவர்களின் படையிலும் சரி அடிபட்டு வீழ்ந்தவர்கள்,போரில் மார்பில் அடி வாங்கி உயிரிழந்ததால், புத்துயிர் பெற்று தேவலோகம் வந்து தேவர் படையில் சேர்ந்து மறுபடியும் போருக்கு வருகிறார்கள். இதைக் கண்டு தேவியின் படை ஆச்சரியமடைந்தது. (தேவஸ்ய பாவ: தேவதாம் - தெய்வத் தன்மை)* 11

*815 இங்கு தீக்ஷிதர் ஒரு வேடிக்கை செய்கிறார். தேவியின் படைவீரர்கள் போரில் அடிபட்டு வீர ஸ்வர்கம் வந்து தேவர்களுடைய படைகளில் சேர்ந்து போரிட்டார்கள். ஸமஸீர்ஷிகான் ஒரே தலைமையில் தேவர்படை பெருகி விட்டது. மானுடப்படை குறுகி படைத்தலைவர்களுக்கு கவலை வந்து விட்டது. 'எங்களுக்கு உயிரே வேண்டாம் உயிர் இருந்தால் தானே அது பிரிந்து போய் தேவர்களாகி விடும்.'என்று உயிரைப் பொருட்படுத்தாமல் போரிட்டார்கள். மிகவும் ரஸிக்கத்தக்க கற்பனை.* 12

*816 தேவர்கள் பூமியில் உள்ள ப்ராஹ்மணர்கள் யாகங்கள் செய்து கொடுக்கும் ஹவிர்பாகத்தை உண்டு புஷ்டியாக வளர்ந்தவர்கள். இங்கே போரில் அதே ப்ராஹ்மணர்கள் போர்வீரர்களாக எதிர்த்து நிற்பதைக் கண்டு அவர்களுடன் போர்புரிவதா என்று ஒதுங்கி, வெள்ளத்தில் மணலால் கட்டிய அணை சிதறுவது போல் சிதறி ஓடினார்கள்.* 13

*817 தேவர்கள் மந்திரம் ஜபித்து அஸ்திரங்களைத் தொடுத்தார்கள். ஆனால் அவை தேவியின் படைத்தலைவர்களை நெருங்கவே முடியவில்லை. அதை அறிந்த தேவர்கள் பின் வாங்கினார்கள். அவர்களுடைய அஸ்திரங்கள் அவர்களையே துரத்தின.* 14

तां पलायनपराम् इतस्ततो दुर्ग्रहां दिविषदामनीकिनीम् ।
संग्रहीतुमपटुः शतक्रतुः संमुखीनम् अचलत्स्वयं पुरः ॥ १५

तं निरीक्ष्य शतमन्युम् अग्रतस्तन्मुखे चलितमम्बिकारथम् ।
स्तम्भयन्प्रणतिभिश्च सान्त्वनैः संचचाल सुमतिः स्वयं पुरः ॥ १६

तां विहाय शतमन्युतां निजां संश्रितं युधि सहस्रमन्युताम् ।
शक्रमेक्ष्य सुमतौ जयाशिष श्चोतसा प्रयुयुजे तटातका ॥ १७

ये शरा नमुचिजम्भभेदिनो ये च वृत्रबलघातिनो हरेः ।
ते किलार्धपथ एव दारिताः सायकैः सुमतिचापनिःसृतैः ॥ १८

आददे जयति मीनलोचनेति एकमेव मनुमीरयन्नयम् ।
यच्छरानजनि तेन निष्फलं दिव्यमस्त्रमखिलं दिवस्पतेः ॥ १९

मार्गणाः कतिपये मरुत्वतस्तस्य मर्मसु पतन्ति वा न वा ।
मर्मसु प्रविविशुस्तदाशुगाः सर्व एव तु मघोनि दृङ्मये ॥ २०

अक्षिभिः शरचितैः पुरःस्थितैरक्षतैस्तु चरमाङ्गवर्तिभिः ।
निष्फलैः शतमखे तु निष्क्रिये संदधे न सुमतिः शिलीमुखान् ॥ २१

तं निरीक्ष्य समयं चमूचराश्चोरहूणयवनादयो भटाः ।
भूषणैर्मणिमयैः समं हरेरायुधं कुलिशमप्यपाहरन् ॥ १२

*818 அமுதமுண்ட தேவர்கள் படை இப்படி அடிபட்டு ஓடுவதைக் கண்டு பூவுலகில் யாகம் செய்து தேவலோகத்திற்கு வந்த காமதேவர்கள் 'என்ன இருந்தாலும் அவர்களும் நம் முன்னோர்கள்தானே பாவம்! இப்படி அடிபட்டு ஓடுகிறார்களே' என்று அனுதாபத்துடன் ஆறுதல் கூறினார்கள். 14*

*819 இப்படி அடிபட்டு இங்கும் அங்கும் ஓடுகின்ற தம் படையினரைக் கண்டு, ஒன்று சேர்க்கமுடியாமல் இந்திரன் தானே படைகளின் முன்னே சென்று நின்றான். 15*

*820 போர்முனையில் எதிரே இந்திரன் நிற்பதைக் கண்டதும், அங்கே சென்றது தேவியின் ரதம். மஹாமந்திரி சுமதி இந்திரனை முன்னேறவிடாமல் நமஸ்கரித்து சமாதான வார்த்தைகளைச் சொல்லி தடுத்து நிறுத்தினான். 16*

*821 இந்திரன் நூறுமடங்கு கோபமுடையவன்தான். இப்பொழுது போர்க்களத்தில், அதை ஆயிரம் மடங்காக செய்துகொண்டதை பார்த்து, அவன் மந்திரியாருக்கு ஏதாவது கேடு விளைவித்து விடப்போகிறானோ என்று கருதி, தடாதகா, தன் மனதிற்குள்ளே மந்திரி வெற்றி பெற ஆசி அருளினாள். 17*

*822 முன்பு தேவாஸுரப்போரில் நமுசி, ஜம்பன், விருத்திரன், பலன் போன்ற அஸுரர்களின் மீது எந்த பாணங்களை எய்தி இந்திரன் வெற்றி*

**தாம் பலாயநபராமிதஸ்ததோ துர்க்ரஹாம் திவிஷதாமநீகிநீம் ।**
**ஸங்க்ரஹீதுமபடு: ஶதக்ரது: ஸம்முகீநமசலத் ஸ்வயம் புர: ।।** 15

**தம் நிரீக்ஷ்ய ஶதமந்யுமக்ரதஸ்தந்முகே சலிதமம்பிகாரதம் ।**
**ஸ்தம்பயன் ப்ரணதிபிஶ்ச ஸாந்த்வநை: ஸஞ்சசால ஸுமதி: ஸ்வயம் புர: ।।** 16

**தாம் விஹாய ஶதமந்யுதாம் நிஜாம் ஸம்ஶ்ரிதம் யுதி ஸஹஸ்ரமந்யுதாம் ।**
**ஶக்ரமேக்ஷ்ய ஸுமதௌ ஜயாஶிஷஶ்சேதஸா ப்ரயுயுஜே தடாதகா ।।** 17

**யே ஶரா நமுசிஜம்பபேதிநோ யே ச வ்ருத்ரவலகாதிநோ ஹரே: ।**
**தே கிலார்தபத ஏவ தாரிதா: ஸாயகை: ஸுமதிசாபநிஸ்ஸ்ருதை: ।।** 18

**ஆததே ஜயதி மீநலோசநேதி ஏகமேவ மநுமீரயன் அயம் ।**
**யச்சராநஜநி தேந நிஷ்பலம் திவ்யமஸ்த்ரம் அகிலம் திவஸ்பதே: ।।** 19

**மார்கணா: கதிபயே மருத்வதஸ்தஸ்ய நர்மஸு பதந்தி வா நவா ।**
**மர்மஸு ப்ரவிவிஶுஸ்ததாஶுகா: ஸர்வ ஏவ து மகோநி த்ருங்மயே ।।** 20

**அக்ஷிபி: ஶரசிதை: புர:ஸ்திதை: அக்ஷதைஸ்து சரமாங்கவர்திபி: ।**
**நிஷ்பலை: ஶதமகே து நிஷ்க்ரியே ஸந்ததே ந ஸுமதி: ஶிலீமுகான் ।।** 21

**தம் நிரீக்ஷ்ய ஸமயம் சமூசராஶ்சோரஹூணயவநாதயோ படா: ।**
**பூஷணைர்மணிமயை: ஸமம் ஹரேராயுதம் குலிஶமப்யபாஹரன் ।।** 22

---

*பெற்றானோ, அதே பாணங்களை தற்போது மந்திரியின் மீது ஏவினான். ஆனால், அவை அனைத்தும் மந்திரியை அடைவதற்கு முன்பே, அவனுடைய பாணங்களினால் சிதறி வீழ்ந்தன.* 18

*823 மந்திரி சுமதி 'மீனாக்ஷீ ஜயதி' என்கிற ஒரே மந்திரத்தைக்கூறிக்கொண்டு பாணங்களைச் செலுத்தினான். அவனுடைய பாணங்களுக்கு முன் தேவராஜனுடைய அஸ்திரங்கள் எல்லாம் த்வம்ஸமாகி பயனற்றுப் போயின.* 19

*824 இந்திரன் செலுத்திய பாணங்களில் சில மந்திரியின் மர்மஸ்தானங்களை வீழ்த்தினவோ என்னவோ? ஆனால், அவை சுவரில் அடிபட்ட பந்துபோல இந்திரனுடைய உடலெங்கும் பரவியுள்ள ஆயிரம் கண்களிலும் தைத்தன.* 20

*825 உடன் முன்னே இருந்த இந்திரனின் கண்களிலெல்லாம் மந்திரியின் பாணங்கள் பாய்ந்தன. முதுகில். பாணங்கள் புகவில்லை. பயனில்லையே! இந்திரன் செயலற்றுப் போனான். இதைக் கண்ட சுமதி பாணமெய்துவதை நிறுத்திக் கொண்டான்.* 21

*826 இந்திரன் பார்வையற்று இருக்கிற நிலையில் தேவியின் படைகளில் இருந்த கள்ளர்கள். ஹூணர்கள், யவனர்கள் எல்லோரும் இந்திரனுடைய மேனியில் இருந்த ரத்தினாபரணங்களை கழற்றி கவர்ந்தார்கள். அவனுடைய வஜ்ராயுதத்தையும் பிடுங்கிக் கொண்டனர்.* 22

स्थापितो भुवनमातुरग्रतः स प्रसह्य पृतनाग्रचारिभिः ।
लज्जया शररुजा भयेन च स्तम्भवद्वलभिदास्त केवलम् ॥ २३

संप्रणम्य सुमतिस्तटातकां धारयञ्छिरसि तत्पदं चिरात् ।
लालितो बहुविधाभिरुक्तिभिस्तं च तच्चरणयोर्न्यपातयत् ॥ २४

वीक्षितः स करुणार्द्रया दृशा वासवश्चरणयोर्न्तस्तया
स्वस्थतामुपगतो यथापुरं प्राह तां सुमतिनानुमोदितः ॥ २५

पश्य देवि ! पदमेतदामरं पाल्यते स्म मलयध्वजेन यत् ।
अभ्युपेत्य शतशः सहायतामाहवेषु दनुजात्रिगृह्णता ॥ २६

स्वर्गवीयमयमप्सरोगणः पञ्च देवि ! सुरपादपा इमे ।
एष सागरभवो मणिर्महानेष यूथपतिरेष सैन्धवः ॥ २७

त्वं गृहाण वितरानुयायितां मां नियोजय यथापुरं तु वा ।
त्वं प्रमाणममराश्रिया समं द्यौरियं तव पदे निवेदिता ॥ २८

आगतां नरचमूमतर्कितां तावकीति कथमप्यजानता ।
प्रत्यवस्थितमिव क्षणं हि यत् तत्क्षमस्व शरणागते मयि ॥ २९

इत्थमुक्तवति पाकशासने सा जगाद शरणागतप्रिया ।
क्षान्तमेव निखिलं मयाधुना शान्तचेतसि पुरंदर ! त्वयि ॥ ३०

---

*827 படைத்தலைவர்கள் தேவியின் முன்னிலையில் இந்திரனைக் கொண்டு நிறுத்தினர். ஒரு புறம் இயலாமையினால் வெட்கம், மறுபுறம் பாணங்கள் தைத்ததினால் உடல் வேதனை, இன்னும் என்ன நேருமோ என்கிற பயம். இவற்றுடன் இந்திரன் தூண் போல அசைவற்று நின்றான். 23*

*828 மந்திரி சுமதி தடாதகா தேவியை வணங்கினாள். தேவியின் திருவடிகளை வெகு நேரம் தன் தலையில் தரித்துக்கொண்டாள். தேவி பலவாறு மந்திரியை பாராட்டினாள். பிறகு இந்திரனையும் தேவியின் திருவடிகளில் வீழ்த்தினாள். 24*

*829 தேவி இந்திரனை கருணையோடு கடாக்ஷித்தாள். தேவியின் திருவடிகளில் வீழ்ந்த இந்திரன். மெதுவாக எழுந்து தன்நிலை எய்தினான். பிறகு மந்திரியின் அனுமதி பெற்று தேவியிடம் கூறினான். 25*

*830 தேவி இந்த தேவலோகத்தை சற்று கடாக்ஷியுங்கள். தங்கள் தந்தை மலயத்வஜபாண்டியன் ஆட்சியின் பொழுது, அஸுரர்களுடன் ஏற்பட்ட பல போர்களில், தங்கள் தந்தையின் உதவியுடன் அஸுரர்களை வென்று இப்பொழுது ஆட்சி புரிந்து வருகிறேன். 26*

ஸ்தாபிதோ புவநமாதுரக்ரத: ஸ ப்ரஸஹ்ய ப்ருதநாக்ரசாரிபி: ।
லஜ்ஜயா ஶரருஜா பயேந ச ஸ்தம்பவத்வலபிதாஸ்த கேவலம் ।। 23

ஸம்ப்ரணம்ய ஸுமதிஸ்தடாதகாம் தாரயஞ்சி ரஸி தத்பதம் சிராத் ।
லாலிதோ பஹுவிதாபிருக்திபிஸ்தம் ச தச்சரணயோர்ந்யபாதயத் ।। 24

வீக்ஷித: ஸ கருணார்த்ரயா த்ருஶோ வாஸவஶ்சரணயோர்நதஸ்தயா ।
ஸ்வஸ்ததாம் உபகதோ யதாபுரம் ப்ராஹ தாம் ஸுமதிநாऽநுமோதித: ।। 25

பஶ்ய தேவி ! பதமேததாமரம் பால்யதே ஸ்ம மலயத்வஜேந யத் ।
அப்யுபேத்ய ஶதஶ: ஸஹாயதாம் ஆஹவேஷு தநுஜான் நிக்ருஹ்ணதா ।। 26

ஸ்வர்கவீயம் அயமப்ஸரோகண: பஞ்ச தேவி ! ஸுரபாதபா இமே ।
ஏஷ ஸாகரபவோ மணிர்மஹான் ஏஷ யூதபதிரேஷ ஸைந்தவ: ।। 27

த்வம் க்ருஹாண விதராநுயாயிதாம் மாம் நியோஜய யதாபுரம் து வா ।
த்வம் ப்ரமாணம் அமரஶ்ரியா ஸமம் த்யௌரியம் தவ பதே நிவேதிதா ।। 28

ஆகதாம் நரசமூம் அதர்கிதாம் தாவகீதி கதமப்யஜாநதா ।
ப்ரத்யவஸ்திதமிவ க்ஷணம் ஹி யத் தத் க்ஷமஸ்வ ஶரணாகதே மயி ।। 29

இத்தமுக்தவதி பாகஶாஸநே ஸா ஜகாத ஶரணாகதப்ரியா ।
க்ஷாந்தமேவ நிகிலம் மயாதுநா ஶாந்தசேதஸி புரந்தர! த்வயி ।। 30

---

831 அன்னையே! இதோ காமதேனு. இதோ அப்ஸரஸ்களின் வரிசைகள். இதோ ஐந்து கற்பக விருக்ஷங்கள். இதோ பாற்கடல் உதித்த சிந்தாமணி, இதோ ஐராவத யானை, இதோ குதிரை உச்சைச்ரவஸ், 27

832 தேவி! ஏற்றுக் கொள்ளுங்கள். உங்களுடன் சேர அனுமதியுங்கள். இந்த தேவலோகம் உங்கள் திருவடியில் சமர்பிக்கப்படுகிறது. ஏற்றுக்கொள்ளுங்கள். என்னை முன்போல் இந்த பதவியில் வைத்தாலும் சரி எல்லாவற்றையும் நீங்களே முடிவு செய்யுங்கள். 28

833 எதிர்பாராமல் இங்கே வந்துள்ள மானிடப்படை தங்களுடையது என்று அறியாமல் எமது படையினர் சிறிது காலம் எதிர்க்க நேரிட்டது. தங்கள் திருவடியை சரணம் அடைந்துவிட்டோம். தவறுகளை பொறுத்துக் கொள்ள வேண்டும். 29

834 இவ்வாறு இந்திரன் வேண்டிக் கொண்டவுடன், திருவடி பணிந்தவர்களிடம் அன்புடைய தேவி கூறினாள். 'புரந்தரனே! எல்லாவற்றையும் பொறுத்தோம் அடங்கிவிட்ட உமது விஷயத்தில் எமக்குப் பெருமை தான். 30

स्वीकृतं तदखिलं त्वयार्पितं स्वीकृतं पुनरिदं मया तव ।
एक एव गतशङ्कमिन्द्रतां वर्तय त्वमिह वासरे विधेः ॥ ३१
सुन्दरेशमभिषेक्तुमर्चितुं स्वर्गवीं सुरतरूंश्च केवलम् ।
मामनु प्रहिणु वासवेति सा तं विसृज्य चलिता ततः पुरः ॥ ३२
आनकध्वनिभिरश्वहेषितैः क्ष्वेलितैर्द्विरदबृंहितैरपि ।
प्रज्वलन्नपि शशाम पावकः पाण्ड्यराजदुहितुर्विनिर्गमे ॥ ३३
मा विधेहि सुमतेऽभिषेणनं रुन्धि रुन्धि चलितां पताकिनीम् ।
मामको हि जनका हुताश इत्यादिदेश मलयध्वजात्मजा ॥ ३४
यावदित्थमनुशास्ति सा चमूं तावदेव तनयादिदृक्षया ।
मङ्गलान्युपहरन्नुपायनान्याजगाम धुरि हव्यवाहनः ॥ ३५
सावरुह्य सहसा शताङ्गतः संप्रणम्य मुदिता हुताशनम् ।
प्रार्थिता मुहुरनेन तानि च प्राभृतानि विविधान्युपाददे ॥ ३६
जम्बुसिन्धुतटसंभवा निशा नीलशैलशिखराहृता मषी ।
अम्बराणि मणयश्च भास्वराः स्वाहया प्रथगथोपजह्रिरे ॥ ३७
पाणिपीडनमहोत्सवे तव प्रार्थये सपदि साक्षितामिति ।
ईरिते हुतवहेन सस्मिता तं विसृज्य चलति स्म सा पुरः ॥ ३८

---

*835 இந்திரனே! நீ அளித்தவற்றையெல்லாம் ஏற்றுக் கொண்டு விட்டோம்.ஒன்றை மட்டும் உனக்கே நான் உரிமையாக்கி விட்டேன்- புனரிதம் மயா தவ ஸ்வீக்ருதம் அச்சமில்லாமல் நீயே இந்திர பதவியை ப்ரஹ்ம தேவனுடைய பகல் (ப்ரஹ்மதேவனுடைய ஒரு பகல் பொழுது வரை) ஏற்று நடத்து' (ஸ்வீக்ருதம் என்ற சொல்லை 'ஏற்றுக்கொள்ளப்பட்டது'. 'உன் உரிமையாக்கி விட்டேன்' என்ற இரு பொருளில் உபயோகித்துள்ளார்) 31*

*836 பகவான் ஸுந்தரேசனுடைய அபிஷேகத்திற்கு தேவையான பால் கொடுக்க காமதேனுவையும், பூஜிப்பதற்கு மலர்களை கொடுக்க கற்பக தருக்களையும் மட்டும் என்னுடன் அனுப்பி வை மற்றவை 'உனக்கு' என்று அருள் பாலித்துவிட்டு,தன் விஜய யாத்திரையை மேலும் தொடர்ந்தாள்.32*

*837 துந்துபிகள் முழங்கின. குதிரைகள் உரக்கக் கனைத்தன. யானைகள் துதிக்கைகளை தூக்கிக்கொண்டு கர்ஜித்தன, பாண்டிய ராஜபுத்திரி விஜயயாத்திரை தென்கிழக்கு திசையை நோக்கி தொடர்ந்தது.தென் கிழக்குதிசை அதிபன் கொழுந்துவிட்டு ஜ்வலிக்கும் அக்னிதேவன் அடக்கத்துடன் எதிரே வந்தான். 33*

ஸ்வீக்ருதம் ததகிலம் த்வயார்பிதம் ஸ்வீக்ருதம் புநரிதம் மயா தவ ।
ஏக ஏவ கதஶங்கமிந்த்ரதாம் வர்தய த்வமிஹ வாஸரே விதே: ॥ 31
ஸுந்தரேஶமபிஷேக்துமர்சிதும் ஸ்வர்கவீம் ஸுரதரூம்ஶ்ச கேவலம் ।
மாமநு ப்ரஹிணு வாஸவேதி ஸா தம் விஸ்ருஜ்ய சலிதா தத: புர: ॥ 32
ஆநகத்வநிபிரஶ்வஹேஷிதை: க்ஷ்வேலிதைர்த்விரதப்ரும்ஹிதைரபி ।
ப்ரஜ்வலந்நபி ஶஶாம பாவக: பாண்ட்யராஜதுஹிதுர்விநிர்கமே ॥ 33
மா விதேஹி ஸுமதேऽபிஷேணநம் ருந்தி ருந்தி சலிதாம் பதாகிநீம் ।
மாமகோ ஹி ஜநகோ ஹுதாஶ இத்யாதிதேஶ மலயத்வஜாத்மஜா ॥ 34
யாவதித்தமநுஶாஸ்தி ஸா சமூம் தாவதேவ தநயாதித்ருக்ஷயா ।
மங்களானி உபஹரந்நுபாயநானி ஆஜகாம துரி ஹவ்யவாஹந: ॥ 35
ஸாவருஹ்ய ஸஹஸா ஶதாங்கத: ஸம்ப்ரணம்ய முதிதா ஹுதாஶநம் ।
ப்ரார்த்திதா முஹுரநேந தாநி ச ப்ராப்ருதாநி விவிதாந்யுபாததே ॥ 36
ஜம்புஸிந்துதடஸம்பவா நிஶா நீலஶைலஶிகராஹ்ருதா மஷீ ।
அம்பராணி மணயஶ்ச பாஸ்வரா: ஸ்வாஹயா ப்ருதகதோபஜஹ்ரிரே ॥ 37
பாணிபீடநமஹோத்ஸவே தவ ப்ரார்தயே ஸபதி ஸாக்ஷிதாமிதி ।
ஈரிதே ஹுதவஹேந ஸஸ்மிதா தம் விஸ்ருஜ்ய சலதி ஸ்ம ஸா புர: ॥ 38

---

838 ஜ்வலிக்கும் அக்னியின் மீது படைவீரர்கள் தண்ணீரை வாரி இறைந்தனர். தேவி அதைப் பார்த்து- 'வேண்டாம், வேண்டாம், மந்திரியாரே தடுத்து நிறுத்துங்கள். அக்னி தேவன் என் தந்தை அல்லவா?' என்று தேவி தடுத்தாள். 34

839 இவ்வாறு தேவி கட்டளையிட்டுக்கொண்டிருக்கும் தருணத்திலேயே, அக்னிதேவன் தன் புத்திரியைப் பார்க்கவேண்டும் என்கிற குதூகலத்துடன், வெகுமதியாக மங்கள திரவ்யங்களை எடுத்துக் கொண்டு வந்து சேர்ந்தான். 35

840 பரபரப்புடன் தேவி ரதத்திலிருந்து இறங்கி அக்னிதேவனை நமஸ்கரித்து மகிழ்ந்தாள். அக்னி தேவனின் ப்ரார்த்தனைக்கு இணங்கி, அவன் ஸமர்ப்பித்த பலவித திரவ்யங்களையும் ஏற்றுக் கொண்டாள். 36

841 ஜம்பு நதிக்கரையில் தோன்றி, நீலமலைச் சிகரத்திலிருந்து வழிகின்ற மசியையும், மற்றும் வஸ்திரங்களையும். ஒளிமிகுந்த ரத்தினங்களையும், அக்னி தேவனின் மனைவி ஸ்வாஹா தேவி தனது தனிப்பட்ட காணிக்கையாக ஸமர்ப்பித்தாள். 37

842 'தங்களுடைய பாணிக்ரஹண வைபவத்தில் நான் சாக்ஷியாக இருக்கக்கூடிய தகுதியை கொடுக்க வேண்டும்' என்று அக்னிதேவன் பிரார்த்தித்துக் கொண்டான்; தேவி புன்னகையுடன் அவனுக்கு விடை அளித்துவிட்டு மேலே யாத்திரையைத் தொடர்ந்தாள். 38

मा कदापि मधुरापुरीजुषां दृक्पथेषु पततेति बोधिताः।
नित्यमेव समवर्तिना भटास्तां निरीक्ष्य पृतनां प्रदुद्रुवुः ॥ ३९

तारिताः सुमतिनाग्रगामिना तत्र तत्र निरयस्थिता जनाः।
मातुरेष महिमा यदीदृशी भक्तदृष्टिपथपातिनां गतिः ॥ ४०

संवृतं मुसलपाशपाणिभिः सर्वतो भटगणैर्गदैरपि।
पश्यति स्म पाथि दूरतः स्थितं प्राञ्जलिं रविसुतं तटातका ॥ ४१

सोऽभिगम्य सुमतेरनुज्ञया तां प्रणम्य पदयोः समुत्थितः।
स्वां गदामुपहरन्नविप्लुतां प्रश्रितो वचनमेतदाददे ॥ ४२

भारतक्षितितले भवद्वश सन्ति दुष्कृतकृतो न जन्तवः।
प्राक्स्थिताष्टा नरकेषु तारिताः प्राप्त एवमिह विश्रमो मया ॥ ४३

निष्क्रियोऽस्मि किमिह स्थितेन मे संचरामि सबलश्चमू मुखे।
ये भवन्ति परिपन्थिनोऽत्र ते तेषु देवि विनियुङ्क्ष्व मामिति ॥ ४४

संयुगेष्वभिमुखा न सन्ति नः सन्ति चेदतिथयो दिवस्तु ते ।
सर्वथैव तव विश्रमोऽर्हत्याह तं सुमतिराहितस्मितः ॥ ४५

आह सा निवर्त्य समवर्तिनं ततः संचचाल पुरतः शनैः शनैः।
आययौ निर्ऋतिराहृतोपदस्तावदेव सबलः सबान्धवः ॥ ४६

---

843 தேவி தென்திசையில் யமபடர்களைப் பார்த்தாள். 'நீங்கள் மதுரை மாநகர ஜனங்களின் வழியில் வரக்கூடாது' என்று எச்சரிக்கப்பட்ட அவனுடைய படைகள், தேவியின் படைகளைப் பார்த்தவுடன் ஓடியே போய்விட்டன. 39

844 மஹாமந்திரி சுமதி அங்கே நரகத்தில் கிடந்தவர்களைக் கரை ஏற்றிக்கொண்டே முன்னே சென்றார். பக்தனுக்கு மந்திரியின் பார்வையே நல்ல கதி என்றால், தேவியின் மஹிமை என்ன என்பது! 40

845 தடாதகா தேவி ரதத்தில் அமர்ந்திருந்தபடியே சற்று தூரத்தில் சூரிய புத்திரன் யமதர்மராஜன் கூப்பிய கைகளுடன் நிற்பதைக் கண்டாள். அவனைச் சுற்றி பாசக்கயிறுகளையும், உலக்கைகளையும். நோய்களையும் சுமந்து கொண்டு யமபடர்கள் நின்றார்கள் (நரகத்தில் பாபிகளுக்கு நோயையும் தண்டனையாக வழங்குவதுண்டு.) 41

846 மந்திரி சுமதியிடம் அனுமதி பெற்று யமதர்மராஜன் தேவியை அணுகி,அவள் திருவடிகளில் வணங்கி எழுந்தான். தன் கதாயுதத்தை தேவியின் முன் புரளாதபடி வைத்து, வினயத்துடன் கூறினான், 42

**மா கதாபி மதுராபுரீஜுஷாம் த்ருக்பதேஷு பததேதி போதிதா: ।**
**நித்யமேவ ஸமவர்த்திநா படாஸ்தாம் நிரீக்ஷ்ய ப்ருதநாம் ப்ரதுத்ருவு: ॥**
**தாரிதா: ஸுமதிநாக்ரகாமிநா தத்ரதத்ர நிரயஸ்திதா ஜநா: ।**
**மாதுரேஷ மஹிமா யதீத்ருஶீ பக்தத்ருஷ்டிபதபாதிநாம் கதி: ॥** 40
**ஸம்வ்ருதம் முஸலபாஶபாணிபி: ஸர்வதோ படகணைர்கதைரபி ।**
**பஶ்யதி ஸ்ம பதி தூரத: ஸ்திதம் ப்ராஞ்ஜலிம் ரவிஸுதம் தடாதகா ॥** 41
**ஸோऽபிகம்ய ஸுமதேரநுஜ்ஞயா தாம் ப்ரணம்ய பதயோ: ஸமுத்தித: ।**
**ஸ்வாம் கதாமுபஹரந்நவிப்லுதாம் ப்ரஶ்ரிதோ வசநமேததாததே ॥** 42
**பாரத க்ஷிதிதலே பவத்வஶே ஸந்தி து ஷ்க்ருதக்ருதோ ந ஜந்தவ: ।**
**ப்ராக்ஸ்திதாஶ்ச நரகேஷு தாரிதா: ப்ராப்த ஏவமிஹ விஶ்ரமோ மயா ॥** 43
**நிஷ்க்ரியோऽஸ்மி கிமிஹ ஸ்திதேந மே ஸஞ்சராமி ஸபலஶ்சமூமுகே ।**
**யே பவந்தி பரிபந்திநோऽத்ர தே தேஷு தேவி விநியுங்க்ஷ்வ மாமிதி ॥** 44
**ஸம்யுகேஷ்வபிமுகா ந ஸந்தி ந: ஸந்தி சேததிதயோ திவஸ்து தே ।**
**ஸர்வதைவ தவ விஶ்ரமோऽர்ஹ இத்யாஹ தம் ஸுமதிராஹிதஸ்மித: ॥** 45
**ஸா நிவர்த்ய ஸமவர்திநம் தத: ஸஞ்சசால புரத: ஶநை: ஶநை: ।**
**ஆயயௌ நிர்ருதிராஹ்ருதோபதஸ்தாவதேவ ஸபல: ஸபாந்தவ: ॥** 46

---

*847* தேவி! தங்களின் ஆளுகையில் உள்ள இப்பாரத பூமியில் உள்ள ஜனங்கள் தவறு செய்வதே இல்லை. முன்னே வந்தவர்களையும் நரகத்திலிருந்து இன்று விடுவித்து விட்டேன். தற்சமயம் எனக்கு வேலையே இல்லை. ஓய்வு தான். 43

*848* தேவி! வேலையே இல்லாமல் எதற்கு நான் இங்கே சும்மா இருக்க வேண்டும். என் படைகளுடன் சேர்ந்து வருகிறேன். எதிரிகளிடம் முதலில் எங்களை அனுப்புங்கள். 44

*849* இதைக் கேட்டுக்கொண்டிருந்த சுமதி, தேவியின் உள்ளம் அறிந்து, சிரித்துக் கொண்டே யமனுக்கு பதில் கூறினாள். இதுவரை எங்களுடைய விஜயயாத்திரையில் போர் என்பதோ, எதிர்த்து வருபவர்கள் என்றோ ஒருவரும் இல்லை. அப்படி எதிர்பட்ட சிலரை ஸ்வர்கத்திற்கு அனுப்பியாகி விட்டது. யமதர்மராஜனே எத்தனையோ காலமாக, ஓயாமல் உழைத்துக் கொண்டே வருகிறாய். உனக்கு ஓய்வு தேவைதான் வாளா இரு. 45

*850* பிறகு யமனுக்கு விடையளித்து விட்டு, தேவி தன் யாத்திரையை தென்மேற்கு திசையை நோக்கி மெதுவாகத் தொடர்ந்தாள். அங்கே தென்மேற்கு திசை அதிபன் நிர்ருதி தன் படைகளுடனும், பந்துக்களுடனும் வெகுமதிகளை வைத்துக்கொண்டு காத்திருந்தான். 46

अद्य पुण्यजनता ममागतेत्यालपन्तमिममानतं पदे ।
सा विसृज्य सलिलाधिपोन्मुखी संचचाल मलयध्वजात्मजा ॥४७

उल्ललत्तिमितिमिङ्गिलोद्भटं ग्राहकच्छपकुलीरसंकुलम् ।
वाहिनी वरुणसैन्यमग्रतः पश्यति स्म सुमतेः पुरःसरी ॥४८

शस्त्रजालमपविध्य सर्वतो वागुराश्च बडिशानि च स्वयम् ।
संप्रगृह्य मृगयाकुतूहलात्संननाह पृतना चिराय सा ॥४९

शङ्खविद्रुमसरोजमौक्तिकप्रायमाप्यमुपहारमण्डलम् ।
आहरन्पुनरपां पतिः क्षणात् आजगाम शरणं तटातकाम् ॥५०

वारुणीं पलितरोगहारिणीम् अद्भुताम् अगुडपिष्टशीथुजाम्
वाजिनश्च हरितानपां पतिः संनिधाप्य निपपात पादयोः ॥५१

प्राभृतं तदखिलं प्रचेतसः सा निरीक्ष्य सदयेन चेतसा ।
तं विसृज्य विनतं तटातका गन्धवाहनगरोन्मुखी ययौ ॥५२

मारुतैर्मलयजेन्दु गन्धिभिर्मन्दमन्दमुपदर्शितात्मभिः ।
स्वर्धुनीसलिलपातशीतलैः सेव्यते स्म चतुरं बरूथिनी ॥५३

दाक्षिणात्यमनिलं पुरःसरं ते विधाय मरुतोऽपरे पुनः ।
पारिजातकुसुमोपहारिणस्तां सुमत्यनुमताः सिषेविरे ॥५४

---

851 மலயத்வஜ குமாரியிடம் கூறினான். இன்று தான் ‘புண்யஜன’ என்ற அடைமொழி என் வர்கத்தினருக்கு பொருத்தமாக அமைந்துள்ளது. இவ்வாறு கூறிக்கொண்டே காலில் வீழ்ந்த அவனுக்கு அருள்பாலித்து, அனுப்பிவிட்டு, ஸகல தீர்த்தாதிபதியான வருணன் ஆளும் திசையை (மேற்கு) நோக்கிச் சென்றாள். 47

852 மந்திரி சுமதியை முந்திக்கொண்டு, தேவியின் படை வருணன் படையைக் கண்டது. அந்த நீர் படையில், திமிகள், திமிங்கலங்கள், முதலைகள், கடல் ஆமைகள், நண்டுகள் முதலிய ஜல ஜந்துக்கள் முண்டிக்கொண்டு வந்தன. 48

853 தேவியின் படை அஸ்திர சஸ்திரங்களை ஒதுக்கிவிட்டு, வலைகளையும், தூண்டில்களையும் எடுத்துக் கொண்டு, நான்கு பக்கங்களிலும், குதூகலத்துடன் கடல் வேட்டையில் வெகுகாலம் முனைந்தது. 49

854. சங்கங்கள், பவழங்கள், கடல் தாமரைகள், முத்துக்கள் முதலியவைகளையும், கிடைத்தவரை வெகுமதிப் பொருள்களையும்

அத்ய புண்யஜநதா மமாகதேத்யாலபந்தமிமமாநதம் பதே ।
ஸா விஸ்ருஜ்ய ஸலிலாதிபோந்முகீ ஸஞ்சசால மலயத்வஜாத்மஜா ।। 47
உல்லலத்திமிதிமிங்கிலோத்படம் க்ராஹகச்சபகுலீரஸங்குலம் ।
வாஹிநீ வருணஸைந்யமக்ரத: பஶ்யதி ஸ்ம ஸுமதே: புரஸ்ஸரீ ।। 48
ஶஸ்த்ரஜாலம் அபவித்ய ஸர்வதோ வாகுராஶ்ச படிஶேநி ச ஸ்வயம் ।
ஸம்ப்ரக்ருஹ்ய ம்ருகயாகுதூஹலாத் ஸந்நநாஹ ப்ருதநா சிராய ஸா ।। 49
ஶங்கவித்ருமஸரோஜமௌக்திகப்ராயமாப்யம் உபஹாரமண்டலம் ।
ஆஹரன் புநரபாம் பதி: க்ஷணாத் ஆஜகாம ஶரணம் தடாதகாம் ।। 50
வாருணீம் பலிதரோகஹாரிணீம் அத்புதாமகுடபிஷ்டஶீதுஜாம் ।
வாஜிநஶ்ச ஹரிதாநபாம் பதி: ஸந்நிதாப்ய நிபபாத பாதயோ: ।। 51
ப்ராப்ருதம் ததகிலம் ப்ரசேதஸ: ஸா நிரீக்ஷ்ய ஸதயேந சேதஸா ।
தம் விஸ்ருஜ்ய விநதம் தடாதகா கந்தவாஹநகரோந்முகீ யயௌ ।। 52
மாருதைர்மலயஜேந்துகந்திபிர்மந்தமந்தம் உபதர்ஶிதாத்மபி: ।
ஸ்வர்துநீஸலிலபாதஶீதலை: ஸேவ்யதே ஸ்ம சதுரம் வரூதிநீ ।। 53
தாக்ஷிணாத்யம் அநிலம் புரஸ்ஸரம் தே விதாய மருதோऽபரே புந: ।
பாரிஜாதகுஸுமோபஹாரிணஸ்தாம் ஸுமத்யநுமதா: ஸிஷேவிரே ।। 54

---

எடுத்துக் கொண்டு சிறிது நேரத்திலேயே வருணன், தடாதகை தேவியை சரணம் அடைந்தான். 50

855 வெல்லச் சர்க்கரை நீர் ஊறி, புளித்து லாகிரி ஏறிய கள். அதற்கு வாருணீ என்று பெயர் அது தலை நரையைப் போக்க வல்லது. அந்த வாருணியையும், பச்சை நிறமுள்ள குதிரைகளையும் வருணன் முன் வைத்து, தேவியின் திருவடிகளில் வீழ்ந்தான். 51

856 வருணனின் காணிக்கைகள் அனைத்தையும் ஏற்றுக் கொண்ட தடாதகா தேவி அவன் உள்ளம் குளிர கடாக்ஷித்து விடை கொடுத்தனுப்பி விட்டு வாயு தேவன் நகரை (வட மேற்கு திசை) நோக்கிச் சென்றாள். 52

857 வட மேற்கு மூலையில் மலயபர்வத காற்று வீசியது. நறுமணத்தைப் பரப்பியது. அந்த நறுமணம் வழிகாட்ட படை மெதுவாக நகர்ந்தது. அங்கே தேவகங்கை பூமிக்கு விழுகின்ற இடத்தில் ஜில் என்று எங்கும் குளுமை. அதை அனுபவித்துக் கொண்டே படை சென்றது. 53

858 அந்த வடமேற்கு பிரதேசத்தில் முன்னதாக தென்றல் காற்று வீசியது. அதை முன்னிட்டுக் கொண்டு தோழமைக் கொண்டாடி,மற்ற சாரல் காற்றுகள் பாரிஜாத நறுமணத்தை தாங்கிக்கொண்டு வந்தன. அவற்றையும் நுகர்ந்து கொண்டே சென்றனர். 54

तान्प्रदर्श्य पवनान्प्रथक्पृथक्व्याजहार सचिवो नृपात्मजाम्।
एष जानपद एव देवि नो मारुतो मलयशैलमाश्रितः॥ ५५

पश्य चक्रपवनानिमान्पुरः सन्ततोर्ध्वगतिवाददेशिकान्।
आरसातलममीभिरुद्भ्रमत्यर्णवस्तिमितिमिङ्गिलाकुलः॥ ५६

आहरन्ति तरुवन्महागिरीनर्णवान्प्रषतवत्किरन्ति च।
आविरिञ्चिभवनात् अनर्गलान्पश्य तान्प्रलयमारुतानितः॥ ५७

पश्चिमान्द्रुमलताप्रभञ्जनानौत्तरान् घनतुषारवर्षिणः।
प्राग्भवान्प्रियकचातकप्रियान्यानवैषि त इमे समीरणाः॥ ५८

भूतले कबलयन्ति पन्नगा व्योम्नि भारवहने नियुञ्जते।
तावके तु विषये तटातके ! संचरन्ति सुखिनः समीरणाः॥ ५९

दर्शिताः सुमतिनेत्थमादृताः प्रेषिताश्च सदयं तयानिलाः।
स्वस्वचेष्टितकृतः कुतूहलात्स्वां पुरीं प्रति ययुस्तदग्रतः॥ ६०

प्रस्थिता धनपतेर्जिगीषया पाण्ड्यराजतनया ततः शनैः।
प्राक्ततोऽपि स पथि व्यवस्थितः प्राभृतैः कनकरत्नराशिभिः॥ ६१

तं निपत्य पदयोः समुत्थितं यक्षकिंपुरुषकिंनरेश्वरम्।
अन्वकम्पत दृशा दयार्द्रया प्रश्रयेण कथयन्तमन्तिके॥ ६२

---

859 ஒரு கேள்வி எழலாம். அங்கே (வடமேற்கு திசையில்) எவ்வாறு தென்றல் வீசும்? நியாயமான கேள்வி. அந்த திசை வாயுதேவனுடையது, அவன் காற்றுக்கெல்லாம் அதிபதி. அவன் ஆட்சியில் பலவிதமான காற்றுகள் வீசுவதில் ஆச்சர்யம் ஒன்றும் இல்லை. மந்திரி, தேவிக்கு இந்த பலவிதமான காற்றுகள் வீசுவதை எடுத்து விளக்கினாள். தேவி இந்த பிரதேசத்தைச் சேர்ந்த காற்றுதான் தென்திசையில் மலயபர்வதத்தில் தென்றலாக வீசுகிறது என்றாள்.55

860 தேவி இங்கே பாருங்கள். சுழற்காற்றுகள். இவை ஏற்படக்கூடிய சூழ்நிலையே இல்லாத பிரதேசத்தில், வாயுதேவனின் ஆணையில், சில தன்னைத் தானே சுழற்றிக்கொண்டு கூராக ஆகாசத்தை நோக்கிப் போகின்றது. இந்தக் காற்று கடல் புகுந்து பாதாளம் வரைச் செல்லும். அந்தச் சுழல், திமி திமிங்கலங்களின் தடபுடல்களுடன் கடல் கொந்தளிக்கும். 56

861 இந்த சுழற்காற்று பெரிய மலைகளை ஆகாசத்தில், மரங்களைப்போல் பம்பரமாக சுற்ற வைக்கும். கடல் நீரை கட்டி கட்டியாக ஆகாசத்தில் வீசி எறியும். இந்தக் காற்று பிரஹ்மலோகம் வரை வீசுவதற்கு தடை கிடையாது. இந்தக் காற்றைத்தான் 'பிரளய மாருதம்' என்று கூறுகிறார்கள்.. 57

தான் ப்ரதர்ஶ்ய பவநான் ப்ருதக் ப்ருதக் வ்யாஜஹார ஸசிவோ ந்ருபாத்மஜாம் ।
ஏஷ ஜாநபத ஏவ தேவி நோ மாருதோ மலயஶைலம் ஆஶ்ரித: ।। 55
பஶ்ய சக்ரபவநாநிமான் புர: ஸந்ததோர்த்வகதிவாததேஶிகான் ।
ஆரஸாதலம் அமீபிருத்ப்ரமதி அர்ணவஸ்திமிதிமிங்கிலாகுல: ।। 56
ஆஹரந்தி தருவந்மஹாகிரீண் அர்ணவான் ப்ருஷதவத் கிரந்தி ச ।
ஆவிரிஞ்சிபவநாத் அநர்கலான் பஶ்ய தான் ப்ரலயமாருதாநித: ।। 57
பஶ்சிமான் த்ருமலதாப்ரபஞ்ஜநாநௌத்தரான் கநதுபாரவர்ஷிண: ।
ப்ராக்பவான் ப்ரியகசாதகப்ரியான் யாநவைஷி த இமே ஸமீரணா: ।। 58
பூதலே கபலயந்தி பந்நகா வ்யோம்நி பாரவஹநே நியுஞ்ஜதே ।
தாவகே து விஷயே தடாதகே! ஸஞ்சரந்தி ஸுகிந: ஸமீரணா: ।। 59
தர்ஶிதா: ஸுமதி நத்தமாத்ருதா: ப்ரேஷிதாஶ்ச ஸதயம் தயாநிலா: ।
ஸ்வஸ்வசேஷ்டிதக்ருத: குதூஹலாத் ஸ்வாம் புரீம் ப்ரதி யயுஸ்ததக்ரத: ।। 60
ப்ரஸ்திதா தநபதேர்ஜிகீஷயா பாண்ட்யராஜதநயா தத: ஶநை: ।
ப்ராக் ததோऽபி ஸ பதி வ்யவஸ்தித: ப்ராப்ருதை: கநகரத்நராஶிபி: ।। 61
தம் நிபத்ய பதயோ: ஸமுத்திதம் யக்ஷகிம்புருஷராக்ஷஸேஶ்வரம் ।
அந்வகம்பத த்ருஶா தயார்த்ரயா ப்ரஶ்ரயேண கதயந்தமந்திகே ।। 62

---

862 இந்த மேற்கு திசையில் வீசும் காற்று, வேருடன் மரங்களையும் கொடிகளையும் பிடுங்கி விடுகிறது. வடக்கு திசையிலிருந்து வரும் காற்று பாறைகளைப் போன்று பனிக்கட்டிகளை வருஷிக்கின்றது. கீழ்க்காற்று ப்ரியக மலர்களுக்கும் சாதக பறவைகளுக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. இவ்வாறு காற்றின் வகைகளை எடுத்துரைத்தாள் மந்திரி சுமதி. 58

863 பூமியில் இந்தக்காற்றுகளை கருநாகங்கள் விழுங்குகின்றன. ஆகாசத்தில் தேவர்கள் காற்றை சுமை தூக்குவதற்காக உபயோகிக்கிறார்கள். ஆனால், தேவி! உனது தென்நாட்டில் இவை சுதந்திரமாகவும், ஸுகமாகவும் வீசுகின்றன. 59

864 வடமேற்கு திசையில் வாயுதேவன் அரசியலை தேவிக்கு, சுமதி அறிமுகப்படுத்தினாள். தேவி அவற்றை கடாக்ஷித்து அனுப்பி வைத்தாள். அவைகளெல்லாம் தங்கள் திறமைகளை, காட்சிகள் மூலம் குதூகலத்துடன் தேவிக்கு அறிமுகப்படுத்திவிட்டு தங்கள் நகரம் நோக்கிச் சென்றன. 60

865தேவி, பாண்டியராஜகுமாரி பிறகு வடக்குதிசை அதிபனான குபேரனை துதிப்பதற்குப் புறப்பட்டாள். அவள் வருவதற்கு முன்பே, தங்கம், ரத்தினம் முதயவைகள் இழைத்த பரிசுப் பொருள்களுடன். வழியில், குபேரன் காத்துக் கொண்டிருந்தான். 61

अम्ब कश्चिदलमेव मे जये नैगमेषु मधुरानिवासिषु ।
भक्त इत्युपनतं प्रतीच्छ मां पश्य किंचिददिदमाहृतं पुरः ॥ ६३

शङ्खपद्ममकरादयस्त्वमी मातरष्ट निधयो मयाहृताः ।
उत्तमस्तु स वरस्त्वयाग्रतो लभ्यते चल पदानि कानिचित् ॥ ६४

इत्युदीरितगिरं विसृज्य तं प्रस्थिता प्रमथनाथसंनिधिम् ।
तावतीमविगणय्य वाहिनीं संननाह समराय सा स्वयम् ॥ ६५

चन्द्रशेखरपुरीसमीपतः सा निविश्य सकला पताकिनी ।
सिंहनादमतनिष्ट बृंहितं बृंहितानकनिनादहेषितैः ॥ ६६

नादमेनमवकर्ण्य चुक्रुधे नन्दिना पुरभिदा तु पिप्रिये ।
नापरोऽस्ति चतुरो महेश्वरात् नादतत्त्वमवबुध्य नन्दितुम् ॥ ६७

संवृतः प्रमथसेनया स्वया संन्निकर्षमुपसृत्य शूलिनः ।
व्याहरन्नरचमूसमागमात् प्रज्वलन्निव शिलादनन्दनः ॥ ६८

गर्भदासकुलदासतां गता ये हि पाण्ड्यविषये नृपास्त्वायि ।
तेषु वेत्सि कुलशेखरं नृपं तत्सुतं च मलयध्वजं ततः ॥ ६९

---

866 யக்ஷ,கின்னர, கிம்புருஷர்களுக்கு அதிபனாகிய குபேரன், தேவியின் திருவடியில் வீழ்ந்து வணங்கினான். அவனை கிருபைகனிந்த கடாக்ஷங்களினால் தேவி அருள் பாலித்தாள். பிறகு அவன் வணக்கத்துடன், அருகில் வந்து கூறினான். 62

867 அம்மா! மதுரா நிவாஸிகளான பக்த மஹாஜனங்கள் மத்தியில், இவனும் ஒருவன் என்று ஏற்றுக் கொண்டாலே போதும். பக்தன் என்ற முறையில் நான் கொண்டு வந்துள்ள பரிசுப் பொருள்களை தயவு செய்து கடாக்ஷியுங்கள். 63

868 இவை சங்கநிதி பத்மநிதி மகரநிதி முதலிய எட்டு செல்வங்கள். எனக்கு தாங்கள் ஒரு வரம் தரவேண்டும். தாங்கள் இந்த நிலத்தில் நான்கைந்து திருவடிப் பதிவுகளைச் செய்யவேண்டும் 64

869 இவ்வாறு வேண்டிக்கொண்ட குபேரனுக்கு அருள்பாத்து அனுப்பிவிட்டு, அடுத்து வடகிழக்கு திசை அதிபன், ப்ரமதகணங்களின் நாதன் ஈசானன் ஸந்நிதிக்கு விழைந்தாள். வீரப்படை தொடருவதை லட்சியம் செய்யவில்லை. தானே தனியாகப் போரிடாலாம் என நினைத்தாள். 65

870 சந்திரசேகரரின் வாஸஸ்தலமாகிய கைலாயத்தின் தாழ்வரையில் படைகள் அனைத்தையும் கூடாரம் போட்டு நிறுத்தினாள். தேவியின் வாஹனமாகிய சிங்கம் கர்ஜித்தது, குதிரைகள் களைத்தன, முரசுகள் நாதம் எழுப்பின. 66

**அம்ப கஶ்சிதலமேவ மே ஜயே நைகமேஷு மதுராநிவாஸிஷு ।**
**பக்த இத்யுபநதம் ப்ரதீச்ச மாம் பஶ்ய கிஞ்சிதிதமாஹ்ருதம் புர: ।। 63**
**ஶங்கபத்மமகராதயஸ்த்வமீ மாதரஷ்ட நிதயோ மயாஹ்ருதா: ।**
**உத்தமஸ்து ஸ வரஸ்த்வயாக்ரதோ லப்யதே சல பதாநி காநிசித் ।। 64**
**இத்யுதீரிதகிரம் விஸ்ருஜ்ய தம் ப்ரஸ்திதா ப்ரமதநாதஸந்நிதிம் ।**
**தாவதீம் அவிகணய்ய வாஹிநீம் ஸந்நநாஹ ஸமராய ஸா ஸ்வயம் ।। 65**
**சந்த்ரஶேகரபுரீஸமீபத: ஸா நிவிஶ்ய ஸகலா பதாகிநீ ।**
**ஸிம்ஹநாதமதநிஷ்ட ப்ரும்ஹிதம் ப்ரும்ஹிதாநகநிநாதஹேஷிதை: ।। 66**
**நாதமேநமவகர்ண்ய சுக்ருதே நந்திநா புரபிதா து ப்ரிப்ரியே ।**
**நாபரோऽஸ்தி சதுகே மஹேஶ்வராத் நாததத்வமவபுத்ய நந்திதும் ।। 67**
**ஸம்வ்ருத: ப்ரமதஸேநயா ஸ்வயா ஸந்நிகர்ஷமுபஸ்ருத்ய ஶைலிந: ।**
**வ்யாஹரந்நரசமூஸமாகமாத் ப்ரஜ்வலந்நிவ ஶிலாதநந்தந: ।। 68**
**கர்பதாஸகுலதாஸதாம் கதா யே ஹி பாண்ட்யவிஷயே ந்ருபாஸ்த்வயி ।**
**தேஷு வேத்ஸி குலஶேகரம் ந்ருபம் தத்ஸுதம் ச மலயத்வஜம் தத: ।। 69**

---

871 இந்த பெரிய கூச்சலைக் கேட்டு நந்திகேச்வரர் வெகுண்டெழுந்தார். பரமேச்வரன் ப்ரீதியுடன் சிரித்தார். பரமேச்வரனைத்தவிர வேறு ஒருவரும் இந்த முழக்கத்தின் பொருளை அறியவில்லை. நந்திகேச்வரன் ப்ரமதகணங்களை அணிவகுத்து அழைத்துக் கொண்டு, பரமேச்வரன் ஸன்னிதானம் சேர்ந்தார். 'நம்மை எதிர்த்து ஒரு மானிடப்படை முழங்குவதாவது' என்று கொதிப்புடன் வாரி எழுந்தான். 67

873 ஐயனே! பாண்டிய நாட்டை பரிபாலிக்கும் அரசர்கள் அனைவரும், கருவில் உண்டான முதலே தங்கள் தாசர்கள், நீண்ட பரம்பரையாக தழைத்த குலத்தைச் சார்ந்தவர்கள். அவர்களது தலைவன் குலசேகர பாண்டியன் அவனுடைய குமாரன்தான் மலயத்வஜ பாண்டியன். 68

874 அவளுடைய புதல்வி தடாதகை. யௌவனம் வந்தும்கூட அவளுக்கு சிறுபிள்ளைத்தனம் போகவில்லை. அவள் புல் பூண்டுடன் கூடிய மனிதக்கும்பலுடன் படை ஒன்றை சேகரித்துக் கொண்டு இங்கே முன்னேறி வருகிறாள். 69

875 இந்த தேவர்கள் இருக்கிறார்களே,இவர்கள் மனிதர்கள் யாகத்தில் போட்ட ஆஹூதிகளை சாப்பிட்டு வயிறு வளர்த்துக் கொண்டு மனிதர்களுக்கு வசமாகிவிட்டார்கள். எல்லோரும் அல்ல. சிலர்தான். தாழ்ந்து போன தேவர்களிடம் தன் பராக்ரமத்தைக் காட்டி, வெற்றி பெற்ற இந்த மனிதப்படை இறுமாப்பினால் என்னை அலக்ஷியம் செய்கின்றனர். 70

तस्य नाम दुहिता तटातका किंचिदुच्चलितशैशवा सती ।
संन्निपात्य तृणपूलवच्चमूं मानुषीमित इतोऽभिवर्तत ॥ ७०

सा मनुष्यवशगेषु केषुचित्ताद्दशेषु विबुधाधमेष्वपि ।
संप्रदर्शितपराक्रमा सती मन्यते न हि महेश मामपि ॥ ७१

तां प्रधाव्य धरणीतलं ततस्तत्पदानुपादिकान् सुराधमान् ।
तापसांश्च कतिचित्तदाश्रयणन् दण्डयेयमिति दण्डवन्नतः ॥ ७२

तं जगाद गिरिशः कृतस्मितः सा पुनः श्रुतिपथं गतैव नः ।
अप्रमत्तमभिषेणयन्निमां स्वस्तिमान् पुनरुपेहि मामिति ॥ ७३

तां गिरं तमपि च स्मिताङ्कुरं साऽविचिन्त्य किमपि स्मरद्विषः ।
निर्जगाम समराग्रही बहिः सप्तभिर्गणचमूपकोटिभिः ॥ ७४

तत्र सप्तनयनास्त्रिनासिकाः षण्मुखा द्विजठरा दशाङ्घ्रयः ।
षष्टिसप्ततिभुजा ज्वलत्कचा मुण्डितां धृतशिखाः कपर्दिनः ॥ ७५

वीतबाहुचरणाः विमस्तकाः कुक्षिलग्नवदनाः शिरोङ्घ्रयः ।
विष्फुलिङ्गनयना विषोद्गिरा लम्बमानरसनोष्ठनासिकाः ॥ ७६

श्वेतपीतहरितासितारुणाः शृङ्गिनः सगरुतःसचञ्चवः ।
व्याघ्रदन्तिहयवायसाङ्घ्रयः पादपाचलशिलानखायुधाः ॥ ७७

876 அவளை பூமிக்கு விரட்டிவிட்டு பிறகு, அவனைத் தடுத்து நிறுத்தாமல், அவளுக்கு அடிபணிவதின் மூலம் அத்துமீறிவிட்ட திசை அதிபர்களையும், தேவர்களையும் தண்டிக்க வேண்டும். அப்பாவி ருஷிகள் சிலர், அவளுடைய ஆடம்பரத்தைப் பார்த்து கும்பிடு போடுகிறார்களே அவர்களையும் தண்டித்து அடக்கிவிட்டு வருவேன் என்று கூறி பரமேச்வரனின் திருவடிகளில் வீழ்ந்தார் நந்திகேச்வரர். 71

877 நந்திகேச்வரனைப் பார்த்து புன்னகை புரிந்தவண்ணம் சிவபெருமான் கூறினார். அவளைப் பற்றிய செய்தி முன்பே நம் காதில் விழுந்திருக்கிறது. ஆகவே தடுமாறாமல் அவளை எதிர்த்து போரிட்டு க்ஷேமமாக திரும்பி வருவாயாக' என்று. 72

878போர் ஆவேசம் கொண்டுவிட்ட நந்திகேச்வரன் சிவபெருமானுடைய புன்முறுவலையோ, பேச்சையோ கவனிக்கவில்லை. ஏழு கோடி சிவகணங்களை உடன் அழைத்துக் கொண்டு புறப்பட்டான் 73

879 நந்திகேசனின் படையில் சிலருக்கு ஏழு கண்கள், சிலருக்கு மூன்று மூக்குகள், சிலருக்கு ஆறு முகங்கள், சிலருக்கு இரண்டு வயிறுகள், சிலருக்கு பத்து கால்கள், சிலருக்கு அறுபதோ எழுபதோ புஜங்கள். அவர்களுடைய

தஸ்ய நாம துஹிதா தடாதகா கிஞ்சிதுச்சலிதஶைஶவா ஸதீ ।
ஸந்நிபாத்ய த்ருணபூலவச்சமூம் மாநுஷீமித இதோऽபிவர்ததே ॥ 70

ஸா மநுஷ்யவஶகேஷு கேஷுசித் தாத்ருஶேஷு விபுதாதமேஷ்வபி ।
ஸம்ப்ரதர்ஶிதபராக்ரமா ஸதீ மந்யதே ந ஹி மஹேஶ ! மாமபி ॥ 71

தாம் ப்ரதாவ்ய தரணீதலம் ததஸ்தத்பதாநுபதிகான் ஸுராதமான் ।
தாபஸாம்ஶ்ச கதிசித் ததாஶ்ரயான் தண்டயேயமிதி தண்டவந்நத: ॥ 72

தம் ஜகாத கிரிஶ: க்ருதஸ்மித: ஸா புந: ஶ்ருதிபதம் கதைவ ந: ।
அப்ரமத்தமபிஷேணயந்நிமா ஸ்வஸ்திமான் புநருபேஹி பாமிதி ॥ 73

தாம் கிரம் தமபி ச ஸ்மிதாங்குரம் ஸோऽவிசிந்த்ய கிமபி ஸ்மரத்விஷ: ।
நிர்ஜகாம ஸமராக்ரஹீ பஹி: ஸப்தபிர்கணசமூபகோடிபி: ॥ 74

தத்ர ஸப்தநயநாஸ்த்ரிநாஸிகா: ஷண்முகா த்விஜடரா தஶாங்க்ரய: ।
ஷஷ்டிஸப்ததபுஜா ஜ்வலத்கசா முண்டிதா த்ருதஶிகா: கபர்திந: ॥ 75

வீதபாஹுசரணா விமஸ்தகா: குக்ஷிலக்நவதநா ஶிரோங்க்ரய: ।
விஷ்புலிங்கநயநா விஷோத்கிரா லம்பமாநரஸநோஷ்டநாஸிகா: ॥ 76

ஶ்வேதபீதஹரிதாஸிதாருணா: ஶ்ருங்கிண: ஸகருத: ஸசஞ்சவ: ।
வ்யாக்ரதந்திஹயவாயஸாங்க்ரய: பாதபாசலஶிலாநகாயுதா: ॥ 77

---

தலை ஜ்வாலையுடன் எரிந்தது. சிலர் மொட்டை சிலருக்கு தலைமுடி, சிலருக்கு சடை. 74

880 சிலருக்கு கைகளும் இல்லை கால்களும் இல்லை. சிலருக்கு தலையே கிடையாது, சிலருக்கு வயிற்றில் வாய், சிலருக்கு கால்களிலே தலை. சிலரிடம் தீப்பொறி பறந்துகொண்டே இருக்கும் கண்கள், சிலருடைய வாய் விஷத்தைக் கக்கிக்கொண்டே இருக்கும். சிலருக்கு தொங்குகின்ற நாக்கு, மூக்கு, மற்றும் உதடுகள். 75

881 சிலர் வெள்ளை வெளேரென்றும், சிலர் மஞ்சள் நிறம், சிலர் பச்சை, சிலர் சிவப்பு, சிலருக்கு கொம்பு முளைத்திருந்தது. சிலருக்கு இறக்கைகள் உண்டு. சிலருக்கு நீண்ட கொக்கு மூக்கு, சிலருக்கு புலிக்கால், சிலருக்கு யானைக் கால், சிலருக்கு குதிரைக் கால். அவர்களுடைய ஆயுதங்களோ மரங்கள்,சிறு குன்றுகள், பாறைகள் மற்றும் கூறிய நகங்கள். 76

882 சிலருக்கு கரடி முகம். சிலருக்கு குரங்கு முகம். சிலருக்கு செந்நாய் முகம். சிலருக்கு பாம்பு முகம். சிலருக்கு யானை முகம், சிவருக்கு சிங்க முகம், சிலருக்கு சரப முகம். மிகவும் வெறி கொண்டு ஒரே சமயத்தில் இவர்கள் அனைவரும் கூட்டம் கூட்டமாக கோலாஹலத்துடன் கிளம்பினார்கள். 77

883 தேவியின் மனிதப்படை எதிர்படையைக் கண்டது. அவ்வளவுதான் குதிரைகள் ஓடின யானைகள் நிலை கொள்ளாமல் தன்னைத்தானே

ऋक्षवानरतरक्षुपन्नगद्वीपिसिंहशरभद्विपाननाः ।
निर्ययुर्युगपदट्टहासिनः सङ्घशो युधि गणा मदोल्बणाः ॥ ७८
धावदश्वमवघूर्णितद्विपं नष्टयोधमवसत्रसैनिकम् ।
संप्रमुग्धसचिवं क्षणादभूत्तादृशं तदपि मानवं बलम् ॥ ७९
ते पदातिकुलमूरुवेगतः फूत्कृतेन गजवाजिमण्डळम् ।
स्यन्दनांश्च करतालमारुतै र्व्यक्षिपन्रणमुखाद्विदूरतः ॥ ८०
क्षुद्रदीपमिव चण्डमारुतः शुष्कगुल्ममिव दावपावकः ।
ध्वान्तबृन्दमिव भास्करोदयस्तद्बलं नरबलं ब्यनीनशत् ॥ ८१
युद्धदर्शनकुतूहलागताः सिद्ध चारणसुपर्वपन्नगाः ।
अप्सरश्चरमभागवर्त्मना दुद्रुवुः प्रमथयूथदृक्पथात् ॥ ८२
तां प्रधाव्य पृतनां गणेः समं संप्रसर्पति शिलादनन्दने ।
अग्रतो व्यचलदात्तकार्मुकः संप्रहृष्टवदनः सखीजनः ॥ ८३
बद्धकक्ष्यमपिनद्धकञ्चुकं कुञ्चितभ्रुकुटि कोमलाननम् ।
मुग्धभीषणमलक्षि तद्बलं मूर्तमादिमरसद्वयं यथा ॥ ८४
स्वोचितप्रतिबलानवेक्षणत्रस्तयुद्धकुतुका शनैरिव ।
आददे धनुरधिज्यमम्बिका सा निरीक्षितसखीजनोद्यमा ॥ ८५

சுற்றின. போர்வீரர்கள் மயங்கி வீழ்ந்தனர். சேனாதிபதிகள் தலை குனிந்தனர். மஹா மந்திரி திகைத்துவிட்டார். மானுடப் படை மிகவும் பலமுள்ளதுதான், இருந்தாலும் நிலை குலைந்தது. 78

884 நந்திகேச்வரனின் படைகள் துடை தட்டி எழும்பிய காற்று, தேவியின் காலாட்படைகளை விரட்டி அடித்தது. யானைகளையும் குதிரைகளையும் வாயால் ஊதியே சிதற அடித்தனர். ரதங்கள் கை வீச்சுக் காற்றில் கவிழ்ந்தன. எல்லாமே போர்க்களத்திலிருந்து வெகு தூரத்தில் போய் விழுந்தன. 79

885 நந்திகேச்வரனின் படைகள் மனிதப்படைகளை, பேய்காற்று அகல் விளக்கின் ஜ்வாலையை அணைப்பது போலவும், காட்டுத் தீ காய்ந்த சரகுக் குவியலை கொளுத்துவது போலவும், சூரியனின் உதயம் இருட்டுக் குவியல்களை விரட்டுவது போலவும் அழிந்தன. 80

886 போரைக் காணவேண்டும் என்ற குதூகலத்துடன் வந்த ஸித்தர்கள், சாரணர்கள், தேவர்கள், நாகர்கள் அப்ஸரஸ்கள் எல்லோரும் ப்ரமதகணங்களின் கண்களில் படக்ககூடாது என்று திரும்பப்பாராமல் கொல்லைப் புறமாகவே ஓடினார்கள். 81

ருக்ஷவாநரதரக்ஷுபன் அகத்வீபிஸிம்ஹஶரபத்விபாநநா: ।
நிர்யயுர்யுகபதட்டஹாஸிந: ஸங்கஶோ யுதி கணா மதோல்பணா: ॥ 78
தாவதஶ்வம் அதூர்ணிதத்விபம் நஷ்டயோதம் அவஸந்நஸைநிகம் ।
ஸம்ப்ரமுக்தஸசிவம் க்ஷணாத் அபூத் தாத்ருஶம் ததபி மாநவம் பலம் ॥ 79
தே பதாதிகுலமூருவேகத: பூத்க்ருதேந கஜவாஜிமண்டலம் ।
ஸ்யந்தநாம்ஶ்ச கரதாலமாருதைர்வ்யக்ஷிபன் ரணமுகாத்விதூரத: ॥ 80
க்ஷுத்ரதீபமிவ சண்டமாருத: ஶுஷ்ககுல்மமிவ தாவபாவக: ।
த்வாந்தப்ருந்தமிவ பாஸ்கரோதயஸ்தத்பலம் நரபலம் வ்யநீநஶத் ॥ 81
யுத்ததர்ஶநகுதூஹலாகதா: ஸித்தசாரணஸுபர்வபந்நகா: ।
அப்ஸரஶ்சரமபாகவர்த்மநா துத்ருவு: ப்ரமதயூதத்ருக்பதாத் ॥ 82
தாம் ப்ரதாவ்ய ப்ருதநாம் கணை: ஸமம் ஸம்ப்ரஸர்பதி ஶிலாத் அநந்தநே ।
அக்ரதோ வ்யசலதாத்தகார்முக: ஸம்ப்ரஹ்ருஷ்டவதந: ஸகீஜந: ॥ 83
பத்தகக்ஷ்யமபிநத்தகஞ்சுகம் குஞ்சிதப்ருகுடி கோமலாநநம் ।
முக்தபீஷணமலக்ஷி தத்பலம் மூர்த்தமாதிமரஸத்வயம் யதா ॥ 84
ஸ்வோசிதப்ரதிபலாத் உவேக்ஷணஸ்ரஸ்தயுத்தகுதுகா ஶநைரிவ ।
ஆததே தநுரதிஜ்யமம்பிகா ஸா நிரீக்ஷிதஸகீஜநோத்யமா ॥ 85

---

887 தேவியின் மானுடப்படைகளை விரட்டி விட்டு, நந்திகேச்வரன் கணங்களுடன் முன்னேறினான். எதிரில் தேவியின் தோழிகள் கைகளில் வில் ஏந்தி முகத்தில் உற்சாகம் ததும்ப தோன்றினர். 82

888 பெண்கள் யௌவனச்செருக்குடன் இடுப்புச் சேலையை மடித்து மூலகச்சம் கட்டிக் கொண்டனர். மார்பில் இறுக்கமாக கஞ்சுகம் முடிந்து கொண்டனர். புருவத்தை நெறித்தனர். அது முகத்தின் அழகை மிகைப்படுத்தியது. சிருங்கார ரஸமும் வீர ரஸமும் ஒரே அடி கொண்டதுபோல மோஹனமாக மனதைக் கவருவதாகவும் இருந்தது. நெருங்கிப் பார்க்க பயமாகவும் இருந்தது. 83

889 தேவி ஸகிகளின் யுத்த மும்முரத்தைப் பார்த்து பெருமிதம் கொண்டாள். எதிரே தனக்கு முற்றிலும் தகுந்ததொரு படை கூடியிருக்கிறது என்று கணத்தில் யுத்த மும்முரத்தைக் குறைத்துக் கொண்டாள். அதே சமயத்தில் தன் வில் நாணேற்றிக் கொண்டாள். 84

890 தேவியின் கள்ளிப்படைகளின் அம்புகளெல்லாம் தங்கப்பூண் கட்டியவை. அவை இரவில் சூரிய கிரணங்கள் விழுந்தார்போல், ப்ரமத கூட்டத்தின்மேல் பாய்ந்தன. 85

तत्र शक्तिपृतनाधनुश्च्युताः सायकाः कनकपुङ्खशोभिनः ।
सर्वतः प्रमथमण्डलेऽपतञ्छावरे दिनमणेरिवांशवः ॥ ௮௬

तां पुरैव विकृतां वरूथिनीं स्वाशुगैर्विकृतिमापितां पराम् ।
वीक्ष्य वीक्ष्य समरे विजह्रिरे ता निरीक्षितपरस्परानना: ॥ ௮௭

स्रस्तशूलमपविद्धतोमरं ध्वस्तमुद्गरमपास्तकार्मुकम् ।
नन्दिनं शरणमीयु राहवे ताडिताः गणवरास्तदाशुगैः ॥ ௮௮

धावतो गणवरान्निवारयं स्तर्जयन्युधधि च तत्सखीजनान् ।
संददर्श धुरि तां रथे स्थितां स द्वितीय इव शंकरो गणः ॥ ௮௯

निर्दयं प्रविविधुः सखीजना मन्दमन्दमिषुभिस्तमम्बिका ।
मातृहस्तगलिता हि मार्गणाः कस्य मर्माणि निवेष्टुमीशते ॥ ௯௦

स्वामिनीति जननीति चावशान्निःसरत्सु वचनेषु चासकृत् ।
पाणिना च युयुधे क्षणं बलात् अञ्जलिं प्रतिमुहुश्चिकीर्षता ॥ ௯௧

पाण्डयराजदुहितुः करच्युता नाशुगास्तमसुभिर्व्ययोजयन् ।
तत्त्वतो हि कुसुमानि सायकानैक्षवं च धनुराहुरागमाः ॥ ௯௨

सर्ववित् स हि शिलादनन्दनः संनिवृत्य झटिति स्वयं रणात् ।
स्वामिने तदखिलं व्यजिज्ञपत् पादयोः प्रणिपतन् मुहुर्मुहुः ॥ ௯௩

---

*891 ஏற்கனவே ப்ரமதகணங்கள் விகார வடிவத்தில் இருந்தன. தேவியின் கன்னிப்படையின் பாணங்கள் மேலும் விகாரமாக்கின. அந்தப்படை வீரர்கள் ஒருவருக்கொருவர் பார்த்துக்கொண்டு அலரிப் புடைத்தனர். 86*

*892 தேவியின் படைவீரப் பெண்களின் பாணங்களினால் தாக்கப்பட்ட கணங்கள், கையிலுள்ள சூலங்களை கீழே போட்டனர். இரும்பினால் ஆன கதாயுதத்தை எரிந்தனர், வில்களை உதரித் தள்ளினர். எல்லோரும் நந்திகேச்வரனை சரணம் அடைந்தனர். 87*

*893 ஓடுகின்ற ப்ரமத் கணங்களைத் தடுத்து (வழி மறைத்து திருப்பி விட்ட, தேவியின் ஸகிப் படையைப் பார்த்து அதட்டினார் நந்திகேச்வரன், அங்கே முன்னே போர் முனையில் தேவியைப் பார்த்தார். தேவி ரதத்தில் அவளுக்கெதிரில் இரண்டாவது சங்கரனைப்போல் நின்றார் நந்திகேச்வரர்.88*

*894 ஸகிகள் தயவின்றி எதிரே நிற்பவர்களைத் தாக்கினார்கள். தேவியும் ஒரம்பு எய்தினாள். அது வேகமாகச் செல்லாமல் மெதுவாகச் சென்றது. அவள் தாயல்லவா? அவளுடைய பாணங்கள் மர்ம ஸ்தானத்தைத் தாக்குமா? 89*

*895தான் அறியாமலேயே அம்மா! தாயே! தலைவியே! என்று நந்திகேச்வரன் வாயிலிருந்து சொற்கள் வந்தன. மனதோ அவளுக்கு அஞ்ஜலிச்செய்யத் துணிகிறது. கையோ போரிட்டது. 90*

தத்ர ஶக்திப்ருதநாதநுஶ்ச்யுதா: ஸாயகா: கநகபுங்கஶோபிந: ।
ஸர்வத: ப்ரமதமண்டலேऽபதஞ்சார்வரே திநமணேரிவாம்ஶவ: ॥ 86
தாம் புரைவ விக்ருதாம் வரூதிநீம் ஸ்வாஶுகைர்விக்ருதிமாபிதாம் பராம் ।
வீக்ஷ்ய வீக்ஷ்ய ஸமரே விஜஹ்ரிரே தா நிரீக்ஷிதபரஸ்பராநநா: ॥ 87
ஸ்ரஸ்தஶூலம் அபவித்ததோமரம் த்வஸ்தமுத்கரம் அபாஸ்தகார்முகம் ।
நந்திநம் ஶரணமீயுராஹவே தாடிதா கணவராஸ்ததாஶுகை: ॥ 88
தாவதோ கணவராந்நிவாரயஸ்தர்ஜயந்யுதி ச தத்ஸகீ ஜநான் ।
ஸந்ததர்ஶ துரிதாம் ரதே ஸ்திதாம் ஸ த்விதீய இவ ஶங்கரோ கண: ॥ 89
நிர்தயம் ப்ரவிவிது: ஸகீஜநா மந்தமந்தமிஷுபிஸ்தமம்பிகா ।
மாத்ருஹஸ்தகலிதா ஹி மார்கணா: கஸ்ய மர்மணி நிவேஷ்டுமீஶதே ॥ 90
ஸ்வாமிநீதி ஜநநீதி சாவஶாந்நிஸ்ஸரத்ஸு வசநேஷு சாஸக்ருத் ।
பாணிநா ஸ யுயுதே க்ஷணம் பலாதஞ்ஜலிம் ப்ரதிமுஹுஶ்சிகீர்ஷதா ॥ 91
பாண்ட்யராஜதுஹிது: கரச்யுதா நாஶுகாஸ்தமஸுபிர்வ்யயோஜயன் ।
தத்வதோ ஹி குஸுமாநி ஸாயகாநைக்ஷவம் ச தநுராஹுராகமா: ॥ 92
ஸர்வவித் ஸ ஹி ஶிலாதநந்தந: ஸந்நிவ்ருத்ய ஜடிதி ஸ்வயம் ரணாத் ।
ஸ்வாமிநே ததகிலம் வ்யஜிஜ்ஞபத் பாதயோ: ப்ரணிபதன் முஹுர்முஹு: ॥93

*86. பாண்டியராஜகுமாரியின் கைகளிலிருந்து கிளம்பிய அம்புகள் அவன் மேல் பட்டதும் அவனுக்கு உயிரே போய்விடும் போல் இருந்தது. தேவியின் கையில் வில்லோ கரும்பு, தேவியின் பாணங்களோ மலர்கள், என்றல்லவோ ஆகமங்கள் கூறுகின்றன.* 91

*897 எல்லாம் அறிந்த நந்திகேச்வரனுக்கு உண்மை புலனாயிற்று. உடன் போரிலிருந்து திரும்பினான் ஈசன் திருவடிகளில் வீழ்ந்தான். திரும்பத் திரும்ப வணங்கினான். ஸ்வாமியிடம் நடந்ததனைத்தையும் விண்ணப்பித்தான்.92*

*898 ஐயனே மஹேசனே! அவளுடன் சமாதானம் செய்து கொள்வதுதான் தங்களுக்கு உசிதம் எக்காலமும் போர் என்பது தகாது. வாருங்கள் போவோம் என்று கூறின நந்திகேசன் கைலாகு கொடுக்க புன்முறுவலுடன் பகவான் புறப்பட்டார்.* 93

*899 பாண்டியராஜ குமாரியின் வலது கையோ போர் செய்வதற்காக தினவு எடுத்து பரபரத்தது, துடித்தது. விருஷ்பக்கொடியோனை எதிரே பார்த்தவுடன் அவளுடைய இடது கை துடித்தது.*

*தக்ஷிண என்றால் வலது என்றும், வலுவுள்ளது என்றும் பொருள். அதக்ஷிண என்றால் வலுவற்றது, இடது என்றும் பொருள். இங்கு அதக்ஷின என்றால் வலுவற்றது என்பது கவியின் கருத்தல்ல. பெண்களுக்கு இடதுபுறம் துடித்தால் நல்ல சகுனம் என்பது மரபு. ஆகவே அதக்ஷின ( இடது ) என்கிற பதம் தேவிக்கு மங்களத்தை ஸூசிக்கிறது என்கிறார் கவி.* 94

सन्धिरेव भवतस्तयोचितः सङ्गरो न तु महेश जात्वपि ।
एहि याम इति वादिनं तु तं सोऽवलम्ब्य निरगात्कृतस्मितः ॥ ९४

पाण्ड्यराजदुहितुर्हि दक्षिणः प्रास्फुरत्समरकर्मणे भुजः ।
वीक्षिते तु वृषभध्वजे विभोरस्फुरत् स्वयमदक्षिणो भुजः ॥ ९५

आदिमं रसमिवात्तविग्रहं त्यक्तरौक्ष्यमिव तेजसां निधिम् ।
सा ददर्श शरदिन्दुसुन्दरं पुंगवे पुरहरं सनन्दिनम् ॥ ९६

स्रंसते स्म सशरं धनुः करात्तत्त्वरे तमुपगूहितुं मनः ।
उन्ममज्ज पुलकोभितस्तदा निर्ममज्ज हृदयेऽधिकः कुचः ॥ ९७

यं प्रहर्तुमवलम्बितं धनुस्तं निरीक्ष्य समरे तदुज्झितम् ।
तत्कटाक्षशरणः समाददे साभिमान इव मीनकेतनः ॥ ९८

तद्विलोक्य विवशीकृते हरे बाणपातचकिते च नन्दिनि ।
रन्ध्रमेतदुपलभ्य दर्पकः स्वां रुषं सफलयांबभूव सः ॥ ९९

युध्यते कथमियं कुमारिका युध्यते कथमसौ हरस्त्वति ।
द्रष्टुमिच्छति जगत्त्रय स्मरस्तावुभौ शरगणैरिवाकिरत् ॥ १००

900 தேவி பார்த்தாள். நந்தியுடன் வருகிறார் சிருங்கார ரஸமே உருவெடுத்ததுபோல சிவபெருமான். தன்னுடைய கடுமையான தோற்றத்தை விடுத்து நின்றார். அக்னி குளு குளு என்றிருந்தால் எவ்வளவு ஹிதமாக இருக்கும். அப்படி நின்றார். சரத்கால சந்திரனைப் போன்று பளீரென்று புரமெரித்த பரமன், கண்களுக்கினிமையாக நிற்பதைப் பார்த்தாள். 95

901 அவருடைய கையிலிருந்த வில்லும் பாணமும் நழுவின. மனது அவரை அப்படியே வாரிக் கட்டிக் கொள்ளலாமா என்று இடித்தது, மேனி எங்கும் புல்லரித்தது. மார்பிலிருந்து மூன்றாவது முலை மறைந்தது. உன்மமஜ்ஜ, நிர்மமஜ்ஜ என்ற எதிர் சொற்கள் பொருந்துகின்ற அழகை கவனிக்கவேண்டும். 96

902 எவரைத் தாக்குவதற்கு தேவி இந்த தனுஸை எடுத்தாளோ, அந்த தனுஸை அவரைப் பார்த்தவுடன் நழுவ விட்டாள். அவளுடைய கடைக்கண் அனுமதி பெற்று, மீன் கொடியோன், மன்மதன் அந்த தனுஸ் தரை தட்டுவதற்கு முன் கையில் ஏந்தினான், அதை தனக்கே உரிமையாக்கிக் கொண்டான் போல! தேவியின் கரும்பு வில் மன்மதன் கைக்கு வந்தது என்று கதை கூறுகின்றார் தீக்ஷிதர். 97

903 அவளைப் பார்த்ததும் பரமேச்வரன் தன்னை மறந்தான் (தன் வசம் இழந்தான்.) பாணம் பகவானைத் தாக்கிவிடுமோ என்று நந்திகேசன் பயந்தான். இதுதான் சரியான தருணம் என்று கருதிய மன்மதன் தனது வெற்றி கர்வத்தினால் நிமிர்ந்தான். 98

ஸந்திரேவ பவதஸ்தயோசித: ஸங்கரோ ந து மஹேஶ ! ஜாத்வபி ।
ஏஹி யாம இதிவாதிநம் து தம் ஸோऽவலம்ப்ய நிரகாத் க்ருதஸ்மித: ।। 94
பாண்ட்யராஜதுஹிதுர்ஹி தக்ஷிண: ப்ராஸ்புரத் ஸமரகர்மணே புஜ: ।
வீக்ஷிதே து வ்ருஷபத்வஜே விபோ: அஸ்புரத் ஸ்வயமதக்ஷிணோ புஜ: ।। 95
ஆதிமம் ரஸமிவாத்தவிக்ரஹம் த்யக்தரௌக்ஷ்யமிவ தேஜஸாம் நிதிம் ।
ஸா ததர்ஶ ஶரதிந்துஸுந்தரம் புங்கவே புரஹரம் ஸநந்திநம் ।। 96
ஸ்ரம்ஸதே ஸ்ம ஸஶரம் தநு: கராத் தத்வரே தமுபகூஹிதும் மந: ।
உந்மமஜ்ஜ புலகோऽபிதஸ்ததா நிர்மமஜ ஹ்ருதயேऽதிக: குச: ।। 97
யம் ப்ரஹர்துமவலம்பிதம் தநுஸ்தம் நிரீக்ஷ்ய ஸமரே ததுஜ்ஜி தம் ।
தத்கடாக்ஷஶரண: ஸமாததே ஸாபிமாந இவ மீநகேதந: ।। 98
தத்விலோகவிவஶீக்ருதே ஹரே பாணபாதசகிதே ச நந்திநி ।
ரந்த்ரமேதத் உபலப்ய தர்பக: ஸ்வாம் ருஷம் ஸபலயாம்பபூவ ஸ: ।। 99
யுத்யதே கதமியம் குமாரிகா யுத்யதே கதமஸௌ ஹரஸ்த்விதி ।
த்ரஷ்டுமிச்சதி ஜகத்ரயே ஸ்மரந்தாவுபௌ ஶரகணைரிவாகிரத் ।। 100

---

904இந்தப் பெண் எவ்வாறு போர் புரிவாள் என்று பார்ப்போம். பரமேச்வரன் அவளோடு எவ்விதம் யுத்தம் செய்கிறான் பார்ப்போம் என்று மூவுலகத்தினரும் குதூகலத்துடன் காத்திருக்கும்போது மன்மதன் இடையே புகுந்து அவர்கள் இருவர்மீதும் மலரம்புகளை ஓயாமல் எய்தான். 99

905முன்பு (பார்வதியின் விவாஹத்தின் போது) மன்மதன் மிகவும் முயன்று குறி தப்பிவிடக்கூடாது என்று மலரம்புகளைத் தொடுத்தான். தோற்றுப்போய் தன்னையே இழந்தான். இன்று அதே வில், அதே அம்புகளைக் கொண்டு பரமேச்வரனை வென்று பெரும் புகழ்பெற்றான். அது எப்படி? அது அந்தக் காலம். இது இந்தக் காலம். 100

906போருக்குவந்த தேவியைக் கண்டு கொண்ட பிரமதகணங்கள், முன்பு, திகைத்து நின்றன. மயக்கம் அடைந்தன. நடுங்கின. அத்தனை பயம். இப்பொழுது நிலை மாறிவிட்டது. தேவி அவர்களிடம் பரிவு காட்டினாள். தேவியும் சரி, பிரமதகணங்களும் சரி, சைவர்கள், சிவ பக்தர்கள், அவர்கள் பரஸ்பரம் மோதுவது என்பது அபசாரம். 101

907 எதிரே பரமேச்வரனைப் பார்த்தவுடன் மன்மதனுடைய உளவாளிபோல் இருந்த தேவியின் மூன்றாவது மூலை மார்பில் பதுங்கிவிட்டது. இந்த ரஹஸ்யத்தை தேவியிடம் எடுத்து விளக்கினார் மந்திரி சுமதி அக்கணமே இளம் சந்திரப்பிறையை தலையில் சூடியுள்ள சிவபெருமான் அவள் எதிரே இளம் வாலிபனாக நின்றார். 102

यांविदन्ननपराध्यमाशुगं प्रागजीयत कृतश्रमः स्मरः।
अद्य लब्धमनया महद्यशः काल एव विजयस्य कारणम् ॥१०१

तस्तम्भिरे च मुमुहुश्च चकम्पिरे वित्रासिता युधि तया प्रमथाः समस्ताः।
सद्यो दशा परिणता ननु सैव तख्यां कस्यापि जीर्यति न शैवजनापचारः ॥१०२

मारस्य चार इव वीक्ष्य हरं पुरस्तात् अन्तर्यदा प्रविशति स्म कुचस्तृतीयः।
संबोधितः सुमतिना सविधं तदैव तस्या जगाम तरुणस्तरुणेन्दु मौलिः ॥१०३

ददृशे किल पुष्पवर्षमेकं प्रकटं मूर्ध्नि तयोस्तदा प्रवृत्तम्।
हृदयस्थपरस्पराधिगम्यं ववृते चान्तरमाङ्गजं तदन्यत् ॥१०४

उन्नमय्यमुखमानतमस्याः पाणिनेदम् अवदत्प्रमथेशः।
पश्य देवि किम् अपत्रपसे त्वं यत्त्वया युधि वयं विजिताः स्मः ॥१०५

घटितमखिलं ज्ञातो भावो न किंचन शेषितं
तदापि भवतीं वाचा याचामि काञ्चनमालिकाम्।
इति निगदति स्मेरे शंभौ रसोत्तरमुत्तरं
चतुरम् अवदत्सद्यो बाला तथा क्रियतामिति ॥१०६

चातुर्यं तदवेत्य वाक्यसरणौ चन्द्रार्धचूडामणि-
र्बाले तत्क्रियते तथैव भवती सद्यः परावर्तताम्।
आसन्ने विधुवार एव मधुरामेतारिम सज्जीभवेत्
याभाष्य स्मितमन्थरं स्वयमसावन्तर्दधे तामपि ॥१०७

सद्यः करग्रहफला तव जैत्रयात्रेत्युक्तं न विस्मर वचः कलशीभुवेति।
सा बोधिता सुमतिना सविलज्जमन्तः स्मित्वा तदैव मधुराभिमुखी प्रतस्थे ॥ १०८

इति दशमः सर्गः

---

908 பார்த்துக் கொண்டிருப்பவர்கள் பூமாரி பொழிவதைத்தான் கண்டார்கள். அதனிடையே இருவர் உள்ளங்களிலும் உதித்த பிரேமக் கிளர்ச்சி. அது வேறு விஷயம், எவரும் அறியாத ஒன்று. 103

909 பரமேச்வரன் தேவியின் குளிர்ந்த முகத்தை தன் விரல்களினால் நிமிர்த்தினார். தேவி! என்னைப் பாரம்மா, போரில் வென்றுவிட்டோமே என்ன சொல்வாரோ என்று பயப்படுகிறாயா? என்று கேட்டார். 104

910 தேவி! எல்லாம் நல்லபடியாக கைகூடி வருகிறது. உன் உள்ளம் அறிந்து கொண்டோம். தெரிந்து கொள்ள வேண்டியது இனி ஒன்றும் இல்லை. உன் விருப்பம்போல தேவி காஞ்சனமாலையிடம் ‘‘உன்னைக் கொடு என்று யாசிப்போம்’ என்றார். தேவி குறிப்பு அறிந்து விட்டாள். ஆயினும் ஒரு குறும்பு செய்தாள்.

யாம் விதந்நபராத்யமாஶூகம் ப்ராகஜீயத க்ருதஶ்ரம: ஸ்மர: ।
அத்ய லப்தமநயா மஹத்யஶ: கால ஏவ விஜயஸ்ய காரணம் ।। 101

தஸ்தம்பிரே ச முமுஹுஶ்ச சகம்பிரே ச வித் த்ராஸிதா யுதி தயா ப்ரமதா: ஸமஸ்தா: ।
ஸத்யோ தஶா பரிணதா நநு ஸைவ தஸ்யாம் கஸ்யாபி ஜீர்யதி ந ஶைவஜநாபசார: ।। 102

மாரஸ்ய சார இவ வீக்ஷ்ய ஹரம் புரஸ்தாதந்தர்யதா ப்ரவிஶதி ஸ்ம குசஸ்த்ருதீய: ।
ஸம்போதித: ஸுமதிநா ஸவிதம் ததைவதஸ்யா ஜகாம தருணஸ்தருணேந்துமௌலி: ।। 103

தத்ருஶே கில புஷ்பவர்ஷமேகம் ப்ரகடம் மூர்த்நி தயோஸ்ததா ப்ரவ்ருத்தம் ।
ஹ்ருதயஸ்தபரஸ்பரா திகம்யம் வவ்ருதே சாந்தரமாங்கஜம் ததந்யத் ।। 104

உந்நமய்ய முகமாநதம் அஸ்யா: பாணிநேதமவதத் ப்ரமதேஶ: ।
பஶ்ய தேவி ! கிம் அபத்ரபஸே த்வம் யத் த்வயா யுதி வயம் விஜிதா: ஸ்ம: ।।105

கடிதமகிலம் ஜ்ஞாதோ பாவோ ந கிஞ்சந ஶேஷிதம்
ததபி பவதீம் வாசா யாசாமி காஞ்சநமாலிகாம் ।
இதி நிகததி ஸ்மேரே ஶம்பௌ ரஸோத்தரமுத்தரம்
சதுரமவதத் ஸத்யோ பாலா ததா க்ரியதாமிதி ।। 106

சாதுர்யம் ததவேத்ய வாக்யஸரணௌ சந்த்ரார்தசூடாமணி:
பாலே ! தத் க்ரியதே ததைவ பவதீ ஸத்ய: பராவர்த்ததாம் ।
ஆஸந்நே விதுவார ஏவ மதுராமேதாஸ்மி ஸஜ்ஜீபவேத்
இத்யாபாஷ்ய ஸ்மிதமந்தரம் ஸ்வயமஸாவந்தர்ததே தாமபி ।। 107

ஸத்ய: கரக்ரஹபலா தவ ஜைத்ரயாத்ரேத்யுக்தம் ந விஸ்மர வச: கலஶேபுவேதி ।
ஸா போதிதா ஸுமதிநா ஸவிலஜ்ஜமந்த: ஸ்மித்வா ததைவ மதுராபிமுகீ ப்ரதஸ்தே ।

இதி மஹாகவிஶ்ரீநீலகண்டதீக்ஷிதப்ரணீதே ஶிவலீலார்ணவே தஶம: ஸர்க: ।

---

குதூகலத்துடன் அவள் அழகாகப் பேசினாள். ''ஆமாம் தாங்கள் என் தாயார் காஞ்சனமாலையிடம் ஒரு வார்த்தை கேட்டுவிட வேண்டியதுதான்.'' 105

911 அவளுடைய பேச்சுத்திறனை ரஸித்தார் பரமேச்வரன். பெண்ணே அப்படியே செய்கிறேன். அடுத்து வரும் திங்கட்கிழமை மதுரை வருவேன். தயாராக இரு என்று கூறிவிட்டு பரமேச்வரன் புன்முறுவலுடன் மறைந்தார். அவளையும் தன் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டார். (அந்தர்ததே மறைந்தார், உள்ளத்தில் எற்றுக்கொண்டார். தாமபி அவளையும்) 106

912 அகத்திய முனிவர் கூறினாரே, மறந்துவிட்டீர்களா? உனக்கு கரகிரஹம் நன்றாகக் கிடைக்கும் என்று (காரக்ருஹ அரசர்களிடம் கப்பம் பெறுவது, பாணிகிரஹணம் என்று இரு பொருள்) என்று மந்திரி சுமதி நினைவு படுத்தியவுடன், தேவி வெட்கத்துடன் மதுரையை நோக்கிப் புறப்படத் தயாரானாள். 107

**பத்தாவது ஸர்கம் முடிவடைந்தது**

## एकादशः सर्गः

अथोत्थितां तामनुगृह्णती चमूं सुखप्रसुप्तप्रतिबोधितामिव ।
विहाय सा भूमिपथं सखीवृता विहायसा प्रास्थित पुष्पकाश्रिता ॥ १
ददर्श वल्मीकवत् उन्नतान्गिरीन् महान्त्यरण्यान्यपि शाड्वलानिव ।
सुरापगाद्याः सरितोऽपि तन्तुवत् विदूरभावात् अवनौ नृपात्मजा ॥ २
पुरोपशल्योपवनेऽवतीर्य सा शुभे मुहूर्ते सुमतिप्रवेदिते ।
विवेश राज्ञो भवनं परिष्कृतं गजेन दुग्धार्णवजन्मना शनैः ॥ ३
प्रविश्य गेहं सदसि क्षणं स्थिता विसृज्य पौरान् अनुयायिनोऽपि च ।
सखीसमेता सुमतौ पुरःसरे जगाम मातुः सदनं तटातका ॥ ४
अभिद्रवन्तीं द्रुतमासनान्निजात् प्रमोदबाष्पस्थगितेक्षणामियम् ।
ननाम नाम स्वमुदीर्य पादयोः विंकीर्णपुष्पा विनयेन मातरम् ॥ ५
सुतां विनम्रां परिरभ्य निर्भरं शिरस्युपाघ्राय चुचुम्ब चानने ।
पुनश्च माता परिषस्वजे चिरं पुनश्च जघ्रौ सुचिरं शिरस्पदे ॥ ६
नियन्त्रितानन्दतरङ्गसंप्लवां निरुद्धहर्षाश्रुप्लवां कथंचन ।
समेत्य सख्यः सुमतिश्च पादयो मुहुः प्रणेमुर्महिषीं महीपतेः ॥ ७
इय नदीभर्तुरियं सुधान्धसामियं नृपाणामुपदेति मन्त्रिणा ।
निवेद्यमानेऽपि सुतामुखार्पितां न दृष्टिमावर्तयितुं शशाक सा ॥ ८

---

## பதினோறாவது ஸர்கம்

913 தேவியின் படைவீரர்கள் நன்கு தூங்கி விழித்துக் கொண்டவர்போல, வெகு உற்சாகமாகக் கிளம்பினார்கள். தேவி அவர்களுக்கு அருள்வாக்கு வழங்கிவிட்டு, புவி மார்கத்தை விட்டு விட்டு ஆகாயமார்கமாக, ஸகிகளுடன் புஷ்பக விமானத்தில் புறப்பட்டாள். 1

914 ஆகாசவிமானத்தில் பவனி வந்து கொண்டிருந்தபொழுது, கீழே பூமியிலுள்ள மலைகள் பாம்பு புற்றுகள் போலவும், பெரும் காடுகள் பயிர் நிலங்கள் போலவும், கங்கை முதலிய நதிகள் ஒரு நூலைப் போலவும் அரசகுமாரி பார்த்தாள். 2

915 மதுரா நகரத்தின் வெளிப்புறத்தில் ஒரு உத்யானம். இதில் இறங்கினாள் தேவி. பிறகு மந்திரி சுமதி குறிப்பிட்ட சுபமுஹூர்த்தத்தில், ராஜ பவனத்தில், மெதுவாகப் பிரவேசம் செய்தாள். அது முன்னரே பாற்கடலில் தோன்றிய ஐராவதத்தின் துதிக்கை நீர் பீச்சினால் கழுவி தூயதாக்கி இருந்தது. 3

916 ராஜபவனப்பிரவேசம் செய்தவுடன் நேராக தர்பாருக்கு தடாதகாதேவி சென்றாள். அங்கு சற்று நேரம் நகரமக்களையும், தன்னுடன் வந்தவர்களையும்

## அதைகாதஶ: ஸர்க: ।

அதோத்திதாம் தாம் அநுக்ருஹ்ணதீ சமூம் ஸுகப்ரஸுப்தப்ரதிபோதிதாமிவ ।
விஹாய ஸா பூமிபதம் ஸகீவ்ருதா விஹாயஸா ப்ராஸ்தித புஷ்பகாஶ்ரிதா ॥ 1
ததர்ஶ வல்மீகவத் ஊந்நதான் கிரீன் மஹாந்த்யரண்யாந்யபி ஶாட்கவலாநிவ ।
ஸுராபகாத்யா: ஸரிதோऽபி தந்துவத் விதூரபாவாத் அவநௌ ந்ருபாத்மஜா ॥ 2
புரோபஶல்யோபவநேऽவதீர்ய ஸா ஶுபே முஹூர்தே ஸுமதிப்ரவேதிதே ।
விவேஶ ராஜ்ஞோ பவநம் பரிஷ்க்ருதம் கஜேந துக்தார்ணவஜந்மநா ஶநை: ॥ 3
ப்ரவிஶ்ய கேஹம் ஸதஸி க்ஷணம் ஸ்திதா விஸ்ருஜ்ய பௌரான் அநுயாயிநோऽபி ச ।
ஸகீஸமேதா ஸுமதௌ புரஸ்ஸரே ஜகாம மாது: ஸதநம் தடாதகா ॥ 4
அபித்ரவந்தீம் த்ருதமாஸநாந்நிஜாத் ப்ரமோதபாஷ்பஸ்தகிதேக்ஷணாமியம் ।
நநாம நாம ஸ்வமுதீர்ய பாதயோர் விகீர்ணபுஷ்பா விநயேந மாதரம் ॥ 5
ஸுதாம் விநம்ராம் பரிரப்ய நிர்பரம் ஶிரஸ்யுபாக்ராய சுசும்ப சாநநே ।
புநஶ்ச மாதா பரிஷஸ்வஜே சிரம் புநஶ்ச ஜக்ரௌ ஸுசிரம் ஶிரஸ்பதே ॥ 6
நியந்த்ரிதாநந்த தரங்கஸம்ப்லவாம் நிருத்தஹர்ஷாஶ்ருப்லவாம் கதஞ்சந ।
ஸமேத்ய ஸக்ய: ஸுமதிஶ்ச பாதயோர்முஹு: ப்ரணேமுர்மஹிஷீம் மஹீபதே: ॥ 7
இயம் நதீபர்த்துரியம் ஸுதாந்தஸாமியம் ந்ருபாணாமுபதேதி மந்த்ரிணா ।
நிவேத்யமாநேऽபி ஸுதாமுகார்பிதாம் ந த்ருஷ்டிமாவர்த்தயிதும் ஶஶாக ஸா ॥ 8

---

*தரிசனத்தினால் அருள்பார்வையால் பார்த்து விட்டு மந்திரி சுமதி முன் செல்ல ஸகிகளுடன் தாயின் அந்தப்புரத்தை அடைந்தாள்.* 4

917 தன் பெண் தன்னைத் தேடிவருவதைக் கண்டு ஆனந்தக்கண்ணீர் கண்களை மறைக்க, தாயார் ஆஸனத்திலிருந்து எழுந்து ஓடிவந்தாள். மிகவும் வினயத்துடன், தேவி தாயின் திருவடிகளிலே மலர்களைப் பொழிந்து, தன் பெயர் சொல்லி வணங்கினாள். 5

918 தாயார், சரணங்களில் விழுந்த தன் அருமைக் குமாரியைத் தூக்கி வாரி அணைத்தாள், உச்சி முகர்ந்தாள். முகத்தில் முத்தமிட்டாள். மறுபடியும் அவளை இருகக்கட்டிக் கொண்டாள். மறுபடியும் வெகு நேரம் உச்சி முகர்ந்தாள். 6

919 அடங்காமல் பெருகுகின்ற ஆனந்த அலை பிரவாஹத்தை மஹாராணி, ஒருவாறு அடக்கிக் கொண்டாள். தேவியின் மக்களும் மஹாமந்திரி சுமதியும் மஹாராணியின் திருவடிகளில் மறுபடியும் வணங்கினார்கள். 7

920 இவையெல்லாம் கடலரசன் (நதிபதி) வழங்கிய வெகுமதிகள். இவை தேவர்கள் அளித்தவை, இவையெல்லாம் நாட்டு அரசர்கள் ஸமர்பித்த செல்வங்கள் என்று சுமதி சொல்லிக்கொண்டே இருந்தார். மஹாராணியின்

इयाञ्जयस्ते सुमतेः प्रभावतः सखीभिराभिः सुखमस्मि पोषिता ।
इमान्समालोकय देवि ! तावदिति अबोधयन्मातरमम्बिका स्वयम् ॥ ९

तथेति सा मन्त्रिनिवेदितां पृथग्ददर्श दिव्यामुपदां च पार्थिवीम् ।
सुरद्रुमान्सवर्गगवीं च पूजितान् प्रणम्य जग्राह नृपालभामिनी ॥ १०

वरः सुराणां जगतां च यो वरो वरः स एव स्वयमम्बयार्जितः ।
किमेभिरद्येत्यवदन् महत्प्रियं समेत्य सख्यः सुमतिश्च ता तां प्रति ॥ ११

किमेतदित्यप्रतिपत्तिमन्थरां विशिष्य देवीं सुमतिर्विबोधयन् ।
स संविधित्सुः सकलं तदाज्ञया बहिः प्रतस्थे बहुधा तयाद्दतः ॥ १२

उपस्थितेशानविवाहमङ्गलाम् उदीक्ष्य पुत्रीं मुमुदे न सा तथा ।
यथा व्यषीदत्तनयोत्सवप्रियं पतिं स्मरन्ती मलयध्वजं नृपम् ॥ १३

परीत्य हेमाम्बररत्नभूषणैः प्रवर्तितारात्रिकमङ्गला स्वयम् ।
चकार रक्षां जननी तनू भुवः सितेन फाले भसितेन शूलिनः ॥ १४

अथोपकार्या विविधाः सुधान्धसां धराभुजां तत्र तपस्विनामपि ।
समस्तवस्तूपचिताः समन्ततः चकार सज्जाः सुमतिः क्षणादिव ॥ १५

सुगन्धिगन्धद्रवलिप्तभित्तिकं सुवर्णरम्भाघटितं गृहे गृहे
नियन्त्रितच्छत्रमुदाञ्चितध्वजं पुरं स्वतः पौरजनैरलंकृतम् ॥ १६

காதுகளுக்கு எதுவும் எட்டவில்லை. அவளுடைய கண்கள் பெண்ணின் திருமுகத்தில் பதிந்தவை மறுபுறம் திரும்பவில்லை. 8

921 தாய் - இவ்வளவு பெரிய வெற்றியா உனக்குக் கிடைத்தது! என்று ஆச்சரியப்பட்டாள். பெண் சொன்னாள், 'அம்மா இவையெல்லாம் மஹா மந்திரியின் பிரபாவத்தினால் கிடைத்தவை. இந்தத் தோழிகள் எல்லோரும் என்னை நன்றாகக் கவனித்துக் கொண்டார்கள். 'அம்மா இவர்களைப் பாருங்களேன்' என்று அவர்களை அழைத்து அறிமுகம் செய்து வைத்தாள். 9

922 தேவி காட்டிய வெகுமதிகளைத் தாயார் பார்த்தாள். உடன் மந்திரி பூமி அரசர்கள் அளித்த நன்கொடைகளை விவரித்துக் கூறினார். மஹாராணி, பூஜிக்கத்தக்க கற்பகத்தருக்களையும் காமதேனுவையும் வணங்கி ஏற்றுக் கொண்டாள். 10

923 இந்த வெகுமதிகளும், காணிக்கைகளும் இருக்கட்டும். தாயே! தேவிக்கு பேரருள் வரன் அல்லவா கிடைத்திருக்கிறது. அவர் தேவர்களில் சிறந்தவர், உலகத்திற்கெல்லாம் சிறந்தவர் என்று ராணிக்கு மிகவும் பிடித்தமான செய்தியை தோழிகளும் மந்திரி ஸுமதியும் சேர்ந்து கூறினர். 11

இயான்ஜயஸ்தே ஸுமதே: ப்ரபாவத: ஸகீபிராபி: ஸுகமஸ்மி போஷிதா ।
இமான் ஸமாலோகய தேவி ! தாவதித்யபோதயன்மாதரமம்பிகா ஸ்வயம் ॥ 9
ததேதி ஸா மந்த்ரிநிவேதிதாம் ப்ருதக் ததர்ஶ திவ்யாமுபதாம் ச பார்திவீம் ।
ஸுரத்ருமான் ஸ்வர்ககவீம் ச பூஜிதான் ப்ரணம்ய ஜக்ராஹ ந்ருபாலபாமிநீ ॥ 10
வர: ஸுராணாம் ஜகதாம் ச யோ வரோ வர: ஸ ஏவ ஸ்வயமம்பயார்ஜித: ।
கிமேபிரத்யேத்யவதந்மஹத்ப்ரியம் ஸமேத்ய ஸக்ய: ஸுமதிஶ்ச தாம் ப்ரதி ॥ 11
கிமேததித்யப்ரதிபத்திமந்தராம் விஶிஷ்ய தேவீம் ஸுமதிர்விபோதயன் ।
ஸ ஸம்விதித்ஸு: ஸகலம் ததாஜ்ஞயா பஹி: ப்ரதஸ்தே பஹுதா தயாத்ருத: ॥ 12
உபஸ்திதேஶாநவிவாஹமங்களாம் உதீக்ஷ்ய புத்ரீம் முமுதே ந ஸா ததா ।
யதா வ்யஷீதத் தநயோத்ஸவப்ரியம் பதிம் ஸ்மரந்தீ மலயத்வஜம் ந்ருபம் ॥ 13
பரீத்ய ஹேமாம்பரரத்நபூஷணை: ப்ரவர்திதாராத்ரிகமங்களா ஸ்வயம் ।
சகார ரக்ஷாம் ஜநநீ தநூபுவ: ஸிதேந பாலே பஸிதேந ஶைலிந: ॥ 14
அதோபகார்யா விவிதா: ஸுதாந்தஸாம் தராபுஜாம் தத்ர தபஸ்விநாமபி ।
ஸமஸ்தவஸ்தூபசிதா: ஸமந்ததஶ்சகார ஸஜ்ஜா: ஸுமதி: க்ஷணாதிவ ॥ 15
ஸுகந்திகந்தத்ரவலிப்தபித்திகம் ஸுவர்ணரம்பாதடிதம் க்ருஹே க்ருஹே ।
நியந்த்ரிதச்சத்ரமுதஞ்சிதத்வஜம் புரம் ஸ்வத: பௌரஜநைரலங்க்ருதம் ॥ 16

924 ‘அப்படி ஒருவர் உண்டா என்ன!’ என்று மஹாராணி வியந்தாள் மந்திரி முக்கியமான சில விளக்கங்களை அளித்தார். தேவி மந்திரியைக் கொண்டாடினாள். ராணியின் ஆணைகளை நிறைவேற்றுவதற்கு மந்திரி புறப்பட்டார். 12

925 பெண்ணுக்கு திருமணவைபவம் நேர்ந்திருக்கிறது என்ற செய்தியைக்கேட்டு மஹாதேவி சந்தோஷம் அடைந்தாள். ஆயினும் பெண்ணின் விவாஹ மங்களத்தைப் பற்றி கனவு கொண்டிருந்த கணவர் மலயத்வஜபாண்டியனை நினைத்து வருத்தம் மேலிடத் திணறினாள். 13

926 பெண்ணுக்கு தங்கத்தினால் இழைக்கப்பட்ட ஆபரணங்களையும். வஸ்திரங்களையும் அணிவித்தாள். தானே அவளுக்குச் சுற்றிப் போட்டு, திருஷ்டி கழித்து, மங்கள ஹாரதி எடுத்து நெற்றியில் வீபூதி இட்டு, ரக்ஷைகள் செய்தாள். 14

927 தேவலோகத்திலிருந்தும் நம் நாட்டிலிருந்தும் வரப்போகின்ற கல்யாண விருந்தினர்களுக்கு ஜாகை வஸதிகள், தபஸ்விகளான முனிச்ரேஷ்டர்களுக்குரிய பர்ணசாலைகள் இவற்றை குறை இன்றி சுமதி ஒரு க்ஷண நேரத்தில் தயார் செய்து விட்டார். 15

928 நாட்டு மக்களும் தேவியின் கல்யாண வைபவத்திற்காக தமது கிருஹங்களையும் அலங்கரித்தனர். சுவர்களுக்கெல்லாம் நறுமணம் கொண்ட

विनिर्गतः सुन्दरनाथलिङ्गतो महेश्वरो मानुषमास्थितो वपुः ।
पुरोपशल्येऽवततार संवृतो गणैः सुरैर्मातृगणैश्च सर्वतः ॥ १७

स पाण्ड्यदेवीप्रहितेन मान्त्रिणा निवेदितासन्नमुहूर्तमङ्गलः ।
प्रभुर्विवाहोचितवेषसुन्दरः प्रवेष्टुकामो मधुरां विनिर्ययौ ॥ १८

किरीटकोटीघटितोऽस्य पाटलो मणिर्बभौ वासुकिनोपदीकृतः ।
निकृत्य बालं विधुमुच्चकैस्ततः परिस्फुरन्बाल इव त्विषां पतिः ॥ १९

विजित्य मारं जगदेकधन्विनं यदाप कीर्तिं महतीं महेशितुः ।
तदक्षि तस्मिन्नधुना विजृम्भिते ममज्ज मन्दाक्षवशादिव स्वयम् ॥ २०

प्रसक्तमङ्कं विमले कथंचन प्रमार्ष्टुमीष्टे न शिवोऽपि सर्वथा ।
मृगेण हीनोऽप्यलिकेऽस्य यत्क्वचिद्बभौ मुखेन्दुर्मृगनाभिलाञ्छितः ॥ २१

कपोलसौन्दर्यममुष्य पश्यतः कटाक्षरेखाः पतिता जनस्य याः ।
नवोद्गतश्मश्रुनिभादिहैव ता निषेदुरत्यादरकीलिता इव ॥ २२

विशुद्धमुक्ताफलकुण्डलाङ्कितं विकीर्णमन्दस्मितसुन्दराधरम् ।
विशालनेत्रं वदनं निरीक्षितुं तदस्य सैवार्हति मीनलोचना ॥ २३

विशुद्धहेमत्विषि विश्वमङ्गले वपुष्यमुष्याद्भुतकुङ्कुमाङ्किते ।
अलक्षि सूक्ष्मो विशदश्च कञ्चुकोऽवतंसितेन्दोरिव चन्द्रिकाङ्कुरः ॥ २४

பூச்சுகளைப் பூசினர். வீட்டு வாசல்களில் பசுமையான குலையுடன் கூடிய வாழை மரங்களை நட்டு தோரணங்களைக் கட்டினார்கள். உள்ளடக்கமாக வெண் கொடிகளையும், வெற்றிக் கொடியை உயர்த்தியும் அலங்கரித்தனர். 16

929 பரமேச்வரன் ஸுந்தரநாத லிங்கத்திலிருந்து மானுடத் திருமேனியுடன் வெளிப்பட்டு, மதுரா நகரத்தின் எல்லையில் தமது கணங்களுடனும், ஐந்த்ரீ, மாஹேச்வரி முதலான தெய்வத் தாய்குலங்களுடனும் தோன்றினார். 17

930 பாண்டிய மஹாதேவி காஞ்சனமாலையின் வேண்டுகோளின்படி மஹாமந்திரி சுமதியின் மூலம், விவாஹ முஹூர்த்த காலம் நெருங்கிவிட்டது என விண்ணப்பித்தார் . பிரபு மாப்பிள்ளை கோலம் பூண்டு தேவர் குழாமுடன் வர யாத்திரை புறப்பட்டார். 18

931வாஸுகி என்ற நாகராஜன், ஒரு (தேங்காய் அளவு) மாணிக்க ரத்தினத்தை ஸமர்ப்பித்தான். அதை சடை முடியில் கிரீடமாகப் பதித்துக்கொண்டார். இளம்பிறைச் சந்திரனை அதன் மேல் சூடிக்கொண்டார். அது இளம் சூரியனைப்போல ஒளி பரப்பியது. 19

932 பரமேச்வரனுடைய நெற்றிக் கண், முன்பு உலகிலேயே தோல்வி அடையாத ஒரே வீரனாகிய மன்மதனை எரித்து அதன் மூலம்

விநிர்கத: ஸுந்தரநாதலிங்கதோ மஹேஶ்வரோ மாநுஷமாஸ்திதோ வபு: ।
புரோபஶல்யேऽவததார ஸம்வ்ருதோ கணை: ஸுரைர்மாத்ருகணைஶ்ச ஸர்வத: ॥ 17

ஸ பாண்ட்யதேவீப்ரஹிதேந மந்த்ரிணா நிவேதிதாஸந்நமுஹூர்தமங்கள: ।
ப்ரபுர்விவாஹோசிதவேஷஸுந்தர: ப்ரவேஷ்டுகாமோ மதுராம் விநிர்யயௌ ॥ 18

கிரீடகோடீகடிதோऽஸ்ய பாடலோ மணிர்பபௌ வாஸுகிநோபதீக்ருத: ।
நிக்ருத்ய பாலம் விதுமுச்சகைஸ்தத: பரிஸ்புரன் பால இவ த்விஷாம் பதி: ॥ 19

விஜித்ய மாரம் ஜகதேகதந்விநம் யதாப கீர்த்திம் மஹதீம் மஹேஶிது: ।
ததக்ஷி தஸ்மிந்நதுநா விஜ்ரும்பிதே மமஜ்ஜ மந்தாக்ஷவஶேதிவ ஸ்வயம் ॥ 20

ப்ரஸக்தமங்கம் விமலே கதஞ்சந ப்ரமார்ஷ்டுமீஷ்டே ந ஶிவோऽபி ஸர்வதா ।
ம்ருகேண ஹீநோऽப்யலிகேऽஸ்ய யத் க்வசித் பபௌ முகேந்துர்ம்ருகநாபிலாஞ்சித: ॥ 21

கபோலஸௌந்தர்யம் அமுஷ்ய பஶ்யத: கடாக்ஷரேகா: பதிதா ஜநஸ்ய யா: ।
நவோத்கதஶ்மஶ்ருநிபாதிஹைவ தா நிஷேதுரத்யாதரகீலிதா இவ ॥ 22

விஶுத்தமுக்தாபலகுண்டலாங்கிதம் விகீர்ணமந்தஸ்மிதஸுந்தராதரம் ।
விஶாலநேத்ரம் வதநம் நிரீக்ஷிதும் ததஸ்ய ஸைவார்ஹதி மீநலோசநா ॥ 23

விஶுத்தஹேமத்விஷி விஶ்வமங்களே வபுஷ்யமுஷ்யாத்புதகுங்குமாங்கிதே ।
அலக்ஷி ஸூக்ஷ்மோ விஶதஶ்ச கஞ்சுகோऽவதம்ஸிதேந்தோரிவ சந்த்ரிகாங்குர: ॥ 24

---

புகழ்பெற்றிருந்தது. அந்தக்கண் இப்பொழுது வெட்கத்தினால் இமைகளை திறக்காமல் மூடிக்கொண்டிருந்தது. 20

933 ஸாக்ஷாத் சிவனாக இருந்தால்தான் என்ன? அப்பழுக்கற்ற திருமேனியில் ஒரு கரும்புள்ளி விழுந்துவிட்டால் அதை துடைக்கவே முடியாது. 'பாருங்கள் கையில் லீலையாக ஒரு மானை வைத்திருப்பாரே! அதைக்காணோம். ஆனால் அவருடைய முகத்தில் அந்த மானின் கஸ்தூரி மணம் வீசத்தானே வீசுகிறது'. 21

934 பரமேச்வரனின் பளபளப்பான கன்னங்களில், தரிசனம் செய்கிறவர்களின் கண் பார்வைகள், அரும்புக் குறுந்தாடி வளர்ந்திருப்பதுபோல பதிந்து விட்டன. 22

935 பரமேச்வரனுடைய காதுகளில் தூயதான முத்துக் குண்டலங்கள் மிகவும் அழகான சற்றே புன்முறுவல் பூத்த முகம் அகன்று மலர்ந்த கண்கள் அந்த ஸௌந்தர்யத்தை தேவி ஒருத்திதான் கண்களால் கண்டுகளிக்க கொடுத்து வைத்திருக்கின்றாள். அவளுக்கு மீன்களைப் போல நீண்ட கண்களுண்டே! 23

936 பரமேச்வரன் ஒரு மெல்லிய பனியன் போட்டுக் கொண்டிருந்தார். அவருடைய திருமேனியோ தங்க நிறம். அதில் குங்குமப்பூ குழம்பு மெல்லியதாகப் பூசி இருந்தது. மிகவும் சூக்ஷ்மமான அந்த மேலாடையில் சிரஸிலுள்ள சந்திரனின் நிலவு பரவியது போலும்! 24

मुहूर्तपर्यन्तविलम्बनाक्षम् आविजृम्भमाणस्मर संज्वरार्जितः ।
विनीलिमेव व्यरुचद्भुजान्तरे तनुस्तदीये मृगनाभिचर्चिका ॥ २५

पृथग्विधाभिर्मणिहारयष्टिभिः परिष्कृतं तद्वपुरैन्दुशेखरम् ।
अलक्ष्यताखण्डलचापमण्डितः पयोधरः सान्ध्यरुचेव पाटलः ॥ २६

मणीमयैरङ्गदकङ्कणादिभिः भरं न मेने मृदुलोऽपि तद्भुजः ।
महीधराणां महतां फणाभृतां विरोपणासादितलाघवोत्सवः ॥ २७

दिगम्चरः काञ्चनमम्बरं हरः कथं बभारेति न विस्मयाय नः ।
तनुत्विषा तस्य दिशो दशापि यत्प्रतप्तकार्तस्वरभास्वरीकृताः ॥ २८

किमस्य मञ्जीरपदे कृतालयाः परीत्य मुक्ताश्चरणं सिषेविरे ।
महोत्सवं द्रष्टुमिमं महेश नः सकृत्पुनः संसरणं भवत्विति ॥ २९

वपुश्चिदानन्दमयं यदद्भुतं तदावृतं तावत् अविद्ययाद्यया ।
इदं ततः सुन्दरमित्थमावृतं मणित्विषेति ब्यषदन्महर्षयः ॥ ३०

विभूषितस्यास्य पुरः पुरन्दरो विशालमेकं मुकुरं समाददे ।
न तत्समश्चेति गिरं पुरातनीम् अपाकरिष्यन्निव बिम्बलम्भनात् ॥ ३१

---

*937* பகவானுடைய மார்பில் கஸ்தூரிப் பொட்டின் பூச்சு கொஞ்சம் கருப்பாகத் தெரிந்தது. அது என்ன? பரமேச்வரனுக்கு மன்மத ஜ்வரம் கண்டுவிட்டது. உடனே தேவியை ஆலிங்கனம் செய்யவேண்டும் என்ற துடிப்பு, சுபமுஹூர்த்தத்திற்கு இன்னும் சில நொடிகள்தான் உள்ளன. அதுவரை பொறுக்க முடியாதுபோல் இருந்தது. தன் மனதினால் தேவியை ஆலிங்கனம் செய்து கொண்டதைத்தான் மார்பிலுள்ள நீலநிறம் காட்டுகின்றதோ! 25

*938* பகவானுடைய மார்பில் ரத்னஹாரங்கள் பளீர் பளீர் என்று தனித்தனியாக ஒளி வீசின. ஆகாசத்தில் மாலை நேரச் சிவப்புடனும், வானவில்லுடனும்கூடிய மேகமண்டலத்தில் மின்னல் கொடிகள் ஒளி வீசுவதுபோல் விளங்கியது. 26

*939* பரமேச்வரனுடைய புஜங்களை, சில நேரங்களில், பூமியைத் தாங்குகின்ற மஹாநாகங்கள் சுற்றிக் கொள்வதுண்டு. அவை தற்போது விலகி விட்டன. பரமேச்வரன் புஜங்களை லகுவாகத் தூக்கினார். அந்தப் பயிற்சியினால் பெற்ற லேசாகும் தன்மை கொண்ட அந்த புஜங்களுக்கு, புஜ அணிகளின் கனம் எம்மாத்திரம்? 27

*940* பரமேச்வரன் திசைகளையே ஆடையாகக் கொண்டவன் ஆயிற்றே. அவர் எவ்வாறு தங்கமயமான ஆடையைப் புனைந்தார் என்று ஆச்சரியப்பட வேண்டாம். பொன்மேனியான் அவன். அதன் காந்தியினால் திசைகள்

முஹூர்த்தபர்யந்தவிலம்பநாக்ஷம் ஆவிஜ்ரும்பமாணஸ்மர ஸஞ்ஜ்வரார்ஜித: ।
விநீலிமேவ வ்யருசத் புஜாந்தரே தநுஸ்ததீயே ம்ருகநாபிசர்சிகா ।। 25

ப்ருதக்விதாபிர்மணிஹாரயஷ்டிபி: பரிஷ்க்ருதம் தத்வபுரைந்துஶேகரம் ।
அலக்ஷ்யதாகண்டலசாபமண்டித: பயோதர: ஸாந்த்யருசேவ பாடல: ।। 26

மணீமயைரங்கதகங்கணாதிபிர் பரம் ந மேநே ம்ருதுலோऽபி தத்புஜ: ।
மஹீதராணாம் மஹதாம் பணாப்ருதாம் விரோபணாஸாதிதலாகவோத்ஸவ: ।। 27

திகம்பர: காஞ்சநமம்பரம் ஹர: கதம் பபாரேதி ந விஸ்மயாய ந: ।
தநுத்விஷா தஸ்ய திஶோ தஶாபி யத் ப்ரதப்தகார்த்தஸ்வரபாஸ்வரீக்ருதா: ।। 28

கிமஸ்ய மஞ்ஜீரபதே க்ருதாலயா: பரீத்ய முக்தாஶ்சரணம் ஸிஷேவிரே ।
மஹோத்ஸவம் த்ரஷ்டுமிமம் மஹேஶ! ந: ஸக்ருத் புந: ஸம்ஸரணம் பவத்விதி ।। 29

வபுஶ்சிதாநந்தமயம் யதத்புதம் ததாவ்ருதம் தாவத் அவித்யயாத்யயா ।
இதம் ததஸ்ஸுந்தரமித்தமாவ்ருதம் மணித்விஷேதி வ்யஷதந்மஹர்ஷய: ।। 30

விபூஷிதஸ்யாஸ்ய புர: புரந்தரோ விஶாலமேகம் முகுரம் ஸமாததே ।
ந தத்ஸமஶ்சேதி கிரம் புராதநீம் அபாகரிஷ்யந்நிவ பிம்பலம்பநாத் ।। 31

---

எல்லாம், உருக்கிய தங்கநிறம் பெற்றன. அளவ ஆடையைப்போல் தோன்றின. அவ்வளவு தான்! 28

941 முக்தி அடைந்த ஞானிகள், (ஜீவன் முக்தர்களாக சஞ்சரிப்பவர்கள் - உடல் உபயோகத்தை அறவே துறந்தவர்கள்) பகவானின் திருவடிகளில் நாகங்களாக கொலுசுகளாகி வந்து சுற்றிக் கொண்டனர். 'விருப்ப மற்றவர்களாயிற்றே இவர்கள், ஏன் நமது சரணங்களில் விழவேண்டும்' என்று பரமேச்வரன் திகைத்தார். அவர்கள் வேண்டினார்கள் 'ஸ்வாமி! தங்கள் திருக்கல்யான வைபவத்தை நாங்கள் கண்ணார ரஸிக்க வேண்டும். அதன் பொருட்டு எங்களுக்கு மறுபடியும் ஒரு தடவை உலகியல் ஸஞ்சாரத்தைக் கொடுக்க வேண்டும்' என்று. 29

942 ஞானிகளான மஹருஷிகள் திகைத்தார்கள். 'பகவானுக்கு ஸ்வரூபம் ஏது? ஞானமே வடிவான ஈச்வரன் ஆனந்தமான அனுபவம் ஆகிறார். அதுவே அத்புதம். அந்த வடிவமே மாயையினால் சூழ்ந்த பரப்ரஹ்மம் ஞானம் என்ற அழகு ஆகிவிட்டதே! சிந்தாமணியின் ஒளியல்லவா இது' என்றெல்லாம் திகைத்தார்கள். 30

943 திவ்யாலங்காரபூஷிதனான பரமேச்வரனின் முன்னே இந்திரன் ஒரு பளிங்குக் கண்ணாடியைக் கொண்டு வைத்தான். என்ன ஆயிற்று? வேதங்களனைத்தும் பரமேச்வரனுக்கு ஈடு இணை மற்றொருவன் கிடையாது' என்று முழங்குகின்றனவே. அதைத் தகர்பதுபோல கண்ணாடியிலே பிம்பம் வந்து விட்டது! 31

स नन्दिना संघटितं पदाब्जयोः पुनन्पुरारिर्मणिपादुकायुगम् ।
करौ कृतार्थौ कमलाक्षवेधसोः सलीलमालम्ब्य शनैर्बहिर्ययौ ॥ ३२

मदालसाभिक्रमणाक्षि मीलनैः करार्पणाकुञ्चितकर्णचापलैः ।
गजाननात्तत्क्षणशिक्षितैर्दृढं स पुङ्गवः कुञ्जरपुङ्गवोऽभवत् ॥ ३३

उदश्चिताकुञ्चिततत्पुरःपदक्षणार्पिताङ्घ्रिः श्रवणावलम्बनः ।
सलीलमुन्नम्य स पूर्वपर्वतं पतिस्त्विषां बाल इवारुरोह तम् ॥ ३४

निगृह्यमाणौ करिणौ मुहुर्मुहुः पुनर्नयन्तौ सममाज्ञया विभोः ।
कृतानुलापौ विधिकेशवौ  तदा प्रचेलतुस्तस्य तु पार्श्वयोर्द्वयोः ॥ ३५

कचिन्महाकालमुखान्गणेश्वरान् क्वचिच्च देवासुरसिद्धचारणान् ।
नियन्त्रयन्दूरत एव पार्श्वयोः चचाल नन्दी पुरतः सवासवः ॥ ३६

स्मृतीतिहासैर्निगमास्तमेकतः शिवागमास्तन्त्रगणैस्ततोन्यतः ।
ववन्दिरे वन्दिदशामुपाश्रिताः विमिश्रिता योगिभिरात्मदर्शिभिः ॥ ३७

पुरः पुरः पाण्ड्यनृपालवाहिनी ततोऽनु देवाः प्रमथास्ततोऽनु च ।
ततोऽनु भेरीजयकाहलादयः ततोऽनु चेलुर्विविधा जयध्वजाः ॥ ३८

ச்லோகம் 931 முதல் 943 வரை பகவானுடைய சிரம் முதல் பாதம் வரை, ஸ்வரூபத்தை நம் மனதில் சித்திரமாகத் தீட்டி விட்டார் தீக்ஷிதர்.

944 பரமேச்வரன் திருமணக்கோலத்துடன் திருமண மண்டபத்திற்குப் புறப்படுகின்றார். நந்திகேச்வரர் பகவானுடைய சரணங்களில் ரத்தினங்கள் இழைத்த பாதுகைகளைப் பூட்டினார். இடதுபுறம் ப்ரஹ்ம தேவனும் வலதுபுறம் நாராயணனும் பிடித்துக் கொள்வதற்காக தங்கள் கைகளை நீட்டினார்கள். அதன் மூலம் அவை(கைகள்) தங்கள் இருப்பின் பயனைப் பெற்றதாக நினைத்தன. பரமேச்வரன் அவர்களுடைய கைகளில் தன்கைகளை லகுவாக வைத்துப் புறப்பட்டார். 32

945 ஊர்வலத்தின் முன்னே மஹாகணபதி ஜாம் ஜாமென்று உல்லாஸமாகக் கால்களைத் தூக்கிவைத்து நடைபோட்டார். தானாகவே விசிறுகின்ற காதுகளை அடக்கிப் பிடித்தார். அடுத்து வருகின்ற நந்திகேச்வரர் கணபதியிடமிருந்து நடை கற்றுக்கொண்டார். காதுகள் கூறாகக் குத்திட்டு நின்றன. அவர் யானையாகவே ஆகிவிட்டார். யானைக் காளையாக நிமிர்ந்து நடந்தார். 33

946 பால ஸூரியன், முன்னே மஹாகணபதி உல்லாஸமாகக் கால்களை மாற்றி, மாற்றி வைத்து நடைபோடும்போது அவருடைய சரணங்களை வணங்கி, தோப்புக்கரணம் போட்டு விட்டு, உதய பர்வதத்தில் ஏறி இறங்கினார். 34

ஸ நந்திநா ஸங்கடிதம் பதாப்ஜயோ: புநன் புராரிர்மணிபாதுகாயுகம் ।
கரௌ க்ருதார்த்தௌ கமலாக்ஷவேதஸோ: ஸலீலமாலம்ப்ய ஶநைர்பஹிர்யயௌ ॥ 32
மதாலஸாபிக்ரமணாக்ஷிமீலநை: கரார்பணாகுஞ்சிதகர்ணசாபலை: ।
கஜாநநாத் தத்க்ஷணஶிக்ஷிதைர்த்ருடம் ஸ புங்கவ: குஞ்ஜரபுங்கவோऽபவத் ॥ 33
உதஞ்சிதாகுஞ்சிததத்புர:பதக்ஷணார்பிதாங்க்ரி: ஶ்ரவணாவலம்பந: ।
ஸலீலமுந்நம்ய ஸ பூர்வபர்வதம் பதிஸ்த்விஷாம் பால இவாருரோஹ தம் ॥ 34
நிக்ருஹ்யமாணௌ கரிணௌ முஹுர்முஹு: புநர்நயந்தௌ ஸமமாஜ்ஞயா விபோ:।
க்ருதாநுலாபௌ விதிகேஶவௌ ததா ப்ரசேலதுஸ்தஸ்ய து பார்ஶ்வயோர்த்வயோ: ॥ 35
க்வசிந்மஹாகாலமுகான் கணேஶ்வரான் க்வசிச்ச தேவாஸுரஸித்தசாரணான் ।
நியந்த்ரயன் தூரத ஏவ பார்ஶ்வயோஶ்சசால நந்தீ புரத: ஸவாஸவ: ॥ 36
ஸ்ம்ருதீதிஹாஸைர்நிகமாஸ்தமேகத: ஶிவாகமாஸ்தந்த்ரகணைஸ்ததோऽந்யத: ।
வவந்திரே வந்திதஶாமுபாஶ்ரிதா விமிஶ்ரிதா யோகிபிராத்மதர்ஶிபி: ॥ 37
புர: புர: பாண்ட்யந்ருபாலவாஹிநீ ததோऽநு தேவா: ப்ரமதாஸ்ததோऽநு ச ।
ததோऽநு பேரீஜயகாஹலாதயஸ்ததோऽநு சேலுர்விவிதா ஜயத்வஜா: ॥ 38

947 பகவான் யானை மீது பவனி வருகிறார். இரு புறமும் யானைகளில், நாராயணனும் ப்ரஹ்மதேவனும் வருகிறார்கள். அவர்களுடைய யானைகள் முரண்டு முன்னே செல்ல முயல்கின்றன. அவைகளை அடக்கிக் கொண்டே பகவானுடன் இருவரும் வருகிறார்கள். 35

948 பவனியின் முன்னே இந்திரனும், நந்தியும் பவனி வேகம் கூடாமலும் குறையாமலும் இருக்க, மஹாகாலர் முதலிய இனத்தவர்களையும், தேவர்கள், அஸுரர்கள், ஸித்தர்கள், சாரணர்கள் முதலியவர்களையும் ஒழுங்கு படுத்திக் கொண்டு சற்று தொலைவில் இருந்தபடியே நடத்திச் சென்றார்கள். 36

949 பவனியில் யோகிகளும் ஆத்ம ஞானிகளும் வந்தனர். அவர்களிடையே ஸ்ம்ருதிகள், இதிஹாஸங்கள். வேதங்கள் ஒருபுறம், சிவாகமங்கள், தத்துவங்கள் ஒருபுறம், கட்டியம் கூறுகின்ற வந்திகள் போல உருவெடுத்து, வணங்கி ஸேவை செய்தனர். 37

950 பவனி வரிசை பலவகைகளில் அழகாகச் சென்றது. முதல் பவனியை அழைத்துக் கொண்டு பாண்டிய அரசாங்கத்து படைவீரர்கள், அடுத்து தேவர்கள், அடுத்து சிவபெருமானின் ப்ரமதகணங்கள், பிறகு பேரி, காஹலம், முரசு முதலிய வாத்தியக்காரர்கள், தங்கள் தங்கள் வாத்தியங்களை முழங்கிக்கொண்டு வந்தார்கள். அதற்குப்பின் பலவிதமான த்வஜங்களைத் தாங்கிக்கொண்டு பலர் சென்றனர். 38

शचीमुखैर्निर्जरकामिनीजनैः समावृते मातृगणेश्च सर्वतः।
महार्हकर्णीरथमध्यगे रमावचोधिदेव्यौ तमनु प्रचेलतुः॥ ३९

श्रियं नृपाणामवरोधसुभ्रुवो द्विजातिपल्न्यो दयितां हविर्भुजः।
गिरं गृहिण्यो विदुषां च सादरं विशिष्य भक्त्यावनता ववन्दिरे॥ ४०

समुद्धृतं मूर्धनि तस्य पाण्डरं प्रकाशते स्मातपवारणं महत्।
शिरः स्थितं स्वं शिशुमस्य वीक्षितुं समागतः पूर्ण इव क्षपाकरः॥ ४१

सितातपत्रान्तरसंमितं विभोः शिरस्पदं वीक्षितुमुन्मना मनाक्।
विधातृहंसः परितः पतन्निव व्यलोकि धूतं दिवि चामरद्वयम्॥ ४२

अयं स राज्ञीपतिरेति पश्यतेति अनुद्रवज्जानपदोक्तिभङ्गिभिः।
कृताभ्यसूयेषु गणेषु सस्मितौ हरिर्विरिञ्च तमन्वपश्यताम॥ ४३

पराक्रमं स्वं प्रकटीचिकीर्षता समाहृतं शम्बरवैरिणा शिवे।
बलं निजं मौलमिवाङ्गनाजनः तमीक्षितुं संनिपपात सर्वतः॥ ४४

तमेकवक्त्रं द्विभुजं द्विनेत्रमपि अमानुषं भावमिवास्थितं त्विषा।
निरीक्षमाणा निभृतैर्विलोचनैः परस्परामित्थमवादिषुः स्त्रियः॥ ४५

---

*951 அடுத்து பல்லக்குகளில் லக்ஷ்மீ, ஸரஸ்வதி, அடுத்து ப்ராஹ்மீ, வாராஹீ முதலான ஸப்த மாதர்கள், அடுத்து இந்திராணீ, ஸ்வாஹா தேவி முதலிய திசை அதிபர்களின் ராணிகள் வரிசையாக வந்தார்கள்.* 39

*952 நாட்டு அரசர்களின் ராணிகள், லக்ஷ்மியை வணங்கினர். ப்ராஹ்மண ஸ்த்ரீகள் அக்னி தேவதையின் மனைவியாகிய ஸ்வாஹா தேவியை வணங்கினர். வித்வான்களுடைய பத்னிமார்கள், வாக்தேவியான ஸரஸ்வதியை வணங்கினர்.* 40

*953 பகவானுடைய சிரஸுக்கு மேலே ஒரு வெண்குடை, மற்ற வெளிச்சங்களை அகற்றியது. பூரண சந்திரன் தன் கலை ஒன்றைப் பார்ப்பதற்காக நெருங்கி வந்திருந்தான் போலும்!* 41

*954 ஆகாசத்தில் இரண்டு சாமரங்கள் வீசுவது தெரிகிறது. யார் வீசினார்கள்? உற்றுப் பார்த்தனர். அது ப்ரஹ்மதேவனின் வாஹனமாகிய அன்னபக்ஷியின் சிறகுகள். ப்ரஹ்மதேவன் பூமியில் பரமேச்வரனுடைய பவனியில் இருக்கிறார். இந்த ஹம்ஸம் ஏன் தான் இறக்கைகளால் சாமரம் வீசுகிறது? ஆகாயத்தில் ப்ரஹ்ம தேவனின் வருகைக்காக காத்திருந்த ஹம்ஸத்திற்கு சிவபெருமானின் முகஸௌந்தர்யத்தைப் பார்க்கவேண்டும் என்கிற ஆசை.*

ஶசீமுகைர்நிர்ஜரகாமிநீஜநை: ஸமாவ்ருதே மாத்ருகணைஶ்ச ஸர்வத: ।
மஹார்ஹகர்ணீரதமத்யகே ரமாவஶோऽதிதேவ்யௌ தமநு ப்ரசேலது: ॥ 39
ஶ்ரியம் ந்ருபாணாம் அவரோதஸூப்ருவோ த்விஜாதிபத்ந்யோ தயிதாம் ஹவிர்புஜ: ।
கிரம் க்ருஹிண்யோ விதுஷாம் ச ஸாதரம் விஶிஷ்ய பக்த்யாவநதா வவந்திரே ॥ 40
ஸமுத்த்ருதம் மூர்தநி தஸ்ய பாண்டரம் ப்ரகாஶதே ஸ்மாதபவாரணம் மஹத் ।
ஶிரஸ்திதம் ஸ்வம் ஶிஶுமஸ்ய வீக்ஷிதும் ஸமாகத: பூர்ண இவ க்ஷபாகர: ॥ 41
ஸிதாதபத்ராந்தரஸம்மிதம் விபோ: ஶிரஸ்பதம் வீக்ஷிதுமுந்மநா மநாக் ।
விதாத்ருஹம்ஸ: பரித: பதந்நிவ வ்யலோகி தூதம் திவி சாமரத்வயம் ॥ 42
அயம் ஸ ராஜ்ஞீபதிரேதி பஶ்யதேத்யநுத்ரவஜ்ஜாநபதோக்திபங்கிபி: ।
க்ருதாப்யஸூயேஷு கணேஷு ஸஸ்மிதௌ ஹரிர்விரிஞ்சிஸ்ச தமந்வபஶ்யதாம் ॥ 43
பராக்ரமம் ஸ்வம் ப்ரகடீசிகீர்ஷதா ஸமாஹ்ருதம் ஶம்பரவைரிணா ஶிவே ।
பலம் நிஜம் மௌலமிவாங்கநாஜநஸ்தமீக்ஷிதும் ஸந்நிபபாத ஸர்வத: ॥ 44
தமேகவக்த்ரம் த்விபுஜம் த்விநேத்ரமபி அமாநுஷம் பாவமிவாஸ்திதம் த்விஷா ।
நிரீக்ஷமாணா நிப்ருதைர்விலோசநை: பரஸ்பராமித்தமவாதிஷு: ஸ்த்ரிய: ॥ 45

---

*ஆனால் பரமேச்வரனின் தலைக்கு மேல் பிடிக்கப்பட்டுள்ள வெண்குடை முகத்தை மறைக்கிறது. ஆகவே ஹம்ஸம் கீழே இறக்கைகளை விரித்து பறந்து வந்தது.* *42*

*955 பின்னோடு ஓடிவந்த நாட்டு மக்கள் கூச்சலிட்டார்கள். அடேய்! பாருடா, நம் ராணிக்கு ராஜா வருகிறாறாமே! அடேயப்பா என்ன அழகு! இவ்வாறு நாட்டுமக்கள் பவனிக்குள் புகுவதைக் கண்டு சிவபடர்கள் சிணுங்கினார்கள். இந்தக் காட்சியைப் பார்த்து நாராயணனும் ப்ரஹ்மதேவனும் புன்னகை புரிந்தனர்.* *43*

*956 'ஸந்தோஷமான நேரத்தில் சிவபெருமானுக்கு நம்முடைய பராக்ரமத்தைக் காட்டுவோம்' என நினைத்தான் மன்மதன். அவனுடைய மூலப்படை பெண்வர்கம் தானே! அவர்கள் எங்கிருந்தோ கூடிவிட்டனர். எங்கு பார்த்தாலும் பெண்களின் கூட்டம்.'* *44*

*957 பகவான் மானுட வடிவத்தில் ஒரு முகம் (ஐந்து முகம் இல்லை). இரு கைகள் (நான்கு கைகள் இல்லை.) இரு கண்களுடன் (மூன்று கண்கள் கிடையாது). தானே ஸுந்தர பாண்டியனாக வருகிறார். ஆயினும் அவருடைய அமானுஷப் பொலிவு வெளிப்படத்தான் செய்தது. அப்படி ஒரு பிரகாசம். கண் கொட்டாமல் ஸ்த்ரீகள் அனைவரும் மாப்பிள்ளையைப் பார்த்தார்கள். அடுத்தவர்களிடம் சொல்லுகிறார்கள்.* *45*

अहो मुखाम्भोजमहो युगं दृशोः अहो भुजद्वन्द्वमहो भुजान्तरम्।
अहो महत्कौशलमस्य वीक्षितेषु अहो विचित्रा मदवारणे स्थितिः॥ ४६

जिता त्वया यत्पृथिवी न तज्जितं जिताश्च यद्देवि सुरा न तज्जितम्।
अनेन यूना यदनन्यनिर्जितं जितं वधूजन्म तदूर्जितं जितम् ॥ ४७

अमुं समालोक्य युगेन सा दृशोः अमुं समाश्लिष्य भुजद्वयेन वा।
कथं पुनर्निर्वृणुयात्तटातकापि अपूर्णकामाः सकला वयं ततः॥ ४८

हृतं मनोऽनेन हृते विलोचने सहैव नीताः सखि पञ्च ! चासवः।
हृदं वपुर्नः परमत्र पातितं गतत्रपो विध्यति तच्च मन्मथः॥ ४९

त्वदीक्षणायोपगतास्त्वदाश्रिता हिनस्ति नस्त्वय्यपि पश्यति स्मरः।
इतीरचामो वयमस्य संनिधौ प्रभुः किलायं नगरस्य चास्य नः॥ ५०

मयाम्बुजाक्षः सविशेषमीक्षितो मयाद्य दृष्टः सविधे चतुर्मुखः।
अमुं युवानं प्रथमं विलोकयन्त्यहं तु मुग्धा न कमप्यवेदिषम् ॥ ५१

मयास्य दृष्टे विपुलायते दृशौ मयास्य मन्दस्मितमीक्षितं शुचि।
अहं द्वयं प्रेक्षिषि साधु साध्वियं पशुर्हि नः पुच्छविषाणवर्जितः॥ ५२

अनङ्गसर्वस्वमनन्यवीक्षितं न्यधायि यत्पाण्डयकुमारिकावशे।
तदप्यवस्कन्तुम् उपागतः स्वयं युवा किलायं चतुरो जितस्मरः॥ ५३

---

958‘அடேயப்பா! அது என்னடி முகத்தாமரை? அந்த கண்களைப் பாரேன்! புஜங்களில் எத்தனை மிடுக்கு? அந்த மார்பு விண் என்று விரிந்திருக்கிறது. பார்க்கிற அழகே தனி. யானை வாகனத்தில் வருவது பாந்தமாகத்தான் இருக்கிறதுடி!’ 46

959 தடாதகையிடம் அடுத்து சிலர் ஓடினர்- ‘இளவரசி விஜய யாத்திரை செய்து நீங்கள் பூமியை ஜயித்தால் என்ன? அது ஒரு வெற்றியா? தேவர்களை ஜயித்தால் என்ன? அது ஒரு ஜயமா? வேறு யாருமே ஜயிக்கமுடியாத அவரை அல்லவா வென்று கொண்டு வந்திருக்கிறீர்கள்! பெண் ஜன்மத்திற்கே இது மிகப் பெரிய வெற்றி. அசைக்க முடியாத வெற்றி.’ 47

960 அடுத்தவள் சொன்னாள்- ‘இவள் தன் கண்களால் இந்த மஹாபுருஷனைப் பார்த்துவிட்டாளே! தனது கரங்களாலும் அணைத்துக் கொண்டு இருப்பாளோ தடாதகா தேவி! இனி அவன் நிம்மதியடையலாம்? நாமெல்லாம் கொடுத்து வைக்கவில்லை.’ 48

961மற்றொருவள் கூறினாள் ‘இவர் நம் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டார். கண்களையும் பரித்துக் கொண்டு போய் விட்டார். வேறு எதையும்

அஹோ முகாம்போஜமஹோ யுகம் த்ருஶோரஹோ புஜத்வந்த்வமஹோ புஜாந்தரம் ।
அஹோ மஹத்கௌஶலமஸ்ய வீக்ஷிதேஷு அஹோ விசித்ரா மதவாரணே ஸ்திதி: ॥ 46

ஜிதா த்வயா யத் ப்ருதிவீ ந தஜ்ஜிதம் ஜிதாஶ்ச யத்தேவி ! ஶூரா ந தஜ்ஜிதம் ।
அநேந யூநா யதநந்யநிர்ஜிதம் ஜிதம் வதூஜந்ம ததூர்ஜிதம் ஜிதம் ॥ 47

அமும் ஸமாலோக்ய யுகேந ஸா த்ருஶோ: அமும் ஸமாஶ்லிஷ்ய புஜத்வயேந வா ।
கதம் புநர்நிர்வ்ருணுயாத் தடாதகாபி அபூர்ணகாமா: ஸகலா வயம் தத: ॥ 48

ஹ்ருதம் மநோऽநேந ஹ்ருதே விலோசநே ஸஹைவ நீதா: ஸகி! பஞ்ச சாஸவ: ।
இதம் வபுர்ந: பரமத்ர பாதிதம் கதத்ரபோ வித்யதி தச்ச மந்மத:॥ 49

த்வதீக்ஷணாயோபகதாஸ்த்வதாஶ்ரிதா ஹிநஸ்தி நஸ்த்வய்யபி பஶ்யதி ஸ்மர: ।
இதீரயாமோ வயமஸ்ய ஸந்நிதௌ ப்ரபு: கிலாயம் நகரஸ்ய சாஸ்ய ந: ॥ 50

மயாம்புஜாக்ஷ: ஸவிஶேஷமீக்ஷிதோ மயாத்ய த்ருஷ்ட: ஸவிதே சதுர்முக: ।
அமும் யுவாநம் ப்ரதமம் விலோகயந்த்யஹம் து முக்தா ந கமப்யவோதிஷம் ॥51

மயாஸ்ய த்ருஷ்டே விபுலாயதே த்ருஶௌ மயாஸ்ய மந்தஸ்மிதமீக்ஷிதம் ஶுசி ।
அஹம் த்வயம் ப்ரைக்ஷிஷி ஸாது ஸாத்வியம் பஶுர்ஹி ந: புச்சவிஷாணவர்ஜித: ॥ 52

அநங்கஸர்வஸ்வமநந்யவீக்ஷிதம் ந்யதாயி யத் பாண்ட்யகுமாரிகாவஶே ।
ததப்யவஸ்கந்தும் உபாகத: ஸ்வயம் யுவா கிலாயம் சதுரோ ஜிதஸ்மர: ॥53

---

பார்க்க தோன்றவில்லை. நமக்கு ஐந்து பிராணங்களாமே ஒரு பிராணனையாவது வைக்கக்கூடாதா? 49

962 'ப்ரபோ ஸுந்தர குமார! உன்னையே அண்டின மக்கள் உன்னைப் பார்க்க வந்திருக்கிறோம். நீ பார்த்துக் கொண்டிருக்கும்போதே இந்த மன்மதன் எங்களை ஹிம்ஸிக்கிறான்'. இவ்வாறு அவரிடம் சொல்லலாமா? அவர்தானே நமக்குப் ப்ரபு. நமக்கென்ன, இனி இந்த நகரத்திற்கே அவர் தானே அரசர். 50

963 அடுத்தவள் சொன்னாள்-'நான் இந்தக் கமலக் கண்ணன் நாராயணனை நெருங்கிப் பார்த்திருக்கிறேன். இவருக்குப் பக்கத்தில் வருகின்ற ப்ரஹ்மதேவனையும் பார்த்துவிட்டேன். இப்பொழுதுதாண்டி, இந்த யௌவனப் புருஷனைப் பார்க்கிறேன். அப்படியே மயங்கி விட்டேன். எனக்கு ஒன்றுமே புரியவில்லை.' 51

964 அடுத்தவள், ஒரு பொல்லாதவள் கூறினாள்-- ' நான் சொல்லுகிறேன் என்று தப்பாக நினைக்காதீர்கள். இப்போ நான் இவருடைய நீண்ட விசாலமான கண்களைப் பார்துட்டேனா, அவருடைய புன்முறுவலைப் பார்த்துட்டேனா, தேவியையும் பார்த்து விட்டேனா, மிகமிகப் பொருத்தம். எனக்கும் வாய்த்திருக்கிறதே ஒன்று, ஒரு ஸாதுப் பசு, வாலில்லை, கொம்பில்லை. அவ்வளவுதான். 52

इति प्रवृत्ताः प्रतिवीथि संकथा मृगीदृशाम् आकलयन्कृतस्मितः।
विकीर्यमाणः पथि लाजमौक्तिकैः पुराङ्गनाभिः पुरशासनो ययौ ॥ ५४

स राजगेहं समया मतङ्गजं नियन्त्रयत्रादिशति स्म नन्दिनम्।
श्रियं च वाणीमपि राजमन्दिरं प्रवेशय प्रागमरीगणैरिति ॥ ५५

ततः शिलात् आत्मजवेत्रताडितद्रवन्नभोभूचरसंसदा पथा।
समं समस्तामरसुन्दरीजनैर्जगज्जनन्यौ ययतुर्नृपालयम् ॥ ५६

पुरस्कृते स्वोचितया सपर्यया पुरोधसा कुम्भभवेन ते उभे।
अभिद्रुता काञ्चनमालिका जवात् विकीर्णपुष्पा पदयोरवन्दत ॥ ५७

प्रथक्पृथक् सा परिरभ्य लालिता शचीरमावाग्जननीभिरादरात्।
श्रिये सरोजं शुकमुज्ज्वलं गिरे माणिं च शच्ये विनयात् उपाहरत् ॥ ५८

उपेहि मातामहि कुत्र सा वधूः प्रदर्शयार्मज्जननीम् इतीरिता।
निनाय ताः काञ्चनमालिका शनैः तमालयं यत्र तटातकास्थितिः ॥ ५९

विसृज्य भद्रासनमात्तपादुकां समायतीं प्रश्रयगन्धिभिः पदैः।
वधूं ववविवाहोचितवेषकोमलां निरीक्ष्य तस्थुर्निभृताः सुरस्त्रियः ॥ ६०

---

965 இப்படி எல்லாம் அசட்டுத்தனமாகப் பேசக்கூடாது. நன்றாகப் பேசவேண்டும். நான் சொல்லுகிறேன். கேட்டுக் கொள்ளுங்கள். தடாதகா பிறந்தாளே, அப்போதிலிருந்து நான் அவளைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். மன்மதனுடைய அழகு அவளிடம் முழுமையாக வந்து விட்டது. யாருக்கும் அது தெரியாது. அதை ஏற்கத்தக்க மஹாபுருஷன் வருவானா? என்று நினைத்தேன் வந்து விட்டானே. மன்மதன் கொட்டம் அடங்கிவிட்டதே அந்த யுவா வந்து விட்டாரடி கெட்டிக்காரன். 53

966 இவ்வாறு ஒவ்வொரு வீதியிலும் பெண்கள் கூடிப் பேசினார்கள். இதே பேச்சுத்தான். இவற்றை எல்லாம் காதுகளில் வாங்கிக்கொண்டு புன்முறுவல் பூத்தார் பகவான். வழியெல்லாம் நெற்பொறிகளையும் நல்முத்துக்களையும் ஸுந்தரர் மீது வாரி வீசினர். நகரத்து பெண்மணிகள் சூழ ஸுந்தரேச்வரர் ஊர்வலம் நகர்ந்தது. 54

967 யானையின் மீது அமர்ந்திருந்த பெருமான். ராஜ பவனம் அருகில் வந்ததும் யானையை நிறுத்தினார். நந்திதேவரை அழைத்து 'முதல் லக்ஷ்மீ தேவியையும், ஸரஸ்வதீ தேவியையும் உள்ளே அனுப்பு. உடன் தேவ மங்கைகளும் ராஜ பவனத்திற்குள் போகட்டும்' என்றார். 55

968 சிலாதரரின் குமாரரான நந்திகேச்வரர் தனது பிரம்பினால் 'சொடேர்'என்று அடிக்க, ஆகாயத்திலும் பூமியிலும் சென்று கொண்டிருந்த

**இதி ப்ரவ்ருத்தா: ப்ரதிவீதி ஸங்கதா ம்ருகீத்ருஶாம் ஆகலயன் க்ருதஸ்மித: ।**
**விகீர்யமாண: பதி லாஜமௌக்திகை: புராங்கநாபி: புரஶாஸநோ யயௌ ॥ 54**

**ஸ ராஜகேஹம் ஸமயா மதங்கஜம் நியந்த்ரயந்நாதிஶதி ஸ்ம நந்திநம் ।**
**ஶ்ரியம் ச வாணீமபி ராஜமந்திரம் ப்ரவேஶ்ய ப்ராகமரீகணைரிதி ॥ 55**

**தத: ஶிலாத் ஆத்மஜவேத்ரதாடிதத்ரவந்நபோபூசரஸம்ஸதா பதா ।**
**ஸமம் ஸமஸ்த அமரஸுந்தரீஜநை: ஜகஜ்ஜநந்யௌ யயதுர்ந்ருபாலயம் ॥ 56**

**புரஸ்க்ருதே ஸ்வோசிதயா ஸபர்யயா புரோதஸா கும்பபவேந தே உபே ।**
**அபித்ருதா காஞ்சநமாலிகா ஜவாத் விகீர்ணபுஷ்பா பதயோ: அவந்தத ॥ 57**

**ப்ருதக் ப்ருதக் ஸா பரிரப்ய லாலிதா ஶசீரமாவாக்ஜநநீபிராதராத் ।**
**ஶ்ரியே ஸரோஜம் ஶுகமுஜ்ஜ்வலம் கிரே மணிம் ச ஶச்யை விநயாதுபாஹரத் ॥ 58**

**உபேஹி மாதாமஹி ! குத்ர ஸா வதூ: ப்ரதர்ஶயாஸ்மஜ்ஜநநீமிதீரிதா ।**
**நிநாய தா: காஞ்சநமாலிகா ஶநைஸ்தமாலயம் யத்ர தடாதகாஸ்திதி: ॥ 59**

**விஸ்ருஜ்ய பத்ராஸநமாத்தபாதுகாம் ஸமாயதீம் ப்ரஶ்ரயகந்திபி: பதை: ।**
**வதூம் விவாஹோசிதவேஷகோமளாம் நிரீக்ஷ்ய தஸ்துர்நிப்ருதா: ஸுரஸ்த்ரிய: ॥60**

---

தேவிகளும், தேவலோக மாதர்கள் அனைவரும், உலகுக்கே தாயான லக்ஷ்மீ தேவியையும், ஸரஸ்வதீ தேவியையும் முன்னிட்டுக் கொண்டு ராஜபவனத்தில் பிரவேசித்தார்கள். 56

969 அவரவர்களுக்குரிய வரவேற்பு மரியாதைகள் செய்து, அகஸ்திய முனிவர் அவர்களை எதிர்கொண்டழைக்க, மஹாராணி காஞ்சனமாலா, மலர்களை வாரி இறைத்துக் கொண்டே விரைவாக ஓடி வந்து, அவர்களின் திருவடிகளில் வணங்கினாள். 57

970 மஹாராணி லக்ஷ்மி, ஸரஸ்வதீ, சசீ தேவி முதலியவர்களை தனித்தனியே அணுகி, ஆலிங்கனம் செய்து கொண்டு, பெருமைப்படுத்தினாள். லக்ஷ்மீ தேவிக்கு ஒரு தங்கத்தாமரை, ஸரஸ்வதி தேவிக்கு கலகல என்று பேசுகிற கிளி. சசீ தேவிக்கு ஒரு மாணிக்க ரத்தினம் இவைகளை வெகுமதியாக அளித்தாள். 58

971 பாட்டி! எங்கே மணப்பெண்? எங்கள் தாயை எங்களுக்குக் காட்டுங்கள் என்று சலுகையோடு கேட்ட லக்ஷ்மீ முதலானோர்களை, காஞ்சனமாலா தேவி அழைத்துச் சென்று, தடாதகா அமர்ந்திருக்கும் மாளிகைக்குள் கொண்டு விட்டாள். 59

972 மிகுந்த அமெரிக்கையான நடையுடன் மணப்பென் பத்ராஸனத்திருந்து எழுந்து,கால்களில் பாதுகை அணிந்து, அவர்களை எதிர் கொண்டழைத்தாள். அவள் மங்களமான மணக்கோலம் பூண்டிருந்தாள். அவளுடைய அழகைக்கண்ட தேவமாதர்கள் ஸ்தம்பித்து நின்றனர். 60

अलक्ष्यतास्या मणिपादुकाञ्चले समन्ततो मौत्तिकपङ्क्तिरुज्ज्वला ।
अदूरलग्ना चरणारविन्दयाः अनुश्रवाणामिव वर्णपद्धतिः ॥ ६१
अतीत्य लाक्षारसमाहितं नवं मणिप्रभां पादुकयोश्च तावतीम् ।
अकृत्रिमः पाटलिमा पदाब्जयो अलक्ष्यतास्या विसरन्बहिः स्फुटम् ॥ ६२
प्रबोधयन्ती श्रियमक्षिसंज्ञया सरस्वती तच्चरणाम्बुजद्वयम् ।
क्षणं निदध्यौ विकचेक्षणा ततः चिरं तु दध्यौ मुकुलीकृतेक्षणा ॥ ६३
समापतन्त्याः सविलासमाबभौ मनोहरोऽस्या मणिमेखलारवः ।
विजित्य शम्भुं मदनेन गर्जता प्रवर्तितोच्चैरिव वीरघोषणा ॥ ६४
प्रतिक्षणोन्मेषिपयोधरोन्नतिप्रतिस्फुटत्कञ्चुकसंधिपूरणः ।
उरोजनिःशेषसमावृते बभौ उरस्यमुष्या मणिहारकोरकः ॥ ६५
परस्परस्पर्धूयपि तत्कुचद्वयं विजेतुकामं किल मेरुमन्दरौ ।
तथा समेतं समये मिथः स्वयम् यथोपलभ्येत नकिंचित् अन्तरम् ॥ ६६
कृपाणचापग्रह कन्दुकाहतिप्रपन्नकोटीरतटार्पणादिभिः ।
करो न काठिन्यम् अवाप हेतुभिः वदान्यतावासनयेव सुभ्रुवः ॥ ६७
त्रिलोकजेतुर्जयलाञ्छनेन त्रिभङ्गिसंघट्टितमौत्तिकात्मना ।
करारविन्दं कटकेन बालिका विभूषयामास मनोभवाज्ञया ॥ ६८

---

973 மணப்பெண்ணுடைய ரத்தின பாதுகைகளின் விளிம்பில் வரிசையாக முத்துக்கள் குலுங்கின. அவள் அங்கே வந்ததும் தேவ மாதர்கள் கவனித்தார்கள். அரும்பு அரும்பாக நெருக்கி கோர்கப்பட்ட முத்துக்கள் அனைத்தும், வேத அக்ஷரங்களின் வரிசையோ! என நினைத்தனர். 61

974 மணப்பெண்ணின் சரணங்களில் புது மருதாணி இடப்பட்டிருந்தது. அதை மீறி பாதுகைகளில் பதிக்கப்பட்ட மாணிக்கங்கள் ஒளி வீசின. அதையும் மீறி தேவியின் சரணங்களில் இயல்பான சிவப்பு நிறம் மிளிர்ந்தது. 62

975 அந்த சரணங்களின் சிவப்பை கவனிக்கும்படி லக்ஷ்மீ தேவிக்கு ஸரஸ்வதீ கண் ஜாடை காட்டினாள். மறுகணம் தன்னை மறந்தாள். கண்கள் மலர அந்தத் திருவடி ஜோடியை ஸேவித்தாள். மறுகணம் கண்களை மூடிக்கொண்டு த்யானத்தில் இறங்கி விட்டாள். 63

976 தடாதகா தேவி மெதுவாக நடந்து வருகிறாள். அதிலே ஒரு ஒய்யாரம். அப்பொழுது அவளது இடுப்பை அலங்கரிக்கும் மேகலையின் ரத்தின மணிகள் ஜில் ஜில் என்று ஒலித்தன. அது ''ஒரு முறை தோற்றாலும் மறுமுறை வென்று விட்டேன்'' என்ற மன்மதனுடைய வீரகர்ஜனைபோல் இருந்தது. 64

அலக்ஷ்யதாஸ்யா மணிபாதுகாஞ்சலே ஸமந்ததோ மௌக்திகபங்க்திருஜ்ஜ்வலா ।
அதூரலக்நா சரணாரவிந்தயோ: அநுப்ரவாணாமிவ வர்ணபத்ததி: ।। 61

அதீத்ய லாக்ஷாரஸமாஹிதம் நவம் மணிப்ரபாம் பாதுகயோஶ்ச தாவதீம் ।
அக்ருத்ரிம: பாடலிமா பதாப்ஜயோ: அலக்ஷ்யதாஸ்யா விஸரன் பஹி: ஸ்புடம் ।। 62

ப்ரபோதயந்தீ ஶ்ரியமக்ஷிஸம்ஜ்ஞயா ஸரஸ்வதீ தச்சரணாம்புஜத்வயம் ।
க்ஷணம் நிதத்யௌ விகசேக்ஷணா ததஶ்சிரம் து தத்யௌ முகுளீக்ருதேக்ஷணா ।। 63

ஸமாபதந்த்யா: ஸவிலாஸமாபபௌ மநோஹரோऽஸ்யா மணிமேகலாரவ: ।
விஜித்ய ஶம்பும் மதநேந கர்ஜதா ப்ரவர்திதோச்சைரிவ வீரகோஷணா ।। 64

ப்ரதிக்ஷணோந்மேஷிபயோதரோந்நதிப்ரதிஸ்புடத்கஞ்சுகஸந்திபூரண: ।
உரோஜநிஶ்லேஷஸமாவ்ருதே பபாவுரஸ்யமுஷ்யா மணிஹாரகோரக: ।।65

பரஸ்பரஸ்பர்த்யபி தத் குசத்வயம் விஜேதுகாமம் கில மேருமந்தரௌ ।
ததா ஸமேதம் ஸமயே மித:ஸ்வயம் யதோபலப்யேத ந கிஞ்சிதந்தரம் ।। 66

க்ருபாணசாபக்ரஹகந்துகாஹதிப்ரபந்நகோடீரதடார்பணாதிபி: ।
கரோ ந காடிந்யமவாப ஹேதுபிர் வதாந்யதா வாஸநயேவ ஸுப்ரவ: ।। 67

த்ரிலோகஜேதுர்ஜயலாஞ்சநேந ஸா த்ரிபங்கிஸங்கட்டிதமௌக்திகாத்மநா ।
கராரவிந்தம் கடகேந பாலிகா விபூஷயாமாஸ மநோபவாஜ்ஞயா ।। 68

---

*977 தடாதகா தேவி மார்பில் இறுக்கக் கச்சு அணிந்திருந்தாள். ஆனால் மகிழ்ச்சியினால் ஸ்தனங்கள் பூரிப்படைந்து, கச்சையை இறுக்கப் பிடித்திருந்த பித்தான்கள் பிய்ந்தன. அவளுடைய மார்பு முழுவதும் பெருகி ஸ்தனங்களின் மீது ரத்தின ஹாரத்தின் காம்புகள் சிக்கி இருந்தன. கஞ்ஜுகஸந்தீபூரண: என்று பித்தான்களை ரஸமாகக் குறிப்பிடுகிறார் கவி.* 65

*978 இயல்பாகவே தடாதகா தேவியின் முலைகள் போட்டி போட்டுக் கொண்டு பெருகின. அவற்றை வெற்றிக்கொள்ள வேணுமென, வெகு விஸ்தாரமான இடைவெளியை உடைய மேரு பர்வதமும், மந்திர மலையும் இணையத் துவங்கி விட்டன. அவைகளின் இடையே இடைவெளியே இல்லை.* 66

*979 தடாதகா தேவி தனது கைகளினால் பட்டாக்கத்தி கால்பந்து இவற்றை கையாண்டு இருக்கிறாளே, அதனால் கைகள் மென்மையை இழந்து கடினமாக இருக்குமோ என்று நினைக்க வேண்டாம். அதே கைகள் வாரி வாரி கொடுத்திருக்கின்றன அல்லவா? அதனால் அவற்றின் மென்மை குறையவில்லை.* 67

*980 மன்மதன் வந்து வேண்டிக் கொண்டான் 'தேவி! தங்கள் திருவருளால் மூன்று உலகங்களையும் ஜயித்து விட்டேன். அதன் அடையாளமாக தங்கள் கைக்கு ஒரு தோள்வளை ஆபரணம் அளிக்கிறேன். அதன் மூன்று*

उपासितुं सा पतिमुत्पलप्रियं करे च कर्णे निवेशितोत्पला ।
बभार भूयो नयनोत्पले ततः स्वयं बभूवोत्पलदाम कोमला ॥ ६९

अलक्षि ताटङ्कयुगान्तरार्पितो विनिर्मितो मौक्तिकरत्नमण्डलः ।
स्वयंचरायोपगतस्त्यजन्विधुं तदाननेन्दोरिव तारकागणः ॥ ७०

अलक्ष्यतासन्नकरग्रहोत्सव प्रमोदजोऽस्या विशदः स्मिताङ्कुरः ।
विसृत्य नासामणिचन्द्रिका बहिः विभूषयन्तीव रदच्छदान्तरम् ॥ ७१

प्रचीयमानं मुखरामणीयक प्रवाहमित्थं वयसा नवं नवम् ।
अवेक्ष्य मीनाविव जातवल्गनौ अशोभिषातां चपले तदीक्षणे ॥ ७२

विधुं चतुर्धा प्रविभज्य तन्मुखे त्रिभिः कपोलौ निटिलं च कल्पयन् ।
तुरीयमंशं विनियोगवर्जितं न्यवेदयत् स्वामिनि शंकरे विधिः ॥ ७३

विशेषयामास यदर्धचन्द्रतो ललाटमस्या मृगनाभिरेखिका ।
विशेषकत्वं वहति स्म तेन सा ततोऽन्यत स्तत्पदमौपचारिकम् ॥ ७४

रराज तद्वेणिलतावलम्बिनी प्रसूनपङ्क्तिश्चारमाङ्गसीमनि ।
प्रहर्तुमीशं समये मनोभुवा निवेशिता गूढमिवेषुसंहतिः ॥ ७५

---

வளைவுகளில் முத்துக்கள் இழைக்கப்பட்டிருக்கின்றன. அதை அணிந்து கொள்ள வேண்டுகிறேன்' என்று கூறினான். தேவி அதை ஏற்று, அந்த அணிகலனை அணிந்து கொண்டாள். 68

981தேவி தடாதகா தன் பிரபுவுக்கு ஆம்பல் மலரில் ஆசை அதிகம் என்று கைகளில் மட்டும் அல்ல காதுகளிலும் ஆம்பல் மலரைப் பூண்டாள். கண்களையும் ஆம்பல் மலராகவே ஆக்கிக் கொண்டாள். தானும் ஆம்பல் மலர் ஹாரம் பூண்டாள். அதனால் அவள் மேனி அழகு கூடியது. 69

982 ஆகாசத்தில் இருந்த நக்ஷத்திர மகளிர், தம் கணவன் சந்திரன் குறைவதும், கூடுவதுமாக இருப்பதைக் கண்டு அலுத்துப்போய் விட்டார்கள். தேவியின் திருமணத்திற்கு வந்த அந்த தாரகைகள் சந்திரனை விட்டு விட்டு தேவியின் முகத்தாமரையின் அருகில் உள்ள தாடகங்கங்களில் வந்து அமர்ந்துவிட்டனர். 70

983 பாணிகிரஹணம் நெருங்குகிறது என்ற குதூஹலம் தடாதகா தேவியின் உள்ளத்தில் ஒவ்வொரு கணமும் பெருகிக் கொண்டே இருந்தது. மொட்டுப் போல் உதடுகளுடன் காணப்பட்ட அந்த புன்முறுவல், மூக்கை அலங்கரித்த புல்லாக்கில் உள்ள ரத்தின ஒளியினால், நிலவு போல ஒளி பெற்று, உதடுகள் சற்றே விரிய, பற்களின் சோபையினால் மிளிர்ந்தன. 71

உபாஸிதும் ஸா பதிமுத்பலப்ரியம் கரே ச கர்ணே ச நிவேஶிதோத்பலா ।
பபார பூயோ நயநோத்பலே தத: ஸ்வயம் பபூவோத்பலதாம கோமலா ॥ 69

அலக்ஷி தாடங்கயுகாந்தரார்பிதோ விநிர்மிதோ மௌக்திகரத்நமண்டல: ।
ஸ்வயம்வராயோபகதஸ்த்யஜந் விதும் ததாநநேந்தோரிவ தாரகாகண: ॥ 70

அலக்ஷ்யதாஸந்ந கரக்ரஹோத்ஸவ ப்ரமோதஜோऽஸ்யா விஶத: ஸ்மிதாங்குர: ।
விஸ்ருத்ய நாஸாமணிசந்த்ரிகா பஹி: விபூஷயந்தீவ ரதச்சதாந்தரம் ॥ 71

ப்ரசீயமாநம் முகராமணீயக ப்ரவாஹமித்தம் வயஸா நவம் நவம் ।
அவேக்ஷ்ய மீநாவிவ ஜாதவல்கநௌ அஶோபிஷாதாம் சபலே ததீக்ஷணே ॥ 72

விதும் சதுர்தா ப்ரவிபஜ்ய தந்முகே த்ரிபி: கபோலௌ நிடிலம் ச கல்பயன் ।
துரீயமம்ஶம் விநியோகவர்ஜிதம் ந்யவேதயத் ஸ்வாமிநி ஶங்கரே விதி: ॥ 73

விஶேஷயாமாஸ யதர்தசந்த்ரதோ லலாடமஸ்யா ம்ருகநாபிரேகிகா ।
விஶேஷகத்வம் வஹதி ஸ்ம தேந ஸா ததோऽந்யதஸ்தத்பதமௌபசாரிகம் ॥ 74

ரராஜ தத்வேணிலதாவலம்பிநீ ப்ரஸூநபங்க்திஶ்சரமாங்கஸீமநி ।
ப்ரஹர்த்துமீஶம் ஸமயே மநோபுவா நிவேஶிதா கூடமிவேஷுஸம்ஹதி: ॥ 75

---

*984* முகத்தின் அழகு க்ஷணத்திற்கு க்ஷணம் கூடுகிறது. வயதினால் மட்டும் அல்ல. அந்தக் கணத்து உவகையினாலும் கூடியது. அதைக் கண்டு படபட என மூடித்திறந்த கண்களாகிய மீன்கள், மின்னல்போல் மின்னி விளங்கின. 72

985 பக்கத்திலிருந்த பிரஹ்மதேவனிடம் பரமேச்வரன் வினவினார்- ''பிதாமஹரே! ஒரு சின்ன கேள்வி. தடாதகையின் முகத்தில் இவ்வளவு அழகை எங்கிருந்து கொண்டு சேர்த்தீர்?'' பிதாமஹர் கூறினார் வெகு நேரம் சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தேன். சந்திரனை நான்கு துண்டங்களாகச் செய்தேன். மூன்று துண்டங்களிலிருந்து பொலிவை வழித்து தடாதகையின் கன்னங்களில் இரண்டையும், நெற்றியில் ஒரு பங்கையும் சேர்த்தேன். நான்காவது துண்டத்தை எங்கு சேர்ப்பது? இடமில்லையே என்று சிந்தித்தேன். தங்கள் தலையில் சூடிவிட்டேன். அவ்வளவுதான். 73

986 இவளுடைய நெற்றியில் சந்திரனுடைய ஒரு பகுதியை ப்ரஹ்மன் சேர்த்தார்! அதன் மீது கஸ்தூரி திலகம் புருவ மத்தியில் ரேகையாக உயர்ந்தது. அதனால் அவளே சிறந்தவள் என்ற பெருமையை இயல்பாகவே அடைந்து விட்டாள். இயல்பாகப் பெற்றது சிறந்தது என்று சொல்வது வெறும் உபசாரமே! (ஆனால் அது பிறருக்கு உபசாரமாகும்) 74

987 அவளுடைய தலை உச்சியிலிருந்து தொங்கிய மலர் ஹாரம் (மதுரைக் கதம்பம் என்று புகழ்பெற்ற) பாதம் வரைத் தொங்கியது. அப்படித் தொங்குவதினால் அதற்கு உபயோகமுண்டு. மன்மதன் திட்டம் போட்டுத்தான்

हरस्य शृङ्गाररसाधिदेवताम् अवेक्ष्य तां मन्थरमायतीं पुरः ।
अलज्जत श्रीर्जगदादि सुन्दरी ललज्जिरे लज्जितुम् अप्सरोगणाः ॥ ७६

पदैरिमां प्राकृतवस्तुसंहतिः प्रसक्तसंकेतम् अलीमसीकृतैः ।
अवर्णयन्तीं विववार भारती स्ववैदुषीं मौनत एव केवळम् ॥ ७७

शची तदीयाद्भुतरूपदर्शने सहस्रमक्ष्णां स्वयमिच्छती सती ।
सकृत्प्रवृत्त्यापि चकाङ्क्ष गौतमे वलादहल्याकृतशापमात्मनः ॥ ७८

ततः शनैः भूषणगौरवेण सा सखीजनालम्बितहारमण्डला ।
ननाम वाणीकमले नता स्वयं सुराङ्गनाभिः परिषस्वजे शचीम् ॥ ७९

अयं प्रणामो ननु लाभ एव नो विवाहदीक्षावभृथे तु देवि ते ।
न हि प्रणामावसरं लभेवहीति अवोचतां तां परिरभ्य ते दृढम ॥ ८०

अथावतीर्य द्विरदादलंकृतात् अनुद्रुतः पारिषदैः सुरैरपि
विरिञ्चिवैकुण्ठकरावलम्बनो विवेश राज्ञो भवनं महेश्वरः ॥ ८१

*அந்த மலர் சரத்தை தொங்க விட்டிருக்கிறான். ஒரு சமயம் பரமேச்வரன் பிணக்கு செய்தால் தேவி அந்த மலரம்பு கோத்த சரத்தினால் ஒரு தட்டு தட்டலாமே!* 75

ச்லோகங்கள் 973 முதல் 987 வரை. தேவியின் ஸௌந்தர்யத்தை வர்ணிக்கும்போது சொல்லப்பட்ட உத்ப்ரேக்ஷை எல்லாம் கவியின் மனத்தில் உதித்து வந்தவை. எந்தக் கவியும் இப்படி எல்லாம் நினைத்துக்கூடப் பார்த்திருக்க முடியாது. திரும்பத் திரும்ப படித்தால் புத்தியும் மனதும் சேர்ந்து ரஸிக்கக்கூடியவை. 76

988 பரமபுருஷனான பரமேச்வரனுக்கு தன்னுடைய பரமப்ரேமையை காணிக்கையாக, ச்ருங்கார ரஸத்தினால் உருட்டிப் பிசைந்து தேவதையாக எதிரே நிற்கிறாள். மெதுவாக நடந்து வருகிறாள். லக்ஷ்மீ தேவி அவளைப் பார்த்து வெட்கப்பட்டாள். தேவலோக அழகிகள் அனைவரும் வெட்கப்படத்தான் விரும்பினார்கள். தேவியுடன் ஒத்துப் பார்க்க உங்களுக்கு என்ன யோக்யதை என்று வெட்கமே வர மறுத்ததாம்! 77

989 ஸரஸ்வதி தேவி வாயாடிதான். அதனால்தான் அவளுக்கு வாக்தேவதை என்று பெயர். அவளுக்கு தடாதகாவை வர்ணிக்க விருப்பம் தான். சொற்கள் வந்தனவா? அவை என்ன சொற்கள்? உலகியல் பொருட்களைச் சொல்வதுதானே. அவைகளுக்கு இந்த தெய்வத்தன்மையை எடுத்துச் சொல்ல திறமை கிடையாதே. இவளை வர்ணிக்க எங்கே போவேன் சொற்களுக்கு. இவள் சொற்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவளாக இருக்கிறாளே என்று வாயைப் பொத்திக் கொண்டு இருந்து விட்டாள். சில வித்வானகள் பெரிய

ஹரஸ்ய ஶ்ருங்காரரஸாதிதேவதாம் அவேக்ஷ்ய தாம் மந்தரமாயதீம் புர: ।
அலஜ்ஜத ஶ்ரீர்ஜகதாதிஸுந்தரீ லலஜ்ஜிரே லஜ்ஜிதும் அப்ஸரோகணா: ॥ 76
பதைரிமாம் ப்ராக்ருதவஸ்துஸம்ஹதி: ப்ரஸக்தஸங்கேதம் அலீமஸீக்ருதை: ।
அவர்ணயந்தீ விவவார பாரதீ ஸ்வவைதுஷீம் மௌநத ஏவ கேவலம் ॥ 77
ஶசீ ததீயாத்புதரூபதர்ஶநே ஸஹஸ்ரமக்ஷ்ணாம் ஸ்வயமிச்சதீ ஸதீ ।
ஸக்ருத்ப்ரவ்ருத்த்யாபி சகாங்க்ஷ கௌதமே பலாதஹல்யாக்ருதஶாபம் ஆத்மந: ॥ 78
தத: ஶநைர்பூஷணகௌரவேண ஸா ஸகீஜநாலம்பிதஹாரமண்டலா ।
நநாம வாணீகமலே நதா ஸ்வயம் ஸுராங்கநாபி: பரிஷஸ்வஜே ஶசீம் ॥ 79
அயம் ப்ரணாமோ நநு லாப ஏவ நோ விவாஹதீக்ஷாவப்ருதே து தேவி ! தே ।
ந ஹி ப்ரணாமாவஸரம் லபேவஹீதி அவோசதாம் தாம் பரிரப்ய தே த்ருடம் ॥ 80
அதாவதீர்ய த்விரதாத் அலங்க்ருதாதநுத்ருத: பாரிஷதை: ஸுரைரபி ।
விரிஞ்சவைகுண்டகராவலம்பநோ விவேஶ ராஜ்ஞோ பவநம் மஹேஶ்வர: ॥ 81

---

ஸபையில் மௌனம் சாதித்தே ஸம்பாவனை வாங்கிக்கொண்டு போய்விடுவார்கள். அதுபோல ஸரஸ்வதி தேவி வாயை கெட்டியாக மூடிக்கொண்டு மௌனம் சாதித்தாள். மௌனத ஏவ கேவலம் விவவார। தன்னுடைய மௌனத்தினாலேயே விவரித்தாள். 78

990 இந்திராணி சசி தேவிக்கு ஒரு விசித்ரமன யோசனை யாருக்கும் தோன்றாதது. இந்த அதிபதமான அழகை ஒவ்வொரு அவயவமாக-இடமாக-கண்டு ரஸிப்பதற்கு இரண்டு கண்கள் போதவில்லையே ஆயிரம் கண்கள் இருந்தால்தானே முடியும். என் கணவர் தவறு செய்தாலும், ஆயிரம் கண்கள் பெற்றுவிட்டார். தேவியின் அழகை எப்படி கண்களால் பருக முடியும்? ஒன்று செய்யலாம். அவர் அகலிகையிடம் தவறாக நடந்து சாபத்தின் மூலம் இந்த பேறு பெற்றார். நாமும் கௌதமரிடம் ஒரு தடவை இப்படி நடந்து கொண்டு ஆயிரம் கண்களைச் சாபமாக பெறலாமே. இதைச் செய்தால் என்ன என்று அவளுடைய சிந்தனை ஓடியது. (உரை ஆசிரியருக்கு இப்படி எல்லாம் எழுதத் திறமை கிடையாது. தீக்ஷிதர் காவியத்தை திரும்பத் திரும்பப் படித்து உண்டான ரஸானுபவமே இவ்வாறு எழுதத் தூண்டுகிறது.) 79

991 தேவி திவ்யாலங்கார பூஷிதையாக ஆபரணங்களின் கனம் தாங்காமல் சிரமப்படுவதைப் பார்த்து, தேவியின் கழுத்தில் சுமத்தப்பட்ட பலமலர் மாலைகளை இருபக்கமும் தோழிகள் தாங்கிக் கொண்டு வந்தனர். தேவீ ஸரஸ்வதியையும், லக்ஷ்மியையும் வணங்கினாள். தேவமாதர்கள் அவளை வணங்கினர். சசி தேவியை தடாதகை இறுக அணைத்துக் கொண்டாள். 80

992 தேவி! நீ உன்னுடைய திருமணத்திற்காக அனுஷ்டித்த யாகத்தின் முடிவில் அவப்ருத மங்களஸ்நானம் செய்கின்ற நேரத்தில் சாஸ்திர

तमर्घ्यपाद्याचमनीयपूर्वया सपर्यया कुम्भभवः सभाजयन् ।
प्रवेशयामास वरं महार्षिभिः प्रसन्नया तस्य दृशा कृतार्थितः ॥ ८२

स पाण्ड्यशुद्धान्तविलासिनीजनैर्विकीर्यमाणः शुभलाजमुष्टिभिः
जटाभिघातोत्पतत् अत्रवाहिनीपयः कणाकीर्ण इवाबभौ वरः ॥ ८३

प्रविष्टमन्तःप्रतिहारसीमनि प्रतीक्ष्य जामातरम् इन्दुशेखरम् ।
प्रचोदिता काञ्चनमालया रमा चकार पाद्यं पयसाऽस्य पादयोः ॥ ८४

प्रदोपहस्ता वचसामधीश्वरा प्रदक्षिणीकृत्य शचीसमन्विता ।
प्रवेशयामास शशाङ्कशेखरं पुरःसरन्ती दिविषत्पुरन्ध्रिंमिः ॥ ८५

स विद्रुमस्तम्भचतुष्कशोभितां विचित्रवैदूर्यविटङ्कलाञ्छिताम् ।
विलम्बिमुक्तामणिदामकोमलां विवेश देवोऽथ विवाहवेदिकाम् ॥ ८६

भेरीभाङ्कारसान्द्रं बहिरबहिरपि प्रौढशुद्धान्तकान्ता-
 पाणिव्याविद्धतूर्यध्वनिजनितचमत्कार संगीतरम्यम् ।
जामातृ श्लाघनोक्तिव्यतिकरितवधूबान्धवोल्लासहासं
 जज्ञे राज्ञो गृहं तन्मुनिजनरचितोत्तुङ्गमङ्गल्यपाठम् ॥ ८७

इति एकादशः सर्गः

---

ஸம்ப்ரதாயப்படி இருவருக்குமே கிடைத்த பரிசு. இந்த நேரத்தில் நாங்கள் விரும்பினாலும் உன்னை நமஸ்கரிக்க முடியாது. ஆகவே இந்த நமஸ்காரப் பரிசை தலை மேல் தாங்குவோம் என்று கூறி அவளை அணைத்துக் கொண்டார்கள். 81

993 பரமேச்வரன் யானையிலிருந்து இறங்கினார். தொண்டர்கள் ஓடி வந்து பின்னோடு ஓடினார்கள். ப்ரஹ்மதேவனும் நாராயணனும் கைலாகு கொடுக்க, ராஜபவனத்தில் பிரவேசித்தார். 82

994 பரமேச்வரனை அகத்திய மஹருஷி, வேத கோஷத்துடன், அர்க்ய, பாத்ய, ஆசமநீயம் முதலிய வேதமுறை உபசாரங்களைச் செய்து பெருமைப்படுத்தினார். பரமேச்வரன் ருஷிகளை கடாக்ஷங்களினால் அனுக்ரஹித்துவிட்டு அவர்கள் மகிழ, கல்யாண மண்டபம் வந்து சேர்ந்தார். 83

995 அப்போது அரண்மனை அந்தப்புற ஸுமங்கலிகள் கை நிறைய நெற்பொறிகளை வாரி இறைத்தனர். அவை வரனாகிய சிவபெருமானின் சடையில் சிக்கின. பிறகு அவை தலையிலிருந்து சிதறிக் கீழே விழும்போது கங்கை நீர் திவிலைகள்போல் காணப்பட்டன. 84

தமர்க்யபாத்யாசமநீயபூர்வயா ஸபர்யயா கும்பபவ: ஸபாஜயன் ।
ப்ரவேஶயாமாஸ வரம் மஹர்ஷிபி: ப்ரஸந்நயா தஸ்ய த்ருஶே க்ருதார்த்தித: ॥ 82

ஸ பாண்ட்யஶூத்தாந்தவிலாஸிநீஜநைர் விகீர்யமாண: ஶுபலாஜமுஷ்டிபி: ।
ஜடாபிகாதோத்பதத் அப்ரவாஹிநீபய: கணாகீர்ண இவாபபௌ வர: ॥ 83

ப்ரவிஷ்டமந்த: ப்ரதிஹாரஸீமநி ப்ரதீக்ஷ்ய ஜாமாதரம் இந்துஶேகரம் ।
ப்ரசோதிதா காஞ்சநமாலயா ரமா சகார பாத்யம் பயஸாऽஸ்ய பாதயோ: ॥ 84

ப்ரதீபஹஸ்தா வசஸாமதீஶ்வரா ப்ரதக்ஷிணீக்ருத்ய ஶசீஸமந்விதா ।
ப்ரவேஶயாமாஸ ஶஶாங்கஶேகரம் புரஸ்ஸரந்தீ திவிஷத்புரந்த்ரிபி: ॥ 85

ஸ வித்ருமஸ்தம்பசதுஷ்கஶோபிதாம் விசித்ரவைதூர்யவிடங்கலாஞ்சிதாம் ।
விலம்பிமுக்தாமணிதாமகோமலாம் விவேஶ தேவோऽத விவாஹவேதிகாம் ॥ 86

பேரீபாங்காரஸாந்த்ரம் பஹி: அபஹிரபி ப்ரௌடஶூத்தாந்தகாந்தா -
பாணிவ்யாவித்ததூர்யத்வநிஜநித சமத்காரஸங்கீதரம்யம் ।
ஜாமாத்ரு ஶ்லாகநோக்திவ்யதிகரிதவதூபாந்தவோல்லாஸஹாஸம்
ஜஜ்ஞே ராஜ்ஞோ க்ருஹம் தந்முநிஜநரசிதோத்துங்கமங்கள்யபாடம் ॥ 87

இதி மஹாகவிஶ்ரீநீலகண்டதீக்ஷிதப்ரணீதே ஶிவலீலார்ணவே ஏகாதஶ: ஸர்க: ।

---

996 உள்ளே தாழ்வார வாயில் அருகே வரும் மாப்பிள்ளை சந்திரசேகரனுக்கு, மஹாதேவி காஞ்சனமாலை அவசர அவசரமாக லக்ஷ்மீதேவியை பாத்யம் கொடுக்குமாறு வேண்டினாள். லக்ஷ்மீ தேவி அவருடைய பாதங்களுக்கு பசும் பாலால் ஆன பாத்யம் வார்த்து பூரித்தாள். 85

997 ஸரஸ்வதி தேவியும், சசீ தேவியும் சந்திரசேகரனுக்கு மங்கள தீப ஹாரத்தி எடுத்து, வலம் வந்தார்கள். உடனே தேவதா ஸ்த்ரீகள் புடை சூழ மாப்பிள்ளையை மஹாராணி உள்ளே அழைத்துச் சென்றாள். 86

998 பகவான் விவாஹ மேடைமீது ஏறினார். அந்த மேடையின் நாற்புறங்களிலும் பவழத்தூண்கள். வைடூர்யம் இழைத்த மேல் விதானம். நான்கு பக்கங்களிலும் நல்முத்து ஸரங்கள் வரிசையாகத் தொங்கின, 87

999 வாசல் பேரி, முரசு போன்ற வாத்திய கோஷம், விவாஹ மேடை மத்தியில் பக்கவாத்தியங்களுடன் கௌரீகல்யாணம் பாட, கூடி இருந்த மஹாராணியின் மதுரா நகர பந்துக்கள் எல்லோருமே மாப்பிள்ளையின் அழகையும், மிடுக்கையும் கொண்டாடிக் கொண்டிருந்தனர். மண்டபத்தைச் சுற்றி முனிவர்கள் வேதகோஷம் செய்தனர். எல்லோரும் சிரித்துப் பேசி மகிழ்ந்தனர். எங்குமே மங்களம் பொங்கித் ததும்பியது.

**பதினோறாவது ஸர்கம் முடிவடைந்தது**

## द्वादशः सर्गः

अथासने रत्नमये निषण्णम् आद्यं युवानं मुनयः पुराणाः ।
आशीर्वचोभिः विविधैरपुष्णन् अनाहतातोद्यनिनादमिश्रैः ॥ १

प्रकीर्य पुष्पाणि मणीमयानि पत्नीं नमन्तीं मलयध्वजस्य ।
श्रिया च वाण्या च निवेद्यमानां श्वश्रूं हरः प्रैक्षत गौरवेण ॥ २

अगस्त्यम् आमन्त्र्य ततो विधातुः आदेशतः श्रीश्च सरस्वतीच ।
निवेशयामासतुरासनार्धे वधूं ह्रिया नम्रमुखीं वरस्य ॥ ३

दाने स्वसुर्दानवमर्दनोऽपि नियुज्यमानः कमलासनेन ।
श्रिया समं काञ्चनमालिकायाः समक्षमारान्निषसाद वध्वाः ॥ ४

प्रस्थापितः प्राग्गिरिजाविवाहे यत्कुम्भजन्मा तद्दणं विनेतुम् ।
ब्रह्माणमीशस्तु विवाहहोमे वव्रे तमध्वर्युम् अथाब्जयोनिम् ॥ ५

यत्नादपि प्रागनवेक्षितं यत्तच्छाम्भवं पादतलं मुकुन्दः ।
पद्माकरावर्जितपाद्यधौतम् आनर्च पर[illegible]भृतं प्रसूनैः ॥ ६

आरोपयन्नङ्कतलं हरिस्तामाचक्षते स्वं परमं पदं याम् ।
राज्यश्रिया दक्षिणया सहैव ददौ त्रिवेदीकवये वराय ॥ ७

---

## பனிரண்டாவது ஸர்கம்

### திருவிளையாடல் 5

### தடாதகைபிராட்டியின் திருமணப் படலம்.

1000 எல்லோருக்கும் ஆதியான யௌவன புருஷனான சிவபெருமானை, ருஷிகள் எல்லோரும், தந்தி வாத்தியங்களுடன் இணைந்து, ஒரே குரல் மதுரமாக, த்ருவம் தே ராஜா த்ருவம் தேவோ ப்ருஹஸ்பதி: முதலான, வேத மந்திரங்களை கோஷித்து, அக்ஷதைகளைப் போட்டு, ஆசீர்வதித்து, ரத்தினமயமான ஆஸனத்தில் இனிது அமர்த்தினார்கள். 1

1001 லக்ஷ்மியும் ஸரஸ்வதியும் இருவரும் சேர்ந்து மலயத்வஜனின் பத்னியான மாமியாரை அழைத்துவந்து அறிமுகப்படுத்தினார்கள். அப்பொழுது தன்னை வணங்கும் அவளை ரத்தின புஷ்பங்களைத் தூவி சிவபெருமான் கௌரவத்துடன் பார்த்தார். 2

1002 ப்ரஹ்மதேவன் ஆக்ஞைப்படி, லக்ஷ்மியும் ஸரஸ்வதியும் அகத்தியர் அனுமதி பெற்று, வெட்கத்தினால் தலைகுனிந்திருந்த மணப்பெண்ணை மணமேடையில் உள்ள வரனுடைய பாதி ஆஸனத்தில் அமர்த்தினார்கள். 3

## அத த்வாதஶ: ஸர்க: ।

அதாஸநே ரத்நமயே நிஷண்ணம் ஆத்யம் யுவாநம் முநய: புராணா: ।
ஆஶீர்வசோபிர் விவிதைரபுஷ்ணன் அநாஹதாதோத்யநிநாதமிஶ்ரை: ॥ 1

ப்ரகீர்ய புஷ்பாணி மணீமயாநி பத்நீம் நமந்தீம் மலயத்வஜஸ்ய ।
ஶ்ரியா ச வாண்யா ச நிவேத்யமாநாம் ஶ்வஶ்ரூம் ஹர: ப்ரைக்ஷத கௌரவேண ॥ 2

அகஸ்த்யம் ஆமந்த்ர்ய ததோ விதாது: ஆதேஶத: ஶ்ரீஶ்ச ஸரஸ்வதீ ச ।
நிவேஶயாமாஸது: ஆஸநார்த்தே வதூம் ஹ்ரியா நம்ரமுகீம் வரஸ்ய ॥ 3

தாநே ஸ்வஶுர்தாநவமர்தநோऽபி நியுஜ்யமாந: கமலாஸநேந ।
ஶ்ரியா ஸமம் காஞ்சநமாலிகாயா: ஸமக்ஷமாராந்நிஷஸாத வத்வா: ॥ 4

ப்ரஸ்தாபித: ப்ராக் கிரிஜாவிவாஹே யத் கும்பஜந்மா தத்ருணம் விநேதும் ।
ப்ரஹ்மாணமீஶஸ்து விவாஹஹோமே வத்ரே தமத்வர்யும் அதாப்ஜயோநிம் ॥ 5

யத்நாதபி ப்ராகநவேக்ஷிதம் யத் தச்சாம்பவம் பாததலம் முகுந்த: ।
பத்மாகராவர்ஜிதபாத்யதௌதம் ஆநர்ச பஶ்யந்நிப்ருதம் ப்ரஸூநை: ॥ 6

ஆரோபயன் அங்கதலம் ஹரிஸ்தாம் ஆசக்ஷதே ஸ்வம் பரமம் பதம் யாம் ।
ராஜ்யஶ்ரியா தக்ஷிணயா ஸஹைவ ததௌ த்ரிவேதீகவயே வராய ॥ 7

---

1003 ப்ரஹ்மதேவன் நாராயணனை 'தங்கள் தங்கைதானே, தாங்களே கன்யாதானம் செய்யலாம்'என்று வேண்டினார். காஞ்சனமாலையின் பார்வையில் மணப்பெண்ணின் அருகில் நாராயணன் லக்ஷ்மியுடன் அமர்ந்தார். 4

1004 முன்பு கைலாயத்தில், பார்வதியின் பரிண்யத்தின்போது, அங்கிருந்த அகஸ்தியரை தென்திசையின் தடுமாற்றத்தை நிலை நிறுத்த, ஈசன் அங்கே அனுப்பினார். அந்தக் கடனைத் தீர்ப்பதின் பொருட்டு, விவாஹ ஹோமத்தில் அகஸ்தியரை ப்ரஹ்மாவாகவும், ப்ரஹ்மதேவனை அத்வர்யுவாகவும் வரித்தார். 5

1005 முன்னொரு சமயம் (திருவண்ணாமலையில்) நாராயணன், பரமேச்வரனுடைய திருவடியை, வராக உருவம் எடுத்துக்கொண்டு,பூமியைக் குடைந்து வெகு தூரம் சென்றும்கூட தரிசிக்கமுடியவில்லை. அந்த ஆசை தீர இப்பொழுது வரனாக சிவபெருமானை பூஜிக்கும் வேளையில் லக்ஷ்மீ தேவீ தண்ணீர் வார்க்க நாராயணன் பரமேச்வரனுடைய பாதங்களை அலம்பி புஷ்பங்களால் அர்ச்சனை செய்து நிம்மதி அடைந்தார். 6

1006 நாராயணன் தடாதகா தேவியை தன் மடியில் அமர்த்திக் கொண்டார். அந்த மடியைத்தான் பெரியோர்கள் அனைவரும் பரமபதம் என்கிறார்கள். மூன்று வேதங்களையும் தன் மூச்சுக்காற்றினால் வெளியிட்டவரான பரமேச்வரன் என்கிற வரனுக்கு, மதுரை ராஜ்யத்தை தக்ஷிணையாகச் சேர்த்து தாரை வார்த்தார். 7

दातुर्गृहीतुश्च किमास्ति गोत्रं को वा पिता कश्च पितामहो वा ।
अतोऽद्भुतरतुभ्यमिमां ददामीति आसीदियानेव तु दानमन्त्रः ॥ ८
तत्पूर्वमुत्तानदशागृहीतसंकेतके पाणितले पुरारेः ।
न्यस्तः करः पाण्ड्यकुमारिकायाः सर्वोत्तरत्वं प्रकटीचकार ॥ ९
करो गृहीतः पृथिवीपतिभ्यो दिक्पालकेभ्यश्च यया जयन्त्या ।
तस्यास्त्वयाग्राहि करोऽधुनेति देवी गिरां सम्मितमाह देवम् ॥ १०
परस्परस्योपरि मन्मथेन प्रयुक्तमस्त्रं समयं प्रतीक्ष्य ।
संदर्शयन्ताविव चक्रतुस्तौ माल्यार्पणव्यत्ययमङ्गलानि ॥ ११
गृह्णन्वरः स्वाञ्जलिना मृगाक्ष्या लाजाञ्जलिं होमविधो चकाशे ।
माल्यापवेधग्लपनापराधनिर्मार्जनाय अनुनयन्निवेमाम् ॥ १२
अश्मानम् आरोपयितुं पदाब्जम् आलम्बमाने दयिते मृगाक्ष्याः ।
पादग्रहः प्राथमिकोऽयमस्याः प्रचीयतामित्यवदन्मुकुन्दः ॥ १३
कान्तः शरण्यो जगतां त्रयाणां तस्याः करस्थे चरणारविन्दे ।
ऐश्वर्यमुर्व्यादि सदाशिवान्तम् अव्याहतं तद्बुधे करस्थम् ॥ १४

---

*1007 தானம் வழங்குபவருக்கோ, தானம் ஏற்பவருக்கோ என்ன கோத்ரம்? பிதா யார்? பிதாமஹர் யார்? (ப்ரவரம் சொல்லும் சமயத்தில்) என்ன சொல்வது என்று கவலைப்படாமல் ''நானே ஒரு ஆத்மாதான். தாங்களும் ஒரு ஆத்மாதான். தங்களுக்கு இந்த கன்னிகையை வழங்குகிறேன். நான் என்று குறிப்பிட்டுக் கொள்ளாமல், உமக்கு தானம் செய்கிறேன்'' இவ்வளவுதான் தான மந்திரம்.* 8

*1008 நாராயணன் பரமேச்வரனை வேண்டினார். தங்கள் கரத்தை நீட்டுங்கள். ஹரன் தனது வலது கரத்தை உயர்த்தி நீட்டினார். அதன் மீது நாராயணன் தேவியின் கரத்தை வைத்தார். தேவியின் கரம் மேலே ஈசனின் கரம் கீழே இதனால் என்ன தெரிகிறது? எல்லாவற்றிற்கும் மேலே தேவியின் கை ஓங்கி இருக்கிறது என்று பிரகடனம் ஆயிற்று.* 9

*1009 ஸரஸ்வதி தேவி பரமேச்வரனைப் பார்த்து புன்முறுவலுடன் கூறினாள். 'எங்கள் மணப் பெண்ணின் கை பூமி அரசர்களிடமிருந்து கப்பம் (கரம்) ஏற்றது. எல்லா திசை அதிபர்களிடமிருந்தும் கப்பம் ஏற்றது. அவர்கள் அனைவரையும் வெற்றி கொண்டவளாக்கும்! ஆனால் நீங்களும் லேசுப்பட்டவரல்ல. அவளுடைய கரத்தையே பற்றி விட்டீர்களே!' என்று.* 10

*1010 தேவீ பரமேச்வரனுடைய கழுத்தில் மாலையிட, பரமேச்வரன் தேவியின் கழுத்தில் மாலையிட்டார். பக்கத்தில் மன்மதன் நின்று*

**தாதுர்க்ரஹீதுஶ்ச கிமஸ்தி கோத்ரம் கோ வா பிதா கஶ்ச பிதாமஹோ வா ।**
**அதோऽத்புதஸ்துப்யமிமாம் ததாமீதி ஆஸீதியாநேவ து தாநமந்த்ர: ।। 8**

**தத்பூர்வமுத்தாந தஶாக்ருஹீதஸங்கேதகே பாணிதலே புராரே: ।**
**ந்யஸ்த: கர: பாண்ட்யகுமாரிகாயா: ஸர்வோத்தரத்வம் ப்ரகடீசகார ।। 9**

**கரோ க்ருஹீத: ப்ருதிவீபதிப்யோ திக்பாலகேப்யஶ்ச யயா ஜயந்த்யா ।**
**தஸ்யாஸ்த்வயாக்ராஹி கரோऽதுநேதி தேவீ கிராம் ஸஸ்மிதமாஹ தேவம் ।। 10**

**பரஸ்பரஸ்யோபரி மந்மதேந ப்ரயுக்தமஸ்த்ரம் ஸமயம் ப்ரதீக்ஷ்ய ।**
**ஸந்தர்ஶயந்தௌ இவ சக்ரதுஸ்தௌ மால்யார்பணவ்யத்யயமங்களாநி ।। 11**

**க்ருஹந் வர: ஸ்வாஞ்ஜலிநா ம்ருகாக்ஷ்யா லாஜாஞ்ஜலிம் ஹோமவிதௌ சகாஶே ।**
**மால்யாபவேதக்லபநாபராத நிர்மார்ஜநாயாநுநயன் நிவேமாம் ।। 12**

**அஶ்மாநம் அரோபயிதும் பதாப்ஜம் ஆலம்பமாநே தயிதே ம்ருகாக்ஷ்யா: ।**
**பாதக்ரஹ: ப்ராதமிகோऽயமஸ்யா: ப்ரசீயதாமித்யவதந்முகுந்த: ।। 13**

**காந்த: ஶரண்யோ ஜகதாம் த்ரயாணாம் தஸ்யா: கரஸ்தே சரணாரவிந்தே ।**
**ஐஶ்வர்யமுர்வ்யாதி ஸதாஶிவாந்தம் அவ்யாஹதம் தத்புபுதே கரஸ்தம் ।। 14**

---

கொண்டிருந்தான். அவன் கூறினான் 'என்னுடைய பாணம் தேவியின் கையிருந்து ஈசனைத் தாக்கிவிட்டது. ஈசனின் கையிருந்த மாலை தேவியைத் தாக்கிவிட்டது. இதனால் எனக்கு இரட்டை வெற்றி' என்று மகிழ்ந்தான். இவ்வாறு மாலை மாற்று வைபவம் நடந்தேரியது. 11

1011 (உரை ஆசிரியரின் குறிப்பு : 'கல்யாண சந்தடியில் தாலி கட்ட மறந்தார்களாம்' என்று ஒரு வசனம் உண்டு. அந்த மறதி தீக்ஷிதரை ஆட்கொண்டு விட்டதுபோலும்! பிறவியிலேயே ஸௌமங்கல்ய தேவதை ஆயிற்றே மணப்பெண். அவளுக்கு எப்படி ஸௌபாக்யமங்களச் சரட்டைக் கட்டினார் ஸுந்தரேச்வரர்? ப்ரஹ்ம, விஷ்ணு மஹேச்வரர்கள் வேத நெறிக்கோ, வேதம் கூறுகின்ற கர்மாக்களுக்கோ கட்டுப்பட்டவர்கள் அல்ல. ஆயினும் வேதம் விதித்த கர்மாவை அனுஷ்டித்துக் காட்டி, அவை யாராலும் தவிர்க்க முடியாதவை என்று தேவியின் ஸௌமாங்கல்ய சரடு கட்டி முத்திரை(ஸீல்)யிட்டார்). 12

1011 வரனான பரமேச்வரன், நெற்பொறி நிறைந்திருந்த தேவியின் குவிந்த கரங்களை தாள் பிடித்துக் கொண்டு, ஹோமம் (லாஜ்ய ஹோமம்) செய்தார். மாலை மற்றும்போது அலக்ஷியமாக மாலையை அணிவித்ததற்கு மன்னிப்பு கேட்பதுபோல் அந்த காட்சி விளங்கியது. தேவியை இவ்வாறு சமாதானப்படுத்தினார். 13

1012 அம்மி மிதிக்கும் சமயத்தில் தேவியின் பாதங்களை பிடிக்கும்போது பக்கத்தில் நின்று கொண்டிருந்த நாராயணன் - 'தேவியின் திருவடியைப்

आमुक्तमञ्जीरम् अलक्तकाङ्कमाकुञ्चितं किंचिदिव ह्रियान्तः ।
स्विन्नं करे स्विद्यति लग्नमैशे धन्याः पदं तद्ददृशुर्जनःयाः ॥ १५

आसीत्तदाविष्कृतहर्षबाष्पम् अक्षिद्वयं काञ्चनमालिकायाः ।
आ मानुषादा च महेश्वरीयात् आनन्दसाम्राज्य इवाभिषिक्तम् ॥ १६

आधीयमानेऽश्मनि तत्पदाब्जे मञ्जीरघोषो मधुरो जजृम्भे ।
सद्यः समास्फालितदोर्द्वयेन मुक्तः स्मरेणेव जयाट्टहासः ॥ १७

प्रदक्षिणीकुर्वति हव्यवाहं द्वन्द्वे जगन्मङ्गलधाम्नि तस्मिन् ।
प्रदक्षिणी चक्रुरिव प्रजानां दृशस्तदीयोत्पलदाम् अदम्भात् ॥ १८

निवर्त्य वैवाहिकहोमशेषम् अम्बोजभूः कुम्भभुवोपदृष्टः ।
न्यवेशयद्रत्नमयेऽथ पीठे वामे वधूं दक्षिणतो वरं च ॥ १९

आसन्नम् अप्यन्तरलेशशून्यं मिथो न तृप्तिं मिथुनं तदूहे ।
अतृप्तयोरेकशरीरभावेपि आसाक्तिरेषा कतमा तयोः स्यात् ॥ २०

आशीर्भिरानुश्रविकीभिराद्याम् आचारपद्याम् अनुपालयन्तः ।
संवर्धयामासुरिमौ समेता ब्रह्मर्षयो ब्रह्ममुखा हसन्तः ॥ २१

---

பிடிப்பது இந்த மங்களகரமான நேரத்தில் நிகழ்ந்துள்ளது. இது மேலும் மேலும் தொடருவதற்கு சுப சகுனமாகும்.' என்று புன்னகை புரிந்தார். 14

1013 மூவுலகத்திற்குமே அதிபன், புகலிடம் பரமேச்வரன், தேவியின் சரணத்தைக் கையிலேந்தியதின் மஹிமை, பூமி முதலிய ஸகல ப்ரபஞ்சங்களுக்கும் ஈச்வரன் என்ற பெருமை மட்டுமல்ல, ஸதாசிவப் பெருமையும், ஸதாசிவன் அவர் கையில் இதற்குத் தடையே கிடையாது என்பதும் ஊர்ஜிதம் ஆயிற்று. 15

1014 பரமேச்வரனின் திருக்கரங்களிலே தேவியின் திருப்பாதங்களில் இருந்த தங்க கொலுசுகள் மேலே விலகிவிட்டன. மருதாணியிட்ட பாதங்களில், விரல்கள் மரியாதையினால் கொஞ்சம் குவிந்திருந்தன (உள்ளடக்கமாக இருந்தன). தேவியின் கைகளின் வியர்வை, ஈசன் கையிலும் துளிர்த்தது. இந்தக் காட்சியைக் காணக் கொடுத்தவர்கள் புண்யாத்மாக்கள். 16

1015 காஞ்சனமாலா ஆனந்தக்கண்ணீர் பெருக கண்களிரண்டும் ஜ்வலித்தன. காஞ்சனமாலா உபநிஷதத்தில் மானுஷ ஆனந்தம் முதல் ப்ரஹ்மானந்தம் வரை வரிசையாகச் சொன்ன அத்தனை ஆனந்தங்களையும் அபிஷேகம் செய்து கொண்டாள். 17

ஆமுக்தமஞ்ஜீரம் அலக்தகாங்கம் ஆகுஞ்சிதம் கிஞ்சிதிவ ஹ்ரியாந்த: ।
ஸ்விந்நம் கரே ஸ்வித்யதி லக்நமைஶே தந்யா: பதம் தத் தத்ருஶார்ஜநந்யா: ॥ 15
ஆஸீத் ததாவிஷ்க்ருதஹர்ஷபாஷ்பம் அக்ஷித்வயம் காஞ்சநமாலிகாயா: ।
ஆ மாநுஷாதா ச மஹேஶ்வரீயாத் ஆநந்த ஸாம்ராஜ்ய இவாபிஷிக்தம் ॥ 16
ஆதீயமாநேऽஶ்மநி தத்பதாப்ஜே மஞ்ஜீரகோஷோ மதுரோ ஜஜ்ரும்பே ।
ஸத்ய: ஸமாஸ்பாலிததோர்த்வயேந முக்த: ஸ்மரேணேவ ஜயாட்டஹாஸ: ॥ 17
ப்ரதக்ஷிணீகுர்வதி ஹவ்யவாஹம் த்வந்த்வே ஜகந்மங்களதாம்நி தஸ்மின் ।
ப்ரதக்ஷிணீசக்ருரிவ ப்ரஜாநாம் த்ருஶஸ்ததீயோத்பலதாம் அதம்பாத் ॥ 18
நிவர்த்ய வைவாஹிகஹோமஶேஷம் அம்போஜபூ: கும்பபுவோபதிஷ்ட: ।
ந்யவேஶயத்ரத்நமயேऽத பீடே வாமே வதூம் தக்ஷிணதோ வரஞ்ச ॥ 19
ஆஸந்நம் அப்யந்தரலேஶஶூந்யம் மிதோ ந த்ருப்திம் மிதுநம் ததூஹே ।
அத்ருப்தயோ: ஏகஶரீரபாவேऽப்யாஸத்திரேஷா கதமா தயோ: ஸ்யாத் ॥ 20
ஆஶீர்பி: ஆநுஶ்ரவிகீபிராத்யாம் ஆசாரபத்யாம் அநுபாலயந்த: ।
ஸம்வர்தயாமாஸுரிமௌ ஸமேதா ப்ரஹ்மர்ஷயோ ப்ரஹ்மமுகா ஹஸந்த: । 21

---

*1016* ஸுந்தரேசன் பாதங்களை தன் கையினால் தூக்கி அம்மி மீது வைத்தபோது, அவளுடைய கால்களில் அணிந்திருந்த கொலுசுகளின் சலங்கைகள் 'கலீர்...கலீர்' என்று நாதம் எழுப்பின. அது மன்மதன் தனது இரு கைகளையும் தட்டிக் கொண்டு, 'வெற்றி நமதே' என்று கோஷமிட்டது போல் இருந்தது. *18*

*1017* தடாதகை கரம் பற்றி ஸுந்தரேசன் அக்னி வலம் வந்தபோது, கூடியிருந்த மக்களின் கண்களெல்லாம். மணப்பெண் அணிந்திருந்த ஆம்பல் மலர் ஹாரத்தில் ஒட்டிக்கொண்டு, அவளோடு அந்தக் கண்களும் அக்னியைப் பெருமிதத்தோடு வலம் வந்தன. *19*

*1018* ப்ரஹ்மதேவன் அகத்திய முனிவரை முன்னிட்டுக் கொண்டு விவாஹ சேஷஹோமத்தை நடத்தி வைத்தார். பிறகு தம்பதிகளை ஹோம வேதிக்கப்பால் அலங்கரிக்கப்பட்டிருந்த ரத்தின ஸிம்ஹாஸனத்தில், இடதுபுறம் மணப்பெண்ணையும் வலதுபுறம் மணமகனையும் அமர்த்தினார்கள். *20*

*1019* தம்பதிகள் நெருங்கித்தானே உட்கார்ந்திருந்தார்கள். இம்மிகூட இடைவெளி இல்லையே ஆயினும் இருவரும் அதனால் திருப்தி அடையவில்லை என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. ( என்று கவி கூறுகிறார்.) இல்லாவிட்டால் ஈருயிர் ஒருடலாக (அர்தநாரீஸ்வரர்) ஆகிவிட வேண்டுமென அத்தனை தீவிரமான எண்ணம் வந்திருக்குமா? *21*

स दक्षिणाभिः परितोष्य विप्रान् संमान्य देवानुचचितोपचारैः ।
विश्रान्तिहेतोरवरोधगेहं विवेश देवोऽथ तटातकायाः ॥ २२

धैर्योपदेशात् असकृत्सखीभ्यां वाणीरमाभ्यां प्रतिबोधितायाः ।
आलम्बमानः करमम्बिकाया मञ्चे पराध्यैं निषसाद देवः ॥ २३

ताम्राधरोष्ठं तरलायताक्षम् आस्विन्नमीषत्रपयावनम्रम् ।
वक्त्रं शनैरुन्नमयांबभूव मार्जन्निव स्वेदलवान्स तस्याः ॥ २४

ताम्बूलमासन्न सखीवितीर्णम् आदाय पर्याकुलितां ह्रिया ताम् ।
आलक्षयन्ती कमला सलीलमाह स्म पत्ये प्रतिपादयेति ॥ २५

कुतो गृहीता वलयास्त्वयेमे केनोपहारीकृत एष हारः ।
इत्यङ्गमङ्गं पतिराममर्श जिज्ञासयेवाभरणेषु तस्याः ॥ २६

आपृच्छ्यमाना दयितेन तत्तत् अवाङ्मुखी नोत्तरमाचचक्षे ।
निर्बन्धपृष्टा तु कथंचिदेषा मन्दस्मितेनोत्तरयांबभूव ॥ २७

माता तवेयं मलयध्वजस्य किं भोगिनी किं गृहिणीषु काचित् ।
इत्युक्तिभिः कोपयतापि पत्या प्रत्युत्तरं भ्रूकुटिरेव लेभे ॥ २८

---

1020 யாருக்கு யார் ஆசீர்வாதம் செய்வது? அக்ஷதை போடுவது? என்று வந்திருந்த ப்ரஹ்மஞானிகள் சிந்திக்கவில்லை. அவர்கள் வேதமந்திரங்களையல்லவா உச்சரிக்கிறார்கள்!! அந்த ஸம்பிரதாயத்தை அனுஸரித்து மங்களாக்ஷதையை நெருக்கமாக இணைந்திருந்த அவர்களுக்குப் போட்டார்கள். அவர்களுக்கே சிரிப்பு வந்துவிட்டது. 22

1021 அவர்கள் தமிழ் ஸம்ப்ரதாயத்தை அனுஸரித்தார்கள். ஈச்வரனும் ஸம்ப்ரதாயத்தை அனுஸரித்தார். ப்ராஹ்மணர்களுக்கு தக்ஷிணை தாம்பூலம் அளித்தார். திக்பாலகர்கள் முதலான அதிகார தேவதைகளுக்கு, ப்ரஹ்மா, நாராயணனுக்கும் உசிதமான ஸன்மானம் செய்தார். அவர்கள் பிரியா விடைபெற்றார்கள். களைப்பாறுவதற்காக தடாதகையின் அந்தப்புறத்திற்கு இருவரும் சென்றனர். 23

1022 விலைமிக்க மஞ்சத்தில் அமர்ந்து கொண்டு தேவியை அழைத்தார் ஸுந்தரேசன். தேவி, பிணங்கிக்கொண்டு லக்ஷ்மீ ஸரஸ்வதி தேவிகளின் பக்கத்தில் நின்றாள். அவளை 'பதி கார்த்திருக்கிறாரடி போடி' என்று தைர்ய மூட்டினார்கள். பகவான் இறங்கி வந்து அவளுடைய கையைப்பிடித்து அழைத்துக் கொண்டு அவளை மஞ்சத்தில் அமர்த்தினார். 24

ஸ தக்ஷிணாபி: பரிதோஷ்ய விப்ரான் ஸம்மாந்ய தேவாநுசிதோபசாரை: ।
விஶ்ராந்திஹேதோரவரோதகேஹம் விவேஶ தேவோऽத தடாதகாயா: ॥ 22

தைர்யோபதேஶாம் அஸக்ருத் ஸகீப்யாம் வாணீரமாப்யாம் ப்ரதிபோதிதாயா: ।
ஆலம்பமாந: கரமம்பிகாயா மஞ்சே பரார்த்யே நிஷஸாத தேவ: ॥ 23

தாம்ராதரோஷ்டம் தரலாயதாக்ஷம் ஆஸ்விந்நமஷித்ரபயாவநம்ரம் ।
வக்த்ரம் ஶநைருந்நமயாம்பபூவ மார்ஜந்நிவ ஸ்வேதலவான் ஸ தஸ்யா: ॥ 24

தாம்பூலம் ஆஸந்நஸகீவிதீர்ணம் ஆதாய பர்யாகுலிதாம் ஹ்ரியா தாம் ।
ஆலக்ஷயந்தீ கமலா ஸலீலமாஹ ஸ்ம பத்யே ப்ரதிபாதயேதி ॥ 25

குதோ க்ருஹீதா வலயாஸ்த்வயேமே கேநோபஹாரீக்ருத ஏஷ ஹார: ।
இத்யங்கம் அங்கம் பதிராமமர்ஶ ஜிஜ்ஞாஸயேவாபரணேஷு தஸ்யா: ॥ 26

ஆப்ருச்ச்யமாநா தயிதேந தத் ததவாங்முகீ நோத்தரம் ஆசசக்ஷே ।
நிர்பந்தப்ருஷ்டா து கதஞ்சிதேஷா மந்தஸ்மிதேநோத்தரயாம் பபூவ ॥ 27

மாதா தவேயம் மலயத்வஜஸ்ய கிம் போகிநீ கிம் க்ருஹிணீஷு காசித் ।
இத்யுக்திபி: கோபயதாபி பத்யா ப்ரத்யுத்தரம் ப்ருகுடிரேவ லேபே ॥ 28

---

*1023* தேவியின் சிவப்பான கீழுதடு, பட பட என்று மூடித் திறக்கிறது. கண்கள், பெருகுகின்ற வியர்வை வெட்கத்தினால் குனிந்த தலையுடனிருந்த அவளுடைய மோவாயை, தனது வலது கை சுட்டு விரலினால் பகவான் மெல்ல நிமிர்த்தினார். நெற்றியில் துளிர்த்த வியர்வையைத் துடைத்தார். 25

*1024* பக்கத்திலிருந்த தோழி அழகான ஒரு நறுமண தாம்பூல வடையத்தை தேவியின்கையில் திணித்தாள். அதைப் புரட்டி புரட்டிப் பார்த்துக் கொண்டே இருந்தாள் தேவி. 'அடி நசுக்காதேடி. அவர் உதட்டில் சேர்த்துவிடு. நீ போட்டுக் கொண்டு விடாதே.' என்றாள் விளையாட்டாக லக்ஷ்மீ தேவி. 26

*1025* தாம்பூலத்தை தனது வாயில் திணிக்கின்ற தேவியின் கரத்தைப் பிடித்துக் கொண்டார் மாப்பிள்ளை - ''ரொம்ப அழகாக இருக்கிறதே இந்த வளையல்கள். எந்த நாட்டிலிருந்து வந்தன'' என்று கையைத் தடவினார். கழுத்தில் தொங்கும் ரத்தின ஹாரத்தைப் பார்த்தார். ''இந்த ரத்தின ஹாரத்தை யார் கொடுத்தார்கள்?''என்று கேட்டார். இவ்வாறு ஒவ்வொரு அங்கத்தையும் தொட்டு தொட்டு கேள்வி கேட்டார். 'அவை எங்கிருந்து வந்தால் இவருக்கென்ன?' ஆனால் ஏதாவது பேசவேண்டுமே என்று கேட்டார். 27

*1026* தன் அன்பிற்கினியவர் இப்படிக் கேட்க கேட்க, தலை குனிந்தது, பதிலும் சொல்லவில்லை. 'கேட்கிறேனோல்யோ பதில் சொல்ல மாட்டாயா?' என்று தேவியின் முகத்தைக் கையினால் நிமிர்த்தினார். அவளுடைய முகத்தில் புன்முறுவல்தான் மெதுவாகப் பூத்தது. 28

तदिङ्गितानामयथावबोधात् समा चरन्तीभिरिवान्यदन्यत् ।
संल्लापयामास रुषा सखीाभिः संकेतितााभिः स हसन्नवोढाम् ॥ २९

यदाह यत्प्रैक्षत यज्जहास यदास्त जोषं यदपि न्यषेधत् ।
सा तेन तेनैव शरीरलाभसाफल्यम् आपादगति स्म यूनः ॥ ३०

स यावदित्थं समयाचकार नवोढया नर्मपरो महेशः ।
तावज्जना भक्तकराः समेत्य निर्वर्तितं पाकविधिं शशंसुः ॥ ३१

ते शासनात्तत्र महेश्वरस्य प्राक् ब्राह्मणान् भोजयितुं समेतान् ।
सम्मेलयन्ति स्म समन्ततोऽपि स्वयं तु भक्तया सुमतिर्महर्षीन् ॥ ३२

असेवमानौ नटनं पुरारेः अपोऽपि यौ जात्वपि नाददाते ।
तौ त्याघ्रपादश्च पतञ्जलिश्च संनेहतुर्हेमसभां प्रयातुम् ॥ ३३

आकर्ण्य तन्निश्चायमानिनाय तौ योगिनौ सुन्दरपाण्ड्यदेवः ।
आचष्ट चैनावभिगम्य भक्त्या पादौ स्पृशन् प्रश्रयपूर्वमित्थम् ॥ ३४

सभानटः काञ्चनसंसदीव संसेव्यमानः सुरसिद्धसंघैः ।
हालास्यनाथोऽपि करोति नृत्तमस्मिन्सदा रूप्यसभान्तराले ॥ ३५

---

*1027 ''அதிருக்கட்டும். உன் தாயார் பதியோடு சுகப்பட்டவளா? அல்லது பல பத்தினிகளில் ஒருத்தியா? '' என்று கேட்டார். அவளிடம் இவ்வாறு பேசினால் கோபித்துக் கொண்டு ஏதாவது பேசுவாள் என்று பகவான் நினைத்தார். ஆனால் தேவியின் புருவம்தான் நெரிந்ததே தவிர வாயால் ஒரு வார்த்தையும் வரவில்லை.* 29

*1028 தோழிகளுக்கு புதுமண தம்பதிகளைத் தனியே விட்டுவிடவேண்டும் என்ற இங்கிதம் தெரியாமலேயே ஒருத்தி பேசிகிறாள். மற்றொருத்தி வருகிறாள். பகவான் கண் ஜாடையால் கோபத்துடன் தூண்டிவிட்டார். அவர்கள் ஸம்பந்தமில்லாமல் எதையோ பேசினார்கள். பகவான் ரஸித்துச் சிரித்தார்.* 30

*1029 தேவி எப்படியெல்லாம் சினுங்குகிறாள்? பார்க்காததுபோல் பார்க்கிறாள். ஸம்பந்தமில்லாமல் சிரிக்கிறாள். உம் என்று உட்கார்ந்தாள். பகவானின் நீண்ட கையை விலக்கினாள். ஒவ்வொரு சைகையும் தேவிக்கு இனித்தது. பிறவிப் பயனைப் பெற்றோம் என்று மகிழ்ந்தாள்.* 31

ததிங்கிதாநாம் அயதாவபோதாத் ஸமாசரந்தீபிரிவாந்யதந்யத் ।
ஸல்லாபயாமாஸ ருஷா ஸகீபி: ஸங்கேதிதாபி: ஸ ஹஸந்நவோடாம் ॥ 29
யதாஹ யத் ப்ரைக்ஷத யஜ்ஜஹாஸ யதாஸ்த ஜோஷம் யதபி ந்யஷேதத் ।
ஸா தேந தேநைவ ஶரீரலாபஸாபல்யமாபாதயதி ஸ்ம யூந: ॥ 30
ஸ யாவதித்தம் ஸமயாசகார நவோடயா நர்மபரோ மஹேஶ: ।
தாவஜ்ஜநா பக்தகரா: ஸமேத்ய நிர்வர்திதம் பாகவிதிம் ஶஶம்ஸு: ॥ 31
தே ஶாஸநாத் தத்ர மஹேஶ்வரஸ்ய ப்ராக் ப்ராஹ்மணான் போஜயிதும் ஸமேதான் ।
ஸம்மேலயந்தி ஸ்ம ஸமந்ததோऽபி ஸ்வயம் து பக்த்யா ஸுமதிர்மஹர்ஷீன் ॥ 32
அஸேவமாநௌ நடநம் புராரே: அபோऽபி யோ ஜாத்வபி நாததாதே ।
தௌ வ்யாக்ரபாதஶ்ச பதஞ்ஜலிஶ்ச ஸந்நேஹதுர் ஹேமஸபாம் ப்ரயாதும் ॥ 33
ஆகர்ண்ய தந்நிஶ்சயமாநிநாய தௌ யோகிநௌ ஸுந்தரபாண்ட்யதேவ: ।
ஆசஷ்ட சைநாவபிகம்ய பக்த்யா பாதே ஸ்ப்ருஶன் ப்ரஶ்ரயபூர்வமித்தம் ॥ 34
ஸபாநட: காஞ்சநஸம்ஸதீவ ஸம்ஸேவ்யமாந: ஸுரஸித்தஸங்கை: ।
ஹாலாஸ்யநாதோऽபி கரோதி ந்ருத்தம் அஸ்மின் ஸதா ரூப்யஸபாந்தராலே ॥ 35

---

## திருவிளையாடல் 6

## வெள்ளியம்பலத்திருக்கூத்தாடிய படலம்

*1030* இவ்வாறு வெகு நேரம் புது மணப்பெண்ணை வெட்கத்திலிருந்து மீட்பதற்காக, என்னவெல்லாமோ செய்து கொண்டிருந்தார் பகவான். அதற்குள் சமையற்காரர்கள் வந்து 'போஜனம் தயார்' என்று தெரிவித்தனர். 32

*1031* மஹேச்வரன் உடனே ஆனையிட்டார் 'வருகை தந்துள்ள பிராஹ்மணோத்தமர்களுக்கு முதல் ஸமாராதனை நடக்கட்டும்' என்றார். ஸுமதியும் அதைக்கேட்டு, நாற்புறமும் ஆங்காங்கே காத்துக் கொண்டிருந்த மஹருஷிகள் அனைவரையும் தானே போய் பக்தியோடு அழைத்தான். 33

*1032* பகவானுடைய திருமணத்திற்கு பதஞ்ஜலி முனிவரும், வ்யாக்ரபாத முனிவரும் வந்திருந்தார்கள். அவர்களுக்கு ஒரு விரதம் உண்டு. நடுப்பகல் நடராஜனுடைய நடன தரிசனம் செய்யாமல் உண்பதில்லை என்று அவர்கள் கல்யாண தரிசன ஸம்ப்ரமத்தில் இதை மறந்து போய்விட்டனர். உடனே நினைவுக்கு வந்தது. அவர்கள் சிதம்பரம் கனகசபையில் நடராஜ நர்தனம் காணக் கிளம்பினார்கள். 34

*1033* இவர்களுடைய இந்த தீர்மானம் பகவான் ஸுந்தரபாண்டிய தேவனின் காதில் வீழ்ந்தது. உடனே பரபரப்புடன் ஓடி வந்து அவர்களுடைய திருவடிகளைப்பற்றி வினயத்துடன் பின்வருமாறு கூறினான். 35

अत्रैव नृत्तं तरुणेन्दुमौलेरासेव्य माद्ध्याह्निकमद्भुतं तत्।
आगच्छतं क्षिप्रमनुग्रहीतुं प्राणाग्निहोत्राचरणात् इहास्मान् ॥ ३६

इतीरितौ पाशुपतो मुनी तौ तथेति गत्वा कनकाम्बुजिन्यां।
निर्वर्तयन्तौ नियमाभिषेकम् आसेदतुः नृत्तसभां पुरारेः॥ ३७

अन्तर्हितब्रह्मकपालजालम् आवध्य दृश्येन्दुकलं कपर्दम्।
आमुक्तवैयाकरणाङ्गदाङ्घ्रिः अवातरत् तत्र तदा नटेशः॥ ३८

मुरं पुरा यः स्वयमाजघान स एव देवो मुरजं तदानीम्।
ससर्ज यस्तालमसेवनीयं स एव तालं जगृहे तु वेधाः॥ ३९

प्रागेव यः पाण्ड्यसुतोपलम्भात् नाथः स्थितो नर्तितुकाम एव।
भक्तानुकम्पाम् अपदिश्य तस्य नृत्तं तदावर्तत निर्विशङ्कम्॥ ४०

आतोद्यगीत्तानुगपादतालं आविर्भवद्भावरसोत्तरङ्गम्।
आवर्तवेगत्रुटि ताङ्गहारं अनृत्यदीशो ललिताङ्गहारम् ॥ ४१

*1034* பெரியோர்களே! கனக ஸபா நடராஜரான பகவான், கனக ஸபையில் தேவர்கள், ஸித்தர்கள் மத்தியில் எவ்வாறு நடனம் செய்தாரோ, அது போல ஹாலாஸ்யநாதனாகிய ஸுந்தரேச்வரரும், இங்கே ராஜஸபையில், மத்தியாஹ்னத்தில் நடனம் செய்வார்.' *36*

*1035* 'அந்த இளம் பிறை சூடிய பெருமானின் மத்யாஹ்ண நடனத்தை ஸேவித்து விட்டு, நீங்கள் ப்ராணாக்னிஹோத்ரம் செய்து கொண்டு, எங்களுக்கு அருள் புரியுங்கள்.' பதஞ்ஜலியும்,வ்யாக்ரபாதரும் நித்ய உபவாஸிகள். உண்பதில்லை. ஆயினும் தேகத்தைத் தாங்குகின்ற ஐந்து ப்ராண தேவதைகளுக்கு உணவளிப்பது என்ற கடமையை முன்னிட்டு ப்ராணாய ஸ்வாஹா முதலிய ஐந்து ஐந்து அன்னத்துளிகளை, வாய் என்ற ஹோமகுண்டத்தில் ஆஹூதி செய்வார்கள். இதற்கு ப்ராணாக்னிஹோத்ரம் என்று பெயர். *37*

*1036* பரமேச்வரபக்தர்களான அந்த இரு முனிவர்களும், இதைக் கேட்டு 'ஆஹா! அப்படியே செய்வோம்' என்று அங்கீகரித்து,பொற்றாமரைக்குளம் சென்று மாத்யாஹ்னிக ஸ்நானம் செய்து அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு, ஸுந்தரேச்வரருடைய (வெள்ளி) நிருத்த ஸபைக்கு வந்து சேர்ந்தனர். *38*

*1037* நடாராஜனும் நடனத்திற்குறிய வேஷம் பூண்டார். அவருடைய கையிருந்த ப்ரஹ்மகபாலம் மறைந்து விட்டது. சடையில் பிறைச்சந்திரன் பிரகாசித்தான். பகவானின் காலில் வினயமாகச் சுற்றிக் கொண்டிருந்த

அத்ரைவ ந்ருத்தம் தருணேந்துமௌலே: ஆஸேவ்யமாத்யாஹ்நிகம் அத்புதம் தத் ।
ஆகச்சதம் க்ஷிப்ரமநுக்ரஹீதும் ப்ராணாக்நிஹோத்ராசரணாதிஹாஸ்மான் ॥ 36
இதீரிதௌ பாஶுபதௌ முநீ தௌ ததேதி கத்வா கநகாம்புஜிந்யாம் ।
நிர்வர்த்தயந்தௌ நியமாபிஷேகம் ஆஸேததுர் ந்ருத்தஸபாம் புராரே: ॥ 37
அந்தர்ஹிதப்ரஹ்மகபாலஜாலம் ஆபத்த்ய த்ருஶ்யேந்துகலம் கபர்தம் ।
ஆமுக்தவையாகரணாங்கதாங்க்ரி: அவாதரத் தத்ர ததா நடேஶ: ॥ 38
முரம் புரா ய: ஸ்வயமாஜகாந ஸ ஏவ தேவோ முரஜம் ததாநீம் ।
ஸஸர்ஜ யஸ்தாலமஸேவநீயம் ஸ ஏவ தாலம் ஜக்ருஹே து வேதா: ॥ 39
ப்ராகேவ ய: பாண்ட்யஸுதோபலம்பாத் நாத:ஸ்திதோ நர்த்திதுகாம ஏவ ।
பக்தாநுகம்பாம் அபதிஶ்ய தஸ்ய ந்ருத்தம் ததாவர்த்தத நிர்விஶங்கம் ॥ 40
ஆதோத்யகீதாநுகபாததாலம் ஆவிர்பவத் பாவரஸோத்தரங்கம் ।
ஆவர்த்தவேகத்ருடிதாங்கஹாரமந்ருத்யதீஶோ லலிதாங்கஹாரம் ॥ 41

---

பதஞ்ஜலியான ஆதிசேஷன் கழன்றார். நடனஸபையில், நடராஜரும் நடனமுறைப்படி பிரவேசம் செய்தார். 39

(குறிப்பு :-1. பதஞ்ஜலி வ்யாகரண பாஷ்யம் எழுதியவர், ஆதிசேஷனின் அவதாரம். பகவானின் பாதச் சிலம்பாக சுற்றிக் கொண்டிருப்பவர், தற்போது அந்த நிலை நீங்கி பதஞ்ஜயாக நிற்கிறார்

2. வெள்ளியம்பலம் பிற்கால பாண்டிய அரசனால் நிர்மாணிக்கப்பட்டது என்று சொல்வதுண்டு).

1038 நாராயணன் வெகு காலத்திற்கு முன்பு முரன் என்ற அஸுரனை வதம் செய்தார். அவனுடைய முதுகுத் தோலை உரித்து, பதப்படுத்தி, அதை தாளவாத்தியமாக செய்து விச்வகர்மா நாராயணனுக்கு அளித்தான். அந்த முரசை நாராயணன் எடுத்துக் கொண்டார். ப்ரஹ்மதேவன் தாள (பனை) மரத்தைப் படைத்தார். அதன் நிழலில் யாரும் உட்காரமாட்டார்கள். பனம் பழம் விழுந்து விடுமோ என்ற பயம். அந்த ப்ரஹ்மதேவன் தற்போது வெண்கல ஜால்ராவை (தாளத்தை) எடுத்துக்கொண்டார் ‘தால’ என்ற சொல்லை சிலேடையில் (தால-பனை, தாளம் உபயோகித்துள்ளார்.) 40

1039 பாண்டிய அரசன், மகளாகிய தடாதகையைக் காண்பதற்கு முன்னேயே, வெகுநாட்களாக நடனம் ஆடவேண்டுமென்ற ஆசை ஸுந்தரேச்வரருக்கு உண்டு. ஏனோ அதை ஒத்திப் போட்டுக் கொண்டே வந்தார். நடனத்தைக் காண பக்தர்கள் வந்திருக்கிறார்கள் என்று அறிந்ததும் உற்சாகமாக அங்கு நடனம் நடந்தது. 41

उदश्चितोङ्घ्रिग्रथ्निं उल्ललास नृत्ते स्थितावर्तकनाम्नि शम्भोः।
चित्ते विलीने जतुवन्मुनीनां न्यासादिव स्पन्दयितुं न शक्यः॥ ४२

वृत्तौ चकारेव विलम्बितायां मञ्जीरनादैः प्रणवोपदेशम्।
तस्यां द्रुतायां तदूर्ध्वलग्नां तुर्यामुपादिक्षदिवार्धमात्राम्॥ ४३

स्वभावरम्याणि यथा यथासन् स्वाच्छन्द्यतस्तस्य विचेष्टितानि।
तथा तथा पप्रथिरे जगत्यां शैलूषतन्त्रोपनिषत्प्रभेदाः॥ ४४

तालान्तनृत्तारभटीषु तस्य निर्गच्छतां निश्वसितागमानाम्।
आदौ महाव्याहृतिताम् अवापुः भूषाभुजङ्गेश्वरफूत्कृतानि॥ ४५

उद्भिन्नरोमाञ्चमुदश्रुपूरं आश्चर्यसंमूढमनन्यवृतत्ति।
आलेख्यविन्यस्तमिवास्त विश्वं आनन्दनृत्तावसरे पुरारेः॥ ४६

संव्यानसंमृष्टमुखं भवान्या विस्रस्तचन्द्रार्धविलोभनीयम्
नृत्तान्तरम्यं बपुरिन्दुमौलेः निध्याय तौ तुष्टुबतुर्मुनीन्द्रौ॥ ४७

नम्रेषु चित्तान्नवनीतवृत्तेः नाथ त्वदीयात् अपि कोमलो यौ।
अस्मत्कृते तौ चरणो यदित्यम् आयासितौ तत्प्रथमं क्षमेथाः॥ ४८

---

*1040 ஈசன் நடனம் ஆடினார். அவருடைய பாத வின்யாஸம் வேகமான மிருதங்க தாளத்திற்கு இசைந்து செயற்பட்டது. முகத்தில் பாடகன் கருத்துக்கேற்ற பாவங்கள் தோன்றின. பாதவின்யாஸத்துடன் அவர் அரங்கத்தில் சுற்றி சுற்றி வரும்போது, திருமேனியில் அணிந்திருந்த மார்பு ஆபரணமாலை அறுந்து வீழ்ந்தது. அவயவங்கள் குலுங்கி பாவத்திற்கேற்ப விதவிதமாக அசைந்தன.* 42

*1041 இந்த ச்லோகம் ஸதஞ்ஜித முதஞ்ஜித என்று ஆரம்பிக்கும் சம்பு நடனத்தை நினைவூட்டுகிறது. பகவான் அரங்கத்தில் பலவிதமான பாதவின்யாஸங்களைச் செய்தார். இடது கால் கட்டை விரலை மட்டும் ஊன்றி, வலது காலைத் தூக்கி ஸ்திதா வர்தக என்ற நிலையில் காட்சி அளித்தார். இதை தரிசனம் செய்த முனிவர்களின் உள்ளம் அரக்கு போல் உருகிவிட்டது. அந்தக் காட்சி அவர்கள் உள்ளத்தில் மெழுகு போல உறைந்து விட்டது, நிலைத்து நின்று ஒட்டிக் கொண்டதில் அசைக்கவே முடியவில்லை.* 43

*1042 மந்த கதியில் மேனியை வளைத்துத் திருப்பினார் பாதச் சிலம்பொலியில் 'ஓம்' என்ற நீண்ட ப்ரணவநாதம் சிலிர்ப்பின்றி தெளிவாகக் கேட்டது. ப்ரணவத்தின் அரை மாத்திரை ' 'ம்' காரம் மட்டும் உயர்ந்த மௌன நிலையை உபதேசித்தது.* 44

*1043 இயல்பாகவே பகவானுடைய திருமேனி ஒய்யாரமான அசைவுகளுடன் கூடியவை. உலகத்தில் நாட்டியம் பயில்பவர்கள் பல பயிற்சிகள் மேற்கொண்டு*

உதாஞ்சிதோऽங்க்ரிஸ்சிரம் உல்லலாஸ ந்ருத்தே ஸ்திதாவர்த்தகநாம்நி ஶம்போ: ।
சித்தே விலீநே ஜதுவந்முநீநாம் ந்யாஸாதிவ ஸ்பந்தயிதும் ந ஶக்ய: ॥ 42
வ்ருத்தௌ சகாரேவ விலம்பிதாயாம் மஞ்ஜீரநாதை: ப்ரணவோபதேஶம் ।
தஸ்யாம் த்ருதாயாம் ஸ ததூர்த்வலக்நாம் துர்யாம் உபாதிக்ஷதிவார்தமாத்ராம் ॥ 43
ஸ்வபாவரம்யாணி யதா யதாஸன் ஸ்வாச்சந்த்யதஸ்தஸ்ய விசேஷ்டிதாநி ।
ததா ததா பப்ரதிரே ஜகத்யாம் ஶைலூஷதந்த்ரோபநிஷத்ப்ரபேதா: ॥ 44
தாலாந்தந்ருத்தாரபடீஷு தஸ்ய நிர்கச்சதாம் நிஶ்வஸிதாகமாநாம் ।
ஆதௌ மஹாவ்யாஹ்ருதிதாமவாபுர்பூஷாபுஜங்கேஶ்வரபூத்க்ருதாநி ॥ 45
உத்பிந்நரோமாஞ்சமுதஶ்ருபூரம் ஆஶ்சர்யஸம்மூடமநந்யவ்ருத்தி: ।
ஆலேக்யவிந்யஸ்தமிவாஸ்த விஶ்வம் ஆநந்தந்ருத்தாऽவஸரே புராரே: ॥ 46
ஸங்க்யாநஸம்ருஷ்டமுகம் பவாந்யா விநஸ்தசந்த்ரார்தவிலோபநீயம் ।
ந்ருத்தாந்தரம்யம் வபுரிந்துமௌலே: நித்யாய தௌ துஷ்டுவுதுர்முநீந்த்ரௌ ॥ 47
நம்ரேஷு சித்தாந்நவநீதவ்ருத்தே: நாத! த்வதீயாதபி கோமலௌ யௌ ।
அஸ்மத்க்ருதே தௌ சரணௌ யதித்தம் ஆயாஸிதௌ தத் ப்ரதமம் க்ஷமேதா: ॥ 48

---

நாட்டிய அரங்கில் ஆடிப் புகழ் பெறுகிறார்கள். பகவானுடைய அங்க அசைவுகள் பிற்காலத்து நட்டுவாங்க கலைக்கு வித்தாக அமைந்தன. 45

1044 ஓம் பூ:புவ:ஸுவ: என்று அடிக்கடி சொல்கிறோமே இவை எப்படி வந்தன என்பதை யாராவது சிந்தித்திருப்பாரா? வேதமேதான் சிந்தித்ததா? இல்லை. இதோ தீக்ஷிதர் சிந்தித்து தருகிறார். தாளத்தின் முடிவின் போது இரண்டு மூன்று ஆவர்த்தங்கள், தொடர்ந்து சொல்கட்டுகள், பின்னி பின்னி வந்து முத்தாப்பில் முடியும். பகவான் தன்னுடைய ந்ருத்யத்தில் அப்படி ஒரு முத்தாப்பு வைத்து ஒரு கணம் தளர்ந்து நின்றார். அவர் முகத்தில் களைப்புத் தெரிந்தது. பெருமூச்சு வந்தது. வியர்வை வழிந்தது. ஆனால் அவருடைய இடுப்பிலும், கால்களிலும் அணிகலனாக சுற்றிக் கொண்டிருந்த மஹா நாகங்கள் 'புஸ் புஸ் 'என்று பெருமூச்சு விட்டன. அந்த பெருமூச்சுத்தான் மஹாவ்யாஹ்ருதிகள் என்று சொல்லப்படுகின்ற பூ:புவ:ஸுவ: என்ற மந்திரங்கள்ஆயின என்கிறார் தீக்ஷிதர். உசிதமான அருமையான உத்ப்ரேக்ஷை! 46

1045 பகவான் ஆடுகிறார். ப்ரபஞ்சம், ஜீவன்கள் மூச்சுவிடாமல் ஸ்தம்பித்து நிற்கின்றன. மயிற்கூச்சல் ஏற்படுகிறது. வியப்பில் தன்னை மறந்து விட்டார்கள். வேறு ஒன்றையும் உணரவில்லை. சித்திரப்பதுமை போல அசையாமல் இருந்தன. 47

1046 தேவி தனது அனுபவ உணர்ச்சிகளை வெளிக்காட்டாமல் காம்பீர்யத்துடன் இருந்தாள். தன்னுடைய சேலைத்தலைப்பினால் பகவானுடைய முகத்தைத் துடைத்தாள். தலையிலிருந்த சந்திரக்கலை சற்றே

त्वयीश नृत्ताद्विरतेऽपि चित्तं त्वदास्पदं नौ परमाद्भुतेन।
नाद्यापि नृत्ताद्विरतिं प्रयाति ततो न किंचित् प्रतिभां भजावः॥ ४९

आवां प्रसादेन कृतार्थितौ ते याचावहे लोकहिताय किंचित्।
नृत्तोत्सवः काञ्चनसंसदीव नित्योऽस्त्वमुष्यामापि संसदीति॥ ५०

तथेति दत्वाभिमतं तयोस्तत् प्रसेदिवाँल्लोकहितार्थनेन।
देवोऽनुजग्राह पुनः स्वयं तौ दत्त्वा शिवज्ञानमनन्यलभ्यम्॥ ५१

सेवावसाने पुरशासनस्य समागतान् भूमिसुरान् सुरांश्च।
हैमेषु पीठेषु वितीर्णपाद्यान् अस्थापयत्कुम्भभवोऽथ भोक्तम्॥ ५२

ते भाविताश्चन्दनचर्चिकाभिः कर्पूरकाश्मीरकरम्बिताभिः।
अभ्यर्चिता दक्षिणया च माल्यैः अभुञ्जतान्नानि रसोत्तराणि॥ ५३

शाकौदनव्यञ्जनसूपयूषैः रसायनक्वाथरसप्रभेदैः।
भक्ष्यैरसंख्यैर्घृतशर्कराढ्यैः फलैर्विचित्रैरपि तृप्तिमापुः॥ ५४

ते भक्ष्यभोज्यैः खलचूर्णलेह्यनिर्यूहपानीयगणैश्च चित्रैः।
विस्मापिताः स्वां विधिवञ्चितेति जातिं निनिन्दुः शतशः सुधाशाः॥ ५५

---

நழுவி இருந்தது. அதுவும் ஒரு அழகு தான்.பகவான் ந்ருத்தம் முடிந்து இடுப்பில் கை வைத்து அசையாமல் நின்றார். பெருமூச்சு இல்லை. நெற்றியில் வியர்வை இல்லை. விரைப்பாக இல்லாமல் லகுவாக நின்றார். பதஞ்ஜலியும், வ்யாக்ரபாதரும் ஆனந்தத்தில் திகைத்து நின்றனர். துதிக்கவும் துதித்தார்கள். 48

1047 பகவானே! அடி பணிந்தவர்களிடம் இப்படி வெண்ணைபோல உருகவேண்டுமா உங்கள் உள்ளம்? அந்த உள்ளத்தைக் காட்டிலும் கோமளமான, மென்மையான தங்கள் திருப்பாதங்கள் ஆயாசப்பட்டு விட்டன. எங்களால்தானே? எங்களை மன்னிக்க வேண்டும். 49

1048 ப்ரபோ! உங்கள் ந்ருத்தம் ஓய்ந்துவிட்டது. ஆனால் அதில் ஈடுபட்டிருந்த எங்கள் உள்ளம் ஓயவில்லை. ஆடிக்கொண்டிருக்கின்றன. எங்கே இருக்கிறோம்? என்ன செய்கிறோம் என்பதே தெரியவில்லை. 50

1049 நாங்கள் இருவரும் தங்களுடைய அபாரகருணையின் அமோக பலனைப் பெற்றுவிட்டோம். ப்ரபஞ்சம் வாழவேண்டுமென்பதற்காக ஒரு வேண்டுகோள். சிதம்பரத்தில் கனக ஸபையில் நாள்தோறும் நடைபெறுவதைப்போல ரஜத ஸபையில் இங்கும் நடனம் நடைபெற வேண்டும். 51

த்வயீஶ ! ந்ருத்தாத்விரதேऽபி சித்தம் த்வதாஸ்பதம் நௌ பரமாத்புதேந ।
நாத்யாபி ந்ருத்தாத்விரதிம் ப்ரயாதி ததோ ந கிஞ்சித் ப்ரதிபாம் பஜாவ: ॥49
ஆவாம் ப்ரஸாதேந க்ருதார்த்திதௌ தே யாசாவஹே லோகஹிதாய கிஞ்சித் ।
ந்ருத்தோத்ஸவ: காஞ்சநஸம்ஸதீவ நித்யோऽஸ்த்வமுஷ்யாமபி ஸம்ஸதீதி ॥ 50
ததேதி தத்வாபிமதம் தயோஸ்தத் ப்ரஸேதிவான் லோகஹிதார்தநேந ।
தேவோऽநுஜக்ராஹ புந: ஸ்வயம் தௌ தத்வா ஶிவஜ்ஞாநம் அநந்யலப்யம் ॥ 51
ஸேவாவஸாநே புரஶாஸநம்ய ஸமாகதான் பூமிஸுரான் ஸுராம்ஶ்ச ।
ஹைமேஷு பீடேஷு விதர்ணிபாத்யான் அஸ்தாபயத் கும்பபவோऽத போக்தும் ॥52
தே பாவிதாஶ்சந்தநசர்சிகாபி: கர்பூரகாஶ்மீரகரம்பிதாபி: ।
அப்யர்சிதா தக்ஷிணயா ச மால்யை: அபுஞ்ஜதாந்நாநி ரஸோத்தராணி ॥ 53
ஶாகௌதநவ்யஞ்ஜநஸூபயூஷை: ரஸாயநக்வாதரஸப்ரபேதை: ।
பக்ஷ்யைரஸங்க்யைர் க்ருதஶர்கராட்யை: பலைர்விசித்ரைரபி த்ருப்திமாபு: ॥ 54
தே பக்ஷ்யபோஜ்யை: கலசூர்ணலேஹ்யநிர்யூஹ பாநீயகணைஶ்ச சித்ரை: ।
விஸ்மாபிதா: ஸ்வாம் விதிவஞ்சிதேதி ஜாதிம் நிநிந்து: ஶதஶ: ஸுதாஶா: ॥ 55

---

1050 லோக நன்மைக்காக விரும்புகிறார்கள் என்பதை அன்புடன் ஏற்று, பகவான் 'அப்படியே ஆகட்டும்' என்று அருளினார். மேலும் வேறு எவராலும் அருளமுடியாத சிவஞானத்தையும் அவர்களுக்கு தானாகவே அருளினார். 52

1051 ஸுந்தரேசன் இப்படி நர்தன ஸேவையை அருளிய பிறகு, அகத்தியர், தேவர்களையும் ப்ராஹ்மணர்களையும், அவரவர்களுக்கு ஏற்றவாறு தங்கமயமான பீடங்களில் அமர்த்தி, திருவடி அலம்பி, போஜனத்திற்கு அழைத்துச் சென்றார். 53

1052 பிறகு அவர்களை ஆஸனங்களில் அமர்த்தி, பச்சை கற்பூரம், குங்குமப்பூ கலந்த சந்தனங்களைப் பூசி மாலை அணிவித்து தக்ஷிணையும் வழங்கி கௌரவித்தார். உயர்ந்த சுவை மிகுந்த பக்ஷணங்களுடன் வகை வகையான வ்யஞ்ஜனங்களுடன் அவர்களுக்கு விருந்து நடந்தது. 54

1053 விருந்தில் புஷ்டி தருகின்ற கறிகாய்கள், பருப்பு. பச்சடி, துவையல்கள், வருவல்கள் நெய்யும் சர்க்கரையும் சேர்த்துப் பக்குவப்படுத்தப்பட்டவையும் விதவிதமான ருசியுடன் கூடியவையுமான எண்ணற்ற பக்ஷணங்கள் மற்றும் விதவிதமான பழங்கள் அனைத்தும் திருப்தி அளித்தன. 55

1054 ஆகாரங்கள் ஜீரணிக்கும் வகையில் லேஹ்யங்கள், சூர்ணங்கள், கஷாயங்கள் இவைகளெல்லாம் அவர்களுக்குக் கிடைத்தன.இதைப்பார்த்த நூற்றுக்கணக்கான தேவர்கள் வெறும் அமுதத்தைச் சாப்பிட்டு சாப்பிட்டு திகட்டினவாயுடன் 'விதி நம்மை தேவர்களாக்கி வஞ்சித்து விட்டது. நாம் பூ உலகில் ப்ராஹ்மணர்களாகவே

आपृच्छमाना विबुधा मनुष्यान् आस्वादभङ्गीमभिधां रसं च।
अत्यादरात् अभ्यवजह्रुरित्थं आश्चर्यमग्ना इव तान्पदार्थान्॥ ५६

आकर्ण्य गर्हाम् अमृताशनत्वे तपःफले तत्र सुरैः प्रयुक्ताम्।
वाताम्बुपर्णाशनवृत्तयोऽपि वाचंयमाः स्वानि जहुर्व्रतानि॥ ५७

अनेकवक्त्रोदरपाणिजिह्वान् आलक्ष्य भूतेशगणानसंख्यान्।
तद्विक्रियायै स्पृहयांबभूवुः तत्र प्रजाः प्रत्यवसानसक्ताः॥ ५८

इत्थं जगत्तर्पितम् इन्दुमौलिः निशम्य निर्वर्तितनित्यकर्मा।
वध्वा समं भोजनवेदिकायां उपाविशन् मङ्गलतूर्यघोषैः॥ ५९

वाणीविरिञ्चौ कमलामुकुन्दौ शचीमहेन्द्रौ च निषेदुरग्रे।
हेरम्बषाण्मातुरनन्दिनस्तु पार्श्वे निदेशेन शशाङ्कमौलेः॥ ६०

अथान्नपूर्णापरिविष्यमाणम् अन्नं शुचि स्वादु बहुप्रकारम्।
आमोदयन्नर्मभिरन्तिकस्थान् अभुङ्क्त वध्वा सह चन्द्रचूडः॥ ६१

स भुक्तशेषं कबलं प्रियायै समन्त्रमेकं प्रथमं ददौ यत्।
हेतुस्तदासीदिव भाविनीनां तद्भुक्तशेषग्रह संततीनाम्॥ ६२

---

இருந்திருக்கலாம். யாகங்களை அனுஷ்டித்து உலகில் ஸ்வர்கத்திற்கு வந்திருக்க வேண்டியதில்லை' என்று பெருமினார்கள். 56

1055 சாப்பிட்டுக்கொண்டே ப்ராஹ்மணர்களைப் பார்த்து தேவர்கள் கேட்டார்கள். 'முதல் சின்ன உருண்டைகளாகப் போட்டார்களே அது என்ன?'

அதுவா. பொருள் விளங்கா உருண்டை. 'அதற்குப் பிறகு, சுருள் சுருளாக வருத்துப் போட்டார்களே அது என்ன'

அதுவா, புடலங்காய் வருவல்கள்.

அந்த ஓரத்தில். ஒரு சின்ன கை ஸ்பூனினால் பரிமாறி இருந்தார்களே. அது என்ன?

'அதுவா. மிளகாய் பச்சடி'

'நடுவிலே குழம்பு போல் பரிமாறி இருந்தார்களே. அது என்ன?'

'அதுவா, பொரித்த கூட்டு, அதை அன்னத்துடன் பிசைந்து சாப்பிடுவார்கள்.'

தேவர்கள் இவற்றை எல்லாம் கேட்டு வாங்கிச் சாப்பிட்டார்கள் 57.

1056 யோகிகளில் சிலர் ஸ்வர்கத்தை அடைவதற்காக பிராணனை மட்டும் ச்வாஸித்தார்கள், சிலர் நீரை மட்டும் அருந்திக் கொண்டிருந்தார்கள், சிலர் காய்ந்த இலைச் சரகுகளையே உண்டு கொண்டிருந்தார்கள். தேவர்கள் மேற்கூறியவாறு நொந்து கொண்டதைக் கேட்டு,எல்லாவற்றையும் உதறி

**ஆப்ருச்சமாநா விபுதா மநுஷ்யான் ஆஸ்வாதபங்கீமபிதாம் ரஸம் ச ।**
**அத்யாதராத் அப்யவஜஹ்ருரித்தம் ஆஶ்சர்யமக்நா இவ தான் பதார்தான் ॥ 56**

**ஆகர்ண்ய கர்ஹாம் அம்ருதாஶநத்வே தப:பலே தத்ர ஸுரை: ப்ரயுக்தாம் ।**
**வாதாம்புபர்ணாஶநவ்ருத்தயோऽபி வாசம்யமா: ஸ்வாநி ஜஹுர்வ்ரதாநி ॥57**

**அநேகவக்ரோதரபாணிசிஹ்வான் ஆலக்ஷ்ய பூதேஶகணான் அஸங்க்யான் ।**
**தத்விக்ரியாயை ஸ்ப்ருஹயாம்பபூவுஸ்தத்ர ப்ரஜா: ப்ரத்யவஸாநஸக்தா: ॥ 58**

**இத்யம் ஜகத் தர்பிதமிந்துமௌலி: நிஶம்ய நிர்வர்திதநித்யகர்மா ।**
**வத்வா ஸமம் போஜநவேதிகாயாம் உபாவிஶந்மங்களதூர்யகோஷை: ॥ 59**

**வாணீவிரிஞ்சௌ கமலாமுகுந்தௌ ஶசீமஹேந்த்ரௌ ச நிஷேதுரக்ரே ।**
**ஹேரம்பஷாண்மாதுரநந்திநஸ்து பார்ஶ்வே நிதேஶேந ஶஶாங்கமௌலே: ॥ 60**

**அதாந்நபூர்ணாபரிவிஷ்யமாணம் அந்நம் ஶுசி ஸ்வாது பஹுப்ரகாரம் ।**
**ஆமோதயன் நர்மபிரந்திகஸ்தான் அபுங்க்த வத்வா ஸஹ சந்த்ரசூட: ॥ 61**

**ஸ புக்தஶேஷம் கபலம் ப்ரியாயை ஸமந்த்ரமேகம் ப்ரதமம் ததௌ யத் ।**
**ஹேதுஸ்ததாஸீதிவ பாவிநீநாம் தத்புக்தஶேஷக்ரஹஸந்ததீநாம் ॥ 62**

---

விட்டு, இரண்டாவது பந்தியில் சாப்பிட உட்கார்ந்தார்கள். போஜன வகைகளை ஒரு கை பார்த்தார்கள். 58

1057 ஒரு பந்தியில் சிவ பூதகணங்கள் உட்கார்ந்து சாப்பிட்டார்கள். அவர்களில் சிலருக்கு மூன்று வாய்கள். சிலருக்கு நான்கு வயிறுகள், சிலருக்கு எட்டு கைகள், சிலருக்கு ஐந்து நாக்குகள். அவர்களுக்கு பரிமாற வந்தவர்களுக்கு ஒரு கணம் ஓய்ச்சல் இல்லை. ஓடி ஓடி பரிமாறினார்கள். வாரி வாரி இலைகளில் போட்டார்கள். அடுத்த கணம் இலைகளில் போட்ட அனைத்தும் காலி. இதைப் பார்த்த சிலர் எங்களுக்கு இப்படி வாய் இல்லையே வயிறு இல்லையே என்று ஏக்க முற்றனர். 59

1058 இவ்வாறு உலகத்தினர் அனைவரும் உண்டு திருப்தி அடைந்தார்கள் என்ற செய்தி வந்த பிறகு ஸுந்தர பாண்டியன் (ஸுந்தரேச்வரன்) மாத்யாஹ்நிகம் அனுஷ்டித்து விட்டு, மணப் பெண்ணுடன், மங்கள வாத்தியங்கள் முழங்க அழகான மணைகளில் போஜனம் செய்ய உட்கார்ந்தார். 60

1059 அவர்களுக்கு எதிரில் ஸரஸ்வதீ-ப்ரஹ்மதேவர், லக்ஷ்மீ-நாராயணன். சசீ - இந்திரன் தம்பதிகளாக அமர்ந்தார்கள். வினாயகர், முருகன். நந்திகேச்வரன் முதலானோர் பக்கத்தில் அமர்ந்தனர். 61

1060 கல்யாணத்திற்காக காசியிலிருந்து வந்திருந்த அன்னபூர்ணா தேவி. உயர்தரமான அன்னங்களையும், பலவிதமான இனிப்புகளையும் பரிமாறினாள். பக்கத்தில் அமர்ந்திருப்பவர்கள் இங்கிதமாக கேலி செய்தனர். மணப்பெண்ணும் பரமேச்வரனும் சிரித்துக் கொண்டே சாப்பிட்டனர். 62

पक्वं फलं मान्मथमेतदद्य जामातुरेवार्हमिति ब्रुवाणम् ।
सत्यं प्रसादेन तु माधवस्य तल्लब्धमित्याह हसन्स शौरिम् ॥ ६३

पत्युः प्रियं बिम्बफलं विनैव फलान्यसंख्यानि मुधाहृतानि ।
अतः पिपासा विरतास्य नेति वाणी वधूमाक्षिपति स्म राज्ञीम् ॥ ६४

भोज्यानि यानि त्रिदिवेऽद्भुतानि तान्याददानः स्वयमीषदीषत् ।
सासूययोः आत्मजयोर्महेशः शैलादये तत्र दयांबभूव ॥ ६५

भुक्तोत्थितो नर्मकथाभिरित्थं विसृज्य विश्रान्ति कृते वयस्यान् ।
सज्जीकृतं प्राप तटातकायाः शय्यागृहं सुन्दरपाण्ड्यदेवः ॥ ६६

तता जनाः पाकगृहे नियुक्ताः तत्रान्नराशीन्शतशोऽवशिष्टान् ।
आवेदयामासुः अनुक्रमेण देव्याः पुरः काञ्चनमालिकायाः ॥ ६७

कोट्यस्त्रयस्त्रिंशदिति प्रतीता संख्या त्वियं काचन देवतानाम् ।
संख्या गणानामपि मानवानां संख्यायते भुक्तवतां न कैश्चित् ॥ ६८

शाकेषु सूपेषु फलेष्वपूपेषु अन्नेषु माध्वीगुडशर्करासु ।
शिष्टानि शक्ता न वयं प्रवक्तुं शाधि त्वमेषाम् उपयोगयोगम् ॥ ६९

---

*1061 பரமேச்வரன் தான் உண்டு முடித்த கடைசி கபளத்தை தேவிக்கு மந்திரத்துடன் ஊட்டினார். அதிலிருந்து பிறந்தது கணவன் சாப்பிட்ட இலையிலேயே, கணவன் சாப்பிட்ட மீதியை மனைவி சாப்பிடுவது என்ற ஸ்ம்ப்ரதாயம்.* 63

*1062 'இது புது மாப்பிள்ளைக்கே உரிய பழம்' என்று காட்டினார் நாராயணன்.*

*'உண்மை தான். பழைய மாப்பிள்ளையான லக்ஷ்மீ மணாளனுடைய பிரஸாதம் ஆயிற்றே ஏற்க வேண்டியதுதான்' என்று நமுட்டுச் சிரிப்பு சிரித்தார் ஈசன்.*

*(இங்கு ஒரு பழத்தை மன்மதனுடையது என்கிறார் நாராயணன். அதற்கு பதிலாக பரமேச்வரன் கூறுகிறார் ' விஷ்ணுவினுடைய பிள்ளை அல்லவா மன்மதன். விஷ்ணு பழைய மாப்பிள்ளையல்லவா அவர் கொடுத்தது என்கிறார் சிவன்)* 64

*1063 காஞ்சனமாலை பந்தி விசாரித்துக் கொண்டிருந்தாள். அவளையும் மணப்பெண்ணையும் பார்த்து ஸரஸ்வதி சொன்னாள் 'மாப்பிள்ளைக்கு பிடித்த பழம் கோவைப்பழம்தான். மற்ற எல்லாப் பழங்களினால் என்ன பயன்? மாப்பிள்ளைக்கு தாகம் அடங்கவில்லையே' என்றாள் குரும்பாக. (கோவைப்*

பக்வம் பலம் மாந்மதமேதத்ய ஜாமாதுரேவார்ஹமிதி ப்ருவாணம் ।
ஸத்யம் ப்ரஸாதேந து மாதவஸ்ய தல்லப்தமித்யாஹ ஹஸன் ஸ ஶௌரிம் ॥ 63
பத்யு: ப்ரியம் பிம்பபலம் விநைவ பலாந்யஸங்க்யாநி முதாஹ்ருதாநி ।
அத: பிபாஸா விரதாஸ்ய நேதி வாணீ வதூமாக்ஷிபதி ஸ்ம ராஜ்ஞீம் ॥ 64
போஜ்யாநி யாநி த்ரிதிவேऽத்புதாநி தாந்யாததாந: ஸ்வயமீஷதீஷத் ।
ஸாஸூயயோ: ஆத்மஜயோர்மஹேஶ: ஶைலாதயே தத்ர தயாம்பபூவ ॥ 65
புக்தோத்திதோ நர்மகதாபிரித்தம் விஸ்ருஜ்ய விஶ்ராந்திக்ருதே வயஸ்யான் ।
ஸஜ்ஜீக்ருதம் ப்ராப தடாதகாயா: ஶய்யாக்ருஹம் ஸுந்தரபாண்ட்யதேவ: ॥ 66
ததோ ஜநா: பாகக்ருஹே நியுக்தாஸ்தத்ராந்நராஶீன் ஶதஶோऽவஶிஷ்டான் ।
ஆவேதயாமாஸு: அநுக்ரமேண தேவ்யா: புர: காஞ்சநமாலிகாயா: ॥ 67
கோட்யஸ்த்ரயஸ்த்ரிம்ஶதிதி ப்ரதீதா ஸங்க்யா த்வியம் காசந தேவதாநாம் ।
ஸங்க்யா கணாநாமபி மாநவாநாம் ஸங்க்யாயதே புக்தவதாம் ந கைஶ்சித் ॥ 68
ஶாகேஷு ஸூபேஷு பலேஷ்வபூபேஷு அந்நேஷு மாத்வீகுடஶர்கராஸு ।
ஶிஷ்டாநி ஶக்தா ந வயம் ப்ரவக்தும் ஶாதி த்வமேஷாம் உபயோகயோகம் ॥ 69

---

*பழம் என்று தேவியின் கோவைப்பழம் போன்ற கீழ் உதட்டை சிலேடையில் குறும்பாக ஸரஸ்வதி குறிப்பிடுகின்றாள்)* 65

*1064 மூவுலகிலும் மிகச்சிறந்ததாகக் கொண்டாடப்பட்ட சில பக்ஷணங்களை தான் சிறிது சாப்பிட்டு விட்டு அருகில் அமர்ந்திருந்த நந்திகேச்வரனுக்கு அளித்தார் பகவான். கணபதியும் முருகனும் பொறாமையோடு அவனைப் பார்த்தார்கள்.* 66

*1065 இவ்வாறு கேலி விளையாட்டுகளுடன் போஜனத்தை முடித்துக்கொண்டு,நண்பர்களை ஓய்வு எடுத்துக் கொள்ளுமாறு அனுப்பிவிட்டு, ஸுந்தரபாண்டியத் தேவன் தயாராக இருந்த தடாதகையின் அந்தப்புரத்தில் பிரவேசித்தார்.* 67

## திருவிளையாடல் 7

## குண்டோதரனுக்கு அன்னமிட்ட படலம்

*1066 அப்போது காஞ்சனமாலையிடம் சில சமையற்காரர்கள் 'தங்கள் திட்டப்படி சமைத்தோம். சமையல் இன்ன இன்ன வகைகள் ஏராளமாக மிகுந்திருக்கின்றன' என்று விவரம் கூறினார்கள்.* 68

*1067 தேவகணங்கள் முப்பது முக்கோடி என்று ஒரு கணக்கு உண்டு. அவர்களைத் தவிர சிவகணங்கள் எத்தனையோ பேர். ஆகவே எத்தனை பேர் சாப்பிட்டார்கள் என்று கணக்கு சொல்ல முடியாது.* 69

इतीरितं काञ्चनमालिका तत् चेटीभिरासूचयत् आत्मजायाः।
सा च प्रियं किं क्रियतामिहेति मन्दाक्षमन्दाक्षरमन्वयुङ्क्त॥ ௭௦

तामाह देवस्त्वमसीह राज्ञी देवी त्रयाणामपि विष्टपानाम्।
तत्तावकीम् अन्नसमृद्धिमेतां भोक्तुं जनाः के मम संभवेयुः॥ ௭௧

कुण्डोदरो नाम गणोऽयमेकः तथाऽपि शिष्टः परिचर्यया मे।
भोक्तुं न यस्यावसरः पुराऽभूत् तं भोजय स्वोदरपूरमेनम्॥ ௭௨

इत्यादिशन् अन्नसमृद्धिगर्वं अपाचिकीर्षुः स नृपालपत्न्याः।
देवो गणस्य त्रिजगच्छरीरवैश्वानरात्मा जठरं विवेश॥ ௭௩

पौरोगवास्तत्र तया नियुक्ताः प्रवेश्य तं भोजनमण्डपान्तः।
विस्तार्य पत्राणि विशङ्कटानि भक्ष्याणि भोज्यानि ततोऽभ्यवर्षन्॥ ௭௪

प्राणाहुतेः पर्युपयुक्तमन्नं अप्यत्र दृष्टचोपलभे न यावत्।
तावत्कथं भाक्तुमुपक्रमेयेत्यूचे भुङ्क्ष्वेति वदत्सु रोषात्॥ ௭௫

---

1068 கறிகாய்கள், பருப்புவகைகள், பழவகைகள், அன்னங்கள், இனிப்புவகைகள் இவைகள் எல்லாம் வகைக்கு இத்தனை மீதி உள்ளன என்று கணக்குச் சொல்ல முடியாது. இவைகளை எப்படி வினியோகம் செய்வது? என்பதை மஹாராணிதான் உத்தரவிட வேண்டும். 70

1069 இந்த செய்தி கேட்ட மஹாராணி, ஸகிகள் மூலம் பெண்ணிடம் கூறினாள். ஸகிகள் வந்து 'குசு குசு' என்று தடாதகையிடம் கூறிவிட்டு, ஓடிவிட்டார்கள். தடாதகா 'திக்' என்று அதிர்ச்சியுடன் நின்றாள். அதைப் பார்த்து பகவான் கேட்டார். என்ன விஷயம்

'வந்து... ஒன்றுமில்லை சாப்பாடு வந்து'

'போதவில்லையாம? இல்லை. இல்லை.வந்து நிறைய...'

'நிறையபேர் சாப்பிட்டு விட்டார்களாமா?'

'இல்லை. இல்லை......வந்து'

'என்ன வந்து?'

'ரொம்ப ரொம்ப'

'கொஞ்சம் கொஞ்சம் சொல்லேன்.'

'வந்து நிறைய சாப்பாடு மலை மலையாக மிஞ்சி விட்டதாம்.'

'உன்னை சாப்பிட கூப்பிடுகிறார்களா?' 'இல்லை. இல்லை' பிரளயத்தில் நீங்கள்தான் எல்லாவற்றையும் முழுங்கி விடுவீர்களாம். உங்களைக் கூப்பிடுகிறார்கள் இவ்வாறு வெட்கப்பட்டுக் கொண்டே மெதுவாகக் கூறினாள். 71

இதீரிதம் காஞ்சனமாலிகா தச்சேடீப்ராஸூசயத் ஆத்மஜாயா: ।
ஸா ச ப்ரியம் கிம் க்ரியதாமிஹேதி மந்தாக்ஷமந்தாக்ஷரமந்வயுங்க்த ॥ 70

தாமாஹ தேவஸ்த்வமஸீஹ ராஜ்ஞீ தேவீ த்ரயாணாமபி விஷ்டபாநாம் ।
தத்தாவகீம் அந்நஸம்ருத்திமேதாம் போக்தும் ஜநா: கே மம ஸம்பவேயு: ॥71

குண்டோதரோ நாம கணோऽயமேகஸ்ததாபி ஶிஷ்ட: பரிசர்யயா மே ।
போக்தும் ந யஸ்யாவஸர: புராऽபூத் தம் போஜய ஸ்வோதரபூரமேநம் ॥ 72

இத்யாதிஶன் அந்நஸம்ருத்திகர்வம் அபாசிகீர்ஷு: ஸ ந்ருபாலபந்த்யா: ।
தேவோ கணஸ்ய த்ரிஜகச்சரீரவைஶ்வாநராத்மா ஜடரம் விவேஶ ॥ 73

பௌரோகவாஸ்தத்ர தயா நியுக்தா: ப்ரவேஶ்ய தம் போஜநமண்டபாந்த: ।
விஸ்தார்ய பத்ராணி விஶங்கடாநி பக்ஷ்யாணி போஜ்யாநி ததோऽப்யவர்ஷன் ॥ 74

ப்ராணாஹுதே: பர்யுபயுக்தமந்நம் அப்யத்ர த்ருஷ்ட்யோபலபே ந யாவத் ।
தாவத் கதம் போக்தும் உபக்ரமேயேத்யூசே ஸ புங்க்ஷ்வேதி வதத்ஸு ரோஷாத் ॥ 75

---

1070 பகவான் தடாதகையிடம் சொன்னார் ‘இந்த நாட்டு மஹாராணி நீ இந்த நாட்டுக்கென்ன?’ மூன்று உலகுக்குமே நீ தான் நாயகி. ஆகவே உன்னிடம் அன்னம் ஸமிருத்தியாக வளர்ந்திருக்கிறது. அத்தனையும் சாப்பிடுவதற்கு என்னிடம் யார் இருக்கிறார்கள்? உன்னிடம் தயாராக உள்ள அளவற்ற போஜனங்களை ஏற்க என்னுடைய பரிவாரத்தில் யாரும் மிச்சம் இல்லையே! 72

1071 குண்டோதரன் என்று என் பரிசாரகர்களில் ஒருவன். அவன் எனக்கு சிச்ருஷை செய்து கொண்டே சாப்பிட மறந்து விட்டான். அவனுக்கு சாப்பிட நேரம் கிடைக்கவில்லை. அவனுக்கு வயிறு நிறைய போஜனம் போட்டால் போதும்.’ 73

1072 காஞ்சனமாலாவிற்கு ஒரு எண்ணம். கல்யாணத்திற்கு வந்திருக்கின்ற இவ்வளவு பெரிய கூட்டத்திற்கு போஜனம் செய்விக்க வேறு யாரால் முடியும்? நாமாகக்கொண்டு ஸமாளித்தோம்.இவ்வாறு சொல்லிக் கொண்டிருந்த மஹாராணியான காஞ்சனமாலாவின் அன்ன ஸமிருத்தியின் கர்வத்தை போக்க விரும்பி மூவுலகத்தையுமே சரீரமாகக் கொண்ட ஈசன், குண்டோதரன் வயிற்றில் புகுந்தார் 74

1073 அவள் பரிமாறுபவர்களை அழைத்தாள். ‘இந்த குண்டோதரனுக்கு திருப்தியாக போஜனம் செய்து வையுங்கள். பகவானுக்கு மிகவும் உதவியான தொண்டன் இவன்’ என்றாள். அவர்கள் அவனை உள்ளே அழைத்துச் சென்று முழு நீளமானதும். அகலமானதுமான இலைகளை விரித்தார்கள். வரிசையாக எல்லா பக்ஷணங்களையும் இதர வகைகளையும் பரிமாறினார்கள். 75

सा पाण्ड्यदेवी सुमतिश्च तत्र समेत्य विस्मेरविलोचनान्तौ।
आपूपिकैरान्धसिकैश्च भूयोऽप्यदापयेतां मुहुरन्नराशीन्॥ ७६

पात्राधिकं प्रेक्ष्य स भक्तराशिं व्यामिश्रितं व्यञ्जनशाकभेदैः।
प्रणाहुतिं प्राथामिकीं कथंचिन्निर्वर्त्य तस्थौ निभृतं क्षुधार्तः ॥ ७७

संभूय दास्योऽथ नृपालपत्न्याः संभूय संभूय यथोपलब्धम्।
भक्ष्याणि भोज्यान्यदुरक्रमेण पक्वान्यपक्वन्यापि धावमानाः॥ ७८

प्राणाहुतीः पञ्च ततः कथंचित् प्रसाध्य खिन्नः क्षुधया महत्या।
स तावतीनां परिवेषणीनां न चक्षमे तत्र गणो विलम्बम्॥ ७९

अथान्नकूटैरभिताऽप्य सख्यैः अपूपशैलैश्च निरन्तरालम्।
महानसं स स्वयमाविवेश मदाह्लदं मत्त इवद्विपेन्द्रः ॥ ८०

तत्रान्नकूटान्सह भक्ष्यवर्गैः आलोडयन्दृष्टिपथं प्रविष्टान्।
षष्ट्या नवत्या शतेन चैषां स एकमेकं कबलं चकार ॥ ८१

अन्नोच्चयानास्तरणैः सहैव दुग्धानि भाण्डैर्दृतिभिर्घृतानि।
स्वीकुर्वतोऽसमाच्चकिताः समन्तात् प्रदुद्रुवुः पाकगृहे नियुक्ताः॥ ८२

---

1074 குண்டோதரன் இலைகளின் முன்பு ஸௌகரியமாக அமர்ந்தான். (ஐந்து )இலைகளையும் சேர்த்து பரிசேஷணம் செய்தான். நடுவில் வைக்கப்பட்ட அன்னக் குவியலை 'ப்ராணாய ஸ்வாஹா' என்று நடுவிரல் இரண்டு கட்டை விரல் ஒன்றினால் சேர்த்து எடுத்து உதட்டில் வைத்தவுடன் அது வாயினுள்ளே போய்விட்டது. அவன் இலையில் வைக்கப்பட்ட அன்னம் அதோடு ஸரியாகி விட்டது. அடுத்த 'ஸ்வாஹா' விற்கு எதை எடுப்பேன் ' என்று ரோஷத்தோடு கேட்டான். 'இதோ போட்டு விட்டோம்' 'சாப்பிடுங்கள்' என்றனர். 76

1075 உண்பவன் கேட்டுப் பரிமாறுவது பரிசாரகர்களுக்கு கௌரவக் குறைவு. ஆகவே ஏராளமான உணவு வகைகளைக் கொண்டுவந்து அவனுக்கு உபசாரம் செய்தனர். அங்கிருந்த மஹாராணியும் ஸுமதியும் கண்களை விரித்து வாயைப் பிளந்தார்கள். இது என்ன ஆச்சரியம்! வடை அதிரஸங்களை கூடை கூடையாகவும், அன்னத்தை, தாம்பாளங்கள் நிறையவும் கொண்டு வந்து கொட்டினார்கள். 76

1076 கறி கூட்டு வகைகளை பாத்திரங்கள் கொள்வதற்கு அதிகமாகவும், சித்ரான்னங்களை கூடைகளிலும் கொண்டுவந்து பரிமாறினார்கள். 'ப்ராணாய ஸ்வாஹா' ஒருவாறு முடிந்தது. பசியோடு நிமிர்ந்து பார்த்தான் குண்டோதரன். 77

ஸா பாண்ட்யதேவீ ஸுமதிஶ்ச தத்ர ஸமேத்ய விஸ்மேரவிலோசநாந்தௌ ।
ஆபூபிகைராந்தஸிகைஶ்ச பூயோऽப்யதாபயேதாம் முஹுரந்நராஶீன் ।। 76
பாத்ராதிகம் ப்ரேக்ஷ்ய ஸ பக்தராஶிம் வ்யாமிஶ்ரிதம் வ்யஞ்ஜநஶாகபேதை: ।
ப்ராணாஹுதிம் ப்ராதமிகீம் கதஞ்சிந்நிர்வர்த்ய தஸ்தௌ நிப்ருதம் க்ஷுதார்த்த: ।। 77
ஸம்பூம்ய தாஸ்யோऽத ந்ருபாலபத்ந்யா: ஸம்பூய ஸம்பூய யதோபலப்தம் ।
பக்ஷ்யாணி போஜ்யாந்யதுரக்ரமேண பக்வானி அபக்வாந்யபி தாவமாநா: ।। 78
ப்ராணாஹுதீ: பஞ்ச தத: கதஞ்சித் ப்ரஸாத்ய கிந்ந: க்ஷுதயா மஹத்யா ।
ஸ தாவதீநாம் பரிவேஷிணீநாம் ந சக்ஷமே தத்ர கணோ விலம்பம் ।। 79
அதாந்நகூடைரபிதோऽப்யஸங்க்யைரபூபஶைலைஶ்ச நிரந்தராலம் ।
மஹாநஸம் ஸ ஸ்வயமாவிவேஶ மஹாஹ்ரதம் மத்த இவ த்விபேந்த்ர: ।।80
தத்ராந்நகூடான் ஸஹ பக்ஷ்யவர்கை: ஆலோடயன் த்ருஷ்டிபதம் ப்ரவிஷ்டான் ।
ஷஷ்ட்யா நவத்யா ச ஶதேந சைஷாம் ஸ ஏகமேகம் கபலம் சகார ।। 81
அந்நோச்சயாநாஸ்தரணை: ஸஹைவ துக்தாநி பாண்டைர்த்ருதிபிர்க்ருதாநி ।
ஸ்வீகுர்வதோऽஸ்மாச்சகிதா: ஸமந்தாத் ப்ரதுத்ருவு: பாகக்ருஹே நியுக்தா: ।। 82

---

*1077* பரிமாறின பரிசாரகர்கள் அயர்ந்து உட்கார்ந்து விட்டார்கள், உடன் ராணியின் தோழிகளும், பணிப் பெண்களும் பரிமாறினார்கள். எது முந்தி, எது பிந்தி, என்று வரிசை மீறி, எது எது கண்களில் பட்டதோ அதைக் கொண்டு வந்து போட்டார்கள். சமைக்க வைத்திருந்த பச்சை காய்கறிகளையும் கொண்டு வந்து போட்டார்கள். ஓடி ஓடி பரிமாறினார்கள் 78

*1078* ப்ராணாய ஸ்வாஹா முதலிய ஐந்து ஆஹுதிகளை ஒருவாறு முடித்துவிட்டு குண்டோதரன் இனிதான் வயிற்றுக்குச் சாப்பிட வேண்டும். நல்ல பசி. என்ன இவர்கள் பரிமாறுவதற்கு இப்படி தாமதிக்கிறார்கள் என்று வினவினான். 79

*1079* யானைகளுக்கு மதம் தாங்கமுடியாமல் ஏரியின் நடுவிற்குப் போய்விடும். அதுபோல குண்டோதரன் இலைகளிருந்து,எழுந்து போனான் சமையல் கூடத்திற்கு. அங்கு அரிசி மூட்டைகளும்,பருப்பு மூட்டைகளும் அடுக்கப்பட்டிருந்தன. வடைகள் இடுக்கே தெரியாமல் மலைபோல் குவிக்கப்பட்டிருந்தன. அந்த அறைக்குள் புகுந்தான். 80

*1080* அங்கே அன்ன வகைகள் மலை மலையாகக் குவிக்கப்பட்டிருந்தன. அவைகளை கண்களால் நோட்டம் இட்டான். கைக்கு அறுபது, தொன்னூறு என்று ஒரு கபளமாக வாயில் போட்டுக்கொண்டான். 81

*1081* தரையில், பெரிய விரிப்புகளில் (ஜமுக்காளங்களில்) அன்னம் வடித்து மலை போல் குவித்திருந்தார்கள். அதை அந்த ஜமுக்காளத்தோடு தூக்கி வாயில்

सुरद्रुमाः स्वर्गगवी च तत्र संप्रार्थ्यमाना नरपालपत्न्या ।
यान्यानसंख्यानसृजन् पदार्थाः तेऽभवत्रस्य किलोपदंशाः ॥ ८३

गोधूममाषाढकमुद्गशालिश्यामाकनीवारतिलादिमानि ।
धान्यानि चान्यानि स चर्वति स्म कुडचैः कुसूलैर्माणिकैश्च कुम्भैः ॥ ८४

संभ्रान्तचेटीशतघुष्यमाणतच्चेष्टिताकर्णनजातलज्जाम् ।
अभिद्रवन्तीं स्वयमेव देवीम् अपाङ्गयन्सस्मितमास्त देवः ॥ ८५

अथ क्षणात् अक्षयमन्नगर्तं ससर्ज तस्मै शफरेक्षणा यम् ।
तमप्यसौ स्थण्डिलमात्रशेषं चक्रे महद्भिः कबलैश्चतुर्भिः ॥ ८६

अपूर्णमन्नैरुदरं ममेदं आपूरयिष्ये सलिलेन वेति ।
कुण्डोदरे याचति पाण्डयकन्या सस्मार गङ्गां तरलोर्मिसंघाम् ॥ ८७

अथाभ्रसिन्धुर्मलयाद्रिशृङ्गात् आविर्भवन्ती विपुलैस्तरङ्गैः ।
आप्लावयन्तीव भुवं समस्तां अभ्यर्णमागान् मधुरानगर्याः ॥ ८८

स पाणिना वक्त्रनिवेशितेन तथा पपौ तामपि दिव्यसिन्धुम् ।
कौतूहलात् प्रेरयतस्तमासीत् गङ्गाधरस्यापि यथानुतापः ॥ ८९

स्वीकुर्वतस्तां सिकतावशेषां सृक्कद्वयीमालिहतश्च भूयः ।
सा तस्य तां ग्लानिम् अवेक्षमाणा गौरी सलज्जा गिरिशं बभाषे ॥ ९०

---

உதரிக்கொண்டான். பெரிய அண்டாக்களில் இருந்த பாலை, அண்டாக்களுடன் தூக்கி, கட கட என்று குடித்தான். நெய் உறியில் வைத்திருந்தார்கள். அதை உறியுடன் வாயினுள் செலுத்தினான். இதைப் பார்த்த சமையல்காரர்கள் பயந்து அங்கிருந்து ஓடிவிட்டார்கள். 82

1082 மஹாராணி அங்கு நின்றுகொண்டிருந்த காமதேனுவினிடமும், கற்பக தருக்களையும் வேண்டினாள். அவை அக்கணமே வித விதமான உணவுகளை படைக்க, அவை எல்லாம் அவனுடைய கடைவாய்க்குக்கூட காணவில்லை. 83

1083 கோதுமை, உளுந்து, பயிறு, நெல், எள், பயிறு முதலிய தானியங்களையும்,மற்றவைகளையும் மரக்கால், படி முதலியவைகளால் அள்ளி அள்ளி வாயில் கொட்டிக் கொண்டான். 84

1084 சேடிகள் எல்லோரும் குய்யோ முறையோ என்று கதறிக் கொண்டு, குண்டோதரனின் செயல்களைக் கூறியவுடன், மஹாராணி வெட்கப்பட்டுக் கொண்டே பகவான் முன் நின்றாள். அவளைக் கடைக்கண்ணால் கடாக்ஷித்து பகவான் புன்முறுவலுற்றார். 85

ஸூரத்ருமா: ஸ்வர்ககவீ ச தத்ர ஸம்ப்ரார்த்யமாநா நரபாலபத்ந்யா ।
யாந் யாநஸங்க்யாநஸ்ருஜந பதார்த்தாஸ்தே தேऽபவந்நஸ்ய கிலோபதம்ஶா: ॥ 83
கோதூமமாஷாடகமுத்கஶாலி ஶ்யாமாகநீவாரதிலாதிமாநி ।
தாந்யாநி சாந்யாநி ஸ ஸர்வதி ஸ்ம குட்யை: குஸூலைமணிகைஶ்ச கும்பை: ॥ 84
ஸம்ப்ராந்தசேடீஶதகுஷ்யமாணதச்சேஷ்டிதாகர்ணநஜாதலஜ்ஜாம் ।
அபித்ரவந்தீம் ஸ்வயமேவ தேவீம் அபாங்கயன் ஸஸ்மிதமாஸ்த தேவ: ॥ 85
அத க்ஷணாத் அக்ஷயமந்நகர்தம் ஸஸர்ஜ தஸ்மை ஶபரேக்ஷணா யம் ।
தமப்யஸௌ ஸ்தண்டிலமாத்ரஶேஷம் சக்ரே மஹத்பி: கவலைஶ்சதுர்பி: ॥ 86
அபூர்ணமந்நைருதரம் மமேதம் ஆபூரயிஷ்யே ஸலிலேந வேதி ।
குண்டோதரே யாசதி பாண்ட்யகந்யா ஸஸ்மார கங்காம் தரலோர்மிஸங்காம் ॥ 87
அதாஸிந்துர்மலயாத்ரிஶ்ருங்காத் ஆவிர்பவந்தீ விபுலைஸ்தரங்கை: ।
ஆப்லாவயந்தீவ புவம் ஸமஸ்தாம் அப்யர்ணமாகான் மதுராநகர்யா: ॥ 88
ஸ பாணிநா வக்ரநிவேஶிதேந ததா பபௌ தாமபி திவ்யஸிந்தும் ।
கௌதூஹலாத் ப்ரேரயதஸ்தமாஸீத் கங்காதரஸ்யாபி யதாநுதாப: ॥ 89
ஸ்வீகுர்வதஸ்தாம் ஸிகதாவஶேஷாம் ஸ்ருக்கத்வயீமாலிஹதஶ்ச பூய: ।
ஸா தஸ்ய தாம் க்லாநிம் அவேக்ஷமாணா கௌரீ ஸலஜ்ஜா கிரிஶம் பபாஷே ॥ 90

---

## திருவிளையாடல் 8

## அன்னக்குழியும் வைகையும் அழைத்த படலம்

1085 அக்கணமே தடாதகா தேவி ஒரு பெரும் பள்ளம் (குழி) உண்டாக்கி அன்னத்தைக் குவித்தாள். அத்தனையும் தரைமட்டம் வரை குண்டோதரன் காலி செய்தான். அவன் சாப்பிட்டது நான்கே கபளங்கள்தான் 86

1086 அத்தனை சாப்பிட்டேன். வயிறு நிறையவில்லையே. தண்ணீரையாவது தாருங்கள். குடித்து நிரப்புகிறேன் என்றான் குண்டோதரன். உடனே பாண்டியகுமாரி பெரும் அலைகள் மோதுகின்ற கங்கையை ஸ்மரித்தாள். 87

1087 உடனே ஆகாச கங்கை மலய மலையின் உச்சியிலிருந்து பெரும் அலைகளுடன் பாய்ந்து எழுந்து வந்தாள். பூமியை முழுங்கி விடுவது போல் மதுரை நகரை நோக்கி பிரவாஹித்தாள். 88

1088 அந்த பிரவாஹத்தின் நடுவில் நின்று கைகளை குறுக்கே நீட்டினான். வாயைப் பிளந்தான் தண்ணீரைக் குடித்து விட்டான். குதூகலத்துடன் அவனைத் தூண்டிய பரமேச்வரனுக்கு ‘பாவம், இவனுக்கு கங்கா பிரவாஹமும் இவ்வளவுதானா? ’ என்று அனுதாபம் பிறந்தது. 89

अजानती यद्भवतः प्रभावं अन्नोच्चयोच्छेषम् अवादिषं प्राक् ।
तन्मर्षयन्मानद तर्षमेनं कुण्डोदरस्यास्य निवारयेति ॥ ९१
व्याजेन केनापि गिरं त्वदीयां शुश्रूषमाणो यदकार्षमित्थम् ।
तत्संहृतं देवि तव प्रभावात् अश्रान्तपूराऽस्तु वियन्नदीयम् ॥ ९२
वेगागता वेगवतीति नाम्ना ख्याता नदीयं भविता मुवीति ।
प्रसादयन्पाण्ड्यसुतां मृदूक्त्या रेमे तया सुन्दरपाण्ड्यदेवः ॥ ९३
अथापरेद्युस्त्रिदशैः समस्तैः अगस्त्यमुख्यैः परमर्षिभिश्च ।
पाण्ड्याधिराज्ये कलिताभिषेकः शशास पृथ्वीं स तया महिष्या ॥ ९४
इत्थं स पाण्ड्य तनयाचरणावलम्ब सौभाग्यसंपदुपपन्नसमस्तराज्यः ।
देवान्विसृज्य निखिलानुचितोपचारैः देवः ससागरवनां बुभुजे धरित्रीम् ॥ ९५

इति द्वादशः सर्गः

---

*1089* அவன் வாயில் தண்ணீர் முழுவதும் புகுந்து விட்டது. எங்கும் மணல்தான் மீதம். அவன் மேலுதடையும், கடை வாயையும் நாக்கினால் துழாவியதைப் பார்த்தாள் தேவி. வெட்கத்துடன் பகவானிடம் கூறினாள். 90

*1090* 'ப்ரபோ! தங்கள் பிரபாவம் அறியாமல், அன்னம் வெகுவாக மீந்து விட்டது என்பதால், கர்வத்துடன் சொன்னேனே அதைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். என்னை மன்னிக்க வேண்டும். குண்டோதரனின் தாகத்தைத் தாங்கள்தான் தணிக்க வேண்டும்.' 91

*1091* தேவி! எப்படியாவது உன் பேச்சை, மதுரமான குரலை கேட்கவேண்டும் என்ற ஆசையால் இவ்வாறு செய்தேன். அது பலித்து விட்டது. அதுவும் உன் பேரன்பால். உன் பிரபாவத்தால் இந்த ஆகாச கங்கை வற்றாமல் பிரவஹிக்கட்டும். 92

**அஜாநதீ யத்பவத: ப்ரபாவம் அந்நோச்சயோச்சேஷம் அவாதிஷம் ப்ராக் ।**
**தந்மர்ஷயன் மாநத! தர்ஷமேநம் குண்டோதரஸ்யாஸ்ய நிவாரயேதி ॥ 91**
**வ்யாஜேந கேநாபி கிரம் த்வதீயாம் ஶுஶ்ரூஷமாணோ யதகார்ஷமித்தம் ।**
**தத் ஸம்ஹ்ருதம் தேவி ! தவ ப்ரபாவாதஶ்ராந்தபூராஸ்து வியந்நதீயம் ॥ 92**
**வேகாகதா வேகவதீதி நாம்நா க்யாதா நதீயம் பவிதா புவீதி ।**
**ப்ரஸாதயன் பாண்ட்யஸுதாம் ம்ருதூக்த்யா ரேமே தயா ஸுந்தரபாண்ட்யதேவ: ॥ 93**
**அதாபரேத்யுஸ்த்ரிதஶை: ஸமஸ்தை: அகஸ்த்யமுக்யை: பரமர்ஷிபிஶ்ச ।**
**பாண்ட்யாதிராஜ்யே கலிதாபிஷேக: ஶஶாஸ ப்ருத்வீம் ஸ தயா மஹிஷ்யா ॥ 94**
**இத்தம் ஸ பாண்ட்யதநயாசரணாவலம்ப**
**ஸௌபாக்யஸம்பதுபபந்நஸமஸ்தராஜ்ய: ।**
**தேவான் விஸ்ருஜ்ய நிகிலான் உசிதோபசாரை:**
**தேவ: ஸஸாகரவநாம் புபுஜே தரித்ரீம் ॥ 95**

**இதி மஹாகவிஶ்ரீநீலகண்டதீக்ஷிதப்ரணீதே ஶிவலாலார்ணவ த்வாதஶ: ஸர்க: ।**

---

*1092* ‘வேகமாக வந்ததால் இந்த நதி வேகவதீ என்ற பெயருடன் பூமியில் பிரஸித்தமாக இருக்கட்டும்.’ இவ்வாறு பாண்டிய குமாரிக்கு அருள்பாலித்து விட்டு ஸுந்தரபாண்டியன் தேவியுடன் குலவினான். *93*

*1093* மறுநாள் கூடியிருந்த பக்தர்களும், அகத்தியர் முதலான மஹருஷிகளும் சேர்ந்து அவனை பாண்டிய ராஜ்யத்தின் மஹாராஜாவாக பட்டாபிஷேகம் செய்து வைத்தனர். அந்த ராஜ்யத்தை ஸுந்தரபாண்டியன் தேவியுடன் நன்கு பரிபாலித்து வந்தான். *94*

*1094* இவ்வாறு பாண்டிய ராஜகுமாரியின் கால்களைப் பிடித்த பாக்கியத்தினால் கடல் சூழ்ந்த பாண்டிய ராஜ்யம் முழுவதற்கும் மஹாராஜாவாகப் பட்டாபிஷேகம் பெற்றார். பிறகு வந்திருந்த அதிதிகளையும், தேவர்களையும் தக்க மரியாதைகள் செய்து வழி அனுப்பி விட்டு, தேவியுடன் ராஜ்யத்தைப் பரிபாலித்தார். *95*

**பனிரண்டாவது ஸர்கம் முடிவடைந்தது**

## त्रयोदशः सर्गः

संप्राप्येत्थं पाण्डयराज्याभिषेकं सार्धं देव्या सुन्दरः पाण्डयदेवः ।
आसीमाद्रेर्निर्हृतारातिशल्यां पृथ्वीं रेमे बिभ्रदेकातपत्राम् ॥ १
साब्धिद्वीपा साटवीदुर्गशैला सर्वाप्युर्वी यत्तुलाकोटिमूर्ध्नि ।
लग्ना दृष्टा रत्नवद्बाहुना तां तस्येदानीं बिभ्रतः कः प्रयासः ॥ २
या भूयोभिः पाण्डरैरातपत्रैः संछन्ना भूराप संतापमन्तः ।
सैवाहृष्यच्छाद्यमाना तदानीं एकच्छत्रच्छायया तस्य राज्ञः ॥ ३
नायष्टारो नाकृतब्रह्मविद्या नादातारो नाध्यधर्मे प्रसक्ताः ।
विप्राः किं तु त्यक्तपाण्डित्ययोगाः स्थातुं बाल्ये तस्य राष्ट्रे चकाङ्क्षुः ॥ ४
चातुवर्ण्यं चातुराश्रम्यरम्यं चातुर्वैद्यं तच्चतुर्वर्गयोगम् ।
दृष्टवा तेन स्थापितं निर्विशङ्कं तस्थौ धर्मस्तत्र पादैश्चतुर्भिः ॥ ५
गावो धान्यं भूषणान्यम्बराणि स्वर्णं रूप्यं यानि चैवंविधानि ।
स्वामिन्यादौ विप्रलब्धे तदीयं सर्वं जज्ञे विप्रलब्धं तदानीम् ॥ ६
कैलासाद्रिं शासतः कल्पकोटीः पूर्णः कोशो यस्य भिक्षाकपालेः ।
प्राप्तेनेत्थं पाण्डयराज्याधिपत्यं लब्धा सद्यस्तेन लक्ष्मीरपारा ॥ ७

---

## பதிமூன்றாவது ஸர்கம்

1095 ராஜ்யத்தில் பட்டாபிஷேகம் செய்து கொண்ட ஸுந்தரபாண்டியன், தடாதகை தேவியுடன், எல்லையில் உள்ள ஹிமாத்ரிபர்வதம் வரையிலான ராஜ்யத்தை, சத்ருக்கள் என்ற முட்களே இல்லாமல் செய்து கொண்டு, ஒரே வெண்கொற்றக் குடையின் கீழ் ஆண்டுவந்தான். 1

1096 கடல்கள், தீவுகள், காடுகள், கோட்டைகள்,பர்வதங்கள் அடங்கிய பூமண்டலம் எவருடைய தராசு முனையில் தாழாது, வீழாது, நிமிர்ந்து நிற்கின்றதோ அவருடைய கைமோதிர ரத்தினம் போலான இந்த பாண்டிய நாட்டை ஆளுவதில் என்ன சிரமம் வேண்டும்? 2

1097 முன்பு பல துண்டுப் பிரதேசங்களில், பற்பல வெண்குடைகளின் கீழ் புழுங்கிக் கொண்டிருந்ததே, அதே நாடு தற்போது, ஒரே குடையின் கீழ். குளிர்ந்த நிழல், அந்த ஸுந்தரபாண்டியன் ஆட்சியில் ஸந்தோஷமாக இருந்தது. 3

1098 அந்த நாட்டிலே யாகம் செய்யாதவர்களோ, ஆத்மவித்யையில் ஈடுபடாதவர்களோ, ஈகை மனப்பான்மை இல்லாதவர்களோ, கெட்டவழியில் செல்பவர்களாகவோ ப்ராஹ்மணர்கள் இல்லவே இல்லை. ஆனால் அவர்கள் நாம் பண்டிதர்கள் என்ற கர்வமில்லாமல் கற்கவேண்டுமென்ற ஆர்வமுடைய குழந்தைகளாகவே இருந்தார்கள். 4

## அத த்ரயோதஶ: ஸர்க: ।

ஸம்ப்ராப்யேத்தம் பாண்ட்யராஜ்யாபிஷேகம் ஸார்தம் தேவ்யா ஸுந்தர: பாண்ட்யதேவ: ।
ஆஸீமாத்ரேர்நிஹ்ருதாராதிஶல்யாம் ப்ருத்வீம் ரேமே பிப்ரதேகாதபத்ராம் ॥ 1
ஸாப்தித்வீபா ஸாடவீதுர்கஶைலா ஸர்வாப்யுர்வீ யத்துலாகோடிமூர்த்நி ।
லக்நா த்ருஷ்டா ரத்நவத் பாஹுநா தாம் தஸ்யேதாநீம் பிப்ரத: க: ப்ரயாஸ: ॥2
யா பூயோபி: பாண்டரை: ஆதபத்ரை: ஸஞ்சந்நா பூராப ஸந்தாபமந்த: ।
ஸைவாஹ்ருஷ்யச்சாத்யமாநா ததாநீமேகச்சத்ரச்சாயயா தஸ்ய ராஜ்ஞ: ॥ 3
நாயஷ்டாரோ நாக்ருதப்ரஹ்மவித்யா நாதாதாரோ நாப்யதர்மே ப்ரஸக்தா: ।
விப்ரா: கிந்து த்யக்தபாண்டித்யயோகா: ஸ்தாதும் பால்யே தஸ்ய ராஷ்ட்ரே சகாங்க்ஷு: ॥ 4
சாதுர்வர்ண்யம் சாதுராஶ்ரம்யரம்யம் சாதுர்வைத்யம் தச்சதுர்வர்கயோகம் ।
த்ருஷ்ட்வா தேந ஸ்தாபிதம் நிர்விஶங்கம் தஸ்தௌ தர்மஸ்தத்ர பாதைஶ்சதுர்பி: ॥5
காவோ தாந்யம் பூஷணாணி அம்பராணி ஸ்வர்ணம் ரூப்யம் யாநி சைவம்விதாநி ।
ஸ்வாமிந்யாதௌ விப்ரலப்தே ததீயம் ஸர்வம் ஜஜ்ஞே விப்ரலப்தம் ததாநீம் ॥6
கைலாஸாத்ரிம் ஶாஸத: கல்பகோடீ: பூர்ண: கோஶோ யஸ்ய பிக்ஷாகபாலை: ।
ப்ராப்தேநேத்தம் பாண்ட்யராஜ்யாதிபத்யம் லப்தா ஸத்யஸ்தேந லக்ஷ்மீ: அபாரா ॥ 7

---

*1099* நான்கு வர்ணத்தாரும்,நான்கு ஆச்ரம வயதுக் கிரமத்தில், உடல் தூய்மை, மனத்தூய்மை, செல்வத்தூய்மை, ஞானத்தூய்மை பெற்றவர்களாகவும், இருகால் பிராணி, நான்குகால் பிராணி, ஊர்வன, பறப்பன என்ற நான்குவித ஜீவ வர்கமும், ஹிம்ஸையற்று வாழ்ந்தன. இவ்வாறு அரசன் கட்டுப்பாட்டைக் கடைபிடித்ததினால் நாட்டில், ஸத்தியம்,அஹிம்ஸை, பெரியோர்களிடம் வினயம், தாழ்ந்தோர்களிடம் பரிவு என்ற நான்கு கால்களுடன் தர்மம் ஸ்திரமாக தழைத்தது. 5

*1100* பசுக்கள், தான்யங்கள், ஆபரணங்கள்,வஸ்திரங்கள், தங்கம், வெள்ளிமுதலான செல்வங்கள். முன்பு அருமை தெரியாதவர்கள் மற்றும் தகுதி அற்றவர்களின் கையில் இருந்தவை; தற்போது விப்ரலப்தம், தற்பொழுது பிராஹ்மணர்களுக்கு தானமாக வழங்கப்பட்டன. ஸத்பாத்திர தானத்தினால் அவைபெருமை பெற்றன. (மதிப்பில் உயர்ந்தவர்களை விப்ரலப்தே என்று சொல்வது) 6

*1101* கற்பகோடி காலங்கள் கைலாயத்தில் ஆட்சிபுரிந்தவர் சேர்த்த சொத்து அவருடைய கையில் உள்ள கபாலம் நிறைய இருந்தது. அவ்வளவுதான், ஆண்டவர் இன்று பாண்டிய ராஜ்யத்திற்கு அதிபதி ஆனார். சில நாட்களிலேயே, அளவற்ற செல்வம் குவிந்தது. 7

शैवाः शाक्ता वैष्णवाः सांख्यनिष्ठा योगाचार्या ब्रह्मविद्याविदोऽपि ।
गत्वा गत्वा तं यथैकं प्रपन्नास्तद्वत्तास्ताः कीर्तयोऽपि त्रिलोक्याम् ॥ ८

येऽस्मिन्नम्रास्तेऽञ्जसा तं प्रपन्ना ये तु द्विष्टार्ते हताः सङ्गरेषु ।
भित्त्वा भानोर्बिम्बमूर्ध्वं पतन्तः पर्यावृत्त्य प्रापुरन्ते तमेव ॥ ९

वक्त्राम्बोजान्निःसृतं वाक्यमात्रं पश्यन्देवो वेदवादायमानम् ।
संख्याधिक्याद्वेदशाखासु भीतस्तोकस्तोकं व्याजहाराप्रमत्तः ॥ १०

सीमन्यम्भोविप्लवे सेतुबन्धे गोसंचारे सार्थसंमेलने वा ।
या मीनाक्ष्या स्थापिता प्राक्प्रजानां तां मर्यादां स प्रमाणीचकार ॥ ११

कोशान् पञ्चैवराहुरन्नादिरूपान् यस्याशेषं शासतोऽमुं प्रपञ्चम् ।
संख्यातीता हेमरत्नादिरूपाः तस्येदानीं तेऽभवन् पाण्ड्यभर्तुः ॥ १२

पाण्ड्याध्यक्षः पाण्ड्यजामातृदेवः प्रेयान्राज्ञ्याः पालको द्रामिडानाम् ।
इत्याख्याभिः प्रीतिरस्याधिकासीत् आत्मब्रह्मज्योतिरादिश्रुतिभ्यः ॥ १३

या मीनाक्ष्यास्तावती राज्यशक्तिः सा संक्रान्ता तत्र भूयश्चकाशे ।
प्राप्तोत्कर्षा सानुनि स्फाटिकाद्रेः पत्युर्भासां भास्वरेवांशुरेखा ॥ १४

1102 சைவர்கள், சக்தி உபாஸகர்கள், வைஷ்ணவர்கள், தெய்வமே இல்லைஎன்று கூறும் ஸாங்கியர்கள், யோகாசாரியர்கள், ப்ரஹ்மவித்யையில் கரை கண்டவர்கள் எல்லோரும் எங்கெங்கோ போய்விட்டு, கடைசியில் அவரிடம் வந்து, தங்களது புத்தி தெளிய வேண்டுமென்று சரணமடைகிறார்கள். அவருடைய ஞான கீர்த்திகள் மூவுலகிலும் பரவியுள்ளன. 8

1103 இவரைப் பணிகிறவர்களோ, விரைவில் இவரே கதி என்று சரணமடைகிறார்கள். இவரிடம் பகை கொள்கிறவர்கள். போர் காலத்தில் இவர் கையால் அடிபட்டு சாகிறார்கள் என்றுதான் நாம் நினைப்போம். ஆனால் அவர்கள் ஸூர்ய மண்டலத்தை உடைத்துக்கொண்டு திரும்பி வந்து மறுபடியும் அவருடைய பாத நிழலில் கூடிவிடுகிறார்கள். 9

1104 அரசன் கவனித்தார். தன் வாயிலிருந்து எவ்வளவு வார்த்தைகள் வந்தாலும், அவை வேதமாக ஆகிவிடிகிறது. ஆகவே வேதங்களின் எண்ணிக்கை அதிகமாகிவிடும் என்று பயத்து வாய்விட்டு மிகவும் கொஞ்சமாகவே பேசினார். 10

1105 ராஜ்யத்தில் வெள்ளம் வந்தால், அணைகட்டுவதிலும், மாடுகள் யதேச்சையாக எல்லை வரையிலும் மேயவேண்டும் என்பதிலும், ஸாதுக்கள் ஸ்வதந்த்ரமாகக் கூடவேண்டும் என்பதிலும், மீனாக்ஷீ மக்களுக்கு என்ன

ஶைவா: ஶாக்தா வைஷ்ணவா: ஸாங்க்யநிஷ்டா யோகாசார்யா ப்ரஹ்மவித்யாவிதோऽபி ।
கத்வா கத்வா தம் யதைகம் ப்ரபந்நாஸ்தத்வத் தாஸ்தா: கீர்த்தயோऽபி த்ரிலோக்யாம் ॥ 8
யேऽஸ்மிந்நம்ராஸ்தேஜஸா தம் ப்ரபந்நா யே து த்விஷ்டாஸ்தே ஹதா: ஸங்கரேஷு ।
பித்வா பாநோர்பிம்பமூர்த்வம் பதந்த: பர்யாவ்ருத்ய ப்ராபுரந்தே தமேவ ॥ 9
வக்ராம்போஜாந்நிஸ்ஸ்ருதம் வாக்யமாத்ரம் பஶ்யன் தேவோ வேதவாதாயமாநம் ।
ஸங்க்யாதிக்யாத்வேதஶாகாஸு பீத: ஸ்தோகஸ்தோகம் வ்யாஜஹாராப்ரமத்த: ॥ 10
ஸீமந்யம்போவிப்லவே ஸேதுபந்தே கோஸஞ்சாரே ஸார்தஸம்மேலநே வா ।
யா மீநாக்ஷ்யா ஸ்தாபிதா ப்ராக் ப்ரஜாநாம் தாம் மர்யாதாம் ஸ ப்ரமாணீசகார ॥ 11
கோஶான் பஞ்சைவாஹுரந்நாதிரூபான் யஸ்யாஶேஷம் ஶாஸதோऽமும் ப்ரபஞ்சம் ।
ஸங்க்யாதீதா ஹேமரத்நாதிரூபாஸ்தஸ்யேதாநீம் தேऽபவன் பாண்ட்யபர்த்து: ॥ 12
பாண்ட்யாத்யக்ஷ: பாண்ட்யஜாமாத்ருதேவ: ப்ரேயாந் ராஜ்ஞ்யா: பாலகோ த்ராமிடாநாம் ।
இத்யாக்யாபி: ப்ரீதிரஸ்யாதிகாஸீத் ஆத்மப்ரஹ்மஜ்யோதிராதிஶ்ருதிப்ய: ॥ 13
யா மீநாக்ஷ்யாஸ்தாவதீ ராஜ்ய ஶக்தி: ஸா ஸங்க்ராந்தா தத்ர பூயஶ்சகாஶே ।
ப்ராப்தோத்கர்ஷா ஸாநுநி ஸ்பாடிகாத்ரே: பத்யுர்பாஸாம் பாஸ்வரேவாம்ஶுரேகா ॥ 14

---

விதிமுறைகளை வகுத்திருந்தாளோ, அந்த வரைமுறைகளை ஸுந்தரபாண்டியன் ஊர்ஜிதம் செய்தார். 11

1106 பகவான் ஸுந்தரபாண்டியனாக அரசாளும்போது அவருக்கு அன்னம், ப்ராணன், மனசு, விஞ்ஞானம், ஆனந்தம் என்ற ஐந்து கோசச் செல்வங்கள். ஆனால் அவரே பர்யஸ்த ஸ்வரூபமாக, பாணங்கம், மரகதங்கம் முதலிய பலபடிவங்களில் மக்களின் வழிபாட்டிற்காக விளங்கினார். 12

1107 இந்த ச்லோகம் முக்கியமான ஒரு கருத்தைத் தெரிவிக்கின்றது. தடாதகையை மணம் புரிந்து கொண்ட ஸுந்தரபாண்டியன், நம்மைப்போல் ப்ராக்ருத சரீரமுள்ளவனாகக் காட்சி . அளித்தாலும், அவர்தான் பரப்ரஹ்மஸ்வரூபம் என்பதை மறைத்துக்கொள்ள, உலகில் சில நேரங்களில் லிங்கவடிவமாக எழுந்தருளி மக்களின் வழிபாட்டிற்கு உட்படுகிறார். பகவான் நாராயணன் கிருஷ்ணாவதாரத்தில் இவ்வாறே மாறுபட்ட உருவங்களில் பகவானாகவும் லீலை புரிந்திருக்கிறார். இந்தக் கருத்து மனதில் ஊன்றி விட்டால் பின் வரும் சரித்திரங்களைக் குழப்பமின்றி தெளிவாக அனுபவிக்க முடியும். 13

பாண்டிய நாட்டு அதிபனாகிய ஸுந்தரபாண்டியனை (மானுட வடிவம் தாங்கிய பரப்ரஹ்மம்) பாண்டியநாட்டு மாப்பிள்ளை ஸ்வாமி, ராணிக்கு உகந்த மணாளன், தமிழ்நாட்டின் அரசன் என்று இப்படியெல்லாம் பெயர் சூட்டி மகிழ்ந்தார்கள். பாண்டிய மக்களுடைய பரமப் பிரேமைக்கு உட்பட்டு அவர் லீலைகளைப் புரிந்தார். இவரைத்தான் உபனிடதங்கள் பரமாத்மா,

स्वे स्वे धर्मे स्थापिताः सर्व एव क्ष्मापालत्वं बिभ्रता तेन लोकाः ।
कालस्त्वेकश्च्यावितः स्वाधिकाराद्धर्मैकान्तयं तन्वता मानवेषु ॥ १५

इत्थं राज्यं बिभ्रता तेन राज्ञा देवी जातु स्फारचिन्तानिमग्ना ।
भूयो भूयो हेतुमत्रानुयुक्ता प्राह स्मेदं प्राणनाथं मृगाक्षी ॥ १६

संचिन्वाना तावकीनात्प्रसादात् धर्मं तं तं नाथ माता मदीया ।
जातोत्सुक्या तीर्थयात्राविधाने स्नातुं सिन्धौ श्वः प्रतिष्ठांसते सा ॥ १७

इत्याकर्ण्य प्रेयसीखेदमूलं तत्रानेष्यन् सागरान्सप्त देवः ।
सस्माराग्रे सद्य एवास्य तेऽपि प्रादुर्भूता मूर्तिमन्तः प्रणेमुः ॥ १८

प्राचि स्थाने सोमसौन्दर्यनेतुः प्रागेवास्ते कश्चिदेकस्तटाकः
सर्वे तस्मिन्संनिधत्तेति देवो नामादेशं सागरान् आदिदेश ॥ १९

पश्यन्तीनाम् अग्रतस्ते प्रजानां त्यक्त्वा रूपं पौरुषं सिन्धुराजाः ।
दृश्यन्ते स्म व्योम्नि दूरे तरङ्गैः आजिघ्रन्तो दिक्तटानुत्तरङ्गैः ॥ २०

---

பரப்ரஹ்மம், பரம்ஜ்யோதி என்று கொண்டாடுகின்றன. கவனத்திற்கு ஒரு கருத்து- பாண்டிய மக்கள் ஸுந்தரபாண்டியனை ப்ரப்ரஹ்மம் என்றார்களே தவிர பரப்ரஹ்மம் தான் பாண்டிய வடிவத்தில் உள்ளது. பாண்டியனிடத்தில் பரப்ரஹ்மம் அடக்கம் என்று இயல்பாகவே நினைத்தார்கள். 14

1108 மீனாக்ஷி தேவியின் மஞ்சக்காணி சொத்தான ராஜ்யச் செல்வம் எங்கும் பெருகி வ்யாபித்து விட்டது. எது வரை? ஸ்படிக வடிவமான கைலாஸ பர்வதத்தின் உச்சி சிகரத்தில் பரமேச்வரனுடைய ஒளிப் பிழம்பாக ஸ்வப்ரகாச ராஜ்யலக்ஷ்மீயாக விளங்கினாள். 15

1109 அரசின் மாட்சிமையை ஏற்றுக்கொண்ட மன்னன், ப்ராஹ்மணர்கள் அனைவரையும் தம் தமது கடமைகளில் நிலை நிறுத்தினார். மக்களனைவரையும் இயல்பாகவே தர்மத்தில் ஈடுபடுபவர்களாக்கி. புண்யாத்மாக்களாகச் செய்து விட்டதினால், யமனுக்கு வேலையில்லாமல் போய் விட்டது. மக்களின் பாபங்களுக்கேற்ப தண்டனை அளிக்கக்கூடிய யமதர்மராஜனுக்கு செல்வாக்கு இல்லாமல் போய்விட்டது. 16

ஸ்வே ஸ்வே தர்மே ஸ்தாபிதா: ஸர்வ ஏவ க்ஷமாபாலத்வம் பிப்ரதா தேந லோகா: ।
காலஸ்த்வேகஶ்ச்யாவித: ஸ்வாதிகாராத் தர்மைகாந்த்யம் தந்வதா மாநவேஷு ॥ 15
இத்தம் ராஜ்யம் பிப்ரதா தேந ராஜ்ஞா தேவீ ஜாது ஸ்பாரசிந்தாநிமக்நா ।
பூயோ பூயோ ஹேதுமத்ராநுயுக்தா ப்ராஹ ஸ்மேதம் ப்ராணநாதம் ம்ருகாக்ஷீ ॥ 16
ஸஞ்சிந்வாநா தாவகீநாத் ப்ரஸாதாத் தர்மம் தம் தம் நாத! மாதா மதீயா ।
ஜாதௌத்ஸுக்யா தீர்த்தயாத்ராவிதாநே ஸ்நாதும் ஸிந்தௌ ஶ்வ: ப்ரதிஷ்டாஸதே ஸா ॥ 17
இத்யாகர்ண்ய ப்ரேயஸீகேதமூலம் தத்ராநேஷ்யன் ஸாகரான் ஸப்த தேவ: ।
ஸஸ்மாராக்ரே ஸத்ய ஏவாஸ்ய தேऽபி ப்ராதுர்பூதா மூர்த்திமந்த: ப்ரணேமு: ॥ 18
ப்ராசி ஸ்தாநே ஸோமஸௌந்தர்யநேது: ப்ராகேவாஸ்தே கஶ்சிதேகஸ்தடாக: ।
ஸர்வே தஸ்மின் ஸந்நிதத்தேதி தேவோ நாமாதேஶம் ஸாகராநாதிதேஶ ॥ 19
பஶ்யந்தீநாம் அக்ரதஸ்தே ப்ரஜாநாம் த்யக்த்வா ரூபம் பௌருஷம் ஸிந்துராஜா: ।
த்ருஶ்யந்தே ஸ்ம வ்யாம்நி தூரே தரங்கைராஜிக்ரந்தோ திக்தடாநுத்தரங்கை: ॥ 20

---

## திருவிளையாடல் 9

## ஏழுகடல் அழைத்த படலம்

1110 இவ்வாறு ராஜ்யபரிபாலனம் ஸுந்தரபாண்டியன் செய்து கொண்டிருக்கையில், தேவிக்கு ஒரு நாள் பெரும் கவலை ஏற்பட்டது. அது அவளுடைய முகத்தில் நன்றாகத் தெரிந்தது (ஸ்பாரசிந்தாநிமக்னா) ஒரு நாளில்லை. இரண்டு நாளில்லை. சில நாட்கள் கழிந்தன. ஒவ்வொரு நாளும் அரசன் கேட்டான்,தேவி உனக்கு என்ன கவலை என்று. கடைசியில் ஒரு நாள் தேவி வாயைத் திறந்து கூறியே விட்டாள். 17

1111 ப்ரபோ! தங்களுடைய திருவருளால் என் தாயாருக்கு தர்மானுஷ்டானத்தில் ஆர்வம் உண்டாகிவிட்டது. ‘தீர்த்த யாத்திரை செய்தால் என்ன’ என்று உற்சாகம் வந்து விட்டது. நாளை ஸமுத்திரங்களில் ஸ்நானம் செய்யக் கிளம்புவதற்கு விரும்புகிறாள். அது நடக்குமா? என்று தான் கவலை. 18

1112 அன்பிற்கினியாளுக்கு இப்படி கவலை என்று அரசன் உணர்ந்து,உடனே தீர்மாணித்தார். ஒரு கடலென்ன, கரும்புக்கடல், பாற்கடல் முதலிய ஏழு கடல்களையும் இங்கேயே வரவழித்து விடுவோமே என்று நினைக்கும்போதே. அவர் முன் ஏழு கடலும் தேவதா வடிவத்தில் தோன்றி வணங்கினார்கள். 19

1113 ஸோமஸுந்தரருடைய ஆலயத்திற்கு கிழக்கே ஒரு பெரிய தடாகம் இருந்தது. அதை அந்த ஸாகர தேவர்களுக்குக் காட்டி, ‘இந்த தீர்தத்தில் நீங்கள் ஆவிர்பவியுங்கள்’ என்று ஆணை இட்டார். (இது ஏழு கடல் தீர்த்தம் என்று பெயர் பெற்றது. தற்சமயம் அது ஏழு கடல் தெரு என்று அழைக்கப்படுகிறது). 20

स्वं स्वं रूपं संक्षिपन्तोऽपि ते ते कासारान्तः संभवार्हं समुद्राः।
आलक्ष्यन्त स्पष्टमत्यद्भुताभिः वल्गन्तीभिः पङ्क्तिभिर्वीचिकानाम्॥ २१

आक्रामद्भिर्व्योमकक्ष्यामकाण्डे स्रोतोभिस्तैः स्वीकृताः सागराणाम्।
जग्मुर्मेघास्तत्र शैवालभावं विद्युल्लेखा विद्रुमत्वं च तेषां॥ २२

आसप्तर्षिस्थानमाक्रान्तिहेतोः संवर्तेषु द्यामिव द्रष्टुकामैः।
आरूढे व्योम्नि अर्णवैरभ्रसिन्धोः सव्यं चक्षुः शश्वदस्पन्दतोच्चैः॥ २३

भागीरथ्या जातु लेभेऽभिषेकं पर्याप्तं यः प्राग्युगे व्योमकेशः।
द्रव्यैस्तैस्तैर्दुग्धदध्याज्य मुख्यैः द्वैतीयीकः सोऽस्य जज्ञेऽभिषेकः॥ २४

पश्यत्यग्रे पाण्ड्यदेवे ततस्ते पारावाराः पल्वले तत्र पेतुः।
पार्श्वस्थास्तेऽऋत्विजः कुम्भयोनेः प्रायस्तालुन्याद्रतामावहन्तः॥ २५

क्षीरं सर्पिर्वारुणीमिक्षुसारं दध्यप्यभ्रे दुर्लभं पातुकामाः।
विष्वग्देवाः संपतन्तो विमानैः स्रोतस्येषां कीटमज्जं ममज्जुः॥ २६

क्षारं बारि क्षीरमुख्यानि वस्तून्येकं सर्वाण्येकदैवाजघान।
मौढ्यं ह्येकं हन्ति राशिं गुणानां शौर्यौदार्यस्थैर्यगाम्भीर्यमुख्यम्॥ २७

---

*1114* ப்ரஜைகள் பார்த்துக்கொண்டிருக்கும்போதே, அந்தக்கடல் தேவதைகள், தங்கள் புருஷ வடிவங்களைத் துறந்து. ஆகாசத்திலிருந்து அலை வரிசைகளாக தமது தீர்த்தங்களை அந்தத் தடாகத்தில் பொழிந்தார்கள். அலைகள் எட்டு திக்கிலும் மணம் வீசின. 21

*1115* தம் தமது கடல் உருவத்தைச் சுருக்கிக் கொண்டு, அந்த ஏரிக்குள் அடங்கி விடவே நினைத்தாலும் கூட, அவர்களுடைய தயிர், பால், நெய் போன்ற தனித் தன்மைகள், அலைவரிசைகளில் வெளிப்பட்டன. அலைகள் அவ்வாறு திரண்டு வந்தது ஒரு அத்புதமான காட்சி. 22

*1116* அடடா! அத்புதமான கற்பனை ஆகாயத்தில் கடல்களின் அலைவரிசைகள் ஒன்றுக்கொன்று மோதுகின்றன. பாற்கடல் அலைகள், தயிர்கடல் அலைகள் மேகங்களில் பரவி பாசியாகப் படர்ந்து விட்டன. தேன் கடல் அலைகளும், கரும்புச்சாறுக் கடல் அலைகளும் கலந்து பரவி கொப்பளித்தன. இப்படி ஆகாயத்தில் அவர்கள் உருவாக்கிக் கொண்டிருந்த அத்புதமான காட்சி மின்னல் சலனமாகவும், பவழக் கொடிகளாகவும் தோற்றமளித்தன. 23

*1117* விசித்திரமான கடலலைகள், ஆகாய வீதியில் ஸப்தருஷிமண்டலத்தை வளைத்துக் கொண்டு வானில் வியாபித்து விட்டன. ப்ரளயகாலங்களில் இப்படித்தான் ஆகாயத்திலேயே கடல் எழும்பிக் கொந்தளிக்குமோ! என்று

**ஸ்வம் ஸ்வம் ரூபம் ஸங்க்ஷிபந்தோऽபி தே தே காஸாராந்தஸ்ஸம்பவார்ஹம் ஸமுத்ரா:।**
**ஆலக்ஷயந்த ஸ்பஷ்டம் அத்யத்புதாபிர்வல்கந்தீபி: பங்க்திபிர்வீசிகாநாம் ॥ 21**
**ஆக்ராமத்பிர்யோமகக்ஷ்யாமகாண்டே ஸ்ரோதோபிஸ்தை: ஸ்வீக்ருதா: ஸாகராணாம் ।**
**ஜக்முர்மேதாஸ்தத்ர ஶைவாலபாவம் வித்யுல்லேகா வித்ருமத்வம் ச தேஷாம் ॥ 22**
**ஆஸப்தர்ஷிஸ்தாநமாக்ராந்திஹேதோ: ஸம்வர்த்தேஷு த்யாமிவ த்ரஷ்டுகாமை: ।**
**ஆரூடே வ்யோம்ணி அர்ணவை: அப்ஸிந்தோ: ஸ்வயம் சக்ஷு: ஶஶ்வதஸ்பந்ததோச்சை: ॥ 23**
**பாகீரத்யா ஜாது லேபேऽபிஷேகம் பர்யாப்தம் ய: ப்ராக்யுகே வ்யோமகேஶ: ।**
**த்ரவ்யைஸ்தைஸ்தைர்துக்ததத்யாஜ்யமுக்யைர் த்வைதீயீக: ஸோऽஸ்ய ஜஜ்ஞேऽபிஷேக: ॥ 24**
**பஶ்யத்யக்ரே பாண்ட்யதேவே ததஸ்தே பாராவாரா: பல்வலே தத்ர பேது: ।**
**பார்ஶ்வஸ்தாஸ்நோர் ருத்விஜ: கும்பயோநே: ப்ராயஸ்தாலுந்யார்த்ரதாம் ஆவஹந்த: ॥ 25**
**க்ஷீரம் ஸர்பிர்வாருணீமிக்ஷுஸாரம் தத்யப்யப்ரே துர்லபம் பாதுகாமா: ।**
**விஷ்வக்தேவா: ஸம்பதந்தோ விமாநை: ஸ்ரோதஸ்யேஷாம் கீடமஜ்ஜம் மமஜ்ஜு: ॥ 26**

**க்ஷாரம் வாரி க்ஷீரமுக்யாநி வஸ்தூனி**
**ஏகம் ஸர்வாண்யேகதைவாஜகாந ।**
**மௌட்யம் ஹ்யேகம் ஹந்தி ராஶிம் குணாநாம்**
**ஶௌர்யௌதார்யஸ்தைர்யகாம்பீர்யமுக்யம் ॥ 27**

---

*காட்சிகளைக் காண விரும்பியவர்களுக்கெல்லாம் தோன்றியது. ஆகாச கங்கையின் இடது கண் துடித்தது.* 24

*1118 முந்தய யுகத்தில் எப்போழுதோ பகீரதனுக்காக, ஆகாயத்திலிருந்து வீழ்ந்த கங்கையின் அபிஷேகம் கிடைத்ததுபோல இப்படி ஒரு அபிஷேகம் கிடைக்குமென்று எதிர்பார்க்கவில்லை. ஆகாயத்திலிருந்து தயிர் கடல், பாற் கடல், நெய் கடல் எல்லாம் அபிஷேகம் செய்தன. இரண்டாவதாக இப்படி ஒரு திரவ்யாபிஷேகம் செய்து கொண்டார் பகவான்.* 25

*1119 ஸுந்தரபாண்டியத் தேவன் ஆச்சரியத்துடனும் பக்தியுடனும் ஏரியில் கடல்கள் சேருவதைக் காண்பதில் திளைத்திருந்தார். பக்கத்தில் அகத்தியரும் இருந்தார். அவர் ஒரு முறை உப்புக் கடலில்தான் ஆசமனம் செய்தார். அவருடைய கடைவாயும், நாக்கும் குழைந்தன. நம் முனிவர் இப்போது மற்றொரு ஆசமனம் செய்யபவரைப்போல காணப்பட்டார்.* 26

*1120 ஆகாசத்தில் ஒரே கலவரம். தேவர்களுக்கு அமுதம் சாப்பிட்டு திகட்டிப் போய்விட்டது. 'பாற்கடலாமே! நெய்கடலாமே! தயிர் கடலாமே! கரும்புச்சாறு கடலாமே! சாராயக்கடலாமே தேவலோகத்தில் இவைகள் கிடைப்பதில்லையே' என்று சொல்லிக்கொண்டு விமானத்திலிருந்து அந்தக் கடலில் 'பொத்து பொத்து' என்று விழுந்து புழுக்கள் போல் மூழ்கி விட்டனர்.*

27

शब्दस्पर्शौ रूपगन्धौ रसश्च प्राप्तास्तीर्थे चित्रतां तत्र सद्यः।
आस्तामेतन्मज्जतामत्र नृणां स्वर्गेऽप्यासीच्चित्रता यद्विचित्रा ॥ २८

सर्वे गन्धा यत्र सर्वे रसाश्च प्रादुर्भूतास्तीर्थराजे हि तस्मिन्।
स्नानाल्लभ्ये तादृशि ब्रह्मभावे न्यायज्ञानां नागमाः पर्युपास्याः॥ २९

नीरक्षीरे द्वे विवेक्तुं प्रगल्भा इम्सास्तस्मिन्सर्वसंघातरूपे।
भग्नोत्साहा मत्स्यमण्डूककूर्मैः प्राप्ताः साम्यं न प्रचेलुर्विलज्जाः ॥ ३०

पत्या सार्धं योषितोऽधिक्रियन्ते तीर्थे स्नातुं पुत्रवत्योऽथवेति।
श्रुत्वा शास्त्रं चिन्तया दूयमानां श्वश्रूमन्तस्तत्र शुश्राव देवः॥ ३१

आवर्तार्हं स्थानमुल्लङ्घ्य सर्वं संप्राप्तस्तच्छाश्वतं धाम शंभोः।
प्रत्यानेयो वल्लभोऽस्याः कथं वेद्ययन्ताश्चिन्तामाप देवस्ततोऽपि॥ ३२

पत्युश्छायां पाण्ड्यदेव्याः स कामप्यानीयाग्रे दर्शयन्प्रेयसीं स्वाम्।
तद्वृत्तान्तस्मेरदृष्ट्यानया तां वृत्तान्तं तं वेदयामास देवः॥ ३३

सा संहृष्टा तां निशम्य प्रवृत्तिं पश्यन्ती च प्राणनाथं विमाने।
आलिङ्गन्ती निर्भरं मीननेत्रां भूयो भूयो मूर्ध्नि चैनाम् अजिघ्रत् ॥ ३४

---

1121 உப்போ, ஜலமோ, பாலோ இத்தகைய மற்ற பொருள்களோ, ஒரே விழுங்களில் சாப்பிட்டால் ருசிக்காது. ஒரே நேரத்தில் மனிதனுடைய சூரத்தனம், வள்ளல் தன்மை, மனோதிடம், தர்மத்தில் உறுதியாக நிற்பது, ஆழ்ந்த மனப்பக்குவம் போன்ற நற்பண்புகள் எல்லாவற்றையும் முட்டாள்தனம் ஒன்றே அழித்துவிடும். 28

1122 காதுக்கு இனிமையான கீதம், சொல், தொடுவதற்கிதமான மென்மை, கண்களுக்கு உருவத்தின் அழகு. மூக்கை இழுக்கின்ற நறுமணம். நாக்கில் ஜலம் ஊறவைக்கின்ற சுவை என்று தனித்தனித் தீர்த்தங்களில் திளைக்கின்ற மானுடர்கள், விதவிதமாக அவற்றில் ரஸிக்கலாம். ஆனால் ஸ்வர்கத்திலுமா வித விதமான அனுபவம்! விசித்ரம்தான்! 29

1123 ப்ரஹ்மத்தை உபநிடதங்கள் ''ஸர்வ கந்த: ஸர்வ ரஸ:'' என்று எல்லா நறுமணங்களும் எல்லா சுவைகளும் அதில் என்று கூறுகிறது அத்தகைய ப்ரஹ்மநாதம் என்ற தீர்த்தம். அந்த ப்ரஹ்மபாவம் இந்த தீர்த்தத்திலும் ஸ்நானம் செய்யும்போது கிடைக்கின்றது. ஆனால் ந்யாய சாஸ்திரக்காரர்களுக்குத்தான் வேதாந்தம் பிடிக்காதே! அந்தோ பரிதாபம்! 30

1124 நீர் பால் கலவையில் நீரிருந்து பாலை மட்டும் பிரித்துக்கொடுக்கக்கூடிய இயல்புடையது அன்னப்பறவை. ஆனால் இங்கே என்னவையெல்லாமோ கலந்திருக்கிறதே. அன்னம் எதைப் பிரிக்கும்?

ஶப்தஸ்பர்ஶௌ ரூபகந்தௌ ரஸஶ்ச ப்ராப்தாஸ்தீர்த்தே சித்ரதாம் தத்ர ஸத்ய: ।
ஆஸ்தாமேதந்மஜ்ஜதாமத்ர ந்ருணாம் ஸ்வர்கேऽப்யாஸீச்சித்ரதா யத்விசித்ரா ॥ 28
ஸர்வே கந்தா யத்ர ஸர்வே ரஸாஶ்ச ப்ராதுர்பூதாஸ்தீர்த்தராஜே ஹி தஸ்மின் ।
ஸ்நாநால்லப்யே தாத்ருஶி ப்ரஹ்மபாவே ந்யாயஜ்ஞாநாம் நாகமா: பர்யுபாஸ்யா: ॥ 29
நீரக்ஷீரே த்வே விவேக்தும் ப்ரகல்பா ஹம்ஸாஸ்தஸ்மின் ஸர்வஸங்காதரூபே ।
பக்நோத்ஸாஹா மத்ஸ்யமண்டூககூர்மை: ப்ராப்தா: ஸாம்யம் ந ப்ரசேலுர்விலஜ்ஜா: ॥ 30
பத்யா ஸார்தம் யோஷிதோऽதிக்ரியந்தே தீர்த்தே ஸ்நாதும் புத்ரவத்யோऽதவேதி ।
ஶ்ருத்வா ஶாஸ்த்ரம் சிந்தயா தூயமாநாம் ஶ்வஶ்ரூமந்தஸ்தத்ர ஶுஶ்ராவ தேவ: ॥ 31
ஆவர்த்தார்ஹம் ஸ்தாநமுல்லங்க்ய ஸர்வம் ஸம்ப்ராப்தஸ்தச்சாஶ்வதம் தாம ஶம்போ: ।
ப்ரத்யாநேயோவல்லபோऽஸ்யா: கதம் வேத்யந்தஶ்சிந்தாம் ஆபதேவஸ்ததோऽபி ॥ 32
பத்யுஶ்சாயாம் பாண்ட்யதேவ்யா: ஸ காமப்யாநீயாக்ரே தர்ஶயன் ப்ரேயஸீ ஸ்வாம் ।
தத்வ்ருத்தாந்தஸ்மேரத்ருஷ்ட்யாநயா தாம் வ்ருத்தாந்தம் தம் வேதயாமாஸ தேவ: ॥ 33
ஸா ஸம்ஹ்ருஷ்டா தாம் நிஶம்ய ப்ரவ்ருத்திம் பஶ்யந்தீ ச ப்ராணநாதம் விமாநே ।
ஆலிங்கந்தீ நிர்பரம் மீநநேத்ராம் பூயோ பூயோ மூர்த்நி சைநாம் அஜிக்ரத் ॥ 34

---

*மீன்கள், தவளைகள், ஆமைகளின் கூட்டங்களில் வெட்கமில்லாமல் சேர்ந்துவிட்டது.* *31*

## திருவிளையாடல் 10
## மலயத்வஜனை அழைத்த படலம்

1125 'ஒரு பெண் ஸமுத்திர ஸ்நானம் கணவனோடுதான் செய்ய வேண்டும் அல்லது புத்திரனோடு செய்யலாம்' என்கிறது சாஸ்திரம். இதை கேள்விப்பட்ட காஞ்சனமாலா என்ன செய்வது என்று புழுங்கினாள். இதை அறிந்தார் ஸுந்தரேசப்பெருமான். 32

1126 அவர் (ஸுந்தர பாண்டியன்) சென்ற ஸ்தானமோ ந ச புனராவர்த்ததே எங்கு சென்றால் பிறகு திரும்ப மறுபிறவி எடுக்க வேண்டாமோ அந்த சாச்வதமான ஸ்தானம். ஸ்வர்கம் முதல் ப்ரஹ்மலோகம் வரை ஆத்மாவுக்குத் தனித்தன்மை உண்டு. ப்ரஹ்மலயம் அடைந்து விட்டால் ஆத்மாவிற்குத் தனித்தன்மை கிடையாதே. ஸுந்தரபாண்டியனை அந்த நிலையிலிருந்து எப்படிப் பிரித்துக் கொண்டு வருவது? என்று சிந்தித்தார் பகவான். 33

1127 ஸுந்தரபாண்டியத்தேவன் தன் மனைவியை அழைத்தார். ஆகாசத்தைக் குறித்து ' அதோ பார் ' என்றார். தடாதகா நிமிர்ந்து பார்த்தாள். அங்கு மலயத்வஜன் நிழல் தெரிந்தது. அந்தக் காட்சியைப் பார்த்த தடாதகை தன் தாயாரைக் கூப்பிட்டு ஆகாசத்தைக் குறித்து 'அதோ பார்' என்றாள். அவளும் தன் பர்தாவின் நிழலைக் கண்டாள்! வேதயாமாஸ சொல்லாமலேயே அறியச்செய்தார். 34

त्वन्मातृत्वात्सिद्धमेवापवर्गं मन्वानाहं तेन हृष्टा न तावत्।
यावत्तातं वीक्षमाणा तवेति स्तावंस्तावं सा बभाषे कुमारीम् ॥ ३५

लब्ध्वा योगं लज्जमाना विमानात् आप्लुत्यारादागतेन प्रियेण।
दत्तानुज्ञा देवपाण्ड्येन देवी सस्नौ तीर्थे सप्तरत्नाकरे सा॥ ३६

दीनं रूपं प्रेयसा विप्रयोगाद्देव्याः स्नान्त्यास्तत्र दृष्टं जनैर्यत्।
उन्मज्जन्त्यास्तत्ततः पर्यणंसीत् चन्द्रापीडं चारुहासं त्रिणेत्रम्॥ ३७

सा गच्छन्ती शाश्वतं धाम शम्भोः सार्धं पत्या सर्वसौभाग्यधाम।
क्लेशं कन्याविप्रयोगप्रसक्तं किंचिच्चित्ते धारयन्तीदमूचे॥ ३८

अद्य ज्ञातं ब्रह्म पूर्णं युवामित्यद्योत्सन्नः पाशवर्गोऽखिलो मे।
दूयेऽथापि त्वर्धंविच्छिन्नमासीत् त्वत्सौभाग्यालोकभाग्यं किलेति॥ ३९

शुश्रूषस्व प्रेयसः पादपद्मं क्षाव्या धृत्या प्रेमवत्या च भक्त्या।
लब्ध्वा पुत्रं राज्यभारेऽभिषिच्य द्रष्टास्मि त्वां स्वं पदं प्रत्युपेताम्॥ ४०

इत्यादिश्य प्रस्थितायां जनन्यां सर्वोत्तीर्णं शांकरं धाम दिव्यम्।
आनन्दोत्थैः शोकजैश्चाश्रुपूरैः र्वक्त्रं देव्या भूषितं दूषितं च॥ ४१

ताभिस्ताभिस्तत्प्रसङ्गोचिताभिः वाग्भिर्मार्जन्मानसं क्लेशमस्याः।
वारिक्रीडां वारिजाक्ष्यानयासौ आनन्दाब्धौ आचचार प्रवीरः॥ ४२

---

*128 ஆகாசத்தில் நிமிர்ந்து பார்த்தாள் காஞ்சனமாலை. அங்கே தன் கணவனை விமானத்தில் கண்டாள். மகிழ்ச்சியுடன் தன் மகளை இழுத்து அன்புடன் அனைத்து திரும்பத் திரும்ப உச்சி மோந்தாள். 35*

*1129 தாய் பெண்ணைப் பார்த்துக் கூறினாள் 'குழந்தே! உன்னைப் பெற்றதாலேயே எனக்கு மோக்ஷம் நிச்சயம் என்று சந்தோஷப்படவில்லை. இப்பொழுது மோக்ஷநிலை அடைந்துவிட்ட உன் தந்தையையே தரிசனம் செய்து விட்டேனே. இந்த ஆனந்தம் அப்போது எனக்குக் கிடைக்கவில்லையே', 36*

*1130 விமானத்திலிருந்து இறங்கி வந்த கணவன் கையைப் பிடித்துக் கொண்டு ஸுந்தரபாண்டியனைப் பார்த்தாள். நடக்கட்டும் ஸ்நானம் என்றார். காஞ்சனமாலா அந்த ஏழுகடல் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தாள். 37*

*1131 கணவனைவிட்டுப் பிரிந்ததால் வாடி வதங்கியிருந்த காஞ்சனமாலையின் உருவம் கிழத்தன்மையினால் முக்கி முனகி ஸ்நானம் செய்தது. ஆனால் ஸ்நானம் செய்து எழுந்தவுடன் அந்த எளிய தேகம் தலையில் சந்திரக்கலை, முக்கண்களுடன் கலகல என்று சிரித்துக் கொண்டே எழுந்தது. 38*

த்வந்மாத்ருத்வாத் ஸித்தமேவாபவர்கம் மந்வாநாஹம் தேந ஹ்ருஷ்டா ந தாவத் ।
யாவத் தாதம் வீக்ஷமாணா தவேதிஸ்தாவம்ஸ்தாவம் ஸா பபாஷே குமாரீம் ॥ 35
லப்த்வா யோகம் லஜ்ஜமாநா விமாநாத் ஆப்லுத்யாராத் ஆகதேந ப்ரியேண ।
தத்தாநுஜ்ஞா தேவபாண்ட்யேந தேவீ ஸஸ்நௌ தீர்தே ஸப்தரத்நாகரே ஸா ॥ 36
தீநம் ரூபம் ப்ரேயஸா விப்ரயோகாத் தேவ்யா: ஸ்நாந்த்யாஸ்தத்ர த்ருஷ்டம் ஜநைர்யத் ।
உந்மஜந்த்யாஸ்தத் தத: பர்யணம்ஸீச் சந்த்ராபீடம் சாருஹாஸம் த்ரிணேத்ரம் ॥ 37
ஸா கச்சந்தீ ஶாஶ்வதம் தாம ஶம்போ: ஸார்தம் பத்யா ஸர்வஸௌபாக்யதாம ।
க்லேஶம் கந்யாவிப்ரயோகப்ரஸக்தம் கிஞ்சித்சித்தே தாரயந்தீதமூசே ॥ 38
அத்ய ஜ்ஞாதம் ப்ரஹ்ம பூர்ணம் யுவாமித்யத்யோத்ஸந்ந: பாஶவர்கோऽகிலோ மே ।
தூயேऽதாபி த்வர்தவிச்சிந்நமாஸீத் த்வத்ஸௌபாக்யாலோகபாக்யம் கிலேதி ॥ 39
ஶுஶ்ரூஷஸ்வ ப்ரேயஸ: பாதபத்மம் க்ஷாந்த்யா த்ருத்யா ப்ரேமவத்யா ச பக்த்யா ।
லப்த்வா புத்ரம் ராஜ்யபாரேऽபிஷிச்ய த்ரஷ்டாஸ்மி த்வாம் ஸ்வம் பதம் ப்ரத்யுபேதாம் ॥ 40
இத்யாதிஶ்ய ப்ரஸ்திதாயாம் ஜநந்யாம் ஸர்வோத்தீர்ணம் ஶாங்கரம் தாம திவ்யம் ।
ஆநந்தோத்தை:ஶோகஜைஶ்சாஶ்ருபூரைர்வக்ரம் தேவ்யா தூஷிதம் பூஷிதம் ச ॥ 41
தாபிஸ்தாபிஸ்தத்ப்ரஸங்கோசிதாபிர்மார்ஜன் வாக்பிர்மாநஸம் க்லேஶமஸ்யா: ।
வாரிக்ரீடாம் வாரிஜாக்ஷ்யாநயாஸௌ ஆநந்தாப்தௌ ஆவாசசார ப்ரவீர: ॥42

---

*1132* காஞ்சனமாலை சிவஸ்வரூபத்தில், பரமேச்வரனுடைய சாச்வதஸ்தானத்திற்கு கணவனுடன் எழுந்தருளி இருக்கிறாளே என்று ஆச்சரியப்படலாம். ஆனால் அவளுடைய உள்ளத்தில் அருமைத் திருமகளைப் பிரிந்து போகிறோம் என்கிற தாபம் தலைதூக்கியது. அவள் சொன்னாள், 39

*1133* இரண்டறக் கலந்த நீங்கள் பரப்ரஹ்மம்தான் என்று தெரிந்து விட்டது. உலகியல் பாசங்கள் எல்லாமே அறுந்து போய்விட்டன. இதில் ஸந்தேகம் இல்லை. ஆனாலும் உன் ஸௌபாக்யம் முழுமை பெருகின்ற பாக்யத்தை பாதியில் விட்டு விட்டோமே என்று தான் வருந்துகிறேன். 40

*1134* உன்னுடைய ப்ரேமியின் தாமரைத் திருவடிகளுக்கு நீ சுச்ரூஷை செய்ய வேண்டும். அதற்கு உனக்கு நிறையப் பொறுமையும், தளராத உறுதியும், ப்ரேமை மிகுந்த பக்தியும் திடமாக இருக்க வேண்டும். ஒரு குமரனைப் பெற்று,அவனுக்கு பட்டாபிஷேகம் செய்து வைப்பதை நான் பார்க்க வேண்டும். பிறகு எங்களுடன் கூடி விட வேண்டும். 41

*1135* இவ்வாறு அன்புடன் உபதேசித்து விட்டு, தாயார் புறப்பட்டாள். எல்லாவற்றையும் கடந்த சிவ ஸாயுஜ்ய பதவியை அடைந்தாள். இதைப் பார்த்துக் கொண்டே இருந்த தடாதகா தேவியின் கண்களில் ப்ரேமானந்த பாஷ்பங்களும், பிரிவினால் ஏற்பட்ட துயரத்தின் கண்ணீர்களும் மாறி மாறி முகத்தில் துளிர்ந்தன. 42

दीनान्दानैर्देवता यज्ञभागैः आर्तानार्तिच्छेदनैस्तत्तदर्हैः ।
जिज्ञासून् अप्यात्मविज्ञानदानैः देवो रक्षन्पालयामास पृथ्वीम् ॥ ४३

अन्तर्वत्नीं जातु कालेन पत्नीं दर्शं दर्शं पिप्रिये देवपाण्ड्यः ।
केकीवाम्भःसंभृतां मेघमालां माध्वीगर्भां पद्मिनीमप्यलीव ॥ ४४

यत्कातर्यं यौवनेनाक्ष्णि दत्तं यच्चानीतं दौहृदेनाथ तस्याः ।
प्रागल्भ्याय प्राभवत्सर्वमेतत् तत्संभूतेरद्भुतं मीनकेतोः ॥ ४५

पुष्टान्यङ्गान्यापुरस्याः कृशत्वं नित्यं कार्श्यं निर्जहौ मध्यदेशः ।
पर्यायेण हासवृद्ध्योः प्रवृत्तिः तत्राप्यासीदीदृशः कालभेदः ॥ ४६

अन्योन्येन स्पर्धमानावुरोजौ आस्तामस्या यौवनोपक्रमं यौ ।
स्पर्धां मुख्यामद्य तावन्वभूतां संघर्षेणान्योन्यम् आसादितेन ॥ ४७

शक्तिः ख्याता यावती या च तस्याः सर्वाव्येषाऽलम्भि गर्भेण नूनम् ।
नो चेदित्थं स्यात्कथंकारमस्याः स्नातुं पातुं स्पन्दितुं चाप्यशक्तिः ॥ ४८

केन्द्रे चन्द्रे देशिके चामराणां ॠक्षे रौद्रे रौद्रवृत्तिः परेषु ।
प्रादुर्भूतः पाण्ड्यवंशस्य भूत्यै तस्या गर्भात्तारकारिः कुमारः ॥ ४९

---

*1136 அந்த அந்த எண்ணத்திற்கு உசிதமாக ஸமாதான வார்த்தைகளால், தேவியின் மனதில் இருந்த துயரத்தைத் துடைத்தார் சிவபெருமான். பிறகு அவளுடன் சேர்ந்து ஆனந்தக்கடலில் ஜலக்ரீடை செய்தார். 43*

*1137 ஸுந்தரபாண்டியன் ஏழைகளுக்கு வாரி வாரி தானம் கொடுத்தார். தெய்வங்களை யாகங்களின் மூலம் பக்தியோடு ஆராதித்தார். மக்களின் கஷ்டங்களைப் போக்கினார். ஆத்மஞானத்தில் ஆர்வமுள்ளவர்களுக்கு ப்ரஹ்மஞானத்தை உபதேசித்தார். இவ்வாறு ராஜ்யத்தை பரிபாத்தார். 44*

## திருவிளையாடல் 11
## உக்ரபாண்டியன் திருஅவதாரப் படலம்

*1138 தடாதகா தேவி கர்பம் தரித்தாள். அவளை தினந்தோறும் பார்த்துப் பார்த்து ப்ரேமையில் மூழ்கினார் பாண்டிய தேவன். நீர் முட்டிய மேகங்களைக் கண்ட மயில்கள் போலவும், தேன் மிகுந்தத் தாமரைப் பொய்கையை வண்டுகள் போலவும் மொய்த்தார். அவளைச் சுற்றிச் சுற்றி வந்தார். 45*

*1139 பெண்கள் கருத்தரிக்கின்ற நேரத்தில் மன்மதன் சில லீலைகளைப் புரிவான். இளம் கர்பிணிப் பெண்கள் பரபரப்படைவார்கள். கண்கள் பட பட என்று மூடித் திறக்கும். அது ஒரு தனி அழகு. மசக்கையினால் மண்ணைத் திங்கலாம் என்கிற ஆசை வரும் இப்படியெல்லாம் வேடிக்கையான*

தீநான் தாநைர்தேவதா யஜ்ஞபாகை: ஆர்த்தாநார்திச்சேதநைஸ்தத்ததர்ஹை: ।
ஜிஜ்ஞாஸூன் அப்யாத்மவிஜ்ஞாநதாநைர் தேவோ ரக்ஷன் பாலயாமாஸ ப்ருத்வீம் ॥ 43

அந்தர்வத்நீம் ஜாது காலேந பத்நீம் தர்ஶம் தர்ஶம் பிப்ரியே தேவபாண்ட்ய: ।
கேகீவாம்பஸ்ஸம்ப்ருதாம் மேகமாலாம் மாத்வீகர்பாம் பத்மிநீமப்யளீவ ॥ 44

யத் காதர்யம் யௌவநேநாக்ஷ்ணி தத்தம் யச்சாநீதம் தௌஹ்ருதேநாத தஸ்யா: ।
ப்ராகல்ப்யாய ப்ராபவத் ஸர்வமேதத் தத்ஸம்பூதேரத்புதம் மீநகேதோ: ॥ 45

புஷ்டாந்யங்காந்யாபுரஸ்யா: க்ருஶத்வம் நித்யம் கார்ஶ்யம் நிர்ஜஹௌ மத்யதேஶ:।
பர்யாயேண ஹ்ராஸவ்ருத்த்யோ: ப்ரவ்ருத்திஸ்தத்ராப்யாஸீத்த்ருஶ: காலபேத: ॥ 46

அந்யோந்யேந ஸ்பர்தமாநாவுரோஜௌ ஆஸ்தாமஸ்யா யௌவநோபக்ரமம் யௌ
ஸ்பர்தாம் முக்யாமத்ய தாவன்வபூதாம் ஸங்கர்ஷேணாந்யோந்யம் ஆஸாதிதேந ॥ 47

ஶக்தி: க்யாதா யாவதீ யா ச தஸ்யா: ஸர்வாப்யேஷாலம்பி கர்பேண நூநம் ।
நோ சேதித்தம் ஸ்யாத் கதங்காரமஸ்யா: ஸ்நாதும் பாதும் ஸ்பந்திதும் சாப்யஶக்தி: ॥ 48

கேந்த்ரே சந்த்ரே தேஶிகே சாமராணாம் ருக்ஷே ரௌத்ர ரௌத்ரவ்ருத்தி: பரேஷு ।
ப்ராதுர்பூத: பாண்ட்யவம்ஶஸ்ய பூத்யை தஸ்யா கர்பாத் தாரகாரி: குமார: ॥ 49

---

சினுக்கங்கள் கர்பிணிக்கு அளித்து இன்னதுதான் என்று தெரியாத ஒரு அத்புத கிளுகிளுப்பை மன்மதன் வெளிப்படுத்துவான். இவைகள் அனைத்தும் தேவியினிடத்திலும் காணப்பட்டன. 46

1140.காலமாற்றத்தால் வஸ்துக்கள் வளரும் தேயும் என்பது உண்டு. அனால் கர்பிணிக்கு ஏற்படுகின்ற மாற்றம் விசித்திரமானது. சாதாரண காலத்தில் புஷ்டியாக இருக்கும் மேனியின் அங்கங்கள், கர்பகாலத்தில் இளைக்கின்றன. சாதாரணமாகவே ஒட்டி இளைத்திருக்கும் இடுப்பு கர்ப காலத்தில் பெருக்கிறது. உலகியல் அந்தந்தகாலத்தில், அப்படி ஏற்படுகின்ற மாற்றம் தேவிக்கும் ஏற்பட்டதோ! 47

1141.முலைகள் யௌவன ஆரம்பக்காலத்தில் போட்டி போட்டுக் கொண்டு வளரும், கர்பகாலத்தில் ஒன்றுடன் ஒன்று மிகவும் நெருங்குவதில் போட்டி போடும். இந்த முக்கியமான மாற்றம் இரண்டினாலும் தவிர்க்கமுடியாதவை. 48

1142 அந்த கர்பிணியிடம் இயல்பாகவே எவ்வளவு சக்தி இருந்ததோ அத்தனை சக்தியும் அவளுடைய கர்பம் ஸ்வீகரித்துக் கொண்டுவிட்டது. இப்படியாகாவிட்டால்,ஏன் அவள் ஸ்நானம் செய்வதற்கும், தீர்த்தம் சாப்பிடுவதற்கும், நகருவதற்கும் கூட இயலாமலிருக்க வேண்டும்? 49

1143 சந்திரன் கேந்திரத்திலும், குரு பகவான் ருத்திரனுடைய நக்ஷத்திரமான ஆதிரை நக்ஷத்திரத்தில் கூடி வருகிற சுபலக்னத்தில், பாண்டிய வம்சம்

आनेष्यन्ते यानि तेनात्मजेन स्वर्णान्यग्रे मेरुमूलादमू इषाम्।
चक्रे देवः कोशगेहेऽवकाशं भूदेवानां भूरिदानच्छलेन ॥ ५०

राज्ञां पश्यन्राज्यतन्त्रस्थितानां बालो दोषान्बाहुमुख्यप्रयुक्तान्।
साब्धिद्वीपां पालयिष्यन्धरित्रीं चक्रे देवः षण्मुखोप्यैकमुख्यम्॥ ५१

उग्रस्यर्क्षे जातमुग्रं प्रकृत्याप्युद्धन्तारं तेजसा च श्रिया च।
जानन्बालं शासनात्कुम्भयोनेः चक्रे नाम्नाप्युग्र इत्येव देवः॥ ५२

मीमांसाङ्गन्यायधर्मेतिहासैः सार्धं वेदाः स्वस्वशाखासमेताः।
प्राप्ते काले प्रत्यभूः पाण्ड्यसूनोः द्वारं कृत्वा देशिकस्योपदेशम् ॥ ५३

दैतेयारिर्येन खड्गे विनीतः चापे शिष्यो जामदग्न्यो यदीय।
साक्षादासीन्मेरुधन्वा स देवः शस्त्रास्त्राणां शासिता तस्य यूनः॥ ५४

कन्या ख्याता कान्तिमत्याख्ययाऽऽसीत् आस्वद्वंश्या सोमचूडस्य राज्ञः।
पित्रा दत्तां तामुपानीय देवः पाणौ तेन ग्राह्यामास यूना ॥ ५५

---

தழைத்து ஓங்குவதின் பொருட்டு, தாரகனை வதைத்த முருகப்பெருமான் தடாதகையின் கர்பத்திலிருந்து பிறந்தான். ருத்ர நக்ஷத்திரத்தில் பிறந்ததால் போலும் அது எதிரிகளிடத்தில் ரௌத்ரத்தைக் காட்டியது. 50

1144 சென்ற நூற்றாண்டில் கல்யாண வீடுகளில், பாணிக்ரஹணம் முடிந்தவுடன், கூடியிருக்கும் அனைவருக்கும் 'பூரி' கொடுப்பது என்கிற ஸம்ப்ரதாயம் ( பூரி தானம் என்றால் கொடுக்கப்படுகிறவனின் தகுதியை நினைக்காமல், எண்ணிக் கொடுக்காமல், அள்ளிக்கொடுப்பது) கன்யாதனம் செய்பவரும், பாணிக்ரஹணம் செய்து கொடுப்பவரும் சேர்ந்து போட்டி போட்டுக் கொண்டு கொடுப்பார்கள். ஸுந்தரபாண்டியன் தனக்கு திருக்குமரன் பிறந்ததற்காக, பூரி தானம் செய்தான். பூரி தானத்தின் நோக்கம் தானம் வழங்கி புகழை சேர்ப்பதற்கல்ல. பின் எதற்கு பிறந்த பிள்ளை மேரு பர்வதம் வரை விஜய யாத்திரை செய்து,தங்கக் கட்டிகளை ஏற்றி கொண்டுவரப் போகிறானே! அவற்றை பந்தோபஸ்தாக வைப்பதற்கு கஜானாவை இன்றே காலி செய்து வைத்துக் கொண்டான். 51

1145 ஆறுமுகன்தானே பிறந்திருக்கிறான். எங்கே ஆறுமுகங்கள்? தீக்ஷிதர் பதில் கூறுகிறார். ஆறு முகங்கள் இருந்தால் ஆறு கருத்துகள் வெளிப்படலாம். இப்பொழுது முருகனுக்கு ஒரே கருத்துதான். அதனால் ஒரு முகத்துடன் பிறந்தான்.அந்த ஒரு கருத்து என்ன? பாரத புண்ய பூமியில் எத்தனையோ அரசர்கள் அரசியல் தந்திரங்களினால், ஒருவரையொருவர் அடக்கி ஆண்டனர். முருகப் பெருமான், வீரபாஹு முதலிய துணைவர்களுடன் நேர்மையான

ஆநேஷ்யந்தே யாநி தேநாத்மஜேந ஸ்வர்ணாந்யக்ரே மேருமூலாதமீஷாம் ।
சக்ரே தேவ: கோஶகேஹேऽவகாஶம் பூதேவாநாம் பூரிதாநச்சலேந ।। 50
ராஜ்ஞாம் பஶ்யன் ராஜ்யதந்த்ரஸ்திதாநாம் பாலோ தோஷான் பாஹுமுக்யப்ரயுக்தான் ।
ஸாப்தித்வீபாம் பாலயிஷ்யன் தரித்ரீம் சக்ரே தேவ: ஷண்முகோऽப்யைகமுக்யம் ।। 51
உக்ரஸ்யர்க்ஷே ஜாதமுக்ரம் ப்ரக்ருத்யாபி உத்கந்தாரம் தேஜஸா ச ஶ்ரியா ச ।
ஜாநன் பாலம் ஶாஸநாத் கும்பயாநேஶ்சக்ரே நாம்நாப்யுக்ர இத்யேவ தேவ: ।। 52
மீமாம்ஸாங்கந்யாயதர்மேதிஹாஸை: ஸார்தம் வேதா: ஸ்வம்வஶாகாஸமேதா: ।
ப்ராப்தே காலே ப்ரத்யபு: பாண்ட்யஸூநோத்வாரம் க்ருத்வா தேஶிகஸ்யோபதேஶம் ।। 53
தைதேயாரிர்யேந கட்கே விநீதஶ்சாபே ஶிஷ்யோ ஜாமதக்ந்யோ யதீய: ।
ஸாக்ஷாதாஸீந்மேருதந்வா ஸ தேவ: ஶஸ்த்ராஸ்த்ராணாம் ஶாஸிதா தஸ்ய யூந: ।। 54
கந்யா க்யாதா காந்திமத்யாக்யயாऽऽஸீத் ஆஸ்வத்வம்ஶ்யா ஸோமகூடம்ய ராஜ்ஞ: ।
பித்ரா தத்தாம் தாமுபாநீய தேவ: பாணௌ தேந க்ராஹயாமாஸ யூநா ।। 55

---

*அதிகாரத்தில், கடல்கள், தீவுகள் உள்பட அனைத்து தேசங்களையும் ஒன்றுபடுத்தி காப்பாற்றுவோம் என்ற கருத்துதான்.* 52

*1146 உக்ரமான ஆதிரை நக்ஷத்திரத்தில் பிறந்த குழந்தை, பிறவி முதலே பொலிவும், தோள் வலிமையும் கொண்டு நல்ல களையுடன் விளங்கினான்.அவனைப் பார்த்து குருதேவரான அகத்தியர் 'இவனுக்கு உக்ரபாண்டியன் என்ற பெயர் பொருத்தமாக இருக்குமே'என்றார். அரசனும் அங்கீகரித்தான்.* 53

*1147 குருவின் உபதேசம் என்பது ஸம்ப்ரதாயம் தான். அதற்காக சாஸ்திரங்கள் காத்திருக்கையில், பூர்வமீமாம்ஸை,உத்திரமீமாம்ஸை, ந்யாயசாஸ்திரம், தர்மசாஸ்திரம், இதிஹாஸங்கள் எல்லாம் வேதங்களை முன்னிட்டுக் கொண்டு, அவைகளின் தனிப்பட்ட கிளைகளுடன், உக்கிர பண்டியன் உள்ளத்தில், உரிமையாகப் பிரகாசித்தன.* 54

*1148 உக்கிரனுடைய வித்யாப்யாஸ காலத்தில், ஒரு நாள் விஷ்ணுபகவான் உக்கிரனைக் கண்டார். உக்கிரன் மாமாவைப்பார்த்து 'மாமா! இடுப்பில் வாள் தொங்குகிறதே அதை வீசத் தெரியுமா உங்களுக்கு?' மாமனாகிய விஷ்ணு கூறினார்- 'அதை உபயோகிக்க ஸந்தர்பம் வரவில்லை. ராமாவதாரத்தில் ஒரே ஒரு தடவை கபந்தன் கைகளை வெட்டினேன் அவ்வளவு தான்.'*

*உக்கிரன் :-' கபந்தன் கைகளை நீட்டி, வெட்டுங்கள் என்றான். நீங்கள் வெட்டினீர்கள். எதிரி வாளை வீசினால் அவனை எதிர்த்து வாள் வீசத்தெரியுமா உங்களுக்கு? தெரியாதே.'*

शक्तिर्दण्डश्चक्रमित्यायुधानि त्रीणि प्रौढज्वालमालाकुलानि ।
दत्वा तस्मैदेवदेवोऽभ्यषिञ्चत् प्रह्वीभूतं पाण्ड्यराज्ये कुमारम् ॥ ५६
प्रागासीद्यो देवसेनापतिः स प्रापेदानीं पाण्ड्यसेनापतित्वम् ।
दैतेयः प्राक्तारको निर्जितोऽद्य त्वज्ञानाब्धेस्तारकस्तात एव ॥ ५७
पृथ्वीं सर्वां अर्पयित्वा कुमारे पृथ्वीं कीर्तिं केवलं गृह्णतः स्वाम् ।
सार्धं देव्या वत्सराणां सहस्राणि एवं षष्टिः षट् च तस्य व्यतीयुः ॥ ५८
इत्थं पाल्या भूमिरित्थं विजेया दृप्ता इत्थं वर्तितव्यं त्वयेति ।
आदिश्योग्रं दंपती मूललिङ्गे मीनाक्ष्यां च प्रापतुस्तौ प्रवेशम् ॥ ५९
तौ मीनाक्षीसुन्दरेशौ अत्मनाऽथच्छन्नौ किंचित्प्रत्यहं सेवमानः ।
चक्रे राज्यं नामयन्राजवंश्यान् उग्रंपश्यैः शासनैरुग्रपाण्ड्यः ॥ ६०
ईजे शम्भुं यच्छतेनाश्वमेधैः यच्चाभुङ्क्त स्वर्गभोगान्स भूमौ ।
तेनासूयां तत्र शक्रो बबन्ध प्रायेणायं पामराणां स्वभावः ॥ ६१
आक्रम्याम्भःसंप्लवै राजधानीं उन्मयादैरुग्रपाण्ड्यस्य राज्ञः ।
राष्ट्रं चास्य स्वीकुरुष्वेति शक्रो नेदीयांसं दक्षिणाब्धिं न्ययुङ्क्त ॥ ६२

'நான் சுற்றுத்தருகிறேன். வாருங்கள்' என்றான் உக்ரபாண்டியன். பரசுராமருக்கு வில் வித்தை கற்றுக் கொடுத்தான். ஆனால் சஸ்திரங்கள், அஸ்திரங்கள் முதலியவற்றை, மேருவையே வில்லாக்கிக் கொண்ட பரமேச்வரன் உக்ரனுக்குக் கற்பித்தார். 55

1149 சூரிய குலத்தில் உதித்த ஸோமசூடன் என்ற அரசனுக்கு காந்திமதி என்ற ஒரு பெண் இருந்தாள் அவள் மிகவும் அழகானவள். தந்தை அவளை அழைத்து வந்து, அந்த ஸோமசூடன் கரத்தாலேயே தாரை வார்த்தார். குமாரனைப் பாணிக்ரஹணம் செய்யச்சொன்னார். 56

## திருவிளையாடல் 12

## உக்கிரபாண்டியனுக்கு வேல். வளை செண்டு கொடுத்த படலம்

1150 சக்தி, தண்டம் சக்ரம் என்ற மூன்று ஆயுதங்களைக் கொடுத்து, அவைகளை உபயோகிக்கும் விதத்தையும் மகனுக் கற்றுக்கொடுத்தார். பொறி பறக்கும் தீப்பிழம்புகளாக விளங்கிய அந்த ஆயுதங்களைப் பெற்று வணங்கிய உக்கிரனுக்கு, பாண்டிய நாட்டு அரசனாகப் பட்டாபிஷேகம் செய்து வைத்தார். 57

1151 முருகன் முன்பு தேவஸேனைகளுக்கு அதிபனாக விளங்கினார். தற்போது பாண்டிய ஸேனாதிபதி அதிபன். முன்பு எவர் தாரகஸூரனை ஜயித்தாரோ, அவரே இந்தப் பிறவியில் அக்ஞானத்தை விலக்கும் தந்தையாகவும், அக்ஞானக் கடலைத் தாண்டுகின்றவராகவும் ( தாரக ) இருக்கிறார்.

ஶக்திர்தண்டஶ்சக்ரமித்யாயுதாநி த்ரீணி ப்ரௌடஜ்வாலமாலாகுலாநி ।
தத்வா தஸ்மை தேவதேவோऽப்யஷிஞ்சத் ப்ரஹ்வீபூதம் பாண்ட்யராஜ்யே குமாரம் ॥ 56
ப்ராகாஸீத்யோ தேவஸேநாபதி: ஸ ப்ராபதாநீம் பாண்ட்யஸேநாபதித்வம் ।
தைதேய: ப்ராக் தாரகோ நிர்ஜிதோऽத்ய த்வஜ்ஞாநாப்தேஸ்தாரகஸ்தாத ஏவ ॥ 57
ப்ருத்வீம் ஸர்வாமர்பயித்வா குமாரே ப்ருத்வீம் கீர்த்திம் கேவலம் க்ருஹ்ணத: ஸ்வாம் ।
ஸார்தம் தேவ்யா வத்ஸராணாம் ஸஹஸ்ராண்யேவம் ஷஷ்டி: ஷட் ச தஸ்ய வ்யதீயு: ॥ 58
இத்தம் பால்யா பூமிரித்தம் விஜேயா த்ருப்தா இத்தம் வர்திதவ்யம் த்வயேதி ।
ஆதிஶ்யோக்ரம் தம்பதீ மூலலிங்கே மீநாக்ஷ்யாம் ச ப்ராபதுஸ்தௌ ப்ரவேஶம் ॥ 59
தௌ மீநாக்ஷீஸுந்தரேஶாத்மநாதச்சந்நௌ கிஞ்சித் ப்ரத்யஹம் ஸேவமாந: ।
சக்ரே ராஜ்யம் நாமயன் ராஜவம்ஶ்யாநுக்ரம்பஶ்யை: ஶாஸநைருக்ரபாண்ட்ய: ॥ 60
ஈஜே ஶம்பும் யச்சதேநாஶ்வமேதைர்யச்சாபுங்க்த ஸ்வர்கபாகான் ஸ பூமௌ ।
தேநாஸூயாம் தத்ர ஶக்ரோ பபந்த ப்ராயேணாயம் பாமராணாம் ஸ்வபாவ: ॥ 61
ஆக்ரம்யாம்பஸ்ஸம்ப்லவை ராஜதாநீம் உந்மர்யாதை: உக்ரபாண்ட்யஸ்ய ராஜ்ஞ: ।
ராஷ்ட்ரம் சாஸ்ய ஸ்வீகுருஷ்வேதி ஶக்ரோ நேதீயாம்ஸம் தக்ஷிணாப்திம் ந்யயுக்த ॥ 62

---

*பூமியனைத்தையும் தனயனிடம் அர்ப்பணம் செய்து விட்டு மிகுந்த ( ப்ருத்வீம்) கீர்த்தியைப் பெற்ற அரசன், தேவியுடன் 66000 ஆண்டுகள் வாழ்ந்தான்.* 58

*1153 நாட்டை இவ்வாறு ஆளவேண்டும். பூமியை இவ்வாறு புகழினால் வெல்ல வேண்டும். கர்வம் பிடித்தவர்களை அடக்கி வைக்க வேண்டிய இடத்தில் வைக்க வேண்டும் என்று புத்திர தம்பதிகளுக்கு உபதேசம் செய்து விட்டு, ஸுந்தரபாண்டியனும் தடாதகா தேவியும் ஆலயத்திலுள்ள மூல லிங்கத்திலும், தேவி மூர்த்தியிலும் உறைந்து ஐக்யமானார்கள்.* 59

*1154 இவ்வாறு மீனாதேவியிடமும், ஸுந்தரேச்வரரிடமும் ஒன்றிவிட்ட தன் பெற்றோர்களை அன்றாடம் ஸேவித்து, ராஜவம்சத்தைச் சேர்ந்தவர்களை மகிழ்வித்து, அத்துமீறி நடந்து கொண்டவர்களை, பார்வைக்கு கடுமை போல் இருக்கும் ஆணைகளால் பணிய வைத்துக்கொண்டு, உக்ரபாண்டியன் ராஜ்யத்தை ஆண்டு வந்தான்.* 60

## திருவிளையாடால் 13

## கடல்சுவற வேல்விட்ட படலம்

*1155 உக்ரபாண்டியன்முறைப்படி நூறு அச்வமேத யாகங்களைச் செய்தான். அதன் பயனாக பூமியிலேயே ஸ்வர்கபோகங்களை அனுபவித்தான்.அதனால் இந்திரனுக்கு கிலி பிடித்து விட்டது. (இந்த புவி அரசன் நூறு அச்வமேத யாகங்களைச் செய்து விட்டானே நம் ஸுவர்கத்தைப் பிடுங்கி விடுவானோ என்ற கிலி இந்திரனுக்கு) அஸூயைப்பட்டான். விவேகமில்லாத ஸாதாரண மக்களுக்கு இப்படித்தான் புத்தி போகும் இது இயற்கை.* 61

अर्धे रात्रेरप्रसक्ते कथंचिद्वर्षे वाते दुर्दिने वा क्षणेन ।
संनह्याद्रिः सर्वतो वीचिसंघैः पारावारः स्वात्पदादुत्चचाल ॥ ६३

एकैकोर्मिस्पन्दमात्रादपि क्ष्मां क्रोशं क्रोशद्वन्द्वमप्यावृणानः ।
भीमैर्घोषैर्भीषयन्नम्बुराशिः ग्रामं ग्रामं मज्जयन्निर्जगाम ॥ ६४

उच्चैरुच्चैरुत्पतन्तः पतन्तो घ्नन्तो जन्तून् गण्डशैलान् क्षिपन्तः ।
आवृण्वानाः सैकतैरद्रिकूटान् अभ्यक्रामन्नूर्मयो वारिराशेः ॥ ६५

वल्गन्तोऽग्रे दुर्ग्रहा वीचिकानां जातोत्साहा जन्तवः सागरीयाः ।
व्यादायास्यं व्याघ्रसिंहद्विपादीन् वन्यान्सत्त्वान्लीलयैवाग्रहीषुः ॥ ६६

इत्थं पुर्या योजने योजनार्धे यावत्सिन्धुर्नोजिहीते निशीथे ।
तावत्स्वप्ने बोधितस्तां प्रवृत्तिं सूक्त्या शंभोर्जागरामास देवः ॥ ६७

आरुह्य द्रागभ्रमातङ्गकल्पं क्रुद्धो देवः कुञ्जरं किंचिदुच्चैः ।
पाणौ कुर्वन्शक्तिमीशेन दत्तां पाण्ड्यः पारावारमभ्युज्जगाम ॥ ६८

शैलेनेवोत्सर्पता कज्जलानां व्योम्नेवाधो धावता संनिपत्य ।
सोऽभूत्तेन स्रोतसा वारिराशेः हृष्टो देवः सद्य एवाथ रुष्टः ॥ ६९

नायं कालः कौतुकं कर्तुमस्मिन् नश्यत्स्वेवं प्राणिषूच्चावचेषु ।
इत्यालोच्य प्रज्वलन्प्रज्वलन्तीं पाण्ड्यः शक्तिं पातयामास सिन्धौ ॥ ७०

---

*1156 ஓயாது மழை பெய்யச் செய்தான். நாடெங்கும் வெள்ளம் பெருகியது. தென் கடலரசனைக் கூப்பிட்டு 'நீ உக்ரபாண்டியனின் பாண்டிய தேசத்தை வெள்ளம் எடுத்து மூழ்கிவிடும்படி செய். பாண்டிய அரசையே நீ எடுத்துக்கொள்' என்று தூண்டினான். இவ்வாறு வரம்பு மீறிய செயல்களால் பாண்டிய நாட்டிற்கு ஊறு விளைவித்தான். 62*

*1157 எதிர்பாராதவிதமாக நள்ளிரவில் மழை கொட்டுகிறது. பேய் காற்று வீசுகிறது, என்றுமே கரை மீறாத கடல் எங்கும் பேரலைகளை பரப்பி கொந்தளித்தது. 63*

*1158 ஒவ்வொரு அலையும் பனை மரம் உயரம் எழும்பி இருபது மைல் தூரம் பரவியது. கிடு கிடு என்று பயங்கரமான ஓசைகளினால் பயமுறுத்திக் கொண்டு கிராமம் கிராமமாக மூழ்கடித்துக் கொண்டு மேலும் பரவியது. 64*

*1159 கடல் அலைகள், ஒன்று மேல் ஒன்று எழும்பி, பொதேரென்று விழுந்து சீறி, கடல் ஜந்துக்களை கொன்றுக் கொண்டும், சிறு குன்றுகளை உடைத்து, மணல்களினால் மலைகளை மறைத்துக் கொண்டும் ஆக்ரமித்தன. (கண்களால் பார்க்காமலேயே தீக்ஷிதர் கற்பனைவளத்திலே காட்சிகளைக் கொண்டு நிறுத்துகிறார்) 65*

அர்தே ராத்ரேரப்ரஸக்தே கதஞ்சித் வர்ஷே வாதே துர்திநே வா க்ஷணேந ।
ஸந்நஹ்யத்பி: ஸர்வதோ வீசிஸங்கை: பாராவார: ஸ்வாத் பதாத் உச்சசால ॥ 63

ஏகைகோர்மிஸ்பந்தமாத்ராதபி க்ஷ்மாம் க்ரோஶம் க்ரோஶத்வந்த்வமப்யாவ்ருணாந: ।
कटु भेकगणेन चुक्रुशे कलकेकामुखरेषु केकिषु ।
कवयः कवयन्तु तावता कविपाशः किमुपैति मूकताम् ॥ १४

---

*1282 தன்னுடைய பாணங்களுக்கு இலக்கான பரமேச்வரனிடம் அபசாரப்பட்டான் மன்மதன். ஒரே ஒரு தடவைதான் நாணை இழுத்து பாணத்தைத் தொடுத்திருக்கிறான். அதனால் வந்த வினை. பிறகு வில்லில் நாணேற்றுவதையே மறந்து விட்டான். இனி பயிற்சி மேற்கொண்டால் தான் பாணம் தொடுக்கமுடியுமோ என்று கவலைப்பட்டான்.* 8

*1283 இவ்வாறு மன்மதன் தொழிலிலிருந்து ஓய்ந்து உட்கார்ந்து விட்டான். சில சமயம் எழுந்திருப்பான். ஆனால் பாதியிலே உட்கார்ந்து விடுவான். இப்படி நாம் சளைக்கக் கூடாது என்ற முடிவுடன் எழுந்து மேற்கூறிய அத்புதங்களை ஆற்றினான்.* 9

*1284 ஆனால் விதி வேறுவிதமாக விளையாடிற்று. மன்மதன் தன் தொழிலை முறை மீறி நடத்தினான். இயற்கை அவனுக்கு ஒத்துழைக்க மறுத்தது. மேகநீர்களை காற்று கொண்டுபோய் விட்டது. ஆகாசத்தில் தாழம்பூ மணம் வீசியது.* 10

அபராத்தஶரம் ஶரவ்யத: ஸக்ருதாகர்ஷணஸந்நதோர்லதம் ।
மதநஸ்ய சிரோஜ்ஜிதம் தநு: பரிசேதவ்யமிவாபவத் புந: ॥ 8

யதுபைக்ஷி யதர்ததர்ஶிதம் யதபி ப்ராகதவாஸ்தி விஸ்ம்ருதம் ।
அநுதப்த இவாதுநா வ்யதாத் அகிலம் கர்ம ததத்புதம் ஸ்மர: ॥ 9

விதிரப்ரஜலை: புரோऽநிலைர்வியதா கைதககர்பவர்த்திநா ।
தடிதா நவநீபபாம்ஸுநா வ்யஸ்ருஜத் தர்மஹதம் புந: ஸ்மரம் ॥ 10

விதுதம் பவநேந சாதகா: பதிதம் சஞ்சுபுடே கதஞ்சந ।
க்ஷுதிதா: க்ஷுதிதே புர: ஶிஶௌ நவமம்போ ந ததுர் ந வா பபு: ॥ 11

சலிதஷு ஸிதச்சதேஷு யை: ஸரஸி ஸ்தாதுமசிந்தி ஷட்பதை: ।
விரதாப்ஜதயா ந தை: ஸ்திதம் விபதந்யவ்யஸநார்திநாம் புர: ॥ 12

கமலம் ந சகாஸ்தி கைதகம் கலஹம்ஸா நஹி ஸந்தி கோகிந: ।
ந ஶஶீ நநு சாஸ்தி மந்மத:கிமபாவாத் இஹ கிம் விஹீயதே ॥ 13

கடு பேககணேந சுக்ருஶே கலகேகாமுகரேஷு கேகிஷு ।
கவய: கவயந்து தாவதா கவிபாஶ: கிமுபைதி மூகதாம் ॥ 14

---

1285 இந்த கொந்தளிப்பின் இடையே, சாதகப் பறவைகள் மேகத்திலிருந்து காற்றினால் சிதறப்பட்டு விழுந்த நீரை மூக்கு நுனியிலே வாங்கி, அவைகளே பசியுடன் இருந்தாலும் கூடியிருக்கும் குஞ்சுகளுக்கு ஊட்டுகின்றனவோ? அந்த புது நீரை அந்தக் குஞ்சுகள் குடித்தனவோ என்னவோ? 11

1286 தாமரையில் தேன் குடிக்கும் வண்டுகள், தாமரை இதழ்கள் உதிர்ந்தவுடன், அந்தப் பொய்கையில் தங்கியிருப்பதைப் பற்றி சிந்தித்தன. தாமரை முளைப்பது நின்று விட்டபடியால், அங்கு தங்கினால் பிறருக்கு கேடு நினைப்பவன் என்ற அவதூறு வரத்தான் வரும். 12

1287 தாமரை பூக்கவில்லை. தாழம்பூ விரியவில்லை. மயில்களையே காணோம். சந்திரனைக் காணோம். மன்மதன் இருக்கிறானே! எது இல்லை என்பதற்காக எது நின்று விடுகிறது? 13

1288 ஆத்திரம் அடைந்த தவளைகள் 'கார், கார்' என்று முறை வைத்தன. மயில்களும் இனிமையாக 'கேகா, கேகா ' என்று கூவுகின்றன. தங்களைக் கவிகள் என்று சொல்லிக் கொண்டு சிலர் கவிதை புனைகிறார்கள். அதற்காக சிறந்த கவிகள் கவிதை புனைவதை நிறுத்தி விடுவார்களா? 14

सरसी चिरकालशीलनात् अजहद्भिर्भ्रमरैरदृश्यत।
क्षुभितोद्धृतगर्भकर्दमच्छुरितेवम् अबुजिनीनिमज्जनात्॥ १५

अवधूय दुकूलपल्लवान् अलकान् अप्यभिमृश्य विश्लथान्।
तरुणैरिव मेघमारुतैः तरुणीनां ममृजे रतिश्रमः ॥ १६

चिरसंभृतचातकोदरज्वलनोज्झा सनलब्धजन्मभिः।
विततैरिव धूममण्डलैः वियदापूरितमम्बुदैर्नवैः॥ १७

निबिडे चरमाङ्गमण्डले निपतन्ती जलदस्य चन्द्रिका।
स्थगिता चिरमक्षरत्क्षितौ कणशः किं करकोपलात्मना॥ १८

अतिथेरपि भाग्यतो भवति अभिवृद्धिर्भवने कुटुम्भिनाम्।
कलहंसकुले विनिर्गते कथमासन् कमलाकराश्रियः॥ १९

विरमत्कमलोत्पलं सरो व्यरुचत्पुष्पितकैतकैस्तटैः।
गजवाजिसमाकुलं बहिः भवनं राज्ञ इवान्ततोऽधनम् ॥ २०

कमलैर्विरतं कलानिधिः कलहंसाश्च न गोचरे दृशाम्।
शनिरास्त ककारमस्तके समये तत्र कलापिनं विना ॥ २१

महिषा जहृषुर्मदागमे महिषैस्तुल्यधियश्च कर्षकाः।
अभवन्तु न हंसगृह्य इति अयशोनैल्यमिवावहन्घनाः॥ २२

बभुरुल्लसितास्तटिल्लता जगदन्धंकरणीषुरात्रिषु
पथि चारयतोऽभिसारिकाः प्रसवेषोः करदीपिका इव॥ २३

---

*1289* வண்டுகள் ஒன்றும் கிடைக்காமல், இறுகிவிட்டாலும், சேற்றைத் துழாவுகின்றன. தாமரைகள் மலர்வதால் தெளிவான நீருடன் கல கல வென்றிருந்த பொய்கை கலங்கி இருந்தது. இந்த வண்டுகள் தாமரைக் கிழங்குகளை குத்தி குதரும் போது சேராகக் கலங்கிய நீரிலிருந்து வெளியேற முடியாமல் மூழ்கின. அதனால் பொய்கை கலங்கி இருந்தது. *15*

*1290* மேகங்களிலிருந்து கிளம்பிய காற்று, இளம் பெண்களின் பட்டாடைகளையும், கலைந்த கூந்தல்களையும் சரி செய்து, காதலனைப் போல ஸுரத ச்ரமத்தை நீக்கின. *16*

*1291* சாதகங்கள் வெகுநாட்களாகப் பட்டினி. அதனால் அவற்றின் வயிறுகள் கொதிக்கின்றன. அவை உஷ்ணப் பெருமூச்சு விடுகின்றன. அந்த நெருப்பு அணைந்து, அதன் மூலம் ஏற்பட்ட புகைக் குவியலினால் புதிதாக மேகமண்டலம் விரிந்தது போலும்!! *17*

*1292* மேகங்களின் அடிபாகங்களில் பரவும் நிலவு தடைபெற்று நின்று, வரிசையாக பூமியில் ஆலங்கட்டி மழைச்சொட்டுகள் போல் சொட்டின!*18*

ஸரஸீ சிரகாலஶீலநாத் அஜத்பிர்ப்ரமரை: அத்ருஶ்யத ।
க்ஷுபிதோத்கதகர்பகர்தமச்சுரிதேவம் அம்புஜிநீநிமஜ்ஜநாந் ।। 15

அவதூய துகூலபல்லவான் அலகான் அப்யவம்ருஶ்ய விஶ்லதான் ।
தருணைரிவ மேகமாருதைஸ்தருணீநாம் மம்ருஜே ரதிஶ்ரம: ।। 16

சிரஸம்ப்ருதசாதகோதரஜ்வலநோஜ்ஜாஸந லப்தஜந்மாபி: ।
விததைரிவ தூமமண்டலைர் வியதாபூரிதம் அம்புதைர்நவை: ।। 17

நிபிடே சரமாங்கமண்டலே நிபதந்தீ ஜலதஸ்ய சந்த்ரிகா ।
ஸ்தகிதா சிரமக்ஷரத் க்ஷிதௌ கணஶ: கிம் கரகோபலாத்மநா ।। 18

அதிதேரபி பாக்யதோ பவத்யபிவ்ருத்திர்பவநே குடும்பிநாம் ।
கலஹம்ஸகுலே விநிர்கதே கதமாஸன் கமலாகராஶ்ரிய: ।। 19

விரமத்கமலோத்பலம் ஸரோ வ்யருசத் புஷ்பிதகைதகைஸ்தடை: ।
கஜவாஜிஸமாகுலம் பஹிர்பவநம் ராஜ்ஞ இவாந்ததோऽதநம் ।। 20

கமலைர்விரதம் கலாநிதி: கலஹம்ஸாஶ்ச ந கோசரே த்ருஶாம் ।
ஶநிராஸ்த ககாரமஸ்தகே ஸமயே தத்ர கலாபிநம் விநா ।। 21

மஹிஷா ஜஹ்ருஷுர்மதாகமே மஹிஷைஸ்துல்யதியஶ்ச கர்ஷகா: ।
அபவந்து ந ஹம்ஸக்ருஹ்ய இத்யயஶோநைல்யமிவாவஹத் கந: ।। 22

பபுருல்லஸிதாஸ்தடில்லதா ஜகதந்தகரணீஷு ராத்ரிஷு ।
பதி சாரயதோऽபிஸாரிகா: ப்ரஸவேஷோ: கரதீபிகா இவ ।। 23

---

*1293* தாமரைப் பொய்கை வற்றிபோய் விட்டதினால், அன்னபக்ஷிகளின் கூட்டம் அகன்று விட்டது. ஓடை வெறிச்சென்றிருந்தது. குடும்பிகளுக்குக்கூட பாக்கியம் இருந்தால் தான் விருந்தினரை உபசரிக்க ஸந்தர்ப்பம் கிடைக்கும்.19

*1294* பொய்கைகளில் தாமரை,ஆம்பல் மலர்கள் ஓய்ந்து விட்டன. ஆனால் கரையில் தாழம்பூ புதர்கள் மண்ட ஆரம்பித்தன. அரச அரண்மனை வாசலில் யானைகள், குதிரைகள் நிற்கின்றன. ஆனால் உள்ளே கஜானாவில் ஒன்றுமில்லை. 20

*1295* 'க' காரத்தில் ஆரம்பிக்கும் சொற்களுடைய பொருளுக்கு சனி பிடித்து விட்டது. கமலங்கள் ஓய்ந்து விட்டன. கலாநிதியான சந்திரன், கலஹம்ஸங்கள் அனைத்தையுமே காணோம்; தோகை விரித்தாடும் மயில்களைத் தவிர.21

*1296* எந்த மேகங்களை பார்த்தால் எருமைகளுக்கு கொண்டாட்டமோ, எருமைகளின் மதி நலம் உடைய உழவர்கள் மகிழ்வார்களோ, அதே மேகங்கள் ஹம்ஸ பக்ஷிகளுக்கு துன்பத்தைக் கொடுப்பதால் தங்களுடைய அபகீர்த்தியைத் தெரிவிப்பது போல கருமையாகக் காணப்பட்டது போலும்!22

*1297* உலகத்தையே குருடாக்குகின்ற கும்மிருட்டில் சில மின்னல்கள், காதலனைத் தேடிச் செல்கின்ற அபிஸாரிகா நாயகிகளுக்கு, மன்மதன் பிடித்த கை தீவட்டிகளாக விளங்கின. 23

परिलुप्तरवीन्दुतारके समये संतमसावृते सदा ।
द्युनिशोरुपदेशदेशिका युवतीनां गृहचक्रवाकिकाः ॥ २४

स्तनिते स्तनिते पयोमुचां कलकेकामुखराः कलापिनीः ।
अभिलक्ष्य भृशं ललज्जिरे रभसालिङ्गितवल्लभाः स्त्रियः ॥ २५

स्थगितार्ककरैः पयोधरैः परिलुप्तप्रसवासु वल्लिषु ।
पवनापहृताः पयःकणा मदनस्यास्त्रपदेऽभिषेचिताः ॥ २६

नवतोयनिपातहर्षितां नगरीं तामवलोक्य कुप्यतः ।
अथ ते वरुणस्य शासनात् अतिमात्रं ववृषुः पयोमुचः ॥ २७

परमां सखितां प्रचेतसः प्रतिपेदेऽग्निसखः समीरणः ।
समयानुगुणैव शत्रुता सखिता वा त्रिदिवौकसामपि ॥ २८

परिपाटितकाननद्रुमाः परिकृष्टेभगवाश्वमानवाः ।
सरितः परितो जजृम्भिरे विकटावर्ततरङ्गसंकुलाः ॥ २९

गणशः पशुपक्षिमानवान् गणशो ग्रामपुराश्रमालयान् ।
पवमानसखाः पयोमुचः पणबन्धादिव पर्यपातयन् ॥ ३०

न दिशो विदिशो न पादपा न समुद्राः सरितो न पर्वताः ।
न दिवा न निशा न चान्ततो जगदप्यैक्षत मध्यमं तदा ॥ ३१

---

*1298* ஸூர்ய சந்திர நக்ஷத்திரங்கள், தொடர் மழையினால் மறைந்துவிட்ட கும்மிருட்டில், இது பகலா, இரவா என்று காட்டிக் கொடுக்கின்றன. வீடுகளில் வளர்கின்ற சகோரப் பறவைகள், இரவில் அவை பக்கத்தில் அமர்ந்திருக்கிற பேடையையோ, சேவலையோ காணோம் என்று தவிக்கும். பகலில் அவை கூடும். சகோரம் கூடினால் பகல். பிரிந்தால் இரவு என்று புரிந்து கொண்டார்கள். 24

*1299* இடிகள் இடிக்கும் போதெல்லாம் 'கேகா கேகா' என்று கூவிக்கொண்டிருக்கும் பெண்மயில்களைப் பார்த்து, வேகமாக ஓடிவந்த ஆண்களால் தழுதழுவிக் கொள்ளப்பட்ட பெண்கள் வெட்கமடைந்தனர். 25

*1300* மேகங்கள் ஸூரியகிரணங்களைத் தடுக்கின்றன. மலர்க் கொடிகளில் பூக்கள் பூக்கவில்லை. இவை நுனியில் ஒட்டிக் கொண்டிருந்த நீர்த்துளிகளை காற்று உதறியது. தற்போது அந்தத் துளிகள் மன்மதனுடைய அம்புகளாக உயர்வு பெற்றன. 26

*1301* நகரத்தில் ஆங்காங்கே புது மழைத்துளிகள் விழுந்தன. இதனால் நகரமக்கள் மகிழ்வதைக்கண்டு கோபம் கொண்ட வருணன் மேகங்களை ஏவினான். பெருமழை பெய்ய ஆரம்பித்தது. 27

பரிலுப்தரவீந்துதாரகே ஸமயே ஸந்தமஸாவ்ருதே ஸதா ।
த்யுநிஶோருபதேஶதேஶிகா யுவதீநாம் க்ருஹசக்ரவாகிகா: ॥ 24

ஸ்தநிதே ஸ்தநிதே பயோமுசாம் கலகேகாமுகரா: கலாபிநீ: ।
அபிலக்ஷ்ய ப்ருஶம் லலஜ்ஜிரே ரபஸாலிங்கிதவல்லபா: ஸ்த்ரிய: ॥ 25

ஸ்தகிதார்க்ககரை: பயோதரை: பரிலுப்தப்ரஸவாஸு வல்லிஷு ।
பவநாபஹ்ருதா: பய:கணா மதநஸ்யாஸ்த்ரபதே<sup>ऽ</sup>பிஷேசிதா: ॥ 26

நவதோயநிபாதஹர்ஷிதாம் நகரீம் தாமவலோக்ய குப்யத: ।
அத தே வருணஸ்ய ஶோஸநாத் அதிமாத்ரம் வவ்ருஷு: பயோமுச: ॥ 27

பரமாம் ஸகிதாம் ப்ரசேதஸ: ப்ரதிபேதே<sup>ऽ</sup>க்நிஸக: ஸமீரண: ।
ஸமயாநுகுணைவ ஶத்ருதா ஸகிதா வா த்ரிதிவௌகஸாமபி ॥ 28

பரிபாடிதகாநநத்ருமா: பரிக்ருஷ்டேபகவாஶ்வமாநவா: ।
ஸரித: பரிதோ ஜஜ்ரும்பிரே விகடாவர்த்ததரங்கஸங்குலா: ॥ 29

கணஶ: பஶுபக்ஷிமாநவான் கணஶோ க்ராமபுராஶ்ரமாலயான் ।
பவமாநஸகா: பயோமுச: பணபந்தாதிவ பர்யபாதயன் ॥ 30

ந திஶோ விதிஶோ ந பாதபா ந ஸமுத்ரா: ஸரிதோ ந பர்வதா: ।
ந திவா ந நிஶோ ந சாந்ததோ ஜகதப்யைக்ஷத மத்யமம் ததா ॥ 31

---

*1302* பூலோகத்தில் மட்டும்தான் திடீர் நட்பும் திடீர் பகையும் ஏற்படும் என்று நினைக்க வேண்டாம்! தேவைக்குத் தக்கபடி தேவலோகத்திலும் இது ஸம்பவமே. அக்னி தேவனின் தோழனாகிய வாயு திடீரென வருணனுக்குத் தோழனானான். 28

*1303* மேகங்களும் காற்றும் சேர்ந்ததால், உயர்ந்து வளர்ந்திருந்த காட்டுமரங்கள் ஒடிந்து விழுந்தன. ஆறுகளில் வெள்ளம் பெருகி யானைகள், குதிரைகள், மாடுகள், மனிதர்களை எல்லாம் அடித்துச் சென்றது. பேரலைமயமாக நதிகள் சுழித்துக் குழி தோண்டின. 29

*1304* ஒன்றுக்கொன்று சவால் விட்டுக் கொண்டு,மேகங்களும், காற்றுகளும் கூட்டம் கூட்டமாக, பசுக்களையும், பறவைகளையும் மனிதர்களையும். கிராமங்களையும். நகரங்களையும் ஆச்ரமங்களையும், கோவில்களையும் வீழ்த்தின. 30

*1305* திசைகள், மூலதிசைகள், மரங்கள், கடல்கள், நதிகள், பர்வதங்கள், பகல், இரவு-இவை என்ன? பூவுலகமே நடு எது, ஓரம் எது என்று தெரியவில்லை. 31

अथ पाण्ड्यसुते समं जनैः शरणं जग्मुषि चन्द्रशेखरः।
स्वकपर्दभवैः पयोधरैः स्थगयामास स वर्षतो घनान् ॥ ३२

पटमण्डपवव्द्यवस्थिताः परितस्ते मधुरां पयोमुचः
रुरुधुः भुवि वारिसंप्लवं जगृहुश्चेपरि निष्पतत्पयः ॥ ३३

पटगर्भगता इव प्रजाः कियदप्यश्रुतवर्षनिस्वनाः ॥
व्यजनेरुपवीज्य लेभिरे नगरस्था मरुतं कथंचन ॥ ३४

अपि यत्प्रलयेषु वर्षितुं समरक्षन्सलिलं वलाहकाः।
अभिवृष्यतदप्यशेषतो गृदधूमा इव खे चकाशिरे ॥ ३५

प्रथमं पतितैः पयोभरैः परमम्भोधिरपूरि शोषितः।
चरमं पतितं तु तत्पयो जगृहुः शैवकपर्दवारिदाः ॥ ३६

जलदाः जलदैर्निराकृताः प्रतियान्तः परितो यथागतम्।
वरुणेन न संबभाषिरे वरुणस्तेरपि लज्जया मिथः ॥ ३७

परितो विनिवेशितान्घनान् प्रतिसंहृत्य निजान्महेश्वरः।
परिदर्शयति स्म नागरैः प्रकृतिस्थं निखिलं महीतलम् ॥ ३८

चतसृष्वपि दिक्षु कूटवत् जलदान्यस्य ररक्ष यत्पुरीम्।
तदुपक्रममभ्ययोजयत् स चतुष्कूटसमाख्ययापि ताम् ॥ ३९

*1306 பாண்டிய குமரன் மக்களோடு கூட சந்திரசேகரனை சரணம் அடைந்தான். அவர் தமது சடையிலிருந்து சில மேகங்களை உதரினார். அவை மற்ற மேகங்களைப் பொழியவிடாமல் தடுத்தன. 32*

*1307 சிவனுடைய சடையிலிருந்து புறப்பட்ட மேகங்கள், பெரிய படுதாக் கூடாரம் போல் மதுரை நகரம் முழுவதையும் மூடிவிட்டது. பூமியிலும் வருகின்ற ஜல ப்ரவாஹத்தைத் தேக்கிவிட்டது. மேலே பொழிந்த மழையையும் தானே வாங்கிக் கொண்டு விட்டது. 33*

*1308 அந்த படுதாக் கூடாரம் மூடிக்கொண்டு விட்டது. வெளியே பொழிகின்ற மழை, பேய்காற்று இவைகளின் ஓசையே கேட்கவில்லை. உள்ளே ஒரே புழுக்கம் விசிறியை எடுத்து, விசிறிக் கொண்டு நகர மக்கள் காற்று வாங்கிக் கொண்டனர். 34*

*1309 பிரளயம் வரும் பொழுது பொழிய வேண்டும் என்று சில மேகங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும். அவை கூட வருணன் ஆக்ஞையால் பொழிந்து தீர்ந்து விட்டன. அவை வீட்டுச் சமையல்கட்டில் காணப்படுகிற புகை போல அங்கே கொஞ்சம், இங்கே கொஞ்சம் தெரிந்தன. 35*

அத பாண்ட்யஸூதே ஸமம் ஜநை: ஶரணம் ஜக்முஷி சந்த்ரஶேகர: ।
ஸ்வகபர்தபவை: பயோதரை: ஸ்தகயாமாஸ ஸ வர்ஷதோ கநான் ।। 32
படமண்டபவத்யவஸ்திதா: பரிதஸ்தே மதுராம் பயோமுச: ।
ருருதுர்புவி வாரிஸம்ப்லவம் ஜக்ருஹுஶ்சோபரி நிஷ்பதத் பய: ।। 33
படகர்பகதா இவ ப்ரஜா: கியதபி அஶ்ருதவர்ஷநிஸ்வநா: ।
வ்யஜநைருபவீஜ்ய லேபிரே நகரஸ்தா மருதம் கதஞ்சந ।। 34
அபி யத் ப்ரலயேஷு வர்ஷிதும் ஸமரக்ஷன் ஸலிலம் வலாஹகா: ।
அபிவ்ருஷ்ய ததப்யஶேஷதோ க்ருஹதூமா இவ கே சகாஶிரே ।। 35
ப்ரதமம் பதிதை: பயோபரை: பரமம்போதிரபூரி ஶோஷித: ।
சரமம் பதிதம் து தத்பயோ ஜக்ருஹு: ஶைவகபர்தவாரிதா: ।। 36
ஜலதா ஜலதைர்நிராக்ருதா: ப்ரதியாந்த: பரிதோ யதாகதம் ।
வருணேந ந ஸம்பபாஷிரே வருணஸ்தைரபி லஜ்ஜயா மித:।। 37
பரிதோ விநிவேஶிதான் கநான் ப்ரதிஸம்ஹ்ருத்ய நிஜாந் மஹேஶ்வர: ।
பரிதர்ஶயதி ஸ்ம நாகரை: ப்ரக்ருதிஸ்தம் நிகிலம் மஹீதலம் ।। 38
சதஸ்ருஷ்வபி திக்ஷு கூடவஜ்ஜலதான் ந்யஸ்ய ரரக்ஷ யத் புரீம் ।
ததுபக்ரமம் அப்யயோஜயத் ஸ சதுஷ்கூடஸமாக்யயாபி தாம் ।। 39

---

1310 முதல் பொழிந்த மழை நீரினால் வற்றிப்போன கடல் நிரம்பியது. கடைசியில் பொழிந்த மழையை சிவனுடைய சடையில் உள்ள மேகங்கள் உறிஞ்சிக் கொண்டன. 36

1311 வருணமேகங்களை சிவனுடைய மேகங்கள் இல்லை என்று ஆக்கிவிட்டன. வெறுப்புற்ற மேகங்கள் பரிதாபமாகத் திரும்பிச் சென்றன. வருணன் அவற்றை ஏன் என்று கேட்கவில்லை வருணன் வெட்கி தலையில் துணியைப் போட்டுக் கொண்டு குனிந்து கொண்டான். இருபுறமும் வெட்கம் கவர்ந்தது. 37

1312 நகரத்தைக் காப்பதற்காக பரமசிவன் நகரத்தைச் சுற்றி தான் நிறுத்தியிருந்த மேகங்களை, தானே சடையில் இழுத்துக் கொண்டார். நகரமக்களிடம் ‘பாருங்கள் பூமி சரியான நிலைக்கு வந்துவிட்டது.’ என்று காட்டினார். 38

1313 நாற்புறமும் மேகங்களையே கோட்டைகளைப் போல் நிறுத்தி நகரத்தை பகவான் ரக்ஷித்ததின் நினைவாக, நகரத்திற்கு ‘நான்மாடக் கூடல்’ என்று பெயர் வந்தது. 39

अतिमानुषदेवदानवं बरुणो वीक्ष्य तदद्भुतद्वयम्।
मघवोदितमीशवैभवं मनसाऽमन्यत दिक्प्रदर्शनम् ॥ ४०

स समेत्य सुवर्णपद्मनीं सलिलस्नानगलज्जलग्रहः।
कनकाम्बुरुहैस्तदुद्भवैः कलयामास महेश्वरार्चनम्॥ ४१

स्तुतिभिर्बहुभिर्प्रसादयन्स महेशं शफरक्षणामपि।
कृतपाण्ड्यनृपालसौहृदः कृतकृत्यः स्वपुरं पुनर्ययौ॥ ४२

अथ जात्वभिषेकपाण्ड्यभूरमणे शासति राज्यमूर्जितम्।
समदृश्यत सिद्धवेषभृत् सह शिष्यैः मधुरापुरे हरः॥ ४३

जपदामकरो जटाधरः कलयन् काञ्चनवेत्रमुज्ज्वलम्।
विचचार युवाऽतिसुन्दरः भसितालेपनपाण्डरच्छविः॥ ४४

करुणैकमयः कलानिधिः सुलभः सुन्दरमूर्तिरुज्ज्वलः।
अवलोकित एव देहिनां अहरद्वाङ्मनसे स तापसः॥ ४५

बहुशः कुणिमूकलोहला बधिरक्लीबजडान्धपङ्गवः।
जटिलेन कृतार्थिता जनाः चरणाम्भोजरजोऽनुषङ्गतः॥ ४६

चरणोदकसेवया हरन्नपि वन्ध्यत्वमनेकधा स्थितम्।
अवसन्नतरं हरिश्चिरात् अनुजप्राह कुलं कुटुम्बिनाम्॥ ४७

---

*1314* மனிதர்களுக்கோ தேவர்களுக்கோ, அஸுரர்களுக்கோ அப்பாற்பட்ட அந்த அத்புதக் காட்சியைக் கண்ட வருணன், இந்திரன் கூறியது உண்மை என்று ஏற்றுக்கொண்டான். பரமேச்வரனுடைய மஹிமைக்கு ஒரு கோடி காட்டப்பட்டது. அது அளவிடாமுடியாதது என்று உணர்ந்தான். 40

*1315* அவன் பொற்றாமரை தடாகம் சென்று ஸ்நானம் செய்தான். அவனைப் பிடித்திருந்த ஜலதோஷம் அறவே அகன்றது. பொற்றாமரைகளைப் பறித்து பரமேச்வரனுக்கு பூஜை செய்தான். (ஜலாதிபதியான வருணனுக்கே ஜலதோஷம் பிடித்தது என்று கிண்டல் செய்கிறார் தீக்ஷிதர்) 41

*1316* பல துதிகளால் பரமேச்வரனைக் கொண்டாடினான். மீனாக்ஷீ தேவியையும் வனங்கினான். பாண்டிய மஹாராஜனுடன் வருணன் நட்புறவு பூண்டான். தன் நகரத்திற்குத் திரும்பினான். தேவனானாலும் நற்பண்பிற்கு கட்டுப்பட வேண்டும் என்று இதன் மூலம் குறிப்பிடுகின்றார் கவி. 42

## திருவிளையாடல் 20

## எல்லாம் வல்ல வித்தரானது

*1317* அபிஷேக பாண்டியன் அரசாட்சியின் போது, ஒரு சமயம் பரமேச்வரன், ஒரு ஸித்தர் உருவில் சீடர்களுடன் மதுரை நகரம் வந்தார். 43

அதிமாநுஷதேவதாநவம் வருணோ வீக்ஷ்ய ததத்புதத்வயம் ।
மகவோதிதம் ஈஶவைபவம் மநஸாமந்யத திக்ப்ரதர்ஶநம் ॥

ஸ ஸமேத்ய ஸுவர்ணபத்மிநீம் ஸலிலஸ்நாநகலஜ்ஜலக்ரஹ: ।
கநகாம்புருஹைஸ்ததுத்பவை: கலயாமாஸ மஹேஶ்வரார்சநம் ॥ 41

ஸ்துதிபிர்பஹுபி: ப்ரஸாதயன் ஸ மஹேஶம் ஶபரேக்ஷணாமபி ।
க்ருதபாண்ட்யந்ருபாலஸௌஹ்ருத: க்ருதக்ருத்ய: ஸ்வபுரம் புநர்யயௌ ॥ 42

அத ஜாத்வபிஷேகபாண்ட்யபூரமணே ஶாஸதி ராஜ்யமூர்ஜிதம் ।
ஸமத்ருஶ்யத ஸித்தவேஷப்ருத் ஸஹ ஶிஷ்யைர்மதுராபுரே ஹர: ॥ 43

ஜபதாமகரோ ஜடாதர: கலயன் காஞ்சநவேத்ரமுஜ்ஜ்வலம் ।
விசசார யுவாऽதிஸுந்தரோ பஸிதாலேபநபாண்டரச்சவி: ॥ 44

கருணைகமய: கலாநிதி: ஸுலப: ஸுந்தரமூர்த்திருஜ்ஜ்வல: ।
அவலோகித ஏவ தேஹிநாம் அஹரத் வாங்மநஸே ஸ தாபஸ: ॥ 45

பஹுஶ: குணிமூகலோஹேலா பதிரக்லீபஜடாந்தபங்கவ: ।
ஜடிலேந க்ருதார்த்திதா ஜநாஶ்சரணாம்போஜ ரஜோऽநுஷங்கத: ॥ 46

சரணோதகஸேவயா ஹரந்நபி வந்த்யத்வமநேகதா ஸ்திதம் ।
அவஸந்நதரம் ஹரஶ்சிராத் அநுஜக்ராஹ குலம் குடும்பிநாம் ॥ 47

---

*1318* கையிலே ஜபமாலை, தலையில் முடிந்த சடை, கையிலே பளபளவென்ற தங்கப் பிரம்பு, நல்ல யௌவனமிக்க அழகே வடிவுடைய திருமேனி, வெள்ளை வெளேரென்று குழைத்துப் பூசிய விபூதி,ஜாம் ஜாம் என்று நடைபோட்டுக் கொண்டு வந்தார். 44

*1319* சந்திரன் தான்,ஆனால் மந்த ஒளி பெற்றவனவன். சந்திரனுடைய கருணை நிறைந்ததுடன், அருளும் பிரகாசமும் உடையவன் ஒளி மிக்க ஸுந்தரேசப் பெருமான். சந்திரன் ஆகாசத்தில் எட்டி இருக்கிறான். இந்த சந்திரன் பக்தர்களின் கண்களுக்குப் புலப்படுபவன். தாபஸ உருவத்தினால் வாக்கையும் மனஸையும் கொள்ளை கொள்பவன். 45

*1320* கூனர்கள், ஊமைகள்,நபும்ஸகர்கள், மூடர்கள்,செவிடர்கள், குருடர்கள்,முடவர்கள், மற்றும் ஊனமுற்றவர்களெல்லாம், தமது ஊனம் கழிந்து, அவருடைய உடல் திருவடிதூளி, தீர்த்தம் இவைகளினால் பயன் அடைந்திருக்கிறார்கள். 46

*1321* பல ஸ்த்ரீகளுக்கு, பல காரணங்களினால் ஏற்பட்ட மலட்டுத்தன்மையை, தன் பாத தீர்த்தத்தை அருந்தச்செய்து, அவர்களுடைய குலம் தழைக்க மகப்பேறு அடையும்படி அனுக்ரஹம் செய்திருக்கிறார். 47

जरतस्तरुणान्प्रकल्पयन् युवभावं युवसु स्थिरं दिशन्।
अपि वर्षगणानुवर्तिनीः शमयामास रुजः स भस्मना॥ ४८

भसितं रसनासु निक्षिपन् कवयामास जडाननेकधा।
विततार परां विरक्ततां विषयासङ्गमलीमसात्मनाम्॥ ४९

अपि दुर्लभभैक्ष्यजीवनान् अकरोदाढ्यतरान् गिरैव सः।
उदजीवयदुक्षणादपां उरगक्ष्वेलहतानपि क्षणात् ॥ ५०

पतिवल्लभतां मृगीदृशां प्रमदासु प्रियतां विलासिनाम्।
व्यतरद्भिषजां च मूलिका विविधप्रत्ययकारिणीर्हरः॥ ५१

गुटिकांशुकखड्ग पादुकारसलेपाञ्जनमुख्यसिद्धयः।
तमनुस्मरतां शरीरिणां स्वत एव प्रचकाशिरे तदा ॥ ५२

ग्रहभूतपिशाचयक्षिणीगणकूश्माण्डविनायकादयः।
अभिदुद्रुवुरादिसिद्ध इत्यभिधानाक्षरकीर्तनान्नृणाम्॥ ५३

स जगाद दृशोरगोचरः कथयन्नेव कथास्तिरोदधे।
स्थविरस्तरुणोऽथ मुण्डितो जटिलश्चैष जनैरदृश्यत॥ ५४

समदर्शयदुन्नतान् गिरीन्सविधे वारिनिधीन्वनानि च।
स्तुवतां हसतां प्रधावतां मिषतामेव तदुन्ममार्ज सः॥ ५५

---

1322 கிழவர்கள் பலர் யௌவனம் திரும்பபெற்றனர். யௌவனத்தில் உள்ளவர்களுக்கு, யௌவனபாவம் ஸ்திரமாக இருக்கும்படி அருள்புரிந்துள்ளார். வெகுகாலமாக பல விதங்களிலும் தீராத நோய்களை, அவருடைய விபூதியைப் பெற்றுத் பலர் தீர்த்துக் கொண்டனர். 48

1323 அவர்,சிலரை நாக்கை நீட்டச் சொல்லுவார். நீட்டிய நாக்கில் திருநீறு தூவுவார். அவர்கள் உடனே கவிதை இயற்றும் சக்தியைப் பெறுவார்கள். சிற்றின்ப வேட்கையிலுள்ளவர்களை வைராக்கியம் அடையச் செய்து ஆத்ம ஞானத்தை அடையும்படி செய்துள்ளார். 49

1324 பிச்சை எடுக்கப் போய், பிச்சைக்கிடைக்காத பரம ஏழையை ஒரே சொல்லினால் செல்வந்தராக்குவார். நல்லபாம்பு கடித்து உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பவர்களுக்கு ஜலத்தை ப்ரோக்ஷித்து உயிருட்டுவார். 50

1325 பெண்களுக்கு நாயகனிடத்தில் ப்ரேமையை வளர்ப்பார். கணவர்களுக்கு மனைவியின் பால் ப்ரேமையை வளர்ப்பார். வைத்யர்களுக்கு பலவிதமான மூலிகைகளை அளித்து கொடிய நோய்களையும் குணப்படுத்தும்படி செய்வார். 51

ஜரதஸ்தருணான் ப்ரகல்பயன் யுவபாவம் யுவஸு ஸ்திரம் திஶன் ।
அபி வர்ஷகணானுவர்திநீ: ஶமயாமாஸ ருஜ: ஸ பஸ்மநா ।। 48
பஸிதம் ரஸநாஸு நிக்ஷிபன் கவயாமாஸ ஜடாநநேகதா ।
விததார பராம் விரக்ததாம் விஷயாஸங்கமலீமஸாத்மநாம் ।। 49
அபி துர்லபபைக்ஷ்யஜீவநான் அகரோதாட்யதரான் கிரைவ ஸ: ।
உதஜீவயதுக்ஷணாத் அபாமுரகக்ஷ்வேலஹதாநபி க்ஷணாத் ।। 50
பதிவல்லபதாம் ம்ருகீத்ருஶாம் ப்ரமதாஸு ப்ரியதாம் விலாஸிநாம் ।
வ்யதரத் பிஷஜாம் ச மூலிகா விவிதப்ரத்யயகாரிணீர்ஹர: ।। 51
குடிகாம்ஶுககட்கபாதுகாரஸலேபாஞ்ஜநமுக்யஸித்தய: ।
தமநுஸ்மரதாம் ஶரீரிணாம் ஸ்வத ஏவ ப்ரசகாஶிரே ததா ।। 52
க்ரஹபூதபிஶாசயக்ஷிணீகண கூஶ்மாண்டவிநாயகாதய: ।
அபிதுத்ருவுராதிஸித்த இத்யபிதாநாக்ஷரகீர்தநாந்நருணாம் ।। 53
ஸ ஜகாத த்ருஶாரகோசர: கதயந்நேவ கதாஸ்திரோததே ।
ஸ்தவிரந்தருணோऽத முண்டிதோ ஜடிலஶ்சைஷ ஜநைரத்ருஶ்யத ।। 54
ஸமதர்ஶயதுந்நதான் கிரீன் ஸவிதே வாரிநிதீன் வநாநி ச ।
ஸ்துவதாம் ஹஸதாம் ப்ரதாவதாம் மிஷதாமேவ ததுந்மமார்ஜ ஸ: ।। 55

---

*1326 அவர் (குடிகை) மாத்திரை கொடுப்பார். சாப்பிட்டால் அகில உலகமும் கண் முன்னே தெரியும். துணியில் மைதடவி உதருவார். தங்க நாணயங்கள் உதிரும். கத்தியில் மைதடவி வீசுவார். பதுங்கி இருக்கும் மிருகங்களின் மேல் பாயும்.பாதுகையில் மை தடவி கொடுத்தால் பறப்பார்கள். தம் சக்திக்கு மீறி செயல்படுவார்கள். இத்தகைய ஸித்திகளை கற்பித்து புகழ் சேர்ப்பார். 52*

*1327 நவக்ரஹபீடை, பிசாசுகளின் பீடை, இக்ஷிணீ முதலிய துர்தேவதைகளின் தாக்குதல். மற்றும் ஆபிசாரிக ப்ரயோகங்களால் கஷ்டப்படுகின்றவர்களிடம் போய் 'இதோ ஆதி ஸித்தர் வந்து கொண்டிருக்கிறார்' என்று சொன்ன உடனேயே அந்த தீவினைகள் அகன்று விடும். 53*

*1328 அந்த ஸித்தர் கண்களுக்குப் புலனாகாமலேயே, நம்மிடம் பேசிக் கொண்டே திடீரென்று மறைந்துவிடுவார். ஒரு நிமிஷம் கிழவராகவும் மறு நிமிஷம் வாலிபர் போலவும், ஒரு சமயம் மொட்டை தலையுடனும் மறுகணம் ஜடாதாரியாகவும் காட்சி அளித்துக்கொண்டு ஜனங்களை பிரமிக்க வைப்பார். 54*

*1329 'அதோ பாருங்கள் ஹிமயமலை' என்பார். இதோ பாருங்கள் 'கடல்' என்பார். இடது புறத்தில் கடல் அலை மோதும்.அந்தப் பக்கத்தில், அதோ பயங்கரமான காடு பாருங்கள். அடேயப்பா! பனிமலை எவ்வளவு உயரம்? என்று சொல்லுவார். கடல் அலைகளைப் பார்த்து மக்கள் சிரிக்கும் போதே,*

कियदित्यभिदध्महेऽद्भुतं किमितीदं चरितं स्तुवीम वा ।
वयमप्युपदर्शयेम तद्यदि हि स्याम जगच्छरीरिणः ॥ ५६
इति केलिकलाकुतूहली विजहारैष यथा यथा पुरे ।
अशृणोदखिलं तथा तथा प्रकृतिभ्यो नृपतिः पदे पदे ॥ ५७
स कदाचन सुन्दरेशितुः वितते धाम्नि विमानपश्चिमे ।
उपविष्टममुं यदृच्छया नृपतिः प्रैक्षत सेवितुं गतः ॥ ५८
दृशमस्य तृणीकृतामरां गिरमज्ञातपरानुवर्तिनाम् ।
स्थितमीप्सितगन्धदुर्विधं परिपश्यन्नृपतिर्विसिष्मिये ॥ ५९
अतिवाङ्मानसैर्महोभैररपि तत्त्वं परमस्य सूचितम् ।
अधिगन्तुमनाः स्वयं मनाक् अनुयुङ्क्ते स्म स गोत्रनामनी ॥ ६०
श्रवणे दधदक्षमालिकां शिथिलीकृत्य स पद्ममासनम् ।
अमृतस्नापितैरिवाक्षरैः इदमाह स्म नृपं तपोधनः ॥ ६१
न कुलं न गृहं न बान्धवा न च वर्णाश्रमयन्त्रणापि नः ।
अवधूतपदे निषेदुषां अभिधा सिद्ध इति स्फुटेव ते ॥ ६२
चतुरुत्तरषष्टिभेदतः प्रथिता या भुवने कला इति ।
यदि तासु कुतूहली भवान् अभिसंपश्यतु सिद्धिमद्भुताम् ॥ ६३

---

பயங்கரமான காட்டைப் பார்த்து அவர்கள் ஓடும்போதே அந்தக் காட்சிகளை மறைத்து விடுவார். 55

1330 கவி ஆச்சரியப்படுகிறார். எதை எப்படி விவரித்துச் சொல்லமுடியும்? இவற்றை எப்படித்தான் துதிப்பது? எத்தனாய விஷயங்களை வர்ணிப்பது? அவர் தானே ப்ரபஞ்சமாக வந்தவர். அவர் போல நாமும் பரமாத்ம ஸ்வரூபத்தை அடைந்து விட்டால், நாமே இவ்வளவு காட்சிகளையும் காண்பிக்க முடியும். 56

1331 அடேயப்பா! ஆங்காங்கே அந்த ஸித்தபுருஷர் லீலைகளைப் புரிந்து. மக்களை வியப்பில் ஆழ்த்தினார். அவ்வப்பொழுது கூட்டம் கூட்டமாக ஓடி வந்து 'இப்படி இப்படி' என்று ஜனங்கள் அரசனுடைய காதுகளில் ஓதிக் கொண்டிருந்தார்கள். 57

## திருவிளையாடல் 21

## கல் யானைக்கு கரும்பளித்த படலம்

1332 அரசன் ஒரு நாள் ஆலயத்திற்குச் சென்று ஸுந்தரேசரை தரிசித்து விட்டு, கருவறை விமானத்தின் பக்கத்தில் பிரதக்ஷிணமாகச் சென்ற போது,எதிர்பாராமல் அந்த ஸித்தப்பெருமான் அங்கே அமர்ந்திருப்பதைப் பார்த்து அவரை வணங்குவதற்காக அணுகினான். 58

கியதித்யபிதத்மஹோऽத்புதம் கிமிதீதம் சரிதம் ஸ்துவீம வா ।
வயமபி உபதர்ஶயேம தத்யதி ஹி ஸ்யாம ஜகச்சரீரிண: ॥ 56

இதி கேலிகலாகுதூஹலீ விஜஹாரைஷ யதா யதா புரே ।
அஶ்ருணோத் அகிலம் ததா ததா ப்ரக்ருதிப்யோ ந்ருபதி: பதே பதே ॥ 57

ஸ கதாசந ஸுந்தரேஶிதுர் விததே தாம்நி விமாநபஶ்சிமே ।
உபவிஷ்டமமும் யத்ருச்சயா ந்ருபதி: ப்ரேக்ஷித ஸேவிதும் கத: ॥ 58

த்ருஶமஸ்ய த்ருணீக்ருதாமராம் கிரமஜ்ஞாதபராநுவர்தநாம் ।
ஸ்திதமீப்ஸிதகந்ததுர்விதம் பரிபஶ்யந் ந்ருபதிர்விஸிஷ்மியே ॥ 59

அதிவாங்மநஸைர்மஹோபரைரபி தத்வம் பரமஸ்ய ஸூசிதம் ।
அதிகந்துமநா: ஸ்வயம் மநாக் அநுயுங்க்தே ஸ்ம ஸ கோத்ரநாமநீ ॥ 60

ஶ்ரவணே ததத் அக்ஷமாலிகாம் ஶிதிலீக்ருத்ய ஸ பத்மமாஸநம் ।
அம்ருதஸ்நபிதைரிவாக்ஷரை: இதமாஹ ஸ்ம ந்ருபம் தபோதந: ॥ 61

ந குலம் ந க்ருஹம் ந பாந்தவா ந ச வர்ணாஶ்ரமயந்த்ரணாபி ந: ।
அவதூதபதே நிஷேதுஷாமபிதா ஸித்த இதி ஸ்புடைவ தே ॥ 62

சதுருத்தரஷஷ்டிபேதத: ப்ரதிதா யா புவநே கலா இதி ।
யதி தாஸு குதூஹலீ பவாநபிஸம்பஶ்யது ஸித்திம் அத்புதாம் ॥ 63

---

*1333* அவருடைய பார்வை தேவர்களின் பார்வையையே புல்லாக மதிக்கக்கூடியதாகவும், சொற்கள் அக்ஞானத்தை போக்கக் கூடியதாகவும், இருக்கை ஒருவித துர்நாற்றத்துடன் கூடியதாகவும் இருப்பதைப் பார்த்து அரசன் ஆச்சரியமுற்றான். 59

*1334* வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாத ஒரு விசேஷ ஒளிவட்டம், அவர் மிகப்பெரிய தத்துவம் உடையவர் என்று சுட்டிக் காட்டியது. அவர் யாரென்று தெரிந்து கொள்வோம் என்ற ஆவலுடன் அருகே நெருங்கி வணங்கி தாங்கள் யாரோ? பெயரென்னவோ? என்று வினவினான் அரசன். 60

*1335* ஸித்தர் தன் ஜபமாலையைக் காதில் தொங்கவிட்டிருந்தார். சப்பணம் போட்டு அமர்ந்திருந்தவர், அதை தளர்த்திக் கொண்டார். அக்ஷரங்களை அமுதத்தில் தோய்த்தார் போல் இனிமையாக அரசனைப் பார்த்து, தவச்செல்வரான அவர் பேச ஆரம்பித்தார். 61

*1336* 'எனக்கு குலம் கிடையாது. வீடு கிடையாது. உறவினர் கிடையாது. எந்த வர்ணம். எந்த ஜாதி ஒன்றுமில்லை. இவ்வாறு விடுவெட்டியாகத் திரிபவர்களை உலகினர் 'ஸித்தர்' என்று கூறுவர். அது உனக்கு விளங்கும்.' 62

*1337* உலகத்தில் அறுபத்தி நான்கு கலைகள் என்று ஒரு வழக்கு உண்டே! அது உனக்கு தெரிந்திருக்கும். அவற்றில் எதிலாவது உனக்கு ஊக்கம் இருக்குமானால், ஒரு அத்புதக் காட்சியை நீ காணலாம். 63

इति वादिनि योगिनां वरे पुनरूचे नृपतिः कुतूहली ।
उपदीकृतमिक्षुमायतं कमनीयं कलयन्करेण तम् ॥ ६४
अयमास्ति विमानधारको द्विरदो यः किल दार्षदः पुरः ।
इममिक्षुमसौ गिलत्विति स्मयमानः स तदन्वमन्यत ॥ ६५
स ततः पुरतः शिलागजः स्तनितास्निग्धगभीरबृंहितः ।
नरपालकराग्रवर्तिनं नवमिक्षुं विचकर्ष शुण्डया ॥ ६६
कबलीकृतकोमलेक्षुणा करिणा तत्र विमानवर्तिना ।
जगृहे नृपकण्ठमालिकामणिहारोऽपि मृणालकोमलः ॥ ६७
चकिताः स्तिमिताः पलायिता रुषिताश्चानुचरा महीपतेः ।
उपलद्विरदस्य चेष्टितान्युपलभ्य क्षुभिताः प्रचुक्रुशुः ॥ ६८
न निकर्षचिकीर्षया कृतं न परीचिशिषया न गर्वतः ।
कुतुकेन तु वृत्तमेतदिति अयसकृत्तं प्रणमन्नसान्त्वयत् ॥ ६९
नमते धरणीभृते वरं तनयं वंशकरं प्रसादयन् ।
स्मयमानमुखाम्बुजो हरो मिषतस्तस्य पुरस्तिरोदधे ॥ ७०
अथ विक्रमपाण्ड्यभूपतिस्तनयोऽभूदाभिषेकपाण्ड्यतः ।
उदितोदितमुद्वहन्कुलं कुलदासः कुसुमायुधद्विषः ॥ ७१
स पितुः परलोकमेयुषः चरमाज्ञां शिरसोपधारयन् ।
अनुपाधिमनन्यगामिनीम् अचलां भक्तिमधत्त शंकरे ॥ ७२

---

*1338* இவ்வாறு கூறின அந்த யோகீச்வரரைப் பார்த்து அரசன் உவகையுடன் கூறினான். அரசனுடைய கையில் மரியாதை நிமித்தம் யாரோ கொடுத்த ஒரு நீண்ட அழகான கரும்புக்கழி இருந்தது. *64*

*1339* இதோ பாருங்கள் இந்த யானை இந்த விமானத்தைத் தாங்கிக் கொண்டிருக்கிறது. இது இந்த கரும்பை விழுங்கட்டும் என்று புன்னகையுடன் சொன்னான் சித்தர் கூறினார் அப்படியே ஆகட்டும். *65*

*1340* அரசருடைய முன்னிலையில் விமானக் கட்டமைப்பில் முகமும் முன்னங்கால்களும் தெரிய நின்று கொண்டிருந்த யானைவடிவம், இடி போல் கம்பீரமாக ஒரு ஓலமிட்டு அரசனின் கையிலிருந்த கரும்பைத் துதிக்கையால் இழுத்தது. *66*

*1341* விமானயானை அந்த இளம் கரும்பை துதிக்கையால் வாயில் தினித்தது. அதை முழுவதும் தின்று விட்டு,மறுபடியும் துதிக்கையை நீட்டி அரசன் கழுத்திலிருந்த தாமரைத் தண்டைப் போன்று கோமளமான ரத்தின மாலையையும் கழற்றிக் கொண்டது. *67*

*1342* அரசனுடைய பரிவாரங்கள், எதிர்பாராத இந்தக் காட்சியைக் கண்டார்கள். திடுக்கிட்டார்கள். மூச்சு நிற்பது போல அசைவற்று நின்றார்கள்.

இதி வாதிநி யோகிநாம் வரே புநரூசே ந்ருபதி: குதூஹலீ ।
உபதீக்ருதமிக்ஷுமாயதம் கமநீயம் கலயன் கரேண தம் ।। 64
அயமஸ்தி விமாநதாரகோ த்விரதோ ய: கில தார்ஷத: புர: ।
இமமிக்ஷுமஸௌ கிலத்விதி ஸ்மயமாந: ஸ ததந்வமந்யத ।। 65
ஸ தத: புரத: ஶிலாகஜ: ஸ்தநிதஸ்நிக்தகபீரப்ருஹ்மித: ।
நரபாலகராக்ரவர்த்திநம் நவமிக்ஷும் விசகர்ஷ ஶுண்டயா ।। 66
கபலீக்ருதகோமலேக்ஷுணா கரிணா தத்ர விமாநவர்த்திநா ।
ஜக்ருஹே ந்ருபகண்டமாலிகாமணிஹாரோऽபி ம்ருணாலகோமல: ।। 67
சகிதா: ஸ்திமிதா: பலாயிதா ருஷிதாஶ்சாநுசரா மஹீபதே: ।
உபலத்விரதஸ்ய சேஷ்டிதாந்யுபலப்ய க்ஷுபிதா: ப்ரசுக்ருஶு: ।। 68
ந நிகர்ஷசிகர்ஷியா க்ருதம் ந பரீசிஷயா ந கர்வத: ।
குதுகேந து வ்ருத்தமேததி அயஸக்ருத் தம் ப்ரணமன் அஸாந்த்வயத் ।। 69
நமதே தரணீப்ருதே வரம் தநயம் வம்ஶகரம் ப்ரஸாதயன் ।
ஸ்மயமாநமுகாம்புஜோ ஹரோ மிஷதஸ்தஸ்ய புரஸ்திரோததே ।। 70
அத விக்ரமபாண்ட்யபூபதிஸ்தநயோऽபூதபிஷேகபாண்ட்யத: ।
உதிதோதிதமுத்வஹன் குலம் குலதாஸ: குஸுமாயுதத்விஷ: ।। 71
ஸ பிது: பரலோகமேயுஷ: சரமாஜ்ஞாம் ஶிரஸோபதாரயன் ।
அநுபாதிமநந்யகாமிநீம் அசலாம் பக்திமதத்த ஶங்கரே ।। 72

---

*சிலர் ஓடிவிட்டார்கள். சிலர் கோபம் கொண்டனர். கருங்கல் யானையின் விசித்திரமான நடவடிக்கையைக் கண்டு கலங்கினார்கள். கூச்சலிட்டார்கள்,68*

*1343 அரசன் ஸித்தரை பலதடவை வணங்கி ஸமாதானம் சொன்னான். 'ஐயா! உங்களை கேவலப்படுத்த வேண்டுமென்றோ, சோதித்துப்பார்க்க வேண்டுமென்றோ, கர்வத்தினாலோ உங்களை ஏவவில்லை. வேடிக்கைப் பார்க்கலாம் என்று தான் வேண்டினேன்.' 69*

*1344 அரசன் ஸித்தரை வணங்கினான். அவனுக்கு வம்சம் தழைக்கிற ஒரு புத்திர பாக்யத்தை அருளினார். மலர்ந்த முகத்துடன் அரசன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே ஸித்தர் மறைந்தார். 70*

*1345 அபிஷேக பாண்டியனுக்கு விக்ரமபாண்டியன் என்ற புத்திரன் பிறந்தான். தலைமுறைக்குத் தலைமுறை மேன்மையுற்று வருகின்ற குலத்தை மேலும் மேன்மையாக உயர்த்திக்கொண்டு, அவன் மன்மதனின் எதிரியான பரமேச்வரனுக்கு குலமுறைப்படி தாஸன் ஆனான். 71*

*1346 அவனுடைய தந்தை பரலோகம் செல்வதற்கு முன் கூறிய கடைசி உபதேசத்தை சிரம் மேல் தாங்கி ஸுந்தரேசப்பெருமானிடம் குறைவற்ற, வேறு தெய்வத்தில் ஈடுபடாத திடமான பக்தியை வளர்த்துக்கொண்டான். (அது எவ்வாறு என்று விளக்கமளிக்கிறார் கவி ) 72*

शिवनामपरः शिवाश्रयः शिवविन्यस्तभरः शिवाश्रमी ।
जगदाकलयञ्शिवात्मकं जननाथो बुभुजे वसुंधराम् ॥ ७३
शशिनीव समस्तवल्लभे नृपतौ भूतपतेः प्रणप्तरि ।
पितरीव सुता महीभुजो बिभरामासुरविप्लुतां मतिम् ॥ ७४
कुलशेखरपाण्ड्यसप्तमं नृपतिं तं किल चोलपार्थिवः ।
न ममर्ष शरद्विनिर्मलं शशिनं चोर इव स्वदोषतः ॥ ७५
अतिवर्तितुमेनमक्षमः स वराकः समरे भुजोष्मणा ।
क्षपणैः क्रतुमाभिचारिकं कलयामास पयस्विनीतटे ॥ ७६
तत उच्चलितो दुरध्वरात् द्विरदः कोऽपि गिरान्द्रभीषणः ।
समया मधुराम् उपाद्रवत् कलयन्मुद्गरमायसं करे ॥ ७७
तमुदन्तमयं विचारयन् शरणं प्राप शशाङ्कशेखरम्
स च तत्र किरातरूपभृत् परिचक्राम निजालयाद्बहिः ॥ ७८
वनपल्लवभङ्गशेखरं वरगुञ्जाफलपुञ्जभूषणम् ।
अधिरोपितकार्मुकं जना ददृशुर्दिव्यममुं वनेचरम् ॥ ७९
उपलभ्य गजं तमुद्धतं पथि गव्यूतियुगे ब्यवस्थितम् ।
नरसिंहमयोजयच्छरे नरसिंहस्य मुदे वनेचरः ॥ ८०
त्रिपुरेषु गतेषु लक्ष्यतां हसितेनास्मि पुराप्यपोदितः ।
इति सत्त्वरमीशकार्मुकात् उदयासीद्दनुजान्तकः शरः ॥ ८१

---

1347 வாக்கில் எப்போதும் சிவ நாமம், சிவனே கதி என்ற உறுதி. தன் மேன்மைப் பற்றிய பொறுப்புகளை சிவனே பார்த்துக் கொள்வான் என்று விட்டு விட்டு, சிவாலயத்தையே ஆச்ரமமாக்கிக்கொண்டு, சிவ தீக்ஷை பெற்று, உலகத்தையே சிவமாக்கிக்கொண்டு, அரசன், பூமியை சிவஸ்வரூபமாக அனுபவித்தான். 73

1348 சந்திரன் போல அனைவருக்கும் பிரியமானவனாக அரசன் பூமியை ஆண்டு கொண்டு வரும்போது, மக்கள். தந்தையிடம் குமாரர்கள் போல, சிறிது கூட மறியாதை குறையாமல் நடந்து கொண்டார்கள். 74

## திருவிளையாடல் 22

## யானை எய்த படலம்

1349 குலசேகர பாண்டியனுக்கு அடுத்து ஏழாவது தலைமுறையில் வந்த விக்ரமபாண்டியனிடம் பொறாமை கொண்டான் சோழ பூபதி. திருடனுக்கு சரத்காலச் சந்திரன் பளீரென்று பிரகாசிப்பது பிடிக்காதல்லவா? 75

1350 தன்னுடைய புறவலிமையினால் விக்ரமபாண்டியனை மிஞ்ச முடியாது என்பதை அறிந்த சோழமன்னன், சமணர்களைக்கொண்டு. பாலாற்றங்கரையில் ஆபிசார யாகம் செய்வித்தான். 76

ஶிவநாமபர: ஶிவாஶ்ரய: ஶிவவிந்யஸ்தபர: ஶிவாஶ்ரமீ ।
ஜகதாகலயன் ஶிவாத்மகம் ஜநநாதோ புபுஜே வஸுந்தராம் ॥ 73
ஶஶிநீவ ஸமஸ்தவல்லபே ந்ருபதௌ பூதபதே: ப்ரணப்தரி ।
பிதரீவ ஸுதா மஹீபுஜோ பிபராமாஸுரவிப்லுதாம் மதிம் ॥ 74
குலஶேகரபாண்ட்யஸப்தமம் ந்ருபதிம் தம் கில சோலபார்திவ: ।
ந மமர்ஷ ஶரத்விநிர்மலம் ஶஶிநம் சோர இவ ஸ்வதோஷத: ॥ 75
அதிவர்திதுமேநம் அக்ஷம: ஸ வராக: ஸமரே புஜோஷ்மணா ।
க்ஷபணை: க்ரதுமாபிசாரிகம் கலயாமாஸ பய:ஸ்விநீதடே ॥ 76
தத உச்சலிதோ துரத்வராத் த்விரத: கோऽபி கிரீந்த்ரபீஷண: ।
ஸமயா மதுராம் உபாத்ரவத் கலயன் முத்கரமாயஸம் கரே ॥ 77
தமுதந்தமயம் விசாரயன் ஶரணம் ப்ராப ஶஶாங்கஶேகரம் ।
ஸ ச தத்ர கிராதரூபப்ருத் பரிசக்ராம நிஜாலயாத் பஹி: ॥ 78
வநபல்லவபங்கஶேகரம் வரகுஞ்ஜாபலபுஞ்ஜபூஷணம் ।
அதிரோபிதகார்முகம் ஜநா தத்ருஶுர்திவ்யம் அமும் வநேசரம் ॥ 79
உபலப்ய கஜம் தமுத்ததம் பதி கவ்யூதியுகே வ்யவஸ்திதம் ।
நரஸிம்ஹமயோஜயச்சரே நரஸிம்ஹஸ்ய முதே வநேசர: ॥ 80
த்ரிபுரேஷு கதேஷு லக்ஷ்யதாம் ஹஸிதேநாஸ்மி புராப்யபோதித: ।
இதி ஸத்வரமீஶகார்முகாத் அதயாஸீத் தநுஜாந்தக: ஶர: ॥ 81

---

*1351* அந்தக் கடுமையான யாகம் மலையைப்போல் பருமனான ஒரு பயங்கர யானையை ஏவியது. அந்த யானை துதிக்கையில் ஒரு பெரிய கடப்பாறையைத் தூக்கிக்கொண்டு, மதுரை நகரத்தின் வடக்குப்பகுதியில் ஜனங்களை உபத்ரவித்தது. 77

*1352* அந்தச் செய்தியை கேட்ட விக்ரமன் ஆலோசித்து ஸுந்தரேசப் பெருமானிடம் சரணம் அடைந்தான். பகவானும் ஒரு வேடன் உருவம் கொண்டு, ஆலயத்தின் வெளியில் ஸஞ்சரித்தார். 78

*1353* முடியில் வேப்பிலை துளிர், கழுத்திலே குந்துமணி ஹாரம், கையில் நாணேற்றிய வில்லுடன் வந்த வேடனை ஜனங்கள் பார்த்தார்கள். 79

*1354* அந்த போக்கிரி யானையை, நகரத்திற்கு வெளியே நான்கு மைல் தூரத்தில் வேடன் கண்டான். நரஸிம்ஹப்பெருமான் ஸந்தோஷப்படுவார் என்று நினைத்து., ஒரு பாணத்தில் நரஸிம்ஹாஸ்த்ரத்தை ஜபித்து ஏவினான். 80

*1355* நாராயணனுக்கு ஒரு வருத்தம் உண்டு. சிவபெருமான் திரிபுரஸம்ஹாரம் செய்ய நினைத்த பொழுது, தன்னுடைய மேரு வில்லில் பாணமாக தன் அஸ்திரத்தைத் தொடுக்காமலேயே முப்புரங்களை எரித்துவிட்டாரே என்று.. அந்த தாபத்தோடு, பரமேச்வரனுடைய வில்லிலிருந்து கிளம்பிய அஸுரர்களை வதைக்கின்ற, அந்த நரஸிம்ஹாஸ்திரம் புறப்பட்டது. 81

स हसन्नचलेन धन्वना विशिखेन स्वयमच्युतेन च ।
जगदेकधनुर्धरः क्षणात् अभिनत्सिन्धुरमाभिचारिकम् ॥ ८२

नरकेसरिणास्त्ररूपिणा शमिते हस्तिनि शैलतां गते ।
तमनु प्रहितास्तथागता समैक्ष्यन्त यथा तथा गताः ॥ ८३

सुगतान्सुगतात्मनेषुणा स विजिग्ये चतुरो वनेचरः ।
अहिरेव हि वेत्त्यहेः पदं कथमन्येन घटेत तज्जयः ॥ ८४

विदितः किल सर्वदेहिनां विजय पञ्चमुखेन हस्तिनः ।
गुणगृह्यतया तदप्यसौ मुमुदे विक्रमपाण्ड्यपार्थिवः ॥ ८५

अनुगृह्य दयार्द्रया दृशा प्रणतं भूतपतिः प्रजेश्वरम्
तनयं च तदन्वयोचितं वरमस्मै वितरंस्तिरोदधे ॥ ८६

अजनिष्ट विभोरनुग्रहात् तनयस्तस्य च राजशेखरः ।
यदुपाहितभूभरो गुरुः प्रतिपेदे पदमैश्वरं परम् ॥ ८७

सप्तमो मलयध्वजस्य स सप्तसप्तिसमद्युतिः बिभ्रदङ्गदनिर्विशेषम् अशेषमेव महीतलम् ।
आरराध सभाजनैः अतिमानुषैर्मधुरेश्वरं रञ्जयञ्जनताः सुतानिव राजशेखरपार्थिवः ॥ ८८

इति पञ्चदशः सर्गः

---

*1356* சிவபெருமானுக்கே சிரிப்பு வந்துவிட்டது. அசையாத மலை (மேருமலை) தனுஸ். அச்யுதனே பாணம். இப்படியும் உண்டா? உலகிலேயே சிறந்த வில்லாளனான பெருமான் (நமஸ்தே அஸ்து தன்வனே என்று வேதம் புலம்புகிறது) ஆபிசாரயானையை ஒரே க்ஷணத்தில் அடித்தார், உடைத்தார். 82

*1357* பாணவடிவில் நரஸிஹ்ம பெருமானால் அடிபட்ட அந்த ஆபிசார யானை, அந்த கணமே மலையாக அமைந்து விட்டது (அதுதான் மதுரை அருகில் உள்ள யானைமலை) அதனுடன் பின்னால் வந்த சமணர்களும் எப்படி வந்தார்களோ அப்படியே சென்றுவிட்டார்கள். 83

*1358* அந்த சமணர்களில் ஸௌகதமதத்தைச் சேர்ந்தவர்களை, தன்னுடைய நல்ல ஆத்மாவாகிய பாணங்களினால் அந்த வேடன் வென்றான் (சரணமடையச் செய்தான்). பாம்பின் கால் பாம்பிற்குத்தானே தெரியும். ஆபிசார கர்மாக்களே கிராதவேஷம் பூண்ட பரமேச்வரனால் படைக்கப்பட்டது தானே. அவற்றை வேறு யாரால் ஜயிக்கமுடியும்? 84

*1359* எல்லோருக்குமே தெரியும் ஐந்துமுகமுடைய கணபதி தானே பெற்ற வெற்றி. நல்லதை நன்கு புரிந்து கொள்ளக்கூடிய விக்ரமபாண்டியன் இந்த நுட்பத்தை அறிந்து மிகவும் ஸந்தோஷமடைந்தான். 85

CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

ஸ ஹஸந்நசலேந தந்வநா விஶிகேந ஸ்வயமச்யுதேந ச ।
ஜகதேகதநுர்தர: க்ஷணாதபிநத் ஸிந்துரமாபிசாரிகம் ॥ 82

நரகேஸரிணாஸ்த்ரரூபிணா ஶமிதே ஹஸ்திநி ஶைலதாம் கதே ।
தமநு ப்ரஹிதாஸ்ததாகதா ந ஸமைக்ஷ்யந்த யதா ததா கதா: ॥ 83

ஸூகதாந் ஸூகதாத்மநேஷுணா ஸ விஜிக்யே சதுரோ வநேசர: ।
அஹிரேவ ஹி வேத்த்யஹே: பதம் கதமந்யேந கடேத தஜ்ஜய: ॥ 84

விதித: கில ஸர்வதேஹிநாம் விஜய: பஞ்சமுகேந ஹஸ்திந: ।
குணக்ருஹ்யதயா ததப்யஸௌ முமுதே விக்ரமபாண்ட்யபார்திவ: ॥ 85

அநுக்ருஹ்ய தயார்த்ரயா த்ருஶா ப்ரணதம் பூதபதி: ப்ரஜேஶ்வரம் ।
தநயம் ச ததந்வயோசிதம் வரமஸ்மை விதரம்ஸ்திரோததே ॥ 86

அஜநிஷ்ட விபோரநுக்ரஹாத் தநயஸ்தஸ்ய ச ராஜஶேகர: ।
யதுபாஹிதபூபரோ குரு: ப்ரதிபேதே பதமைஶ்வரம் பரம் ॥ 87

ஸப்தமோ மலயத்வஜஸ்ய ஸ ஸப்தஸப்திஸமத்யுதிர்
பிப்ரதங்கதநிர்விஶேஷம் அஶேஷமேவ மஹீதலம் ।
ஆரராத ஸபாஜநை: அதிமாநுஷைர்மதுரேஶ்வரம்
ரஞ்ஜயந் ஜநதா: ஸுதாநிவ ராஜஶேகரபார்திவ: ॥ 88

இதி மஹாகவிஶ்ரீநீலகண்டதீக்ஷிதப்ரணீதே ஶிவலீலார்ணவே பஞ்சதஶ: ஸர்க: ।

---

1360 பகவான் தன்னை வணங்கும் அரசனுக்குத் தயை ததும்புகின்ற பார்வையினால் அருள் பாத்தார். அந்த வம்சத்திற்குத்தகுந்த தனயன் பிறப்பான் என்று ஆசியளித்து மறைந்தார். 86

1361 பரமேச்வரனுடைய அனுக்ரஹத்தினால் விக்ரம பாண்டியனுக்கு, ராஜசேகரபாண்டியன் என்ற மகன் பிறந்தான். அவனிடம் பூ பாரத்தை ஒப்படைத்து விட்டு தந்தை ஈச்வரனுடைய பதத்தை அடைந்தான். 87

1362 மலயத்வஜபாண்டியனின் ஏழாவது தலைமுறையில் வந்த ராஜசேகரபாண்டியன்,ஏழு குதிரைகள் பூட்டிய ரதத்தில் உலாவருகின்ற ஸுரியனைப் போன்ற ஒளி பொருந்தியவன். பூமி அனைத்தையுமே தன் தோள்வலைபோல (சுமைஎன்று நினைக்காமல்) அணி என்று நினைத்து பரிபாத்தான். மதுராநாயகனான ஸுந்தரேசப்பெருமானை, மனித சக்திக்கப்பாற்பட்ட விசேஷமான பூஜைகள் செய்து மகிழ்வித்தான். மக்களை தன் குழந்தைகளைப்போல் காப்பாற்றி வந்தான். 88

பதினைந்தாவது ஸர்கம் முடிவடைந்தது

## षोडशः सर्गः

अथ क्षितिं बिभ्रति राजशेखरे द्विजो विरूपाक्ष इति प्रथां गतः।
चिराय शंभुं तपसा प्रसादयन् अवाप गौरीत्यभिविश्रुतां सुताम्॥ १

स कन्यया जात्वपि पञ्चवर्षया समेत्य तातस्तपसेऽभियाचितः।
अदेयमप्येवमपत्यसौहृदात् अदिक्षदेकाक्षरमम्बिकामनुम्॥ २

भवप्रवाहप्रतिपन्नवासनाप्रबन्धयोगेन कुमारिकापि सा।
असाधयन् मन्त्रमशेषसिद्धिदं जगन्निदानं जपयज्ञनिष्ठया॥ ३

गुरौ वसन्तं कृतभैक्षवृत्तिकं कदाचिदेकं गृहमागतं वटुम्।
अवेक्ष्य तस्मै गुरुरात्मजामदात् अचिन्तयित्वा कुलशीलबन्धुताम्॥ ४

दुरागमाभ्यासविलुप्तसत्पथे महेश्वरद्वेषमलीम सात्मनि।
दधीचिशापोपहते द्विजान्वये प्रसूतमेनं बुबुधे ततस्तु सः॥ ५

अलङ्घनीयं शिवशासनं सुरः आपि स्वयंभूविबुधेश्वरादिभिः।
स चिन्तयन् स्वोचितदान सत्कृतां सहोपयन्त्रा प्रजिघाय कन्यकाम्॥ ६

अथ स्नुषामात्मभुवा स्वयं हृतां अवेक्ष्य फाले भसितेन लाञ्छितां
शिवद्विषौ तच्छ्वशुरौ ज्वलद्रुषौ निवेशयामासतुरालये पृथक्॥ ७

---

## பதினாறாவது ஸர்கம்

## திருவிளையாடல் 23

### அந்தணப்பெண் துயர்நீக்கிய படலம் (விருத்த, குமார, பாலரான படலம்)

1363 ராஜசேகரபாண்டியன் ராஜ்யத்தை ஆளும் காலத்தில் விருபாக்ஷன் என்ற அந்தணன், வெகு நாட்களாக சிவ பூஜை செய்து, அவருடைய அனுக்ரஹத்தினால் கௌரீ என்ற பெண்ணைப் பெற்றான். 1

1364 ஐந்து வயதே ஆன அந்தப் பெண் ஒரு நாள் தந்தையை அணுகி 'அப்பா! நான் தவம் செய்யப் போகிறேன்' என்றாள். அந்த வரனுக்குக் கொடுப்பது தகாது என்று அறிந்தும்கூட பெண்ணிடம் உள்ள பிரேமையினால் ஓர் அக்ஷரம் உள்ள பீஜ மந்திரத்தை தந்தை, பெண்ணுக்கு உபதேசித்தார். 2

1365 உலகியல் விவஹாரம் நடந்து கொண்டே தான் இருந்தது. உள்ளத்திலேயே இருந்த அந்தப் பழக்கங்களைப் பொருட்படுத்தாமல், மிகுந்த மன உறுதியோடு, ஸகலவிதமான ஸித்திகளையும் அளிக்கக்கூடிய அந்த பீஜாக்ஷர மந்திரத்தை முறைப்படி ஜபித்துக் கொண்டிருந்தாள். 3

## அத ஷோடஶ: ஸர்க: ।

அத க்ஷிதிம் பிப்ரதி ராஜஶேகரே த்விஜோ விரூபாக்ஷ இதி ப்ரதாம் கத: ।
சிராய ஶம்பும் தபஸா ப்ரஸாதயந்நவாப கௌரீத்யபிவிஶ்ருதாம் ஸூதாம் ॥ 1

ஸ கந்யயா ஜாத்வபி பஞ்சவர்ஷயா ஸமேத்ய தாதஸ்தபஸேऽபியாசித: ।
அதேயமப்யேவமபத்யஸௌஹ்ருதாத் அதிக்ஷதேகாக்ஷரமம்பிகாமநும் ॥ 2

பவப்ரவாஹப்ரதிபந்நவாஸநா ப்ரபந்தயோகேந குமாரிகாபி ஸா ।
அஸாதயன் மந்த்ரம் அஶேஷஸித்திதம் ஜகந்நிதாநம் ஜபயஜ்ஞநிஷ்டயா ॥ 3

குரௌ வஸந்தம் க்ருதபைக்ஷவ்ருத்திகம் கதாசிதேகம் க்ருஹமாகதம் வடும் ।
அவேக்ஷ்ய தம்மை குருராத்மஜாமதாத் அசிந்தயித்வா குலஶீலபந்துதாம் ॥ 4

துராகமாப்யாஸவிலுப்தஸத்பதே மஹேஶ்வரத்வேஷம் அலீமஸாத்மநி ।
ததீசிஶாபோபஹதே த்விஜாந்வயே ப்ரஸூதமேநம் புபுதே ததஸ்து ஸ: ॥ 5

அலங்கநீயம் ஶிவஶாஸநம் ஸூரைரபி ஸ்வயம்பூவிபுதேஶ்வராதிபி: ।
ஸ சிந்தயன் ஸ்வோசிததாந ஸத்க்ருதாம் ஸஹோபயந்த்ரா ப்ரஜிகாய கந்யகாம் ॥ 6

அத ஸ்நுஷாம் ஆத்மபுவா ஸ்வயம் ஹ்ருதாம் அவேக்ஷ்ய பாலே பஸிதேந லாஞ்சிதாம்।
ஶிவத்விஷோ தச்ச்வஶூரௌ ஜ்வலத்ருஷௌ நிவேஶயாமாஸது: ஆலயே ப்ருதக் ॥ 7

---

1366 குருகுலத்தில் வசித்துக்கொண்டு வெளியிலே பிக்ஷை வாங்கி சாப்பிட்டுக் கொண்டு,ப்ரஹ்மச்சாரி ஒருவன். ஒருநாள் விருபாக்ஷனுடைய வீட்டிற்கு வந்தபோது, ‘குலம் என்ன? யார் பந்துக்கள்? கோத்ரம் என்ன’ என்பதை எல்லாம் விஜாரிக்காமல், தன் பெண் கௌரியை கன்னிகாதானம் செய்து கொடுத்தார். 4

1367 பிறகு தான், அவருக்குத் தெரிய வந்தது. அவன் ததீசி முனிவர் சாபத்திற்குள்ளான குடும்பத்தில் பிறந்தவன். முறைப்படி அத்யயனம் செய்யாதவன், கெட்ட பழக்கங்கள் உள்ளவன், பரமேச்வரனை வெறுப்பவன். தறிகட்டு அலைபவன் என்று (வைஷ்ணவ ப்ரஹ்மச்சாரி) 5

1368 தேவர்களே ஆகட்டும், ப்ரஹ்மனே ஆகட்டும், தேவாதிபதிகளே தான் ஆகட்டும், சிவனுடைய ஆணையை மீறமுடியாதே. விரூபாக்ஷன் தன்னால் முடிந்த சீர்வரிசைகளுடன் கணவனோடு பெண்ணை அனுப்பினார். ( புகுந்த வீட்டிற்கு) 6

1369 தன் மகனால் அழைத்துவரப்பட்டவளும், நெற்றியில் விபூதி பட்டையாக பூசிக் கொண்டிருப்பவளுமான மருமகளைப் பார்த்து கோபம் கொண்ட சிவத்வேஷிகளான மாமனார் மாமியார்கள் அவளை ஆலயத்தில் (வீட்டில்) தனியாக ஒதுக்கி வைத்திருந்தார்கள். 7

शिवार्चनध्यानकथाविवर्जिते श्मशानतुल्ये सदने तु तत्र सा ।
अमङ्गले सत्यपि सर्वमङ्गलां अनुस्मरन्ती दिवसानि चिक्षिपे ॥ ८

ततः सदारे श्वशुरे बहिर्गते कदाचिदेनां सदने निषेदुषीम् ।
प्रहर्षयन्प्रादुरभूद्द्विजात्मना बिभूतिरुद्राक्षविभूषितो इरः ॥९

तमातिथेयीभिरसौ सभाजयन्त्युपास्त यावज्जरठं द्विजर्षभम् ।
विवेश तावच्छ्वशुरस्तमालयं स च द्विजोऽदृश्यत सुन्दरो युवा ॥ १०

ततः शिवानुस्मरणैकसाधनां स वेपमानामभिलक्ष्य तां हरः ।
स्तनंधयोऽदृश्यत तत्समीपतः स्वरेण तस्याः श्वशुरावमर्षयन् ॥ ११

ततस्तु पृष्टा प्रतिवेशिनीसुतं तमालपन्ती श्वशुरेण कुप्यता ।
बहिर्निरस्ता शिशुनामुना समं निनाय पर्यश्रुमुखी निशामसौ ॥ १२

भवस्य तं पश्चिमवक्त्ररूपिणं शिशुं स्मरन्तीं हृदि विप्रकन्यकाम् ।
निनाय कल्ये निजमास्पदं शिवो वृषेण विस्मापितविष्टपत्रयः ॥ १३

स्तनंधयं देवमुपास्य सा जहौ स्तनंधयत्वं भवसंघसंचितम् ।
क्रमेत शंभावविर्तक्यवैभवे क्व तत्क्रतुन्यायविदुक्तिपद्धतिः ॥ १४

मनुं किल द्व्यक्षरमाचचक्षिरे प्रभुं प्रजासर्गविधौ पुराविदः ।
अयं तु सृष्टिस्थितिसंहृतिक्षमो मनुं यमेकाक्षरमारराध सा ॥ १५

---

1370 மாமனார் வீட்டில் சிவ பூஜையோ, தியானமோ கிடையாது. அந்த வீடு அவளுக்கு சுடுகாடாகத் தோன்றியது. ஸகலவிதத்திலும், அமங்களமாக இருந்த அந்த வீட்டில், ஸர்வ மங்களமான தேவியை த்யானம் செய்து கொண்டு நாட்களைப் போக்கினாள் கௌரி. 8

1371 ஒரு நாள் மனைவியுடன் மாமனார் வெளியே சென்றிருந்தார். கௌரி சிவ நாமம் சொல்லிக் கொண்டிருந்தாள். அப்போது விபூதி ருத்திராக்ஷம் தரித்த பிராமணக் கிழவனாக சிவபெருமான் உள்ளே நுழைந்தார். கௌரிக்கு ஸந்தோஷம். 9

1372 அந்த பிராமணக்கிழவருக்கு உசிதமான அதிதி உபசாரம் செய்துகொண்டிருக்கும் போதே, வெளியில் சென்றிருந்த மாமனார் மாமியார் உள்ளே நுழைந்தனர். அதே கணம் கிழவர் அழகான யௌவன புருஷனாகி விட்டார். 10

1373 கௌரிக்கு ஒன்றும் புரியவில்லை. சிவசிவ என்று நடு நடுங்கி நின்றாள். மாமனார் மாமியாருக்கு கோபம். அதே ஸமயம் வந்தவன் ஒரு வயது குழந்தையாகி விட்டான். 11

1374 'ஏது இந்தக்குழந்தை?' என்று மாமனார் கேட்டார். 'அடுத்த வீட்டுக் குழந்தை' என்றாள் கௌரி மாமனாருக்கு கோபம் எல்லை மீறி விட்டது. அவளையும் குழந்தையையும் வெளியில் தள்ளி கதவை சாத்தினார். இரவு

ஶிவார்சநத்யாநகதாவிவர்ஜிதே ஶ்மஶாநதுல்யே ஸதநே து தத்ர ஸா ।
அமங்களே ஸத்யபி ஸர்வமங்களாம் அநுஸ்மரந்தீ திவஸாநி சிக்ஷிபே ॥ 8

தத: ஸதாரே ஶ்வஶுரே பஹிர்கதே கதாசிதேநாம் ஸதநே நிஷேதுஷீம் ।
ப்ரஹர்ஷயன் ப்ராதுரபூத் த்விஜாத்மநா விபூதிருத்ராக்ஷவிபூஷிதோ ஹர: ॥9

தம் ஆதிதேயீபிரஸௌ ஸபாஜயந்தி உபாஸ்த யாவஜ்ஜரடம் த்விஜர்ஷபம் ।
விவேஶ தாவச்வஶுரஸ்தமாலயம் ஸ ச த்விஜோऽத்ருஶ்யத ஸுந்தரோ யுவா ॥ 10

தத: ஶிவாநுஸ்மரணைகஸாதநாம் ஸ வேபமாநாமபிலக்ஷ்ய தாம் ஹர: ।
ஸ்தநந்தயோऽத்ருஶ்யத தத்ஸமீபத: ஸ்வரேண தஸ்யா: ஶ்வஶுராம் அவமர்ஷயந் ॥ 11

ததஸ்து ப்ருஷ்டா ப்ரதிவேஶிநீஸுதம் தமாலபந்தீ ஶ்வஶுரேண குப்யதா ।
பஹிர்நிரஸ்தா ஶிஶுநாமுநா ஸமம் நிநாய பர்யஶ்ருமுகீ நிஶாமஸௌ ॥ 12

பவஸ்ய தம் பஶ்சிமவக்ரரூபிணம் ஶிஶு ஸ்மரந்தீம் ஹ்ருதி விப்ரகந்யகாம் ।
நிநாய கல்யே நிஜமாஸ்பதம் ஶிவோ வ்ருஷேண விஸ்மாபிதவிஷ்டபத்ரய: ॥ 13

ஸ்தநந்தயம் தேவமுபாஸ்ய ஸா ஜஹௌ ஸ்தநந்தயத்வம் பவஸங்கஸஞ்சிதம் ।
க்ரமேத ஶம்பௌ அவிதர்க்யவைபவே க்வ தத்க்ரதுந்யாயவிதுக்திபத்ததி: ॥ 14

மநும் கிலம் த்வயக்ஷரமாசசக்ஷிரே ப்ரபும் ப்ரஜாஸர்கவிதௌ புராவித: ।
அயம் து ஸ்ருஷ்டிஸ்திதிஸம்ஹ்ருதிக்ஷமோ மநும் யமேகாக்ஷரமாரராத ஸா ॥ 15

---

முழுவதும் அழுது கொண்டே பொழுதைக் கழித்தாள். 12

1375 குழந்தையின் முகத்தைப் பார்த்தாள் கௌரி. பகவானின் ஸத்யோஜாத ஸ்வருபம் நினைவுக்கு வந்தது. விடியற்காலையில், சிவ பெருமான் விருஷபத்தில் ஏற்றிக்கொண்டு தன் இருப்பிடம் சென்றார். உலகம் முழுவதும் ஆச்சரியத்தில் ஆழ்ந்தது. 13

1376 அந்தப் பெண்,முலைப்பால் பருகும் குழந்தையாக வந்த பகவானை உபாஸித்ததால், அவளுக்கு பலபிறவிகளில் சேர்த்த விதிப்பயனால் மறுபடியும் தாய்ப் பால் குடிக்கவேண்டியது அற்றுப் போய்விட்டது. பூர்வமீமாம்ஸா சாஸ்திரத்தில் தத்க்ரது நியாயம் என்று ஒரு நியாயம் உண்டு. எந்தப் பயனை உத்தேசித்து ஒரு யாகம் செய்யப்படுகிறதோ, அந்தப் பயன் தான் கிட்டும். வேறு பயன் கிட்டாது என்று கருத்து. அது இந்த கௌரி விஷயத்தில் பொருந்தி ஸத்யமாகிவிட்டது. 14

1377 சிவ என்ற இரண்டக்ஷரத்தை உடைய மந்திரத்தை உபாஸித்த முன்னோர்கள் உலகியல் படைப்பில் மட்டும் பயனைப்பெற்றனர். பரமேச்வரனோ ஓர் அக்ஷரமான ஓம் காரத்தின் பொருள் அல்லவா? அந்த மந்திரத்தை ஜபித்தால் படைத்தல், காத்தல், தன்னுள் அடக்கிக் கொள்ளுதல் என்ற மூன்று சக்திகளையும் அளிக்க வல்லது. அந்த அக்ஷரத்தை அல்லவா கௌரி உபாஸித்தாள். 15

कदापि देवः करिकालचोलतो निशम्य नृत्तानभभियुक्ततां निजाम्।
बभूव सद्यो नटसूत्रपारगः किमादिशैलूषकुले तदद्भुतम्॥ १६

शिवे प्रसक्ते सति शैवरात्रिके महाव्रते मन्दिरमैशमाश्रितः।
प्रसन्नमभ्यर्चनया हरं पुनः प्रसादयिष्यन्प्रणनर्त पार्थिवः ॥ १७

उदञ्चिताकुञ्चितसव्यपादिकाचिरानुवृत्तिश्रमखिन्नमानसः।
श्रमं तमीशोऽपि समं व्यचिन्तयत्स हि स्वयं पश्यति शंभुमात्मवत्॥ १८

निधाय सव्यं निभृतं पदं क्षितौ उदञ्चयन् दक्षिणमङ्घ्रिमुच्चकैः
नटन्नुदस्व श्रममित्यनुक्षणं नटेश्वरं प्रार्थयते स्म पार्थिवः॥ १९

अदर्शितस्पन्दमथेषदप्यमुं नटेशबिम्बं कलयन्नरेश्वरः।
कृपाणकृत्तेन निजेन मौलिना स देवमाराधयितुं समैहत॥ २०

न किंचिदानन्दमयं स वेद तं न वा किमर्चास्त्वनपायिनीं स्थितिम्।
तथापि तस्याभवदीदृशी मतिः तथा हि भक्तिस्तपसापि दुर्लभा॥ २१

अवेक्ष्य दुर्भेदममुष्य निश्चयं तथा स देवः प्रससाद नर्तितुम्।
न दुर्लभा तस्य कदापि वश्यता तु स्थिरशीलतैव नः॥ २२

अनन्यथात्वं वृतमात्मकर्मणां अपि त्यजन्दूरत एव शंकरः।
यथा स मेने हृदि राजशेखरः तथा विपर्यस्य ननर्त तत्क्षणम्॥ २३

---

## திருவிளையாடல் 24

## கால்மாறியாடினபடலம்

*1378 ஒரு சமயம் கரிகாலசோழன் என்கிற சோழச் சக்கிரவர்த்தி, பாண்டிய அரசனுக்கு நாட்டியக் கலையில் ஈடுபாடு கிடையாது என்று சொன்னானாம். அதைக் கேட்டு அந்தக் கலையைக் கற்றான். நடனக்கலை குலத்தில் இது ஒன்றும் வியப்பில்லை.* 16

*1379 மஹாசிவராத்ரி புண்ய காலத்தில் விரதமிருந்து, பகவான் அருளை வேண்டி சிவ பெருமானை பூஜித்தான். மேலும் திருப்திப்படுத்துவதற்காக, பகவான் முன்னிலையில் தானே ஆடினான் நர்தனம்.* 17

*1380 நர்தனத்தில் வலது காலை பூமியில் ஊன்றி இடது காலைத்தூக்கி மடித்து ஆடும் போது ஏற்படுகின்ற வேதனையை உணர்ந்த பாண்டிய மன்னன், எப்பொழுதுமே இடது காலையே தூக்கி ஆடிக்கொண்டிருக்கிற நடாராஜனாகிய சிவபெருமானின் பாதத்திற்கும் வேதனை ஏற்படுமே என்று பகவானை தானாகவே பாவிக்கின்ற பாண்டிய அரசன் வருந்தினான்.* 18

*1381 பெருமானே! இடது காலை பூமியில் ஊன்றி, வலது காலை உயரே தூக்கி மடித்து நடனம் செய்வதின் மூலம் (காலை மாற்றி ஆடுவதின் மூலம்)*

கதாபி தேவ: கரிகாலசோலதோ நிஶம்ய நிருத்தாநபியுக்ததாம் நிஜாம் ।
பபூவ ஸத்யோ நடஸூத்ரபாரக: கிமாதிஶைலூஷகுலே ததத்புதம் ॥ 16

ஶிவே ப்ரஸக்தே ஸதி ஶைவராத்ரகே மஹாவ்ரதே மந்திரமைஶமாஶ்ரித: ।
ப்ரஸந்நமப்யர்சநயா ஹரம் புந: ப்ரஸாதயிஷ்யன் ப்ரணநர்த்த பார்திவ: ॥ 17

உதஞ்சிதாகுஞ்சிதஸவ்யபாதிகாசிராநுவ்ருத்திஶ்ரமகிந்நமாநஸ: ।
ஶ்ரமம் தமீஶேऽபி ஸமம் வ்யசிந்தயத் ஸ ஹி ஸ்வயம் பஶ்யதி ஶம்பும் ஆத்மவத் ॥ 18

நிதாய ஸவ்யம் நிப்ருதம் பதம் க்ஷிதாவுதஞ்சயன் தக்ஷிணமங்க்ரிமுச்சகை: ।
நடந்நுதஸ்வ ஶ்ரமமித்யநுக்ஷணம் நடேஶ்வரம் ப்ரார்த்தயதே ஸ்ம பார்திவ: ॥ 19

அதர்ஶிதஸ்பந்தமதேஷதப்யமும் நடேஶபிம்பம் கலயந் நரேஶ்வர: ।
க்ருபாணக்ருத்தேந நிஜேந மௌலிநா ஸ தேவம் ஆராதயிதும் ஸமைஹத ॥ 20

ந கிஞ்சிதாநந்தமயம் ஸ வேத தம் ந வா கிமர்சாஸ்த்வநபாயிநீம் ஸ்திதிம் ।
ததாபி தஸ்யாபவதீத்ருஶீ மதிஸ்ததா ஹி பக்திஸ்தபஸாபி துர்லபா ॥ 21

அவேக்ஷ்ய துர்பேதம் அமுஷ்ய நிஶ்சயம் ததா ஸ தேவ: ப்ரஸஸாத நர்த்திதும் ।
ந துர்லபா தஸ்ய கதாபி வஶ்யதா ஸுதுர்லபா து ஸ்திரஶீலதைவ ந: ॥ 22

அநந்யதாத்வம் வ்ரதமாத்மகர்மணாம் அபி த்யஜன் தூரத ஏவ ஶங்கர: ।
யதா ஸ மேநே ஹ்ருதி ராஜஶேகரஸ்ததா விபர்யஸ்ய நநர்த்த தத்க்ஷணம் ॥ 23

---

வேதனையைப் போக்கிக்கொள்ள வேண்டும் என்று பிரார்த்தித்தான். ( பகவானை உதஸ்வ என்று அரசன் பிரார்த்தித்தான்). 19

1382 வெள்ளி அம்பலத்தில் ஆடுகின்ற நடேச பிம்பம் சிறிது கூட அசையாமல் இருப்பதைக் கண்டான் அரசன். உடனே இடுப்பிலிருந்து தன் உடைவாளை உருவி, தன் வேண்டுகோளுக்கு இணங்காவிடில் 'தலையை வெட்டி பகவானுக்கு ஆராதனை செய்வேன்' என்று எச்சரித்தான். 20

1383 அரசனுக்கு பகவான் கால்மாறி ஆடுவதில் ஆனந்தமும் இல்லை. இங்கே தரிசனமளிக்கின்ற அர்சா மூர்த்தி மாற்றிக் கொள்ளாது என்று அரசன் சிந்திக்கலாமல்லவா? அப்படிச் செய்யவில்லை. ஏன்? அரசனுக்கு உள்ள பக்தியால் தவம் செய்தாலும் இப்படிப்பட்ட பக்தி கிடைக்காது. 21

1384 'தன் தலையை வெட்டி ஆராதனை செய்வேன்' என்கிற அரசனுடைய துணிச்சலை தடுக்கமுடியாது என்றறிந்த பரமேச்வரன், அவன் விருப்பப்படியே நர்தனம் செய்யலாம் என்று மனம் கனிந்தார். பகவானுக்கு பக்தனுக்குக் கட்டுப்படுவது என்பது கடினமானது அல்ல. ஆனால் பக்தனிடம் இப்படிப்பட்ட துணிச்சலைப் பார்ப்பது மிகவும் அரிது. 22

1385 பகவான் சங்கரன் தனது முறையான நடனத்தை விட்டு விட்டு, ராஜசேகரபாண்டியன் மனதில் என்ன பாவனையோ அதற்குத் தக்கப்படி

निधाय सव्ये निखिलं भरं तनोः पदे यदास्त प्रकृतिस्तु तस्य सा ।
प्रपञ्चसर्गस्थितिभङ्गभारमप्ययं हि तत्रैव निवेश्य निर्वृतः ॥ २४
तदद्भुतं ताण्डवमैन्दुशेखरं प्रसादतस्तस्य सिषेविरे जनाः ।
गणेश्वरास्ते विषये महीपतेः वसन्ति ये शंकरभक्तिशालिनः ॥ २५
बबन्ध भक्तिं स्वकृते कृते नृपो विशिष्य तस्मिन्विपरीतताण्डवे । –
तदादि तद्वंशभुवोऽपि पार्थिवाः तमेव देवं शरणं प्रपेदिरे ॥ २७
प्रमार्ष्टुमागः शतशः समर्पयन्पतिः प्रजानां माणिभूषणानि सः ।
सुतं कुलोत्तुङ्ग इति श्रुतं ततो वरेण लभे नचिरेण शूलिनः ॥ २७
गते धरित्रीभृति राजशेखरे गतिं समाख्याविधयैव सूचिताम् ।
कुलोचितोच्चतुङ्गगुणाकरश्चिरात् दधौ कुलोत्तुङ्गमहीपतिः क्षितिम् ॥ २८
गुणेन शीलेन कुलेन चोन्नतं तमीक्षमाणाः क्षितिपास्ततस्ततः ।
उपाहरन् स्वस्वकुमारिकाः स्वतः ततोऽयुतं तस्य बभूवुरङ्गनाः ॥ २९
स तासु लेभे सकलासु पार्थिवः समानुपान्वयशीलवृत्तिषु ।
कुलोचितौदार्यविवेकशालिनां कुमारकाणामयुतानि षट् ततः ॥ ३०

தன் நிலையை மாற்றிக் கொண்டார். அப்படிச் செய்வதின் மூலம் பக்தாபீஷ்ட வரதன் என்ற பிருதையும் காப்பாற்றிக் கொள்ளலாமே. பகவான் அக்கணமே கால்மாறி ஆடினார். 23

1386 வலது கால் பகவானுடையது, இடது கால் தேவியினுடையது. ஆகவே வலது காலை திடமாக ஊனாது பளுவெல்லாவற்றையும் மாற்றிக் கொண்டார். இடது காலை ஊன்றினார். இது தான் அவருடைய இயல்பு. இடது பக்கத்தில் தன் சுமை எல்லாம் மாற்றினார் என்றால், ப்ரபஞ்ச ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸ்ம்ஹாரம் போன்ற பொருப்புகளை தேவியிடம் ஒப்பபடைத்து விட்டு,அவர் 'ஹாய்யா' நிம்மதியா நர்தனம் ஆடினார். 24

1387 சந்திரசேகரப்பெருமானுடைய அந்த அத்புதமான நடனத்தை, மக்கள் அனைவரும் கண்டு களித்தனர். அரசனின் ஆட்சிக்குட்பட்வர்கள், சங்கரனிடம் ஆழ்ந்தபக்தி கொண்டவர்கள் அனைவரும் அந்த ஆச்சரியத்தை அனுபவித்தார்கள். 25

1388 தன் விருப்பம் நிறைவேறியதைக் கண்டு பாண்டிய மன்னன் மிகவும் மகிழ்ந்தான். அவனுடைய பக்தி பகவானுடைய இதே கால் மாறி ஆடியதாண்டவத்திலே மேலும் திடமாயிற்று. அவன் மட்டும் அல்லாமல் அவனுடைய வம்சத்தில் தோன்றிய மற்ற அரசர்களும், அந்த ஸுந்தரபுருஷனாகிய கால்மாறி தாண்டவம் ஆடினவனையே சரணம் அடைந்தார்கள். 26

நிதாய ஸவ்யே நிகிலம் பரம் தநோ: பதே யதாஸ்த ப்ரக்ருதிஸ்து தஸ்ய ஸா ।
ப்ரபஞ்சஸர்கஸ்திதிபங்கபாரப்யயம் து தத்ரைவ நிவேஶ்ய நிர்வ்ருத: ॥ 24
ததத்புதம் தாண்டவமைந்துஶேகரம் ப்ரஸாததஸ்தஸ்ய ஸிஷேவிரே ஜநா: ।
கணேஶ்வராஸ்தே விஷயே மஹீபதேர்வஸந்தி யே ஶங்கரபக்திஶாலிந: ॥ 25
பபந்த பக்திம் ஸ்வக்ருதே க்ருதே ந்ருபோ விஶிஷ்ய தஸ்மின் விபரீததாண்டவே ।
ததாதி தத்வம்ஶபுவோऽபி பார்திவாஸ்தமேவ தேவம் ஶரணம் ப்ரபேதிரே ॥ 26
ப்ரமார்ஷ்டுர்மாக: ஶதஶ: ஸமர்பயன் பதி: ப்ரஜாநாம் மணிபூஷணாநி ஸ: ।
ஸுதம் குலோத்துங்க இதி ஶ்ருதம் ததோ வரேண லேபே நசிரேண ஶூலிந: ॥ 27
கதே தரித்ரீப்ருதி ராஜஶேகரே கதிம் ஸமாக்யாவிதயைவ ஸூசிதாம் ।
குலோசிதோத்துங்ககுணாகரஶ்சிராத் ததௌ குலோத்துங்கமஹீபதி: க்ஷிதிம் ॥ 28
குணேந ஶீலேந குலேந சோந்நதம் தமீக்ஷமாணா: க்ஷிதிபாஸ்ததஸ்தத: ।
உபாஹரன் ஸ்வஸ்வகுமாரிகா: ஸ்வதஸ்ததோऽயுதம் தஸ்ய பபூவுரங்கநா: ॥ 29
ஸ தாஸு லேபே ஸகலாஸு பார்திவ: ஸமாநரூபாந்வயஶீலவ்ருத்திஷு ।
குலோசிதௌதார்யவிவேகஶாலிநாம் குமாரகாணாம் அயுதாநி ஷட் தத: ॥ 30

*1389 தன்னுடைய தவறுகளைத் தீர்க்கும் பொருட்டு, அரசன் பகவானுக்கு நூற்றுக்கணக்கான ரத்தினாபரணங்களை அர்ப்பனம் செய்தான். சூலம் தாங்கிய பெருமானின் அருளினால் குலோத்துங்கன் என்ற குமாரனை அடையக்கூடிய வரத்தைப் பெற்றார். 27*

*1390 ராஜசேகர பாண்டிய மன்னன் காலகதி அடைந்ததும், குலோத்துங்கன் தன் பெயருக்கேற்ப குலத்தின் அணிகளான நற்பண்புகளின் உச்சியை எட்டினான். வெகு காலம் பூமியை ஆண்டான். (மறைந்த அரசனுக்கு ராஜசேகரன் என்று பெயர் சந்திரசேகரன் என்று பொருள். அரசன் சந்திரசேகரனாகி விட்டான் என்பதை சமத்காரமாக என்ற பதத்தினால் குறிப்பிடுகிறார்). 28*

*1391 நற்பண்பிலும், நடத்தையிலும், குலப்பெருமையைக் காப்பதில் சிறந்தவனான அந்த அரசனைத்தேடி மற்ற தேசத்து அரசர்கள் போட்டி போட்டுக் கொண்டு, தமது குமாரிகளைத் தாமாகவே அவனுக்கு திருமணம் செய்து வைத்தார்கள். இவ்வாறு அவனுக்கு பதினாயிரம் மனைவிகள் இருந்தனர். 29*

*1392 அந்த பதினாயிரம் மனைவிகள் குலத்திலும், அழகிலும் நடத்தையிலும் ஒரே சீராக இருந்தார்கள். அவர்களிடம் நற்பண்பு, பரந்த மனப்பான்மை, விவேகம் உள்ள அறுபதினாயிரம் குழந்தைகளைப் பெற்றான். 29*

*1393 அத்தனை குமாரர்களில் மூத்தவன் பெயர் அனந்தகுணன் அவனை ஆச்ரயித்து அவனுடைய திருவடிகளிலே தமது உயிரை ஸமர்ப்பித்த மற்ற குமாரர்களும் அவனைப்போலவே பண்புமிக்கவர்களாக இருந்தார்கள். 30*

अजायतानन्तगुणाख्यया श्रुतः तनूभवानां प्रथमो धरापतेः।
तदाश्रितास्तच्चरणार्पितासवः परेऽपि तत्तुल्यगुणा विजह्रिरे ॥ ३१

यदीदृशी दारसमृद्धिरीदृशी कुलाभिवृद्धिश्च बभूव भूपतेः।
इदं हि लीलायितमिन्दुशेखरप्रसादलेशप्रतिलम्भसंपदः ॥ ३२

स वीरभद्रः स्वशरीरसंभवैः स्वतुल्यतेजोनिधिभिर्गणैरिव।
समं कुलोत्तुङ्गमहीपतिः सुतैः शशास सर्वाञ्छिवशासनद्विषः ॥ ३३

अथ द्विजः कश्चन बालपुत्रया समं गृहिण्या मधुरां समासदत्।
तले वटस्यास्त विशालशीतले क्वचित्कठोरातपतापतापितः ॥ ३४

असंचरत्पान्थमनालपद्द्विजं सरोजकोशोदरलीनषट्पदम्।
प्रतप्तहेमप्रतिमं समस्तमप्यभूत् अहर्मध्यगते जगद्रवौ ॥ ३५

ज्वलद्भिनापि ज्वलनेन भूतले मदान्धभद्रेभनखंपचं रजः।
अवेक्षमाणैर्नयनैः शरीरिणां अतिप्रतेपे दहनाहतैरिव ॥ ३६

बाहुलतोपधायिना कुचाग्रविन्यस्तमुखेन सूनुना।
तले शयानां तृषयार्दितां तरोरवेक्ष्य हर्तुं सलिलं ययौ बहिः ॥ ३७

स किंचिदासाद्य सरोऽतिनिर्मलं हरन् जलं पद्मदलेन शीतलम्।
ददर्श विद्धां दयितां महेषुणा रुदन्तमस्याः शिशुमप्युरःस्थले ॥ ३८

---

*1394* இத்தனை மனைவிகளா? இத்தனை புத்திரர்களா? அவர்கள் அனைவரும் பண்புள்ளவர்களாக, ஒற்றுமை உள்ளவர்களாக இருந்தார்களா? இது எங்காவது நடக்குமா? என்று சிந்திக்கலாம். எல்லாம் ஈசனின் லீலை. அவனுடைய கிருபையின் ஒரு திவிலை என்கிறார் தீக்ஷிதர். 31

*1395* பரமேச்வரனே வீரபத்ரன் என்ற உருவத்தில், தன் திருமேனியிலிருந்து கணங்கள், தங்களைப் போலவே வீர்யம் கொண்டவர்களாக வைத்துக் கொண்டது போல், குலோத்துங்க மஹாராஜனும், அத்தனை குமாரர்களுடன் கூடி சிவனாணை மீறுபவர்களை அடக்கிக்கொண்டு அரசாண்டான். 33

## திருவிளையாடல் 25

## பழியஞ்சின படலம்

### (அந்தணர் மனைவியின் மரணத்தை நிருபித்தல்)

*1396* அந்தணன் ஒருவன் தன் மனைவி இளம் குழந்தையுடன், மதுரைக்கு வந்தார். வெயில் மிகவும் கடுமையாக இருந்ததால், நிழல் மிகுந்த ஒரு ஆலமரத்தடியில் தங்கினார்கள். 34

**அஜாயதாநந்தகுணாக்யயா ஶ்ருதஸ்தநூபவாநாம் ப்ரதமோ தராபதே: ।**
**ததாஶ்ரிதாஸ்தச்சரணார்பிதாஸவ: பரேऽபி தத்துல்யகுணா விஜஹ்ரிரே ।। 31**

**யதீத்ருஶீ தாரஸம்ருத்திரீத்ருஶீ குலாபிவ்ருத்திஶ்ச பபூவ பூபதே: ।**
**இதம் ஹி லீலாயிதமிந்துஶேகர ப்ரஸாதலேஶப்ரதிலம்பஸம்பத: ।। 32**

**ஸ வீரபத்ர: ஸ்வஶரீரஸம்பவை: ஸ்வதுல்யதேஜோநிதிபிர்கணைரிவ ।**
**ஸமம் குலோத்துங்கமஹீபதி: ஸுதை: ஶஶாம்ஸ ஸர்வாஞ்சிவஶாஸநத்விஷ: ।। 33**

**அத த்விஜ: கஶ்சந பாலபுத்ரயா ஸமம் க்ருஹிண்யா மதுராம் ஸமாஸதத் ।**
**தலே வடஸ்யாஸ்த விஶாலஶீதலே க்வசித் கடோராதபதாபதாபித: ।। 34**

**அஸஞ்சரத்பாந்தம் அநாலபத்த்விஜம் ஸரோஜகோஶாதரலீநஷட்பதம் ।**
**ப்ரதப்தஹேமப்ரதிமம் ஸமஸ்தமப்யப்ருதஹர்மத்யகதே ஜகத் ரவௌ ।। 35**

**ஜ்வலத்விநாபி ஜ்வலநேந பூதலே மதாந்தபத்ரேபநகம் பசம் ரஜ: ।**
**அவேக்ஷமாணைர்நயநை: ஶரீரிணாமதிப்ரதேபே தஹநாஹதைரிவ ।। 36**

**ஸ கேஹிநீம் பாஹுலதோபதாயிநா குசாக்ரவிந்யஸ்தமுகேந ஸூநுநா ।**
**தலே ஶயாநாம் த்ருபயாதிதாம் தரோ: அவேக்ஷ்ய ஹர்த்தும் ஸலிலம் யயௌ பஹி: ।। 37**

**ஸ கிஞ்சிதாஸாத்ய ஸரோऽதிநிர்மலம் ஹரன் ஜலம் பத்மதலேந ஶீதலம் ।**
**ததர்ஶ வித்தாம் தயிதாம் மஹேஷுணா ருதந்தமஸ்யா: ஶிஶுமப்யுரஸ்ஸ்தலே ।। 38**

---

*1397 வழிப்போக்கர்களின் சஞ்சாரமில்லை. மரங்களில் ஒரு பறவை கூட கூவவில்லை. வண்டுகள் தாமரை மொக்குகளில் புகுந்து விட்டன. சூரியன் நடுப்பகல் உச்சிக்கு வந்தபோது, உருக்கிய தங்கம் போல் அனைத்தும் பளபளத்தது. 35*

*1398 பூமியில் எங்கும் நெருப்பு எரியவில்லை. ஆனால் சூடு பரவியது. மதம் மிகுந்த யானை காலை தரையில் வைக்க முடியாமல், அதன் நகங்கள் வெந்து போயின. மக்களின் கண்கள் திறந்திருந்தன. ஆனால் கூசின. நெருப்பு பற்றி எரிந்தாற்போல ஒன்றுமே தெரியவில்லை. 36*

*1399 அந்தப்பெண் கையை தலைகாணியாக வைத்துக் கொண்டு பூமியில் படுத்திருந்தாள். அவளுடைய முலைக் காம்பில் வாயை வைத்துக்கொண்டிருந்தது குழந்தை. அவளுக்கு நாக்கு வரண்டு விட்டது. அந்தணன் நீர் கொண்டு வருவதற்காக வெளியே சென்றான். 37*

*1400 அவன் ஒரு குளத்தை அடைந்து,ஒரு தாமரை இலையில் ஜலத்தை எடுத்துக் கொண்டு கோரமான காட்சியைக் கண்டான். மரத்தடிக்கு வந்தபோது ஒரு மனைவி மீது ஒரு பாணம் பாய்ந்திருந்தது. அவளுடைய மார்பில் குழந்தை அழுது கொண்டிருக்கிறது. 38*

प्रियावियोगव्यसनाभिमूर्छितः स यावदन्विष्यति तत्र कारणम् ।
ददर्श तावन्मृगयाविहारिणं धनुर्धरं लुब्धकमेकमन्तिके ॥ ३९

अनेन नूनं दयिता ममाहतेत्यवेत्य केशेषु परामृशन्नमुम् ।
उपेत्य राज्ञः प्रतिहार मच्चकैः द्विजः प्रचुक्रोश विषादविह्वलः ॥ ४०

ततः कुलोत्तुङ्गनृपस्तदद्भुतं निशम्य खिन्नः पृथगन्युङ्क तौ ।
निश्चिकायैकमघाभियोक्तरि द्विजे किराते च दृढं मृषोत्तरे ॥ ४१

स तत्त्वमत्र व्यवसातुमीश्महे विना प्रसादाद्गिरिजापतेरिति ।
निरुध्य लुब्धं शमयन्द्विजं गिरा नृपः प्रपेदे शरणं पिनाकिनम् ॥ ४२

द्विजद्वितीयो नगराद्बहिश्चरन्निशि त्वमस्यामुपलप्स्यसेऽखिलम् ।
इतीरितो भूपतिरिन्दुमौलिना स वेश्यवीथ्याम् अचरत्क्वचिद्बहिः ॥ ४३

ततः क्वचित्संवदतोर्द्वयोर्मिथः कथां स शुश्राव कृतान्तदूतयोः ।
निनीषतोर्वैश्यगृहे वरं क्षणात् प्रवृत्तवैवाहिकमङ्गलावधौ ॥ ४४

शरव्यमुद्दिश्य शकुन्तमेककं पुरा पुलिन्देन चिरार्पितः शरः ।
वटद्रुलग्नः पवनाहतः पतन् यथावधीद्विप्रवधूमतर्कितम् ॥ ४५

तथाद्य वैवाहिकतूर्यनिस्वनैः परिभ्रमन्त्यात्र गवा निपातितम् ।
वरं समादाय करग्रहावधौ पुनर्निवर्तैवहि तत्क्षणादिति ॥ ४६

---

*1401* மனைவியை இழந்து விட்டோம் என்ற அதிர்ச்சியில் அவனுக்குத் தலை சுற்றியது. இதற்கு என்ன காரணம் என்று தேடினான். பக்கத்தில் ஒரு வேடன் வில்லும் கையுமாக வேட்டையாடுவதைப் பார்த்தான். 39

*1402*இவன்தான் என் மனைவியை வில்லால் அடித்துக் கொலை செய்துள்ளான் என்று தீர்மானித்து அவனுடைய முடியைப் பிடித்து இழுத்துக் கொண்டு அரண்மனை வாயிற்காப்போனிடம் துயரம் தாங்காமல் முறையிட்டான். 40

*1403* உடனே குலோத்துங்க மன்னன் இந்த அதிசயமான வழக்கை விசாரித்தான். அரசன் அவர்களைத் தனித் தனியாக அழைத்து கேள்வி கேட்டான். குற்றம் சாட்டுகிற அந்தணன் குற்றம் சாட்டப்பட்ட வேடன். இவ்விருவரில் யார் பொய் சொல்லுகிறாற்கள் என்பதை அரசனால் நிச்சயிக்க முடியவில்லை. 41

*1404* இந்த விஷயத்தில் உண்மையை நிர்ணயிக்க நம்மால் முடியவில்லை. பரமேச்வரன் கிருபையின்றி இதை தீர்க்கமுடியாது என்று அரசன் நினைத்தான் வேடனை சிறையிட்டான். அந்தணனை பொறுமை காட்ட வேண்டும் என்று வேண்டினான். ஸுந்தரேசரை சரணடைந்தான் அரசன். 42

ப்ரியாவியோகவ்யஸநாபிமூர்ச்சித: ஸ யாவதந்விப்யதி தத்ர காரணம் ।
ததர்ஶ தாவந்ம்ருகயாவிஹாரிணம் தநுர்தரம் லுப்தகமேகமந்திகே ।। 39

அநேந நூநம் தயிதா மமாஹதேத்யவேத்ய கேஶேஷு பராம்ருஶந்நமும் ।
உபேத்ய ராஜ்ஞ: ப்ரதிஹாரமுச்சகைர்த்விஜ: ப்ரசுக்ரோஶ விஷாதவிஹ்வல: ।। 40

தத: குலோத்துங்கந்ருபஸ்ததத்புதம் நிஶம்ய கிந்ந: ப்ருதகந்வயுங்க்த தௌ ।
ந நிஶ்சிகாயைகமகாபியோக்தரி த்விஜே கிராதே ச த்ருடம் ம்ருஷோத்தரே ।। 41

ந தத்த்வமத்ர வ்யவஸாதுமீஶ்மஹே விநா ப்ரஸாதாத் கிரிஜாபதேரிதி ।
நிருத்ய லுப்தம் ஶமயந் த்விஜம் கிரா ந்ருப: ப்ரபேதே ஶரணம் பிநாகிநம் ।। 42

த்விஜத்விதீயோ நகராத் பஹிஶ்சரன் நிஶி த்வமஸ்யாம் உபலப்ஸ்யஸேऽகிலம் ।
இதீரிதோ பூபதிரிந்துமௌலிநா ஸ வைஶ்யவீத்யாம் அசரத் க்வசித்பஹி: ।। 43

தத: க்வசித் ஸம்வததோர்த்வயோர்மித:கதாம் ஸ ஶுஶ்ராவ க்ருதாந்ததூதயோ: ।
நிநீஷதோர்வைஶ்யக்ருஹே வரம் க்ஷணாத் ப்ரவ்ருத்தவைவாஹிகமங்களாவதௌ ।। 44

ஶரவ்யமுத்திஶ்ய ஶகுந்தமேககம் புரா புலிந்தேந சிரார்பித: ஶர: ।
வடத்ருலகன: பவநாஹத: பதன் யதாவதீத் விப்ரவதூம் அதர்கிதம் ।। 45

ததாத்ய வைவாஹிகதூர்யநிஸ்வநை: பரிப்ரமந்த்யாத்ர கவா நிபாதிதம் ।
வரம் ஸமாதாய கரக்ரஹாவதௌ புநர்நிவர்த்தேவஹி தத்க்ஷணாதிதி ।। 46

---

1405 ஸுந்தரேசர் கூறினார் 'அரசனே! அந்தணரை அழைத்துக்கொண்டு, இன்று இரவு நகரத்திற்கு வெளியே சென்றால் உனக்கு எல்லா உண்மையும் விளங்கும்' என்றார். அதைக்கேட்டு அரசன், அந்தணனுடன் வெளிக் கிளம்பினான். வைச்ய வீதியைத் தாண்டிச் சென்றான். 43

1406 அரசனும் அந்தணனும் நடந்ததைப் பற்றி பேசிக் கொண்டே சென்றார்கள். அப்பொழுது ஒரு கதை அவர்கள் காதில் விழுந்தது. ஒரு வைச்யரின் வீட்டுக் கல்யாண மண்டபத்தில், மாப்பிள்ளை தாலி கட்டவேண்டிய தருணத்தில் இருந்தான். கல்யாணம் முடிந்தவுடன் மாப்பிள்ளையின் உயிரை எடுத்துச் செல்வதற்காக காத்திருந்தார்கள். 44

1407 இதற்கு முன், ஒரு வேடன் வில்லில் நாணேற்றி ஒரு பக்ஷியை குறிவைத்து பாணத்தைத் தொடுத்தான். அது ஆலமரத்தின் கிளையில் சிக்கி இருந்தது. காற்று வேகத்தில், எதிர்பாராமல் அந்தணன் மனைவி மீது அடித்து அவள் உயிரிழந்தாள். 45

1408 அது போல, மங்களகாரணத்திற்காக கல்யாண வீட்டில் கட்டிமேளம் கொட்டும் போது, ஒரு மாடு உள்ளே நுழைந்து அந்த வரனை முட்டும். அந்த மாப்பிள்ளை கை நீட்டி கல்யாணப் பெண்ணை பாணிகிரஹணம் செய்து கொள்ளும்போது அடிபட்டு விழுந்து விடுவான். அவனை கொண்டு போகப்

सुविस्मितस्तेन सह द्विजन्मना स्वसंशयच्छेदकरीं गिरं तयोः ।
निशम्य संवादकृते नृपः क्षणं प्रतीक्ष्य तस्थौ वरपातनक्षणम् ॥ ४७

तथैव वृत्तेऽत्र कृतान्तचेष्टिते धनैः प्रभूतैः परितोष्य स द्विजम् ।
विसृज्य च व्याधमनुग्रहं विभोः अशेषमावेदयति स्म मन्त्रिषु ॥ ४८

विधुः कलङ्की वियति भ्रमन्नसौ कलङ्कशङ्कापि न शंकराश्रिते ।
अतो न ते स्यादपवादभीरिति प्रशंसितः पाण्ड्यनृपः स मन्त्रिभिः ॥ ४९

निवेशितोऽनन्तगुणोऽथ मन्त्रिभिः पदे पितुः शांकरमेयुषः पदम् ।
स रत्नकेयूरवदाबहद्भुजे चतुःसमुद्रीपरिवेष्टितां भुवम् ॥ ५०

द्विजाधमः कश्चिदवन्तिषु स्थितः स्वमातृसक्तस्तदमर्षिणं गुरुम् ।
निहत्य हृत्वा निखिलं च तद्धनं निशि प्रतस्थे सह मातृपाशया ॥ ५१

तमध्वनि व्याधभटा मदोद्भटाः प्रहृत्य सर्वस्वमथापहृत्य च ।
अपि स्त्रियं तामवरुध्य सुन्दरीं अहासिषुस्तं तनुमात्रशेषितम् ॥ ५२

कदन्नभिक्षाधिगमाव्यवस्थया कृशो रुजार्तः कृपणो दिगम्बरः ।
परिभ्रमन्दिक्षु कदांचिदानशे स भाग्ययोगेन कदम्बकाननम् ॥ ५३

---

போகிறோம். அந்த கணமே திரும்பி விடுவோம் என்று யமதூதர்கள் பேசிக் கொண்டிருந்தது காதில் விழுந்தது. 46

1409 அரசன் அந்தணனோடுகூட ஆச்சரியப்பட்டு நின்று கொண்டிருந்தான்.அவர்களுடைய ஐயம் தீர்ந்துவிட்டது. வேடன் குறிவைத்து மனைவியைத் தாக்கவில்லை. எதிர்பாரமல் நேர்ந்தது. அந்த வரன் விழும் கணத்திற்காக காத்திருந்தனர். 47

1410 யமதூதர்கள் பேசிக்கொண்டிருந்தபடியே இந்த ஸம்பவம் நடைபெற்றது. அரசன் அந்தணனுக்கு நிறைய செல்வங்களை வழங்கி அவனை ஸமாதானப் படுத்தி அனுப்பினான். வேடனையும் விடுவித்தான். மந்திரிகளிடம் ஒன்று விடாது நடந்ததைத் தெரிவித்தான். 48

1411 மந்திரிகள் சொன்னார்கள்- 'அரசே! இதில் அபவாதம் வருமோ என்று நீங்கள் கலங்க வேண்டாம். நீங்கள் பகவானை அண்டியிருக்கிறீர். அண்டியிருக்கிற சந்திரனுக்கு கலங்கம் இல்லை. தனியே ஆகாசத்தில் சஞ்சரிக்கும் சந்திரனுக்குத்தான் கலங்கம். 49

1412 தந்தை சங்கரனுடைய திருவடி சேர்ந்தவுடன், மந்திரிகள் அவனுடைய குமாரன் அனந்தகுணபாண்டியனை அரசனாக்கினார்கள். அவன்

ஸுவிஸ்மிதஸ்தேந ஸஹ த்விஜந்மநா ஸ்வஸம்ஶயச்சேதகரீம் கிரம் தயோ: ।
நிஶம்ய ஸம்வாதக்ருதே ந்ருப: க்ஷணம் ப்ரதீக்ஷ்ய தஸ்தௌ வரபாதநக்ஷணம் ॥ 47
ததைவ வ்ருத்தேऽத்ர க்ருதாந்தசேஷ்டிதே தநை: ப்ரப்ருதை: பரிதோப்ய ஸ த்விஜம் ।
விஸ்ருஜ்ய ச வ்யாதமநுக்ரஹம் விபோ: அஶேஷமாவேதயதி ஸ்ம மந்த்ரிஷு: ॥ 48
விது: கலங்கீ வியதி ப்ரமந்நஸௌ கலங்கஶங்காபி ந ஶங்கராஶ்ரிதே ।
அதோ ந தே ஸ்யாத் அபவாதபீரிதி ப்ரஶம்ஸித: பாண்ட்யந்ருப: ஸ மந்த்ரிபி: ॥49
நிவேஶிதோऽநந்தகுணோऽத மந்த்ரிபி: பதே பிது: ஶாங்கரமேயுஷ: பதம் ।
ஸ ரத்நகேயூரவதாவஹத் புஜே சதுஸ்ஸமுத்ரீபரிவேஷ்டிதாம் புவம் ॥ 50
த்விஜாதம: கஶ்சிதவந்திஷு ஸ்தித: ஸ்வமாத்ருஸக்தஸ்ததமர்ஷிணம் குரும் ।
நிஹத்ய ஹ்ருத்வா நிகிலம் ச தத்தநம் நிஶி ப்ரதஸ்தே ஸஹ மாத்ருபாஶயா ॥ 51
தமத்வநி வ்யாதபடா மதோத்படா: ப்ரஹ்ருத்ய ஸர்வஸ்வமதாபஹ்ருத்ய ச ।
அபி ஸ்த்ரியம் தாமவருத்ய ஸுந்தரீமஹாஸிஷுஸ்தம் தநுமாத்ரஶேஷிதம் ॥52
கதந்நபிக்ஷாதிகமாவ்யவஸ்தயா க்ருஶா ருஜார்த்த: க்ருபணோ திகம்பர: ।
பரிப்ரமன் திக்ஷு கதாசிதாநஶே ஸ பாக்யயோகேந கதம்பகாநநம் ॥ 53

---

நான்குகடல்கள் சூழ்ந்த பூமியை லகுவாக ரத்ன கேயூரம் போல, தோளில் ஏற்று நிர்வகித்தான். 50

## திருவிளையாடல்

## 26 மாபாதகம் தீர்த்தபடலம்

1413 அவந்தியில் ஒரு பிராமணப்பதர், காமத்தினால் தன் தாயையே விரும்பினான். அதைக் கண்டித்த அவனுடைய குருநாதரைக் கொன்றுவிட்டு அவருடைய செல்வம் அனைத்தையும் அபஹரித்துக்கொண்டு நள்ளிரவில் தாய் என்ற பாசத்துடன் வெளிக் கிளம்பினான். 51

1414 அவனை வேடர்கள் வழிமறித்து பிடித்து அடித்தார்கள் அவன் கொண்டுவந்த எல்லா செல்வத்தையும் அந்த அழகான பெண் மானத்தையும் கொள்ளை அடித்தனர். அவனை உயிரோடு விரட்டி விட்டர்கள். 52

1415 பசி தாகம் தாங்கமுடியாமல் அவலச்சோறு பிச்சை எடுத்தான். எடுத்த பிச்சையும் வயிற்றுக்குள் போகவில்லை. மிகவும் இளைத்துப்போய் விட்டான். கட்ட கிழிந்த துணி கூட கிடைக்காமல் எங்கெல்லாமோ அலைந்தான். இத்தனை கொடுமைகளுக்கிடையே அவன் ஒரு புண்ணியம் செய்திருந்தான். இல்லாவிட்டால் கதம்பவனமாகிய மதுரைக்கு வந்திருப்பானா? 53

अयत्नमाच्छादनमन्नमप्यसौ प्रविष्टमात्रो नगरीमविन्दत ।
अनुग्रहान्मीनदृशोऽधुनापि यत्न तत्र कश्चित्क्षुधितो न दुःखितः ॥ ५४

संचरञ्जातु किरातदंपती विलासिनौ विश्वविलक्षणश्रियौ ।
ददर्श दिष्ट्या निशि नर्मतत्परौ महेशधामप्रतिहारसीमनि ॥ ५५

स तत्र विस्रम्भमवाप्य सँलपन् न्यवेदयत्स्वं निखिलं विचेष्टितम् ।
ततः किरातीवचनानुवर्तिना किरातयूनेत्थमबोधि निष्कृतिम् ॥ ५६

न कर्मयोगैर्न तपः शतेन वा विनेतुमंहस्तव विप्र! पार्यते ।
दुरुत्तरं दुष्कृतमप्यमुं शिवं प्रपद्य वर्षैस्त्रिभिरुत्तरिष्यसि ॥ ५७

इतीरयित्वैव तिरोहितं क्षणात् अवेक्ष्य तद्दन्द्वमपास्तसंशयः ।
अवाललम्बे दृढमम्बिकासखं स विप्रबन्धुः शरणं शरीरिणाम् ॥ ५८

जपार्चनध्याननतिप्रदक्षिणस्तवैः स तिस्रः शरदो निरन्तरम् ।
प्रसाद्य देवं प्रमथैः पुरौकसां समक्षमानीयत शांकरं पुरम् ॥ ५९

विशन्पुरीमेव विधूतपातकः सकृत्प्रणम्यैव शिवं गणोऽभवत् ।
परं तु वैदेशिक एष वत्सरान्प्रतारितत्त्रीनिति पौरवागभत् ॥ ६०

अनुस्मरन्स्वं चरितं विसिष्मिये स नीयमानः प्रमथैः शिवान्तिकम् ।
विमृष्टमर्मा तु शिवे न्यवेशयत्ततस्त्रिवर्षार्चनयाऽधमर्णताम् ॥ ६१

---

1416 மீனாக்ஷீ தேவியின் கிருபையினால் அவளுடைய ஊரில் இன்று கூட பசியினால் துன்பப்பட்டவர்கள் கிடையாது. மீனாக்ஷியின் நகரத்தில் நுழைந்தவுடனேயே அவன் கை ஏந்தாமலேயே அவனுக்கு உடுக்கத் துணியும், உண்ண உணவும் கிடைத்தன. மறு கணம் அவனுடைய துயரமும் தீர்ந்தது.54

1417 எங்கெல்லாமோ சுற்றி விட்டு, ஒரு ஸமயம் மஹேசனுடைய கோவிலின் அருகில், உல்லாஸமாக கவர்ச்சியுடன் காணப்படும் ஒரு வேட தம்பதிகளைப் பார்த்தான். நடு வீதியில் அவர்கள் பரஸ்பரம் கொஞ்சிக் கொண்டிருந்தார்கள். 55

1418 அவர்களிடம் நம்பிக்கை ஏற்பட்டு, அவர்களிடம், பிறப்பு முதல் தன்னுடைய அக்ரமச் செயல்களை எல்லாம் அவர்களிடம் சொன்னான். நல்ல வழி காட்டுங்கள் என்று அவர்களை கேட்டான். வேடுவச்சி சொன்னாள் ‘ஏதாவது சொல்றீங்களா? ஐயோ பாவம் பரிதாபமாக இருக்கிறது. வாயைத் திறவுங்களேன்.’ என்று புருசனைக் கெஞ்சினாள். புருசன் அவனுக்கு ஒரு பிராயச்சித்தம் சொன்னான் 56

1419 அப்பப்பா! நீ பண்ணிய பாவம், என்ன கர்மா செய்தாலும் தீராது. நூறு தவம் செய்தாலும் தாண்டவே முடியாத அந்த பாபத்தை, மூன்றாண்டுகள் சிவ விரதம் இருந்தால் கரை ஏறிவிடலாம். 57

அயத்நமாச்சாதநமந்நமப்யஸௌ ப்ரவிஷ்டமாத்ரோ நகரீம் அவிந்தத ।
அநுக்ரஹாந்மீநத்ருஶோऽதுநாபி யத்ந தத்ர கஶ்சித் க்ஷுதிதோ ந து: கித: ॥54

ஸ ஸஞ்சரன் ஜாது கிராததம்பதீ விலாஸிநௌ விஶ்வவிலக்ஷணஶ்ரியௌ ।
ததர்ஶ திஷ்ட்யா நிஶி நர்மதத்பரௌ மஹேஶதாமப்ரதிஹாரஸீமநி ॥ 55

ஸ தத்ர விஸ்ரம்பமவாப்ய ஸல்லபந் ந்யவேதயத் ஸ்வம் நிகிலம் விசேஷ்டிதம் ।
தத: கிராதீவசநாநுவர்திநா கிராதயூநேத்தமபோதி நிஷ்க்ருதிம் ॥ 56

ந கர்மயோகைர்ந தபஶ்ஶதேந வா விநேதுமம்ஹஸ்தவ விப்ர! பார்யதே ।
துருத்தரம் துஷ்க்ருதமப்யமும் ஶிவம் ப்ரபத்ய வர்ஷைஸ்த்ரிபிருத்தரிஷ்யஸி ॥57

இதீரயித்வைவ திரோஹிதம் க்ஷணாதவேக்ஷ்ய தத் த்வந்த்வமபாஸ்தஸம்ஶய: ।
அவாலலம்பே த்ருடமம்பிகாஸகம் ஸ விப்ரபந்து: ஶரணம் ஶரீரிணாம் ॥58

ஜபார்சநத்யாநநதிப்ரதிக்ஷிணஸ்தவை: ஸ திஸ்ர: ஶரதோ நிரந்தரம் ।
ப்ரஸாத்ய தேவம் ப்ரமதை:புரோகஸாம் ஸமக்ஷமாநீயத ஶாங்கரம் புரம் ॥ 59

விஶந் புரீமேவ விதூதபாதக: ஸக்ருத் ப்ரணம்யைவ ஶிவம் கணோऽபவத் ।
பரந்து வைதேஶிக ஏஷ வத்ஸரான் ப்ரதாரிதஸ்ரீநிதி பௌரவாகபூத் ॥ 60

அநுஸ்மரன் ஸ்வம் சரிதம் விஸிஷ்மியே ஸ நீயமாந: ப்ரமதை:ஶிவாந்திகம் ।
விம்ருஷ்டமர்மா து ஶிவே ந்யவேஶயத் ததஸ்த்ரிவர்ஷார்சநயா அதமர்ணதாம் ॥ 61

---

*1420* இதைக் கேட்டுக்கொண்டே அவன் நிமிர்ந்து பார்த்தான். அந்த தம்பதிகளைக் காணோம். நல்லவனோ கெட்டவனோ. பிறவி எடுத்தவன் சிவனைச் சரணமடைந்து தானே பிறவிப் பயனைப் பெருகிறான். அந்த அம்பிகாரமணனை உள்ளத்தில் கெட்டியாகப்பிடித்துக் கொண்டான் அந்த அந்தணப் பாவி. 58

*1421* மூன்றாண்டுகள் ஓயாமல் அவன் பரமேச்வரனை ஜபம், அர்ச்சனை. த்யானம், நமஸ்காரம். பிரதக்ஷிணம் செய்து துதித்துக்கொண்டே இருந்தான். ஈசன் மகிழ்ந்தான். ப்ரமதகணங்களை அனுப்பினார். அவர்கள் அவனை மரியாதையுடன் சிவபுரமான மதுரைக்கு, நகரஜனங்கள் மத்தியில், அழைத்து வந்தனர். 59

*1422* பாவங்களெல்லாம் தொலைந்து அவன் தூயவன் ஆனான். ஒரு முறை ஸுந்தரேசனை வணங்கினான். சிவகணங்களுள் ஒருவனாக ஆகிவிட்டான்.. ஆனால், வெளிதேசத்தான் நம் நகரத்திற்கு வந்தான். பல பெண்களை ஏமாற்றியவன் நன்கு தேரிவிட்டான் (ப்ரகர்ஷேண தாரித: ப்ரதாரித:)என்று நகரமக்களிடயே பேச்சு வந்தது. 60

*1423* அவன் தன் கதையை நினைத்துப் பார்த்தான். 'நமக்கா இந்த பெருமை?' என்று வியந்தான். ப்ரமதகணங்கள் சிவனிடம் கொண்டு சேர்த்த போது, உண்மையை ஆராய்ந்தான். ஒன்றுமே தகுதி இல்லாத நமக்கு பரமேச்வரனிடத்தில் எப்படி ஈடுபாடு வந்தது? அதுவும் அவன் கிருபையால் தான். அதற்கு நாம் பகவானுக்குக் கடன்பட்டிருக்கிறோம். என்று உணர்ந்தான். 61

अथाङ्क इत्यस्त्रविदां पुरोगमो गुरुर्भटानां खुरलीषु विश्रुतः ।
बहून्समध्यापयत् अस्त्रसंहितां प्रयोगसंहाररहस्यकोविदः ॥ ६२

बभूव शिष्येष्वमितेषु सिद्ध इत्यभिख्यया कश्चन तस्य बल्लभः ।
तमस्त्रशास्त्रेषु विशिष्यः पुत्रवत् गरुर्व्यनैषीदवित् अन्दुराशयम् ॥ ६३

स दुर्मीतिः स्वं गुरुमप्रकाशयन् प्रकाशयन्स्वां पटुतां तदाहिताम् ।
अपि स्वशिष्या इति शत्रकोविदान् भटान्सतीर्थ्यान् प्रलपंश्चचार सः ॥ ६४

कदाचिदङ्कस्य सदा सदाशिवप्रणामहेतोर्वसतः शिवालये ।
उपेत्य गेहं यवुतिं च तत्प्रियां रहो जिघृक्षत्रनयावधीरितः ॥ ६५

तमङ्करूपं परिगृह्य जातुचित् दुराशयं द्वन्द्वरणे निबर्हितम् ।
पुराद्बहिः पश्यति पौरमण्डले कृपाणपाणिर्युयुधेऽमुना हरः ॥ ६६

स वञ्चयन्खङ्गममुष्य लीलया कदापि मर्म स्वकमप्रदर्शयन् ।
अपक्रमापक्रमसंप्लुताप्लुतैः विचित्रमीशो व्यचरद्रणाङ्गणे ॥ ६७

अवस्थितः स्थाणुवत् अग्रतो रिपोः निपातयन् निश्चलमायुधं क्षितौ ।
अपि प्रहाराञ्छतशोऽस्य निः सृतन् अवञ्चयत् कितचिदिवाङ्गकुशनैः ॥ ६८

---

## திருவிளையாடல் 27

## அங்கம் வெட்டின படலம்.

1424 பகவானுடைய ப்ரமதகணங்களின் தலைவனான அங்கன் என்பவன் ருத்திர படர்களுக்கு பலவிதமான அஸ்திரங்களில் பயிற்சி அளித்தான். ப்ரயோகங்களை எப்படி பின்வாங்குவது என்கிற ரஹஸ்யங்களையும் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தான். 62

1425 அங்கனுடைய சிஷ்யர்களிலே ஒருவன் ஸித்தன். அவன் அங்கனுக்கு நெருங்கிய நண்பனானான். அவன் கெட்டகுணம் படைத்தவன் என்று குருவிற்குத் தெரியாது. அவனுக்கு மேலும் சில அஸ்திரப்ரயோக நுட்பங்களைக் கற்றுக்கொடுத்தான். 63

1426 கெடுமதிபடைத்த அவன் தன் குருவை வெளிப்படுத்தாமல், நான்தான் குரு. நானே கற்றுக்கொண்டேனாக்கும். எனக்கு குரு ஒன்றும் சொல்லிக் கொடுக்கவில்லை. அவருக்கே நான்தான் குரு. எல்லோரும். என்னிடம் தான் கற்றுக் கொண்டார்கள் என்றும், தன்னுடன் குருவிடம் படித்தவர்களையும் தன் சிஷ்யர்கள் என்று படர்களின் மூலம் ப்ரலாபித்தான். 64

1427 ஒரு ஸமயம் சிவாலயத்திலேயே அங்கன் பிரதக்ஷிண நமஸ்காரத்தில்

அதாங்க இத்யஸ்த்ரவிதாம் புரோகமோ குருர்படாநாம் குரலீஷு விஶ்ருத: ।
பஹூன் ஸமத்யாபயதஸ்த்ரஸம்ஹிதாம் ப்ரயோகஸம்ஹாரரஹஸ்யகோவித: ॥ 62

பபூவ ஶிஷ்யேஷு அமிதேஷு ஸித்த இத்யபிக்யயா கஶ்சந தஸ்ய வல்லப: ।
தமஸ்த்ரஶஸ்த்ரேஷு விஶிஷ்ய புத்ரவத் குருர்வ்யநைஷீம் அவிதன் துராஶயம் ॥63

ஸ துர்மதி: ஸ்வம் குருமப்ரகாஶயன் ப்ரகாஶயன் ஸ்வாம் படுதாம் ததாஹிதாம் ।
அபி ஸ்வஶிஷ்யா இதி ஶஸ்த்ரகோவிதான் படான் ஸதீர்த்யான் ப்ரலபம்ஶ்சசார ஸ: ॥ 64

கதாசிதங்கஸ்ய ஸதா ஸதாஶிவ ப்ரணாமஹேதோர்வஸத: ஶிவாலயே ।
உபேத்ய கேஹம் யுவதிம் ச தத்ப்ரியாம் ரஹோ ஜிக்ருக்ஷன் அநயாவதீரித: ॥ 65

தமங்கரூபம் பரிக்ருஹ்ய ஜாதுசித் துராஶயம் த்வந்த்வரணே நிபர்ஹிதும் ।
புராத்பஹி: பஶ்யதி பௌரமண்டலே க்ருபாணபாணிர் யுயுதேऽமுநா ஹர: ॥ 66

ஸ வஞ்சயன் கட்கமமுஷ்ய லீலயா கதாபி மர்ம ஸ்வகமப்ரதர்ஶயன் ।
அபக்ரமாபக்ரமஸம்ப்லுதோப்லுதைர் விசித்ரமீஶோ வ்யசரத் ரணாங்கணே ॥ 67

அவஸ்தித: ஸ்தாணுவத் அக்ரதோ ரிபோர் நிபாதயன் நிஶ்சலமாயுதம் க்ஷிதௌ ।
அபி ப்ரஹாராஞ்சதஶோऽஸ்ய நிஸ்ஸ்ருதான் அவஞ்சயத் கிஞ்சிதிவாங்ககுஞ்சநை: ॥ 68

---

ஈடுபட்டிருந்தான். அப்பொழுது ஸித்தன் அவன் வீட்டிற்குச்சென்று, அவன் இளம் மனைவியை ரஹஸ்யமாக அணுகினான். ஆனால் அவள் அவனை திரஸ்கரித்து விட்டாள். 65

1428 அவன் ஒரு நாள் மாயையினால் அங்கன் போல் தோற்றம் எடுத்துக் கொண்டு கெட்ட எண்ணத்துடன் நகரத்திற்கு வெளியே சென்று, மக்கள் கூடியிருந்த இடத்தில் தன்னோடு மற்போர் செய்ய வரும்படி சவால்விட்டான். கையிலே உடைவாளை எடுத்துக்கொண்டு அவன் எதிரே போருக்கு வந்தார் ஒருவர், (என்று ச்லோகத்தை முடிக்காமல், தீக்ஷதர் அவர் யாரா இருக்கும் என்று ஒரு கணம் தாமதித்து பிறகு) அவர் ஸுந்தரேசப்பெருமான்தான். (என்று கூறுகிறார். அழகான சமத்காரம்) 66

1429 வாளோடு எதிரில் நிற்பவனின் வாள் வீச்சை ஏமாற்றி அகப்படாமல், ஒரு போதும் தன் மர்மஸ்தானம் அவனுடைய வாள் வீச்சு எட்டமுடியாதபடி அகலுவான். நெருங்குவான். எதிரியின் பாய்ச்சலுக்கு எதிர் பாய்ச்சல் போடுவான். இவ்வாறு ஈச்வரன் லீலைகளைப் புரிந்தான். 67

1430 சத்ருவின் எதிரே வந்த வீரன் கல்தூண்போல நின்றான். தன் உடைவாளை அசையாமல் பூமியில் ஊன்றிக் கொண்டான். எதிரியின் ஆயுதம், அசையாத இவனுடைய ஆயுதத்தில் மோதி வீழ்ந்தது. தன் மீது வரும் தாக்குதல்களை, குனிந்து கொண்டு விலக்கினான். 68

हसन्नवज्ञामसृणैर्विलोचनैः अवेक्षमाणस्तृणवत्तमुद्भटम् ।
किमप्यभिक्रम्य चकार हुंकृतैः कूपाणमुष्टिं शिथिलं स वैरिणः ॥ ६९

उदस्यतीवासिमधो निपातयत्यधो दधातीव निहन्ति मूर्ध्नि ।
प्रमत्तवत्तिष्ठति नाभिगम्यते परेण तस्यैवमर्तताहवः ॥ ७०

असिं विधून्वन् भ्रमयन्नुदञ्जयन् निपातयन्निश्चलमावहन्पुनः ।
करोऽस्य दुर्योधमनोभयंकरो निमेषमप्यैक्षत नैकचेष्टितः ॥ ७१

अविक्षतः क्वाप्यसिधेनुधारया विभिद्य तस्योदरमाहरञ्शिरः ।
प्रकाशयन्नङ्कजयं दिशां मुखे तिरोदधे तद्वपुरिन्दुशेखरः ॥ ७२

अहो जिगायाङ्क इति प्रशंसतां ततो जनानाम् अवकर्णयन् गिरः ।
विसिष्मियऽङ्कः शिवसंनिधौ वसन्नबुद्धतत्सङ्गरसंकथः स्वयम् ॥ ७३

विचित्रमेतत्किल वृत्तमीशितुः प्रवृत्तमङ्के परभक्तिशालिनि ।
इति स्तुवन्तो मधुरौकसः शिवात् अनन्यमैक्षन्त तमस्त्रकोविदम् ॥ ७४

किमेतदङ्केन शिवे निवेदितं किमन्ततो वेत्ति स तं व्यतिक्रमम् ।
अहो दयालुत्वमनङ्गहन्तुरित्यभूच्चलानामपि निश्चलं मनः ॥ ७५

ततः स कालेन शंशाङ्कशेखरः सदारमेनं प्रमथेष्वयोजयत् ।
तरन्ति नाद्यापि तपोधना द्विजाः क ईश्वराणाम् अवधारयेन्मनः ॥ ७६

---

*1431* கண்கள் சிவந்தன, எதிரியை அலட்சியமாகப் பார்த்து சிரித்தான். அவனைப் புல்லாக மதித்தான். அவனை நெருங்கி ஹும்காரம் செய்தான். எதிரியின் வாள் கைப்பிடிலியிருந்து நழுவியது. 69

*1432* வீரனாக வந்த பரமேச்வரன் அவனுடைய வாள் வீச்சை ஒதுக்குவது போல அவனை வீழ்த்தினான். அவனை நெருங்கி தலைகுனிந்து, அவன் தலையில் ஓங்கி அடித்தான். வெறிபிடித்தவன் போல அலட்சியமாக நின்றான். அவனை நெருங்க முடியவில்லை. எதிரியுடன் இவ்வாறு மாவீரன் போரிட்டான். 70

*1433* அந்த வீரன் என்ன செய்கிறான் என்று எதிராளிக்குப் புரியவில்லை. கத்தியை சொருகுகிறான், சுழற்றுகிறான், தூக்குகிறான். கீழே பாய்ச்சுகிறான். ஒரு கணம்அசையாமல் நிற்கிறான். இவனுடன் எப்படி போர் புரிவது என்று தெரியாமல் திகைக்கின்ற எதிராளியைப் பார்த்து சற்று நின்றான். 71

*1434* ஹரனுக்கு எதிராளியின் வாள் வீச்சினால் எங்குமே காயமேற்படவில்லை. கத்தியை எந்தப் பக்கம் வீசலாம் என்பது புரியாமல் எதிராளி தவித்து நின்ற போது, அவனுடைய வயிற்றைக் கிழித்து, தலையை வெட்டி தன் வெற்றியை பரப்பினான் மாய வீரன். மக்கள் எல்லோரும், 'இந்த வீரன். அங்கனையே ஜயித்துவிட்டான்' என்று அதிசயத்துடன் நிற்கும் போது, அங்கனை ஜயித்தவன் தானே என்று காட்டி. மாயவீரனான சந்திரசேகரப்

ஹஸந்நவஜ்ஞாமஸ்ருணைர்விலோசநை: அவேக்ஷமாணஸ்த்ருணவத் தமுத்படம் ।
கிமப்யபிக்ரம்ய சகார ஹுங்க்ருதை: க்ருபாணமுஷ்டிம் ஶிதிலம் ஸ வைரிண: ।।69

உதஸ்யதீவாஸிமதோ நிபாதயத்யதோ ததாதீவ நிஹந்தி மூர்தநி ।
ப்ரமத்தவத் திஷ்டதி நாபிகம்யதே பரேண தஸ்யைவமவர்த்ததாஹவ: ।।70

அஸிம் விதுந்வன் ப்ரமயந்நுதஞ்சயன் நிபாதயந்நிஶ்சலமாவஹன் புந: ।
கரோऽஸ்ய துர்யோதமநோபயங்கரோ நிமேஷமப்யைக்ஷத நைகசேஷ்டித: ।। 71

அவிக்ஷத: க்வாப்யஸிதேநுதாரயா விபித்ய தஸ்யோதரமாஹரன் ஶிர: ।
ப்ரகாஶயந் அங்கஜயம் திஶாம் முகே திரோததே தத்வபுரிந்துஶேகர: ।।72

அஹோ ஜிகாயாங்க இதி ப்ரஶம்ஸதாம் ததோ ஜநாநாமவகர்ணயன் கிர: ।
விஸிஷ்மியேऽங்க: ஶிவஸந்நிதௌ வஸன் அபுத்ததத்ஸங்கரஸங்கத:ஸ்வயம் ।।73

விசித்ரமேதத் கில வ்ருத்தமீஶிது: ப்ரவ்ருத்தமங்கே பரபக்திஶாலிநி ।
இதி ஸ்துவந்தோ மதுரௌகஸ: ஶிவாத் அநந்யமைக்ஷந்த தமஸ்த்ரகோவிதம் ।। 74

கிமேததங்கேந ஶிவே நிவேதிதம் கிமந்ததோ வேத்தி ஸ தம் வ்யதிக்ரமம் ।
அஹோ தயாலுத்வம் அநங்கஹந்து: இத்யபூச்சலாநாமபி நிஶ்சலம் மந: ।। 75

தத: ஸ காலேந ஶஶாங்கஶேகர: ஸதாரமேநம் ப்ரமதேஷ்வயோஜயத் ।
தரந்தி நாத்யாபி தபோதநா த்விஜா: க ஈஶ்வராணாம் அவதாரயேந்மந: ।।76

---

பெருமான் மறைந்தார். 72

1435 அங்கன் ஜயித்துவிட்டான் என்று நண்பர்கள் கோஷமிட்டனர். அங்கனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவன் ஸுந்தரேசர் ஸன்னதியில் அல்லவா இருந்தான். போர் நடந்ததை பின்பு தான் தெரிந்து கொண்டான். 73

1436 அங்கன் விஷயத்தில் ஈச்வரன் காட்டிய லீலை விசித்திரமானது. அவனுடைய பரபக்திக்கு அது உகந்ததாக விளங்கியது மதுரைமக்கள் அவனைப் போற்றினார்கள். மிக உயர்ந்த பக்தியுடைய அங்கனிடம் பெருமதிப்பு ஏற்பட்டு, அவன் ஸுந்தரேசப் பெருமானேதவிர அன்னியன் இல்லை என்று கருதினார்கள். இத்தனை அஸ்திரங்களை கற்றிருக்கிறானே என்று வியப்படைந்தார்கள். 74

1437 அங்கன் சிவபெருமானிடம் என்ன தான் ஸமர்ப்பித்தான்? இத்தகைய தகாத செயல் தன் பெயரால் நடந்ததே, அதையாவது பகவானிடத்தில் சொன்னார்களா? அவருக்கு சொல்ல வேண்டுமா என்ன? அவரே அறிவாரே. மன்மதனை நிக்ரஹம் செய்த பகவானுக்கு என்ன கிருபை? அந்த கிருபை சஞ்சல மனதுள்ளவர்களையும் திடமாக ஈடுபட வைத்து விட்டதே! 75

1438 சில நாட்கள் கடந்தன. பரமேச்வரன் மனைவியோடுகூட அங்கனை தமது பிரமதகணங்களுள் ஒருவனாக ஏற்றுக்கொண்டார். இன்றும் கூட தவசீலர்களான மஹாத்மாக்களில், யாரால் தான் ஈச்வரனுடைய கருணை உள்ளத்தை புரிந்து கொள்ள முடியும்? 76

तदादि भूयः शिवभक्तिगौरवे विजृम्भमाणे विषये महीभुजः ।
तथागताः केऽप्यभिचर्य पन्नगं न्ययुञ्जतोद्दामविषाग्निभीषणम् ॥ ௭௭

तमाद्रिकूटप्रतिमं महोरगं समापतन्तं नृपतिर्विचारयन् ।
पुराद्विनिर्गत्य पुराहितं स्मरन् शरं शरासे समधत्त दारुणम् ॥ ௭௮

महेशभूषान्वययोगशङ्कितः क्षणं विनिश्चित्य स मायिकं ततः ।
अताऽयत्पन्नगपाशमाशुगैः स चावमत्तद्व्यथया विषानलम् ॥ ௭௯

हालाहलेनेव पुरा विनिर्यता विषेण तेन ज्वलताभितापिताः ।
जनाः क्षितीशेन समं समाययुः शरण्यमीशं शरणं समाकुलाः ॥ ௮௦

कृतस्मितो नीपवनेश्वरस्ततः कियत्तदस्तीति गिरा प्रहर्षयन् ।
उदेत्य लिङ्गादुरगान्तिकं गतः समन्ततः प्रेक्षत शान्तया दृशा ॥ ௮௧

ततः पुरैवोन्मथिते फणाधरे धराधरत्वं प्रतिपद्य तस्थुषि ।
विषाग्नितप्तान्मनुजान्द्रुमानापि व्यधत्त देवः करुणामृताप्लुतान् ॥ ௮௨

तथा गते भोगिनि गां सुदुर्जयां तथागताः कांचिदथाभिचारिकीम् ।
अकल्पयञ्जेतुमिमां समादिशत् अयानिधिर्वाहवृषं वृषध्वजः ॥ ௮௩

---

## திருவிளையாடல் 28

## நாகம் எய்த படலம்

*1439* அன்று முதல் மேலும் சிவ பக்தியின் பெருமை உலகில் விஸ்தாரமடைந்தது. புத்தமதத்தைச்சார்ந்த சிலர், ஆபிசாரிகம் செய்து, கடுமையான விஷத்தை தீயாக பரவி விடுகின்ற ஒரு நாகத்தை நகரத்தின் மீது ஏவினார்கள். 77

*1440* அந்த நாகம் சீறிக்கொண்டே நகரத்தின் மீது பாய்கிறது என்பதை அறிந்த அரசன் ஒரு கணம் யோசித்தான். நாகத்தினால் பெரிய கேடு என்றுணர்ந்து, நகரத்திற்கு வெளியே வந்து, வில்லில் கொடுமையான பாணத்தைத் தொடுத்தான். 78

*1441* மறுபடியும் ஒரு கணம் ஆலோசித்தான், 'இந்த நாகம் பரமேச்வரனுக்கு ஆபரணமாக விளங்குகின்ற நாகங்களின் வம்சத்தைச் சேர்ந்ததாக இருக்குமோ! 'என்று பிறகு அதன் மீது பல பாணங்களை ஏவி, நாகத்தை இறுக்கக்கட்டினான், நாகம் விஷத்தைக் கக்கியது. அந்த விஷம் தீயாகப் பரவியது. 79

*1442* ஹாலாஹால விஷம் போல மிகக்கொடிய விஷம் நெருப்பாகப் பரவியது. மக்கள் மிகவும் தாபத்தை அடைந்து, அரசனுடன் கூட ஸுந்தரேசப்

**ததாதி பூயஶ்ஶிவபக்திகௌரவே விஜ்ரும்பமாணே விஷயே மஹீபுஜ: ।**
**ததாகதா: கே஽ப்யபிசர்ய பந்நகம் ந்யயுஞ்ஜதோத்தாமவிஷாமிபீஷணம் ॥ 77**

**தமத்ரிகூடப்ரதிமம் மஹோரகம் ஸமாபதந்தம் ந்ருபதிர்விசாரயன் ।**
**புராத்விநிர்கத்ய புராஹிதம் ஸ்மரன் ஶரம் ஶராஸே ஸமதத்த தாருணம் ॥ 78**

**மஹேஶபூஷாந்வயயோகஶங்கித: க்ஷணம் விநிஶ்சித்ய ஸ மாயிகம் தத: ।**
**அதாடயத் பந்நகபாஶம் ஆஶுகை: ஸ சாவமத் தத்வ்யதயா விஷாநலம் ॥ 79**

**ஹாலாஹலேநேவ புரா விநிர்யதா விஷேண தேந ஜ்வலதாபிதாபிதா: ।**
**ஜநா: க்ஷிதீஶேந ஸமம் ஸமாயயு: ஶரண்யமீஶம் ஶரணம் ஸமாகுலா: ॥ 80**

**க்ருதஸ்மிதோ நீபவநேஶ்வரஸ்தத: கியத்ததஸ்தீதி கிரா ப்ரஹர்ஷயன் ।**
**உபேத்ய லிங்காதுரகாந்திகம் கத: ஸமந்தத: ப்ரேக்ஷத ஶாந்தயா த்ருஶா ॥ 81**

**தத: புரைவோந்மதிதே பணாதரே தராதரத்வம் ப்ரதிபத்ய தஸ்துஷி ।**
**விஷாக்நிதப்தான் மநுஜான் த்ருமாநபி வ்யதத்த தேவ: கருணாம்ருதாப்லுதான் ॥ 82**

**ததா கதே போகிநி காம் ஸுதுர்ஜயாம் ததாகதா: காஞ்சிததாபிசாரிகீம் ।**
**அகல்பயஞ்ஜேதுமிமாம் ஸமாதிஶத் தயாநிதிர்வார்ஹவ்ருஷம் வ்ருஷத்வஜ: ॥ 83**

---

*பெருமானை சரணம் அடைந்தனர். அவரால் தானே அடைக்கலம் அளிக்க முடியும்.* *80*

*1443 சிவபெருமான் புன்னகை புரிந்தார். 'அது எவ்வளவு பெரியது' என்று கேட்டார். மக்கள் குதூகலம் அடைந்தனர். லிங்கத்திலிருந்து வெளி வந்து நாகத்திடம் சென்றார். அமைதியான கண்களுடன் சுற்றிலும் பார்த்தார்.* *81*

*1444 ஸுந்தரேசப்பெருமான் அங்கு விஜயம் செய்வதற்கு முன்பே அந்த நாகம் பெரும் மலையாகச் சமைந்துவிட்டது. பரவின விஷ நெருப்பை தனது அமுத ஜடாசந்திரனால் குளிர வைத்தார் சிவபெருமான். விஷாக்னியினால் தபித்த மக்களும், தாவரவர்கங்களும், தாபம் தீர்ந்து குளிர்ந்தன. எல்லோரும் மகிழ்வுற்றனர்.* *82*

*1445 இவ்வாறு அந்த மஹா நாகம் அடங்கிவிட்டதைக் கண்டு, மதுரையை வெல்வது மிகவும் கடினம் என்று உணர்ந்த சமணர்கள், மற்றொரு ஆபிசாரம் செய்து, ஒரு பசுவின் மூலம் ஏவினர். அந்த மாயப் பசுவை ஒழிப்பதற்காக பகவான் கிருபை கூர்ந்து தனது வாஹனமான விருஷபத்தை நியமித்தார்.83*

स तुङ्गश‍ृङ्गव्यतिषङ्गनिर्दलत् दनाघनस्त्रस्तघनाम्बुवृष्टिभिः ।
तरक्षतक्षोणिरजः शमं नयन्महावृषः प्रास्थित तज्जिगीषया ॥ ८४

पदे स यद्धयानतपोध्वरांहतिप्रभेदभिन्नैर्विददार मेदिनीम् ।
रजोभिरुद्धूलितसर्वविग्रहा बभूवुरेतत्प्रभवैर्महर्षयः ॥ ८५

वृषस्तदुद्धूय विषाणयोर्युगं प्रसह्य तस्या हृदयं बिभेद गोः ।
जरद्गवीनां हृदयं विविच्यते यदन्तराश्चर्यगवाक्षवर्त्मना ॥ ८६

स तां पतन्तीमवनीधरात्मना समीक्ष्य शैलः स्वयमप्यभूद्वृषः ।
उदग्रशृङ्गः पुरमुत्तरेण यो विराजतेऽध्यापि वृषाचलाख्यया ॥ ८७

ततः कुमारं कुलभूषणाभिधं तपोभिरासाद्यकुलार्हविक्रमम् ।
तदर्पिताशेषधुरो धरापतिः पदं प्रपेदे परमैन्दुशेखरम् ॥ ८८

गाम्भीर्येण निषङ्गतां विशिखतां धर्मद्रुहां निग्रहात्
उच्छ्रायेण शरासतां कटकतामुच्चावचैर्वाङ्मुखैः
विश्वेषामनुरञ्जनैरनुपमैरुत्तंसतामप्यसौ
बिभ्राणः कुलभूषणः कुलपतिं देवः सिषेवे शिवम् ॥ ८९

इति षोडशः सर्गः

## திருவிளையாடல் 29

## மாயப்பசுவை வதைத்த படலம்

1446 விருஷபம் தனது கூறிய நீண்டு வளர்ந்த கொம்புகளால் ஆலங்கட்டி மேகங்களை குத்திப் பிளந்தது. பெரும் மழையை பெய்யச் செய்து கொண்டு கால் குளம்புகளால், பூமியிலிருந்து கிளம்பிய புழுதியை படியச்செய்து விட்டு, அந்த விருஷபம் ஆபிசாரப் பசுவை எதிர்கக் கிளம்பியது. 84

1447 அந்த விருஷபத்தின் திருவடிகளைக் குறித்து த்யானம், தவம் செய்தாலே பல சங்கடங்கள் தீருமே; அங்கே பூமியில் மஹருஷிகள் அமர்ந்து தவம், தியனம் யாகமும் செய்தனர். அவ்விடங்களில் விருஷபம் சரணங்களை வைத்தது. பூமி உடைந்தது. அப்பொழுது கிளம்பிய புழுதியினால், எல்லாமே மறைந்தன. மகருஷிகளே கூட அடையாளம் தெரியாமல் தவித்தனர். 85

1448 விருஷபம் தனது இரட்டைக் கொம்புகளால் பசுவின் இதயத்தைப் பிளந்து, எதனுள் ஆச்சரியமான ஜன்னல் மூலம் (கிழ பசுமாடுகளை) வேதஸாரம் வழியாக உள்ளே இருப்பவைகளை யோகிகள் ஆராய்வார்கள். 86

ஸ துங்கஶ்ருங்கவ்யதிஷங்கநிர்தலத்தநாகநஸ்ரஸ்தகநாம்புவ்ருஷ்டிபி: ।
குரக்ஷதக்ஷோணிரஜ: ஶமம் நயன் மஹாவ்ருஷ: ப்ராஸ்தித தஜ்ஜிகீஷயா ।। 84

பதை: ஸ யத் த்யாநதபோத்வராம்ஹதி ப்ரபேதபிந்நைர்விததார மேதிநீம் ।
ரஜோபிருத்தூலிதஸர்வவிக்ரஹா பபூவுரேதத்ப்ரபவைர்மஹர்ஷய: ।। 85

வ்ருஷஸ்ததுத்தூய விஷாணயோர்யுகம் ப்ரஸஹ்ய தஸ்யா ஹ்ருதயம் பிபேத கோ: ।
ஜரத்கவீநாம் ஹ்ருதயம் விவிச்யதே யதந்தராஶ்சர்யகவாக்ஷ வர்த்மநா ।।86

ஸ தாம் பதந்தீமவநீதராத்மநா ஸமீக்ஷ்ய ஶைல: ஸ்வயமப்யபூத் வ்ருஷ: ।
உதக்ரஶ்ருங்க: புரமுத்தரேண யோ விராஜதேऽத்யாபி வ்ருஷாசலாக்யயா ।। 87

தத: குமாரம் குலபூஷணாபிதம் தபோபிராஸாத்ய குலாஹவிக்ரமம் ।
ததர்பிதாஶேஷதுரோ தராபதி: பதம் ப்ரபதே பரமைந்துஶேகரம் ।। 88

காம்பீர்யேண நிஷங்கதாம் விஶிகதாம் தர்மத்ருஹாம் நிக்ரஹாத்
உச்ச்ராயேண ஶராஸதாம் கடகதாமுச்சாவசைர்வாங்முகை: ।
விஶ்வேஷாமநுரஞ்ஜநை: அநுபமை: உத்தம்ஸதாமப்யஸௌ
பிப்ராண: குலபூஷண: குலபதிம் தேவ: ஸிஷேவே ஶிவம் ।। 89

இதி மஹாகவிஸ்ரீநீலகண்டதீக்ஷிதப்ரணீதேஷோடஶ: ஸர்க: ।

1449 ஈசனின் விருஷபம் அந்தப்பசுவை கொம்பால் குத்தி வீழ்த்தியது. அது ஒரு மலையாகமாறி வீழ்ந்ததும், தானும் அதனருகே ஒரு மலையாயிற்று. அதுவே இன்றும் நகரத்திற்கு அருகே காணப்படும் (ருஷப)பசுமலை. நகரத்திற்கு வட எல்லையில், கொம்புகளைப் போல் காணப்படும் உயர்ந்த சிகரங்களோடு விளங்குகிறது. 87

1450 அரசன் ஸுந்தரேசனைக் குறித்து தவம் செய்து குலத்திற்குரிய வல்லமையோடு கூடிய குமாரனைப் பெற்றார். அவன் பெயர் குலபூஷண பாண்டியன். அவனிடம் தன் அரசுப் பொறுப்பை ஒப்புவித்து விட்டு, சந்திரசேகரன் திருவடி சேர்ந்தார். 88

1451 அந்த குலபூஷணன் ஒரு வில்லை ஏந்தினான். அந்த வில்லுக்கு அவனுடைய நெஞ்ஜத்தின் ஆழமே அம்புறாத்தூளி, தர்மத்தை வெறுக்கின்றவர்களை அடக்குவதே அம்புகள். மேலும் மேலும் மேன்மை பெறுவதே வில், உயர்ந்த போதனைகளே அவனுக்குக் கோட்டை உலக மக்களை அமைதியாகவும் ஆனந்தமாகவும் வாழவைப்பதே தான் அவனுடைய உயர்வு. இப்படிக் குலப்பெருமையை தாங்குகிற குலபூஷண பாண்டியன் குலதெய்வமான சிவனை ஆராதித்து வந்தான். 89

பதினாறாவது ஸர்கம் முடிவடைந்தது

## सप्तदशः सर्गः

कुलभूषणस्तदनु भूमिपतिः कुलदैवतस्य मधुराधिपतेः ।
चरणं सदा परिचरन्नशिषत् चतुरर्णवीवलयितामवनिम् ॥ १
अजनिष्ट सुन्दर इति प्रथितो नृपतेरमुष्य पृतनाधिपतिः ।
अतनिष्ट भक्तिमयमष्टविधां अपि सुन्दरेशपदपङ्कजयोः ॥ २
अभिषेणनाय कृतसंनहने शबरेश्वरे बलिनि चेदिपतौ ।
भटसंग्रहाय स बहु द्रविणं प्रददौ चमूपतिवशे नृपतिः ॥ ३
स शिवे निवेद्य शबरेन्द्रजये प्रतिभूर्भवान् अवनिभर्तुरिति ।
अविचिन्त्य किंचिदपि पर्यचरत् द्रविणैस्तु तैर्द्रविणनाथसखम् ॥ ४
अतिनूत्नमातनुत धाम विभोः स सुधार्पणफुर्टितसंघटनैः ।
रथमूर्जितं क्षितिरथस्य हयान् करिणश्च काञ्चनमयान् अकरोत् ॥ ५
बलमानेयमिति मन्त्रिवरान् बहुधा तु सोऽतिसमधत्त गिरा ।
कुलभूषणाय परिपृष्टवते कथयांबभूव पृतनां मिलिताम् ॥ ६
सचिवोदितश्रवणजात रुषं नृपमिङ्गितैः समवबुध्य ततः ।
बहिरानिनाय स महीरमणं बलदर्शनाय सह तैः पिशुनैः ॥ ७

---

## பதினேழாவது ஸர்கம்

## திருவிளையாடல் 30

### புதிய ஸேனை காண்பித்தல் (மெய்காட்டிட்ட படலம்)

*1452* மதுரா நாயகர்களுடைய கிருபையினால் குலபூஷணன் பாண்டியன், குல தெய்வத்தின் சரணங்களை ஆராதித்துக் கொண்டு நாற்கடல் சூழ்ந்த பூமியை ஆண்டுவந்தான். *1*

*1453* அரசனுக்கு ஸேனாபதியாக ஸுந்தரன் என்று புகழ்பெற்றவன் பிறந்தான். அவனும் ஸுந்தரேசப் பெருமானிடம் ஸ்ரவணம். கீர்த்தனம், ஸ்மரணம், திருவடிஸேவை, அர்ச்சனை, நாமஸங்கீர்த்தனம், பகவானுக்கு அடிமை என்ற உணர்வு, அவருடன் நட்பு, போன்ற எட்டு விதமான பக்தியை செலுத்தினான். *2*

*1454* சேதி நாட்டு அரசன் மிக்க படை வலிமையுள்ளவன். வேடர்களின் தலைவன், மதுரை நாட்டின் மீது படை எடுக்க முயற்சி செய்கிறான் என்று அறிந்து குலபூஷண பாண்டியன் தமது படைக்கு மேலும் வீரர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று ஸேனாதிபதியிடம் நிறைய செல்வத்தை ஒப்புவித்தான். *3*

### அத ஸப்ததஶ: ஸர்க: ।

குலபூஷணஸ்ததநு பூமிபதி: குலதைவதஸ்ய மதுராதிபதே:
சரணம் ஸதா பரிசரந்நஶிஷத் சதுரர்ணவீவலயிதாமவநிம் ॥ 1

அஜநிஷ்ட ஸுந்தர இதி ப்ரதிதோ ந்ருபதே: அமுஷ்ய ப்ருதநாதிபதி: ।
அதநிஷ்ட பக்திமயம் அஷ்டவிதாமபி ஸுந்தரேஶபதபங்கஜயோ: ॥ 2

அபிஷேணநாய க்ருதஸந்நஹநே ஶபரேஶ்வரே பலிநி சேதிபதௌ ।
படஸங்க்ரஹாய ஸ பஹு த்ரவிணம் ப்ரததௌ சமூபதிவஶே ந்ருபதி: ॥ 3

ஸ ஶிவே நிவேத்ய ஶபரேந்த்ரஜயே ப்ரதிபூர்பவாநவநிபர்த்துரிதி ।
அவிசிந்த்ய கிஞ்சிதபி பர்யசரத்த்ரவிணைஸ்து தைர்த்ரவிணநாதஸகம் ॥ 4

அதிநூத்நமாதநுத தாம விபோ: ஸ ஸுதார்பணஸ்புடிதஸங்கடநை: ।
ரதமூர்ஜிதம் க்ஷிதிரதஸ்ய ஹயான் கரிணஶ்ச காஞ்சநமயாநகரோத் ॥ 5

பலமாநயேயமிதி மந்த்ரிவரான் பஹுதா து ஸோऽதிஸமதத்த கிரா ।
குலபூஷணாய பரிப்ருஷ்டவதே கதயாம்பபூவ ப்ருதநாம் மிலிதாம் ॥ 6

ஸசிவோதிதஶ்ரவணஜாதருஷம் ந்ருபமிங்கிதைஸ்ஸமவபுத்த்ய தத: ।
பஹிராநிநாய ஸ மஹீரமணம் பலதர்ஶநாய ஸஹ தை: பிஶுநை: ॥ 7

---

*1455* ஸேனாதிபதி ஸுந்தரேசப் பெருமானிடம், வேடுவத் தலைவன் மீது என்னை வெற்றிகொள்ளச் செய்வது உங்கள் பொறுப்பு என்ற ஒப்புவித்துவிட்டு, சிறிது கூட கவலைப்படாமல், அரசன் அளித்த செல்வத்தை எல்லாம் செல்வநாயகன் குபேரனுடைய தோழரான ஸுந்தரேச்வரருடைய வழிபாட்டில் செலவழித்தான். 4

*1456* பகவானுடைய ஆலயத்தை புதுச்சுண்ணாம்புக் கட்டிடமாகப் புதுப்பித்தான். அதனால் சுவர்கள் கெட்டிப்பட்டன. திரிபுர ஸம்ஹாரத்தின் போது பகவான் பூமியை ரதமாக்கிக்கொண்டார். அந்த பூமி ரதத்தினுடைய குதிரைகளையும் யானைகளையும் தங்கமயமாக்கினார். 5

*1457* குலபூஷணமஹாராஜன் 'எங்கே! படைகளைச் சேர்த்தாகி விட்டதா?'என்று கேட்டான். ஸேனாதிபதி பலவித சால்ஜாப்புகளைச் சொல்லி அனுப்பினான். படைகள் சேர்ந்து விட்டன என்று அரசனிடம் கதை சொன்னான். 6

*1458* மந்திரிகள் வந்து வேறு செய்தி கூறினார்கள். 'படைகள் திரட்டப்படவில்லை' என்று. அரசனுக்கு கோபம் மிகுந்தது. அரசனிடம் தளுக்காக உண்மையை கூறிவிட்டனர். அப்படி புகார் கூறினவர்களையும், அரசனையும் நகரத்திற்கு வெளியே படைகளை காண்பிப்பதற்காக ஸேனாதிபதி அழைத்து வந்தான். 7

समये शशाङ्कशकलाभरणः सहितो गणैर्मनुजरूपधरैः ।
स्वयमाजगाम पृतनारजसा स्थगयन्दिशश्च विदिशश्च पुरः ॥ ८
रथवाजिसिन्धुरपदातिभिदाप्रविभक्तमपि उपसमेत्य मिथः ।
चलितं बलं नृपतिना ददृशे चतुरम्बुराशिसमवाय इव ॥ ९
असिचर्मचापशरकुन्तगदापरिघत्रिशूलनलिकादिकराम् ।
अतिभीषणाकृतिमदृष्टचरीं परिपश्यति स्म स पदातिचमूम् ॥ १०
प्रलयान्तघोरपवनाभिहतप्रचलद्धराधरकुलप्रतिमम् ।
प्रसमीक्ष्य तं मदगजप्रकरं परिदुद्रुवुर्नरपतेः करिणः ॥ ११
करभोष्ट्रपुंगवकरीन्द्रधृतैः विविधायुधोषकरणैश्च रथैः ।
विविधध्वजैर्धुरि विभोश्चलिता रथिकाः शिलादतनयप्रमुखाः ॥ १२
कुरुविन्दकज्जलकुसुम्भनिशाशरकाण्डवासवशरासरुचः ।
मसृणोन्नतांसलमहाहनवः तुरगाः प्रचेलुरथ तस्य पुरः ॥ १३
सुरवाहिनी लहरिशुभ्रपटीपरिवीतमौलिरसिचर्मधरः ।
परिनर्तयंस्तुरगमिन्दुधरो निरगात् अनादिरपि सादिवपुः ॥ १४
असकृद्विरिञ्चमुखमन्दुरिकाकुतुकादिवोत्पतितुम् अभ्रपथे ।
त्वरमाणमागमतुङ्गवरं शमयन्निगालकरघट्टनया ॥ १५

1459 அந்த நேரத்தில் சந்திரமௌளீச்வரரான ஸுந்தரேசப் பெருமான், தமது ப்ரமதகணங்களை போர்வீரராக்கிக் கொண்டு தானே படைக் கூட்டத்தின் தலைவனாக இருந்து கொண்டு நடையினால் கிழக்கு. மேற்கு, வடகிழக்கு,தென் கிழக்கு என்ற ஒவ்வொரு திசையிலும் புழுதியைப் பரப்பிக்கொண்டு வந்தார். 8

1460 நான்கு திசைக் கடல்களும் ஒன்று சேர்ந்தது போல, தேர்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படைகள் வரிசையாக அணிவகுத்துக் கொண்டு வருவதை அரசன் கண்டான். 9

1461 கத்தி, கேடயம், வில், அம்பு, குந்தானி, கதாயுதம், சுழல் குண்டு. சூக்ஷ்மவெடி குண்டு இவற்றை கையில் ஏந்திக்கொண்டு வருகின்ற காலாட்படையைக் கண்டான். மிகவும் பயங்கரமாக அவை முன்னேருவதைப் பார்த்ததும் அரசன் திகைத்தான். 10

1462 பிரளயகாலத்து பயங்கர பேய்காற்றினால் ஆக்கப்பட்டு அசைகின்ற பெருமலைகள் போல, காணப்படுகின்ற யானைப் படையைப் பார்த்ததும், அரசனின் யானைகள் தலை தெறிக்க இங்கும் அங்கும் ஓடின, 11

ஸமயே ஶஶாங்கஶகலாபரண: ஸஹிதோ கணைர்மநுஜரூபதரை: ।
ஸ்வயமாஜகாம ப்ருதநாரஜஸா ஸ்தகயன் திஶஶ்ச விதிஶஶ்ச புர: ॥ 8
ரதவாஜிஸிந்துரபதாதிபிதாப்ரவிபக்தமப்யுபஸமேத்ய மித:।
சலிதம் பலம் ந்ருபதிநா தத்ருஶே சதுரம்புராஶிஸமவாய இவ ॥ 9
அஸிசர்மசாபஶரகுந்தகதாபரிகத்ரிஶூலநலிகாதிகராம் ।
அதிபீஷணாக்ருதிமத்ருஷ்டசரீம் பரிபஶ்யதி ஸ்ம ஸ பதாதிசமூம் ॥ 10
ப்ரலயாந்தகோரபவநாபிஹதப்ரசலத்தராதரகுலப்ரதிமம் ।
ப்ரஸமீக்ஷ்ய தம் மதகஜப்ரகரம் பரிதுத்ருவுர்நரபதே: கரிண: ॥ 11
கரபோஷ்ட்ரபுங்கவகரீந்த்ரத்ருதை: விவிதாயுதோபகரணைஶ்ச ரதை:।
விவிதத்வஜைர்துரி விபோஶ்சலிதா ரதிகா: ஶிலாததநயப்ரமுகா: ॥ 12
குருவிந்தகஜ்ஜலகுஸும்பநிஶாஶரகாண்டவாஸவஶராஸருச: ।
மஸ்ருணோந்நதாம்ஸலமஹாஹநவஸ்துரகா: ப்ரசேலுரத தஸ்ய புர: ॥ 13
ஸுரவாஹிநீலஹரிஶுப்ரபடபரிவீதமௌலி: அ ஸிசர்மதர: ।
பரிநர்தயம்ஸ்துரகம் இந்துதரோ நிரகாதநாதிரபி ஸாதிவபு: ॥ 14
அஸக்ருத்விரிஞ்சமுகமந்துரிகாகுதுகாதிவோத்பதிதுமப்ரபதே ।
த்வரமாணமாகமதுரங்கவரம் ஶமயந்நிகாலகரகட்டநயா ॥ 15

1463 ஒட்டகங்களும், யானைகளும் தேர்களை இழுத்து வருகின்றன. தேர்களில் பலவிதமான ஆயுதங்கள் தயார் நிலையில் இருந்தன. சிவபெருமானுக்கு முன்னே வருகின்ற இந்தத் தேர்களில் பலவிதமான கொடிகள் பறக்கின்றன. நந்திகேச்வரனை முன்னிட்டுக்கொண்டு இந்த தேர்படைகள் விரைந்து வருகின்றன. 12

1464 குந்துமணி போல முன்னே சிவப்பு நிறமாகவும், பின்னே கருப்பு நிறமாகவும், கண்மை நிறமாகவும். குங்குமச் சிவப்பாகவும், இருட்டு நிறமாகவும், இந்திரனின் வானவில்லைப் போல பலநிறங்கள் கொண்டதுமான தரமான குதிரைகள், நல்ல புஷ்டியாக வளர்ந்து, நிமிர்ந்த தாடைகளுடன், பின்னே வந்தன. 13

1465 குதிரைப்படையின் தலைவனாக அனாதியான பகவான் (ஸாரதியாக) வந்தார். அவருடைய தலையில் கங்கை நீர் போன்று வெள்ளை வெளேரென்று தலைப்பாகை. கைகளில் கத்தியும் கேடாயுதமும் தாங்கி வருகிறார். (அனாதி-ஸாதி என்ற எதிர் பதங்களை ரஸமாக தீக்ஷிதர் உபயோகப்படுத்துகிறார். ஸாதி என்றால் குதிரை வீரன் என்று பொருள்) 14

1466 ப்ரஹ்மதேவன் அடிக்கடி நான்கு முகங்களாலும் வேதம் ஓதிக்கொண்டே இருக்கிறார். வேதபகவானுக்கு வேகமாகச் சொல்ல

हयमुत्पतन्तमिषुवत् रभसात् अवरुद्धय सव्यमपसव्यमपि
भ्रमयन्नयत्नलवमूरुयुग द्रढिमैकदेशहृतदुर्विनयम् ॥ १६
अभिगच्छन्ति क्षितिभृति स्वयमप्यभिगम्य मूर्त इव वीररसः ।
अवधूय खड्गमवरुद्धय हयं प्रणनाम तं प्रणतमेष पुरः ॥ १७
अवितर्क्यवैभवम् अदृष्टचरं तमवेक्ष्य तामपि चमूं महतीम् ।
तदुदाररूपहृतवाङ्मनसः क्षणमास्त पाण्ड्यनृपतिः स्थिमितः ॥ १८
वचनैरमुं प्रकटितप्रणयैः वसनैर्विभूषणगणैश्च नृपः ।
परितोषयन्प्रतिमुहुः प्रणमन्परिषस्वजे दृढमभीक्ष्णमपि ॥ १९
मशकं विजेतु मनुचिन्तयता मदसिन्धुरोऽयमुपलब्ध इति ।
कथयन्नृपश्वरमुखाद श्रृणोन् मृगयासु सिंहहतं विमतम् ॥ २०
अथ पार्थिवः प्रमुदितस्तमसौ अनुमन्यते स्म शिबिराय यदा ।
तिरोदधे सतुरगः सबलो गिरिशस्तदैव धुरि भूमिभुजः ॥ २१
तदवेत्य केलिषु कुतूहलिनो मधुरेश्वरस्य महिमायमिति ।
पिशुनान्निगृह्य पृतनाधिपतिं बहुमन्यते स्म बहुधा नृपतिः ॥ २२

---

வேண்டுமென்று தோன்றி விட்டது. ப்ரஹ்மதேவனுடைய வாயிலிருந்து ஹயக்ரீவராக (குதிரையாக) அவதரித்து வேதம் ஓத ஆரம்பித்தார். பரமேச்வரனுக்கு வேதங்களை வேகமாக ஓதினால் மாத்திரைகள் குறைந்து வேதம் பங்கப்படும் என நினைத்து, அந்தக் குதிரைகளை தன் ரதத்தில் பூட்டி, ரதத்தில் அமர்ந்து குதிரைகளின் வேகத்தைக் குறைப்பதற்காக கடிவாளத்தை இறுக்கி இழுத்தார். வேகம் குறைந்தது. வேதம் முழுமை பெற்றது. 15

1467 குதிரை திமிறியது. வில்லில் பூட்டிய பாணத்தை இழுப்பது போல, இடது புறமும் வலது புறமும் பகவான் லகானை இழுத்தார். தன் இரு கைகளையும் வலுவாக அழுத்தினார். அந்தக் குதிரை திமிறியது. திமிற முடியவில்லை அதனுடைய திமிர் அடங்கியது. 16

1468 அரசன் குதிரைத்தலைவனை நோக்கி நெருங்கினான். பிரபுவும் அரசனை நோக்கி நெருங்கினார். அரசன் உடனே தலை வணங்கினான். அதே கணம் வீரரஸம் உருவெடுத்து வந்தாற்போல காட்சி அளித்த வீரனும் தலை வணங்கினான். 17

1469 அந்த வீரனுடைய பராக்ரமத்தை அரசனால் கணிக்க முடியவில்லை. இப்படி ஒரு வீரனை யாரும் முன் பார்த்ததில்லை. அவனை கண் கொட்டாமல் அரசன் பார்த்தான். அவனுக்குப் பின்னே அணிவகுத்து நின்ற அளவற்ற சதுரங்க

ஹயமுத்பதந்தமிஷுவத் ரபஸாதவருத்த்ய ஸவ்யமபஸவ்யமபி ।
ப்ரமயந்நயத்நலவமூருயுக த்ரடிமைகதேஶஹததுர்விநயம் ॥ 16

அபிகச்சதி க்ஷிதிப்ருதி ஸ்வயமப்யபிகம்ய மூர்த்த இவ வீரரஸ: ।
அவதூய கட்கமவருத்ய ஹயம் ப்ரணநாம தம் ப்ரணதமேஷ புர: ॥ 17

அவிதர்க்யவைபவம் அத்ருஷ்டசரம் தமவேக்ஷ்ய தாமபி சமூம் மஹதீம் ।
ததுதாரரூபஹ்ருதவாங்மநஸ: க்ஷணமாஸ்த பாண்ட்யந்ருபதிஸ்ஸ்திமித: ॥18

வசநைரமும் ப்ரகடிதப்ரணயைர்வஸநைர்விபூஷணகணைஶ்ச ந்ருப: ।
பரிதோஷயன் ப்ரதிமுஹு: ப்ரணமன் பரிஷஸ்வஜே த்ருடமபீக்ஷ்ணமபி ॥19

மஶகம் விஜேதும் அநுசிந்தயதா மதஸிந்துரோऽயமுபலப்த இதி ।
கதயன் ந்ருபஶ்சரமுகாதஶ்ருணோத்ம்ருகயாஸு ஸிம்ஹநிஹதம் விமதம் ॥ 20

அத பார்திவ: ப்ரமுதிதஸ்தமஸாவநுமந்யதே ஸ்ம ஶிபிராய யதா ।
ஸ திரோததே ஸதுரக: ஸபலோ கிரிஶஸ்ததைவ துரி பூமிபுஜ: ॥ 21

ததவேத்ய கேலிஷு குதூஹலிநோ மதுரேஶ்வரஸ்ய மஹிமாயமிதி ।
பிஶுநான் நிக்ருஹ்ய ப்ருதநாதிபதிம் பஹுமந்யதே ஸ்ம பஹுதா ந்ருபதி: ॥ 22

---

*ஸேனையையும் பார்த்தான். அந்த மகத்தான ஸ்வரூபத்தைப் பார்த்து, வாயையும் உள்ளத்தையும் அடைத்துக் கொண்டு, ஒரு கணம் அரசன் விக்கித்து நின்றான். 18*

1470 பிறகு வாய் திறந்து பக்திப்பெருக்குடன் தன் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டான். விலை மதிப்பற்ற ஆபரணங்களையும், வஸ்திரங்களையும் அளித்தான். மறுபடியும் மறுபடியும் பரிசுகளை வழங்கினான். அவர் காலடியில் குவித்தான். பகவான் கை நீட்டினார். ஆர்வத்துடன் அவரை ஆலிங்கணம் செய்து கொண்டான். 19

1471 'ஒரு கொசுவை நசுக்க எதைத் தேடலாம் என்று நினைத்த போது. மதயானை அல்லவா கிடைத்து விட்டது' என்று சொல்லிக்கொண்டிருந்த பொழுதே, எதிரி உளவாளி ஒருவன் வந்து சொன்னான். எதிரியை ஒரு சிங்கம் அடித்துவிட்டது' என்று. 20

1472 பிறகு அரசன் பரிவோடு 'கூடாரத்திற்கு செல்லலாம்' என்று அந்த வீரனுக்கு அனுமதி அளித்தார். அதே கணம் அந்த வீரன் மறைந்தான். குதிரை மறைந்தது சதுரங்கப்படையும் மறைந்தது. அரசன் வியப்பில் ஆழ்ந்தான். 21

1473 'லீலைகளில் குதூகலம் கொண்ட ஸுந்தரேசப்பெருமானின் மஹிமை இது ' என்று வியந்து, அறிந்து, புகார் கூறியவர்களைக் கடிந்து கொண்டான். ஸேனாதிபதியை வெகுவாக பலவிதமாக கௌரவித்தான், 22

1474 ஸேனாதிபதி முன்னால், எவ்வாறு தன்னிடம் ஒப்புவிக்கப்பட்ட செல்வங்களை எல்லாம் பரமேச்வர ஸேவையில் செலவழித்தானோ, அவ்வாறே,

निखिलं पुरा निजधनं गिरिशे व्यायतं यथा किल चमूपतिना ।
सकलं तथा व्ययितुमेव नृपः चकमे तदादि मधुराधिपतौ ॥ २३
गजवाजिगोमाहिषधान्यधन क्षितिभृत्यमित्रसुतदारमुखम् ।
सकलं शिवाय न ममेति वदन् क्रतुनारराध महताऽथ शिवम् ॥ २४
अवलोक्य रिक्तमथ कोशगृहं नृपतर्दयानिधिरनङ्गरिपुः ।
धनमक्षयं वितरति स्म तथा स यथा न पारयतितद्व्ययितुम् ॥ २५
धनमक्षयं धनपतेर्दिशतो विगता शिवस्य न हि भिक्षुकता ।
कुलभूषणेऽद्य तु तदर्पयतः सदनं सुवर्णमणणिचित्रमभूत ॥ २६
अथ कन्यकाः किल कुलेपु विशां अतिसुन्दरेण वपुषा शतशः ।
अलभन्त जन्म मधुरानगरे समयेन शंकरकथानिरताः ॥ २७
परपुंसि दारुवनचारिणि याः परमं बबन्धुरभिलाषमिमाः ।
मुनिसुभुवो हि पतिशापवशात् अभजन्विशां पुनरपत्यदशाम् ॥ २८
अथ तासु तत्र कलितावतरे तरुणिम्नि वैश्यतनयासु शनैः ।
मनसि स्मरस्मरजितौ युगपत् सुहृदाविव प्रविशतः स्म तदा ॥ २९

---

அரசனும் அன்று முதல் தன் செல்வங்களனைத்தையும் சிவஸேவையிலேயே செலவழிக்க விரும்பினான். 23

1475 தமக்குரிய ஸகல செல்வங்களையும் யானைகள், குதிரைகள், எருமைகள், தான்யங்கள், நண்பர்கள், பிள்ளைபெண்டுகள் அனைத்தையுமே சிவனுக்கு அர்ப்பணம். என்னுடையது அல்ல என்று தன் கருத்தை வெளிப்படுத்தி பெரிய யாகங்களின் மூலம் சிவனை ஆராதித்தான். 24

### திருவிளையாடல் 31
### பொற்கிழியளித்தல்
### (உலவாக்கிழி அருளிய படலம்)

1476 மன்மதனை வெற்றிகொண்ட தயாநிதி ஸுந்தரேசன் அரசனுடைய கஜானாவில் செல்வம் காலியானதை அறிந்து, குறைவற்ற செல்வத்தை வழங்கினார். அது செலவழித்தும் மாளாத நிலையில் இருந்தது. (செலவழிக்க செலவழிக்க குறையாமல் இருந்தது) 25

1477 ஸுந்தரேசப்பெருமான் ஆணையின் பேரில் குபேரன் பாண்டிய மன்னனுக்கு செல்வத்தை வாரி வழங்கி விட்டான், அதனால் தான் பகவான் பிக்ஷாண்டார் ஆகிவிட்டாரோ? அது தான் இல்லை. குலபூஷண பாண்டியன் தான் அத்தனை செல்வத்தையும் ஆலயத்தைப் பொன்மயமாக்குவதற்கு ஸமர்ப்பித்து விட்டானே! 26

நிகிலம் புரா நிஜதநம் கிரிஶே வ்யயிதம் யதா கில சமுபதிநா ।
ஸகலம் ததா வ்யயிதுமேவ ந்ருபஶ்சகமே ததாதி மதுராதிபதௌ ॥ 23
கஜவாஜிகோமஹிஷதாந்யதந க்ஷிதிப்ருத்யமித்ரஸுததாரமுகம் ।
ஸகலம் ஶிவாய ந மமேதி வதன் க்ரதுநாரராத மஹதாऽத ஶிவம் ॥ 24
அவலோக்ய ரிக்தமத கோஶக்ருஹம் ந்ருபதேர்தயாநிதிரநங்கரிபு: ।
தநமக்ஷயம் விதரதி ஸ்ம ததா ஸ யதா ந பாரயதி தத் வ்யயிதும் ॥ 25
தநமக்ஷயம் தநபதேர்திஶதோ விகதா ஶிவஸ்ய நஹி பிக்ஷுகதா ।
குலபூஷணேऽத்ய து ததர்பயத: ஸதநம் ஸுவர்ணமணிசித்ரமபூத் ॥ 29
அத கந்யகா: கில குலேஷு விஶாமதிஸுந்தரேண வபுஷா ஶதஶ: ।
அலபந்த ஜந்ம மதுராநகரே ஸமயேந ஶங்கரகதாநிரதா: ॥ 27
பரபும்ஸி தாருவநசாரிணி யா: பரமம் பபந்துரபிலாஷமிமா: ।
முநிஸுப்ருவோ ஹி பதிஶாபவஶாத் அபஜன் விஶாம் புநரபத்யதஶாம் ॥ 28
அத தாஸு தத்ர கலிதாவதரே தருணிம்நி வைஶ்யதநயாஸு ஶநை: ।
மநஸி ஸ்மரஸ்மரஜிதௌ யுகபத் ஸுஹ்ருதாவிவ ப்ரவிஶத: ஸ்ம ததா ॥ 29

---

## திருவிளையாடல் 32

## வளையல் விற்ற படலம்

1478 அப்போது நகரத்து தனவணிக வைச்ய குடும்பங்களில் நூற்றுக்கணக்கான மிகஅழகான கன்னிகைகள் பிறந்தனர் மதுராபுரியில், பரமேச்வரனுடைய திவ்ய சரித்திரம் படிப்பதில் அவர்கள் ஈடுபட்டார்கள்.27

1479 அந்த கன்னிகைகள் யார்? பகவான் ஒரு ஸமயம் தருகாவனம் என்ற காட்டில், ஆடை, உடை ஏதுமின்றி பிக்ஷை எடுக்கச் சென்றார். ஆச்ரமங்களின் வாசல் நின்று ‘பவதி பிக்ஷாம் தேஹி’ என்று குரல் கொடுத்தார். ஆச்ரமத்து ருஷி பத்னிகள் அக்ஷதை எடுத்துக் கொண்டு, வாசற்புறம் வந்து, அவர் நீட்டிய கைகளில் அக்ஷதையை போட்டுவிட்டு, அவரை குனிந்து நிமிர்ந்து பார்த்தார்கள். அவர்களுடைய உள்ளங்கள் தன் வசம் இழந்தன. ஒவ்வொரு ஆச்ரமத்திலிருந்தும் அந்தணப் பெண்மணிகள் அவரைப்பின் தொடர்ந்தனர். இந்தக் காட்சியைக் கண்ட ருஷிகள் நீங்கள் அந்தணகுலத்திற்கு தகுதியற்றவர்கள், வைச்ய குலத்தில் பிறவி எடுங்கள் என்று சபித்து விட்டனர். அவர்கள் தான் மதுரையில் வைச்ய கன்னிகைகளாகப் பிறந்தனர். 28

1480 அவர்கள் யௌவனப்பருவம் அடைந்தனர். அப்பொழுது அவர்கள் மனதில் மெதுவாக இருவர் நண்பர்களைப் போல, புகுந்து விட்டனர். ஒருவன் மன்மதன். மற்றொருவன், மன்மதச் சத்ருவான பரமேச்வரன். அவர்களுக்கு ஸுந்தரேசப் பெருமானிடம் பக்தியும் வளர்ந்தது. யௌவனப்பருவத்திற்கேற்ப சேஷ்டைகளும் வளர்ந்தது. (மன்மதனும் சிவபெருமானும் அவர்கள் உள்ளத்தில் பரஸ்பரம் எதிர்க்காமல் நண்பர்களாகவே இருந்தனர்) 29

अथ वैश्यवीथिषु वणिक्तरुणो विमलाम्बरो विविधभूषणभृत्।
अतिसुन्दरो वलयविक्रयिणां अवलम्ब्य रूपमचरद्गिरिशः॥ ३०
वितथेषु पुष्पविशिखेषु शिवे वलयायुधानि बहुधा कलयन्।
अयमालि संचरर्ति पञ्चशरो न मृषेति तत्र जगदुः सुदृशः॥ ३१
वणिजस्ततो वलयविक्रयिणो भवति स्म वैश्यसुदृशां च तदा।
इतरेतराशयचमत्करणी सरसा वचःप्रतिवचःसरणिः॥ ३२
वितरन्तु पक्वामिह तालफलं यदि वापि जम्भलफलं विपुलम्।
वलयानिमान्दधतु वामदृशः कनकेन किं मम गिरौ वसतः॥ ३३
क्व नु काञ्चिदेशमपहाय गतिः मम वः कदाचिदिति मत्सविधे
अधरेद्युरुक्तमधुना तु कथं वसतिं निजामभिदधासि गिरा॥ ३४
अतनुज्वरात् अभिहतोऽस्मि चिरात् तृषितोऽस्मि कापि यदि बिम्बफलैः।
तरुणी भिषज्यति ममार्तिमिमां पाथिकस्यमे भवति सा शरणम्॥ ३५
उचितोपयोगविरहादफलं वितरामि तावादिह बिम्बफलम्।
मदनाश्रयस्य परितश्चरतो भवतः कथं भवतु विज्वरता॥ ३६

---

1481 அந்த மதுரை நகரத்தின் வைச்ய வீதியில் வளையல் வியாபரத்தில் தேர்ந்த ஒரு அழகான வாபன், தூய்மையான வஸ்திரங்கள் உடுத்தி பல ஆபரணங்களை அணிந்து கொண்டு, வளையல் விற்றுக்கொண்டு வந்தான். அவன் வேறு யாரும் இல்லை. ஸுந்தரேசப்பெருமானே தான். 30

1482 (வீதியில் நடந்து போய்க்கொண்டிருந்த அவனைப் பார்த்து) ஒரு வைச்யக்கன்னி கூறினாள்--- 'பார்த்தாயாடி! மன்மதன் வருகிறான்.'

மற்றொருத்தி கூறினாள்-'மன்மதன் கையில் மலரம்புகள்தானே இருக்கும். இவனோ கைகளில் வளையல்களை அடுக்கிக் கொண்டிருக்கிறானே'

'ஆமாம்! மன்மதனுக்கு மலரம்புகள் வெற்றியளிக்கவில்லை. அவை வீண் என்றெண்ணி, வளையல்களைக் கொண்டு பெண்களை ஜயிக்க வந்திருக்கிறான். இவன் மன்மதனேதான் பொய்யில்லை' என்று சாதித்தாள்31

1483 ஒரு வளையல்காரனாக வந்த அந்த இளைஞனுக்கும், வைச்யகன்னிகைகளுக்கும் இடையே ஒரு (உரையாடல்) பேச்சுப்போட்டி நடந்தது. ஒருவருக்கொருவர் சமத்காரமாகப் பேசிக்கொண்டனர். அந்த வாக்குவாதம் மிகவும் ரஸமுள்ளதாக இருந்தது. 32

அத வைஶ்யவீதிஷு வணிக்தருணோ விமலாம்பரோ விவிதபூஷணப்ருத் ।
அதிஸுந்தரோ வலயவிக்ரயிணாம் அவலம்ப்ய ரூபமசரத் கிரிஶ: ॥ 30

விததேஷு புஷ்பவிஶிகேஷு ஶிவே வலயாயுதாநி பஹுதா கலயன் ।
அயமாலி ! ஸஞ்சரதி பஞ்சஶரோ ந ம்ருஷேதி தத்ர ஜகது: ஸுத்ருஶ: ॥31

வணிஜஸ்ததோ வலயவிக்ரயிணோ பவதி ஸ்ம வைஶ்யஸுத்ருஶாம் ச ததா ।
இதரேதராஶயசமத்கரணீ ஸரஸா வச:ப்ரதிவசஸ்ஸரணி: ॥ 32

விதரந்து பக்வமிஹ தாலபலம் யதி வாபி ஜம்பலபலம் விபுலம் ।
வலயாநிமான் தததுு வாமத்ருஶ: கநகேந கிம் மம கிரௌ வஸத: ॥ 33

க்வ நு காஞ்சிதேஶமபஹாய கதிர்மம வ: கதாசிதிதி மத்ஸ்விதே ।
அதரேத்யுருக்தமதுநா து கதம் வஸதிம் நிஜாமபிததாஸி கிரௌ ॥ 34

அதநுஜ்வராத் அபிஹதோऽஸ்மி சிராத் த்ருஷிதோऽஸ்மி காபி யதி பிம்பபலை: ।
தருணீ பிஷஜ்யதி மமார்த்திமிமாம் பதிகஸ்ய மே பவதி ஸா ஶரணம் ॥ 35

உசிதோபயோகவிரஹாத் அபலம் விதராமி தாவதிஹ பிம்பபலம் ।
மதநாஶ்ரவஸ்ய பரிதஶ்சரதோ பவத: கதம் பவது விஜ்வரதா ॥ 36

---

*1484 அழகான பெண்மணிகளே! இந்த வளையல்களைப் போட்டுக்* கொள்ளுங்கள். மலையில் வசிக்கின்ற எனக்கு தங்கம் வேண்டாம், பக்குவமான பனம்பழத்தைக் கொடுங்கள். அல்லது எலுமிச்சம் பழத்தையாவது கொடுங்கள். *33*

*1485* ஒரு பெண் கூறினாள்-'ஏனய்யா? அன்றைக்குச் சொன்னீர், என் பார்வை காஞ்சீதேசத்தை விட்டு (பெண்களின் இடையைத் தவிர) வேறெங்கும் செல்லாது என்றீர், இன்று மலையில் வாழ்பவன் என்று சொல்கிறீரே? அது எப்படி?' *34*

1486 வாலிபன் சொன்னான்- 'அப்படியா சொன்னேன்! பெரிய ஜ்வரத்தினால் (மன்மத ஜ்வரத்தினால்) பிதற்றிவிட்டேன் போலும்! தாகம் தாங்க முடியவில்லை.எந்தப் பெண்ணாவது தன்னிடமுள்ள கோவைப்பழங்களைக் (சிவந்த உதடுகள்) கொடுத்து வைத்யம் செய்தால் நல்லது. தாபம் தீரும். வழியோடு போகிற எனக்கு நீங்கள் தான் சரணம்.' *35*

*1487* பெண் கூறினாள், 'கோவைப் பழத்தைக் கேட்கிறீர்களே, சரி கொடுக்கிறேன். இது வரை கோவைப் பழத்துக்கு சரியான உபயோகம் நேரவில்லை. மன்மதஜுரம் என்கிறீர்.(மதனா ஸ்ரயஸ்ய,மத் சுனா ஸ்ரயஸ்ய) ஊர்சுற்றுகிற உங்களுக்கு ஜ்வரம் எப்டிப் போகும்?' *36*

सुदृढास्तवैव करयोरुचिता इति ये त्वया सुघटिता वलयाः।
त्वयि निर्गते सपदि तेर्गलितं वचनं कथं नु तव विश्वसिमः॥ ३७

वलयान्प्रदाय करिदन्तमयान् न मणिर्न काञ्चनमयाचि मया।
अपि काञ्चिकार्थनमभूद्विफलं त्वयि मे प्रतिश्रुतमपि कथम्॥ ३८

मयि देहि विद्रुममयान्वलयान् मम देहि विद्रुममणिं प्रथमम्।
मम देहि दन्तवलयान्विमलान् तव तन्वि वेद्मि न हि दन्तपदम्॥ ३९

इति संलपन्सर समिन्दुधरो विचरन्गृहेषु विविधेषु विशाम्।
करपल्लवव्यतिकरेण तदा सफलीचकार जननं सुदृशाम् ॥ ४०

अथ ता मुनीन्द्रदयिता न चिरात् तनयोपलम्भ मुदिताः शतशः
परिमृष्टशापकलुषाः प्रमथैः गिरिशो निनाय कलधौतगिरिम् ॥ ४१

स कदाचिदास्त वटमूलतले सनकादिभिः शमधनैर्नियतैः।
अणिमादिसिद्धिकृतमद्रिसुताचरणार्चनोपनिषदं कथयन्॥ ४२

उपदेशमेनमतिभक्तिवशात् उपशृण्वतां शमवतां सविधे।
अपि यक्षिणीरनवधानपराः कुपितः शशाप कुसुमास्त्रहरः॥ ४३

कचिदत्र पाण्ड्यविषये विपिने विजने तले वटतरोर्महतः।
उपलत्वमेत्य वसतेति ततः प्रससाद ताभिरसकृत्प्रणतः॥ ४४

---

*1488* 'ஐயா! போனதடவை சொன்னீர்' 'இந்த வளையல்கள் கெட்டியானவை. உடையவே உடையாது. உன் கைக்கு ரொம்ப ரொம்ப பொருத்தமானது' என்று. நீர் அந்த வீதி போன உடனே எல்லாம் கழன்று உடைந்து விட்டன. உங்கள் பேச்சை எப்படி நம்புவது?' *37*

*1489* 'பெண்ணே! உனக்கு தந்தத்திலான வளையல்கள் கொடுத்தேன். அதன் விலையைப் பற்றிச் சொன்னேனா? மணி கொடு, தங்கத்தைக் கொடு (தங்கமான உள்ளத்தை) என்று கேட்டேனா? இல்லையே! ஏதாவது காசு (இடுப்பைத் தொடுவதற்கு அனுமதி) கொடு என்று தானே கேட்டேன் அதுவும் கிடைக்கவில்லை. நான் என்ன வாக்குக் கொடுத்திருக்க முடியும்? எப்படி கொடுத்திருக்க முடியும்?' *38*

*1490* ஒருத்தி கேட்டாள் எனக்கு 'பவழவளையல் (பவளச்செவ்வாய்) கொடு' வியாபாரி சொன்னாள். நீ எனக்கு முதல் பவளம் போல் சிவந்த இந்த பந்தைக் (இதயத்தை) கொடு' மற்றொருத்தி கேட்டாள். 'நீ எனக்கு தந்தவளையல் கொடு' வியாபாரி சொன்னான். 'பெண்ணே எனக்குத் தெரியும் உன்னால் கொடுக்கமுடியாததே!' (தந்தம் பாதீதி தந்தப:-அதரம், தத்ததாதீதி தந்தபம்) *39*

ஸுத்ருடாஸ்தவைவ கரயோருசிதா இதி யே த்வயா ஸுகடிதா வலயா: ।
த்வயி நிர்கதே ஸபதி தைர்கலிதம் வசநம் கதம் நு தவ விஶ்வஸிம: ।। 37

வலயான் ப்ரதாய கரிதந்தமயான் ந மணிர்ந காஞ்சநமயாசி மயா ।
அபி காஞ்சிகார்தநமபூத் விபலம் த்வயி மே ப்ரதிஶ்ருதமபீஹ கதம் ।। 38

மம தேஹி வித்ருமமயான் வலயான் மம தேஹி வித்ருமமணிம் ப்ரதமம் ।
மம தேஹி தந்தவலயான் விமலாம்ஸ்தவ தந்வி ! வேத்மி ந ஹி தந்தபதம் ।। 39

இதி ஸல்லபன் ஸரஸமிந்துதரோ விசரன் க்ருஹேஷு விவிதேஷு விஶாம் ।
கரபல்லவவ்யதிகரேண ததா ஸபலீசகார ஜநநம் ஸுத்ருஶாம் ।। 40

அத தா முநீந்த்ரதயிதா ந சிராத் தநயோபலம்பமுதிதா: ஶதஶ: ।
பரிம்ருஷ்டஶாபகலுஷா: ப்ரமதைர்கிரிஶோ நிநாய கலதௌதகிரிம் ।। 41

ஸ கதாசிதாஸ்த வடமூலதலே ஸநகாதிபி: ஶமதநைர்நியதை: ।
அணிமாதிஸித்திக்ருதம் அத்ரிஸுதாசரணார்சநோபநிஷதம் கதயன் ।। 42

உபதேஶமேநமதிபக்திவஶாத் உபஶ்ருண்வதாம் ஶமவதாம் ஸவிதே ।
அபி யக்ஷிணீரநவதாநபரா: குபித: ஶஶாப குமுமாஸ்த்ரஹர: 43

க்வசிதத்ர பாண்ட்யவிஷயே விபிநே விஜநே தலே வடதரோர்மஹத: ।
உபலத்வமேத்ய வஸதேதி தத: ப்ரஸஸாத தாபிரஸக்ருத் ப்ரணத: ।। 44

---

*1491 வளையல் வியாபாரியாக வந்த சந்திரசேகரன் இவ்வாறு அவர்களுடன் ரஸமாக வாக்குவாதம் செய்து கொண்டு, பல வீடுகளில் நுழைந்து வளையல் போடுகிற வ்யாஜமாக, அந்தப்பெண்களின் பிறப்பை ஸபலமாக்கினார். பிறகுபகவான் அந்தப் பெண்களை முனிவர்களோடு சேர்த்துவைத்தார்.40*

*1492 பிறகு, சாபம் நீங்கப்பெற்ற அந்த ருஷி பத்னிகள் மக்கள் பேறு பெற்றார்கள். மகிழ்ந்தார்கள். சிவபெருமான் பிரமதகணங்களை அனுப்பி அவர்களை கைலாயத்திற்கு அழைத்து வரச்செய்தார். 41*

## திருவிளையாடல் 33

## அஷ்டமாஸித்தி உபதேசித்த படலம்

*1493 ஒரு சமயம் ஸுந்தரேசப் பெருமான் ஆலமரத்தடியில் அமர்ந்து தேவியின் அணிமா முதலிய எட்டு ஸித்திகளின் தேவதைகளை முறைப்படுத்தி, தேவியின் பூஜா விதானத்தை ஸனகாதி முனிவர்களுக்கு உபதேசித்தார், 42*

*1494 இந்த உபதேசத்தை பக்தியோடும் ச்ரத்தையோடும் ஸனகாதிமுனிவர்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது அங்கிருந்த சில யக்ஷிணிகள் அலக்ஷியமாக ஒட்டுக் கேட்டதற்காக மன்மதனை அழித்த ஈசன் கோபம் கொண்டு அவர்களை சபித்தார். 43*

*1495 பாண்டிய நாட்டில் ஏதாவது ஒரு காட்டில் உள்ள ஆலமரத்தடியில் பாறைகளாகி கிடவுங்கள் என்று சபித்து விட்டார். அந்த யக்ஷிணிகள் மீண்டும் மீண்டும் பகவானை வணங்கி வேண்டியதினால், பகவான் அருள் புரிந்தார்.44*

स समाः सहस्रमतिलङ्घ्य ततः परिगृह्य देशिकतनुं गिरिशः ।
अणिमादिसिद्धिमनुगृह्य पुनः न नयति सम यक्षवनितास्त्रिदिवम् ॥ ४५
कुलभूषणोऽपि धरणीरमणः शफरेक्षणासह चरार्चनया ।
अथ राजपूर्वपदमिन्द्रमसौ लभते स्म शिक्षितनयं तनयम् ॥ ४६
अपि राजसिंह इति कश्चिदभूत् अनुजोऽस्य दुर्विषयलुप्तमतिः ।
समनन्तरं पितुरयं सहजं सुतवद्ररक्ष तमपि क्षितिपः ॥ ४७
समयेऽत्र चोलनृपतिः प्रथितः कुलशत्रुरस्य किल पाण्ड्यविभोः ।
मधुरेशदर्शनकुतूहलिना मनसान्वतप्यत तपांसि चरन् ॥ ४८
स्वपने कदाचिदथ चोलनृपं प्रतिबोध्य गूढमुपयातमिमम् ।
विघटय्य गोपुरकवाटयुगं निजमानिनाय निशि धाम शिवः ॥ ४९
स निमज्ज्य हेमनलिनीसालिले प्रणिपत्य मीननयनागिरिशौ ।
तदनुग्रहेण नगराच्च बहिः निरगात्तदैव निशि चोलनृपः ॥ ५०
स पुनश्च गोपुरकवाटयुगं घटयञ्छिवो वृषभमुद्रिकया ।
परिचिह्नयन्मनसि पाण्ड्यविभो अतनिष्ट संशयमभेद्यतरम् ॥ ५१
स परेद्युराप्तसचिवैर्विमृशन् अपि किंचिदध्यवससो न यदा ।
नृपतिस्तदा निखिलमोहहरं शरणं ययौ शंशिकलाभरणम् ॥ ५२

1496 ஆயிரம் ஆண்டுகள் கழிந்தன. பரமேச்வரன் ஆசார்யவடிவம் கொண்டு அந்த ஆலமரத்திற்கு வந்தார். அந்த யக்ஷிணிகளுக்கு அணிமா முதலிய எட்டு ஸித்திகளையும் உபதேசித்துவிட்டு, தேவலோகம் அழைத்துச் சென்றார்.45

## திருவிளையாடல் 34

## சோழமன்னனுக்கு அனுக்ரஹம்

## (விடையிலச்சினையிட்ட படலம்)

1497 குலபூஷணபாண்டியன் மீனாக்ஷிஸுந்தரேச்வரர்களை ஆராதித்து, கல்வியில் சிறந்த ஒரு தனயனைப் பெற்றாள். அவன் பெயர் ராஜசேகரன்.46

1498 ராஜேந்திர பாண்டியனுக்கு ஒரு தம்பி பிறந்தான். அவன் பெயர் ராஜஸிம்ஹன். தந்தைக்குப் பிறகு அவனை ஸொந்தப் பிள்ளைப்போல பேணிக் காத்தான். ஆனால் அவன் கெட்ட பழக்கங்களில் ஈடுபட்டான்.47

1499 அந்த நாட்களில், பாண்டிய அரசர்களுடைய பரம்பரை எதிரி சோழ அரசர்கள். மதுராபதி ஸுந்தரேச்வரரை எப்படியாவது தரிசனம் செய்ய வேண்டும் என்று அப்பொழுது இருந்த சோழ அரசன் தவம் கிடந்தான். அந்த நாளை மிகுந்த குதாகலத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். 48

ஸ ஸமா: ஸஹஸ்ரம் அதிலங்க்ய தத: பரிக்ருஹ்ய தேஶிகதநும் கிரிஶ: ।
அணிமாதிஸித்திம் அநுக்ருஹ்ய புநர்நயதி ஸ்ம யக்ஷவநிதாஸ்த்ரிதிவம் ।। 45

குலபூஷணோऽபி தரணீரமண: ஶபரேக்ஷணாபஹசரார்சநயா ।
அத ராஜபூர்வபதமிந்த்ரமஸௌ லபதே ஸ்ம ஶிக்ஷிதநயம் தநயம் ।। 46

அபி ராஜஸிம்ஹ இதி கஶ்சிதபூத் அநுஜோऽஸ்ய துர்விஷயலுப்தமதி: ।
ஸமநந்தரம் பிதுரயம் ஸஹஜம் ஸுதவத் ரரக்ஷ தமபி க்ஷிதிப: ।। 47

ஸமயேऽத்ர சோலந்ருபதி: ப்ரதித: குலஶத்ருரஸ்ய கில பாண்ட்யவிபோ: ।
மதுரேஶதர்ஶநகுதூஹலிநா மநஸாந்வதப்யத தபாம்ஸி சரன் ।। 48

ஸ்வபநே கதாசிதத சோலந்ருபம் ப்ரதிபோத்ய கூடமுபயாதமிமம் ।
விகடய்ய கோபுரகவாடயுகம் நிஜமாநிநாய நிஶி தாம ஶிவ: ।। 49

ஸ நிமஜ்ஜ்ய ஹேமநலிநீஸலிலே ப்ரணிபத்ய மீநநயநாகிரிஶௌ ।
ததநுக்ரஹேண நகராச்ச பஹிர்நிரகாத் ததைவ நிஶி சோலந்ருப: ।। 50

ஸ புநஶ்ச கோபுரகவாடயுகம் கடயஞ்சி வோ வ்ருஷபமுத்ரிகயா ।
பரிசிஹ்நயன் மநஸி பாண்ட்யவிபோ அதநிஷ்ட ஸண்ம்ஶயமபேத்யதரம் ।। 51

ஸ பரேத்யுராப்தஸசிவைர்விம்ருஶந்நபி கிஞ்சிதத்யவஸஸோ ந யதா ।
ந்ருபதிஸ்ததா நிகிலமோஹஹரம் ஶரணம் யயௌ ஶஶிகலாபரணம் ।। 52

---

*1500 ஸுந்தரேசப் பெருமானுக்கு அந்த சோழ அரசனிடம் கிருபை பிறந்தது. என்னை தரிசனம் செய்யலாம் வா! என்று அவனுடைய கனவில் தோன்றி அழைத்தார். அவன் ரஹஸ்யமாக வந்து சேர்ந்தான். அவனுக்கு கோபுரக் கதவுகளைத் திறந்து விட்டு, தமது ஆலயத்திற்கு அழைத்து வந்தார் சிவபெருமான்.* 49

*1501 சோழமன்னன் பொற்றாமரைக்குளத்தில் நீராடிவிட்டு, ஸுந்தரேசப் பெருமானையும் மீனாக்ஷி தேவியையும் தரிசித்து வணங்கினான். அவர்களுடைய அருளால் நகரத்திற்கு வெளியே இரவிலேயே வந்து விட்டான்.* 50

*1502 பகவான் மறுபடியும் (சோழஅரசன் திரும்பிச் சென்ற பிறகு) கோபுரத்தின் இரண்டு கதவுகளையும் பூட்டி விருஷப முத்திரையை வைத்துவிட்டு அரசனின் மனதில் தீர்க்கமுடியாத ஒரு ஸந்தேகத்தை பதிய வைத்தார்.* 51

*1503 மறுநாள் பாண்டிய அரசன் தனது அந்தரங்க மந்திரிகளை அழைத்து 'என்ன நடந்தது' என்று விசாரித்தான். ஒரு முடிவும் கிடைக்க வில்லை. ஸுந்தரேசப் பகவான்தான் இந்தக்குழப்பத்தைத் தீர்த்து வைப்பான் என்று ஸுந்தரேசப் பெருமானை சரணம் அடைந்தான்.* 52

अपदानमेतदधिगत्य नृपः सकलं गिरा गगनसंभवया ।
सखितामियेष गुणगृह्यतया स तदेव चोलधरणीपतिना ॥ ५३
अथ राजसिंहनृपति नृपतेः अनुजो विगृह्य कियदप्यपदे ।
उपयम्य चोलनृपतेस्तनयां अपि तेन सख्यमकरोत्सुदृढम् ॥ ५४
अथ तौ समेत्य मधुरा नगरीं अभिजग्मतुर्बहुचमूसहितौ ।
ददृशे निदाघसमयोऽपि तदा परिशोषयन्साळिलशब्दमपि ॥ ५५
अपि शुष्यति त्रिदिवसिन्धुजले तृषया हतेषु तुरगेषु भृशम् ।
गतिमान्द्यतो गगनसीम्नि रवेः दिवसेषु दैर्घ्यमजनिष्ट तदा ॥ ५६
तपने जगत्तपति निष्करुणं समये समस्तमयशो निहितम् ।
सचिवः खलः शिथिलयन्प्रकृतीः नृपतिं किलापदि निमज्जयति ॥ ५७
विरतेषु विश्वजयिनः कुसुमेष अतनोः शिरीषमवशिष्टमिदम् ।
तदपि प्रणश्यतु किमस्य गतं प्रभवोऽपि किं परमुखात् अरिणः ॥ ५८
कुचकुम्भमेव मदनः सुदृशां अवलम्ब्य पूर्वमजयद्भुवनम् ।
अधुनापि चेत्स कुशली तदलं किमनेन धर्महतकेन शुना ॥ ५९
अविचारितारिसमामित्रकथे समये जगत्तपति दुर्ललिते ।
मदनस्तदाशुगहताश्च समं शरणं ययुः स्तनगिरिं सुदृशाम् ॥ ६०

*1504 அப்பொழுது வானொலி ஒன்று எழுந்தது. அரசன் நடத்ததை மறந்தான். ஸம்பவத்தை அறிந்தான்.. நண்மையை உணர்ந்து தீராப்பகையில் இருந்த சோழ அரசனுடன் நட்புரிமை கொண்டாட விரும்பினான். 53*

## திருவிளையாடல்

## 35 தண்ணீர்பந்தல் வைத்த படலம்

*1505 அரசனின் ஸஹோதரனான ராஜஸிம்ஹன் தமயனிடம் பகை கொண்டு, தகாதமுறையில் சோழமன்னரின் பெண்ணை மணந்து கொண்டான். அம்மன்னனுடன் நட்புறவும் கொண்டான். 54*

*1506 ராஜஸிம்ஹனும் சோழ அரசனும் கூட்டு சேர்ந்து கொண்டு பெரும் படையுடன் மதுரை நகரத்தின் புறத்தே முற்றுகையிட்டார்கள். நல்ல வெய்யில் காலம். எங்கும் நீர்நிலைகள் வற்றிவிட்டன. நீர் என்ற சொல்லேகூட காதில் விழவில்லை. 55*

*1507 ஆகாசகங்கை கூட வற்றிவிட்டது. ஸூர்ய ரதத்தின் குதிரைகளுக்கு குடிக்க நீரில்லாமல் நாக்கு வரண்டு விட்டன. அவர்களுடைய நடை தடைபட்டது. அதனால் பகல் நேரம் நீண்டு விட்டது. 56*

அபதாநமேததிகத்ய ந்ருப: ஸகலம் கிரா ககநஸம்பவயா ।
ஸகிதாமியேஷ குணக்ருஹ்யதயா ஸ ததைவ சோலதரணீபதிநா ।। 53

அத ராஜஸிம்ஹந்ருபதிர்ந்ருபதே: அநுஜோ விக்ருஹ்ய கியதப்யபதே ।
உபயம்ய சோலந்ருபதேஸ்தநயாமபி தேந ஸக்யமகரோத் ஸுத்ருடம் ।। 54

அத தௌ ஸமேத்ய மதுராநகரீமபிஜக்மதுர்பஹுசமூஸஹிதௌ ।
தத்ருஶே நிதாகஸமயோऽபி ததா பரிஶோஷயன் ஸலிலஶப்தமபி ।। 55

அபி ஶுஷ்யதி த்ரிதிவஸிந்துஜலே த்ருஷயா ஹதேஷு துரகேஷு ப்ருஶம் ।
கதிமாந்த்யதோ ககநஸீம்நி ரவே: திவஸேஷு தைர்க்யம் அஜநிஷ்ட ததா ।। 56

தபநே ஜகத் தபதி நிஷ்கருணம் ஸமயே ஸமஸ்தமயஶோ நிஹிதம் ।
ஸசிவ: கல: ஶிதிலயன் ப்ரக்ருதீர்ந்ருபதிம் கிலாபதி நிமஜ்ஜயதி ।। 57

விரதேஷு விஶ்வஜயிந: குஸுமேஷ்வதநோ: ஶிரீஷமவஶிஷ்டமிதம் ।
ததபி ப்ரணஶ்யது கிமஸ்ய கதம் ப்ரபவோऽபி கிம் பரமுகாதரிண: ।। 58

குசகும்பமேவ மதந: ஸுத்ருஶாம் அவலம்ப்ய பூர்வமஜயத் புவநம் ।
அதுநாபி சேத் ஸ குஶலீ ததலம் கிமநேந தர்மஹதகேந ஶுநா ।। 59

அவிசாரிதாரிஸமமித்ரகதே ஸமயே ஜகத் தபதி துர்லலிதே ।
மதநஸ்ததாஶுகஹதாஶ்ச ஸமம் ஶரணம் யயு: ஸ்தநகிரிம் ஸுத்ருஶாம் ।। 60

---

*1508* கருணையற்று சூர்யபகவான் உலகைக் கொளுத்துகிறான். ஜனங்கள் பரிதபிக்கின்றார்கள். இந்த நேரத்தில் ஒரு போக்கிரி மந்திரி, அரசன் மீது பழி சுமத்தி பிரஜைகளை பிரிக்கப் பார்த்தான். அரசனை ஆபத்து சூழ்ந்து கொண்டது. *57*

*1509* உலகத்தையே வெற்றிகொள்கிற மன்மதனுடைய அம்புகளான, தாமரை, அசோகமலர். மல்லிகை முதலிய மலர்கள் அவிந்து விட்டன. சிரீஷ மலர்கள் தான் மிஞ்சின,அதுவும் நாசமாகட்டுமே சூரியனுக்கு என்ன போச்சு. பிரபுக்கள் கூட எதிர் கட்சியை ஆதரிக்கிறார்களே! *58*

*1510* பெண்களின் மார்பகங்கள்தான் ஒரே ஒரு ஆயுதம் மன்மதனுக்கு மிஞ்சியது. அதை வைத்துக்கொண்டு உலகத்தை முன்பு வென்றான். அவன் பிழைத்துப் போகட்டும். காமம் என்ற நாய் எப்படிப்போனால் என்ன! *59*

*1511* வேண்டியவன் வேண்டாதவன் என்ற பாகுபாடு இல்லாமல், கோடை வெய்யில் கொளுத்தும் போது பிரபுக்கள் மலை வீட்டைத் தேடிப் போவார்கள். அது போல மன்மதனும் அவனுடைய வில்லடிபட்டவர்களும், பெண்களின் மார்பகம் என்ற மலையைச் சரணம் அடைந்தனர். *60*

मदने प्रवर्तयति वारयति श्रमवारिशीकरकिरे समये।
अलभन्त कामिषु गतागतिकां असकृच्चरा इव दृशः सुदृशाम्॥ ६१

अनवेक्ष्य नाथमियमम्बुजिनी शिशिरे यदास्त विदितं किल तत्।
परया श्रिया ज्वलति तत्र रवौ कथमद्य जीवनकथापि गता॥ ६२

विकचेषु सूरकिरणोष्मभिया मुकुलीकृतेषु च निवाततया।
कमलोदरेषु शयितुं भ्रमरो न शशाक तप्तमधुसेवनतः॥ ६३

अपि नारिकेलसलिलेक्षुरसैः अजहत्तृषो रविकरक्वथितैः।
अपिबन्नहःपरिणतौ सुदृशाम् अधरं प्रियाः प्रणयशीतलितम्॥ ६४

करिणोऽपि कर्णवलयान् असकृत् चलयांबभूवुरनिलाय मुधा।
ववृते न फूत्कृतिषु वामदृशां व्यजनेऽपि लिप्त इव गन्धवहः॥ ६५

अनवग्रहैरपरदिक्पवनैः समुदस्यमानम् अपदिश्य रजः।
सलिलाशया मरुमरीचिषु किं धरणी दिगन्तम् अगमत्तृषिता॥ ६६

अतिचण्डपाश्चिमसमीरहृतैः अभितोऽपि तिग्ममहसः किरणैः।
अनुषञ्जिता इव वनावलयो दवसंगता ददृशिरे शतशः॥ ६७

सरसीषु पल्वलदशा ददृशे भुवि पल्वलेष्वपि शाड्वलता
अपि शाड्वलेषु चिरजाङ्गलता परतो वयं न वदितुं प्रभव्रः॥ ६८

---

1512 மன்மதன் சிலரைத் தூண்டியிருக்கிறான். சிலரை தடுத்து நிறுத்தி இருக்கிறான். இருசாராருக்கும் வியர்வை பெருக்கு ஸமமாக உண்டாகிறது. பெண்களின் கண்களோ பாணங்களைப்போல காமுகர்களின்பால் போகின்றன, திரும்புகின்றன. 61

1513 இந்த பொற்றாமரைக் குளம் என்ற பெண்மணி, குளிர்க்காலத்தில் பனி மூட்டத்தினால், ஸூர்யனை காணாமல் தவித்தாள் என்பது எல்லோருக்கும் தெரியும். அதே பெண் தற்போது ஸூரியன் சிறப்பான ஒளியோடு விளங்கும் போது பிழைத்திருப்போமா என்பதே கவலைக்கிடமாகி விட்டதே! 62

1514 தாமரைமலர்களில் மொய்த்துக் கொண்டிருக்கின்ற தேனீ வண்டுகளின் பரிதாப நிலையைப் பாருங்கள்! தாமரை மலர்ந்திருந்தால் வெயில் தாக்குமே என்ற பயம். மூடிக் கொண்டால் புழுக்கம் தாங்கவில்லை. அந்த வண்டு என்னதான் செய்யும்? தேனைக் குடித்துவிட்டு கமலங்களுக்குள்ளே தங்குவதற்கு இடம் இல்லாமல் தவிக்கின்றன. 63

மதநே ப்ரவர்த்தயதி வாரயதி ஶ்ரமவாரிஶீகரகிரே ஸமயே ।
அலபந்த காமிஷு கதாகதிகாமஸக்ருச்சரா இவ த்ருஶ: ஸுத்ருஶாம் ॥ 61
அநவேக்ஷ்ய நாதமியமம்புஜிநீ ஶிஶிரே யதாஸ்த விதிதம் கில தத் ।
பரயா ஶ்ரியா ஜ்வலதி தத்ர ரவௌ கதமத்ய ஜீவநகதாபி கதா ॥ 62
விகசேஷு ஸூரகிரணோஷ்மபியா முகுலீக்ருதேஷு ச நிவாததயா ।
கமலோதரேஷு ஶயிதும் ப்ரமரோ ந ஶஶாக தப்தமதுஸேவநத: ॥ 63
அபி நாரிகேலஸலிலேக்ஷுரஸைரஜஹத் த்ருஷோ ரவிகரக்வதிதை: ।
அபிபந்நஹ:பரிணதௌ ஸுத்ருஶாமதரம் ப்ரியா: ப்ரணயஶீதலிதம் ॥ 64
கரிணோऽபி கர்ணவலயாऽஸக்ருத்சலயாம்பபூவுரநிலாய முதா ।
வவ்ருதே ந பூத்க்ருதிஷு வாமத்ருஶாம் வ்யஜநேऽபி லுப்த இவ கந்தவஹ: ॥ 65
அநவக்ரஹைரபரதிக்பவநை: ஸமுதஸ்யமாநம் அபதிஶ்ய ரஜ: ।
ஸலிலாஶயா மருமரீசிஷு கிம் தரணீ திகந்தமகமத் த்ருஷிதா ॥ 66
அதிசண்டபஶ்சிமஸமீரஹ்ருதை: அபிதோऽபி திக்மமஹஸ: கிரணை: ।
அநுஷஞ்ஜிதா இவ வநாவலயோ தவஸங்கதா தத்ருஶிரே ஶதஶ: ॥ 67
ஸரஸீஷு பல்வலதஶா தத்ருஶே புவி பல்வலேஷ்வபி ச ஶாட்வலதா ।
அபி ஶாட்வலேஷு சிரஜாங்கலதா பரதோ வயம் ந வதிதும் ப்ரபவ: ॥ 68

---

*1515* காதலர்கள் பகலில் இளநீர் குடித்தாலும் கருப்பஞ்சாரு பருகினாலும் அவை கொதிப்பதினால் அவர்களுடைய தாகம் தீரவில்லை. இரவு வந்தவுடன் அவசரம் அவசரமாக, அவர்களுடைய பிரேமையினால் குளிர்ந்துள்ள காதலிகளின் அதரபானத்தை திருப்தியாகச் சுவைக்கிறார்கள். 64

*1516* யானைகள் கூட வட்டமான தன் காதுகளை திரும்பத் திரும்ப வீசுகின்றன. அது காற்றைக் கிளப்பினால் தானே! பெண்கள் வாயினால் பூ பூ என்று ஊதும் பொழுதும் காற்று வரவில்லை. கைவிசிறியிலும் காற்று வற்றிவிட்டது போலும்! 65

*1517* கட்டுக்கடங்காமல் வீசுகின்ற, எதிர் காற்றினாலும், சுழற்காற்றினாலும் கிளப்பப்பட்ட புழுதிப் புயல், பூமியின் எல்லையில், பாலைவனங்களில் படிந்தன! பூமி தண்ணீருக்காக திசை எல்லையை அடைந்து விட்டதோ!66

*1518* மிகக்கடுமையாக மேல் காற்று வீசியது. ஸூரிய கிரணங்கள் இடைவிடாமல் தாக்கின. ஆங்காங்கே காட்டுப்புதர்களில் காட்டுத்தீ பற்றி எரிந்தது. நூற்றுக்கணக்கான தீ வட்டங்கள் பரவின. 67

*1519* பெரிய நீர் தடாகங்கள் குட்டைகளாகிவிட்டன. குட்டைகள் சேற்றுக்குழம்பாகி விட்டன. அந்த சேற்றுக்குழம்புகளில் ஆங்காங்கே காய்ந்த வெடிப்புகள், இதற்கு மேல் எம்மால் சொல்ல இயலாது. 68

पवनेन संवलित एव शिखी परिजृम्भते न परथेत्ययशः।
परिमार्ष्टुमेव पवने विरमति इत्यददद्धनं वनमहो दहनः॥ ६९
कथितं जलं क्षितितलं ज्वलितं मरुतश्च मुर्मुरकिरः परितः।
गगनं च दुर्विषहमर्ककरैः इति पर्यणंस्त जगदग्निमयम् ॥ ७०
अपनीय कञ्चुकरमहर्विगमे मरुदाशगा रहसि मुग्धवधूः।
समवस्थिताः समुपलभ्य हठात् परिरेभिरे सुकृतिनस्तरुणाः। ७१
रजनीमुखाहृतमृणाललतावलयैः शशाङ्ककरिरणस्नपितैः।
उषसि स्वयं प्रियतमोपहृतैः सरसीष्ववर्तयत चक्रगणः ॥ ७२
इयतापि तावदिदमापातितं प्रलयं तरेम पयसेति दृढम्।
अवगत्य यत्र शफरै रुषितं लुलितं सरस्तदपदे महिषैः॥ ७३
अवगाह्य पद्ममकरन्दझरीष्वहिमद्युतावनुददिते भ्रमराः।
अजपन्नुपांशु कृतझङ्करणा मदनापमृत्युहरमन्त्रमिव ॥ ७४
धृतमल्लिकाकुसुमहारलता घनसार चन्दनरसार्द्रकुचाः।
वनिता दुकूलवसनाभरणाः तरुणानुपासत दिनापगमे॥ ७५
कटकं प्रविष्टवति चण्डकरे कटकं तदव्यथत चोलपतेः।
ववृधे तु पाण्ड्यनृपतेः समये महसां निधेरिव महः परुषम्॥ ७६

---

*1520 காற்று சூழ்வதால் தான் தீ பரவுகிறது. காற்றினால் வந்த கேடு என்ற பழியைத் தவிர்க்கலாம் என்று காற்று ஓய்ந்திருந்தபோது, தீ மட்டும் ஒவ்வொரு காடாக அழித்துக் கொண்டே போயிற்று. 69*

*1521 நீர் கொதிக்கிறது. பூமியில் மணல் கால் வைத்தால் கொப்பளிக்கிறது. காற்றுகளும் திசை மாறி வீசி வீசி நாற்புறமும் தீக்கொழுந்து பரவியது. ஆகாயமே ஸூரிய கிரணங்களினால் பொருக்கமுடியாத சூட்டினால் நிரம்பியுள்ளது. இவ்வாறு உலகமே 'தீ'மயமாகத் தெரிந்தது. 70*

*1522 புது மணப்பெண் வீட்டில் ஒருவரும் இல்லையே என்ற தைரியத்தில் தன் சோளியைக் கழற்றிவிட்டு, காற்று வாங்கலாமே என்று நினைத்தாள், காத்திருந்த கணவன் அதுதான் தருணம் என்று ஓடிவந்து மனைவியை தழுவிக்கொள்கிறான். (உரை ஆசிரியர் குறிப்பு: : ச்லோகத்தின் முதல் பாதி ஏகவசனத்திலும், பின் பாதி பகுவசனத்திலும் உள்ளது. பொருத்தமாகாது. பின் பாதி ஸமவஸ்திதா முபாகம்ய ஷடாத் ஸுக்ருதின:ரபிஸம் என்றிருக்கலாம்) 71*

பவநேந ஸம்வலித ஏவ ஶிகீ பரிஜ்ரும்பதே ந பரதேத்யயஶ: ।
பரிமார்ஷ்டும்மேவ பவநே விரமத்யதஹத் வநம் வநமஹோ தஹந: ॥ 69

க்வதிதம் ஜலம் க்ஷிதிதலம் ஜ்வலிதம் மருதஶ்ச முர்முரகிர: பரித: ।
ககநம் ச துர்விஷஹமர்ககரைரிதி பர்யணம்ஸ்த ஜகதக்நிமயம் ॥ 70

அபநீய கஞ்சுகமஹர்விகமே மருதாஶயா ரஹஸி முக்தவதூ: ।
ஸமவஸ்திதா: ஸமுபலப்ய ஹடாத் பரிரேபிரே ஸுக்ருதிநஸ்தருணா: ॥ 71

ரஜநீமுகாஹ்ருதம்ருணாலலதாவலயை: ஶஶாங்ககிரணஸ்நபிதை: ।
உஷஸி ஸ்வயம் ப்ரியதமோபஹ்ருதை: ஸரஸீஷ்வவர்தயத சக்ரகண: ॥ 72

இயதாபி தாவதிதமாபதிதம் ப்ரலயம் தரேம பயஸேதி த்ருடம் ।
அவகத்ய யத்ர ஶபரைருஷிதம் லுலிதம் ஸரஸ்ததபதே மஹிஷை: ॥ 73

அவகாஹ்ய பத்மமகரந்தஜரீஷு அஹிமத்யுதாவநுதிதே ப்ரமரா: ।
அஜபந்நுபாம்ஶு க்ருதஜங்கரணா மதநாபம்ருத்யுஹரமந்த்ரமிவ ॥ 74

த்ருதமல்லிகாகுஸுமஹாரலதா, கநஸாரசந்தநரஸார்த்ரகுசா: ।
வநிதா துகூலவஸநாபரணாஸ்தருணான் உபாஸத திநாபகமே ॥ 75

கடகம் ப்ரவிஷ்டவதி சண்டகரே கடகம் ததவ்யதத சோளபதே: ।
வவ்ருதே து பாண்ட்யந்ருபதே: ஸமயே மஹஸாம் நிதேரிவ மஹ: பருஷம் ॥ 76

---

*1523 மாலையிலேயே ஆண் சக்ரவாகப் பறவை கொண்டுவந்த* தாமரைத்தண்டுகளைக் நிலவினால் குளிரச்செய்து, விடியற்காலையில் பெண் சக்ரவாகங்கள் உண்டு மகிழ்கின்றன. 72

1524 இத்தனைத் தொல்லைகள் நேர்ந்தும்கூட மீன்கள் தடாகச் சேற்றில் துளைந்து, துளைந்து உயிர் பிழைப்போம் என்று நினைக்கின்ற நேரத்தில், எங்கிருந்தோ எருமைகள் வந்து வீழ்ந்தன. 73

1525 சூரியன் உதிக்கவில்லை. அதற்குள் வண்டுகள் தாமரைக்குள் புகுந்துஅதன் மகரந்தத்தைக் குடித்துவிட்டு, மெதுவாகக் குரல் எழுப்பின. மன்மதனே ம்ருத்யுஞ்ஜய மந்திரத்தை ஜபித்தான் போலும்! 74

1526 பெண்கள் மல்லிகை முதலான மலர்ச் சரங்களைத் தலையில் சூட்டிக்கொண்டு. குங்குமப்பூ பச்சைக்கற்பூரம் கலந்த சந்தனத்தை மார்பு நிறைய பூசிக்கொண்டு, மெல்லிய பட்டுச் சேலை உடுத்திக் கொண்டு, ஆபரணங்களை அணிந்து கொண்டு கணவர்களை உபாஸித்தார்கள். 75

1527 சூரியன் கடக ராசியில் பிரவேசித்தபோது, (ஆடி மாதத்தில்) சோழ மன்னனின் படைகள் வெதும்பி இருந்தன. ஆனால் பாண்டியர் பக்கத்தில் வீரமே வெகுண்டு எதிர்ப்பது போல், வீரத் துறை சுருசுருப்பு அடைந்தது. 76

अथ सुन्दरेशमभिवन्द्य नृपः कलयन्प्रसादबलमस्य बलम्।
निरगाद्यथोपनतसैन्यवृतो नगराद्रातिविजयाय तदा ॥ ७७
चिरसंप्ररूढदृढमत्सरयोः अजनिष्ट जन्यमथ तत्र तयोः।
अपि विस्मयाय हृदि यद्द्युसदां अपि नारदस्य यदलंमतये ॥ ७८
असिकुन्तशूलपरशुच्छुरिकापरिघाभिघातविगलद्रुधिरम्।
अविचारितस्वपर सैन्यमभूत् प्रथनं तदस्थिरजयापजयम् ॥ ७९
समरे भुजाभुजि कचाकचि च प्रहरद्वयं चलति तद्बलयोः।
तदवेक्षितुं गगनमध्य तलं रविरध्यरोहदतितुङ्गमिव ॥ ८०
मधुमासपुष्पितपलाशवन प्रतिमं तुरंगखुरधूलिवृतम्।
तदुदन्यया परुषयाभिहतं बलयोर्द्वयं सममभूद्विरतम् ॥ ८१
परिपूरितां शिशिरकुम्भशतैः विपुलां प्रपां क्वचन पाण्ड्यबले।
अधिरुह्य मौलिसरिदम्बुभरैः तृषितानतर्पयत भूतपतिः ॥ ८२
करुणामृतेन मधुराधिपतेः मधुरश्च मौलितटिनीसलिलैः।
परिपोषिताः सपदि पाण्ड्यभटाः पुनराहवाय मतिमादधिरे ॥ ८३
अथ सिंहनादमुखरा युगपत् नृपतेर्भटाः परिनिपत्य रणे।
सह राजसिंहधरणीपततिना जगृहुः करे सपदि चोलनृपम् ॥ ८४

---

1528 பாண்டிய மன்னன் ஸுந்தரேசனை வணங்கி, 'தமக்கு பகவானுடைய திருவருளே முக்கியபலம்' என்று கருத்தில் கொண்டு,தயார்நிலையில் இருந்த படைகளுடன் நகரத்திலிருந்து, எதிரியை வெற்றி கொள்வோம் என்ற கணிப்புடன் வெளியேறினான். 77

1529 நெடுநாட்களாக ஊன்றிவிட்ட பகையினால் வெறி ஏறி இரு படைகளும் போரில் இறங்கின. தேவர்களுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. ஆனால் நாரதருக்கு இதுவே போதுமே, தான் தலையிடுவதற்கு! 78

1530 பட்டாக்கத்தி, குந்தானி, சூலம், கோட, சூர்கத்தி முதலிய ஆயுதங்களைக் கொண்டு ஒருவரையொருவர் தாக்கினர். ரத்தம் வெள்ளமாகப் பெருகிற்று. போர் வெறியில் எதிரியைத் தாக்குகிறோமா அல்லது தன் கட்சியையே தாக்குகிறோமா என்று புரியாமல் போர் புரிந்தனர். எந்தக் கட்சி வெற்றி பெறும் என்று கணிக்க முடியாத நிலை ஏற்பட்டது. 79

1531 இருபுறமும் தோளோடு தோள் மோதிற்று. தலைமுடிகளைப்பிடித்து இரு படையினருமே உலுக்கினர். இந்த கோரமான போரின் போது, அதை

அத ஸுந்தரேஶமபிவந்த்ய ந்ருப: கலயன் ப்ரஸாதபலமஸ்ய பலம் ।
நிரகாத்யதோபநதஸைந்யவ்ருதோ நகராதராதிவிஜயாய ததா ।। 77
சிரஸம்ப்ரரூடத்ருடமத்ஸரயோ: அஜநிஷ்ட ஜந்யமத தத்ர தயோ: ।
அபி விஸ்மயாய ஹ்ருதி யத் த்யுஸதாமபி நாரதஸ்ய யதலம்மதயே ।। 78
அஸிகுந்தஶூலபரஶுச்சுரிகாபரிகாபிகாதவிகலத்ருதிரம் ।
அவிசாரிதஸ்வபரஸைந்யமபூத் ப்ரதநம் ததஸ்திரஜயாபஜயம் ।। 79
ஸமரே புஜாபுஜி கசாகசி ச ப்ரஹரத்வயம் சலதி தத்பலயோ: ।
ததவேக்ஷிதும் ககநமத்யதலம் ரவிரத்யரோஹத் அதிதுங்கமிவ ।। 80
மதுமாஸபுஷ்பிதபலாஶவநப்ரதிமம் துரங்ககுரதூலிவ்ருதம் ।
ததுதந்யயா பருஷயாபிஹதம் பலயோர்த்வயம் ஸமமபூத் விரதம் ।। 81
பரிபூரிதாம் ஶிஶிரகும்பஶதைர்விபுலாம் ப்ரபாம் க்வசந பாண்ட்யபலே ।
அதிருஹ்ய மௌலிஸரிதம்புபரைஸ்த்ருஷிதான் அதர்பயத பூதபதி: ।। 82
கருணாம்ருதேந மதுராதிபதேர் மதுரைஶ்ச மௌலிதடிநீஸலிலை: ।
பரிபோஷிதா: ஸபதி பாண்ட்யபடா: புநராஹவாய மதிமாததிரே ।। 83
அத ஸிம்ஹநாதமுகரா யுகபந்ந்ருபதேர்படா: பரிநிபத்ய ரணே ।
ஸஹ ராஜஸிம்ஹதரணீபதிநா ஜக்ருஹு: கரே ஸபதி சோலந்ருபம் ।। 84

---

*பார்க்க ஸூரியபகவான் ஆகாயத்தின் நடு உச்சிக்கே வந்துவிட்டார். 80*

*1532 சித்திரை வைகாசி மாதங்களில் புரசை பூத்துக்குலுங்கும். செக்கச்செவேலென்ற ஒளி. அதுபோல குதிரைகளின் கால் புழுதிகள் ஆகாசத்தை மண்டின. அந்தபுழுதித் தாக்குதலால் அவதிப்பட்ட படைகள் இரண்டுமே சற்று ஓய்வெடுத்தன. அவர்களுடைய நா வரண்டு போயின. 81*

*1533 பரமேச்வரன் தன் சிரஸில் கங்கையை தாங்கி இருக்கிறாரே! அதிலிருந்து குடங்களில் தண்ணீரை நிரப்பி பாண்டியர் படைமீது வாரித் தெளித்தார். தலைமேல் இருந்த கங்கை நீரினால் படைவீரர்களின் தாகத்தைத் தணித்தார். 82*

*1534 மதுராநாயகனான ஸுந்தரேசப்பிரபுவின் கருணை அமுதத்தினாலும், தலைச்சடையில் உள்ள கங்கை நீர் பெருக்கினாலும் புத்துயிர் பெற்ற பாண்டியன் படை மறுபடியும் போரிட முனைந்தது. 83*

*1535 பாண்டியர்களின் படைகள் சிங்கம் போல் கர்ஜித்துக் கொண்டு ஒரே நேரத்தில் அனைத்து எதிரிகளின் படைகளைத் தாக்கி முறியடியத்தன. ராஜஸிம்ஹனோடு சேர்த்து சோழராஜனை கைது செய்து விட்டனர். 84*

जयं समासाद्य निवर्तमानः प्रपां पुनः काप्यनवेक्षमाणः ।
राजेन्द्रपाण्ड्यो मधुरेश्वरस्य लीलायितं तत्कलयांबभूव ॥ ८५

सख्यं प्रदाय मधुरेश्वरभक्तियोगात् सत्कृत्य चोलनृपतिं विससर्ज पाण्ड्यः ।
तं राजसिंहमपि दुर्मदमुन्मदिष्णुं भ्रातेति जातकरुणो बिभरांबभूव ॥ ८६

अम्भोभिः केवलैरप्यवनिपतिचमूं तर्पयञ्जातु तप्तां
  ख्यातिं धत्ते यदीशः कियदिव न यशो नित्यमन्नप्रदायाः ।
देव्या मीनेक्षणाया इति नगरजुषाम् अद्भुतान्भकित्वादान्
  शृण्वन्राजेन्द्रपाण्ड्यः सकलमपि महीचक्रमेकः शशास ॥

ततो राजेशपाण्ड्योऽभूद्राजगम्भीर इत्यतः ।
पुरुहूतजिदप्यासीत् अस्मादासीत्कुलध्वजः ॥ ८८

सुन्दरेशप्रसादेन सुन्दरेशाङ्घ्रिशेखरः ।
ततो जज्ञे यतो जज्ञे तारेन्दु विमलं यशः ॥ ८९

इति सप्तदशः सर्गः

---

1536 வெற்றி பெற்று நகரம் திரும்புகின்ற ராஜேந்திரபாண்டியன், தன்னையும், தன் படையையும் காத்துவந்த வீரவளையத்தைக் காணாமல், இது மதுரா நாயகனுடைய லீலை என்று புரிந்து கொண்டான். 85

1537 ராஜேந்திர பாண்டியன் சோழ அரசனுடைய சிவ பக்தியை மதித்தான். அவனுடன் நட்பு உடன்படிக்கை செய்து கொண்டான், சோழமன்னனை கௌரவித்து ஊருக்கு அனுப்பி வைத்தான். ராஜஸிம்ஹனிடம் என்ன இருந்தாலும் நம் தம்பி தானே என்று பரிவு காட்டினான். 86

1538 ஆண்டுக்கணக்காக நாள்தோறும் அன்னம் மக்களுக்கு வழங்குகிறாள் தேவி. அவளைப் புகழ்வாரில்லை. தாகம் எடுத்த படையினருக்கு வெறும்

ஜயம் ஸமாஸாத்ய நிவர்த்தமாந: ப்ரபாம் புந: க்வாபி அநவேக்ஷமாண: ।
ராஜேந்த்ரபாண்ட்யோ மதுரேஶ்வரஸ்ய லீலாயிதம் தத் கலயாம்பபூவ ॥ 85

ஸக்யம் ப்ரதாய மதுரேஶ்வரபக்தியோகாத் ஸத்க்ருத்ய சோலந்ருபதிம் விஸஸர்ஜ பாண்ட்ய: ।
தம் ராஜஸிம்ஹமபி துர்மதமுந்மதிஷ்ணும் ப்ராதேதி ஜாதகருணோ பிபராம்பபூவ ॥ 86

அம்போபி: கேவலை: அப்யவநிபதிசமூம் தர்பயன் ஜாது தப்தாம்
க்யாதிம் தத்தே யதீஶ: கியதிவ ந யஶோ நித்யமந்நப்ரதாயா: ।
தேவ்யா மீநேக்ஷணாயா இதி நகரஜுஷாம் அத்புதாந் பக்திவாதான்
ஶ்ருண்வன் ராஜேந்த்ரபாண்ட்ய: ஸகலமபி மஹீசக்ரமேக: ஶஶாஸ ॥ 87

ததோ ராஜேஶபாண்ட்யோऽபூத்ராஜகம்பீர இத்யத: ।
புருஹூதஜிதப்யஸ்மாத் அஸ்மாதாஸீத் குலத்வஜ: ॥ 88

ஸுந்தரேஶப்ரஸாதேந ஸுந்தரேஶாங்க்ரிஶேகர: ।
ததோ ஜஜ்ஞே யதோ ஜஜ்ஞே தாரேந்துவிமலம் யஶ: ॥ 89

இதி மஹாகவிஶ்ரீநீலகண்டதீக்ஷிதப்ரணீதே ஶிவலீலார்ணவே ஸப்ததஶ: ஸர்க: ।

---

*தண்ணீர் வழங்கியதை நாடே கொண்டாடுகிறது என்று நாட்டு மக்களின் பக்திச் சொற்களைக் கேட்டு ராஜேந்திர பாண்டியன் அகில ப்ரஹ்மாண்டத்தையே பரிபாலித்து வந்தான்.* 87

*1539 ராஜேந்திர பாண்டியனுக்கு ராஜேச பாண்டியன் பிறந்தான். அவனுக்கு இந்திரஜித் பாண்டியன் பிறந்தான். அவனுடைய புதல்வன் குலத்வஜபாண்டியன்.* 88

*1540 ஸுந்தரேசப் பெருமான் அருளால் குலத்வஜ பாண்டியனுக்கு சிவபாதசேகரபாண்டியன் பிறந்தான். அவனுடைய புகழ் பூர்ணிமா சந்திரன் போல அப்பழுக்கற்றதாக நாடெங்கும் பரவியது.* 89

**பதினேழாவது ஸர்கம் முடிவடைந்தது**

## अष्टादशः सर्गः

स हयान् सहस्रमयुतं भटोत्तमान् कारिणः शतं दश महारथानापि ।
परिगृह्य सैन्यमुचितं व्ययं चरन् अवशिष्टम् अन्यदखिलं शिवे ददो ॥ १

अथ धाम्नि पुष्पवननाम्नि धूर्जटेः अविदूरवर्तिनि कदम्बकाननात् ।
अजनिष्ट कापि किल हेमनायिकेत्यभिविश्रुता जगति रुद्रकन्यका ॥ २

शिवभक्तपूजनपरा शिवव्रता शिवबिम्बमेकमखिलोत्सवोचितम् ।
परिकल्प्य सिक्थकमयं प्रचक्रमे परिशुद्धताम्रकणसंचयाय सा ॥ ३

अथ नाचिरात् अनुपलब्धसाधना दधती तमेव सुदृढं मनोरथम् ।
मधुरेशमेव धृतसिद्धविग्रहं मदिरेक्षणालभत भाग्यतोऽतिथिम् ॥ ४

प्रणिपत्य तं परिचरन्त्यनेकधा रससिद्धिदर्शनपरेण तेन सा ।
अनुकम्पिता सकलमायसं गृहे भसितेन तस्य नयति स्म हेमताम् ॥ ५

कृतविस्मयाऽथ गिरिशे तिरोहिते परिकल्प्य तां प्रतिकृतिं हिरण्मयीम् ।
अवलम्ब्य गण्डतलमङ्गुलीमुखैः परिचुम्बति स्म गणिकाऽतिसुन्दरम् ॥ ६

अधुनापि तन्नखपदं यदीक्ष्यते विमले कपोलफलके महेशितुः ।
श्रमवारिलेशवति तत्र संगतं शकलं विधोरिव जटापरिच्युतम् ॥ ७

---

## பதினெட்டாவது ஸர்கம்

## திருவிளையாடல் 36

## இரசவாதம் செய்தபடலம்

*1541* அந்த பாண்டிய அரசன் ஆயிரம் குதிரைகள், பதினாயிரம் படைவீரர்கள், நூறு யானைகள், பத்து மஹாரதங்கள் அடங்கிய சேனையை நன்கு பரிபாலித்தான். மீதம் முழுவதையும் ஸுந்தரேசப்பெருமானிடம் ஸமர்ப்பித்தான். 1

*1542* கதம்பவனத்திற்கு அருகில் உள்ள புஷ்பவனம் ( தற்சமயம் திருபூவனம் என்று அழைக்கப்படுகிறது. மதுரையிலிருந்து சுமார் 15 கிலோமீட்டர் தொலைவில் இராமனாதபுரம் செல்லும் மார்கத்தில் உள்ளது ) என்ற ஊரில் ஹேமாம்பா (பொன்னனையாள்) என்று புகழ்பெற்ற ருத்திரகன்னிகை (தேவதாஸி) பிறந்திருந்தாள். 2

*1543* அவள் சிவனிடம் பக்திபூண்டாள். சிவனடியார்களை வழிபட்டாள். சிவபெருமானுக்கு ஸகலவிதமான விழாக்களையும் கொண்டாட வேண்டும் என்ற எண்ணத்துடன் மெழுகினால் (வண்டுகளின் கூண்டு) ஒரு சிவ பிம்பத்தைத் தயாரித்தாள். பரிசுத்தமான தாம்ர செப்புத்துண்டுகளை சேகரித்தாள். ( சிவ பதுமை வார்க்க) 3

## அத அஷ்டாதஶ: ஸர்க: ।

ஸ ஹயான் ஸஹஸ்ரமயுதம் படோத்தமான் கரிண: ஶதம் தஶ மஹாரதாநபி ।
பரிக்ருஹ்ய ஸைந்யமுசிதம் வ்யயம் சரன் அவஶிஷ்டம் அந்யதகிலம் ஶிவே ததௌ ॥ 1

அத தாம்நி புஷ்பவநநாம்நி தூர்ஜடேரவிதூரவர்திநி கதம்பகாநநாத் ।
அஜநிஷ்ட காபி கில ஹேமநாயிகேதி அபிவிஶ்ருதா ஜகதி ருத்ரகந்யகா ॥ 2

ஶிவபக்தபூஜநபரா ஶிவவ்ரதா ஶிவபிம்பமேகம் அகிலோத்ஸவோசிதம் ।
பரிகல்ப்ய ஸித்தகமயம் ப்ரசக்ரமே பரிஶூத்த தாம்ரகணஸஞ்சயாய ஸா ॥3

அத நாசிராதநுபலப்தஸாதநா தததீ தமேவ ஸுத்ருடம் மநோரதம் ।
மதுரேஶமேவ த்ருதஸித்தவிக்ரஹம் மதிரேக்ஷணாலபத பாக்யதோऽதிதிம் ॥ 4

ப்ரணிபத்ய தம் பரிசரந்தி அநேகதா ரஸஸித்திதர்ஶநபரேண தேந ஸா ।
அநுகம்பிதா ஸகலம் ஆயஸம் க்ருஹே பஸிதேந தஸ்ய நயதி ஸ்ம ஹேமதாம் ॥ 5

க்ருதவிஸ்மயாத கிரிஶே திரோஹிதே பரிகல்ப்ய தாம் ப்ரதிக்ருதிம் ஹிரண்மயீம் ।
அவலம்ப்ய கண்டதலமங்குலீமுகை: பரிசும்பதி ஸ்ம கணிகாதிஸுந்தரம் ॥ 6

அதுநாபி தந்நகபதம் யதீக்ஷ்யதே விமலே கபோலபலகே மஹேஶிது: ।
ஶ்ரமவாரிலேஶவதி தத்ர ஸங்கதம் ஶகலம் விதோரிவ ஜடாபரிச்யுதம் ॥7

---

*1544* அவள் வெகுநாட்கள் எங்கெங்கோ தேடினாள். பதுமை வார்க்க தகுதியான ஸாதனங்களே கிடைக்கவில்லை. ஆனால் அந்த ஆசை மட்டும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே இருந்தது. ஸுந்தரேசப் பெருமாளையே மனதில் நிலைத்த வடிவமாக தியானித்துக்கொண்டிருத்தாள். ஒரு நாள் ஸுந்தரேசப் பெருமானே ஒரு ஸித்தர் வடிவத்தில் விருந்தினராக வந்தார். 4

*1545* அவரை வனங்கினாள், வரவேற்றாள். அவருக்கு உரிய பலவிதமான உபசாரங்களும் செய்தாள். அவருக்கு பாதரஸம் என்ற திரவப் பொருளின் மூலம் உலோகங்களை தங்கமாக்கும் செயல் தெரியும். அவளுடைய வீட்டில் கிடந்த இரும்பு சாமான்கள் அனைத்தையும் அவர் தங்கமாக ஆக்கினார். 5

*1546* இதென்ன இரும்பு தங்கமாகிவிட்டதே என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கும்போதே விருந்தினர் மறைந்து விட்டார். அந்த தங்கத்தைக்கொண்டு அவள் ஒரு சிவப் பிரதிமை வடிக்கச் செய்தாள். அது மிகவும் அழகாக அமைந்தது. அதன் கழுத்தில் விரல்நுனியால் தடவி வடிவம் முழுவதும் முத்தமிட்டாள். 6

*1547* இன்று கூட ஹேமாம்பாவின் நகப்பதிவு, அந்த தங்கபிம்பத்தின் கன்னத்தில் தெரிகிறது. அவள் முத்தமிட்டபோது கன்னத்தில் சிந்திய வியர்வைத் திவிலை ஈசனின் சடையிருந்த விழுந்த சந்திரனின் சிறு துண்டுபோல் விளங்குகிறது. 7

अपि यन्महाक्रतुभिराप्तदक्षिणैः अपि वा त्रयीपरिचयैरहर्निशम्।
अनवाप्यमति पदमैन्दुशेखरं तदवाप सा तदनुकम्पिता ततः ॥ ८
गजवाजियोधरथयूथभीषणां परिगृह्य चोलनृपतौ पताकिनीम्।
अभिगच्छति स्वयमनन्यसाधनः शिवमारराध शिवपादशेखरः ॥ ९
तमुवाच वागथ नभःसमुद्भवा न बिभीहि तस्य महती चमूरिति।
अभिषेणय त्वमरिम् अल्पसैनिको विजयस्तवैव भवितेति पार्थिवम् ॥ १०
अथ पाण्ड्यमल्पबलम् अभ्ययाद्बली सरितं समुद्र इव चोलपार्थिवः।
नृपतिश्च निश्चलमतिर्व्यवस्थितः कलयन्पुरः कनकशैलकार्मुकम् ॥ ११
अथ युद्धमुद्धतमवर्धत क्षणाद्दृढरूढगूढतरबैरयोस्तयोः।
असिपातपाटितपतन्मतङ्गजस्रवत् अस्रसिन्धुहृतसैन्धवव्रजम् ॥ १२
निशितेषु तत्र निपतत्सु सायकेष्वभितो भयात् अतिविदूरवर्तिनः।
निहतान्हयद्विपभटान्निनीषवो मुहुराह्वयन्यमभटाः प्रसान्त्वनैः ॥ १३
वपुरानिलं न पिशिताशनक्षमं यदि पार्थिवं शरशतैर्विभेत्स्यते।
इदमुत्तरेम कथमर्थकृच्छ्रमित्यवलन्त दूरमभितः पिशाचिकाः ॥ १४

---

1548 பெரிய பெரிய யாகங்களை அனுஷ்டித்தாலும், மதுரா நாயகனை பிரதிதினம் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாலும், தினந்தோறும் அங்கே வேதபாராயணம் செய்து கொண்டிருந்தாலும் கூட சிவ பெருமானின் எத்தகைய அருள் கிடைக்காதோ, அந்த அருளை அந்த கன்னிகை பெற்றுவிட்டாள். அவளுடைய தகுதியினால் அல்ல. அவளுடைய இளகிய மனதினால். இப்படிப்பட்ட சிவபெருமானுடைய கிருபைக்கு நிமித்தமே தேவை இல்லை. தானாகவே வரும். 8

## திருவிளையாடல் 37

## சோழனை மடுவில் வீழ்த்திய படலம்

1549 அந்த சிவபாதசேகரன் நாட்டை ஆண்டுவந்த சமயத்தில், ரதங்கள், யானைகள், குதிரைகள், வீரர்கள் என்ற நால்வகைப் படையுடன் சோழமன்னன் மறுபடியும் போருக்கு வந்தான். சிவபெருமானின் திருவடி தவிர வேறு உதவி இல்லாத பாண்டிய மன்னன் ஸுந்தரேசப் பெருமானை உபாஸித்தான். 9

1550 அப்பொழுது ஒரு வானொளி அரசனைப் பார்த்து கூறியது. எதிரியின் படை பெரியது. நம்மிடம் சிறிய படைதான் என்று பயப்படாதே. நீ உன்னுடைய சிறுபடையுடன் எதிர்த்து நில். உனக்குத்தான் வெற்றி! என்று. 10

அபி யந்மஹாக்ரதுபிராப்ததக்ஷிணை: அபி வா த்ரயீபரிசயை: அஹர்நிஶம் ।
அநவாப்யமஸ்தி பதமைந்துஶேகரம் ததவாப ஸா ததநுகம்பிதா தத: ॥ 8
கஜவாஜியோதரதயூதபீஷணாம் பரிக்ருஹ்ய சோலந்ருபதௌ பதாகிநீம் ।
அபிகச்சதி ஸ்வயம் அநந்யஸாதந: ஶிவமாரராத ஶிவபாதஶேகர: ॥ 9
தமுவாச வாகத நபஸ்ஸமுத்பவா ந பிபீஹி தஸ்ய மஹதீ சமூரிதி ।
அபிஷேணய த்வமரிம் அல்பஸைநிகோ விஜயஸ்தவைவ பவிதேதி பார்திவம் ॥ 10
அத பாண்ட்யம் அல்பபலமப்யயாத் பலீ ஸரிதம் ஸமுத்ர இவ சோளபார்திவ: ।
ந்ருபதிஶ்ச நிஶ்சலமதிர்வ்யவஸ்தித: கலயந் புர: கநகஶைலகார்முகம் ॥ 11
அத யுத்தம் உத்ததமவர்தத க்ஷணாத் த்ருடரூடகூடதரவைரயோஸ்தயோ: ।
அஸிபாதபாடிதபதந்மதங்க ஸ்ரவதஸ்ரஸிந்துஹ்ருதஸைந்தவவ்ரஜம் ॥ 12
நிஶிதேஷு தத்ர நிபதத்ஸு ஸாயகேஷு அபிதோ பயாததிவிதூரவர்திந: ।
நிஹதான் ஹயத்விபபடான் நிநீஷவோ முஹுராஹ்வயன் யமபடா: ப்ரஸாந்த்வநை: ॥ 13
வபுராநிலம் ந பிஶிதாஶநக்ஷமம் யதி பார்திவம் ஶரஶதைர்விபேத்ஸ்யதே ।
இதமுத்தரேம கதமர்தக்ருச்ச்ரமித்யவலந்த தூரமபித: பிஶாசிகா: ॥ 14

---

*1551* நதியை எதிர்த்து கடல் பொங்குவது போல,சிறுபடையுடன் கூடிய பாண்டியனை பெரும் படையுடன் வந்த சோழமன்னன் தாக்கினான். பாண்டிய மன்னன் அசையவில்லை. மேருவை வில்லாக்கிக்கொண்ட பரமேச்வரனையே பிரார்தித்துக்கொண்டு எதிர்த்து நின்றான். *11*

*1552* மிகப்பெரிய போர் மூண்டது. தலைமுறை தலைமுறையாக நீண்டு ஊன்றி விட்ட பகை கொண்டு. இருவருமே வெறியுடன் ஒருவர்கொருவரை எதிர்த்தனர். யானைகள் அடிபட்டு வீழ்ந்தன. ரத்தம் பீரிட்டுப் பரவியது. பாய்ந்து வந்த குதிரைகள் அஸ்தரங்களின் அலைகளினால் அடிபட்டு குப்புர வீழ்ந்தன. *12*

*1553* கூறான பாணங்கள் பாய்ந்து, குதிரைகள், யானைகள், படைவீரர்கள் மடிந்து விழுந்தபோது, அவர்களுடைய உயிரைக் கொண்டு போக வந்த யமபடர்கள், பாணங்கள் தம்மையும் தாக்கிவிடுமோ என்று. அருகில் நெருங்குவதற்கு பயந்தபோது, கூட வந்த தோழர்கள் தைர்யப்படுத்தி உடன் அழைத்துச் சென்று தங்கள் கடமையை ஆற்றினர். *13*

*1554* பிணம் தின்னும் பிசாசுகள் அங்கே கூடிவிட்டன. ஆவியாக காற்று வடிவத்தில் போய் உண்ணமுடியவில்லை. மேலும் உடல்கள் மண்ணாக இருந்து, அதன் மேல் அம்புகள் பாய்ந்திருந்ததாலும் அவற்றை திண்ண முடியவில்லை. ஆகவே எப்படி இவற்றை நாம் உண்ணுவோம் என்று திகைத்துப் போய் வெகு தூரத்திலேயே சுற்றிக் கொண்டிருந்தன. *14*

प्रथमं हता युधि दिवं समुद्गताः पुनरर्धवर्त्मनि शरैर्निपातिताः।
पुनरुद्गता द्विगुणगुणभाजिनः कतिचिद्भटा दिवि कृताः सुधाशनैः॥ १५

अगृहीतशक्तिकया मिथः कथास्ववबद्धमौनकृतहस्तचेष्टिताः।
अमरस्त्रियो रणहताश्च तद्भटाः पशुवत्सुखं निखिलम् अप्यभुञ्जत॥ १६

धवलातपत्रवलयाश्चकाशिरे रदनाश्च मत्तकरिणां निपातिताः।
यशसो दिगन्तम् अभिपूरयिष्यतः प्रथमोद्गता रणतलेऽङ्कुरा इव ॥ १७

तुरगैः ममं तुरगसादिनो हता दिवमुद्ययुः समाधिरुह्य तान्पुनः।
अतिसाहसेन दिवमभ्युपेयुषां अपि वाह्यवाहकदशा न शाम्यति॥ १८

अवभिद्य बिम्बमहिमद्युतेर्दिवं प्रतिगच्छतां युधि भटाश्वदन्तिनाम्।
गणनाम् अमर्त्यगणका वितेनिरे चरमाङ्गसीम्नि निभृता विवस्वतः॥ १९

शरपञ्जरस्थगितभूनभोन्तरे समराङ्गणे घनतमःसमावृते।
अभिसारिकेव विजयेन्दिरा चरन्ती अवृणीत तं तमविशेषदर्शिनी॥ २०

बलयोर्द्वयोरपि मदोद्भटा भटा बहवस्तथा रणमुखे निपातिताः।
सकलं यथाऽजनि पुरं शतक्रतोः हृतदारमन्दिरविमानभूषणम्॥ २१

---

1555 முதல் ஒரே பாணத்தினால் தாக்கப்பட்டு உயிர் நீத்தப் போர் வீரர்கள் தேவலோகம் சென்றனர். பாணங்களால் அடிபட்டு சாகாமல் குத்துயிரும் குலையுயிருமாக ஊசலாடிக் கொண்டிருந்தவர்கள் மறுபடியும் அடிபட்டு ஸ்வர்கலோகம் சென்றார்கள். அவர்களுக்கு இருமடங்கு அமுதம் அளித்து, தேவலோகத்தில், தேவர்கள் அவர்களை உபசரித்தனர். 15

1556 போரில் அடிபட்டு வீரஸ்வர்கம் சென்றார்களே தவிர, உடல் வலிமையோ, மன உற்சாகமோ அவர்களுக்கு இல்லை. சோர்வினால் ஸுகபோகம் அனுபவிக்க முடியவில்லை. அப்ஸரஸ்களுடன் பேசக்கூட முடியாமல் கைகால்களை ஆட்டினார்கள். பசுக்களைப் (நான்கு கால் பிராணிகளைப் போல) போலத்தான் ஸுகம் அனுபவித்தனர். 16

1557 யானைகளின் மீது வைத்து கட்டப்பட்ட வெண்குடைகளும், அடிபட்ட யானைகளின் தந்தங்களும் பளீரென்று தெரிந்தன. பாண்டிய மன்னனுக்கு வரப்போகின்ற புகழ்களின் இளம்பயிராக முளைவிட்டிருக்கின்றன போலும்! 17

1558 போரில் தமது மார்பில் அம்புகள் தாக்கியதால், இறந்த குதிரைகளும், குதிரை வீரர்களும் உடனே தேவவடிவம் ஏற்று தேவக் குதிரைகள் மீதேறி தேவலோகம் புகுந்தனர். ஆனால் அந்தோ பரிதாபம்! தேவலோகம்

ப்ரதமம் ஹதா யுதி திவம் ஸமுத்கதா: புநரர்தவர்த்மநி ஶரைர்நிபாதிதா: ।
புநருத்கதா த்விகுணபாகபாஜிந: கதிசித் படா திவி க்ருதா: ஸூதாஶநை: ॥ 15

அக்ருஹீதஶக்திகதயா மித:கதாஸ்வவபத்ரமௌநக்ருதஹஸ்தசேஷ்டிதா: ।
அமரஸ்த்ரியோ ரணஹதாஶ்ச தத்படா: பஶூவத் ஸுகம் நிகிலமபி அபுஞ்ஜத ॥ 16

தவளாதபத்ரவலயாஶ்சகாஶிரே ரதநாஶ்ச மத்தகரிணாம் நிபாதிதா: ।
யஶஸோ திகந்தம் அபிபூரயிஷ்யத: ப்ரதமோத்கதா ரணதலேऽங்குரா இவ ॥ 17

துரகை: ஸமம் துரகஸாதிநோ ஹதா திவமுத்யயு: ஸமதிருஹ்ய தான் புந: ।
அதிஸாஹஸேந திவமப்யுபேயுஷாமபி வாஹ்யவாஹகதஶா ந ஶாம்யதி ॥ 18

அவபித்ய பிம்பமஹிமத்யுதேர்திவம் ப்ரதி கச்சதாம் யுதி படாஶ்வதந்திநாம் ।
கணநாமமர்த்யகணகா விதேநிரே சரமாங்கஸீம்நி நிப்ருதா விவஸ்வத: ॥ 19

ஶரபஞ்ஜரஸ்தகிதபூ நபோந்தரே ஸமாராங்கணே கநதமஸ்ஸமாவ்ருதே ।
அபிஸாரிகேவ விஜயேந்திரா சரந்த்யவ்ருணீத தம் தம் அவிஶேஷதர்ஶிநீ ॥ 20

பலயோர்த்வயோரபி மதோத்படா படா பஹவஸ்ததா ரணமுகே நிபாதிதா: ।
ஸகலம் யதாஜநி புரம் ஶதக்ரதோர்ஹ்ருததாரமந்திரவிமாநபூஷணம் ॥ 21

---

போய்க்கூட குதிரைக்கும் குதிரை வீரனுக்கும் இருந்த வாஹனம், வாஹனம் ஏறுபவன் என்ற உறவு மாறவில்லை. 18

1559 போரில் படர்கள், யானைகள், குதிரைகள், புறமுதுகு காட்டாமல் மார்பிலே பாணம் பாய்ந்து இறந்த படர்கள் சூரியமண்டலத்தை மோதிக்கொண்டு மேல் உலகம் சென்றார்கள். அவர்களுடைய எண்ணிக்கையை தேவலோகத்துக் கணக்குப்பிள்ளை ஸூர்யனுடைய அடிச்சுவட்டில் எழுதினார். 19

1560 எதிரிகளின் வில்களிலிருந்து கிளம்பிய பாணங்கள், போரில் ஆகாசத்தில் ஒன்றுக்கொன்று தாக்கி பின்னிக் கொள்கின்றன. ஒரே இருட்டு. அதில் வெற்றி பெற்றவர்களை தேடி விஜயலக்ஷ்மி. அபிஸாரிகா நாயகியைப் போல இங்குமங்கும் அலைந்து கொண்டு கண்டுபிடிக்க முடியாமல் திண்டாடினாள். 20

1561 போராடுகின்ற இரண்டு கட்சிகளின் வீரர்கள் போர் முனையில் அடிபட்டு வீழ்ந்தார்கள். தாரமிழந்தவர்கள் ஒரு புறம், வீடிழந்தவர்கள் ஒரு புறம், விமானமிழந்தவர்கள் ஒரு புறம், அலங்கார அணிகலன்கள் இழந்தவர்கள் ஒரு புறம் என்று ஒரே சந்தடிக்குப்பமாக இருந்தது. 21

हतशिष्टमल्पमवलोकयन्बलं प्रचचाल पाण्ड्यनृपतिर्यदा पुरः ।
तरसावपत्य हयसादिरूपतः पुरतश्चचाल पुरशासनस्तदा ॥ २२

परुषं रुषा परिरटन्करेण भ्रमयन्युधि त्रिशिखमुन्मिषच्छिखम् ।
प्रचलन्पदानि कतिचित्पुराहितः शिथिलीचकार निखिलं बलं द्विषाम् ॥ २३

अपविद्धकुन्तलम् अचिन्तिताटवीसलिलानलप्रदरगर्तकण्टकम् ।
अनवेक्षितस्वजनमानशे दिशो बधिरान्धमूकमिव तद्बलं द्विषाम् ॥ २४

सह धावतो निजजनान्परभ्रमात् अभिगम्य केचिदभयं ययाचिरे ।
अपरे क्षताः स्म इति मूर्छिताः स्वयं क्षतजोक्षितान् पथि समीक्ष्य धावतः ॥ २५

अधियुद्धरङ्गमसवस्तृणीकृताः शिवपादशेखरवरूथिनीभटैः ।
इति किं प्रतीक्ष्य रुषिताखिलं तृणं पृतना चचर्व पथि चोलभूभृतः ॥ २६

अथ मुक्तकेशम् अपथेन विद्रवन् सरसि क्वचित्सतुरगः ससैनिकः ।
निममज्ज चोलनृपतिर्निमज्जयन् अखिलं कुलं स्वम् अयशःपयोनिधौ ॥ २७

अतुलानि हेममणिभूषणाम्बराणि अपहृत्य तस्य कटकान्महीपतिः ।
अखिलानि तान्युपददे महाशयो इरिणाङ्कचूडचरणारविन्दयोः ॥ २८

अथ भक्तसौम्य इति कश्चिदर्चयन्ननिशान्नदाननियमेन शंकरम् ।
अनुवर्तयन्व्रतमृणार्णधारयापि अवसीदति स्म विधनः स सर्वथा ॥ २९

*1562* தன் படைவீரர்கள் அழிந்து போய் சிற்சில வீரர்கள் மட்டுமே போரில் போரிடுவதைப் பார்த்தான் பாண்டிய மன்னன். அவர்களைச் சுற்றிக் கொண்டு வந்த மன்னன் திடீரென்று தன் முன்னே குதிரைமேல் அமர்ந்து கொண்டு ஒரு வீரன் வேகமாக வருவதைப் பார்த்தான். அவன் யாருமல்ல திருபுரஸம்ஹாரம் செய்த ஸுந்தரேசப்பெருமான் தான். 22

*1563* அந்த குதிரை வீரன் வீராவேசத்தோடு எதிரி படைகளின் உள்ளே புகுந்தான்.கையிலிருந்த திரிசூலத்தைப் பொறி பறக்கச் சுற்றினான். எதிரிகளின் படை முழுவதும் கணநேரத்தில் திக்குமுக்காடின. 23

*1564* அந்த வீரனுடைய சுருள் சுருளான தலைமுடிகள் அவிழ்ந்து பறந்தன. அந்த காட்டில் அவன் புகுந்து, நீர்நிலைகள், காட்டுத்தீ,பெரும் பள்ளம், பூமிப்பிளவு, முட்கள், மரங்கள் ஒன்றையும் லட்சியம் செய்யாமல், தனது படை தன்னுடன் வருகிறதா என்பதையும் கவனியாமல், செவிடு, குருடு, ஊமை போல எதிரிப்படைகளை ஓடச்செய்தான். 24

*1565* பின்னோடு ஓடிவருகின்றவர்களை எதிரிப் படையைச் சேர்ந்தவர்கள் என்று தவறுதலாக நினைத்துக் கொண்டு, அவர்களை 'அபயம் அளியுங்கள்' என்று வேண்டினர். மற்றும் சிலர் ரத்தத்தை உடலிலிருந்து பெருக்கிக்கொண்டு

ஹதஶிஷ்டமல்பமவலோகயன் பலம் ப்ரசசால பாண்ட்யந்ருபதிர்யதா புர: ।
தரஸாவபத்ய ஹயஸாதிரூபத: புரதஶ்சசால புரஶாஸநஸ்ததா ॥ 22
பருஷம் ருஷா பரிரடன் கரேண ச ப்ரமயன் யுதி த்ரிஶிகமுந்மிஷச்சி கம் ।
ப்ரசலந பதாநி கதிசித் புராஹித: ஶிதிலீசகார நிகிலம் பலம் த்விஷாம் ॥ 23
அபவித்தகுந்தலமசிந்திதாடவீஸலிலாநலப்ரதரகர்த்தகண்டகம் ।
அநவேக்ஷிதஸ்வஜநமாநஶே திஶா பதிரந்தமூகமிவ தத் பலம் த்விஷாம் ॥24
ஸஹ தாவதோ நிஜஜநான் பரப்ரமாதபிகம்ய கேசிதபயம் யயாசிரே ।
அபரே க்ஷதா: ஸ்ம இதி மூர்ச்சி தா: ஸ்வயம் க்ஷதஜோக்ஷிதான் பதி ஸமீக்ஷ்ய தாவத: ॥ 25
அதியுத்தரங்கமஸவஸ்த்ருணீக்ருதா: ஶிவபாதஶேகரவரூதிநீபடை: ।
இதி கிம் ப்ரதீக்ஷ்ய ருஷிதாகிலம் த்ருணம் ப்ருதநா சசர்வ பதி சோலபூப்ருத: ॥ 26
அத முக்தகேஶம் அபதேந வித்ரவன் ஸரஸி க்வசித் ஸதுரக: ஸஸைநிக: ।
நிமமஜ்ஜ சோலந்ருபதிர்ந்நிமஜ்ஜயன் அகிலம் குலம் ஸ்வமயஶ:பயோநிதௌ ॥ 27
அதுலாநி ஹேமமணிபூஷணாம்பராண்யுபஹ்ருத்ய தஸ்ய கடகாந்மஹீபதி: ।
அகிலாநி தாந்யுபததே மஹாஶயோ ஹரிணாங்கசூடசரணாரவிந்தயோ: ॥ 28
அத பக்தஸௌம்ய இதி கஶ்சிதர்சயந் அநிஶாந்நதாநநியமேந ஶங்கரம் ।
அநுவர்தயன் வ்ரதம்ருணார்ணதாரயாபி அவஸீததி ஸ்ம விதந: ஸ ஸர்வதா ॥ 29

---

ஓடிவந்தவர்களைப் பார்த்து 'தொலைந்தோம் நாம்' என்று கூக்குரலிட்டுக்கொண்டு மூர்ச்சை அடைந்து விழுந்தனர். 25

1566 சிவபாதசேகர பாண்டியனுடைய படைகள் உயிரைப்புல்லாக மதிக்கின்றார்களே என்று நினைத்து, வழியில் கிடந்த ரத்தக்கரை படிந்த புற்கத்தைகளைச் சோழப் படையினர்கள் தின்றார்கள். 26

1567 வேறு வழி இல்லாமல், தலைவிரிகோலமாக சோழமன்னன் படைகளோடும், குதிரைகளோடும் ஒரு ஏரியில் வீழ்ந்து மூழ்கினார்கள். அவன் மட்டுமா மூழ்கினான்? அல்ல. தன்னுடைய குலத்தையே பழிக்கடலில் மூழ்கடித்தான். 27

1568 பாண்டிய மன்னன் எதிரிப் படைவீரர்களின் தங்க ரத்தின ஆபரணங்களையும், ஆடைகளையும், அனைத்தையும். பெரியமனதுடன் சந்திரசேகரனாகிய பரமேச்வரனுடைய பாதாரவிந்தங்களில் ஸமர்ப்பித்தான்.28

## திருவிளையாடால் 38

## உலவாக் கோட்டை அருளிய படலம்

1569 நல்லான் (ஸௌம்யன்) என்ற ஒரு சிவபக்தன், ஓயாமல் அன்னதானம் செய்து கொண்டே சிவனை பூஜிப்பது என்ற விரதத்தை எடுத்துக் கொண்டு அதற்காக நிறைய கடன் வாங்கி மிகவும் துன்பப்பட்டான். விரதத்தைத் தொடர்ந்து கடைபிடிக்கக் கையில் ஒரு காசு கூட இல்லயே என்று வருந்தினான். 29

व्रतभङ्गखेदविवशं तमग्रतः पतितं जिहासुमपि दुर्लभानसून्।
प्रतिपाद्य तण्डुलनिधानमक्षयं परिरक्षति स्म मधुरेश्वरो हरः ॥ ३०
अथ कश्चिदर्थपतिरित्यभिख्यया, विदितो विशामधिपतिः पुरे वसन्।
असुतो धनानि भगिनीसुते दिशन्दशमी जगाम तपसे वनाश्रमम् ॥ ३१
अखिलं धनं तदपहर्तुमिच्छवो भगिनीसुते विनिहितं सनाभयः।
पृथुकं यदा तमधिकं बबाधिरे शरणं ययौ स मधुरश्वरं तदा ॥ ३२
अथ तस्य मातुलवपुः पुरो भवन् अभिजित्य तान्नृपसभे विरोधिनः।
सहसा यदा पुरहरस्तिरोदधे सकलैस्तदा सदसि विस्मितं जनैः ॥ ३३
तनयं ततो वरगुणं तपोबलाच्छिवभक्तमेत्य शिवपादशेखरः।
अखिलं महीवलयमर्पयन् सुते शफरेक्षणाचरणयोरलीयत ॥ ३४
स कदााचिदेत्य मृगयां परापतञ्शयितं क्वचिद्द्रुमतले पथि द्विजम्।
निहतं तुरंगखुरघट्टनैर्विदन्बिभयांबभूव जगृहे च हत्यया ॥ ३५
वसुधेश्वरो बरगुणोऽथ दुःखितः सकलं निधाय सचिवेषु भूभरम्।
जपदानहोमविधिभिर्जगत्पातिं सततं यजन्नपि न शान्तिमाप सः ॥ ३६

---

1570 கடனாளியாகி விட்டோமே என்று அவன் வருந்தவில்லை. 'அன்னதானத்தை தொடர்ந்து நடத்த முடியாமல் என் விரதம் முறிந்து விட்டதே' என்று வருந்தினான். சிவபெருமான் திருவடியில் வீழ்ந்தான். திருப்பி அடையமுடியாத உயிரையும் விட துணிந்து விட்டான். மதுராதிபதியான ஸுந்தரேசப் பெருமான் குறைவற்ற அன்னத்தோடு கூடியதான ஒரு தானியக் கிடங்கையே அவனுக்கு அருளினார். 30

## திருவிளையாடல் 39

## மாமனாக வந்து வழக்குரைத்த படலம்

1571 தனபதி என்று புகழ்பெற்ற ஒரு வைச்ய குலத்தலைவன், அவன் பெயருக்கேற்ப செல்வம் நிறைந்தவன் ஆயினும், மகப்பேறு இல்லாத குறையினால், மிகவும் வருந்தி, மதுரையில் வாழ்ந்து வந்தான். அவன் வைராக்யமடைந்து தனது சகோதரியின் மகனிடம் தன் சொத்துக்கள் அனைத்தையும் ஒப்படைத்து விட்டு, ஏழையாகி, தவம் செய்வதற்கு கானகம் சென்றான். 31

1572 அந்தச் செல்வக்குவியல் முழுவதையும் கைப்பற்ற வேண்டும் என்று தாயாதிகள் துணிந்து அந்த சகோதரியின் மகனை மிகவும் நெருக்கடி செய்தார்கள். அப்போது அவன் ஸுந்தரேசப் பெருமானைச் சரணம் அடைந்தான். 32

வ்ரதபங்ககேதவிவஶம் தமக்ரத: பதிதம் ஜிஹாஸுமபி துர்லபாநஸூன் ।
ப்ரதிபாத்ய தண்டுலநிதாநமக்ஷயம் பரிரக்ஷதி ஸ்ம மதுரேஶ்வரோ ஹர: ।। 30

அத கஶ்சிதர்த்தபதிரித்யபிக்யயா விதிதோ விஶாம் அதிபதி: புரே வஸன் ।
அஸூதோ தநாநி பகிநீஸுதே திஶன் தஶ்மீ ஜகாம தபஸே வநாஶ்ரமம் ।। 31

அகிலம் தநம் ததபஹர்துமிச்சவோ பகிநீஸுதே விநிஹிதம் ஸநாபய: ।
ப்ருதுகம் யதா தமதிகம் பபாதிரே ஶரணம் யயௌ ஸ மதுரேஶ்வரம் ததா ।। 32

அத தஸ்ய மாதுலவபு: பரோ பவன் அபிஜித்ய தான் ந்ருபஸமே விரோதிந: ।
ஸஹஸா யதா புரஹரஸ்திரோததே ஸகலைஸ்ததா ஸதஸி விஸ்மிதம் ஜநை: ।। 33

தநயம் ததோ வரகுணம் தபோபலாச்சிவபக்தமேத்ய ஶிவபாதஶேகர: ।
அகிலம் மஹீவலயமர்பயன் ஸுதே ஶபரேக்ஷணாசரணயோரலீயத ।। 34

ஸ கதாசிதேத்ய ம்ருகயாம் பராபதன் ஶயிதம் க்வசித் த்ருமதலே பதி த்விஜம் ।
நிஹதம் துரங்ககுரகட்டநைர்விதந் பிபயாம்பபூவ ஜக்ருஹே ச ஹத்யயா ।।35

வஸுதேஶ்வரோ வரகுணோऽத து: கித: ஸகலம் நிநாய ஸசிவேஷு பூபரம் ।
ஜபதாநஹோமவிதிபிர்ஜகத்பதிம் ஸததம் யஜந்நபி ந ஶாந்திமாப ஸ: ।। 36

---

*1573* அப்போது ஸுந்தரேசப் பெருமான், மாமன் வடிவில் அவர்களுக்கு முன் தோன்றி விரோதிகளின் தாயாதிகளை அரச ஸபையில் கட்டுப்படுத்திவிட்டு, உடனே மறைந்து விட்டார். அதைக் கண்டு அனைவரும் ஆச்சரியம் அடைந்தனர். 33

## திருவிளையாடல் 40

## வரகுணனுக்கு சிவலோகம் காட்டிய படலம்

*1574* சிவபாதசேகரன் தவம் செய்து வரகுணபாண்டியன் என்ற குமாரனைப் பெற்றெடுத்தான். அவனும் மஹா சிவபக்தனானான். அந்த குமாரனிடம் ராஜ்யம் முழுவதையும் ஒப்படைத்து விட்டு, மீனாக்ஷி தேவியின் சரணங்களில் லயம் அடைந்தான். 34

*1575* அந்த வரகுணபாண்டியன் ஒரு சமயம் வேட்டைக்குச் சென்றான். புதர்களில் பாய்ந்து சென்ற அவனுடைய குதிரை, மரத்தடியில் படுத்திருந்த ஒரு அந்தணன் மீது கால்களை வைத்து மிதித்ததில் அந்த அந்தணன் இறந்து விட்டான். அந்த பரிதாபத்தைக்கண்ட அரசன் திடுக்கிட்டான். ப்ரஹ்மஹத்தி பாபம் அவனைச் சூழ்ந்தது. 35

*1576* வரகுணபாண்டியன் மிகவும் வருந்தினான். அரசுப் பொறுப்புகளை மந்திரிகளிடம் ஒப்புவித்தான். சிவனைக் குறித்து தவம் மேற்கொண்டான். சிவ நாம ஜபம் செய்தான். நிறைய தானங்களை வழங்கினான். யாகங்கள் செய்தான். ஆனால் அமைதி அடையவில்லை. 36

अशृणोत्स वाचमशरीरिणीं ततः करुणालयस्य हारिणाङ्कधारिणः।
मधुराकृतस्य हि महत्वमंहसः सुकृतस्य वा न पथि वर्तते गिराम्॥ ३७

मम लिङ्गमर्जुनतरोः अधस्तले महदस्ति सह्यतनयातटे शुभे।
तदुपासनेन तव तात दुष्कृतं सकलं प्रयाति विलयं क्षणादिति ॥ ३८

स तथेति कार्यमवधार्य निःसरन् अपदिश्य चोलनरपालनिग्रहम्।
शिवमर्जुनेशमभिवन्द्य तत्क्षणात् अभवन् निवृत्तकलुषो महीपतिः ॥ ३९

स पुनः समेत्य नगरीम् अकल्मषः फणिवक्रमुक्त इव पार्विको विधुः।
प्रशशास वासव इव त्रिविष्टपं वसुधेश्वरो वरगुणः क्षमातलम् ॥ ४०

अथ भद्र इत्यभिमतः क्षमापतेः अतिविश्रुतश्च भुवि गानविद्यया।
उपवीणयन्ननिशमुत्पलप्रियं चिरमास्त कश्चन कदम्बकानने ॥ ४१

अथ तं विजेतुमपरस्तु गायकः प्रथयन्यशो बिरुदडिण्डिमस्वनैः।
नृपतिं ददर्श स यदा तदा शिवः स्वयमेव भक्तमवितुं मनो दधे ॥ ४२

स निधाय मूर्ध्नि शशिखण्डमण्डने सुमहान्तमिन्धनभरं नराकृतिः।
दिवसावसानसमयावधि भ्रमन्परितश्चचार मधुरापुरे हरः॥ ४३

---

1577 அவனுக்கு ஒரு ஆகாசக்குரல் காதில் விழுந்தது. அது கருணையே வடிவான ஸுந்தரேசப் பெருமானுடையதே! மதுரா நகரத்தில் செய்யப்பட்டபாபத்திற்கோ, உயர்ந்த புண்ணியத்திற்கோ மாற்று கிடையாது. அனுபவித்தே ஆக வேண்டும். 37

1578 காவேரி நதிக்கரையில், சுபமான அர்ஜுன (மருத) மரத்தடியில் (கும்பகோணம் அருகில் காவேரீ தீரத்தில் உள்ள திருவிடைமருதூரில்) என்னுடைய லிங்கம் ஒன்றுள்ளது. குழந்தாய் அதை உபாஸித்தால் உன்னுடைய அனைத்து தோஷங்களும் உடனே தீர்ந்து விடும். 38

1579 மந்திரிகளிடம், தான் சோழநாட்டு மன்னனை அடக்குவதற்குப் போகிறேன் என்று காரணம் கூறிவிட்டு, மருதமரத்தடியில் இருந்த சிவலிங்கத்தை வழிபட்டு பாபங்கள் நீங்கப் பெற்றவனாக விளங்கினான்.

இந்த இடம் தஞ்சை ஜில்லாவில், காவேரிநதியின் தென்கரையில் அமைந்துள்ள மத்யார்ஜுன க்ஷேத்திரம் என்ற திருவிடைமருதூர். ஜ்யோதிர் மஹாலிங்கம் என்ற பெயரில் பரமேச்வரன் லிங்க வடிவத்தில் காட்சி அளிக்கின்றார். அங்கு இன்றும் கிழக்கு கோபுரவாயில் முன், வாயிற்படியின் வலது புறத்தில் ப்ரஹ்மஹத்தி தோஷம் மனித உருவத்தில் இருப்பதைக் காணலாம். ஆனால் அவ்வூர் மக்கள் அது! சோழன் ப்ரஹ்மஹத்தி என்று கூறுகிறார்கள். 39

அஶ்ருணோத் ஸ வாசம் அஶரீரிணீம் தத: கருணாலயஸ்ய ஹரிணாங்கதாரிண: ।
மதுராக்ருதஸ்ய ஹி மஹத்த்வம் அம்ஹஸ: ஸுக்ருதஸ்ய வா ந பதி வர்ததே கிராம் ।। 37

மம லிங்கமர்ஜுநதரோரதஸ்தலே மஹதஸ்தி ஸஹ்யதநயாதடே ஶுபே ।
ததுபாஸநேந தவ தாத! துஷ்க்ருதம் ஸகலம் ப்ரயாதி விலயம் க்ஷணாதிதி ।।38

ஸ ததேதி கார்யம் அவதார்ய நிஸ்ஸரந்நபதிஶ்ய சோளநரபாலவிக்ரஹம் ।
ஶிவமர்ஜுநேஶமாபிவந்த்ய தத்க்ஷணாத் அபவந்நிவ்ருத்தகலுஷோ மஹீபதி: ।। 39

ஸ புந: ஸமேத்ய நகரீம் அகல்மஷ: பணிவக்ரமுக்த இவ பார்விகோ விது: ।
ப்ரஶஶாஸ வாஸவ இவ த்ரிவிஷ்டபம் வஸுதேஶ்வரோ வரகுண: க்ஷமாதலம் ।। 40

அத பத்ர இத்யபிமத: க்ஷமாபதே: அதிவிஶ்ருதஶ்ச புவி கானவித்யயா ।
உபவீணயந்நநிஶமுத்பலப்ரியம் சிரமாஸ்த கஶ்சந கதம்பகாநநே ।। 41

அத தம் விஜேதுமபரஸ்து காயக: ப்ரதயன் யஶோ விருதடிண்டிமஸ்வநை: ।
ந்ருபதிம் ததர்ஶ ஸ யதா ததா ஶிவ: ஸ்வயமேவ பக்தமவிதும் மநோ ததே ।।42

ஸ நிதாய மூர்த்நி ஶஶிகண்டமண்டநே ஸுமஹாந்தமிந்தநபரம் நராக்ருதி: ।
திவஸாவஸாநஸமயாவதி ப்ரமந் பரிதஶ்சசார மதுராபுரே ஹர: ।। 43

---

*1580 பௌர்ணமி சந்திரன் ராகுவின் நாக்கிலிருந்து விடுபட்டதைப் போல, ப்ரஹ்மஹத்தி தோஷத்திலிருந்து பாண்டிய அரசன் விடுபட்டான். நகரம் வந்து சேர்ந்தான். தேவலோகத்தை இந்திரன் ஆண்டது போல வரகுணபாண்டியன் தன் ராஜ்யத்தை ஆண்டான்.* *40*

## திருவிளையாடல் 41

## விறகு விற்ற படலம்

*1581 வரகுணபாண்டியனின் அபிமானத்தைப் பெற்ற பத்திரன் (பாணபத்திரன்) என்ற ஸங்கீத வித்வான் வாழ்ந்து வந்தான். அவன் அந்த கதம்பவனத்தில் சிவபெருமான் முன்னிலையில், மதுரமாக வீணை இசைத்துக்கொண்டு பாடுவான்.* *41*

*1582 ஹேமநாதன் என்ற மற்றொரு பாடகன், தன்னை ஒரு பிரபல பாடகன் என்று முரசு கொட்டிக்கொண்டு 'பத்திரனை நான் ஜயிப்பேன்' என்று அரசனிடம் சவால் விட்டான். அதே சமயம் சிவபெருமான் தன் பக்தனை. ரக்ஷிக்க மனம் கொண்டான்.* *42*

*1583 பரமேச்வரன் சந்திரக்கலை அலங்கரித்த தன் தலை மீது ஒரு விறகு கட்டை சுமந்து கொண்டு, நாட்டுப்புறத்தான் போல வந்து. அந்தி வேளை வரை மதுராபுரி நகரத்தில் இங்குமங்கும் சுற்றிக்கொண்டிருந்தான்.* *43*

इदमिन्धनं धनमिवाहृतं चिरात् अतिशुष्कमव्रणमकण्टकं गुरु ।
श्रममस्य मूल्यमुपकल्प्य गृह्यतां इति घोषयन्परिचचार शंकरः ॥ ४४

उपगायतोऽस्य पथि गानवैभवात् उपजातपल्लवतयातिकोमलम् ।
अपि मस्तकस्थसरिदम्भसार्द्रितं न तदिन्धनं जगृहुरस्य नागराः ॥ ४५

चरतोऽस्य तत्र नगरे ततस्ततः चरणाब्जविन्यसनभावितं रजः ।
चतुराननप्रभृतिभिः समं सुरैः प्रणिपत्य संजगृहिरे महर्षयः ॥ ४६

करयुग्मसंयमितभारमन्थरं घटितश्रमाम्बुकणमस्य वीथिषु ।
क्रयवादनात् अजितकोकिलारवं गतमागतं च न गतं ममाशयात ॥ ४७

अथ काष्ठभारम् अवरोप्य दुर्भरं स बहिर्गृहात् अभिनवस्य गायतः ।
उपविश्य वीतभरणश्रमः शनैः उपगायति स्म मधुरं यदृच्छया ॥ ४८

अथ षाडवौडवविभेदि सर्वमप्यवलम्ब्य रागकुलमस्तसङ्करम् ।
स जगावनुल्लिखिततानधोरणीमधुरं हृये हृदि भिये च गायताम् ॥ ४९

अथ विस्मयादभिनवस्य गायतो गुरुसंप्रदायमभिगम्य प्रच्छतः ।
स जगाद भद्रसदने गतागतैः अदसीयगीतिगुणरीतिमाहृताम् ॥ ५०

---

*1584 -' ஐயா! இது நன்றாகக் காய்ந்த விறகு முண்டு முடிச்சில்லை. முள்ளுக்குத்தாது. கனமான விறகு. விலை பேசி வாங்கிக் கொள்ளுங்கள். கூலி மட்டும் கொடுத்தால் போதும்.' என்று கூவிக்கொண்டே விறகு வெட்டி உருவத்தில் சங்கரர் நகரத்தைச் சுற்றி வந்தார்.* 44

*1585 விறகுக்காரன் வெறும் கூச்சல் மட்டும் போடவில்லை. விறகின் பெருமையைப் பாடிக்கொண்டே வந்தான். அந்த கானத்தின் மஹிமையினால் விறகு துளிர்க்க ஆரம்பித்து விட்டது. துளிர் மிகவும் கோமளமாக இருந்தது. மேலும் தலையிலிருந்த கங்கை ஜலத்தினால் விறகு ஈரமாகிவிட்டது. அந்த ஈர விறகை யாரும் வங்க முன்வரவில்லை.* 45

*1586 அவ்வாறு நகரத்தில் விறகு விற்பவன் உருவத்தில் ஸஞ்சரிக்கின்ற ஸுந்தரேசப் பெருமானின் பாதாரவிந்தங்களை வைக்கின்ற இடத்திலிருந்து கிளம்பிய புழுதியை நான்முகன் முதலான தேவர்களும் மகருஷிகளும் வணக்கத்துடன் ஏற்றுக்கொண்டனர்.* 46

*1587 விறகு வியாபாரி தன் தலையில் இருக்கும் விறகுக்கட்டை இரு கைகளாலும் அணைத்துப் பற்றிய அழகோ, முகத்தில் வழிகின்ற வியர்வைத் துளிகளின் அழகோ. குயிலின் குரலைப் பறிப்பதாக இருந்த அவன் வீதிகளில் விலை கூறுகின்ற மதுரமான குரலோ, போய் வருகின்ற நடையோ. எனக்கு ( தீக்ஷிதருக்கு) நினைக்க, நினைக்க இனிதாக, மறக்கமுடியததாக இருந்தது ( மம ஆசயாத் ந கதம்)* 47

இதமிந்தநம் தநமிவாஹ்ருதம் சிராததிஶுஷ்கமவ்ரணமகண்டகம் குரு ।
க்ஷமமஸ்ய மூல்யமுபகல்ப்ய க்ருஹ்யதாமிதி கோஷயந் பரிசசார ஶங்கர: ।। 44
உபகாயதோऽஸ்ய பதி காநவைபவாதுபஜாதபல்லவதயாதிகோமலம் ।
அபி மஸ்தகஸ்தஸரிதம்பஸார்திதம் ந ததிந்தநம் ஜக்ருஹுரஸ்ய நாகரா: ।। 45
சரதோऽஸ்ய தத்ர நகரே ததஸ்ததஶ்சரணாப்ஜவிந்யஸநபாவிதம் ரஜ: ।
சதுராநநப்ரப்ருதிபி: ஸமம் ஸுரை: ப்ரணிபத்ய ஸஞ்ஜக்ருஹிரே மஹர்ஷய: ।। 46
கரயுக்மஸங்கமிதபாரம் அந்தரம் கடிதஶ்ரமாம்புகணமஸ்ய வீதிஷு ।
க்ரயவாதநாத் அஜிதகோகிலாரவம் கதமாகதம் ச ந கதம் மமாஶயாத் ।। 47
அத காஷ்டபாரம் அவரோப்ய துர்பரம் ஸ பஹிர்க்ருஹாத் அபிநவஸ்ய காயத: ।
உபவிஶ்ய வீதபரணஶ்ரம: ஶநைருபகாயதி ஸ்ம மதுரம் யத்ருச்சயா ।। 48
அத ஷாடவௌடவவிபேதி ஸர்வமபி அவலம்ப்ய ராககுலமஸ்தஸங்கரம் ।
ஸ ஜகாவநுல்லிகிதாநதோரணீ மதுரம் ஹ்ரியே ஹ்ருதி பியே ச காயதாம் ।। 49
அத விஸ்மயாத் அபிநவஸ்ய காயதோ குருஸம்ப்ரதாயமபிகம்ய ப்ருச்சத: ।
ஸ ஜகாத பத்ரஸதநே கதாகதை: அதஸீயகீதிகுணரீதிம் ஆஹ்ருதாம் ।।50

---

*1588* சுற்றி சுற்றிக் களைத்துப்போய், புதிதாக வந்திருக்கிறாரே மஹாவித்வான், அவர் தங்கியிருந்த வீட்டு வாசல் திண்ணையில், விறகுக்கட்டை மெதுவாக தலையிருந்து இறக்கினான். தலைப் பாகையை அவிழ்த்து திண்ணையில் விரித்து உட்கார்ந்தான். ஜில் என்று காற்று வீசியது. உடல் புல்லரித்தது. இனிமையாக சம்போ சங்கரா என்று பாட ஆரம்பித்தான். 48

1589 மெதுவாக ஷாடவ ஔடவ வகைகள் குறையாமல், மதுரமான ராகங்களால் அந்த ஸ்வரங்கள் வின்யாஸப்படுத்தப்பட்டது. இடையே சிறிது மனம் கமழ்ந்தது. சில ஸ்வராவளி, திஸ்ரம், சதுஸ்ரம், மிச்ரங்கள் பின்னிப் பின்னி மலர்ந்தது. ராகங்கள் கலையாமல், நுண்ணிய ப்ரயோகங்களுடன் மேவின. வித்வான்களின் உள்ளத்தில் பேரானந்தத்தையும், வெட்கத்தையும், பயத்தையும் உண்டு பண்ணியது. 49

1590 க்ருஹத்தில் உள்ள மஞ்சத்தில் படுத்திருந்த வித்வான் எழுந்திருந்தார். நிமிர்ந்தார். அவர் அறியாமலேயே உடல் புல்லரித்தது. இடுப்பில் உத்தரீயத்தைக் கட்டிக் கொண்டு வாசலுக்கு வந்தார். விறகு வியாபாரி திடுக்கிட்டான் போல எழுந்திருந்தான். வித்வான் அவனிடம் கேட்டார்- 50

'எங்கேயப்பா? -பாடினகுரல் கேட்டதே!எங்கே?'

'எனக்குத் தெரியாதுங்க நான் விறகு விற்கிறவன்'

'உன்னை கேட்க வில்லை. பாடினவன் எங்கே?'

'எனக்குத் தெரியாதுங்க நான் விறகு விற்கிறவன்'

तदुदीरितश्रवणलब्धसाध्वसे प्रपलायिते सपदि तत्र गायके ।
उपगम्य भद्रमुचितैः विभूषणैः बहुमन्यते स्म नृपतिर्धनैरपि ॥ ५१

स ददौ समस्तमपि तन्महेश्वरे विततार यद्वरगुणोऽस्य पार्थिवः ।
अपि संचितं वसु दिशञ्शिवाश्रमिषु अधनो बभूव बहुधऽऽर्जयन्नपि ॥ ५२

कविगायकाभिमतकल्पशाखिनः सविधे कदाचिदथ चेरभूपतेः ।
प्रवितीर्य लेखमपि भक्तमात्मनः प्रजिघाय भद्रममृतांशुशेखरः ॥ ५३

स्वपने पुरैव स च तत्समागमं प्रतिबोधितः पुरहरेण पार्थिवः ।
अभिगम्य भद्रममितैर्विभूषणद्रविणाम्बरैः सपदि पर्यपूजयत् ॥ ५४

इति कन्दलत्यहरहर्दयारसे शफरेक्षणासहचरस्य गायके ।
भवति स्म भक्तिरपि तस्य तावती चरमं शरीरमधितस्थुषस्तदा ॥ ५५

उषसि प्रगे तदनु सङ्गवे ततो दिनमध्यगे दिनमणौ निशामुखे ।
रजनीदले च नियमात् असेवत प्रमथाधिनाथम् उपवीणयन्नयम् ॥ ५६

---

'உன்னை கேட்க வில்லை. பாடினவன் எங்கே?'

'நான் தானுங்க, ஒன்னும் புரியாமல் குரலை இழுத்துக்கிட்டு இருந்தேன்.'

'நீயா?'

'ஸத்தியமா, நான் தானுங்க'

'உனக்கு எப்படி பாட வந்தது? உன்னுடைய குரு ஸம்ப்ரதாயம் என்ன?'

'அப்படீன்ன என்னஙக?'

'நீ யாருகிட்ட கத்துகிட்ட?'

'நான் ஒன்னும் கத்துக்கல்லைங்க. ஆங்காங்கே கோவில் குளத்துக்குப் போவேன். மதுரையிலே கோவிலுக்கு பஞ்சமில்லைங்களே. உள்ளே சாமிகிட்டே யாராவது பாடுவாங்க அதிலே பாருங்க. சம்பந்தம்னு பேர் சொன்னாங்க. அவன் கையிலே குழித்தாளத்தை (ஜால்ரா) வைத்துக்கிட்டு பாடினார் பாருங்க, என்னால் உள்ளே இருக்க முடியல்லங்க. ஓடிவந்து கட்டிகிட்டேன். என்ன பாட்டு! என்ன பாட்டு!'

'சின்ன பையனா!!

'ஆமாங்க, நான் பொய் பேசமாட்டேங்க.'

'இந்த ஊரிலே சின்னப்பையன் கூட இப்படிப் பாடுமா?'

'இந்த பாருங்க. இந்த ஊரிலே பத்திரன்னு ஒரு மஹா பெரியவரு இருக்காங்க. அவர் வீட்டிலே அடி வச்சவங்க எல்லாருமே நல்லா பாடுவாங்க.'

ததுதீரிதஶ்ரவணலப்தஸாத்வஸே ப்ரபலாயிதே ஸபதி தத்ர காயகே ।
உபகம்ய பத்ரமுசிதைர்விபூஷணை: பஹுமந்யதே ஸ்ம ந்ருபதிர்தநைரபி ॥ 51

ஸ ததௌ ஸமஸ்தமபி தந்மஹேஶ்வரே விததார யத் வரகுணோऽஸ்ய பார்திவ: ।
அபி ஸஞ்சிதம் வஸு திஶன் ஶிவாஶ்ரமிஷ்வதநோ பபூவ பஹுதார்ஜயந்நபி ॥ 52

கவிகாயகாபிமதகல்பஶாகிந: ஸவிதே கதாசித் அத சேரபூபதே: ।
ப்ரவிதீர்ய புத்ரமபி பக்தமாத்மந: ப்ரஜிகாய பத்ரம் அம்ருதாம்ஶுஶேகர: ॥ 53

ஸ்வபநே புரைவ ஸ ச தத்ஸமாகமம் ப்ரதிபோதித: புரஹரேண பார்திவ: ।
அபிகம்ய பத்ரம் அமிதைர் விபூஷணத்ரவிணாம்பரை: ஸபதி பர்யபூஜயத் ॥ 54

இதி கந்தலத்யஹரஹர்தயாரஸே ஶபரேக்ஷணாஸஹசரஸ்ய காயகே ।
பவதி ஸ்ம பக்திரபி தஸ்ய தாவதீ சரமம் ஶரீரமதிதஷ்துஷஸ்ததா ॥ 55

உஷஸி ப்ரகே ததநு ஸங்கவே ததோ திநமத்யகே திநமணௌ நிஶாமுகே ।
ரஜநீதலே ச நியமாத் அஸேவத ப்ரமதாதிநாதம் உபவீணயந்நயம் ॥ 56

---

1591 அவன் கூறியதைக் கேட்டு பயந்த புதிய பாடகன் உடனேயே ஓட்டம் பிடித்தவுடன் ,அங்கே பாண்டிய மன்னன் வந்து பத்ரனை உசிதமான ஆபரணங்களாலும்,செல்வங்களாலும் கௌரவித்தார். 51

1592 அரசன் வரகுணபாண்டியன் அளித்த அத்தனை வெகுமதிகளையும் பத்ரன் ஸுந்தரேசப்பெருமானுக்கு ஸமர்பணம் செய்தான். அது மட்டும் அல்ல. முன்னால் தான் சம்பாதித்த செல்வங்கள் அனைத்தையும் சிவனடியார்களுக்கு வழங்கி விட்டு, நிறைய ஸம்பாதித்தாலும் ஏழை ஆனான். 53

## திருவிளையாடல் 42

## திருமுகம் கொடுத்த படலம்

1593 அமுதகிரணங்களை உடைய சந்திரனை சிரஸில் தரித்த ஸுந்தரேசர், கவிகளுக்கும், இசைஞானிகளுக்கும் வாரி வழங்கும் சேரநாட்டு மன்னனுக்கு, திருமுகம் எழுதி, பக்தனான பத்திரனை அங்கு அனுப்பி வைத்தார் 84

1594 ஸுந்தரேசப்பெருமான் முன்பே சேரநாட்டு அரசனுடைய கனவில் தோன்றி பத்திரனை கௌரவிக்க வேண்டுமென்று அருள் பாலித்தார். சேர அரசனும் பத்ரனை வரவேற்று அளவற்ற ஆபரணங்களையும், செல்வத்தையும், பட்டாடைகளையும் வழங்கி கௌரவித்தார். 55

1595 இவ்வாறு மீனாக்ஷிவல்லபரான ஸுந்தரேச்வர பெருமானுக்கு அந்த ஸங்கீத வித்வானிடம் நாளுக்கு நாள் அருளமுதம் பெருகிற்று. பக்தனுக்கும் பகவானிடத்தில் பக்தி பெருகிற்று. அவனுக்கு அதுவே கடைசிப்பிறவி. (பகவான் அவனுக்கு பிறப்பு இறப்பு அற்ற சாச்வத ப்ரஹ்ம நிலையை அருளினார்) 56

समयेषु षट्सु नियमेन यज्जगौ स बहिर्वृषात्स्वयमनावृते वसन्।
द्रढिमानमस्य नियमे परोक्षितुं जलदानचोदयत वृष्टये हरः॥ ५७

स्तनितारवैर्बधिरतामगुर्दिशः तटितां त्विषा तनुभृतां हृता दृशः।
अपतन्क्षतावशनयः पदे पदे तिमिरं निरन्तरमरुद्ध रोदसी ॥ ५८

जगदास्त बद्धमिव जातसाध्वसं समये यदा स तु तदैव गायकः।
अवगाह्य हेमकमलाकरे शनैः अभिगम्य संनिधिम् अगायदैश्वरम्॥ ५९

अथ मेघरञ्जिमहिरञ्जिमुख्यतन्मृदुगानसंवलितरागवैभवात्।
द्रवतां प्रपन्नमिव भूनभोऽन्तरं ददृशे तदा जलधरैर्निशात्यये॥ ६०

करकोपलैर्विघटिता विपञ्चिका करजा न तस्य वशवर्तिनोऽभवन्।
अपि कम्पमानवपुरप्रकम्पिनीम् अवलम्ब्य भक्तिमयमुज्जगौ पुनः॥ ६१

घनकर्दमद्रवनिमग्नमग्रतः चरणद्वयं चलायितुं च नाशकत्।
स यदा तदास्य विपुलं समुन्नतं स्वयमद्बभूव मणिचित्रमासनम् ॥ ६२

स निषद्य तत्र शिवसक्तया दृशा निरवर्तयत्त्रियममत्वरो यदा।
विरतं घनैर्विमलमम्बरं बभौ विललास दिक्षु च तदैव कौमुदी ॥ ६३

फलकं तदद्भुतमवेक्ष्य पार्थिवः प्रणिपत्य भद्रमसकृत्प्रशस्य च।
शिवलिङ्गतोऽपि शिवयोगिषु स्थिरां शिवभावनामकृत तत्प्रभृत्ययम् ॥ ६४

---

*1596 பத்ரன் நாள் தோறும் விடியும்முன், உதயகாலத்தில், ஸங்கவ காலத்தில் முற்றுகின்ற இரவில் நியமத்துடன் பகவானை பூஜித்தான். வீணை வாசித்து மகிழ்வித்தான். 57*

## திருவிளையாடல் 43

## பலகையிட்ட படலம்

*1597 இவ்வாறு ஆறுகாலங்களிலும், மண்டபங்களுக்கு அப்பால் திறந்தவெளியிலும் வழிபடுகின்ற பத்ரனுடைய மனோதைரியத்தைச் சோதிக்கலாம் என்று லீலை புரிய விரும்பி ஸுந்தரேசர் விடாது மழை பொழியும்படி மேகங்களை ஏவினார். 58*

*1598 பேரிடி முழக்கத்தால் திசைகள் எல்லாம் செவிடு பட்டன. மின்னல்கள் பளீர் பளீர் என்று தோன்றி பிராணிகளின் கண்கள் குருடாயின.. அங்கும் இங்கும் இடிகள் பூமியைத்தாக்கின. பகலிரவு தெரியாமல் எங்கும் இருள் சூழ்ந்தது. 59*

*1599 எங்கும் கிடு கிடு என்று பதட்டம். இத்தனை கெடுபிடியில் கூட பத்ரன் அந்த அந்த வேளைகளில் பொற்றாமரை தடாகத்தில் ஸ்நானம் செய்துவிட்டு,ஸுந்தரேசன் ஸன்னதிக்கு வந்து ஈச்வரகானம் பொழிந்தான்.60*

ஸமயேஷு ஷட்ஸு நியமேந யஜ்ஜகௌ ஸ பஹிர்வ்ருஷாத் ஸ்வயமநாவ்ருதே வஸந் ।
த்ரடிமாநமஸ்ய நியமே பரீக்ஷிதும் ஜலதாநசோதயத வ்ருஷ்டயே ஹர: ॥ 57

ஸ்தநிதாரவைர்பதிரதாமகுர்திஶஸ்தடிதாம் த்விஷா தநுப்ருதாம் ஹ்ருதா த்ருஶ: ।
அபதன் க்ஷிதாவஶநய: பதே பதே திமிரம் நிரந்தரமருத்த ரோதஸீ ॥ 58

ஜகதாஸ்த பத்தமிவ ஜாதஸாத்வஸம் ஸமயே யதா ஸ து ததைவ காயக: ।
அவகாஹ்ய ஹேமகமலாகரே ஶநை: அபிகம்ய ஸந்நிதிம் அகாயதைஶ்வரம் ॥ 59

அத மேகரஞ்ஜிமஹிரஞ்ஜிமுக்யதந்ம்ருதுகாநஸம்வலிதராகவைபவாத் ।
த்ரவதாம் ப்ரபந்நமிவ பூநபோऽந்தரம் தத்ருஶே ததா ஜலதரைர்நிஶாத்யயே ॥ 60

கரகோபலைர்விகடிதா விபஞ்சிகா கரஜா ந தஸ்ய வஶவர்த்திநோऽபவன் ।
அபி கம்பமாநவபுரப்ரகம்பிநீம் அவலம்ப்ய பக்திமயமுஜ்ஜகௌ புந: ॥61

கநகர்தமத்ரவநிமக்நமக்ரதஶ்சரணத்வயம் சலயிதும் ச நாஶகத் ।
ஸ யதா ததாஸ்ய விபுலம் ஸமுந்நதம் ஸ்வயமுத்பபூவ மாணிசித்ரமாஸநம் ॥ 62

ஸ நிவிஶ்ய தத்ர ஶிவஸக்தயா த்ருஶா நிரவர்த்தயந்நியமமத்வரோ யதா ।
விரதம் கநைர்விமலமம்பரம் பபௌ விலலாஸ திக்ஷு ச ததைவ கௌமுதீ ॥ 63

பலகம் ததத்புதம் அவேக்ஷ்ய பார்திவ: ப்ரணிபத்ய பத்ரம் அஸக்ருத் ப்ரஶஸ்ய ச ।
ஶிவலிங்கதோऽபி ஶிவயோகிஷு ஸ்திராம் ஶிவபாவநாம் அக்ருத தத்ப்ரப்ருத்யயம் ॥ 64

---

1600 இவை போதாதென்று. மேலும் மிதப்பை அளிக்கக்கூடிய மேகரஞ்ஜனீ, மஹீரஞ்ஜனீ முதலிய ராகங்களை வின்யாஸப்படுத்தி பாடவே, பூமியும், ஆகாயமும்,இடைவெளியும் கூட உருகிவிட்டன போலும்! மறுநாள் பொழுது விடியும் பொழுது, உலகமே மேகமயமாகிவிட்டது போல காட்சி அளித்தது. 61

1601 ஆலங்கட்டி மழை பெய்து வீணை உடைந்தது. அவனுடைய விரல்கள் விரைத்துப்போயின. மீட்ட மறுத்தன. உடல் குளிரினால் வெட வெட என்று நெடுங்கிற்று. ஆயினும் அவன் குரல் கரகரக்கவில்லை. தடுமாறவில்லை.மேலும் இனிமை கூடி, பக்தியால் நெகிழ்ந்து குழைந்து இசைத்தது. 62

1602 அவன் நின்ற இடத்தில், காலடியிலெல்லாம் சேறு மூண்டு,காலைத் தூக்கி வைக்கவோ. நகற்றவோ முடியவில்லை. அப்பொழுது எங்கிருந்தோ நவரத்தினங்கள் பதித்த ஆஸனமொன்று எழும்பியது. 63

1603 அந்த ஆஸனத்தில் அமர்ந்து, கண்கள் சிவபெருமானிடம் நிலைத்து நிற்க, அந்த அந்த காலங்களுக்கிடையே பாடல்களை இசைத்தான். மேகங்கள் வெளுத்து விட்டன. ஆகாசம் நிர்மலமானது. திசை முகங்களில் நிலா ஒளி வீசியது. 64

अथ राजराज इति दिक्षु विश्रुतं तनयं बहुश्रुतमसाववविन्दत ।
तपसा प्रसाद्य तरुणेन्दुशेखरं मलयध्वजान्वयमहानिधिं नृपः ॥ ६५

अवरोप्य भारमखिलं भुवः सुते लघुरुत्पतन्वरगुणः शिवान्तिकम् ।
अवनीभृतः पुनरधात्फणाधरानियमस्य भूभरणवासनेदृशी ॥ ६६

उदितोदितं विविधया सपर्यया भजतां स्वमेव भुवि पाण्ड्यभूभुजाम् ।
अपवर्गमेकविधमर्पयन्नयं मधुरेश्वरोऽपि महतीं ह्रियं दधे ॥ ६७

अथ राजराज इति लब्धमाख्यया पुरभित्सखत्वमतिशय्य वर्तितुम् ।
पितरौ गुरुं सुहृदमात्मनः प्रभुं कुलदैवतं च कुरुते स्म तं नृपः ॥ ६८

निममज्ज तस्य हृदयं निसर्गतः शफरेक्षणा सहचराङ्घ्रिपद्मयोः ।
कुलशेखरान्वयभुवां शिवव्रते कुत एष कारणगवेषणश्रमः ॥ ६९

अथ भद्रनामनि चिराय गायके शिवलोकमेयुषि तदीयगेहिनी ।
चतुरा ततोऽपि किल गानविद्यया शिवमारराध समयेषु षट्स्वपि ॥ ७०

अवरोधगेहमधिजग्मुषी विभोः अवनीपतेर्दयितया कयाचन ।
कलहायते स्म निजगानविद्यया दृढया महेशदयया च जातु सा ॥ ७१

1604 அரசன், பத்ரன் அமர்ந்திருந்த அத்புதமான ஆஸனத்தைப் பார்த்தான். பத்ரனுடைய திருவடியில் வீழ்ந்தான். வாயாரப் புகழ்ந்தான். அன்று முதல் அரசனுக்கு சிவபெருமானைவிட சிவனடியார்களிடம் பக்தி வளர்ந்தது. அவர்களையே சிவனாகக் கருதி போற்றினான். 65

1605 பிறகு, மலயத்வஜபாண்டியனுடைய குலத்திற்கே பெரும் செல்வமான சந்திரசேகரனை தபஸினால் வழிபட்டு மகிழ்வித்து வரகுண பாண்டியன் ராஜ ராஜபாண்டியன் என்ற மகனைப் பெற்றான். அவன் பரந்த கீர்த்தியுடன் கூடியவனாகவும், சிறந்த கல்விமானாகவும் இருந்தான். 66

1606 தன் மகனிடம் பூமியின் சுமைகளையும், பொறுப்புகளையும் இறக்கிவிட்டு, அதனால் லேசாகிவிட்ட உள்ளத்துடன் அரசன் வரகுணபாண்டியன் சிவனடிபோய்ச் சேர்ந்தான். பூமியையே தாங்குகின்ற வாஸுகி என்ற மஹாநாகத்தினுடைய பளுவைக் குறைத்தான். அரசனுக்கு பூமிபாரத்தைக் குறைப்பதில் அத்தனை அக்கரை. 67

1607 ‘பாண்டியமன்னர்கள் பூமியில் பிறந்து, பலவிதமான வழிபாடுகளை மனதாரச் செய்கிறார்களே. அவர்களுக்கு ஒரே விதமான மோக்ஷத்தை மட்டும்தான் கொடுக்கமுடிகிறதே’ என்று ஸுந்தரேசப் பெருமான் பெரும் வெட்கமடைந்தார். 68

அத ராஜராஜ இதி திக்ஷு விஶ்ருதம் தநயம் பஹுஶ்ருதமஸௌ அவவிந்தத ।
தபஸா ப்ரஸாத்ய தருணேந்துஶேகரம் மலயத்வஜாந்வயமஹாநிதிம் ந்ருப: ॥ 65

அவரோப்ய பாரமகிலம் புவ: ஸுதே லகுருத்பதந் வரகுண: ஶிவாந்திகம் ।
அவநீப்ருத: புநரதாத் பணாதராநியமஸ்ய பூபரணவாஸநேத்ருஶீ ॥ 66

உதிதோதிதம் விவிதயா ஸபர்யயா பஜதாம் ஸ்வமேவ புவி பாண்ட்யபூபுஜாம் ।
அபவர்கமேகவிதமர்பயந்நயம் மதுரேஶ்வரோऽபி மஹதீம் ஹ்ரியம் ததே ॥ 67

அத ராஜராஜ இதி லப்தமாக்யயா புரபித்ஸகத்வமதிஶய்ய வர்த்திதும் ।
பிதரௌ குரும் ஸுஹ்ருதம் ஆத்மந: ப்ரபும் குலதைவதம் ச குருதே ஸ்ம தம் ந்ருப: ॥ 68

நிமமஜ்ஜ தஸ்ய ஹ்ருதயம் நிஸர்கத: ஶபரேக்ஷணாஸஹசராங்க்ரிபத்மயோ: ।
குலஶேகராந்வயபுவாம் ஶிவவ்ரதே குத ஏஷ காரணகவேஷணஶ்ரம: ॥ 69

அத பத்ரநாமநி சிராய காயகே ஶிவலோகமேயுஷி ததீயகேஹிநீ ।
சதுரா ததோऽபி கில காநவித்யயா ஶிவமாரராத ஸமயேஷு ஷட்ஸ்வபி ॥ 70

அவரோதகேஹமதிஜக்முஷீ விபோரவநீபதேர்தயிதயா கயாசந ।
கலஹாயதே ஸ்ம நிஜகாநவித்யயா த்ருடயா மஹேஶதயயா ச ஜாது ஸா ॥ 71

---

*1608* அரசன் ராஜராஜன் என்ற பெயரைப் பெற்றான். அந்தப் பெயருக்கு பலவிதமான பொருள். அரசர்களுக்கெல்லாம் அரசன், சந்திரனை முடியில்சூட்டிக்கொண்டு பிரகாசிப்பவன், குபேரன் என்று கஜானாவை எல்லாம் சிவபெருமான் விருப்பப்படியே பக்தர்களுக்கு செல்வத்தை வழங்கினவன் என்ற புகழ்பெற்றான். அதனால் சிவபெருமானுடைய தோழன் ஆனான். சிவபெருமானுடைய தோழன் என்ற அர்த்தஸித்திக்கு மிஞ்சியவனாக இருக்க வேண்டும் என்று சிவபெருமானை தாய் தந்தையராகவும், நண்பனாகவும், தன் யஜமானனாகவும். தன் குல தெய்வமாகவும, இதயத்திலே நிலை நிறுத்திக்கொண்டான். 69

*1609* அவனுடைய இதயம் இயல்பாகவே மீனாக்ஷி மணாளனுடைய திருவடித் தாமரைகளில் மூழ்கி விட்டது. குலசேகர பாண்டியன் வழி தோன்றியவர்களுக்கு எப்படி இந்த பக்தி வந்தது என்று ஆராயவும் வேண்டுமோ? 70

## திருவிளையாடல் 44
## இசைவாது வென்ற படலம்

*1610* பத்ரன் என்ற ஸங்கீத வித்வான் சிவனடிச் சேர்ந்து பல நாட்கள் ஆயின. அவனுடைய மனைவி பக்தியுடன், பத்திரனைக் காட்டிலும் சிறப்பான தனது இசையினால், முறைப்படி ஆறு காலங்களிலும் சிவபெருமானை ஆராதித்தாள். 71

तदुपक्रमं धरणिवल्लभोऽपि तां अवमन्तुमाहितकुतूहलश्चिरात् ।
स्वयमानिनाय जलराशिमध्यतः सुदृशं स कांचिदथ गानकोविदाम् ॥ ७२

जगतुस्ततः सदसि ते महीपतेः अधिकेत्यगृह्यत तु तत्र नूतना ।
मनसाधिगम्य मधुरेश्वरं शुचा भणति स्म भद्रगृहिणी पुनर्नृपम् ॥ ७३

सदसि स्थिता मयि चिरात् अमर्षिणो यदि किंचिदाहुरिह किं ततः क्षतम् ।
अभिगम्य संनिधिमनङ्गशासितुः कथयन्त्वमी तरतमत्वमावयोः ॥ ७४

विजयेत या भवतु सात्र भट्टिनी विजिता तु या भवतु सात्र किङ्करा ।
इति सा यदाह तदनिच्छतोऽप्यभूत् अभिनन्दनीयमवनीभुजस्तदा ॥ ७५

अथ ते समेत्य सविधं महेशितुः सह पार्थिवेन सदसि स्थितैरपि ।
जगतुर्गिरा मधुरयाऽऽदितस्ततः परिवादिनीमुरलिकाविपञ्चिभिः ॥ ७६

अधिका तु यद्यपि नवेव तत्त्वतः तदापि प्रपन्नजनपक्षपातिनः ।
मधुरेश्वरस्य किल माययाऽऽवृता बहुधा समस्तुवत भद्रगेहिनीम् ॥ ७७

जयभङ्गयोर्विदितयोर्विपर्ययात् अपि तत्र नीपवनभर्तुराज्ञया ।
विजिता नवैव विजितं तु भद्रयेत्यगदीदभीक्ष्णमवशो महीपतिः ॥ ७८

---

1611 ஒரு ஸமயம் அரசனின் அந்தப்புரத்திற்கு அழைக்கப்பட்டு தன் கானவித்யையை இனிதாக வழங்கினாள். ராணிகளில் ஒருவள் அவளுடன் போட்டி போட்டாள். அவளுடைய சுமாரான ஸங்கீதத்திறன் பத்ரனின் மனைவியின் இன்னிசைக்கு ஈடாகவில்லை. ஆனாலும் ராணி என்ற மிடுக்கைக் காட்டினாள்.. பத்ரனின் மனைவியோ தனது திடமான பயிற்சியினாலும், ஸுந்தரேசனுடைய கிருபையினாலும், கொஞ்சம் கூட விட்டுக் கொடுக்காமல் தன் திறமையை வெளிப்படுத்தினாள். 72

1612 அவளுடைய முயற்சியைக்கண்டு அரசனும் கூட, ராணியிடம் உள்ள பக்ஷபாதத்தினால். அவளை அவமதிக்கலாம் என்று எண்ணினான். கடலின் மத்தியிலிருந்து (தீவிலிருந்து) பாடகி ஒருத்தியை அழைத்து வந்தான். 73

1613 அரசனின் தர்பாரில் இருந்தவர்கள் அரசனின் கருத்தறிந்து, அவனை ஒத்துப்பாடி, புதிதாகவந்தவள் பத்ரனின் மனைவியைக் காட்டிலும் சிறந்தவள் என்று ஏற்றனர். பத்ரனின் மனைவி துக்கத்தினால் மதுரேச்வரனை மானஸீகமாக வணங்கிவிட்டு அரசனிடம் கூறினாள். 74

ததுபக்ரமம் தரணிவல்லபோऽபி தாமவமந்தும் ஆஹிதகுதூஹலஶ்சிராத் ।
ஸ்வயமாநிநாய ஜலராஶிமத்யத: ஸுத்ருஶம் ஸ காஞ்சிதத காநகோவிதாம் ॥72
ஜகதுஸ்தத: ஸதஸி தே மஹீபதே: அதிகேத்யக்ருஹ்யத து தத்ர நூதநா ।
மநஸாதிகம்ய மதுரேஶ்வரம் ஶுசா பணதி ஸ்ம பத்ரக்ருஹிணீ புநர்ந்ருபம் ॥ 73
ஸதஸி ஸ்திதா ம:யி சிராதமர்ஷிணோ யதி கிஞ்சிதாஹுரிஹ கிம் தத: க்ஷதம் ।
அபிகம்ய ஸந்நிதிமநங்கஶாஸிது: கதயந்த்வமீ தரதமத்வமாவயோ: ॥ 74
விஜயேத யா பவது ஸாத்ர பட்டிநீ விஜிதா து மா பவது ஸாத்ர கிங்கரா ।
இதி ஸா யதாஹ ததநிச்சதோऽப்யபூதபிநந்தநீயமவநீபுஜஸ்ததா ॥ 75
அத தே ஸமேத்ய ஸவிதம் மஹேஶிது: ஸஹ பார்திவேந ஸதஸி ஸ்திதைரபி ।
ஜகதுர்கிரா மதுரயாதிதஸ்தத: பரிவாதிநீமுரலிகாவிபஞ்சிபி: ॥ 76
அதிகா து யத்யபி நவைவ தத்வதஸ்ததபி ப்ரபந்நஜநபக்ஷபாதிந: ।
மதுரேஶ்வரஸ்ய கில மாயயா வ்ருதா பஹுதா ஸமஸ்துவத பத்ரகேஹிநீம் ॥ 77
ஜயபங்கயோர்விதிதயோர்விபர்யயாதபி தத்ர நீபவநபர்துராஜ்ஞயா ।
விஜிதா நவைவ விஜிதம் து பத்ரயேதி அகதீதபீக்ஷ்ணம் அவஶோ மஹீபதி: ॥78

---

*1614* வெகுநாட்களாக என்மீது பொறாமை கொண்ட தர்பார் பெரியோர்களின் கூற்றினால் எனக்கு ஒன்றும் குறைந்து போய் விடவில்லை. மன்மதனை வென்ற ஸுந்தரேசப் பெருமான் ஸன்னதிக்குச் சென்று இவர்கள் எங்களுடைய தராதரத்தைச் சொல்லட்டும். 75

*1615*இந்த ஸன்னதியில் பாடி எவள் வெற்றி பெருகிறாளோ அவள் ராணி ஆகட்டும், தோற்றவள் அவளுக்கு வேலைக்காரி ஆகட்டும் என்ற அவளுடைய சவால் அரசனுக்குப் பிடிக்கவில்லை. நீதி முறை வழுவாமல் ஆட்சிபுரியும் அரசன் அதை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று.

*1616* ஸுந்தரேசப்பெருமான் ஸன்னதிக்கு இரு போட்டியாளரும் வந்தனர். ஸதஸில் அனைவரும் கூடியிருந்தனர். அரசனும் இருந்தான். தம்பூரா, புல்லாங்குழல், வீணை முதலிய பக்கவாத்தியங்களோடு இருவரும் இனிமையாகப் பாட ஆரம்பித்தனர். 76

*1617* புதிதாக வந்தவளின் கானம்தான் சிறப்பாக இருந்தது. இருப்பினும் திருவடிபணிந்தவரிடம் பக்ஷபாதம் காட்டும் மதுரா நாயகன்,மாயையால் மதி மயங்கி, பத்ரன் மனைவியின் பாட்டைச் சிறந்தது என்று முழங்கினார். 77

*1618* வெற்றி தோல்விகளின் உண்மை வேறு விதமானாலும் மதுரேசனின் ஆணைப்படி, புதிதாக வந்தவள் ஜயிக்கப்பட்டாள். பத்ரன் மனைவிக்கே வெற்றி வேறு வழி இல்லாமல் அரசன் தீர்ப்பு அளித்தான். 78

अवलम्ब्य  दास्यमथ सिंहलागता सदसि स्वयं परिचचार भद्रिकाम् ।
स च पार्थिवः कनकभूषणाम्बरैः विविधैरपूजयत विस्मयेन ताम् ॥ ७९

इति राजराजधरणीपतेः क्षितिं परिरक्षतः प्रणिहितेन चेतसा ।
विनयो विवेकत इवाति विश्रुतः तनयोऽभवत्सुगुण इत्यभिख्यया ॥ ८०

तारुण्य एव विनयावनतं कुमारं तं राजराजनृपतिः सकलागमज्ञम् ।
पश्यन्नखण्डितपराक्रममभ्यषिञ्चत् संप्रार्थितः प्रकृतिभिः किल यौवराज्ये ॥ ८१

इति अष्टादशः सर्गः

---

*1619 சிங்களத்திலிருந்து வந்தவள் பத்ரன் மனைவிக்கு அடிமையாகி விட்டாள். அவையின் நடுவே அவள் பத்தரனின் மனைவிக்கு ஸேவை செய்தாள். அரசனோ பத்ரன் மனைவிக்கு பல வெகுமதிகளை அளித்து கௌரவித்தான். அனைவரும் ஆச்சரியம் அடைந்தனர். 79*

*1620 அரசன் ராஜராஜ பாண்டியன் பண்புள்ள மனதுடனும் அடக்கத்துடனும் ஆட்சிபுரிந்து வந்தான். நல்ல விவேகத்திலிருந்து பணிவு பிறப்பது போல, அவனுக்கு ஸுகுண பாண்டியன் பிறந்தான். 80*

அவலம்ப்ய தாஸ்யமத ஸிம்ஹலாகதா ஸதஸி ஸ்வயம் பரிசசார பத்ரிகாம் ।
ஸ ச பார்திவ: கநகபூஷணாம்பரைர் விவிதைரபூஜயத விஸ்மயேந தாம் ॥ 79

இதி ராஜராஜதரணீபதே: க்ஷிதிம் பரிரக்ஷத: ப்ரணிஹிதேந சேதஸா ।
விநயோ விவேகத இவாதிவிஸ்ருதஸ்தநயோऽபவத் ஸுகுண இத்யபிக்யயா ॥ 80

தாருண்ய ஏவ விநயாவநதம் குமாரம் தம் ராஜராஜந்ருபதி: ஸகலாகமஜ்ஞம் ।
பஶ்யந்நகண்டிதபராக்ரமமப்யஷிஞ்சத் ஸம்ப்ரார்தித: ப்ரக்ருதிபி: கில யௌவராஜ்யே ॥ 81

இதி மஹாகவிஸ்ரீநீலகண்டதீக்ஷிதப்ரணீதே ஶிவலீலார்ணவேऽஷ்டாதஶ: ஸர்க: ।

---

*1621* இளம் வாலிபத்திலேயே ஸுகுண பாண்டியன் பணிவோடும், அடக்கத்தோடும், எல்லாவற்றிலும் தேர்ச்சிபெற்றவனாக இருந்தான். அத்துடன் பராக்ரமமும் சேர்ந்தது. குதூகலத்துடன் வேண்டிக் கொண்ட மக்களின் விருப்பப்படி, அவனுக்கு அரசன், யுவராஜ பட்டாபிஷேகம் செய்து வைத்தான். *81*

### பதினெட்டாவது ஸர்கம் முடிவடைந்தது

## एकोनविंशः सर्गः

तनूभवे वहति ततो वसुन्धरां चिरादसौ नृपतिरुपेत्य विश्रमम्।
वनेचरैः सह मृगयाकुतूहली वनं वनं व्यचरदधिज्यकार्मुकः ॥ १

परिभ्रमच्च्वगणविकृष्टशृङ्खलाखलंखलध्वनिजनितप्रबोधनाः।
ततस्ततस्तरुतलकुञ्जपुञ्जतो विनिर्ययुर्विवृतमुखा मृगादनाः॥ २

पुनः पुनः परिपततः शुनः क्षुधा जिघृक्षवः खरनखरास्तरक्षवः।
प्रचक्रमुः किमपि यदा तदा शरैः निरन्तरानकृततरामिमान्नृपः॥ ३

स्तनग्रहप्रहिलतया निरुन्धतः स्तनंधयान्सपदि विलङ्घ्य संप्लुता।
मृगी मृगं क्षितिपतिपाणिगोचरात् अपालयत्स्वयमभिपेतुषी पुरः ॥ ४

स्वसायकादपि चललक्ष्यपातिनः स्वयं पुरः परिचलता महीभृता।
अरुध्यत प्रथममविध्यत त्वथ वरोचलत्तुरगखुरक्षता मृगी॥ ५

सटासु तच्छबरभटावलम्बितः प्रकम्पितुं किमपि चक्षमे स्वतः।
अवैक्षत भ्रुकुटिविटङ्करभीमया दृशा पुनस्तदपि मृगान्मृगाधिपः ॥ ६

वृथा नयन्विपिनचराञ्शराहतान् विषादमावहत यमन्तरन्तकः।
स तस्य तं माहिषगणान्निपातयन् अपाहरद्वनभुवि वाहनार्पणात्॥ ४

---

### பத்தொன்பதாவது ஸர்கம்

### திருவிளையாடல் 45

### பன்றிக்குட்டிக்கு முலைகொடுத்த படலம்

1622 தனயன் நாட்டை ஆளும் பணியில் ஈடுபட்ட உடன், ஓய்வு பெற்ற அரசன், வேடர்களைச் சேர்த்துக் கொண்டு, நாணேற்றிய வில்லுடன் காடு காடாக வேட்டையாட முனைந்தான். 1

1623 வேட்டை நாய்களை விடுவித்தவுடன், அதன் சங்கி ஓசை கேட்டு, தவம் கலைந்து, முனிவர்கள் பர்ணசாலையை விட்டு வெளியே வந்தார்கள். மிருகங்கள் விழித்தெழுந்தன. சிங்கங்கள் பேரிரைச்சலைக் கேட்டு, மரப்பொந்துகளிருந்தும் புதர்களிருந்தும், வாயைப் பிளந்து கொண்டு வெளியே வந்தன. 2

1624 மேலும் மேலும் பாய்ந்து வருகின்ற நாய்களை, வெறிபிடித்த செந்நாய்கள் கூறான நகங்களால் குதர ஆரம்பித்தபோது, அரசன், இடைவிடாமல். அம்புகளை தொடுத்து அவற்றை நெருங்க விடாமல் விலக்கினான். 3

## அதைகோநவிம்ஶ: ஸர்க: ।

தநூபவே வஹதி ததோ வஸுந்தராம் சிராத் அஸௌ ந்ருபதி: உபேத்ய விஶ்ரமம் ।
வநேசரை: ஸஹ ம்ருகயாகுதூஹலீ வநம்வநம் வ்யசரததிஜ்யகார்முக: ॥ 1
பரிப்ரமச்ச்வகணவிக்ருஷ்டஶ்ருங்கலாகலம்கலத்வநிஜநிதப்ரபோதநா: ।
ததஸ்ததஸ்தருதலகுஞ்ஜபுஞ்ஜதோ விநிர்யயுர்வித்ருதமுகா ம்ருகாதநா: ॥ 2
புந: புந: பரிபதத: ஶூந: க்ருதா ஜிக்ருக்ஷவ: கரநகராஸ்தரக்ஷவ: ।
ப்ரசக்ரமு: கிமபி யதா ததா ஶரைர்நிரந்தரான் அக்ருததராமிமான் ந்ருப: ॥ 3
ஸ்தநக்ரஹக்ரஹிலதயா நிருந்ததஸ்தநந்தயான் ஸபதி விலங்கய ஸம்ப்லுதா ।
ம்ருகீ ம்ருகம் க்ஷிதிபதிபாணிகோசராத் அபாலயத் ஸ்வயமபிபேதுஷீ புர: ॥ 4
ஸ்வஸாயகாதபி சலலக்ஷ்யபாதிந: ஸ்வயம் புர: பரிசலதா மஹீப்ருதா ।
அருத்யத ப்ரதமம் அவித்யத த்வத வரோச்சலத்துரக குரக்ஷதா ம்ருகீ ॥ 5
ஸடாஸு தச்சபரபடாவலம்பித: ப்ரகம்பிதும் கிமபி ந சக்ஷமே ஸ்வத: ।
அவைக்ஷத ப்ருகுடிவிடங்கபீமயா த்ருஶா புநஸ்ததபி ம்ருகான் ம்ருகாதிப: ॥ 6
வ்ருதா நயன் விபிநசரான் ஶராஹதான் விஷாதம் ஆவஹத யமந்தரந்தக: ।
ஸ தஸ்ய தே மஹிஷகணான் நிபாதயன் அபாஹரத் வநபுவி வாஹநார்பணாத் ॥7

---

*1625* ஒரு பெண் மானிடம் குட்டிகள் பால் குடித்துக் கொண்டிருந்தன. அதை விட்டு, அப்பால் ஆண் மான் மீது குறிவைத்தனர். தாய் மான், குழந்தைகளை உதறிவிட்டு, ஆண் மானைக் காப்பாற்றுவதற்காக குறுக்கே வந்தது. 4

*1626* தான் விட்ட அம்பு அசைகின்ற குறியின் மேல் பாய்ந்துவிடுமோ என்று வேகமாக அரசன் அந்த பாணத்தைத் தடுத்தான். அது பெண் மானை அடிக்கவில்லை. ஆனால் அரசனுக்கு முன்னால் வேகமாக பாய்ந்த குதிரையின் கால் குளம்புகளால் மிதிக்கப்பட்டு அந்த பெண் மான் சாய்ந்தது. 5

*1627* மிருகங்களின் அரசனான ஒரு சிங்கம் அசையக்கூட முடியாமல் தவித்தது. அதன் பிடறியை சில வேடுவ வீரர்கள் பிடித்துக் கொண்டிருந்தனர். ஆயினும், அந்த சிங்கம் புருவங்களை நெறித்து அடிபட்ட மான்களைப் பார்த்து உருமிக்கொண்டிருந்தது. 6

*1628* பாணங்களால் அடிபட்டுப்போன உயிர்களை இழுத்துக் கொண்டு செல்வதற்கு யமன் வந்திருந்தான். எப்படி அனைத்தையும் இழுத்துச்செல்வது என்று அவன் வருந்தியபோது, காட்டு எருமைகளை வளைத்து வாஹனம் அமைத்து, அரசன் அவனை திருப்திப்படுத்தினான். 7

गणंगणं चमरवराहगण्डकान् वृकानपि क्षपयति तत्र पार्थिवे ।
किटिर्झीटित्युपनिपपात कश्चन क्रुधा ज्वलन्नचलगुहागृहात्ततः ॥ ८

स दंष्ट्र्या कुलिशनिशातधारया परिक्षिपञ्शबरभटानितस्ततः ।
गणं शुनामविगणयन्पदे पदे शरापतेस्तुरगसमीपमापतत् ॥ ९

अवस्थितं धुरि तमवेक्ष्य पार्थिवः स संदधे धनुषि न यावदाशुगम् ।
स तावदुच्चलितविषाणकोणतो व्यदारयच्चरणतले तुरंगमम् ॥ १०

अवाप्लुतः सपदि तुरंगमात्ततः पतिः क्षिते रथमधिरुह्य तं पुरः ।
अवाकिरज्ज्वलितमुखैः शिलीमुखैः धराधरं जलद इवाम्बुवृष्टिभिः ॥ ११

स तद्धनुर्वलयविनिःसृतैः शरैः समाचितः शललगणैरिवाभितः ।
अचूर्णयन्मुखमसकृद्विघूर्णयन् ससारथिं सतुरगमस्य तं रथम् ॥ १२

ततः प्लुतः सपदि रथान्मदारथः तमुद्धतं गिरिमिव जङ्गमं किटिम् ।
अनुद्रुतं प्रियतमया नृपो रयात् अपातयत्स भुवि कृपाणपाटितम् ॥ १३

ततः प्रभृत्यजनि वराहशैल इति अभिख्यया धरणिधरः स विश्रुतः ।
उपत्यकामुपरुरुधे स यस्य तां पतन्किटिः पृथुरिव पादपर्वतः ॥ १४

गते पुरं धरणिपतौ सविस्मये क्षुधार्दितास्तदनु वराहपोतकाः ।
प्रसूस्तनप्रणयकृतातिकूजिता दशापतन्द्विसमधिकास्तदावशाः ॥ १५

---

1629 கூட்டம் கூட்டமாக கவரிமான்களையும், பன்றிகளையும், ஓநாய்களையும், செந்நாய்களையும் அரசன் அடித்துத் தீர்த்தான். அதனிடையே எங்கிருந்தோ குகையிலிருந்து வெறிபிடித்து வெளிவந்த காட்டுப்பன்றி ஒன்று, கண்களில் தீப்பொறி பறக்க குபீரென்று களத்தில் பாய்ந்தது. 8

1630 அந்தப் பன்றி வஜ்ராயுதம் போல் தீட்டப்பட்ட தித்திப்பற்களுடன், எதிர்கின்ற வேடர்களின் மீது பாய்ந்து குதறியது. வேட்டை நாய்களை லக்ஷியம் செய்யாமல் புறம் காட்டி ஓடச்செய்து, அரசனின் குதிரை அருகே வந்துவிட்டது. 9

1631 எதிரே திடீரென்று நின்ற அந்தப் பன்றியின் மீது அரசன் ஒரு பாணத்தைக் குறிவைத்தான். அதற்குள் அந்த பன்றி தன் கோரைப் பற்களால் குதிரையின் கால்களைக் கடித்து குதரியது. 10

1632 உடனே அரசன் குதிரையை விட்டு விட்டு பக்கத்திலிருந்த ரதத்தின் மீது பாய்ந்து ஏறினான். கொழுந்துவிட்டு எரிகின்ற அக்னியைப் போல் நுனியை உடைய பாணங்களை, பெரும் மேகம் மலைமுகட்டில் வர்ஷிப்பது போல, பன்றியின் மீது வருஷித்தான். 11

கணங்கணம் சமரவராஹகண்டகான் வ்ருகாநபி க்ஷபயதி தத்ர பார்திவே ।
கிடிர்ஜடித்யுபநிபபாத கஶ்சந க்ருதா ஜ்வலன் அசலகுஹாக்ருஹாத் தத: ॥ 8
ஸ தம்ஷ்ட்ரயா குலிஶநிஶாததாரயா பரிக்ஷிபன் ஶபரபடாநிதஸ்தத: ।
கணம் ஶூநாமவிகணயன் பதேபதே தராபதேஸ்துரகஸமீபம் ஆபதத் ॥ 9
அவஸ்திதம் துரிதமவேக்ஷ்ய பார்திவ: ஸ ஸந்ததே தநுஷி ந யாவதாஶுகம் ।
ஸ தாவதுஞ்சலிதவிஷாணகோணதோ வ்யதாரயச்சரணதலே துரங்கமம் ॥ 10
அவப்லுத: ஸபதி துரங்கமாத் தத: பதி: க்ஷிதே ரதமதிருஹ்ய தம் புர: ।
அவாகிரஜ்ஜ்வலிதமுகை: ஶிலீமுகைர்தராதரம் ஜலத இவாம்புவ்ருஷ்டிபி: ॥ 11
ஸ தத்தநுர்வலயவிநிஸ்ஸ்ருதை: ஶரை: ஸமாசித: ஶலலகணைரிவாபித: ।
அசூர்ணயந்முகமஸக்ருத் விகூர்ணயன் ஸஸாரதிம் ஸதுரகமஸ்ய தம் ரதம் ॥ 12
தத: ப்லுத: ஸபதி ரதாந்மஹாரதஸ்தமுத்ததம் கிரிமிவ ஜங்கமம் கிரிம் ।
அநுத்ருதம் ப்ரியதமயா ந்ருபோ ரயாத் அபாதயத் ஸ புவி க்ருபாணபாடிதம் ॥ 13
தத: ப்ரப்ருத்யஜநி வராஹஶைல இத்யபிக்யயா தரணிதர: ஸ விஶ்ருத: ।
உபத்யகாமுபருருதே ஸ யஸ்ய தாம் பதந் கிடி: ப்ருதுரிவ பாதபர்வத: ॥ 14
கதே புரம் தரணிபதௌ ஸவிஸ்மயே க்ஷுதார்திதாஸ்ததநு வராஹபோதகா: ।
ப்ரஸூஸ்தநப்ரணயக்ருதாதிகூஜிதா தஶாபதன் த்விஸமதிகாஸ்ததாவஶா: ॥ 15

---

*1633* அரசன் தன்னுடைய வில்லை குறுக்கு வாக்கில் வளையமாக்கி வரிசையாக அம்புகளை வீசினான். தீபத்தில் விட்டில் பூச்சிகள் சூழ்வதுபோல, அம்புகள் சூழ்ந்தன. அந்தப் பன்றி கூக்குறல் இட்டுக்கொண்டு, முகத்தை ஆட்டி ஆட்டி, அந்த அம்புகளைச் சிதற அடித்தது. அரசனுடைய ரதத்தை, ஸாரதி குதிரைகளுடன் சேர்த்து, பொடி செய்தது. *12*

*1634* அந்த ஸமயம் பார்த்து ராணி, முன் யோஜனையுடன் ஒரு பெரிய ரதத்தை அரசன் அருகில் கொண்டு வந்தாள். அரசன் அதன் மீது பாய்ந்து ஏறினான். ஒரு பெரிய மலை, கைகால்கள் முளைத்து உயிருடன் கிளம்புவது போல அந்தப் பன்றி கிளம்பியது. அரசன் தன் உடைவாளை வீசி அந்த பன்றியை வீழ்த்தினான். *13*

*1635* அன்று முதல், அந்தப் பன்றி விழுந்த இடம் 'பன்றி மலை' என்று வழங்கப்படுகிறது. அரசனைப் பன்றி எதிர்த்த அந்த மலைமுகட்டை பன்றிமலையின் அடிவாரம் என்கிறார்கள். பன்றி விழுந்த இடத்திற்கு அவ்வளவு பெருமை. *14*

*1636* அரசன் தலை நகரம் வந்து சேர்ந்தான். பன்றியின் குட்டிகள் பன்னிரண்டு வழி தெரியாமல், பசியினால் பாலுக்காகக் கூக்குறலிட்டுக்கொண்டு, தாயின் முலையைத்தேடி மலையடிவாரம் வந்தன. *15*

तपस्विनामवनकृते तपस्यतो गिरेस्तटे कृतरतिरत्र शंकरः।
कृपालय : किटिपृथुकान् अपालयत् स तत्प्रसूतनुरमितैः स्तनामृतैः ॥ १६

पुरा युगे वृषलकुमारका हि ते तदाश्रिताः शमधनशापतो वपुः।
समुद्धृताः पुरमथनस्तनामृतैः क्षणाद्दधुः किटिवदना मनुष्यताम् ॥ १७

कलासु ते दधुरखिलासु कौशलं विशिष्य च क्षितिपतितन्त्रवैदुषीम्।
न सूकरः शिवचरणे कृताशयः स सूकरः पुरभिदि यः पराङ्मुख ॥ १८

वराहताभरणविलासवासनावशादिव श्रुतिशतमौलिलालितम्।
विमार्गितुं चरणयुगं पुरद्विषः कुतूहलं सततममी वितेनिरे ॥ १९

अनुज्ञया तदनु कदापि धूर्जटेः अवस्थितानचलगुहासु तान्नृपः।
समानयन्सचिवपदे न्यवेशयत् वचस्विनो नरपतितन्त्रकोविदान्॥ २०

सभाजिता नृपतिवरेण सर्वथा चिरायुषो द्विसमधिका दशापि ते।
शिवाश्रमव्यतिकरधूतकल्मषाः शिवं ययुः प्रणतशिवंकरं ततः ॥ २१

ततो गते पितरि पदं महेशितुः तदात्मजः सुगुणनृपालशेखरः।
अपालयच्चिरमवनीं ससागरां अचञ्चलामकृत च भक्तिमीश्वरे ॥ २२

1637 பரமேச்வரன் அந்த மலைப் பகுதியில், தவம் செய்கின்றவர்களைக் காக்க வேண்டுமென்று, அங்கே சித்தர்களோடு சித்தராக தானும் தவம் செய்தார்.கருணாலயமான அந்த ஈசன், பன்றிக் குட்டிகளுக்கு இறங்கி, தானே பெண்பன்றியாக வடிவெடுத்து, அந்தக் குட்டிகளை தன்னிடம் பால் குடிக்க விட்டார். சங்கரப் பன்றியிடம் பால் குடித்த பன்றிக்குட்டிகள் போல் பாக்கியம் செய்தவர் யார்? 16

## திருவிளையாடல் 46

### பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கிய படலம்

1638 முன் யுகத்தில் வெள்ளால குலத்தில் பிறந்த இவர்கள், பெரியோர்களுக்கு அபசாரம் செய்ததினால் சபிக்கப்பட்டு பன்றிக்குட்டிகளாகப் பிறந்தார்கள். அவர்களுக்கு பெண்பன்றியாக உருவம் எடுத்த பரமேச்வரனுடைய முலைப்பாலைப் பருகும் பாக்கியம் கிடைத்தது. பால் குடித்த மாத்திரத்தில் அப்பன்றிக் குட்டிகள்,பன்றி முகத்தோடுகூடிய மனிதர்களாக மாறின. 17

1639 அந்தப் பன்றிக் குட்டிகள் சிவசரணங்களிலே பக்தி கொண்டனவா? அல்லவே! மாறாக அவை பரமேச்வரனிடம் பாராமுகமாகத்தான் இருந்தன. அவைகளுக்கு அடித்ததே யோகம். அவை ஸகலகலைகளிலும் திறமை பெற்றன. முக்கியமாக ராஜதந்திரத்தில் அபார திறமையுடன் விளங்கின. 18

தபஸ்விநாம் அவநக்ருதே தபஸ்யதோம் கிரேஸ்தடே க்ருதரதிரத்ர ஶங்கர: ।
க்ருபாலய: கிடிப்ருதுகான் அபாலயத் ஸ தத்ப்ரஸூதநுரமிதை: ஸ்தநாம்ருதை: ॥16

புரா யுகே வ்ருஷலகுமாரகா ஹி தே ததாஶ்ரிதா: ஶமதநஶாபதோ வபு: ।
ஸமுத்த்ருதா: புரமதநஸ்தநாம்ருதை: க்ஷணாத் தது: கிடிவதநா மநுஷ்யதாம் ॥ 17

கலாஸு தே ததுரகிலாஸு கௌஶலம் விஶிஷ்ய ச க்ஷிதிபதிதந்த்ரவைதுஷீம் ।
ந ஸூகர: ஶிவசரணே க்ருதாஶய: ஸ ஸூகர: புரபிதி ய: பராங்முக: ॥ 18

வராஹதாபரணவிலாஸவாஸநா வஶாதிவ ஶ்ருதிஶதமௌலிலாலிதம் ।
விமார்கிதும் சரணயுகம் புராத்விஷ: குதூஹலம் ஸததமமீ விதேநிரே ॥ 19

அநுஜ்ஞயா ததநு கதாபி தூர்ஜடே: அவஸ்திதாநசலகுஹாஸு தாந் ந்ருப: ।
ஸமாநயந் ஸசிவபதே ந்யவேஶயத் வசம்விநோ நரபதிதந்த்ரகோவிதாந் ॥20

ஸபாஜிதா ந்ருபதிவரேண ஸர்வதா சிராயுஷோ த்விஸமதிகா தஶாபி தே ।
ஶிவாஶ்ரமவ்யதிகரதூதகல்மஷா: ஶிவம் யயு: ப்ரணதஶிவங்கரம் தத: ॥21

ததோ கதே பிதரி பதம் மஹேஶிதுஸ்ததாத்மஜ: ஸுகுணந்ருபாலஶேகர: ।
அபாலயத்சிரமவநீம் ஸஸாகராமசஞ்சலம் ஆக்ருத ச பக்திமீஶ்வரே ॥ 22

---

1640 பகவான் நாராயணன் முன் அவதாரத்தில், வராஹ ஸ்வரூபத்தில், நூற்றுக்கணக்கான வேதவாக்கியங்களினால் போற்றப்படும் பரமேச்வரனின் சரணங்களைத் தேடினார். அந்த வாஸனையினால் மறுபடியும் பன்றிக்குட்டிகளாகப் பிறந்து தத்துவங்களைத் தேடுகின்றார் போலும்! 19

1641 பரமேச்வரனுடைய அனுமதியின் பேரில் குகைக்குள் தவம் செய்து கொண்டிருந்த அந்த பன்னிரண்டு ராஜ தந்திரிகளையும் தேடி அழைத்து வந்து,அவர்களை அரசன் தனது மந்திரிகளாக அமர்த்திக்கொண்டான். 20

1642 அரசன் அவர்களை எப்போதுமே கொண்டாடினான். அந்த பன்னிரண்டு மந்திரிகளும் நீண்டகாலம் அரசனுக்கு ஸேவை புரிந்தார்கள். பரமேச்வரனுக்கு ஸேவை செய்ததின் மூலம் ஸகல தோஷங்களும் நீங்கினவர்களாக, எல்லாவிதமான மங்களத்தையும் அளிக்கின்ற சிவபதத்தை அடைந்தார்கள். அந்த பன்னிரண்டு பேரும் நாராயணாம்சம் என்று குறிப்பிட்டிருந்த போதிலும், அவர்கள் சிவ ஸேவையின் மஹிமையினால் சிவனடி சேர்ந்தார்கள் என்று குறிப்பாக உணர்த்துகிறார் கவி. 21

## திருவிளையாடால் 47

## கரிக்குருவிக்கு உபதேசம் செய்த படலம்

1643 தந்தை சிவஸாயுஜ்யம் அடைந்தவுடன், அரசகுமாரன் ஸுகுணபாண்டியன் பட்டத்திற்கு வந்தான். அவன் வெகு ஆண்டுகள் அரசை ஆண்டான். சிவசரணங்களில் தயக்கமில்லாத பக்தியையும் பூண்டிருந்தான்.22

बहिर्भ्रमन्क्षुदुपशमाय सर्वदा बलीयसा करटकुलेन ताडितः ।
अचञ्चलं चरणयुगं शिवस्य कोऽपि अकिंचनः शरणयति स्म खञ्जनः ॥ २३
विहङ्गमः करटभिया शिवालये निलीय स क्वचन विटङ्कसीमनि ।
सकृत्पतन्कनकसरोजिनीपयस्युपोषितः कतिचिदुवास वासरान् ॥ २४
जुहाव किं किमयमयष्ट किं ददौ जजाप किं मलिनतनुर्विहङ्गमः ।
तपस्तदप्यजनि तदस्य चेष्टितं परं तपः प्रपदनतः किमन्ततः ॥ २५
स मृत्युभीशमनमनूपदेशतः बलीयसामपि बलिनं चकार तम् ।
बलान्यमी किल बलवत्सु विश्रुताः प्रसादशीकरपरमाणवोऽस्य ये ॥ २६
स सर्वमध्यकुरुत पक्षिमण्डलं परिग्रहात्प्रमथपतेर्विहङ्गमः ।
तदादिधुखल्विदम् अधुनापि लक्ष्यते तदन्वये विहगकुलाधिकं बलम् ॥ २७
ततस्ततः सरसि निरीक्ष्य यादसां परस्परप्रतिहतिपातकं बकः ।
निवृत्तजात्युचितविचेष्टितः स कोऽपि अगाहत प्रियकवनं कदाचन ॥ २८
विगाहते कनकसरोजिनीजले विलोकते न तु शफरान्दृशापि सः ।
बिभर्ति तु स्वमुदरं बिसाङ्कुरैः प्रदक्षिणं भ्रमति सदा च शूलिनः ॥ २९
इति व्रतं दृढतरमेष धारयन् उपास्त तं त्रिपुरहरं यदा चिरं ।
तदा स्वयं तरुणशशाङ्क मौलिना सरः कृतं विरतसरोजसंकथम् ॥ ३०

---

1644 ஒருசமயம் ஒரு கரிக்குருவி (கஞ்சனப்பறவை) இறை தேடி ஆகாயத்தில் பறந்தது. பல காகங்கள் ஒன்று சேர்ந்து அதை தாக்கின. அதனால் கதிகலங்கிய அந்தப்பறவை, வேறு கதியற்று சிவசரணத்தைச் சரணமடைந்தது. 23

1645 அந்தப் பறவை காக்கைகளிடமிருந்து பயந்து,பறந்தோடி சுந்தரேசப் பெருமானாலயத்தில் புகுந்தது. ஒரு மண்டபவிட்டத்தில் பதுங்கிக்கொண்டது. வெகுநாட்கள் பட்டினி கிடந்தது. பசிதாங்காமல் பொற்றாமரைக் குளத்தில் வீழ்ந்தது. அதன் தண்ணீரைப் பருகி உயிர் பிழைத்தது. அந்த தேவாலயத்திலேயே சில நாட்கள் தங்கியது. 24

1646 அந்தப் பறவை ஹோமம் செய்ததா? யாகம் செய்ததா? தானமளித்ததா மெலிதான உடலுடைய அந்தப் பறவை மந்திரம் ஏதாவது ஜபித்ததா? பசியால் வாடி வதங்கிற்றே! அதுவே அது செய்த தவம்! தன்னை அறியாமல்கூட சிவனை சரணமடைந்த பிறகு அதைவிட சிறந்த தவம் ஏது? எதற்கு? 25

1647 அது மரணபயத்தைப் போக்குகின்ற சிவ நாமத்தை உச்சரித்ததே! அது. மிகச்சிறந்த தவங்களைக்காட்டிலும் சிறந்த தவம் ஆகும். பொற்றாமரைக் குளத்தின் தீர்த்தம் புண்ணிய தீர்த்தம். மற்ற புண்ணிய தீர்த்தங்களைக் காட்டிலும் சிறந்தது என்ற புகழும் உண்டே. 26

CENTRE FOR STUDIES Puducherry

பஹிர்ப்ரமன் க்ஷுதுபஶமாய ஸர்வதா பலீயஸா கரடகுலேந தாடித: ।
அசஞ்சலம் சரணயுகம் ஶிவஸ்ய கோऽப்யகிஞ்சந: ஶரணயதி ஸ்ம கஞ்ஜந: ॥ 23

விஹங்கம: கரடபியா ஶிவாலயே நிலீய ஸ க்வசந விடங்கஸீமநி ।
ஸக்ருத் பதன் கநகஸரோஜிநீபயஸி உபோஷித: கதிசிதுவாஸ வாஸரான் ॥ 24

ஜுஹாவ கிம் கிமயம் அயஷ்ட கிம் ததௌ ஜஜாப கிம் மலிநதநுர்விஹங்கம: ।
தபஸ்ததப்யஜநி ததஸ்ய சேஷ்டிதம் பரந்தபப்ரபதநத: கிமந்தத: ॥ 25

ஸ ம்ருத்யுபீஶமநம் அநூபதேஶதோ பலீயஸாமபி பலிநம் சகார தம் ।
பலாந்யமீ கில பலவத்ஸு விஶ்ருதா: ப்ரஸாதஶீகரபரமாணவோऽஸ்ய யே ॥ 26

ஸ ஸர்வமத்யகுருத பக்ஷிமண்டலம் பரிக்ரஹாத் ப்ரமதபதேர்விஹங்கம: ।
ததாதி கல்விதம் அதுநாபி லக்ஷ்யதே ததந்வயே விஹககுலாதிகம் பலம் ॥ 27

ததஸ்தத: ஸரஸி நிரீக்ஷ்ய யாதஸாம் பரஸ்பரப்ரதிஹதிபாதகம் பக: ।
நிவ்ருத்தஜாத்யுசிதவிசேஷ்டித: ஸ கோऽப்யகாஹத ப்ரியகவநம் கதாசந ॥ 28

விகாஹதே கநகஸரோஜிநீஜலே விலோகதே ந து ஶபரான் த்ருஶாபி ஸ: ।
பிபர்த்தி து ஸ்வகமுதரம் பிஸாங்குரை: ப்ரதக்ஷிணம் ப்ரமதி ஸதா ச ஶூலிந: ॥ 29

இதி வ்ரதம் த்ருடதரமேஷ தாரயன் உபாஸ்த தம் த்ரிபுரஹரம் யதா சிரம் ।
ததா ஸ்வயம் தருணஶஶாங்கமௌலிநா ஸர: க்ருதம் விகதஸரோஜஸங்கதம் ॥ 30

---

1648 அந்தப் பறவை பரமேச்வரனுடைய அருளுக்குப் பாத்திரமானதால், பறவை இனத்திற்கே தலைமையைத் தாங்கியது. இன்றும் கூட பறவைக்கூட்டத்திற்குள்ளே அதிகபலம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. 27

## திருவிளையாடால் 48

## நாரைக்கு முக்தி கொடுத்த படலம்

1649 ஒருசமயம் ஆகாசத்தில் பறந்து கொண்டிருந்த கொக்கு ஒன்று, ஜாதிக்கே இயல்பான முறையில், கீழே கூட்டத்தில் பறவைகள் ஒன்றுக் கொன்று சண்டையிட்டு மோதிக் கொள்வதைப் பார்த்தது. அது ஒரு சமயம் ப்ரியக வனத்தை அடைந்தது. 28

1650 அந்த பொற்றாமரை தடாகத்தின் கரையில் இறங்கியது. இங்கும் அங்கும் பார்த்தது. ஒரு மீனும் அதனுடைய கண்களுக்குப் புலப்படவில்லை.. தாமரைத் தண்டுகளைக் கொண்டு உணவருந்திவிட்டு, ஸுந்தரேசப் பெருமானையே வலம் வந்து கொண்டிருந்தது. 29

1651 அந்த விரதத்தை மேன் மேலும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு முப்புரம் எரித்த பரமனை வெகுநாட்கள் உபாஸித்தது. பரமேச்வரன் ஒரு லீலை செய்தான். அதன் மூலம் அந்த தடாகத்தில் தாமரை மலர்கள் உண்டாகாமல் ஓய்ந்து விட்டன. 30

स वल्गतो  नवनवनीतकोमलान् समीपतः शफरशिशून्विलोकयन्।
क्षुधा किल क्षुभितमना मनागिव प्रचक्रमे पिशितपरिग्रहक्रमे ॥ ३१

समुत्प्लुतं वदनपुटे स्वयं ततः शरारिरादित शफरार्भकं यदा।
तदा झटित्यबुबुधे व्रतक्षतिं विवेकिषु प्रभवति किं चिरं तमः ॥ ३२

परित्यजन्नपि पललं झटित्ययं प्रवर्तनात्क्षणमपथे कृतव्यथः।
असूनपि व्ययितुमियेष दुस्त्यजान् अहो सतां प्रकृतिरपत्रपिष्णुता ॥ ३३

स रक्षितुं बकमकरोद्यथापुरं सरस्तदुल्लसितमृणालपल्लवम्।
तदादि चाकृत तपनीयपद्मिनीं विवर्जितां कियदपि यादसां गणैः ॥ ३४

स खञ्जनः स च बकशाबकः प्रभो अनुग्रहात्परममवापतुः पदम्।
द्विजे द्विजो यदि दयते क्षमं हि तत् द्विजो ह्ययं विबुधगणेषु गीयते ॥ ३५

दिवं गते सुगुणनृपे दयानिधौ उपर्युपर्युपचितसद्गुणोत्कराः।
तदन्वये धरणिभुजो महारथाः परःशता धरणिमिमामपालयन्॥ ३६

युगे युगे कुलमुदितोदितं हि तत् प्रवर्तितं प्रथममनङ्गवैरिणा।
प्रियंकरं प्रियकवनीपतेरभूत् अभग्नमा दिवसपरिक्षयं विधेः॥ ३७

---

1652 அந்த கொக்கு தடாகத்தைச் சுற்றி வரும் போது ஆங்காங்கே சில மீன் குஞ்சுகள் நீரில் எழும்பிக் குதித்ததைப் பார்த்து, வாயை (அலகை) மூடிக்கொண்டிருந்தபோது அதன் மூக்கில் சில மீன்கள் சிக்கின. உயிருடன் பிராணிகளை தின்பதில்லை என்கிற அந்த கொக்கின் விரதம் தளர்ந்தது. அவற்றைப் புசிக்க ஆரம்பித்து விட்டது. பசித்தால் பத்தும் பறந்து போகும் என்ற வசனத்தை உண்மையாக்கியது. 31

1653 அலகைப் பிளந்து கொண்டு, கண்களை மூடிக்கொண்டு தவம் செய்து வந்த அந்த கொக்கின் அலகில் ஒரு மீன் குஞ்சு துள்ளி விழுந்தது. அலகு தானாகவே மூடிக்கொண்டது. மீன் குஞ்சு வயிற்றுக்குள் புகுந்து விட்டது. உடனே தனது புலால் உண்ணாவிரதம் தளர்ந்துவிட்டது என்பதை உணர்ந்தது கொக்கு. உண்மையான விவேகிகளுக்கு அறிவு மங்குவது கணம் நேரம் தானே! 32

1654 உடனே வயிற்றில் புகுந்த மீன் குஞ்சுவை துப்பிவிட்டது. ஒரு கணம் விரதத்திலிருந்து தவறி விட்டேனோ என்று வருந்தியது. உடன் உயிரையே விட்டு விடத் துடித்தது. ஆஹா! பெரியோர்களுக்கு தவறு செய்வதில் என்ன கூச்சம். 33

1655 அந்த கொக்கைக் காப்பாற்றுவதின் பொருட்டு, முன்போல் புலால் உண்ணாமையைத் தொடருவதற்காக, அந்தக்கணத்தில் பரமேச்வரன், அந்த பொற்றாமரைக் குளத்தில் தாமரைக்கிழங்குகள் மறுபடியும் முளைக்கச்

ஸ வல்கதோ நவநவநீதகோமலான் ஸமீபத: ஶபரஶிஶூன் விலோகயன் ।
க்ஷுதா கில க்ஷுபிதமநா மநாகிவ ப்ரசக்ரமே பிஶிதபரிக்ரஹக்ரமே ।। 31

ஸமுத்ப்லுதம் வதநபுடே ஸ்வயம் தத: ஶராரிராதித ஶபரார்பகம் யதா ।
ததா ஜடித்யவபுபுதே வ்ரதக்ஷதிம் விவேகிஷு ப்ரபவதி கிம் சிரம் தம: ।। 32

பரித்யஜன் அபி பலலம் ஜடித்யயம் ப்ரவர்த்தநாத் க்ஷணமபதே க்ருதவ்யத:।
அஸூநபி வ்யயிதுமியேஷ துஸ்த்யஜாநஹோ ஸதாம் ப்ரக்ருதிரபத்ரபிஷ்ணுதா ।। 33

ஸ ரக்ஷிதும் பகமகரோத்யதாபுரம் ஸரஸ்ததுல்லஸித ம்ருணாலபல்லவம் ।
ததாதி சாக்ருத தபநீயபத்மிநீம் விவர்ஜிதாம் கியதபி யாதஸாம் கணை: ।। 34

ஸ கஞ்ஜந: ஸ ச பகஶாபக: ப்ரபோரநுக்ரஹாத் பரமமவாபது: பதம் ।
த்விஜே த்விஜோ யதி தயதே க்ஷமம் ஹி தத் த்விஜோ ஹ்யயம் விபுதகணேஷு கீயதே ।।35

திவம் கதே ஸுகுணந்ருபே தயாநிதௌ உபர்யுபர்யுபசிதஸத்குணோத்கரா: ।
ததந்வயே தரணிபுஜோ மஹாரதா: பரம்பரா தரணிமிமம் ஆமபாலயன் ।। 36

யுகே யுகே குலமுதிதோதிதம் ஹி தத் ப்ரவர்திதம் ப்ரதமமநங்கவைரிணா ।
ப்ரியங்கரம் ப்ரியகவநீபதேரபூத் அபக்நமா திவஸபரிக்ஷயம் விதே: ।। 37

---

செய்தார். அன்று முதல் அந்தத் தடாகத்தில் நீர்வாழும் பிராணிகள் உண்டாவதில்லை. 34

1656 அந்த கருங்குருவியும், கொக்குக் குஞ்சும் பரமேச்வரனுடைய அருளினால் பெரும் பேற்றைப் பெற்றன. பறவைகளுக்கும், பிராமணர்களுக்கும் பிறவியினால் ஒரு ஒற்றுமை, பறவையும் இருபிறவி (தாயின் வயிற்றிலிருந்து முட்டையாக முதல் பிறவி, முட்டையிலிருந்து குஞ்சு). பிராஹ்மணன் தாயின் வயிற்றிலிருந்து முதல் பிறவி. காயத்ரி உபதேசம் பெற்று மறுபிறவி. அதனால் இருவருக்கும் 'த்விஜ' இருபிறவியாளர் என்ற சொல் வந்திருக்கிறது. ஒரு த்விஜன் (ப்ராஹ்மணன்) ஒரு த்விஜத்தினிடத்தில் (பறவையினிடத்தில்) தயவு காட்டினால் அந்த மானுட த்விஜன் தேவலோகத்தில் கொண்டாடப்படுகிறான். 35

1657 அந்த ஸுகுணபாண்டியன் ஸ்வர்கம் அடைந்ததும், கருணைக் கடலான அவனுடைய வம்சத்தில். பல அரசர்கள் வாழையடி வாழையாகத் தோன்றினர். மஹாரதர்கள் என்ற உயர்நிலையை எய்திய நூற்றுக்கணக்கான பாண்டிய மன்னர்கள் பூமியை பரிபாலித்தனர். 36

1658 இந்த பாண்டிய வம்சம் என்பது நடந்து வரும் கலியுகத்தில் தோன்றியது அல்ல. பல யுகங்களில் பல மஹாபுருஷர்கள் தோன்றி இருக்கிறார்கள். பரமேச்வரன் முதல்வராக இருந்து ஆரம்பித்து வைத்த இந்த ராஜவம்சம் கதம்பவன பிரியனான ஸுந்தரேசனிடம் பக்தியுள்ளதாக, ப்ரஹ்மதேவனின் பகல் காலம் முடியும் வரை தொடர்ந்தது. 37

उपस्थिते युगविगमे पृथग्विधाः समुद्गता दिशि दिशि धूमकेतवः ।
अरुन्द्ध च द्युमणिमहर्मुखे सदा कबन्धवत्किमपि निरन्तरं तमः ॥ ३८

समन्ततोऽजनि शतवार्षिकः क्षितौ अवग्रहः स्वयमनवग्रहस्ततः ।
चतुर्विधं जनुरपि भूतसंसदां विलुप्यते जगति निरन्वयं यथा ॥ ३९

विवस्वतो विदधति सप्तरश्मयो जगत्सु ये जलतुहिनाभिवर्षणम् ।
समेऽपि ते तपनतया पृथक्पृथक् प्रतापने प्रववृतिरे समन्ततः ॥ ४०

द्रवीकृतैः प्रथममथोपशोषितैः स्थलीकृतैर्हिमशिखरैः समन्ततः ।
हिमालयो मृदुपलमात्रशेषितो विदिद्युते भुवि किल वेत्रदण्डवत् ॥ ४१

प्रतापिताः प्रथममभिन्धनाग्निना विशोषितास्तदनु कौर्विवस्वताम् ।
उपर्यधः क्वथितजलैघपाचितैः तिमिङ्गिलैर्जलनिधयः कषायिताः ॥ ४२

विशोषिताम्भसि विधुमण्डले तदा विसृत्वरा अपि किरणा विवस्वतः ।
खरातपा निशि परिणम्य चन्द्रिका प्रवर्तनप्रतिहतशक्तयोऽदहन् ॥ ४३

पराकृतद्रुमतृणगुल्मसङ्कथे पयोधरस्मृतिविधुरे युगात्यये ।
अपि त्रिवृत्करणपथोपपादितं पयः क्षितावजनि कथावशेषितम् ॥ ४४

पणीशितुर्वरदनसहस्रनिःसृता विषानलोद्गमनविशेषभीषणाः ।
समीरणाः सरभसताडितस्खलत् परस्परा ववुरपरस्परास्ततः ॥ ४५

*1659 ஒரு யுகம் முடிவடைந்து மறையும் போது, பலவிதமான தூமகேதுகள் என்ற கொள்ளிவாய் பிசாசுகள் உண்டாயின. ஸூரியன் உதயமலையின் மேலே எழும்ப முடியாதபடி தடைபட்டான். குகைபோல எங்கும் கும்மிருட்டு வ்யாபித்தது. 38*

*1660 உலகெங்கும் கொடிய நெருக்கடி. ஒன்றிலும் கட்டுப்படாமல் கருவில் உண்டானவை, முட்டையில் உருவானவை, இறுக்கத்தில் உண்டானவை, இறந்து அழுகிப் போனவைகளில் உண்டானவை என்ற நான்கு விதமான உயிரினங்கள் தோன்றின, மறைந்தன. 39*

*1661 ஸூரியனுடைய ஏழுவிதமான கிரணங்கள், உலகில், நீர் நிலைகள், பனிமலைகள் எல்லாவற்றிலும் சமமாகப்பரவினாலும், அங்கங்கே தனித்தனியாகவே நாற்புறமும் பரவின. 40*

*1662 முதல் எல்லாம் உருகி உருகி வழிந்தன. அவை உருக்குப்பாறைகள் ஆகிவிட்டன. ஹிமயமலை சிகரங்களெல்லாம் தவிடு பொடியாகி தரை மட்டமாகிவிட்டன. இடையிடையே மணலும் சிறுகற்களும் மட்டுமே காணப்பட்டன ஹிமாலயம் ஒரு பிரப்பங்கழி போல் தெரிந்தது. 41*

உபஸ்திதே யுகவிகமே ப்ருதக்விதா: ஸமுத்கதா திஶி திஶி தூமகேதவ: ।
அருத்த ச த்யுமணிமஹர்முகே ஸதா கபந்தவத் கிமபி நிரந்தரம் தம: ।। 38
ஸமந்ததோऽஜநி ஶதவார்ஷிக: க்ஷிதௌ அவக்ரஹ: ஸ்வயம் அநவக்ரஹஸ்தத: ।
சதுர்விதம் ஜநுரபி பூதஸம்ஸதாம் விலுப்யதே ஜகதி நிரந்வயம் யதா ।। 39
விவஸ்வதோ விததி ஸப்த ரஶ்மயோ ஜகத்ஸு யே ஜலதுஹிநாபிவர்ஷணம் ।
ஸமேऽபி தே தபநதயா ப்ருதக்ப்ருதக் ப்ரதாபநே ப்ரவவ்ருதிரே ஸமந்தத: ।। 40
த்ரவீக்ருதை: ப்ரதமம் அதோபஶோஷிதை: ஸ்தலீக்ருதைர்ஹிமஶிகரை: ஸமந்தத: ।
ஹிமாலயோ ம்ருதுபலமாத்ரஶேஷிதோ விதித்யுதே புவி கில வேத்ரதண்டவத் ।। 41
ப்ரதாபிதா: ப்ரதமமபிந்தநாக்நிநா விஶோஷிதாஸ்ததநு கரைர்விவஸ்வதாம் ।
உபர்யத: க்வதிதஜலௌகபாசிதை: திமிங்கலைர்ஜலநிதய: கஷாயிதா: ।। 42
விஶோஷிதாம்பஸி விதுமண்டலே ததா விஸ்ருத்வரா அபி கிரணா விவஸ்வத: ।
கராதபா நிஶி பரிணம்ய சந்த்ரிகா ப்ரவர்த்தந ப்ரதிஹதஶக்தயோऽதஹன் ।।43
பராக்ருத த்ருமத்ருணகுல்மஸங்கதே பயோதரஸ்ம்ருதிவிதுரே யுகாத்யயே ।
அபி த்ரிவ்ருத்கரணபதோபபாதிதம் பய: க்ஷிதாவஜநி கதாவஶேஷிதம் ।। 44
பணீஶிதுர்வதநஸஹஸ்ரநிஸ்ஸ்ருதா விஷாநலோத்வமநவிஶேஷபீஷணா: ।
ஸமீரணா: ஸரபஸதாடிதஸ்கலத் பரஸ்பரா வவுரபரஸ்பராஸ்தத: ।। 45

---

1663 கடல்நீர், முதல் பாடவாக்னியால் பொசுக்கப்பட்டு மறுபடியும் ஸூரியகிரணங்களினால் வற்றிப்போய்விட்டன. கொதிக்கின்ற நீர் பட்டு திமிங்கலங்கள் கூட தவித்தன. 42

1664 சந்திரமண்டலத்தில் நீர் வற்றிவிட்டது. சூரியனுடைய கிரணங்கள் அங்கே பாய்கின்றன. அதனால் இரவில் கூட கடுமையான வெய்யில் காய்ந்தது. இரவை வெளிப்படுத்தக்கூடிய சக்திகளும் எரிந்து விட்டன. 43

1665 மரம், புல், புதர் என்ற பேச்சுக்கே இடமில்லை. மேகம் என்ற ஒன்று உண்டு என்று நினைவிலே கூட யாருக்கும் இல்லை. இப்படி ஏற்பட்ட யுக பிரளயத்தில் ,மண், நீர், நெருப்பு என்ற மூன்றும் சேர்ந்த பொருளான பிரபஞ்சத்தில், நீரிலிருந்து பூமி பிறந்தது என்று பேச்சளவில் மட்டுமே இருந்தது. (உண்மையில் நீரிலிருந்தல்லவா பூமி பிறந்தது. அத்ப்ய:ப்ருதிவீ என்று உபநிஷத் கூறுகிறது) 44

1666 நாகங்களுக்கெல்லாம் ஈசனான ஆதிசேஷனின் ஆயிரம் முகங்களிருந்தும் சீறிய காற்று விஷத்தையும், நெருப்பையும் கக்கியதால் மிகவும் பயங்கரமாக இருந்தது. காற்று வேகமாக வரிசையாக வீசியதால், மேலும் மேலும் கடுமையானது. 45

विषानलव्यतिकरोषितान्तरद्रवत्फुटद्दृढतरसन्धिबन्धनाः ।
शिलोच्चया अपि हि रजश्छटात्मना दिशं दिशं पवनवशेन निन्यिरे ॥ ४६

प्रदीपिका इव पवनेन ताडिताः प्रतिक्षणावसितपुनःसमुद्गताः ।
प्रजज्वलुः कथमपि चण्डरश्मयः पदे पदे स्खलितरथा वियत्पथे ॥ ४७

पयःकिल प्रतिहतकल्मषं सुधेत्युदाहरन्त्युदकरहस्यकोविदाः ।
पयःकथामपि पवनेन लुम्पता सुधान्धसोऽप्यजहुरसून्गतान्धसः ॥ ४८

प्रसर्पता धरणितलात् रसातलं महोष्मणा युगविगमाहिमत्विषाम् ।
प्रतापिताः पुनरशनातिमात्रयाप्यसूनहो जहुरहयो महानिलैः ॥ ४९

अधस्पदे कमठवराहभोगिनाम् अवस्थितस्तदनु ललाटलोचनः ।
किमेतदित्युपरि दृशं द्वयाधिकां अवाकिरद्दरदलितामवज्ञया ॥ ५०

ताऽग्निना कमलभवाण्डमूलभूः निविष्टधूर्जटिनिटिलाक्षिजन्मना ।
चटच्चटन्चटदिति भूर्भुवः स्वरित्यदह्यत त्रिजगदपि प्रसह्य तत् ॥ ५१

उदन्वतामुदरतलेषु शोषिताः तदीरिता लवणमया महाद्रयः ।
समन्ततः सदसि विधातुरुच्ययुः महोपला इव युधि यन्त्रनिःसृताः ॥ ५२

नभःस्वतामजनि विवस्वतामपि क्षणादहो भसितदशा तदर्चिषा ।
बलीयसामपि बलिभिर्ध्रुवः क्षयः परं त्वसौ भवति कियद्विलम्बितः ॥ ५३

---

*1667* இவ்வாறு விஷக்காற்று உள்ளும் புறமும் சீறி வீசிய போது, பெரும் பாறைகள் ஒன்றுக்கொன்று மோதிக் கொண்டு, வெடித்து தூளாயின. அவைகள் பறந்து திசை மண்டலங்களிலெல்லாம் பரவின. 46

*1668* ஆகாசவீதியில் பெரிய பெரிய தீவட்டிகளைப் போல பெரும் காற்று ஒரு கணம் பெரிய ஜ்வாலையைக் கிளப்புகிறது. மறுகணம் அணைத்துவிடுகிறது. மறுபடியும் ஜ்வாலையைக் கிளப்புகிறது. அதிவேகமாக வீசுகின்ற அந்த கொடிய ஜ்வாலைகள் அடிக்கடி தடுமாறி மறுபடியும் கிளம்புகின்றன. 47

*1669* அமுதம் என்றால் என்ன? எவ்வித அழுக்கும் இல்லாத நீர். இவ்வாறு தண்ணீரின் தத்துவத்தை அறிந்த ஞானிகள் கூறுவார்கள். தண்ணீர் என்று பேச்சில் கூட வராதபோது அமுதமேது? உணவில்லாததால் (அமுதமில்லாததால்) தேவர்கள் கூட உயிரிழந்து விட்டனர். 48

*1670* பூமியில் ஏற்பட்ட இந்த கொந்தளிப்பு வேகமாக பாதாளத்திலும் பரவியது. இந்த யுகப்பிரளயம், கடும் வெப்பத்துடன் கூடிய யுகமுடிவில் ஏற்படக்கூடிய அளவை எல்லாம் மீறின. பனி. காற்று, ஒளி இவைகளினால்

விஷாநலவ்யதிகரஶோஷிதாந்தரத்ரவத்ஸ்புடத்த்ருடதரஸந்திபந்தநா: ।
ஶிலோச்சயா அபி ஹி ரஜஶ்சடாத்மநா திஶந்திஶம் பவநவஶேந நிந்யிரே ॥ 46

ப்ரதீபிகா இவ பவநேந தாடிதா: ப்ரதிக்ஷணாவஸித புநஸ்ஸமுத்கதா: ।
ப்ரஜஜ்வலு: கதமபி சண்டரஶ்மய: பதே பதே ஸ்கலிதரதா வியத்பதே ॥ 47

பய: கில ப்ரதிஹதகல்மஷம் ஸுதேத்யுதாரஹந்த்யுதகரஹஸ்யகோவிதா: ।
பய:கதாமபி பவநேந லும்பதா ஸுதாந்தஸோऽப்யஜஹுரஸூந் கதாந்தஸ: ॥ 48

ப்ரஸர்பதா தரணிதலாத் ரஸாதலம் மஹோஷ்மணா யுகவிகமாஹிமத்விஷாம் ।
ப்ரதாபிதா: புநரஶநாதிமாத்ரயாபி அஸூநஹோ ஜஹுரஹயோ மஹாநிலை: ॥ 49

அதஸ்பதே கமடவராஹபோகிநாம் அவஸ்திதஸ்ததநு லலாடலோசந: ।
கிமேதத்யுபரி த்ருஶம் த்வயாதிகாம் அவாகிரத் தரதலிதாம் அவஜ்ஞயா ॥ 50

ததோऽக்நிநா கமலபவாண்டமூலபூ: நிவிஷ்டதூர்ஜடிநிடிலாக்ஷிஜந்மநா ।
சடச்சடதிதி பூர்புவஸ்ஸ்வரிதி அதஹ்யத த்ரிஜகதபி ப்ரஸஹ்ய தத் ॥ 51

உதந்வதாம் உதரதலேஷு ஶோஷிதாஸ்ததீரிதா லவணமயா மஹாத்ரய: ।
ஸமந்தத: ஸதஸி விதாதுருத்யயுர் மஹோபலா இவ யுதி யந்த்ரநிஸ்ஸ்ருதா: ॥ 52

நபஸ்ஸ்வதாமஜநி விவஸ்வதாமபி க்ஷணாதஹோ பஸிததஶா ததர்சிஷா ।
பலீயஸாமபி பலிபிர்த்ருவ: க்ஷய: பரம் த்வஸௌ பவதி கியத்விலம்பித: ॥53

---

தாக்கப்பட்டு காற்று பலமாக வீசியது. நாகங்களுக்கு காற்றுதான் உணவு. விபரீதமாக இந்த பெரும் காற்றுகள். அவர்களால் உட்கொள்ள முடியாத அளவு, அவைகளிடம் புகுந்து விழிபிதுங்கி உயிரிழந்தன. 49

1671 பாதாளத்திற்குக் கீழே ப்ரபஞ்சத்தையே தாங்குகின்ற ஆமை, அதற்குக் கீழே, வராஹம், அதற்குக்கீழே நாகம். அவற்றிற்கும் கீழே நெற்றிக்கண்ணாளன் (பரமேச்வரன்) அலக்ஷியமாக என்ன நடக்கிறது என்று பார்க்க, நெற்றிக் கண்ணிலிருந்து சிற்றொளி மேலே பரவியது. 50

1672 அப்பொழுது மஹா பிரளயாக்னி எழுந்தது. ப்ரஹ்மாண்டம் அனைத்தையும் ஆள்கின்ற பரமேச்வரனின் நெற்றிக் கண்ணிலிருந்து குபீரென்று பற்றிய தீயின் சடாச்சடாரென்ற ஒளி 'பூலோகம், புவர்லோகம். ஸுவர்லோகம் முழுவதும் பரவி விழுங்கியது. 51

1673 கடல்கள் வற்றிப்போயின. உப்பாகிவிட்டன. அந்த உப்பு மலைகள், ப்ரஹ்மகோசத்தில், ப்ரஹ்மதேவன் ஸதஸில் போய் பெரிய பீரங்கியினால் ஏவப்பட்டவை போல வந்து வீழ்ந்தன. 52

1674 மஹர்லோகம், தபோலோகம், ப்ரஹ்மலோகத்தில் வாழ்கின்ற நித்திய ஸித்த புத்தர்கள் எல்லோருடைய திருமேனிகளிலும் உப்புக் கற்கள் படிந்து, ஸர்வாங்கம் வீபூதி பூசிக் கொண்டவர்களாகக் காட்சி அளித்தார்கள். இந்த

तदर्चिषा गिरिशिखरस्फुलिङ्गया जना महःप्रभृतिषु जातसंज्वराः ।
चिरायुषः सनकसनन्दनादयः प्रदुद्रुवुः पदमकुतोभयं विधेः ॥ ५४

अवस्थिताः प्रियकवने युगात्ययेऽप्यविक्रिये मदनजितः प्रभावतः ।
विशङ्कटे कनकसरोजिनीतटे विशृङ्खलाः प्रमथगणा विजह्रिरे ॥ ५५

कपार्दिनस्तदनु कपर्दमण्डलात् समुद्गता नभसि घना घनाघनाः ।
जजृम्भिरे जगदखिलं हविर्भुजा परिश्रितं प्रशमयितुं समन्ततः ॥ ५६

कणानपां करिकलभानिव च्युतान् पटत्पटद् ध्वनिमुखरान्पयोमुचाम् ।
प्रसारयन्निव रसनां शिखाच्छलात् पपौ शनैः सिमिसिमिति क्षयानलः ॥ ५७

पयः कणप्रशमितकल्पपावकप्रसृत्वरप्रतिनव धूममण्डलैः ।
समन्ततः पुनरपि सान्द्रतां गता वलाहका ववृषुरपो निरन्तरम् ॥ ५८

ततस्ततो जलदकुले तटिद्गणाः चकाशिरे चपलमरीचिवीचयः ।
विहाय भूतलमिव तद्दिधक्षया विनिःसृताः प्रलयहुताशनार्चिषः ॥ ५९

ततोऽयुतायुतयुगयोजनोन्नताः तदर्चिषः सलिलनिपातकुण्ठिताः ।
ह्रसीयसीमुपगमिता दशां तदा निरीक्षिताः प्रियकवनाश्रितैर्गणैः ॥ ६०

---

மூன்று உலகங்களில் வாழ்பவர்கள், தபோ மஹிமையினால் ஸம்பாதித்துக்கொண்ட அளவற்ற புண்யபலம் உடையவர்கள் தான். ஆயினும், அவர்களுக்கும் ஒரு நாள் இல்லாமல் போவோம் என்ற காலம் வரத்தான் வரும். அது இத்தனை தாமதமாக வந்ததுதான் ஆச்சரியம். 53

1675 பரமேச்வரன் நெற்றிக் கண்ணிலிருந்து கிளம்பிய ஜ்யோதி, மலைமேல் ஏற்றிய தீபம் போல், மஹர்லோகம், தபோ லோகம் இவற்றின் நித்திய ஸூரிகளை அதிசயிக்கச் செய்தது. ஸனகர் முதலான அந்த மஹாத்மாக்கள் ஸத்தியலோகமான ப்ரஹ்ம லோகத்திற்கு ஓடினார்கள். 54

1676 பிரபஞ்சம் முழுவதும் இப்படி கொந்தளித்த போதிலும், பரமேச்வரனின் ப்ரமதகணங்கள் கதம்பவனத்தில் இருந்து கொண்டிருந்தார்கள். பிரளய காலத்தில் கூட கதம்பவனத்திற்கு மாற்றம் ஏற்படவில்லை அதற்குக்காரணம் மன்மதனை வென்ற ஸுந்தரேசப்பெருமான் அங்கே விளங்குகின்றார். ஆகவே ஒரு இடையூறும் இன்றி ப்ரமதகணங்கள் அங்கே உல்லாஸமாக வாழ்ந்தனர். 55

1677 அந்த சமயம் விரித்த செஞ்சடையானான ஸுந்தரேசனுடைய சடையிலிருந்து கனா கனா மேகங்கள் வெளிவந்தன. அக்னியினால் தேவர்கள் வாழ்ந்து வந்த தேவலோகம் அனைத்திற்கும் ஏற்பட்ட அழிவை நீக்குவதற்காகக் கிளம்பின. அகில உலகமும் நடுநடுங்கின. 56

ததர்சிஷா கிரிஶிகரஸ்புலிங்கயா ஜநா மஹ:ப்ரப்ருதிஷு ஜாதஸஞ்ஜ்வரா: ।
சிராயுஷ: ஸநகஸநந்தநாதய: ப்ரதுத்ருவு: பதமகுதோபயம் விதே: ॥ 54

அவஸ்திதா: ப்ரியகவநே யுகாத்யயேऽபி அவிக்ரியா மதநஜித: ப்ரபாவத: ।
விஶங்கடே கநகஸரோஜிநீதடே விஶ்ருங்கலா: ப்ரமதகணா விஜஹ்ரிரே ॥ 55

கபர்திநஸ்ததநு கபர்தமண்டலாத் ஸமுத்கதா நபஸி கநா கநாங்கநா: ।
ஜஜ்ரும்பிரே ஜகதகிலம் ஹவிர்புஜா பரிஶ்ரிதம் ப்ரஶமயிதும் ஸமந்தத: ॥56

கணாநபாம் கரிகலபாநிவ ச்யுதான் படத்படத்த்வநிமுகரான் பயோமுசாம் ।
ப்ரஸாரயந்நிவ ரஸநாம் ஶிகாச்சலாத் பபௌ ஶநைஸ்ஸிமிஸிமிதி க்ஷயாநல: ॥ 57

பய:கணப்ரஶமிதகல்பபாவகப்ரஸ்ருத்வரப்ரதிநவ தூமமண்டலை: ।
ஸமந்தத: புநரபி ஸாந்த்ரதாம் கதா வலாஹகா வவ்ருஷுரபோ நிரந்தரம் ॥ 58

ததஸ்ததோ ஜலதகுலே தடித்கணாஶ்சகாஶிரே சபலமரீசிவீசய: ।
விஹாய பூதலமிவ தத்திதக்ஷயா விநிஸ்ஸ்ருதா: ப்ரலயஹுதாஶநார்சிஷ: ॥ 59

ததோऽயுதாயுதயுகயோஜநோந்நதாஸ்ததர்சிஷ: ஸலிலநிபாதகுண்டிதா: ।
ஹ்ரயஸீமுபகமிதா தஶாம் ததா நிரீக்ஷிதா: ப்ரியகவநாஶ்ரிதைர்கணை: ॥60

---

1678 பிரளயகால அக்னியின் மீது யானைக் குட்டி போன்ற நீர்த்திவிலைகள் மேகங்களிருந்து வீழ்ந்தன. படபட என்று ஜலம் சுண்டுகின்ற சப்தம் கேட்டது. நெருப்பு ஜ்வாலைகள் தங்கள் நாக்குகளை நீட்டி மழை நீரை 'சொர்' என்று உறிஞ்சி குடித்தன. 57

1679 ஜ்வாலைகள் நீரை உறிஞ்சிகின்றன. ஆலங்கட்டி மழை விழுதுகள் நெருப்பை அணைக்கின்றன. எங்கும் ஒரே புகை. அதனால் ஏற்பட்ட மேகங்கள் மறுபடியும் நாற்புறமும் சூழ்ந்து கொண்டு விடாமல் பொழிந்து கொண்டிருந்தன. 58

1680 எங்கு எடுத்தாலும் மேகங்கள் சூழ்ந்து மின்னல்கள் தோன்றின. ஒளிக்கதிர்கள் நீண்டன. பூமண்டலத்தையே எரிக்கவந்த பிரளயகால தீப்பிழம்புகளை வெகு நேரம் அழித்து அகற்றின. 59

1681 பல்லாயிரம் யோஜனைகள் தூரம் எழும்பிய பிரளயாக்னி ஜ்வாலைகள் மழை வீச்சினால் தடைபட்டு அப்பொழுது குறைவான உயரம் அடைவதை கொஞ்சம் கொஞ்சமாக, அதைக்காட்டிலும் நீர் பெருக்கினால் தணிந்து கொண்டே வந்தது. அனல் புகையாக மண்டிவருவதை கதம்பவனத்து சிவகணங்கள் வேடிக்கைப் பார்த்தனர். 60

1682 இவ்வாறு பிரளயகாலத்து தீப்பிழம்புகளுக்கும் மேகங்களுக்கும் இடையே பயங்கரமான அழிவிலே கொண்டு விடுகிற மோதல் நடந்து கொண்டிருந்தபோது, தேவர்கள் எல்லாம் பூமிக்கு வந்து தாயாதிகளுடன் மேகங்களைப் பொழியச் செய்தார்கள். 61

परस्परं प्रलयहुताशमेघयोः भयानके प्रचलति साम्परायिके ।
समागता भुवि समये हविर्भुजा सनाभयः किमशनयः पयोमुचः ॥ ६१

उभावपि प्रलयदशानिरङ्कुशौ उभावपि त्रिपुरहरत्य गात्रजौ ।
तथापि तु व्यजयत वारिदोऽनलं जयः कथं जगदुपतापिनो भवेत् ॥ ६२

भयानकैरशनिनिपातनिस्वनैः प्रतिक्षणक्षुभितहृदः पंयोमुचाम् ।
अपि क्षपामनुभवतः पदे निजे प्रजागरः परिणमति स्म वेधसः ॥ ६३

अचन्द्रमस्तपनम् अपेततारकं प्रशान्तपावकम् अवरसन्नमारुतम् ।
अकालदिग्भुवनमसच्छुभाशुभं तमोमयं पयसि ममज्ज तज्जगत् ॥ ६४

यदण्डतो बहिरबहिश्चः यज्जलं तदेकतां गतमिवः सर्वतस्तदा ।
अगाधमप्रचलम् अपारमस्वनं प्रवृद्धमाध्रुवपदमारसातलम् ॥ ६५

जडाजडे जगति गते रसातल क्षमानभःसुरनरतिर्यगात्मनि ।
जलास्तरे वटदलतल्पमाश्रितो जगन्निधिर्व्यहरत कोऽपि बालकः ॥ ६६

समन्ततो जगति समावृतेऽम्ऽसाप्यमज्जति प्रियकवने निजाज्ञया ।
स बद्बुदोदर इव सार्धमम्बया समं गणैरपि विजहार शंकरः ॥ ६७

चतुर्मुखे स्वपति विलुप्तसंकथे चराचरे विरमति कालकल्पने ।
अनुश्रवैः परमधिगम्य तुष्टवुः महर्षयः कतिचन तं महीं गतम् ॥ ६८

---

1683 நீர், நெருப்பு, இரண்டுமே பிரளயகாலத்துக்கு வந்து விட்டதால், தமது கடமை எல்லைகளை மீறின. இரண்டுமே பரமேச்வரனின் படைப்புகள் தான். ஆனாலும் எப்படியோ மேக நீர் ஜயித்து விட்டது. ஏன் தெரியுமா? சுய பலத்தால் அல்ல. உலகத்தை அழிப்பவர்க்கு எப்படி வெற்றி கிடைக்கும்?62

1684 பேரிடி போன்ற பயங்கரமான சப்தங்கள் எழும்பின. ஒவ்வொரு கணமும் மேகங்கள் இதயம் வெடிப்பது போல் கர்ஜித்தன. ப்ரஹ்மலோகமே ஆட்டம் கண்டு விட்டது. இத்தனைக்கும் பிறகு ப்ரஹ்மாவிற்கு மெதுவாகத் தூக்கத்திலிருந்து விழிப்பு வந்தது. 63

1685 ப்ரபஞ்சமோ ஒரே இருட்டில் மூழ்கிக்கிடந்தது. சந்திரன் இல்லை. ஸூரியன் இல்லை. நக்ஷத்திரங்கள் இல்லை. தீ அணைந்து விட்டது. காற்று நின்று விட்டது. வேளை தெரியவில்லை. திசை தெரியவில்லை இவற்றிற்கெல்லாம் புண்ணிய பாபங்களும் இல்லை. ப்ரபஞ்சம் இருட்டு நீரில் மூழ்கிவிட்டது. 64

1686 ப்ரஹ்மாண்டம் ஒன்றாகத் தோன்றியது. அதன் உச்சியில் த்ருவ மண்டலம். அதன் கீழ் பாதாளம். எல்லாம் நீரில் மூழ்கிவிட்டது. எங்கும் நீரே. அதன் ஆழம் தெரியாது, அசைவற்றது, கரை அற்றது, ஓய்வற்றது.65

பரஸ்பரம் ப்ரலயஹுதாஶமேகயோ: பயாநகே ப்ரசலதி ஸாம்பராயிகே ।
ஸமாகதா புவி ஸமயே ஹவிர்புஜா ஸநாபய: கிமஶநய: பயோமுச: ।। 61
உபாவபி ப்ரலயதஶாநிரங்குஶௌ உபாவபி த்ரிபுரஹரஸ்ய காத்ரஜௌ ।
ததாபி து வ்யஜயத வாரிதோऽநலம் ஜய: கதம் ஜகதுபதாபிநோ பவேத் ।। 62
பயாநகைரஶநிநிபாதநிஸ்வநை: ப்ரதிக்ஷணக்ஷுபிதஹ்ருத: பயோமுசாம் ।
அபி க்ஷபாமநுபவத: பதே நிஜே ப்ரஜாகர: பரிணமதி ஸ்ம வேதஸ: ।। 63
அசந்த்ரமஸ்தபநம் அபேததாரகம் ப்ரஶாந்தபாவகம் அவஸந்நமாருதம் ।
அகாலதிக்புவநமஸச்சுபாஶுபம் தமோமயம் பயஸி மமஜ்ஜ தஜ்ஜகத் ।। 64
யதண்டதோ பஹிரபஹிஶ்ச யஜ்ஜலம் ததேகதாம் கதமிவ ஸர்வதஸ்ததா ।
அகாதம் அப்ரசலம் அபாரமஸ்வநம் ப்ரவ்ருத்தமாத்ருவபதம் ஆரஸாதலம் ।। 65
ஜடாஜடே ஜகதி கதே ரஸாதலக்ஷமாநபஸ்ஸுரநரதிர்யகாத்மநி ।
ஜலாஸ்தரே வடதலதல்பமாஶ்ரிதோ ஜகந்நிதிர்வ்யஹரத கோऽபி பாலக: ।। 66
ஸமந்ததோ ஜகதி ஸமாவ்ருதேऽம்பஸாபி அமஜ்ஜதி ப்ரியகவநே நிஜாஜ்ஞயா ।
ஸ புத்புதோதர இவ ஸார்தம் அம்பயா ஸமம் கணைரபி விஜஹார ஶங்கர: ।। 67
சதுர்முகே ஸ்வபதி விலுப்தஸங்கதே சராசரே விரமதி காலகல்பநே ।
அநுஶ்ரவை: பரமதிகம்ய துஷ்டுவுர்மஹர்ஷய: கதிசந தம் மஹீம் கதம் ।। 68

---

*1687* அசைவன அசையாதவை எல்லாமும், இந்த பூமண்டலத்தில் பாதாளம் எது, பூமி எது, ஆகாயம் எது? தேவன் யார், மனிதன் யார், பிராணிகள் எவை? என்று அறியமுடியாத, ஒன்றுமே இல்லாத இந்தப்பிரளயத்தில், நீர் பரப்பின் மேல் ஒரு சிறு ஆலிலையில் மல்லாக்கப் படுத்துக் கொண்டிருக்கிறது ஒரு சிசு. அதன் வயிற்றில் அகில பிரபஞ்சங்களும். கால்களால் உதைத்துக்கொண்டும், கைகளை ஆட்டியும், கண்களை சிமிட்டிக்கொண்டும் தனியாகப்படுத்திருக்கிறது. 66

1688 பாரெங்கும் நீரே சூழ்ந்திருக்க, தன்னுடைய ஆக்ஞையின் பேரில் கதம்பவனம் மட்டும் மூழ்காமல் இருந்தது. அந்த ஸுந்தரதேவன் கதம்பவனத்தின் மத்தியில் தேவியுடனும், தன் கணங்களுடனும் லீலைகளைப் புரிந்தார். 67

1689 அந்த ஸமயத்தில், நான்முகனாகிய ப்ரஹ்மதேவன் தூங்கிக்கொண்டிருந்தார். காலக்கணக்கில் அகில சராசர ப்ரபஞ்சமும் ஓய்ந்து போய்விட்ட நிலையில், பூ லோகத்தில் இருந்த ஸுந்தரேசப் பெருமானை சில மஹருஷிகள் அணுகி வேதகோஷங்களால் வழிபட்டனர். 68

1690 நீரே எங்கும், உள்ளும் புறமும் சூழ்ந்திருக்க, பரமேச்வரனுடைய சடைக் காட்டில் தப்பியிருந்த சந்திரனின் கிரணங்கள், நிலவை வெளிப்படுத்தி,

जलप्लवैर्बहिरबहिश्च धूर्जटेः जटाटवीहिमकरचन्द्रिकाङ्कुरैः ।
जडीकृते सति मधुरेश्वरालये जगुर्गणा जहसुरनर्तिषुः सुखम् ॥ ६९
परिक्षये प्रलयनिशास्ततश्चिरात् पयोजभूः सलिलशयस्य शार्ङ्गिणः ।
निदेशतो निखिलमिदं जगत्त्रयं यथापुरं पुनरसृजत्प्रयत्नतः ॥ ७०
प्रकल्पयन्प्रथममहर्निशाकरौ प्रणाशयन्कवालितविष्टपं तमः ।
विशोषयन्सलिलमशेषमुत्थितं विनिर्ममे विधिरमरालयं पुरः ॥ ७१
ततः क्षितौ कथमपि धाम शाकरं तदेकमक्षतमाभिजानतामुना ।
सरिद्गिरिस्थलस्त्रिदीश्वरादिकं सुमेधसा निखिलमकल्पि वेधसा ॥ ७२
ततः सृजन्स विबुधमर्त्यभोगिनो निवेशयन्निजनिजधामसु स्थिरम् ।
प्रवर्तयन्सुपरिचितेषु कर्मसु व्यधत्त तच्छयितामिवोत्थितं जगत् ॥ ७३
ततश्चिरादजनि तु वंशशेखरो महीपतिर्द्रमिडकुलेषु कश्चन ।
प्रभुत्वमावहत स पाण्ड्यमाण्डले महेश्वरार्पितहृदयो महाशयः ॥ ७४
स सुन्दरेश्वरसदनैकशोषिणीं भजन्पुरीं भुवि मधुरेति विश्रुताम् ।
निवेशयन्क्वचिदपि काश्चन प्रजाः क्वचेत्स्वयं न्यविशत कल्पितालयः ॥ ७५
दिनेदिने मदनजितः सपर्यया समृद्धया स धरणिवल्लभश्रिया ।
यथापुरं पुरमचिकीर्षदुच्छ्रितैः समन्ततो नृपगृहसालगोपुरैः ॥ ७६

பாரில் மதுரை ஸுந்தரேச்வரன் ஆலயம், இயக்கமற்று அசையாமல் இருந்தபோது, சிவகணங்கள் மட்டும் கலகல என்று ஸுகமாக பாடினர், ஆடினர், சிரித்தனர். 69

1691 ஒருவாறு பிரளய இரவு கழிந்தது. விடிந்ததும் நீரிலே படுத்திருக்கின்ற நாராயணனின் ஆணையின் பேரில் ப்ரஹ்மதேவன் இந்த மூவுலகையும் முன் இருந்தது போல் படைத்தார். 70

1692 ப்ரஹ்ம தேவன், முதல் ஸூரியனையும் சந்திரனையும் படைத்து, உலகத்தில் சூழ்ந்திருந்த இருட்டை அழித்தார். நீர் முழுவதையும் வற்றச் செய்தார். பிறகு தேவர்களுடைய இருப்பிடத்தைப் படைத்தார். 71

1693 சிறந்த நினைவாற்றலுடைய ப்ரஹ்ம தேவன், பிறகு பூமியில் பரமேச்வரனுடைய இருப்பிடம் மட்டும் பிரளயத்தில் அழியாமல் இருந்ததை அடையாளம் கண்டுபிடித்தார். பிறகு நதிகள், பர்வதங்கள், ஸமுத்திரம் முதலியவைகளையும் படைத்தார். 72

1694 பிறகு அவர் பூலோகம், பாதாளம், தேவ, மனித, நாக இடங்களைப் படைத்தார். அவர்களை அந்தந்த இடங்களில் வாழவைத்தார். அவரவர்களுக்கு

ஜலப்லவைர் பஹிரபஹிஶ்ச தூர்ஜடேர் ஜடாடவீஹிமகரசந்த்ரிகாங்குரை: ।
ஜடீக்ருதே ஸதி மதுரேஶ்வராலயே ஜகுர்கணா ஜஹஸுரநர்த்திஷு: ஸுகம் ॥ 69

பரிக்ஷயே ப்ரலயநிஶஸ்ததஶ்சிராத் பயோஜபூ: ஸலிலஶயஸ்ய ஶார்ங்கிண: ।
நிதேஶதோ நிகிலமிதம் ஜகத்த்ரயம் யதாபுரம் புநரஸ்ருஜத் ப்ரயத்நத: ॥ 70

ப்ரகல்பயன் ப்ரதமமஹர்நிஶாகரைள ப்ரணாஶயன் கபலிதவிஷ்டபம் தம: ।
விஶோஷயன் ஸலிலம் அஶேஷமுத்திதம் விநிர்மமே விதிரமராலயம் புந: ॥ 71

தத: க்ஷிதௌ கதமபி தாம ஶாகரம் ததேகமக்ஷதம் அபிஜாநதாமுநா ।
ஸரித்கிரிஸ்தலஸரிதீஶ்வராதிகம் ஸுமேதஸா நிகிலம் அகல்பி வேதஸா ॥ 72

தத: ஸ்ருஜன் ஸ விபுதமர்த்த்யபோகிநோ நிவேஶயன் நிஜநிஜதாமஸு ஸ்திரம் ।
ப்ரவர்த்தயன் ஸுபரிசிதேஷு கர்மஸு வ்யதத்த தச்சயிதமிவோத்திதம் ஜகத் ॥ 73

ததஶ்சிராத் அஜநி து வம்ஶஶேகரோ மஹீபதிர் த்ரமிடகுலேஷு கஞ்சந ।
ப்ரபுத்வமாவஹத ஸ பாண்ட்யமண்டலே மஹேஶ்வரார்பித ஹ்ருதயோ மஹாஶய: ॥74

ஸ ஸுந்தரேஶ்வரஸதநைகஶோஷிணீம் பஜன் புரீம் புவி மதுரேதி விஶ்ருதாம் ।
நிவேஶயன் க்வசிதபி காஶ்சந ப்ரஜா: க்வசித் ஸ்வயம் ந்யவிஶத கல்பிதாலய: ॥ 75

திநேதிநே மதநஜித: ஸபர்யயா ஸம்ருத்தயா ஸ தரணிவல்லபஶ்ரியா ।
யதாபுரம் புரமசிகர்ஷிது: உச்ரிதை: ஸமந்ததோ ந்ருபக்ருஹஸாலகோபுரை: ॥ 76

---

வாஸனாபலத்தினால் வழக்கமான கடமைகளில் ஈடிபடுத்தினார். தூங்கி
விழித்தது போல உலகம் எழுந்தது. 73

## திருவிளையாடால் 49

## திருவாலவாயான படலம்

1695 வெகு நாட்களுக்குப்பிறகு பாண்டிய மண்டலத்தில்
தமிழ்குலத்திற்குப் பெருமையைத்தேடித்தந்த வம்சசேகரன் என்ற அரசன்,
ஆளும் திறமை பெற்றான். அவனும் உள்ளத்தை பரமேச்வரனுக்கு
அர்ப்பணம் செய்த மஹாபுருஷன். 74

1696 முந்தய மதுரையில் இருந்த ஸுந்தரேசப் பெருமான்ஆலயம் மட்டுமே
தற்போது அழியாமல் இருந்தது. அந்த புகழ்ப்பெற்ற மதுரையை அடைந்தான்.
அங்கு தனக்கு ஒரு மாளிகையை கட்டிக் கொண்டிருந்தாலும்
சிவப்ரஜைகளையும் வாழவைத்தான். 75

1697 நாள் தோறும் மன்மதனை வென்ற ஸுந்தரேசனுக்கு வழிபாடு
நடத்தினான். பூமி நாயகனுக்குறிய வமை அவனுக்கு வளர்ந்தது. அதனால்
நாற்புறங்களிலும் உயர்ந்த கோபுரங்களையும்,அரண்மனைகளையும்,
கோட்டை மதில்களையும் முன் போல அமைத்தான். 76

स वेदितुं पुरपरिमाणमुत्सुको जडे जगत्यविदित तत्पुरस्थितौ ।
दृढव्रतो द्रविडकुलाब्धिचन्द्रमाः समाहितः शरणयति स्म शंकरम् ॥ ७७

कृपानिधिस्तदनु शशाङ्कशेखरः कृतादरः क्षितिभृति वंशशेखरे ।
प्रदर्शय स्थलपरिमाणं इत्यशात् भुजङ्गवरं विभूषणं विनिक्षिपन् ॥ ७८

सपुष्पकाननभुवि वालमर्पयन् प्रदक्षिणं परिचलितः फणीश्वरः ।
शिरस्पदं पुनरपि तत्र योजयन् अदर्शयत्पुरपरिमाणमद्भुतम् ॥ ७९

हरित्वसौ चतसृषु पुष्पकाननं गुहाचलं भुजगगिरिं वृषाचलम् ।
अनुक्रमात् अहितिलकः प्रदर्शयत् द्वियोजनं पुरमवदत्समन्ततः ॥ ८०

तिरोहिते पुरहरभूषणोरगे तदाकृतिं वरणमयं प्रकल्पयन् ।
विशङ्कटैर्विपणिपथैः शिरोगृहैः अलंकृतं पुरमकरोद्यथापुरम् ॥ ८१

हालाहलास्यपरिवेष्टनलब्धसीमं हालास्यमित्यभिधया नगरं तदासीत् ।
भोगाभिवेष्टिततयापि च भोगभूमिः कैवल्यभूरपि बभूव महीविभागे ॥ ८२

आसादन्नश्वपतिं सहायं अथैकदा विक्रमचोलदेवः ।
विचार्य विश्रब्धममुं नृपालं आयोधनायोपजगाम सैन्यैः ॥ ८३

अतर्कितासन्नमरातिसैन्यं आकर्णयन्पाण्ड्यनृपो विशङ्कः
कृताभ्यनुज्ञो मधुरेश्वरेण जयं करस्थं कलयन्प्रथस्थे ॥ ८४

---

1698 முன்பு நகரம் எப்படி இருந்தது என்பதை அறிய முடியாமல், நகரத்தின் வளர்ச்சியை அறிவதற்காக முனைந்தான். தமிழ்குலமாகிய கடல் தோன்றிய சந்திரனைப் போன்ற அந்த அரசன் ஸுந்தரேசனைச் சரணம் அடைந்தான். 77

1699 கிருபாநிதியான சந்திரசேகரப் பெருமான், வம்சசேகர பாண்டியனிடம் பரிவு கொண்டு, ஆதிசேஷனை அழைத்து நகரத்தின் பழைய சுற்றளவைக் காண்பித்துக் கொடு என்று ஆணையிட்டார். 78

1700 ஆதிசேஷன் மலர்ந்த தோட்டத்தின் முனையில், தனது வாலை நிறுத்தி பூமியைப் பிரதக்ஷிணமாகச் சுற்றி வந்து, தலையை வால் வைத்த இடத்திற்கு கொண்டு சேர்த்தார். இது தான் நகரத்தின் சுற்றளவு என்று காண்பித்தார். 79

1701 அந்த மஹாநாகம், நான்கு திசை மூலைகளிலும் முறையே பூந்தோட்டம் திருப்பறம்குன்றம், நாகமலை, விருஷப மலை (பசுமலை) இவைகளை வைத்து, இவற்றைச் சுற்றி இரண்டு யோஜனை விஸ்தீரணத்தை நகரம் என்று காண்பித்தது. 80

1702 இவ்வாறு எல்லையைக் காட்டிவிட்டு, பரமேச்வரனின் அணிகலனான ஆதிசேஷன் மறைந்தது. அரசன் அந்த அளவுக்கு எல்லையை வகுத்துக்கொண்டு, நெருக்கடியான கடைவீதிகளையும், மஹா

ஸ வேதிதும் புரபரிமாணமுத்ஸுகோ ஜடே  ஜகத்யவிதித தத்புரஸ்திதௌ ।
த்ருடவ்ரதோ த்ரமிடகுலாப்திசந்த்ரமா: ஸமாஹித: ஶரணயதி ஸ்ம ஶங்கரம் ॥ 77
க்ருபாநிதிஸ்ததநு ஶஶாங்கஶேகர: க்ருதாதர: க்ஷிதிப்ருதி வம்ஶஶேகரே ।
ப்ரதர்ஶய ஸ்தலபரிமாணம் இத்யஶாத்  புஜகவரம் விபூஷணம் விநிக்ஷிபந் ॥ 78
ஸ புஷ்பகாநநபுவி வாலமர்பயன் ப்ரதக்ஷிணம் பரிசலித: பணீஶ்வர: ।
ஶிரஸ்பதம் புநரபி தத்ர யோஜயன் அதர்ஶயத் புரபரிமாணமத்புதம் ॥ 79
ஹரித்ஸ்வஸௌ சதஸ்ருஷு புஷ்பகாநநம் குஹாசலம் புஜககிரிம் வ்ருஷாசலம் ।
அநுக்ரமாதஹிதிலக: ப்ரதர்ஶயன் த்வியோஜநம் புரமவதத் ஸமந்தத: ॥ 80
திரோஹிதே புரஹரபூஷணோரகே ததாக்ருதிம் வரணமயம் ப்ரகல்பயன் ।
விஶங்கடைர்விபணிபதை:ஶிரோக்ருஹை: அலங்க்ருதம் புரமகரோத் யதாபுரம் ॥81
ஹாலாஹலாஸ்யபரிவேஷ்டநலப்தஸீமம் ஹாலாஸ்யமித்யபிதயா நகரம் ததாஸீத் ।
போகாபிவேஷ்டிததயாபி ச போகபூமி: கைவல்யபூரபி பபூவ மஹீவிபாகே ॥ 82
ஆஸாதயன் அஶ்வபதிம் ஸஹாயமதைகதா விக்ரமசோலதேவ: ।
விசார்ய விஸ்ரப்தமமும் ந்ருபாலம் ஆயோதநாயோபஜகாம ஸைந்யை: ॥ 83
அதர்கிதாஸன் அமராதிஸைந்யம் ஆகர்ணயன் பாண்ட்யந்ருபோ விஶங்க: ।
க்ருதாப்யநுஜ்ஞோ மதுரேஶ்வரேண ஜயம் கரந்தம் கலயன் ப்ரதஸ்தே ॥ 84

---

*மண்டபங்களையும், மாளிகைகளையும் கட்டச்செய்து முன் போல் நகரத்தை அலங்கரித்தான்.. 81*

*1703 ஹாலஹால விஷத்தை வாயில் கொண்ட அந்த நாகம், சுற்றி வந்து நகரத்தின் எல்லையை காண்பித்ததால், அந்த நகரத்திற்கு ஹாலாஸ்ய க்ஷேத்ரம் (ஆலவாய் நகர்) என்ற புதுப்பெயர் ஏற்பட்டது. போகம் என்ற நாகத்தின் உடலால் சுற்றப்பட்டிருந்ததால் 'போகபூமி' (புண்ணிய கர்மக்களின் வினையாக ஏற்படுகின்ற போகங்களின் அனுபவங்களை அடையுமிடமாதலால் ) என்றும், பிறகு கைவல்யநகரம் என்றும் ஆயிற்று. 82*

## திருவிளையாடல் 50

## சுந்தரர் பேரம்பு எய்தபடலம்

*1704 பிறகு ஒருசமயம் சோழநாட்டு மன்னன் விக்ரமசோழன், அசுவபதி என்ற அரசன் துணை கொண்டு, ஆழ்ந்து கலந்து ஆலோசனை செய்த பிறகு ஹாலாஸ்ய நகரத்தை முற்றுகையிட்டான். 83*

*1705 எதிர்பாராதவிதமாக நாற்புறமும் எதிரிப்படை முற்றுகையிட்டுவிட்டது என்பதைக் கேட்டு அஞ்சாமல், பாண்டிய அரசன் மதுரை நாயகனாகிய ஸுந்தரேசப்பெருமானின் அனுமதியுடன், வெற்றி நமக்கே என்ற துணிவுடன் புறப்பட்டான். 84*

धनुर्धरेष्वेकतमो भवन्हरः शितैः शरौघैः शिवनामलाञ्छितैः ।
अवाकिरन्सैन्यमदृश्यपातिभिः विशृङ्खलं विक्रमचोलभूपतेः ॥ ௮௫

अनुग्रहं स तमनवग्रहं विभो विचिन्तयन्क्षितिभृति वंशशेखरे ।
परित्यजन्गजतुरगान्पलायितो विना रणं कियदपि चोलभूपतिः ॥ ௮௬

पराक्रमेणाप्रतिमेन पार्थिवान् गिरा सुधासारकिरा कवीनपि ।
जयन्नयं सप्तसमुद्रमुद्रितां बभार पृथ्वीं मधुरेश्वरार्पिताम् ॥ ௮௭

इति एकोनविंशः सर्गः

---

*1706 பரமேச்வரன், அரசனுடைய வில்லாளிகளில் ஒருவனாக இருந்து* **கொண்டு சிவநாமம் பொறிக்கப்பட்ட கூரிய பாணங்களினால்,** எங்கிருந்து பாணங்கள் பாய்ந்து வருகிறது என்று அறிந்து கொள்ளமுடியாத விக்ரம சோழனுடைய படைகளை தரிகட்டு ஓடச்செய்தார். 85

*1707 வம்சசேகர பண்டியனுக்கு அமோகமான அருள் இருக்கிறது* என்றுணர்ந்து, விக்ரம சோழ அரசன் தன் யானை குதிரைகளை இழந்து, போர் செய்யாமலேயே ஓடிவிட்டான். 86

தநுர்தரேஷ்வேகதமோ பவன் ஹர: ஶிதை: ஶரௌகை: ஶிவநாமலாஞ்சிதை: ।
அவாகிரத் ஸைந்யமத்ருஶ்யபாதிபிர் விஶ்ருங்கலம் விக்ரமசோலபூபதே: ॥ 85

அநுக்ரஹம் ஸ தம் அநவக்ரஹம் விபோர் விசிந்தயன் க்ஷிதிப்ருதி வம்ஶஶேகரே ।
பரித்யஜன் கஜதுரகான் பலாயிதோ விநாரணம் கியதபி சோலபூபதி: ॥ 86

பராக்ரமேணாऽப்ரதிமேந பார்திவான் கிரா ஸுதாஸாரகிரா கவீநபி ।
ஜயந்நயம் ஸப்தஸமுத்ரமுத்ரிதாம் பபார ப்ருத்வீம் மதுரேஶ்வரார்பிதாம் ॥ 87

இதி மஹாகவிஶ்ரீநீலகண்டதீக்ஷிதப்ரணீதே ஶிவலீலார்ணவ ஏகோநவிம்ஶ: ஸர்க: ।

---

*1708* நிகரற்ற தமது பராக்ரமத்தினால் எதிரி அரசர்களையும், அமுதம் சிந்துகின்ற தனது இனிய பாராட்டுதல்களினால் கவிஞர்களையும், வம்சசேகர பாண்டியன் வெற்றி கொண்டான். மதுராநாயகனான ஸுந்தரேசப்பெருமானால் கொடுக்கப்பட்ட ஏழுகடல் சூழ்ந்த பூமியின் பொறுப்பை நிர்வகித்தான். 87

**பத்தொன்பதாவது ஸர்கம் முடிவடைந்தது**

## विंशः सर्गः

कपिलकीरमुखाः कवयस्ततः कतिचिदासत ताम्रनदीतटे।
द्रुहिणशापवशाज्जननी गिरां अवततार पुरा हि यदात्मना॥ १

अथ चतुर्गुणिता व्यधिका दश त्रिदशदेशिकधिक्करणक्षमाः।
प्रति ययुर्मधुरामभिवन्दितुं प्रमथनाथममी कविपुङ्गवाः॥ २

कविशरीरभृता कवयस्तु ते समभिगम्य हरेण पुरस्कृताः।
समवगाह्य सुवर्णसरोजिनीं ददृशुरद्रिसुतादयितं महः ॥ ३

दृढविनोतधियः सुधियस्तु ते द्रमिडसूत्ररहस्यविवेचने ।
मृदुसुगन्धिवचःकुसुमस्त्रजा विविधया मधुरेशमपूजयन्॥ ४

अकवयः कतिचिद्विबुधाधमाः कुकवयश्च परे कृतसंविदः।
कविभिरप्रतिमैर्भुवनेषु तैः कलहमादधिरऽथ वितण्डया॥ ५

शब्दार्थौ दोषनिर्मुक्तो सालंकारौ गुणोत्तरौ ।
काव्यमातिष्ठमानेभ्यः कविभ्योऽयं कृतोऽञ्जलिः ॥ ६

आद्यं हि शब्ददोषाणाम् असाधुत्वं मतं च वः।
स्वमश्रद्धधानानां स्वरुप केच साधुता॥ ७

---

## இருபதாவதுதாவது ஸர்கம்

### திருவிளையாடல் - 51

### சங்கப்பலகை கொடுத்த படலம்

*1709* ப்ரஹ்மதேவனின் சாபம் காரணமாக, வாக்தேவி முன்பு கபிலர், கீரர் முதலான நாற்பத்தெட்டு கவிகளாகப் பிறந்து தாமிரபரணீ நதிக்கரையில் அவதரித்தார்கள். (ஒரு சமயம் ப்ரஹ்மா காசியில் பரஹ்மேச்வர லிங்கத்தை ஸ்தாபித்து விட்டு, பத்து அச்வமேத யாகங்களைச் செய்தார். பத்தாவது அச்வமேத யாகம் முடிந்து தன் மனைவிகளான காயத்ரீ, ஸாவித்ரீ, ஸரஸ்வதி இவர்களுடன் சேர்ந்து அவப்ருத ஸ்நானம் செய்யும் ஸமயத்தில், ஸரஸ்வதீ தாமதமாக வந்ததினால் அவளை மனித உலகில் பிறவி எடுக்குமாறு சபித்தார். ஸரஸ்வதியும் அ முதல் ஸ வரை தன்னுடைய நாற்பத்தெட்டு அக்ஷர வடிவங்களான நாற்பத்தெட்டு கவிகளாகப் பிறவி எடுத்தாள். *1*

*1710* அந்த நாற்பத்தெட்டு கவிகளும் மதிநுட்பத்தில் ப்ருஹஸ்பதி பகவானையே மட்டம் தட்டக்கூடிய வல்லமை படைத்தவர்கள். இந்தக் கவிஞர் பெருமான்கள் ஸுந்தரேச்வரனை வணங்குவதற்காக மதுரைக்குச் சென்றார்கள். *2*

அத விம்ஶ: ஸர்க: ।

கபிலகீரமுகா: கவயஸ்தத: கதிசிதாஸத தாம்ரநதீதடே ।
த்ருஹிணஶாபவஶாஜநநீ கிராம் அவததார புரா ஹி யதாத்மநா ।। 1

அத சதுர்குணிதா வ்யதிகா தஶ த்ரிதஶதேஶிக திக்கரணக்ஷமா: ।
ப்ரதி யயுர்மதுராமபிவந்திதும் ப்ரமதநாதமமீ கவிபுங்கவா: ।। 2

கவிஶரீரப்ருதா கவயஸ்து தே ஸமதிகம்ய ஹரேண புரஸ்க்ருதா: ।
ஸமவகாஹ்ய ஸுவர்ணஸரோஜிநீம் தத்ருஶுரத்ரிஸுதாதயிதம் மஹ: ।। 3

த்ருடவிநீததிய: ஸுதியஸ்து தே த்ரமிடஸூத்ரரஹஸ்யவிவேசநே ।
ம்ருதுஸுகந்திவச:குஸுமஸ்ரஜா விவிதயா மதுரேஶமபூஜயன் ।। 4

அகவய: கதிசித் விபுதாதமா: குகவயஶ்ச பரே க்ருதஸம்வித: ।
கவிபி: அப்ரதிமைர்புவநேஷு தை: கலஹமாததிரேऽத விதண்டயா ।। 5

ஶப்தார்த்தௌ தோஷநிர்முக்தௌ ஸாலங்காரௌ குணோத்தரௌ ।
காவ்யமாதிஷ்டமாநேப்ய: கவிப்யோऽயம் க்ருதோऽஞ்ஜலி: ।। 6

ஆத்யம் ஹி ஶப்ததோஷாணாம் அஸாதுத்வம் மதம் ச வ: ।
ஸ்வரமப்ரத்ததாநாநாம் ஸ்வரூபே கேச ஸாதுதா ।। 7

---

*1711* கவிகளின் சரீரத்தைத்தரித்துக் கொண்டிருக்கின்ற அந்த கவிகள், பரமேச்வரனால் முன்கொண்டழைக்கப்பட்டு பொற்றாமரையில் ஸ்நானம் செய்துவிட்டு, மலைமகள் மணாளனான ஸுந்தரேசப் பெருமானை தரிசனம் செய்தனர். 3

*1712* நன்கு தேர்ச்சிபெற்ற மதிநுட்பத்துடன் கூடிய அந்தப் பெரியோர்கள், தமிழ் மொழியின் ஸூத்திரங்களை (தொல்காப்பிய ஸூத்திரங்கள்)ஆராயலாம் என்ற நோக்கத்துடன், அருமையான கருத்துக்கள் நிறம்பிய சொற்புஷ்பங்களால் மதுராதிபதியை வழிபட்டனர். 4

*1713* அங்கே. கவிதையே புனையத்தெரியாத பண்டிதச் செருக்குடையவர்கள் சிலர், தங்களைக் கவி என்று சொல்லிக்கொண்டு, இனிய ரஸமோ, கருத்தோ இல்லாத கடபுடா செய்யுள்களின் மூலம் அந்த நாற்பத்தெட்டு கவிகளையும் வம்புக்கு இழுத்தனர். வெகண்டையாகப் பேசினார்கள். 5

கவி அடுத்த ச்லோகம் முதல் சில ச்லோகங்களில் அவர்கள் செய்யும் விதண்டாவாதத்தைச் சித்தரிக்கிறார். அது எப்படி இருக்கும்? கேள்வியே அர்த்தமற்றதாகவும் குதற்கமாகவும் இருக்கும். உதாரணமாக 'கோவிலுக்கு கிழக்கே குளம், குளத்திற்கு மேற்கே கோவில்' என்பார்கள். 6

*1714* சொற்பிழையோ கருத்துப்பிழையோ இல்லாத, அலங்காரங்கள் நிறைந்த சொல்லோவியம் காவியம் எனப்படும். அதில் திரனுடைய கவி ச்ரேஷ்டர்களுக்கு வணக்கம். 7

काव्यार्थादपि किं दुष्टं कामिदश्चरितोत्तरात् ।
अत एव हि काव्यानाम् आलापः सद्भिरुज्झितः ॥ ८

अथान्य एव कल्प्यन्ते गुणदोषा निजेच्छया ।
काकदन्ताः परीक्ष्यन्तां गृह्यन्तां ग्राम्यसूक्तयः ॥ ९

तत्र तत्र च पुराणेषु तन्त्रेषु च यदि स्फुटम् ।
काव्यालापानुवादोऽस्ति का जिगीषा ततोऽपि वः ॥ १०

सर्वा वाचो वदन्तीति सप्ततन्तौ महाव्रते ।
ग्राम्योक्तयोऽपि किं शास्त्रे ऋत्वङ्गत्वेन नोदिताः ॥ ११

अयोग्यानां हि काव्यानाम् अग्निसेकादिवाक्यवत् ।
मूकतैव हि दुर्भेदा मुह्यन्त्येषु कथं जनाः ॥ १२

कथंचिद्यदि सार्थक्यं कथंचित्तैव दूषणम् ।
सफलः क्लेश इति च संप्रदायागतो भ्रमः ॥ १३

अक्लेशेन फलं लभ्ये न क्लेशो युक्तिमर्हति ।
यस्मै फलाय सा गौणी तदेव स्फुटमीर्यताम् ॥ १४

अर्थानपि व्याप्नुवती हतसर्वनियन्त्रणा ।
व्यञ्जना शब्दवृत्तिश्चेद्वेश्या पत्नी न किं भवेत् ॥ १५

---

*1715 காவியத்தில் இலக்கணப்பிழை இருக்கக்கூடாது என்று கூறுகிறீர்கள். வேதத்தில் பிழையுள்ள சொற்கள் உள்ளனவே! வேதங்களைக் காட்டிலும் உங்கள் காவியம் சிறந்ததோ! உங்களுக்கு ஸ்வரம் அறியாமல் சொல்லத் தெரியாது. பிறகு அல்லவா சப்தஸ்வரம் பற்றி பேச வேண்டும். 8*

*1716 வேதத்தைக் காட்டிலும் சிறந்ததோ காவியம்? அதில் என்ன இருக்கிறது? காமுகர்களின் சிற்றின்ப ரஸம் தானே! அது துச்சமல்லவா? ஆகவேதான் காவ்யாலாபாம்ஷ்டா வர்ஜயேத் என்று ஸ்ம்ருதிகள் கூறுகின்றன. 9*

*1717 காவியமாம் காவியம் உங்கள் இஷ்டப்படி இது நன்று, இது குற்றம் என்று கூறுகிறீர்கள். காக்கைக்கு எவ்வளவு பற்கள் என்று ஆராயலாமே! நாட்டுப்புற புலம்பல்களை எடுத்துக் கொள்கிறீர்கள். 10*

*1718 காவ்யாலாபாம்ஷ்டா வர்ஜயேத் என்று எங்குசொல்லியிருக்கிறது? பிரமாணம் இல்லை. மாறாக புராணங்களிலும், சில தந்திரசாஸ்திரங்களிலும் ஆங்காங்கே காவிய ஸூக்திகள் உதாரணமாகக் காண்கிறோம். அப்பதங்களை பிரமாணமாகக்காட்டி எங்களை ஜயித்துவிடலாம் என்று நினைக்காதீர்கள்.11*

*1719 நாட்டுப்புறத்தான் பாடல்கள் ப்ரமாணமாகுமா என்று கேட்கிறீர்கள்.*

காவ்யார்த்தாதபி கிம் துஷ்டம் காமிதுஸ்சரிதோத்தராத் ।
அத ஏவ ஹி காவ்யாநாம் ஆலாப: ஸத்பிருஜ்ஜித: ॥ 8
அதாந்ய ஏவ கல்ப்யந்தே குணதோஷா நிஜேச்சயா ।
காகதந்தா: பரீக்ஷ்யந்தாம் க்ருஹ்யந்தாம் க்ராம்யஸூக்தய: ॥ 9
தத்ர தத்ர புராணேஷு தந்த்ரேஷு ச யதி ஸ்புடம் ।
காவ்யாலாபாநுவாதோऽஸ்தி கா ஜிகீஷா ததோऽபி வ:॥ 10
ஸர்வா வாசோ வதந்தீதி ஸப்ததந்தௌ மஹாவ்ரதே ।
க்ராம்யோக்தயோऽபி கிம் ஶாஸ்த்ரே க்ரத்வங்கத்வேந நோதிதா: ॥ 11
அயோக்யாநாம் ஹி காவ்யாநாம் அக்நிஸேகாதிவாக்யவத் ।
மூகதைவ ஹி துர்பேதா முஹ்யந்த்யேஷு கதம் ஜநா: ॥ 12
கதஞ்சித்யதி ஸார்த்தக்யம் கதஞ்சித்தைவ தூஷணம் ।
ஸபல: க்லேஶ இதி ச ஸம்ப்ரதாயாகதோ ப்ரம: ॥ 13
அக்லேஶேந பலே லப்யே ந க்லேஶோ யுக்திமர்ஹதி ।
யஸ்மை பலாய ஸா கௌணீ ததேவ ஸ்புடமீர்யதாம் ॥ 14
அர்த்தாநபி வ்யாப்நுவதீ ஹதஸர்வநியந்த்ரணா ।
வ்யஞ்ஜநா ஶப்தவ்ருத்திஸ்சேத் வேஶ்யா பத்நீ ந கிம் பவேத் ॥ 15

---

தர்மத்தை எடுத்துக் காட்டுகிற நாட்டுப்புற பாடல்களும் ஏற்கத்தக்கவையே.
ஸப்த தந்து என்ற யாகத்தில், வேதாச்ரிதமாக நாட்டுப்புற பாடல் இருந்தால்
அதையும் சேர்த்துக்கொள்ளலாம் என்று வாக்யமே இருக்கிறது. 12

1720 ஒரு வேத வாக்கியம் ''அக்னினா ஸிஞ்ஸேத்'' நெருப்பினால்
அனையுங்கள் என்று கூறுகிறது. அபத்தமான அந்த கருத்தையும் காவியம்
என்று கூறலாமா? என்று கேட்டால் வாயை மூடிக்கொள்கிறீர்கள். மக்கள்
இப்படிப்பட்ட கருத்துக்களை புகழ்கிறார்கள். எப்படி? 13

1721 அவர் மஹாகவி. அவர் சொல்லியிருக்கிறார். அவர் இப்படிச்
சொன்னதற்கு அர்த்தம் கல்பிக்க வேண்டுமே தவிர ஒதுக்கக் கூடாது. ஒரு நல்ல
கவி அடுத்தடுத்து காவியம் எழுதுகிறார். அந்த காவியத்தில், துருவித் துருவி
ஏதாவது குற்றம் இருக்குமோ என்று தேடுகிறார்கள். வெளியூர்காரர்கள்
சொல்கிறார்கள் 'ஏதோ பாடுபட்டு (ஸபல:க்லேஸ) எழுதுகிறான்.
எப்படியாவது சரி கட்டலாம்' என்று கூறுவது குற்றம் தான். 14

1722 உள்ளூர்காரர்கள் சொல்லுகிறார்கள்,ஒரு காவியம் என்றால், படிக்கும்
போதே அதன் ரஸம் விளங்க வேண்டும். புதிதாக எதையோ சொல்லிவிட்டு
கண்டுபிடியுங்கள் பார்க்கலாம் என்று கூறுவது காவிய மரபு அல்ல. எதற்காக
அந்தப் புதிரை சொல்லுகிறீர்களோ அதை விளக்கமாக சொல்லுங்களேன். 15

धूमेन ध्वन्यतां बह्विश्चक्षुषा ध्वन्यतां घटः।
अर्थश्चेद्ध्वनयेदर्थं का प्रमाणव्यवस्थितिः॥ १६

दुःखदोऽपि तु काव्योक्तः सुखायार्थो भवेद्यदि।
सुखं भवन्तः शृण्वन्तु स्वनिन्दां कविभिः कृताम्॥ १७

अहो भावव्यक्तेः परिणतिरहो गूढरस इत्यलीकव्यामीलन् नयनविगल्द्बाष्प सालिलैः।
उदञ्चद्रोमाञ्चैरुदरलुलिताभैरिव मुहुः कथं व्याप्ता भूमिः कविभिरपटुज्ञानपशुभिः॥ १८

इति निगदितमेवाभीक्ष्णमावर्तयद्भिः प्रतिकथकवचांसासि क्वाप्यनाकर्णयद्भिः।
अपथचिरविनीतैर्बालिशैरात्तगन्धाः शरणमभिसमीयुश्चन्द्रचूडं कवीन्द्राः॥ १९

नान्धाश्चक्षुःसमेता न च खलु बधिरा आक्षिपन्तः परोक्तीः
नाप्येते नाथ ! मूका विफलमविरलं यत्तदुच्चैः स्वनन्तः।
तत्तत्सैद्धान्तिकोक्तीः अभिदधत इव क्वाप्यनाघ्रात तत्त्वा
दृश्यन्ते केचिदेते शिव शिव कुधियामेष सर्गोऽद्भुतस्ते ॥ २०

काव्यागमज्ञाः सुखमाक्षिपन्तु का तत्र चिन्ता भवतः प्रसादात्।
अहो वयं प्रव्यथिता अमीभिः काव्याध्वदुष्टश्वभिरेडमूकैः॥ २१

---

1723 ஒரு கட்டுப்பாடும் இல்லாமல் பல அர்த்தங்களை ஒரு காவியம் கூறுமானால்,அதற்கு மறைபொருள் ரஸம் என்றும்,வ்யஞ்ஜனா என்றும் பெயர் வைத்து பெருமைப்படுத்தினால், வேசியை படிதாண்டா பத்தினி என்று கூறுவது போல் ஆகும். 16

1724 ஓரிடத்தில் புகை இருந்தால், அங்கு நெருப்பு உண்டு என்று கண்களால் காணாமலேயே சொல்லலாம். கண்ணெதிரே ஒரு பானையைப் பார்த்து பானை என்றும் சொல்லலாம். இது நியாயம். சொல்லின் பொருளை மீறி அந்தப் பொருள் வேறொன்றைக் காட்டுமானால், சொல்லையும் பொருளையும் பிரிக்கமுடியாது என்ற நியதி என்ன ஆகும்? 17

1725 காவியத்தில் ஒரு துயரச்செய்தி நமது மனதை சோகத்தில் ஆழ்த்துகிறது. ஆனால் அதிலே ஒரு இன்பம் இருக்கிறதாம். அப்படியானால் ஒரு கவி மற்றோரு கவியை நிந்திக்கும் போது, நிந்திக்கப்பட்டவன் ஆஹா! என்று பரவசப்படட்டுமே! 18

1726 ஒரு கவி ஒரு சோகத்தைச் சொல்லுகிறான். கூட உட்கார்ந்திருப்பவன் பாதி சொல்லும் போதே 'ஆஹா,ஓஹோ! என்ன கருத்தழகு! மறைந்திருக்கும் அந்தக் கருத்தில் ரஸம் எப்படி மலர்கிறது?' என்றெல்லாம் புகழ்ந்து கண்களைச் சிமிட்டுகிறான். கண்களிருந்து ஜலம் பெருகுகிறது.

தூமேந த்வந்யதாம் வஹ்நிஶ்சக்ஷுஷா த்வந்யதாம் கட: ।
அர்த்தஶ்சேத் த்வநயேதர்த்தம் கா ப்ரமாணவ்யவஸ்திதி: ।। 16

து:கதோऽபி து காவ்யோக்த: ஸுகாயார்த்தோ பவேத்யதி ।
ஸுகம் பவந்த: ஶ்ருண்வந்து ஸ்வநிந்தாம் கவிபி: க்ருதாம் ।। 17

அஹோ பாவவ்யக்தே: பரிணதிரஹோ கூடரஸ
இத்யலீகவ்யாமீலந் நயநவிகலத்பாஷ்பஸலிலை: ।
உதஞ்சத்ரோமாஞ்சைருதரலுலிதாபைரிவ முஹு:
கதம் வ்யாப்தா பூமி: கவிபிரபடுஜ்ஞாநபஶுபி: ।। 18

இதி நிகதிதமேவாபீக்ஷ்ணம் ஆவர்த்தயத்பி:
ப்ரதிகதகவசாம்ஸி க்வாப்யநாகர்ணயத்பி: ।
அபதசிரவிநீதைர்பாலிஶைராத்தகந்தா:
ஶரணமபிஸமீயுஶ்சந்த்ரசூடம் கவீந்த்ரா: ।। 19

நாந்தாஶ்சக்ஷுஸ்ஸமேதா ந ச கலு பதிரா ஆக்ஷிபந்த: பரோக்தீ:
நாப்யேதே நாத! மூகா விபலமவிரலம் யத் ததுச்சை: ஸ்வநந்த: ।
தத்தத்ஸைத்தாந்திகோக்தீரபிததத இவ க்வாப்யநாக்ராத தத்வா
த்ருஶ்யந்தே கேசிதேதே ஶிவ ஶிவ குதியாமேஷ ஸர்கோऽத்புதஸ்தே ।।20

காவ்யாகமஜ்ஞா: ஸுகமாக்ஷிபந்து கா தத்ர சிந்தா பவத: ப்ரஸாதாத் ।
அஹோ வயம் ப்ரவ்யதிதா அமீபி: காவ்யாத்வதுஷ்டஶ்வபிரேடமூகை: ।। 21

---

மெய்ச்சிலிர்க்கிறது. வயிற்றை அளைவது போல முகம் கோணுகிறது. இப்படி ஒரு கூட்டம் ஞானசூன்யமாய் கோலாஹலம் செய்கிறது. 19

1727 இவ்வாறு சொன்னதையே சொல்லிக்கொண்டு, பக்கத்தில் உள்ளவன் சொல்வதையே காதில் விழாமல் செய்து கொண்டு, பொல்லாப்புக் கூறும் வழியிலேயே போய்க்கொண்டு, விஷமிகளால் புண்படுத்தப்பட்ட உள்ளத்துடன் அந்த நாற்பத்தெட்டு கவிகளும் சந்திரசேகரப்பெருமானை சரணமடைந்தார்கள். 20

1728 சிவபெருமானே! இவர்கள் குருடர்கள் அல்ல, நன்றாகப் பார்க்கத் தெரிந்தவர்கள். செவிடர்களும் அல்ல. சொல்பவர்கள் சொல்லி முடிக்கும் முன் அதை எதிர்கிறார்கள். இவர்கள் ஊமையும் அல்ல. பயனற்ற வாய்ச் சவுடால் அடித்துக் கொண்டு கூச்சலிடுகிறார்கள். மிகச்சிலர் தான். ஆனால் ஆர்பாட்டம் அதிகமாக இருக்கிறது. தமது மதத்தின் கொள்கையின் ஸித்தாந்தம் என்ன என்று அறியாமல், தத்துவம் சிறிதும் தெரியாமல் வாய்ப்பந்தல் போடுகிறார்கள். 21
இப்படி ஏனய்யா, பரமசிவா! படைத்தீர்கள்?

दन्तोल्लेखनखक्षतादिदायितव्यापारपारम्परी
निर्ग्लानापि हि कामिनी दिनमुखे निःसीममानन्दति ।
मार्जारी नखराङ्कुराखुदशनव्याविध्यमाना मनाक्
आयुर्वेदविदोऽभिगच्छति रुदत्यासन्नमृत्युर्यथा ॥ २२

तदलं तरुणेन्दुचूड ! नः परितापार्तिपरीक्षयाऽनया ।
परिवर्जय पण्डिताधमैः इदमैकाधिकरण्यमद्य नः ॥ २३

विज्ञापितः कविवरैरिति सुन्दरेशः स्मित्वा ददौ फलकरमेकमदृष्टपूर्वम् ।
यत्रासते कवय एव यथाभिलाषं अन्ये तु नाङ्घ्रिमपि विन्यासितुं क्षमन्ते ॥ २४

अध्यारूढाः पीठमीशात् अवाप्तं दुर्दर्शं तद्बुधियां दूरतोऽपि ।
अष्टाचत्वारिंशदाद्याः कवीन्द्राः चक्रुर्भक्तिं भूयसीं चन्द्रचूडे ॥ २५

वंशचूडामणिः पाण्ड्यो वंशशेखरतस्ततः ।
जज्ञे यत्र भुवं न्यस्य जज्ञौ स परमामृतम् ॥ २६

स तु कदाचन चंपककोरकैः परिचरन्प्रमथाधिपतिं मधौ ।
अजनि चंपकपाण्ड्य इति प्रथां अभिवहन्कविलोकशिखामणिः ॥ २७

*1729* காவிய முறை தெரிந்தவர்கள் நியாயமான வழியில், ஒரு கவியின் கருத்தை ஆக்ஷேபிக்கட்டும். அதில் நியாயம் இருந்தால் ஏற்றுக் கொள்வோம். கவலை இல்லை. தங்கள் அருள் உள்ளது. முடிவில் வெற்றி பெறுவோம். இரண்டும் கெட்டான்களான, காவிய முறையையே சிறிதும் அறியாத, போக்கிரி நாய்கள் அல்லவா இப்படி துன்புறுத்துகிறார்கள். 22

*1730* இரவில் கணவனுடன் உல்லாஸமாக இருக்கும்போது உடலில் ஏற்பட்ட பல்பதிவு, நகப்பதிவு, இவைகளினால் துன்பப்பட்டாலும் கணவனிடம் அன்புள்ள ஒரு பெண், பொழுது விடியும் போது கண்ணாடியில் தன் திருமேனியை, இரவில் கணவனுடன் உல்லாஸமாக இருந்தவள் பார்க்கிறாள். ஓர் இடத்தில் பல் பதிவு, மற்றொறு இடத்தில் நகப்பதிவு. அவற்றை இனிமையாகச் சுவைக்கிறாள். ஆனால் ஒரு முரடனிடம் அகப்பட்டுக் கொண்ட ஒரு பெண், ஒரு பெருச்சாளியினால் பற்களாலும், நகங்களாலும் குதரப்பட்டு ரத்தவிளாராக காணப்படும் பெண் பூனையைப் போல. தன் திருமேனியைப் பார்த்து, உயிர் போய்விடுமோ என்ற பயத்தில் ஒரு ஆயுர்வேத வைத்யனை நாடி ஓடுவாளே. அப்படி இருக்கிறது சிலர் அடிக்கும் கூத்து. 23

தந்தோல்லேகநகக்ஷதாதிதயிதவ்யாபாரபாரம்பரீ -
நிர்க்லாநாபி ஹி காமிநீ திநமுகே நிஸ்ஸீமமாநந்ததி ।
மார்ஜாரீ நகராங்குராகுதஶநவ்யாவித்த்யமாநா மநாக்
ஆயுர்வேதவிதோऽபிகச்சதி ருதத்யாஸந்நம்ருத்யுர்யதா ॥ 22

ததலம் தருணேந்துசூட! ந: ப: இதாபார்த்திபரீக்ஷயாऽநயா ।
பரிவர்ஜய பண்டிதாதமைரிதமைகாதிகரண்யமத்ய ந: ॥ 23

விஜ்ஞாபித: கவிவரைரிதி ஸுந்தரேஶ: ஸ்மித்வா ததௌ பலகமேகமத்ருஷ்டபூர்வம் ।
யத்ராஸதே கவய ஏவ யதாபிலாஷமந்யே து நாங்க்ரிமபி விந்யஸிதும் க்ஷமந்தே ॥ 24

அத்யாரூடா: பீடமீஶாத் அவாப்தம் துர்தர்ஶம் தத் துர்தியாம் தூரதோऽபி ।
அஷ்டாசத்வாரிம்ஶதாத்யா: கவீந்த்ராஶ் சக்ருர்பக்திம் பூயஸீம் சந்த்ரசூடே ॥ 25

வம்ஶசூடாமணி: பாண்ட்யோ வம்ஶஶேகரகஸ்தத: ।
ஜஜ்ஞே யத்ர புவம் ந்யஸ்ய ஜஜ்ஞௌ ஸ பரமாம்ருதம் ॥ 26

ஸ து கதாசந சம்பககோரகை: பரிசரன் ப்ரமதாதிபதிம் மதௌ ।
அஜநி சம்பகபாண்ட்ய இதி ப்ரதாம் அபிவஹன் கவிலோகஶிகாமணி: ॥ 27

---

1731 போதுமைய்யா சந்திரசூடனே! இந்த பரிதாப நிலையில் எங்களை ஆழ்த்தி சோதனை செய்தது போதும். இவர்களோடு ஒரு மஹாஸபையில் அமர்ந்து தத்துவவிசாரம் செய்யவேண்டிய துர்கதியிலிருந்து எங்களை மீட்பாயாக. 24

1732 இவ்வாறு ஸுந்தரேசப் பெருமானை அந்தக் கவிகள் வேண்டிக்கொண்டார்கள். ஸுந்தரேசப் பெருமான் அவர்கள் முன் தோன்றி ஒரு அதிசயப்பலகையைக் கொடுத்தார். சிறந்த கவிகளைத் தவிர வேறு எவரும் தங்கள் கால்களைக்கூட அதில் வைக்கமுடியாது. 25

1733 பரமேச்வரன் அருளிய அந்த அதிசயப் பலகையை வணங்கி அதன் மீது அக்கவிகள் அனைவரும் அமர்ந்தார்கள். கெட்ட புத்தியுள்ளவர்களுக்கு அது இருக்கும் இடம் கூடத்தெரியவில்லை. பிறகு அந்த நாற்பத்தெட்டு கவிகளுக்கும் ஸுந்தரேசப்பெருமானிடத்தில் பக்தி அதிகமாகியது. 26

## திருவிளையாடால் 52

## தருமிக்கு பொற்கிழி அளித்த படலம்.

1734 வம்சசேகரபாண்டியனுக்கு வம்சசூடாமணி என்ற பெயருடைய ஒருபுத்திரன் பிறந்தான். அவனிடத்தில் ராஜ்ய பாரத்தை ஒப்படைத்து விட்டு பரப்ரஹ்ம ஸ்வரூபத்தில் லயித்தான். 27

स कामिनीरत्नसहस्रभोगभाग्योन्नतश्चंपकपाण्ड्यदेवः ।
मासे मधौ मन्मथमारराध नवोढया नर्मपरो महिष्या ॥ २८

अपारयन्ती त्रपया गलन्तीं नीवीं नियन्तुं समुपेक्षितुं वा ।
पत्युर्मुखं नाभिपदं च बाला पर्यायतः केवलमालुलोके ॥ २९

आलिङ्गितुं चुम्बितुमन्ततस्तं स्प्रष्टुं समाभाषितुमीक्षितुं वा ।
नार्यै ददौ नावसरं कदाचित् व्रीडा सपत्नीव निबद्धवैरा ॥ ३०

आच्छाद्य बिम्बाधरमङ्गुलीभिः आबद्ध मुग्धाञ्जलिना करेण ।
मा मेति मन्दाक्षरमर्थितं यत् अतः किमस्या मधुरोऽधरोष्ठः ॥ ३१

एकत्र विस्रंभकथाविघातः पक्षोऽपरः शङ्कितुमेव नार्हः ।
कृच्छ्रे तदस्मिन्नधरं कृशाङ्ग्या गृह्णातु वा मुञ्चतु वा युवायम् ॥ ३२

दष्टाधरोष्ठा सुदृढं पुरैव पत्युः पुनर्चुम्बनलालसस्य ।
चाटून्सहस्रं शपथाञ्छतं च तन्वी विशश्वास न लेशतोऽपि ॥ ३३

आबद्धसप्ताष्टनिषङ्गमन्वगासंजितोर्द्वित्रकराङ्गुलित्रम् ।
आमर्दितैकद्विशरासमासीत् अन्यादृगूष्मायितमङ्गजस्य ॥ ३४

विन्यस्य गाढं भुजयोर्भुजौ सा मुखं मुखे वक्षसि चाापि बक्षः ।
आलिङ्गति स्म स्मरबाणवर्षात् आच्छादयन्तीव तनुं प्रियस्य ॥ ३५

---

*1735 வஸந்த ருதுவில் அவன் ஸுந்தரேசப் பெருமானை சம்பக மலர்களால் பூஜித்தான். அதனால் அவனை சம்பக பாண்டியன் என அழைத்தனர். அவன் ராஜசூடாமணியாக மட்டும் அல்லாமல், கவிகளில் சிறந்த கவிலோக சிகாமணியாகவும் விளங்கினான்.* 28

*1736 சம்பகபாண்டியனுக்கு ஆயிரம் மனைவிகள். அனைவரும் அழகிகள். அப்படி அவனுக்கு ஒரு பாக்கியம். அவன் ஒரு ஆண்டு சித்திரை மாதத்தில் 'காமன் பண்டிகை' கொண்டாடினான். அதற்கென புதிதாக ஒரு பெண்ணை மணந்து கொண்டு ரமித்தான்.* 29

*1737 அவன் அவளுடைய புடவையின் எக்கு முடிச்சைத் தளர்த்த, புடவை நழுவி விட்டது. வெட்கம் தாங்கவில்லை. அதைத் திருத்திக்கொள்ளவும் முடியவில்லை, தடுக்கவும் முடியவில்லை. கணவனின் முகத்தையும், தொப்புள் வட்டத்தையுமே மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.* 30

*1738 அவளுடைய வெட்கம் அவளுக்கே சக்களத்தியாகி, கணவனை அணைத்துக் கொள்ளவோ, முத்தம் கொடுக்கவோ, நெருங்கித் தொடக்கூடவோ, பேசுவதற்கோ, நிமிர்ந்து பார்ப்பதற்கோ, அவளுக்கு இடம் அளிக்கவில்லை.* 31

ஸ காமிநீரத்நஸஹஸ்ரபோகபாக்யோந்நதஶ்சம்பகபாண்ட்யதேவ: ।
மாஸே மதௌ மந்மதமாரராத நவோடயா நர்மபரோ மஹிஷ்யா ।। 28

அபாரயந்தீ த்ரபயா கலந்தீம் நீவீம் நியந்தும் ஸமுபேக்ஷிதும் வா ।
பத்யுர்முகம் நாபிபதம் ச பாலா பர்யாயத: கேவலமாலுலோகே ।। 29

ஆலிங்கிதும் சும்பிதுமந்ததஸ்தம் ஸ்ப்ரஷ்டும் ஸமாபாஷிதுமீக்ஷிதும் வா ।
நார்யை ததௌ நாவஸரம் கதாசித் வ்ரீடா ஸபத்நீவ நிபத்தவைரா ।। 30

ஆச்சாத்ய பிம்பாதரமங்குலீபிராபத்தமுக்தாஞ்ஜலிநா கரேண ।
மா மேதி மந்தாக்ஷரமர்திதம் யதத: கிமஸ்யா மதுரோऽதரோஷ்ட: ।। 31

ஏகத்ர விஸ்ரம்பகதாவிகாத: பக்ஷோऽபர: ஶங்கிதுமேவ நார்ஹ: ।
க்ருச்ச்ரே ததஸ்மிந்நதரம் க்ருஶாங்க்யா க்ருஹ்ணாது வா முஞ்சது வா யுவாயம்।। 32

தஷ்டாதரோஷ்டா ஸூத்ருடம் புரைவ பத்யு: புநஶ்சும்பநலாலஸஸ்ய ।
சாடூஸஹஸ்ரம் ஶபதாஞ்சதம் ச தந்வீ விஶஶ்வாஸ ந லேஶதோऽபி ।। 33

ஆபத்தஸப்தாஷ்டநிஷங்கமந்வகாஸஞ்ஜிதத்வித்ரகராங்குலித்ரம் ।
ஆமர்திதைகத்வஶராஸமாஸீத் அந்யாத்ருகூஷ்மாயிதமங்கஜஸ்ய ।। 34

விந்யஸ்ய காடம் புஜயோர்புஜௌ ஸா முகம் முகே வக்ஷஸி சாபி வக்ஷ: ।
ஆலிங்கதி ஸ்ம ஸ்மரபாணவர்ஷாத் ஆச்சாதயந்தீவ தநும் ப்ரியஸ்ய ।। 35

---

1739 கோவைப்பழம் போல் உள்ள தன் உதடுகளை விரல்களினால்
மூடிக்கொண்டாள். வெட்கத்துடன் கை கூப்பி வேண்டாம்,வேண்டாம் என்று
மெல்ல வேண்டுகிறாளே. அதைக்காட்டிலும் இனியதா அவளுடைய கீழ் உதடு? 32

1740 அவள் என்ன கேட்டாள்? பாவம்! வேண்டாமென சற்று
சுணங்கினாளே தவிர. கணவனைத் தடை செய்வதில் அவளுக்கு
இஷ்டமில்லை. ஆகவே திடமாகத் தடுக்கவில்லை. ஒதுக்கிவிடுவானோ
அப்படி நினைக்கக்கூட இஷ்டமில்லை. இந்த சங்கடமான நேரத்தில் கணவன்
உதட்டைப் பருகினாலும் சரி, விட்டு விட்டாலும் சரி என்று வாளா 33
இருந்துவிட்டாள்.

1741 கணவன் அவளுடைய உதடுகளில் இறுக்க முத்தமிட்டு விட்டான்.
ஆயிரம் கொஞ்சல்களாலும், ‘மறுபடியும் கேட்க மாட்டேன்’ என்ற நூறு
சபதங்களுடனும் மறுபடியும் முத்தமிட முயன்றான். ஆனால் அந்த 34
மின்னிடையாள் சிறிது கூட அந்த சபதங்களை நம்பவில்லை.

1742 மன்மதன் இடையில். புகுந்து அவர்களுக்கு உற்சாகமளிக்க
முனைந்தான். தன் தோளில் ஏழெட்டு அம்பராத்துணி, அவற்றில் மலரம்புகள்,
விரல்களில் தற்காப்புக்காக பூண்கள் அணிந்து கொண்டான். ஓரிரண்டு
பாணங்களை நாண் ஏற்றிக் கொண்டான். விரைத்துப்போன விரல்களுக்கு 35
சூடேற்றிக்கொண்டான்.

सकृन्नखाग्रोल्लिखतः कचौघः श्लथाश्लथं संयमिता च नीवी।
सा चाङ्गयष्टिर्मृदिता तरुण्याः सत्यं मुनीनामपि मोहहेतुः॥ ३६

एकाकिनीं तामपहाय लज्जा याता पुरा यत्किल मारयुद्धे।
ततोऽपराधादिव तामुपेतां पुरेव तन्वी न पुरश्चकार ॥ ३७

सा गन्तुमैच्छच्छयितुं स काल्ये साधत्त संव्यानमयं जहार।
सा नीविमामुञ्चदयं व्यमुञ्चत् भावेऽपि तुल्ये बिभिदे क्रियाभिः॥ ३८

ससर्ज तस्यां कियतो विलासांन् चक्रे कथं नाम निशां त्रियामाम्।
शृङ्गाररसारं कलयाऽपि वेधाः किं वेद वेदाक्षरजीर्णकोशः॥ ३९

अनन्यजे वर्षति काममित्थं अपव्यवस्थं शरमण्डलानि।
आदिर्निशादिः सुरतस्य यूनोः अन्तो निशान्तोऽपि च पर्यणंसीत्॥ ४०

स जातु प्रासादे शयनमधिगच्छन्क्षितिपतिः
समाजघ्रौ गन्धं कुसुमकुलदुष्प्रापमतुलम्।
महिष्याः पद्मिन्या मलयपवमानैरुपहृतं
प्रसूतं केशान्तात्प्रशिथिलदृढग्रन्थिशिथिलात्॥ ४१

पद्मसौरभ्य जातीयं पद्मिनीकेशसंभवम्।
अनाघ्रातचरं गन्धमवासासीत् स तं नृपः॥ ४२

---

*1743* பிரியனுக்கு வருகின்ற மன்மதனுடைய தாக்குதலை தடுக்கவேண்டுமென்று அவள் நினைத்தாள். தன்னுடைய புஜங்களால் பிரியனுடைய புஜங்களை இறுக்க அணைத்துக் கொண்டாள். முகத்தினால் அவனுடைய முகத்தை புதைத்துக் கொண்டாள். மார்பகத்தினால் பிரியனுடைய மார்பை மூடிக்கொண்டாள். அப்படி ஒரு இறுக்கமான ஆலிங்கனம். 36

1744 சுருள் சுருளான முடிகளை அவள் கோதிவிட்டுக் கொண்டாள். தன் திருமேனியை ஒருதரம் பிடித்துவிட்டுக் கொண்டாள். நழுவி நழுவி விழுகின்ற எக்கு முடிச்சை இறுக்கிக்கொண்டாள். பார்த்தவர்கள் மஹாமுனிவர்களாகத்தான் இருக்கட்டுமே. அவர்களுடைய உள்ளங்கள் கிளுகிளுக்கத்தான் செய்யும். 37

1745 அவள் தனியாகத்தான் இருந்தாள். வெட்கம் அகன்றது, காமப்போர் நிகழ்ந்தது. தவறு செய்து விட்டோம் என்று வெட்கம் திரும்பியது. அதை லட்சியப்படுத்தவில்லை. வெட்கம் மறைந்தது. 38

1746 பொழுது விடியும் நேரத்தில் அவள் படுக்கையை விட்டு வெளியே போகலாம் என்று நினைத்தாள். அவன் அவளுடைய சேலைத்தலைப்பினைப்

ஸக்ருந்நகாக்ரோல்லிகத: கசௌக: ஶ்லதாஶ்லதம் ஸம்யமிதா ச நீவீ ।
ஸா சாங்கயஷ்டிர்முதிதா தருண்யா: ஸத்யம் முநீநாநாமபி மோஹஹேது:॥ 36
ஏகாகிநீம் தாமபஹாய லஜ்ஜா யாதா புரா யத் கில மாரயுத்தே ।
ததோऽபராதாதிவ தாமுபேதாம் புரேவ தந்வீ ந புரஶ்சகார ॥ 37
ஸா கந்துமைச்சச்சயிதும் ஸ கால்யே ஸாதத்த ஸம்வ்யாநமயம் ஜஹார ।
ஸா நீவிமாமுஞ்சதயம் வ்யமுஞ்சத் பாவேऽபி துல்யே விபிதே க்ரியாபி: ॥38
ஸஸர்ஜ தஸ்யாம் கியதோ விலாஸான் சக்ரே கதம் நாம நிஶாம் த்ரியாமாம் ।
ஶ்ருங்காரஸாரம் கலயாபி வேதா: கிம் வேத வேதாக்ஷரஜீர்ணகோஶ: ॥39
அநந்யஜே வர்ஷதி காமமித்தம் அபவ்யவஸ்தம் ஶரமண்டலாநி ।
ஆதிர்நிஶாதி: ஸூரதஸ்ய யூநோரந்தோ நிஶாந்தோऽபி ச பர்யணம்ஸீத் ॥ 40
ஸ ஜாது ப்ராஸாதே ஶயநமதிகச்சன் க்ஷிதிபதி:
ஸமாஜக்ரௌ கந்தம் குஸுமகுலதுஷ்ப்ராபமதுலம் ।
மஹிஷ்யா: பத்மிந்யா மலயபவமாநை: உபஹ்ருதம்
ப்ரஸூதம் கேஶாந்தாத் ப்ரஶிதிலத்ருடக்ரந்திஶிதிலாத் ॥ 41
பத்மஸௌரப்யஜாதீயம் பத்மிநீகேஶஸம்பவம் ।
அநாக்ராதசரம் கந்தம் அவாஸாஸீத் ஸ தம் ந்ருப: ॥ 42

---

பிடித்து இழுத்தான். அவள் எக்கு முடிச்சை இறுக்கினாள். அவன்
தளர்த்தினான். இருவருக்கும் மனது (காமத்துடிப்பு) ஒரே விதம் தான். ஆனால் 39
செயல் தான் மாறுபட்டது.

1747 ப்ரஹ்மதேவன் வேதங்களை உருப்போட்டு கிழமாகி விட்டான்.
அவருக்குச் ச்ருங்காரஸம் ஒரு துளியாவது தெரியுமா? பிறக்கும்போதே உலகில்
பகலை நான்கு யாமமாகப் படைத்தார். இரவை மூன்று யாமங்களில் 40
முடித்துவிட்டார்.

1748 மன்மதன் இவ்வாறு தூண்டிவிடும்போது அவனுடைய பாணங்கள்
தாறுமாறாக அவனைத் தாக்கின. இரவு கூடினதும் எப்படி அவளுடன்
லீலைகளைப் புரியலாம் என்று கற்பனை செய்து கொண்டிருந்தான். அதுவே
இன்னும் முடியவில்லை. அந்த கற்பனை ஒரு முடிவுக்கு வந்தபோது இரவும் 41
முடிவுக்கு வந்துவிட்டது.

1749 அவன் ஒரு சமயம் அந்தப்புரத்திற்குள் பிரவேசித்தான். ஒரு நறுமணம்.
இதற்கு முன் நுகராத நறுமணம் அது! அந்த நறுமணம் எங்கிருந்து வருகிறது
என்று ஆராய்ந்தான். அவன் பக்கத்தில் சயனித்திருந்த ராணியின் பின்னல்
சிக்கல் அவிழ்ந்து அதிலிருந்து ஏற்பட்ட மணம். மலயமலைக் காற்றினால் 42
கொண்டுவரப்பட்டு அவன் மூக்கில் நுழைந்தது.

मनोगतं मे कवयत्यवेत्य यः स एतदग्र्यं लभतां सुधीरिति ।
अलम्बयद्द्वारि सुवर्णमुद्रिकासहस्रमाबध्य स पाण्ड्यभूपतिः ॥ ४३

उच्चावचाभिरपि भङ्गिभिरुल्लिखन्तो नाद्राक्षुरस्य हृदयं कवयो महान्तः ।
आसाद्य कश्चन वटुः पुनरादिशैवः पद्यं प्रभोरधिसभं पठति स्म हृद्यम् ॥ ४४

तस्मै किलार्थितवते सुचिरं प्रसाद्य दारक्रियार्थम् अधनाय धनं समग्रम् ।
पद्यं ददौ नृपतिभावनिबन्धहृद्यं आर्यामयं तदखिलाशयविन्महेशः ॥ ४५

जानासि पुष्पगन्धान् भ्रमर त्वं ब्रूहि तत्वतो मेऽद्य ।
देव्याः केशकलापे तुल्यो गन्धेन किं गन्धः ॥ ४६

इति तावदिमाम् आर्यां इन्दुकलाभरणवदननिर्गलिताम् ।
पठति द्विजे सभायां प्रभोरभूद्विस्मयो भूयान् ॥ ४६

तदनुज्ञया सं वर्णी तत्कनकं सदसि यावदादत्ते ।
तावत्तदसहमानः प्रत्यवतस्थे कविः कीरः ॥ ४८

अपरिष्कृते प्रसूनैः अस्ति कचेऽपि किमसृङ्माले गन्धः ।
किं चिन्तितम् अवनिभृता किं दृष्टं धीमता भवता ॥ ४९

इति तस्य दुराक्षेपादप्रतिभे ब्रह्मचारिणि स्तब्धे ।
प्रादुर्भूयाह हरः कविवेषधरः पुरस्तेषाम् ॥ ५०

---

1750 தாமரையின் நறுமணம். பத்மினீஜாதி நாயகியின் கூந்தலிலிருந்து அல்லவா வருகிறது. இதைப்போல் இதற்கு முன்பு நுகர்ந்ததே இல்லை. அதை நுகர்ந்தான் அரசன். 43

1751 அரசன் அரண்மனை வாயிலில், ஆயிரம் பொற்காசுகள் நிரம்பிய ஒரு துணிக்கிழியைத் தொங்கவிட்டான். எந்த மதிநுட்பம் மிகுந்த கவி என் மனதில் உள்ளதை ஊஹித்து கவி புனைகிறானோ அவனுக்கு இந்த முடிப்பு என்று பறை சாற்றினான். 44

1752 சிறந்த கவிகள் பலர் கவிதை புனைந்தனர். அவைகளில் சில சிறந்து விளங்கின. சில அசடு வழிந்தன. ஆனால் அவர்களால் அரசனுடைய உள்ளக்கருத்தை வெளியிட முடியவில்லை. ஓரத்தில் ஒதுங்கி உட்கார்ந்திருந்த ஒரு ப்ரஹ்மச்சாரி பையன் எழுந்தான். ஒரு பாடலை சபையினர் இடையே படித்தான். 45

1753 அந்த ப்ரஹ்மசாரி ஸுந்தரேசப்பெருமானை அடிபணிந்து வேண்டிக் கொண்டிருந்தான். ‘‘ஐய்யனே! பெண்ணைத் திருமணம் செய்து தர வேண்டும். என் கையில் ஒரு செப்புக் காசும் கிடையாது. அருள் செய்

மநோகதம் மே கவயத்யவேத்ய ய: ஸ ஏததக்ர்யம் லபதாம் ஸுதீரிதி ।
அலம்பயத் த்வாரி ஸுவர்ணமுத்ரிகா ஸஹஸ்ரமாபத்ய ஸ பாண்ட்யபூபதி: ॥ 43

உச்சாவசாபிரபி பங்க்திபிருல்லிகந்தோ நாத்ராக்ஷுரம்ய ஹ்ருதயம் கவயோ மஹாந்த: ।
ஆஸாத்ய கஶ்சந வடு: புநராதிஶைவ: பத்யம் ப்ரபோ:அதிஸபம் படதி ஸ்ம ஹ்ருத்யம் ॥ 44

தஸ்மை கிலார்த்திதவதே ஸுசிரம் ப்ரஸாத்ய தாரக்ரியார்த்தமதநாய தநம் ஸமக்ரம் ।
பத்யம் ததௌ ந்ருபதிபாவநிபந்தஹ்ருத்யம் ஆர்யாமயம் ததகிலாஶயவிந்மஹேஶ: ॥ 45

ஜாநாஸி புஷ்பகந்தாந ப்ரமர ! த்வம் ப்ரூஹி தத்வதோ மேऽத்ய ।
தேவ்யா: கேஶகலாபே துல்யோ கந்தேந கிம் கந்த: ॥ 46

இதி தாவதிமாம் ஆர்யாம் இந்துகலாபரணவதந நிர்கலிதாம் ।
படதி த்விஜே ஸபாயாம் ப்ரபோரபூத் விஸ்மயோ பூயான் ॥ 47

ததநுஜ்ஞயா ஸ வர்ணீ தத் கநகம் ஸதஸி யாவதாதத்தே ।
தாவத் ததஸஹமாந: ப்ரத்யவதஸ்தே கவி: கீர: ॥ 48

அபரிஷ்க்ருதே ப்ரஸூநைரஸ்தி கசேऽபி கிமஸ்ருங்மாலே கந்த: ।
கிம் சிந்திதம் அவநிப்ருதா கிம் த்ருஷ்டம் தீமதா பவதா ॥ 49

இதி தஸ்ய துராக்ஷேபாதப்ரதிபே ப்ரஹ்மசாரிணி ஸ்தப்தே ।
ப்ராதுர்பூயாஹ ஹர: கவிவேஷதர: புரஸ்தேஷாம் ॥ 50

---

*அப்பனே!'' என்று வேண்டிக் கொண்டிருந்தான். அரசனின் எண்ணத்தையும்*
*அந்த ப்ரஹ்மச்சாரியின் விருப்பத்தையும் பலனளிக்குமாறு அந்தக்*
*கவியினிடம், ஸுந்தரேசப் பெருமான் ஒரு பாடல் எழுதிய மடலை அவன்* 46
*மீது வீசினார். ஆர்யா விருத்தத்தில் அமைந்த அந்த பாடல் வருமாறு.*

*1754 வண்டே! நீ பல மலர்களின் நறுமணத்தை நுகர்ந்திருக்கிறாயே.*
*தேவியின் கூந்தலில் நறுமணம் மலர்கிறதே. அது போல எந்த மலரிலாவது* 47
*உள்ளதா?*

*1755 ஸுந்தரேசப்பெருமான் முகக்கமலத்திலிருந்து வந்த அந்தக்*
*கவிதையை, ஸபையில் அந்தப் பிராமணன் படித்தபோது அரசன் மிகவும்* 48
*ஆச்சரியம் அடைந்தான்.*

*1756 அரசனின் அனுமதி பெற்று அப் ப்ருஹ்மச்சாரி. அந்தப் பொற்கிழியை*
*கைப்பற்ற முனைந்த போது, அதைப் பொறுக்காத கீரன் என்ற பெயருடைய* 49
*கவிஞன் அதை ஆக்ஷேபித்தான்.*

*1757 அரசே! இதென்ன விந்தை? வாராமலே, கலைந்திருக்கிற பெண்ணின்*
*கூந்தல், வியர்வை நாற்றம் அடிக்கும். அதில் நறுமணம் இருக்குமா?* 50
*பார்த்திருக்கிறீர்களா? சிந்தித்திருக்கிறீர்களா?*

केन कुधिया सभायामन्तेवासी ममायमाक्षिप्तः ।
प्रकृतिः स पद्मिन्याः पङ्कजगन्धः शरीरे यः ॥ ५१

पार्थिवकुसुमविहीने भवति शचीकुन्तले कथं गन्धः ।
कः शङ्कितोऽप्युपाधिः क्रमत्ते कबरीपरीमले गौर्याः ॥ ५२

कार्मणमलात्ममूर्तिषु घटते यदि पार्थिवेषु सौरभ्यम् ।
किमिव खलु पद्मिनीनाम् अपकृतमसृजामलैः केशैः ॥ ५३

इति विजित्य समुद्धतमुद्धतैः कविवरे परिगर्जति भाषितैः ।
अलभत द्रविणं स वटुर्झटित्यवनिपोऽप्यवरोधगृहं ययौ ॥ ५४

कविष्वेकीभूय स्वयमपि हरः संघिषु चरन्
कथाः कुर्वन्हृद्याः स्वयमपि वसन्संघफलके ।
वृतस्तैः स्वामित्वे विविधरचनाभिर्भणितिभिः
कदाचिद्गौरीशः कलहमभजत्कीरकविना ॥ ५५

अविश्रान्ते स कीरेऽस्मिन्नाक्षेपाभासदुर्ग्रहात् ।
प्रादर्शयत्वम् आत्मानं पञ्चवक्रं त्रिलोचनम् ॥ ५६

भक्तोऽपि कीरः परमाद्भुतं तत् पश्यन्नपि प्रत्युत दुर्बभाषे ।
मोढ्यात्रिरूढादपि पामराणां मौढ्यं चिदाभासगतं गरीयः ॥ ५७

चतसृष्वपि दिक्षु पश्यता चतुरेणापि महेश्वर त्वया ।
कविकर्माणि नैक्षि दूषणं कथमुद्भावितमप्यहो मुहुः ॥ ५८

---

1758 ப்ரஹ்மச்சாரி, அந்த கவியினுடைய தகாத ஆக்ஷேபத்தைக் கேட்டு திடுக்கிட்டு நின்றான்.. ஸுந்தரேசப் பெருமான் . ஒரு கவி வேஷத்தில் அங்கே தோன்றி கூறினார். 51

1759 என்னுடைய சீடன் சொல்லை மறுத்துப் பேசின அறிவிலி யாரவன்? பத்மினி ஜாதிப் பெண்களிடம் எப்பொழுதும் தாமரை மணம் வீசும். அது அவர்களுடைய இயற்கை. 52

1760 மண்ணில் விளைந்த மலர்களை சூடாவிட்டாலும், இந்திராணியான சசீ தேவியின் கூந்தலில் நறுமணம் வீசும். கௌரியின் கூந்தலில் இயல்பாக இருக்கும் நறுமணத்திற்கு காரணப் பொருள் சொல்ல முடியாது. 53

1761 சாணியும் எருவும் போட்டு வளர்த்த செடியில் பூத்த மல்லிகை போன்ற மலர்களுக்கு நறுமணம் உண்டானால், பத்மினீ ஜாதி ஸ்த்ரீயிடம் எரு போட்டு வளர்க்காத கூந்தல் நறுமணம் இருப்பதில் தடை என்ன? அது என்ன குற்றம் செய்தது? 54

1762 இவ்வாறு கவி, எதிர்கோஷம் போடுகின்ற அந்தக் கீரப்புலவனை கடுமையான வாதத்தினால் வென்றவுடன், ப்ரஹ்மச்சாரி கவி தைரியமாக

கேந குதியா ஸபாயாம் அந்தேவாஸீ மமாயமாக்ஷிப்த: ।
ப்ரக்ருதி: ஸா பத்மிந்யா: பங்கஜகந்த: ஶரீரே ய: ॥ 51

பார்திவகுஸுமவிஹீநே பவதி ஶசீகுந்தலே கதம் கந்த: ।
க: ஶங்கிதோऽப்யுபாதி: க்ரமதே கபரீபரீமலே கௌர்யா: ॥ 52

கார்மணமலாத்மமூர்த்திஷு கடதே யதி பார்த்திவேஷு ஸௌரப்யம் ।
கிமிவ கலு பத்மிநீநாம் அபக்ருதமஸ்ருஜாமலை: கேஶை: ॥ 53

இதி விஜித்ய தமுத்ததமுத்ததை: கவிவரே பரிகர்ஜதி பாஷிதை: ।
அலபத த்ரவிணம் ஸ வடுர்ஜடித்யவநிபோऽப்யவரோதக்ருஹம் யயௌ ॥ 54

கவிஷ்வேகீபூய ஸ்வயமபி ஹர: ஸங்கிஷு சரன்
  கதா: குர்வன் ஹ்ருத்யா: ஸ்வயமபி வஸந் ஸங்கபலகே ।
வ்ருதஸ்தை: ஸ்வாமித்வே விவிதரஸநாபிர்பணிதிபி:
  கதாசித் கௌரீஶ: கலஹமபஜத் கீரகவிநா ॥ 55

அவிஶ்ராந்தே ஸ கீரேऽஸ்மின் நாக்ஷேபாபாஸதுர்க்ரஹாத் ।
ப்ராதர்ஶயத் ஸ்வமாத்மாநம் பஞ்சவக்ரம் த்ரிலோசநம் ॥ 56

பக்தோऽபி கீர: பரமாத்புதம் தத் பஶ்யந்நபி ப்ரத்யுத துர்பபாஷே ।
மௌட்யாந்நிரூடாதபி பாமராணாம் மௌட்யம் சிதாபாஸகதம் கரீய: ॥57

சதஸ்ருஷ்வபி திக்ஷு பஶ்யதா சதுரேணாபி மஹேஶ்வர த்வயா ।
கவிகர்மாண நைக்ஷி தூஷணம் கதமுத்பாவிதம் அப்யஹோ முஹு: ॥ 58

---

பொற்கிழியை எடுத்துக்கொண்டு கம்பீரமாக நடந்து சென்றான். அரசனும்
55
அந்தப்புரம் சென்றான்.

## திருவிளையாடல் 53

## கீரனை கரையேற்றிய படலம்

அந்த திவ்யமான சங்கப்பலகையில்
1763 கௌரீசன், கவிகளுள் ஒருவராக அந்த திவ்யமான சங்கப்பலகையில் படித்துக்கொண்டு
தானும் அமர்ந்துகொண்டு, இனிமையான கவிதைகளைப் படித்துக்கொண்டு
மகிழ்ச்சியுடன் இருந்தார். சங்கப்புலவர்கள் அவரைத் தலைவராகத்
தேர்ந்தெடுத்தார்கள். ஒரு சமயம் அவருடன் கவி கீரன் ஒரு வாதத்தை எழுப்பி
56
அவருடன் கலஹத்தில் ஈடுபட்டான்.

தன்னுடைய ஆக்ஷேபங்களில் அந்த கீரப்புலவன் பிடிவாதமாக இருந்த
1764 தன்னுடைய ஆக்ஷேபங்களில் அந்த கீரப்புலவன் பிடிவாதமாக இருந்த பொழுது, ஈசன் தன்னுடைய உண்மை உருவமான ஐந்து முகம், மூன்று
57
கண்களுடன் காட்சி அளித்தார்.

1765 கீரனும் பரமேச்வரனின் மஹாபக்தன் தான். அந்த அத்புதத்தை நேரில்
கண்டும் கூட வேண்டுமென்றே விதண்டாவாதம் செய்தான். ஸாதாரண முட்டாள்
விஷயத்தை விளக்கினால் 'சரி' என்று ஏற்றுக் கொள்வார்கள். படித்த முட்டாள்கள்
கோணல் கட்சி பிடித்து, தன் அறிவே திடமானது என்று சாதிப்பார்கள். 58

भावत्क्यः कृतयः श्रतिः श्रुतिरिति प्रौढिं परां प्रापिता
अध्याहारविपर्यय प्रकरणोत्कर्षानुषङ्गादिभिः।
तात्पर्यान्तरवर्णनेन च समर्थ्यन्त यदस्माद्दृशैः
तज्जानन्कवितासु नः पशुपते दोषेक्षिकां मा कृथाः ॥

ईश त्वमसि ननु ध्रुवमीशानः सर्वविद्यानाम्
कीरकृते त्वाक्षेपे कीरवत् अनुभाषणं ज्यायः ॥ ६०

ज्ञानाज्ञानव्यतिकरपरीणामम् ईशोऽस्य पश्यन्
भक्ताज्ञानप्रशमम् अकृतं चिन्तयित्वा स्वमागः।
कालेनास्य स्मृतिकलुषतामुद्दिधीर्षुस्तरोभूत्
एतावन्तो यदि हि न गुणाः कः स नश्चन्द्रचूडः ॥ ६१

शिवातिवादप्रभवेन पाप्मना स तापितो दुर्विषहेण दुर्मतिः।
पपात गाङ्गेयपयोजिनीजले तदेव जानन्नभिषज्यभेषजम् ॥ ६२

नित्याधमर्णस्य सकृत्प्रणत्या नीपाटवीसंनिहितस्य धाम्नः।
कारुण्यतः संजनितानु तापः तुष्टाव कीरः तुहिनांशुचूडम् ॥ ६३

अपि प्रणेता निगमागमानाम् आद्यः कविस्तस्य तुतोष सद्यः।
विज्ञानखद्योतविजृम्भिताभिः वाग्भिः स लुभ्यन्गुणगन्धतोऽपि ॥ ६४

---

*1766 பரமேச்வர! திசை எங்கும் பார்க்கும் திறன் உள்ள தாங்கள், காவியத்தில் உள்ள குற்றத்தை மறுபடியும், மறுபடியும் எடுத்துக்காட்டியும் கூட ஏன் கண்டு கொள்ள மறுக்கிறீர்கள். 59*

*1767 ஐயா, பரமேச்வர!! உன்னுடைய கவிதைககளை எல்லாம் 'ச்ருதி' - வேதம் என்று உயர் நிலையில் வைத்து செயல்படுகிறீர்கள். ஒரு ஸூக்தமாவது நேரான பொருளுடன் காணப்படவில்லை. ஒன்றுக்கு இதை சேர்த்துக் கொள்ள வேண்டும் என்கிறீர்கள், ஒன்றுக்கு விபரீதமான பொருள் கூறுகிறீர்கள். வேறு இடத்தில் உள்ளதை இங்கு சேர்த்துக் கொள்ள வேண்டும் என்கிறீர்கள், உண்மைக்குப் பொருந்தாத வாக்கியங்கள் வரும் போது தோன்றியபடி துணைச் சொற்கள் சேர்த்து தாத்பர்யம் கூறுகிறீர்கள். நீங்கள் பிறர் மீது குற்றம் குறை கூறாதீர்கள். கவிகளின் கவிதைகளில் குற்றக் கண்களுடன் பார்காதீர்கள். (இதைத்தான் தீக்ஷிதர் விதண்டாவாதம் என்கிறார்) 60*

*1768 ஸகல வித்யைகளுக்கும் பொறுப்புள்ளவர் தாங்கள் ஈசான: ஸர்வ வித்யானாம் ஈஸ்வர: ஸர்வ பூதானாம் அதற்கேற்ப கீரன் சொன்ன மறுப்பிற்கு கிளியைப்போல் திருப்பிச்சொல்வது தான் நன்று. 61*

பாவத்க்ய: க்ருதய: ஶ்ருதி: ஶ்ருதிரிதி ப்ரௌடிம் பராம் ப்ராபிதா
அத்யாஹாரவிபர்யய ப்ரகரணோத்கர்ஷாநுஷங்காதிபி: ।
தாத்பர்யாந்தரவர்ணநேந ச ஸமர்த்யந்தே யதஸ்மாத்ருஶை -
ஸ்தஜ்ஜாநன் கவிதாஸு ந: பஶுபதே ! தோஷேக்ஷிகாம் மா க்ருதா: ॥ 59

ஈஶ ! த்வமஸி நநு த்ருவமீஶாந: ஸர்வவித்யாநாம் ।
கீரக்ருதே த்வாக்ஷேபே கீரவதநுபாஷணம் ஜ்யாய: ॥ 60

ஜ்ஞாநாஜ்ஞாநவ்யதிகரபரீணாமம் ஈஶோऽஸ்ய பஶ்யன்
பக்தாஜ்ஞாநப்ரஶமமக்ருதம் சிந்தயித்வா ஸ்வமாக: ।
காலேநாஸ்ய ஸ்ம்ருதிகலுஷதாமுத்திஷுர்புஸ்திரோऽபூத்
ஏதாவந்தோ யதி ஹி ந குணா: க: ஸ நஶ்சந்த்ரசூட: ॥ 61

ஶிவாதிவாதப்ரபவேந பாப்மநா ஸ தாபிதோ துர்விஷஹேண துர்மதி: ।
பபாத காங்கேயபயோஜிநீஜலே ததேவ ஜாநன் அபிஷஜ்யபேஷஜம் ॥62

நித்யாதமர்ணஸ்ய ஸக்ருத்ப்ரணத்யா நீபாடவீஸந்நிஹிதஸ்ய தாம்ந: ।
காருண்யத: ஸஞ்ஜநிதாநுதாப: துஷ்டாவ கீரஸ்துஹிநாம்ஶுசூடம் ॥ 63

அபி ப்ரணேதா நிகமாகமாநாமாத்ய: கவிஸ்தஸ்ய துதோஷ ஸத்ய: ।
விஜ்ஞாநகத்யோதவிஜ்ரும்பிதாபிர்வாக்பி: ஸ லுப்யன் குணகந்ததோऽபி ॥ 64

---

*1769* ஈசன் ஆலோசித்தார். 'ஞானமும் அஞ்ஞானமும் கலந்திருப்பதினால்
வந்த விளைவு இது. பக்தனின் அஞ்ஞானத்தை அகற்றாமல் வைத்திருந்தது
நமது குற்றம் தான். காலப்போக்கில் இவனுடைய புத்தியில் உள்ள அழுக்கை
களைவோம். இவ்வாறு ஆலோசித்துவிட்டு மறைந்துவிட்டார். இவ்வளவு
தயாள குணங்கள் இல்லை என்றால் நாம் ஈசனை உபாஸிப்போமா? அவர் 62
யாரோ? நாம் யாரோ?

*1770* சிவனை எதிர்த்துப் பேசிய பாபம் கீரனை வாட்டியது. அவன்
பொற்றாமரைக் குளத்தில் வீழ்ந்து உயிரை விடுவது தான் அந்த தீராத 63
வியாதிக்கு தகுந்த வைத்தியம் என்று தீர்மானித்தான்.

*1771* என்றும் அழியாத கடலினில் மூழ்கியவன் கூட ஒரு தடவை
திருவடிபணிந்தால், கதம்பவன நாதனுடைய கருணையினால் நிவாரணம்
அடைகிறான். கீரன் தன் தவற்றை உணர்ந்து வருந்தினான். ஸுந்தரேசனை துதித்தான். 64

*1772* ஸுந்தரேசனோ ஆகமங்கள், வேதங்களைப் படைத்தவன். முழுமுதற்
கவிஞன். அவனை வாக்கினால் துதித்து மீளமுடியுமா? ஆனால் அவன்
கிருபை கூர்ந்தான். மின்மினிப் பூச்சிபோன்ற சிற்றறிவுச் சொற்களில் சிறிது 65
நல்ல கருத்து இருந்ததே என்று மகிழ்ந்தான்.

उत्तार्यमाणे कनकाम्बुजिन्याः कीरे करालम्बसमर्पणेन ।
उत्तारितं तं भवसागरात् अप्यूहांबभूवुः मुनयः पुराणाः ॥ ६५

अज्ञानमस्य कवितापदसंप्ररूढं आद्यः कविः शमायितुं कलशोद्भवेन ।
उद्‌बोधयन् द्रमिडसूत्ररहस्यसारं उच्चैर्यशो जगति कीरकवर्व्यतारीत् ॥ ६६

अधीत्य कीराद्द्रमिडागमार्थं अथापरे संघकविप्रवेकाः ।
वृत्तीर्विचित्राः स्वयमारचय्य पस्पर्धिरे ते तु परस्परेण ॥ ६७

स्वस्वप्रबन्धोत्तममध्यमत्वे संशय्य सर्वे कृतसंविदस्ते ।
सर्वज्ञमीशं शरणं प्रपन्नाः तस्मिन्नतिष्ठन्त कृतप्रणामाः ॥ ६८

आविर्भूय ततो लिङ्गात् आह तान्मधुरेश्वरः ।
तदीयेषु प्रबन्धेषु तारतम्यविवेचने ॥ ६९

अस्ति रुद्र इति ख्यातो वेश्यः रुकन्दांशसंभवः ।
शापान्मे मूकतां प्राप्तः स वक्ष्छेत्स्यति संशयम् ॥ ७०

शृण्वतस्तस्य यां हर्षात्स्यन्दत्ते बाष्पनिर्झरः ।
सकण्टकानि चाङ्गानि सा वृत्तिर्गृह्यतामिति ॥ ७१

तदनु तदुपगम्य श्रावयन्तः स्वसूक्तीः पृथगुपचितबाष्पाः कण्टकोद्भेदरम्याः ।
कपिलभरणकीरैः कल्पिता एव वृत्तीः परिजगृहुरथान्यास्तत्यजुर्दूरतस्ते ॥ ७२

---

1773 பொற்றாமரைக் குளத்தில் வீழ்ந்த கீரனை கரையேற்றினார்கள். அவனுக்கு கை கொடுத்த பரமேச்வரன் அந்த கீரகவியை ஸம்ஸாரக்கடலிலிருந்தே கரையேற்றி விட்டார் என்று மஹருஷிகள் ஊஹித்தனர். 66

## திருவிளையாடல் 54

## கீரனுக்கு இலக்கணம் உபதேசித்த படலம்.

1774 கவிதா மஹா மார்க்கத்தில் தேர்ச்சி பெற்றிருந்த அவனுடைய அறியாமையை போக்க விரும்பி, சிவபெருமான் அகஸ்தியரைக் கொண்டு தமிழ் மொழியின் இலக்கணமான தொல்காப்பிய ஸூத்திரங்களை உபதேசிக்கச் செய்தார். கீர கவியின் புகழ் உலகெங்கும் பரவியது. 67

## திருவிளையாடல் 55

## சங்கத்தார் கலகம் தீர்த்த படலம்.

1775 கீரனிடமிருந்து தமிழ் ஆகமத்தைக் கற்றறிந்த சங்கப்புலவர்கள், திராவிடாகமத்திற்கு உரை எழுத ஆரம்பித்தார்கள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக அமைந்தது. அவர்கள் ஒவ்வொருவரும் தமது உரையே சிறந்தது என்று வாதாடினார்கள். பரஸ்பரம் போட்டியிட்டனர். 68

உத்தார்யமாணே கநகாம்புஜிந்யா: கீரே கராலம்பஸமர்பணேந ।
உத்தாரிதம் தம் பவஸாகராதயூஹாம்பபூவுர் முநய: புராணா: ।। 65

அஜ்ஞாநமஸ்ய கவிதாபதஸம்ப்ரரூடம்
ஆத்ய: கவி: ஶமயிதும் கலஶோத்பவேந ।
உத்போதயன் த்ரமிடஸூத்ரரஹஸ்யஸாரம்
உச்சைர்யஶோ ஜகதி கீரகவேர்வ்யதாரீத் ।। 66

அதீத்ய கீராத் த்ரமிடாகமார்த்தம் அதாபரே ஸங்ககவிப்ரவேகா: ।
வ்ருத்தீர்விசித்ரா: ஸ்வயமாரசய்ய பஸ்பர்திரே தே து பரஸ்பரேண ।। 67

ஸ்வஸ்ய ப்ரபந்தோத்தமமத்யமத்வே ஸம்ஶய்ய ஸர்வே க்ருதஸம்விதஸ்தே ।
ஸர்வஜ்ஞமீஶம் ஶரணம் ப்ரபந்நாஸ்தஸ்மிந்நதிஷ்டந்த க்ருதப்ரணாமா: ।। 68

ஆவிர்பூய ததோ லிங்காத் ஆஹதான் மதுரேஶ்வர: ।
ததீயேஷு ப்ரபந்தேஷு தாரதம்யவிவேசநே ।। 69

அஸ்தி ருத்ர இதி க்யாதோ வைஶ்ய: ஸ்கந்தாம்ஶஸம்பவ: ।
ஶாபாந்மே மூகதாம் ப்ராப்த: ஸ வஶ்சேத்ஸ்யதி ஸம்ஶயம் ।। 70

ஶ்ருண்வதஸ்தஸ்ய யாம் ஹர்ஷாத் ஸ்யந்ததே பாஷ்பநிர்ஜர: ।
ஸகண்டகாநி சாங்காநி ஸா வ்ருத்திர்க்ருஹ்யதாமிதி ।। 71

ததநு தமுபகம்ய ஶ்ராவயந்த: ஸ்வஸூக்தீ:
ப்ருதகுபசிதபாஷ்பா: கண்டகோத்ரேதரம்யா: ।
கபிலபரணகீரை: கல்பிதா ஏவ வ்ருத்தீ:
பரிஜக்ருஹுரதாந்யாஸ்தத்யஜுர் தூரதஸ்தே ।। 72

---

1776 தன்னுடைய உரைதான் உத்தமமானது, மற்றவர்கள் எழுதியது தரம் குறைந்தது என்று அவர்கள் வாதாடி, முடிவுக்கு வரமுடியாமல் ஸர்வஞனான ஸுந்தரேசப்பெருமானை சரணம் அடைந்தனர். அவரை வணங்கி அவருடைய முடிவிற்குக் காத்திருந்தனர். 69

1777 மதுராநாயகனாகிய ஸுந்தரேசப்பிரபு அவர்களுடைய நூல்களின் தராதரத்தை நிர்ணயிப்பதின் பொருட்டு லிங்கத்திலிருந்து தரிசனமளித்தார். 70

1778 ருத்திரன் என்ற வைச்யகுலச் செம்மல் முருகனின் அம்சத்துடன் அவதரித்தவன், என்னுடைய சாபத்தினால் ஊமை ஆகிவிட்டான். அவன் உங்களுடைய ஐயத்தைத் தீர்ப்பான். 71

1779 எவருடைய உரையைக்கேட்கும் போது அவனுடைய கண்களில் தாரை தாரையாக கண்ணீர் பெருகுகிறதோ, உடல் புலகாங்கிதம் அடைகிறதோ, அவருடைய உரையே சிறந்தது. 72

1780 உரை ஆசிரியர்கள் அந்த ருத்திரனை அனுகினார்கள். தமது நூல்களைப் படித்துக் காண்பித்தார்கள். கபிலர், கீரர், பரணர், இவர்களின் உரையைக்

दिवं गते चम्पकपाण्ड्य देवे ततश्चिरात्कोऽपि तदन्ववाये ।
राजा कवीनामपि पार्थिवानां राजा कुलेशो धरणीं बभार ॥ ७३

अथ संघिषु कस्यचित्कवे अवमेने स यदा सरस्वतीम् ।
मधुराधिपतेर्मनस्यभूत् प्रतिघो भक्तदयानिधेस्तदा ॥ ७४

कदम्बमूलमुत्सृज्य कविभिः सह शंकरः ।
स्थानमुत्तरहालास्यं प्राप वेगवतीतटे ॥ ७५

क्षितिपतिरथेशानं जानन्रुषा परिनिर्गतं कविकुलमशेषं तत्संतर्पयन्बहुभिर्धनैः ।
प्रतिनवसुधाधारासारास्पदैर्वचनैः स्तुवन् नगरमनयद्भूयः श्रेयस्करं जगतां हरम् ॥ ७६

कालेऽथ केनापि तु कारणेन देवीं क्वचिद्दाशकुलेऽवतीर्णाम् ।
पाणौ ग्रहीष्यन्प्रमथाधिनाथः तीरं ययौ दक्षिणवारिराशेः ॥ ७७

स दाशमाशंसितकन्यकावरं समेत्य देवो मधुरेश्वरो युवा ।
सुतां ययाचे स्वयमुद्गिरन् गिरा स्वमद्भुतं वागुरिकत्वकौशलम् ॥ ७८

अदृष्टचरमद्भुतं वपुरमुष्य पश्यन्नपि प्रभावमवधारयन्नापि ततः स्फुटं धीवरः ।
परीक्षितुममुं पुनर्जलधिगर्भसंचारिणं मया समुपदर्शितं मकरमाहरेत्यादिशत् ॥ ७९

---

*கேட்டதும் அந்த ருத்திரனுடைய கண்களில் நீர் பெருகிற்று. மெய்ச்சிறப்பு ஏற்பட்டது. அந்த மூன்று உரைகளை மட்டுமே ஏற்றுக்கொண்டனர். மற்றவைகளை தூரத்தில் ஒதுக்கினர். 73*

## திருவிளையாடால் 56

## இடைக்காடன் பிணக்கு தீர்த்த படலம்

*1781* செம்பக பாண்டியன் ஸ்வர்கம் போய்ச் சேர்ந்தான் பிறகு வெகுகாலம் அந்தகுலத்தைச் சேர்ந்தவர்கள் அரசாண்டார்கள். அவர்களில் அரசர்களுக்கும், கவிஞர்களுக்கும் அரசனாக குலேச பாண்டியன் தரணியை ஆண்டான். *74*

*1782* சங்கப்புலவர்களில் ஒரு கவியை (இடைக்காடர்) அரசன் அவமதித்து விட்டான். பக்த தயாநிதியான ஸுந்தரேசப் பெருமான் உள்ளத்தை அது தாக்கியது. *75*

*1783* கதம்பவனமாகிய மதுரையை விட்டு விட்டு, ஸுந்தரேசப் பெருமான் கவிஞர்களுடன் உத்தர ஹாலாஸ்யம் என்று அழைக்கப்படுகின்றதும், வைகை ஆற்றங்கரையில் அமர்ந்துள்ள வடமதுரை என்ற இடத்திற்குச் சென்றார். *76*

*1784* பகவான் கோபித்துக்கொண்டு நகரத்தை விட்டு வெளியேறிவிட்டார் என்றறிந்து, பக்தர்களாகிய கவிகளுக்கு நிறைய செல்வம் அளித்து, ஒரு பக்தனுக்குத் தான் செய்த அபசாரத்தைத் தீர்த்து விட்டு, பக்தபராதீனனான

திவம் கதே சம்பகபாண்ட்யதேவே ததஶ்சிராத் கோऽபி ததந்வவாயே ।
ராஜா கவீநாமபி பார்திவாநாம் ராஜா குலேஶே தரணீம் பபார ॥ 73

அத ஸங்க்ஷு கஸ்யசித் கவேரவமேநே ஸ யதா ஸரஸ்வதீம் ।
மதுராதிபதேர்மநஸ்யபூத் ப்ரதிதோ பக்ததயாநிதேஸ்ததா ॥ 74

கதம்பமூலமுத்ஸ்ருஜ்ய கவிபி: ஸஹ ஶங்கர: ।
ஸ்தாநமுத்தரஹாலாஸ்யம் ப்ராப வேகவதீதடே ॥ 75

க்ஷிதிபதிரதேஶாநம் ஜாநன் ருஷா பரிநிர்கதம்
கவிகுலமஶேஷ கவிபி: ஸஹ ஶங்கர: ।
ப்ரதிநவஸுதாதாராஸாராஸ்பதைர் வசநை: ஸ்துவன்
நகரமநயத் பூய: ஶ்ரேயஸ்கரம் ஜகதாம் ஹரம் ॥ 76

காலேந கேநாபி து காரணேந தேவீம் க்வசித் தாஶகுலேऽவதீர்ணாம் ।
பாணௌ க்ரஹீஷ்யன் ப்ரமதாதிநாதஸ்தீரம் யயௌ தக்ஷிணவாரிராஶே: ॥ 77

ஸ தாஶமாஶம்ஸிதகந்யகாவரம் ஸமேத்ய தேவோ மதுரேஶ்வரோ யுவா ।
ஸுதாம் யயாசே ஸ்வயமுத்கிரன் கிரா ஸ்வமத்புதம் வாகுரிகத்வகௌஶலம் ॥ 78

அத்ருஷ்டசரமத்புதம் வபுரமுஷ்ய பஶ்யந்நபி
ப்ரபாவம் அவதாரயந்நபி தத: ஸ்புடம் தீவர: ।
பரீக்ஷிதுமமும் புநர்ஜலதிகர்பஸஞ்சாரிணம்
மயா ஸமுபதர்ஶிதம் மகரமாஹரேத்யாதிஶத் ॥ 79

---

பகவான் பரமேச்வரனை அமுத மொழிகளால் துதித்து, மகிழ்வித்து, மறுபடியும் மதுரைக்கே அழைத்து வந்தான். 77

## திருவிளையாடல் 57
## வலைவீசிய படலம்

1785 சில நாட்கள் சென்றன. தேவி ஏதோ காரணமாக செம்படவ குலத்தில் அவதரித்தாள். அவளை கைப்பிடிக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் ஸுந்தரேசப் பெருமான் தென்கடல் கரைக்குச் சென்றார். 78

1786 மதுரை நாயகனாகிய ஸுந்தரேசன், செம்படவ இளைஞனாக, செம்படவக் குலத்தலைவனை அணுகினான். தன்னுடைய வலைவீசும் திறமைகளைக்கூறி அவனுடைய பெண்ணை யாசித்தான். 79

1787 அந்த செம்படவத் தலைவன், இதற்கு முன் பார்த்திராத அத்புதமான அவனுடைய திருமேனியை ரஸித்தான். அவனுடைய செயல் திறனையும் நன்றாக உணர்ந்து கொண்டான். ஆயினும் அவனை சோதித்துப் பார்க்க விரும்பினான். - 'தம்பி! இந்த கடல் மத்தியில் ஒரு மிகப் பெரிய சுறா மீன் உள்ளது. நான் காட்டுகிறேன். நீ பிடித்து வருவாயா?' என்று கேட்டான். 80

आसाद्य वैसारिणतां चरन्तं अम्भोनिधौ नन्दिनमात्मशापात्।
संदर्शितं दाशकुलेश्वरेण सानन्दमालोकत चन्द्रचूडः॥ ८०

महामायाजालं महदपि निजं स्वप्रपदनात् विजित्य स्वच्छन्दं पयसि विहरन्तं जलनिधेः।
गृहीतुं शैलादिं किल करुणया वागुरिकया विशालं चिक्षेप त्रिपुरमथनो जालमुदधौ ॥ ७१

तद्भक्तिवागुराबद्धस्तरूणेन्दु शिखामणिः।
आक्षिप्य करुणाजालम् आचकर्ष तमर्णवात् ॥ ८२

मीनग्रहायापि कृतप्रवृत्तिं मृगाङ्कमौलिं वनिताऽऽदरेण।
पश्यन् अनङ्गो विजयध्वजं स्वं प्रायेण चक्रे तदुपक्रमं तम्॥ ८३

आसाद्य संचरं देहमागमान्वेषणोचितम्।
आलुलोके परं तत्त्वमागमान्विष्टमैश्वरम् ॥ ८४

पर्युपासितपादोऽयं प्रकृतिस्थेन नन्दिना।
कैवर्तकन्यां जग्राह कैरवप्रियशेखरः॥ ८५

समुत्सृजन्स मत्स्यतां ननन्द नन्दिकेश्वरः स धीवरश्च भूतले सुधीवरत्वमागतः।
विमानम् आगमय्य तां समागते पुरं शिवे तदा तदाशये मुदं ददाश दाशकन्यका॥ ८६

इति विंशः सर्गः

*1788 வாலிபன் பார்த்தான். ''இந்த சுறா மீனையா?''என்று கேட்டான். அவனுக்குத் தெரிந்து விட்டது. தான் என்று சபித்து சுறா மீனாகிய நந்திகேச்வரன் தான் அது என்று. அந்த மீனை சந்திரசேகர மீனவன் கடாக்ஷித்தான். 81*

*1789 நந்திகேச்வரனுக்கு பகவானுடைய மாயை எல்லாம் நன்றாகத் தெரியும். அவன் பரமேச்வரனை வழிபட்டு சிவஞானம் பெற்றவன். பகவானுடைய திருவருள் என்று, சுறா மீன் பிறவியில் மகிழ்ந்து தன் இஷ்டப்படி கடலில் சஞ்சரித்துக் கொண்டிருந்தான். அவனை இப்போது செம்படவன் உருவத்தில் வந்துள்ள ஸுந்தரேசப்பெருமான் தன்னுடைய கருணையாகிய வலையை வீசி பிடிக்க முனைந்தார். 83*

*1790 நந்திகேச்வரனான அந்த சுறா மீனின் பக்திவலையில் கட்டுண்ட அந்த மீனவனாகிய பகவான், தன் கருணை வலையை வீசி, அந்த சுறா மீனாகிய நந்திகேச்வரனை கடலிலிருந்து இழுத்தார். 82*

*1791 பெண்ணிடம் ஆசைப்பட்டு மீன் பிடிக்கக்கூட இறங்கிவிட்டாரே என்று கண்டுகொண்ட மன்மதன், என்று அப்பொழுதிலிருந்துதான் மீனை வெற்றிச் சின்னமாக தன் கொடியில் வைத்துக்கொண்டானோ! (முன்பு மத்ஸ்யாவதாரத்தில் மீன் உருவம் கொண்டு பகவான் வேதங்களைத் தேடி வெற்றி கொண்டார். இப்பொழுது மீன் உருவம் கொண்ட நந்திகேச்வரன்,*

ஆஸாத்ய வைஸாரிணதாம் சரந்தமம்போநிதௌ நந்திநமாத்மஶாபாத் ।
ஸந்தர்ஶிதம் தாஶகுலேஶ்வரேண ஸாநந்தமாலோகத சந்த்ரசூட: ॥ 80
மஹாமாயாஜாலம் மஹதபி நிஜம் ஸ்வப்ரபதநாத்
  விஜித்ய ஸ்வச்சந்தம் பயஸி விஹரந்தம் ஜலநிதே: ।
க்ரஹீதும் ஶைலாதிம் கில கருணயா வாகுரிகயா
  விஶாலம் சிக்ஷேப த்ரிபுரமதநோ ஜாலமுததௌ ॥ 81
தத்பக்திவாகுராபத்தஸ்தருணேந்துஶிகாமணி: ।
ஆக்ஷிப்ய கருணாஜாலம் ஆசகர்ஷ தமர்ணவாத் ॥ 82
மீநக்ரஹாயாபி க்ருதப்ரவ்ருத்திம் ம்ருகாங்கமௌலிம் வநிதாதரேண ।
பஶ்யன் அநங்கோ விஜயத்வஜம் ஸ்வம் ப்ராயேண சக்ரே ததுபக்ரமம் தம் ॥ 83
ஆஸாத்ய ஸஞ்சரம் தேஹம் ஆகமாந்வேஷணோசிதம் ।
ஆலுலோகே பரம் தத்வம் ஆகமாந்விஷ்டமைஶ்வரம் ॥ 84
பர்யுபாஸிதபாதோऽயம் ப்ரக்ருதிஸ்தேந நந்திநா ।
கைவர்த்தகந்யாம் ஜக்ராஹ கைரவப்ரியஶேகர: ॥ 85
ஸமுத்ஸ்ருஜன் ஸ மத்ஸ்யதாம் நநந்த நந்திகேஶ்வர:
  ஸ தீவரஶ்ச பூதலே ஸுதீவரத்வமாகத: ।
விமாநமாகமய்ய தாம் ஸமாகதே புரம் ஶிவே
  ததா ததாஶயே முதம் ததாயே தாஶகந்யகா ॥ 86

இதி மஹாகவிஶ்ரீநீலகண்டதீக்ஷிதப்ரணீதே ஶிவலாலார்ணவே விம்ஶ: ஸர்க: ।

---

வேதங்களால் தேடப்படும் பரம்பொருளையே கண்டுபிடித்து வெற்றி கொண்டார். ஆகவேதான் மீனை வெற்றுச்சின்னமாக தன் கொடியில் வைத்துக் கொண்டானோ! ) 83

1792 நந்திகேச்வரர், வேதங்களைத்தேடி கண்டு பிடித்து பழகிய மீன் உருவத்தினால், வேதங்களால் தேடப்படும் பரம்பொருளையே கண்டார். 84

1793 மற்றொரு ஆச்சரியம்! நந்திகேச்வரன், சாபம் நீங்கி, தன் இயற்கை ரூபத்தைப் பெற்று பகவானுக்கு பாதஸேவை செய்தார். கைரவமலர்களுக்கு பிரியமான சந்திரனை தலையில் சூடிய பரமேச்வரனும், கைவர்தகுலப் பெண்ணைக் (செம்படவப் பெண்ணை) கைபிடித்தார். 85

1794 நந்திகேச்வரன் சுறா மீன் உடலைத் துறந்து மகிழ்ந்தான். அந்த செம்படவனும் அறிஞர்களால் போற்றப்படுபன் ஆனான் (ஸ தீவர: ஸுதீவர:ஆனான் ஒரு சமத்காரம் ). விமானத்தை வரவழைத்து தேவியுடன் மதுரா நகரம் வந்து சேர்ந்தார். அவருடைய உள்ளத்தில் அந்த செம்படவப் பெண்ணாகிய தேவி ஆனந்தம் பெருகச் செய்தாள். 86

இருபதாவதுதாவது ஸர்கம் முடிவடைந்தது

## एकविंशः सर्गः

कुलेशमाराधयतो महेशं कुलेशपाण्ड्यात् अभवत्कुमारः ।
अन्वर्थयन्स्वाम् अरिमर्दनाख्यां बभार पित्रा विधृतां भुवं यः ॥ १

आस्थानभूषामणिरस्य राज्ञः सर्वागमज्ञः सचिवः सुमेधाः ।
आसीत्द्विजो वातपुरीशनामा वाचस्पतिर्वासवसंसदीव ॥ २

स संजिघृक्षुसतुरगानुदारान् सर्वैर्धनौघैरपि पाण्ड्यदेवः ।
तमादिशद्वातपुरीशमेव चोलेषु गन्तुं तटमम्बुराशेः ॥ ३

लब्धाभ्यनुज्ञः सचिवः स गच्छन् द्वित्रैर्दिनैः प्रैक्षत चोलदेशम् ।
स्तोतुं प्रसक्ते विषयान्तरेऽपि जागर्ति यस्मिन्नुपमानभावः ॥ ४

कान्तासहस्रोपगतस्य सिन्धोः का वा रतिः प्रावृषि सेवयेति ।
संगच्छते तेन निदाघ एव सह्यात्मजा यत्र हि निःसपत्नम् ॥ ५

वर्षास्ववज्ञैव शरद्युपेक्षा द्वेषो हिमे वाथ हिमात्यये वा ।
यत्राप्सु रागः सुरभौ शुचौ च तत्रेव यस्मिन्सरितो वहन्ति ॥ ६

प्रावृड्विमर्दो दिशि पश्चिमायाम् उत्पीडपीडा पुनरुत्तरस्याम् ।
स्वैरोपयोगो यदि सह्यजाया यत्रेव सौभाग्यमितः किमस्य ॥ ७

---

## இருபத்தொன்றாவது ஸர்கம்

## திருவிளையாடல் 58

## வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலம்

*1795* குலதெய்வமான ஸுந்தரேசப் பெருமானை ஆராதித்து வந்த குலேச பாண்டியனுக்கு, ஒரு குமாரன் பிறந்தான். அவனுடைய பெயர் அரிமர்தன பாண்டியன். பெயருக்கேற்ப பகைவர்களை அடக்கி ஆளுகின்ற அவன்,தந்தை ஆண்டுவந்த அரசுப்பொறுப்பை ஏற்றுக்கொண்டான். 1

*1796* அந்த அரசனுடைய ஆஸ்தானத்தை அலங்கரித்தார் வாதபுரீசர் (வாதவூரார்) என்ற பெயரைக் கொண்ட அந்தணர். அவர் ஸகல ஆகமங்களையும் கற்றவர். மேதா விலாஸமுடைய மந்திரி. இந்திரனுடைய ஆஸ்தானத்தில் பிருஹஸ்பதி இருப்பதைப்போல, பாண்டிய அரசனுடைய அவையில் இருந்தார். 2

*1797* பாண்டிய அரசன் அரசுப்படைக்குத் தேவையான குதிரைகளை வாங்கி வரும்படி, போதுமான செல்வப்பொதிகளுடன், வாதவூராரை சோழநாட்டின் கடற்கரைக்கு அனுப்பினார். 3

## அதைகவிம்ஶ: ஸர்க: ।

குலேஶமாராதயதோ மஹேஶம் குலேஶபாண்ட்யாதபவத் குமார: ।
அந்வயர்தன் ஸ்வாமரிமர்தநாக்யாம் பபார பித்ரா வித்ருதாம் புவம் ய: ॥ 1

ஆஸ்தாநபூஷாமணிரஸ்ய ராஜ்ஞ: ஸர்வாகமஜ்ஞ: ஸசிவ: ஸுமேதா: ।
ஆஸீத் த்விஜோ வாதபுரீஶநாமா வாசஸ்பதிர்வாஸவஸம்ஸதீவ ॥ 2

ஸ ஸஞ்ஜிக்ருக்ஷுஸ்துரகாநுதாரான் ஸர்வைர்தநௌகைரபி பாண்ட்யதேவ: ।
தமாதிஶத் வாதபுரீஶமேவ சோளேஷு கந்தும் தடமம்புராஶே: ॥ 3

லப்தாப்யநுஜ்ஞ: ஸசிவ: ஸ கச்சன் த்வித்ரைர்திநை: ப்ரேக்ஷத சோளதேஶம் ।
ஸ்தோதும் ப்ரஸக்தே விஷயாந்தரேऽபி ஜாகர்த்தி யாஸ்மின் உபமாநபாவ: ॥ 4

காந்தாஸஹஸ்ரோபகதஸ்ய ஸிந்தோ: கா வா ரதி: ப்ராவ்ருஷி ஸேவயேதி ।
ஸங்கச்சதே தேந நிதாக ஏவ ஸஹ்யாத்மஜா யத்ர ஹி நிஸ்ஸபத்நம் ॥ 5

வர்ஷாஸ்வவஜ்ஞைவ ஶரத்யுபேக்ஷா த்வேஷோ ஹிமே வாऽத ஹிமாத்யயே வா ।
யத்ராப்ஸு ராக: ஸுரபௌ ஶுசௌ ச தத்ரைவ யஸ்மின் ஸரிதோ வஹந்தி ॥ 6

ப்ராவ்ருட்விமர்த்தோ திஶி பஶ்சிமாயாம் உத்பீடபீடா புநருத்தரஸ்யாம் ।
ஸ்வைரோபயோகோ யதி ஸஹ்யஜாயா யத்ரைவ ஸௌபாக்யமித: கிமஸ்ய ॥ 7

---

*1798* அரசனிடம் அனுமதி பெற்றுக்கொண்டு, இரண்டு மூன்று நாட்கள் பிரயாணம் செய்து சோழ நாட்டை அடைந்தார். சிறந்த நாடுகளைப்பற்றிக் கூறும் பொழுது சோழநாட்டை உபமானமாகக் கூறுவார்கள். (உவமிக்கப்படும் ( உபமேயம்) பொருள்களைக் காட்டிலும் உவமானப்பொருள் (உபமானம்) நூறு பங்கு சிறந்தது என்பது கவிமரபு, ) 4

*1799* ஆயிரம் நதி மனைவிகளுடன் கடலரசன் மழைக்காலத்தில் குலவுகிறான். கடும் கோடையில் (மற்ற நதிகள் வற்றி விடும் போது) காவிரி நதியான ஒருத்தியுடன்தான் கலந்து குலவுவான். இதுவே தனக்குப் பெருமை என்று காவேரி உணர்ந்துள்ளது. சக்களத்திகள் இல்லையே! 5

*1800* காவேரியை ஓடைகள் மழைக்காலத்தில் அலட்சியம் செய்யும். சரத்காலத்தில் ஒதுக்கிவிட்டு மற்ற தீர்த்தங்களை நாடிச் செல்லும். குளிர் காலத்தில் காவேரியை பனிகள் வெறுக்கும். பனிகாலத்திலும் அதே கதி தான். மணல் மிகுந்த சுத்தமான வஸந்த காலத்தில், காவேரியில் தான் ஓடைகள் வந்து சேறும். 6

*1801* நதிகளில் மழைக்காலத்தில் வெள்ளம் கரைபுரண்டு ஓடும். வட திசையில் வரட்சியினால் தொல்லை. சோழநாட்டிலோ காவேரியின் உபயோகம் இஷ்டப்படி கிடைக்கும். இதைக்காட்டிலும் வேறு பெருமை என்ன வேண்டும்? 7

प्रत्यग्रपूराभिगतेषु यस्मिन् प्रस्निग्धरम्भावनमेदुरेषु ।
कवेरकन्यातटकाननेषु कामः समुन्मीलति धर्म एब ॥ ८

हव्याय यत्रापततां सुराणां आथित्यनिर्वर्तनत्तोऽनुवेलम् ।
गन्धर्वविद्याधरकिन्नराद्याः निर्विद्य निन्दन्ति पथि स्थितिं स्वाम् ॥ ९

अध्येतुमध्यापयितुं च तन्त्राणि आहर्तुमर्थानथ चोपभोक्तुम् ।
स्वर्गापवगौ च वशे विधातुं जात्यैव यस्मिन्द्रमिडा निरूढाः ॥ १०

स्वादीयसी यत्र कवेरजैव ततस्तरां केरफलोदकानि ।
ततस्तमां चाथ गिरां विलासाः प्रसन्नगम्भीरपदाः कवीनाम् ॥ ११

द्रष्टुं न रम्भापनसाम्रकेरच्छायावृते यत्र हि शक्यमर्कम् ।
शक्यं तु सभावायितुं सरोजसौरभ्यसंभारहरैः समीरैः ॥ १२

ये जातिभेदाः क्रमुकाम्रकेरशालीक्षुरम्भाफणिवल्लरीणाम् ।
व्युत्पित्सवस्तेषु चरन्ति पान्था विश्रम्य विश्रम्य चिराय यस्मिन् ॥ १३

आदाय शस्त्राण्यवगाह्य सिन्धुं तपांसि विक्रीय च तन्त्रयन्ते ।
यत्रान्यतस्तत्र कलौ यदीया यजन्त्यविच्छिन्नमधीयते च ॥ १४

सान्त्यत्र सिन्धुर्ननु यात्र कुल्या तेऽन्यत्र धन्या इह ये कदर्याः ।
अरभ्यस्तविद्या इव येऽत्र किंचित् अन्यत्र विद्या गुरवस्त एव ॥ १५

---

*1802* வாழைத் தோட்டங்கள் நிரம்பிய காவேரிக்கரைப் பிரதேசத்தில், புதுநீர் பெருக்கு வந்தவுடன் கோடையில் கூட மன்மதன் கொழிக்கிறான் . 8

*1803* சோழநாட்டில் காவேரிக்கரையில் எங்கும் யாகங்கள் நடைபெறும். அங்கு ஹவிர்பாகம் பெருவதற்காக தேவர்கள் கூடுவார்கள். கந்தர்வர்கள், வித்யாதரர்கள், கின்னரர்களான கலைச்செல்வர்கள், தேவர்களுடைய மார்கத்தில் நாம் மாட்டிக் கொண்டோமே என்று அலுத்து நொந்து கொள்வார்கள். 9

*1804* வேதங்களைக் கற்பதிலும், கற்றுக் கொடுப்பதிலும், மந்திர தந்திரங்களைத் தேடி அலைவதிலும், பொருள்களை ஸம்பாதித்து போகங்களை அனுபவிப்பதிலும், யாகங்களைச் செய்து ஸ்வர்கத்தை வசப்படுத்துவதிலும், ஞானத்தில் மேன்மையுற்று மோக்ஷத்தை அடைவதிலும், தமிழ்நாட்டார் வல்லவர்கள். 10

*1805* காவேரி மிக மிக இனிமையானது தான். அதைக் காட்டிலும் இனியது காவேரிக்கரை தென்னை ரகங்களின் இளநீர். எல்லாவற்றையும் விட மிக மிக இனிமையானது. சொல்லும் போதே தித்திக்கின்றது, காவேரிக்கரை

ப்ரத்யக்ரபூகாபிகதேஷு யஸ்மின் ப்ரஸ்நிக்தரம்பாவநமேதுரேஷு ।
கவேரகந்யாதடகாநநேஷு காம: ஸமுந்மீலதி தர்ம ஏவ ॥ 8

ஹவ்யாய யத்ராபததாம் ஸுராணாம் ஆதித்யநிர்வர்த்தநதோऽநுவேலம் ।
கந்தர்வவித்யாதரகிந்நராத்யா நிர்வித்ய நிந்தந்தி பதி ஸ்திதிம் ஸ்வாம் ॥ 9

அத்யேதும் அத்யாபயிதும் ச தந்த்ராண்யாஹர்துமர்த்தாநத சோபபோக்தும் ।
ஸ்வர்காபவர்கௌ ச வஶே விதாதும் ஜாத்யைவ யஸ்மின் த்ரமிடா நிரூடா: ॥ 10

ஸ்வாதீயஸீ யத்ர கவேரஜைவ ததஸ்தராம் கேரபலோதகாநி ।
ததஸ்தமாம் சாத கிராம் விலாஸா: ப்ரஸந்நகம்பீரபதா: கவீநாம் ॥ 11

த்ரஷ்டும் ந ரம்பாபநஸாம்ரகேரச்சாயாவ்ருதே யத்ர ஹி ஶக்யமர்கம் ।
ஶக்யம் து ஸம்பாவயிதும் ஸரோஜ ஸௌரப்யஸம்பாரஹரை: ஸமீரை: ॥ 12

யே ஜாதிபேதா: க்ரமுகாம்ரகேரஶாலீக்ஷுரம்பாபணிவல்லரீணாம் ।
வ்யுத்பித்ஸவஸ்த்ரேஷு சரந்தி பாந்தா விஶ்ரம்ய விஶ்ரம்ய சிராய யஸ்மின் ॥ 13

ஆதாய ஶஸ்த்ராணி அவகாஹ்ய ஸிந்தும் தபாம்ஸி விக்ரீய ச தந்த்ரயந்தே ।
யத்ராந்யதஸ்தத்ர கலௌ யதீயா யஜந்த்யவிச்சிந்நம் அதீயதே ச ॥ 14

ஸாந்யத்ர ஸிந்துர்நநு யாத்ர குல்யா தேऽந்யத்ர தந்யா இஹ யே கதர்யா: ।
அப்யஸ்தவித்யா இவ யேऽத்ர கிஞ்சித் அந்யத்ர வித்யாகுரவஸ்த ஏவ ॥ 15

---

*கவிஞர்களின் கவிதா விலாஸம். அது ஆழ்ந்த கருத்துடையதாக இருந்தாலும் மிகத்தெளிவாக இருக்கும். ஆகவே இனியதற்கெல்லாம் இனியது.* *11*

*1806 எங்கு பார்த்தாலும் ஒரே வாழை மரங்கள், பலா மரங்கள், மாமரங்கள், இவைகளின் நிழல்கள் படர்ந்திருப்பதால் சூரியனைக் காண்பது அரிது. உட்கார்ந்த இடத்திலிருந்தே தாமரை மலர்களின் நறுமணத்துடன் மெல்லிய காற்றை அனுபவிக்க முடியும்.* *12*

*1807 கொட்டைப்பாக்கு, மாங்காய், தேங்காய், நெல், கரும்பு, வாழை, வெற்றிலை, இவற்றின் பலவகைகளின் வித்யாஸங்களைத் தெரிந்து கொள்வதற்காக வழிப்போக்கர்கள், ஆங்காங்கு வெகு நேரம் நின்று நின்று, அறிந்து கொண்டு மேலே நடக்கிறார்கள்.* *13*

*1808 மற்ற ஊர்களிலே இருப்பவர்கள் ஆயுதங்களைத் தேடுவார்கள். சிலர் முத்துக்களையும் ரத்தினங்களையும் தேடுவார்கள். சிலர் மந்திரதந்திரங்களில் தேர்ச்சி பெற்று அவற்றை விற்றும் பிழைப்பார்கள். கலிகாலத்தில் சோழதேசத்தில் மட்டும்தான் ஓயாமல் யாகங்கள் செய்வார்கள். வேதாத்யயனம் செய்வார்கள்.* *14*

*1809 சோழநாட்டில் எதை குட்டை என்று அழைப்பார்களோ, அதே நீர்நிலையை மற்ற இடங்களில் கடல் என்பார்கள். செல்வமுடையவர்களை*

गच्छन्नहोभिः कतिभिश्चिदस्मिन्स पश्चिमे योजनतः पयोधेः ।
माकन्दरम्भावनसान्द्रमेकं माहेश्वरं धाम समालुलोके ॥ १६

अध्यासितं पाशुपतैर्महद्भिः आलक्ष्य वल्मीकपतेः पदं तत् ।
अप्राकृतीं भाग्यवशात्ततोऽयं आध्यात्मिकीं कामपि शुद्धिमूहे ॥ १७

आस्थाय कारुण्यरसैकरूपां आचार्यमूर्तिं मधुरैर्वचोभिः ।
प्रबोधयन्तं शतशो महर्षीन् प्रत्यक्षमैक्षिष्ट स चन्द्रचूडम् ॥ १८

अङ्गैः क्षितावष्टभिरानमन्तं तं दूरतो बाष्पतरङ्गिताक्षम् ।
दृष्ट्वा दयाशीतलयानुगृह्णन्देवः समीपस्थितिमादिदेश ॥ १९

उत्प्रेक्ष्य तस्योद्धुणशक्तिपातं शुद्धाध्वलिप्सासुभगैर्वचोभिः ।
संभावयन्नैष्ठिकदीक्षया तं चन्द्रार्धचूडः स्वयमन्वगृह्णात् ॥ २०

आरुह्य माहेश्वरमाश्रमं सः संछिन्नपाशः सचिवः क्षणेन ।
अश्वाय नीतैर्द्रविणैर्महेशं आराधयन्पार्थिवमप्यरक्षत् ॥ २१

आकारितो दूतमुखेन राज्ञा कर्णेजपालापकलङ्कितेन ।
अश्वैः सहेवागमनं स्वकीयं शंभोर्निदेशेन स संदिदेश ॥ २२

இங்கே பிச்சைக்காரர்கள் என்பார்கள், மற்ற ஊரில் பிரபு என்று கொண்டாடுவார்கள். எவன் இங்கே கற்றுக்குட்டியோ அவனை மற்ற இடங்களிலே வித்யாகுரு என்று வணங்குவார்கள். 15

*1810* குதிரை வாங்கச்சென்றவர்கள் சில நாட்கள் பிரயாணம் செய்து, கீழ் கடற்கரைக்கு சற்று மேற்கே, பத்து மைல்கள் உட்புறம், மாமரம், வாழைமரம் நிரம்பிய அடர்ந்த காட்டை அணுகினார்கள். அவற்றிர்கிடையே சிவாலயம் தென்பட்டது. 16

*1811* அங்கு மஹா சிவபக்தர்கள் நிறைந்ததும், புற்றுகள் நிறைந்ததுமான ஒரு விசாலமான இடத்தைக் கண்ணுற்றார்கள். வாதவூரார் தனது பாக்கியவசத்தினால் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு தெய்வீகச்சூழ்நிலையில், அது மிகவும் பரிசுத்தமான இடம் என்று உணர்ந்தார். 17

*1812* அங்கு கருணையே வடிவெடுத்தாற் போல ஒரு ஆசாரியரையும், அவருக்குப்பள்ளி எழுச்சி பாடுகின்ற நூற்றுக்கணக்கான முனிவர்களையும் பார்த்தான். அந்த ஆசாரியரை ஸாக்ஷாத் சந்திரசேகரப் பெருமான் என்று கண்டு கொண்டான். 18

*1813* தலை, மார்பு, காதுகள் இரண்டு, புஜங்கள் இரண்டு, பாதங்கள் இரண்டு ஆகிய இந்த எட்டு அங்கங்களும் பூமியில் தொட வணங்கினார் (ஸாஷ்டாங்க

**கச்சந்நஹோபி: கதிபிஶ்சிதஸ்மின் ஸ பஶ்சிமே யோஜநத: பயோதே: ।**
**மாகந்தரம்பாவநஸாந்த்ரமேகம் மாஹேஶ்வரம் தாம ஸமாலுலோகே ॥ 16**

**அத்யாஸிதம் பாஶுபதைர்மஹத்பி: ஆலோக்ய வல்மீகபதே: பதம் தத் ।**
**அப்ராக்ருதீம் பாக்யவஶேத் ததோऽயமாத்யாத்மிகீம் தாமபி ஶுத்திமூஹே ॥ 17**

**ஆஸ்தாய காருண்யரஸைகரூபாம் ஆசார்யமூர்த்திம் மதுரைர்வசோபி: ।**
**ப்ரபோதயந்தம் ஶதஶே மஹர்ஷீன் ப்ரத்யக்ஷமைக்ஷிஷ்ட ஸ சந்த்ரசூடம் ॥ 18**

**அங்கை: க்ஷிதாவஷ்டபி: ஆநமந்தம் தம் தூரதோ பாஷ்பதரங்கிதாக்ஷம் ।**
**த்ருஷ்ட்யா தயாஶீலதயாநுக்ருஹ்ணன் தேவ: ஸமீபஸ்திதிமாதிதேஶ ॥ 19**

**உத்ப்ரேக்ஷிதஸ்யோத்பணஶக்திபாதம் ஶுத்தாத்வலிப்ஸாஸூபகைர்வசோபி: ।**
**ஸம்பாவயன் நைஷ்டிகதீக்ஷயா தம் சந்த்ரார்தசூட: ஸ்வயமந்வக்ருஹ்ணாத் ॥ 20**

**ஆருஹ்ய மாஹேஶ்வரம் ஆஶ்ரமம் ஸ: ஸஞ்சிந்நபாஶ: ஸசிவ: க்ஷணேந ।**
**அஶ்வாய நீதைர்த்ரவிணைர்மஹேஶம் ஆராதயன் பார்திவம் அப்யரக்ஷத் ॥ 21**

**ஆகாரிதோ தூதமுகேந ராஜ்ஞா கர்ணேஜபாலாபகலங்கிதேந ।**
**அஶ்வை: ஸஹைவாகமநம் ஸ்வகீயம் ஶம்போர்நிதேஶேந ஸ ஸந்திதேஶ ॥ 22**

---

*ப்ரணாமம்). தூரத்தில் இருந்த, கண்களில் நீர் ததும்ப நிற்கின்ற வாதபுரீசனை, குருநாதர் கிருபை அலைகள் மோதுகின்ற கண்களால் கடாக்ஷித்தார். அருகே வாருங்கள் என்று அழைத்தார். 19*

*1814 வாதவூராரிடம் பொங்கி வருகின்ற ஆத்மசக்தியின் பெருக்கை கவனித்தார். அவனிடம் சுத்தமான பரமாத்மநிலைக்குரிய வழியை பின்பற்ற வேண்டிய ஆசையை, இனிமையான சொற்களால் ஊக்குவித்தார். அந்த ஆத்ம நிஷ்டையில் அசையாமல் நிற்கக்கூடிய தீக்ஷையை அருளினார். இவ்வாறு பரமேச்வரன் அவருக்கு அருள் புரிந்தார். 20*

## திருவிளையாடல் 59

## நரியைப் பரியாக்கிய படலம்

*1815 வாதவூரார் மஹேச்வர தீக்ஷையைப் பெற்றார். பாசம் அறுந்தது. குதிரை வாங்குவதற்காகக் கொண்டுவந்த செல்வத்தை எல்லாம் மஹேச பூஜைக்கு செலவு செய்தார். அதனால் (தன்னை மட்டும் அல்ல) அரசனையும் காப்பாற்றினார். 21*

*1816 அரசனுக்கு சில மந்திரிகள் கோள் சொல்பவர்கள். வாதவூராரிடம் பொறாமை கொண்டவர்கள். அரசனின் உள்ளத்தைக் கலக்கத்தில் ஆழ்த்திவிட்டனர் அரசன் தூதுவர்களின் மூலம் மந்திரியை அழைத்து வரச்செய்தார். 'நான் குதிரைகளை வாங்கிக்கொண்டே வந்து விடுகின்றேன்' என்று சிவபெருமான் ஆக்ஞைப்படியே செய்தி அனுப்பினார். 22*

अश्वानसंख्यानहम् आनयेयम् आसीद राजानमपेतशङ्कः ।
इति स्थिरं व्याहृतमिन्दुमौलेः विश्वस्य भूयः स पुरीमविक्षत् ॥ २३

अश्वानमूल्यानमितान्समीपमासादितान् अप्यरिमर्दनाय ।
निवेदयन्वृत्तमिदं स सर्वंन्यवेदयन्नीपवनेश्वरेऽपि ॥ २४

पन्थानमालक्ष्य तुरङ्गमाणां पाण्ड्यो परेद्युः स्वयमादिनान्तात् ।
क्रुध्यत्युदाकुर्वत राजभृत्याः क्रूराशया मन्त्रिणि लब्धरन्ध्राः ॥ २५

कृताभ्यनुज्ञैः कुपितेन राज्ञा क्रूरैश्वरद्वेषिभिरस्य भृत्यैः ।
कदर्थ्यमानः करुणं स भूयो विसृज्य धैर्यं विललाप धीरः ॥ २६

व्यासज्यसे किमधुना विधिकेशवाद्यैः व्यासज्यसे किमथवा ललितैर्भवान्याः ।
क्रन्दन्ति कत्यशरणा इह मादृशोऽन्ये कर्णातिथिर्भवतु कस्य तवार्तनादः ॥ २७

बद्धस्य दुष्परिहरैर्मलकर्ममायाबन्धैस्त्रिभिर्मम चिरादपि दीनबन्धो ।
बन्धं हरिष्यासि किलेति धृतक्षणस्य बन्धं तुरीयमपि हा कथमद्य दत्से ॥ २८

कर्मेति काल इति वापदिशन्ति येऽन्ये किं तैरिति त्रिजगतीं तृणवद्विचिन्त्य ।
त्वामेव संश्रितवतोऽपि दशा यदीयं त्वं क्व नु भवत्ययशो यशो वा ॥ २९

---

1817 எண்ணற்ற குதிரைகளை நான் அழைத்து வருவேன். தூதர்களே! அரசனிடம் சென்று கவலைப்படவேண்டாம். சற்று பொருத்திருங்கள் என்று சொல்லுங்கள் என்று குதிரை வியாபாரியாக வந்த சிவபெருமானின் வாக்கை நம்பி, அரசன் நகரத்தில் பிரவேசித்தான். குதிரைகளை எதிர்பார்த்துக் கொண்டு நகர வாயிலில் காத்திருந்தான். 23

1818 விலை மதிப்பிடமுடியாத ( வாதவூரார் ரீதியில் இலவசமான) குதிரைகளை அரசன் அரிமர்தன பாண்டியன் அருகே கொண்டு சேர்த்தார் குதிரை வியாபாரி. இந்த செய்தியை வாதவூரார் அரசனிடம் தெரிவித்தார். உடனுக்குடன் கதம்பவன நாயகனான ஸுந்தரேசனிடமும் தெரிவித்தார்.24

1819 மறுநாள் அரசன் வழிமேல் விழி வைத்து குதிரைகளுக்காக நாள் முழுவதும் காத்திருந்தான். வெகுண்டான். இதுதான் சரியான நேரம் என்று வாதவூராரிடம் கெட்ட எண்ணம் கொண்டவர்கள், அரசனைத் தூண்டிவிட்டார்கள். 25

1820 அரசனோ கோபத்தினால் வெடித்துக் கொண்டிருந்தான். வாதவூரார்ரைக் கடுமையாக விசாரிக்கும்படி .அரசன் அனுமதி கொடுத்து விட்டான். வெகு நாட்களாகப் பகை கொண்டிருந்த கொடிய சேவகர்கள்- 'பார்த்தீர்களா! இன்றும் வரவில்லை. ஏமாற்றி விட்டார் மந்திரி' என்று தூபம் போட்டார்கள். மந்திரியைத் துன்புறுத்தினார்கள். பரமேச்வரன் கைவிடமாட்டார் என்று தைரியமாக இருந்த வாதவூரார் நம்பிக்கை இழந்து புலம்பினார். 26

அஶ்வான் அஸங்க்யான் அஹமாநயேயம் ஆஸீத ராஜாநம் அபேதஶங்க: ।
இதி ஸ்திர வ்யாஹ்ருதம் இந்துமௌலேர்விஶ்வஸ்ய பூய: ஸ புரீமவிக்ஷத் ।।23

அஶ்வான் அமூல்யான் அமிதான் ஸமீபம் ஆஸாதிதான் அப்யரிமர்தநாய ।
நிவேதயன் வ்ருத்தமிதம் ஸ ஸர்வம் ந்யவேதயந்நீபவநேஶ்வரேऽபி ।। 24

பந்தாநம் ஆலக்ஷ்ய துரங்கமாணாம் பாண்ட்யே பரேத்யு: ஸ்வயமாதிநாந்தாத் ।
க்ருத்த்யத்யுதாகுர்வத ராஜப்ருத்யா: க்ரூராஶயா மந்த்ரிணி லப்தரந்த்ரா: ।। 25

க்ருதாப்யநுஜ்ஞைஃ குபிதேந ராஜ்ஞா க்ரூரைஶ்சிரத்வேஷிபிரஸ்ய ப்ருத்யை: ।
கதர்த்யமாந: கருணம் ஸ பூயோ விஸ்ருஜ்ய தைர்யம் விலலாப தீர: ।। 26

வ்யாஸஜ்ஜஸே கிமதுநா விதிகேஶவாத்யை:
  வ்யாஸஜ்ஜஸே கிமதவா லலிதைர்பவாந்யா: ।
க்ரந்தந்தி கத்யஶரணா இஹ மாத்ருஶோऽந்யே
  கர்ணாதிதிர்பவது கஸ்ய தவார்த்தநாத: ।। 27

பத்தஸ்ய துஷ்பரிஹரைர்மலகர்மமாயா -
  பந்தைஸ்த்ரிபிர் மம சிராதபி தீநபந்தோ ! ।
பந்தம் ஹரிஷ்யஸி கிலேதி க்ருதக்ஷணஸ்ய
  பந்தம் துரீயமபி ஹா கதமத்ய தத்ஸே ।। 28

கர்மேதி கால இதி வாபதிஶந்தி யேऽந்யே
  கிம் தைரிதி த்ரிஜகதீம் த்ருணவத் விசிந்த்ய ।
த்வாமேவ ஸம்ஶ்ரிதவதோऽபி தஶா யதீயம்
  த்வம் புத்யஸே க்வநு பவத்யயஶோ யஶோ வா ।। 29

*1821 ப்ரபோ! ஸுந்தரேச! என்ன இது, ப்ரஹ்மதேவன், நாராயணனுடன் ஸல்லாபம் செய்து கொண்டிருந்தீரா? அல்லது தேவியுடன் சொக்கட்டான் விளையாடிக் கொண்டிருந்தீரா? என்னைப் போல கதியற்றவர்கள் பலர் காத்துக் கொண்டிருக்கிறார்கள். யாருடையதாவது வேதனைக் குரல் உங்கள் காதில் விழுகிறதா?* 27

*1822 வாதவூரார் புலம்புகிறார். ஸுந்தரேசப் பெருமானே! தவிர்க்கமுடியாதவையான பாபங்களின் திடீர் விளைவுகள், தற்போது செய்கின்ற பாபம், உன்னுடைய மாயை, இவைகள் எல்லாம் முப்புரியாக என்னைக் கட்டிப் போட்டிருக்கின்றன. வெகு நாட்களாகக் கஷ்டப்படுகிறேன், ஏழைபங்காளா! இந்தப்பாசங்களை எல்லாம் அருத்தருள்வாய். மாயா பந்தத்திலிருந்து விடுபட வேண்டும் என்று ப்ரார்திக்கின்ற நேரத்தில், அரசாங்க பந்தம் வேறு என்னை கொடுமைப்படுத்துகிறதே.* 28

*1823 உலகில் உள்ளவர்கள் கஷ்டப்படும்போது கர்மா, தலைவிதி என்றெல்லாம் புழுங்குவார்கள். அவர்களை நான் லட்சியம் செய்ததில்லை.*

नाहं विभेमि नृपतेर्न च तद्भटेभ्यः कुर्वन्ति नाम किममी परतोऽपि मृत्योः।
इत्थं कृतान्तवशगेऽपि हि मय्युपेक्षा किं ते भवेदिति विषीदति किं तु चेतः॥ ३०
एकं विधेयमवलम्ब्वनमित्युपेक्ष्य नीतिं श्रितोऽस्मि चरणौ तव चन्द्रमौले।
आतः किमित्थमियम् आपदि मे महत्यां अन्योन्यदत्तभरयोः अनयोरुपेक्षा ॥ ३१
किं ज्ञानयोगविभवैः शिव किं तपोभिः किं कर्मभिश्च हृदयं तव रञ्जयेयम्।
क्रन्दल्लुठत्कृपणदर्शनकौतुकं वा निर्वर्त्य दास्यपदवीं तव निर्वहेयम्॥ ३२
प्रारब्धकर्मणि चलत्यविलङ्घनीये भक्तिः करिष्यति किमीशपदार्पितेति।
दुर्निश्चयो हतधियामिह दुःश्रवोऽयं निन्देव ते मनसि मे परिवर्तमानः॥ ३३
किं मत्कृतेऽवतरितव्यम् अशिक्षितं ते किं वा भुजाभुजि परैः कलहायितव्यम्।
संकल्पमात्रमपि चेन्न चिकीर्षसि त्वं शंभो ममैव तु जितं दुरितैर्दुरन्तैः॥ ३४

---

மூவுலகையுமே புல்லாக மதித்து உன்னையே அடைக்கலம் புகுந்து விட்டேன். எனக்கு என்ன வரப்போகிறது? பழியா? புகழா? 29

*1824* ப்ரபோ! நான் அரசனுக்கு பயப்படவில்லை.. அவனுடைய படை வீரர்களுக்கும் பயப்படவில்லை இவர்கள் பரலோகத்திற்கு வந்து என்னை துன்புறுத்த மாட்டார்கள். யமன் வாயில் அகப்பட்ட பிறகு, என் கதி என்ன? அங்கும் என்னை உதாஸீனம் செய்துவிடுவாயோ என்று என் உள்ளம் பதறுகிறது 30

*1825* என் தலைவிதி இப்படி விடிந்திருக்கிறது. சோர்ந்து போகாமல் விதிப்படி நடக்கட்டும் என்று விட்டு விட்டு, உன் திருவடிகளைப் பற்றி இருக்கிறேன். இந்த ஆபத்து மிகக் கொடியதாகி விட்டதில், இடது கால் தேவியினுடையது காக்கட்டும்,அல்லது வலது கால் தங்களுடையது காக்கட்டும். இரண்டையுமே கெட்டியாக பற்றியுள்ளேன். இரண்டுமே விட்டு விடப்போகிறதா என்ன? 31

*1826* சந்திரசேகரப் பெருமானே! நீயாகவே என்னைத் தடுத்தாட்கொண்டபின், ஞானவிசாரமோ, யோகாப்யாஸமோ தேவைதானா? கர்மம் செய்யவேண்டுமோ? யாகானுஷ்டானம் பண்ண வேண்டுமோ? எவ்வாறு உன் இதயத்தைக் குளிர வைப்பேன்? இவன் எப்படிக் கதறுகிறான்? எப்படி கீழே விழுந்து புரள்வான்? புலம்புவான்? என்று வேடிக்கைப்பார்கிற குதூகலம் உனக்கு. உன் அடியார் என்ற எண்ணத்தை விலக்கினால் அல்லவா நான் இவ்வாறு செயல்படமுடியும். 32

*1827* சிலர் தன் உள்ளத்தைத் தேற்றிக்கொள்வதற்காக பொல்லாங்கு, சமாதானம் சொல்லிக் கொள்வார்கள். 'என் தலை விதி, முன் வினை ஐயா' என்றெல்லாம். அதை அனுபவித்துத்தானே தீர்க்கமுடியும்? மஹான்கள்

Digitized by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நாஹம் பிபேமி ந்ருபதேர்நச தத்படேப்ய:
குர்வந்தி நாம கிமமீ பரதோऽபி ம்ருத்யோ: ।
இத்தம் க்ருதாந்தவஶகேऽபி ஹி மய்யுபேக்ஷா
கிம் தே பவேதிதி விஷீததி கிந்து சேத: ॥ 30

ஏகம் விதேயமவலம்பநமித்யுபேக்ஷ்ய
நீதிம் ஶ்ரிதோऽஸ்மி சரணௌ தவ சந்த்ரமௌலே ! ।
ஆத: கிமித்தமியமாபதி மே மஹத்யாம்
அந்யோந்யதத்தபரயோ: அயோருபேக்ஷா ॥ 31

கிம் ஜ்ஞாநயோகவிபவை: ஶிவ ! கிம் தபோபி:
கிம் கர்மபிஶ்ச ஹ்ருதயம் தவ ரஞ்ஜயேயம் ।
க்ரந்தல்லுடத்க்ருபணதர்ஶநகௌதுகம் வா
நிர்வர்த்த்ய தாஸ்யபதவீம் தவ நிர்வஹேயம் ॥ 32

ப்ராரப்தகர்மணி சலத்யவிலங்கநீயே
பக்தி: கரிஷ்யதி கிமீஶபதார்பிதேதி ।
துர்நிஶ்சயோ ஹததியாமிஹ து: ஶ்ரவோऽயம்
நிந்தேவ தே மநஸி மே பரிவர்தமாந: ॥ 33

கிம் மத்க்ருதேऽவதரிதவ்யம் அஶிக்ஷிதம் தே
கிம் வா புஜாபுஜி பரை: கலஹாயிதவ்யம் ।
ஸங்கல்பமாத்ரமபி சேந்ந சிகீர்ஷஸி த்வம்
ஶம்போ ! மமைவ து ஜிதம் துரிதைர்துரந்தை: ॥ 34

---

எல்லோரும் கூட, இந்த முன் வினையினால் கஷ்டப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய சிவபக்தி அந்த நேரத்தில் உதவ முடிந்ததா? இப்படி ஒரு தவறான தீர்மானத்தைச் சொல்லிக்கொண்டு, உன்னுடைய இயலாமைக்கு மன்னிப்புக் கொடுப்பார்கள்.. இதை என்னால் காது கொடுத்து கேட்க முடியவில்லையே. இப்படி எல்லாம் உங்களை நிந்திக்கிறார்களே என்றுதான் வருந்துகிறேன். 33

1828 என்னைக் காக்கும் பொருட்டு ஒரு அவதாரம் செய்துவிடலாமே என்று நீ ஸங்கல்பித்தால், அதற்குப் புதிதாக நீ ஏதாவது கற்றுக்கொள்ள வேண்டுமா? பலவிதங்களில் என்னை துன்புறுத்தத் தயாராக இருக்கும் போது, போர்புரிந்து ஜயித்துத்தான் அதை நிறைவேற்ற வேண்டுமோ? என்னைக் காக்கவேண்டும் என்று நீ ஸங்கல்பிக்கவில்லை. ஏன் தெரியுமா? என்னிடம் பாபங்கள் உள்ளன. தங்களை ஸங்கல்பிக்கவிடாமல் தடுப்பதில் வெற்றி பெற்றுவிட்டன. அப்படித்தானே! 34

भक्तिंदृढा यदि ममास्ति भवेत्किमेवं को वेद तत्त्वमिदमस्ति तु मेऽन्तरङ्गे ।
लोकास्तु भक्त इति मां जगृहुर्यथा ते त्वां भक्तवश्यमवयन्ति तथा दयेथाः ॥ ३५

कः स्वापराधिषु पराक्रमते न लोकः शृङ्गेण हन्ति ननु गौरपि दण्डहस्तम् ।
भक्तापदक्षमतयैव तवेश्वरत्वं तं नाशयं द्रढय वा समयस्तवायम् ॥ ३६

यत्प्रालपं चरणयोस्तव यत्तदित्थं मुग्धो विदग्ध इव मुग्धशशाङ्कमौले ।
तत्क्षम्यतां मम तु को वचनेऽधिकारः स्वामी परामृशतु वा स्वमुपेक्षतां वा ॥ ३७

इति निशम्य स वातपुरीशितुः करुणमालपितं करुणानिधिः ।
तुरगलक्षखुरक्षतरेणुभिः परिपतन्ददृशे विधुशेखरः ॥ ३८

शिवे तुरगसादित्वं श्रिते भक्तानुकम्पया ।
शिवा स्वयं तुरगतां शिश्राय बहुधा तदा ॥ ३९

कुमुदकज्जलकुंकुमदाडिमीकुसुमहेमकुवेलसमत्विषः ।
परुषहेषितभीषितशात्रवा ददृशिरे दिश दिश्यपि सैन्धवाः ॥ ४०

---

1829 பாபங்களுக்கு அவ்வளவு திறன் உள்ளனவா? ஸங்கல்பிக்கவிடாமல் தடுக்கும் திறன் உள்ளதா? அப்படி அல்ல. பாபங்களின் சுமையைக் குறைக்கும் அளவுக்கு என்னிடம் சிவபக்தி இல்லை. அது திடமாக இருந்தால் இப்படியெல்லாம் நேருமா? வேறு யார் இதை அறிவார்கள்? என் உள்ளத்தில் எனக்கு சிவபக்தி போதாது என்று எனக்கு நன்றாகப் புரிகிறது. 35

1830 உலகில் தனக்குத் தீங்குசெய்தவனை எவன்தான் தாக்கமாட்டான்? புல் தின்னும் பசு பரம ஸாது தான். அது கூட தன்னிடம் பிரம்பை ஓங்குபவனை கொம்பினால் முட்டத்தான் செய்யும். தர்மம் தலை காக்கும் என்று ஒரு நீதி. இன்றும் என்றும் நடைமுறையில் இருக்கிறது. அது போல் ஈச்வரன் பக்தர்களிடம் பட்சபாதமற்றவன். இது தெரியாமல் உலகத்தினர் 'ஐயோ! ஒரு சிவ பக்தன் இப்படிக் கஷ்டப்படுகிறானே! சிவன் பார்த்துக் கொண்டிருக்கிறாரே!' என்றுவேதனைப்படுகிறார்கள். பக்தனிடம் பரிவு இல்லை என்று உலகம் உன்னை தூற்றலாமா? நீ பக்த பரிபாலகன்தான் என்பதை நிரூபிக்கவேண்டும். அதற்காகவாவது இந்த போலி பக்தனைக் காப்பாற்று. 36

புண்ணிய பாபங்களுக்கேற்ப ஒருவனுடைய தலை விதியை நிர்ணயிப்பதில் ஈச்வரன் தலையிடுவதில்லை. ஆனால் உன்னுடைய பக்தன் ஒருவன் ஆபத்தில் இருக்கும்போது, அவனுடைய தலைவிதி குறுக்கே நிற்குமானால், ஸர்வசக்தன் ,எல்லாம் வல்லவன் என்ற உன் ஈச்வரன் புகழ் என்ன ஆகும்? ஈச்வர! உன்னுடைய புகழைக் கைவிடப்போகிறாயா.? பக்தனை ஆபத்திலிருந்து காப்பாற்றி நிலை நாட்டப்போகிறாயா? 37

பக்திர்த்ருடா யதி மமாஸ்தி பவேத் கிமேவம்
கோ வேத தத்த்வமிதமஸ்தி து மேऽந்தரங்கே ।
லோகாஸ்து பக்த இதி மாம் ஜக்ருஹுர்யதா தே
த்வாம் பக்தவஶ்யம் அவயந்தி ததா தயேதா: ।। 35

க: ஸ்வாபராதிஷு பராக்ரமதே ந லோக:
ஶ்ருங்கேண ஹந்தி நநு கௌரபி தண்டஹஸ்தம் ।
பக்தாபதக்ஷமதயைவ தவேஶ்வரத்வம்
தாம் நாஶய த்ரடய வா ஸமயஸ்தவாயம் ।। 36

யத் ப்ராலபம் சரணயோஸ்தவ யத்தத் இத்தம்
முக்தோ விதக்த இவ முக்தஶஶாங்கமௌலே ! ।
தத் க்ஷம்யதாம் மம து கோ வசநேऽதிகார:
ஸ்வாமீ பராம்ருஶது வா ஸ்வமுபேக்ஷதாம் வா ।। 37

இதி நிஶம்ய ஸ வாதபுரீஶிது: கருணமாலபிதம் கருணாநிதி: ।
துரகலக்ஷகுரக்ஷதரேணுபி: பரிபதன் தத்ருஶே விதுஶேகர: ।। 38

ஶிவே துரகஸாதித்வம் ஶ்ரிதே பக்தாநுகம்பயா ।
ஶிவா ஸ்வயம் துரகதாம் ஶிஶ்ராய பஹுதா ததா ।। 39

குமுதகஜ்ஜலகுங்குமதாடிமீகுஸுமஹேமகுவேலஸமத்விஷ: ।
பருஷஹேஷிதபீஷிதஶாத்ரவா தத்ருஶிரே திஶி திஶ்யபி ஸைந்தவா: ।।40

---

1831 உன் திருவடியில் வீழ்ந்து ஏதோ புலம்பிக் கொண்டிருக்கிறேன். அறியா
பாலகன். எல்லாம் அறிந்தவன் போல் உன்னிடம் வாதாடி விட்டேன். ஏன்
தெரியுமா? நீ இந்த முக்தனை(அரியாச் சிறுவனை) இளம்பிறைச் சந்திரனைத்
தலையில் தூக்கி வைத்துக் கொண்டிருக்கிறாய். என்னை மன்னித்துக்கொள்.
எனக்கு என்ன வேண்டும்? நீ என் பிரபு. ஆலோசித்து என்ன
செய்யவேண்டுமோ செய் அல்லது உதறினாலும் சரி. (வாதவூராரின்
ப்ரலாபத்தில் வரும் கருத்துக்கள்பல திருவாசகத்தில் உள்ளவைதான். இதை
ரஸிகர்கள் கவனித்து. திருவாசகத்தையும் இந்த ஸ்தோத்திரத்தையும் 38
ஒற்றுமைப்படுத்தி ரஸிக்கலாம் )

1832 வாதவூரார் இவ்வாறு உள்ளம் உருகும்படியாக விண்ணப்பித்ததைக்
கேட்டு, கருணாநிதியான சந்திரசேகரன் ஒரு லக்ஷம் குதிரைகளின் குளம்படிப் 39
புழுதி முன்னே கிளம்ப, பின்னே தோன்றினார்.

1833 சிவன் குதிரை வீரனாக பக்தனிடம் கருணையினால் எழுந்தருளிய
போது, ஸிவா: ( தேவி, நரிகள்), போட்டி போட்டுக் கொண்டு, லக்ஷம்
குதிரைகளாக உருவெடுத்துக் கொண்டு புறப்பட்டாள். ஸிவா என்ற

यदि मरुद्विजितो विजितं मनो यदि मनो विजितं विजितं जगत्।
जितवतां मरुतं च तदर्वतां किमभिधेयमतास्त्रिजगज्जये ॥ ४१

समुत्तुङ्गत्वङ्गत्तरतुरगरिङ्खाशतहत क्षमारेणुश्रेणिक्षणचुलुकितैरम्बुनिधिभिः।
स्थलीभूतैः सद्यः सति धरणिभागे द्विगुणिते भविष्यन्कैमुत्यादजनि विशदस्तस्य विजयः ॥ ४२

उदात्तेष्वारोहन्प्रसभम् अनुदात्तेष्ववतरन् शनैः क्रामन्नेव स्वरितपथमेकश्रुतिमपि।
समुद्यन्मीमांसाद्वयमयखलीनैकविधृतः पुरः प्रादुर्भूतः पुरमथितुराम्नायतुरगः ॥ ४३

तत्र कंचिदतिचित्रतेजसं सादिनं प्रपदनप्रसादिनम्।
पश्यति स्म बहुमानविस्मयस्मेरदृष्टिररिमर्दनो नृपः ॥ ४४

व्रीडानुतापत्यथितोऽथ पाण्ड्यः प्रकाशयन्वातपुरीशमग्रे।
समीपमासेदुषि सादिवर्ये प्रत्युद्ययौ तेन समं प्रहृष्टः ॥ ४५

कृतप्रणामेन कृतप्रणामः स्तुवन्नृपेण स्तुवता स भूयः।
कृत्वा कथाः काश्चिदथान्ततोऽश्वान्विक्रीय यच्छन्निदमाचचक्षे ॥ ४६

---

*சொல்லுக்கு நரி என்ற பொருளும் உண்டு. கவி அந்தப் பதத்தை சிலேடையில் மிக அழகாக உபயோகித்துள்ளார் (அதாவது ஸிவா: என்று பகுவசனத்தில் எடுத்துக் கொண்டால், நரிகள் குதிரைகளாயின).* 40

*1834 நீலாம்பல், செங்கழனீர், குங்குமப்பூ, மாதுளம்பூ. தங்கம், குவலய மலர் போன்ற நிறமுள்ள குதிரைகள், நடுங்கச் செய்கின்ற தங்களுடைய கனைப்புகளால் எதிரிகளை பயமுறுத்திக்கொண்டு நாற்புறங்களிருந்தும் குவிந்தன.* 41

*1835 காற்றை (பிராணனை) பிராணாயாமத்தினால் அடக்கினால் மனதை ஜயித்து விடலாம் (அசையாமல் நிறுத்தி விடலாம்.) அந்த யோகபலத்தினால் மூவுலகத்தையுமே ஜயித்துவிடலாம். காற்றையும், மனதையும் வேகத்தினால் ஜயித்து விட்ட குதிரைகள், மூவுலகத்தையும் ஜயித்துவிடும் என்று சொல்லவும் வேண்டுமோ?* 42

*1836 குதிரைகள் போட்டி போட்டுக் கொண்டு பூமியில் குளம்புகளை ஆழமாகப் பதித்து உயரே தாவின. அதனால் குளம்புப் புழுதி பலமடங்குகளாகி கடலையே சேறாக்கின. அப்படி குழம்பிய கடலினால், பூமி கால்பாகம், கடல் முக்கால் பாகமாக இருந்ததே. அது அரைபாகமாகக் குறைந்தது.* 43

*1837 தீக்ஷிதர் அந்தக் குதிரைகள் நரிகளும் அல்ல. பரிகளும் அல்ல. வேதங்களே குதிரைகளாக வந்திருக்கின்றன (ஆம்னாய துரக:) என்கிறார். அதனால் தான் குதிரைகள் பாயும் போது உதாத்த ஸ்வரமும், தரை தட்டும்*

யதி மருத் விஜிதம் விஜிதம் மநோ யதி மநோ விஜிதம் விஜிதம் ஜகத் ।
ஜிதவதாம் மருதம் ச ததர்வதாம் கிமபிதேயமதஸ்த்ரிஜகஜ்ஜயே ।। 41

ஸமுத்துங்கத்வங்கத்தரதுரகரிங்காஶதஹத -
க்ஷமாரேணுஶ்ரேணிக்ஷணசுலுகிதைரம்புநிதிபி: ।
ஸ்தலீபூதை: ஸத்ய: ஸதி தரணிபாகே த்விகுணிதே
பவிஷ்யந்கைமுத்யாத் அஜநி விஶதஸ்தஸ்ய விஜய: ।। 42

உதாத்தேஷ்வாரோஹன் ப்ரஸபமம் அதாத்தேஷ்வவதரன்
சனை: க்ராமந்நேவ ஸ்வரிதபதமேகஶ்ருதிமபி
ஸமுத்யந்மீமாம்ஸாத்வயமயகலீநைகவித்ருத:
புர: ப்ராதுர்பூத: புரமதிதுராம்நாயதுரக: ।। 43

தத்ர கஞ்சிததிசித்ரதேஜஸம் ஸாதிநம் ப்ரபதநப்ரஸாதிநம் ।
பஶ்யதி ஸ்ம பஹுமாநவிஸ்மயஸ்மேரத்ருஷ்டிரரிமர்தநோ ந்ருப: ।। 44

வ்ரீடாநுதாபத்யதிதோऽத பாண்ட்ய: ப்ரகாஶயந் வாதபுரீஶமக்ரே ।
ஸமீபமாஸேதுஷி ஸாதிவர்யே ப்ரத்யுத்யயௌ தேந ஸமம் ப்ரஹ்ருஷ்ட: ।।45

க்ருதப்ரணாமேந க்ருதப்ரணாம: ஸ்துவன் ந்ருபேண ஸ்துவதா ஸ பூய: ।
க்ருதா: கதா: காஶ்சிததாந்ததோऽஶ்வான் விக்ரீய யச்சந்நிதமாசசக்ஷே ।। 46

---

போது அனுதாத்த ஸ்வரமும் காதில் விழுகின்றன. வசன நடையிலும் (ஸ்வரித) ஓடின. பூர்வமீமாம்ஸை (கர்ம காண்டம்), உத்தரமீமாம்ஸை (ஞான காண்டம்) என்ற இருபுறத்தையும் சேர்த்து இழுக்கின்ற கடிவாளங்களுக்கு மட்டும் கட்டுப்படுகின்ற வேதக் குதிரையின் மீது, குதிரைப்படைத் தலைவனாக பரமேச்வரன் தோன்றினான். 44

1838 பணிந்தவர்களுக்கு அருள் புரிகின்ற பரமேச்வரன் குதிரை வீரனாக காட்சி அளித்தபோது, அரிமர்தனபாண்டியன், அந்த குதிரை வீரனை, மரியாதையுடனும், வியப்புடனும், புன்னகை புரிந்து கொண்டும், கவனமாகப் பார்த்தான். 45

1839 அரசன் வாதவூராரைத் தவறாக மதித்து விட்டோமே என்று வெட்கப்பட்டான். அவரைத் துன்புறுத்தினோமே என்று மனம் புழுங்கினான். வாதவூராரை அணுகி அணைத்துக் கொண்டான். அவரை முன்னிட்டுக் கொண்டு, அருகில் வருகின்ற குதிரைத் தலைவனை மகிழ்ச்சியுடன் எதிர்கொண்டு சென்றான். 46

1840 அரசன் வீரனை கைகூப்பி வணங்கினான். வீரனும் வணங்கினான். அரசன் வீரனுக்கு நல்வரவு கூறிப் போற்றினான். வீரனும் தங்களை சந்தித்ததில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன் என்றான். இருவரும் நலம் விசாரித்தனர்.

आनीतमासीद्धनमश्वहेतोः अनेन यत्ते सचिवेन राजन्।
तत्सर्वमादाय तवैव भूत्यै मयाहृताः पश्य शिवास्तुरंगाः॥ ४७

गुल्मेषु कुञ्जेषु वनोदरेषु केदारकेषूपवनेषु चामी।
स्वच्छन्दचारा लघुावक्रमाश्च तरन्ति तोयेष्वपि दुस्तरेषु ॥ ४८

न श्वोऽयमस्तीति किलाश्वशब्दः तन्त्रैर्निरुक्तो विदितस्तवापि।
सम्यक्परीक्ष्य त्वमिमान्गृहाण धनं ममैतत्तुरगास्तवेमे॥ ४९

तथेति तस्य प्रतिनन्द्य वाचं भूषणैहेमभिरम्बरैश्च।
संभाव्य सद्योविसृजन्नृपालः तृप्तिं न लेभे तुरगान्स पश्यन्॥ ५०

आज्ञापिता द्राग् अरिमर्दनेन पाण्ड्येन भृत्याः परितो भ्रमन्तः।
बबन्धुरश्वानथ मन्दुरासु सार्धं विनीतैस्तुरगैः पुराणैः॥ ५१

परेद्युरश्वावस्थे नियुक्ताः प्रातः समेक्षन्त नृपालभृत्याः।
समन्ततोश्वान्दशतः पुराणान् शब्दायमानाञ्छतशः सृगालान्॥ ५२

आकर्ण्य वृत्तं महदद्भुतं तत् पाण्ड्यः प्रजज्वाल रुषा स भूयः।
इत्थं किलेदं कृतमिन्द्रजालं अनेन नूनं मयि मन्त्रिणेति॥ ५३

---

முடிவில் குதிரைகளை விலைபேசி விற்று விட்டு, பிறகு கூறினான். (மறைமுகமாக) 47

1841 அரசே! தங்கள் மந்திரி குதிரைகள் வாங்குவதற்கு நிறைய செல்வம் கொண்டுவந்தாரே (உட்பொருள்- அது செல்வந்தானே. அழியக்கூடியது தானே)தங்களுடைய மேன்மைக்காக அவைகளை ஏற்றுக்கொண்டேன். (அழியும் பொருள் தேவையில்லை. இருந்தும் ஏற்றுக்கொண்டேன்.) நானும் மங்களமான (நரிகளை) குதிரைகளாகக் கொண்டு வந்திருக்கிறேன். நமக்குள் கணக்கு தீர்ந்து விட்டது. தெரிந்து கொள்ளுங்கள். 48

1842 புதர்களிலும், தோட்டங்களிலும், காடுகளிலும், வயல்களிலும், உத்யானங்களிலும் இவை இஷ்டப்படி சஞ்சரித்துக்கொண்டிருக்கும். குபீரென்று பாயக்கூடியவை. தாண்டமுடியாத நீர் நிலைகளைக்கூடத் தாண்டி விடும். 49

1843 அரசே! கவனியுங்கள். குதிரைக்கு அச்வம் என்று பெயர். அந்தச்சொல்லுக்கு 'நாளைக்கு இருக்காது' என்று சாஸ்திரங்கள் பொருள் கூறுகின்றன. உங்களுக்கும் தெரிந்தது தானே! நன்றாகத் தொட்டுப் பார்த்து, ஓட்டிப் பார்த்து, இவற்றை ஏற்றுக்கொள்ளுங்கள் (சாஸ்திரங்களை நம்பாதீர்கள்). நீர் கொடுத்ததாகச் சொல்கின்ற செல்வம் எனக்கு,வேகமாக ஓடுகின்ற குதிரைகள் (நரிகள்) உங்களுக்கு. சரிதானே! 50

ஆநீதமாஸீத்தநமஶ்சவஹேதோ: அநேந யத் தே ஸசிவேந ராஜன் ! ।
தத் ஸர்வமாதாய தவைவ பூத்யை மயாஹ்ருதா: பஶ்ய ஶிவாஸ்துரங்கா: ॥47

குல்மேஷு குஞ்ஜேஷு வநோதரேஷு கேதாரகேஷு பவநேஷு சாமீ ।
ஸ்வச்சந்தசாரா லகுவிக்ரமாஶ்ச தரந்தி தோயேஷ்வபி துஸ்தரேஷு ॥ 48

ந ஶ்வோऽயமஸ்தீதி கிலாஶ்வஶப்தஸ்தந்த்ரைர்நிருக்தோ விதிதஸ்தவாபி ।
ஸம்யக் பரீக்ஷ்ய த்வமிமம் க்ருஹாண தநம் மமைதத் துரகாஸ்தவேமே ॥49

தேதேதி தஸ்ய ப்ரதிநந்த்ய வாசம் தம் பூஷணைர்ஹேமபிரம்பரைஶ்ச ।
ஸம்பாவ்ய ஸத்யோ விஸ்ருஜன் ந்ருபாலஸ்த்ருப்திம் ந லேபே துரகான் ஸ பஶ்யன்॥ 50

ஆஜ்ஞாபிதா த்ராக் அரிமர்தநேந பாண்ட்யேன ப்ருத்யா: பரிதோ ப்ரமந்த: ।
பபந்துரஶ்வாநத மந்துராஸு ஸார்தம் விநீதைஸ்துரகை: புராணை: ॥ 51

பரேத்யுரஶ்வாவஸதே நியுக்தா: ப்ராத: ஸமைக்ஷந்த ந்ருபாலப்ருத்யா: ।
ஸமந்ததோऽஶ்வான் தஶத: புராணான் ஶப்தாயமாநான் ஶதஶ: ஸ்ருகாலான் ॥52

ஆகர்ண்ய வ்ருத்தம் மஹதத்புதம் தத் பாண்ட்ய: ப்ரஜஜ்வால ருஷா ஸ பூய: ।
இத்தம் கிலேதம் க்ருதமிந்த்ரஜாலம் அநேந நூநம் மயி மந்த்ரிணேதி ॥ 53

---

*1844* *'குதிரைத் தலைவரே! நீர் சொன்னது சரிதான் ஐயா!'* என்று கூறி அரசன் குதிரைகளைப் பெற்றுக்கொண்டான். அந்த வீரனுக்கு ஆபரணங்களையும், வஸ்திரங்களையும், தங்கக் கட்டிகளையும் வெகுமானமாக வழங்கினான். அரசனுக்கு குதிரைகளைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்கிற அவசரம். குதிரை வீரனுக்கோ தப்பிக்க வேண்டும் என்கிற அவசரம். அரசனுக்கு குதிரைகளைப் பார்க்க, பார்க்க போதும் என்ற திருப்தியே வரவில்லை. *51*

*1845* வாங்கப்பட்ட குதிரைகள் எல்லாம் பதுங்கி பதுங்கிப் பாய்ந்தன. அரசன் அரண்மனை வீரர்களைப் பார்த்து உடனே குதிரைகளை எல்லாம் ஒன்று விடாமல் கட்டுங்கள் என்று ஆணையிட்டான். அரசாங்க லாயத்தில், வீரர்கள், நன்கு பழகிய மற்ற பழைய குதிரைகளுடன் புதுக் குதிரைகளைக் கட்டினார்கள். *52*

*1846* குதிரை லாயத்தில் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டிருந்த புது ஸேவகர்கள், காலை விடிந்ததும் கண்ட காட்சி - நரிகள் பழைய குதிரைகளைக் கடித்துக் கொண்டிருந்தன. நூற்றுக்கணக்கான நரிகள் ஊளையிட்டுக் கொண்டிருந்தன. *53*

दुष्टैः स्वतो राजनिदेशरूक्षैः कदर्थितो राजभटैः स भूयः ।
आत्मानमात्मन्यनुसंदधानो न क्लेशलेशं गणयांबभूव ॥ ५४
अत्रान्तरे भक्तमनुग्रहीतुं आलोच्य कारुण्यनिधिर्महेशः ।
भयानकां दुरललितैस्तरङ्गैः प्रावर्तयद्वेगवतीमकाण्डे ॥ ५५
सा निष्पतन्त्येव पुरं समस्तं कल्लोलजालैः कबलीचकार ।
संरुध्य ये मन्त्रिणमभ्यहिंसन्संभ्रम्य दूरे परिदुद्रवुस्ते ॥ ५६
पूरेण तस्याः पुरशासनस्य कारुण्यपूरेण विनिर्यतेव ।
निर्मोंचितो वातपुरीश्वरोऽपि हालास्यनाथान्तिकमाससाद ॥ ५७
तां बध्यमानां शतशोऽपि मर्त्यैः पात्रोदरे वेगवतीममान्तीम् ।
आलक्ष्य बद्धुं नृपतिः स पौरान् आबालवृद्धाङ्गनमादिदेश ॥ ५८
बध्नत्सु पौरेषु विभज्य सीमां आपूपिकी काचिदतीव जीर्णा ।
निर्बध्यमाना नृपतर्भुजिष्यैः विचिन्वती कर्मकरं चचार ॥ ५९
सा पिष्टकानेव सदा पचन्ती निवेदयन्ती मनसा महेशे ।
तद्विक्रयेणापि च वर्तयन्ती दयास्पदं भूतपतेर्बभूव ॥ ६०
गवेषयन्ती जरती समन्तात् गवेष्यमाणं निगमैः समस्तैः ।
ऐक्षिष्ट सा कर्मकरं युवानम् अंसोपरि न्यस्तखनित्रमेकम् ॥ ६१

*1847* அரசன் இந்த விந்தையைக் கேட்டு, ஆச்சரியம் அடைந்தான். கோபத்தினால் கொதித்தெழுந்தான். இந்த மந்திரி இப்படியா என்னிடம் மாயாஜாலம் பண்ணிவிட்டான்.!! உண்மையில் அவனுடைய வேலை தான் இது. 54

*1848* அரசுப்படை வீரர்கள் இயல்பாகவே மிகக் கொடுமையானவர்கள். அரசன் ஆணையும் கிடைத்து விட்டது. வாதவூராரைப்பிடித்து வந்து கொடுமைப்படுத்தினர் வாதவூராரோ, ப்ரபோ! ஆத்மநாத! ‘உன்னுடைய லீலையா இது. நடக்கட்டும்.’ என்று தன்னை ஆத்மநாதனிடம் ஒப்பிவித்துக் கொண்டார். 55

## திருவிளையாடல் 60

## வைகை அழைத்த படலம்

*1849* இதனிடையே ஸுந்தரேசப் பெருமானால் வாளா இருக்க முடியவில்லை. கருணையே வடிவானவன் அல்லவா! (முன்னொரு லீலையில் கொடுத்தது போல தலைச்சடையிலிருந்து கங்கையை விடுவித்தாரோ என்னவோ) வைகை ஆற்றில் திடீர் வெள்ளம் ஏற்பட்டது. பயங்கரமான அலைகள் எழும்பின. நீர் பெருகத் தருணமே இல்லை. ஆனாலும் வைகையில் வெள்ளம் கரை புரண்டு ஓடியது. 56

*1850* அந்த வெள்ளம் வரும் போதே நகரம் முழுவதையும் மலை போன்ற அலைகளால் விழுங்கி விட்டது. மந்திரியைக் கட்டிப் போட்டு

துஷ்டை: ஸ்வதோ ராஜநிதேஶரூக்ஷை: கதர்திதோ ராஜபடை: ஸ பூய: ।
ஆத்மாநமாத்மனி அநுஸந்ததாநோ ந க்லேஶலேஶம் கணயாம்பபூவ ॥ 54

அத்ராந்தரே பக்தமநுக்ரஹீதும் ஆலோச்ய காருண்யநிதிர்மஹேஶ: ।
பயாநகா துர்லலிதைஸ்தரங்கை: ப்ராவர்த்தயத் வேகவதீமகாண்டே ॥ 55

ஸா நிஷ்பதந்த்யேவ புரம் ஸமஸ்தம் கல்லோலஜாலை: கபலீசகார ।
ஸம்ருத்ய யே மந்த்ரிணமப்யஹிம்ஸன் ஸம்ப்ரம்ய தூரே பரிதுத்ருவுஸ்தே ॥ 56

பூரேண தஸ்யா: புரஶாஸநஸ்ய காருண்யபூரேண விநிர்யதேவ ।
நிர்மோசிதோ வாதபுரீஶ்வரோऽபி ஹாலாஸ்யநாதாந்திகமாஸஸாத ॥ 57

தாம் பத்யமாநாம் ஶதஶோऽபி மர்த்யை: பாத்ரோதரே வேகவதீமமாந்தீம் ।
ஆலக்ஷ்ய பந்தும் ந்ருபதி: ஸ பௌரான் ஆபாலவ்ருத்தாங்கநம் ஆதிதேஶ ॥ 58

பத்நத்ஸு பௌரேஷு விபஜ்ய ஸீமாம் ஆபூபிகீ காசிததீவ ஜீர்ணா ।
நிர்பத்யமாநா ந்ருபதேர்புஜிஷ்யைர் விசிந்வதீ கர்மகரம் சசார ॥ 59

ஸா பிஷ்டகாநேவ ஸதா பசந்தீ நிவேதயந்தீ மநஸா மஹேஶே ।
தத்விக்ரயேணாபி ச வர்தயந்தீ தயாஸ்பதம் பூதபதேர்பபூவ ॥ 60

கவேஷயந்தீ ஜரதீ ஸமந்தாத் கவேப்யமாணம் நிகமை: ஸமஸ்தை: ।
ஜக்ஷிஷ்ட ஸா கர்மகரம் யுவாநம் அம்ஸோபரிந்யஸ்தகநித்ரமேகம் ॥ 61

---

கொடுமைப்படுத்திய வீரர்கள் எங்கோ ஓடிப்போய் விட்டனர். 57

1851 அந்த வெள்ளத்தோடு மற்றொரு வெள்ளமும் புறப்பட்டது. அது தான் ஸுந்தரேசனின் கருணை வெள்ளம். கைது செய்யப்பட்ட வாதவூராரை விடுவித்து அவரைக் கைதாங்கலாக வெள்ளத்திலிருந்து ஸுந்தரேசனுடைய ஸன்னதிக்கே கொண்டு போய் விட்டது. 58

1852 நூற்றுக்கணக்கான வீரர்களை வெள்ளத்திற்கு அணை போட ஏவினான் அரசன். வெள்ளம் கட்டுக்கடங்கவில்லை. உடனே அரசன் குழந்தைகள், ஸ்திரீகள், கிழவர்கள் உள்பட மக்கள் அனைவரையும் வெள்ள நிவாரப்பணிக்கு ஏவினான். 59

## திருவிளையாடல் 61

## பிட்டுக்கு மண் சுமந்த படலம்

1853 அவர்களுக்கு எல்லை வகுத்துக்கொடுத்து, அனைவரையும் நிவாரணப் பணியில் ஈடுபடுத்திய போது, பிட்டு விற்கும் கிழவி ஒருவளையும் நிர்பந்தித்தனர். அவள் தனது இயலாமையினால் கூலியாள் கிடைப்பானா என்று தேடி அலைந்தாள். 60

1854 அவள் எப்பொழுதும் பிட்டு சமைத்து வாசலில் உள்ள சொக்கேசருக்கு மனஸார நிவேதனம் செய்வாள். பிறகு அதை விற்று வாழ்க்கை நடத்தினாள். சொக்கேசருக்கு அவள் மீது தயவு ஏற்பட்டது. 61

तामाह वृद्धामभिगम्य देवः किं कर्म कुर्यां तव शंस मातः।
अनाश्रयः कर्मकरो जनानाम् आसे चिरादत्र हि नाथकामः॥ ६२

आपूपिकी किं धनमर्थयिष्ये भक्ष्येण मे कर्मकृतो हि भाव्यम्।
विक्रीय पूर्णान्वितरत्वपूपान् क्षामानथामाञ्छिथिलांश्च मह्यम्॥ ६३

कियानयं वेगवतीनिरोधः कियानयं राजभटानुरोधः।
प्रतीहि मातः पच पिष्टकं त्वं विन्यस्य भारं मयि वीतशङ्का॥ ६४

आमन्त्रणैरेव विमोहयंस्तां अम्बेति देवीति पितामहीति।
विस्रंसयन्नूष्मलमूष्मलं स जग्राह तत्सर्वमपूपजातम्॥ ६५

जगौ जहास प्रणनर्त चित्रं ववल्ग वल्गूनि वचांस्यभाणीत्।
व्यासञ्जयन्कर्मकृतः समस्तान् विस्रब्धमेको विजहार देवः॥ ६६

इदं खनित्रं पिटकोऽयमेष राशिर्मृदामद्य मयोपनीतः।
पश्येति राज्ञो गणकान्समेतान् प्रतारयंस्तानहसीन्निवृत्तान्॥ ६७

उच्छृङ्खलैरूर्मिभिरुत्पतन्तीं भूयोऽप्यमान्तीं तटयोः स्रवन्तीम्।
भीता भटा भूमिभुजे शशंसुः पाण्ड्योपि तां प्रेक्षितुमाजगाम॥ ६८

---

1855 பிட்டுக்காரக் கிழவி தனக்காக ஒரு கூலியாளைத் தேடிக்கொண்டிருக்கும் போது? வேதங்களால் இன்றும் தேடிக் கொண்டிருக்கும் பரமன் அங்கே தோளில் மண்வெட்டியைச் சுமந்து கொண்டு ஒரு வாலிப கூலியாளாக வந்தான். 62

1856 பகவான் அவளை அணுகினான். 'அம்மா! உனக்கு என்ன வேலை செய்ய வேண்டும் சொல்லு' என்றான். நான் ரொம்ப நாளாக இங்கே தானே இருக்கிறேன். யாராவது ஆதரிக்கமாட்டார்களா என்று காத்திருக்கிறேன். தீக்ஷிதர் மதுரையில் மீனாக்ஷி ஆலயம் எழுப்புவதற்கு முன்பு, சொக்கேசர் என்ற பெயருடன் நகர வடமேற்கு மூலையில் கோயில் கொண்டு எழுந்திருக்கிறார் என்பதைச் சுட்டிக் காட்டுகிறார். 63

1857 ஐயோ பாவம்! பிட்டுக்காரியிடம் கூலிக்காக காசு கேட்பேனா? வேண்டாம். அவள் முழுமையான பக்குவமான பிட்டுக்களை விலைக்கு விற்கட்டும். நமக்கு வேகாத, அரை வேக்காடான உதிர்ந்த பிட்டைக் கொடுக்கட்டும். அதையே கூலியாக எற்றுக்கொள்வேன். 64

1858 யம்மாவ்! கவலைப்படாதீங்க. இந்த வைகை வெள்ளம் எம்மாத்திரம்? அரசு அதிகாரிகள் மிரட்டல்கள் எம்மாத்திரம்? அம்மா! என்ன நம்புங்க. எம்மீது பாரத்தைப் போட்டு விட்டு நீங்க பாட்டுக்கு பிட்டு சமையுங்க. ஒன்றுக்கும் கவலைப்படாதீங்க. 65

தாமாஹ வ்ருத்தாமபிகம்ய தேவ: கிம் கர்ம குர்யாம் தவ ஶம்ஸ மாத:! ।
அநாஶ்ரய: கர்மகரோ ஜநாநாம் ஆஸே சிராதத்ர ஹி நாதகாம: ।। 62

ஆபூபிகீ கிம் தநமர்த்தயிஷ்யே பக்ஷ்யேண மே கர்மக்ருதோ ஹி பாவ்யம் ।
விக்ரீய பூர்ணான் விதரத்வபூபான் க்ஷாமாநதாமாஞ்சிதிலாம்ஶ்ச மஹ்யம் ।। 63

கியாநயம் வேகவதீநிரோத: கியாநயம் ராஜபடாநுரோத: ।
ப்ரதீஹி மாத:! பச பிஷ்டகம் த்வம் விந்யஸ்ய பாரம் மயி வீதஶங்கா ।। 64

ஆமந்த்ரணைரேவ விமோஹயம்ஸ்தாம் அம்பேதி தேவீதி பிதாமஹீதி ।
விஸ்ரம்ஸயந்நூஷ்மலமூஷ்மலம் ஸ ஜக்ராஹ தத் ஸர்வம் அபூபஜாதம் ।। 65

ஜகௌ ஜஹாஸ ப்ரணநர்த்த சித்ரம் வவல்க வல்கூநி வசாஸ்யமாணீத் ।
வ்யாஸஞ்ஜயன் கர்மக்ருத: ஸமஸ்தான் விஸ்ரப்தமேகோ விஜஹார தேவ: ।। 66

இதம் கநித்ரம் பிடகோ஽யமேஷ ராஶிர்ம்ருதாமத்ய மயோபநீத: ।
பஶ்யதி ராஜ்ஞோ கணகாந் ஸமேதாந் ப்ரஸாரயம்ஸ்தாநஹஸீந்நிவ்ருத்தான் ।। 67

உச்ச்ருங்கலை: ஊர்மிபிருத்பதந்தீம் பூயோऽப்யமாந்தீம் தடயோ: ஸ்ரவந்தீம் ।
பீதா படா பூமிபுஜே ஶஶம்ஸு: பாண்ட்யோऽபி தாம் ப்ரேக்ஷிதும் ஆஜகாம ।। 68

---

*1859* அருகில் அமர்ந்து கொண்டு அம்மா! பாட்டி! என் தாயே! என்று கூப்பிடும் அழகிலேயே, கிழவியை மயக்கி பிட்டுகளை உதிரும்படி செய்தான். பிட்டுகள் உதிர்ந்து கொண்டே இலையில் வீழ்ந்தன. ஒன்று கூட முழுப் பிட்டுத் தேரவில்லை. அவன் எல்லாவற்றையும் சாப்பிட்டு விட்டான்.
66

*1860* கிழவி மிகவும் கவனத்துடன் அடுத்த தட்டு பிட்டுக்களை அடுப்பில் வைத்தாள். பையன் பார்க்கிறான். அடுப்பிலிருந்து இறக்கும்போது புட்டுகள் உதிர்ந்து கீழே விழுந்தன. பையன் போச்சா பாட்டி. போச்சா பாட்டி என்று விழுந்து, விழுந்து, அவைகளை வாயில் திணித்துக்கொள்கிறான். வாய் நிறைய புட்டுடன் குதிக்கிறான். வேலையில் கவனமாக இருந்த மற்ற பணியாட்களின் கவனத்தை ஈர்த்தான். தனியாக ஒன்றுக்கும் கவலைப்படாமல் இங்கும் அங்கும் அலைந்தான்.
67

*1861* மேற்பார்வையாளர்களும், கணக்கர்களும் வந்து 'என்ன ஐயா! உன் பங்கு வேலையை முடித்து விட்டாயா?' என்று மிரட்டினார்கள். பாருங்கள் ஐயா, இதோ என் மண்வெட்டி இதைப் பாத்தீங்ளா? இது தான் கூடை. இதோ நான் வெட்டின மண்: கணக்கர்களுக்கு ஒன்றும் புரியவில்லை திரும்பி விட்டார்கள். அவர்கள் சென்றதும், பின்னால் நின்று கொண்டு அந்த கூலியாள் எக்களித்தான்.
68

आलक्ष्य राजागमम् अप्रमत्तान् कर्मान्तिकान्कर्मकृतः स पश्यन्।
खनन्निव क्ष्मां मृदमापगायां क्षिपन्निवान्तः स्वयमप्यचारीत्॥ ६९

ततस्ततस्तत्र तटीर्निबद्धाः परामृशन्पाण्ड्यनृपोऽतिरुष्टः।
अपूरितं क्वापि स वीक्ष्य निम्नं केनेदमित्थं कृतमित्यपृच्छत्॥ ७०

आपूपिकीकर्मकरं युवानं आलक्षयन्तो गणकास्ततस्तम्।
हस्ते गृहीत्वा पुरतः क्षिपन्तो विवव्रिरे तस्य विचेष्टितानि ॥ ७१

आपूपिकी काचिदतीव जीर्णा सेयं दृढं कर्मकरं न्ययुङ्क्त।
अयं नियुक्तोऽपि भृतोऽपि सम्यक् न स्पन्दते किंचन दुर्विनीतः ॥ ७२

ब्रूते पुरस्ताद्विनयोक्तिमेव किंचिन्निवृत्ते गणके तु भूयः।
विडम्बयन्भाषितचेष्टितैस्तं पार्श्वस्थितान्हासयते विशङ्कः॥ ७३

दत्तं कियद्दारुणया जरत्या दत्ते तु किंचिच्छिथिलान् अपूपान्।
अहो ममाभाग्यमियं किलासीत् नाथेति शेते मुहुरात्तशोकः॥ ७४

किं मेऽस्ति तातो जननी किमास्ते किमास्पदं किं धनमस्ति किंचित्।
किं राजभृत्याः कृपणेषु कुर्युः यातेति नोऽधःकुरुते कदापि॥ ७५

अन्यायवृत्ते नृपतौ अमुष्मिन् आप्लाव्यते किन्नगरं न तोयैः।
किं ताडितैः कर्मकरैरिहेति तत्त्वं ब्रवीतीव कदापि मन्दम्॥ ७६

---

1862 ஓர் இடத்தில் ஒரு தடையுமில்லாமல் கொப்பளித்துக் கொண்டு மறுபடியும் நீர் புகுந்தது. இரு கரையிலும் பரவியது. வேலைக்காரர்கள் அரசனிடம் சென்று முறையிட்டனர், அதைப் பார்க்க அரசன் உடன் வந்து சேர்ந்தான். 69

1863 அரசனது வருகையைக்கூட கவனியாமல் பணியாட்கள் ஊக்கத்துடன் தங்கள் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த வாலிபக் கூலியாளும் பூமியை வெட்டுவது போலவும்,மண்ணை அள்ளி வெள்ளத்தில் போடுவது போலவும் பாசாங்கு செய்தான். 70

1864 உடைந்த கரைகள் அடைக்கப்பட்டிருந்தன. அதை சரி பார்த்துக்கொண்டே வந்த அரசன் ஒரு பள்ளம் அடையாமல் இருப்பதைப் பார்த்து கோபத்துடன் 'யார் செய்த வேலை இது' என்று கேட்டான். 71

1865 பிட்டுக்காரியின் கூலி வேலையாளான அந்த வாலிபனைப் பார்த்ததும், கணக்கர்கள் அவனைக் கொண்டு போய் அரசனின் காலடியில் தள்ளினார்கள். அவனுடைய அலட்சியத்தையும், சேஷ்டைகளையும் அரசனிடம் விவரித்தனர். 72

ஆலக்ஷ்ய ராஜாகமம் அப்ரமத்தான் கர்மாந்திகான் கர்மக்ருத: ஸ பஶ்யன் ।
கநந்நிவ க்ஷ்மாம் ம்ருதமாபகாயாம் க்ஷிபந்நிவாந்த: ஸ்வயமப்யசாரீத் ॥ 69

ததஸ்ததஸ்தத்ர தடீர்நிபத்தா: பராம்ருஶன் பாண்ட்யந்ருபோऽதிருஷ்ட: ।
அபூரிதம் க்வாபி ஸ வீக்ஷ்ய நிம்நம் கேநேதமித்தம் க்ருதமித்யப்ருச்சத் ॥ 70

ஆபூபிகீகர்மகரம் யுவாம் ஆலக்ஷயந்தோ கணகாஸ்ததஸ்தம் ।
ஹஸ்தே க்ருஹீத்வா புரத: க்ஷிபந்தோ விவவ்ரிரே தஸ்ய விசேஷ்டிதாநி ॥ 71

ஆபூபிகீ காசிததீவ ஜீர்ணா ஸேயம் த்ருடம் கர்மகரம் ந்யயுக்த ।
அயம் நியுக்தோऽபி ப்ருதோऽபி ஸம்யக் ந ஸ்பந்ததே கிஞ்சந துர்விநீத: ॥ 72

ப்ரூதே புரஸ்தாத் விநயோக்திமேவ கிஞ்சிந்நிவ்ருத்தே கணகே து பூய: ।
விடம்பயன் பாஷிதசேஷ்டிதைஸ்தம் பார்ஶ்வஸ்திதான் ஹாஸயதே விஶங்க: ॥ 73

தத்தம் கியத் தாருணயா ஜரத்யா தத்தே து கிஞ்சிச்சிதிலான் அபூபான் ।
அஹோ மமாபாக்யமியம் கிலாஸீத்நாதேதி ஶேதே முஹுராதஶோக: ॥ 74

கிம் மேऽஸ்தி தாதோ ஜநநீ கிமாஸ்தே கிமாஸ்பதம் கிம் தநமஸ்தி கிஞ்சித் ।
கிம் ராஜப்ருத்யா: க்ருபணேஷு குர்யுர்யாதேதி நோऽத:குருதே கதாபி ॥75

அந்யாயவ்ருத்தே ந்ருபதாவமுஷ்மின் ஆப்லாவ்யதே கிந்நகரம் ந தோயை: ।
கிம் தாடிதை: கர்மகரைரிஹேதி தத்வம் ப்ரவீதீவ கதாபி மந்தம் ॥ 76

---

1866 அவர்கள் அரசனிடம் கூறினார்கள் 'வயதான ஏழை பிட்டுக்கார கிழவி
இந்த தடியனை, தன் பங்கு வேலைக்காக நியமித்தாள். உடனே அவன்
கூலியையும் வாங்கிக்கொண்டு விட்டான். ஒழுங்காக வேலை பார்ப்பதும்
இல்லை. எங்களுடைய ஆணைகளுக்கெல்லாம் கட்டுப்படுவதும் இல்லை'.73

1867 கணக்கர்களின் முன்னே இழைந்து நெளிகிறான். இதோ ஆச்சுங்க ஒரு
நொடியிலே என்கிறான். அவர்கள் நகர்ந்ததும் அவர்கள் பின்னே அழகு
காட்டுகிறான். அவர்களைப் போல பேசி நையாண்டி பண்ணுகிறான்.
கொஞ்சம் கூட பயமில்லாமல்,பக்கத்தில் உள்ளவர்களை சிரிக்க வைக்கிறான்.74

1868 இவன் சொல்கிறான் 'கிழவி என்ன பெரிசா கொடுத்துட்டா? உதிர்ந்த
பிட்டு கொஞ்சம் கொடுத்தாள். நீங்கதான் பார்தீங்களே! உடைந்த பிட்டு தானே!
பொல்லாக்கிழவி இவள்! என் துர்பாக்கியம் இவளிடம் வேலைக்குச்
சேர்ந்தது. ஆண்டவனேன்னு புலம்பிக் கொண்டு படுத்து விடுகிறான்.' 75

1869 எனக்கு அப்பன் இருக்கிறானா? அம்மா இருக்கிறாளா? என்கிட்ட
காசுதான் இருக்கா? என்னைக்கொடுமைப்படுத்தினார்களே. ஒன்றும் இல்லாத
ஏழையிடம் அரசனுடைய ஆட்கள் என்ன செய்யமுடியும்? போடா என்றால் 76
போய்விடுகிறேன்.

